Koviloor Digital Library

திருமுறைத்தலங்கள்

ACC NO 36933



பு.மா.ஜெயசெந்தில்நாதன் எம்.எ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

78-4

உ

குருவே துணை

திருமுறைத் தலங்கள்

தேவார, திருவாசக, திருவிசைப்பா,
திருப்பல்லாண்டுத் தலங்களுக்குரிய
தல விளக்க வழிகாட்டி நூல்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள்
அவர்களின் அருளாணைப்படி எழுதப்பெற்று
அவர்களின் அருளாதரவில் வெளியிடப் பெற்றது.

ஆசிரியர்
''செஞ்சொல்மணி'', ''புராண சிந்தாமணி''
புலவர் **பு. மா. ஜயசெந்தில்நாதன், எம்.ஏ.,**
ஆஸ்தானத் தமிழ்ப் புலவர்
ஸ்ரீ சங்கரமடம், காஞ்சிபுரம்

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ. ஆர். ஆர். காம்ப்ளெக்ஸ்
141, வடக்கு உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
✆ : 8257995

Koviloor Digital Library

நான்காம் பதிப்பு : 2001
(விரிவாக்கப்பட்டது)

பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ. 375.00

வடிவமைத்துத் தயாரித்தவர்

ஸ்ரீ. வர்த்தமானன்

ஒளியச்சுக் கோர்வை : ப. திலீபன்
ஸ்ரீ சத்ய சாய் கிராபிக்ஸ்,
சென்னை - 17 ✆ : 4332504

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :
பரமேஸ்வரி கிராபிக்ஸ்,
சென்னை - 5 ✆ : 8418698

Koviloor Digital Library

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

Koviloor Digital Library

திருமுறைகளின் சிறப்பு

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
　　தென்தமிழின் தேன்பா காகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
　　செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த
　　எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
　　மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்.

(தனிப்பாடல்)

பன்னிருதிருமுறைகளை அருளிய அருளாளர்கள்

திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர்
　　திருவாத வூரர் மற்றைத்
திருமாளிகைத் தேவர் சேந்தனார் கருவூரர்
　　தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தர் வேணாட்டடிகள்
　　வாய்ந்த திரு வாலி யமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர்
　　மன்னு திரு ஆல வாயார்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
　　ஒளிர் கீரர் கல்லாடனார்
ஒண் கபிலர் பரணர் மெய்உண ரிளம் பெருமானோடு
　　ஓங்கும் அதிராவடிகளார்
திருமேவு பட்டினத்தடிகளொடு
　　நம்பியாண்டார்நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
　　தெய்விகத் தன்மையோரே.

Koviloor Digital Library

உ

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம :
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம் ஸமஸ்தானம்

காஞ்சிபுரம் - 631 502

யாத்ராஸ்தானம் : காஞ்சிபுரம். தேதி : 15-07-1991.

பார்க்கெலாம் திலகமாகிய பாரதநாடு கோயில்கள் சூழ்ந்த திருநாடு. இந்நிலைதனை இன்றும் தமிழகப்பகுதியில் அனுபவித்து மகிழலாம். தனிமனிதப் பெருவாழ்விற்கும் கட்டுக் கோப்புடைய சமூக வாழ்விற்கும் ஆணிவேராக அமைந்திருப்பவை இக்கோயில்கள். ஆகவேதான் இக்கோயில்களுக்கு யாத்திரை சென்று வருவது ஒரு புனிதச் செயலாகப் போற்றிவரப்படுகின்றது. இறையனுபூதி பெற்ற பெருமக்களும் இப்பணியில் மூழ்கித்திளைக்கின்றனர். இத்துறையில் தனியிடம் வகிப்பவர்கள் சம்பந்தர் - அப்பர் - சுந்தரர் - மணிவாசகர் ஆகியோர். இவர்கள் யாத்திரை சென்று கண்டு களித்துப் பாடிமகிழ்ந்த திருத் தலங்கள்தாம் **திருமுறைத் திருத்தலங்கள்** ஆகும். காலங்கடந்த இத்தலங்களின் வரலாற்று நூல்களே தலபுராணங்கள் எனப்படுபவை.

உதவிக்காக யாரையும் எதிர்பாராது அவ்வத்தலங்களைப் பற்றிய நுண்ணிய சிறப்புச் செய்திகள் பலவற்றையும் தெரிந்து கொண்டு, இத்தலங்களுக்கு யாத்திரை சென்று இறைவனை வழிபட்டு - தலப்பதிகம் பாடி - செய்திகளின் உண்மையுணர்ந்து மகிழ்ந்திடும் வகையில் ஒரு நூல் வேண்டும் என்ற ஸ்ரீ பரமாசார்யாளின் ஆக்ஞைக்கிணங்க, நம் ஸ்ரீ மடத்து ஆஸ்தானத்தமிழ்ப் புலவர், செஞ்சொல்மணி - புலவர் பு. மா. ஜயசெந்தில்நாதன் அவர்கள், அரிதின் முயன்று யாத்திரை சென்று படைத்துள்ள திருமுறைத்தலங்கள் என்னும் நூல் மூன்றாவது பதிப்பாக திருவாசக, திருவிசைப்பாத்தலங்களுக்கும் உரிய தலவிவரங் களையும் கொண்டு ஒரே நூலாக வெளிவருவது கண்டு மகிழ்கிறோம்.

தல அமைவிடம் - பேருந்துத்தடம் - அஞ்சல்முகவரி - கோவில் விமானம் மூர்த்தி தீர்த்தம் இவைகளது சிறப்பம்சங்கள் - செவிவழிச் செய்திகள் - கல்வெட்டுச் செய்திகள் - தலபுராணவரலாறு - தலபுராணப் பாடல் - திருமுறைப்பாடல் - அருட்பா - தலங்களின் இலக்கிய வழக்குப் பெயர்கள் முதலிய பலப்பல விவரங்களுடன் தன்னிறைவடைந்து சிறப்பாக விளங்கும் இந்நூலை ஆஸ்திக அன்பர்கள் பெருமளவில் ப்யன்படுத்தி நன்மையடையவும், நூலாசிரியர் மேன்மேலும் அருள் நூல்களைப் படைத்து நமது பண்டைய பெருமையைத் துலக்கிப் பெரும் பயன் எய்தவும் ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ர மௌளீச்வரர் அருள்வேண்டி ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி

Koviloor Digital Library

இரண்டாம் பதிப்பிற்கு அருளியது

உ

சிவமயம்

ஸ்ரீ தொண்டை மண்டலாதீனம்

''கயிலைப் புனிதர்'' சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

57, உபதலைவர் பரமசிவம் தெரு, பெரிய காஞ்சிபுரம் - 631 502.

ஆசியுரை

நாள் : *10-07-1991.*

''ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றி என்னாத விவ் யாக்கை யாற் பயனென்
கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற் பயனென்''

(அப்பர்)

மக்கட் சமுதாயம் இன்பமாக வாழவேண்டுமானால் அனைவரும் பரந்த மனப்பான்மையோடு பிறர் நலத்தைப்பேணி வாழ்வதைத் தவிர வேறு வழி இல்லை. ''நான்-எனது'' என்னும் செருக்குகள் குறையக் குறைய உயிரினங்களை அன்புடன் நேசிக்கும் பண்பு தோன்றும். இதனை நன்குணர்ந்த நம் முன்னோர்கள், வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து காட்டினர். இதன் பயனே இறையுணர்வு ஆகும்.

இறையுணர்வும், சிந்தனையும் மனித உள்ளத்தே அரும்பிடினும், அவை மலர்தல் வேண்டுமன்றோ? அதற்காகவே வானளாவிய ஆலயங்களை எழுப்பினர். தமிழ்நாட்டில் மட்டும் 35,000க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் இருப்பனவாகத் தெரிகிறது. இந்தச் சிறப்பு உலகில் வேறு எந்த நாட்டிலும் காண முடியாத ஒன்று, இவைகளுள் திருமுறைப் பாடல்கள் பெற்ற திருக்கோயில்களைப் பற்றிய விளக்கமே இந்நூலாகும்.

செல்லும் வழிதெரிந்தும், தலவிளக்கம் அறிந்து அவ்வத் தலங்களுக்குரிய திருமுறைப் பாடல்களை ஓதியும், பிறர்

Koviloor Digital Library

உதவியின்றியே எவரும் எளிதில் சென்று வழிபடுவதற்குரிய வகையில் அமைந்த விளக்க நூல் ஒன்று வெளிவர ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றிய வண்ணம் இந்நூல் உருவாகியுள்ளது.

இதன் ஆசிரியரான ஸ்ரீ மடத்து ஆஸ்தானத் தமிழ்ப் புலவர், செஞ்சொல்மணி, புலவர் திரு. பு. மா. ஜயசெந்தில்நாதன் அவர்கள் திருமுறை பெற்ற தலங்கட்கு நேரில் சென்று - புகைப்படம் எடுத்து - அங்கு நடைபெற்ற அற்புதச் செயல்கள் - வழங்கும் செவிவழிச் செய்திகள் - பேருந்து வழிகள் - அஞ்சல் முகவரி - திருக்கோயில்களைப் பராமரிக்கும் ஆதீனங்களின் பெயர்கள் - கல்வெட்டுச் செய்திகள் - தலபுராணப் பாடல்கள் - தனிப்பாடல்கள் - தலங்களுக்கு இன்றுள்ள பெயர்கள் ஆகியவைகளோடு, கோயில்கள் தோறும் கோபுரவாயில் விநாயகரிலிருந்து சண்டேசுரர் வரை சிவாலய வழிபாட்டு முறைப்படி நெறிப்படுத்தி விளக்கியிருப்பது நேரில் சென்று வழிபடுவோர்க்கு உண்டாகும் உள்ளக் கிளர்ச்சியை இதனைப் படிக்கும் போதே இந்நூல் உருவாக்குகிறது. எதையும் எளிதில் விரைவில் அறிய விரும்பும் இந்நாட்களில் இதுபோன்ற ஓர் நூல் வேண்டற் பாலதே. ஆக, இவ்வகை நூல்களுள் இஃது ஓர் தனித் தன்மை பெற்று விளங்குகிறது.

அன்பர்களின் வரவேற்பினால் இரண்டாம் பதிப்பாக வெளிவரும் இந்நூலால் நாம் பயனை அனைவரும் பெறவும், இதன் ஆசிரியரின் சமயப் பணிகள் மேன்மேலும் சிறக்கவும் திருவருளைச் சிந்திக் கின்றோம்.

Koviloor Digital Library

நான்காம் பதிப்பிற்கான நூன்முகம்

''திருமுறைத் தலங்கள்'' என்னும் இந்நூல் அன்பர்களின் பேராதரவால் மூன்றாம் பதிப்பாக வெளிவருகின்றது. இப்பதிப்பில், 275 தேவாரத் திருமுறைத் தலங்களுடன் திருவாசக, திருவிசைப்பாத் தலங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பிற்சேர்க்கையில் ''வழுவூர்'' வீரட்டத் தலவிளக்கமும், வரை படங்களும் பிற குறிப்புக்களும் கூடுதலாக இடம் பெற்றுள்ளன. எனவே திருமுறைத் தலங்கள் அனைத்திற்கும் சிறந்த, முழுமையான தல விளக்க வழிகாட்டியாக கூடுதலான செய்திகளும், புதிய படங்களும், திருத்தப்பெற்ற முகவரிகளும் பெற்று இந்நூல் புதிய பதிப்பாக அமைந்துள்ளது.

சிவதலயாத்திரைக்கு வரப்பிரசாதமாக விளங்குகின்ற இந்நூலின் முன்பதிப்புக்களைப் பெற்று, யாத்திரை செய்து பயனடைந்துள்ள சமய மன்றங்கள், நிறுவனங்கள், சபைகள், தனிப்பட்டோர் எண்ணிக்கை அளவுக்கப்பாற்பட்டது.

''தங்கள் நூலைப் பின்பற்றி நன்முறையில், சரியான பாதையில் அலைச்சலின்றிச் சென்று தலங்களையெல்லாம் விவரமறிந்து வழிபட்டோம்; தங்கள் பணி போற்றுதற்குரியது'' என்று பாராட்டி வந்துள்ள கடிதங்கள் அளவில. மேலும் பலர் இந்நூல் வேண்டும் என்று கேட்ட வண்ணமுள்ளனர். அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவே இப்பதிப்பு வெளிவருகின்றது.

பயனடைந்த நெஞ்சங்களுக்கும், பாராட்டிய அன்பர்களுக்கும் எளியவனின் இதயமார்ந்த நன்றி.

ஜகத்குருவின் ஸ்ரீமுகம், கிடைத்திருப்பது என் பாக்கியம்.

எளியேனின் வேண்டுதலையேற்றுத் திருக்கோயிலின் நிழற்படங்களை அன்புடன் அனுப்பியுதவிய ஆலய சிவாசாரியார்கள், அறங்காவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப்போற்றி, அவர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அழகுற அச்சிட்டு வெளியிடும் வர்த்தமானன் பதிப்பகத்திற்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களும் நன்றியும் என்றும் உரியன.

சமயத் துறையில் எளியவனை ஆளாக்கி, உடனாயிருந்து வாழ்வளித்து வரும் என் குருநாதர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

Koviloor Digital Library

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் திருவடிக் கமலங்களே என் வாழ்வுக்குக் கலங்கரை விளக்கம். அவ்விளக்கத்தின் ஒளியில் மேன்மேலும் விளக்கம் பெறத் திசைநோக்கிப் பணிகின்றேன்.

தொண்டு செய்யும் மன உணர்வில் எழுதி வெளியிடப் பெறும் இந்நூலை அன்பர்கள் விரும்பிப் போற்றித் தல யாத்திரை செய்து அருள் நலம்பெறவேண்டி, திருக்காமக்கோட்டி உடனாகிய திருவேகம்பப் பெருமான் திருவருள் எல்லோர்க்கும் துணை நிற்கப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் இறை பணியில்,

பு. மா. ஜயசெந்தில்நாதன்

Koviloor Digital Library

திருத்தல அட்டவணை

		பக்கம்
தொண்டை நாடு : (32)		
1	திருக்கச்சி ஏகம்பம்	17
2	திருக்கச்சி மேற்றளி	31
3	ஓணகாந்தன் தளி	34
4	கச்சி அனேகதங்காவதம்	35
5	கச்சிநெறிக்காரைக்காடு	37
6	குரங்கணில்முட்டம்	39
7	மாகறல்	41
8	திருவோத்தூர்	45
9	வன்பார்த்தான் பனங்காட்டூர்	49
10	திருவல்லம்	54
11	திருமாற்பேறு	60
12	திருவூறல்	65
13	இலம்பையங்கோட்டூர்	68
14	திருவிற்கோலம்	71
15	திருவாலங்காடு	76
16	திருப்பாசூர்	81
17	திருவெண்பாக்கம்	85
18	திருக்கள்ளில்	89
19	திருக்காளத்தி	90
20	திருவொற்றியூர்	103
21	திருவலிதாயம்	108
22	(வட) திருமுல்லைவாயில்	110
23	திருவேற்காடு	115
24	மயிலாப்பூர்	117
25	திருவான்மியூர்	121
26	திருக்கச்சூர்	125
27	திருஇடைச்சுரம்	129
28	திருக்கழுக்குன்றம்	131
29	அச்சிறுபாக்கம்	136
30	திருவக்கரை	141
31	திருஅரசிலி	145
32	திருஇரும்பைமாகாளம்	148
நடு நாடு : (22)		
33	திருநெல்வாயில் அரத்துறை	150
34	பெண்ணாகடம்	153
35	திருக்கூடலையாற்றூர்	159
36	திருஎருக்கத்தம்புலியூர்	161
37	திருத்தினைநகர்	163
38	திருச்சோபுரம்	166
39	திருவதிகை	169
40	திருநாவலூர்	174
41	திருமுதுகுன்றம்	176
42	திருநெல்வெண்ணெய்	183
43	திருக்கோவலூர்	186
44	அறையணிநல்லூர்	191
45	இடையாறு	194
46	திருவெண்ணெய் நல்லூர்	196
47	திருத்துறையூர்	200
48	வடுகூர்	204
49	திருமாணிகுழி	206
50	திருப்பாதிரிப்புலியூர்	210
51	திருமுண்டீச்சரம்	215
52	புறவார்பனங்காட்டூர்	218
53	திருவாமாத்தூர்	220
54	திருவண்ணாமலை	225
சோழ நாடு		
காவிரி வடகரை : (63)		
55	கோயில் - சிதம்பரம்	232
56	திருவேட்களம்	239
57	திருநெல்வாயில்	241
58	திருக்கழிப்பாலை	243
59	திருநல்லூர்ப்பெருமணம்	245
60	திருமயேந்திரப்பள்ளி	248
61	(தென்) திருமுல்லைவாயில்	250
62	திருக்கலிக்காமூர்	252
63	திருச்சாய்க்காடு	254
64	திருப்பல்லவனீச்சுரம்	258
65	திருவெண்காடு	260
66	கீழைத்திருக்காட்டுப் பள்ளி	265
67	திருக்குருகாவூர்	267
68	சீகாழி	269

Koviloor Digital Library

		பக்கம்
69	திருக்கோலக்கா	276
70	புள்ளிருக்குவேளூர்	278
71	திருக்கண்ணார்கோயில்	285
72	திருக்கடைமுடி	288
73	திருநின்றியூர்	290
74	திருப்புன்கூர்	292
75	திருநீடூர்	297
76	திருஅன்னியூர்	300
77	திருவேள்விக்குடி	302
78	எதிர்கொள்பாடி	304
79	திருமணஞ்சேரி	306
80	திருக்குறுக்கை	310
81	திருக்கருப்பறியலூர்	313
82	திருக்குரக்குக்கா	315
83	வாளொளிப்புத்தூர்	317
84	பழமண்ணிப்படிக்கரை	320
85	ஓமாம்புலியூர்	322
86	கானாட்டுமுள்ளூர்	324
87	திருநாரையூர்	326
88	திருக்கடம்பூர்	330
89	பந்தணைநல்லூர்	333
90	கஞ்சனூர்	339
91	திருக்கோடிகா	344
92	திருமங்கலக்குடி	346
93	திருப்பனந்தாள்	349
94	திருஆப்பாடி	352
95	சேய்ஞலூர்	354
96	திருந்துதேவன்குடி	357
97	திருவியலூர்	358
98	கொட்டையூர்	360
99	இன்னம்பர்	362
100	திருப்புறம்பயம்	364
101	திருவிசயமங்கை	367
102	திருவைகாவூர்	368
103	வடகுரங்காடுதுறை	370
104	திருப்பழனம்	372
105	திருவையாறு	374
106	திருநெய்த்தானம்	381
107	பெரும்புலியூர்	383
108	திருமழபாடி	384
109	திருப்பழுவூர்	389

		பக்கம்
110	திருக்கானூர்	391
111	அன்பிலாலந்துறை	394
112	திருமாந்துறை	396
113	திருப்பாற்றுறை	398
114	திருஆனைக்கா	400
115	திருப்பைஞ்ஞீலி	404
116	திருப்பாச்சிலாச்சிராமம்	406
117	திருஈங்கோய்மலை	409

சோழ நாடு

காவிரி தென்கரை : (127)

118	திருவாட்போக்கி	411
119	கடம்பந்துறை	414
120	திருப்பராய்த்துறை	415
121	கற்குடி	418
122	மூக்கீச்சுரம்	421
123	திரிசிராப்பள்ளி	424
124	திருஎறும்பியூர்	427
125	திருநெடுங்களம்	430
126	(மேலைத்)திருக்காட்டுப்பள்ளி	433
127	திருஆலம்பொழில்	435
128	திருபூந்துருத்தி	437
129	திருக்கண்டியூர்	439
130	திருச்சோற்றுத்துறை	442
131	திருவேதிகுடி	444
132	தென்குடித்திட்டை	446
133	திருப்புள்ளமங்கை	449
134	சக்கரப்பள்ளி	451
135	திருக்கருகாவூர்	453
136	திருப்பாலைத்துறை	456
137	திருநல்லூர்	459
138	ஆவூர்ப்பசுபதீச்சுரம்	463
139	திருச்சத்திமுற்றம்	465
140	பட்டீச்சரம்	468
141	பழையாறைவடதளி	471
142	திருவலஞ்சுழி	473
143	குடமூக்கு	476
144	குடந்தைக் கீழ்க்கோட்டம்	482
145	குடந்தைக்காரோணம்	484
146	திருநாகேச்சுரம்	486
147	திருவிடைமருதூர்	488

Koviloor Digital Library

		பக்கம்
148	தென்குரங்காடுதுறை	492
149	திருநீலக்குடி	494
150	வைகல்மாடக்கோயில்	496
151	திருநல்லம்	498
152	திருக்கோழம்பம்	500
153	திருவாவடுதுறை	502
154	திருத்துருத்தி	505
155	திருவழுந்தூர்	509
156	மயிலாடுதுறை	512
157	திருவிளநகர்	516
158	திருப்பறியலூர்	518
159	திருச்செம்பொன்பள்ளி	520
160	திரு நனிபள்ளி	524
161	திருவலம்புரம்	526
162	திருதலைச்சங்காடு	529
163	ஆக்கூர்	530
164	திருக்கடவூர்	532
165	திருக்கடவூர்மயானம்	537
166	வேட்டக்குடி	540
167	திருத்தெளிச்சேரி	542
168	தருமபுரம்	544
169	திருநள்ளாறு	546
170	கோட்டாறு	551
171	அம்பர்பெருந்திருக்கோயில்	554
172	அம்பர்மாகாளம்	556
173	திருமீயச்சூர்	559
174	திருமீயச்சூர் இளங்கோயில்	559
175	திலதைப்பதி	561
176	திருப்பாம்புரம்	565
177	சிறுகுடி	568
178	திருவீழிமிழலை	571
179	வன்னியூர்	575
180	கருவிலிக்கொட்டிட்டை	576
181	பேணுபெருந்துறை	578
182	திருநறையூர்ச்சித்தீச்சரம்	580
183	அரிசிற்கரைப்புத்தூர்	582
184	சிவபுரம்	584
185	திருகலயநல்லூர்	588
186	கருக்குடி	590
187	ஸ்ரீ வாஞ்சியம்	591

		பக்கம்
188	நன்னிலம்	595
189	கொண்டீச்சரம்	597
190	திருப்பனையூர்	599
191	திருவிற்குடி	602
192	திருப்புகலூர்	604
193	திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்	604
194	இராமனதீச்சரம்	608
195	திருப்பயற்றூர்	609
196	திருச்செங்காட்டங்குடி	611
197	திருமருகல்	617
198	திருச்சாத்தமங்கை	620
199	நாகைக்காரோணம்	622
200	சிக்கல்	626
201	கீழ்வேளூர்	629
202	தேவூர்	631
203	திருப்பள்ளியின்முக்கூடல்	633
204	திருவாரூர்	636
205	திருவாரூர் அரநெறி	636
206	திருவாரூர்ப் பரவையுண்மண்டளி	636
207	திருவிளமர்	647
208	கரவீரம்	648
209	பெருவேளூர்	649
210	தலையாலங்காடு	653
211	குடவாயில்	654
212	திருச்சேறை	658
213	நாலூர்மயானம்	660
214	கடுவாய்க்கரைப்புத்தூர்	662
215	இரும்பூளை	664
216	அரதைப்பெரும்பாழி	667
217	அவளிவணல்லூர்	668
218	பரிதிநியமம்	671
219	வெண்ணி	673
220	பூவனூர்	675
221	பாதாளேச்சுரம்	679
222	திருக்களர்	681
223	திருச்சிற்றேமம்	684
224	திருவுசாத்தானம்	686
225	இடும்பாவனம்	689

Koviloor Digital Library

		பக்கம்
226	கடிக்குளம்	690
227	தண்டலைநீள்நெறி	692
228	கோட்டூர்	696
229	திருவெண்டுறை	699
230	கொள்ளம்பூதூர்	701
231	பேரெயில்	705
232	திருக்கொள்ளிக்காடு	707
233	திருத்தெங்கூர்	709
234	திருநெல்லிக்கா	711
235	திருநாட்டியத்தான்குடி	714
236	திருகாறாயில்	716
237	கன்றாப்பூர்	719
238	வலிவலம்	722
239	கைச்சினம்	725
240	திருக்கோளிலி	727
241	திருவாய்மூர்	731
242	திருமறைக்காடு	732
243	அகத்தியான்பள்ளி	738
244	திருக்கோடி	739

பாண்டிய நாடு : (14)

245	திருஆலவாய் (மதுரை)	741
246	திருஆப்பனூர்	747
247	திருப்பரங்குன்றம்	748
248	திருஏடகம்	750
249	கொடுங்குன்றம்	752
250	திருப்புத்தூர்	754
251	திருப்புனவாயில்	757
252	இராமேஸ்வரம்	761
253	திருஆடானை	767
254	திருக்கானப்பேர்	770
255	திருப்பூவணம்	773
256	திருச்சுழியல்	776
257	குற்றாலம்	780
258	திருநெல்வேலி	785

கொங்கு நாடு : (7)

		பக்கம்
259	அவிநாசி	790
260	திருமுருகன்பூண்டி	793
261	திருநணா	795
262	கொடிமாடச்செங் குன்றூர்	798
263	வெஞ்சமாக்கூடல்	803
264	திருப்பாண்டிக்கொடுமுடி	806
265	கருவூர்	809

மலைநாடு : (1)

266	திருஅஞ்சைக்களம்	813

துளுவநாடு : (1)

267	திருக்கோகர்ணம்	816

வடநாடு : (5)

268	திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்)	821
269	இந்திரநீலபருப்பதம்	825
270	அநேகதங்காபதம்	826
271	திருக்கேதாரம்	827
272	நொடித்தான்மலை (கயிலாயம்)	828

ஈழநாடு : (2)

273	திருக்கோணமலை	831
274	திருக்கேதீச்சரம்	835

புதிதாகக் கண்டுபிடித்த தலம் (காவிரி-தென்கரை)

275	திருவிடைவாய்	841

மேலும் புதிதாகக் கிடைத்துள்ளது

276	திருக்கிளியன்னவூர்	842

நூலுள் தலங்களுக்கு முன்பாக இடப்பட்டுள்ள வரிசை எண்களில் முதலில் உள்ள எண், மொத்த வரிசை எண்; அடுத்துள்ள எண் அந்நாட்டுத் தலங்களுள் அத்தலத்திற்கு உரிய வரிசை எண்.

(எ-டு) 33/1 என்பதில் 33-மொத்த வரிசை எண் 1-நடுநாட்டில் முதலாவது தலம்.

Koviloor Digital Library

திருவாசகத் தலங்கள்

1 திருப்பெருந்துறை 847
2 தில்லை (சிதம்பரம்) (பாடல்கள்) 867

3 திருஉத்தர கோசமங்கை 869
4 திருவண்ணாமலை (பாடல்கள்) 878
5 திருக்கழுக்குன்றம் (பாடல்கள்) 879
6 தோணிபுரம் (சீகாழி) (பாடல்கள்) 880
7 திருவாரூர் (பாடல்கள்) 880

திருவிசைப்பா, திருப்பல்லாண்டுத் தலங்கள்

1 கோயில் (சிதம்பரம்) (பாடல்கள்) 884
2 கங்கை கொண்ட சோழேச்சரம் 886
3 களந்தை ஆதித்தேச்சரம் 892
4 கீழ்க்கோட்டூர் மணியம்பலம் 895
5 திருமுகத்தலை 897
6 திரைலோக்கிய சுந்தரம் 900
7 திருப்பூவணம் 903
8 திருச்சாட்டியக்குடி 903
9 தஞ்சை இராசராசேச்சரம் 906
10 திருவிடைமருதூர் 911
11 திருவாரூர் 912
12 திருவீழிமிழலை 912
13 திருவாவடுதுறை 913
14 திருவிடைக்கழி 914

பிற்சேர்க்கை

வழுவூர் 920
தேவாரத்தலவணக்கம் 923
ஓட்டுநர் / பயணியர் சிந்தனைக்கு 936

மகேஸ்வர பூஜை ஆசீர்வாதம் 938
தலம் சுற்றிலும் உள்ள பிறதலங்கள் பட்டியல் 939

Koviloor Digital Library

உ

திருநாவுக்கரசர் அருளிய

திரு அங்கமாலை

திருச்சிற்றம்பலம்.

தலையே நீவணங்காய் - தலைமாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்-தலையேநீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ-கடல்நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின்றாடும் பிரான் தன்னைக் -
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ-சிவன் எம்இறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
-செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீ முரலாய்-முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை-மூக்கேநீ முரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய்-மதயானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்தன்னை
-வாயே வாழ்த்துகண்டாய்.

நெஞ்சே நீநினையாய்-நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை-நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித் தொழீர்-கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்-கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கை யாற்பயனென்-அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றிஎன் னாதஇவ்
-ஆக்கை யாற்பயனென்.

கால்க ளாற்பயனென்-கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்-கால்க ளாற்பயனென்.

உற்றார் ஆர்உளரோ-உயிர் கொண்டு போம் பொழுது
குற்றா லத்துறை கூத்தன்அல்லால் நமக் குற்றார் ஆர்உளரோ.

இறுமாந் திருப்பன் கொலோ-ஈசன் பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்(கு)
-இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன்-திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
-தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

உ

திருவாசகம்

பண்டாய நான்மறை

திருச்சிற்றம்பலம்

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரு மில்லைக் கடையேனைத் தொண்டாகக்
கொண்டருளும் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. 1

உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளம் தரும்பரியின் மேல்வந்த - வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும்பிறவிக் காடு. 2

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டில் பரிபாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து. 3

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் - சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். 4

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசை - பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். 5

காணும் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. 6

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. 7

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

உ

1. திருக்கச்சி ஏகம்பம்

ஏகாம்பரநாதர் திருக்கோயில்
(பெரிய) காஞ்சிபுரம்



தொண்டைநாட்டுத் தலம்.

சென்னை, செங்கற்பட்டு, அரக்கோணம், வேலூர் முதலிய பல நகரங்களிலிருந்து வருவதற்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்குப் பேருந்துகள் அடிக்கடி உள்ளன.

Koviloor Digital Library

செங்கற்பட்டு - அரக்கோணம் இருப்புப் பாதையில், காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையம் - மத்தியில் உள்ளது.

காஞ்சிபுரம், வரலாற்றுக்கு முற்பட்ட நகரம் என்னும் சிறப்புடையது. கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரம் சிறப்பாக இருந்த செய்தி, சீன யாத்ரிகர் யுவான்சுவாங் குறிப்பின் மூலம் தெரிய வருகின்றது. கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி, தம் பாஷ்யத்துள் காஞ்சியின் சிறப்பைக் கூறியுள்ளார்.

தொண்டை நாட்டின் தலைநகரமாகத் திகழும் காஞ்சிபுரம், கி. பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த பல்லவர்களுக்குத் தலைநகராக விளங்கியது. சோழர்கள், விஜயநகர மன்னர்கள் ஆகியோர்களின் ஆட்சி முத்திரைகளும் இந்நகரில் பதிந்திருந்தன.

''கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்'' என்று அப்பர் தேவாரத்தில் புகழப்படும் இத்தலம் பண்டைக்காலத்தில் கல்விக்கு இருப்பிடமாக விளங்கிக் 'கடிகாஸ்தானத்தை'யும், புகழ்பெற்ற அறிஞர்களையும் பெற்றிருந்தது. ஹர்ஷர் காலத்தில் புகழுடன் விளங்கிய நாலந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவராக விளங்கிய தர்மபாலரும், பேராசிரியர் தின்னாகரும், பௌத்த சமயத் தத்துவ நூல்களை எழுதி உதவிய போதிதர்மரும் காஞ்சியைச் சேர்ந்தவர்களே.

அர்த்தசாஸ்திரம் எழுதிய சாணக்கியர், திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், பொய்கையாழ்வார், வேதாந்த தேசிகர், வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர், சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான சியாமா சாஸ்திரிகள், இசைமேதை நயினாப் பிள்ளை முதலியவர்களைப் பெற்ற பேறுடையதும் இத்தலமே. மணிமேகலை வந்து தங்கி உபதேசம் பெற்ற தலம் காஞ்சியே. காஞ்சிக்குப் பக்கத்தில் உள்ள 'ஜின காஞ்சி' (ஜைன காஞ்சி) என்னும் பகுதி-தற்போது திருப்பருத்திக்குன்றம் என்று வழங்கும் பகுதி-பண்டை நாளில் சமணர்களுக்குக் (திகம்பரப் பிரிவினர்க்கு) கோட்டையாக விளங்கிய தாகும். இங்குள்ள ஜைனக்கோயில் மிக்க சிறப்பு வாய்ந்தது. கி. பி. 14ஆம் நூற்றாண்டில் மல்லிசேனா, வாமனசூரி போன்ற சமணப் பெருமக்கள் காஞ்சியில் அனைவராலும் மதிக்கத்தக்கவர்களாக வாழ்ந்தனர். இவையெல்லாம் நோக்குமிடத்துக் காஞ்சிபுரம் சமயப் பொதுவிடமாகத் திகழ்ந்தது என்பதையும் அறிகின்றோம்.

வைணவத்திலும் காஞ்சி அழியாத சிறப்பைப் பெற்றுள்ளது. பொய்கையாழ்வாரும் வேதாந்த தேசிகரும் வாழ்ந்த பதி. ஸ்ரீ ராமாநுஜர்

Koviloor Digital Library

இளமைக் காலத்தைக் காஞ்சியில் கழித்து அத்திகிரி அருளாளனாகிய ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் பேரருளைப் பெற்றார். திருமழிசை யாழ்வாரும் சில காலம் காஞ்சியில் வாழ்ந்தார் என்பதும், அவர் தொடர்பான 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' வரலாறும் அனைவரும் அறிந்ததே. வரதராஜப் பெருமாளுக்குத் தொண்டு செய்து வாழ்ந்து வந்த 'திருக்கச்சி நம்பிகள்' பெருமையை அறியாதார் யார்?

காஞ்சிபுரம் கோயில்கள் மலிந்த நகரம். எப்போதும் விழாக்கள் மலிந்து விளங்கும் நகரமாதலின் 'விழவறாக் காஞ்சி' என்று புகழப்படும் பெருமை பெற்றது.

பெரும்பாணாற்றுப்படை, தண்டியலங்காரம் முதலிய நூல்கள் இத்தலத்தின் புகழைப் பாடுகின்றன.

தற்கால உலகில் பட்டுப்புடவைகளுக்குப் புகழ் பெற்றது காஞ்சி. காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. பஞ்சபூதத் தலங்களுள் இது பிருதிவித் தலம்.

சக்தி பீடங்களுள் சிறந்ததாகிய காமகோடி பீடத்தலம் இதுவே. காமாட்சியம்பிகையின் ஆலயம் காமக்கோட்டம் எனப்படும். இறைவனிடம் இருநாழி நெல் பெற்று அம்பிகை முப்பத்திரண்டு அறங்களையும் செய்தருளிய அற்புதத் தலம். கந்தபுராணம் தோன்றிய பெருமையுடைய தலமும் இதுவே. இந்நூலாசிரியரான கச்சியப்ப சிவாசாரியார் தொண்டு செய்து வந்த குமரகோட்டமும் (முருகன் திருக்கோயில்) இங்குள்ளதே. கந்த புராணம் அரங்கேற்றப்பட்ட மண்டபம் இன்றும் இத்திருக்கோயிலில் கச்சியப்பர் பெயரில் நூலகமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

'நகரேஷு காஞ்சி' 'முத்திதரும் நகர் ஏழில் முக்கியமாம் காஞ்சி' என்றெல்லாம் புகழ்ந்தோதப்படும் இத்தலத்திற்கு 1. பிரளயசித்து 2. காமபீடம் 3. மும்மூர்த்திவாசம் 4. சிவபுரம் 5. விண்டுபுரம் 6. தபோமயம் 7. சகலசித்தி 8. கன்னிகாப்பு 9. துண்டீரபுரம் 10. சத்திய விரதக்ஷேத்திரம் 11. பூலோக கயிலாயம் 12. பிரமபுரம் என்பன வேறு பெயர்கள். திருவேகம்பமும் குமரகோட்டமும் காமக் கோட்டமும் சோமாஸ்கந்த வடிவில் அமைந்திருப்பது இத்தலத்திற்குள்ள தனிச் சிறப்பாகும். தீர்த்தச் சிறப்பும் இதற்குண்டு. சர்வதீர்த்தத்தின் சிறப்பு அறியாதார் யார்? 'தரையிடங்கொளும் பதிகளிற் காஞ்சியந்தலம்' சிறந்தது என்பது கந்த புராணத் தொடராகும்.

சாக்கிய நாயனார், திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோர் வாழ்ந்த தெய்வப் பதி.

Koviloor Digital Library

கண் பார்வையிழந்த சுந்தரர் திருவெண்பாக்கத்தில் ஊன்று கோலைப் பெற்றவாறே இத்தலத்திற்கு வந்து காமக்கோட்டம் பணிந்து பின்னர்த் திருவேகம்பம் அடைந்து இறையருளால் இடக்கண்பார்வை பெற்ற அற்புதம் நிகழ்ந்த தலமிதுவே. உமை, திருமகள், வாணி ஆகிய மூவரும் முறையே வழிபட்ட ஏகம்பம், காயாரோகணம் கச்சபேசம், ஆகிய கோயில்கள் உள்ள தலம்.

இத்தலபுராணமாகிய காஞ்சிப் புராணம் - மாதவச் சிவஞான சுவாமிகளால் இயற்றப்பட்டது - தலபுராண வரலாற்றில் மிகச் சிறப்புடையதொரு இடத்தைப் பெற்றுள்ளதாகும். சிவஞான சுவாமிகள் காஞ்சியில் ஒரு பகுதியாக விளங்கும் பிள்ளையார் பாளையத்தில் மண்டபத் தெருவிற்குப் பக்கத்தில் உள்ள திருவாவடு துறை ஆதீனக்கிளை மடாலயத்தில் தங்கிக் காஞ்சிப் புராணத்தை எழுதினார். பிரமன் வழிபட்ட தலமாகிய இக் காஞ்சி, நிலமகளின் உந்தித் தானம் போன்றது என்று புகழப்படுகின்றது.

திசையனைத்தும் பக்தியுடன் போற்றிப் பணிந்து பரவப்படும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடம் உள்ள தலம் இதுவே. அருளொழுகு தவவிழிகள் அமையப் பெற்று, அண்டி வரும் அனைவருக்கும் அருள்சொரிந்து, உலகு வாழத் தவமாற்றி, உயர்ந்தோங்கு தவந்தனில் ஒப்பில்லா மாட்சிமை யுடையவர்களாகத் திகழ்ந்துவரும் காஞ்சி மாமுனிவர்களின் அருளாட்சி நனிசிறக்கும் அருமைத் தலமும் காஞ்சியே. சைவ ஆதீனங்களுள் மிகப் பழமையான ஆதீனமாகவும் மெய்கண்டதேவர் சந்தான பீடமாகவும் பெருமையுடன் திகழ்கின்ற தொண்டை மண்டலாதீனத் திருமடாலயம் இத்தலத்தில்தான் உள்ளது. இத்திருமடாலயத்தில், குருமகாசந்நி தானமாக ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் அவர்கள் எழுந்தருளியிருந்து (232-ஆவது பட்டம்) அருளாட்சிசெய்து வருகின்றார்கள்.

இத்தகு அளவற்ற சிறப்புக்களையுடைய இத்தலத்தில் கயிலாய நாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில், கச்சபேசம் முதலிய எண்ணற்ற கோயில்கள் இருப்பினும் பாடல்பெற்ற திருமுறைக் கோயில்கள் எனப்படுபவை ஐந்தேயாகும். அவை 1. திருவேகம்பம் 2. திருமேற்றளி 3. ஓணகாந்தன்தளி 4. கச்சிநெறிக்காரைக்காடு 5. அநேகதங்காவதம் என்பன.

இவற்றுள் 'பெரிய கோயில்' என்றழைக்கப்படும் ஸ்ரீ ஏகாம்பர நாதர் திருக்கோயிலே 'கச்சித் திருவேகம்பம்' என்று போற்றப்படும் பெருமை வாய்ந்தது.

Koviloor Digital Library

இத்திருக்கோயில் பெரிய காஞ்சிபுரம் பகுதியில் உள்ளது. திருவேகம்பம், திருக்கச்சியேகம்பம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் எனப் பலவாறு அழைக்கப்படுவதும் இத்திருக்கோயிலே.

மாணிக்கவாசகர் இத்திருக்கோயிலைக் 'கச்சித் திருவேகம்பன் செம்பொற்கோயில்' என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். அருணகிரி நாதரின் திருப்புகழும் உள்ளது. முற்றத் துறந்த பட்டினத்தாரின் 'திருவேகம்பமுடையார் திருவந்தாதியும்' கந்த புராணமும் இத்தலத்தின் சிறப்பையும், மூர்த்தியின் புகழையும் பலவாறு புகழ்கின்றன. மணிமேகலை, தக்கயாகப் பரணி, மத்தவிலாசப்பிரகசனம், தண்டி யலங்காரம் முதலிய நூல்களிலும், பன்னிரு திருமுறைகளில் பலவிடங்களிலும் இத்தலச் சிறப்பு பேசப்படுகின்றது.

இறைவன் - திருவேகம்பர், ஏகாம்பரநாதர், ஏகாம்பரேஸ்வரர்

இறைவி - ஏலவார்குழலி

தலமரம் - மா

தீர்த்தம் - சிவகங்கைத் தீர்த்தம்

மூவர் பாடலும் பெற்றது.

ஏகாம்பரேஸ்வரர் மூலவர் - மணல் (பிருதிவி) லிங்கம். உமாதேவியார் கம்பை நதிக்கரையில் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட, இறைவன் ஆற்றில் வெள்ளம் வருமாறு செய்ய, உமையம்மை இலிங்கத்தைத் தழுவிக் காத்தாள் என்பது தலவரலாறு. தழுவிய போது இறைவன் தன் திருமேனியில் அம்பிகையின் வளைத் தழும்பும் முலைச் சுவடும் ஏற்றுத் தழுவக் குழைந்தார். இதனால் இறைவனுக்குத் 'தழுவக் குழைந்த பிரான்' என்றும் பெயர்.

''எள்கலின்றி இமையவர்கோனை ஈசனை வழிபாடு செய்வாள்போல்
உள்ளத்துள்கி உகந்து உமைநங்கை வழிபடச் சென்றுநின்றவாகண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே''

(சுந்தரர்)

தற்போது 'கம்பா நதி' ஆலயத்துள் ஆயிரக்கால் மண்டபத்திற்கு முன்னால் குளமாகிய நிலையில் உள்ளது.

தலமரம் மாமரம். ஆம்ரம் - மாமரம்.

ஏகம் + ஆம்ரம் = ஏகாம்ரம் - ஒற்றை மாமரம்

Koviloor Digital Library

இம்மாவடியின்கீழ் இறைவன் எழுந்தருளியிருப்பதால் இறைவன்; ஏகாம்அரநாதர் எனப் பெயர் பெற்றார். இப்பெயரே ஏகாம்பரநாதர் என்று வழங்கலாயிற்று. ''ஒரு மாவின்கீழ் அரையர்'' என்னுந் தனிப்பாடல் தொடர் இங்கு நினைக்கத்தக்கது 'கம்பர்' என்பது தமிழில் வழங்கும் பெயர். ஊர்ப் பெயர் கச்சி, காஞ்சி என்றாலும் கோயிலுக்குப் பெயர் ஏகம்பம் என்பதே.

காஞ்சிபுர மண்டலம் முழுமைக்கும் தேவி, காமாக்ஷியே யாவாள். ஆதலின் காஞ்சியில் எச்சிவாலயத்திலும் தனியாக அம்பாள் (மூல) சந்நிதி கிடையாது. எனினும் ஒவ்வொரு கோயிலிலும் உற்சவமூர்த்த மாக ஓர் அம்பாள் சந்நிதி ஒரு பெயர் தாங்கி இருக்கும். அவ்வகையில் இத்திருக்கோயிலில் உள்ள அம்பாளுக்கு 'ஏலவார் குழலி' என்று பெயர். ஆயினும் தேவஸ்தானத்தின் பெயர் ஸ்ரீ காமாக்ஷியம்பாள் சமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம் என்றே வழங்கப்படுகிறது.

மிகப் பெரிய கோயில். உயர்ந்த ராஜகோபுரம் ஒன்பது நிலை களுடன் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. நுழைவு வாயிலில் முன்னால் விநாயகரும் முருகப்பெருமானும் இடம் மாறிக் காட்சி தருகின்றனர். இக்கோபுரம் விஜயநகர மன்னரான கிருஷ்ணதேவராயரால் கி. பி. 1509ல் கட்டப்பட்டதாகும். 'ஒன்பது நிலை தழீஇ ஓங்கும் கோபுரம்' என்பது காஞ்சிப் புராணம்.

இவ்வாயிலில் நின்றால் தண்ணென்ற காற்று எப்போதும் வீசுவதை அனுபவிக்கலாம். இவ்வாறு அனுபவித்த புலவரொருவர் தம் தனிப் பாடலில் 'கம்பத்தடி காற்று' என்று புகழ்ந்துள்ளார்.

உள்ளே நுழைந்தால் நேரே தெரிவது வாகன மண்டபம். இதற்குச் சரபேச மண்டபம் என்று பெயர். திருவிழாக் காலங்களில் சுவாமி இங்கெழுந்தருளி, உபசாரங்களை ஏற்று, வாகனங்கள் மீது ஆரோகணித்து திருவீதியுலாவுக்குப் புறப்படுவார்.

(பெரும்பாலான தலங்களில் வாகனங்களின் அமைப்பு பக்கவாட்டிலேயே அமைந்திருக்கும். சுவாமி நேராக நோக்குவார். ஆனால் இங்குச் சுவாமியின் நோக்கும் வாகனங்களின் முகமும் ஒரே திசையில் - நேராகவே இருக்கும்).

விசாலமான உள் இடம். இடப்பால் நந்தவனம். அடுத்து குளமாகத் தேங்கியுள்ள நிலையில் கம்பையாறு உள்ளது. நேரே தெரிவது ஆயிரக்கால் மண்டபம். சற்றுப் பழுதடைந்துள்ளது. இக்கோபுரம் பல்லவகோபுரம் எனப்படும். இக்கோபுர வாயிலில்தான், தல விநாயகராகிய 'விகடசக்கர விநாயகர்' உள்ளார்.

Koviloor Digital Library

சலந்தரனை அழிக்கத் திருமால் இறைவனை வேண்டிப் பெற்ற சக்கராயுதத்தை, வீரபத்திரர்மேல் ஏவியபோது அவர் அணிந்திருந்த வெண்டலைமாலையில் உள்ள ஒருதலை அதை விழுங்கிவிட்டது, திருமால் பெரிதும் வருந்தினார். இதையறிந்த விஷ்வக்சேனர் வீரபத்திரரிடம் சென்று வேண்டி, அவர் சொல்லியவாறே பிரம கபாலம் சிரிக்கும் வகையில் விகடக் கூத்தாடினார். அக்கூத்தைக் கண்டு பிரமகபாலம் சிரிக்க, சக்கரப்படை கீழே விழுந்தது. அப்போது அருகிலிருந்த விநாயகர், அதை விரைந்து எடுத்துக்கொண்டு, மறுமுறையும் விகடக்கூத்து ஆடுமாறு பணிக்க, அவரும் அவ்வாறே ஆடினார். மகிழ்ந்து விநாயகரும் சக்கரப்படையைத் தந்தருளினார். ஆதலின் விகடக் கூத்தினை விரும்பிக்கொண்டமையால் 'விகடசக்கர விநாயகர்' என்று பெயர் பெற்றார். விநாயகரை வணங்கிக் கோபுர வாயில் கடந்து வலப்பக்கமாகத் திரும்பிக் கோயிலுக்கு வரவேண்டும். இதுவே முறையான வழியாகும். பிற்காலத்தில் திருப்பணிகள் நடந்த காலத்தில் அமைக்கப்பட்ட மதில் 'வளைவு' ராஜகோபுரத்திற்கு நேராக இருப்பதால் இன்று மக்கள் பெரும்பாலும் இவ்வளைவின் வழியாகவே செல்கின்றனர்.

(சுவாமி புறப்பாடு இன்றும் இம்முறையான வாயில் வழியாகவே நடைபெறுவதை நேரில் காணலாம்.)

கோயிலுக்கு முன்புள்ளது 'திருக்கச்சி மயானம்' கோயிலாகும். இது வைப்புத் தலமாகும். அப்பரால் வைத்துப் பாடப்பட்டதாகும். அப்பாடல் :-

"மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
　　மயானத்தான் வார்சடையன் என்னின் அல்லால்
ஒப்புடையன் அல்லன் ஒருருவனல்லன்
　　ஓரூரனல்லன் ஓர்உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
　　அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
　　இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"

எதிரில் வள்ளல் பச்சையப்பர் கட்டிய மண்டபம் உள்ளது. இம்மண்டபத் தூண் ஒன்றில் அவருடைய உருவமும் உள்ளது.

ஏகம்பத்தின் நாற்புறத்திலும் நான்கு கோயில்கள் உள்ளன. அவற்றுள் கச்சிமயானம் ஒன்று. மற்றவை வாலீசம், ரிஷபேசம், சத்தியநாதேசம் என்பன. மறுபுறம் சிவகங்கைத் தீர்த்தம் உள்ளது,

Koviloor Digital Library

அழகிய பெரிய குளம். நல்ல படித்துறைகள் உள்ளன. நாற்புறமும் கோபுரங்கள் உள்ளன, உயர்ந்துள்ள கொடி மரம் பணிந்து கோயிலுள் நுழையும்போது வாயிலில் இரு துவார பாலகர்கள் நம்மை வரவேற்கின்றனர். பக்கத்தில் உட்புறமாகக் கரிகாற்சோழனின் சிலையொன்றுள்ளது.

உட்செல்லுகிறோம். வலப்பால் வாகன மண்டபம். இடப் பாலுள்ளது பவித்ர உற்சவ மண்டபம். இங்கிருந்து பார்த்தால் நேரே மூலவர் காட்சி தருகிறார். சற்று முன்னால் சென்று இடப்புறமாகத் திரும்பினால் அம்மூலையில் உள்ள தூணில் இறைவன், இறைவியைத் திருமணங்கொள்ளும் அழகான சிற்பம் உள்ளது. அதன் எதிர்த் தூணில் இறைவி, இறைவனின் கண்களைமூடும் சிற்பம் உள்ளது, இடப்பால் திரும்பிப் பிராகார வலம் வருகிறோம். வலப்பால் 'பிரளயகால சக்தி'யின் சந்நிதி உள்ளது, 'ஈறுசேர் பொழுதினும் இறுதியின்றியே காத்துக் காஞ்சியை மாறிலாது இருத்திடுகின்ற' அம்பிகை இவள். வழிபட்டுத் தொடர்கிறோம். பிராகாரம் மிக்க அழகுடையது. பக்கத்துத் தூண்களின் அமைப்பும் உச்சிப்பகுதியும் அற்புதமான அழகுடையவை, செல்லும்போதே வலப்பால் இருப்பது "சபா நாயகர்" மண்டபம். இது நாளடைவில் 'நாயகர்' மண்டபம் என்றாகி, இன்று மக்கள் வழக்கில் கொச்சையாக நாயர் மண்டபம் என்று வழங்குகிறது: இங்குத்தான் ஏகம்பநாதரின் உற்சவத் திருமேனி உள்ளது. சந்நிதியுள் பெருமான் (இங்கு) சோமாஸ்கந்த வடிவில் காட்சி தருகிறார். இம்மூர்த்தம் இராசசிம்ம பல்லவனின் உபயமாகச் செய்துவைக்கப்பட்டது. இதற்குச் சான்றாக இதன் பின்னால் பிரபாவளி செருகுமிடத்தில் சிங்கம் உள்ளது. பின்னால் உமாமகேசுவரர், சந்திரசேகரர், ஸ்ரீ கண்டசிவாசாரியார் முதலிய உற்சவத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. பெருவிழாக் காலங்களில் அபிஷேகங்களும் அலங்காரங்களும் செய்யப்படுவதும், பெருமான் உலாவுக்குப் புறப்படுகின்ற சிறப் புடையதும் இம்மண்டபத்தில்தான். இச்சந்நிதியில் இரு பக்கங்களிலும் பெரிய கண்ணாடிகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் திருமேனி யைப் பார்த்துத் தரிசிப்பதே தனியழகு, பிராகாரம் முழுவதிலும் இடப்பால் வரிசையாகச் சிவலிங்கங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பஞ்சமுக விநாயகர் தரிசனம். இது பிற்காலப் பிரதிஷ்டை, (1-2-1979ல் பிரதிஷ்டை செய்யப்பட்டது). அடுத்து வருவது மாவடி. தலத்திற்குரிய பெருமையுடையது. மாதவச் சிவஞான சுவாமிகள் "மருமலர்த்தனிமா" என்று இதைக் குறிப்பிடுகின்றார். மாவடியை வலம் வரும் அமைப்பில் பிராகாரமுள்ளது. துவார கணபதியையும்,

Koviloor Digital Library

ஆறுமுகரையும் வணங்கி, மேலேறிச் சென்று இறைவனையும் இறைவியையும் தரிசிக்கலாம். பீடத்தின் அடியில் பஞ்சாக்கினி தவம், இலிங்கோற்பவ வரலாறு : அம்பிகை தழுவும் கோலம் முதலிய சிற்பங்கள் உள்ளன.

மாமரம் இத்தல மரம். இவ்விடம் மிகச் சிறந்த பிரார்த்தனைக்குரிய இடமாகும். திருமணங்கள் நடைபெறுமிடம். புத்திரப் பேறில்லாத வர்கள் அப்பேறு வேண்டி, தொட்டிலைக் கட்டி வேண்டிக் கொள்ளும் நிலையை இன்றும் காணலாம்.

வேதமே மாமரம். வேதத்தின் நான்கு வகைகளே இம்மரத்தின் நான்கு கிளைகள். இதன் வயது புவியியல் வல்லுநர்களால் 3600 ஆண்டுகளுக்குமேல் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மரத்தின்மீது ஏறுவதுகூடாது. இயல்பாகவே பழுத்துக் கீழே விழும் கனிகளைச் சுவைத்தோர், நான்கு கிளைகளிலிருந்தும் கிடைக்கும் மாங்கனிகள் நான்கு விதமான சுவையுடையதாகச் சொல்கின்றனர்.

தவம் செய்த அம்பாளுக்கு, இறைவன் இம் மாவடியின் கீழ்தான் காட்சி தந்தருளினார். 'ஒருமாவின்கீழரையர்'' என்பது தனிப்பாடல். இம்மாமரத்தை வலம் வரலாம். மாவடியைத் தொழுது பின் திரும்பி வந்து, பிராகாரத்தில் வலம் வரும்போது சஹஸ்ரலிங்க சந்நிதி பெரிய ஆவுடையாருடன் காட்சி தருகின்றது. அடுத்து வலப்பால் படிகளேறிச் சென்றால் 'ஏலவார் குழலி' - அம்பாளின் உற்சவச் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம். அழகான திருமேனி.

பக்கத்தில் 'மாவடிவைகும் செவ்வேள்' சந்நிதி. குமரகோட்டம் என்னும் பெயரில் தனிக்கோயில் முருகப் பெருமானுக்கு இத்தலத்தில் இருந்தாலும், அப்பெருமானின் அருள் வரலாற்றைக் கூறும் கந்தபுராணம் இத்தலத்தில் தோன்றினாலும், அதில் மூவிரு முகங்கள் போற்றி' எனும் பாடலில் வரும் ''காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி'' என்று புகழப்படும் தொடருக்குரிய பெருமான் இவரேயாவார்.

இச்சந்நிதியில் உற்சவத் திருமேனி (வள்ளி தெய்வயானையுடன் கூடி) முன்னால் இருக்க, பின்னால் இதே திருமேனிகள் சிலாரூபத்தில் உள்ளன. அடுத்த தரிசனம் நடராச சபை - இடப்பால் உள்ளது.

11-12-1961ல் புதியதாக நிறுவப்பட்டது. முன் மண்டபம் அழகாக உள்ளது. சபையில் அம்பலக் கூத்தருடன் சிவகாமியும் மாணிக்கவாசகரும் காட்சி தருகின்றனர். தரிசித்து வெளி வந்தால் பக்கத்தில் 'பைரவர்' சந்நிதி. அடுத்துள்ளது யாக சாலை. எதிரில்

Koviloor Digital Library

வலப்பால் நவக்கிரக சந்நிதி. கிரகங்கள் உரியவாகனங்கள் மீது அமர்ந்து உரிய திசைகளை நோக்கியிருக்கும் அமைப்பில் உள்ளன. நடுவில் சூரியன் உள்ளார்.

உள்வாயிலைத் தாண்டுகிறோம். இடப்பால் இத்தலத்து வாழ்ந்த நாயன்மார்களான திருக்குறிப்புத்தொண்டர், ஐயடிகள் காடவர்கோன், சாக்கிய நாயனார் ஆகியோர் திருமேனிகள் உள்ளன. அடுத்து நால்வர் சந்நிதி; தொடர்ந்து அறுபத்து மூவர் மூலத் திருமேனிகள்; முடிவில் சந்தானாசாரியர்களும் உளர். எதிரில் வலப்பால் 'வெள்ளக் கம்பர்' சிவலிங்கத் திருமேனி உள்ளது. அடுத்துப் பிராகாரத்தில் இடப்பால் சிவலிங்க பாணங்கள் மட்டும் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து, ஆறுமுகப்பெருமான் திருவுருவமும், பக்கத்தில் 'கள்ளக் கம்பர்' சிவலிங்கத் திருமேனியும், அடுத்து 'மத்தள மாதவேசர்' சிவலிங்கத் திருமேனியும் உள்ளன, சண்டேசுவரர் உள்ளார். இத்திருக்கோயிலில் கருவறையில் கோஷ்ட மூர்த்தங்கள் ஏதுமில்லை. அடுத்து இடப்பால் வரிசையாக அறுபத்துமூவர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

நேரே நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதி. இச்சந்நிதியின் பக்கத்தில் 'நல்ல கம்பர்' சிவலிங்கத் திருமேனியும், அடுத்து, சற்று உள்ளடங்கிய தாகச் சூரியன் திருவுருவமும் உள்ளன, நாடொறும் ஆலய பூஜை இச்சூரிய பகவான் வழிபாட்டிலேயே தொடங்குகின்றது.

(நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதி திருமங்கையாழ்வாரின் மங்களாசாசனம் பெற்றது. இங்கு, தீர்த்தம் தரப்பெற்றுச் சடாரியும் சிவாசாரியாரால் சார்த்தப்படுகிறது. இச்சந்நிதியில் சிலாரூபமான திருமேனி வழிபாட்டில் உள்ளது. (பக்கத்தில் உள்ள சுதைரூபம் வழிபாட்டில் இல்லை.)

மூலவரைத் தரிசிக்கச் செல்லுகிறோம். ஆலந்தானுகந்து அமுத செய்த பிரான் பிருதிவி(மணல்)லிங்கமாகக் காட்சி தருகிறார். பாணம் சற்று கூசாகவுள்ளது. இதன்மீது தண்ணீர் படக்கூடாது. அபிஷேகங்கள் முதலிய அனைத்தும் ஆவுடையாருக்கே. இலிங்கபாணத்திற்குப் புனுகுச் சட்டம் மட்டும் சார்த்தப்படுகிறது. பின்னால் சுவரில் சோமாஸ்கந்தத் திருமேனி உள்ளது.

இலிங்க வகைகளுள் அம்பாள் அமைத்து வழிபட்ட இது 'தேவிக லிங்கமாகும்'. திங்கட்கிழமைதோறும் தல மகிமைத் தொடர்பான - அம்மை தழுவும் கோலமுடைய - கவசம் சார்த்தப்படுகிறது.

ஏலவார்குழலாள் என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற காலகாலனாம் கம்பன் எம்மானைக் கண்குளிரக் கண்டு மகிழ்கிறோம். தரிசனம் முடித்து

Koviloor Digital Library

பக்கவாயில் வழியாக இறங்கிச் சண்டேசுவரரை வணங்க வழியுள்ளது. ராஜகோபுரம் தெற்கு நோக்கியிருப்பினும் மூலவர் கிழக்கு நோக்கியுள்ளார்.

மூலவரைத் தரிசித்து, சண்டேசுவரரின் அருள் பெற்று வெளியே வந்து கொடி மரத்தின் முன்பு வீழ்ந்து வணங்கி வழிபாட்டை நிறைவு செய்கிறோம். வெளியில் பெரிய நந்தி உருவம் உள்ளது. இதற்குப் பக்கத்தில் 'வாலீசம்' தனிக் கோயிலாகவுள்ளது.

செயல் அலுவலரின் அலுவலகத்திற்குப் பக்கத்தில் குளத்தையொட்டி 'ரிஷபேசம்' கோயில் உள்ளது.

கச்சிமயானத்தின் முன்புள்ள தூணில் ஆதிசங்கரர், தக்ஷிணாமூர்த்தி சிற்பங்கள் உள்ளன. சபாநாயகர் மண்டபத்தில் சந்நிதிக்கு எதிரில் உள்ள இருதூண்களில் ஒன்றில் அன்ன வாகனத்தில் ஒருபுறம் ரதியும் மறுபுறம் மன்மதனும்; அவ்வாறே எதிர்த் தூணில் கிளி வாகனத்தில் ஒருபுறம் ரதியும் மறுபுறம் மன்மதனும் சிற்ப வடிவில் உள்ளனர்.

நவக்கிரகம் வணங்கி, உள்வாயிலுக்கு அருகில் இறங்கும் படிகளில் இறங்கும்போது ஒரு தூணில் நரசிம்மம் இரணியனைப் பிளக்கும் சிற்பமும் எதிர்த்தூணில் பிட்சாடனர் சிற்பமும் இருப்பதைக் காணலாம்.

நாடொறும் ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. பூஜை முறைகள் 'காமிக' ஆகம அடிப்படையில் அமைந்தவை. ரதசப்தமி நாளில் சூரிய ஒளி சுவாமிமீதுபடுதலைக் கண்டு தரிசிக்கலாம்.

திருப்பணிகள் 25-10-76ல் தொடங்கப் பெற்று மகா கும்பாபிஷேகம் 1-2-79ல் நடைபெற்றது. இவ்விரு நிகழ்ச்சிகளுமே ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டன. இக்கும்பாபிஷேகத்தை நகரத்தார்கள் செய்து தந்தது குறிப்பிடத்தக்கது.

இராசகோபுரமும் (1991ல்) திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இராசராச சோழதேவன், விசயகண்ட கோபாலதேவன், கம்பண்ண உடையார், அச்சுத உடையார், முதற்குலோத்துங்கன் மூன்றாம் குலோத்துங்கன் முதலியோர் காலத்திய கல்வெட்டுக்கள் இக்கோயிலில் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் 1. ஆராதனைக்கும் திருவமுதுக்கும் விடப்பட்ட நிபந்தங்கள். 2. கோயிலுக்குப் பசுக்களை வழங்கியது. 3. நந்தா விளக்கெரிய ஏற்பாடு செய்தது முதலிய செய்திகளை அறிகிறோம்.

Koviloor Digital Library

இத்திருக்கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா மிகச் சிறப்பாக பதினான்கு நாள்களுக்கு நடைபெறுகின்றது. இவ்விழாவில் ஆறாம்நாள் விழாவாகப் பகலில் அறுபத்துமூவரும் இரவில் வெள்ளித் தேர்க் காட்சியும் நடைபெறுவதும்; ஒன்பதாம் நாள் விழாவாக நடைபெறும் மாவடிச் சேவையும்; பன்னிரண்டாம் நாள் விழாவாக நடைபெறும் பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் சிறப்பாகத் தரிசிக்கத்தக்கன. பதினான்காம் நாள் இரவில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் நடைபெறும் திருமுறைப் பெருவிழா மிகச் சிறப்புடையதாகும். (சிவ சிவ ஒலி மண்டபக் கட்டளையும் ஸ்ரீ காசி மடத்தின் சார்பில் நடைபெறுகிறது).

ஆனித்திருமஞ்சனம், ஆடிப்பூரம், நவராத்திரி, அன்னாபிஷேகம், சுந்தரர் இடக்கண் பெற்றது. பவித்ரோற்சவம், தைப்பூசம், கார்த்திகைச் சோமவாரங்கள், (கடைசி சோமவாரம் லட்சதீபம்) மாசி மகம், சிவராத்திரி, திருவாதிரை முதலியவை இத்திருக்கோயிலில் நடைபெறும் சிறப்பு விழாக்களாகும்.

யாத்ரிகர்களுக்குரிய வசதிகளாகத் தங்குமிடங்களும், உணவு விடுதிகளும் இந்நகரில் வசதியாக உள்ளன. அரசின் சுற்றுலாத்துறை பயண மாளிகையும் இங்குள்ளது.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணொடு ஆணாகிய பெம்மானை
இறையானை ஏர்கொள் கச்சித் திருவேகம்பத்(து)
உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே.

(சம்பந்தர்)

கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல் ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

(அப்பர்)

பண்ணில்ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொடு ஆண் என்று பேசற்கு அரியவன்
வண்ணமில்லி வடிவு வேறாயவன்
கண்ணிலுண்மணி கச்சியேகம்பனே.

(அப்பர்)

முந்தைகாண் மூவரினும் முதலானான்காண்
மூவிலைமேல் மூர்த்திகாண் முருகவேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தினாற்குத்
தாதைகாண் தாழ்ந்து அடியே வணங்குவார்க்குச்

Koviloor Digital Library

சிந்தைகாண் சிந்தாத சித்தத்தார்க்குச்
சிவன் அவன்காண் செங்கண்மால் விடையொன்றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன்என் எண்ணத்தானே.

(அப்பர்)

''ஆலந்தான் உகந்து அமுது செயதானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே''

(சுந்தரர்)

காசணிமின்கள் உலக்கையெல்லாம் காம்பணிமின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற்
கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

(மாணிக்கவாசகர்)

''ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுருவானாய் போற்றி''

(திருவாச : போற். திருவக)

''ஏகம்பத்தின் இயல்பாயிருந்து
பாகம் பெண்ணொடாயின பரிசும்''

(திருவாச : கீர்த். திருவக)

மெய்த்தொண்டர் செல்லும் நெறி அறியேன் மிக நற்பணி செய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புறமே உன்னைப் போற்றுகின்ற
இத்தொண்டனேன் பணி கொள்ளுதியோ கச்சி ஏகம்பனே.

(திருவேகம்பர் திருவந்தாதி)

முன்னுறு பொருள்கட்கெல்லாம் முற்படு பழையாய் போற்றி
பின்னுறு பொருள்கட்கெல்லாம் பிற்படு புதியாய் போற்றி
புன்மதியாளர் தேறாப் பூரண முதலே போற்றி
சின்மயத் திருவேகம்ப சிவசிவ போற்றி போற்றி.

(காஞ்சிப்புராணம்)

Koviloor Digital Library

என்நெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ் செய்வாயாகில் காலத்தால் - வன்னெஞ்சேய்
மாகம்பத்தானை யுரித்தானை வண்கச்சி
ஏகம்பத்தானை இறைஞ்சு.

(க்ஷேத்திரத் திருவெண்பா)
(ஐயடிகள் காடவர்கோன்)

பங்கயச் செங்கைத் தளிரால் பனிமலர் கொண்டருச்சித்துச்
செங்கயற் கண்மலைவல்லி பணிந்த சேவடி நினைந்து
பொங்கிய அன்பொடு பரவிப் போற்றி ஆரூரர்க்கு
மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண் கொடுத்தார்.

(பெ. புரா)

''அற்றைக் கிரைதேடி
அத்தத்திலு மாசை
பற்றித் தவியாத
பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா
வெற்பைத் தொளைசீலா
கற்றுற்றுணர் போதா
கச்சிப் பெருமாளே''

(திருப்புகழ்)

''நாகம்பராந் தொண்டை நாட்டிலுயர் காஞ்சி.
ஏகம்பமேவும் பேரின்பமே''

(அருட்பா : விண். கலி. வெ)

தொல்லை மறைதேர் துணைவன் பல்லாண்டு வரை
எல்லையிருநாழி நெற்கொண்டோர் - மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சியிடை.

(தண்டியலங்கார மேற்கொள் பாடல்)

அஞ்சல் முகவரி :-

அருள்மிகு. ஏகாம்பரநாதர் திருக்கோயில்
காஞ்சிபுரம் - 631 502,
காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

2. திருக்கச்சி மேற்றளி

திருமேற்றளீஸ்வரர் கோயில்,
பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்.

தொண்டை நாட்டுத் தலம். காஞ்சிபுரத்தில் உள்ள திருமுறைத் தலங்கள் ஐந்தினுள் இதுவும் ஒன்று. காஞ்சியில் 'பிள்ளையார் பாளையம்' என்னும் பகுதியில் இக்கோயில் உள்ளது. இதன் பெயரால் அவ்வீதி திருமேற்றளித்தெரு என்று வழங்கப்படுகிறது.

திருமால் தவமிருந்து, சிவ சாரூபம் பெற்ற வரலாற்றுச் சிறப் புடையது.

இறைவன் - திருமேற்றளீஸ்வரர், திருமேற்றளிநாதர்

இறைவி - திருமேற்றளிநாயகி

அப்பர், சுந்தரர் ஆகியோரின் பாடல் பெற்ற பதி.

இத்தெருவில் கீழ்க்கோடியில் திருஞானசம்பந்தரின் ஆலயம் உள்ளது. மிகச்சிறிய கோயில். ஞானசம்பந்தர் சந்நிதி மட்டுமே உள்ளது. மூலத்திருமேனி திருமேற்றளிக் கோபுரத்தை நோக்கியவாறு கைகளைக் குவித்து வணங்கும் நிலையில் நின்ற கோலத்தில் உள்ளது. உற்சவத் திருமேனி; வலக்கை சுட்டிய விரலுடன் இடக்கையில் பொற்கிண்ணம் ஏந்திய நிலையில் பக்கத்தில் உள்ளது.

இத்தெருவின் நடுவில் இடப்பால் 'உற்றுக்கேட்ட முத்தீசர்' ஆலயம் உள்ளது. ஞானசம்பந்தர் பாடியபோது சிவபெருமான் அருகில் இருந்து கேட்பதற்காக இங்கு அமர்ந்ததாகவும் - கேட்டதாகவும் வரலாறு. வீதியின் மேற்கோடியில் திருமேற்றளிக் கோயில் உள்ளது.

இப்பகுதியில் நூற்றெட்டு ருத்ரர்கள் பூசித்ததாகச் செய்தியொன்று சொல்லப்படுகிறது. அதற்கேற்ப ஆனந்த ருத்ரேசம், மகா ருத்ரேசம் முதலிய பெயர்களில் இப்பகுதியில் கோயில்கள் உள்ளன.

திருமால் சிவ சாரூப நிலையைப் பெற வேண்டி இறைவனை வழிபட்ட திருத்தலம். இறைவன் காட்சி தந்து நின்றபோது திருமால் சிவசாரூப நிலையை வேண்ட, ஞானசம்பந்தர் இங்கு வருகைதந்து பதிகம் பாடும் போது அது கிடைக்கும் என்றும், அதுவரை இங்கிருந்து தவஞ்செய்யுமாறும் இறைவன் வரமளித்தார். அதன்படியே

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் வந்து பாடியபோது திருமால் சிவசாருபம் பெற்றார் என்பது தலவரலாறு.

இறைவன் - மேற்றளிநாதர். சந்நிதி மேற்கு நோக்கியது. தற்போது இச்சந்நிதி பிரசித்தமாக மக்களுக்குத் தெரியவில்லை. உள்ளே உள்ள (கர்ப்பக்கிருகத்துள்) சந்நிதி 'ஓத உருகீசர்' என்று வழங்கப்படுகின்றது. ஞானசம்பந்தரின் பாடலைக் கேட்டு உருகியவர் (திருமால்) இவர் எனப்படுகிறது. இதற்கு அடையாளமாகச் சிவலிங்கத் திருமேனியின் முன்பு இருதிருவடிகள் உள்ளன. இச்சந்நிதி கிழக்கு நோக்கியது.

ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. துவார கணபதி ஒருபுறமும் மறுபுறம் முருகப்பெருமானும் உள்ளனர். உள்ளே நுழைந்தால் விசாலமான இடம். முன்னே சென்றால் நந்தி, பலிபீடம் உள்ளன. வலப்பால் நவக்கிரக சந்நிதி உள்ளது. அடுத்துத் தனிக்கோயிலாக விளங்குவது மேற்றளிநாதர் சந்நிதியாகும் - மேற்கு நோக்கிய சந்நிதி. கோஷ்டமூர்த்தங்களாக ஒருபுறத்தில் விநாயகர், தக்ஷிணாமூர்த்தி ஆகிய திருவுருவங்களே உள்ளன. மறுபுறத்தில் எவையுமில்லை. மிகச்சிறிய சந்நிதி. இடப்பால் அம்பாள் (மூலத் திருவுருவம்) சந்நிதி உள்ளது. நின்ற கோலம் . காஞ்சி மண்டலம் முழுமைக்கும் அம்பாள் காமாட்சியேயாதலின் இம் மூர்த்தம்பிற்காலப்பிரதிஷ்டையாகும். அம்பாள் சந்நிதிக்குப்பக்கத்தில் உள்ளது சிறிய (இடம்) மண்டபம் - இங்குத் தான் அ/மி. கச்சபேசர் திருக்கோயில் பெருவிழாவின்போது 5ஆம் நாளில் அம்பாளை எழுந்தருளச் செய்து, அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டு, வீதியுலா நிகழும், அம்பாள் சந்நிதியின் முன்பு சிமெண்டு பலகையா லான மண்டபம் போடப்பட்டுள்ளது. தலப்பதிகமும் சுவரில் பதிக்கப் பட்டுள்ளது. அடுத்து இடப்புறம் நால்வர் சந்நிதி. இது சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டுள்ள பிரதிஷ்டை என்று சொல்லப் படுகிறது. வாயிலைக்கடந்து உள்நுழைந்து பிராகார வலமாக வரும் போது விநாயகர் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதி, காசிவிசுவநாதர், பைரவர் சந்நிதிகள் முதலியன உள்ளன. வலம்முடித்துப் பக்கவாயில் வழியாக உள்நுழைந்தால் எதிரில் நடராசசபை உள்ளது. இங்கு நடராச வடிவம் சுவரில் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளது. இங்கிருந்த திருமேனி, இவ்வினத்தாருக்குரிய கோயிலான அ/மி. கச்சபேசர் திருக்கோயிலில் கொண்டுபோய் வைக்கப்பட்டுள்ளதாகச் செவி வழிச்செய்தி சொல்லப்படுகிறது.

இவ்விடத்தில் சந்திரசேகரர், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வயானை முதலிய உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து

Koviloor Digital Library

வைக்கப்பட்டுள்ளன. இடப்பால் திரும்பி உள் சென்றால் ஓதஉருகீசர் சந்நிதி - பெரிய சிவலங்கத் திருமேனி. ஆவுடையாருக்கு எதிரில் கீழே இரு திருவடிகள் உள்ளன - கிழக்கு நோக்கிய சந்நிதி.

கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமன், துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

கோயிலுக்குப் பக்கத்தில் வெட்ட வெளியில் ஜேஷ்டாதேவியின் திருவுருவம் உள்ளது. பாதுகாப்புச் சுவர் மட்டுமே தாழ உள்ளது. இவ்வுருவத்தின் மேற்புறம் காகம், ஆடு முதலிய உருவங்களும் உள் ஒருகை பூதமொன்றின்மீது வைத்தும் உள்ளன. நின்ற நிலை உருவம்.

சம்புவராயர், விஜயநகர மன்னர்கள், பல்லவ அரசர்கள் காலக் கல்வெட்டுக்களில் இப்பகுதிகளில் வாழ்ந்த செங்குந்தர்களிடம் தறி ஒன்றுக்கு ஐந்தரை பணம் வசூலித்தது, இங்குள்ள ஒரு தெருவுக்கு 'ஏகம்பன் தெரு' என்று பெயரிட்டது முதலிய செய்திகள் காணப் படுகின்றன.

''செல்வியைப் பாகங்கொண்டார் சேந்தனை மகனாக்கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க் கொன்றைசூடிக்
கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர் தன்னுள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்கு மேற்றளியனாரே''

(அப்பர்)

''நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற்றளி உறையும்
எந்தாய் உன்னையல்லால் இனி ஏத்தமாட்டேனே''

(சுந்தரர்)

-ஆகுந்தென்

''காற்றளிவண் பூ மணத்தைக் காட்டும் பொழிற்கச்சி
மேற்றளிவாழ் ஆனந்த வீட்டுறவே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. திருமேற்றளீசுவரர் திருக்கோயில்,
திருமேற்றளித்தெரு
பிள்ளையார்பாளையம் - காஞ்சிபுரம் - 631 501.
காஞ்சிபுரம் மாவட்டம்.

தலம் – 3

Koviloor Digital Library

3. ஓணகாந்தன்தளி.

(காஞ்சிபுரத்தில் உள்ள திருக்கோயில்)

தொண்டை நாட்டுத் தலம்.

காஞ்சிபுரத்திலுள்ள பாடல்பெற்ற திருக்கோயில்கள் ஐந்தினுள் இதுவும் ஒன்று. காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் செல்லும் பேருந்துப் பாதையில் சென்று, (சர்வதீர்த்தம் தாண்டி) பஞ்சுப்பேட்டை துணைமின் நிலையத்திற்குச் செல்ல (Elec. Sub-Station) வலப்புறமாகப் பிரியும் சிறிய பாதையில் திரும்பி இக்கோயிலை அடையலாம். கோயில் உள்ள பகுதி பஞ்சுப்பேட்டை எனப்படும். பஞ்சுப்பேட்டை துணை மின் நிலையத்திற்கு எதிரில் கோயில் உள்ளது. சாலையோரத்திலேயே கோயிலும் இம் மின் நிலையமும் உள்ளன.

வாணாசுரனுடைய சேனாதிபதிகளான ஓணன், காந்தன் என்னும் இருவர் வழிபட்ட தலம். இவ்விருவரும் வழிபட்ட ஓணேஸ்வரர், காந்தேஸ்வரர் ஆகிய இரு சிவலிங்கத் திருமேனிகளும் கோயிலில் அடுத்தடுத்து தனிச் சந்நிதிகளாக உள்ளன. சலந்தரன் வழிபட்டதாகச் சொல்லப்படும் சலேந்தரேஸ்வரர் சிவலிங்கத் திருமேனி தனியே உள்ளது. இது பிற்காலப் பிரதிஷ்டையாகும். கோயில் செம்மையாக உள்ளது. சிறிய கோயில். விசேஷமான சந்நிதிகள் வேறெதுவுமில்லை. கோயில்வரை வாகனங்கள் செல்லும்.

இறைவன் - ஓணேஸ்வரர், காந்தேஸ்வரர்

சுந்தரர் பாடல் பெற்றது.

இங்கு வந்த சுந்தரர், இறைவனிடம் அடிமைத் திறம் பேசி, 'நெய்யும் பாலும் தயிரும் கொண்டு' என்று தொடங்கும் பதிகம் பாடிப் பொன் பெற்றார் என்பது வரலாறு. இப்பதிகத்துள் சுந்தரர் குறித்துள்ளதற்கேற்ப இக்கோயிலில் 'வயிறுதாரிப் பிள்ளையார்' சந்நிதி உள்ளது. இப்பதிகத்தில் ஐந்தாவது பாடலைத் தொடங்கிப் பாடும் போது, இறைவன் பக்கத்தில் உள்ள புளிய மரத்தில் சென்று ஒளிந்து கொண்டதாகவும்; அஃதறிந்த சுந்தரர் அங்குச் சென்று பதிகத்தை தொடரவே, இறைவன் அப்புளிய மரத்துக் காய்களையே பொன் காய்களாக விழுமாறு உதிர்க்க, சுந்தரர் அவற்றைப் பெற்றார் என்பதாக ஒருசெய்தி இப்பகுதியில் செவிவழிச் செய்தியாகச் சொல்லப்படு கின்றது.

Koviloor Digital Library

''நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல்பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றும் காணமில்லைக் கழலடிதொழுது உய்யினல்லால்
ஐவர் கொண்டிங்காட்ட ஆடி ஆழ்குழிப்பட்டழுந்து வேற்கு
உய்யுமாறு அருளிச் செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே.''

''கூடிக்கூடித் தொண்டர் தங்கள் கொண்டபாணி குறைபடாமே
ஆடிப்பாடி அழுது நெக்கங்கு அன்புடையவர்க்கின்பம் ஓரீர்
தேடித்தேடி திரிந்தெய்த்தாலும் சித்தம் என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப் போகீர் பற்றுந்தாரீர் ஓணகாந்தன் தளியுளீரே.''

''வாரிருங்குழல் நெடுங்கண் மலைமகள் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந்தட மார்பு நீங்காத் தையலாள் உலகுய்ய வைத்த
காரிரும் பொழிற் கச்சிமூதூர்க் காமக்கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே.''

(சுந்தரர்)

-''நாற்றமலர்ப்
பூந்தண்டளி விரித்துப் புக்கிசைக்குஞ் சீர் ஓண
காந்தன்தளி யருட்ப்ரகாசமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஓணகாந்தன் திருக்கோயில்
பஞ்சுப்பேட்டை - (பெரிய) காஞ்சிபுரம் - 631 502
காஞ்சிபுரம்மாவட்டம்.

4. கச்சி அனேகதங்காவதம்

காஞ்சிபுரத்தில் உள்ள திருக்கோயில்

தொண்டை நாட்டுத் தலம்.

காஞ்சிபுரத்தில் உள்ள பாடல்பெற்ற திருக்கோயில்கள் ஐந்தினுள் இதுவும் ஒன்றாகும்.

அனேகதம் - யானை. யானை முகத்தையுடைய விநாயகர் சிவலிங்கத் திருமேனியை நிறுவி வழிபட்ட தலம்.

Koviloor Digital Library

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து, புத்தேரித் தெரு வழியாகக் கயிலாயநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில் சென்று, கயிலாயநாதர் கோயிலுக்குச் சற்று முன்னால் இடப்புறமாக வயல் மத்தியில் அமைந்துள்ள இக்கோயிலை அடையலாம். குபேரன் வழிபட்ட பெருமையுடையது.

சுந்தரர் பாடல் பெற்றது.

இறைவன் - அனேகதங்காவதேஸ்வரர். சிறிய கோபுர வாயில். விசாலமான உள் இடம். கோயிலுள் மூலவர் சிவலிங்கத் திருமேனி அழகாக உள்ளது. சிறிய கோயில்.

சுந்தரர் பாடியுள்ள இத்தலப்பதிகம் - 'தேனெய் புரிந்துழல்' என்று தொடங்குவது; அழகான கும்மிமெட்டில் அமைந்துள்ளது. பாடி அநுபவிக்கும்போது அச்சுவை வெளிப்படுகின்றது.

மகாகும்பாபிஷேகம் 16.4.1999 அன்று நடைபெற்றுள்ளது.

''தேனெய் புரிந்துழல் செஞ்சடை யெம்பெரு
மானதிடந் திகழைங்கணையக்
கோனை யெரித்தெரி யாடியிடங்குல
வானதிடங் குறையா மறையாம்
மானையிடத்ததொர் கையனிடம் மத
மாறுபடப் பொழியும் மலைபோல்
யானையுரித்த பிரானதிடங்கலிக்
கச்சியனேகதங் காவதமே''

(சுந்தரர்)

-''சேர்ந்தவர்க்கே
இங்காபதஞ் சற்று மில்லாத அனேக
தங்காபதஞ்சேர் தயாநிதியே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அனேகதங்காவதீஸ்வரர் திருக்கோயில்
பிள்ளையார்பாளையம் - காஞ்சிபுரம் - 631 501.
காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

5. கச்சிநெறிக் காரைக்காடு.

(திருக்காலிமேடு)

காஞ்சிபுரத்திலுள்ள கோயில்

தொண்டை நாட்டுத் தலம்.

காஞ்சிபுரத்தில் உள்ள பாடல் பெற்ற ஐந்து திருக்கோயில்களுள் இதுவும் ஒன்று. இக்கோயில் ஊருக்குச் சற்றுத் தள்ளி உள்ளது. இப்பகுதி தற்போது 'திருக்காலிமேடு' என்று வழங்கப்படுகிறது. ரயில்வே ரோடில் உள்ள தலைமை அஞ்சல் நிலையத்திற்கு எதிரில் திருக்காலிமேட்டிற்குச் செல்லும் பாதையில் சென்று இக்கோயிலை அடையலாம். கோயில்வரை கார், வேன், பேருந்து முதலியன செல்லும்.

மக்கள் வழக்கில் இக்கோயில் 'திருக்காலீஸ்வரர் கோயில்' என்று வழங்குகின்றது. ஞானசம்பந்தர் வாக்கில் ''கச்சிநெறிக்காரைக் காட்டாரே'' என்றே திருப்பெயர் வருகிறது. ஒரு காலத்தில், இப்பகுதியே காஞ்சிக்கு வரும் வழியாக அமைந்திருந்ததாலும், இப்பகுதி காரை(முட்) செடிகள் நிரம்பியிருந்ததாலும் கச்சிநெறிக், ''காரைக்காடு'' என்று பெயர் பெற்றது. இந்திரனும், புதனும் வழிபட்ட தலம். அதனால் இப்பகுதிக்கு இந்திரபுரி என்றும் பெயர் வழங்கியது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

இறைவன் - சத்தியவிரதேஸ்வரர். (இப்பெயரையொட்டியே காஞ்சிக்கு 'சத்தியவிரதக்ஷேத்திரம்' என்ற பெயருண்டாயிற்று) மேற்கு நோக்கிய சந்நிதி. பழைமையான ராஜகோபுரம் - மூன்று நிலைகளை உடையது. எதிரில் நந்தியும் - கவசமிட்ட கொடி மரமும் உள்ளன.

உள்ளே நுழைந்ததும் நேரே மூலவர் சந்நிதி தெரிகின்றது. இடப்புறமாக வலம் வருகிறோம். சந்நிதிகள் ஏதுமில்லை. வலமுடித்து வாயிலில் நுழையும்போதும் இடப்புறமாக உள்ள நவக்கிரக சந்நிதியைக் காணலாம். உள்ளே சென்று உட்பிராகாரத்தை வலமாக வரும்போது முதலில் அம்பலக்கூத்தர், சிவகாமியுடன் ஆனந்தமாகக் காட்சி தருகின்றார். அற்புதமான திருமேனி. அடுத்து நால்வர், இந்திரன், புதன், பைரவர் மூலத்திருமேனிகள் காட்சியளிக்கின்றன. விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகர் சந்நிதிகள். அடுத்து கஜலட்சுமி, நீலகண்ட சிவாசாரியார் மூலத் திருமேனிகள் உள்ளன.

Koviloor Digital Library

இக்கோயிலில் உள்ள சோமாஸ்கந்தர், சண்டேசுவரர், சந்திரசேகரர், பிரதோஷ நாயகர், நால்வர் ஆகிய உற்சவத் திருமேனிகள் மிகவும் அழகுடையவை. அவை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரமன், துர்க்கை, ஆகியோர் உள்ளனர்.

துவார விநாயகர், துவார சுப்பிரமணியர் தரிசித்து உள்ளே சென்றால் மூலவரைத் தரிசிக்கலாம்.

மூலவர் - சுயம்புமூர்த்தி, சற்று உயர்ந்த பாணம் - லேசான செம்மண் நிறத்தில் காட்சியளிக்கிறது. பக்கத்தில் அம்பாள் உற்சவத் திருமேனி வைக்கப்பட்டுள்ளது. சூரியனின் மூலத் திருமேனியும் உள்ளேயே உள்ளது.

இறைவன் - சத்தியவிரதேஸ்வரர், சத்தியநாதேஸ்வரர்.

இறைவி - (இத்தலத்திற்குரிய உற்சவ அம்பாளாக) பிரமராம்பிகை

தீர்த்தம் - இந்திர தீர்த்தம்.

இப்பகுதியில் வேப்பமரங்கள் அடர்ந்திருந்தமையால் இத்தீர்த்தம் மக்களால் வேப்பங்குளம் என்றழைக்கப்படுகிறது. இப்பெயரில் உள்ள ''பெரிய வேப்பங்குளம் என்பதே பண்டைய இந்திர தீர்த்தமாகும். இது தற்போது பயன்படுத்தப்படவில்லை.'' ''சிறிய வேப்பங்குளம்'' என்பதே குடிநீர்க் குளமாகப் பயன்படுகிறது. முப்பதாண்டுகளுக்கு முன்பு சிறிய அளவில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளதாகச் சொல்லப் படுகிறது. தலமரம் - காரைச் செடி. தற்போது இல்லை.

நித்திய பூஜை இருவேளை மட்டுமே நடைபெறுகின்றது. வெள்ளாழஞ் செட்டியார் மரபைச் சேர்ந்தவர்களே அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டு நிர்வாகஞ் செய்து வருகிறார்கள்.

''அன்றாலின் கீழிருந்து அங்கு அறம் புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையிற்கோளரவ நாண்கொளுவி
ஒன்றாதார் புரமூன்றும் ஓங்கெரியில் வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.''

''புற்றிடைவாள் அரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்றொளியா அலை புனலோடு இளமதியமேந்து சடைப்
பெற்று டையாளொரு பாகம் பெண்ணுடையார் கண்ணமரும்
நெற்றியினார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''காவதனே கச்சி நெறிக் காரைக்காட் டேய்ந்து வருந்
தேவனே காரைத்திரு நாதா''

(சிவதல நாமக் கலிவெண்பா)

-''மங்காது
மெச்சி நெறிக் கார்வமேவி நின்றோர் சூழ்ந்த திருக்
கச்சிநெறிக் காரைக் காட்டிறையே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கச்சிநெறிக்காரைக்காட்டீஸ்வரர்

திருக்காலீஸ்வரர் திருக்கோயில்
திருக்காலிமேடு - காஞ்சிபுரம் - 631 501.
காஞ்சிபுரம் மாவட்டம்.

6. குரங்கணில்முட்டம்

தொண்டை நாட்டுத் தலம்.

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பேருந்துப்பாதையில் பாலாற்றைத்தாண்டி. 'தூசி' என்னும் கிராமத்தை அடைந்து, அங்கிருந்து கிழக்கு நோக்கி 2 கி. மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம். கோயில்வரை செல்ல நல்லபாதையுள்ளது.

வாலி குரங்கு வடிவிலும், இந்திரன் அணில் வடிவிலும், எமன் முட்டம் (காகம்) வடிவிலும் இறைவனை வழிபட்ட தலம். மிகச் சிறிய கோயில். கோயில் வாயிலின் முகப்பில் அணிலும் காகமும் வழிபடும் சிற்பம் உள்ளது.

இறைவன் - வாலீஸ்வரர், கொய்யாமலை நாதர்.

இறைவி - இறையார் வளையம்மை.

தலமரம் - இலந்தை.

தீர்த்தம் - காக்கைத்தீர்த்தம் (காக்கைமடு).

சிவலிங்கத் திருமேனி சிறியது. சிறிய கருவறை. மேற்கு நோக்கிய சந்நிதி. சம்பந்தர் பாடல் பெற்றது. இக்கோயில் உள்ள ஊர்

Koviloor Digital Library

மிகச்சிறிய கிராமம். கோயிலுக்குப் பக்கத்தில் 'காக்கைத் தீர்த்தம்' என்னும் பெயரில் திருக்குளம் உள்ளது. சுவாமி சந்நிதிக்கு அப்பால் வெளியே இருந்த அம்பாள் சந்நிதி, பிற்காலத்தில் கோயிலின் உள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. விநாயகர், முருகன், விசுவநாதர், விசாலாட்சி, துர்க்கை, பிரமன், நவக்கிரகங்கள், திருமால், பைரவர், நால்வர், சப்தமாதாக்கள் சந்நிதிகள் உள்ளன. சண்டேசுவரர் உள்ளார்.

அம்பாள் பெயரை இப்பகுதி மக்கள் 'இளையாளம்மன்' என்று அழைக்கின்றனர். கோயிலுக்குப் பக்கத்தில் சற்றுத் தொலைவில் ஒரு பாறை குடைக் கோயிலாகக் காட்சியளிக்கிறது.

கல்வெட்டில் இத்தலம் 'காலியூர்க் கோட்டத்து இருகழி நாட்டு மாமண்டூர்ப் பற்றத்துப் பல்லவபுரமான குரங்கணில்முட்டம்' எனக் குறிக்கப்படுகின்றது. இறைவன் திருக்குரங்கணில் முட்டமுடைய நாயனார் என்றும், கொய்யாமலர் ஈசுவரதேவர் என்றும் குறிப்பிடப் படுகின்றார். சகம் 1451ல் பூஜைக்காக கிருஷ்ணதேவராயர் பல்லவபுரம் கிராமத்தை இக்கோயிலுக்கு அளித்ததாகக் குறிப்புள்ளது. இப்பகுதி மக்களிடையே கொய்யாமலை என்னும் பெயர் பலருக்கு இருப்பதை இன்றும் காணலாம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் இக்கோயிலின் சுற்றுமதில், சுவாமி அம்பாள் விமானங்கள் திருப்பணிகள் செய் யப்பட்டு, ரக்தாக்ஷி, தை, 22-ல் (4-2-85-ல்) மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

''இறையார் வளையாளை யொர் பாகத்து அடக்கிக்
கறையார் மிடற்றான் கரி கீறிய கையான்
குறையார் மதி சூடி குரங்கணின் முட்டத்(து)
உறைவான் எமையாளுடை யொண் சுடரானே.''

''மையார் நிறமேனி யரக்கர் தங் கோனை
உய்யா வகையால் அடர்த்தின்ன ருள்செய்த
கொய்யார் மலர் சூடி குரங்கணின் முட்டம்
கையால் தொழுவார் வினை காண்டல் அரிதே.''

(சம்பந்தர்)

-''முச்சகமும்
ஆயுங்குரங்கணின் முட்டப் பெயர் கொண்டோங்குபுகழ்
ஏயும் தலம் வாழ்இயன் மொழியே.''

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி :-

அ/மி. வாலீஸ்வரர் திருக்கோயில்

குரங்கணில் முட்டம் கிராமம்
தூசி அஞ்சல் - 631 703
செய்யாறு வட்டம் -
திருவண்ணாமலை மாவட்டம்.

7. மாகறல்.

தொண்டை நாட்டுத் தலம்.

காஞ்சிபுரத்திலிருந்து செல்லலாம். காஞ்சிபுரம் - உத்திரமேரூர் (வழி) ஓரிக்கை - பேருந்துப் பாதையில் உள்ள தலம். காஞ்சிபுரத்திலிருந்து இவ்வூர் வழியாக உத்திரமேரூருக்குப் பேருந்து செல்கிறது. செய்யாற்றின் கரையில் உள்ள ஊர். சாலை ஓரத்திலேயே கோயில் உள்ளது. சிறிய அழகான கோயில். நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்திரன் வழிபட்ட தலம். இராசேந்திரசோழனுக்கு, இறைவன் பொன் உடும்பாகத் தோன்றி, அவன் துரத்த, புற்றில் ஓடி ஒளிந்து பின் சிவலிங்க வடிவமாக வெளிப்பட்ட தலம். சிவலிங்கத் திருமேனி உடும்புபோலச் சிறுத்து உள்ளது. சுயம்பு மூர்த்தி. ஆவுடையார்தான் கட்டப்பட்டது. இறைவன் - திருமாகறலீஸ்வரர்.

இறைவி - திரிபுவன நாயகி, புவன நாயகி, இறைவனுக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் : அடைக்கலங்காத்த நாதர், மகம் வாழ்வித்தவர், உடும்பீசர், பாரத்தழும்பர், புற்றிடங்கொண்டார், நிலையிட்ட நாதர், மங்கலங் காத்தவர், பரிந்து காத்தவர், அகத்தீஸ்வரர் முதலியன. மாகறம் - உடும்பு. 'மாகறலீஸ்வரர்' என்ற பெயரே மக்கள் வழக்கில் உள்ளது. தீர்த்தம் - அக்கினி தீர்த்தம். தலமரம் - எலுமிச்சை. மாகறன், மலையன் என்னும் இரு அசுரர்கள் வழிபட்ட தலம். இத்தலத்திற்குரிய தல விநாயகர், பொய்யா விநாயகர் - ஊருக்கப்பால் செய்யாற்றின் கரையில் உள்ள மண்டபத்தில் இவர் உள்ளார்.

இங்குத் திங்கட்கிழமை தரிசனம் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. மக்கட்பேறு வேண்டுவோர் இங்கு அங்கப்பிரதட்சணம் செய்யும் வழக்கம் முன் காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்றது. இப்பதிகம் 'வினை நீக்கும் பதிகம்' என்னும் சிறப்புடையது.

இத்தலம் தொடர்பாகக் கிடைத்த செவி வழிச்செய்தி வருமாறு :

இராசேந்திர சோழ மன்னனுக்கு நாடொறும் இங்கிருந்து, கோயிலில் இருந்த பலா மரத்திலிருந்து பலாப்பழம் ஒன்று அனுப்பப்பட்டு, அது வழியில் தில்லையில் நடராசப் பெருமானுக்கு நிவேதனம் செய்யப்பட்டுப் பின்பு மன்னனுக்குப் பிரசாதமாகத் தரப்பட்டு வந்தது. காலப்போக்கில் இக்கோயிலில் பணிசெய்தோர் இம்மரத்தைத் தீயிட்டு அழித்துவிட்டனர்.

பலாப்பழம் வாராதது அறிந்த மன்னன் ஆள் அனுப்பிச் செய்தியறிந்தான்; அவர்களைத் தண்டிக்க எண்ணினான். ஆனால் கோயிற் பணியாளரைத் தண்டித்தலாகாது என்றெண்ணி, அவர்கள் அனைவரையும் இரவோடு இரவாக ஊரைவிட்டு அழைத்துச்சென்று, மறுநாள் பொழுது விடியும் இடத்தில் விட்டுவிடுமாறு உத்திரவிட்டான். அவ்வாறே அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு விடப்பட்ட ஊர் (திருத்தணிக்கும் திருவள்ளூருக்கும் இடையில்) 'விடிமாகறல்' என்று வழங்கப்படுகிறது.

கோயிலுக்குச் செல்லும் நம்மை, புதியதாகக் கட்டப்பட்டுள்ள ஐந்து நிலைகள் கொண்ட ராஜகோபுரம் கிழக்கு நோக்கியிருந்து வரவேற்கிறது. உட்புகுந்தால் விசாலமான இடம். கோயில் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. துவஜஸ்தம்பம் - அதன் முன்னால் உயர்ந்த பலிபீடம். பலிபீடத்தின் முன் விநாயகர் காட்சி தருகிறார். ஆம்! கொடிமரத்து விநாயகர் அவரே. இடப்பக்கத்தில் திருக்குளம். சுவாமி எழுந்தருளும் நாற்கால் மண்டபம் உள்ளது. வெளிப்பிராகாரம் விசாலமானது. வலமாக வந்து படிக்கட்டுக்களையேறி, விநாயகரையும், மறுபுறம் சுப்பிரமணியரையும் வணங்கியவாறே, துவாரபாலகர்களைக் கடந்து உட்புகுந்தால் நேரே மூலவர் காட்சி தருகிறார். வலமாக வரத்தொடங்கும் நாம் இடப்பால் உள்ள ஆறுமுகப்பெருமானை - மயிலேறிய மாணிக்கத்தைத் தரிசிக்கலாம். பக்கத்தில் நால்வர் பெருமக்கள் தனியே புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இப்பிரதிஷ்டை, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழா ஆண்டுப் பணிகளுள் இடம் பெற்று 1985 மார்ச்சில் நிறைவேற்றப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. வலமாக வரும் நாம் கருவறையிலுள்ள கோஷ்டமூர்த்தங்களை - விநாயகர், சிறிய தட்சிணாமூர்த்தி,

Koviloor Digital Library

விஷ்ணு, பிரம்மா, துர்க்கை முதலிய திருமேனிகளைத் தரிசித்தவாறே வலம் வரலாம்.

இடப்பால் வரிசையாக அறுபத்துமூவர் திருமேனிகள் விநாயகர் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதிகள். தலமரம் - எலுமிச்சை, தழைத்து உள்ளது.

ஆலய விமானம் 'கஜப்பிரஷ்ட' அமைப்புடையது. நடராசர் சந்நிதியைத் தரிசித்து எதிர்ப்புறம் திரும்பினால் நவக்கிரக சந்நிதி, யானைமீது முருகன் அமர்ந்திருக்கும் அபூர்வ திருமேனி அழகுறக் காட்சிதருகின்றது. பள்ளியறை கடந்து, பைரவரை வணங்கி, அம்பாளை வலமாக வந்து படியேறிச் சென்றால் மூலவரைத் தரிசிக்கலாம். சதுர பீடம். உடும்பு வால் போன்ற அமைப்பில் - சிறுத்த வடிவில் சிவலிங்கம்.

உற்சவத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அம்பாள் சந்நிதி - நின்ற திருக்கோலம். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துக் கட்டளை 'சிவசிவ ஒலிமண்டபம்' உள்ளது. திருமுறைப் பாராயணக் கட்டளை நித்தம் காலை மாலை நடைபெறுகிறது. கோயில் உள்ளேயும், இக்கோயிற்பதிகம் சலவைக்கல்லில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தினரால் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது. வெளிப் பிராகாரத்தில் திருமண மண்டபம், வாகன மண்டபம், யாகசாலை முதலியவைகள் உள்ளன.

ஆண்டுதோறும் மாசி மகத்தில் 10 நாள்களுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இதன் பரம்பரை அறங்காவலராக இருந்துவருபவர் வேலூர் பாங்கர், திரு. M. D. நடராச முதலியார் அவர்கள். சேலம் சுப்பராயப் பிள்ளை என்பவர்தம் உடலில் இடுப்பின் கீழ் செயலற்றுப் போக எல்லாவித மருத்துவமும் செய்தும் பயனின்றிப் போக, திருமுறையில் கயிறுசார்த்திப் பார்த்து, இத்தலப்பதிகம் வர, இங்கு வந்து தங்கி, நாடொறும் இறைவனை வழிபட்டுத் தலப் பதிகத்தைப் பாராயணம் செய்து சிலகாலம் வாழ்ந்து இப்பெருமா னருளால் உடல் பூரணகுணம் பெற்றுத் திரும்பினார். இந்நிகழ்ச்சி அண்மைக் காலத்தில் நடைபெற்றதாகும். இப்பகுதியில் உள்ள சமய அன்பர்கள் அனைவரும் இதை அறிவர்.

1971ல் கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றுள்ளது. கல்வெட்டில் இத்தலம் சயங்கொண்ட சோழமண்டலத்துப் பொற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்று குறிக்கப்படுகிறது. குலோத்துங்க சோழன், சுந்தரபாண்டியன், விசயகண்டகோபாலதேவர் காலத்திய

Koviloor Digital Library

கல்வெட்டுக்கள் உள. கோயிலுக்கு நிலங்கள் விடப்பட்ட செய்திகள் இவற்றில் குறிக்கப்படுகின்றன.

''விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல் விளையாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடு பொழில் மாகறல் உளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி
செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே.''

''கடை கொள்நெடு மாடமிக ஓங்குகமழ் வீதிமலி காழியவர்கோன்
அடையும் வகையாற் பரவிஅரனை அடிகூடு(ம்) சம்பந்தன் உரையால்
மடைகொள் புனலோடு வயல் கூடுபொழில் மாகறலு ளான் அடியையே
உடையதமிழ் பத்தும் உணர்வார் அவர்கள் தொல்வினைகள்
ஒல்குமுடனே.''

(சம்பந்தர்)

பொய்யா விநாயகர் துதி

வெய்யாக் கதிரவன்முன் இருள்போல வினையகற்றும்
கையானே யான்தொழ முன்நின்று காத்தருள் கற்பகமே
செய்யாற்றின் வடபால் இருக்கின்ற செங்கண் மால்மருகா
பொய்யா விநாயகனே திருமாகறல் புண்ணியனே

(தனிப்பாடல்)

-''தோயுமன
யோகறலிலாத் தவத்தோருன்ன விளங்குதிரு
மாகறலில் அன்பர் அபிமானமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மாகறலீஸ்வரர் திருக்கோயில்

மாகறல் கிராமம் & அஞ்சல் - 631 603. (வழி) காஞ்சிபுரம்.
உத்திரமேரூர் வட்டம் - காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

8. திருவோத்தூர்

திருவத்திபுரம், செய்யாறு.

தொண்டை நாட்டுத் தலம்.

காஞ்சிபுரத்திற்குப் பக்கத்தில் உள்ளது. மக்கள் வழக்கில் செய்யாறு. திருவத்திபுரம், திருவத்தூர் என்றெல்லாம் வழங்கப் படுகின்றது. காஞ்சியிலிருந்து அடிக்கடி பேருந்து வசதி உள்ளது. வந்தவாசி, திருவண்ணாமலை, போளூர், ஆரணி முதலிய ஊர்களில் இருந்தும் இவ்வூருக்கு வரலாம். பேருந்து நிலையம் உள்ள பகுதி செய்யாறு. கோயில் சற்றுத் தள்ளி ஊருக்குள் உள்ளது. அப்பகுதி திருவத்திபுரம் என்றழைக்கப்படுகிறது.

ஒத்து வேதம். இறைவன் வேதத்திற்குப் பொருள் சொன்ன இடமாதலின் ஓத்தூர் - 'திரு' அடைமொழி சேர்ந்து 'திருஓத்தூர்' - திருவோத்தூர் என்றாயிற்று. கோயில் சேயாற்றின் கரையில் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம். இப்பெருமான் அருளால் ஆண்பனை, பெண்பனையான தலம். ஆலயத்துள் வெளிப் பிராகாரத்தில் பனை மரங்கள் உள்ளன.

இறைவன் - வேதபுரீஸ்வரர், வேதநாதர்.

இறைவி - பாலகுஜாம்பிகை, இளமுலைநாயகி.

தலமரம் - பனை. முகப்பு வாயில் கிழக்கு நோக்கி ஆறு நிலை களுடன் காட்சி தருகிறது - சுதை வேலைப்பாடுகள். ஊரின் நடுவில் கோயில் இருப்பதால், சுற்றிலும் கடைகள் உள்ளன. உள் நுழைந்தால் விசாலமான இடம். வலப்பக்கம் ஒரு மண்டபம், ஒருகாலத்தில் வாகன மண்டபமாக இருந்திருக்கக்கூடும். இடப்புறம் திருக்குளமும் அடுத்து நந்தவனப் பகுதியும் உள்ளன. உயரமாக அமைந்த பலிபீடம். நந்தி சுவாமியை நோக்கியிராமல் முன் கோபுரத்தைப் பார்த்தவண்ணம் உள்ளது. இது குறித்துத் தலபுராணத்தில் சொல்லப்பட்டுள்ள வரலாறு இதன் இறுதியில் தரப்பட்டுள்ளது. முன்னால் உள்ள மண்டபத்தின்மீது புதிதாகச் சுதை வேலைப்பாடு அமைந்த சிற்பங்கள் - முருகன், விநாயகர், நடராஜர் - ஞானசம்பந்தரும் பனைமரமும் - உள்ளன. ஆலயத்துள் நுழைந்தால் வலப்பக்கம் அம்பாள் சந்நிதி. நேர் எதிரில் இடப்பக்கம் அம்பாளுக்குரிய சிம்மம், கொடிமரம் உள்ளன.

Koviloor Digital Library

இவற்றுக்குப் பக்கத்தில் தலத்து ஐதீகமான பனைமரம், ஞானசம்பந்தர், சிவலிங்கம் கல்லில் (சிலா ரூபத்தில்) அமைக்கப்பட்டுள்ளன.

இடப்பக்கமாக வெளிப்பிராகாரத்தில் வலம் வரும்போது, உற்சவ மூர்த்தி மண்டபம் உள்ளது. தலமரமான, 5 பனை மரங்கள் உயர்ந் தோங்கி உள்ளன. சிவலிங்கமும் உள்ளது.

பஞ்சபூதத் தலங்களை நினைவூட்டும் வகையில், தனித்தனி சிவலிங்கத் திருமேனிகள், தனித்தனி சந்நிதிகளாக - திருச்சிற்றம்பலவன், திருக்காளத்தியார், திரு ஆனைக்காவுளார், திருவண்ணாமலையார், திருவேகம்பன் சந்நிதிகளாக அமைந்துள்ளன.

சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது. - ஒரு காலை மடக்கி, ஒரு காலைத் தொங்கவிட்டு, ஒரு கையில் மழுவுடன்; ஒரு கையை மடக்கிய காலின் தொடை மீது வைத்தவாறு காட்சி தருகின்றார்.

தீர்த்தக்கிணறு உள்ளது. யாகசாலையும், அலங்கார மண்டபமும் உள்ளன. வெளிப்பிராகார வலம் முடித்து, படிகள் ஏறினால் விநாயகரும், முருகனும், துவார பாலகர்களும் தரிசனம் தருகின்றனர். கோடியில் உயரமான பீடத்தில் நாகலிங்கம் உள்ளது. உள்ளே நுழைவோம். இருபுறங்களிலும் உற்சவத் திருமேனிகள் பாதுகாப் புடன் வைக்கப்பட்டுள்ளன.

உள் பிராகாரத்தில் வலம் வரும்போது அறுபத்துமுவர் மூலத்திரு மேனிகள் - சப்தமாதாக்கள் தரிசனம். கோஷ்ட மூர்த்தமாக விநாயகரும், தனிக் கோயிலாகத் தக்ஷிணாமூர்த்தியும், துர்க்கையும் காட்சி தருகின்றனர். பெருமாள் கோயிலொன்று புதிதாகச் சிறியதாகத் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

சண்முகர் வள்ளி தெய்வயானையுடன் கூடியுள்ளார். பைரவர், சூரியர் சந்நிதிகள் உள்ளன.

உள்ளே கருவறையில் வேதபுரீஸ்வரர் - சிவலிங்கத் திருமேனி, கிழக்கு நோக்கிய சந்நிதி. மேலே விதானம் உள்ளது. சதுர ஆவுடையார். மூலவரைத் தரிசித்து வெளியே வந்து இடப்பால் உள்ள வழியாக வெளிச்சென்று, சண்டேஸ்வரரைத் தரிசித்து வெளி வரலாம். பாலகுஜாம்பிகை தரிசனம் தனிக்கோயில். பிராகாரம் உள்ளது. நின்ற திருக்கோலம். அபய, வரதம் உள்ளிட்ட நான்கு திருக்கரங்கள், மிகப் பழைய திருமேனி. வணங்கி வெளியில் வரும்போது இடப்பால் நவக்கிரகங்கள் உள்ளன. இத்தலத்துப் பெருவிழா தை மாதத்தில் நடைபெறுகிறது.

Koviloor Digital Library

கோயிலுக்கு எதிரில் வெளியே தேர் மேடை சிதைந்துள்ளது. சிறிய தேர் உள்ளது. கல்வெட்டில் இறைவன் 'ஓத்தூர் உடைய நாயனார்' என்று குறிக்கப்படுகின்றார். இராசாதிராசன், குலோத்துங்கன், இராசேந்திரன், விக்ரமசோழன் முதலியோர் காலத்திய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. வழிபாட்டிற்கும், நிவேதனத்திற்கும், அர்ச்சகர்க்கும் நிலம் விடப்பட்ட செய்திகள் இக்கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன.

* நந்தி பற்றியத் தலபுராணச் செய்தி வருமாறு :

விசுவாவசு என்னும் மன்னனின் வலிமைக்கு ஆற்றாது தோற்று, ஓடி, காட்டில் திரிந்த தொண்டைமான் வேதபுரீஸ்வரரைத் துதித்து வணங்கினான். இறைவன் காட்சி தந்து, அவனுக்கு அதிக பலத்தையும் சேனைகளையும் அருளி, விசுவாவசுவுடன் போரிட்டு மீண்டும் தன் அரசை எய்துமாறு பணித்தார். கேட்ட மன்னன் 'எங்ஙனம் போரிடு வேன்' என்று அஞ்சியபோது, 'நந்தி உனக்குப் படைத் துணையாக வருவார், நீ அதற்கு முன்பாக யாம் கொடுத்த சேனைகளோடு சென்று போரிடுவாயாக' என்றார். மேலும்; ''நாம் கூறியதில் உன் மனத்திற் சந்தேகமிருப்பின் சாட்சி காட்டுகின்றோம். நீ போய்ப்பார். அந்த நந்திதேவன் கீழ்த்திசை நோக்கியிருக்கின்றார்', என்றார். அவ்வாறே தொண்டைமான் வந்து பார்க்க, (அவனுக்குப் படைத்துணையாகும் நிலையில்) மேற்கு நோக்கியிருந்த நந்திதேவர் கீழ்த்திசையில் திரும்பியிருப்பதைக் கண்டு பயம் நீங்கினான். இறைவன் நந்தியைத் தளபதியாக்கி, சிவகணங்களைக் குதிரைகள் யானைகள் தேர்களைச் சேனைகளாகச் செய்து தந்து, தொண்டைமானைப் போர்க்கு அனுப்ப, அவனும் அவ்வாறே சென்று, விசுவாவசுவை வென்று நாட்டாட்சியை அடைந்தான்.

(திருவோத்தூர்த் தலபுராணம் - தொண்டைமானுக்குப் படைத் துணைபோன சருக்கம் - இயற்றிவர் : கருணாகரக் கவிராயர்)

''பூத்தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தாதார் இல்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளிமழுவாள் அங்கைக்
கூத்தீரும்ம குணங்களே.''

''குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றையடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே.'' *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

திருவோத்தூர்த் திருப்புகழ்

தவர்வாள் தோமர சூலம் தரியாக் காதிய சூருந்
தணியாச் சாகர மேழும் - கிரியேழும்
சருகாக் காய்கதிர் வேலும் பொருகாற் சேவலும் நீலம்
தரிகூத் தாடிய மாவுந் - தினைகாவல்
துவர்வாய்க் கானவர் மானும் அரநாட்டாளொடு தேனும்
துணையாத் தாழ்வற வாழும் - பெரியோனே
துணையாய்க் காவல்செய்வாயென் றுணராப்பாவிகள்பாலும்
தொலையாப் பாடலை யானும் - புகல்வேனோ

பவமாய்த் தானது வாகும் பனைகாய்த் தேமணம் நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும் - படிவேதம்
படியாப் பாதகர் பாயன் றியுடாப் பேதைகள் கேசம்
பறிகோப் பாளிகள் யாரும் - கழுவேறச்
சிவமாய்த் தேனமு தூறும் திருவாக் காலொளி சேர்வெண்
திருநீற் றாலம ராடும் - இறையோனே
செழுநீர்ச் சேய்நதி யாரங் கொழியாக் கோமளம் வீசும்
திருவோத் தூர்தனில் மேவும் பெருமாளே.

-ஓகையிலா

வீத்தூர மாவோட மெய்த்தவர்கள் சூழ்ந்த திரு
வோத்தூரில் வேதாந்த உண்மையே.''

-(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வேதபுரீஸ்வரர் திருக்கோயில்

திருவத்திபுரம் - 604 407 செய்யாறு வட்டம்.
திருவண்ணாமலை மாவட்டம்.

Koviloor Digital Library

9. வன்பார்த்தான் பனங்காட்டூர்

திருப்பனங்காடு



தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் திருப்பனங்காடு என்று வழங்குகிறது. காஞ்சிபுரத்திலிருந்து கலவை, பெருங்கட்டூர் செல்லும் பேருந்தில் ஏறித் திருப்பனங்காடு கூட்ரோடில் இறங்கி, (திருப்பனங்காடு செல்லும்) பாதையில் 2 கி. மீ. சென்றால் ஊரையடையலாம். நடந்து செல்லும் போது வழிக்களைப்பு தெரியாதவாறு சாலை ஓரத்தில் புளிய மரங்கள் நிழல்தந்து உதவுகின்றன. ஊர்க்கோடியில் கோயிலுள்ளது. நல்ல சாலை. தனிப்பேருந்தில், காரில் வருவோர் கோயில்வரை செல்லலாம். பனையைத் தலமரமாகக் கொண்ட பாடல் பெற்ற தலங்கள் ஐந்தனுள் இதுவும் ஒன்று. ஏனையவை (1) திருப்பனந்தாள் (2) திருப்பனையூர் (3) திருவோத்தூர் (4) புறவார் பனங்காட்டூர் என்பன.

சுந்தரரிடம் இறைவன், 'நான் பனங்காட்டிற்கும் வன்பாக்கத் துக்குமாய் இருப்பவன்', என்றருளியமையாலும், புறவார் பனங்காட்டூரினின்றும் வேறுபாடறியவும் இத்தலத்தை 'வன்பார்த்தான் பனங்காட்டூர்' என்று சுந்தரர் பாடியுள்ளார். பனைமரக்காடாக இருந்தமையால் 'பனங்காடு' (தாலவனம்) என்று பெயர் பெற்றது.

Koviloor Digital Library

வன்பாக்கம் என்னும் ஊர் - இவ்வூருக்குப் பக்கத்தில் உள்ளது. அதுவே இன்று வெண்பாக்கம் - வெம்பாக்கம் என்று வழங்குகின்றது. இது பாடல் பெற்ற தலமன்று. திருப்பனங்காடு தான் பாடல் பெற்றது.

சிறிய ஊர். நகரத்தார் திருப்பணி பெற்ற கோயில். கோயிலின் எதிரில் பெரிய குளம் உள்ளது. இதற்குச் ''சடாகங்கை'' என்று பெயர். அகத்தியர் பூசித்தபோது, இறைவன் சடாமுடியிலுள்ள கங்கை, தீர்த்தமாக வெளிப்பட்டது. இக்குளக்கரையில் கங்காதேவி சிலையுள்ளது. மாசிமகத்தில் தீர்த்தவாரியும், தெப்பமும் இதில் நடைபெறுகின்றன.

அகஸ்தியர், புலஸ்தியர் முதலியோர் வழிபட்ட தலம். வடலூர் வள்ளற்பெருமான் வாக்கிலும், பட்டினத்தடிகளின் திருவேகம்பர் திருவந்தாதியிலும் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது.

''நிலாவு புகழ் திருவோத்தூர் திரு ஆமாத்தூர் நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம் வில்வலம் கொச்சை தொண்டர்
குலாவு திருப்பனங்காடு நன் மாகறல் கூற்றம் வந்தால்
அலாய் என்று அடியார்க்கு அருள்புரி ஏகம்பர் ஆலயமே.''

(பட்டினத்தடிகள்)

இத்தலத்தில் கண்வ முனிவர் வழிபட்டதாகவும் செய்தி சொல்லப்படுகிறது. இக்கோயிலில் இரண்டு சுவாமி சந்நிதிகளும் இரண்டு அம்பாள் சந்நிதிகளும் உள்ளன. அகத்தியர் வழிபட்ட மூலமூர்த்தி ஒன்று. மற்றொன்று புலஸ்திய மகரிஷி வழிபட்டது.

சுவாமி : 1. தாலபுரீசுவரர், அகத்தியர் வழிபட்ட மூர்த்தி, சுயம்பு.

அம்பாள் : அமிர்தவல்லி.

சுவாமி : 2. கிருபாநாதேசுவரர், புலஸ்தியர் வழிபட்ட மூர்த்தி.

அம்பாள் : கிருபாநாயகி.

தலமரம் : பனை. கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் இருபனை மரங்கள் உள்ளன. தீர்த்தம் : சடா கங்கை. கோயிலுக்கு எதிரில் உள்ளது.

(ஊருக்குப் பக்கத்தில் சற்றுத் தொலைவில் 'ஊற்று தீர்த்தம்' உள்ளது. சுந்தரருக்கு இறைவன் (கட்டமுது) உணவளித்த வரலாறு இத்தலத்திற்கும் சொல்லப்படுகிறது. இது செவி வழிச்செய்தியே. பெரிய புராணத்தில் இல்லை. இறைவன் அப்போது தன் பாதத்தால் கிளறி உண்டாக்கிய தீர்த்தமே 'ஊற்று தீர்த்தம்' (ஊற்றங்குழி) என்று பெயர் பெற்றதென்று சொல்லப்படுகிறது.)

Koviloor Digital Library

சுந்தரர் பாடல் பெற்ற தலம். இரு சுவாமி சந்நிதிகளும் கஜப்பிரஷ்ட விமான அமைப்புடன் மூன்று கலசங்களுடன் விளங்குகின்றன.

கோயில் கிழக்கு நோக்கியது. முகப்பு வாயில் மட்டுமே உள்ளது, வெளியில் ராஜகோபுரமில்லை. உள்கோபுரம் மூன்று நிலைகளை யுடையது.

கோயிலின் முகப்பு வாயிலின் வெளியில் நிற்கவைத்துள்ள ஒரு கல்வெட்டு, ஒவ்வொரு நாளும் 2 தேசாந்திரிகளுக்கு அன்னதானம் செய்வதற்காக ஓர் அன்பரால் நிலம் விடப்பட்டுள்ள செய்தியைத் தெரிவிக்கின்றது.

முகப்பு வாயில் உள்நுழைந்ததும் நேரே தெரியும் மூலவர் சந்நிதி புலஸ்தியர் வழிபட்டதாகும். எதிரில் கொடிமரம், நந்தி, பலிபீடங்கள் உள்ளன. இதற்குப் பக்கத்தில் உள்ளது அகத்தியர் வழிபட்ட மூலவர். இதற்கு எதிரில் வாயில் இல்லை. சுவரில் சாளரம் மட்டுமே உள்ளது. இதன் எதிரிலும் வெளியே கொடிமரம், நந்தி, பலிபீடங்கள் உள்ளன.

முன் மண்டபத்தில் வாயிலில் ஒருபுறம் செல்வப் பிள்ளையார் சந்நிதியும் மறுபுறம் தண்டபாணி சந்நிதியும் உள்ளன.

உள் வாயிலில் நுழைந்ததும் வலப்பால் சூரியன். அடுத்துள்ள இடத்தில் வாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன. இடப்பால் அடுத்தடுத்து இரு அம்பாள் சந்நிதிகளும் தெற்கு நோக்கியுள்ளன. இவ்விரு சந்நிதிகளுக்கும் இடையில் பள்ளியறை உள்ளது. இரு சந்நிதிகளும் நின்ற திருக்கோலம். நேரே புலஸ்தியர் வழிபட்ட மூர்த்தியின் சந்நிதி. பக்கத்தில் உட்புறம் உள்ளது அகத்தியர் வழிபட்ட மூர்த்தி. முதலில் அகத்தியர் வழிபட்ட மூர்த்தியைத் தரிசிக்க வேண்டும். இச்சந்நிதி துவார வாயிலின் முன்னால் ஒரு புறம் அகத்தியர் உருவமும் மறுபுறம் பனைமரமும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. துவார கணபதி உள்ளார். இவ்வாறே அடுத்துள்ள சுவாமி சந்நிதியிலும் புலஸ்தியர் உருவமும் பனைமரமும் கல்லில் உள்ளன. கிருபா நாதேசுவரரின் ஆவுடையார் சதுர வடிவினது. தாலபுரீசுவரர் சந்நிதியில் துவாரபாலகர்கள் உள்ளனர். அடுத்துள்ள கிருபா நாதேசுவரர் சந்நிதியில் துவாரபாலகர்கள் உருவம் வண்ணத்தில் சுவரில் வரையப்பட்டுள்ளது.

தாலபுரீசுவரரின் முன்னால், இத்திருக்கோயில் திருப்பணியைச் (1929ல்) செய்வித்த தேவகோட்டை நகரத்துச் செட்டியார் - ஏகப்பச் செட்டியாரின் உருவம் - சுவாமியைக் கைகூப்பி வணங்கும் நிலையில் உள்ளது.

Koviloor Digital Library

வலமாகப் பிராகாரத்தில் வரும்போது, சேக்கிழார் உள்ளிட்ட நால்வர் சந்நிதி உள்ளது. அடுத்து, வல்லபை விநாயகர் தரிசனம். பக்கத்தில் மீனாட்சி சொக்கநாதர் சந்நிதியும் அடுத்துத் தலமரத்தின் சிலா ரூபமும், இரு சிவலிங்கங்களும் உள்ளன. அடுத்துள்ள இடத்தில் உற்சவத் திருமேனிகளின் பாதுகாப்பு இடம் பெற்றுள்ளது. நால்வர், சோமாஸ்கந்தர், பிரதோஷ நாயகர் முதலிய உற்சவத்திருமேனிகள் சிறப்பானவை.

கஜலட்சுமி சந்நிதியை அடுத்து, முருகப்பெருமான் தரிசனம் வள்ளி தெய்வயானையுடன் கூடி, மயிலின் முகம் திசைமாறியுள்ளது. சண்டேசுவரருக்கு எதிரில் நவக்கிரகங்கள் தத்தம் வாகனங்களுடன் உள்ளன. நடராஜ சந்நிதி அழகாக உள்ளது.

தாலபுரீசுவரரின் கருவறையில் கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். இச்சந்நிதியில் சண்டேசுவரர் இல்லை. அடுத்துள்ள சந்நிதியில் மட்டுமே சண்டேசுவரர் உள்ளார். கிருபாநாதேசுவரரின் கருவறையில் கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி மஹாவிஷ்ணு பிரம்மா உள்ளனர். சண்டேசுவரர் தனி விமானத்துடன் உள்ளார். கிருபாநாதேசுவரர் கருவறையில் உள்ள கோஷ்ட தட்சிணாமூர்த்தி அமைப்பு அற்புத மானது. வலக்காலைத் தொங்கவிட்டு, இடக்காலை மேலே உயர்த்திக் குத்துக்காலிட்டு' சின்முத்திரை பாவத்தில் அபயகரத்துடன் வரதகரமும் கூடி அற்புதமாகக் காட்சி தருகின்றார்.

அம்பாள் சந்நிதிகளை வலமாக வரும்போது பைரவர், சந்திரன் சந்நிதிகள் உள்ளன.

மாசிமகத்தில் தாலபுரீசுவரருக்குப் பெருவிழா நடைபெறுகிறது. கார்த்திகைச் சோமவார உற்சவம் கிருபாநாதேசுவரருக்கு விசேஷம். நவராத்திரி சஷ்டி உற்சவங்கள் நடைபெறுகின்றன. கோயிலுள், பக்கத்துக்கு ஒன்றாக இருபுறமும் இரு பனைமரங்கள் உள்ளன, ஒரு மரத்தின் விதையிலிருந்து முளைத்தபோதிலும் இவ்விரண்டுள் ஒன்று ஆண் பனையாகவும் மற்றொன்று பெண் பனையாகவும் உள்ளது. பிரதானத் தல விருட்சமாகிய ஆதி பனை மரங்கள் இரண்டும் கோயிலுக்கு வெளியில் உள்ள கோட்டை முனீஸ்வரர் கோயிலின் பின்புறம் உள்ளன. கோயில் மதிலில் புறாக்கள் நிரம்ப உள்ளன.

இக்கோயிலின் உள் மண்டபத்தில் கல் தூண்களில் மிக அரிய சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் சில: (1) அமிர்தவல்லி அம்பாள் சந்நிதியின் முன்புள்ள கல்தூணில் நாகலிங்கச் சிற்பம் உளது. (2) உள்

Koviloor Digital Library

வாயிலுக்கு வெளியில் உள்ள ஒரு தூணில் இராமருடைய சிற்பம் உள்ளது. உள் மண்டபத்தில் கிருபாநாதேஸ்வரர் சந்நிதிக்கு முன்புள்ள ஒரு தூணில் வாலி, சுக்ரீவர் போரிடும் சிற்பம் உள்ளது. இராமர் சிற்பத்திடம் நின்று பார்த்தால் வாலி சுக்ரீவ போர்ச்சிற்பம் தெரிகிறது. ஆனால் வாலி சுக்ரீவ சிற்பத்தின் பார்வைக்கு இராமர் சிற்பம் தெரியவில்லை. அவ்வாறு அருமையாக அமைந்துள்ளது.

(3) வாலி சுக்ரீவச் சிற்பம் உள்ள தூணின் மறுபுறத்தில் யோக தட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. (4) பல தூண்களில் ஆஞ்சநேயர் உருவம் உள்ளது. (5) தாலபுரீசுவரரின் சந்நிதிக்கு எதிரில் உள்ள தூணில் புருஷாமிருகத்தின் சிற்பம் உள்ளது. (6) ஒரு தூணில் சுந்தரர், மாணிக்கவாசகரும் மற்றொரு தூணில் சம்பந்தர் அப்பரும் உள்ளனர். (7) அடுத்துள்ள தூணில் ஒரு பக்கம் ஏகபாத மூர்த்தியும் மறுபக்கம் கருடாழ்வார் சிற்பமும் உள்ளது. (8) கருடனுக்கு எதிரில் கண்ணன் குழலூதும் சிற்பமுள்ளது. (9) ஏகப்பச் செட்டியாரின் உருவத்திற்குப் பின்புறம் உள்ள தூணில் உயரே சமணர் கழுவேறும் சிற்பம் உள்ளது.

கோயிலுக்கு வெளியில் கோட்டை முனீஸ்வரர் கோயில் உள்ளது. முனீஸ்வரர் யோகாசனத்தில் அமர்ந்த நிலையில் வலக்கையில் உருத்திராக்க மாலை கொண்டும், இடக்கையைத் தொடைமீது வைத்துக் கொண்டும், சடாமுடியுடன் காட்சி தருகின்றார். ஒருபுறம் துவார விநாயகரும் மறுபுறம் இடக்காலில் மட்டும் யோக பட்டங்கொண்டு யானைமீது அமர்ந்துள்ள ஐயப்பனும் காட்சி தருகின்றனர். கோயிலுக்கு எதிரில் வன்னிமரம் உள்ளது.

அகத்தியர் பூசித்தபோது, இம்முனீஸ்வரர் பனைக் கனிகளை உதிரச் செய்ய, அகத்தியர் அதையும் இறைவனுக்குப் படைத்தமையால் இன்றும் பனைக்கனி, (பனம்பழம்) கிடைக்குங் காலங்களில் சுவாமிக்கு நிவேதனம் செய்யப்படுகிறது.

தேவகோட்டை திரு. ஏகப்பச் செட்டியார் அவர்களின் திருப்பணி அவர் புதல்வர்களால் நிறைவுற்று 1929ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் தற்போது நகரத்தாராலேயே ஆலயத் திருப்பணிகள் நடைபெறுகின்றன. இத்தலத்தில் 22 கல்வெட்டுக்கள் அரசால் படியெடுக்கப்பட்டுள்ளன. அவை விஜயநகர மன்னர்கள் முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் குலோத்துங்க சோழன் முதலியோர் காலத்தியவை. கல்வெட்டில் இறைவன் 'திருப்பனங் காடுடைய நாயனார்' என்று குறிக்கப்பெறுகின்றார். ஊர்ப்பெயர் 'காலியூர்க் கோட்டத்து கழுமலநாட்டுத் திருப்பனங்காடு' என்று பேசப்படுகிறது.

Koviloor Digital Library

இவ்வூரில் உள்ள 'ஆரூரான் வழிபாட்டு மன்றம்' சோமவார வழிபாட்டைச் சிறப்புற நடத்தி வருகின்றது.

இவ்வூருக்குப் பக்கத்தில் உள்ள வெம்பாக்கத்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் 'அழிவிடைதாங்கி' என்னும் கிராமத்தினைச் சேர்ந்த பகுதியாக 'பைரவபுரம்' என்னும் மேட்டூர் உள்ளது. இங்குப் பைரவருக்கு கருவறை, மகா மண்டபம், பிராகாரத்துடன் கூடிய தனிக்கோயில் உள்ளது.

''விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில் அன்புடையானை யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற் கங்கைதரித்தானைச் சாராதார் சார்வென்னே.''

(சுந்தரர்)

''பனங்காட்டூர் மேவும் பனங்காட்டூர் நாதா
வனங்காட்டமுதவல்லி மன்னா''

(சிவ நாமக்கலி வெண்பா)

-''பூத்தவிசின்
ஆர்த்தான் பனாகத்தவனிந்திரன் புகழ்வன்
பார்த்தான் பனங்காட்டூர் பாக்கியமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. தாலபுரீஸ்வரர் திருக்கோயில்
திருப்பனங்காடு & Post (வழி) வெம்பாக்கம் - 604 410.
செய்யாறு வட்டம் - திருவண்ணாமலை மாவட்டம்.

10. திருவல்லம்

திருவலம்

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'திருவலம்' என்று அழைக்கப்படுகின்றது. வேலூருக்குப் பக்கத்தில் உள்ள காட்பாடிக்கு அண்மையில் உள்ள இருப்புப்பாதை நிலையம். ஆற்காட்டிலிருந்து ராணிப்பேட்டை

Koviloor Digital Library

வழியாகக் காட்பாடி செல்லும் சாலையில் இத்தலம் உள்ளது. நகரப்பேருந்துகள் அடிக்கடி செல்லுகின்றன. தனிப்பேருந்தில் செல்வோர் சென்னையிலிருந்து - பெங்களூர் செல்லும் நெடுஞ் சாலையில், ராணிப்பேட்டை முத்துக்கடை (Stop) அடைந்து; இடப் புறமாக ஆற்காடு சாலையில் திரும்பாமல், நேரே செல்லும் பெங்களூர்/ சித்தூர் சாலையில் சென்றால் 'சிப்காட் தொழிற்சாலைப் பகுதிகளைத் தாண்டி', சிறப்புபெற்ற திருவலம் இரும்புப் பாலத்தைக் (திருவலம் பிரிட்ஜ்) கடந்து இத்தலத்தை அடையலாம். பாலத்தின் மறுமுனையில் ஊர் உள்ளது. ஊருக்குள் நுழையும் போதே கோபுரம் தெரியும். 'நிவா' நதி ஓடுகிறது. நதியின் கரையில் சாலையோரத்திலேயே கோயில் உள்ளது. இந்நதி ஓடிச்சென்று பாலாற்றில் ஒன்றாகிறது. இறைவன், தீர்த்தத்தின் பொருட்டு 'நீ, வா' என்றழைக்க, இந்நதி அருகில் ஓடிவந்து பாய்ந்ததால் இப்பெயர் பெற்றது. 'நீ வா' நதி நாளடைவில் 'நிவா' நதியாயிற்று என்கின்றனர். இன்று 'பொன்னை' ஆறு என்னும் பெயரும் கொண்டுள்ளது. இந்நதியிலிருந்துதான் பண்டைநாளில் சுவாமிக்குத் தீர்த்தம் கொண்டு வரப்பட்டது. இப்போது கோயிலுக்குள் கௌரி தீர்த்தமும் தீர்த்தக் கிணறும் உள்ளன. நிவா நதி வடக்கிலிருந்து தெற்காக ஓடுகின்றது.

இத்தலம் 'வில்வவனம்' - 'வில்வாரண்யம்' எனப்படுகின்றது. ஒரு காலத்தில் வில்வக்காடாக இப்பகுதி இருந்தது. அக்காட்டில் ஒரு பாம்புப் புற்றில் சிவலிங்கம் இருந்தது. நாடொறும் பசு ஒன்று வந்து, அச்சிவலிங்கத்தின்மீது பாலைச் சொரிந்து வழிபட்டது. அதனால் புற்று சிறிது சிறிதாகக் கரைந்து நாளடைவில் சிவலிங்கம் வெளிப்படலாயிற்று என்று சொல்லப்படுகிறது.

கோயிலுள் தென்னைமரங்களும் பலாமரங்களும் உள்ளன. தொலைவிலிருந்து பார்க்கும்போது பசுமையான சோலைகளுக் கிடையே கோயில் இருப்பது கண்ணுக்கு அழகான காட்சியாகும். சுற்றுமதில் செம்மையாக உள்ளது.

பழைய கல்வெட்டில் இத்தலப் பெயர் 'தீக்காலி வல்லம்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகச் (சீர்காழிக்குப் பக்கத்தில் 'வல்லம்' என்றொரு ஊர் இருப்பதால் அதனின் வேறாக இதை அறிவதற்காக) சொல்லப்படுகிறது.

இங்குள்ள அம்பாளுக்கு ஆதியில் 'தீக்காலி அம்பாள்' (ஜடாக லாபாம்பாள்) என்றே பெயரிருந்ததாகவும்; உக்கிர வடிவிலிருந்த இந்த அம்பாளை, ஆதிசங்கரர் சாந்தப்படுத்தினார் என்று சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் பாடலில் 'திருவல்லம்' என்றும்; அருணகிரிநாதரின் திருப்புகழில் 'திருவலம்' என்றும் இத்தலம் குறிக்கப்படுகின்றது.

கௌரி, மஹாவிஷ்ணு, சனகமுனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இவர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் கோயிலுள் உள்ளன.

இறைவன் - வில்வநாதீஸ்வரர், வல்லநாதர்

இறைவி - தனுமத்யாம்பாள், வல்லாம்பிகை

தலமரம் - வில்வம், கோயிலுள் உள்ளது.

தீர்த்தம் - கௌரி தீர்த்தம், கோயிலுள் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

கோயிலுக்கு முன்புள்ள மண்டப முகப்புடன் நான்கு நிலைகளுடன் கூடிய ராஜகோபுரம் தெற்கு நோக்கியுள்ளது. உள் நுழைந்ததும் இடப்பால் பிற்காலப் பிரதிஷ்டையான (திருவலம் மௌன சுவாமிகள் திருப்பணிசெய்து கட்டுவித்த) அம்பிகேஸ்வரர் உடனாகிய ராஜேஸ்வரி ஆலயம் உள்ளது. இங்கு நாகலிங்கப் பூக்கள் பூக்கும் நாகலிங்க மரம் உள்ளது காணத்தக்கது. வலப்பால் நீராழி மண்டபத்துடன் கூடிய கௌரி தீர்த்தம் உள்ளது.

உள் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. இக்கோபுரம் கல் மண்டபத்தின் மீது கட்டப்பட்டதாகும். உள் நுழைந்து பிராகாரத்தில் வலமாக வரும்போது உற்சவர் மண்டபம் உள்ளது. பக்கத்தில் காசிவிசுவநாதர் சந்நிதியும், அடுத்து சந்திரமௌலீஸ்வரர் சந்நிதியும் உள்ளன. இவ்விரு சந்நிதிகளிலும் உள்ள சிவலிங்கத் திருமேனிகள் மிகச் சிறியன. அடுத்துள்ள அருணாசலேஸ்வரர் சந்நிதியிலுள்ள சிவலிங்கத் திருமேனி சற்றுப் பெரியது. இதற்குப் பக்கத்தில் சதாசிவர், அனந்தர், ஸ்ரீ கண்டர், அம்பிகேஸ்வரர் என்னும் பெயர்களில் சிவலிங்கங்கள் வரிசையாக உள்ளன.

இதனை அடுத்து மிகச் சிறியதான - பார்ப்பதற்கு அழகான 'சஹஸ்ரலிங்கம்' உள்ளது. ஆறுமுகர் சந்நிதியில் இருபுறமும் வள்ளி தெய்வயானையும், நாகப்பிரதிஷ்டையும், மூலையில் அருணகிரிநாதர் உருவமும் உள்ளன. இதன் பக்கத்தில் குருஈஸ்வரர், விஷ்ணுஈஸ்வரர், விதாதா ஈஸ்வரர் என்னும் பெயர்களைக் கொண்ட சிவலிங்கங்கள் வரிசையாக உள்ளன. அடுத்துள்ளது வாகன மண்டபம்.

இதற்கு எதிரில் ''ஆதிவில்வநாதேஸ்வரர் சந்நிதி'' - தனிக் கோயிலாகவுள்ளது. இக்கோயில் கிழக்கு நோக்கியது. இதன் எதிரில்

Koviloor Digital Library

நெடுங்காலமாக இருந்து வரும் பலாமரம் ஒன்றுள்ளது. இதுவன்றிப் பிற்காலத்தில் வைத்துப் பயிராக்கப்பட்டுள்ள பலா மரங்களும் கோயிலுள் உள்ளன.

அடுத்து வலமாக வரும்போது அம்பாள் சந்நிதி - கிழக்கு நோக்கி முன் மண்டபத்துடன் தனிக் கோயிலாக உள்ளது. கருவறை, அகழி அமைப்புடையது. வலம் வரலாம். கோஷ்டமூர்த்தமாக விநாயகர் அன்னபூரணி, அபயவரதத்துடன் அமர்ந்துள்ள அம்பாள், துர்க்கை ஆகியோர் உள்ளனர். எதிரில் சண்டிகேஸ்வரி சந்நிதி உள்ளது. சந்நிதி எதிரில் பிராகாரத்தில் தலமரமான வில்வம் உள்ளது. வலப்பால் சுந்தரேஸ்வரர் சந்நிதி - கிழக்கு நோக்கியதாகத் தனிக் கோயிலாக உள்ளது. மீனாட்சியம்மை தெற்குமுக தரிசனம். உள்ளே வலம் வரலாம். கோஷ்டமூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரமன், துர்க்கை முதலிய - மிகச் சிறிய திருவுருவங்கள் உள்ளன. சண்டேஸ்வரர் உள்ளார். சந்நிதியின் எதிரில் தீர்த்தக் கிணறு உள்ளது.

பிராகாரத்தில் யாகசாலையும் பைரவர், சூரியன் சந்நிதிகளும் உள்ளன. செப்புக் கவசமிட்ட கொடிமரம், இங்குள்ள பெருமானை விஷ்ணு வழிபட்டதால், விஷ்ணுவின் பாதம் பத்மபீடத்தில் கொடி மரத்தின் முன்பு உள்ளது.

கொடிமரத்தின் பின்னால் உள்ள நந்தி - சுவாமிக்கு எதிர்ப்புறமாக கிழக்கு நோக்கியுள்ளது. இதற்குப் பின்னால் நின்ற நிலையில் அதிகார நந்தி சுவாமியைப் பார்த்தபடியுள்ளது. மூலவர் சந்நிதியில் உள்ள நந்தியும் வெளியில் உள்ளதைப்போலவே கிழக்கு நோக்கியுள்ளது. இவைகளுக்கு இடையில் திருவலம் மௌனசுவாமிகள் கட்டுவித்த சுதையாலான பெரிய நந்தி கிழக்கு நோக்கியே உள்ளது. நேரே நின்று மூலவரைத் தரிசிக்க முடியாதவாறு இது மறைக்கின்றது. முன்னுள்ள நந்தியைப்போலவே பெரியதாக அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இது கட்டப்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகின்றது.

நந்தி, கிழக்கு நோக்கி இருப்பதற்குச் சொல்லப்படும் வரலாறு வருமாறு :

இத்தலத்திலிருந்து 4 கி. மீ. தொலைவில் கஞ்சன்கிரி என்றொரு மலையுள்ளது. அது தற்போது ‘காஞ்சனகிரி’ என்று வழங்குகின்றது. இம்மலையில் கஞ்சன் என்னும் அசுரன் இருந்து வந்தான். இம்மலையிலிருந்துதான் தீர்த்தம் இக்கோயிலுக்கு மிகப்பழங்காலத்தில் கொண்டு வரப்பட்டது. அவ்வாறு கொண்டு வருவதைக் ‘கஞ்சன்’ தடுத்தான். செய்வதறியாது உரியோர் இறைவனிடம் முறையிட,

Koviloor Digital Library

நந்தியெம்பெருமான் சென்று கஞ்சனுடன் போரிட்டு அவனை அடித்து அழித்தார். அவ்வாறு அழித்தபோது அவ்வசுரனின்; லலாடம் வீழ்ந்த இடம் தற்போது 'லாலாபேட்டை' என்றும், சிரசு வீழ்ந்த இடம் "சீகராஜபுரம்" என்றும், வலக்கால் அறுபட்டு வீழ்ந்த இடம் "வடகால்" என்றும், தென்கால் வீழ்ந்த இடம் "தென்கால்" என்றும், மணிக்கட்டு வீழ்ந்த இடம் "மணியம்பட்டு" என்றும், மார்பு, வீழ்ந்த இடம் "குகையநல்லூர்" என்றும் வழங்கப்படுகிறது. இவ்வூர்களெல்லாம் திருவலத்திற்கு 3 கி. மீ. தொலைவில் உள்ளன. இந்நிகழ்ச்சியையொட்டியே நந்தி, காவலுக்காகக் கிழக்கு நோக்கியுள்ளார். காஞ்சனகிரியில் அசுரனின் குருதி பட்ட இடத்திலெல்லாம் இறைவனருளால் அவ்விடத்தைப் புனிதப்படுத்த சிவலிங்கங்கள் உண்டாயின. இன்றும் இம்மலையில் குளக்கரையில் எண்ணற்ற சிவலிங்கங்கள் இருப்பதையும் தோண்டினால் கிடைப்பதையும் நேரில் பார்க்கலாம். சிப்காட் தொழிற்பகுதி வழியாகச் சாலையில் செல்லும் போது இம்மலையைப் பார்க்கலாம். (லாலாபேட்டைக்குப் பக்கத்தில் இம்மலை உள்ளது. லாலாபேட்டைக்கு ஆற்காட்டிலிருந்து நகரப் பேருந்து செல்கிறது).

மூலவர் சந்நிதி வாயிலில் நுழைந்தவுடன் நேரே சிவலிங்கத் திருமேனி தரிசனம். வாயிலைக் கடந்ததும், இங்கு வழிபட்ட சனக முனிவரின் 'திருவோடு' சுவாமிக்கு நேரே வெளியில் பிரதிஷ்டை செய்திருப்பதைக் காணலாம். உள்சுற்று வலம் வரும்போது மூலையில் 'பிராமி' உருவச்சிலையுள்ளது. தெற்கு நோக்கிய பக்கவாயில் உள்ளது. கருவறை அகழி அமைப்புடையது. கருவறைச்சுவரில் கல்வெட்டுக்கள் நிரம்ப உள்ளன. கோஷ்ட மூர்த்தமாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரமன் உள்ளனர். எதிரில் சண்டேசுவரர் சந்நிதி, அறுபத்துமூவரின் உற்சவ, மூலத்திருமேனிகள் மேலும் கீழுமாக இருவரிசைகளில் வைக்கப்பட்டுள்ளன.

சங்கரநாராயணர் திருவுருவம் வலப்பால் உள்ளது. இடப்பால் பள்ளத்தில் 'பாதாளேஸ்வரர்' சந்நிதி உள்ளது. இதில் சிவலிங்கம் நந்தி, விநாயகர் மூலத்திருமேனிகள் உள்ளன. பஞ்சம் நேரின், இப் பெருமானுக்கு ஒரு மண்டலகாலம் அபிஷேகம் செய்யின் மழை பெய்யும் என்று சொல்லப்படுகின்றது. மூலவர் வாயிலில் உள்ள இரு துவார பாலகர்கள் திருமேனிகள் சிற்பக் கலையழகு வாய்ந்தவை. இவற்றுள் ஒன்று ஒரு கையை மேலுயர்த்தி, நடன பாவ முத்திரையுடன் விளங்குகின்றது.

Koviloor Digital Library

மூலவர் - சிவலிங்கத் திருமேனி, சுயம்பு, கிழக்கு நோக்கியது. சதுர பீட ஆவுடையார்.

சந்நிதிக்கு வெளியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பெரிய நந்திக்குப் பக்கத்தில் நடராச சபையும், அடுத்து நவக்கிரக சந்நிதியும் உள்ளன. நடராச மூர்த்தம் உருண்டை வடிவமான பிரபையுடன் அழகாகவுள்ளது. மூலவரைத் தரிசித்து வெளிவந்து நடராசப் பெருமானைத் துதித்து நவக்கிரகத்தை வலம் வந்து கொடிமரத்தடியில் வீழ்ந்து வணங்கி, வலமாக வரும்போது அகோர வீரபத்திரர் சந்நிதி உள்ளது. இங்குள்ள இரு உருவங்களில் ஆதி உருவம் சுவரில் உள்ளது. புதிய பிரதிஷ்டை முன்னால் உள்ளது. பக்கத்தில் நால்வர் பிரதிஷ்டை. அடுத்துச் சனிபகவான் சந்நிதி உள்ளது. இதற்குப் பக்கத்தில் விநாயகர் சந்நிதி உள்ளது. சதுரபீடத்தின்மேல் பத்மபீடம் அமைய அதன்மீது அமர்ந்த நிலையில் விநாயகர் காட்சி தருகிறார். இறைவனிடம் கனி பெற்ற வரலாற்றை நினைப்பூட்டும் வகையில் துதிக்கையில் மாங்கனியுடன் திகழ்கின்றார்.

பங்குனியில் பெருவிழா நடைபெறுகின்றது. ஆருத்ரா தரிசனம் விசேஷம்.

கஞ்சனுக்கு இறைவன் முத்தி தந்த ஐதீகம், திருவிழாவாக இன்றும் நடைபெறுகின்றது. இதற்காகத் தை மாதம் பொங்கல் கழித்து 10-ஆம் நாள் சுவாமி இங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சனகிரிக்கு எழுந்தருளுகிறார். இம்மலையில் (காஞ்சனகிரியில்) சித்ரா பௌர்ணமியில் குளக்கரையி லிருந்து பார்த்தால் ஜோதியொன்று தோன்றிப் பின் மறைகின்றதாம். இப்போதும் இது தெரிவதாகப் பார்த்தவர்கள் சொல்கின்றனர். இம் மலையின் சிறப்பு அறிந்து மக்கள் தற்போது செல்லத் தொடங்கி யுள்ளனர்.

திருவலம் என்றாலே "மௌனசுவாமிகள்" நினைவு அனைவரின் உள்ளங்களிலும் தோன்றும். மிகவும் பிரசித்தமாக விளங்கியவர். அவர் நினைவிடம் பக்கத்தில் உள்ளது.

இத்தலத்திற்குப் பக்கத்தில் 10 கி. மீ. தொலைவில் 'வள்ளிமலை உள்ளது.

"எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே." *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

திருப்புகழ்

நசையொடு தோலுந் தசைதுறு நீரும்
நடு நடுவே யென் -புறுகீலும்
நலமுறு வேயொன்றிட இரு கால்நன்
றுற நடையாருங் -குடிலூடே
விசையுறு காலம் புலனெறியேவெங்
கனலுயிர் வேழந் -திரியாதே
விழுமடியார் முன்பழு தறவேள்கந்
தனுமென வோதும் -விறல்தாராய்
இசையுறவே யன்றசை வறவூதும்
எழிலரிவேழம் -எனையாளென்
றிடர் கொடுமூலத் தொடர்வுடனோதும்
இடமிமையாமுன் -வருமாயன்
திசைமுக னாருந் திசைபுவி வானுந்
திரிதர வாகுஞ் -சிவன்மூதூர்
தெரிவையர் தாம்வந் தருநடமாடுந்
திருவல மேவும் -பெருமாளே.

-பார்த்துலகில்
இல்லமெனச் சென்றிரவாதவர் வாழும்
வல்லம் மகிழ்வன்பர் வசித்துவமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வில்வநாதீஸ்வரர் திருக்கோயில்
திருவலம் & அஞ்சல் -
(வழி) ராணிப்பேட்டை - குடியாத்தம் வட்டம்.
வேலூர் மாவட்டம். 632 515.

11. திருமாற்பேறு

திருமால்பூர்

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'திருமால்பூர்' என்று வழங்குகின்றது.

(1) சென்னையிலிருந்து நேரே பேருந்து செல்கிறது, ஆனால் அடிக்கடி இல்லை. நேரம் விசாரித்துச் செல்ல வேண்டும்.

Koviloor Digital Library

(2) காஞ்சியிலிருந்து அடிக்கடி பேருந்து வசதியுள்ளது. இவ் வழியே எளிதானது.

(3) அரக்கோணம் - காஞ்சிபுரம் இருப்புப் பாதையில் இத்தலம் ஒரு இருப்புப்பாதை நிலையம். இப்பாதை தற்போது அகலப் பாதையாக (Broad Gauge) மாற்றப்பட்டள்ளது. நிலையத்தில் இறங்கி மேற்கே 5 கி. மீ. உள்ளே சென்றால் ஊரையடையலாம்.

திருமால், இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம், எனவே தான் 'மாற்பேறு' என்னும் பெயர் பெற்றது. திருவீழிமிழலைக்குரிய வரலாறு இத்தலத்திற்கும் சொல்லப்படுகின்றது. அதாவது திருமால், நாடொறும் ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு அர்ச்சித்து வழிபட்டாரென்றும், ஒரு நாள் மலர் ஒன்று குறைய, தம் கண்ணையே பறித்து மலராக இட்டு அர்ச்சித்து அருள் பெற்றார் என்பதும் வரலாறு. இவ்வாறு வழிபட்டுத் தம் சக்ராயுதமான 'சுதர்சனத்தை'த் திரும்பப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் திருமாலின் உற்சவத் திருமேனி ஒன்று, ஒரு கையில் தாமரை மலரும் மறு கையில் 'கண்'ணும் கொண்டு, நின்ற கோலத்தில் இருப்பதை இக்கோயிலில் காணலாம்.

கோயில் ஊர் நடுவே உள்ளது. கோயிலுக்கு நேர் எதிரில் வீதியின் மறுமுனையில் விநாயகர் கோயில் உள்ளது.

திருமால் வழிபட்டுச் சக்ராயுதம் பெற்ற தலமாதலின் இதற்கு 'ஹரிசக்ரபுரம்' என்றும் பெயர்.

சந்திரன் வழிபட்ட தலம்.

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற தலம்.

இறைவன் - மணிகண்டேஸ்வரர், தயாநிதீஸ்வரர், பிரவாளேஸ் வரர், சாதரூபர், பவளமலையார், வாட்டந்தவிர்த்தார், மால்வணங்கீசர், (மணிகண்டேஸ்வரர் என்னும் திருப்பெயரே வழக்கில் உள்ளது.)

இறைவி - அஞ்சனாட்சி, கருணாம்பிகை.

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - சக்கர தீர்த்தம். (கோயிலுக்கு வெளியில் பக்கத்தில் புதர்மண்டிப் பயனின்றி உள்ளது.)

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. சிற்பங்களில்லை. சிற்பத் தூண்கள் அமைப்பில் உள்ளது. பழமையான கோபுரம். முகப்பில் வலம்புரி விநாயகர் உள்ளார்; வயிற்றுப் பகுதி

Koviloor Digital Library

சற்றுப் பின்னமடைந்துள்ளது. பக்கத்தில் உள்ள தீர்த்தம் - சக்கரத் தீர்த்தம். பயன்படுத்தப்படும் நிலையில் இல்லை.

உள் சுற்றுப் பிராகாரம் செடிகளடர்ந்துள்ளது. உயரமான பீடத்தின்மீது பலிபீடம் கவசமிட்ட கொடிமரம், நந்தி முதலியவை தனித் தனியே உள்ளன. மேலே சிமெண்டு ஷீட்டுகள் வேயப்பட்ட கொட்டகை போடப்பட்டுள்ளது.

அடுத்து உள்ள உள் வாயில், மேற்புறம் பஞ்சமூர்த்திகளின் சுதை வேலைப்பாடுகளுடன் காட்சி தருகின்றது.

வெளியில் வலப்பால் அம்பாள் ஆலயமும், அடுத்து யாக சாலையும் உள்ளன. உள் வாயிலுக்கு இரும்புக் கதவு போடப் பட்டுள்ளது. வாயிலின் வெளித் தூண்களில் பசுவொன்று சிவலிங்கத் திருமேனிக்கு பால்சுரந்து வழிபடும் சிற்பமும், மறுபுறம் தண்டபாணி சிற்பமும் உள்ளன. (வாயிலுக்கு வெளியில்) வலப்பால் நவக்கிரக சந்நிதி உள்ளது. வாயிலைக் கடக்கும்போது இடப்பால் நந்தி தேவர் நின்ற கோலத்தில் காட்சி தருவதைத் தரிசிக்கலாம்.

உள் பிராகார வலத்தில் சூரியன், நால்வர், சோளீஸ்வரர், பஞ்ச மாதாக்கள், பாலகணபதி, உச்சிஷ்ட கணபதி, சிதம்பரேஸ்வரர், கஜலட்சுமி, வள்ளி தெய்வயானை முருகன் ஆகிய சந்நிதிகள் உள்ளன. (ஐப்பசியில் அன்னாபிஷேகம் சிதம்பரேஸ்வரருக்குத்தான் சிறப்பாக நடைபெறுகின்றது.) அடுத்துப் பள்ளியறை உள்ளது. தனியறையாக இல்லை. இரும்புத்தடுப்பு மட்டுமே உள்ளது; ஊஞ்சல் உள்ளது. அடுத்து வீரபத்திரர், பைரவர், சந்திரன் சந்நிதிகள் உள்ளன.

பிராகார வலம் முடித்து மேலேறும்போது வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் உள்ளனர். ஒருபுறம் வல்லபை விநாயகர் பத்துக் கரங்களுடன் காட்சி தருகின்றார். இது அபூர்வ அமைப்பாகும். மறுபுறம் சண்முகர் உள்ளார். நடுவில் மூலவரைப் பார்த்தவாறு மகா விஷ்ணு, கூப்பிய கரங்களுடன் காட்சி தருகின்றார். மேலே விமானம் உள்ளது. அவருக்கு முன் நந்தி உள்ளது. சந்நிதி வாயிலைக் கடந்து மண்டபத்தை அடைகிறோம். கட்டமைப்புடைய மண்டபம். இங்குள்ள தூண்களில் தக்ஷிணாமூர்த்தி, சூரியன், மகாவிஷ்ணு, பாலசுப்பிரமணியர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், விநாயகர், முருகன், நான்கு முகங்களும் நன்கு தெரிய பிரம்மா, அம்பாள் வில்வடியில் பெருமானை வழிபடுவது, காளிங்கநர்த்தனம், காமதேனு, பைரவர், வீரபத்திரர், ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தல், பலவகையான சிம்மங்கள் முதலான பல அரிய சிற்பங்கள் உள்ளன. நடராசர் தெற்கு நோக்கியுள்ளார். எதிரில் வாயில்

Koviloor Digital Library

உள்ளது. மணிவாசகரும் சிவகாமியும் உடன்எழுந்தருளியுள்ளனர். நேரே மூலவர் தரிசனம். சிவலிங்கத்திருமேனி - தீண்டாத் திருமேனி. குவளை (கவசம்) சார்த்தியே அபிஷேகம் செய்யப்படுகிறது. அவ்வப்போது புனுகுசட்டம் சார்த்தப்படுகிறது. திருமேனி கூம்பு வடிவில் உள்ளது. அழகான மூர்த்தம், கோஷ்ட மூர்த்தங்களாகத் தக்ஷிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உளர். துர்க்கை உருவம் மிகவும் அழகு வாய்ந்தது - அஷ்டபுஜங்களுடன் சங்கு சக்கரம் ஏந்தி அழகாகக் காட்சி தருகின்ற திருமேனி. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. உற்சவத் திருமேனிகளாகச் சந்திரசேகரர், பிரதோஷநாயகர், பள்ளியறைநாதர், விநாயகர், சுப்பிரமணியர், நால்வர், தலஐதீகத்துக்குரிய முறையில் ஒரு கையில் தாமரையும் மறுகையில் 'கண்'ணும் கொண்டிலங்கும் மகாவிஷ்ணு முதலிய திருமேனிகள் உள்ளன.

மூலவருக்கு எதிரில் உள்ள மகாவிஷ்ணுவுக்குத் தீபாராதனை முடிந்த பின்பு சடாரி சார்த்தி தீர்த்தம் தரும் மரபு உள்ளது.

அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது. தெற்கு நோக்கியது. துவாரபாலகியர் உளர். அம்பாள் நின்ற கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள்.

சந்நிதியில் மேற்புறத்தில் கல்லில் மீன் உருவமும் கைகூப்பிய உருவமொன்றும், பக்கத்தில் யானையும், பெண் ஒருத்தியும் நிற்கும் அமைப்பில் சிற்பம் உள்ளது.

நாடொறும் ஐந்து கால பூஜைகள் நடைபெறுகின்றன. மாசி மகத்தில் பத்து நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகின்றது. இது தவிர, கிருத்திகை, ஆடிவெள்ளி, ஆடிப்பூரம், கார்த்திகை தீபம், ஆனித் திருமஞ்சனம், ஆருத்ரா, கருடசேவை முதலிய சிறப்பு விழாக்களும் நடைபெறுகின்றன.

நகரத்தார் திருப்பணியில் 26-4-1937-ல் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்ற இத்திருக்கோயிலில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத் திட்டத்தின் கீழ் சுவாமி அம்பாள் விமானங்கள் திருப்பணி செய்யப்பட்டு அவர்களின் ஆதரவாலேயே விபவ ஆண்டு ஆவணி 22 ஆம் நாள் (7-9-89) அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

ஊர் சிறியது. வெளியூரிலிருந்து செல்லும் பயணிகளுக்கு உணவு தங்கும் வசதிகள் இங்குக் கிடைக்காது. காஞ்சிபுரத்திற்கே வரவேண்டும்.

Koviloor Digital Library

இத்தலத்திற்குப் பக்கத்தில் 'கோவிந்தவாடி' என்னும் ஊர் உள்ளது. இங்குள்ள தட்சிணாமூர்த்தி மிக்க அழகும் சிறப்பும் உடையதாகும். கட்டாயம் தரிசிக்க வேண்டும்.

''ஊறியார் தருநஞ்சினை உண்டு உமை
நீறுசேர் திருமேனியர்
சேறுசேர் வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறிலா மணி கண்டரே.''

''குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவன் ஆணுமவன்
கருந் தடமலர்க் கண்ணி காதல் செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே.''

(சம்பந்தர்)

''துணி வண்ணச் சுடராழி கொள்வான் எண்ணி
அணி வண்ணத்து அலர்கொண்டு அடி அர்ச்சித்த
மணி வண்ணற்கு அருள் செய்தவன் மாற்பேறு
பணி வண்ணத்தவர்க்கு இல்லையாம் பாவமே,''

''ஐயனே அரனே என்று அரற்றினால்
உய்யலாம் உலகத்தவர் பேணுவர்
செய்யபாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர் மாற்பேறரே.''

(அப்பர்)

''சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கு அன்று அருளியவாறு என்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம் இடந்து அரனடிக்கீழ்
அலராக இட ஆழி அருளினன்காண் சாழலோ.''

(திருச்சாழல் : மாணிக்கவாசகர்)

''பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக் குறையக்
தம் கண் இடந்து அரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கு அருளியவா(று)
எங்கும் பரவி நாம் தோணோக்கம் ஆடாமோ.''

(தோணோக்கம் : மாணிக்கவாசகர்)

–'சொல்வரிக்குக்'
காற்பேறு கச்சியின் முக்காற்பேறு இவன் என்னும்
மாற்பேற்றின் அன்பர் மனோ பலமே.

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி :-

அ/மி. மணிகண்டேஸ்வரர் திருக்கோயில்,
திருமால்பூர் & அஞ்சல் - 631 053
அரக்கோணம் வட்டம்
வேலூர் மாவட்டம்.

12. திருவூறல்

தக்கோலம்.



தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் தக்கோலம் என்று வழங்கப்படுகிறது.

சென்னையிலிருந்தும் காஞ்சிபுரத்திலிருந்தும் நேர்ப் பேருந்து வசதி உள்ளது. காஞ்சியிலிருந்து 30 கி.மீ. இருப்புப்பாதை நிலையம். ஊருக்குப் பக்கத்தில் கல்லாறு ஓடுகிறது. தக்கன் தலையைக் கொய்த தலம் என்பர். தக்கன் தனக்கு அழிவு வரும் நிலையைக் கண்டு ஓலமிட்டதால் 'தக்கன் - ஓலம்' - இப்பதி 'தக்கோலம்' என்று பெயர் பெற்றதாக உள்ளூர்ச் செய்தி அறிவிக்கின்றது. இதற்கு அரண்

Koviloor Digital Library

செய்வதுபோல தேரடிக்கு அருகில் வீரபத்திரர் கோயில் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றது.

இறைவன் - ஜலநாதேஸ்வரர், உமாபதீசர்

இறைவி - கிரிராஜ கன்னிகை, மோகனவல்லி

தீர்த்தம் - நந்தி தீர்த்தம், பக்கத்தில் கல்லாறு ஓடுகிறது.

கோயில் ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுரத்தில் பலவகைச் சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் மார்க்கண்டேயருக்காக இறைவன் இயமனை உதைத்தருளும் காட்சியும் சிற்புமாகவுள்ளது - காணத்தக்கது.

கோபுரவாயில் நுழைந்ததும் வெளிப்பிராகாரத்தில் விநாயகர் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது. பக்கத்தில் தீர்த்தக்குளம் உள்ளது. செம்மையான நிலையில் இல்லை.

சுவாமி சந்நிதி எதிரில் சாளரம் உள்ளது. வெளியில் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ளன. பக்கவாயில் வழியாக நுழைந்து துவார கணபதி, சுப்பிரமணியரை வணங்கிச்சென்றால் ஒரு புறத்தில் நவக்கிரக சந்நிதி உள்ளது. அடுத்துள்ள மண்டபத்தில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிட்சாடனர் முதலிய உற்சவத் திருமேனிகளும், நடராச சபையும் உள்ளன.

வாயில் நுழைந்து செல்லின் துவாரபாலகர்களைத் தரிசிக்கலாம். நடனக் கோலத்தில் மேற்கையை உயர்த்தி உரிய முத்திரையோடு திகழ்கின்ற அருமையான அமைப்பு. நேரே மூலவர் தரிசனம். சிவலிங்கத் திருமேனி பிருதிவி (மணல்) லிங்கம். தீண்டாத்திருமேனி. ஆவுடையாருக்கு மட்டுமே அபிஷேகம். பழமையான மூர்த்தி.

சந்நிதிக்கு எதிரில் ஓரத்தில் சுரங்கப்பாதை உள்ளது. கல்லால் மூடப்பட்டுள்ளது. உள் பிராகாரத்தில் சுப்பிரமணியர், சம்பந்தர், வல்லபை விநாயகர், ஆறுமுக சுவாமி, முதலிய சந்நிதிகள் உள்ளன.

கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, விஷ்ணுதுர்க்கை முதலிய மூர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் துர்க்கை நீங்கலாக உள்ள மற்ற மூர்த்தங்கள் அனைத்தும் அமர்ந்த நிலையிலேயே உள்ளன. தட்சிணாமூர்த்தி வலக்காலைத் தொங்க விட்டு, இடக்காலைக் குத்துக்காலிட்டு அபூர்வமாகக் காட்சி தருகின்றார். லிங்கோற்பவரிடத்தில் உள்ள மகாவிஷ்ணுவும் வலக்காலை மடித்து இடக்காலைத் தொங்கவிட்டு, வலக்கை அபயமாகக் கொண்டு, இடக்கையைத் தொடைமீது வைத்துள்ளார். பிரம்மாவும் அமர்ந்த

Koviloor Digital Library

நிலை. விஷ்ணு துர்க்கை அமைப்பு நின்ற நிலையினதாயினும் அழகான வேலைப்பாடு - இரு திருவடிகளுள் ஒன்றை பாத அளவில் மடித்து ஒன்றால் கீழேயுள்ள மகிடத்தை ஊன்றி, (குழலூதும் கண்ணன் நிற்கும் அமைப்பில்) நிற்கும் அற்புதமான திருக்கோலம்.

பைரவர் சந்நிதி உள்ளது. வாயிலின் இருபுறமும் சூரிய சந்திரர்கள் உளர். அம்பாள் சந்நிதி - நின்ற திருக்கோலம், அபய வரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள்.

இச்சந்நிதிக்குப் பக்கத்தில் தனியே உள்ள மண்டபத்தில் வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர் சந்நிதி கம்பீரமாக உள்ளது.

சித்திரை மாதத்தில் பத்து நாள்களுக்குப் பெருவிழா நடைபெறு கிறது. இது தவிர, ஆருத்ரா, சஷ்டி, நவராத்திரி முதலிய விழாக்களும் நடைபெறுகின்றன.

கல்லாற்றின் கரையில் உள்ள கோயில் - ஜலகண்டேஸ்வரர் (கங்காதரேஸ்வரர்) கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. பூஜைகளில்லை. இதன் மேற்கில் உள்ளது சத்திய கங்கை தீர்த்தம். கிழக்கில் உள்ள நந்தி வாயிலிருந்து ஒரு காலத்தில் நீர் விழுந்து கொண்டிருந்தது. தற்போது நின்றுவிட்டது. நந்தி வாயிலிருந்து விழும் நீர், சிவலிங்கத்தைச் சுற்றிச் சென்று வெளியில் வந்து, மீண்டும் மற்றொரு நந்தி வாயிலிருந்து விழுந்து, குளத்தில் நிரம்பி பின்னர் ஆற்றில் ஓடும் அமைப்பில் இது அமைந்துள்ளது. இப்போதும் ஆற்றில் நீர்ப்பெருக்கு உண்டாயின் அப்போது நந்தி வாயில் நீர் விழும் என்று சொல்கிறார்கள்.

இக்கோயிலில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத் திட்டத்தின் கீழ் திருப்பணிகள் நடைபெற்று மகா கும்பாபிஷேகம் நடந்துள்ளது. சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை கல்யாண சுந்தர முதலியார் இத்தலத்திற்குத் தலபுராணம் பாடியுள்ளார்.

''மாறில் அவுணர் அரணம் அவைமாய ஓர் வெங்கணையாலன்று
நீறெழ எய்த எங்கள் நிமலனிடம் வினவில்
தேறலிரும் பொழிலுந் திகழ் செங்கயலும்பாய் வயலுஞ்சூழ்ந்த
ஊறல் அமர்ந்த பிரான் ஒலியார் கழல் உள்குதுமே.''

''கறுத்த மனத்தினொடுங் கடுங்காலன் வந்தெய்துதலுங் கலங்கி
மறுக்குறு மாணிக்கருள மகிழ்ந்தானிடம் வினவில்
செறுத்து எழு வாள்அரக்கன் சிரந்தோளும் மெய்யுந்நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் திருவூறலை உள்குதுமே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-ஏற்புடையாய்
ஊறல் அடியார் உறத் தொழுது மேவு திரு
வூறல் அழியா உவகையே.

-அருட்பா

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஜலநாதேஸ்வரர் திருக்கோயில்
தக்கோலம் & அஞ்சல் - 631 151
அரக்கோணம் வட்டம்,
வேலூர் மாவட்டம்.

13. இலம்பையங் கோட்டூர்

எலுமியன் கோட்டூர்.

தொண்டை நாட்டுத் தலம்.

சிறிய ஊர். மக்களின் பேச்சு வழக்கில், 'எலுமியன்கோட்டூர்' என்று வழங்குகிறது. (1) திருவிற்கோலம் எனப்படும் 'கூவம்' சென்று தரிசித்த பின்னர் அங்கிருந்து கூவம் ஏரியுள் இறங்கி 3 கி. மீ. நடந்தால் ஆற்றின் மறுகரையிலுள்ள இத்திருக்கோயிலை அடையலாம். (2) சென்னையிலிருந்தும், காஞ்சியிலிருந்தும் 'செல்லம்பட்டிடை' செல்லும் நகரப் பேருந்தில் சென்று, செல்லம்பட்டிடையில் இறங்கினால் அங்கிருந்து 1 கி. மீ-ல் உள்ள இத்திருக்கோயிலை அடையலாம். இவ்வழியில் சென்றால் கோயில்வரை காரில் செல்லலாம். நல்ல பாதை உள்ளது. ஊரில் உணவு முதலியவற்றிற்கு எவ்வித வசதியுமில்லை, அரம்பை முதலானோர் வழிபட்ட தலம். ரம்பையங் கோட்டூர் என்பதே இலம்பையங் கோட்டூர் என்றாயிற்று என்பர்.

ஞானசம்பந்தர் இப்பக்கத்தே வருங்காலத்து, இறைவன் ஒருசிறு பிள்ளை போலவும், பின் ஒரு முதியவர் போலவும் வழிமறித்து இக்கோயிலை உணர்த்த, உடன் வந்த அடியார்கள் உணர்ந்து கொள்ளவில்லையாம், பின்பு வெள்ளைப் பசு வடிவில் வந்து ஞானசம்பந்தரின் சிவியை முட்டிநிற்க, அப்போது சம்பந்தர் வியந்து அப்பசு காட்டிய குறிப்பின் வழி செல்ல, தலத்தினருகில் வந்ததும் பசு மறைந்ததாம். அப்போதுதான் இறைவனே வந்து உணர்த்தியதை

Koviloor Digital Library

உணர்ந்து ஞானசம்பந்தர் இத்திருக்கோயிலைத் தெரிந்து கொண்டு வழிபட்டார் என்று சொல்லப்படுகின்றது. இக்குறிப்பே இத்தலத்துப் பதிகத்தில் 3-வது பாட்டில் சொல்லப்பட்டுள்ளதாகவும் சொல்லப் படுகிறது.

அப்பாடல் வருமாறு :-

"பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்,
பண்டுவெங்கூற்றுதைத்து அடியவர்க்கருளும்
காலனாம்எனதுரை தனதுரையாகக், கனல் எரி அங்கையில் ஏந்திய
கடவுள்
நீலமா மலர்ச்சுனைவண்டு பண்செய்ய, நீர்மலர்க் குவளைகள்
தாதுவிண்டோங்கும்
ஏல நாறும் பொழில் இலம்பையங் கோட்டூர், இருக்கையாப்
பேணி என்எழில் கொள்வதியல்பே."
(சம்பந்தர்)

திருவல்லம் பணிந்து இத்தலத்தை அடைந்து பெருமானைத் தனதுரையாற் பாடிப் பரவினார்.

இறைவன் - அரம்பேஸ்வரர், தெய்வநாயகேஸ்வரர்,
சந்திரசேகரர்.

இறைவி - கனககுஜாம்பிகை, கோடேந்து முலையம்மை.

தலமரம் - மல்லிகை.

தீர்த்தம் - மல்லிகைத் தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய கோயில். கூவம் ஆற்றின் மறுகரையில் உள்ளது.

ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் மட்டுமே உள்ளது. உள்ளே நுழைந்ததும் நேரே மூலவர் காட்சி தருகின்றார்.

வாயிலைக் கடந்ததும் இடப்பால் அரம்பாபுரிநாதர் - சிவலிங்கத் திருமேனி உள்ளது. வலமாக வரும்போது குருந்த விநாயகர், வள்ளி தெய்வயானை கூடிய முருகன் சந்நிதி, பைரவர்சந்நிதி, சூரியன் சந்நிதி-உள்ளன. கோஷ்ட மூர்த்தமாக விநாயகரும் அவரையடுத்து தட்சிணாமூர்த்தியும் உள்ளார்கள், இந்தத் தட்சிணாமூர்த்தி - யோக தட்சிணாமூர்த்தி. சின் முத்திரையை இதயத்தில் வைத்துள்ள அமைப்பு - அற்புதமாகவுள்ளது. கருவறையின் பின்புறம் இலிங்கோற்பவர் இடத்தில் மகாவிஷ்ணு உருவம் உள்ளது. அடுத்து பிரம்மா, துர்க்கை

Koviloor Digital Library

சந்நிதிகள் உள்ளன. சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது. உள் நுழைந்தால் நேரே மூலவர் தரிசனம். வலப்பால் முதலில் அம்பாளும் அடுத்து நடராசரும் தெற்கு நோக்கியுள்ளனர். அம்பாள் நின்ற கோலம்.

சுவாமி - மூலவர் - தீண்டாத் திருமேனி. கிழக்கு நோக்கிய சந்நிதி. சுவாமிமீது உருத்திராக்க மாலை சார்த்தப்பட்டுள்ளது. சிவலிங்கத் திருமேனி வெளிர் நிறமுடைய செம்மண் நிறத்தில் உள்ளது. பெரிய ஆவுடையார் - அடிப்பாகம் பத்மம் போன்ற அமைப்பில் உள்ளது.

கூவத்தில் உள்ள குருக்களே இக்கோயில் முறைக்கும் உரியவர், எனவே கூவம் சென்று வருபவர்கள் குருக்களையும் உடனழைத்து வருதல் வேண்டும். வேறு வழியில் வருவோர் அக்குருக்களுக்கு முன்பே தங்கள் வருகையைத் தெரிவித்து அவரைக் கோயிலுக்கு வருமாறு செய்தல் வேண்டும். ஒருவேளை பூஜை மட்டுமே நடைபெறுகின்றது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தின் கீழ் திருப்பணிகள் செய்யப்பட்டு விமானங்கள் பழுதுபார்க்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. சிறிய கோயிலாயினும் கற்றளி செம்மையாக வுள்ளது.

இத்தலத்துப் பதிகத்தில்தான் ஞானசம்பந்தர் ‘‘எனதுரை தனதுரையாக'' என்ற தொடரை, பாடல் தொறும் அமைத்துப் பாடி யுள்ளார்.

மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு
மாசிலாச்சீர் மறைக்காடு நெய்த்தானம்
நிலையினான் எனதுரை தனதுரையாக
நீறுஅணிந்து ஏறுஉகந்து ஏறியநிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
கானல் அம்பெடை புல்கிக் கணமயிலாலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில் கொள்வதியல்பே

(சம்பந்தர்)

-மாறுபடு
தீதும் இலம்பயங்கோட்டூர் என்று அடியார்புகழ்
ஓதும் இலம்பயங் கோட்டூர் நலமே.

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி :-

அ/மி. அரம்பேஸ்வரர் திருக்கோயில்
இலம்பயங்கோட்டூர் (எலுமியன்கோட்டூர்)
கப்பாங்கோட்டூர் அஞ்சல்
(வழி) எடையார்பாக்கம் - 631 553
ஸ்ரீ பெரும்புதூர் வட்டம் - காஞ்சிபுரம் மாவட்டம்.

14. திருவிற்கோலம்

கூவம்.

தொண்டை நாட்டுத் தலம்.

தற்போது 'கூவம்' என்றழைக்கப்படுகிறது. 1. சென்னையில் இருந்து நேரே செல்லப் பேருந்து வசதி உள்ளது. 2. சென்னையில் இருந்து பெங்களூர், வேலூர், காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் சுங்குவார் சத்திரம் வந்து, அங்கிருந்து பேரம்பாக்கம் வழியாகத் திருவள்ளூர் செல்லும் கிளைச் சாலையில் சென்று கூவம் கூட்ரோடில் இறங்கி 1 கி. மீ. (வலப்புறமாக) நடந்து ஊரையடையலாம். 3. காஞ்சியிலிருந்து சுங்குவார்சத்திரம் வழியாகத் திருவள்ளூர் செல்லும் பாதையிலும் சென்று கூவம் கூட்ரோடில் இறங்கிச் செல்லலாம், செல்லும் போது ஊருக்கு அண்மையில் இடப்புறமாக ஒரு கோயில் உள்ளது. இது தர்க்க மாதா என்னும் அம்மன் கோயிலாகும். திருவாலங்காட்டு நடராசப் பெருமானுடன் தர்க்கித்து நடனமாட, சிலம்பு முத்துக்கள் வீழ்ந்த இடம் இதுவென்றும்; இதனால் அம்பாளுக்குத் 'தர்க்க மாதா' என்று பெயர் வந்ததென்றும் சொல்லப்படுகிறது. சிவாலயம் ஊரினுள் உள்ளது.

இறைவன், மேருமலையை வில்லாகக் கையில் பிடித்த கோலம் = திரு + வில் + கோலம் - தலத்தின் பெயராயிற்று.

சுவாமி - திரிபுராந்தகேஸ்வரர், திருவிற்கோலநாதர்.

அம்பாள் - திரிபுராந்தகி, திரிபுரசுந்தரி.

தலமரம் - தனியாக ஏதுமில்லை. (இத்தலமே 'நைமிசாரண்ய க்ஷேத்திரம் எனப்படுகிறது.)

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் உள்ளது.

- சம்பந்தர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

இதற்கு 'அச்சிறுகேணி' என்றும், கூபாக்கினிதீர்த்தம் என்றும் பெயர்களுண்டு. இக்குளத்தில் தவளைகளே இல்லை. சுற்றிலும் வயல்வெளிகள் இருந்தும் இக்குளத்தில் தவளைகள் இல்லை. பிடித்து வந்து விட்டாலும் வெளியேறிவிடுமாம். இக் குளத்தில் மூழ்கி இறைவனை வழிபடுவோர்க்குப் புத்திரப்பேறு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. சித்திரைத் திங்களில் பத்து நாள்களுக்குப் பெரு விழா முறையாக நடைபெறுகின்றது.

கோயிலுக்கு ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் மட்டுமே உள்ளது - தெற்கு நோக்கியது முகப்பு வாயிலின் முன்புறத்தில் ஒரு பக்கம் விநாயகரும் மறுபக்கம் முருகனும் காட்சி தருகின்றனர். விசால மான உள்ளிடம், வெளிப்பிராகாரத்தில் சந்நிதிகள் ஏதுமில்லை. வலமாக வந்து உள் நுழைந்தால் நேரே நடராசர் சந்நிதி, உள் பிராகாரத்தில் வலம் வரும்போது விநாயகர் சந்நிதி உள்ளது. மூன்று திருமேனிகள் உள்ளன - இவர் பெயர் 'அச்சிறுத்த விநாயகர்' கோஷ்டமூர்த்தமாக விநாயகர் உள்ளார். அடுத்துள்ள தக்ஷிணாமூர்த்தி அழகாக உள்ளார். கருவறையின் பின்புறத்தில் இலிங்கோற்பவர், அடுத்து பிரம்மா, துர்க்கை முதலிய சந்நிதிகள் உள. சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளது. பிராகாரத்தில் முருகப்பெருமான் சந்நிதி உரிய இடத்தில் இல்லாமல் இடம் மாறி, இலிங்கோற்பவருக்கு நேரே உள்ளது. பக்கத்தில் பாலமுருகன் சந்நிதியும் அடுத்து மீனாட்சி சுந்தரேஸ்வரர் சந்நிதியும் உள்ளன. துர்க்கை சந்நிதிக்கு எதிரில் சந்தன மேடை உள்ளது, இதில் அரைத்த சந்தனம் சுவாமிக்குச் சார்த்தப்படுகிறது.

பைரவர் சந்நிதி, தனிக் கோயிலாக விளங்குகிறது. பைரவர் சந்நிதியில் நாய் இல்லை. இதற்காகச் சொல்லப்படுகின்ற செவிவழிச் செய்தியாவது; திரிபுரசம்ஹார காலத்தில் பைரவர் சென்று தேவர்கள் அனைவரையும் அழைத்து வந்ததாகவும் அப்போது அவர் வாகனமாகிய நாய் வழி தவறிவிட்டதென்றும் அதனால் இங்கு பைரவருக்கு நாய் வாகனமில்லையென்றும் ஒரு செய்தி செவிவழிச் செய்தியாகச் சொல்லப்படுகிறது. பைரவர் கோயில் விமானத்தில் 'நாய்' சிற்பங்கள் பல, சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. வலம் முடித்து உள்ளே செல்லும் போது எதிரில் நடராசர் காட்சி தருகின்றார். காளிக்கு இப்பெருமான் அருள்புரிந்ததால் இந்நடனம் 'ரக்ஷாநடனம்' எனப்படு கின்றது. காளிக்கு அருள் புரிந்த நிகழ்ச்சி இன்றும் பெருவிழாவில் பத்தாம் நாளில் நடைபெறுகின்றதாம். ஆண்டில், உரிய 6 நாள்களிலும் நடராசவுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. திருவாதிரையிலும், பெருவிழாவில் பத்தாம் நாளிலும் ஆக ஆண்டுக்கு இருமுறை நடராஜா

Koviloor Digital Library

உலா வருகின்றார். நடராசப் பெருமானை வணங்கி உள் நுழைந்தால் நேரே மூலவர் காட்சி தருகின்றார். பக்கத்தில் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

சோமாஸ்கந்தர், ஆறுமுகர், சந்திரசேகர், விநாயகர், பள்ளியறை மூர்த்தி, சுக்கிரவார அம்பாள், பிரதோஷ நாயகர், பிட்சாடனர், பூதகணம், மான், துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, நால்வர் முதலிய திருமேனிகள் தொழத்தக்க அரிய அழகுடையவை. பக்கத்தில் நால்வர், பிரதிஷ்டை உள்ளது. சூரியன் திருவுருவம் உள்ளது.

மூலவர் அற்புதமான மூர்த்தி, சுயம்பு - தீண்டாத் திருமேனி. மேலே செப்பு மண்டபம் - மத்தியில் உருத்திராக்க விமானம். சுற்றிலும் உள்ள பத்து ஊர்களுக்கு இம்மூர்த்தியே குல தெய்வம்.

வாயிலில் இரு துவாரபாலகர்கள், திரிபுராதிகள் மூவருள் இருவர் இவர்கள் என்று சொல்லப்படுகிறது.

மணல் இலிங்கம், இங்கு மூர்த்தியைப் பாலாலயம் செய்யும் வழக்கமில்லையாம். பதினாறு முழ வேஷ்டிதான் சுவாமிக்குச் சார்த்தப்படுகின்றது.

அதிக மழை, வெள்ளம் வரும் அறிகுறி இருந்தால் சுவாமி மீது வெண்மை படரும் என்றும், போர் நிகழ்வதாயின் செம்மை படரும் என்றும், சொல்லப்படுகின்றது. இதுபற்றியே ஞானசம்பந்தர் தம் பாடலில் 'ஐயன் நல் அதிசயன்' என்று குறிப்பிடுகின்றார். இவ்வண்ண மாற்றம் தற்போது காணப்படவில்லையாம். மூலவர் - திரிபுரம் எரித்த மூர்த்தி. அபிஷேகங்கள் செய்வதால் உண்டாகும் மேற்புறப் படிவுகள் தானாகவே பெயர்ந்து விழுந்து திருமேனி சுத்தமாகி விடுமாம். சுவாமி கிழக்கு நோக்கிய சந்நிதி. கஜப்பிரஷ்ட விமான அமைப்பு. கோயிலிலிருந்து 2 கி. மீ. தொலைவில் உள்ள 'திருமஞ்சனமேடை' என்று சொல்லப்படும் (கூவம் ஆற்றின் கரையில் உள்ள) இடத்திலிருந்துதான் தீர்த்தம் கொண்டு வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. இதற்கென ஒருவர் நியமிக்கப்பட்டு இவ்வாறு தினந்தோறும் நான்கு காலங்களுக்கும் அவ்வப்போது கொண்டு வரப்பட்டு அபிஷேகம் செய்யப்படுகிறது. இவ்வாறு கொண்டு வருவதில் தவறு நிகழ்ந்து - அதாவது கொண்டு வருபவர் அத்தீர்த்தத்திற்குப் பதில் - செல்ல வேண்டிய தொலைவுக்குப் பதிலாக வேறு தீர்த்தத்தைக் கொண்டு வந்து விட்டால், அதை அபிஷேகம் செய்துவிட்டால் சுவாமி மீது சிற்றெறும்புகள் படரும் என்றும் அதைக் கொண்டு அத்தவற்றைக்

Koviloor Digital Library

கண்டு கொள்ளலாம் என்றும் சொல்லப்படுகிறது. இப்பெருமானுக்கு உச்சிக்கால அபிஷேகம் நடைபெறுவது பற்றிய அரிய செய்தி வருமாறு :

கடம்பத்தூர் புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள 'பிஞ்சி வாக்கம்' கிராமத்திலிருந்து வேளாளர்கள் தர, ஆயர் ஒருவர் நாடொறும் சுவாமிக்கு உச்சிக்கால அபிஷேகத்திற்குப் பால் கொண்டு வருகின்றார். அவர் அப்பாலை, வரும் வழியில் கீழே வைக்காமல், பயபக்தியுடன் கொண்டு வருகின்றார். அவருக்கு அதற்காக அவ்வூரில் நிலம் மான்ய மாக தரப்பட்டுள்ளது. கோயிலிலும் நாடொறும் அவருக்கு சுவாமிக்குப் படைத்த பிரசாதம் (அன்னம்) தரப்படுகிறது. இந்தப் பால் அன்றாடம் வந்த பிறகே 'உச்சிக்கால அபிஷேகம்' கோயிலில் செய்யப்படுகிறது. தொன்றுதொட்டு இன்றுவரை ஒரு நாளும் தடங்கலின்றி இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

சுவாமிக்கு வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. இந்த அம்பாள் 'ஆதி தம்பதி' என்று விசேஷமாகச் சொல்லப்படுகின்றது. கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற நிலை. இம்மண்டபத்தில் பள்ளியறையும், நவக்கிரக சந்நிதியும் உள்ளன. பள்ளியறை அமுதுபடிக்கெனத் தனியே கட்டளைகள் உள்ளனவாம்.

சுவாமி, அம்பாளுக்கு முன்னால் தனித்தனியே செப்புக்கவச மிட்ட கொடிமரங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதிக்கு எதிரில் துவஜா ரோகண (நான்கு கால்) மண்டபம் உள்ளது.

ஆலயத்தில் நான்கு கால பூஜைகள் முறையாக நடைபெறு கின்றன.

இக்கோயிலில் சுவாமிக்குச் செய்யப்படும் அபிஷேக நடை முறைகள் அனைத்தும் மிகவும் ஆசாரமான முறையில் செய்யப் படுகிறது. அவ்வாறே செய்யவேண்டுமென்றும், அதில் தவறு நேரின் தண்டிக்கப்படுவர் என்னும் நம்பிக்கையும் உள்ளது.

இவ்வூருக்குக் 'கூபாக்னபுரி' என்றும் பெயர் சொல்லப்படுகிறது. கோயிலுக்கு எதிரில் உள்ள நிலங்களும் 'குமார வட்டம்' என்று முருகன் பெயரால் வழங்கப்படுகின்றன.

கோயிலுக்கு வெளியே - திரிபுர சம்ஹார காலத்தில் தேர் அச்சு முறிந்திட, உடனே பெருமானை விடையாக இருந்து தாங்கியதாகச் சொல்லப்படும் - கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் உள்ளது.

Koviloor Digital Library

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் இக்கோயிலின் சுவாமி அம்பாள் விமானங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. திருக்கூவப்புராணம் - தலபுராணம் உள்ளது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இத்தலபுராணத்தைப் பாடியுள்ளார்.

''உருவினார் உமையொடும் ஒன்றிநின்ற தோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவி வானவர் தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் திருவிற்கோலமே.''

''திரிதரு புரம் எரிசெய்த சேவகன்
வரிஅரவொடு மதிசடையில் வைத்தவன்
அரியொடு பிரமனதாற்றலால் உருத்
தெரியவன் உறைவிடம் திருவிற் கோலமே.''

''நீர்கொண்ட சடையொடு நம்பெருங்
காமத் தழலவிப்ப நிற்கின்றானைக்
கூர்கொண்ட கனல் மழுமான் ஆண்மையும்
பெண்மையுமாய கூற்றிற் கேற்பச்
சீர் கொண்ட வலனிடங்கொள் நாயகனைப்
புகலியிறைச் செந்தமிழ்ப்பூந்
தார் கொண்ட திருவிற்கோலப் பெருமான்தனை
இதயத் தவிசின் வைப்பாம்.''

(தலபுராணம் - கூவப்புராணம்)

-'தீதுடைய
பொற்கோல மாமெயிற்குப் போர்க் கோலங் கொண்டதிரு
விற்கோலம் மேவுபர மேட்டிமையே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. திரிபுராந்தகேஸ்வரர் திருக்கோயில்
கூவம் கிராமம்
கடம்பத்தூர் அஞ்சல் - திருவள்ளூர் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631 203.

Koviloor Digital Library

15. திருவாலங்காடு

தொண்டை நாட்டுத் தலம்.

சென்னையிலிருந்து திருவள்ளூர் வழியாக அரக்கோணம் செல்லும் பேருந்துப் பாதையில் இத்தலம் உள்ளது. சென்னையிலிருந்து திருவள்ளூர் அரக்கோணம் வழியாகச் சோளிங்கர் செல்லும் பேருந்தும் இவ்வூர் வழியாகச் செல்கிறது.

காஞ்சியிலிருந்தும், அரக்கோணத்திலிருந்தும், திருவள்ளூரிலிருந்தும் இவ்வூர்க்குப் பேருந்துகள் உள்ளன.

ஆலங்காடு. இத்தலம் 'வடாரண்யம்' எனப் பெயர் பெற்றது. காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து நடராசப் பெருமானின் திருவடிக் கீழிருந்து சிவானந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தலம். இறைவன் காளியுடன் நடனமாடிய தலம். இத்திருக்கோயில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுடன் இணைந்தது, நடராசப்பெருமானின் ஊர்த்துவ தாண்டவத் தலமாகவும், பஞ்ச சபைகளுள் இரத்தினசபையாகவும் சிறப்புற்றிலங்குவது இத்திருக்கோயில். கார்க்கோடகன், சுநந்த முனிவர் முதலியோர் வழிபட்ட தலம். சிறிய ஊர். பேருந்து நிறுத்தத்தில் இறங்கிச் செல்லும்போது கோயிலுக்குரிய அழகிய சிற்ப வேலைப்பாடு

Koviloor Digital Library

அமைந்த பழமையான தேரைக் காணலாம். இத்திருக்கோயில் திருப்பணி நிறைவாகி 1983ல் குடமுழுக்கு செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

இறைவன் - வடாரண்யேசுவரர், தேவர்சிங்கப் பெருமான், ஆலங்காட்டு அப்பர்

இறைவி - பிரம்மராளகாம்பாள், வண்டார்குழலி

தலமரம் - பலா, ஆலமரம் என்றும் சொல்லப்படுகிறது.

தீர்த்தம் - 'சென்றாடு தீர்த்தம்' (''செங்கச்ச உன்மத்ய மோக்ஷ புஷ்கரணி'') முக்தி தீர்த்தம். மிகப் பெரிய குளம். கரையில் நடனமாடித் தோற்ற காளியின் உருவம் உள்ளது.

மூவர் பாடல் பெற்ற தலம்.

கோயிலின் முன்னால் பதினாறுகால் மண்டபம் உள்ளது. முகப்பு வாயிலில் வரசித்தி விநாயகரும், ஊர்த்துவ தாண்டவமும், ரிஷபாருடரும், முருகனும், காளியும் உள்ள சுதை சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. உள் நுழைந்தால் நான்குகால் மண்டபம் உள்ளது. உள்கோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்தவுடன் வலப்பால் சித்த வைத்திய சாலை நடைபெறும் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இம் மருத்துவச்சாலை தேவஸ்தானச் சார்பில் நடைபெறுகிறது. திங்கள், வியாழன் காலை வேளைகளில் மக்கள் வந்து மருத்துவம் பெற்றுச் செல்கின்றனர். இம் மண்டபத்தில் தான் நடராசர் அபிஷேகம் நடைபெறுகிறது.

கோபுர வாயிலில் வல்லபை விநாயகர் துதிக்கையுள்ளிட்ட பதினோரு கரங்களுடன் காட்சி தருகின்றார். மறுபுறம் வள்ளி தெய்வயானையுடனாகிய ஆறுமுகர் சந்நிதி.

வெளிப் பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. சந்தன மரங்கள் உள்ளன. கோபுரவாயில் நுழைந்ததும் செப்புக் கவசமிட்ட கொடிமரம் உள்ளது. வலப்பால் துவஜாரோகண (கொடியேற்ற) மண்டபம், இடப்பால் சுக்கிரவார மண்டபம்.

அடுத்துள்ள உள் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுரத்தில் ஊர்த்துவ தாண்டவம், பிரம்மா, நந்தி மத்தளம் வாசித்தல், காரைக்காலம்மையார் பாடுதல், ரிஷபாருடர், கஜசம்ஹாரமூர்த்தி, காரைக்காலம்மையார் வரலாறு முதலியவை சுதையில் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

வலப்பால் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. உள்ளே நுழைந்தால் எதிரில் மதிற்சுவர்மீது பஞ்ச சபைகள் உரிய நடராச தாண்டவத்துடன் வண்ணத்தில் சுதை சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தில் உள் பக்கத்தில் தசாவதாரச் சிற்பங்கள், கண்ணப்பர் கண்ணை அப்புவது, அரிவாட்டாய நாயனார் மனைவியுடன் செல்வது, முதலிய சிற்பங்கள் உள.

பிராகாரத்தில் வலமாக வரும்போது ஆருத்ரா அபிஷேக மண்டபம் - இரத்தினசபை வாயில் உள்ளது. சபைக்கு எதிரில் நிலைக்கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. வலமாக வரும்போது ஆலங்காடு என்னும் பெயருக்கு ஏற்ப மூலையில் பெரிய ஆலமரம் உள்ளது.

அடுத்து அம்பாள் சந்நிதி உள்ளது - தெற்கு நோக்கியது, நின்ற திருக்கோலம். இக்கருவறையில் கோஷ்ட மூர்த்தங்கள் இல்லை. சிற்பக் கலையழகு வாய்ந்த கல்தூண்கள் காண அழகுடையவை. உற்சவத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் :- பிட்சாடனர், விநாயகர், காரைக்காலம்மையார் (தாளமிட்டுப் பாடும் அமைப்பில்,) சுநந்த முனிவர், கார்க்கோடகன், நால்வர் முதலியவை சிறப்பானவை.

இரத்தின சபை அழகு வாய்ந்தது. நடராசப் பெருமானின் ஊர்த்துவ தாண்டவச் சிறப்பு தரிசிக்கத் தக்கது. அண்டமுற நிமிர்ந்தாடும் பெருமான் ‘ரத்ன சபாபதி’ என்று அழைக்கப்படுகிறார். சிவகாமி, காரைக்காலம்மையார் திருமேனிகள் உள்ளன. பக்கத்தில் பெரிய ஸ்படிகலிங்கமும், சிறிய மரகதலிங்கமும் (சபையில்) உள்ளன. இவற்றிற்கு நான்கு கால அபிஷேகமுண்டு. திருமுறைப்பேழை உள்ளது. இரத்தினச் சபையை வலம் வரலாம். வலம் வரும்போது சாளரத்தில் சண்டேசுவரரின் உருவம் உள்ளது. சுந்தரர் பதிகம் கல்வெட்டில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துக் கட்டளையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இரத்தினச் சபையின் விமானம் செப்புத் தகடு வேயப்பட்டு ஐந்து கலசங்களுடன் விளங்குகிறது.

மூலவரைத் தரிசிக்க உள் பிராகாரத்தில் செல்லும்போது சூரியன், அதிகார நந்தி, விஜயராகவப் பெருமாள் தேவியருடன், சண்முகர், அகோர வீரபத்திரர், சப்த கன்னியர், நால்வர், காரைக்காலம்மையார், கார்க்கோடகன், முஞ்சிகேசமுனிவர், பதஞ்சலி, அநந்தர், சண்டேச அநுக்ரஹர், எண்வகை விநாயகர் உருவங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன.

கருவறை நல்ல கற்கட்டமைப்புடையது. கோஷ்ட மூர்த்தமாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை

Koviloor Digital Library

ஆகியோர் உளர். துர்க்கைக்குப் பக்கத்தில் துர்க்கா பரமேஸ்வரர் உருவம் ஒன்று கோஷ்ட மூர்த்தமாகவுள்ளது. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது - பஞ்சபூதத்தலலிங்கங்கள் உள்ளன. சஹஸ்ரலிங்கம் தரிசிக்கத் தக்கது. சுப்பிரமணியர், கஜலட்சுமி, பாபஹரீஸ்வர லிங்கம் முதலிய சந்நிதிகளும் உள. உபதேச தக்ஷிணாமூர்த்தி உருவம் மிக்க அழகுடையது. பைரவர் வாகனமின்றிக் காட்சி தருகின்றார். ஆலயத்துள் அறுபத்து மூவர் சந்நிதிகள் இல்லை.

மூலவர் சந்நிதி வாயிலில் விநாயகரும் முருகனும் உள்ளனர். நேரே மூலவர் காட்சி தருகிறார். வலப்பால் ஆனந்தத் தாண்டவ நடராஜர் திருமேனி - சப்பரத்திலுள்ளது. தெற்கு நோக்கியது. எதிரில் வாயி லுள்ளது. நடராசாவுக்குப் பக்கத்தில் மூலையில் சுரங்கப்பாதை உள்ளது. மூடியுள்ள கல்லைத்தூக்க இருவளையங்களையும் மேலே வைத்துள்ளார்கள். சுரங்கம் எங்குச் செல்கிறதோ? தெரியவில்லை. துவார பாலகர்களைத் தாண்டிச் சென்றால் மூலவர் தரிசனம். சுயம்பு மூர்த்தி.

மூலவருக்கு மேல் உருத்திராக்க விதானம் - திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துப்பணி - உள்ளது.

மூலவரின் பக்கத்தில் போகசக்தி அம்மன் உற்சவத் திருமேனி உள்ளது. சிவலிங்கத் திருமேனியின் மீது கோடுகள் அமைந்துள்ளன. பங்குனி உத்திரத்தில் பெருவிழா நடைபெறுகிறது. ஊருக்குப்பக்கத்தில் காளிகோயில் உள்ளது. இத்தலத்திற்குத் தொடர்புடைய 'பழையனூர்' கிராமம், பக்கத்தில் 2 கி. மீ. தொலைவில் உள்ளது. இறைவன், இறைவி சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள இறைவன் - அம்மையப்பர்; இறைவி - ஆனந்தவல்லி. மேற்கு நோக்கிய சந்நிதி.

பழையனூருக்குச் செல்லும் வழியில், திருவாலங்காட்டிலிருந்து ஒரு கி. மீ.ல் பழையனூர் வேளாளர்கள் எழுபதுபேர் தீப்பாய்ந்து செட்டிப்பிள்ளைக்குத்தந்த வாக்குறுதியைக் காத்த 'தீப்பாய்ந்த மண்டபம்' உள்ளது, திருவாலங்காட்டுப் பேருந்து நிலையத்திலிருந்து பார்த்தாலே மண்டபம் தெரிகின்றது. இங்குள்ள தொட்டியின் உட்புறத்தில் இவர்களுடைய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யாகம் வளர்த்து இறங்குவது போன்ற சிற்பம் உள்ளது. இதன் எதிரில் கிழக்கு நோக்கிய சந்நிதியாகச் 'சாட்சி பூதேஸ்வரர்' காட்சியளிக்கின்றார். எதிரில் தீப்பாய்ந்த இடம் உள்ளது.

தீப்பாய்ந்த வேளாளர்களின் மரபில் பழையனூரில் தற்போதுள்ள வர்கள் நாடொறும் திருவாலங்காடு வந்து இறைவனைத் தரிசித்துச்

Koviloor Digital Library

செல்லும் மரபை நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்றார்கள். சதாகாலமும் சேவைக்கு வந்து செல்லும் இவர்கள், இம்மரபைப் பிற்காலத்தோரும் அறியும் வகையில் ''கூழாண்டார் கோத்திரம் சதாசேர்வை'' என்று கல்லில் பொறித்து, அக்கல்லை, கோயிலின் முன் வாயிலில், உயர்ந்த படியைத் தாண்டியவுடன் முதற்படியாக வைத்துள்ளனர்.

இம்மரபினரின் கோத்திரமே 'கூழாண்டார்கோத்திரம்'. அதாவது தாங்கள் கூழ் உணவை உண்டு, விளைந்த நெல்லை இறைவனுக்குச் சமர்ப்பித்தவர்கள் என்பது பொருளாம். சிவப்பற்றினை உணர்த்தும் இச் செய்தி நெஞ்சை நெகிழவைக்கின்றது.

கல்வெட்டில் நடராசப்பெருமானின் பெயர் 'அரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனார்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

''கேடும்பிறவியும் ஆக்கினாரும் கேடிலா
வீடுமாநெறி விளம்பினார்எம் விகிர்தனார்
காடுஞ்சுடலையும் கைக்கொண்டு அல்லில்கணப்பேயோ(டு)
ஆடும் பழையனூர் ஆலங்காட்டுஎம் அடிகளே.''

(சம்பந்தர்)

''ஒன்றா உலகனைத்தும் ஆனார்தாமே
    ஊழிதோறூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கு(ம்) நிமிர்ந்தார் தாமே
    நீர் வளிதீ ஆகாசம் ஆனார்தாமே
கொன்றாடுங் கூற்றை உதைத்தார் தாமே
    கோலப் பழனையுடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே
    திருஆலங்காடுறையும் செல்வர் தாமே.''

(அப்பர்)

''முத்தாமுத்திதரவல்ல முகிழ்மென்முலையாள் உமைபங்கா
சித்தாசித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர்சிங்கமே
பத்தாபத்தர் பலர்போற்றும்பரமா பழையனூர்மேய
அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.''

(சுந்தரர்)

–''சொற்போரில்
ஓலங்காட்டும் பழையனூர் நீலிவாதடக்கும்
ஆலங்காட்டிற் சூழ்அருள்மயமே.''

(அருட்பா)

Koviloor Digital Library

திருப்புகழ்

வடிவது நீலங்காட்டி முடிவுளகாலன்கூட்டி
வரவிடு தூதன் கோட்டி -விடுபாசம்
மகனொடுமா மன்பாட்டிமு தலுறவோருங்கேட்டு
மதிகெட மாயந்தீட்டி -யுயிர்போமுன்
படிமிசை தாளுங்காட்டியுடலுறு நோய் பண்டேற்ற
பழவினை பாவம் தீர்த்து -னடியேனைப்
பரிவொடு நாளுங்காத்து விரிதமிழாலங்கூர்த்த
பரபுகழ் பாடென்றாட்கொ -டருள்வாயே
முடிமிசைசோமன் சூட்டி வடிவுள ஆலங்காட்டில்
முதிர் நடமாடுங் கூத்தர் -புதல்வோனே
முருகவிழ்தாருஞ் சூட்டி யொருதனி வேழங்காட்டி
முதல் மறமானின் சேர்க்கை -மயல்கூர்வாய்
இடியென வேகங்காட்டி நெடிதரு சூலந்தீட்டி
யெதிர் பொருசூரன் தாக்க -வரஏகி
இலகிய வேல் கொண்டார்த்து உடலிருகூறன்றாக்கி
யிமையவரேதந் தீர்த்த -பெருமாளே.

அஞ்சல் முகவரி :-

அ/மி. வடாரண்யேஸ்வரர் திருக்கோயில்
திருவாலங்காடு & அஞ்சல் - 631 210.
(வழி) அரக்கோணம் திருத்தணி வட்டம் - திருவள்ளூர் மாவட்டம்

16. திருப்பாசூர்

திருப்பாச்சூர்.

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் ‘திருப்பாச்சூர்’ என்று வழங்குகிறது.

1. சென்னை - திருத்தணி பேருந்துச் சாலையில், கடம்பத்தூர் சாலை பிரியுமிடத்தில் முதலில் திருப்பாசூர் உள்ளது. சாலையிலிருந்து பார்த்தாலே கோயில் தெரிகின்றது.

2. சென்னையிலிருந்து திருவாலங்காடு வழியாக அரக்கோணம் செல்லும் பேருந்துச் சாலையில் திருப்பாசூர் உள்ளது.

Koviloor Digital Library

3. காஞ்சிபுரத்திலிருந்து கடம்பத்தூர் வழியாகத் திருவள்ளூர் செல்லும் பேருந்துப் பாதையில், கடம்பத்தூரை அடுத்துத் திருப்பாசூர் உள்ளது.

4. திருவள்ளூர் - பேரம்பாக்கம் டவுன்பஸ் திருப்பாசூர் வழியாகச் செல்கிறது.

பரசு - மூங்கில், மூங்கிற்காட்டிலிருந்து வேடுவர்களால் வெளிப் படுத்தப்பட்ட இறைவன் வீற்றிருந்தருளுகின்ற தலம். பசுவொன்று மூங்கிற்புற்றில் பால் சொரிய, அதைக் கண்ட வேடர்கள் வெட்டிப் பார்க்க, சிவலிங்கம் வெளிப்படலாயிற்று, வேடர்கள் வெட்டிப் பார்த்தமையால் சிவலிங்கம் மேற்புறத்திலும் பக்கவாட்டுகளிலும் வெட்டுப்பட்டுள்ளது.

வேடர்களால் செய்தியறிந்த கரிகாலன், இக் கோயிலைக் கட்டிய தாகச் சொல்லப்படுகிறது. மற்றொரு வரலாறு: இக் கோயிலைக்கட்ட எண்ணிய கரிகாலன் காளி உபாசனை பெற்ற, இப்பகுதியை ஆண்டு வந்த குறுநில மன்னன் ஒருவனுடன் ஒருமுறை போர் செய்ய நேரிட்டது. அவ்வாறு போரிடுங்கால் அம்மன்னனுக்குத் துணையாகக் காளி வந்து போரிட்டதால் கரிகாலனால் வெற்றி பெற முடியவில்லை, மனம் சோர்ந்த கரிகாலன் இப்பெருமானிடம் விண்ணப்பித்தான். பெருமான் நந்தியைத் துணையாக அனுப்ப, மீண்டும் கரிகாலன் சென்று போரிட்டான். போரின்போது காளி தோன்ற, நந்தியெம்பெருமான் அவளை உற்றுநோக்க அவளும் வலியடங்கி நின்றாள். நந்தி அக்காளிக்கு விலங்கு பூட்டி இங்கு அடைத்தார்; வெற்றி பெற்ற மன்னன் உள்ளம் மகிழ்ந்து இத் திருக்கோயிலைக் கட்டினான் என்பர். இது தொடர்பாகத் தற்போது கோயிலில் வெளிப்பிராகாரத்தில் சிதைந்திருக்கும் நூற்றுக்கால் மண்டபத்தின் முன் ‘விலங்கு இட்ட காளி’யின் சிற்பம் உள்ளது.

அம்பாள் வழிபட்டதலம். சந்திரன்; திருமால் ஆகியோரும் வழி பட்டுப் பேறு பெற்றுள்ளனர். திருமால், இங்குள்ள சோமதீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டு வினை நீங்கப்பெற்றதாக வரலாறு சொல்லப்படுகிறது. கோயிலுள் இதை உணர்த்தும் வகையில் ‘வினைதீர்த்த ஈஸ்வரர்’ திருமேனி உள்ளது. திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுடன் இணைந்த திருக்கோயில் இஃது.

இறைவன் - வாசீஸ்வரர், பசுபதீஸ்வரர், உடையவர், பாசூர்நாதர்.

இறைவி - பசுபதிநாயகி, மோகனாம்பாள், பணைமுலை
நாச்சியார், தம்காதலி (தங்காதலி).

Koviloor Digital Library

தலமரம் - மூங்கில்.

தீர்த்தம் - 1. சோமதீர்த்தம் (கோயிலின் பக்கத்தில் குட்டையாக உள்ளது.)

- 2. மங்களதீர்த்தம் (ஊருக்கு வெளியில் பெரிய குளமாக உள்ளது. நீரின்றிப் பயன்படுத்தப்படாது உள்ளது.)

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

மூன்று நிலைகளுடன் கூடிய இராசகோபுரம் தெற்கு நோக்கி யுள்ளது. சுவாமி, அம்பாள் கோயில்கள் தனித்தனி விமானங்களுடன் தனித்தனிக் கோயிலாகச் சுற்று மதில்களுடன் விளங்குகின்றன. வெளிமதில் இவற்றை உள்ளடக்கியுள்ளது. சந்நிதிகள் கிழக்கு நோக்கியவை. வெளிப்பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. சந்நிதிகளுக்கு கிழக்கு நோக்கிய வாயில்கள் இருப்பினும், தெற்கு வாயிலே பயன் படுத்தப்படுகின்றது.

உள்ளே செல்லும்போது அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம். வாயிலில் துவாரபாலகியர் உள்ளனர். சுற்றிவரப் பிராகார வசதி உள்ளது. கோஷ்ட மூர்த்தங்கள் எவையுமில்லை. அம்பாள் நான்கு திருக்கரங்களுடன் (அபய, வரத, பாசாங்குசம்) அழகான திருமேனியுடன் காட்சியளிக்கின்றாள், இறைவனே அம்பாளின் அழகில் மயங்கி, 'தம்காதலி' என்றழைத்ததாகவும் அப்பெயரே அம்பாளுக்கு இன்று 'தங்காதலி' என்று வழங்குவதாகவும் சொல்லப் படுகிறது. தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன.

அடுத்துள்ள வாயிலைத் தாண்டினால் 'செல்வமுருகன்' தரிசனம். எதிரில் நவக்கிரக சந்நிதி, பக்கத்தில் உற்சவ முருகனின் சந்நிதி, அடுத்து சோமாஸ்கந்தர் சந்நிதி. இதையடுத்து 'விநாயகர் சபை' உள்ளது. இச்சபையில் பல்வேறு அமைப்பிலும் அளவிலும் சிறியதும் பெரியதுமாகப் பதினோறு விநாயகர்கள் காட்சி தருகின்றனர். வலம்புரி விநாயகர் பிரதானமாக உள்ளார். ஒரு பக்கத்தில் 'வினை தீர்த்த ஈஸ்வரர்' உருவமும் இவரை வழிபட்ட திருமாலின் உருவமும் (ஆதிசேஷனுடன் கூடி) உள்ளன, அடுத்த வாயிலைக் கடந்தால் அழகான நடராச சபையை எதிரில் தரிசிக்கலாம். சபையில் பெருமானுடன் சிவகாமியும் மாணிக்கவாசகரும் உள்ளனர்.

சந்திரசேகர், சுக்கிரவார அம்மன், விநாயகர், சண்முகர், வள்ளி தெய்வயானை, நால்வர், பாசூர் அம்மன் (கிராமதேவதை) சோமாஸ் கந்தர் முதலிய உற்சவத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

மூலவர் சந்நிதி, வலமாக வரும்போது சப்த கன்னியர் உருவங்கள் உள்ளன. நால்வர் பிரதிஷ்டையில் அப்பர், சுந்தரருக்கு அடுத்து ஞானசம்பந்தர் உள்ளார். பக்கத்தில் உள்ள கல்வெட்டுச் செய்தி விளங்கவில்லை. பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. கருவறை முழுவதும் கல்லால் ஆனது, மேற்புற விமானம் மட்டும் கஜப்பிரஷ்டமாக அமைந்துள்ளது - கீழ்ப்புறம் இவ்வமைப்பில் இல்லை. கருவறையின் வெளிப்புறத்தில் ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோயிலில் 54 கல்வெட்டுக்கள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற் பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேஸ்வரர் உள்ளார். வீரபத்திரர், பைரவர், சந்நிதிகள் உள.

துவாரபாலகரைக் கடந்து உள் சென்று மூலவரைத் தரிசிக்கிறோம். மூலமூர்த்தி - சுயம்பு - தீண்டாத் திருமேனி. சதுரபீட ஆவுடையார்.

இலிங்கம், மேற்புறத்திலும், பக்கவாட்டில் இரு புறங்களிலும் வெட்டுப்பட்டுள்ளது. மேற்புறமும் - மூங்கிற் புதரிலிருந்து வெளிப் பட்டதால் - சொர சொரப்புடன், தழும்புகளுடன் திகழ்கின்றது.

சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு மட்டும் செய்யப்படுவதில்லை. 18-6-1990ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

'சிந்தையிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்துமாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வாரூர் போலும்
பைந்தண் மாதவி சோலைசூழ்ந்த பாசூரே'.

'கண்ணின்அயலே கண்ஒன்று உடையார் கழல்உன்னி
எண்ணுந்தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்
உண்ணின்று உருக உவகை தருவாரூர் போலும்
பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூரே'.

(சம்பந்தர்)

'முந்தி மூவெயில் எய்த முதல்வனார்
சிந்திப்பார் வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக்கோன் தனக்கே அருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூர் அடிகளே'.

'புத்தியினாற் சிலந்தி யுந்தன் வாயினூலாற்
பொதுப் பந்தரது இழைத்துச் சருகான்மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலான்மிக்க

Koviloor Digital Library

வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டு அதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக்கு இன்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தவாறே.'

(அப்பர்)

-'ஞாலஞ்சேர்
மாசூரகற்று மதியுடையோர் சூழ்ந்த திருப்
பாசூரில் உண்மைப் பரத்துவமே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வாசீஸ்வரர் திருக்கோயில்

திருப்பாச்சூர் கிராமம் - கடம்பத்தூர் - அஞ்சல் - *631 203*
(வழி) திருவள்ளூர் -திருவள்ளூர் மாவட்டம்.

17. திருவெண்பாக்கம்

பூண்டி (நீர்த்தேக்கம்)

தொண்டை நாட்டுத் தலம்.

திருவள்ளூரிலிருந்து செல்லப் பேருந்து வசதியுள்ளது. பூண்டி நீர்த்தேக்கம் - அணைப்பகுதி - மக்கள் சுற்றுலா இடமாகவும் திகழ்கின்றது. பழைய கோயில் திருவிளம்பூதூரில் இருந்தது. இவ்வூர் குசஸ்தலையாற்றின் கரையில் இருந்தது. திருவிளம்பூதூருக்குப் பத்ரிகாரண்யம் என்றும் பெயர். (இலந்தை மரக்காட்டுப் பகுதி) சுந்தரருக்கு ஊன்றுகோலை இறைவன் அளித்தருளிய தலம். *11* ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கோயில் பல கல்வெட்டுக்களையும் கொண்டிருந்தது.

சென்னையின் குடிநீர்த்தேவைய்யைப் போக்க, குசஸ்தலை யாற்றில் அணையைக்கட்ட 1942ல் அரசு முயற்சிகளை மேற் கொண்டது. அதற்காக அணைகட்ட நிலப்பகுதிகளை எடுத்துக் கொண்டபோது அப்பகுதியில் திருவிளம்பூதூரும் அடங்கிற்று. வெண்பாக்கம் தற்போது பூண்டி நீர்த்தேக்கமாகவுள்ளது.

Koviloor Digital Library

ஆகவே, அப்போதைய அறநிலையத்துறை அமைச்சராக இருந்த திரு. M. பக்தவத்சலம் அவர்கள், அப்போதைய அறநிலையத்துறை ஆணையராக இருந்த திரு. உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் ஆகியோரின் பெருமுயற்சியால் திருவிளம்பூதூர் கோயில் அங்கிருந்து எடுக்கப்பட்டு, தற்போதுள்ள இடத்தில் - பூண்டியில் புதிய கோயிலாகக் கட்டப்பட்டு 5-7-1968 அன்று கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. இச்செய்தி பற்றிய குறிப்பு கல்லிற்பொறித்து அம்பாள் சந்நிதி வாயிலில் பதிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் பாடிய பதிகம் உள்ளது. திருமுல்லை வாயில்பணிந்து, பின்பு, இங்கு வந்த சுந்தரர், அடியார்சூழ ஆலயம் சென்று 'கோயில் உளாயோ' என்று விண்ணப்பிக்க, இறைவன் ஊன்றுகோலை அருளிச்செய்து 'யாம் உளோம் போகீர்' என்றார். அதுகேட்ட சுந்தரர் 'பிழையுளன பொறுத்திடுவர்' என்னும் பதிகம் பாடிப் போற்றினார். பின்னர் இங்கிருந்து பழையனூர் சென்றார்.

இறைவன் - ஆதாரதண்டேஸ்வரர், ஊன்றீஸ்வரர்.

இறைவி - தடித் கௌளரி அம்பாள், மின்னொளியம்மை.

சுந்தரர் பாடல் பெற்றது.

கோயில், சாலையோரத்தில் உள்ளது. ராஜகோபுரமில்லை, முகப்பு வாயில் உள்ளது, உள்ளே நுழைந்ததும் நேரே அம்பாள் சந்நிதி உள்ளது - தெற்கு நோக்கியது. வெளிப்பிராகாரம் புல்தரை. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. கொடிமரமில்லை. நந்தி பலிபீடங்கள் உயரத்தில் உள்ளன. வாயிலுள் நுழைந்ததும் கல்மண்டபம் - அழகான கட்டமைப்புடையது. இடப்பால் சூரியன், சந்நிதியும் நவக்கிரக சந்நிதியும் உள்ளன. வலப்பால் நால்வர், பைரவர், அருணகிரிநாதர் சந்நிதிகள். பக்கத்தில் அம்பலக் கூத்தருடன் சிவகாமியும் மாணிக்க வாசகரும் உள்ளனர். பக்கத்தில் பிரதோஷ நாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சோமாஸ்கந்தர் முதலிய உற்சவத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி - மின்னொளியம்மை கோயில் தெற்கு நோக்கிய சந்நிதியாக உள்ளது. நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். கண்பார்வையை இழந்த சுந்தரர், வெண்பாக்கத்தை நோக்கி வரும்போது அம்பாள் மின்னலைப் போன்ற ஒளி அளித்து வழிகாட்டி மறைந்தனளாம். நேரே மூலவர் தரிசனம். வாயிலின் இருபுறத்திலும் துவாரகணபதியும் சுப்பிரமணியரும் காட்சி தருகின்றனர். மூலவர் சிவலிங்கத் திருமேனி ஆவுடையார் தாழ உள்ளது. எதிரில் நந்தி, வலக் கொம்பொடிந்துள்ளது. கண் வேண்டிய

Koviloor Digital Library

சுந்தரருக்கு இறைவன், கண்ணைத்தராமல் ஊன்றுகோலை அளித்த போது, சுந்தரர் கோபங்கொண்டு அக்கோலை வீசியெறிய அக்கோல் பட்டு நந்தியின் கொம்பொடிந்து போனதாகச் செவிவழிச் செய்தி சொல்லப்படுகிறது. நந்தியின் பக்கத்தில் கண்ணிழந்த நிலையில் இறைவனை நோக்கியவாறு சுந்தரர் திருமேனி நின்ற நிலையில் உள்ளது.

மூலவரின் பின்னால் சுவாமி அம்பாள் பஞ்சலோகத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. உள் பிராகாரத்தில் விநாயகர், வள்ளிதெய்வ யானை சுப்பிரமணியர், மகாலட்சுமி சந்நிதிகள் தனித்தனிக் கோயில் களாக உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

திருவிளம்பூதூர் கோயிலில் இருந்த கல்வெட்டுக்கள் படியெடுக் கப்பட்டு இக்கோயிலில் பதிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் முதலாம் இராசராசன் காலத்தியவை. கல்வெட்டில் இறைவன் பெயர் ''ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஈக்காட்டுக் கோட்டத்துப் பெருமூர் நாட்டு உடையார், திருவுளோம் போகி உடைய நாயனார்', என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கல் வெட்டுக்களில் : (1) சந்தி விளக்கு வைத்த நிபந்தம் (2) பூஜைக்கு நிலம் வைத்த நிபந்தம் (3) சுவாமி அமுதுக்கு நிலம் விடப்பட்ட நிபந்தம் முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

சிவராத்திரி, கார்த்திகைச் சோமவாரங்கள் (திங்கட்கிழமைகள்) ஆருத்ரா முதலிய விசேஷ கால வழிபாடுகள் சிறப்பாக நடைபெறு கின்றன. இக்கோயில் திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் தேவஸ்தானத்துடன் இணைந்தது.

கோயிலுள் வெளிப்பிராகாரப் பகுதியிலேயே பூஜை செய்யும் சிவாசாரியார் வீடு உள்ளது.

இப்புதிய கோயிலின் நலனில் பெருமுயற்சி கொண்டு திருப் பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வித்துச் செம்மைப்படுத்தியவர் சென்னை மினர்வா டுடோரியல் கல்லூரி நிறுவனராக இருந்த திரு. A.N. பரசுராமன் அவர்கள் ஆவார். அவர் ஆர்வமும் அயரா உழைப்பும் இக்கோயிலின் வளர்ச்சியில் பெரும் பங்காகும். பூண்டி அரங்கநாத முதலியார் என்ற பெருமகனார் வாழ்ந்தது இப்பதியே.

Koviloor Digital Library

''பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயில் உளாயோயென்ன
உழையுடையானுள்ளிருந்து உளோம் போகீ ரென்றானே''.

''செய்வினை யொன்றறியாதேன் திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தாயோ என்னப் பரிந்து என்னை
உய்யஅருள் செய்யவல்லானும் உளோம் போகீர் என்றானே''.

''மான்திகழும் சங்கிலியைத் தந்துவரு பயன்கள் எல்லாம்
தோன்ற அருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தாயோ என்ன
ஊன்றுவதோர் கோல் அருளி உளோம் போகீர் என்றானே''

(சுந்தரர்)

–'தேசூரன்
கண்பார்க்க வேண்டுமெனக் கண்டு ஊன்றுகோல் கொடுத்த
வெண் பாக்கத்து அன்பர் பெறும் வீறாப்பே''.

(அருட்பா)

''வாழி திருவூன்றீசன் வாழியுமை மின்னொளியாள்
வாழி திருநாவலூர் வன்றொண்டர் – வாழி திரு
வூன்றீச னாலயமும் போற்றும் பணி செய்தோர்
தோன்றுகவே பத்திநெறி யெங்கும்''.

(தனிப்பாடல்)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஊன்றீஸ்வரர் திருக்கோயில்

பூண்டி (நீர்த்தேக்கம்) - அஞ்சல் – 602 023
(வழி) திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்.

Koviloor Digital Library

18. திருக்கள்ளில்

திருக்கள்ளம், திருக்கண்டலம்.

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் திருக்கள்ளம், திருக்கண்டலம் என வழங்கப் படுகிறது.

1) சென்னை - பெரியபாளையம் பேருந்துச் சாலையில், கன்னிகைப்பேர் என்று வழங்கும் கன்னிப்புத்தூரையடைந்து, அங்கிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூரை அடையலாம்.

2) திருவள்ளூர் - செங்குன்றம் (REDHILLS), பெரியபாளையம் பேருந்துச் சாலையில் தாமரைப்பாக்கம் கூட்ரோடினை அடைந்து அங்கிருந்து பெரியபாளையம் செல்லும் சாலையில் திரும்பிச் சென்று, 'வெங்கல்' கிராமத்தை அடைந்து, சாலையில் 'கன்னிகைப்பேர்' என்று வழிகாட்டிக்கல் காட்டும் பாதையில் (வலப்புறமாக) திரும்பி 10 கி.மீ. சென்றால் திருக்கண்டலம் (திருக்கள்ளில்) தலத்தை அடையலாம்.

3) சென்னை, பிராட்வே பேருந்து நிலையத்திலிருந்து வெங்கலுக்குப் போகும் பேருந்து திருக்கண்டலம் வழியாகச் செல்கிறது. அடிக்கடி பேருந்து வசதியில்லை. தனி வாகனத்தில் சென்று வருவதே எளிது. கோயில் வரை வாகனத்தில் செல்லலாம்.

(இத்தலம் வெங்கல் கிராமத்திற்கும் கன்னிகைப்பேருக்கும் (கன்னிகைப்புத்தூருக்கும்) இடையில், கன்னிகைப்பேருக்கு அண்மையில் உள்ளது.)

பிருகு முனிவர் வழிபட்ட தலம் என்பர். சுவாமி விமானம் தூங்கானை மாட அமைப்புடையது.

இறைவன் - சிவானந்தேஸ்வரர்

இறைவி - ஆனந்தவல்லி

தீர்த்தம் - நந்தி தீர்த்தம். கோயிலுக்கு எதிரில் தீர்த்தக் குளம் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் இத்திருக்கோயில் திருப்பணிகள் செய்யப்பட்டு, 22.1.1999ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

Koviloor Digital Library

சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியது. மூலத் திருமேனி சிவலிங்கம். சதுர ஆவுடையார். வெளியில் விநாயகர் கோயிலும், அடுத்துப் பக்கத்தில் சுப்பிரமணியர் கோயிலும், அதன் பக்கத்தில் அம்பாள் கோயிலும் உள்ளன. எல்லாம் கிழக்கு நோக்கிய சந்நிதிகள்.

சிவாசாரியரின் ஆர்வத்தால் நித்திய வழிபாடு நடைபெறுகிறது.

''முள்ளின்மேல் முதுகூகை முரலுஞ்சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடிவிளைந்த
கள்ளின்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒருதலையே.''

''திகை நான்கும் புகழ் காழிச் செல்வமல்கு
பகல்போலும் பேரொளியான் பந்தனல்ல
முகைமேவு முதிர்சடையான் கள்ளிலேத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே.''

(சம்பந்தர்)

-பண்பார்க்கும்
நள்ளிப் பதியே நலந்தரு மென்றன்பர் புகும்
கள்ளிற் பதிநங் கடப்பாடே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்
திருக்கண்டலம் & அஞ்சல் -601 103.
(வழி) வெங்கல் - S.O.
திருவள்ளூர் வட்டம் - மாவட்டம்.

19. திருக்காளத்தி

ஸ்ரீ காளஹஸ்தி

தொண்டை நாட்டுத்தலம்.

இன்று ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்துள்ளது. மக்கள் வழக்கில் 'காளாஸ்திரி' என்று வழங்கப்படுகிறது. ரேணிகுண்டா - கூடூர் புகை வண்டி மார்க்கத்தில் உள்ள இருப்புப்பாதை நிலையம். திருப்பதியிலிருந்து 40 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து 110

Koviloor Digital Library

கி.மீ. தொலைவிலும் உள்ள சிறந்த தலம்; திருப்பதி; ரேணிகுண்டாவி லிருந்து அடிக்கடி பேருந்துகள் உள்ளன. சென்னையிலிருந்தும் காஞ்சியிலிருந்தும் பேருந்துகள் செல்கின்றன. பஞ்ச பூதத்தலங்களுள் இது வாயுத்தலம். தட்சிண (தென்) கயிலாயம் என்னும் சிறப்புடையது. சுவர்ணமுகி எனப்படும் பொன்முகலி ஆற்றின் கரையில் உள்ள தலம். இங்கு இவ்ஆறு வடக்கு முகமாகப் பாய்ந்து ஓடுவதால் உத்தரவாகினி - இவ்விடம் மிகச்சிறப்பாகச் சொல்லப்படுகிறது. அன்புக்குச்சான்றான கண்ணப்பர் தொண்டாற்றி வீடுபேறு பெற்ற விழுமிய தலம். 'அட்டமாசித்திகள் அணைதரு காளத்தி' எனச் சிறப்பிக்கப்படும் தலம். நக்கீரர் 'கயிலை பாதி காளத்தி பாதி' பாடியுள்ள பெருமை பெற்ற தலம். முசுகுந்தன், பரத்வாஜ மகரிஷி, சிவகோசரியார் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். கண்ணப்பரின் பக்தியை வியந்து ஸ்ரீ ஆதிசங்கரர், தம் சிவானந்தலஹரியில் பாடியுள்ளதை அனைவரும் அறிவர். அருச்சுனன், தன் தீர்த்த யாத்திரையில் இங்கு வந்து இறைவனை வழிபட்டும், பரத்வாஜ மகரிஷியைக் கண்டு வணங்கிச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ - காளம் - அத்தி = சிலந்தி - பாம்பு - யானை - ஆகிய மூன்றும் வழிபட்டுப் பேறு பெற்ற சிறப்புடைய தலம். மலையடிவாரத்தில் உள்ள அருமையான திருக்கோயில். மலை, கைலாசகிரி என்று வழங்கப்படுகிறது. பொன்முகலியைக் கடந்து நெடிதுயர்ந்த மலையடிவாரத்தில் உள்ள காளத்தியை அடைந்தபோது நம் நெஞ்சில் கண்ணப்பருக்கு எழுந்து உணர்வு மேலிடுகிறது.

இந்நிலப்பரப்பைத் தொண்டைமான் ஆண்டமையை நினைப் பூட்டும் வகையில், காளத்தி செல்லும் வழியில் 'தொண்டைமான் நாடு' என்னும் பெயரில் ஓரூர் உள்ளது. தற்போது தெலுங்கு நாட்டில் உள்ள பகுதியாதலின், மக்கள் 'தொண்டமநாடு' என்று அதை வழங்கு கின்றனர்.

இத்தலம் சிறந்த 'ராகு, கேது க்ஷேத்ரம்' என்றழைக்கப்படுகிறது. பேருந்தில் செல்லும்போது சுவர்ணமுகி பொன்முகலிப் பாலத்தைக் கடந்து ஊருள் செல்லவேண்டும். நகராட்சி அந்தஸ்தில் உள்ள சிறிய ஊர் - வட்டத்தலைநகர். ஊருள் மிக உயர்ந்து கம்பீரமாகக் காளிகோபுரம் (GALI KOPURAM) காட்சிதருகிறது. ஏழு நிலைகளுடன் பழமையாகத் திகழும் இக்கோபுரம் ஸ்ரீ கிருஷ்ண தேவாராயரால் கி.பி. 1516-ல் கட்டப்பட்டது.

இதைக்கடந்து செல்லும் நாம் அடுத்து, கோயிலின் பிரதான வாயிலை அடைகிறோம். இக்கோபுரம் 'பிக்ஷசாலா கோபுரம்'

Koviloor Digital Library

என்றழைக்கப்படுகிறது. இதுவும் ஏனைய கோபுரங்களும் 12 ஆம் நூற்றாண்டில் வீரநரசிம்ம யாதவராயரால் கட்டப்பட்டனவாகும்.

இக்கோபுரத்தில், துவார கணபதியும், தண்டபாணியும் இடம் மாறிக்காட்சி தருகின்றனர். வலப்பால் ஆலய அதிகாரியின் அலுவலகம் உள்ளது. கோபுர வாயிலைக் கடந்து உள்நுழைந்ததும், வலப்பால் வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிரமணியர் சந்நிதி தனிக்கோயிலாக - சிறியதாகவுள்ளது.

இத்தலம் அப்பிரதக்ஷண வலமுறையில் அமைந்துள்ளது. விநாயகர் சந்நிதியும், பாலஞானாம்பாள் சந்நிதியும் உள்ளன. அடுத்துப் பஞ்சமுகேஸ்வரர் சிவலிங்கம் உள்ளது. இடப்பால் பழைய அம்பாள் உருவம் நிறுத்தப்பட்டுள்ளது.

இக்கோயிலில் ஆங்காங்குச் சிவலிங்கத் திருமேனிகள் பல உள்ளன. அடுத்து வரும் வடக்குக் கோபுர வாயில் வழியாகத்தான் சுவாமி புறப்பாடு நிகழுமாம். சற்றுமுன் சென்றால் இடப்பால் பாதாள விநாயகர் சந்நிதி உள்ளது. பெயருக்கேற்ப, விநாயகர் 35' ஆழத்தில் உள்ளார். 20 படிகள் இறங்கிச்சென்று தரிசிக்கவேண்டும். விநாயகர் அமர்ந்துள்ள இடம், பொன்முகலியாற்றின் மட்டத்தில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இங்கு வந்த அகத்தியர் விநாயகரை வழிபடாமற் போகவே, பொன்முகலி ஆறு நீரின்றி வற்றியது. அகத்தியர் தம் தவறுணர்ந்து பாதாளத்தில் - ஆழத்தில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு அருள் பெற்றார் என்பது தல வரலாற்றுச் செய்தியாகும். எதிரில் சிவராத்திரி மண்டபம் உள்ளது. அடுத்து, மூலையில் 2 கால்களை வெளியே நிறுத்திச் சுவரோடு சேர்த்துக் கட்டப்பட்ட சிறிய மண்டபம் வலப்பால் சுவரோரமாகவுள்ளது. கவனித்தால்தான் இது தெரியும். பலபேர், 'காளத்தி சென்று வந்தேன்' என்று சொன்னால் இரண்டு கால் 'மண்டபம்' பார்த்தாயா? என்று கேட்கும் வழக்கம் உள்ளது. அடுத்து உள்ளிருக்கும் மூலவருக்கு நேராகச் சுவரில் சாளரம் அமைத்து அதற்கு வெளியில் பிரதிட்டிக்கப் பட்டிருக்கும் நந்தியைக் காணலாம். இங்குத் தரையில் மத்தியில் மண் நிரப்பப்பட்டுள்ள சதுரமான பகுதி உள்ளது. கார்த்திகைத் தீபத்தன்று இங்குத்தான் 'சொக்கப்பானை' கொளுத்தப்படும். இம்மண்ணை வாரிவிட்டால் பெரும்பள்ளமாகத் தோன்றும். அதில் நடுவில் பனைமரத்தை நட்டுச் சுற்றிலும் சிறுசிறு கொம்புகளை நட்டு, அதைச் சுற்றிலும் ஓலைகளைச் சுற்றுவார்கள். இடித்த எள்ளைப் பிசைந்து அகல்போலாக்கி அதில் எண்ணெய், திரியிட்டு ஏற்றிப் பனை மரத்தின் உச்சியில் வைத்து, சொக்கப்பானையைக் கொளுத்துவார்கள்.

Koviloor Digital Library

எல்லாம் எரிந்து, அகல் விளக்கும் எரிந்து போகும். அப்போது அதை எடுத்து அரைத்து அக்கரியை (ரக்ஷையாக) சுவாமிக்குக் கறுப்புப்பொட்டாக இடுவார்கள். இது இங்கு விசேஷமானது.

அடுத்துச் சென்றால் வலப்பால் உள்ள கோபுரம் 'திருமஞ்சனக் கோபுரம்' எனப்படும். இக்கோபுரத்திலிருந்து பார்த்தால் நேரே பொன்முகலி ஆறு தெரியும். ஆற்றுக்குச் செல்வதற்குப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வழியேதான் திண்ணனார் (கண்ணப்பர்) பொன்முகலி நீரைக் கொண்டுவந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. இப்படிக்கட்டில் இறங்கும்போதே முதற்படியின் இடப்பால் தேவகோட்டை மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரின் உருவச்சிலை உள்ளது. கி.பி. 1912-ஆம் ஆண்டிலேயே ஒன்பது லட்சம் ரூபாய் செலவு செய்து இத்திருக்கோயிலில் திருப்பணிகளைச் செய்து மகா கும்பாபிஷேகத்தைச் செய்த பெரும் புண்ணியசாலி அவர். கைகூப்பி வணங்கத்தக்க இவர், கைகூப்பி வணக்கம் சொல்லும் அமைப்பிலேயே காட்சி தருகின்றார். சிவாலயத் திருப்பணிகளில் 'நகரத்தார்' பங்கு என்ஞான்றும் நன்றிப் பெருக்கோடு நினைந்துப் போற்றப்பட வேண்டுவதாயிற்றே!

இக்கோபுரத்தின் எதிரில் நாற்கால் மண்டபத்தினையடுத்து 'அஷ்டோத்ர லிங்க' சந்நிதி உள்ளது. கோபுரத்தின் பக்கத்தில் 'பஞ்சசந்தி விநாயகர்' சந்நிதி. அடுத்துள்ள பெரிய மண்டபம் - நூற்றுக்கால் மண்டபம் கி.பி. 1516ல் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டதாகும். இதில் தற்போது வாகனங்கள் முதலியன வைக்கப்பட்டுள்ளன. எதிரில் உள்ள பதினாறுகால் மண்டபம் அச்சுதராயரால் கட்டப்பட்டதாகும்.

அவற்றைக் கடந்து சென்றால் ஆலய நுழைவு வாயில் எதிரில் இரு கொடிமரங்கள். ஒன்று கவசமிட்டது. மற்றொன்று கல்லால் ஆனது. 60 அடி உயரமுள்ள இது ஒரே கல்லால் ஆனது. பலிபீடமும் நந்தியும் உள்ளன.

பிரதான கோபுரம் 'தக்ஷிண கோபுரம்' எனப்படும். 11-ஆம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழனின் ஆட்சியில் அவனுடைய நேரடி மேற்பார்வையில் அதற்கென நியமிக்கப்பட்ட கோயிற் குழுவினரால் இக்கோபுரம் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

தெற்கு நோக்கிய இக்கோபுர வாயிலில் நுழைந்தால் தமக்கு நேரே தக்ஷிணாமூர்த்தி தரிசனம். இடப்பால் மண்டபம்; வலமாக அதிலேறி ⌞ தலில் 'சங்கற்ப கணபதி'யைத் தரிசிக்கலாம். அடுத்து நால்வர் சந்நிதி. அடுத்து ஓரிரு பாதுகாப்பறைகள். வலமாக வரும் போது தரையில்

Koviloor Digital Library

வட்டமாக குறித்துள்ள இடங்களில் நின்று பார்த்தால் கைலாச மலையையும் சுவாமி விமானத்தையும் தரிசிக்கலாம்.

அடுத்துள்ள தீர்த்தக் கிணறு 'சரஸ்வதி தீர்த்தம்' எனப்படுகிறது. இயற்கையில் பேசவராத குழந்தைகளுக்கு இத்தீர்த்தத்தைக் கொடுத்தால் நன்கு பேச வரும் என்ற நம்பிக்கை உள்ளது. அவ்வாறே எடுத்தும் தருகின்றனர். இடப்பால் 'செங்கல்வராயன்' (ஆறுமுகர்) சந்நிதி - வள்ளி தெய்வயானையுடன் காட்சி தருகிறார்.

அடுத்துள்ள உற்சவ அலங்கார மண்டபத்தில் காளத்தீஸ்வரர், ஞானப் பூங்கோதை, கண்ணப்பர், ஆறுமுகர், வள்ளி, தெய்வ யானை, பரத்வாஜ மகரிஷி, பிட்சாடனர், அஸ்திரதேவர், விநாயகர், தொண்டைமான் அரசன், சிலந்தி, யானை, பாம்பு முதலிய உற்சவத் திருமேனிகள் உள்ளன.

அடுத்துச் சென்றால் சுந்தர கணபதி, மோக்ஷ கணபதி, பால கணபதி ஆகிய மூவரின் தரிசனம். வலமாக வந்து மூலவரைத் தரிசிக்கச் செல்ல வேண்டும்.

வெண்பாக்கம் வழிபட்ட சம்பந்தர் காளத்தியை அடைந்து பாடிப் பரவினார். இங்கிருந்தவாறே கயிலாயம், கேதாரம், கோகர்ணம், திருப்பருப்பதம், இந்திரநீலப்பருப்பதம் முதலியவைகளைப் பாடித் தொழுதார். ஆலங்காடு பணிந்த அப்பர் காளத்தி வந்துதொழுது வடகயிலை நினைவுவர, கயிலைக்கோலம் காண எண்ணி யாத்திரையைத் தொடங்கினார். திருவல்லம் தொழுத சுந்தரர் காளத்தி வந்து இறைவனடி துதித்து, இங்கிருந்தவாறே திருப்பருப்பதம், திருக்கேதாரம் முதலிய தலங்களைப் பாடிப் போற்றினார்.

இறைவன் - ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமி, காளத்திநாதர், குடுமித்தேவர்

இறைவி - ஞானப்பிரசுன்னாம்பிகை, ஞானப் பூங்கோதை.

தலமரம் - மகிழம்.

தீர்த்தம் - ஸ்வர்ணமுகி, பொன்முகலியாறு

இத்தலம் மூவர் பாடல் பெற்றது.

உள்நுழையும்போது கவசமிட்ட கொடிமரமும் முன்னால் பலிபீடமும் உள்ளன. எதிரில் சுவரில் சாளரம் உள்ளது. தூண்களில் அழகான சிற்பங்கள் உள்ளன. கடந்து சென்று காளத்தி நாதனைக் கண்ணாரக் கண்டு தரிசிக்க வேண்டும்.

Koviloor Digital Library

மூலவர், சுயம்பு தீண்டாத்திருமேனி. சிவலிங்கத் திருமேனி அற்புதமான அமைப்புடையது. ஆவுடையார் பின்னால் கட்டப் பட்டது.

சுவாமி மீது தங்கக் கவசம் (பார்ப்பதற்கு பட்டைகளாகத் தெரிவது) சார்த்தப்பட்டுள்ளது. இக்கவசத்தைச் சார்த்தும்போதும் எடுக்கும்போது கூட சுவாமி மீது கரம் படக்கூடாது. இக்கவசத்தில் இருபத்தேழு நட்சத்திரங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கவசத்தை எடுத்துப் பார்த்தால் இத்திருமேனியின் அற்புதமான அமைப்பைத் தரிசிக்கலாம்.

சிவலிங்கத் திருமேனி மிகவும் உயரமானது. இதன் அடிப் பாகத்தில் சிலந்தி வடிவமும், மத்தியில் யானையின் இருதந்தங்களும், மேற்புறத்தில் ஐந்து தலை பாம்பு வடிவமும் வலப்பால் கண்ணப்பர் கண் அப்பிய வடுவும் அழகுற அமைந்துள்ளன. சிவலிங்கத்தின் மேற்புறம் ஐந்து தலை நாகம் போலவே காட்சி தருகிறது. மேற்கு நோக்கிய சந்நிதி - சதுர ஆவுடையார்.

காளத்தியானைக் கண்ணுளானாகக் கண்டு தொழ - எத்தனை நேரம் தொழுதாலும் தெவிட்டாத தரிசனம். இச் சந்நிதியில் கிடைக்கும் சாந்திக்கு ஈடேது! விட்டுப் பிரிய மனமில்லை. நமக்கே இந்நிலை என்றால் கண்ணப்பர்க்கு வாய்த்தது எப்படியிருக்கும்?

சந்நிதியில் மூலவர் பக்கத்தில் மனோன்மணி சத்தியின் திருமேனி உள்ளது. கீழே ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரரின் போக மூர்த்தத் திருமேனி உள்ளது. சுகாசன அமைப்பில் உள்ள இம் மூர்த்தம் மான மழு ஏந்தி அபயஹஸ்த, சிம்மகர்ண முத்திரைகளுடன் கூடிய நான்கு திருக் கரங்களுடன் அழகுற விளங்குகிறது. மூலவர் எதிரில் கதவருகில் உள்ள இரு தீபங்கள் எப்போதும் அசைந்து கொண்டு; வாயுத்தலம் இஃது என்பதை நிதர்சனமாகக் காட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு தொழுவோம். சந்நிதியில் சிலைக்கை வேடர் பெருமானாகிய கண்ணப்பரின் மூலத் திருமேனி உள்ளது. 'கும்பிட்ட பயன் காண்பார்போலச் சிலைக்கை வேடர் பெருமானைக் கை தொழுதார்' ஞானசம்பந்தர் என்பதை எண்ணி நாமும் கண்ணப்பர் கழல் பணிகின்றோம்.

மூலவருக்கு எதிரில் வெள்ளைக்கல் நந்தியும், பித்தளை நந்தியுமாக இரு நந்திகள் உள்ளன.

கண்ணப்பரால் அபிஷேகம் செய்யப்பெற்ற மூர்த்தியாதலின் இச்சந்நிதியில் திருநீறு தரும் மரபில்லையாம்; பச்சைக்கற்பூரத்தைப்

Koviloor Digital Library

பன்னீர் விட்டு அரைத்துத் தீர்த்தத்தில் கலந்து சங்கு ஒன்றில் வைத்துக் கொண்டு தரிசிப்போர்க்கு அத்தீர்த்தத்தையே தருகின்றனர். நாம் திருநீற்றுப் பொட்டலம் வாங்கித் தந்தால் அதை சுவாமி பாதத்தில் வைத்து எடுத்துத் தருகின்றனர்.

மூலவருக்குக் கங்கை நீரைத் தவிர வேறெதுவும் மேலே படக் கூடாது. பிற அபிஷேகங்கள் அனைத்தும் ஆவுடையாருக்கே செய்யப்படுகின்றன. சுவாமிக்கு மேலே தாராபாத்திரம் உள்ளது.

கருவறை அகழியமைப்புடையது. கோஷ்ட மூர்த்திகளாக கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

சர்ப்ப (பாம்பு) தோஷம் முதலியவை நீங்கும் தலமாதலின் இங்கு இராகு கால தரிசனம் இராகுகால சாந்திகள் செய்தல் முதலியன விசேஷமாகச் சொல்லப்படுகின்றது. இக் கோயிலில் உச்சிக்காலம் முடித்து நடைசார்த்தும் வழக்கமில்லை. காலை முதல் இரவு வரை திறந்தே இருக்கின்றது.

நாடொறும் நான்கு கால பூஜைகள், பரத்வாஜ, மகரிஷி இங்குத் தவஞ்செய்து பேறு பெற்றாராதலின் அக்கோத்திரத்தைச் சேர்ந்தவர் களே இங்குப் பூஜைகளைச் செய்து வருகின்றார்கள்.

இத் தலத்தில் உள்ள மற்றுமொரு சிறப்பு; இங்கு அர்த்தசாமப் பூஜை கிடையாது. சாயரட்சை பூஜையுடன் முடிவு. இரவு 8 மணிக்கு சுவாமி, அம்பாளை, பள்ளியறையில் அப்படியே எடுத்துக் கொண்டு போய்ச் சேர்ப்பித்து விடுவார்கள்.

மன நிறைவான தரிசனத்துடன் வெளியே வந்து பிராகார வலமாக வரும்போது வலப்பால் சஹஸ்ர லிங்க சந்நிதி உள்ளது. இடப்பால் படிகளேறிச் சென்று வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிர மணியரைத் தரிசிக்கலாம். எதிரில் உள்ள தூணில் ஐயப்ப சுவாமி ஒரு காலில் யோக பட்டத்துடன் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். காசி இராமேஸ்வர லிங்க மூர்த்தங்கள் உள்ளன.

பக்கத்தில் வில் ஏந்திய கண்ணப்பர் திருவுருவம் கம்பீரமாகத் தரிசனம் தருகிறது. வரிசையாக வல்லபை கணபதி, லட்சுமி கணபதி சக்தி கணபதிகள் உள்ளனர். கிருஷ்ணதேவராயரும் அவருடைய மனைவி யாரும் பிரதிஷ்டை செய்ததாக லிங்கங்கள் உள்ளன. இவ்வாறே அடுத்தடுத்து, பெரியதும் சிறியதுமாகவும், சீதை, லட்சுமணன், ஆஞ்சநேயர் சப்தரிஷிகள் முதலியோர்கள் பிரதிஷ்டை செய்ததாகவும் பல சிவலிங்கங்கள் உள்ளன.

Koviloor Digital Library

இத்தலம் கிரகதோஷ நிவர்த்தித் தலமாதலால் இங்கு நவக்கிரகங்கள் இல்லை. சனிபகவான்மட்டும் உள்ளார்.

கனகதுர்க்கையம்மன் சந்நிதி உள்ளது. நடராச சபையில் இரண்டு திருமேனிகளும், இரண்டு சிவகாமித் திருமேனிகளும் உள்ளன. அறுபத்துமூவர் உற்சவத் திருமேனிகள் அழகுற உள்ளன.

இத்திருக்கோயிலுடன் தொடர்புடைய திரௌபதியம்மன் கோயிலுக்குரிய பாண்டவர் திருமேனிகள், பாதுகாப்பாக இங்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளன. கால பைரவர் சந்நிதி விசேஷ மானது. சப்தமாதாக்கள் உள்ளனர்.

அம்பாள் - ஞானப்பூங்கோதையின் சந்நிதி கிழக்கு நோக்கியது. அழகான கருவறை, கோஷ்ட மூர்த்தங்கள் எவையுமில்லை. அம்பாள் நின்ற திருக்கோலம் - இரு திருக்கரங்கள்.

திருவடியில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதரால் பிரதிஷ்டை செய்யப் பட்ட 'அர்த்தமேரு' உள்ளது. அம்பாள் இடுப்பில் ஒட்டியாணத்தில் 'கேது' உருவமுள்ளது. எதிரில் சிம்மம் உளது. சந்நிதிக்கு வெளியில் பிராகாரத்தில் தலைக்கு மேற்புறத்தில் ராசிச் சக்கரம் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளது.

அம்பாளுக்கு வெள்ளிக்கிழமைதோறும் தங்கப்பாவாடை சார்த்தப்படுகிறது. சந்நிதிக்கு நேர் எதிரில் உள்ள மண்டபத்தில் வெள் ளிக்கிழமைதோறும் ஊஞ்சல் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

அடுத்து வலமாக வரும்போது சித்திரகுப்தர், இயமன், தருமர், வியாசர் முதலியோர் பிரதிஷ்டை செய்ததாகப் பல சிவலிங்கங்கள் உள்ளன. எதிரில் சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. மூலவர் பாணம் மட்டும் ஒன்று மிக உயரமாக உள்ளது. முகலாயர் படையெடுப்பின் போது கோயிலில் உள்ள மூல விக்ரகங்களை உடைத்துச் செல்வங் களை அபகரித்து வந்தனர். அவ்வாறு இங்கு நிகழாதபடி தடுக்கவே மூலவருக்கு முன்னால் இதைப் பிரதிஷ்டை செய்துவைத்து அவ் விடத்தை மூடிவிட வந்தவர்கள் இதையே உண்மையான மூலவர் என்றெண்ணி, உடைத்துப்பார்த்து, ஒன்று கிடைக்காமையால் திரும்பிவிட, பின்பு சிலகாலம் கழித்து மூலவர் சந்நிதி திறக்கப்பட்டதாம். அப்போது முன் இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, படையெடுப் பாளர்களால் உடைக்கப்பட்ட பாணமே இது என்று சொல்லப் படுகிறது.

இதற்குப் பக்கத்தில் அருமையான பெரிய ஸ்படிகலிங்கம் உள்ளது. இது ஸ்ரீ ஆதிசங்கரரின் பிரதிஷ்டை என்று சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

பக்கத்தில் சிலந்தி, யானை, பாம்பு, கண்ணப்பர் முதலிய திருவுருவங்கள் உள்ளன. இதன் பக்கத்தில் மாடிப்படிகள் உள்ளன. மேலேறிச் சென்றால் கண்ணப்பரைத் தரிசிக்கலாம். எல்லோருக்கும் இது அநுமதியில்லையாதலால் பூட்டப்பட்டுள்ளது.

பிராகார வலத்தை முடித்துப் பழைய படியே தக்ஷிணாமூர்த்தியை வந்து தொழுது வெளியேறுகிறோம். வரும்போது இடப்பால் 'மிருத்யுஞ்சலிங்க' சந்நிதி உள்ளது. வெளியில் வலப்பால் தலமரம், மகிழ மரம் உள்ளது.

காளியைத் தொழுதவாறே எதிரில் உள்ள கோபுரத்தைத் தாண்டி வெளியேறி, இடப்பக்கம் திரும்பி கைலாசகிரிக்குச் செல்லவேண்டும். இதை மக்கள் கண்ணப்பர் மலை என்றழைக்கின்றனர். ஏறிச் செல்ல நல்ல படிகள் உள்ளன. அதிக உயரமில்லை. மேலேறிச் சென்றால் சிறிய சிவலிங்கச் சந்நிதியைத் தரிசிக்கலாம். கண்ணப்பர் சந்நிதி உள்ளது. வில்லேந்தி நிற்கும் திருக்கோலம். மலைக்கிளுவை மரங்கள் இரண்டு சுவாமிக்கு முன்னால் மலையில் உள்ளன.

இம்மலையிலிருந்து பார்த்தால் ஊரின்தோற்றம் நன்கு தெரிகிறது. அவ்வாறு பார்க்கும்போது நேரே தெரிவது துர்க்கை மலைக்கோயில் வலப்பால் தெரிவது முருகன் மலைக்கோயில்.

இம்மலை 'கைலாசகிரி' எனப்படுகிறது. கண்ணப்பர் திருவடி தோய்ந்த இடம். இம்மலை 25 கி.மீ. பரப்புடையது. இம்மலையில் காட்டில் பல இடங்களிலும் தீர்த்தங்களும், சிவலிங்கத் திருமேனிகள் உள்ள கோயில்களும், கண்ணப்பரின் திருவுருவங்களும் உள்ளன. மலைப்படிகளேறும்போதே திரும்பிப் பார்த்தால் 2 கி.மீ. தொலைவில் 'பரத்வாஜதீர்த்தம்' - குளம் நன்கு தெரியும். கரையில் அம்மகரிஷி தவம்புரிந்த கோயில் உள்ளது. சிவலிங்கத்திருமேனியும், பரத்வாஜ மகரிஷியின் திருவுருவமும் கோயிலில் உள்ளன. (இவ்விடத்தை லோபாய் தீர்த்தம் என்று வழங்குகின்றனர்). இன்னும் சற்று தூரத்தில் மலையடிவாரத்தில் நீலகண்டேஸ்வரர் கோயில் உள்ளது. ஓரிடத்தில் மயூரி தீர்த்தமொன்றும் உள்ளது. 16 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சோலையில் சஹஸ்ரராமலிங்கம் என்னும் கோயிலும் உள்ளது. இங்ஙனம் பெயருக்கேற்ப கைலாசகிரி பல கோயில்களையும் தீர்த்தங்களையும் பெற்றுத்திகழ்கிறது.

பொங்கல் விழாவில் ஒரு நாளிலும் பெருவிழாவில் ஒரு நாளிலுமாக ஆண்டில் இருநாள்களில் சுவாமி இம்மலையை வலம் வருகிறார். அவ்வாறு வரும்போது மக்களும் மூவாயிரம் பேருக்குக் குறையாமல் உடன் செல்வார்களாம். இவ்வலம் காலை தொடங்கி

Koviloor Digital Library

மறுநாள் முடிவுறுமாம். சுவாமியின் திருக்கல்யாண விழாவின்போது பொது மக்கள் திரளாகக் கூடித் தத்தம் திருமணங்களைச் சந்நிதியில் செய்து கொள்ளும் வழக்கம் இத்தலத்திலும் உள்ளது.

தட்சிண கைலாசம், அகண்டவில்வாரண்யம், பாஸ்கரக்ஷேத்திரம் என்றெல்லாம் புகழப்படும் இத்தலத்தில் பிரவேசிப்பதே முத்தி எனப்படுகிறது. "ஸ்ரீ காளத்தி பிரவேச முத்தி" என்கின்றனர். இங்கு நதி-நிதி-பர்வதம் என்ற தொடர் வழக்கில் உள்ளது. நதி என்பது சந்திரகிரிமலையில் தோன்றிப் பாய்ந்து வருகின்ற சுவர்ணமுகி-பொன் முகலியாற்றைக் குறிக்கும். நிதி-அழியாச் செல்வமான இறைவியும் இறைவனும். பர்வதம் - கைலாசகிரி, இம்மூன்றையும் தரிசிப்பது விசேஷமெனச் சொல்லப்படுகிறது. பொன்முகலி உத்தரவாகினி யாதலால் இங்கு அஸ்தி கரைப்பது விசேஷமாகும். பண்டை நாளில் ரிஷிகள் பொன்முகலியில் நீராடி கிழக்கு நோக்கித் தரிசிக்க அவர்கட்கு காட்சி தரவே சுவாமி மேற்கு நோக்கினார் என்ற கருத்து சொல்லப் படுகிறது.

ஒரு முக்கிய குறிப்பு. அம்பாள் கருவறையை வலம் வரும்போது வட்டமாகத் தரையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மூலை இடத்தில் மூன்று தலைகள் சேர்ந்திருப்பது போன்ற சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தினடியில் சக்தி வாய்ந்த யந்த்ரம் இருப்பதால் இங்கு அமர்ந்து ஜபம் செய்வது மிகவும் விசேஷமாகச் சொல்லப்படுகிறது.

கைலாசகிரியில் சற்று சுற்றினாற்போல் கற்களின் மீது ஏறிச் சென்றால் ஒரு சிறிய கோயில் உள்ளது. ஒரு கால் மடக்கி ஒரு காலூன்றியவாறு உள்ள ஒரு உருவம் அதில் உள்ளது. இதை ஒரு சிலர் நக்கீரர் என்கின்றனர். ஊர் மக்கள் தெலுங்கில் சித்தலையா (அதாவது சித்தி பெற்றவர்) என்றழைக்கின்றனர். நக்கீரர் இம் மலையில் வந்து தங்கி நதியில் நீராடி இறைவனைத் தொழுது வெப்பு நோயிலிருந்து முழுமை யாக நீக்கம் பெற்ற வரலாறும், இத்தலத்தின் மீது கயிலைபாதி காளத்திபாதி நூலைப் பாடியுள்ளதும் நாம் அறிந்தவையே. எனினும் இவ்வுருவம் பற்றி ஏதும் நிச்சயிக்க முடியவில்லை, கோயிலிலிருந்து மலைக்குச் செல்லும் வழிக்கு நேராக உள்ள வீதியில் சென்றால் சற்றுத் தொலைவில் மிக அற்புதமான பஞ்சமுககேஸ்வரர் கோயிலையும், மலைக்கல்லில் அமைக்கப்பட்டுள்ள அருமையான புடை சிற்பங் களையும் தரிசித்து, கண்டு மகிழலாம். காளத்தி செல்வோர் இவற்றைத் தவறாது சென்று தரிசிக்கவேண்டும்.

சிவலிங்கத்தின் நாற்புறங்களிலும் அமைந்துள்ள முகங்களின் சிற்ப வேலைப்பாடு கண்டு தரிசிக்கத் தக்கது, மேற்புறம் சிவலிங்கமே

Koviloor Digital Library

இதையும் சேர்த்துத்தான் பஞ்சமுகேஸ்வரர் என்றழைக்கப்படுகிறது. இவ்விடத்தை உணர்த்தி, வெளிப்படுத்தியவர்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பரமாசார்ய சுவாமிகளே யாவார்கள். இவர்களே 1966ல் இதற்குக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். புடைச்சிற்பங்கள் கண்ணுக்குப் பெருவிருந்து. பஞ்சமுகேஸ்வரர், பார்வதி திருமணம், முருகன், நர்த்தன கணபதி, ஆலிங்கனஈசன், நந்தி, சிலந்தி, யானை, பாம்பு முதலியவை வழிபடும் காட்சி, வியாக்ரபாதர், பதஞ்சலி, நடராஜர், வேடன், பிட்சாடனர், இராவணன், தட்சிணாமூர்த்தி, ஏகபாதர், மச்சாவதாரம் முதலிய உருவங்கள் புடை சிற்பங்களாக மலைப்பாறையில் கீழும் மேலும் செதுக்கப்பட்டுள்ளன.

சிவராத்திரியையொட்டிப் பத்து நாட்களுக்கு இத்தலத்தில் பெருவிழா நடைபெறுகிறது.

வயதான காலத்தில் ஆதரவின்றித் தவிக்கும் முதியவர்களை ஆதரித்துக் காக்கும் நோக்குடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களால் இத்தலத்தில் 'விருத்தாசிரமம்' நடத்தப்பட்டு வருகிறது. இந்நற்பணிக்கு திருவாவடு துறை ஆதீனம் தம்முடைய இடத்தை தந்து உதவியுள்ளது.

இத்தலத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் சத்திரமும் கல்யாண மண்டபமும் உள்ளன. தேவஸ்தான 'விருந்தினர்விடுதியும்' உள்ளது. தெலுங்கு கவிஞரான 'தூர்ஜாட்டி' (DHURJATI) என்பவர் இத்தலத்தைப் புகழ்ந்து 'ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர மகாத்மியம்' என்ற பெயரில் கவிதை வடிவில் நூலொன்றை மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

வீரைநகர் ஆனந்தக் கூத்தர் பாடிய திருக்காளத்திப் புராணமும்; கருணைப் பிரகாசர் ஞானப் பிரகாசர் வேலப்ப தேசிகர் ஆகிய மூவரும் சேர்ந்து பாடிய தலபுராணமும் இத்தலத்திற்கு உரியன.

சேறைக் கவிராயர் உலா ஒன்றும் பாடியுள்ளார். விஜயநகர, காகதீய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவன் 'தென்கயிலாயமுடையார்' திருக்காளத்தி உடைய நாயனார் எனக் குறிப்பிடப்படுகின்றார். முதற் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு 'காளத்தி உடையான் மரக்கால்' என்ற அளவு கருவி இருந்ததாகக் குறிப்பிடுகிறது.

சந்தமா ரகிலொடு சாதி தேக்கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்கு வண்காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே

Koviloor Digital Library

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்
மேவுமலை தன்னைவினவில்
ஏனமிள மானினொடு கிள்ளிதினை
கொள்ளவெழிலார் கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி
விலகு காளத்திமலையே.

(சம்பந்தர்)

''உண்ணாவரு நஞ்சம் உண்டான்கண்
ஊழித்தீ யன்னான்காண் உகப்பர்காணப்
பண்ணாரப் பல்லியம் பாடினான்காண்
பயின்றநால் வேதத்தின் பண்பினான்காண்
அண்ணாமலை யான்காண் அடியார் ஈட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளுவான்காண்
கண்ணாரக்காண் பார்க்கோர் காட்சியான்காண்
காளத்தியான் அவன் என்கண்ணுளானே''

(அப்பர்)

செண்டாடும் விடையாய் சிவனே என்செழுஞ்சுடரே
வண்டாருங் குழலாள் உமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன் எங்காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே''

(சுந்தரர்)

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்க
செருப்புற்ற சீரடிவாய் கலசம் ஊனமுதம்
விருப்புற்ற வேடனார் சேடரிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ.

(திருவாசகம்)

சுவாமி துதி

நீர்கொண்ட பொலம்பூங்கொன்றை
நெடுஞ்சுடை வனத்துடுத்த
சீர்கொண்ட புலித்தோற்(கு) அஞ்சிச்
சென்று புக்குஒளிப் பத்தாவு(ம்)
ஏர்கொண்டவுழையினங்கன்
நிலங்கிய திருக்கரத்துக்
கார்கொண்ட பொழிற்காளத்திக்
கடவுளை மனத்துள் வைப்பாம்.

Koviloor Digital Library

அம்பிகை துதி

பூமகள் இறைஞ்ச நெற்றிப் புதுமணித் திலகம் தோய்த்து
தாமரை நகுமுகத்தோர் தான் பெறப் பணிகளங்க
மாமதிப்புரையு மங்கேழ் வயக்குதிர் மலர்த்தாள் குன்றக்
கோமகளரும் ஞானப்பூங்கோதையை வணக்கம் செய்வாம்.

கயிலை பாதி காளத்தி பாதி

அறியாமலேனும் அறிந்தேனும் செய்த
செறிகின்ற தீவினைகள் எல்லாம் - நெறிநின்று
நன்முகில்சேர் காளத்திநாதன் அடிபணிந்து
பொன்முகலி யாடுதலும் போம்.

(நக்கீரர்)

கண்ணப்பதேவர் திருமறம்

தந்தையாந்தாய் தந்தை நாகனாந் தன் புறப்புப்
பொத்தப்பி நாட்டு உடுப்பூர் வேடுவனாந்தி திக்கும்
திண்ணப்பனாம் சிறுபேர் பெய்தவத் தாற்காளத்திக்
கண்ணப்பனாய் நின்றான் காண்.

திருப்புகழ்

சிரத்தானத்தில் பணியாதே - செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தாமறற்றொப்பிலதான - மலர்த்தாள் வைத்தெந்தனை ஆள்வாய்
நிருத்தா கர்த்தா துவநேசா - நினைந்தார் சித்தத்துறைவோனே
திருத்தாள் முத்தர்க்கருள்வோனே - திருக்காளத்திப்பெருமாளே.

-எள்ளலுறுங்
கோளத்தி நீக்கும் குணத்தோர்க்கு அருள்செய்திருக்
காளத்தி ஞானக் களஞ்சியமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில்
காளஹஸ்தி & அஞ்சல் - 517644
சித்தூர் மாவட்டம் - ஆந்திர மாநிலம்.

Koviloor Digital Library

20.திருவொற்றியூர்

(சென்னை)



· தொண்டை நாட்டுத் தலம்.

சென்னையின் ஒருபகுதி. 'உயர்நீதி மன்றப்' பகுதியிலிருந்து திருவொற்றியூருக்கு நகரப்பேருந்து செல்கிறது, இப்பேருந்தில் ஏறி, காலடிப்பேட்டையை அடுத்து, 'தேரடி நிறுத்தத்தில்' (தேரடி Stop) இறங்கினால் எதிரில் வீதிகோடியில் கோயிலைக்காணலாம்.

ஆதிபுரி என்றழைக்கப்படும் தலம். சுந்தரர், சங்கிலியாரை மணந்துகொண்ட சிறப்புடையது. கலியநாயனாரின் அவதாரத் தலம். தியாகேசப்பெருமான் வீற்றிருந்தருளும் தெய்விகச் சிறப்பு வாய்ந்த தலம். ஐயடிகள் காடவர்கோன், முசுகுந்தன் முதலியோர் வழிபட்டது.

முற்றத்துறந்த பட்டினத்து அடிகள் முத்தி பெற்ற தலம். வடலூர் வள்ளற்பெருமானின் வாழ்வொடு இயைந்த பதி. மிகப்பெரிய கோயில். கோயிலின்முன் பதினாறுகால் மண்டபம் உள்ளது. பக்கத்தில் பெரிய தீர்த்தக்குளம் நீராழி மண்டபத்துடன் உள்ளது.

இராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. பழமையான கோபுரம் உள்ளே நுழைந்தால் செப்புக்கவசமிட்ட

Koviloor Digital Library

கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளன. வலமாகவரும்போது சூரியன் சந்நிதி, அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர்சங்கிலியாருடன், உயரமான சஹஸ்ரலிங்கம், ஏகாம்பரர், இராமநாதர், ஜகந்நாதர், அமிர்தகண்டீஸ்வரர், யாகசாலை, குழந்தை ஈஸ்வரர், சுப்பிரமணியர், மதிற்சுவரை ஒட்டினாற்போல, இருபத்தேழு நட்சத்திரங்களும் இப்பெருமானை வழிபட்ட ஐதீகத்தை விளக்கும் வகையில் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள நட்சத்திர சிவலிங்கங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன. பக்கத்தில் காளி சந்நிதியும் உள்ளது. இதற்கு வலப்பால் கௌரீஸ்வரர் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் தட்சிணாமூர்த்தி, யோகமுத்திரையுடன் காட்சி தருகின்றார். பக்கத்தில் ஆதிசங்கரர், உருவம் உள்ளது. அடுத்து வேப்பமர நிழலில் பெரிய லிங்கம் ஆவுடையாரின்றி உள்ளது. அடுத்து ஆகாசலிங்கம், அண்ணா மலையார், ஜம்புகேஸ்வரர், நாகலிங்கேஸ்வரர், காளத்தீஸ்வரர், மீனாட்சி சுந்தரேசுவரர் முதலிய சந்நிதிகள் (சிவலிங்கத் திருமேனி களுடன்) உள்ளன.

அதையடுத்து 'ஒற்றியூர் ஈஸ்வரர்' கோயில் அழகான முன் மண்டபத்துடன் உள்ளது. இப்பெருமானுக்குத்தான் நான்கு கால பூஜைகளும் நடைபெறுகின்றன. இம்முன்மண்டபத் தூண்கள் அற்புதமான சிற்பங்களையுடையவை. ஒரு தூணில் பட்டினத்து அடிகளும் அதற்கு எதிர்த்தூணில் பர்த்ருஹரியாரும் உள்ளனர். இவற்றிற்கு இடையில் மேலேயுள்ள தூணில் - விதானத்தில் சூரியன் தலைப்புறமும் சந்திரன் காற்புறமும் அமைய மனிதனுடைய உடல் அமைக்கப்பட்டு, அவ்வுடலில் பஞ்சாட்சர விளக்கம் அமைத்துக் காட்டப்பட்டுள்ள (கல்சிற்பம்) அழகு கண்டுணரத் தக்கது. அழகான துவார பாலகர்கள். இச்சந்நிதி ஸ்ரீ ஆதிசங்கரரின் பிரதிஷ்டை என்று சொல்லப்படுகிறது. பைரவர் தனிக்கோயிலில் உள்ளார்

(நடராசப் பெருமானின் பின்புறத்தில் சுவரில் வெளிப் பிராகாரத்தில் ஏகபாத மூர்த்தி உருவம் அழகாக உள்ளது. அடுத்துச் சுந்தரமூர்த்தியார் மண்டபம் உள்ளது. இதில் சுந்தரர், சங்கிலியாருடன் திருக்கல்யாண கோலத்தில் காட்சி தருகின்றார். இம் மண்டபத்தில் மக்கள் இன்றும் வந்து திருமணங்களை நடத்திச் செல்கின்றனர்.

வலம் முடிந்து நேரே சென்று தியாகராஜ சபா மண்டபம் அடையலாம். தியாகராஜர் சந்நிதி இங்கு விசேஷமானது. தரிசித்துப் பின்பு நுழைவு வாயிலில் சென்றால் நேரே எதிரில் நடராசர் காட்சி தருகின்றார். இடப்பால் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர்

Koviloor Digital Library

உற்சவத் திருமேனி சந்நிதி உள்ளது. அழகான முன்மண்டபம் கல்லால் ஆனது. வலப்பால் குணாலய விநாயகர் சந்நிதி. நேரே மூலவர் சந்நிதி. எதிரில் நந்தி, பலிபீடம். கருவறை கஜப்பிரஷ்ட அமைப்புடையது.

இறைவன் - ஆதிபுரீஸ்வரர், புற்றிடங்கொண்டார், படம்பக்கநாதர் , எழுத்தறியும் பெருமாள், தியாகேசர், ஆனந்தத்தியாகர்

இறைவி - திரிபுரசுந்தரி, வடிவுடையம்மை, வடிவுடை மாணிக்கம்.

தலமரம் - மகிழ மரம்

தீர்த்தம் - பிரம தீர்த்தம்.

மூவர் பாடல் பெற்ற தலம்.

மூலவர் சுயம்பு. நாக வடிவில் அமைந்துள்ள சிவலிங்கத் திருமேனி, சிவலிங்கமும், ஆவுடையாரும் சதுர வடிவில் அமைந் துள்ளன. சதுரவடிவமான கவசம் சுவாமிக்குச் சார்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் மட்டும் இக்கவசம் அகற்றப்பட்டு புனுகுசட்டம், சவ்வாது, சாம்பிராணித் தைலம் ஆகியவை மட்டுமே சார்த்தப்படுகின்றது. இந்நாள் முதலாக மூன்று நாள்களுக்கு மட்டுமே சுவாமி, கவசமில்லாதிருப்பார். மீண்டும் சார்த்தப்பட்டு ஆண்டு முழுவதும் சுவாமி கவசத்துடனேயே காட்சியளிக்கின்றார்.

பிற அபிஷேகங்கள் அனைத்தும் ஆவுடையாருக்குத்தான் நடைபெறுகிறது. விசாலமான உள்ளிடம் கொண்ட கருவறை, ஒற்றியூருடைய கோ''வின் தரிசனம் உள்ளத்திற்கு நிறைவைத் தருகிறது. மூலவர் பிராகாரத்தில் கலிய நாயனார், அறுபத்துமூவர், தலவிநாயகர் சந்நிதிகள் உள்ளன. அடுத்து ஆதிசங்கரர் சந்நிதி உள்ளது. பீடத்தில் நான்கு சிஷ்யர்களின் உருவங்கள் உள்ளன. அடுத்து ஏகாதச ருத்ரலிங்கம் உளது. பக்கத்தில் முருகன் சந்நிதி; அடுத்துள்ளது, மிக்க புகழ்பெற்ற 'வட்டப்பாறை அம்மன்' (காளி) சந்நிதி. இந்த அம்மன் ஒரு காலத்தில் மிக்க உக்கிரத்துடன் விளங்கி, பலிகளைக் கொண்டதாகவும்; ஸ்ரீ ஆதிசங்கரர் இங்கு வந்து அம்பாளின் உக்கிரத்தைத் தணித்துச் சாந்தப்படுத்தியதாகவும் வரலாறு சொல்லப்படுகிறது.

அடுத்து ''திருப்தீஸ்வரர்'' சந்நிதி உள்ளது. இங்குக் கல்லில் சிவலிங்க வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. சந்திரசேகரர் சந்நிதி அடுத்து உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகரும், தட்சிணாமூர்த்தியும், மகாவிஷ்ணுவும், பிரமனும், துர்க்கையும் உள்ளனர். வள்ளற்

Koviloor Digital Library

பெருமானின் பாடல்களும், திருமுறைப் பதிகங்களும் கோயிற்சுவரில் கல்லில் பொறித்துப் பதிக்கப் பெற்றுள்ளன.

அம்பாள் சந்நிதி. கோபுர வாயிலில் நுழைந்தவுடன் வலப்பால் உள்ளது. தனிக்கோயில் - தெற்கு நோக்கியது. அம்பாளும் ஸ்ரீ ஆதிசங்கரர் பிரதிஷ்டையாகும். இந்த அம்பாள் மீது வடலூர் வள்ளற் பெருமான் பாடியதே 'வடிவுடை மாணிக்கமாலை'யாகும். இப் பாடல்கள் சலவைக்கல்லிற் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன.

பிராகாரத்தில் பல்வேறு அம்பிகைகளின் வண்ணப் படங்கள் மாட்டப்பட்டுள்ளன. கருவறையில் கோஷ்ட மூர்த்தங்கள் இல்லை. தலபுராணம் உள்ளது. மாசியில் பெருவிழா நடைபெறுகிறது. வைகாசியில் தியாகராஜ சுவாமி வசந்த உற்சவம் 15 நாள்கள், நடராசர் அபிஷேகங்கள், அன்னாபிஷேகம், நவராத்திரி , கந்தசஷ்டி, ஆருத்ரா, தைப்பூசம் முதலான விழாக்கள் அனைத்தும் நடைபெறுகின்றன. பட்டினத்தார், காளமேகம், அருணகிரிநாதர், தியாகய்யர், முத்துசுவாமி தீட்சிதர் ஆகியோர் சுவாமி, அம்பாள்மீது பாடல்களை - கீர்த்தனைகளைப் பாடியுள்ளனர்.

கோயிலை அடுத்துள்ள மார்க்கெட் பகுதியைக் கடந்து சிறிது தூரம் சென்றால் எண்ணூர் நெடுஞ்சாலையில், சாலை ஓரத்தில் உள்ள பட்டினத்தார் திருக்கோயிலை அடையலாம். பட்டினத்து அடிகள், முத்திப் பேறு பெற்ற இடம்.

(உயர்நீதிமன்றப் பகுதியிலிருந்து எண்ணூர் போகும் நகரப் பேருந்தில் ஏறி, எண்ணூர் நெடுஞ்சாலையில் திருவொற்றியூர் மார்க்கெட் நிறுத்தத்தில் (Stop) இறங்கினால் சாலை ஓரத்தில் உள்ள இக்கோயிலை அடையலாம்), பெயர் வளைவு உள்ளது. கடற்கரை யொட்டியுள்ள கிழக்கு நோக்கிய சிறிய கோயில்.

பட்டினத்தார் இங்குத்தான் சமாதியடைந்துள்ளார். கோயிலுள் சிவலிங்கத் திருமேனியும் எதிரில் நந்தியும் உள்ளன. இத்திருமேனிக்கும் மற்றும் உள்ள விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், முதலிய உற்சவத் திருமேனிகளுக்கும் நாடொறும் பூஜைகள் முறையாக நடைபெறு கின்றன. பட்டினத்துப் பெருமானுக்குப் பேய்க் கரும்பு இனித்த இடம் இஃது ஆகும். ஆதலின் தனக்குரிய இடம் இதுவேயென்று முடிவுசெய்து கடற்கரையொட்டிய இவ்விடத்தில் சமாதியானார் என்பது வரலாறு.''

இங்கு ஆடித்திங்கள் உத்திராட நட்சத்திரத்தில் (பட்டினத்தார்) குருபூஜை நடைபெறுகின்றது.

Koviloor Digital Library

"விடையவன் விண்ணுமண்ணும் தொழநின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித் தோலுடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமதேவன் சசிதங்கிய சங்க வெண்தோ(டு)
உடையவன் ஊனமில்லி உறையும் இடம் ஒற்றியூரே,"

(சம்பந்தர்)

"ஓம்பினேன் கூட்டைவாளா உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்கமாட்டேன்
பாம்பின் வாய்த்தேரை போலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூர் உடையகோவே."

(அப்பர்)

'அழுக்கு மெய்கொடு உன்திருவடி அடைந்தேன்
அதுவு(ம்) நான் படப்பால தொன்றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப் பனாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நானறியேன் மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒரு மருந்துரையாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே." *(சுந்தரர்)*

"மெய்த் தொண்டர் செல்லும் நெறி அறியேன் மிகநற்பணி செய்
கைத் தொண்டர் தம்மிலும் நற்றொண்டு வந்திலன் உண்பதற்கே
பொய்த் தொண்டு பேசிப் புறம்புறமே உன்னைப் போற்றுகின்ற
இத்தொண்டனேன்பணி கொள்ளுதியோ கச்சி ஏகம்பனே'

(பட்டினத்தார்)

"தஞ்சாகமூவுலகும் ஆண்டு தலையளித்திட்(டு)
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன் - நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண்டிருக்கப் பெறின்" *(ஐயடிகள் காடவர்கோன்)*

-"தேர்ந்துலகர்
போற்றும் திருவொற்றிப் பூங்கோயிற்குட் பெரியோர்
சாற்றும் புகழ்வேத சாரமே

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. தியாகராஜசுவாமி திருக்கோயில்
திருவொற்றியூர், சென்னை - 600 019.

Koviloor Digital Library

21. திருவலிதாயம்

சென்னை - பாடி

தொண்டை நாட்டுத் தலம்.

தற்போது சென்னைக்கு அருகில் உள்ள 'பாடி' என்னும் இடமே 'திருவலிதாயம்' என்னும் தலம் ஆகும்.

சென்னை ஆவடிச்சாலையில் 'பாடி' உள்ளது. இப்பகுதி தொழிற்சாலைகள் நிரம்பிய பகுதியாகும். 'டி.வி எஸ், லூகாஸ்' நிறுத்தத்தில் (Stopல்) இறங்கி, எதிரில் போகும் பாதையில் உள்ளே சென்றால் ஊர் நடுவே கோயில் உள்ளது. கோயில் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. கஜப்பிரஷ்ட விமான அமைப்புடைய அழகான கோயில்.

பரத்வாஜர், இராமர், ஆஞ்சநேயர், சூரியன், சந்திரன், இந்திரன், வலியன் (கருங்குருவி) முதலானோர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இத்தலத்தில் பௌர்ணமி விசேஷமாகச் சொல்லப் படுகின்றது. இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவிலும் இத்தலம் இடம் பெற்றுள்ளது. பரத்வாஜ முனிவர், வலியனாக (கருங்குருவியாக) சாபம் பெற்றார். அச்சாபம் நீங்க இத்தலத்து வந்து தீர்த்தம் உண்டாக்கி, இறைவனைப் பூசித்துச் சாபம் நீங்கப் பெற்றார் என்பது தலவரலாறு. பிரம்மாவுக்குக் கமலை, வல்லி என இரு பெண்கள் தோன்றினர் என்றும் அவர்களை விநாயகர் மணந்துகொண்டார் என்றும் வரலாறு ஒன்று சொல்லப்படுகின்றது.

இறைவன் - வல்லீஸ்வரர், வலிதாயநாதர்

இறைவி - ஜகதாம்பாள், தாயம்மை

தலமரம் - பாதிரி

தீர்த்தம் - பரத்வா்ஜ தீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடலும் உள்ளது.

மூன்று நிலைகளுடன் கூடிய ராஜகோபுரம். நுழைந்ததும் நேரே கொடிக்கம்பமும் சந்நிதியும் தெரிகின்றது. விசாலமான உள் இடம். வெளிப்பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. ராஜகோபுரத்துள் நுழைந் ததும் வலப்பால் மூலையில் (வெளிப்பிராகார மூலையில்) நவக்கிரக சந்நிதி உள்ளது. நவக்கிரகசந்நிதிக்கு எதிரில் தீர்த்தக்கிணறு உள்ளது.

Koviloor Digital Library

இக்கிணற்று நீர் இளநீரைப்போன்று அருமையான சுவையுடையதாக விளங்குகிறது. உள் வாயிலைக்கடந்ததும் இடப்பால் அருணகிரி நாதரின் திருமேனியும் அவர் இத்தலத்துப் பாடியுள்ள திருப்புகழும் காணப்படுகின்றன.

பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியிடத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. அதற்குப் பக்கத்தில்தான் விநாயகர் சந்நிதி உள்ளது. அதுபோலவே சுப்பிரமணியர் சந்நிதியும் உரிய இடத்தில் இல்லாமல் சற்று முன்பாகவே அதாவது கருவறையின் நேர் பின்புறத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. சந்நிதியில் சுப்பிரமணியருக்கு முன்னால் சிவலிங்கத் திருமேனி உள்ளது. பக்கத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் சந்நிதி உள்ளது. அறுபத்துமூவர் முழுவதுமில்லை. சில திருமேனிகளே உள்ளன. பரத்வாஜர் வழிபட்ட சிவலிங்கம் உள்ளது. அடுத்து நால்வர் பிரதிஷ்டை, பைரவர், விநாயகர் சந்நிதிகள் உள்ளன. நடராசப் பெருமானுக்குப் பக்கத்தில் அம்பாள் சந்நிதி உள்ளது. இரண்டும் தெற்கு நோக்கிய தரிசனம். கோஷ்ட மூர்த்தமாக, விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவரிடத்தில் மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை முதலியோர் காட்சியளிக்கின்றனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

துவாரபாலகர்களை வணங்கி உள் சென்றால் கம்பீரமாக மூலவர் காட்சி தருகின்றார். கிழக்கு நோக்கிய சந்நிதி. சதுரபீட ஆவுடையார். கருவறையின் உள் இடம் விசாலமாகவுள்ளது. பழைய அம்பாள் பின்னமாகிவிட்டதால் புதிய அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட் டுள்ளது. எனினும் பழைய அம்பாளை வெளியேற்றி விடலாகா தென்று அத்திருமேனி மூலவருக்குப் பக்கத்தில் மூலையில் வைக்கப் பட்டுள்ளது.

அம்பாள் சந்நிதி- நின்றநிலை - அழகான தோற்றம். ஒரே இடத்தில் நின்று சுவாமியையும் அம்பாளையும் ஒரு சேரத் தரிசிக்கும் நிலையில் இருசந்நிதிகளும் அமைந்துள்ளன. சித்திரைப்பௌர்ணமியில் பத்து நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகிறது.

''கடலின் நஞ்சம் அமுதுண்டு இமையோர் தொழு தேத்த நடமாடி
அடல்இலங்கை அரையன் வலிசெற்று அருள் அம்மான் அமர்கோயில்
மடல்இலங்கு கமுகின் பலவின் மது விம்மும் வலிதாயம்
உடல்இலங்கும் உயிர் உள்ளளவும் தொழ உள்ளத் துயர் போமே''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''-ஊற்றுமெய்
அன்புமிகுந்தொண்டர் குழு ஆயும் வலிதாயத்தில்
இன்பமிகுஞான இலக்கணமே.''

(அருட்பா)

''சிந்தை நின்றசிவாநந்தச் செல்வமே
எந்தையே எமை ஆட்கொண்ட தெய்வமே
தந்தையே வலிதாயத்தலைவநீ
கந்தைசுற்றுங் கணக்கது என்கொலோ''

(பழம் பாடல்)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வல்லீஸ்வர சுவாமி திருக்கோயில்
பாடி, சென்னை - 600 050.

22. (வட) திருமுல்லைவாயில்

திருமுல்லைவாயில்

தொண்டைநாட்டுத் தலம். சென்னைக்கு அருகில் உள்ளது.

சோழநாட்டில் - தஞ்சை மாவட்டத்தில் தென் திருமுல்லை வாயில் உள்ளதால் இது வடதிருமுல்லைவாயில் எனப்படுகிறது. (1) சென்னை - ஆவடி சாலையில் திருமுல்லைவாயில் உள்ளது. (2) பூந்தமல்லி யிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் செல்லும் பேருந்தில் சென்றால் ஆவடியை அடுத்து, திருமுல்லைவாயில் அடையலாம். சாலையில் இறங்கி ஊருள் 1 கி.மீ சென்று கோயிலை அடையலாம்.

தொண்டைமான் கட்டிய திருக்கோயில். சுவாமி விமானம் கஜப் பிரஷ்ட அமைப்புடையது. இத்தலம் முல்லைவனம் என்னும் பெயருடையது. இத்தலம் பற்றிய வரலாறு:

இத்தலம்; கிருதயுகத்தில் இரத்தினபுரமாகவும், திரேதாயுகத்தில் வில்வ வனமாகவும், துவாபரயுகத்தில் சண்பக வனமாகவும், விளங்கி கலியுகத்தில் முல்லை வனமாகத் திகழ்ந்தது. தொண்டைமான் காஞ்சியிலிருந்து ஆண்டு வந்தான். அவன் திக்விஜயம் மேற் கொண்டான். புழல்கோட்டையிலிருந்து கொண்டு, ஓணன், காந்தன்

Koviloor Digital Library

என்னும் அசுரர்கள்; எருக்கந்தூண்களும் வெங்கலக்கதவும் பவழத் தூண்களும் கொண்டு பைரவ உபாசனையுடன் ஆட்சி செய்து வந்தனர்.

(இவர்களே காஞ்சியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு) பேறு பெற்றவர்கள். அத்திருக்கோயிலே ஓணகாந்தன்தளி ஆகும்)

இவர்களைக்காணத் தொண்டைமான் வந்தான். வரும் வழியில் 'கோழம்பேடு' என்னும் கிராமத்தில் தங்கி இரவு உறங்கும்போது வெங்கல மணியோசை கேட்டது. அங்குச்சிவத்தலம் இருக்கவேண்டும் என்றறிந்து, மன்னன் மறுநாள் காலை யானைமீதேறிவந்தான். அவன் வருவதைக்கண்ட அசுரர்களின் குறு நில மன்னன் ஒருவன் தன் சேனைகளுடன் வந்து தொண்டைமானை எதிர்க்கலானான். தனியே வந்த தொண்டைமான், போர் செய்வதற்குச் சேனைகளைக்கொண்டு வரத்திரும்பினான். அவ்வாறு திரும்பிஇம் முல்லைப்புதர் வழியாக வரும் போது, யானையின் கால்களில் முல்லைக்கொடிகள் சுற்றிக் கொள்ள, மன்னன் யானைமீதிருந்தவாறே தன் உடைவாளால் வெட்ட, ரத்தம் வெளிப்பட்டது. திகைத்த மன்னன் கீழிறங்கிப்பார்க்க அங்குச் சிவலிங்கத் திருமேனி இருப்பதைக்கண்டான். தன் பிழைக்கு வருந்தி, அவ்வாளால் தன்னை மாய்த்துக்கொள்ள முயன்றான், அப்போது இறைவன் காட்சி தந்து, ''மன்னனே! வெட்டுப்பட்டாலும் குற்ற மில்லை, நான் மாசு இல்லா மணியே! வருந்தற்க, நந்தியை உனக்குத் துணையாக அனுப்புகிறேன். வெற்றிபெற்று வருவாயாக'' என்று அருள் புரிந்தார். (இதனால்தான் இத்தலத்தில் நந்தி கிழக்குநோக்கி யுள்ளது). தொண்டைமான் (நந்தியெம்பெருமானுடன்) வருவதை யறிந்து, ஓணன், காந்தன் சரணடைந்தனர். அவர்களிடமிருந்து மன்னன் எடுத்து வந்த எருக்கத்தூண்களே இன்றும் சுவாமி சந்நிதியின் முன்னால் உள்ளன. வெங்கலக்கதவும், பவழத்தூண்களும் திருவொற்றியூரில் வைக்கப்பட்டதாகவும் அவை காலப்போக்கில் வெள்ளத்தின் வாய்ப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.''

இறைவன் - நிர்மலமணீஸ்வரர், பாசுபதேஸ்வரர், மாசிலாமணீஸ்வரர்

இறைவி - லதாமத்யாம்பாள், கொடையிடைநாயகி, கொடியிடையம்மை

தலமரம் - முல்லை. (வெளிச்சுற்றில் நந்தியின் பக்கத்தில் உள்ளது)

Koviloor Digital Library

தீர்த்தம் - கல்யாண தீர்த்தம்

சுந்தரர் பாடல் பெற்றபதி.

நந்தி கிழக்கு நோக்கியுள்ளது. (மேற்குறித்த வரலாறு காரணமாக)

ஐந்து நிலைகளையுடைய ராஜகோபுரம் தெற்கு நோக்கியது. பக்கத்தில் தீர்த்தக்குளம் உள்ளது. குளக்கரையிலிருந்து பார்த்தால் புழலேரி தெரிகின்றது. ராஜகோபுரத்திற்கு எதிரில் சந்நிதி வீதியில் பதினாறுகால் மண்டபமும் பக்கத்தில் வசந்த மண்டபமும் உள்ளன. ராஜகோபுரத்தில் துவார பாலகர்கள் உள்ளனர். நுழையும்போது எதிரில் பிரசன்ன விநாயகர் தரிசனம். அவருக்குப் பின்னால் மதில்மீது தல வரலாற்றுச் சிற்பம் - யானைமீதிருந்து மன்னன் முல்லைக்கொடியை வெட்டுவது சிவலிங்கம் - தன் கழுத்தை அரிவது - காட்சி தருவது- சுதையால் அமைக்கப்பட்டுள்ளது.

வலமாக வரும்போது கல்யாண மண்டபம் உள்ளது. அம்மண்டபத்தினுள் அம்பாள் சந்நிதியும், சோமாஸ்கந்தர் சந்நிதியும், சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. விசாலமான வெளிப்பிராகாரம், வில்வமரம் உளது. பைரவர் சந்நிதி உளது.

செப்புக் கவசமிட்ட கொடி மரம். நந்தி (தொண்டைமானுக்குதவும் நிலையில்) கிழக்கு நோக்கி உள்ளது. உள் நுழைந்தால் இடப்பால் சூரியன் திருவுருவம்.

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியது; அற்புதமான சுயம்பு மூர்த்தி, உயரமான லிங்கம். சதுரபீட ஆவுடையார், மேற்புறம் வெட்டுப் பட்டுள்ளது. எப்போதும் சந்தனம் சார்த்தப்பட்டிருக்கும், ஆதலால் அபிஷேகங்கள் சிரசில் கிடையாது. ஆவுடையாருக்குத் தான், வருடத்திற்கொருமுறை - சித்திரை சதயத்தில் சந்தனக் காப்பு களையப் பட்டு மீண்டும் சார்த்தப்படுகின்றது. அது அடுத்த சித்திரை சதயம் வரை அப்படியே சுவாமிமீதிருக்கும். சுவாமிக்கு, வெந்நீர் அபிஷேகம். அபிஷேகக் காலங்களில் மேன்மேலும் சந்தனம் சார்த்தப்படும். ஆனால் களைவதில்லை, களைந்து சார்த்துவது மேற்குறித்த ஒருநாளில் மட்டுமே. இதனால் சுவாமிமீது எப்போதும் சந்தனக்காப்பு இருந்து கொண்டேயிருக்கும்.

மூலவர் முன்னால் இரு எருக்கந்தூண்கள் உள்ளன. பூண்கள் இடப்பட்டுள்ளன. சுவாமி விமானம் கஜப்பிரஷ்ட அமைப்புடையது.

சுவாமிக்கு முன்பு வெளியில் துவாரபாலகர்கள், தொண்டைமான், நீலகண்ட சிவாசாரியார், மகாவிஷ்ணு ஸ்ரீதேவி பூதேவி ஆகிய

Koviloor Digital Library

திருவுருவங்கள் உள்ளன. பக்கத்தில் (பிற்காலப் பிரதிஷ்டையான) ரச லிங்கம் (பாதரசம் வெள்ளி இவற்றின் கலப்பினால் ஆனது) உள்ளது.

உள்சுற்றில் வீரபத்திரர், நால்வர், விநாயகர், நாகலிங்கம், மகாலட்சுமி முதலிய சந்நிதிகள் உள. அறுபத்துமூவர் உருவங்களுள் ஒருசிலவே வைக்கப்பட்டுள்ளன. பைரவரும் அருணகிரியும் காட்சி தருகின்றனர்.

கோஷ்ட மூர்த்தங்களாக; க்ஷிப்ர கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவரிடத்தில் மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

நடராச சபைக்குப் பக்கத்தில், தொண்டைமானுக்குக் காட்சி தந்த ரிஷப நாயகர் உள்ளார். தொண்டைமானுக்கு அவசரத்தில் காட்சி தந்ததால் அம்பாள் சந்நிதி வலப்புறமாக உள்ளதாம். கிழக்கு நோக்கியது.

அம்பாள் சந்நிதியை வலம் வரலாம். பள்ளியறை உள்ளது. முகப்பில் துவார பாலகியரும் உளர்.

வைகாசி விசாகத்தில் பத்து நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகின்றது. இத்தலத்தில்தான் சிறப்புமிக்க வைஷ்ணவி ஆலயமும், பிரார்த்தனைக் கோயிலாகிய 'பச்சையம்மன் கோயிலும்' உள்ளன. இக்கோயில் தொடர்பாகச் சொல்லப்படும் செவிவழிச் செய்தியொன்று வருமாறு:-

(1) சென்னை பொன்னேரிப் பாதையில் மீஞ்சூருக்கு அருகில் உள்ள மேலூரில் வீற்றிருக்கும் திருவுடை நாயகியம்மை.

(2) சென்னை - திருவொற்றியூரில் வீற்றிருக்கும் வடிவுடையம்மை

(3) இத்தலத்துக் கொடியிடை அம்மை - ஆகிய மூன்று திருவுருவங்களும் ஒரே ஸ்தபதியால் செய்யப்பட்டவை என்றும்; வெள்ளிக்கிழமை பௌர்ணமி சேர்ந்து வரும் நாளில் இம்மூன்று அம்பிகைகளையும் ஒரே நாளில் முறையே காலையிலும், நண்பகலிலும் மாலையிலும் தரிசித்தல் பெருஞ் சிறப்பு என்றும் சொல்லப்படுகின்றது. இன்றும் பலர் இவ்வழக்கத்தைக் கைக்கொண்டு தரிசித்து வருகின்றனர்.

இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவிலும், அருணகிரிநாதரின் திருப்புகழிலும் இத்தலம் இடம் பெற்றுள்ளது. சுந்தரர், இத்தலத்துப்

Koviloor Digital Library

பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் ''அடியேன் படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே'' என்னும் தொடரை இறுதியில் வைத்துப் பாடுந் திறம் நெஞ்சை நெகிழ வைக்கவல்லன. அற்புதமான நெஞ்சுருக்கும் பதிகம்.

''திருவுமெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியாது றாமைகள் செய்து
மூடியு முறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ் திருமுல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர்களையாய்
பாசுபதா பரஞ்சுடரே''

(சுந்தரர்)

-''துன்பமற
எல்லைவாயற்குண் மட்டுமேகில் வினையேகுமெனும்
முல்லை வாயிற்குள் வைத்த முத்தி வித்தே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்
திருமுல்லைவாயில் & அஞ்சல்
காஞ்சிபுரம் மாவட்டம் - 609 113.

Koviloor Digital Library

23. திருவேற்காடு

தொண்டைநாட்டுத் தலம்.

(1) சென்னையிலிருந்து திருவேற்காட்டிற்கு நகரப்பேருந்துகள் ஏராளமாக உள்ளன. இங்குள்ள அருள்மிகு கருமாரி அம்மன் கோயில் பிரசித்தி பெற்றது. இக்கோயிலிலிருந்து 1 கி.மீ. தொலைவில் சிவாலயம் உள்ளது. நல்லபாதை உள்ளது. காடுவெட்டியாறு என்று சொல்லப் படும் (பழைய) பாலாற்றங்கரையில் கோயில் உள்ளது.

(2) 'பூந்தண்மலி' எனப்படும் பூந்தமல்லியிலிருந்து ஆவடி செல்லும் சாலையில் பேருந்தில் சென்று, காடுவெட்டி பஞ்சாயத்து என்னும் நிறுத்தத்தில் (Stop-ல்) இறங்கி, ஆற்றைக்கடந்தால் கோயிலை அடையலாம். நிறுத்தத்தில் இருந்து பார்த்தாலே சிவாலயம் நன்கு தெரிகின்றது. இக்கோயில் அருள்மிகு கருமாரியம்மன் கோயிலுடன் இணைந்தது. மூர்க்க நாயனார் அவதரித்த தலம்.

அகத்தியருக்கு இறைவன் திருமணக் கோலக்காட்சி அருளிய தலம். சூரசம்ஹாரத்தின் பின்பு, முருகப்பெருமான் இத்தலத்திற்கு வருகை தந்ததாகத் தலபுராணம் கூறுகிறது. முருகப்பெருமான் வேலால் உண்டாக்கிய தீர்த்தமே வேலாயுத தீர்த்தம் எனப்படுகிறது. வேதம் வழிபட்ட தலமிது. நான்கு வேதங்களும் வேல மரங்களாய் நின்று,

Koviloor Digital Library

இறைவனை வழிபட்டதால் இத்தலம் 'வேல்காடு' = வேற்காடு என்று பெயர் பெற்றது. விஷம் தீண்டாப்பதி என்ற சிறப்பும் இத் தலத்திற் குண்டு.

இறைவன் - வேதபுரீஸ்வரர், வேற்காட்டுநாதர்

இறைவி - பாலாம்பிகை, வேற்கண்ணி

தலமரம் - வெள் வேலமரம் (வெளிப்பிராகாரத்தில் உள்ளது)

தீர்த்தம் - வேலாயுத தீர்த்தம்

(இது கிணறுதான். கோயிலுக்கு வெளியில் மதிலைஒட்டி, அரச மரத்தினிடத்தில் உள்ளது. தற்போது நீரில்லை - பயன்படுத்தப் படவில்லை. கோயிலுக்குள் தனியே வேறொரு கிணறு உள்ளது).

சம்பந்தர் பாடல் பெற்றது. ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் கிழக்கு நோக்கியது. கோயில் பொலிவுடன் திகழ்கிறது. உள்ளே நுழைந்ததும் செப்புக்கவசமிட்ட கொடிமரம் காட்சியளிக்கின்றது. விசாலமான உள்ளிடம். வலப்புறம் அருணகிரியார் சந்நிதி, பக்கத்தில் கிணறு. மறுபுறத்தில் சனிபகவான் சந்நிதியும், மூர்க்க நாயனார் சந்நிதியும் உள்ளன. இதன் முன்னால் தலமரமும் அதன் முன்பு சிவலிங்கப் பிரதிஷ்டையும் இருக்கின்றன. வெளிப் பிராகாரத்தில் சந்நிதிகள் எவையுமில்லை. நேரே மூலவர் சந்நிதி உள்ளது. உள்வாயிலைக் கடந்து சென்றால் வலப்புறம் அகத்தியரும் சூரியனும் உள்ளனர். அடுத்து, பத்மபீடத்தில் எண்கோண வடிவில் நவக்கிரக சந்நிதி உள்ளது. நால்வர் பிரதிஷ்டையைத் தொடர்ந்து அறுபத்து மூவர் காட்சியளிக்கின்றனர். நடராச சபைக்கு நேராகப் பக்கவாயில். பிராகாரமூலையில் விநாயகர். அடுத்து காசி விசுவநாதர் விசாலாட்சி சந்நிதி. பாலசுப்பிரமணியருக்கு முன்பு சிவலிங்கப் பிரதிஷ்டை. கருவறைச் சுவரில் ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளது. இதன் நேர்பின்னால் சுவர் ஓரமாக மற்றொரு சண்டேஸ்வரர் திருவுருவம் வைக்கப்பட்டுள்ளது. துவாரபாலகர்களைக் கடந்து உட்சென்றால் நேரே மூலவர் தரிசனம் - கிழக்கு நோக்கியது. வலப்பால் விநாயகர், நால்வர், சோமாஸ்கந்தர், வில்லேந்தி மயிலேறி காட்சிதரும் ஆறுமுகன், அகத்தியர், மூர்க்கநாயனார் முதலிய உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

நடராசசபை - நேரே வாயில் உள்ளது. மூலவர் - அழகிய சிவலிங்கத் திருமேனி. பின்னால் சுவரில் திருமணக்கோலத்தில் சுவாமி,

Koviloor Digital Library

அம்பாள், திருவுருவங்களும் பக்கத்தில் விநாயகர் உருவமும் உள்ளன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது - நின்ற நிலை. பக்கத்தில் பைரவர். பைரவருக்கு முன்னால் உள்ள தூண் ஒன்றில் கருமாரியின் உருவம் கீழே பாம்புடன் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. மகாகும்பாபிஷேகம் 23-6-1999-ல் நடைபெற்றுள்ளது.

''ஆழ்கடல் எனக் கங்கை கரந்தவன்
வீழ்சடையினன் வேற்காடு
தாழ்விடை மனத்தாற் பணிந்தேத்திடப்
பாழ்படும் மவர் பாவமே''

(சம்பந்தர்)

-''மல்லல்பெறு
வேற்காட்டர் ஏத்து திரு வேற்காட்டின் மேவியமுன்
னூற்காட்டுயர்வேத நுட்பமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வேதபுரீஸ்வரர் திருக்கோயில்
திருவேற்காடு & அஞ்சல்
திருவள்ளூர் மாவட்டம் - 600 077.

24. மயிலாப்பூர்

சென்னை.

தொண்டை நாட்டுத் தலம்.

தருமமிகு சென்னை மாநகரின் நடுவண் அமைந்துள்ள மயிலாப்பூரில் கம்பீரமாகக் காட்சி தருவது அ/மி. கபாலீஸ்வரர் திருக்கோயிலாகும். 'திருமயிலைக் கபாலீச்சரம்' எனச் சிறப்பிக்கப் பெறும் இத்தலம் அம்பாள் மயில்வடிவிலிருந்து வழிபட்டமையால் 'மயிலாப்பூர்' எனப்பெயர் பெற்றது. மயிலை என்றவுடன் நினைவுக்கு வருவதே இத்திருக்கோயில்தான்.

இறைவன் - கபாலீஸ்வரர்.

இறைவி - கற்பகாம்பாள்.

தலமரம் - புன்னை.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. வாயிலார் நாயனார் அவதரித்த தலம். தெய்வப்புலவர் திருவள்ளுவர் மயிலையில் பிறந்ததாக வரலாறு. திருஞானசம்பந்தர், எலும்பைப் பெண்ணாக்கிய (பூம்பாவை) அற்புதத்தை நிகழ்த்திய அருமையுடைய தலம்.

கோயிலுக்கு முன்பு அழகான, பரந்த திருக்குளம் - தெப்பக்குளம் சுற்றிலும் நாற்புறமும், நன்கமைக்கப்பட்டுள்ள படிகளுடனும்; நடுவில் நீராழி மண்டபத்துடனும் காட்சி தருகின்றது.

கோயிலை நோக்கிச் செல்லும் நம்மை வரவேற்கும் ராஜகோபுரம் மிக்க அழகுடையது; மேற்கு நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்தால் நேர் எதிரே சுவாமி - அ/மி. கபாலீஸ்வரர் சந்நிதி - மேற்கு நோக்கியுள்ளது. எடுப்பான சிவலிங்கத் திருமேனி.

சுவரில் தலப்பதிகமான 'மட்டிட்ட புன்னை' என்னும் பதிகம் கல்லில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளது. சுவாமி சந்நிதியுள் நுழைந்து வலமாக வரும்போது நடராசப் பெருமான் திருமேனி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. உருத்திராக்கப் பந்தலில் பெருமான் காட்சி தருகின்றார். உலகெலாம் மலர்சிலம்படியைத் தொழுது நகர்ந்து வள்ளி தெய்வயானையுடன் காட்சி தரும் முருகப் பெருமானைத் தரிசித்து வலம் வரும்போது, சோமாஸ்கந்தர், பிட்சாடனர், முதலான உற்சவத் திருமேனிகளைத் தொழுது வணங்கலாம்.

கோஷ்ட மூர்த்தங்களாகத் துர்க்கை, தட்சிணாமூர்த்தி, விநாயகர் காட்சி தருகின்றனர். அறுபத்துமூவருடைய உற்சவ மேனிகளும் அடுத்துள்ள மூலத்திருமேனிகளும் கண்ணுக்குப் பெரு விருந்தாகும். கால நிலைக்கேற்ப பல்வேறு சுவாமிகளின் வண்ணப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. வலமாக வந்து கபாலீச்சரக் கண்மணியைக் கண்ணாரத் தொழுது வெளியே வந்து வலப்பால் சென்றால் அம்பாள் சந்நிதியைக் காணலாம். அ/மி. கற்பகாம்பாளின் அருள்வெளி - உள்ளே நுழையும்போதே தெய்வீக மணம். நேரே நின்று, நின்ற கோலத்தில் காட்சி தரும் கற்பகவல்லியைத் தரிசிக்கலாம். உள்ளே வலம் வரும் போது சுவரில் மாட்டப்பட்டிருக்கும் பல தலங்களில் வீற்றிருக்கும் அம்பாளின் வண்ணப் படங்களையும் கண்டு கை தொழலாம். வெளியே வந்து வலப்புறம் திரும்பி வெளிப் பிராகாரத்தில் வரும் நமக்கு கிழக்கு நோக்கி அமைந்துள்ள பூம்பாவை சந்நிதி முதல் தரிசனம் தருகின்றது. விமானத்தின் மேலே எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதம் சுதையில் செய்யப்பட்டுள்ளது. கண்டு தொழுது வலம் வரும்போது அலுவலக அறையையொட்டி புன்னை மரம் - தலமரம்

Koviloor Digital Library

காட்சி தருகிறது. மயிலாய் அம்பிகை பூசித்த வரலாறு உள்ளது. புன்னைவனநாதர் சந்நிதி - சிவலிங்கத் திருமேனி உள்ளது. அம்பாள் மயில் வடிவில் பூசித்ததால் மயில் உருவமும் சிலா ரூபத்திலுள்ளது. பக்கத்தில் உள்ள கூண்டில் இரு மயில்கள் தேவஸ்தானப் பராமரிப்பில் வளர்கின்றன. அழகான விமானத்துடன் அமைந்துள்ள சனிபகவான் சந்நிதியை வலமாக வந்து நவக்கிரகங்களைத் தொழுது சுந்தரேஸ்வரர் ஜகதீஸ்வரர் சிவலிங்கத் திருமேனிகளைத் தரிசிக்கலாம். அடுத்து நர்த்தன விநாயகர், அண்ணாமலையார் சந்நிதிகள்.

சிங்காரவேலர் சந்நிதி சிறப்பானது. சிறிய நந்தவனம் உள்ளது. தண்டாயுதபாணி சந்நிதியும், வாயிலார் நாயனார் சந்நிதியும் எதிர்ப் புறத்தில் அமைந்துள்ளன. தேவஸ்தானத்தில் நூலகம் உள்ளது. பதினாறுகால் (அலங்கார) மண்டபமும், நான்கு கால் (சுவாமி எழுந் தருளும்) மண்டபமும் உள்ளன. அருணகிரிநாதரைத் தொழுது, அடுத்து அமைந்துள்ள மயிலைத் திருப்புகழ்க் கல்வெட்டை ஒரு முறை ஊன்றிப் படித்துப் பின்னர் கொடிக் கம்பத்தின் முன்பு வீழ்ந்து வணங்கி, அமரும்போது நெஞ்சில் எழும் நிறைவுக்கு ஈடேது!

கற்பகவல்லியின் பொற்பதமே நமக்கு நற்கதி தரவல்லது. ஆம்! அவளே நமக்கு விழுத்துணை.

இத்திருக்கோயிலில் நடைபெறும் பங்குனி உத்திரப் பெருவிழா மிக்க சிறப்புடையது. இவ்விழாவில் அறுபத்துமூவர் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும். பிரதோஷம், கிருத்திகை, ஆடிப்பூரம், ஆவணிமூலம், நவராத்திரி, சஷ்டி, திருமுறை விழா முதலியனவும் மார்கழி (தனுர்) மாத வழிபாடுகளும் இக்கோயிலில் சிறப்புடையவை. இத்திருக்கோயில் 300 ஆண்டுகள் பழமையானது. இதற்கு முன்னிருந்த பழைய கோயில் கடற்கரையில் இருந்தது. அது வெள்ளையர்களால் இடிக்கப்பட்டது. 'H. D. லோவ்' என்பவர் எழுதியுள்ள சென்னை சரித்திர நூலில் கி. பி. 1672ல் துருக்கியரோடு நடந்த போரின்போது பிரெஞ்சு சேனைகள் தற்போதுள்ள இக்கோயில் பிராகாரத்தில் ஒளிந்துகொண்டிருந்ததாகக் குறித்துள்ளார். கி. பி. 1798ல் வெளியிடப் பட்டுள்ள நகரப்படத்தில் இக்கோயில் திருக்குளம் காட்டப்பட்டுள்ளது. கடற்கரையில் கோயில் இருந்த இடத்தில் அதை இடித்து வெள்ளை யர்கள் கட்டிய வழிபாட்டு இடமே இப்போதுள்ள ''சாந்தோம் கதீட்ரல் மாதாகோயில்'' உள்ள இடமாகும். தேவாரத்தில் இத்தலம் 'மயிலாப்பு' என்று குறிக்கப்படுகிறது. (ஒற்றியூர் - திருத்தாண் - 6) அருணகிரிநாதரும் ''கடலக்கரை திரையருகே சூழ் மயிலைப் பதி உறைவோனே'' என்று பாடுகிறார்.

Koviloor Digital Library

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரப்பல் கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.''

(சம்பந்தர்)

''மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனின் உலகர்முன் வருகென உரைப்பார்''.

(பெ. புரா. திருஞான' புரா)

''குயிலொத்திருள் குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே - மயிலைத்
திருப் புன்னையங்கானல் சிந்தியாயாகில்
இருப் பின்னை அங்காந் திளைத்து.''

(ஐயடிகள் காடவர்கோன்)

அயிலொத் தெழுமிரு - விழியாலே
அமுதொத் திடுமரு - மொழியாலே
சயிலத் தெழுதுணை - முலையாலே
தடையுற் றடியனு - மடிவேனோ
கயிலைப் பதியரன் - முருகோனே
கடலக் கரைதிரை - யருகேசூழ்
மயிலைப் பதிதனி - லுறைவோனே
மகிமைக் கடியவர் - பெருமாளே.

-'பாற்காட்டும்
ஆர்த்தி பெற்றமாது மயிலாய்ப் பூசித்தார் மயிலைக்
கீர்த்தி பெற்ற நல்வேத கீதமே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கபாலீஸ்வரர் திருக்கோயில்

மயிலாப்பூர் - சென்னை - 600 004.

Koviloor Digital Library

25. திருவான்மியூர்

சென்னை

தொண்டை நாட்டுத் தலம்.

சென்னைப் பெருநகரின் தென் கடைசிப் பகுதி. சென்னை உயர்நீதி மன்றப் பகுதியிலிருந்து திருவான்மியூருக்கு நகரப்பேருந்து செல்கிறது. திருவான்மியூர்ப் பேருந்து நிலையத்தில் இறங்கிப் பக்கத்தில் உள்ள இக்கோயிலை அடையலாம். சென்னையிலிருந்து கடற்கரைச் சாலை வழியாக மாமல்லபுரம் செல்லும் பேருந்துச் சாலையில் (திருவான்மியூரில்) இக்கோயில் உள்ளது. கிழக்குக் கோபுரமே பிரதான வாயில். கிழக்கு, மேற்குக் கோபுரங்கள் புதுப்பிக்கப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன. அழகிய சுற்றுமதில். வான்மீகிமுனிவருக்கு இறைவன் நடனக் காட்சியருளிய தலம். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட சிறப்புடையது. கோயிலில் வான்மீகி முனிவர் திருமேனி உள்ளது. மேலைக்கோபுர வாயிலுள்ள சாலைவழியே சிறிது தூரம் சென்றால் வான்மீகிநாதர் கோயில் உள்ளது.

சிறந்த மேதையாக விளங்கிய அப்பைய தீக்ஷிதர் சென்னைக்கு அருகில் உள்ள வேளச்சேரியில் வாழ்ந்து வந்தபோது நாடொறும் வான்மியூர் வந்து பெருமானை வழிபட்டு வந்தார். ஒருமுறை இறைவனருளால் இப்பகுதி முழுவதும் நீர்ப்பிரளயமாக மாற அப்பையர் பிரார்த்தித்தார். அவர் பிரார்த்தனையை ஏற்று அவருக்காக இறைவன் மேற்கு நோக்கித் திரும்பிக்காட்சியளித்தார். இச்சிறப்பினால் சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. அகத்தியருக்கு, (வைத்திய) மூலிகைகளைப் பற்றி இறைவன் உபதேசித்தருளிய சிறப்புத் தலம். இதனால் இறைவனுக்கு ஔஷதீஸ்வரர் - மருந்தீசர் என்று பெயர். வேதங்கள் வழிபட்ட தலம். தேவர்களும், சூரியனும் பிருங்கி முதலியோரும் வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றுள்ளனர்.

இறைவன் - ஔஷதீஸ்வரர், மருந்தீசர், பால்வண்ணநாதர், வேதபுரீஸ்வரர்.

இறைவி - திரிபுரசுந்தரி, சொக்கநாயகி, சுந்தரநாயகி.

தீர்த்தம் - பஞ்ச தீர்த்தங்கள் - இவையில்லை. கோயிலுக்கு எதிரில் இடப்பால் ஒரு தீர்த்தக்குளம் உள்ளது. அண்மையில் வலப்பால் உள்ள குளம் பயனற்றுள்ளது.

தலமரம் - வன்னி

Koviloor Digital Library

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்றது.

கிழக்குக் கோபுரம் ராஜகோபுரம். ஐந்து நிலைகளையுடையது. வெளியில் பதினாறு கால் மண்டபம் உள்ளது. இக்கோபுரம் புதுப்பிக்கப்பட்டு 12-2-1984-ல் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. கோபுரத்தில் உள்ள சிற்பங்களுள் சம்பந்தரின் சிவிகையை அப்பா தாங்குவது, ஊர்த்துவ தாண்டவம், தில்லைக்காளி, கஜசம்ஹாரமூர்த்தி முதலியவை குறிப்பிடத் தக்கவை.

கோபுரவாயில் வழியே உள்ளே நுழைந்தால் நேரே வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர் சந்நிதி உள்ளது. முகப்பில் கமல விநாயகர் தரிசனம். பக்கத்தில் அழகிய ‘விஜயகணபதி’ ஆலயம் உள்ளது; இக்கோயிலின் மேற்புற வரிசையில் சோடச கணபதி உருவங்கள் காட்சியளிக்கின்றன. இக்கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் 17-3-1985-ல் நிகழ்த்தப் பெற்றது.

வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது - தெற்கு நோக்கியது. முன் மண்டபத்தில், வாயிலையொட்டி; இக்கோயிலில் (1) பிரதோஷ உற்சவம் (2) முருகனுக்கு விழா (3) துவஜாரோகண விழா (4) வன்மீக நடன உற்சவம் ஆகியவைகளை நடத்துவதற்காக எழுதி வைத்துள்ள நிபந்தக் கல்வெட்டுக்கள் உள்ளன.

அம்பாள் நின்ற திருக்கோலம். உள்ளே வலம் வரலாம். பள்ளியறை உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களில்லை.

சுக்கிரவார அம்மன் திருமேனி தனியே உள்ளது. கருவறையில் வெளிப் பகுதியில் நிரம்பக் கல்வெட்டுக்கள் உள்ளன. பிராகாரக் கல் தூண்களில் நர்த்தன விநாயகர், ரிஷபாரூடர் சிற்பங்கள் உள்ளன.

வெளிப் பிராகாரத்தில் வலமாக வரும்போது; நான்குகால் மண்டபம் உள்ளது. அடுத்து, சற்றுத் தள்ளி இடப்பால் விநாயகர் சந்நிதி மூன்று மூலத் திருமேனிகளுடன் காட்சி தருகிறது. வலப்பால் தியாகராஜா சபா மண்டபம் உள்ளது. மண்டபம் பெரியது. தியாகராஜா சந்நிதி கிழக்கு நோக்கியது. அழகான திருமேனி. தரிசித்துத் தெற்குப்பக்க வாயில் வழியாக உள் சென்றால் நேரே அம்பலவாணர் தரிசனம், மாணிக்கவாசகர் சிவகாமி உருவத் திருமேனிகள் உள்ளன.

அம்பலவாணர் உருவம் அழகானது. வன்மீகநாதர் கோயிலுக் குரிய சிறிய நடராஜ உருவம் பாதுகாப்புக்காக இச்சந்நிதியில் வைக்கப் பட்டுள்ளது. வலமாக வரும்போது அறுபத்து மூவர் சந்நிதிகள்,

Koviloor Digital Library

அடுத்து விநாயகர் சந்நிதிகள் உள்ளன. இச்சந்நிதியில் இருபுறங்களிலும் நாகலிங்கப் பிரதிஷ்டையுள்ளது. அடுத்து நால்வர், கஜலட்சுமி, முத்துக்குமாரசாமி சந்நிதிகள் உள. முத்துக்குமாரசுவாமி சந்நிதியில் அருணகிரிநாதரும் உள்ளார்.

மூலவர் - மேற்கு நோக்கிய சந்நிதி, கோமுகம் மாறியுள்ளது. சுயம்பு, பால்போன்று வெண்மையாக உள்ளது. பசு (காமதேனு) பால் சொரிந்து வழிபட்டமை தொடர்பாகச் சிவலிங்கத் திருமேனியில் சிரசிலும், மார்பிலும் பசுவின்குளம்பு வடுதெரிகின்றது. (பால் வண்ண நாதர்) சுவாமிக்கு மேலே விதானம் உள்ளது. முகப்பில் துவார பாலகர்கள் உள்ளனர் - சுவாமிக்குப் பால் அபிஷேகம் மட்டுமே செய்யப்படுகிறது. பஞ்சாமிர்தம் முதலான பிற அபிஷேகங்கள் அனைத்தும் ஆவுடையாருக்கே செய்யப்படுகின்றன. உள் பிராகாரத்தில் ஏராளமான சிவலிங்கங்கள், வைக்கப்பட்டுள்ளன. காலபைரவர் பஞ்சலிங்கங்கள் உள்ளன. கோஷ்டமூர்த்தங்களாக, தட்சிணாமூர்த்தி, விநாயகர், மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படும், இக்கோயிலுள் வில்வ மரங்கள் அதிகம் உள்ளன. பங்குனி உத்திரத்தில் பெருவிழா நடைபெறுகிறது. சூரியன் இத்தலத்தில் பெருமானை அர்த்தசாமத்தில் வழிபட்டதாக வரலாறு உள்ளதால் பெருவிழாவில் கொடியேற்றம் அர்த்தசாமத்தில் தான் நடைபெறுகிறது.

(கிருத்திகை, பௌர்ணமி முதலிய விசேஷங்களும் இராக்கொண்டு வருவதே இக்கோயிலில் கடைப்பிடிக்கப்படுகின்றது. பங்குனி பௌர்ணமியில்தான் வான்மீகி முனிவர் வழிபட்டு முத்தி பெற்றதாகச் சொல்லப்படுகிறது). விழாக்காலங்களில் சுவாமி புறப்பாடு காலை மாலைகளில் சந்திரசேகரரும் பஞ்சமூர்த்திகளும் மட்டுமே, 'தியாகராஜா' புறப்பாடு பகலில் கிடையாது. இரவில் மட்டுமே நிகழ்கிறது.

ஆடி தை மாதங்களில் திருவிளக்கு வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது. பங்குனிப் பெருவிழாவில் மூன்றாம், நான்காம் நாள் உற்சவம் - பவனி உற்சவம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

ஒன்பதாம் நாள் விழாவில் 'வன்னி மர'ச் சேவை விசேஷம். பத்தாம் நாளில்தான் வான்மீகி முனிவருக்குத் தியாகராஜா, திருக்கல்யாண நடனத்தைக் காட்டியருளும் ஐதீகம் விசேஷமாக நடைபெறுகிறது. பதினோராம் நாளில் நடைபெறும் வெள்ளி யங்கிரி விமான சேவை காணத்தக்கது. இத்தல புராணம் பூவை.

Koviloor Digital Library

கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. திருவான்மியூரில்தான் பாம்பன் சுவாமிகளின் சமாதி உள்ளது.

''கரையுலாங் கடலிற் பொலிசங்கம் வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழி மீனுகளுந் திருவான்மியூர்
உரையுலாம் பொருளாயுலகாளுடையீர் சொலீர்
வரையுலா மடமாது உடனாகிய மாண்பதே.''

(சம்பந்தர்)

''விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூர் ஈசனே.''

(அப்பர்)

-'கார்த்திரண்டு
வாவுகின்ற சோலைவளர் வான்மியூர்த் தலத்தின்
மேவுகின்ற ஞான விதரணமே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

**அ/மி. மருந்தீஸ்வரர் திருக்கோயில்
திருவான்மியூர் - சென்னை - 600 041.**

Koviloor Digital Library

26. திருக்கச்சூர்

கச்சூர்



தொண்டை நாட்டுத் தலம்.

(சென்னைக்குப் பக்கத்தில் உள்ள) சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்லும் பேருந்துச் சாலையில் 1 1/2 கி. மீ. சென்று, ''தியாகராஜபுரம் - திருக்கச்சூர்'' என்று பெயர்ப்பலகையுள்ள இடத்தில் வலப்புறமாகப் பிரிந்து செல்லும் சாலையில் சென்று திருக்கச்சூரை அடையலாம். ஊருள் சென்றதும் வலப்பால் திரும்பிச் சென்றால் (கச்சூர்) ஆலக்கோயிலையும் இடப்பால் சென்றால் மலையடிக் கோயிலான மருந்தீசர் கோயிலையும் அடையலாம்.

சுந்தரர் திருக்கழுக்குன்றம் வழிபட்டுத் திருக்கச்சூரை அடைந்து பெருமானை - ஆலக்கோயில் அமுதனைத் தொழுது, மதிற்புறத்தே பசியுடன் அமர்ந்திருக்க; இறைவன் அந்தணர் வடிவில் வந்து, சுந்தரரை அங்கேயே இருக்கச் செய்து; இவ்வூரிலுள்ள அடியார்கள் வீடுதோறும் சென்று, உணவு பெற்று வந்து, இட்டு அவர் பசியை மாற்றிய நிகழ்ச்சி நடைபெற்ற பதி. பசி நீங்கப்பெற்ற சுந்தரர், இறையருள் கருணையை வியந்து, 'முதுவாயோரி' என்னும் பதிகம் பாடிப் போற்றினார். முதலில் ஆலக்கோயிலையும் பின்பு மருந்தீசர் கோயிலையும் தரிசிக்க வேண்டும்.

தொண்டை நாட்டிலுள்ள தியாகராஜா சந்நிதிகளுள் இத்தலமும் ஒன்று, இங்குள்ள தியாகேசர் 'அமுதத் தியாகர்' எனும் பெயருடையவர். அமுதம் திரண்டு வருவதற்காகத் திருமால் கச்சப வடிவில்

Koviloor Digital Library

(ஆமை வடிவில்) இருந்து இறைவனை இத்தலத்தில் வழிபட்டதாக வரலாறு. இக்கோயில் ஆலக்கோயிலாகும். ஆதலின் 'கச்சபவூர் எனும் பெயர் நாளடைவில் மக்கள் வழக்கில் மாறி 'கச்சூர்' என்றாயிற்று என்பர்.

1) கச்சூர்க் கோயில் - ஆலக்கோயில்.

இறைவன் - விருந்திட்ட ஈஸ்வரர், விருந்திட்ட வரதர், கச்சபேஸ்வரர்.

இறைவி - அஞ்சனாக்ஷியம்மை

தலமரம் - ஆல்

தீர்த்தம் - கூர்ம (ஆமை) தீர்த்தம்.

2) மருந்தீசர் கோயில் (மலையடிவாரக் கோயில்)

இறைவன் - மருந்தீசர்

இறைவி - அந்தகநிவாரணி அம்பாள், இருள்நீக்கித் தாயார்.

இம்மலைக்கு மருந்து மலை - ஔஷதகிரி என்று பெயர்.

விநாயகர் - தாலமூல விநாயகர் (அ) கருக்கடி விநாயகர்.

சுந்தரர் பாடல் பெற்றது.

கச்சூர்க் கோயில் - ஆலக்கோயில்

கிழக்கு நோக்கியுள்ளது. எதிரில் கச்சூர் ஏரி தெரிகின்றது. ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் மட்டுமே. கோயிலுக்கு எதிரில் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இம்மண்டபத் தூண்களில் அநுமந்த சேவை, கூர்மாவதாரம், காளிங்க நர்த்தனம், கல்கி அவதாரம், துர்க்கை, ஆதிசேஷன், ஊர்த்துவ தாண்டவம், காளி முதலிய பல சிற்பங்கள் இருப்பதைக் காணலாம்.

வாயிலில் நுழைந்ததும், கொடிமரம், நந்தி, பலிபீடங்கள் உள்ளன. இவை சுவாமிக்கு சந்நிதிக்கு நேரே சாளரம் அமைந்து அதற்கு எதிரில் வெளியில் அமைந்துள்ளன.

பக்க (தெற்கு) வாயில் முன்னால் மண்டபம் உள்ளது. இம் மண்டபத் தூண் ஒன்றில் திருமால் ஆமை வடிவில் வழிபடும் சிற்பம் உள்ளது. இம்மண்டபத்தில் 'அமுதத் தியாகேசர் சபை' உள்ளது.

Koviloor Digital Library

வணங்கி, வாயிலுள் சென்றால் முன்மண்டபம். நேரே அம்பாள் தரிசனம். தெற்கு நோக்கிய சந்நிதி. அம்பாள் நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். எதிரில் சிம்மம் உளது. அம்பாள் கோயில் தனிக்கோயிலாகவுள்ளது - வலம் வரும் வசதி யுள்ளது.

இடப்பால் சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வழியுள்ளது. நுழைவு வாயிலைக் கடந்து பிராகாரத்தை வலமாக வரும்போது சூரியன், விநாயகர், பல சிவலிங்கத் திருமேனிகள்; நாகலிங்கங்கள், வள்ளி தெய்வயானை, சுப்பிரமணியர், நடராசர், நால்வர் ஆகிய சந்நிதிகள் உள்ளன. வணங்கியவாறே, பக்கவாயில் வழியாக உட்சென்றால் மூலவர் காட்சியளிக்கின்றார்; எதிரில் சாளரம் உள்ளது.

மூலமூர்த்தி சிவலிங்கத் திருமேனி - சுயம்பு. சிறிய பாணம். சுவாமி கருவறை அகழி அமைப்புடையது. கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. இக்கோயிலில் சித்திரையில் நடைபெறும் பெருவிழா அனைத்தும் தியாகராஜாவுக்குத்தான். இத்திருவிழாவில் 9-ஆம் நாளன்று, இறைவன் சனகாதி முனிவர்களுக்கு அருளிய சின்முத்திரை உபதேச ஐதீகம் நடைபெறுகின்றது. 'முதுவாயோரி' தலப்பதிகம் - சுந்தரர் பாடியது கல்விற்பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது. இக் கோயிலுக்கு எதிரில் ஆறுமுகச் செட்டியார் சத்திரம் உள்ளது. ஆலயத்திற்கு வரும் யாத்திரிகர்கள் அமர்ந்து உண்ண, இளைப்பாற இடமளித்து உதவுகின்றனர்.

மலையடிவாரத்தில் மருந்தீசர் கோயில் உள்ளது. ராஜ கோபுரமில்லை. தெற்கு நோக்கிய வாயில். உட்சென்றதும் சிறிய மண்டபம் உள்ளது. இம்மண்டபத் தூண்களில் துவாரபாலகர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, இலிங்கோற்பவர், மாவடிசேவை, பட்டினத்தார், வள்ளலார், விநாயகர், தண்டபாணி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், முதலிய சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் சுந்தரரை நோக்கியவாறு, கையில் அமுதுடன் காட்சிதரும் இறைவனின் சிற்பம் உள்ளது - கண்டு மகிழத்தக்கது. சுற்றுமதில் உள்ளது. சிறிய கோயில் - சுற்றிலும் இயற்கைச் சூழல், அமைதியான இடம். உள்பிராகாரத்தில் விநாயகர் கோயில் உள்ளது. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியது. எதிரில் சாளரம் உள்ளது. இதன் வெளியே கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள. படிகளில் இறங்கி நீர் அருந்தும் அமைப் புடைய 'நடைபாதைக் கிணறு' உள்ளது. பக்கத்தில் நவக்கிரக சந்நிதி.

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதி மேற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். அபய வரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். எதிரே நாகலிங்கமரம் உள்ளது. துவாரகணபதி, சுப்பிரமணியரை வணங்கியுட் சென்றால் மூலவர் தரிசனம், உயர்ந்த திருமேனி - கோமுகம் மாறியுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக; விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, மூர்த்தங்கள் உள்ளன. கோஷ்ட பிரம்மாவுக்கு எதிரே **சண்டேசுவரர் நான்கு முகங்களுடன் (சதுர்முக சண்டேசுவரராகக் காட்சி தருகின்றார். இந்த அமைப்பு இக்கோயிலில் உள்ள ஓர் அரிய உருவ அமைப்பாகும்.** பைரவர் சந்நிதி உள்ளது.

மாசி மாதத்தில் இக்கோயிலில் திருவிழா நடைபெறுகின்றது. இத் திருவிழாவில் 9-ஆம் நாளில் - இறைவன் பிச்சையெடுத்துச் சுந்தரருக்கு அமுதிட்ட ஐதீகம் நடைபெறுகிறது. இரந்திட்டஈஸ்வரர் வீற்றிருக்கும் சிறிய கோயில் மேற்கில் உள்ளது. சித்திரையில் பெருவிழா நடை பெறுகிறது.

''மேலைவிதியே வினையின் பயனே விரவார் புரமூன்றெரிசெய்தாய்
காலையெழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக்கண்டா
மாலைமதியே மலைமேல் மருந்தே மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே.''

(சுந்தரர்)

-''தூவிமயில்
ஆடும் பொழிற்கச்சூர் ஆலக் கோயிற்குள் அன்பர்
நீடும்கனதூய நேயமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மருந்தீஸ்வரர் திருக்கோயில்

திருக்கச்சூர் & அஞ்சல்
(வழி) சிங்கப்பெருமாள்கோயில் S.O. 603 204.
செங்கற்பட்டு வட்டம் - காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

27. திருஇடைச்சுரம்

திருவடிசூலம்

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'திருவடி சூலம்' என்று வழங்குகிறது. செங்கற்பட்டு - திருப்போரூர் பேருந்துப்பாதையில் இத்தலம் உள்ளது. செங்கற்பட்டு ரயில் நிலையத்திலிருந்து திருப்போரூர் செல்லும் பேருந்தில் ஏறி, 'திருவடிசூலம்' சாலை நிறுத்தத்தில் இறங்கி 1 கி. மீ. உள்ளே சென்றால் ஊரை அடையலாம். (செங்கற்பட்டு - திருக்கழுக் குன்றம் பாதையில் சென்றால் இடப்புறமாகத் திருப்போரூர் செல்லும் பாதை பிரிகிறது. இப்பிரிவுப் பாதையில் திருப்போரூர் நோக்கி 3 கி. மீ. சென்றால் 'திருவடி சூலம்' நிறுத்தம் வரும். சாலையோரத்தில் கோயில் பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது. கார், தனிப் பேருந்து முதலியன கோயில்வரை செல்லும். ஊர்க்கோடியில் கோயில் உள்ளது. பழமையான கோயில். மலைகள் சூழ்ந்த இயற்கைச் சூழலில், வயல்களை ஒட்டினாற்போல் கோயில் அமைந்துள்ளது.

இறைவன் - ஞானபுரீஸ்வரர், இடைச்சுரநாதர்.

இறைவி - கோபரத்னாம்பிகை, இமயமடக்கொடி.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

கௌதமரிஷியும், சனற்குமாரரும் வழிபட்ட தலம். அம்பாள், பசு வடிவில் வந்து பால்சொரிந்து வழிபட்ட தலம். ஊர், சிறிய கிராமம். பழைமையான, கருங்கல் கட்டமைப்புடைய திருக்கோயில். இராஜ கோபுரமில்லை. கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்காகத் திருப்பணி உண்டியல் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. முகப்பு வாயிலுக்கு முன்னால் இடப்பால் வரசித்தி விநாயகர் சந்நிதி உள்ளது. வலப்பால் குளம் உள்ளது - படித்துறைகள் செம்மையாக இல்லை. (தாமரைக் குளம்). முகப்பு வாயில் தெற்கு நோக்கியது.

வாயிலில் நுழைந்து விநாயகரைத் தொழுது, வலமாகப் பிராகாரம் சுற்றி வந்தால் பிரம்மாண்டேஸ்வரர் சந்நிதியும் அதையடுத்து பிரம்மாண்டேஸ்வரி சந்நிதியும் தனித்தனியே உள்ளன.

கொடிமரம் இல்லை. பலிபீடம், நந்தி மட்டுமே உள்ளன. பக்கத்தில் வில்வமரம் உளது. உள் (முகப்பு) வாயிலில் நுழைந்து, மண்டபம் தாண்டி, வலமாகச் சுற்றி வந்தால் நால்வர் பிரதிஷ்டை

Koviloor Digital Library

உள்ளது. விநாயகர், சந்நிதியும், வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிரமணியர் சந்நிதியும் அடுத்து உள்ளன. அடுத்த தரிசனம் பைரவர்.

கருவறை அகழி அமைப்புடையது. நல்ல கற்றளி. மூலவர் சந்நிதிக்கு இருபுறமும் விநாயகரும் முருகப்பெருமானும் காட்சியளிக்கின்றனர்.

உள்ளே நுழைந்ததும் கருவறையுள் நேரே அம்பாள் (தெற்கு நோக்கி) காட்சி தருகின்றாள். நின்ற திருக்கோலம். சுவாமி கிழக்கு நோக்கிய தரிசனம்.

மூலவர் - சுயம்பு - மரகதலிங்கம் (பச்சைக்கல்). சிவலிங்கத் திருமேனியில் தீபாராதனை செய்யும்போது அவ்வொளி பிரகாசமாகத் தெரிகின்றது. அற்புதமான அருமையான மரகதலிங்கத் தரிசனம். சதுரபீட ஆவுடையார்.

இத்தலத்தில் சிவராத்திரி மிகவும் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. அந்நாளில் நான்கு சாம வழிபாடுகளும் முறையாக நடைபெறுகின்றன. திரளானோர் வந்து தரிசிக்கின்றனர்: இதுதவிர பிரதோஷம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. பெருவிழா இல்லை.

சுவாமி அம்பாள் விமானங்கள், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாப் பணிகளுள் சேர்க்கப்பட்டுத் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றம் அ/மி. வேதகிரீஸ்வரர் தேவஸ்தானத்துடன் இக்கோயில் சேர்க்கப்பட்டுள்ளது.

''கானமுஞ் சுடலையுங் கற்படு நிலனும்
காதலர் தீதிலர் கனன் மழுவாளர்
வானமு நிலமையுமிருமையு மானார்
வணங்கவுமிணங்கவும் வாழ்த்தவும் படுவார்
நானமும் புகையொளி விரையொடு கமழ
நளிர் பொழில் இள மஞ்ஞை மன்னிய பாங்கர்
ஏனமும் பிணையலும் எழில் திகழ் சாரல்
இடைச்சுர(ம்) மேவிய இவர் வணமென்னே''

(சம்பந்தர்)

(இப்பதிகம் முழுவதிலும் சுவாமியின் (மரகதலிங்கத்தின்) வண்ணம் (அழகு) புகழ்ந்து பாடப்பட்டுள்ளது).

Koviloor Digital Library

"-ஈடில்லை
என்னுந் திருத்தொண்டர் ஏத்தும் இடைச்சுரத்தின்
மன்னும் சிவானந்த வண்ணமே"

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஞானபுரீஸ்வரர் திருக்கோயில்
திருவடிசூலம்
(வழி) செம்பாக்கம் S.O. 603 108
காஞ்சிபுரம் மாவட்டம்.

28. திருக்கழுக்குன்றம்

தொண்டை நாட்டுத் தலம்

செங்கற்பட்டில் இருந்து அடிக்கடி பேருந்துகள் உள்ளன. 14 கி. மீ. தொலைவு. செங்கற்பட்டிலிருந்து மாமல்லபுரம், கல்பாக்கம் முதலிய ஊர்களுக்கான பேருந்துகளும் இத்தலத்தின் வழியே செல்கின்றன.

வேதமே, மலையாய் இருத்தலின் 'வேதகிரி' எனப் பெயர் பெற்றது. வேதாசலம் கதலிவனம் கழுக்குன்றம் என்பன இத்தலத்துக் குரிய வேறு பெயர்கள். மலைமேல் ஒரு கோயில் உள்ளது. ஊருக்குள் ஒரு கோயில் உள்ளது. இவை முறையே மலைக்கோயில் தாழக்கோயில் என்றழைக்கப்படுகின்றன. மலை 500' உயரமுள்ளது. மலையில் நாடொறும் உச்சிப்போதில் கழுகு வந்து உணவு பெற்றுச் செல்லுவதால் இதற்குப் 'பட்சி தீர்த்தம்' என்று பெயர். மலைமீது உள்ள கோயிலில் வீற்றிருந்த்ருளும் இறைவன் - வேதகிரீஸ்வரர் (சுயம்பு மூர்த்தி), இறைவி - சொக்கநாயகி. சுனை ஒன்றும் உள்ளது.

மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். வடநாட்டிலிருந்து வரும் யாத்ரிகர்களுக்குப் 'பட்சி தீர்த்தம்' என்று சொன்னால்தான் புரியும். மலைமீது ஏறிச்செல்ல நன்கமைக்கப்பட்ட மலைப்பாதை - செம்மையான படிகளுடன் உள்ளது.

இம்மலையை வலம் வருதல் சிறப்புடையது. வலம் வருவதற் கேற்ப நல்ல பாதையுள்ளது. விளக்கு வசதிகள் உள்ளன. இதைச் சேர்ந்த கிராமங்கள் சுற்றிலும் உள்ளன. அன்னக்காவடி விநாயகர்,

Koviloor Digital Library

சனிபகவான் சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள சங்கு தீர்த்தத்தில் விடியற்காலையில் நீராடி, இம்மலையை வலம் வரின் உடற்பிணி நீங்கும். இதைச்சில மருத்துவர்களே மேற்கொண்டு அநுபவத்தில் உணர்ந்துள்ளனர்.

மூவர் பாடலும் பெற்ற தலம். மணிவாசகருக்கு இறைவன் குருவடிவாய்க் காட்சி தந்தருளிய தலம். அப்பெருமான் வாக்கிலும் - திருவாசகத்திலும் இத்தலம் இடம் பெற்றுள்ளது.

இத்தலத்திற்கு அந்தகக்கவி வீரராகவப் புலவர் பாடியுள்ள தலபுராணம் உள்ளது. ஊருக்குள் உள்ள கோயில் 'தாழக்கோயில்' என்றழைக்கப்படுகின்றது. கோயிலின் சந்நிதி வீதியில் திருவாவடுதுறை ஆதீனக்கிளை மடம் ஒன்றுள்ளது.

இறைவன் - பக்தவத்சலேஸ்வரர்.

இறைவி - திரிபுரசுந்தரி.

தலமரம் - வாழை.

தீர்த்தம் - சங்கு தீர்த்தம்.

மிகப் பழமையான கோயில். நாற்புறமும் நான்கு பெரிய கோபுரங்கள் உள்ளன - கல்மண்டபத்தின் மீது செங்கல்லால் அமைக்கப்பட்டவை. இவற்றுள் பிரதானமானது கிழக்குக் கோபுரம். கோயிலுக்கு வெளியே 5 தேர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

சந்நிதிக்கு நேர் எதிரில் வீதியின் கோடியில் மிக்க புகழுடைய 'சங்கு தீர்த்தம்' உள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இக் குளத்தில் சங்கு பிறக்கின்றது. இதிற்கிடைத்த சங்குகள் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மார்க்கண்டேயர் இறைவனை வழிபடப் பாத்திரமின்றித் தவிக்க இறைவன் சங்கை உற்பத்தி செய்துதந்ததாகவும், அதுமுதற்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இக்குளத்தில் சங்கு பிறப்பதாகவும் சொல்லப்படுகிறது.

சங்கு தீர்த்தம் - பெரிய குளம். ஒரு பாதி படித்துறைகள் மட்டுமே செம்மையாக்கப்பட்டுள்ளன. நீராழி மண்டபமும், நீராடுவதற்குரிய படித்துறை மண்டபமும் உள்ளன.

இக்குளத்திற்குச் சற்றுத் தொலைவில் 'ருத்ரகோடி' என்னும் பெயர் பெற்ற வைப்புத் தலம் உள்ளது. குளக்கரையிலிருந்து பார்த்தாலே இக்கோயில் விமானம் தெரிகின்றது. மிகப்பழமையானது. இங்குள்ள இறைவன் - ருத்ரகோடீஸ்வரர், இறைவி - அபிராமசுந்தரி.

Koviloor Digital Library

இவ்விடத்தைத் தற்போது மக்கள் 'ருத்ராங்கோயில்' என்றழைக்கின்றனர்.

தாழக்கோயில் கிழக்குக் கோபுரம் ஏழு நிலைகளையுடையது. உச்சியில் நவ கலசங்கள். கோபுரத்தில் சிற்பங்களில்லை. விநாயகரும் சுப்பிரமணியரும் இருபுறமும் உள்ளனர். கருங்கல்லில் அமைந்துள்ள துவாரபாலகர்கள் உருவங்கள் அழகுடையவை. கிழக்குக் கோபுர வாயில் வழியே உட்புகுவோம். வலப்பால் மண்டபத்தில் அலுவலகம் உள்ளது. இடப்பால் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் பக்கமாகத் திரும்பி வெளிப் பிராகாரத்தை வலம் வரும் போது, விநாயகர் சந்நிதி, ஆமை மண்டபம் முதலியன உள்ளன. இம்மண்டபத் தூண்கள் கலையழகு மிக்கவை.

வடக்கு வாயிலை அடுத்து வரும் போது 'நந்தி தீர்த்தம்' உள்ளது. கரையில் நந்தி உள்ளது. வலமாக வரும்போது அலுவலக மண்டபக் கற்சுவரில், (நமக்கு இடப்பால்) அழகான **அஷ்டபுஜ துர்க்கையின்** சிற்பம் உள்ளது. இதன் கலையழகு கண்டுணரத்தக்கது.

நான்கு கால் மண்டபம். ஒருபுறம் துவார விநாயகர், மறுபுறம் சுப்பிரமணியர். இருவரையும் வணங்கி, ஐந்து நிலைகளையுடைய உள் கோபுரத்துள் நுழைகிறோம். இக்கோபுரம் வண்ணக்கோபுரமாகச் சிற்பங்களுடன் காட்சி தருகிறது. நுழையும்போது, வாயிலில் இடப்பால் 'அநுக்கிரக நந்திகேஸ்வரர்' தேவியுடன் காட்சி தருகின்றார். உள் நுழைந்து வலமாகப் பிராகாரத்தில் வரும்போது, சோமாஸ்கந்தர் சந்நிதி மிக அழகாகவுள்ளது.

இப்பிராகாரத்தில்; ஆத்மநாதர் சந்நிதி (பீடம் மட்டுமே கொண்டது), இதன் எதிரில் மாணிக்கவாசகர் சந்நிதி, ஏகாம்பரநாதர், தலவிநாயகரான வண்டுவன விநாயகர், ஜம்புகேஸ்வரர், அருணாசலேஸ்வரர் முதலிய சந்நிதிகள் தனித் தனிக் கோயில்களாக அமைந்துள்ளன. ஆறுமுகப்பெருமான் சந்நிதி அழகாகவுள்ளது. கந்தர் அநுபூதிப் பாடல்கள் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன. பக்கத்தில் அழகான முன் மண்டபத்துடன் அம்பாள் சந்நிதி அமைந்துள்ளது. உள்ளே வலம் வரலாம். நின்ற திருக்கோலம்.

அம்பாளுக்கு மார்பில் ஸ்ரீ சக்கரப் பதக்கம் சார்த்தப்பட்டுள்ளது. ஆண்டில் (1) ஆடிப்பூரம் (2) பங்குனி உத்திரம் (3) நவராத்திரியில் வரும் நவமி ஆகிய மூன்று நாள்களில் மட்டுமே இங்கு அம்பாளுக்கு முழு அபிஷேகம் செய்யப்பெறுகின்றது. நாடொறும் பாத பூஜை மட்டுமே நடைபெறுகின்றது. அம்பாளின் கருவறையை வலம் வரும்போது அபிராமி அந்தாதிப் பாடல்களை சலவைக் கற்களில்

Koviloor Digital Library

பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளதைப் பாராயணம் செய்தவாறே வலம் வரலாம்.

அம்பாளுக்கு எதிரில் 'பிரத்யட்ச வேதகீரீஸ்வரர்' சந்நிதி உள்ளது. அடுத்துள்ள நடராச சபையில் உள்ள மூர்த்தி சிறியதாயினும் அழகாகவுள்ளது. வலமாக வந்து மரத்தாலான கொடிமரத்தின் முன்பு நின்று வலப்பால் உள்ள அகோர வீரபத்திரரைத் தொழுது, துவார பாலகர்களை வணங்கி உட்சென்றால், உள்சுற்றில் வலம் வரும்போது சூரியன் சந்நிதியும் அதையடுத்து விநாயகர், சுந்தரர் முதலாகவுடைய அறுபத்துமூவர் மூலத்திருமேனிகளும், அடுத்து ஏழு சிவலிங்கங்களும், அதனையடுத்து அறுபத்துமூவரின் உற்சவத் திருமேனிகளும் உள்ளன. பைரவர் வாகனமின்றி உள்ளார்.

மூலவர் தரிசனம் - சிவலிங்கத் திருமேனி (பக்தவத்சலேசுவரர்.) சதுரபீட ஆவுடையாரில் அமைந்துள்ள அழகான மூர்த்தம். கருவறை 'கஜப்பிரஷ்ட' அமைப்புடையது. கோஷ்டமூர்த்தங்களாக; விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, ஆகியோர் உளர். சண்டேஸ்வரர் உள்ளார். மறுபக்கத்தில் தீர்த்தக் கிணறு உள்ளது. நித்திய வழிபாடுகள் செம்மையாக நடைபெறுகின்றன.

சித்திரையில் பெருவிழா நடைபெறுகின்றது. கொடியேற்றம், யாகசாலை முதலியன மலைமீது நிகழும். திருவிழாக்கள்; அனைத்தும் தாழக்கோயிலில்தான். சித்திரைப் பெருவிழாவில்; மூன்றாம் நாள் உற்சவத்தில் காலையிலும், பத்தாம் நாள் விழாவில் இரவிலும்; சுவாமி அதிகாரநந்தியிலும், பஞ்சமூர்த்திகளுடன் முறையே எழுந்தருளி மலைவலம் வருவது இன்றும் நடைபெறுகின்றது. ஆடிப்பூரப் பெருவிழாவில் பத்தாம் நாள் அன்று அம்பாள் எழுந்தருளி மலைவலம் வருவதும் வழக்கம். அடிவாரத்தில் மாமல்லபுரம் போகும் பாதையில் நால்வர் கோயில் உள்ளது. இப்பகுதி 'நால்வர் கோயில்பேட்டை' என்று வழங்குகிறது.

கல்வெட்டில் இத்தலம் 'உலகளந்த சோழபுரம்' என்று குறிப் பிடப்படுகிறது. தொண்டை நாட்டுக்குரிய 24 கோட்டங்களுள் இது களத்தூர்க் கோட்டத்தைச் சார்ந்தது. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர். சோழர், பாண்டியர், ராஷ்டிரகூடர் காலத்திய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

''தோடுடையான் ஒருகாதில் தூயகுழை தாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருளேம நடமாடும்
காடுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே'' *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

''மூவிலை வேற்கையானை மூர்த்திதன்னை
முதுபிணக்காடுடையானை முதலானானை
ஆவினில்ஐந்து உகந்தானை அமரர்கோனை
ஆலாலம் உண்டுகந்த அம்மான்தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன்தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான்தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்நானே.'' *(அப்பர்)*

'நீளநின்று தொழுமின் நித்தலு(ம்) நீதியால்
ஆளுநம் வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காளகண்டன் உறையும் தண் கழுக்குன்றமே'. *(சுந்தரர்)*

'பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன்நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாததோர் இன்பமே வரும்துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல் விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே.'

(மாணிக்கவாசகர்)

வேதவெற்பிலே புனத்தில் மேவிநிற்கு - மபிராம
வேடுவச்சி பாதபத்ம மீதுசெச்சை - முடிதோய
ஆதரித்து வேளைபுக்க ஆறிரட்டி - புயநேய
ஆதரத் தொடாத ரிக்க ஆனபுத்தி - புகல்வாயே
காதுமுக்ர வீரபத்ர காளி வெட்க - மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலர்பத்தி - யிமையோரை
ஓதுவித்த நாதர் கற்க வோதுவித்த - முனிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை யோதுவித்த - பெருமாளே.

(திருப்புகழ்)

-'நன்னெறியோர்
துன்னு நெறிக்கோர் துணையாந் தூய கழுக்குன்றினிடை
முன்னு மறிவானந்த மூர்த்தமே.' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி :-

அ/மி. வேதகிரீஸ்வரர் திருக்கோயில்
திருக்கழுக்குன்றம் & அஞ்சல்
காஞ்சிபுரம் மாவட்டம். 603 109.

Koviloor Digital Library

29. அச்சிறுபாக்கம்

அச்சாப்பாக்கம்

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் அச்சரப்பாக்கம் என்று வழங்குகிறது. சென்னை - திருச்சி தேசிய நெடுஞ் சாலையில், மதுராந்தகத்தை அடுத்து இவ்வூர் உள்ளது. புகைவண்டி நிலையம், செங்கற்பட்டிலிருந்தும் அடிக்கடி பேருந்து வசதி உள்ளது.

விநாயகரை வணங்காது, திரிபுரம் எரிக்கச் சென்ற இறைவனுடைய தேர் அச்சு முறிந்த இடம் (அச்சு + இறு + பாக்கம்) ஆதலின் இப்பெயர் பெற்றது. இறைவன் இத்தலத்தில் விநாயகருக்கு அருள் புரிந்து, தொடர்ந்துசென்று திருவதிகையில் அசுரரை (திரிபுராதிகளை) வென்றதாக வரலாறு. 'மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் தென்பால் தனியூர் அச்சிறுபாக்கம்'' என்பது கல்வெட்டுக் குறிப்பு.

இறைவன் - பார்க்கபுரீஸ்வரர், ஆட்சீஸ்வரர், ஆட்சிகொண்ட நாதர், ஸ்திரவாசபுரீஸ்வரர், முல்லைக்கானமுடையார்.

Koviloor Digital Library

இறைவி - இளங்கிளியம்மை, சுந்தரநாயகி, பாலசுகாம்பிகை, அதிசுந்தரமின்னாள்.

தலமரம் - சரக்கொன்றை

தீர்த்தம் - (1) சங்கு தீர்த்தம் (பேருந்து நிற்குமிடத்தில் உள்ளது. பயன்படும் நிலையிலில்லை.)

(2) சிம்ம தீர்த்தம் (கோயிலில் பிராகாரத்தில் தலமரத்தினடியில் உள்ளது.)

சம்பந்தர் பாடல் பெற்றது.

முன்பொருமுறை இவ்வூர் வழியே சென்ற பாண்டிய மன்னன் ஒருவன் காட்டு முல்லைக் கொடிகள் சூழ்ந்த காட்டைக் கண்டான். பொன்நிறமான உடும்பு ஒன்று ஓடுவது கண்டு அவன் துரத்திச்செல்ல அது ஓடிச்சென்று சரக்கொன்றை மரத்தின் பொந்தில் புகுந்து கொண்டது. அரசன் ஆணைப்படி ஏவலர்கள் அம்மரத்தை வெட்ட, குருதி வெளிப்பட, தோண்டுகையில் சிவலிங்கம் வெளிப்பட்டது. வெட்டிய தழும்புபட்ட இறைவனுக்கு, அரசன் ''திரிநேத்திரதாரி'' என்னும் முனிவரிடம் செல்வத்தைத் தந்து கோயில் கட்டச் செய்தான். அவரும், தன்னையும், மன்னனையும் ஆட்கொண்ட இறைவனுக்கு, இரு கருவறைகள் கொண்ட இக்கோயிலைக் கட்டினார். கோயிலைக் கண்ட மன்னன் இரு சந்நிதிகள் அமைந்திருப்பது கண்டு முனிவரைக் கேட்க, அவர் அரசே! உம்மை ஆட்கொண்டவர் ''உமையாட்சீஸ்வரர்''; எமையாட்கொண்டவர் ''ஆட்சீஸ்வரர்'' என்று மறுமொழி தந்ததாக வரலாறு கூறுகின்றது.

உமையாட்சீஸ்வரர் சந்நிதி, வாயிலுக்கு நேரே உள் அடங்கி, பிராகாரத்தில் உள்ளது. வாயிலுக்குச் சற்றுத் தள்ளி முன்னால் இருக்கும் மூலவர் சந்நிதி ஆட்சீஸ்வரர்.

இறைவன், ''திரிநேத்திரதாரி'' முனிவருக்குக் காட்சி தந்த நினைவாக இன்றும் பெருவிழாவில் ஏழாம் நாள் மாலை கொன்றையடி சேவை விழா நடைபெறுகின்றது. கௌதமர், கண்வர் முதலியோர் வழிபட்ட தலம். பழமையான கோயில், ராஜகோபுரம் கிழக்கு நோக்கி ஐந்து நிலைகளுடன் காட்சியளிக்கிறது.

கோயிலுக்கு எதிரில் 'வள்ளுவ மண்டபம்' என்றழைக்கப்படும் மண்டபமொன்றுள்ளது, அதில் விநாயகர் உள்ளார்.

ராஜகோபுர வாயிலில் நுழையும்போதே வலப்புறத் தூணில் நரசிம்ம அவதாரச் சிற்பமுள்ளது. உள்ளே நுழைந்ததும் வலப்பால்

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதி உள்ளது. பக்கத்தில் நவக்கிரக சந்நிதி, செப்புக் கவசமிட்ட கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளன. வெளிப்பிராகாரத்தில் தலமரமாகிய சரக்கொன்றை உள்ளது. இம்மரத்தினடியில் சிவலிங்கம், அம்பாள், எதிரில் நந்தி, பக்கவாட்டில் நின்று கைகுவித்து வணங்கும் நிலையில் திரிநேத்திரதாரி முனிவரின் உருவம் முதலியவை உள்ளன. அடுத்துள்ளது யாகசாலை, உள்வாயிலைக் கடந்து செல்லும் போது, துவார விநாயகரும், சுப்பிரமணியரும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளனர். உள்பிராகாரத்தில் நால்வர் பிரதிஷ்டையும், சித்திபுத்தி விநாயகர், பரவையார் சுந்தரர் சங்கிலியார் சந்நிதியும் தொடர்ந்து அறுபத்துமூவர் சிலாரூபங்களும் உள்ளன. அடுத்து வலம் வரும்போது தாயார் சந்நிதியும், சீனிவாசப் பெருமாள் சந்நிதியும் உள்ளன. அடுத்து உமையாட்சீஸ்வரர் சந்நிதி உள்ளது. துவார கணபதியை வணங்கி, உட்சென்று இறைவனைத் தரிசிக்கலாம்.

உள்பிராகாரத்தில் சரஸ்வதி, லட்சுமி, சப்தமாதர்கள், அடுத்து ஒரு காலில் யோகப்பட்டத்துடன் காட்சி தரும் ஐயப்பன் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. வலப்பால் அம்பாள், உமையாட்சீஸ்வரர் சிவலிங்கத் திருமேனி, தரிசித்து வெளியே வந்து, பிராகார வலம் வரும்போது பழனியாண்டவர் சந்நிதியும் அடுத்து வள்ளி தெய்வயானை உடனாகிய ஆறுமுகர் சந்நிதியும் அழகாக உள்ளன. அறுபத்துமூவர் உற்சவத் திருமேனிகள் வரிசை கண்ணுக்கு நிறைவான காட்சி. நடராச சபையும் அடுத்து பிரமகபால மாலையுடன் கூடிய பைரவர் சந்நிதியும் உள்ளன. பக்கத்தில் சூரியக் கடவுள். நேரே மூலவர் - ஆட்சீஸ்வரர் சந்நிதி உள்ளது. துவார கணபதியை வணங்கி உட்செல்லவேண்டும். துவாரகணபதிக்கு மேற்புறம் ஜம்புகேஸ்வரச் சிற்பமும், பசுபதீஸ்வரச் சிற்பமும் உள்ளன. மறுபுறத்தில் சண்டேசுவரர், தாதை தாளை அறவீசும் காட்சி சிற்ப வடிவிலுள்ளது. இருபுறமும் துவாரபாலகர்கள். உள்ளே பிட்சாடனர், நால்வர். விநாயகர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் முதலிய உற்சவத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் - ஆட்சீஸ்வரர் - சிவலிங்கத் திருமேனி - சுயம்பு. தாழ அமைந்த அகலமான சதுர ஆவுடையார். திருமேனி சொரசொரப்பாக வுள்ளது. பெருமானுக்கு முன்பு நின்று நாம் வழிபடுமிடத்தில் கீழே கிணறுள்ளதாம். கருங்கற்கள் போட்டு மூடப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் கற்களின் இடுக்கு வழியாகப் பார்த்தால் நீர் இருப்பது நன்கு தெரியுமாம். சுவாமியின் பின்புறம் வெட்டுப் பட்ட பள்ளம் உள்ளது.

Koviloor Digital Library

கோஷ்டமூர்த்தங்களாக; சோமாஸ்கந்தர், விநாயகர், தட்சிணா மூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது. சோமாஸ்கந்த (கோஷ்ட) மூர்த்தத் திற்குக் கீழே நாகமொன்று சிவலிங்கத்தை வழிபடுவது போலவும். காரைக்காலம்மை தலையால் நடப்பதுபோலவும், கண்ணப்பர் கண்ணைப் பெயர்ப்பது போலவும் இறைவனின் கைவெளிப்பட்டுத் தடுப்பது போலவும், சிற்பங்கள் கல்லில் உள்ளன. இருமான்களும் ஒருதலையுடன் கூடிய சிற்பம் அழகாகவுள்ளது. கருவறைச் சுவரில் நிரம்பக் கல்வெட்டுக்கள் உள்ளன.

இளங்கிளியம்மை சந்நிதி அழகாகவுள்ளது. அம்பாள் நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். அபிராமி அந்தாதி, ஞானசம்பந்தரின் தலப்பதிகம், அப்பரின் க்ஷேத்திரக் கோவைப் பதிகப் பாடல் முதலியன கல்லிற் பொறித்துப் பதிக்கப்பட் டுள்ளன. துவாரகணபதி ஒரு புறமும் மறுபுறம் பாலசுப்பிரமணியரும் உள்ளனர். சித்திரை மாதத்தில் பெருவிழா பத்து நாள்களுக்கு நடைபெறுகிறது. நாடொறும் நான்கு கால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன. பெருவிழாவில் பதினோராம் நாள், சுவாமி 'பெரும்பேறு கண்டிகை' கிராமத்திற்குச் சென்று அகத்தியருக்குக் காட்சிதரும் ஐதீகம் நடைபெறும். நவராத்திரி சிறப்பாக நடைபெறு கிறது. தனியார் கட்டளையில் பிரதோஷ புறப்பாடும் நடைபெறுகிறது.

இவ்வூரைச் சேர்ந்த தனபால் செட்டியார் என்பவரின் பெரு முயற்சியால் கோயிலில் உள்ள அறுபத்துமூவர் உற்சவத் திருமேனிகள் செய்யப்பட்டுள்ளன, என்பதைக் கேட்கும்போது அவரைப் போற்றுகின்றது நம் நெஞ்சு. தல புராணம் இருப்பதாகத் தெரிய வில்லை. நித்தசுதானந்த சுவாமிகள் என்பவரால் (1) ஆட்சீஸ்வரர் அருட்குறிமாலை (2) இளங்கிளியம்மை அருட்குறிமாலை (3) ஆட்சீஸ்வரர் அருளிரத்தமாலை (4) அருமருந்திரத்த மாலை என்னும் நூல்கள் பாடப்பட்டு 1911-ல் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பாடல்கள் எமக்குக் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கிடைத்ததில். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டுத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

Koviloor Digital Library

''தேனினும் இனியர் பாலன நீற்றர்
தீங்கரும்பனையர் தம் திருவடி தொழுவார்
ஊனயந்துருக உவகைகள் தருவார்
உச்சிமேல் உறைபவர் ஒன்றலாதூரார்
வானகமிறந்து வையகம் வணங்க
வயங்கொள நிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையின் உரிவை போர்த்த எம் அடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே''

(சம்பந்தர்)

''-துன்னுபொழில்
அம்மதுரத்தேன் பொழியும் அச்சிறு பாக்கத் துலகர்
தம்மதம் நீக்கும் ஞான சம்மதமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஆட்சீஸ்வரர் திருக்கோயில்
அச்சிறுபாக்கம் & அஞ்சல் - 603 301.
மதுராந்தகம் வட்டம் - காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

30. திருவக்கரை

தொண்டை நாட்டுத் தலம்.

(1) திண்டிவனம் - மயிலம் - வானூர் வழியாகப் பாண்டிச்சேரி செல்லும் பாதையில் சென்று, 'பெரும்பாக்கம்' என்னும் இடத்தில் பிரியும் கிளைப் பாதையில் 7 கி. மீ. சென்றால் திருவக்கரையை அடையலாம். இக்கிளைப் பாதை பிரியும் இடத்தில் ஊர்ப்பெயர் கொண்ட கைகாட்டி உள்ளது. நல்ல தார்ச் சாலை, கோயிலின் வாயில் வரை பேருந்தில் செல்லலாம். ''வராகநதி'' என்றழைக்கப்படும் 'சங்கராபரணி' ஆற்றின் கரையில் பெரிய ராஜகோபுரத்துடன் கோயில் கம்பீரமாகவுள்ளது. மிகப் பழமையான கோயில்.

(2) விழுப்புரத்திலிருந்து நகரப்பேருந்து செல்கிறது. மரங்கள் கல்லாக மாறியிருக்கும் விந்தையுடையது, இவ்வூர். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குமுன் பூமியில் புதைந்த மரங்கள், பட்டைகள், கிளைகள் கூடிய அதே தோற்றத்தோடு இன்று

Koviloor Digital Library

கல்லாக - கல்மரங்களாக மாறிக் காட்சியளிக்கின்றன. நல்ல நீரில் உள்ள 'சிலிகா' என்னும் கண்ணாடிக்கல் அணுக்கள், அம்மரங்களுள் ஊடுருவி மர அணுக்களை மாற்றிவிட்டு, மரம் முழுவதும் நிறைந்து, மரங்களை உறுதியான கற்களாக மாற்றிவிட்டன என்று அறிவியலார் கூறுகின்றனர். நெய்வேலியில் பூமிக்குக்கீழ் உள்ள உப்புநீரில் மரங்கள் புதைந்ததால் அம்மரங்கள் கறுப்பாக (நிலக்கரியாக) மாறின; இங்கு வெள்ளையாக மாறின என்பது அறிவியற், செய்தி, இப்பகுதிக்குப் பக்கத்திலுள்ள 'செம்மேடு' என்னுமிடத்தில் நிலவியல் துறையினரால் 'முதுமக்கள் தாழி'யும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இத்தகு சிறப்புடைய இப் பகுதியில் உள்ள இக்கோயில் பழமைச் சிறப்புடன் மிகப்பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ளது. கோயிலுக்குள் நிழல்தரும் மாமரங்கள் உள்ளன.

வக்கிரன் வழிபட்ட தலம். வக்கரை என்று பெயர் பெற்றது. வல் + கரை - வலிய கரையையுடைய இடமாதலின் (கோயிலைச் சுற்றிலும் கற்பாறைகள்) வற்கரை - வக்கரை என்றாயிற்று என்பதும் பொருந்து கின்றது.

இறைவன் - சந்திரசேகரேஸ்வரர், சந்திரமௌலீஸ்வரர்.

இறைவி - அமிர்தேஸ்வரி, வடிவாம்பிகை.

தலமரம் - வில்வம்.

தீர்த்தம் - சந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம். ஒன்று தூர்ந்து போயிற்று. மற்றொன்றுதான் பக்கத்தில் சிதலமாகியுள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

பழமையான, பெரிய ராஜகோபுரம் ஏழு நிலைகளுடன் காட்சி தருகின்றது. கோயிலுக்குப் பக்கத்தில் குளம் உள்ளது. படிகள் இன்றிச்சிதலமாகியுள்ளது கருங்கல்மதிற்சுவர் நீளமாக முழுவதுமாக உள்ளது. உள்ளே மாமரங்கள் அதிகம் உள்ளன. ராஜகோபுரத்தைக் கடந்ததும் இடப்பக்கம் ''வக்கிரகாளி'' சந்நிதி உள்ளது. 'வக்கரை'யில் உள்ள காளியாதலின் 'வக்கரைக்காளி' என்றும் அழைக்கப்படுகிறாள். சந்நிதி முகப்பில் நான்கு பாலகியர் உருவங்கள் உள்ளன. காளியின் திருவுருவம் மிக்க அழகுடையது.

''சுடர்விடும் தீக்கனல்களைப் பின்னணியில் கொண்ட தலை மண்டையோட்டுக் கிரீடம் - வலக்காதில் பிரேத குண்டலம் - இடக்காதில் பத்திரகுண்டலம் - எட்டுக்கரங்கள் - வலக்கைகளில் பாசம், சக்கரம்,

Koviloor Digital Library

வாள் கட்டாரியும் இடக்கைகளில் உடுக்கைபாவனை, கேடயம் கபாலம் ஆள்காட்டி விரல் பூமியைச் சுட்டும் நிலையும், தலை மாலையையே மார்புக் கச்சமாகக் கட்டியிருக்கும் நிலை - நீண்டு தொங்கும் தலைமாலை - கோரைப் பற்கள் - பெரிய உருண்டை சின விழிகள் - நீண்டகால்களில் தண்டச்சரங்கள் - சாய்ந்த நிலை - சூலம் - அம்மம்மா' எவ்வளவு அற்புதமான - வக்கிரமான திருவுருவம். இங்குப் பௌர்ணமி விசேஷம். பௌர்ணமி நாளில் விழுப்புரம், பாண்டிச்சேரி முதலிய ஊர்களிலிருந்து சிறப்புப் பேருந்துகள் விடப்படுமாதலின் ஏராளமானோர் வந்து தரிசித்துச் செல்கின்றனர். வெள்ளிக்கவசம் சார்த்தப்படுகிறது.

சந்நிதிக்கு எதிரில் வக்ராசுரன் பூசித்த 'வக்கிர லிங்கம்' உள்ளது. மேற்கு நோக்கியது - சற்றுப் பெரிய லிங்கம் நேரே சென்றால். வலப்பால் ஒருகல் மண்டபம் உள்ளது - பழுதடைந்த நிலை. பெரிய நந்தி (கல்லாலானது) உள்ளது. இடப்பால் விநாயகர் சந்நிதி. அடுத்துள்ள கோபுரம் 'கிளிக்கோபுரம்' என்றழைக்கப்படுகிறது. மூன்று நிலைகளையுடையத்.

உள்பிராகாரத்தில் குண்டலி மாமுனிவர் சந்நிதி - முனிவரின் சமாதியின் மீது சிவலிங்கம் உள்ளது. இதற்குக் கோஷ்டமூர்த்தமாகத் தட்சிணாமூர்த்தி, திருமால், வரதராஜப் பெருமாள் உள்ளனர். எதிரில் கருடாழ்வார் உள்ளார். சஹஸ்ரலிங்கம் உள்ளது. வலமாக வந்து படிகளேறி மூலவரைத் தரிசிக்கச் செல்ல வேண்டும். துவார பாலகர்கள் இருபுறமும் உளர். உள்சுற்றில் நால்வர் பிரதிஷ்டை.

கோஷ்ட மூர்த்தமாகத் தட்சிணாமூர்த்தியும், விநாயகரும், ஆறுமுகரும், துர்க்கையும் உள்ளனர். சண்டேசுவரர் எதிரில் உள்ளார். பின்னால் சுவர் ஓரமாகப் பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், பைரவர் சிலாரூபங்கள் வரிசையாக உள்ளன. சதுரஅடிப்பாகத்தின் மீதமைந்த வட்டமான ஆவுடையாரில் உள்ள மூலவர் அழகிய திருமேனி மும்முகத்துடன் விளங்குகிறது - கம்பீரமான தோற்றம்.

அர்த்த மண்டபத்தில் நடராஜா கால் மாறியாடும் திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். தூக்கிய திருவடி இடுப்புக்குமேல் வரை வந்துள்ளது. புதிய அமைப்புடையது. இதை 'வக்கிரதாண்டவம்' என்று குறிப்பிடு கின்றனர். அம்பாள் சந்நிதி நின்ற திருக்கோலம் - தெற்கு நோக்கிய சந்நிதி. நவக்கிரகச் சந்நிதியில் சனிபகவானின் வாகனமாகிய காகம் வழக்கத் திற்கு மாறாகத் தென்புறம் நோக்கியுள்ளது.

Koviloor Digital Library

சோமாஸ்கந்தர் முதலிய உற்சவத் திருமேனிகள் உள்ளன. நாடொறும் காலை மாலை வழிபாடுகள் நடைபெறுகின்றன. குண்டலினி முனிவர் வம்சத்தில் வந்த வக்கிராசுரன் இப்பகுதியை ஆண்டதாகவும், அவனையழிக்க, காளி இறைவனை (சந்திரசேகரரை) வழிபட்டு அவனுடன் போர்புரிந்து வெற்றி பெற்றதாகவும் தலபுராணச் செய்தி கூறுகின்றது. 3-6-1990-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் மரம் கல்லானது உள்ளது.

''சந்திரசேகரனே அருளாய் என்று தண்விசும்பில்
இந்திரனும் முதலா இமையோர்கள் தொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் அனலாய் விழ ஓர் அம்பினால்
மந்தர மேரு வில்லாவளைத் தான்இடம் வக்கரையே.''

''கார்மலி கொன்றையோடும் கதிர்மத்தமும் வாளரவும்
நீர்மலியுஞ் சடைமேல் நிரம்பா மதிசூடி நல்ல
வார்மலி மென்முலையாளொடும் வக்கரை மேவியவன்
பார்மலி வெண்டலையிற் பலிகொண்டுழல் பான்மையனே.''

(சம்பந்தர்)

-''எம்மதமும்
சார்ந்தார் வினைநீக்கித் தாங்கு திருவக்கரையுள்
நேர்ந்தார் உபநிடத நிச்சயமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சந்திரசேகரேஸ்வரர் திருக்கோயில்
திருவக்கரை & அஞ்சல் - 604 304.
வானூர் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

31. திருஅரசிலி

ஒழிந்தியாப்பட்டு



தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'ஒழிந்தியாப்பட்டு' என வழங்குகின்றது.

(1) திண்டிவனம் - பாண்டிச்சேரி (வழி) கிளியனூர். சாலையில் கிளியனூர் தைலாபுரம் தாண்டி 'கீழ்புத்துப்பட்டு' என்னும் கைகாட்டி மரமும், ஒழிந்தியாப்பட்டு என்னும் கைகாட்டி மரமும் உள்ள இடத்தில் இடப்புறமாகப் பிரியும் அக்கிளைப்பாதையில் 2 கி. மீ. சென்று ஒழிந்தியாப்பட்டு அடையலாம், (கிளைப்பாதை பிரியுமிடத்தில் தேவஸ்தானப்பெயர்ப் பலகையுள்ளது.) (பாண்டிச்சேரியிலிருந்து 17-ஆவது கி. மீ.-ல் இக்கிளைப்பாதை பிரிகிறது).

(2) திருவக்கரையைத் தரிசித்து விட்டு வருவோர் மெயின் ரோடுக்கு வந்து, மயிலம் - வானூர் வழிச் செல்லும் - பாண்டிச்சேரி சாலையில்: திருச்சிற்றம்பலம் கூட்ரோடினை' அடைந்து, அப் பாதையில் திண்டிவனம் செல்லும் மார்க்கத்தில் சென்று, மேற் சொல்லியவாறு 'கீழ் புத்துப்பட்டு, என்னும் கைகாட்டி மரம் உள்ள

Koviloor Digital Library

இடத்தில் வலப்புறமாகப் பிரியும் கிளைப்பாதை வழியே சென்று ஒழிந்தியாப்பட்டு சேரலாம். கோயில் வாயில் வரை பேருந்து செல்லும் - நல்ல சாலை. வாமதேவமுனிவர் வழிபட்ட தலம்.

இறைவன் - அரசிலிநாதர், அஸ்வத்தேஸ்வரர், அரசலீஸ்வரர்.

இறைவி - பெரியநாயகி, அழகியநாயகி.

தலமரம் - அரசு.

தீர்த்தம் - வாமதேவ தீர்த்தம். (அரசடித் தீர்த்தம்).

சம்பந்தர் பாடல் பெற்றது.

சாளுவ வம்ச மன்னனால் கட்டப்பட்ட கோயில், வாமதேவ முனிவர் வழிபட்டுப் பிரதோஷ நாளில் பேறு பெற்றார். சாளுவ மன்னனும் பிரதோஷ விரதம் இருந்து பெருமானைப் போற்றிப் பேறு பெற்றான். ஆதலின் இத்தலத்தில் பிரதோஷ வழிபாடு மிகவும் சிறப்புடையதாகும். ராஜகோபுரத்தை அடுத்து உட்புறத்தில் மூலவரை நோக்கியவாறு பைரவர், சூரியன், உருவங்கள் உள்ளன. உள்சுற்றில் விநாயகர் சந்நிதி உள்ளது. கோஷ்டமூர்த்த தட்சிணாமூர்த்தி தனி விமானத்துடன் அழகாக உள்ளார். பிரம்மா, துர்க்கை, வைஷ்ணவி சந்நிதிகள் உள்ளன. ஆறுமுகர் அழகான சந்நிதி. கருவறை வெளிச்சுவரில், ஜயங்கொண்ட சோழமண்டலத்து கோப்பரகேசரி வர்மன் காலத்தியதாகச் சொல்லப்படும் கல்வெட்டுக்கள் உள்ளன. நால்வரைத்தொழுது பக்க வாயில் வழியே தலப்பதிகக் கல்வெட்டைக் கண்டு ஓதியவாறே உள்சென்று பெருமானை வழிபட வேண்டும். நேரே நடராசசபை.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி - குட்டையானது; ஆவுடையாரும் தாழவுள்ளது. முன் மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது - நின்ற திருக்கோலம். வைகாசி விசாகத்தில் பத்து நாள்களுக்குப் பெரு விழா நடைபெறும். சிரவையாதீனம் கௌமார மடாலயம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இத்தலத்திற்குப் பாடல்களைப் பாடியுள்ளார் எனத் தெரிகின்றது.

இவ்வூரில் வாழ்ந்த அறச்செல்வியார் திருமதி. ஜயலட்சுமி அம்மையார் அவர்கள் கட்டிய திருஞானசம்பந்தர் திருமடம் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. இவ்வம்மையார் வைத்துள்ள அறக்கட்டளையிலிருந்து, பெருவிழாவில் ஏழாம் நாள் உற்சவம் - தலமகிமைப்படி அரசமர வாகன உற்சவமாக விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

Koviloor Digital Library

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் நிதியுதவி பெற்றும், அரசு, மற்றும் அன்பர்களின் ஆதரவிலும் திருப்பணிகள் செய்யப்பட்டு அக்ஷய ஆண்டு ஆனி 4ஆம் நாள் (18-6-1986-ல்) கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. இத்தலத்திற்கு அருகாமையில் 'இரும்பை மாகாளம்' என்னும் தலமுள்ளது.

கல்வெட்டுச் செய்திகள் : இத்திருக் கோயிலில் உள்ள ஐந்து கல்வெட்டுக்கள் அரசியலாரால் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் விக்ரம சோழதேவர், குலோத்துங்க சோழ தேவர் ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். விக்ரமசோழ தேவரின் ஆறாவது ஆட்சி ஆண்டுக்காலத்தில் இவ்வூர் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மானாடான விஜயராஜேந்திர சோழவள நாட்டுப் பெரு வேம்பூர் நாட்டுத் தேவதானம் திருவரைசிலி என்றும், பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் ''ஒய் மானாட்டுத் திருவரசிலி'' என்றும்; பதினாறாவது ஆட்சியாண்டில் ''ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஓய்மா னாடான விஜயராஜேந்திர சோழவள நாட்டுப் பெருவேம்பூர் நாட்டுத் திருவரசிலி'' என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

''மிக்க காலனைவீட்டிமெய் கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சையுண்பது பொன்றிகழ் கொன்றை
தக்கநூறிதழ் மார்பிற்றவள வெண்ணீ றணிந்தாமை
அக்கினாரமும் பூண்ட அடிகளுக்குஇடம் அரசிலியே''

(சம்பந்தர்)

''-தேர்ந்தவர்கள்
தத்தமது மதியாற்சாரும் அரிசிலியூர்
உத்தம மெய்ஞ்ஞான ஒழுக்கமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அரசலீஸ்வரர் திருக்கோயில்
ஒழிந்தியாப் பட்டு & அஞ்சல்
வானூர் (வழி)
வானூர் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

32. திருஇரும்பை மாகாளம்.

இரும்பை.

தொண்டை நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் இரும்பை என்று வழங்குகிறது.

திண்டிவனம் - பாண்டிச்சேரி (வழி) கிளியனூர் - நெடுஞ் சாலையில் திருச்சிற்றம்பலம் கூட்ரோடினைத் தாண்டி மேலும் சிறிது தூரம் சென்றால் ''இரும்பை'' என்ற பெயர் தாங்கிய கைகாட்டி உள்ளது. அது காட்டும் கிளைப்பாதையில் 2 கி. மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம். சாலையோரத்திலேயே கோயில் உள்ளது. மகாளர் வழிபட்ட தலம்.

இறைவன் - மகாளேஸ்வரர், மாகாளநாதர்.

இறைவி - மதுரசுந்தரநாயகி, குயில்மொழியம்மை.

தலமரம் - புன்னை (இப்போது இல்லை).

தீர்த்தம் - மாகாள தீர்த்தம் - கோயிலுக்குப் பக்கத்திலுள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

மிகப் பழமையான கோயில் - கிலமாகிவுள்ளது - ராஜகோபுர மில்லை. முகப்பு வாயில் மட்டுமே உள்ளது. வாயில் தெற்கு நோக்கி யுள்ளது. விசாலமான வெளிப்பிராகாரம். கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை ஆகியோர் உளர், சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. எதிரில் நவக்கிரக சந்நிதி உள்ளது.

பிராகாரத்தில் விநாயகர், ஆறுமுகர் சந்நிதிகள் இருக்கின்றன. மூலவருக்கு நேர் பின்னால் ஆறுமுகர் சந்நிதி உள்ளது. முகப்பு வாயிலுள் நுழைந்ததும் நேரே அம்பாள் சந்நிதி, இடப்பால் சுவாமி சந்நிதி. சந்நிதியினுள் நடராசர், சிவகாமி முதலிய திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி - கிழக்கு நோக்கிய சந்நிதி, இச்சிவலிங்கத்தின் மேற்புறம் மூன்று பிளவுகளாக வெடித்துள்ளது. இவற்றில் ஒரு பிளவு வெளியில் விழுந்து விட்டதால் அந்த இடம் வழித்தெடுத்தாற்போலவுள்ளது.

இவ்வாறு வெடித்திருப்பது பற்றிச் சொல்லப்படும் செவி வழி வரலாறு வருமாறு :- குலோத்துங்க சோழன் ஆண்ட காலம்,

Koviloor Digital Library

‘கடுவெளிச்சித்தர்’ என்பவர் இங்குத் தவஞ்செய்து வந்தார், நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. மன்னன் பஞ்சத்திற்கான காரணம் தெரிந்து அறிவிப்பவர்க்குப் பரிசு தருவதாக அறிவித்தான். பழுத்த அரசு இலையினையே உணவாக உண்டு தவஞ்செய்து வந்த இச்சித்தரைக் கண்டு கேட்க அவ்வூரிலிருந்த வள்ளி என்னும் பெயருடைய தாசி எண்ணினாள். அவர் தவம் செய்யுமிடத்திற்கு வந்தாள், தவத்திலிருந்த சித்தர் பழுப்பிலையை உண்ணக் கையை நீட்டியபோது அவள், அவர் கையில் உணவை இட்டாள், அதைப்பெற்று உண்டமையால் உணர்வு வர, சித்தர் கண் விழித்துப் பார்க்க, அவளும் நாட்டில் பஞ்சம் நீங்கிச் செழுமை உண்டாக அவரிடம் வேண்டினாள், சித்தர் ஆலயத்திற்கு வந்தார், அப்போது தாசியும் தன் பணியாக நடனமாடினாள். ஆடும்போது அவள் காற்சிலம்பொன்று அவிழ்ந்து விழ அதைக்கண்ட கடுவெளிச்சித்தர் அச்சிலம்பை அவள் காலிற் பூட்டிவிட, மக்கள் இதைக்கண்டு பரிகாசஞ் செய்தனர்.

மனமுதிர்ச்சியடையாத மக்கள் ஏளனஞ் செய்ததைக் கண்ட சித்தர், மனம் பொறாது, இறைவனை நோக்கிப் பாட, இறைவனின் திருமேனி மூன்று சில்லுகளாக (பிளவுகளாக) வெடித்தது. வெடிக்கப் பாடிய சித்தரின் பாட்டு :-

‘‘வெல்லும் பொழுது விடுவேன் வெகுளியை
செல்லும் பொழுது செலுத்துவேன் சிந்தையை
அல்லும் பகலும் உன்னையே தொழுவேன்
கல்லும் பிளந்து கழுவெளியாமே.’’

சிவலிங்கத் திருமேனி வெடித்ததறிந்து மக்கள் பயந்து திகைத்தனர். சித்தரின் திருவடிகளில் வீழ்ந்து தங்கள் பிழைபொறுக்க வேண்டினர். மனமிரங்கிய கடுவெளிச்சித்தர் மீண்டுமொரு பாடலைப் பாடினார்.

‘‘எட்டும் இரண்டும் அறிந்த எந்தனை
எட்டும் இரண்டும் அறிந்த உந்தனை
எட்டும் இரண்டும் ஒன்றதாகுமே’’

இவ்வாறு ஒட்டப்பாடியதும் வெடித்து விழுந்த 3 சில்லுகளுள் 2 சில்லுகள் வந்து பழையபடியே ஒட்டிக்கொண்டன. ஒன்றுமட்டும் வெளியேபோய் விழுந்தது. அச்சில்லு விழுந்த இடம் ‘கழுவெளி’ என்னும் பெயரில் சிறு கிராமமாகப் பக்கத்தில் உள்ளது. (இச்செய்தி, கோயிலில் வழிபாடாற்றும் குருக்கள் வழியாகப் பெற்றதாகும்.)

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. நின்ற திருக்கோலம்.

''வேதவித்தாய் வெள்ளைநீறு பூசி வினையாயின
கோது வித்தாய் நீறெழக்கொடி மாமதிலாயின
ஏதவித்தாயின தீர்க்குமிடம் இரும்பைதனுள்
மாதவத்தோர் மறையோர் தொழநின்ற மாகாளமே''

(சம்பந்தர்)

''-பத்தியுள்ளோர்
எண்ணும் புகழ்கொள் இரும்பை மாகாளத்து
நண்ணும் சிவயோக நாட்டமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மகாளேஸ்வரர் திருக்கோயில்
இரும்பை & அஞ்சல் (வழி) ஆரோவில்
வானூர் வட்டம் - கடலூர் மாவட்டம் - 605 010.

33/1. திருநெல்வாயில் அரத்துறை

திருவரத்துறை,
திருவட்டுறை.

நடுநாட்டுத் தலம்.

தற்போது திருவரத்துறை என்றும் திருவட்டுறை என்றும் வழங்குகின்றது.

தொழுதூர் விருத்தாசலம் பேருந்துச் சாலையில் தொழுதூரிலிருந்து 20 கி. மீ. தொலைவில் உள்ளது. சாலையில் 'கொடிகளம், என்னும் இடத்திலிருந்து பிரிந்து செல்லும் மண் சாலையில் சுமார் 1 கி. மீ. சென்றால் இத்தலத்தையடையலாம். காரில் செல்வோர் கோயில்வரை செல்லலாம்.

நிவா நதியின் கரையில் உள்ள இத்தலத்தில்தான் திருஞான சம்பந்தருக்கு இறைவன் முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் சின்னங்களும் அருளினார். ஊர் - நெல்வாயில்; கோயில் - அரத்துறை.

Koviloor Digital Library

இறைவன் - ஆனந்தீஸ்வரர், தீர்த்தபுரீஸ்வரர், அரத்துறைநாதர்.

இறைவி - ஆனந்தநாயகி, திரிபுரசுந்தரி, அரத்துறைநாயகி.

தலமரம் - ஆலமரம்.

தீர்த்தம் - நிவாநதி.

மூவர் பாடல் பெற்ற தலம்.

வான்மீகிமுனிவர், அரவான் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது. முகப்பு வாயில் கடந்து உட்சென்றால் வலப்பால் விநாயகர், சமயக்குரவர்கள் நால்வர், வான்மீகிமுனிவர். சப்த கன்னியர்கள், பூத, பவிஷ்ய, வர்த்தமான லிங்கங்கள், மகாவிஷ்ணு, ஜோதிலிங்கம் முதலிய சந்நிதிகள் உள்ளன. அடுத்து அண்ணாமலை, ஆதிசேஷன், வள்ளி தெய்வயானை சமேத முருகன், தண்டாயுதபாணி சந்நிதிகளையும் சேர சோழ பாண்டிய மன்னர்கள் பெயரில் உள்ள இலிங்க மூர்த்திகளையும் தரிசிக்கலாம். காசி விசுவநாதரும் விசாலாட்சியுடன் காட்சி தருகிறார். கஜலட்சுமி, சந்தான குரவர்கள், பைரவர், சூரியசந்திரர் சந்நிதிகளும் அடுத்துள்ளன.

வெளிச் சுற்றில் தரிசித்துக்கொண்டு உள்ளே சென்றால் இடப்பால் நவக்கிரக சந்நிதி, சனிபகவானுக்குச் சந்நிதி உள்ளது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித்தனியே கொடிமரமும் பலிபீடமும் நந்தியும் உள்ளன.

நிவா நதியில் வெள்ளப் பெருக்கெடுத்தபோது, அதனாற் சேத முண்டாகாதிருக்க நந்தி தலையைத் திரும்பிப் பார்க்க வெள்ளம் வடிந்ததாம். அதனால் நந்தியின் தலை சற்றுத் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா உள்ளனர். நடராசர் சிவகாமி தரிசனம், துர்க்கை, அர்த்தநாரீஸ்வரர், சண்டேஸ்வரர், பைரவர் மூர்த்தங்களைத் தரிசித்தவாறே சென்றால் மூலவரைத் தொழலாம்.

மூலவர் சுயம்பு. கிழக்கு நோக்கிய சந்நிதி. இத்தலத்திற்குத் 'தீர்த்தபுரி' என்ற பெயரும் இருப்பதால் இறைவன் தீர்த்தபுரீஸ்வரர் என்ற பெயரையும் பெறுகிறார்.

நாடொறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. தலபுராணம் ஏதுமில்லை.

Koviloor Digital Library

''எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்று கைகூடுவ தன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே!

(சம்பந்தர்)

''புனல்ஒப்பானைப் பொருந்தலர் தம்மையே
மினலொப்பானை விண்ணோரும் அறிகிலார்
அனலொப்பானை அரத்துறை மேவிய
கனலொப்பானைக் கண்டீர்நாம் தொழுவதே.''

(அப்பர்)

''கல்வாயகிலுங் கதிர்மாமணியுங்
    கலந்துந் திவருந்நிவாவின் கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடுறையுந்
    நிலவெண்மதி சூடிய நின்மலனே
நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
    நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்றது அறிந்தடியேன்
    தொடர்ந்தேன் உய்யப் போவதோர்சூழல் சொல்லே''

(சுந்தரர்)

'சோதிமுத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீதுதாழ்ந்து வெண்ணீற் றொளிபோற்றி நின்று
ஆதியார் அருளாதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்''

(திருஞான பெரிய. புரா.)

தீங்கார் புறதெய்வத் தீங்குழியில் வீழ்ந்தவரைத்
தாங்கா அரத்துறையில் தாணுவே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஆனந்தீஸ்வரர் (அரத்துறைநாதர்) திருக்கோயில்
திருவட்டுறை & அஞ்சல்
திட்டக்குடி வட்டம் - கடலூர் மாவட்டம் - 606 111.
(வழி) விருத்தாசலம் R.M.S.

Koviloor Digital Library

34/2. பெண்ணாகடம்

பெண்ணாடம்.



நடுநாட்டுத் தலம்.

தற்போது பெண்ணாடம் என்றழைக்கப்படுகிறது.

விழுப்புரம் - திருச்சி பாதையில் விருத்தாசலத்திற்கு அருகிலுள்ள புகைவண்டி நிலையம். விருத்தாசலத்திலிருந்து திட்டக்குடி செல்லும்

Koviloor Digital Library

பாதையில் (விருத்தாசலத்திலிருந்து) 17 கி. மீ. தொலைவில் உள்ள தலம். பேருந்து வசதி உண்டு. சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் தொழுதூரிலிருந்து 15 கி. மீ. தொலைவில் உள்ளது.

தேவகன்னியரும், காமதேனுவும், வெள்ளையானையும் வழிபட்ட தலம். (பெண் + ஆ + கடம்). இவ்வூரில் ஆறாயிரம் கடந்தையர்கள் (வீரமக்கள்) வாழ்ந்ததால் 'கடந்தை நகர்' எனப்பெயர் பெற்றதென்பர். ஆழிபுரண்டக்கால் அசையாது அதிகார நந்தி மூலம் பிரளய கால வெள்ளத்தைத் தடுத்த பெருமானின் திருத்தலம்.

இந்திரனின் பூசைக்காக மலர்களைப் பறிக்க வந்த தேவகன்னியர் இத்தலத்து இறைவனைக்கண்டு மகிழ்ந்து வழிபாடியற்றி வாழ்ந்தனர். மலர் வாராமைகண்டு இந்திரன் காமதேனுவை அனுப்ப அது வந்து, நிலையறிந்து, தானும் இறைவனை வழிபட்டு நின்றது. காமதேனுவைத் தேடிச்செல்லுமாறு இந்திரன் தன் வெள்ளையானையை அனுப்ப, அதுவும் வந்து, நிலைமைகண்டு, இறைவனை வணங்கி, அங்கேயே நின்றுவிட, ஒன்றும் புரியாத இந்திரன், தானே புறப்பட்டுத் தேடிவந்து, நிலைமையறிந்து பெருமானை வழிபட்டான் என்னும் வரலாறு இத்தலத்தில் சொல்லப்படுகிறது. எனவே மேற்சொல்லிய மூவரும் வழிபட்ட தலம் - பெண்ணாகடம் எனப்பெயர் பெற்றதென்பர்.

அப்பர் - சூல இடபக் குறி பொறிக்குமாறு வேண்டிப் பெற்ற தலம். பணியாளே சிவனடியாராக வரக்கண்டு, நீர் வார்க்கத் தாமதித்த மனைவியின் கையை வெட்டிய கலிக்கம்ப நாயனார் வீடுபேறு பெற்ற தலம். மெய்கண்டாரின் அவதாரத் தலம்.

இறைவன் - சுடர்க்கொழுந்தீசர், பிரளய காலேஸ்வரர்.

இறைவி - ஆமோதனம்பாள், கடந்தை நாயகி, அழகிய காதலி.

தலமரம் - சண்பகம்.

தீர்த்தம் - கயிலைத்தீர்த்தம், பார்வதிதீர்த்தம், இந்திர தீர்த்தம், முக்குளம், வெள்ளாறு.

இக்கோயிலுக்குத் 'தூங்கானைமாடம்' (கஜப் பிரஷ்டம்) என்பது பெயர்.

சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்றது. ராஜகோபுரம் 5 நிலைகளையுடையது. கோயிலின் முன் வாயிலில் தென்பால் குடவரை விநாயகரைத் தரிசிக்கலாம். மதிலையடுத்து உள்ளே நந்தவனம் உளது. வடபால் வாகன மண்டபம் அதிகாரநந்தி - பெருமிதத் தோற்றத்துடன்

Koviloor Digital Library

கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. அழகானகோபுரம் பல்வகைச் சிற்பங்களும் கொண்டது.

இக்கோபுரவாயிலில் மேல்பக்கச்சுவரின் தென்பால் மெய் கண்டார் கோயில் உள்ளது. நேர் எதிரில் கலிக்கம்ப நாயனார் காட்சி தருகிறார். இந்நாயனார் அவதரித்த தலமிது. மெய்கண்டாரின் தந்தையார் அச்சுத களப்பாளர் இப்பகுதியில் வாழ்ந்தவராவார்.

30 அடி உயரமுள்ள அழகான துவஜஸ்தம்பம் - பக்கத்தில் கிழக்கு நோக்கிய பிரதோஷ நந்தி சந்நிதி உள்ளது. உள் நுழைந்தால் பதினாறுகால் மண்டபம்.

மூலவரின் - கர்ப்பக் கிருகத்தின் விமானம் ஐராவதம் வழி பட்டதற்கு அடையாளமாக யானை நிற்பது போல் அமைந்துள்ளது.

மூலலிங்கம் சுயம்பு. சற்று உயரமானது, ஆவுடையார் சதுர வடிவானது. கர்ப்பக்கிருகத்தின் முன்வாயில் தவிர, ஏனைய மூன்று புறங்களிலும் இறைவனைக் கண்டு வணங்குமாறு சன்னல்கள் - பலகணிகள் அமைந்திருப்பது சிறப்புடையது. சுற்றுப்பகுதியில் உற்சவத் திருமேனிகள் காட்சியளிக்கின்றன. மூலஸ்தானத்திற்கு வடபால் கட்டு மலைமேல் சௌந்தரேஸ்வரர் (சிவலிங்கம்) சந்நிதி உள்ளது. தனிக்கோபுரத்துடன் கூடிய கோயில். ஏறுதற்குப் படிகள் உள்ளன. இத்தலத்திற்கு அருகில் உள்ள சௌந்தர சோழபுரத்தில் வாழ்ந்த சௌந்தரவல்லி என்னும் தேவரடியார், பண்டம்மாற்ற இத்தலத்திற்கு வரும்போது, கடைவீதியிலிருந்தே வழிபடுவதற்கேற்ப இக்கோயில் கட்டப்பட்டதென்று ஒரு செய்தி சொல்லப்படுகிறது.

வெள்ளாற்றின் கரையில் உள்ள இத்தலத்தினை வழிபடவந்த சோழ மன்னன், ஆற்றில் வெள்ளம் வந்தமையால் அக்கரையில் இருந்தவாறே தவஞ்செய்ய, அவனுக்கு அருள்புரியவேண்டி, இறைவன் அவன் காணுமளவுக்கு உயர்ந்து காட்சிதந்தார். அதுவே இம்மலைக் கோயிலாகும் என்ற செவிவழிச் செய்தியொன்றும் இது தொடர்பாகச் சொல்லப்படுகிறது.

நால்வர் சந்நிதிகள், சேக்கிழார், தண்டபாணி உருவங்கள், கோடிவிநாயகர், சோமாஸ்கந்தர், விசுவேஸ்வரர், முருகன், மகாலட்சுமி சந்நிதிகளும் உள. கட்டுமலைக்கோயிலின் கீழ்ப்பகுதியில் பிரளய காலேஸ்வரி அம்மை சிலையுள்ளது. தலமரத்தின்கீழ் சண்டேஸ்வரர் சந்நிதி. அம்மன் சந்நிதி, சுவாமிக்கு வடபாலுள்ளது. சண்டிகேஸ்வரி சந்நிதியுமுள்ளது. ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

1. **கபிலை தீர்த்தம் :-** கோயிலை அடுத்து மேற்பால் உள்ளது. காமதேனு, சிவபூசை செய்யும்போது, வழிந்தோடிய பால் நிரம்பி குளமாகியது என்பர்.
2. **பார்வதி தீர்த்தம் :-** கோயிலின் முன் கீழ்த்திசையில் உள்ளது. இதற்குப் பரமானந்ததீர்த்தம் என்றும் பெயர் சொல்லப் படுகிறது.
3. **மூக்குளம் :-** ஊரின் வடமேற்கில் அமைந்துள்ளது.
4. **இந்திர தீர்த்தம் :-** ஊரின் கிழக்கில் அமைந்துள்ளது.
5. **வெள்ளாறு :-** இந்த ஆற்றில் ஆண்டுதோறும் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள் :-

1. தயராசபதி - ஐராவதம் வழிபட்டதால் வந்த பெயர்.
2. புஷ்பவனம், புஷ்பாரண்யம்; ஆதிநாளில் மலர்வனமாக விளங்கியதால் வந்த பெயர்.
3. மகேந்திரபுரி. இந்திரன் வழிபட்டதால் வந்த பெயர்.
4. பார்வதிபுரம் - பார்வதி வழிபட்டதால் வந்த பெயர்.
5. சோகநாசனம் - நஞ்சுண்ட இறைவனின் களைப்பைத் தீர்த்த தலமாதலின் வந்த பெயர்.
6. சிவவாசம் - இறைவனுக்குகந்த பதி.

இறைவனுக்கு வழங்கும் வேறு பெயர் :-

கைவழங்கீசர் - கலிக்கம்ப நாயனாரால் வெட்டுண்ட அவர் மனைவியின் கை மீண்டும் துளிர்க்க அருளிச் செய்த பிரான்.

இராஜகோபுரத்தின் வடபால் உள்ள நடராஜர் கோபுரமும் சந்நிதியும் தரிசிக்க அழகானது. உயரமான, கலையழகுடன் கூடிய நடராசர். பக்கத்தில் உமையும் - திருமுறைப்பேழையும்.

சதுர ஆவுடையாருடன் கூடி மூலவர் பெரிய மூர்த்தமாகக் காட்சி தருகின்றார். அம்பாள் தனிச் சந்நிதி, நின்ற திருக்கோலம். துர்க்கைக்கும் தனிச் சந்நிதி உள்ளது.

ஆண்டுதோறும் சித்திரையில் பெருவிழா நடைபெறுகிறது. சித்திரைச் சதய விழாவில் அப்பர் சுவாமிகள் சைவ சமயஞ்சார்ந்து, இறைவனை வேண்டி, சூலமும் இடபக்குறியும் பொறிக்குமாறு

Koviloor Digital Library

வேண்டிப்பெற்ற விழா கொண்டாடப்படுகிறது. அம்பாளுக்கு ஆடிமாத உற்சவம் சிறப்பாக நடத்தப் பெறுகிறது. ஆவணிமூல விழா, நவராத்திரி, சஷ்டி விழா, தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்திரம் முதலிய விழாக்களும் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன. மெய் கண்டாரின் தந்தையான அச்சுத களப்பாளர் பெயரில் ஊருக்கு மேற்கில் 'களப்பாளர்மேடு' என்னும் இடமுள்ளது. அங்குச் சிறிய கோயில் மெய்கண்டாருக்கு உள்ளது. மறைஞான சம்பந்தர் பிறந்த தலமும் இதுவே. இவர் பெயரில் தனி மடம் உள்ளது. சேது மகாராசா இத்திருக்கோயிலில் திருப்பணிகள் செய்ததோடு தேரும் அமைத்துத் தந்துள்ளார். சோழர் காலக் கல்வெட்டுக்கள் பல இக்கோயிலில் உள்ளன. கல்வெட்டுக்களில் இத்தலத்து இறைவன் ''தூங்கானை மாடமுடைய நாயனார்'' என்று குறிப்பிடப்படுகின்றார். கோயிலுக்குப் பொன், பசு, நிலம் முதலியவை விட்ட செய்திகள், கல்வெட்டால் தெரிய வருகின்றன.

ஒடுங்கும் பிணிபிறவி கோடன் றிவை உடைத்தாய
வாழ்க்கையொழியத் தவம்
அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லாம் அடிகளடி
நிழற் கீழாளாம் வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவியெங்குங் கெழு மனைகள்
தோறும் மறையின்ஒலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை
மாடம் தொழுமின்களே.''

(சம்பந்தர்)

''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என் ஆவிகாப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்றகல
மின்னாரும் மூவிலைச் சூல மென்மேல் பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்சுடர்க்கொழுந்தே''

(அப்பர்)

''திருமருவு நாரணனும் பிரமன் ஆதித்தேவருடன்
யாவருந்தந் தெளிவினாலும்
பெருகுபல மறையாலும் அளக்க வொண்ணாப்
பெரிய பராபரமெங்கும் பிறங்குஞ்சோதி
அருள்பரை யினுடன்கூடிப் புவனந்தந்து
மதைக்காத்து மழிக்கின்ற கடந்தையண்ணால்
மருவு பிரளயங்காத்த வள்ளலாகும்
மாதேவன் திருவடியை வழுத்தி வாழ்வாம்''.

(திருக்கடந்தைப் புராணம்)

Koviloor Digital Library

''திருமுகமும் விழிமூன்றும் செய்யவாயும்
செறிநகையும் குழைக்காதும் அமுதவாக்கும்
புருவமுடன் கருங்குழலும் நாசிகண்டம்
புயனான்குமணிப் பூணும் புவனந் தந்த
மருவு திருமணி வயிறும் வயங்கித் தோன்ற
மன்று திருக் கடந்தையரன் வாமமேவும்
அருள்பொழியும் அழகிய காதலி பாதத்தை
அனுதினமும் அன்பொடு வணங்கி வாழ்வாம்.''

(திருக்கடந்தைப் புராணம்)

''செய்ய திருக்கடந்தையினில் வணிகர் தங்கள்
திருமரபில் அவதரித்துச் சிவனைநாடி
மெய்யடியார்க் கமுதளிப்பார் பண்டுதம் பால்
வினையேவல் செய்யொருவர் மேவக்கண்டு
துய்யதாள் விளக்குதற்கு நீர்விடாத
துணைவிகரந்தனைத் துணித்துத் துணிந்துதாமே
கையதனாலுபசரித்துக் கயிலை சேர்ந்த
கலிக்கம்பர் பதமலரைக் கருதுவோமே.''

(திருக்கடந்தைப் புராணம்)

''ஓங்குபுகழ்த் திருக்கடந்தை நகரில் வேளாண்
உயர்குலஞ் செய்பெருந்தவமோருரு வுற்றாங்கு
வாங்குதிரைக் கடலுலகில் வந்து தோன்றி
மாதேவன் திருவடியை மறவாநெஞ்சில்
பாங்குறு நற்பரஞ்சோதி முனிவர் கூறும்
பதிபசுபாசத்திறனிப் பாரோர் தேர்ந்து
தீங்ககலச் சிவஞான போதஞ்சாற்றும்
செய்யமெய்க் கண்டார்தாள் சிரத்தில்வைப்பாம்.''

(திருக்கடந்தைப் புராணம்)

''வாய்ந்த புகழ் மெய்கண்டதேவருக்கு
மாணாக்கர் அருணந்தி தேவர்தம் பால்
ஆய்ந்த பலகலையோதித் தமையடைந்த
அருள்பெருகு கொற்றவன் குடியில் வாழும்
காய்ந்தபவத்துமா பதிதேவருக்கு ஞானம்
கவின வுரைத்தருள் செய்யுங் கடந்தைவந்த
ஏய்ந்த தவத்துயர்ந்த மறை ஞான தேவர்
இணைமலர்த்தாளெஞ்ஞான்றும் இறைஞ் சுவாமே''

(திருக்கடந்தைப் புராணம்)

(திருக்கடந்தைப் புராணம் என்னும் இத்தல புராணம் சிவஞானப் பிரான் பிள்ளை என்பவர் இயற்றியது.)

Koviloor Digital Library

''-பூங்குழலார்

வீங்கானை மாடஞ்சேர் விண்ணொன்றகல் கடந்தைத்
தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பிரளயகாலேஸ்வரர் (சுடர்க்கொழுந்தீசர்) திருக்கோயில்
பெண்ணாடம் & அஞ்சல்
திட்டக்குடி வட்டம் - கடலூர் மாவட்டம் - *606 105.*
(வழி) விருத்தாசலம் R.M.S.

35/3. திருக்கூடலையாற்றூர்.

நடுநாட்டுத் தலம்.

1. சேத்தியாதோப்பு - கும்பகோணம் பாதையில் 'குமாரகுடி' வந்து, ஸ்ரீ முஷ்ணம் போகும் பாதையில் பிரிந்து 2 கி. மீ. சென்று, 'காவாலகுடி' சாலையில் திரும்பி, 2 கி. மீ. சென்று 'காவாலகுடி'யை அடைந்து, அடுத்துள்ள கூடலையாற்றூரை அடையலாம்.

கோயில்வரை பேருந்து செல்லும்.

2. சிதம்பரம் - காவாலகுடி நகரப் பேருந்து உள்ளது. மணிமுத்தாறும் வெள்ளாறும் கூடும் இடத்தில் உள்ள ஊராதலின் கூடலையாற்றூர் என்று பெயர் பெற்றது. வெள்ளப்பெருக்கில் இக்கோயில் அழிய, அங்கிருந்த கற்களைக் கொண்டு வந்து, இவ்வூரில் கோயிலைக் கட்டி சுவாமி அம்பாளை எழுந்தருளச் செய்துள்ளனர். இக்கோயில் நூறாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதென்பர்.

சுந்தரர் திருமுதுகுன்றம் சென்றபோது, இத்தலத்தை வணங்காமற் செல்ல, இறைவன் அந்தணராக வந்து, முன்செல்ல; சுந்தரர் அவரைத் திருமுதுகுன்றத்திற்கு வழி யாதெனக் கேட்க, 'கூடலையாற்றுருக்கு வழி இஃது' என்று கூறி மறைய, திடுக்கிட்ட சுந்தரர் இத்தலத்திற்கு வந்து வழிபட்டார் என்பது வரலாறு.

இறைவன் - நர்த்தனவல்லபேஸ்வரர், நெறிகாட்டுநாதர்

இறைவி - பராசக்தி, ஞானசக்தி (இரு அம்பாள் சந்நிதிகள்)
(புரிகுழல்நாயகி)

Koviloor Digital Library

தலமரம் - கல்லால மரம் - தற்போது இல்லை.

தீர்த்தம் - (வெள்ளாறும் மணிமுத்தாறும் கூடும் இடம்) சங்கமத் தீர்த்தம்.

பிரமனுக்கு நர்த்தனம் செய்து காட்டியவராதலின் இறைவன் நர்த்தனவல்லபேஸ்வரர் என்று பெயர் பெற்றார்.

சுந்தரர் பாடல் பெற்றது.

பழமையான ராஜகோபுரம் மூன்று நிலைகளைக் கொண்டது. கிழக்கு நோக்கிய சந்நிதி. கொடிமரம் பலிபீடம் இல்லை. நந்தி உள்ளது. வெளிச்சுற்றில் பக்கவாயில் உள்ளது. நடராச சபை உள்ளது.

அமுத விநாயகர், விசுவநாத லிங்கம், ஆறுமுகர், ஞானசக்தி அம்பாள் முதலிய சந்நிதிகள் உள்ளன. அம்பாள் நின்ற திருக்கோலம். இத்தேவி மிகவும் சக்திவாய்ந்த அம்மை என்று மக்கள் போற்றி வழிபடுகின்றனர்.

மூலவர் விமானம் இரு தள அமைப்புடையது. படிகளேறி மேலே சென்றால் அழகிய மண்டபம் உள்ளது. துவார கணபதியை வணங்கி உட்சென்றால் மூலவரைத் தரிசிக்கலாம். கம்பீரமான சிவலிங்கத் திருமேனி. சுவாமிக்கு வலப்பால் பராசக்தி அம்பாள் சந்நிதி உள்ளது. இதுவும் நின்ற திருக்கோலமே. நடராச சபையில் சிவகாமி மூர்த்தமும் உள்ளது.

இங்குள்ள உற்சவ மூர்த்தங்களுள் சிறப்பானது - சித்ரகுப்தர் ஒரு கையில் எழுத்தாணியுடன் மறுகையில் ஏடும் கொண்டு காட்சி தருவது. இம்மூர்த்தம் பிற்காலத்தில் பிரார்த்தனையாக ஒருவரால் செய்து வைக்கப்பட்டதாகும்.

இக்கோயிலில் நவக்கிரக சந்நிதியில்லை. மூலவரைத் தரிசித்து விட்டு வரும்போது வலப்பால் சனிபகவான் சந்நிதி மட்டும் உள்ளது. இரு அம்பாள் சந்நிதிகளில் - பராசக்தி அம்பாள் சந்நிதியில் திருநீறும் ஞானசக்தி அம்பாள் சந்நிதியில் குங்குமமும் தரப்படுகிறது. மதிலின் வெளிப்புறத்தில் அகத்தியர் சிற்பம் உள்ளது. கோஷ்டமூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், அஷ்டபுஜ துர்க்கை முதலியவைகள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி எதிரில் உள்ளது.

இக்கோயில் நல்ல நிலையில் உள்ளது. இதன் பரம்பரை அறங்காவலர் தேவகோட்டை அருணாசலம் செட்டியார் அவர்களாவார். நாடொறும் மூன்றுகால பூஜைகள்.

Koviloor Digital Library

மாசி மாதத்தில் பெருவிழா பதின்மூன்று நாள்களுக்கு நடைபெறுகிறது. மாதாந்திர உற்சவங்களும் நடைபெறுகின்றன.

"வடிவுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள் இவ்வழிபோந்த அதிசயம் அறியேனே."

(சுந்தரர்)

-"நீங்காது
நீடலையாற்றூர் நிழல்மணிக் குன்றோங்குதிருக்
கூடலை யாற்றூர்க் குணநிதியே"

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. நர்த்தனவல்லபேஸ்வரர் -
நெறிகாட்டுநாதர் திருக்கோயில்
திருக்கூடலையாற்றூர்
காவாலகுடி அஞ்சல் - *608 702.*
காட்டுமன்னார்கோயில் வட்டம் - கடலூர் மாவட்டம்.

36/4. திருஎருக்கத்தம்புலியூர்.

ராஜேந்திரப்பட்டணம்.

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் ராஜேந்திரப் பட்டணம் என்று வழங்குகிறது. வியாக்ரபாதர் (புலிக்கால் முனிவர்) பூசித்த தலங்கள் 'புலியூர்' என்ற பெயருடன் விளங்குகின்றன. அவற்றுள் இத்தலமும் ஒன்று. ஏனையவை :- (1) பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம் - தென்புலியூர்) (2) திருப்பாதிரிப்புலியூர் (வடபுலியூர்) (3) ஓமாம்புலியூர் (4) பெரும் புலியூர்.

1. விருத்தாசலம் - ஜயங்கொண்டம் பேருந்துச் சாலையில் உள்ள தலம்.

Koviloor Digital Library

2. சென்னை - தஞ்சை நெடுஞ்சாலையில் சேத்தியா தோப்பை அடுத்து, ஸ்ரீ முஷ்ணம் - விருத்தாசலம் பாதையில் சென்று ஸ்ரீ முஷ்ணத்தை அடுத்துள்ள இத்தலத்தையடையலாம்.

வெள்ளெருக்கைத் தலமரமாகக் கொண்டுள்ள தலமாதலின் எருக்கத்தம்புலியூர் என்று பெயர் பெற்றது. உருத்திரசன்மர் சிவனை வழிபட்டு ஊமை நீங்கப்பெற்ற பெருமையுடைய தலம். உருத்திர சன்மர் உருவம் கோயிலில் உள்ளது. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அவதாரப்பதி. சிறிய ஊர். குளக்கரையில் கோயில் உள்ளது.

இறைவன் - நீலகண்டேஸ்வரர், சுவேதார்க்கவனேஸ்வரர்.

இறைவி - அபீதகுஜநாயகி, நீலமலர்க்கண்ணி, நீலோற்பலாம்பாள்.

தலமரம் - வெள்ளெருக்கு.

தீர்த்தம் - நீலோற்பலதீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது. ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. வலப்பால் சிறிய விநாயகர் சந்நிதி. கோபுரத்திற்கும் கொடி மரத்திற்கும் இடையில் நந்தி மண்டபம் உள்ளது. வெளிச்சுற்றில் இடப்புறமாக நவக்கிரகமும் நால்வரும் உள்ளனர். திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய திருவுருவம் மதங்க சூளாமணியாருடன் கூடியுள்ளது. மகா கணபதி, விசுவநாதர் விசாலாட்சி, முருகர், இலக்குமி ஆகிய சந்நிதிகளை வணங்கி உட்செல்லுகிறோம்.

கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற் பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். தட்சிணாமூர்த்திக்கு மேலே சிறிய கோயில் அமைப்பில் சட்டைநாதர் தரிசனம் தருகிறார். மேலே செல்ல படிக்கட்டு வசதியுள்ளது. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. துவாரபாலகர்களை வணங்கியபின் உட்சென்று மூலவரைத் தரிசிக்கிறோம். மூலவர் அழகிய திருமேனி. சுவாமிக்கு வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. நீலோற்பலாம்பாளை மன நிறைவுடன் தரிசித்து வெளி வருகிறோம். நாடொறும் நான்கு கால பூசைகள். தல புராணம் இருப்பதாகத் தெரியவில்லை.

''விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ஆண் அலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணார் எருக்கத்தம் புலியூர்உறைகின்ற
அண்ணாஎன வல்லார்க்கு அடையா வினைதானே''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

"-நாடியவான்
அம்புலியூர் சோலை அணி வயல்கள் ஓங்கு எருக்கத்
தம்புலியூர் வேத சமரசமே"

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்
ராஜேந்திரப்பட்டணம் & அஞ்சல்
விருத்தாசலம் வட்டம் - கடலூர் மாவட்டம் - 608 703.

37/5. திருத்தினைநகர்.

தீர்த்தனகிரி.



Koviloor Digital Library

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் தீர்த்தனகிரி என்று வழங்குகிறது.

தனிப் பேருந்தில் செல்வோர் கடலூர் - சிதம்பரம் மெயின் பாதையில், சிதம்பரத்திற்கு 45 - ஆவது கி.மீ.ல் ஆலப்பாக்கம் - புதுச் சத்திரம் இவற்றிற்கு இடையில் மேட்டுப்பாளையம் என்னும் இடத்தில் தீர்த்தனகிரி என்று கைகாட்டி உள்ள இடத்தில் பிரியும் சாலையில் 5 கி. மீ. சென்று; தானூர் என்று பெயர்ப் பலகையுள்ள சாலையில் போய், தானூரையடைந்து, தெருக்கோடியில் இடப்புறமாகச் செல்லும் சாலையில் சென்று; மேலும் இடப்புறமாகப் பிரிந்து செல்லும் சாலையில் சென்று இவ்வூரையடையலாம்.

பெரியான் என்னும் பள்ளன் தன்நிலத்தை உழுதுகொண்டிருக்கும்போது இறைவன் அடியவராக வந்து அன்னம் கேட்க; அவன் தன் தொழிலை நிறுத்திவிட்டு உணவு கொண்டுவரத் தன் வீடு சென்றான். அவன் திரும்பி வருவதற்குள் இறைவன் அந்நிலத்தில் தினை விளைந்திருக்குமாறு செய்தார். வந்த பெரியான் கண்டு திகைக்க இறைவன் அவனுக்குக் காட்சி தந்தார். அதிசயமாகத் தினை விளைந்ததால் இத்தலம் 'தினைநகர்' என்று பெயர் பெற்றது.

இறைவன் - சிவக்கொழுந்தீசர், சிவாங்கரேஸ்வரர், திருந்தீஸ்வரர்

இறைவி - நீலாயதாக்ஷி, ஒப்பிலாநாயகி, கருந்தடங்கண்ணி, இளங்கொம்பன்னாள்.

தலமரம் - கொன்றை.

தீர்த்தம் - ஜாம்பவ தீர்த்தம்.

வீரசேன மன்னனுக்கு இத்தீர்த்தத்தில் மூழ்கி, வெண்குஷ்டம் தீர்ந்தமையால் அவனே இக்கோயிலைக் கட்டினான் என்பது வரலாறு. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

இராசகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கவசமிட்ட கொடிமரம். நந்தி பலிபீடங்கள் உள. வலப்பால் அம்பாள் சந்நிதி. பிராகாரத்தில் நால்வர், விநாயகர், சுப்பிரமணியர், வீரசேன மன்னன் சந்நிதிகளும், தலமரமாகிய கொன்றையும், பைரவர், சூரியன் திருமேனிகளும் உள்ளன.

வலம் முடித்து, பக்கவாயில் வழியாக நேரே உட்சென்றால் நடராச சபை. அழகான சிரித்த முகம். நடராச மூர்த்தியின் கீழே பீடத்தில் மகாவிஷ்ணு, சங்கை வாயில் வைத்து ஊதுவதுபோலவும் பிரம்மா

Koviloor Digital Library

பஞ்சமுக வாத்யம் வாசிப்பதுபோலவும், சிறிய மூர்த்தங்கள் உள்ளன. மூலவர் தரிசனம் இடப்பால், சுயம்புத் திருமேனி. பாணம் சற்று கூர்மை யாகவுள்ளது. சதுரபீடஆவுடையார் - இருபுறமும் வழித்தெடுத்தாற் போலவுள்ளது. நவக்கிரக சந்நிதி உள்ளது.

கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் - பிரம்மா, விஷ்ணு பக்கங்களில் நின்று தரிசிக்கும் அமைப்பில், பிரம்மா, துர்க்கை ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. கோயிற் சுவரில் தலவரலாற்றுச் சிற்பங்கள் உள. கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள சத்திரம் வேத பாராயண சத்திரம் - உற்சவ காலத்தில் வேதபாராயணம் செய்யும் கட்டளைக்காக ஏற்படுத்தப்பட்டது. இப்போது நடைபெறவில்லை.

நாடொறும் நான்கு கால பூசைகள் நடைபெறுகின்றன. மாதாந்திரக் கட்டளைகள் உள்ளன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திருப்பணித் திட்டத்தின்கீழ் இக்கோயில் சுவாமி, அம்பாள் விநாயகர், முருகன் விமானங்கள் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. ஊர் மக்கள் ஆதரவால் பிற திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

அண்மையிலுள்ள திருமுறைத்தலம் திருச்சோபுரம்.

''நீறுதாங்கிய திருநுதலானை
நெற்றிக் கண்ணனை நிரைவளைமடந்தை
கூறுதாங்கிய கொள்கையினானைக்
குற்றமில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறுதாங்கிய அழகனை அமரர்க்கு
அரியசோதியை வரிவரால் உகளும்
சேறுதாங்கிய திருத்தனை நகருள்
சிவக்கொழுந்தினைச் சென்றடைமனனே.''

(சுந்தரர்)

-''நம்புவிடை
ஆங்குந்தினை யூர்ந்தருளாய் என்றன்பர்தொழு
தோங்குந் தினையூர் உமாபதியே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்
தீர்த்தனகிரி & அஞ்சல் - 608 801.
கடலூர் வட்டம் - கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

38/6. திருச்சோபுரம்.

தியாகவல்லி.

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'தியாகவல்லி' என்று வழங்குகிறது. கடலூர் - சிதம்பரம் நெடுஞ்சாலையில் ஆலப்பாக்கம் புகை வண்டி நிலையம், என்று கைகாட்டி உள்ள பாதையில் (இடப்பால்) திரும்பிச் (மங்கள புரீஸ்வரர் - தியாகவல்லி என்று பெயர்ப்பலகை சாலையில் உள்ளது) சென்று, 'ரயில்வே' கேட்டைத் தாண்டி நேரே மேலும், சென்று உப்பங்கழியின் மேல்கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியாக அக் கரையை அடைந்து சவுக்குத் தோப்பைத் தாண்டிச் சென்றால் கோயிலை அடையலாம். ஒரு சில வீடுகள் இப்பகுதியில் உள்ளன. கோயிலுக்குச் செல்லும் வழி நொய்ம்மணலாக இருப்பதால் இக்கோயிலுக்கு காலையில் 10 மணிக்குள்ளும் மாலை 4 மணிக்குப் பின்னரும் செல்லுவது நல்லது. **கோயில் உள்ள பகுதி 'திருச்சோபுரம் என்றும், பக்கத்தில் உள்ள பகுதி 'தியாகவல்லி' என்றும் சொல்லப் படுகிறது.** அகத்தியர் வழிபட்ட தலம். இங்குள்ள மூர்த்தி அகத்தியர் பிரதிஷ்டை என்று சொல்லப்படுகிறது.

திருமுறைப் பெயர் 'சோபுரம்' என்பது. 'சோழபுரம்' என்பது மருவி 'சோபுரம்' என்றாயிற்று என்றும்; திரிபுவனச் சக்கரவர்த்தியின் முதல்மனைவியான தியாகவல்லி அம்மையார் இங்குத் திருப்பணி செய்த காரணத்தால் 'தியாகவல்லி' என்று பெயர் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

இறைவன் - மங்களபுரீஸ்வரர், திருச்சோபுரநாதர்.

இறைவி - தியாகவல்லியம்மை, சத்யதாக்ஷி,
வேல்நெடுங்கண்ணி.

தலமரம் - கொன்றை.

தீர்த்தம் - கோயிலுள் உள்ள கிணறும், கோயிலுக்குப் பின்னால் உள்ள குளமுமே. கோயிலுக்குப் பின்னால் அண்மையில் கடல் உள்ளது. **சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.** மணற்பாங்கான பகுதியில் கோயில் அமைந்துள்ளது. விசாலமான இடப் பரப்பு. மேற்கு பார்த்த கோயில். கவசமிட்ட கொடிமரத்தைக் கடந்து முகப்பு வாயில், கோயிற்கட்டிடம் நன்றாகவுள்ளது. உள்ளே வலமாக வரும்போது

Koviloor Digital Library

சுப்பிரமணியர், கஜலட்சுமி, வீரட்டேஸ்வர லிங்கம், கண்ணப்பர், திரிபுவன சக்கரவர்த்தி அவர் மனைவி வழிபட்ட லிங்கங்கள், பைரவர் சூரியன், நவக்கிரகங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன. விநாயகரைத் தொடர்ந்து அறுபத்துமூவர் மூலத்திருவுருவங்களின் சந்நிதியும், சோமாஸ்கந்தர் சந்நிதியும் உள்ளன. கருவறை முன் மண்டபம் கடந்து செல்லும்போது நேரே மூலவர் தரிசனம். இடப்பால் அம்பாள் சந்நிதி. ஒரு சேர இரு சந்நிதிகளையும் ஒரே இடத்திலிருந்து தரிசிக்கக் கூடிய அமைப்பு.

மூலவர் அகத்தியர் பிரதிஷ்டை - சதுர ஆவுடையார், துவார பாலகர்கள் உள்ளனர். மூலவர் திருமேனி - பாணம் சுற்றளவு சற்று குறைவாக நீட்டுவாக்கில் உள்ளது. அம்பாள் நின்ற திருக்கோலம்.

நடராச சபை உள்ளது - எதிரில் வாயில். கோஷ்ட மூர்த்தத்தில் லிங்கோற்பவருக்கு இருபுறங்களிலும் திருமாலும் பிரம்மாவும் நின்று தரிசிக்கும் கோலத்தில் உள்ளனர்.

இக்கோயில் மிகப் பழங்காலத்தில் கட்டப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. இப்பகுதி ஒரு காலத்தில் மணல் மேடாக இருந்தது. இங்கு வந்த 'மதுரை இராமலிங்க சிவயோகி' என்பவர் இம்மேட்டைக் கண்டு, மணலில் புதைந்திருந்த கோயிலின் விமானக்கலசம் மட்டும் மேலே தெரிய; அவர் உடனே அப்போது கடலூரிலிருந்த சேஷாசல நாயுடு, இராமாநுஜலு நாயுடு, ஆயிரங்காத்த முதலியார், நஞ்சலிங்க செட்டியார் ஆகியோரை அணுகி; செய்தி சொல்லி, அவர்களின் ஆதரவோடு, மணல்மேட்டைத் தோண்டிக் கோயிலைக் கண்டு பிடித்துக், கட்டு வித்தார் என்றொரு செய்தி அப்பகுதி மக்களால் சொல்லப்படுகின்றது. இது தொடர்பாக; இன்னும் அம்பாள் கோயில் தெற்குப் பகுதியில் மண்மேடிட்டுப் புதைந்துள்ளதாகவும் சொல்கின்றனர். இதனால் இக்கோயிலுக்குத் 'தம்பிரான் கண்ட கோயில்' என்ற பெயரும் மக்களால் வழங்கப்படுகிறது.

> ''கடலுக்கு மேற்கில், தொண்டமாநத்தத்திற்கு கிழக்கில் பெண்ணையாற்றுக்குத் தெற்கில் வெள்ளாற்றுக்கு வடக்கில் உள்ள நிலங்கள் இக்கோயிலுக்குரிய பட்டா நிலங்களாக இருந்தனவென்றும், அவைகளை அரசு எடுத்துக்கொண்டு, அதற்குரியதாக ஆண்டுதோறும் கோயிலுக்கு ரூ. 600/- (ரூபாய் ஆறுநூறு மட்டும்) தருவதாகவும் தெரிகிறது''.

கோயில் குருக்கள் குடும்பத்தினரின் நன்முயற்சியால்தான் இக்கோயில் செம்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

Koviloor Digital Library

கோயிலின் வெளிச் சுற்றில் கொன்றை மரம் - தலமரம் தழைத்து விளங்குகின்றது. இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள ஆலப்பாக்கத்தில் இருந்து 'காகபுஜண்டரிஷி' இறைவனை வழிபட்டதாகச் சொல்கின்றனர்.

பிற்காலத்தில், தொண்டை மாநத்தத்தைச் சேர்ந்த மு. துரைசாமி ரெட்டியார் என்பவர் கோயிலில் ஆராதனைக்காக, வீடுகளை விட்டு அதன் வருமானத்தில் ஆராதனை நடத்துமாறு உயில் சாசனம் எழுதி அதை 26-8-1912-ல் ஆவணக் காப்பகத்தில் பதிவு செய்துள்ள கல்வெட்டு ஒன்று கோயிலில் உள்ளது.

பங்குனி உத்திரப் பெருவிழா 10 நாள்களுக்கு நடைபெறுகிறது. நாடொறும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

பக்கத்தில் உள்ள திருமுறைத் தலம் திருத்தினைநகர் (தீர்த்தனகிரி) ஆகும். சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் இக்கோயிலுக்கு நிலம் விட்ட செய்தியையும்; தொண்டைமாநல்லூரைக் கோயிலுக்குத் தானமாக அளித்த செய்திகளையும் தெரிவிக்கின்றன.

''நாற்றமிக்க கொன்றைதுன்று செஞ்சடை மேன்மதியம்
ஏற்றமாக வைத்துகந்த காரணம் என்னை கொலாம்
ஊற்றமிக்க காலன் தன்னையொல்க உதைத்தருளித்
தோற்றம் ஈறும் ஆகி நின்றாய் சோபுர (ம்) மேயவனே.''

(சம்பந்தர்)

(சுந்தரரின் 'திருவிடையாறு' தலப்பதிகத்தில் - ஊர்த்தொகையில் இத்தலம் குறிக்கப்படுகிறது.) அப்பாடல்:-

''சுற்றுமூர் சுழியல் திருச்சோபுரம் தொண்டர்
ஒற்றுமூர் ஒற்றியூர் திருவூறல் ஒழியாப்
பெற்றமேறி பெண்பாதியிடம் பெண்ணைத் தெண்ணீர்
எற்றுமூர் எய்த மானிடையாறிடை மருதே.''

-''தீங்குறுமொன்
னார்புரத்தை வெண்ணகைத்தீ யாலழித்தா யென்றுதொழ
சேர்புரத்தின் வாழ் ஞானதீவகமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மங்களபுரீஸ்வரர் திருக்கோயில்
திருச்சோபுரம் - தியாகவல்லி அஞ்சல் - 608 801.
கடலூர் வட்டம் - கடலூர் மாவட்டம்.

Koviloor Digital Library

39/7. திருஅதிகை.

திருவதிகை.

நடுநாட்டுத் தலம்.

கடலூர் மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலிருந்து 2 கி. மீ. தொலைவில் உள்ளது. சென்னை, கடலூர், விருத்தாசலம், விழுப்புரம், சிதம்பரம் முதலிய ஊர்களிலிருந்து பண்ருட்டிக்குப் பேருந்து வசதி உள்ளது.

பண்ருட்டி பேருந்து நிலையத்திலிருந்து கடலூர் பாதையில் சென்றால் திருவதிகையை அடையலாம். கோயில்வரை வாகனங்கள் செல்லும். பண்ருட்டி இருப்புப்பாதை நிலையம்.

அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. திரிபுரத்தை எரித்த வீரச் செயல் நிகழ்ந்தது. ஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனம் காட்டிய தலம். அப்பரின் தமக்கையார் திலகவதியார் தங்கியிருந்து திருத் தொண்டு செய்து வந்த தலம். சூலை நோயின் துன்பம் தாளப்பெறாத அப்பர் பெருமான், யாருமறியாமல் பாடலிபுத்திரத்தை (திருப்பாதிரிப் புலியூரை) விட்டு நீங்கி, இங்கு வந்து, தமக்கையாரைக் கண்டு, தொழுது, திருவாளன் திருநீறு தரப் பெருவாழ்வு வந்ததென்று பணிந்து ஏற்று, உருவார அணிந்து, அவர்பின் சென்று, அதிகைப் பிரான் அடிமலர் வீழ்ந்து வணங்கி, ''ஆற்றேன் அடியேன்'' என்று ''கூற்றாயினவாறு'' பதிகம் பாடிச் சூலை நீங்கப்பெற்ற அற்புதத்தலம். சுருங்கச் சொல்லின், சைவத்துக்குத், திருத்தொண்டுக்கு உறைப்பான திருநாவுக்கரசரை வழங்கியருளிய பெருமைமிகு தலமிதுவே.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான 'உண்மை விளக்கம்' நூலை அருளிய 'மனவாசகங்கடந்தாரின்' அவதாரத் தலம் இதுவே. இத்தலத்தை மிதிக்க அஞ்சி சுந்தரர் அருகிலிருந்த சித்தவடமடத்தில் தங்கியதும் - திருவடி தீட்சை பெற்றதும்; பல்லவனான மகேந்திர வர்மனின் மனத்தை மாற்றிச் சமண் பள்ளிகளை இடித்துக் குணபரவீச்சரம் எழுப்பச் செய்ததும்; இத்தலத்தின் பெருமையைப் பறைசாற்றும் நிகழ்ச்சிகளாம்.

அதிரைய மங்கலம், அதிராஜமங்கலம், அதிராஜமங்கலியாபுரம் என்னும் பெயர்கள் இத்தலத்திற்குரியனவாகக் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

மணவிற் கூத்தனான காலிங்கராயன் என்பவன் இக்கோயிலுக்குப் பொன்வேய்ந்து நூற்றுக்கால் மண்டபம், மடைப்பள்ளி, யாகசாலை ஆகியவற்றை அமைத்து, அம்பாள் கோயிலையும் கட்டுவித்தான் என்பது கல்வெட்டுச் செய்தி. தென்கங்கை எனப்படும் கெடிலநதி பக்கத்தில் ஓடுகின்றது.

இறைவன் - வீரட்டேஸ்வரர், வீரட்டநாதர், அதிகைநாதர்.

இறைவி - திரிபுரசுந்தரி.

தலமரம் - சரக்கொன்றை.

தீர்த்தம் - கெடிலநதி.

மூவர் பாடல் பெற்றது.

மிகப்பெரிய கோயில், சுவாமி கர்ப்பக்கிருகம் தேர்போலப் பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டு, நிழல் பூமியில் சாயாதபடிக் கட்டப்பட்டுள்ளது. கோயிலுக்கு முன்னால் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இதைத் திருநீற்று மண்டபம் என்றழைக்கிறார்கள். இம்மண்டபத் தூண்களில் ரிஷபாரூடர், அப்பர், மயில் வாகனன் முதலிய சிற்பங்களும், இக்கோயிலைத் திருப்பணி செய்வித்த செட்டியார் சிற்பங்களும் உள்ளன. கோயிலுக்கு எதிரில் கருங்கல் தூண்கள் மொட்டையாக நின்று கொண்டிருக்கும் நிலையில் திலகவதியார் மடம் காட்சியளிக்கிறது. பதினாறுகால் மண்டபத்தின் பக்கத்தில் அப்பர் சுவாமிமடம் - திருவாவடுதுறை ஆதீனத்திற்குரியது உள்ளது.

உயர்ந்த ராஜகோபுரம். ஏழுநிலைகளையுடையது. கோபுர வாயிலில் இருபுறங்களிலும் அளவற்ற சிற்பங்கள் உள்ளன. வலப் பக்கத்தில் சற்று உயரத்தில் திரிபுரமெரித்த கோலம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் கஜசம்ஹாரகோலம்.

வாயிலின் இருபுறங்களிலும் நடனக்கலைச் சிற்பங்கள் (பரத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள 108 கரணங்களை விளக்கும் சிற்பங்கள்) அளவிறந்துள்ளன. மிதித்தேறும் படியின் இருபுறத்திலும் அழகான நடன மாதரின் உருவங்கள். அப்பப்பா! வைத்த கண்களை வாங்காமல் பார்த்தாலும் வேட்கை தணியவில்லை.

உட்புறத்தில் மற்றொரு பதினாறுகால் மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தின் இடப்பால் 'சக்கரதீர்த்தம்' எனப்படும் திருக்குளம் உள்ளது. இம்மண்டபத்தில் புகும்போது முதலில் உள்ள இரு தூண்களில் ஒன்றில் சுப்பிரமணியத் தம்பிரான் (அமர்ந்த நிலை)

Koviloor Digital Library

சிற்பமும், இதற்கு நேர் எதிர்த்தூணில் சிவஞானத் தம்பிரான் (நின்று கைகூப்பிய நிலை) சிற்பமும் உள்ளன. சுப்பிரமணியத் தம்பிரான் என்பவர்தான் இக்கோயிலைத் திருத்திச் செப்பம் செய்தவர் என்கின்றனர். இவர் சீடரான சிவஞானத் தம்பிரான்தான் முதன் முதலில் இத்திருக்கோயிலில் அப்பர் பெருமானுக்குப் பத்து நாள்கள் விழா எடுத்துச் சிறப்பாக நடத்தினார் என்பர்.

உள்கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கவசமிட்ட கொடிமரம் கொடிமரத்து விநாயகர் தரிசனம், முன்னால் நந்தி. வலப்பால் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இதைத் தேவசபை என்கின்றனர். நடராச அபிஷேகம் இம்மண்டபத்தில் நடைபெறும். உள்கோபுரம் தாண்டினால், உயரமான நந்தி உள்ளது. ஒருபுறம் முருகப் பெருமானும், மறுபுறம் கணபதியும் காட்சியளிக்கின்றனர். வலமாக வரும்போது அப்பர் சந்நிதி (உற்சவமூர்த்தி) உள்ளது. சேக்கிழார் முதலாக அறுபத்துமூவர் மூலத் திருமேனிகள் உள்ளன. அடுத்துத் தலமரம் சரக்கொன்றை உள்ளது. பக்கத்தில் திலகவதியார் சந்நிதி. அடுத்து சனீஸ்வரர், அம்பாள் திருமேனிகள் உள. முன்னால் பெரிய சிவலிங்கம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அடுத்து அப்பர் சந்நிதி. மூலமூர்த்தம் உள்ளது. அமர்ந்த திருக்கோலம் - சிரித்த முகம் ,- தலை மாலை கையில் உழவாரப்படை தாங்கிய பேரழகு. அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது. முன் மண்டபம், எதிரில் கவசமிட்ட கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளன.

பிராகாரத்தில் அடுத்து விநாயகர் சந்நிதியும் பக்கத்தில் பஞ்சமுக சிவலிங்கமும் (பசுபதிநாதர்) உள்ளன. வரிசையாகப் பல சிவலிங்கத் திருமேனிகள் உள்ளன. யாகசாலை, நவக்கிரக சந்நிதிகளையடுத்து, நடராச சபை உள்ளது. பக்க வாயிற்படிகள் வழியே சென்று, முன் மண்டபத்தையடைந்து, துவாரபாலகரை வணங்குகிறோம். திரிபுராந்தகர் உற்சவ சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. உள் மண்டபத்தை அடைந்ததும் நேரே மூலவர் சந்நிதி. மூலவர் - சிவலிங்கத் திருமேனி. கிழக்குநோக்கியது. பெரிய திருமேனி - பெரிய ஆவுடையார். சிவலிங்கத் திருமேனி பதினாறு பட்டைகளுடன் கம்பீரமாகக் காட்சி யளிக்கின்றது. பின்னால் சுவாமி அம்பாள் உருவங்கள் சோமாஸ்கந்த வடிவில் புடைமூர்த்தமாகச் சுதையில் அமைக்கப்பட்டுள்ளன - கல்யாண திருக்கோலம். தெவிட்டாத தரிசனம். அதிகைக் கெடிலநாதன் அருளைப் பருகப் பருகப் பசி ஆறவே ஆறாது. எத்தனை நேரம் நின்று தரிசித்தாலும் பிரிய மனம் வரவில்லை.

Koviloor Digital Library

இருபுறமும் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. பிட்சாடனர், சந்திரசேகரர், விநாயகர், பள்ளியறை மூர்த்தி, அஸ்திரதேவர், திலகவதியார், நால்வர்; சண்டேசுவரர் முதலிய உற்சவத் திருமேனிகள் தரிசிக்கத் தக்கவை.

சுவாமி கருவறை, பூமியில் நிழல் சாயாதபடி கட்டப்பட்டுள்ள தேர்போன்ற அமைப்பு, (காஞ்சி கயிலாய நாதர் கோயில் அமைப்பை நினைவூட்டுகிறது) கருவறை சுதையாலான பணி. இதன் முன் பகுதி வளர்த்துக் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. கருவறையைச் சுற்றிலும் குடவரைச்சிற்பங்கள் - சற்று வளர்த்திச் செய்யப்பட்டு உள்ளன. இச்சிற்பங்களுள் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கை, சண்டேஸ்வரர், சரப மூர்த்தி, கல்யாணசுந்தரர், ஏகபாதர் முதலியன பேரழகு வாய்ந்தவை.

அதிகை - வீரட்டானம் அரிய சிற்பங்களைக்கொண்ட, கலைப் பெட்டமாகத் திகழ்கின்றது.

அம்பாள் திரிபுரசுந்தரி சந்நிதி வலப்பால் தனிக்கோயிலாக வுள்ளது. அழகிய திருமேனி - நின்ற திருக்கோலம் - அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள் - எதிரில் நந்தியுள்ளது. நிறைவான தரிசனம். வைகாசி விசாகத்தில் பத்து நாள்களுக்குப் பெரு விழாவும், சித்திரைச் சதயத்தில் பத்து நாள்களுக்கு அப்பர் சுவாமி திருவிழாவும் நடைபெறுகின்றன.

நாடொறும் ஆறுகால பூஜைகள் முறையாக நடக்கின்றன. கோயிலில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் கட்டளையாக 'சிவ சிவ ஒலி மண்டபம்' 1962-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தலத்தில் உள்ள பழைய போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டி, 1 கி.மீ. தொலைவு சென்றால் ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கோயில் உள்ளது. இதுவே சித்த வட மடம் ஆகும். இப்பகுதி புதுப்பேட்டை என்று வழங்குகிறது. (சித்தவடமடத்தைப் பிற்காலத்தில் சித்தாண்டிமடம். சித்தாத்த மடம் என்றெல்லாம் வழங்கினர். இப்பகுதி இப்போது கோடாலம்பாக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

மகேந்திரவர்ம பல்லவன் கட்டிய குணபரவீச்சரம் - "ஆதிமூல குணபரேச்சுரன் கோயில்" என்றழைக்கப்படுகிறது. இது கோயிலுக்குப் பக்கத்தில் மேற்கே பெரிய ரோடுக் கரையில் உள்ளது. சிறு கட்டிடமாக இடிந்த நிலையில், உடைந்துபோன படிமங்களுடன் காட்சி தருகின்றது. தற்போதுள்ள கோயில் பிற்காலத்தில் பாண்டியர்களால் எழுப்பப்பட்டது. இக்கோயில் மராட்டிய ஆங்கிலேயர் காலத்தில்

Koviloor Digital Library

போர்க்கோட்டையாகவும் மாறி மாறிப் பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றில் அறிகிறோம்.

''எண்ணார் எழில்எய்தான் இறைவன் அனல் ஏந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறை பாடப் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவ நின்றாடும் வீரட்டானத்தே.''

(சம்பந்தர்)

''நீதியால் வாழமாட்டேன் நித்தலும் தூயோனல்லேன்
ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்கமாட்டேன்
சோதியே சுடரே உன்தன் தூமலர்ப் பாதங்காண்பான்
ஆதியே அலந்து போனேன் அதிகை வீரட்டனீரே.''

(அப்பர்)

''தம்மானை யறியாத சாதியார் உளரே, சடைமேற்கொள்
பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக்கரி காட்டிலாட, லுடையானை
விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்தன் அடிக்கொண்டு என்முடிமேல் வைத்திடுமென்னும்,
ஆசையால் வாழ்கின்ற அறிவிலாநாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத்து, உறைவானை
இறைபோதும் இகழ்வன் போலியானே.''

(சுந்தரர்)

–'வார்கெடிலச்
சென்னதிகை யோங்கித் திலகவதியார் பரவு
மன்னதிகை வீரட்ட மாதவமே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வீரட்டேஸ்வரர் திருக்கோயில்
திருவதிகை - பண்ருட்டி அஞ்சல்
கடலூர் மாவட்டம் - 607 106.

Koviloor Digital Library

40/8. திருநாவலூர்

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் மட்டும் கொச்சையாகத் 'திருநாமநல்லூர்' என்று வழங்குகின்றது. (அரசு பெயர்ப் பலகைகள் முதலியவையெல்லாம் திருநாவலூர் என்றே உள்ளன).

1. சென்னை - திருச்சி டிரங்க் ரோடில் விழுப்புரம் தாண்டி உளுந்தூர்ப்பேட்டைக்கு முன்பாக, மடப்பட்டு தாண்டி, மெயின் ரோட்டில் உள்ள திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பிரிந்து எதிரே இடப்பக்கமாகச் செல்லும் பண்ருட்டி சாலையில் 2 கி.மீ. சென்றால் ஊரையடையலாம். சாலையோரத்தில் ஊரின் முதலிலேயே கோயில் உள்ளது.

2. பேருந்தில் செல்வோர் விழுப்புரத்திலிருந்து அரசூர், மடப்பட்டு வழியாக உளுந்தூர்ப்பேட்டை செல்லும் பேருந்தில் ஏறி கெடிலம் Stop என்று கேட்டு அங்கு இறங்கினால் கடலூர் - பண்ருட்டி செல்லும் பேருந்துகள் வரும். அவற்றில் ஏறி 2 கி.மீ. சென்று ஊரையடைந்து மேற்சொல்லியவாறு கோயிலை அடையலாம். (திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உள்ள இடமே 'கெடிலம் Stopping' என்று சொல்லப்படுகிறது. கோயில் உள்ள இடத்தில் Stopping உண்டு. பேருந்துகள் நிற்கும்.

சுந்தரர் அவதாரத்தலம். சுக்ரன் வழிபட்ட தலம்.

இறைவன் - பக்தஜனேஸ்வரர், திருநாவலேஸ்வரர்.

இறைவி - மனோன்மணி, சுந்தரநாயகி, சுந்தராம்பிகை

தலமரம் - நாவல்.

தீர்த்தம் - கோமுகி தீர்த்தம்.

சுந்தரர் பாடல் பெற்ற தலம். அருணகிரிநாதரின் திருப்புகழும் உள்ளது.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் புத்தம் புதிய பொலிவுடன் திகழ்கிறது. (ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத் திருப்பணி).

கோபுரத்தையடுத்து இடப்பால் உள்ளே சுந்தரர் சந்நிதி உள்ளது. பரவை, சங்கிலியார் சூழ எதிரில் வெள்ளையானை நிற்க, சுந்தரர் கையில் தாளமேந்தி காட்சி தருகிறார். உள் இடம் மிகவும் விசாலமாக

Koviloor Digital Library

உள்ளது. எதிரில் கவசமிட்ட கொடிமரம், பலிபீடம் முதலியன உள்ளன. கொடிமர விநாயகர். சுந்தர விநாயகராகக் காட்சி தருகிறார். நந்தி சற்றுப் பெரியது. தலப்பதிகக் கல்வெட்டுள்ளது. அடுத்து வாகன மண்டபம் உள்ளது. உள்வாயிலைக் கடந்ததும் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நால்வர், இரு மனைவியருடன் சுந்தரர், நடராசர், சிவகாமி, முருகன், விநாயகர், வள்ளி, தெய்வயானை முதலிய உற்சவத் திருமேனிகள் உள்ளன. நேரே மூலவர் தரிசனம் கிழக்கு நோக்கிய சந்நிதி- சிறிய கருவறை. சிவலிங்கத்தின் பாணம் சற்று உயரமாகவுள்ளது. நடராச சபை உள்ளது. உள்பிராகாரத்தில் நரசிங்க முனையரையர் பூசித்த மிகப்பெரிய சிவலிங்க மூர்த்தம் உள்ளது.

பொல்லாப் பிள்ளையார், சேக்கிழார், நால்வர், அறுபத்துமூவர், வலம்புரிவிநாயகர், சோமாஸ்கந்தர், ஆறுமுகர் முதலிய சந்நிதிகளும், தொடர்ந்து யுகலிங்கங்களும், கஜலட்சுமி சந்நிதிகளும் உள்ளன. கருவறைச் சுவரில் சண்டேசுரர் வரலாறு சிற்பங்கள் வடிவில் - பால் கறப்பது, தந்தையார் மரத்தின் மீதேறிப் பார்ப்பது, திருமஞ்சனம் செய்வது - தந்தையின் கால்களைத் துணிப்பது - இறைவன் கருணை செய்வது - வடிக்கப்பட்டுள்ளது. நவக்கிரக சந்நிதியில் சுக்கிரனுக்கு எதிராக அவன் வழிபட்ட சுக்கிரலிங்கம் உள்ளது. நவக்கிரகங்களில் நடுவில் உள்ள சூரியன் திசைமாறி மூலவரைப்பார்த்தவாறு உள்ளார். பக்கத்தில் பைரவர் திருமேனிகளும் சூரியனும் உள்ளனர்.

தலமரம் 'நாவல்'. வெளிப் பிராகாரத்தில் இரண்டு உள்ளன. அம்பாள் கோயில் தனியே உள்ளது. இதுவும் கிழக்கு நோக்கியது. அழகான முன் மண்டபம் உள்ளது. அம்பிகை நான்கு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலம்.

கோஷ்ட மூர்த்தமாகவுள்ள தட்சிணாமூர்த்தி உருவம் - ரிஷபத்தின் முன்னால் நின்று வலக்கையை ரிஷபத்தின்மீது ஊன்றி, மறுகையில் சுவடியேந்தி நிற்கும் அமைப்பு - கண்டு மகிழத் தக்கது. ஆலயத்துள் வரதராஜப் பெருமாள் சந்நிதி, ஸ்ரீதேவி பூதேவியுடன் காட்சி தரும் கோலத்தில் உள்ளது. மூலவர் முன்பு உற்சவ மூர்த்தங்களாகப் பெருமாள், தாயார், இராமர், இலக்குவன் சீதை முதலியன வைக்கப்பட்டுள்ளன.

கோயிலுக்குப் பக்கத்தில் சுந்தரர் மடாலயம் உள்ளது. அழகான முன்மண்டபம். சுந்தரர் கையிற் செண்டுடன் அழகாகக் காட்சி தருகின்றார். இதற்கு எதிர் வீட்டில்தான் கோயில் குருக்கள் வசிக்கின்றார். இங்குள்ள உட்கோயில் தொண்டீச்சரம் எனப்படும்.

Koviloor Digital Library

இது முதற்பராந்தகனின் முதல் மகன்; இராசாதித்தனால் கட்டுவிக்கப் பெற்றது என்பது கல்வெட்டுச் செய்தி.

''கோவல னான்முகன் வானவர் கோனுங் குற்றவேல் செய்ய
மேவலர் முப்புரந்தீ யெழுவித்தவன்ஓர் அம்பினால்
ஏவலனார் வெண்ணெய் நல்லூரில் வைத்து எனை யாளுங் கொண்ட
நாவலனார்க்கு இடமாவது நந் திருநாவலூரே.''

(சுந்தரர்)

-'பன்னரிதாம்
ஆவலூர் எங்களுடை யாரூர னாரூராம்
நாவலூர் ஞானியருண் ஞாபகமே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பக்தஜனேஸ்வரர் திருக்கோயில்
திருநாவலூர் & அஞ்சல் - 607 204
உளுந்தூர்பேட்டை வட்டம் விழுப்புரம் மாவட்டம்.

41/9. திருமுதுகுன்றம்

விருத்தாசலம்

நடுநாட்டுத் தலம்.

திருமுதுகுன்றம் - தமிழ்ப்பெயர். விருத்தாசலம் என்பது சம்ஸ்கிருதப் பெயர். தற்போது வழக்கில் விருத்தாசலம் என்றே வழங்கப்படுகிறது.

சென்னை - திருச்சி ரயில்மார்க்கத்தில் (Chord line) விழுப்புரத்தை அடுத்துள்ள ரயில் சந்திப்பு நிலையம், திருச்சியிலிருந்தும் விழுப்புரத்தி லிருந்தும் பேருந்து வசதிகள் அடிக்கடி உள்ளன.

இத்தலத்திற்கு 'விருத்த காசி' என்றும் பெயருண்டு. பண்டை நாளில் இத்தலத்துள்ளோர் காசிக்குச் செல்வதில்லை என்ற மரபு இருந்ததாகத் தெரிகின்றது.

Koviloor Digital Library

பிரமனும் அகத்தியரும் வழிபட்ட பெருமையுடைய பதி. சுந்தரர் இத்தலத்தில் பரவையருக்காகப் பெருமானை வேண்டிப் பொன்பெற்று அப்பொன்னை இங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுத்துக்கொண்டார் என்பது வரலாறு.

இத்தலத்தில் இறப்பவருக்கு; இறைவன் அவ்வுயிரைத் தன் தொடைமீது கிடத்தி மந்திர உபதேசம் செய்ய, இறைவி முன்தானையால் விசிறி இளைப்பாற்றுகின்றாள் என்பது கந்தபுராணம் வாயிலாக நாம் அறியும் செய்தியாகும்.

''தூசினால் அம்மைவீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சும்
மாசிலா உயிர்கட் கெல்லாம் அஞ்செழுத்தியல்பு கூறி
ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால் அந்த
காசியின் விழுமிதான முதுகுன்ற வரையும் கண்டான்.''

(கந்தபுரா - வழிநடைப்படலம்)

இறைவன் - விருத்தகிரீஸ்வரர், பழமலைநாதர்.

இறைவி - விருத்தாம்பிகை, பெரிய நாயகி, பாலாம்பிகை.

தீர்த்தம் - மணிமுத்தாறு; அக்கினி, குபேர, சக்கர தீர்த்தங்கள்.

தலமரம் - வன்னி

தல விநாயகர் - ஆழத்துப் பிள்ளையார்

மூவர் பாடலும் பெற்ற பழம் பதி. அருணகிரிநாதர், குருநமசிவாயர், சிவப்பிரகாசர், இராமலிங்க வள்ளலார் முதலிய மகான்களும் இப்பதியைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இத்தலத்தின் பெயரில் 'குன்றம்' என்ற சொல் இருப்பினும், காண்பதற்கு மலை ஏதுமில்லை. குன்று பூமியினடியில் அழுந்தியிருப்பதாகத் தலவரலாறு கூறுகிறது. இதற்கேற்ப இப்பகுதியில் பூமிக்கடியில் பாறைகளே உள்ளன. எல்லாமலைகளும் தோன்றுவதற்கு முன்னரே இம்மலை தோன்றி மறைந்தமையால் இதற்குப் பழமலை - முதுகுன்றம் என்று பெயர் வந்தது. (விருத்தம் - பழமை, அசலம் - மலை) வடக்குக் கோபுர வாயிலுக்கு நேரே வடபால் மணிமுத்தாற்றில் நீராட வேண்டும். இவ்விடமே புண்ணிய மடு எனப்படுவதாகும்.

மிகப்பெரிய கோயில். பெரிய சுற்று மதில். நாற்புறமும் கோபுரங்கள் ஏழுநிலைகளுடன் காட்சியளிக்கின்றன. கீழைக்கோபுர வாயிலின் முன்னால் வெளியே உள்ள பதினாறுகால் மண்டபத்தில் வட, தென்பாற் சுவர்களில் 72 வகையான பரதநாட்டியப் பாவனை உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

வாயிலின் உட்புறம் முன்னால் இருப்பது கைலாசப் பிராகாரம், அதில் முன்னால் உயர்ந்துள்ள கருங்கல் மண்டபம் தீபாராதனை மண்டபம் எனப்படும். அடுத்து மேற்புறமுள்ள பெரிய மண்டபம் நந்தி மண்டபம். ஆடிப்பூரத்தில் கல்யாணப் பெருவிழா இங்குதான் நடைபெறும். இதன் தென் பாலுள்ளது விபச்சித்து முனிவர் மண்டபம் ஆகும். மாசிமகத்தில் 6ஆம் நாள் விழாவில் - இவ்வொரு நாளில் மட்டுமே உலா வருகின்ற - உற்சவ மூர்த்தி பெரிய நாயகர் காட்சி தர, விபசித்து முனிவர் தரிசிக்கும் விழா இங்குத்தான் நடைபெறுகிறது. இம்மண்டபத்தின் நேர்கிழக்கில் கிணறுவடிவத்தில் அக்னி தீர்த்தமும்; அதன் தெற்கில் சொற்பொழிவு மண்டபமும் உள்ளன.

தலவிநாயகர் ஆழத்துப்பிள்ளையார், பெயருக்கேற்ப சந்நிதி ஆழத்தில் உள்ளது. இறங்குவதற்குப் படிக்கட்டுகள் உள்ளன. தனிச் சுற்றுமதிலும் கோபுரமும் கொண்டு இச்சந்நிதி விளங்குகின்றது. திருமாலின் சக்கரத்தால் உண்டாக்கப்பட்ட சக்கர தீர்த்தத்தைச் சுற்றிலும் நந்தவனம் உள்ளது. இக்கைலாசப் பிராகாரத்தின் வட மேற்கு மூலையில் 28 ஆகமக் கோயில் உள்ளது. முருகக் கடவுள் 28 ஆகமங்களையும் சிவலிங்கங்களாக வைத்துப் பூசித்தார் என்பது இதன் வரலாறு. காமிகேசுவரர் முதலாக வாதுளேசர் ஈறாக ஆகமங்களின் பெயர்களை இத்திருமேனிகள் பெற்றுள்ளன.

பெரிய நாயகி கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. தனிக்கோபுரம் உள்ளது. அம்பிகை - விருத்தாம்பிகை சந்நிதி. பெரிய கோயிலின் முன்னால் வெளியில் உள்ள அலங்கார மண்டபத்தில் கொடி மரமும் நந்தியும் உள்ளன. அருகில் குகை முருகன் சந்நிதியும் இங்கு வாழ்ந்து சாரூப நிலையடைந்த நாதசர்மா, அநவர்த்தினி ஆகியோரின் பெயர்களில் அமைந்த கோயில்களும் உள்ளன.

பக்கத்தில் குபேர தீர்த்தம். அடுத்துள்ளது யாகசாலை மண்டபம். தென்புறமுள்ள நூற்றுக்கால் மண்டபம் மிகப் பழமையானது. சக்கரங்கள் பொருந்தி குதிரைகள் பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. இதுவே கைலாசப் பிராகாரத்தின் முடிவு.

அடுத்துள்ளது இரண்டாவது சுற்றுமதில். உட்பிராகாரத்திற்கு வன்னியடிப் பிராகாரம் என்று பெயர். மடைப்பள்ளிக்குப் பக்கத்தில் தலமரமான வன்னிமரம் உள்ளது. இங்குள்ள மேடையில் விநாயகர், விபச்சித்துமுனிவர், உரோமேச முனிவர், விதர்க்கண செட்டி (வழிபட்டுச்சிவகணமான ஓர் அன்பர்) குபேரன் தங்கை முதலியோரின் உருவங்களும் உள்ளன. வன்னியடிப் பிராகாரத்தில் பஞ்சலிங்கங்கள்

Koviloor Digital Library

உள. வல்லபை கணபதி, மீனாட்சி சொக்கலிங்கம், விசுவநாதலிங்கம், ஆறுமுகர், ஸஹஸ்ர லிங்கம், ஏகாம்பர லிங்கம், ஜம்புலிங்கம், அண்ணாமலையார் முதலிய சந்நிதிகள் உள்ளன. பெரிய நாயகி கோயிலுக்கு இப் பிராகாரத்திலிருந்து செல்வதற்கு அமைந்துள்ள வாயிலில் நவக்கிரகங்களும் தண்டபாணி சந்நிதியும் உள்ளன. இசை மண்டபம் (அ) அலங்கார மண்டபமே உற்சவரான பெரிய நாயகர் எழுந்தருளியுள்ள இடமாகும். எல்லாத் திருமஞ்சனச் சிறப்பும் இங்கு இவருக்குத்தான். இவர் ஆண்டில் ஒரு நாள் மட்டும் - அதாவது மாசி மகம் ஆறாம் நாள் விழாவில் - வெளியில் உலா வருவார். மற்ற விழாக் காலங்களில் **சிறிய பழமலை நாயகர்** வெளியில் உலா வருவது மரபு. பௌர்ணமி, பிரதோஷ காலங்களில் பெரிய நாயகரை ஏராளமான மக்கள் வந்து வழிபடுகின்றனர்.

பெரிய நாயகர் உற்சவ மூர்த்தியாதலின் நாடொறும் அலங்கார தீபாராதனைகள் அனைத்தும் **'உடையவர்'** எனப்படும் ஸ்படிகலிங்கத் திற்கே செய்யப்படுகின்றன.

இசை மண்டபத்தின் வடபால் உள்ள நடராசசபையுடன் வன்னியடிப் பிராகாரம் நிறைவாகிறது.

அடுத்து மூன்றாவது (உள்) சுற்று மதிலைக் கடந்தால் **அறுபத்து மூவர் பிராகாரத்தை** அடையலாம். நால்வர், விநாயகர், அறுபத்துமூவர், ரிஷபாருடர், யோக தட்சிணாமூர்த்தி, சப்த மாதர்கள், உருத்திரர், மாற்றுரைத்த விநாயகர் முதலிய திருவுருவங்கள் உள்ளன. அடுத்துள்ளவை வருணலிங்கம், முப்பிள்ளையார், தட்சிணாமூர்த்தி, ஆகியவை. சின்னப்பழமலை நாதர், (உற்சவர்) வள்ளி தெய்வயானை சமேத முருகர், வல்லபை கணபதி, பிந்து மாதவப் பெருமாள், மயூர முருகன் முதலிய சந்நிதிகளை அடுத்துத் தரிசிக்கலாம்.

இளமை நாயகி (பாலாம்பிகை) கோயில் உள்ளது. பெரிய நாயகியே குருநமசிவாயருக்கு இளமை நாயகியாக வந்து உணவளித்த தால் இளமை நாயகிக்குத் தனிக்கோயில் உள்ளது. கஜலட்சுமி, பைரவர், சூரியலிங்கம், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

அடுத்து மகாமண்டபத்தையடைகிறோம். உள்ளிருப்பது ஸ்தபன மண்டபம், துவார பாலகர்களைத்தொழுது சென்று கர்ப்பக்கிருகத்தில் மூலவராகிய **பழமலை நாதரைத்** தரிசிக்கிறோம் - மனநிறைவான தரிசனம்.

இத்தலத்தில் குருநமசிவாயர் பற்றிச்சொல்லப்படும் ஒரு வரலாறு வருமாறு:-

Koviloor Digital Library

குருநமசிவாயர் என்னும் மகான் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஒருமுறை அவர் திருவண்ணாமலையிலிருந்து தில்லை சென்றார். வழியில் திருமுதுகுன்றத்தில் இரவு தங்கினார். பழமலை நாதரையும் பெரிய நாயகியையும் தரிசித்து விட்டுக் கோயிலுள் ஒருபக்கத்தில் படுத்திருந்தார். பசிமிகுந்தது. பசி உண்டான போதெல்லாம் அம்பிகையைப் பாடி உணவைப் பெற்று உண்ணும் வழக்கமுடைய இவர் பெரிய நாயகியை துதித்து

''நன்றி புனையும் பெரிய நாயகி எனுங்கிழத்தி
என்றும் சிவனாரிடக் கிழத்தி - நின்ற
நிலைக் கிழத்தி மேனி முழுநிலக் கிழத்தி
மலைக் கிழத்தி சோறு கொண்டு வா'' - என்று பாடினார்.

பெரிய நாயகி, முதியவடிவில் எதிர்தோன்றி ''எனைப் பலமுறையும் கிழத்தி என்று ஏன் பாடினாய்?'' கிழத்தி எவ்வாறு சோறும் நீரும் கொண்டுவர முடியும் என்று கேட்க; குருநமசிவாயர்

''முத்தி நதி சூழும் முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே - அத்தன்
இடத்தாளே முற்றா இளமுலை மேலார
வடத்தாளே சோறு கொண்டு வா'' என்று பாடினார்.

அம்மையும் மகிழ்ந்து இளமை நாயகியாக வடிவு கொண்டு வந்து உணவு படைத்தாள் என்று சொல்லப்படுகிறது. இதனால் உண்டானதே பாலாம்பிகை கோயிலாகும்.

இக்கோயில் பலகாலங்களில் பலரால் திருப்பணிகள் பல செய்யப்பட்டுத் திகழ்கின்றது. ஆதியில் விபச்சித்து முனிவர் முதன் முதலில் இக்கோயில் திருப்பணியைச் செய்ததாகத் தலபுராணம் கூறுகிறது. பின்பு 10-ஆம் நூற்றாண்டில் செம்பியன் மாதேவியால் மூலவர் கருவறை ஸ்தபன மண்டபம். பரிவாரக் கோயில்கள்; வன்னியடிப்பிராகாரக் கோயில்கள் முதலியவை திருப்பணிகள் செய்யப்பட்டன. இசை மண்டபம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. 1193-ல்) ஏழிசைமோகனான குலோத்துங்க சோழக்காடவ ராதித்தன் என்பவனால் கட்டப்பட்டது. மாசிமக ஆறாம் நாள் விழா நடைபெறும் இடமாக உள்மண்டபம் சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் பெரம்பலூர் கிராமத்தில் வாழ்ந்த உடையார் ஒருவரால் கட்டப்பட்டது. கி.பி.1813 முதல் 1926 வரை தென்ஆற்காடு மாவட்ட ஆட்சியராக இருந்த 'ஹைட்துரை' என்பவர் கைலாச பிராகாரத்திற்குத் தளவரிசை போட்டுத் தந்துள்ளார். அத்துடன் தேர்இழுக்க இரும்புச் சங்கிலியும், கும்ப தீபாராதனைக்காக வெள்ளிக் குடமும் வாங்கித் தந்துள்ளார்

Koviloor Digital Library

என்னும் செய்தி இம்மாவட்ட கெஜட்டால் தெரிய வருகின்றது. இத்துரையின் பெயரால் இன்றும் இவ்வூரில் தென்கோட்டை வீதியில் ஒரு சத்திரம் உள்ளது - (ஹைட் சத்திரம்).

இக்கோயிலிலிருந்து 72 கல்வெட்டுக்கள் படியெடுத்து வெளியிடப்பட்டுள்ளன. இவை கண்டராதித்தன், முதலாம் ராசராசன், முதலாம் ராசேந்திரன், ராசாதிராசன், விக்கிரமசோழன் இரண்டாம் ராசராசன், மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் பாண்டியர், பல்லவர் விஜயநகர மன்னர் முதலானோரின் காலத்தியவை.

இக்கல்வெட்டுக்களிலிருந்து வேதமோதவும், புராணம் படிக்கவும் திருமுறைப் பாராயணம் செய்யவும், பணியாளர்கட்குத் தரவும், நந்தவனம் வைக்கவும் நிலமும் பொன்னும் பொருளும் நெல்லும் கொடுத்த செய்திகள் அறியக்கிடக்கின்றன. வாங்கிய கடனைத் திருப்பித்தராத ஒருவனுக்குத் தண்டனையாக கோயில் விளக்கிடுமாறு பணித்த செய்தியொன்றும் ஒரு கல்வெட்டால் தெரிய வருகிறது. பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கன் என்பவன், தான் போர்க் களத்தில் பலரைக் கொன்ற பழி நீங்குவதற்காகப் பழமலைநாதருக்கு வைரமுடி ஒன்று செய்துதந்து அதற்கு அவனியாளப் பிறந்தான் என்று பெயரும் சூட்டினான் என்பதும் மற்றொரு கல்வெட்டுச் செய்தியாகும்.

கல்வெட்டில் இறைவனின் திருப்பெயர், 'திருமுதுகுன்றம் உடையார்' 'ராசேந்திரசிம்ம வளநாட்டு இருங்கொள்ளிப்பாடி பழூர்க் கூற்றத்து நெற்குப்பை திருமுதுகுன்றம் உடையார்க்கு' என்று குறிக்கப்படுகிறது.

இதனால் பண்டை நாளில் இம்முதுகுன்றத்திற்கு நெற்குப்பை என்ற பெயரும் வழங்கி வந்ததாகக் கருத இடமுண்டாகிறது, மாசித் திங்களில் பெருவிழா நடைபெறுகிறது. ஆடிப்பூர திருக்கல்யாணப் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

மூவர் பாடலுடன்; அருணகிரியாரின் திருப்புகழும், குமாரதேவர் பாடியுள்ள பெரியநாயகியம்மன் பதிகமும்; குருநமசிவாயர் பாடியுள்ள க்ஷேத்திரக்கோவையும்; வள்ளற் பெருமானின் குருதரிசனப் பதிகமும்; சொக்கலிங்க அடிகளார் என்பவர் (19-ஆம் நூற்றாண்டு) எழுதிய பெரியநாயகி பிள்ளைத் தமிழும் இத்தலத்திற்கு உள்ளன.

சிவப்பிரகாச சுவாமிகள் பழமலையந்தாதி, பெரியநாயகியம்மை விருத்தம், பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை, பிக்ஷாடன நவமணிமாலை முதலிய நூல்களைப் பாடியுள்ளார்கள்.

Koviloor Digital Library

16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானக்கூத்தர் என்பவர்தாம் திருமுதுகுன்றத் தலபுராணத்தைத் தமிழில் பாடியுள்ளார். நாடொறும் நான்கு கால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன.

''மத்தா வரை நிறுவிக்கடல் கடைந்தவ் விடமுண்ட
தொத்தார் தருமணி நீண்முடிச் சுடர் வண்ணன திடமாம்
கொத்தார் மலர் குளிர் சத்தகி லொளிர் குங்குமங் கொண்டு
முத்தாறு வந்தடி வீழ்தரு முதுகுன் றடைவோமே''

(சம்பந்தர்)

கருமணியைக் கனகத்தின் குன்றொப்பானைக்
கருதுவார்க் காற்றவெளி யான்றன்னைக்
குருமணியைக் கோளரவ மாட்டுவானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவணவன்றன்னை
அருமணியை யடைந்தவர்கட்கு அமுதொப்பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம்புக்கத்
திருமணியைத் திருமுதுகுன்றுடை யான்றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்தவாறே.

(அப்பர்)

மெய்யைமுற்றப் பொடிப்பூசியொர்நம்பி
வேதநான்கும்விரித் தோதியொர்நம்பி
கையிலோர்வெண் மழுவேந்தியொர்நம்பி
கண்ணுமூன்றுடை யாயொருநம்பி
செய்யநம்பிசிறுச் செஞ்சடைநம்பி
திரிபுரந்தீயெழச் செற்றதோர்வில்லா(ல்)
எய்தநம்பி யென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங் கணம்பிகண்டாயே

(சுந்தரர்)

-'தேவகமாம்
மன்றமமர்ந்த வளம்போற் றிகழ்ந்தமுது
குன்றம் அமர்ந்த அருட்கொள்கையே'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பழமலைநாதர் திருக்கோயில்
விருத்தாசலம் & அஞ்சல் -606 001.
விழுப்புரம் மாவட்டம்

Koviloor Digital Library

42/10. திருநெல்வெண்ணெய்

நெய்வெணை

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'நெய்வெணை' என்று வழங்குகிறது.

(1) தெ.ஆ.மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை பேருந்து நிலையத்தின் பக்கத்தில் செல்லும் திருவெண்ணெய்நல்லூர் சாலையில் இக் கிராமம் உள்ளது. உளுந்தூர்ப்பேட்டை நகரப் பஞ்சாயத்து அலுவலகத்தின் முன்பிருந்து மினி பஸ் ஒன்று செல்லுகிறது. இப்பேருந்து சிறு சிறு கிராமங்கள் வழியாகச் சென்று நெய்வெணை வழியாகத் திருக்கோயிலூரை அடைகிறது. ஒற்றையடிப்பாதை - குறுகலும் வளைவும் கொண்டவை. ஒரே மினி பஸ் இவ்வழியாகச் செல்வதால் எப்போதும் மக்கள் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது.

இப்பேருந்து காலை 8-30, நண்பகல் 1-30, மாலை 6-30 என மூன்று வேளைகள் மட்டுமே செல்கிறது. இதிற்செல்வோர், நெய்வெணை கோயிலின் முன்பு இறங்கிப் பார்த்துவிட்டு இதிலேயே திரும்பிவந்து விட வேண்டும். வேறு வழியில்லை. தனிப் பேருந்தில் தலப்பயணம் மேற்கொள்ளும் திருக்கூட்டத்தினருக்கு இப்பாதை முற்றிலும் ஏற்றதன்று.

(2) அவர்கள் உளுந்தூர்ப்பேட்டை - திருக்கோயிலூர் (வழி) எலவானாசூர்கோட்டை நெடுஞ்சாலையில் வந்து "எறையூர்" அடைந்து அங்கிருந்து பிரியும் பாதையில் வந்து (வடகுரும்பூர் வழியாக) 4 கி.மீ. தொலைவில் உள்ள நெய்வெணையை அடையலாம். இப்பாதை அகலமானது. பேருந்திற்கு ஏற்றது. இவ்வழியே சிறந்த வழி. இப்பாதை புதியதாகப் போடப்பட்டுள்ளது.

(3) எறையூர் - நெய்வெணை நகரப் பேருந்து (Town Bus) செல்கின்றது.

(4) உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து நேரே சேலம் ரோடில் சென்று குமாரமங்கலம் தாண்டி, வலப்புறமாகப் பிரியும் அங்கனூர் நெய்வெணை சென்றால், நெய்வெணையை அடையலாம். (Single Road)

சிறிய கிராமம். கோயிலின் பக்கத்தில் குருக்கள் வீடு உள்ளது. ராஜகோபுரமில்லை - முகப்பு வாயில் மட்டுமே. சிறிய கோயில்

Koviloor Digital Library

கோயிலின் முன் நந்தி மட்டுமே உள்ளது. கொடிமரமில்லை. பக்கத்தில் உள்ள மண்டபம் கிலமாகியுள்ளது. சனகாதியோர் நால்வரும் வழிபட்ட தலம்.

வாயிலைக் கடந்து உட்புகுந்ததும் நேரே மூலவர் சந்நிதி.

இறைவன் - சொர்ணகடேஸ்வரர், வெண்ணெயப்பர், நெல்வெண்ணெய்நாதர்.

இறைவி - பிருஹந்நாயகி, நீலமலர்க்கண்ணி.

தலமரம் - புன்னை (தற்போதில்லை)

தீர்த்தம் - பெண்ணையாறு (கோயிலுக்குள் தீர்த்தக் கிணறு உள்ளது. நீர் நன்குள்ளது)

சம்பந்தர் பாடல் பெற்றது.

பழமையான கோயில். பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியுள்ளது. அடுத்துள்ள வள்ளி தெய்வயானை உடனாகிய ஆறுமுக சுவாமி மயில் வாகனராகக் காட்சி அழகுடையது. இச்சந்நிதி திருப்பணி செய்யப் பட்டுள்ளது. அம்பாள் சந்நிதி தனிக் கோயிலாகப் பக்கத்தில் உள்ளது. நின்ற திருக்கோலம். சந்நிதிக்கு வெளியே நேர் எதிரில் மூவர் முதலிகள் - சுந்தரர் நடுவிலும் இருபுறங்களிலும் அப்பரும் ஞானசம்பந்தரும் உள்ளனர். ஞானசம்பந்தர் கையில் தாளமின்றி, கை கூப்பிய நிலையிலும், சுந்தரர், நடன சுந்தரராகவும் காட்சி தருகின்றனர்.

நடராச மண்டபம் பழுதடைந்துள்ளது. உள்ளே மூர்த்தமில்லை. பக்கத்தில் நவக்கிரக சந்நிதி, சூரியன் சந்திரன் திருமேனிகள் வைக்கப் பட்டுள்ளன.

மூலவரைத் தரிசிக்கச் செல்லும் வாயிலின் வெளியே திருமால் சங்குசக்ரதாரியாகத் திருமகளுடன் அழகாகக் காட்சி தருகிறார். துவாரபாலகர் தொழுது உள்வாயில் கடந்து மூலவரைத் தரிசிக்கலாம். வாயிலின் வெளியே சுவரில் தலப்பதிகம் கல்வெட்டிற் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது.

சிவராத்திரி, சனிப்பெயர்ச்சி, முதலியவை விசேஷம். கார்த்திகை தீபம், மாசிமகம், மார்கழித் திருவாதிரை காலங்களில் சுவாமி புறப்பாடு நிகழ்கிறது. மாதாந்திரக் கட்டளைகள் நடைபெறுகின்றன. பெருவிழா இல்லை. நர்டொறும் ஒரு வேளை பூஜை மட்டுமே. அரசின் நிதி உதவியால் ஓரளவு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. குருக்களின் பெருமுயற்சியால் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

Koviloor Digital Library

முதற்குலோத்துங்கன், விக்கிரம சோழன், கோப்பெருஞ்சிங்கன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் இறைவன் பெயர் ''பொற்குடங் கொடுத்தருளிய நாயனார்'' என்றும்; இப்பதி ''மிலாடு ஆகிய சனாதன வளநாட்டு குறுக்கை கூற்றத்துக்கு உட்பட்ட ஊர்'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் முதற்குலோத்துங்க சோழனின் 48-ஆவது ஆண்டுக் காலத்திலிருந்த கீழையூர் இராசேந்திர சோழ சேதிராயர் என்பவர் இக்கோயில் நடராசமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தார் என்ற குறிப்பும் உள்ளது. (ஆனால் இன்று கோயிலில் நடராச மூர்த்தமேயில்லை).

கல்வெட்டில் வரும் இறைவனின் பெயரும், வழக்கில் சம்ஸ் கிருதத்தில் வழங்கும் பெயரும் ஒன்றாகவுள்ளன. ஆனால் பொற்குடம் கொடுத்த வரலாறு செவிவழிச் செய்தியாகவுங்கூட ஏதும் நமக்குக் கிடைக்கவில்லை.

ஊரிலுள்ள ஒரு முதியவர்; இக்கோயில் கிணற்றிலிருந்து பொற் குடம் எடுத்ததாக, அவருடைய தாத்தா சொன்னதாக ஒரு செய்தியைச் சொன்னார். விவரம் தெரியவில்லை.

''நல்வெணெய் விழுது பெய்தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவியநீ ரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல் வணமிடுவது சொல்லே.''

(சம்பந்தர்)

–'அன்றகத்தின்
நல்வெண்ணெய் உண்டொளித்த நாரணன் வந்தேத்துகின்ற
நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சொர்ணகடேஸ்வரர் -
நெல்வெண்ணெயப்பர் திருக்கோயில்
நெய்வெணைகிராமம் - கூவாடு அஞ்சல்
(வழி) எறையூர் - உளுந்தூர்ப்பேட்டை வட்டம்
விழுப்புரம் மாவட்டம் - 607 201.

Koviloor Digital Library

43/11. திருக்கோவலூர்

திருக்கோயிலூர்

நடுநாட்டுத் தலம்.

சென்னை, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, திண்டி வனம், சிதம்பரம், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, முதலிய ஊர்களி லிருந்து இத்தலத்திற்குப் பேருந்து வசதி உள்ளது.

திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ. தொலைவு. திருவண்ணா மலையிலிருந்து பேருந்தில் சென்றால் தென்பெண்ணையாற்றுப் பாலத்தைக் கடந்து, ஊருள் சென்று, கடலூர் - பண்ருட்டிப் பாதையில் திரும்பிச் சென்றால், கீழையூர்ப் பகுதியில் கோயில் உள்ளது.

வீரட்டேஸ்வரர் கோயில் என்று கேட்க வேண்டும். இவ்வூர், மேலூர் கீழூர் என இருபிரிவானது. கீழூரில் (கீழையூரில்) இக்கோயில்

Koviloor Digital Library

உள்ளது. மேலூரில் வைணவ ஆலயம் உள்ளது. இவ்வூர் மக்கள் வழக்கில், 'திருக்கோயிலூர்' என்று வழங்குகிறது.

அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. அந்தகாசூரனை சம்ஹரித்த தலம். இத்தலம் வைணவப் பெருமையும் உடையது. இங்குள்ள திரிவிக்ரமப் பெருமாள் கோயில் பிரசித்தி பெற்றது. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் முதலிய ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்வியதேசம்.

'ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்று சொல்லப்படும் முதலாழ்வார் மூவரின் வரலாற்று நிகழ்ச்சி இடம் பெற்ற தலம் இதுவே.

அறுபத்துமூவருள் ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனார் ஆண்ட பதி இஃது.

'சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி
மாதொருபாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேத நன்னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க்கு அன்பர் கருத்தறிந்து ஏவல் செய்வார்''

(பெ. புரா. மெய். புரா)

இராசராசசோழன் பிறந்த ஊர். இவருடைய தமக்கை 'குந்தவ்வை' சுவாமிக்குப் 'பொன் பூ' வழங்கியதோடு சந்நிதியில் திருவிளக்குகள் ஏற்றிட 'சாவா மூவா பேராடுகள் 300-ம், 2000 கழஞ்சு பொன்னும் ஊர்ச்சபையாரிடம் ஒப்படைத்த செய்தியைக் கல்வெட்டால் அறிகிறோம்.

கோயில் தென்பெண்ணையாற்றின் கரையில் உள்ளது.

கபிலர் பாரி மகளிரைத் திருமுடிக்காரிக்குத் திருமணம் செய்வித்து, அதன்பின்பு வடக்கிருந்து உயிர் விட்ட இடம், கோயிலின் பக்கத்தில் ஆற்றின் நடுவில் 'கபிலர் குகை' என்னும் பெயரில் உள்ளது. இது கோயிலமைப்பில் உள்ளது. உள்ளே சிவலிங்கம் உள்ளது. இவ் விடத்தில் நின்று பார்த்தால் எதிரில் அறையணிநல்லூர் தலம் தெரிகிறது. இத்திருமணத்திற்குப் பந்தல் போட்ட இடம் 'மணம்பூண்டி' என்னும் பகுதியாக வழங்குகின்றது.

இறைவன் - வீரட்டேஸ்வரர்
இறைவி - சிவானந்தவல்லி, பெரியநாயகி, பிருகந்நாயகி
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - தென்பெண்ணை (தட்சிண பிணாகினி)

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றதலம்.

Koviloor Digital Library

கோயில் மேற்கு நோக்கிய சந்நிதி. விசாலமான வெளியிடம் முன்புறத்தில் பதினாறுகால் மண்டபமொன்று சற்றுப் பழுதடைந் துள்ளது. முன்னால் வலப்பால் அம்பாள் கோயில் உள்ளது. சுவாமி ராஜகோபுரம் மிகவும் பழமையானது. மூன்று நிலைகளை யுடையது. உள்நுழைந்ததும் கவசமிட்ட கொடிமரம், முன்னால் நந்தி உள்ளது. வெளிப்பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. முகப்பு வாயிலில் மேலே பஞ்சமூர்த்திகள் வைக்கப்பட்டுள்ளன. முன்தூணில் இடப்பால் மெய்ப்பொருள்நாயனார் சிற்பம் உள்ளது. வலப்பால் 'பெரியானைக் கணபதி'யின் சந்நிதி உள்ளது. ஔவையார் வழிபட்டு, சுந்தரருக்கு முன் கயிலையை அடைந்ததற்குத் துணையான - ஔவையைத் தூக்கிவிட்ட - கணபதி இவரே என்பர்.

''கரிமீதும் பரிமீதும் சுந்தரருஞ் சேரருமே கைலை செல்லத்
தரியாது உடன் செல்ல ஔவையுமே பூசை புரி தரத்தை நோக்கிக்
கரவாது துதிக்கையால் எடுத்து அவர்கள் செலுமுன்னும் கைலை விட்ட
பெரியானைக் கணபதி தன்கழல் வணங்கிவிருப்பமெலாம்
பெற்றுவாழ்வாம்''

சோமாஸ்கந்தர் சந்நிதியை அடுத்து மகாவிஷ்ணு தரிசனம். எதிர்த்தூணில் பழனியாண்டவர் உள்ளார். வாயிலின் இடப்பால் வள்ளி தெய்வயானை ஆறுமுகப்பெருமான் மூர்த்தம் உள்ளது. பக்கத்தில் கஜலட்சுமி சந்நிதி. நடராசசபை உள்ளது. மணிவாசகரும் சிவகாமியும் உடனுளர். திருமுறைப் பேழையுள்ளது. கபிலர் உருவச்சிலை உள்ளது.

தலமூர்த்தியாகிய அந்தகாசூர சம்ஹார மூர்த்தி விசேஷமானது. பக்கத்தில் நரசிங்க முனையரையர், மெய்ப்பொருள் நாயனார் ஆகியோரின் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

கோஷ்ட மூர்த்தமாகவுள்ள துர்க்கை மிகவும் விசேஷமாக வுள்ளது. எட்டுக் கரங்களுடன் காட்சியளிக்கின்ற நின்ற திருக்கோலம். இத் தேவியின் விழிகள் மிகவும் அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளன. இவ்வுருவம் இராசராசன் தாயின் காலத்தியது - மிகவும் பழமையானது என்பர். கருவறைச் சுவரில் கல்வெட்டுக்கள் நிரம்பவுள. அடுத்து பிரம்மா, தட்சிணாமூர்த்தி முதலிய கோஷ்ட மூர்த்தங்கள் உள்ளன.

வலப்பால் பைரவர், நவக்கிரகம், முதலிய சந்நிதிகள் உள்ளன. வரிசையாக சூரியலிங்கம், ஏகாம்பரேஸ்வரர் முதலாக பஞ்சபூத லிங்கங்கள், விசுவநாதர் விசாலாட்சி உருவங்களும் அர்த்தநாரீஸ்வரர், அகத்தியர், சூரியன், சம்பந்தர் முதலிய உருவங்களும் உள்ளன.

Koviloor Digital Library

ஜடாமுனி, ஐயனார், வீரபத்திரர், பிராமி, மகேஸ்வரி, வைஷ்ணவி, வாராகி முதலிய உருவங்கள் குடைவரைகளாக அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர் சந்நிதியைத் தொடர்ந்து அறுபத்துமூவர் மூலத் திருமேனிகள் உள்ளன.

துவாரபாலகரை வணங்கியுட் சென்றால் மூலவர் தரிசனம். சிவலிங்கத் திருமேனி. சுயம்பு, பெரிய உருவம். திருப்பணி செய்த காலத்துத் தோண்டிப் பார்க்க, 25 அடிக்கு மேலும் போய்க் கொண்டிருக்க, அப்படியே விட்டுவிட்டுச் சுற்றிலும் ஆவுடையாரைச் சேர்த்து எழுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நாகாபரணம் சார்த்தப்பட்டு மூலவர் கம்பீரமாகக் காட்சி தரும் சேவை நம் கண்களை விட்டகலா. அம்பாள் கோயில் தனியே உள்ளது - கோபுரம் உள்ளது. முன்மண்டபத்தில் இருபுறமும் விநாயகரும் சுப்பிரமணியரும் உள்ளனர்.

நேரே அம்பாள் தரிசனம். நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள், அம்பாளுக்கு வெள்ளிக் கவசமும் தாடங்கமும் அணிவிக்கப்பட்டுச் சேவிப்பது கண்கொள்ளாக் காட்சி யாகும். முன்னால் நந்தி பலிபீடம் உள்ளன.

மாசிமாதத்தில் பெருவிழா நடைபெறுகிறது. இவ்விழாவில் ஆறாம் நாள் விழாவில் மாலையில் அந்தகாசூரசம்ஹார ஐதிகம் நடைபெறுகின்றது. கார்த்திகைச் சோமவார சங்காபிஷேகம் விசேஷ மானது. சஷ்டியில் லட்சார்ச்சனை நடைபெறுகின்றது. நவராத்திரி, சித்திரையில் வசந்தோற்சவம் முதலியனவும் சிறப்பாக நடைபெறு கின்றன.

நாடொறும் நான்குகால பூஜைகள்.

கோயிலுக்குப் பக்கத்தில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமி மடாலயம் உள்ளது. இதுவே ஆதி மடாலயம் எனப்படுகிறது. முதல் மூன்று சந்நிதானங்கள் இங்குத்தான் வாழ்ந்து சமாதியடைந்துள்ளனர். நான்காவது சந்நிதானத்திலிருந்துதான் திருப்பாதிரிப்புலியூர் மடாலயம் அமைந்தது என்பர். இச்சமாதிகள், பக்கத்தில் உள்ள நெடுஞ்சாலை ஓரத்தில் உள்ளன.

இவ்வூரின் வடக்கு வீதியில் குகைநமசிவாயர் சமாதி உள்ளது. சுவாமி ஞானானந்தகிரியின் தபோவனம் இத்தலத்தில்தான் உள்ளது. அமைதியான சுகத்திற்கு ஏற்ற இடமாக இத்தபோவனம் திகழ் கிறது. மார்கழித் திருவாதிரையில் இங்கு ஐந்து நாள்களுக்கு

Koviloor Digital Library

ஆராதனை நடைபெறுகிறது. மத்வர்களுக்கு முக்கியமானதான ஸ்ரீ ரகோத்தம சுவாமி பிருந்தாவனமும் இத்தலத்தில் (பாலத்தின் அருகில்) உள்ளது. இங்கு மார்கழியில் விசேஷ ஆராதனை நடைபெறுகின்றது. இத்தலத்திற்குப் பக்கத்தில் அறையணிநல்லூர் உள்ளது.

''கரவலாளர் தம்மனைக் கடைகடோறுங் கானிமிர்த்
திரவலாழி நெஞ்சமே இனியதெய்த வேண்டில் நீ
குரவமேறி வண்டினங் குழலொடுயாழ் செல்கோவலூர்
விரவிநாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே.''

(சம்பந்தர்)

''வழித்தலைப் படவுமாட்டேன் வைகலுந் தூய்மை செய்து
பழித்திலேன் பாசமற்றுப் பரம நான் பரவமாட்டேன்
இழித்திலேன் பிறவிதன்னை என் நினைந்திருக்கமாட்டேன்
கொழித்து வந்தலைக்கும் தெண்ணீர்க்கோவல் வீரட்டனீரே''.

(அப்பர்)

-'சொல்வண்ணம்
நாவலர் போற்று நலம் பெறவே ஓங்குதிருக்
கோவலூர் வீரட்டங் கொள் பரிசே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வீரட்டேஸ்வரர் திருக்கோயில்
கீழையூர் திருக்கோயிலூர் & அஞ்சல் - 605 757.
திருக்கோயிலூர் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

44/12. அறையணிநல்லூர்

அரகண்டநல்லூர்



நடுநாட்டுத்தலம்.

தற்போது மக்கள் வழக்கில் அரகண்டநல்லூர் என்று வழங்கு கிறது. திருக்கோவலூருக்கு எதிர்க்கரையில் பெண்ணை யாற்றின் கரையில், ஒரு சிறிய பாறைமேல் கோயில் உள்ளது. திருவண்ணா மலையிலிருந்து செல்லும்போது, பெண்ணையாற்றுப் பாலத்தின் முன்பே இடப்புறமாகப் பிரியும் விழுப்புரம் பாதையில் 1 கி.மீ. சென்றால் ஊர் உள்ளது. ஊருள் காவல் நிலையத்தினை அடைந்து வலமாகத் திரும்பிச் சிறிது தூரம் சென்று, பேருந்தை நிறுத்திவிட்டு நடந்து செல்ல வேண்டும். திருக்கோயிலூரிலிருந்து நகரப் பேருந்து (Town Bus) உள்ளது.

திருக்கோவலூரிலிருந்து வருபவர்கள் பாலத்தைக் கடந்து வர வேண்டும். இங்கிருந்து பார்த்தால் மறுகரையில் உள்ள திருக்கோயிலூர் வீரட்டேசுவரர் கோயிலும், ஆற்றினிடையில் உள்ள கபிலர்மேடும் நன்கு தெரியும். நீலகண்ட முனிவர், கபிலர், பாண்டவர்கள் ஆகியோர் வழிபட்ட தலம். ரமணமகரிஷியைத் திருவண்ணாமலைக்கு வருமாறு அம்பாள் அவருக்கு உத்தரவிட்ட தலம் இது என்பர். திருக்கோயிலூர் ஸ்ரீ ஞானானந்தகிரிசுவாமிகள் அவர்கள் இங்குள்ள கோபுரத்தில் அமர்ந்து தவம்செய்து அருளைப்பெற்றார் என்றும் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

இறைவன் - அதுல்ய நாதேஸ்வரர், ஒப்பிலாமணீசுவரர், அறையணிநாதர்.

இறைவி - சௌந்தர்ய கனகாம்பிகை, அருள் நாயகி, அழகியபொன்னம்மை.

தீர்த்தம் - பெண்ணையாறு

சம்பந்தர் பாடல் பெற்றது.

கற்கோயில், ஒரு சிறிய பாறைமீது உள்ளது. ராஜகோபுரம் ஏழுநிலைகளுடன் கூடியது. முகப்புவாயிலின் முன் கல்தூண்கள் உள்ளன. திருப்பணி நடந்து பல்லாண்டுகள் ஆயின. பிராகாரத்தில் வலம்புரிவிநாயகர் - தலவிநாயகர் உள்ளார். இவ்வுருவம் பெரியகல் ஒன்றில் வடிக்கப்பட்டு உள்ளது. எப்படிப் பார்த்தாலும் நம்மையே பார்ப்பதுபோலத் தோன்றுகிறது. இதன் முன்பு இடப்பால் தாள மேந்திய நின்றகோலத்தில் ஞானசம்பந்தர் திருமேனி உள்ளது.

இங்குள்ள முருகன் திருமேனி மிகவும் அற்புதமான அமைப்புடன் - அதாவது ஒருமுகம் ஆறுகரங்களுடன் காட்சியளிக்கிறது. கைகளில் ஆயுதங்கள் உள்ளன. வள்ளிதெய்வயானை சமேதராக வடக்கு நோக்கிக் காட்சி தருகிறார். இது சூரசம்ஹாரமூர்த்தியாகும்.

விநாயகரின் பக்கத்தில் விஸ்வநாதலிங்கம் உள்ளது. கருவறை மிகப் பழமையானது. மூலவர் - சிவலிங்கம் மிகவும் பழைமையானது. சுயம்பு என்று சொல்லப்படுகிறது. மேற்கு நோக்கிய சந்நிதி. அகழி அமைப்புடைய கருவறை, அடிப்பாகம் கல்லாலும் மேற்புறம் (கோபுரம்) சுதையாலும் ஆனது. பிராகாரத்தில் சனிபகவான், காகத்தின் மீது ஒருகாலை வைத்தூன்றிய கோலத்தில் காணப்படுகிறார். நவக்கிரக சந்நிதி, பைரவர், கல்லில் வடித்துள்ள நாராயணர், நர்த்தன கணபதி, நீளமான கல்லில் வடித்துள்ள மகாவிஷ்ணு சக்கரதாரியாக நின்றநிலை முதலிய சந்நிதிகள் உள்ளன. சப்தமாதாக்கள் வரிசையாகக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளனர். நடராசசபைக்கு எதிர்வாயில் உள்ளது. சம்பந்தர், வலம்புரிவிநாயகர் காட்சி தருகின்றனர்.

வெளிச்சுற்றில் அண்ணாமலையார் சந்நிதி உள்ளது. அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகத் தெற்கு நோக்கியுள்ளது. நான்கு திருக்கரங் களுடன் கூடிய நின்ற திருக்கோலம்.

நீலகண்டமுனிவர் என்பவர் முதலில் இங்கு வழிபட்டுப் பூசித்த பிறகே இக்கோயில் உண்டாயிற்று என்று கூறப்படுகிறது.

Koviloor Digital Library

இக்கோயிலில் வெளிச்சுற்றில் தற்போது கிலமாகவுள்ள நடனமண்டபம் பற்றிய செவிவழிச்செய்தி வருமாறு:-

ஒரு காலத்தில் இதனை எவரேனும் கட்டி முடிக்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தால் 'இளவெண்மதி சூடினான்' என்பவன், அதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்வதாக அறிவிக்க, பிற்காலத்தில் இந் நடன மண்டபம் கட்டிமுடிக்கப்பட, அவனும் தன் உயிரைத் தியாகம் செய்தான் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு கட்டி முடிக்கப்பட்ட இந்நடனமண்டபம் தற்போது சீர்கெட்டுப் பயன்படுத்த முடியாதபடி கிலமாகவுள்ளது.

கோயிலுக்கு வெளியில் பாறைகளுக்கு இடையில் உள்ளது 'வீமன் குளம்'. இது வீமன், கதையால் உண்டாக்கப்பட்டதாகக் கூறுவர். ராஜகோபுரத்தின் அடிவாயிலில் குடைவரைக் கோயில்களாக ஐந்து அறைகள் உள்ளன. உள்ளே ஏதுமில்லை.

இவ்வூரிலிருந்து விழுப்புரம் சாலையில் 1 கி.மீ. தொலைவில் **'கழுவன் குளம்'** என்னும் ஊர் உள்ளது. (அங்கு ஊரின் புறத்தே ஒரு குளம் உள்ளது). இதுபற்றிச் சொல்லப்படும் செவிச் செய்தி வருமாறு:-

ஒரு காலத்தில் இத்திருக்கோயிலின் மூலவாயிலைச் சமணர்கள் அடைத்து விட்டதாகவும்; சம்பந்தர் இங்கு வந்தபோது பாடித்திறந்து வாயிலை அடைத்த சமணர்களைக் கழுவேற்றியதாகவும் அவ்விடமே தற்போது கழுவன்குளம் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது என்கின்றனர். கோயிலுக்குச் செல்லும் வழியில் பிடாரி அம்மன் கோயில் உள்ளது. ஊர்மக்கள் இதைச் சக்திவாய்ந்ததாகப் போற்று கின்றனர்.

குளக்கரையில் திரௌபதியம்மன் கோயில் உள்ளது. இத்திருக் கோயிலில் உள்ள நடராச விக்ரஹம் மிகவும் அழகான அமைப் புடையது. இதுவும் ஏனைய உற்சவ மூர்த்தங்களும் கீழையூர்க் கோயிலில் (திருக்கோவலூர் வீரட்டம்) பாதுகாப்புக்காக வைக்கப் பட்டுள்ளதாம். நித்தியப்படி பூஜை இருவேளைகள் மட்டுமே நடைபெறுகிறது. பௌர்ணமிதோறும் வழிபாடு நடைபெறுகிறது.

''பீடினாற் பெரியோர்களும் பேதைமை கெடத் தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார் மறைபாடினார் சுடலை நீறணிந்தாரழல்
ஆடினார் அறையணி நல்லூர் அங்கையால் தொழுவார்களே''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

'-ஆவலர்மா
தேவா இறைவா சிவனே எனுமுழக்கம்
ஓவா அறையணிநல்லூர் உயர்வே'.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அதுல்ய நாதேஸ்வரர் தேவஸ்தானம்
(அறையணிநாதேஸ்வரர் தேவஸ்தானம்)
அரகண்டநல்லூர் & அஞ்சல் - 605 752.
திருக்கோயிலூர் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்

45/13. இடையாறு

T. எடையார்

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'T. எடையார்' என்று வழங்குகிறது.

திருக்கோயிலூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் சித்தலிங்க மடத்தையடுத்து இடையாறு உள்ளது. கோயில் சாலையோரத்தில் உள்ளது. சுகர்முனிவர் வழிபட்ட தலம்.

இறைவன் - மருதீஸ்வரர், இடையாற்றீசர்

இறைவி - ஞானாம்பிகை, சிற்றிடைநாயகி

சுந்தரர் பாடியது.

கோயில் பழமையானது. மேற்கு நோக்கிய சந்நிதி. சுற்றுச் சுவர் முன்பக்கம் தவிர மற்றப் பக்கங்களில் நன்குள்ளது. மூன்று நிலை களுடன் கோபுரம் உள்ளது. கொடிமரமில்லை. பலிபீடம் உள்ளது நந்தியுமில்லை. உள்ளே இடப்பால் மண்டபம் உள்ளது. இதில் வள்ளி தெய்வயானை சமேத சண்முகர் சந்நிதி உள்ளது. எஞ்சிய இடம் வாகனமண்டபமாகப் பயன்படுகிறது.

உள்சுற்றில் பெரிய மருதமரம் உள்ளது. நவக்கிரக சந்நிதி, அகத்தீஸ்வர லிங்கம், சண்டேஸ்வரர், சப்தமாதாக்கள், பாலாம்ருத

Koviloor Digital Library

விநாயகர் முதலிய சந்நிதிகள் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும் துர்க்கையும் உள்ளனர். அம்பாள் சந்நிதி உள்ளது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத் திருப்பணித் திட்டத்தில் இக்கோயிலின் விமானங்கள் திருப்பணி செய்யப் பட்டுள்ளன.

பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. ஆற்றுத் திருவிழா சிறப்பாகச் சொல்லப்படுகிறது. நாடொறும் மூன்று கால பூஜைகள் நடைபெறு கின்றன. இக்கோயிலிலிருந்து சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர் காலத்திய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. கல்வெட்டில் இவ் விறைவன் 'மருதந்துறை உடைய நாயனார்' என்று குறிக்கப்படு கின்றார். இக்கோயில் கி. பி. 1471-ல் ஒரிசா மன்னன் ஒருவனால் அழிக்கப்பட்டு, பின்பு 10 ஆண்டுகள் கழித்து சாளுவ நரசிம்மனின் பிரதிநிதியால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டின்மூலம் தெரிகிறது. இங்குள்ள முருகனின் (சண்முகர்) பெயரினை 'கலியுகராமப் பிள்ளையார்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

''ஊறிவாயன நாடிய வன்றொண்டனூரன்
தேறுவார் சிந்தை தேறுமிடஞ் செங்கண் வெள்ளே
றேறு வாரெய்த மானிடையா றிடைமருதைக்
கூறுவார் வினையெவ்விட மெய்குளிர்வாரே.''

(சுந்தரர்)

-''தாவாக்
கடையாற்றின் அன்பர்தமைக் கல்லாற்றினீக்கும்
இடையாற்றின் வாழ் நல்இயல்பே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மருதீஸ்வரர் தேவஸ்தானம்
T. எடையார் & அஞ்சல் திருக்கோயிலூர் வட்டம்
(வழி) பெரிய செவலை - 607 209. விழுப்புரம் மாவட்டம்

Koviloor Digital Library

46/14. திருவெண்ணெய் நல்லூர்.

நடு நாட்டுத் தலம்.

1) விழுப்புரம் - திருச்சி நெடுஞ்சாலையில் அரசூர் சென்று Highways Inspection Bungalow வை அடுத்து வலப்புறமாகச் செல்லும் திருக்கோயிலூர் பாதையில் சென்று திருவெண்ணெய் நல்லூர்ரோடு Railway Station லெவல் கிராசிங்கைத் தாண்டிச் சென்றால் (5 கி. மீ.) ஊரையடையலாம். (ஊருள் இடப்புறமாகச் செல்லும் சாலையில் போய்க் கோயிலையடையலாம்.)

2) பண்ருட்டி - அரசூர் சாலையில் உள்ள தலம்.

3) திருக்கோயிலூரிலிருந்து சித்தலிங்க மடம் வழியாகவும்.

4) மடப்பட்டிலிருந்து பெரிய செவலை வழியாகவும் திரு வெண்ணெய் நல்லூருக்குப் பேருந்துகள் உள்ளன.

5) விழுப்புரம் - திருவெண்ணெய் நல்லூர் நகரப் பேருந்து உள்ளது.

6) (திருக்கோயிலூர்) கீழையூரிலிருந்து செல்வோர் மடப்பட்டு, கடலூர், பண்ருட்டி செல்லும் பாதையில் (Main Road)ல் சென்று, பண்ருட்டி சாலை வலப்புறமாகப் பிரிய; இடப்பக்கமாகப் பிரியும் உளுந்தூர்ப்பேட்டை சாலையில் திரும்பி ஊரையடையலாம். கீழையூரிலிருந்து இத்தலம் 18 கி. மீ. தொலைவு.

சுந்தரரின் அருள் வாழ்விற்கு இடமான தலம். வழக்கிட்டு, ஆரூரரை வலியவந்து ஆட்கொண்ட தலம்; நின் ‘வருமுறைமனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக’ என்று கேட்டவர்க்கு ‘என் இருப்பிடம் இதுவே’ என்று இறைவன் காட்டிய திருக்கோயிலை உடைய பதி. ‘அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையான்’

Koviloor Digital Library

என்றும், 'தரும தேவதை' என்றும் புகழப்பெற்ற சடையப்ப வள்ளலின் பதி. சைவ சித்தாந்த சாத்திரங்களுள் தலையானதாகத் திகழும் சிவஞானபோதம் நூலை அருளிச் செய்த மெய்கண்டார் (மெய்கண்ட தேவர்) வாழ்ந்து உபதேசம் பெற்ற சிறப்புத் தலமும் இதுவே. முதிய வேதியராய் வந்து இறைவன் சுந்தரரைத் தடுத்தாண்ட இடம் - தடுத்தாவூர் என்று வழங்குகிறது. இவ்விடம் திருநாவலூரிலிருந்து, திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும் வழியில் சிறிய கிராமமாக வுள்ளது.

ஊரின் பெயர் 'திருவெண்ணெய் நல்லூர்'. கோயிலின் பெயர் 'திருவருட்டுறை' என்பதாம். 'வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள் அத்தா' என்னும் சுந்தரர் வாக்கால் இதையறியலாம். சுந்தரரின் முதல் தேவாரம் பிறந்த தலமிஃது. கிராம மக்கள்; இவ்வூரில் அம்பாள் வெண்ணெய்யால் கோட்டை கட்டி வீற்றிருப்பதாகக் கூறுகின்றனர்.

இறைவன் - கிருபாபுரீஸ்வரர், வேணுபுரீஸ்வரர், அருட்டுறைநாதர், தடுத்தாட்கொண்டநாதர்.

இறைவி - மங்களாம்பிகை, வேற்கண்ணியம்மை.

தலமரம் - மூங்கில் (இப்போது இல்லை.)

தீர்த்தம் - தண்டதீர்த்தம் (பக்கத்தில் உள்ள குளம்.)

தலவிநாயகர் - பொல்லாப் பிள்ளையார்.

சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

அருணகிரிநாதரின் திருப்புகழும் உள்ளது.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டது. கோபுரம் கடந்து உள்நுழைந்ததும் சுந்தரர் வழக்கு நடந்த, 'வழக்கு தீர்த்த மண்டபம்' வழக்கு வென்ற அம்பலம் உள்ளது. இம்மண்டபம் கிலமாகியுள்ளது. அடுத்து, செப்புக் கவசமிட்ட கொடிமரம், முன்னர் கொடிமர விநாயகர், பலிபீடம் உள்ளன. நேரே உயரத்தில், மேலே, சுந்தரருக்கு இறைவன் ரிஷபாருடராகக் காட்சி தந்த விமானக் கோயில் உள்ளது. அதற்கு எதிரில் கீழே சுந்தரர் சந்நிதி உள்ளதையும் காணலாம். (இவ்வுருவத்தில் சுந்தரர் கையில் ஓலையுடன் காட்சியளிக்கிறார்.)

கல்மண்டபத்தில் அறுபத்துமூவர் மூலத்திருமேனிகள் வரிசையாக வுள்ளன. நேரே சோமாஸ்கந்தர் சந்நிதி. பக்கவாயில் வழியாக உட்சென்றால் மூலவர் சந்நிதி. எதிரில் சாளரம் உள்ளது. மூலவர் அழகான சிவலிங்கத் திருமேனி.

Koviloor Digital Library

வெளிச் சுற்றில் அறுபத்துமூவர் திருமேனிகளையடுத்து வரிசையாக சப்தமாதர்களும், சம்பந்தர், மகாவிஷ்ணு, அருணந்திசிவம், மெய்கண்டதேவர் திருமேனிகளும் உள்ளன.

விசாலமான உட்பரப்பு. விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள், கஜலட்சுமி சந்நிதி, மறுகோடியில் நவக்கிரக சந்நிதியும், உள்ளன. நவக்கிரகங்கள் உரிய அமைப்பிலும் உரிய வாகனங்களுடனும் அமைக்கப்பட்டுள்ளன.

'பித்தா பிறை சூடி' பதிகம் ஸ்ரீ காசி மடத்தின் திருப்பணியாகக் கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாகப் பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், மகாவிஷ்ணு, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

அம்பாள் கோயில் இடப்பால் உள்ளது. நின்ற திருக்கோலம். பள்ளியறை உள்ளது. உட்புறத் தூண்களில் பைரவர், தட்சிணாமூர்த்தி சிற்பங்கள் உள்ளன. இத்தலத்திற்கு அண்மையில்தான் மணம் தவிர்ந்த புத்தூர் (மணம்தவிந்தபுத்தூர் - மணப்பந்தூர்) உள்ளது.

நாடொறும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திருப்பணித் திட்டத்தின் மூலம் இக்கோயிலின் சுவாமி, அம்பாள் விமானங்களும்; மக்களின் பேராதரவால் ஏனைய திருப்பணிகளும் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் உள்ள தலங்கள் திருமுண்டீச்சுரமும், திருநாவலூரும் ஆகும். பங்குனி உத்திரம், ஆடி சுவாதி முதலிய உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆடி சுவாதி உற்சவத்தில் திருமண உற்சவம், திருமணத்தைத் தடுத்தது, சுந்தரருக்குக் காட்சி கொடுத்தது. முதலிய ஐதிகங்கள் நடைபெறுகின்றன. சுந்தரர் உற்சவத் திருமேனி கண்டு தொழத் தக்கது.

மெய்கண்டாரின் சமாதி, வடக்கு வீதியின் கோடியில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த இம்மடாலயத்தில் (மெய்கண்ட தேசிகர் மடத்தில்) ஷெ ஆதீனத் தம்பிரான் சுவாமிகள் ஒருவர் இருக்கின்றார். இம்மடத்தின்மூலம் கோயிலில் நாடொறும் காலசந்திக் கட்டளை நடைபெறுகிறது. கோயிற் பெருவிழாவில் எட்டாந் திருவிழா வன்று திருவாவடுதுறை ஆதீன மடத்தின்மூலம் மண்டகப்படி நடை பெறுகிறது. இதுதவிர, ஐப்பசி சுவாதியில் மெய்கண்டார் குருபூஜை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று நூற்றுக்கணக் கானோருக்கு ஆதீனத்தின்மூலம் அன்னதானம் செய்யப்படுகிறது.

Koviloor Digital Library

சடையப்ப வள்ளலின் இல்லம் வடக்கு வீதியில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கல்வெட்டில் இறைவன் பெயர் 'திருவருட்டுறை ஆள்வார்', 'திருவெண்ணெய்நல்லூர் உடையார்', 'தடுத்தாட்கொண்ட தேவர்' என்றெல்லாம் குறிக்கப்பட்டுள்ளது.

''பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனிஅல்லேன் எனலாமே''

''காரூர் புனல் எய்திக்கரை கல்லித் திரைக்கையால்
பாரூர் புகழ் எய்தித் திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆரூரன் எம் பெருமாற்காளல்லேன் எனலாமே''.

(சுந்தரர்)

(இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'உனக்கு முன்பே ஆளாகிய யான் இப்போது அதனை இல்லையென்று கூறுதல் பொருந்துமோ' என்னும் பொருள்படுமாறு 'அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே' என்று பாடியுள்ளார்).

மெய்கண்டதேவர் துதி :

'பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இருதய கமல முகைகளெல்லாம்
கண் திறப்பக் காசினிமேல் வந்த அருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவநாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.''

(அருணந்தி சிவாசாரியார்)

பொய்கண் டகன்ற அம்மையப்பர்
புகழ்சேர் மைந்தன் தனைவேண்டிப்
புகலிக் குழந்தை திருமுறையிற்
போற்றிக் கயிறு தனைச் சாற்றிக்
கைகொண் டவர்கள் தொழுதேவெண்
காட்டின் திருப்பாட் டெடுத்துள்ளங்

Koviloor Digital Library

களித்தே வந்து முக்குளநீர்
கண்டே படிந்தோர் பாலுதித்து
மைகொண் டிலங்கு மணிகண்டன்
வளருங் கயிலைத்திரு நந்தி
மறையா கமத்தைக் குழந்தையெனும்
வடிவாய்த் தமிழ்செய் சுவேதவன
மெய்கண் டவன்வாழ் வெண்ணெய்நல்லூர்
வேலா சிற்றில் சிதையேலே
விளையாட் டோரைந் துடையாய்நீ
விளங்குஞ் சிற்றில் சிதையேலே.

(க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்)

-''இடையாது
சொல் ஊரன் தன்னைத் தொழும்பு கொளுஞ் சீர்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையின் நற்பயனே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கிருபாபுரீஸ்வரர் தேவஸ்தானம்
திருவெண்ணெய்நல்லூர் & அஞ்சல்
திருக்கோயிலூர் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்
607 203.

47/15. திருத்துறையூர்

திருத்தளூர்

நடு நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் திருத்தளூர் என வழங்குகிறது. 1. பண்ருட்டியி லிருந்து புறப்பட்டு ஷி சாலையில் துணை மின் நிலையம் (Elec. Sub Station) உள்ள இடத்தில் வலப்பக்கமாகத் திரும்பிச்சென்று, தேர் முக்கு, உள்ள இடத்தில் இடப்பால் திரும்பி, (பண்ருட்டி - புதுப்பேட்டை வழியாக - அரசூர் செல்லும் சாலையில்) 10 கி. மீ. சென்று மீண்டும் 'கரும்பூர்' சாலையில் திரும்பி 5 கி. மீ. சென்று ஊரையடையலாம்.

2. பண்ருட்டியிலிருந்து பஸ் உள்ளது.

Koviloor Digital Library

3. இத் தலம் விழுப்புரம் - கடலூர் புகைவண்டிப் பாதையில் உள்ள புகைவண்டி நிலையம்.

சுந்தரர் தவநெறி வேண்டிப்பெற்ற தலம். ‘சிவஞானசித்தியார்’ என்னும் சாத்திர நூலைப் பாடிய அருணந்தி சிவாசாரியார் (சகலாகம பண்டிதர்) அவதரித்து வாழ்ந்த தலம். இவருடைய சமாதிக்கோயில் உள்ளது. நாரதர், வசிட்டர், அகத்தியர், வீமன், சூரியன் முதலியோர் வழிபட்டபதி. இக் கோயில் பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது. மேற்கு நோக்கிய சந்நிதி. ஊர் சிறியது.

சுந்தரர் காலத்தில் ஊரில் தென்பால் ஓடிய பெண்ணையாறு, இன்று வடபால் ஓடுகிறது. பழைய பெண்ணையாறு, மலட்டாறு என்னும் பெயரில் தென்பால் உள்ளது.

இறைவன் - சிஷ்ட குருநாதேஸ்வரர், பசுபதீஸ்வரர்.

இறைவி - சிவலோகநாயகி, பூங்கோதைநாயகி.

தலமரம் - கொன்றை.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது.

சுந்தரர் பாடியது.

இத்தலத்திற்கு வந்த சுந்தரரை, இறைவன் கிழவடிவில் தோன்றி ஆட்கொண்ட இடம் துறையூருக்கு அண்மையில் உள்ள ‘கிழப்பாக்கம்’ என்பதாகும். அவ்விடத்தில் சிவலிங்கமும் கோயிலும் உள்ளன. இவ்வாறு ஆட்கொண்ட திருமேனியே பசுபதீஸ்வரர் - பூங்கோதை நாயகி எனப்படுகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழும், வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமிகள் பாடல்களும் இத்தலத்திற்கு உள்ளன.

இங்குள்ள அஷ்டபுஜ பத்திரகாளி சந்நிதி விசேஷமானது. இங்கு சுவாமி மேற்கு நோக்கியும் அம்பாள் வடக்கு நோக்கியும் இருப்பது நினைந்து தொழத்தக்கது. முகப்பு வாயிலைக் கடந்ததும் வலப்பால் அம்பாள் சந்நிதி. அம்பிகை நின்ற திருக்கோலம். எதிரில் கவசமிட்ட கொடிமரம். நந்தி, பலிபீடங்கள்.

ரிஷபாருடர் தவநெறி தந்த காட்சியும், சுந்தரர் கைகூப்பி வணங்கும் நிலையும் காணலாம். உள்வாயிலைத் தாண்டி, மண்டபத்தையடைந்தால் நேரே மூலவர் தரிசனம். கம்பீரமான இலிங்கத் திருமேனி. வெள்ளிக்கவசமணிவித்துத் தரிசிக்கும் அழகே அழகு.

Koviloor Digital Library

உற்சவ திருமேனிகளுள் குதிரைச்சொக்கர், சாட்டை பிடித்த நிலையில் உள்ளது, அழகாகவுள்ளது. நடராசசபை உள்ளது. கருவறை முன் மண்டபத்தில் வலப்பால் நால்வர் சந்நிதி உள்ளது. இம் மண்டபத்தின் தூண் ஒன்றில் - இத்தலத்திற்குச் சுந்தரர் பெண்ணை யாற்றை ஓடத்தில் கடந்து வந்தாகச் சொல்லப்படும் ஐதிகம் சிற்பமாக உள்ளது. வெளிப் பிராகாரத்தில் நவக்கிரகம், பைரவர், சூரியன், இராமர், வீமன் ஆகியோர் வழிபட்ட சிவலிங்கங்கள் சூரியன் முதலிய சந்நிதிகள் உள்ளன.

இங்குள்ள பெருமாள் சந்நிதி தரிசிக்கத்தக்கது. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை சந்நிதிகள் உள்ளன. இதில் தட்சிணாமூர்த்திக்குப் பக்கத்தில் உமா மகேஸ்வரர் சுந்தரருக்குத் தவநெறி தந்த காட்சி, சாட்சி விநாயகருடன் கல்லில் சிற்பமாக உள்ளது. அம்பாள் சந்நிதிக்கு எதிரில் தலமரம் உள்ளது. பக்கத்தில் உள்ளது அகத்தியர் வழிபட்ட இலிங்கம்.

நாடொறும் இருகால பூஜைகளே. வைகாசிப் பெருவிழா, மாசி மகம், பங்குனி உத்திரம், திருவாதிரை, நவராத்திரி, சிவராத்திரி கார்த்திகை தீபம் முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன. தேவகோட்டை மு. ராம. அரு. ந. அருணாசலம் செட்டியார், மாணிக்கம் செட்டியார் ஆகியோரின் உதவியால் 1966ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

கோயிலுக்கு வெளியில் உள்ள அஷ்டபுஜ பத்திரகாளி சந்நிதி மிகவும் விசேஷமான பிரார்த்தனை சந்நிதி. பௌர்ணமி விழா சிறப்பாக நடைபெறுகிறது. தேரடி விநாயகர் மூன்றடி உயரமான மூர்த்தி - பெரிய விநாயகர்; பூஜை நடைபெறுகிறது. கோயிலுக்கு நேர் எதிரில் அருணந்தி சிவாசாரியாரின் சமாதிக்கோயில் உள்ளது. இது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தது. ஆண்டுதோறும் புரட்டாசி பூரத்தில் குருபூஜை நடத்தப் பெறுகிறது. அருணந்தி சிவாசாரியாரின் மரபினரே இக்கோயிலில் பூசை செய்யும் குருக்கள் ஆவார்.

சமாதிக்குப் பக்கத்தில் வெளியில் ஒரு சிவலிங்கம் உள்ளது. இவ்வூருக்கு அண்மையில் ‘கிழப்பாக்கம்’ என்றொரு ஊர் உள்ளது. அங்கும் ஒரு சிவலிங்கம் உள்ளது. சுந்தரரை, இறைவன் முதிய வேதியராகக் காட்சி தந்து அவ்விடத்திலிருந்து அழைத்து வந்தார் என்றும், இங்குச் சிவலிங்கம் உள்ள இடத்தில்தான் தன் காட்சியைத் தந்து அருள் புரிந்ததாகவும்; இங்கிருந்து கோயிலைப் பார்த்துச் சுந்தரர் தரிசிக்க, அப்போது இறைவன் கோயில் விமானத்திலிருந்து ரிஷபாருடராய்க் காட்சி தந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதற்கேற்ப

Koviloor Digital Library

இருந்த கோயில் அமைப்பு பிற்காலத்தில் திருப்பணி செய்தோரால் மாற்றப்பட்டு விட்டதாகவும் சொல்கின்றனர்.

இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள திருமுறைத் தலங்கள்; திருநாவலூர் திருவதிகை, திருமாணிகுழி, திருவடுகூர், திருப்பாதிரிப் புலியூர் முதலியன. கல்வெட்டுக்களில் இவ்வூரின் பெயர் ''ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப் பாடித் திருத்துறையூர்'' என்றும்; இறைவன் பெயர் ''தவநெறி ஆளுடையார்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''மலையார் அருவித்திரண் மாமணியுந்திக்
குலையாரக் கொணர்ந் தெற்றியொர் பெண்ணை வடபால்
கலையாரல்குற்கன்னியராடுந் துறையூர்த்
தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே.''

(சுந்தரர்)

''-மல்லார்ந்து
மாசுந்துறையூர் மகிபன் முதல் மூவருஞ்சீர்
பேசுந் துறையூர்ப் பிறை சூடீ.''

(அருட்பா)

''கவை கொள்வான் காற்பன்றி மின்னோர்
கரிய வேடன் உருவமெய்தி
அவை புரிந்தாய் தமியனேனுக்கு
அருள்செயாமை அறமதாமோ
குவைய பொன்னும் நெல்லும் நல்கிக்
கோடிப் பாடல் கொண்ட நம்பா
இவையமர்ந்த பங்குளானே
திருத்துறையூர்ச் சிவபிரானே.''

-வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமிகள்

அஞ்சல் முகவரி :-

அ/மி. சிஷ்டகுருநாதேஸ்வரர்/பசுபதீஸ்வரர் திருக்கோயில்
திருத்துறையூர் & அஞ்சல் - 607 205
பண்ருட்டி வட்டம் - விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

48/16. வடுகூர்.

ஆண்டார்கோயில்,
திருவாண்டார் கோயில்.

நடுநாட்டுத் தலம்.

இப்பெயர் பிற்கால வழக்கில் ஆண்டார் கோயில் என்றாகி இன்று மக்கள் வழக்கில் ''திருவாண்டார் கோயில்'' என்று வழங்குகிறது. புதுச்சேரி மாநில எல்லைக்குட்பட்டது.

விழுப்புரம் - பாண்டிச்சேரி (வழி கோலியனூர், கண்டமங்கலம்) பேருந்துச் சாலையில் சென்று, கோலியனூர், வளவனூர் தாண்டி, புதுவை மாநில எல்லைக்குள் நுழைந்து, சிறிது தூரம் சென்றால் சாலை யோரத்திலுள்ள 'திருவாண்டார் கோயிலை' அடையலாம். ஊரின் தொடக்கத்திலேயே இந்திய உணவுக் கார்ப்பரேஷன் அலுவலகத்தின் எதிரில் சாலையோரத்திலேயே கோயிலும் உள்ளது.

தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில். அஷ்டபைரவர்களுள் ஒருவராகிய வடுக பைரவர், முண்டகன் என்னும் அசுரனைக் கொன்ற பழிதீர வழிபட்டதலமாதலின் வடுகர் வழிபட்டது வடுகூர் என்று பெயர் பெற்றது. ஆண்டவனார் கோயில் என்பது கோயிலுக்குப் பெயர். கோயிற் பெயரே பிற்காலத்தில் ஊருக்குப் பெயராயிற்று - ஆண்டார் கோயில். 'திரு' என்னும் அடை மொழி சேர்ந்து 'திருஆண்டார் கோயில்' என்பது இன்று வழக்கில் திருவாண்டார் கோயில் என்றாயிற்று.

இறைவன் - வடுகீஸ்வரர், வடுகநாதர், வடுகூர் நாதர்.

இறைவி - திரிபுரசுந்தரி, வடுவகிர்க்கண்ணி.

தலமரம் - வன்னி.

தீர்த்தம் - வாமதேவ தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

இறைவனின் அறுபத்து நான்கு (அஷ்டாஷ்ட) வடிவங்களுள் வடுகக்கோலமும் ஒன்றாகும். அஷ்டபைரவ மூர்த்தங்களுள் வடுக பைரவக் கோலமும் அடங்கும். அவையாவன :- 1. அசிதாங்க பைரவர் 2. ருருபைரவர் 3. சண்டபைரவர் 4. குரோத பைரவர் 5. உன்மத்த பைரவர் 6. கபால பைரவர் 7. பீஷணபைரவர் 8. சம்ஹார பைரவர்.

Koviloor Digital Library

சம்ஹார பைரவரே வடுகபைரவர் என்றழைக்கப்படுபவராவார். இக்கோயில் சோழர்காலக் கலைப் பாணியில் அமைந்துள்ளது. சுவாமி விமானம் தஞ்சைக் கோயிலமைப்பிலுள்ளது. கோயில் தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் புதுப்பிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அழகிய சுற்றுமதில்கள். கிழக்கு நோக்கிய கோயில்.

முகப்பு வாயிலைக் கடந்ததும் இடப்பால் நால்வர் சந்நிதியுள்ளது. பிராகாரத்தில் விநாயகர் உள்ளார். தலமரம் வன்னி உள்ளது. ஆறுமுகர் திருவுருவம் மிகவும் அழகானது. உள்நுழைந்ததும் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது - நின்ற திருக்கோலம். நேரே மூலவர் சந்நிதி. துவாரபாலகர்களைத் தொழுது உட்சென்று சிவலிங்கத் திருமேனியைத் தரிசிக்கலாம். நாடொறும் இருகால வழிபாடுகள் நடைபெறுகின்றன. கார்த்திகை அஷ்டமியில் பைரவருக்கு இங்கு விசேஷமான பூசைகள் நடைபெறுகின்றன; இதுதவிர, ஞாயிறு தோறும் அன்பர்களின் உபயமாகப் பைரவருக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. சித்திரைப் பெருவிழா ஏக தின உற்சவமாக நடைபெறுகிறது.

''பாலும் நறுநெய்யும் தயிரும் பயின்றாடி
ஏலுஞ்சுடு நீறும் என்பும் ஒளிமல்கக்
கோலம் பொழிற் சோலைக் கூடி மட அன்னம்
ஆலும் வடுகூரில் ஆடும் அடிகளே.''

(சம்பந்தர்)

-''நேசமுற
வேற்றா வடுகூர் இதயத்தினார்க் கென்றுந்
தோற்றா வடுகூர்ச் சுயஞ்சுடரே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வடுகீஸ்வரர் திருக்கோயில்
திருவாண்டார் கோயில் & அஞ்சல்
(வழி) கண்டமங்கலம் - 605 102.
(புதுவை மாநிலம்)

Koviloor Digital Library

49/17. திருமாணிகுழி.

நடுநாட்டுத் தலம்.

1. (கடலூர் N.T.) திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையத்திலிருந்து, திருவகீந்திபுரம் வழியாகப் பானூர், பண்ருட்டி செல்லும் பாதையில் திருவகீந்திபுரம் சென்று, அடுத்து, சுந்தரர்பாடி என்னுமிடத்திற்கு அருகில் சாத்தாங் குப்பம் என்னும் வழிகாட்டி காட்டும் வழியில் சென்று, கெடில நதிப்பாலத்தைக் கடந்து சிறிதுதூரம் சென்றால் திருமாணிகுழியை அடையலாம். சாலையோரத்திலேயே கோயில் உள்ளது. தலமும் கோயிலும் கெடிலத்தின் தென் கரையில், கேபர் மலைத்தொடரின் அடிவாரத்தில் உள்ளன.

2. கடலூர் - குமணங்குளம் நகரப்பேருந்து திருமாணிகுழி வழியாகச் செல்கிறது. இதில் வந்தால் கோயிலின் வாயிலிலேயே இறங்கலாம்.

Koviloor Digital Library

3. கடலூர் - பண்ருட்டி.

கடலூர் - நடு வீரப்பட்டி (வழி) திருவகீந்திபுரம் - செல்லும் பேருந்துகளில் ஏறி, திருமாணிகுழி பஸ் நிறுத்தத்தில் இறங்கி, 1 கி. மீ. நடந்தும் ஊரையடையலாம்.

சோழர்காலக் கட்டமைப்புடைய கோயில். இத்தலம் தேவாரப் பாடல்களில் "உதவிமாணிகுழி" என்று குறிக்கப்படுகின்றது. இதனால் 'உதவி' என்பது ஊர்ப் பெயராக இருந்து, காலப் போக்கில் 'மாணிகுழி' என்னும் கோயிற் பெயரே ஊர்க்குப் பெயராகியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இதற்கேற்ப தலபுராணத்தில் வரும் செய்தி வருமாறு :-

"வடநாட்டு வணிகன் அத்ரி என்பவன் இப்பகுதியில் வந்து கொண்டிருந்த போது திருடர்கள் கொள்ளையடிக்க முற்பட, இறைவன் அவ்வணிகனைத் திருடர்களிடமிருந்து காத்து உதவி புரிந்தார்.

இதனால் இத்தலம், 'உதவி' என்றும் இறைவன் 'உதவிநாயகர்' இறைவி 'உதவி நாயகி' என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இதற்கு மேலும் சான்றாகக் கல்வெட்டிலும் இத்தலம் 'உதவி' என்றே குறிக்கப் பெறுகின்றது.

திருமால் பிரம்மசாரியாக வந்து மாவலிபால் மூன்றடிமண் கேட்டு அவனையழித்த பழிதீர இங்கு வந்து வழிபட்டாராதலின் இக்கோயில் 'மாணிகுழி' என்று பெயர் பெற்றது. (மாணி - பிரம்மசாரி) :

கோயிலுக்கு எதிரில் உள்ள மலை, செம்மலையாகக் காட்சி தருகிறது. இத்தலத்திற்கு வாமனபுரி, இந்திரலோகம், பீமசங்கர க்ஷேத்திரம் என்பன வேறு பெயர்கள்.

இறைவன் - வாமனபுரீஸ்வரர், உதவிநாயகர், மாணிக்கவரதர்.

இறைவி - அம்புஜாட்சி, உதவிநாயகி, மாணிக்கவல்லி.

தலமரம் - கொன்றை.

தீர்த்தம் - சுவேத தீர்த்தம், கெடிலம்.

கிழக்கு நோக்கிய இத்திருக்கோயில். சம்பந்தர் பாடல் பெற்றது. (பெரிய புராணத்தில் சுந்தரர்; கெடிலநதியில் நீராடித் திருமாணிகுழியைத் தரிசித்ததாகக் குறிப்பிருந்தும் அப்பெருமான் பாடிய பதிகம் கிடைத்திலது). ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. சுவாமி அம்பாள் விமானங்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திருப்பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுத் திருப்பணிகள்

Koviloor Digital Library

செய்யப்பட்டு, விபவ ஆண்டு ஆவணி, 29ஆம் நாள் (14-9-1988) அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. 14-9-1989ல் ஸ்ரீ மடத்தின் உதவியோடு ராசகோபுரத் திருப்பணியும் தொடங்கப்பட்டுப் பூர்த்தியாகியுள்ளது.

இராசகோபுரம் கடந்து உள்சென்றதும் கவசமிட்ட கொடிமரம் - நந்தி உள்ளன. வலமாக வரும்போது விநாயகர், சுப்பிரமணியர், சந்நிதிகள் தனிக்கோயில்களாக உள்ளன. வலமாக வந்து, பக்கவாயில் வழியாக நுழைந்து, முன்மண்டபம் தாண்டி உள்ளே சென்று வலம் வரும்போது, விநாயகர், அறுபத்துமூவர் சந்நிதிகள், சப்த மாதர்கள், யுகலிங்கங்கள், கஜலட்சுமி முதலிய சந்நிதிகள் உள்ளன. நடராச சபை உள்ளது. இங்குள்ள நடராசர் திருமேனியில் பஞ்சாட்சரம் பொறிக்கப் பட்டுள்ளது என்கின்றனர். ஆனால் அதைப்பார்க்கும்போது அவ் வடிவமாகத் தெரியவில்லை. குறுக்கும் நெடுக்குமாகச் சிறுகோடுகளாக ஏதோ ஒருவித அமைப்புள்ளது.

மூலவர் தரிசனத்திற்குச் செல்லும் வாயிலில் வாமனாவதார வரலாறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. மூலவர் சந்நிதியில் எப்போதும் திரைபோடப் பட்டுள்ளது. சுவாமி, எப்போதும் இறைவி யுடன் இருப்பதாக மரபாதலின் இத்திரை எப்போதும் இடப்பட் டுள்ளது. திரையில் மேற்புறத்தில் ஏகாதச ருத்திரர்களில் ஒருவராகிய பீமருத்திரர் உருவம் எழுதப்பட்டுள்ளது. மகாவிஷ்ணு மாணியாக - பிரம்மசாரியாக வழிபடுவதற்குக் காவலாக பீமருத்திரர் உள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. தீபாராதனையின்போது - திரை விலகும்போது சிவலிங்கத் திருமேனியைத் தரிசிக்கலாம். குட்டையான சிறிய இலிங்கத் திருமேனி - சிறிய ஆவுடையார். ஆலய வழிபாட்டில் அர்ச்சனை, தீபாராதனை, பூசை முதலியன முதலில் பீமருத்திரருக்கே நடைபெற்று, பின்னர் சுவாமிக்கு நடைபெறுகிறது. இறைவன் எப்போதும் இறைவியுடன் இருப்பதாகச் சொல்லப் படுவதால், இத்தலத்தில் அர்த்தசாம பள்ளியறை வழிபாடு என்பது தனியே கிடையாது.

இத்தலத்தில் கார்த்திகையில் (பரணியில் அல்லாமல்) திருவண்ணா மலையில் நடைபெறுவது போல ரோகிணியில் தீபதரிசனம் நடை பெறுகின்றது. இக்கோயிலில் உள்ள உற்சவ மூர்த்தங்களில் 'உதவி' என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

அம்பாள் சந்நிதி வலப்பால் தனிக்கோயிலாகவுள்ளது. உயரமான திருமேனி - நின்ற திருக்கோலம். கார்த்திகையில் கோயிற் பெருவிழா

Koviloor Digital Library

நடைபெறுகிறது. அது தவிர, ஆடிப்பூரம், நவராத்திரி, சிவராத்திரி, சஷ்டி, நடராசர் அபிஷேகங்கள் முதலியவைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. நாடொறும் நான்கு கால பூசைகள்.

சோழ, பாண்டிய, விஜயநகரமன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் 'உதவிநாயகர்', 'உதவி மாணிகுழி மகா தேவர்' என்று குறிக்கப்படுகின்றது.

அருணகிரிநாதரின் திருப்புகழ் இத்தலத்திற்கு உள்ளது. இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள திருமுறைத்தலங்கள் திருவதிகை, திருப்பாதிரிப் புலியூராகும். திருவகீந்திபுரம் சிறந்த வைணவத்தலம். இங்கிருந்து 4 கி. மீ. தொலைவிலுள்ளது.

''மந்தமலர்கொண்டு வழிபாடுசெயு மாணியுயிர் வவ்வமனமாய்
வந்த ஒருகாலனுயிர்மாள உதைசெய்த மணிகண்டன் இடமாம்
சந்தினொடு காரகில் சுமந்து தடமாமலர்கள் கொண்டு கெடிலம்
உந்து புனல்வந்து வயல்பாயு மணமாருதவி மாணிகுழியே.''

(சம்பந்தர்)

தலபுராணப் பாடல்கள்

செல்வ விநாயகர் துதி

''மணிகொண்ட கிம்புரிக்கோட்டு ஐங்கரம் நால்
வாய்மும்மை மதம் வாய்ந்தோங்கும்
கணிகொண்ட கூவிளமும் நறை இதழிப்
பூந்தொடையும் கலந்து சூடிப்
பணிகொண்டவ் வுயிர்களையும் இகபரம் வீடு
இவையுதவிப் பாரின் மீதே
அணிகொண்ட வாமனவூர்ச் செல்வ விநா
யகன் திருத்தாள் அகத்துள்வைப்பாம்''

உத விநாயகர் துதி

''சீர்பூத்த நீலகிரி திருமாணிக்குழிவளரும் தெய்வக்கோயில்
வார்பூத்த களபமுலை மோகினிமா தினைத்தடந்தோள் மகிழப் புல்லும்
கார்பூத்த கந்தரமுக் கண்ணான் காந்திங்கட் கங்கைவேணி
ஏர்பூத்த வாமனே சுரனுதவி நாயகனை ஏத்தி வாழ்வாம்.''

Koviloor Digital Library

அம்புஜாட்சி (உதவி நாயகி) துதி

''தருண நறை மலர்க்கோயில் பூமகளும் நாமகளும் சார்ந்து போற்றக்
கருணைபுரி வாமனே சுரனுதவி நாயகனைக் கலந்து வாழும்
பொருள் நிறைந்து வளந்தரும் பூஞ்சோலை வாமன புரத்துப் புளகக் கங்கை
அருணமலர் வதனஉமை அம்புயாட்சியின் மலர்த்தாள் அகத்துள்
வைப்பாம்.''

-'ஆற்றமயல்
காணிக்குழிவீழ் கடையர்க்குக் காண்பரிய
மாணிக்குழிவாழ் மகத்துவமே.' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி :-

அ/மி. வாமனபுரீஸ்வரர் திருக்கோயில்
திருமாணிகுழி & அஞ்சல் (வழி) திருவகீந்திபுரம்
கடலூர் வட்டம் - தெ. ஆ. மா. - 607 401.
கடலூர் மாவட்டம்.

50/18. திருப்பாதிரிப்புலியூர்.

திருப்பாப்புலியூர் - கடலூர்



Koviloor Digital Library

நடுநாட்டுத் தலம்.

கடலூரின் ஒரு பகுதி - கடலூர் புது நகர் (கடலூர் N.T.). கடலூர் பேருந்து நிலையத்திற்கு அண்மையில் திருப்பாதிரிப்புலியூர் புகை வண்டி நிலையம் உள்ளது. கடலூர் மாவட்டத் தலைநகர். சென்னை, விழுப்புரம், பாண்டிச்சேரி, திண்டிவனம், வேலூர், விருத்தாசலம், திருச்சி, தஞ்சை, திருவண்ணாமலை, திருக்கோயிலூர், சிதம்பரம் முதலிய பலவிடங்களிலிருந்தும் இத் தலத்திற்குப் பேருந்துகள் உள்ளன. பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ரயில்வே லைனைக் கடந்து சென்றால் மிக அருகாமையில் உள்ள கோயிலை அடையலாம்.

இறைவன் - பாடலேஸ்வரர், தோன்றாத்துணைநாதர், கன்னிவன நாதர், சிவக்கொழுந்தீசர், உத்தாரநாதர், கரையேற்றும்பிரான்.

இறைவி - பிருஹந்நாயகி, பெரியநாயகி, தோகையம்பிகை, அருந்தவநாயகி.

தலமரம் - பாடலம் (பாதிரி).

தீர்த்தம் - பிரம தீர்த்தம். (கடல்).

சிவகரதீர்த்தம் (கோயிலுக்கு வெளியில் உள்ளது). கெடிலநதி. அகத்தியர் உபமன்யுமுனிவர் வியாக்ரபாதர், கங்கை, அக்கினி முதலியோர் வழிபட்டது. இவர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் உள. இத்தலத்திற்கு; கடைஞாழல், கன்னிவனம், பாடலபுரம், ஆதிமாநகர், உத்தாரபுரம், பாதிரிப்பதி, புலிசை எனப்பல பெயர்களுண்டு. 'கடைஞாழலூர்' என்பது மருவி 'கடலூர்' என்றாயிற்று என்பது இலக்கிய வாணர் கூறும் செய்தியாகும்.

திருநாவுக்கரசரை - அப்பரை, கல்லிற்பூட்டிக் கடலில் இட்ட போது, ''சொற்றுணை வேதியன்'' பதிகம் பாடி - 'நமசிவாய - நற்றுணையாக', கல்லே தெப்பமாக, வருணன் தன் கைகளால் தாங்கித் திருப்பாதிரிப்புலியூரின் பக்கத்தே அவரைக் கொண்டுவந்து கரை சேர்த்தான். அவ்விடம் தற்போது 'கரையேறவிட்ட குப்பம்' - வண்டிப் பாளையம், என்று வழங்குகிறது (கடலூர் பேருந்து நிலையத்திலிருந்து வண்டிப்பாளையத்திற்கு நகரப் பேருந்து செல்கிறது).

வண்டிப்பாளையத்தில் 'அப்பர்சாமி குளம்' என்று கேட்டால் சொல்வார்கள். அவ்விடத்தில் ஒரு குளமும், கரையில் ஒரு சிறிய நான்குகால் மண்டபமும் சாலையோரத்தில் உள்ளன. (குளத்திற்குப் பக்கத்திலுள்ள ஓடைதான் முன்பு கெடிலத்தின் தொடர்ச்சியாக இருந்திருக்கின்றது).

Koviloor Digital Library

கரையேறிய அப்பர் 'ஈன்றாளுமாய் எனத் தொடங்கும் பதிகம் பாடி திருப்பாதிரிப்புலியூர் அரனைப் பணிந்தார். அப் பதிகத்தில் 'தோன்றாத்துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே', என்று குறிப்பிடுவதால் இப்பெருமான் 'தோன்றாத்துணை நாதர்' என்னும் பெயரும் பெற்றார். சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற தலம். அருணகிரிநாதரின் திருப்புகழ் உள்ளது. திருக்கோயில் உள்ள வீதி - பாடலேஸ்வரர் சந்நிதி வீதி என்றழைக்கப்படுகிறது.

கிழக்கு நோக்கிய கோயில். முன் மண்டபமுள்ளது. பக்கத்தில் உள்ள சிவகரதீர்த்தம் - நல்ல படித்துறைகளுடன் உள்ளது; ராஜ கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கோபுரத்தில் ஏராளமான சுதை சிற்பங்கள் உள்ளன. வாயிலைக் கடந்து உட்சென்றால் உயரத்தில் பலிபீடம், செப்புக்கவசமிட்ட கொடிமரம், முன்னால் நந்தி முதலியவை களைத் தரிசிக்கலாம். இடப்புறம் திரும்பின் திருக்கோயில் அலுவலகம். வெளிப்பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை - இரண்டு பாதிரிமரங்கள் - தலமரங்கள் உள்ளன. மரத்தடியில் விநாயகர், நாகப்பிரதிஷ்டை முதலியவை காணலாம். பாதிரி - பூக்கும், ஆனால் காய்க்காது. சித்திரை மாதம் முழுவதும் பாதிரிப்பூ பூத்திருக்குமாம். வலம் முடித்து துவார விநாயகர், துவார சுப்பிரமணியர் தொழுது வாயிலைக்கடந்து இடப் புறமாகத் திரும்பினால் உள்சுற்றில் சந்திரனையடுத்து திருநாவுக்கரசர் உற்சவமூர்த்தமும் அடுத்து மூலமூர்த்தமும் தனித்தனி சந்நிதிகளாக உள்ளன. அமர்ந்த கோலத்துடன் அப்பர் கைகூப்பி உழவாரத்துடன் காட்சி தருகின்றார். பக்கத்தில் பள்ளியறை. (இக்கோயிலில் பள்ளி யறை, சுவாமி கோயிலில் உள்ளது. நாடொறும் அம்பிகையே பள்ளி யறைக்கு எழுந்தருளுவது இங்கு நடைபெறும் தனிச்சிறப்பாகும்).

அறுபத்துமூவர் மூலமூர்த்தங்களும் கடந்த பின்னர் தல விநாயக ராகிய 'சொன்னவாறறி விநாயகரை'த் தரிசிக்கலாம் - வலம்புரிமூர்த்தி. இவருக்குக் கன்னி விநாயகர் என்று பெயர். அம்பிகை இறைவனை வழிபட்டபோது உதவிசெய்தமையால் கையில் பாதிரி மலருடன் காட்சி தருகிறார்.

உற்சவத் திருமேனிகளின் சந்நிதி - வியாக்ரபாதர், அகத்தியர், முதலியோர் பூசித்த லிங்கங்கள், மீனாட்சி சுந்தரேசர், வள்ளி தெய்வ யானை சமேத ஆறுமுகர் சந்நிதிகள் - எதிரில் வலப்பால் தலமரமான ஆதிபாதிரிமரம் கவசமிட்டுக் காக்கப்பட்டு வருகின்றது. கஜலட்சுமி சந்நிதியை அடுத்து, துர்க்கை கோஷ்ட மூர்த்தமுள்ள இடத்தில் அம்பிகை அருவ வடிவில் தவம் செய்த இடம் - அருந்தவநாயகி சந்நிதியாகப் போற்றப்பட்டு வருகின்றது. உருவமில்லை - பீடம் மட்டுமே

Koviloor Digital Library

காணப்படுகிறது. நடராசசபை - நவக்கிரக சந்நிதி - பைரவர் - சூரியன். உள்வலமுடித்துப் படிகளேறி மூலவர் சந்நிதியை அடையலாம். முன் மண்டபத்தில் சுதைசிற்பங்கள் உள்ளன. துவாரபாலகரைத் தொழுது உட்சென்றால் பாடலேஸ்வரரைத் தரிசிக்கலாம். கவசமணிந்து கண்ணுக்கு ரம்யமாகக் காட்சி தருகின்றார்.

அம்பாள் கோயில் பக்கத்தில் தனியே உள்ளது. கிழக்கு நோக்கியது. முன் மண்டபத்தில் ரிஷபாரூடர், காளிங்கநர்த்தனம், மோகினிநடனம், காமதேனு வழிபாடு, வீணாவாணி, அவிர்சடைப் பெருமான், ஆஞ்சநேயர் முதலிய உருவங்கள் கற்றூணில் செதுக்கப் பட்டுள்ளன.

உள்சுற்றில் விநாயகர், ஆறுமுகர் உற்சவ அம்பாள் சந்நிதிகள் உள. அம்பாள் நின்ற திருக்கோலம் - நல்ல அழகு. அம்பாள் சந்நிதியை யொட்டியே எதிரில் வீதியோரமாகப் பிற்காலப் பிரதிஷ்டையாகிய பிடாரி கோயில் உள்ளது. கோயிலில் எல்லா மாதாந்திர விழாக்களும், நவராத்திரி, சஷ்டி, கார்த்திகை சோமவாரங்கள், மாசிமகக் கடலாட்டு முதலிய அனைத்தும் நடைபெறுகின்றன. வெள்ளித் தேர் உள்ளது. வைகாசியில் பெருவிழாவும், சித்திரையில் வசந்தோற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசியில் பிடாரி உற்சவமும் ஒருவாரகாலம் நடைபெறுகிறது.

அப்பர் சதயவிழா சித்திரை சதயத்தில் வெகுவிமரிசையாக நடைபெறுகிறது. வெள்ளிரிஷபத்தில் வீதியுலா, திருவையாறு கயிலைக் காட்சி, திருப்புகலூர் ஐக்கிய ஐதிகம் முதலியவை நடைபெறுகின்றன. அ/மி. பாடலேஸ்வரர் ஒரு நாள் வண்டிப்பாளையத்திற்கும் (சித்திரை, அனுஷம்) எழுந்தருளுகிறார். அன்று அப்பர்சாமி குளத்தில் தெப்பவிழா நடைபெறுகிறது. வண்டிப்பாளையத்தில் சுப்பிரமணியசுவாமி கோயில் உள்ளது. இங்குள்ள ஊத்துக்காட்டு அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள தோப்பில் தான் திருக்கோயிலூராதீன சுவாமி களின் அதிஷ்டானம் உள்ளது. இதை "**சாமியார் தோட்டம்**" என்று அழைக்கிறார்கள்.

திருவாவடுதுறை ஆதீனம், இலக்கணம் சிதம்பர முனிவர் இத் தலத்திற்கு "ஸ்ரீ பாடலேஸ்வரர் தலபுராணம்" பாடியுள்ளார். கலம்பக நூலொன்றும் இத்தலத்திற்குள்ளது. அன்பர்கள் பலர் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பாக 'திருப்பாதிரிப்புலியூர்த் தோத்திரக்கொத்து' நூலும் அச்சிடப்பட்டுள்ளது. 8-2-1973ல் சந்நிதிவீதியில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயம் உள்ளது.

Koviloor Digital Library

கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகிய இக்கோயிலில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களிலிருந்து, பராந்தக சோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், வீரரா சேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து பல்லவர்களும் பாண்டியர்களும் திருப் பணிகள் செய்தும்நன்கொடைகள் தந்தும் இக் கோயிலைப் பராமரித்து வந்துள்ளனர் என்பது தெரிகிறது.

''போதினாலும் புகையாலும் உய்த்தே அடியார்கள் தாம்
போதினாலே வழிபாடு செய்யப் புலியூர் தனுள்
ஆதிநாலும் அவலம் இல்லாத அடிகள் மறை
ஓதிநாளும் இடும் பிச்சை ஏற்றுண்டுணப் பாலதே''. *(சம்பந்தர்)*

''கருவாய்க் கிடந்து உன்கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே.'' *(அப்பர்)*

''பூமேவு பாதிரி விண்படர்ந்தகன்ற மணிக்கோயில் பொலியமேவி
மாமேவு மால் அயனும் மூவிலை வேல் அம்மானும் வணங்கி ஏத்தத்
தாம்மேவு தொழில் ஐந்தும் பரைஇயற்ற அனைத்துயிரும் தழைப்பவைகும்
காமேவு புகழ்ப் புலிசைப் பாடலேச் சுரன் பதத்தைக் கருதி வாழ்வாம்''.
(தலபுராணம்)

''உறையேறு சைவநெறி வளர்ந்தேறச் சமணர் எலாம் உட்கிமாழ்கிப்
புரையேறக் கண்டவர்கள் ஆனந்தக்களிப்பேறப் புகழ் நா வேந்தை
கரையேற விட்டபிரான் ஒருபாகம் வளர்கருணைப் பிராட்டியான
தரையேறு புகழ் புலிசைப் பெரிய நாயகி சரணம் தலைமேற் கொள்வாம்.''
(தலபுராணம்)

–'மாணுற்ற
பூப்பாதிரிக் கொன்றை புன்னை முதற்சூழ்ந்திலங்கும்
ஏர்ப்பாதிரிப் புலியூர் ஏந்தலே.'
(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பாடலேஸ்வரர் திருக்கோயில்
திருப்பாதிரிப் புலியூர் & அஞ்சல்
கடலூர். 2. - 607 002.

Koviloor Digital Library

51/19. திருமுண்டீச்சரம்.

கிராமம்.

நடுநாட்டுத் தலம்.

பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள தலம். மக்கள் இவ்வூரைக் 'கிராமம்' என்று அழைக்கின்றனர்.

(1) திருக்கோயிலூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் சென்று, திருவெண்ணெய்நல்லூரைத் தாண்டி 2 கி. மீ. சென்றால் இத்தலத்தையடையலாம்.

(2) விழுப்புரத்திலிருந்து நகரப் பேருந்தும் செல்கிறது. சாலையோரத்தில் கோயில் உள்ளது. கோயிலருகே இறங்கலாம்.

இறைவனின் காவலர்களாகிய 'திண்டி' 'முண்டி' வழிபட்ட தலம். பிரமன், இந்திரன் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். துவாபரயுகத்தில் சொக்கலிங்க மன்னன் என்பவன் வேட்டைக்கு வந்த போது குளத்தில் ஒரு அதிசயமான தாமரை மலரைக் கண்டான். ஆள் அனுப்பி, பறித்து வருமாறு கட்டளையிட்டான். அவனும் சென்று பறிக்கையில் அம்மலர் அவன் கைக்கு அகப்படாமல் சுற்றி வரலாயிற்று. அதுகண்ட மன்னன், அதன்மீது அம்பெய்த; குளம் முழுவதும் செந்நிறமாயிற்று. கண்ட மன்னன் மயங்கி அதனருகே சென்று பார்த்தபோது அம்மலரில் இலிங்கமிருப்பதைக் கண்டான்; அதை எடுத்து அக்குளக்கரையில் ஆலயம் எடுப்பித்துப் பிரதிஷ்டை செய்தான் என்று வரலாறு சொல்லப்படுகிறது. மன்னன் அம்பு எய்திய காரணத்தால் இன்றும் சுவாமிமீது அம்பு பட்ட தழும்புள்ளது. இதனால் சுவாமிக்கு 'முடீஸ்வரர்' என்றும் பெயர் வந்தது. இப்பெயரே கல்வெட்டில் ''மௌலி கிராமம்'' என்று குறிக்கப்பெறுகின்றது. நாளடைவில் மக்கள் 'மௌலி' என்பதை விட்டுவிட்டு 'கிராமம்' என்றே அழைக்கலாயினர். அவ்வழக்கே தொடர்ந்து வந்து, இன்றும் இவ்வூர் 'கிராமம்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது, 'முடீச்சுரம்' என்ற பெயர் 'முண்டீச்சுரம்' என்றாயிற்று என்பதும் எண்ணத்தக்கது. இக்கோயில் கி. பி. 943-ல் கேரள மன்னனான வெள்ளாங்குமரன் என்பவனால் (முதற்பராந்தகன் காலத்தில்) கருங்கல்லால் கட்டப்பட்ட தாகக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

வீரபாண்டியன் என்னும் மன்னனுக்கு இப்பெருமான் திருநீற்றுப் பை, (பொக்கணம்) தந்தார் ஆதலின் இவ்விறைவன் கல்வெட்டில்

Koviloor Digital Library

'பொக்கணம் கொடுத்த நாயனார்' என்றும்; மற்றும் ஆற்றுத்தளிப் பெருமான், ஆற்றுத்தளி மகாதேவர் என்றும் குறிக்கப்பெறுகின்றார். (ஆற்றின் கரையிலுள்ள கோயில் - ஆற்றுத்தளி).

இறைவன் - சிவலோகநாதர், முடீஸ்வரர், முண்டீசர்.

இறைவி - சௌந்தர்யநாயகி, கானார்குழலி, செல்வநாயகி, செல்வாம்பிகை.

தீர்த்தம் - முண்டக தீர்த்தம் (அ) பிரம தீர்த்தம்.

தலமரம் - வன்னி (இப்போது இல்லை)

அப்பர் பாடியது.

ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் கிழக்கு நோக்கியது. நேரே பலிபீடமும் நந்தியும் உள்ளன. கொடிமரமில்லை. துவார வாயிலில் விநாயகரும் முருகனும் இடம் மாறியுள்ளனர். (முருகனின் இடக் கீழ்க்கை நாராச முத்திரையுடன் - அகமர்ஷணநீரைக் கீழேவிடும் அமைப்பில் - இருப்பது கவனிக்கத் தக்கது).

மண்டபத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. பக்கவாயில் வழியாக உள்நுழைந்தால் வலப்பால் நால்வர் சந்நிதி உள்ளது. உள்வாயிலைக் கடந்து சென்று மூலவரைத் தரிசிக்கலாம், திருநீற்றுப் பட்டையும், அக்கமணி மாலையும் தாங்கி, தெய்விகப் பொலிவுடன் சிவலிங்கத் திருமேனி காட்சி தருகின்றது. நடராச சபை உள்ளது.

உட்சுற்று முழுவதும் தளவரிசையுள்ளது. விசாலமான இடப் பரப்பு, வரசித்தி விநாயகர், சண்முகர் சந்நிதிகள் தனித்தனிக் கோயில் களாக உள்ளன. தட்சிணாமூர்த்தி கல்லாலமரமின்றி மலைமீது நந்தியை வாகனமாகக் கொண்டு காட்சி தருகிறார்.

சுவாமிக்கு வலப்பால் அம்பாள் சந்நிதி. தனிக்கோயிலாகவுள்ளது. நின்ற திருக்கோலம். முன்மண்டபத்தில் இடப்பால் நவக்கிரக சந்நிதி உள்ளது. சப்தமாதாக்கள்: ஐயனார், துர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. சுவாமி, அம்பாள் விமானங்கள் மிகப்பழமையானவை.

இக்கோயில் தேவகோட்டை ராம. அரு. அரு. ராம. அருணாசலம் செட்டியார் அவர்களின் பொருளுதவியால் 30-08-1950-ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

நாடொறும் இருவேளை பூஜைகள் மட்டுமே நடைபெறுகின்றன. பெருவிழாக்கள் ஏதும் நடைபெறவில்லை.

Koviloor Digital Library

பழமையான கல்வெட்டுக்களில் திருமுடிச்சரம் என்றே பெயருள்ளது. முடியூர் நாடு என்னும் தனிப் பெயர் கொண்ட நாட்டுக்குத் தலைநகராக இருந்தது. மதுரை கோப்பரகேசரி வர்மனின் 24 ஆவது கல்வெட்டில் முடியூர் நாட்டு முடியூர் என்றுள்ளது. சௌந்தர பாண்டியன் காலக் கல்வெட்டில் முடியூர் நாட்டுக் கிராமம் என்றுள்ளது. எனவே முடியூர் என்பது முடீச்சரம் என்றாகி, அது மருவி முண்டீச்சரம் ஆகியுள்ளது என்பார் திரு. வை. சுந்தரேச வாண்டையார்.

''கானவன்காண் கானவனாய்ப் பொருதான்றான்காண்
கனலாட வல்லான்காண் கையிலேந்தும்
மானவன்காண் மறைநான்கும் ஆயினான்காண்
வல்லேறு ஒன்றது ஏறவல்லான்றான்காண்
ஊனவன்காண் உலகத்துக்கு உயிரானான்காண்
உரையவன்காண் உணர்வு அவன்காண் உணர்ந்தார்க்கு என்றும்
தேனவன்காண் திருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்காண் அவன்என் சிந்தையானே.''

(அப்பர்)

-''சீர்ப்பொலியப்
பண்டீச் சுரனிப் பதியே விழைந்த தெனும்
முண்டீச் சுரத்தின் முழுமுதலே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சிவலோகநாதர் திருக்கோயில்
கிராமம் - அஞ்சல் - 607 203.
(வழி) உளுந்தூர்ப்பேட்டை
உளுந்தூர்ப்பேட்டை வட்டம் - விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

52/20. புறவார்பனங் காட்டூர்.

பனையபுரம்.

நடுநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் 'பனையபுரம்' என்று வழங்குகிறது.

(1) திண்டிவனம் - விழுப்புரம் மெயின் ரோடில் விக்கிரவாண்டியைத்தாண்டி, பண்ருட்டி, நெய்வேலி, தஞ்சாவூர் முதலிய ஊர்களுக்குச் செல்லும் (தஞ்சாவூர்) சாலையில் திரும்பி 2 கி. மீ. சென்றால் சாலையோரத்திலுள்ள பனையபுரத்தை அடையலாம். ஊரின் தொடக்கத்திலேயே கோயிலும் சாலையோரத்தில் உள்ளது.

(2) விழுப்புரம் : பாண்டி (திருக்கனூர்வழி) செல்லும் பேருந்தில் சென்றும் கோயிலருகில் இறங்கலாம். முண்டியம்பாக்கத்திற்குப் பக்கத்திலுள்ளதலம். பனையைத் தலமரமாகக் கொண்டுள்ள தலங்கள் ஐந்தனுள் இதுவும் ஒன்று. பிறதலங்களினின்றும் வேறுபாடறிவதற்காக - காடுகளால் சூழ்ந்த பகுதியாக இத்தலம் விளங்கியமையின் (புறவு : சோலை, காடு) 'புறவார் பனங்காட்டூர்' என்றழைக்கப்பட்டது. கிழக்கு நோக்கிய கோயில்.

இறைவன் - பனங்காட்டீஸ்வரர்.

இறைவி - சத்யாம்பிகை, புறவம்மை.

தலமரம் - பனை.

தீர்த்தம் - பத்ம தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம். சூரியன் வழிபட்ட தலம். சிறிய ராஜகோபுரம் - உள்நுழைந்ததும் கவசமிட்ட கொடிமரம். வெளிப் பிராகாரத்தில் விநாயகர், ஆறுமுகர் சந்நிதிகள் உள்ளன. பக்கத்தில் தலமரமாகிய பனைமரங்கள் மூன்று உள்ளன. அம்பாள் சந்நிதியும் கிழக்கு நோக்கியே உள்ளது. நின்ற திருக்கோலம். துவாரபாலகியர் சுதையில் உள்ளனர். துவாரகணபதியையும், தண்டபாணியையும் தொழுது உட்சென்று சத்யாம்பிகையைத் தரிசிக்கலாம் நவக்கிரகம் தொழுது, வலம் முடித்து, கொடிக் கம்பம் வணங்கி, வாயில் நுழைந்தால் சுவாமி சந்நிதியை அடையலாம்.

துவாரபாலகர்கள் உளர். ஒருபுறம் விநாயகரும், மறுபுறம் ஆறுமுகப் பெருமானும் காட்சியளிக்கின்றனர். வாயில்கடந்து

Koviloor Digital Library

உட்சென்றால் உட்பிராகாரத்தில் விநாயகர், அறுபத்துமூவர் சிலா ரூபங்கள், வரிசையாகவுள்ளன, இவற்றுள் திருநீலகண்டர் தம் மனைவியுடன் கூடி, இருவருமாகத் தண்டினைப் பிடித்தவாறே கைகூப்பி நிற்கும் அமைப்பு மிகவும் அரிதான காட்சியாகும் - அற்புதமானதுங் கூட. தொடர்ந்து சப்தமாதர்களும், பைரவரும், தேவியருடன் கூடி மகாவிஷ்ணுவும், நால்வரும் காட்சியளிக்கின்றனர். சந்நிதிவாயிலைக் கடந்தால் வலப்பால் நடராசசபை. உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

நேரே மூலவர். அழகான அமைப்பான சிவலிங்கத் திருமேனி. கோயில் நல்ல சுற்றுமதிலுடன் நன்கு விளங்குகின்றது. முதற் குலோத்துங்கன் காலக் கல்வெட்டில் இறைவன் 'திருப்பனங்காடுடைய மகாதேவர்' என்று குறிக்கப்படுகின்றார்.

''விண்ணமர்ந்தன மும்மதில்களை வீழ வெங்கணையால் எய்தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொரு பாகமாகிய பிஞ்ஞகா பிறைசேர் நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந்தார்க் கருளாயே.''

(சம்பந்தர்)

-''பெண்தகையார்
ஏர்ப் பனங்காட்டூர் என்று இருநிலத்தோர் வாழ்த்துகின்ற
சீர்ப் பனங்காட்டூர் மகிழ்நிக்ஷேபமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பனங்காட்டீஸ்வரர் திருக்கோயில்
பனையபுரம் & அஞ்சல் - 605 603
(வழி) முண்டியம்பாக்கம், விழுப்புரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

53/21. திருஆமாத்தூர்.

நடுநாட்டுத் தலம்.

1) திண்டிவனத்திலிருந்து விழுப்புரம் சென்று, (விழுப்புரம்) ஊருள் செல்லாமல் (திருவண்ணாமலை) ரயில்வே கேட்டில் பிரிந்து ரயில்வே லைன் ஓரமாகச் செல்லும் விழுப்புரம், திருவண்ணாமலை. செஞ்சி பேருந்துச் சாலையில், 2 கி. மீ. சென்றால் 'திருவாமாத்தூர்' கைகாட்டி உள்ளது. அப்பாதையில் - இடப்புறமாகப் பிரிந்து செல்லும் பாதையில் - 6 கி. மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம். நல்ல பாதை இருபுறமும் வயல்கள், கோயில்வரை கார், பேருந்து செல்லும்.

2) விழுப்புரம் - சூரப்பட்டு, நகரப் பேருந்து திருவாமாத்தூர் வழியாகச் செல்கிறது.

நந்தி, காமதேனு தவமிருந்து கொம்புகளைப் பெற்ற சிறப்புடைய தலம். இதனால் இதற்கு 'கோமாத்ருபுரம்' என்று பெயர், பெண்ணை யாற்றிலிருந்து பிரியும் பம்பையாற்றின் கரையில் கோயில் உள்ளது. உயிர்களுக்கு - பசுக்களுக்கு இறைவன் தாயாக இருந்து அருளும் தலம். இராமர் வழிபட்ட சிறப்புடைய தலம்.

'புலவர் புராணம்' பாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சமாதி இத்தலத்தே உள்ளது. இரட்டைப் புலவர்கள் இவ்வூருக்குக் (திருவாமாத்தூர்க் கலம்பகம்) கலம்பகம் பாடியுள்ளனர். அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் பெற்ற பதி.

Koviloor Digital Library

இறைவன் - அபிராமேஸ்வரர், அழகியநாதர்.

இறைவி - முக்தாம்பிகை, அழகியநாயகி.

தலமரம் - வன்னி.

தீர்த்தம் - ஆம்பலப்பொய்கை.

தலவிநாயகர் - மால் துயர் தீர்த்த விநாயகர்.

மூவர் பாடல் பெற்ற தலம்.

சுவாமி கோயிலும் அம்பாள் கோயிலும் எதிரெதிரே உள்ளன. கோயிலுக்கு வெளியில் பக்கத்தில் ஆற்றங்கரையில் உள்ள மண்டபத்திலிருக்கும் விநாயகரே தல விநாயகர் (மால் துயர் தீர்த்த விநாயகர்) ஆவார். சுவாமி கோயிலின் எதிரில் உள்ள மண்டபத்தில் தலமரம் உள்ளது. மிகமிகப் பழமை வாய்ந்த இம்மரத்தின் அடிப்பாகம் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.

சுவாமி கோயிலுக்கு ராஜகோபுரமில்லை. திறந்த முகப்பு வாயில் மட்டுமே உள்ளது. நெடுங்காலமாகவே கோபுரமில்லையாம்.

கிழக்கு நோக்கிய சந்நிதி. உட்புறம் விசாலமாகவுள்ளது. சுதையாலான நந்தி பெரிதாக உள்ளது. இதன் முன்னால் நான்கு கால் மண்டபத்தில் பள்ளத்தில் நந்தி உருவம் உள்ளது. பஞ்ச காலத்தில் மழை வேண்டி, நீர் கட்டும் வழக்கத்திற்கு இது பயன்படுகிறது. முன்னால் செப்புக் கவசமிட்ட கொடிமரமும் அதன் முன்பு கீழே அஸ்திர தேவதையின் சிலாரூபமும் உள்ளன. முன்னால் பலிபீடம்.

வெளிப் பிராகாரத்தில் சித்தி விநாயகர் சந்நிதி உள்ளது. இடப்பால் இராமர் ஆஞ்சநேயர், சீதை, இலட்சுமணன் ஆகியோர் கொண்ட சந்நிதி உள்ளது. நேர் வலப்பால் பழைய விநாயகர் சந்நிதி உளது. தனிக்கோயிலாகவுள்ள சண்முகர் சந்நிதி தரிசிக்கத்தக்கது. மேலக்கோபுரவாயில் - கோபுரம் சிதலமாகியுள்ளது. அடுத்துள்ள சிவலிங்க சந்நிதி முன்பு ஜேஷ்டாதேவி உருவம் கல்லில் செதுக்கியது அழிந்த நிலையில் உள்ளது. அலங்கார (நூற்றுக்கால்) மண்டபம் பழமையானது. யாகசாலையடுத்து ஈசான தேவர் சந்நிதி. வலம் முடித்து, சித்தி விநாயகர் சந்நிதியையடுத்துள்ள படிகள் வழியேறி உட்செல்லுகிறோம். நேரே தெற்குநோக்கிய நடராச சபை உள்ளது - தனிக்கோயில். இடப்பால் திரும்பி, துவாரபாலகரையும், விநாயகரையும், பிரதோஷ நாயகரையும், முருகனையும் வணங்கி உட்சென்று, வலம் வரும்போது நால்வர், உற்சவத் திருமேனிகள் உள்ளன. கருவறை, அகழி அமைப்புடையது.

Koviloor Digital Library

நவகன்னியர் உளர். அறுபத்து மூவர் சிலாரூபங்கள் முழுவதுமாக இல்லை - ஒருசிலவே உள்ளன.

விநாயகர், பூசை செய்யும் அமைப்பில் கையில் மலருடன் சந்நிதியில் காட்சி தருகிறார். அடுத்துப் பழைய ஆறுமுக மூர்த்தி மட்டும் உள்ளார் - சந்நிதியமைப்பில்லை. பக்கத்தில் கஜலட்சுமி சந்நிதி உளது, கோமுகத்தின் கீழ் அதை ஒரு பூதம் தாங்குவதுபோலவுள்ள அமைப்பு காணத்தக்கது. மூலவர் வாயிலில் இருபுறங்களிலும் துவார பாலகர் வண்ணச் சுதையில் உள்ளனர். மேற்புறத்தில் இராமர் பூசித்த சிற்பம் உள்ளது. மூலவர் தரிசனம் - சுயம்புத் திருமேனி, திருமேனியின் முடி மீது பசுவின் குளம்பு பதிந்த வடுவும்; பாற்சொரிந்த அடையாளக் கோடும் உள்ளன.

ஆமாத்தூர்ச் செல்வனை ஆமளவும் வழிபட ஆத்மசாந்தி கிடைக்கின்றது. கோஷ்டமூர்த்தங்களாக (1) சர்ப்பக்கோவணத்துடன் அழகான பிட்சாடனமூர்த்தி (2) தட்சிணாமூர்த்தி (3) இலிங்கோற்பவர் (எதிரில் சஹஸ்ரலிங்கம் உள்ளது) பிரம்மா (எதிரில் சிவதுர்க்கைசிலை உள்ளது) (5) துர்க்கை ஆகியோர் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

அம்பாள் கோயில் எதிரில் உள்ளது. மேற்கு நோக்கியது. பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. கொடிமரம் பலிபீடம் சிம்மம் உள. உள் வாயிலின் வண்ணச் சுதையில் துவாரபாலகியர் உருவங்கள் உள்ளன. அம்பாள் - முக்தாம்பிகை அற்புதமான அழகு. வரப்பிரசாதி அம்மன். அம்பாள் சந்நிதிக்கு நுழையும்போதே வலப்பால் மூலையில் வட்டப்பாறை அம்மன் சந்நிதி (அம்பாளின் சாந்நித்யரூபம்) உள்ளது. தற்போது இச் சந்நிதியில் சிவலிங்கமே உள்ளது.

வட்டப்பாறை அம்மன் சந்நிதி இங்குப் பிரசித்தமானது. இங்கு அம்பாள் சந்நிதியில் இருந்து பொய் சத்தியம் செய்தால் அவர்களைப் பாம்பு தீண்டிவிடும் என்பது அசையாத நம்பிக்கையாக இருந்து வருகிறது. இது தொடர்பாகச் சொல்லப்படும் வரலாறு வருமாறு-,

"அண்ணன் ஒருவன் இளையவனான தன் தம்பியை ஏமாற்றிச் சொத்தினைத் தனக்குச் சேர்த்துக் கொண்டான். வயது வந்து உண்மையறிந்த தம்பி அண்ணனைச் சென்று தனக்குரிய சொத்தைத் தருமாறு கேட்டான் - மறுக்கவே பஞ்சாயத்தைக் கூட்டினான். அண்ணன் மறுக்கவே அவர்களும் வட்டப்பாறை அம்பாள் சந்நிதியில் சத்தியம் செய்து தருமாறு கூறினர். அண்ணன் இதற்கென ஒரு சூழ்ச்சி செய்தான், தம்பியின் சொத்தால் பெற்ற மதிப்பைத் திரட்டிப் பொன்வாங்கி அதைத்

Koviloor Digital Library

தன் கைத்தடியில் பூணுக்குள் மறைத்து வைத்துக் கொண்டான். அத்தடியுடன் அவைக்கு வந்து, தம்பியிடம் தடியைத் தந்துவிட்டு, அம்பாள் சந்நிதியில் இருகைகளாலும் 'தன்னிடம் தம்பியின் சொத்து ஏதுமில்லை, எல்லாம் அவனிடமே உள்ளது' என்று சத்தியம் செய்து கொடுத்தான். சூழ்ச்சியறியாத அனைவரும் வேறுவழியின்றி அவனைத் தம்பியுடன் அனுப்பிவிட்டனர். திரும்பப் பெற்றுக் கொண்ட தடியுடன் சென்ற அண்ணன், இங்கிருந்து 9 கி. மீ. தொலைவிலுள்ள தும்பூர் நாகம்மன் கோயிலை அடைந்தபோது வாய் மதங் கொண்டு, தம்பியைத் திட்டியதோடு; தன்னைத் தெய்வ சக்தி - அம்பாள் சக்தி ஏதும் செய்து விடவில்லை என்று அம்பாளையும் சேர்த்துத் திட்டினானாம். அப்போது கரும்பாம்பு ஒன்று தோன்றி அவனைக் கடித்துச் சாகடித்தது'' என்று வரலாறு சொல்லப்படுகிறது. அவ்வாறு கடித்துச் சாகடித்த இடத்தில் இன்றும் பெரிய நாகச்சிலை ஒன்றுள்ளது.

இந்நிகழ்ச்சியை மெய்ப்பிக்கும் வகையில் இன்றும் முத்தாம்பிகை அம்பாளின் மார்பில் பாம்பின் வால் - சிற்பம் - உள்ளது. தரிசிப்போர் நேரிற் காணலாம். அம்பாளுக்குச் செய்து அலங்காரம் செய்யப்படும் வெள்ளிக் கவசத்திலும் 'சர்ப்பத்தின் வால்' செதுக்கப்பட்டுள்ளது - தரிசிக்கலாம்.

அம்பாள் நல்ல அழகான தோற்றம். அபயகரம் ஒன்றும், தொடைமீது வைத்த மற்றொரு கரமுமாக மற்ற இரண்டில் தாமரையும் நீலோற்பலமுங்கொண்டு நான்குகரங்களுடன் கூடிக் காட்சிதருகிறாள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாப் பணித்திட்டத்தில் இக்கோயிலின் சுவாமி, அம்பாள், விநாயகர், முருகன் விமானங்கள் தற்போது திருப் பணிகள் செய்யப்பட்டு 10-9-1987-ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. (பிரதோஷ வழிபாட்டு மன்றம் சிறப்பாக நடைபெறுகிறது.)

நாடொறும் நான்கு கால பூஜைகள். பங்குனியில் பெருவிழா நடை பெறுகிறது. தலபுராணம் உள்ளது. இத் தலத்துள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம்; இக்கோயிலில் கால சந்திகள்தோறும் தேவாரத் திருப்பதிகம் ஓதுதற்குக் குருடர்களை நியமித்து அவர்களை ஆதரித்த அரியசெய்தி தெரியவருகின்றது. வண்ணச்சரபம் அருள்மிகு. தண்டபாணி சுவாமி களின் சமாதி இத் தலத்தில் கோயிலுக்குச் சற்றுத்தள்ளி, அமைதியான தொரு இடத்தில் உள்ளது.

Koviloor Digital Library

'கௌமார நிச்சயம்' செய்த பெருமான் இவராதலின் இவ்விடத்தில் சமாதிக் கோயிலில் ஆறுமுகப் பெருமான் சந்நிதி உள்ளது. சுவாமிகளின் சிலாரூபம் நின்ற நிலையில் கையில் தண்டூன்றிய கோலத்தொடு, தலை மாலையுடனும் கோவணத்தொடும் காட்சிதருகின்றது. உற்சவத் திருமேனியும் உள்ளது. பக்கத்தில் உள்ள தோட்டத்தில் சமாதி உள்ளது. 5-7-1898-ல் சுவாமிகள் ஞானசமாதி கொண்டார். இவருடைய மரபினரால் இச்சமாதிக் கோயிலும், இங்குள்ள நூலகமும் இவ்விடமாகிய கௌமார மடாலயமும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. சாதுக்கள் சிலர் உள்ளனர். திருக்கோயிலைக் காணச் செல்வோர் இவ்விடத்தையும் கட்டாயம் தரிசித்து வர வேண்டும்.

''மாறாத வெங்கூற்றை மாற்றி, மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீயாடி ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நா எல்லாம் கூறாத நாக்களே'' *(சம்பந்தர்)*

'வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்கள் தாங் கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் அரையனாரே.'' *(அப்பர்)*

''பொன்னவன் பொன்னவன் பொன்னைத் தந்தென்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தினுட் பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்து இன்புற்றிருப்பனே.'' *(சுந்தரர்)*

தண்டபாணி சுவாமிகள் துதி

''அகம்புற என்றுள சமயம் ஆறிரண்டும்
தனதுருவத்(து) அங்கமாக் கொண்(டு)
உகந்து கொலை புலையிஞ்சை யிலார் சொலுந்தே
வெல்லாமும் ஒப்பித் தொண்டர்க்(கு)
இகம்பர முற்றுள போகங் கடந்த முதற்
கதி வழி காட்டிடச் சேயாகித்
திகழ்ந்த தண்டபாணி திருப்புகழ் முருக
தாசன் இரு திருத்தாள் போற்றி.''

Koviloor Digital Library

'-சூர்ப்புடைத்த
தாமாத்தூர் வீழத் தடிந்தோன் கணேசனோடும்
ஆமாத்தூர் வாழ் மெய்அருட் பிழம்பே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அபிராமேஸ்வரர் திருக்கோயில்
திருவாமாத்தூர் & அஞ்சல் - 605 602.
விழுப்புரம் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்.

54/22. திருவண்ணாமலை.



Koviloor Digital Library

நடுநாட்டுத் தலம்.

மிகவும் பிரசித்தி பெற்ற தலம். கார்த்திகை தீபப் பெருவிழா இத்தலத்தில் நடைபெறுவது நாடு முழுவதும் அறிந்தவொன்றாகும். சென்னை, வேலூர், கடலூர், சிதம்பரம், சேலம், திருச்சி, விழுப்புரம் முதலிய பலவிடங்களிலிருந்தும் பேருந்துகள் நிரம்பவுள்ளன.

அண்ணாமலையார் உண்ணாமுலையாளுடன் எழுந்தருளி அன்பர்கட்கு அருள்புரிகின்ற அற்புதப் பதி. உயர்ந்தோங்கிய அருணா சலத்தின் - அண்ணாமலையின் அடிவாரத்தில் கோயில் உள்ளது. பஞ்சபூதத் தலங்களுள் நெருப்புக்குரிய தலம். நினைக்க முத்தியருளும் நெடும் பதி. "உன்னினர் தங்கெட்கெல்லாம் ஒல்லையின் முத்தி நல்கி" என்பது கந்தபுராணத் தொடர். அருணகிரி நாதரின் வாழ்வில் அருள் திருப்பம் ஏற்படக் காரணமாக இருந்த பதி.

ரமண மகரிஷி தவம் இருந்து அருள் பெற்ற தலம். ரமணர் ஆசிரமம் உள்ளது. இத்திருக்கோயிலின் கிழக்கு கோபுரம் 217 அடி உயரம் - தமிழகத்திலேயே உயர்ந்து விளங்குகிறது. தெற்கு கோபுரம் - திருமஞ்சன கோபுரம், மேலக்கோபுரம் - பேய்க் கோபுரம். வடக்குக்கோபுரம் - அம் மணியம்மாள் கோபுரம் என்றழைக்கப் படுகிறது. யாத்ரிகர்களுக்குரிய சத்திரங்கள், திருக்கோயில் விடுதிகள் முதலியவை உள்ளன. இங்கு மலையே இறைவனின் சொரூபம். எனவே மலைவலம் இங்குச் சிறப் புடையது. வல்லாள மன்னனுக்கு மகனாக வந்தவதரித்து இறைவன் அருள் செய்த பதி இதுவே.

இறைவன் - அருணாசலேஸ்வரர், அண்ணாமலையார்.

இறைவி - அபீதகுஜாம்பாள், உண்ணாமுலை.

தலமரம் - மகிழம்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கோயிலுக்கு முன்னால் நீண்ட மண்டபம் உள்ளது. ராஜகோபுரம் (கீழ்க்கோபுரம்) பதினோரு நிலைகளையுடையது. கோபுரத்தில் நடனக் கலையும் பிறவுமாகிய சிற்பங்கள் ஏராளமாகவுள்ளன. உட்சென்றால் நேரே கம்பத்திளையனார் சந்நிதியும் ஞானப்பால் மண்டபமும் உள்ளன. 'அதலசேடனாராட' என்னும் திருப்புகழுக்கு முருகன் கம்பத்தில் வெளிப்பட்டு அருள் செய்த சந்நிதி.

Koviloor Digital Library

சிவகங்கைத் தீர்த்தம் - கரையில் சர்வசித்தி விநாயகர் தரிசனம். படிகளேறிக் கல்யாண சுந்தரரைத் தொழுது மீண்டும் வந்து பெரிய நந்திதேவரை வணங்கிப் படிகளேறிச் செல்கிறோம். வல்லாள மகாராசன் கோபுரம் - கோபுரத்திளையனார் சந்நிதி. வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் தரிசனம். வண்ணச்சரப்ம் தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமானுக்குச் சார்த்திய வேல் இன்றுமுள்ளது. சந்நிதியில் பாம்பன் சுவாமிகளின் குமாரஸ்தவக் கல்வெட்டுள்ளது. பக்கத்தில் அருணகிரிநாதரின் 'திருவெழுகூற்றிருக்கை' வண்ணத்தில் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது.

கோபுரம் கடந்து உட்சென்றால் வலப்பால் சக்தி விலாச சபா கல்யாண மண்டபம் உள்ளது. இடப்பால் கால பைரவர் சந்நிதி. எதிரில் பிரமதீர்த்தம். வலப்பால் புரவி மண்டபம் - ஆனைதிறை கொண்ட விநாயகர் - நளேஸ்வரர் - இடப்புறம் திரும்பி விக்னேஸ்வரர் வித்யாதரேஸ்வரர் - பிரம்மலிங்கம் இவைகளைத் தரிசித்துவிட்டுத் திரும்பிப் படிகளேறும்போது பைரவரையும் சனீஸ்வரரையும் தொழுது சென்றால் வலப்பால் ஏகாம்பரேஸ்வரர், பின்புறத்தில் சப்தகன்னியர் ஐயப்பன், ரேணுகாம்பாள் சந்நிதிகள் - இடப்பால் வெளிச்சுற்றில் மகிழ மரமுள்ளது. மலைப்பாதை வாயிலைத் தொழுதவாறே வந்தால் அம்பாள் சந்நிதி.

முன்மண்டபத்தில் சித்ரகுப்தர் காட்சி. அம்பாள் சந்நிதி. சம்பந்தர் பதிகம், பாவை, அம்மானைப் பாடல்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. அம்பாள் மூலத் திருமேனி - சிறிய மூர்த்தம். நேர் எதிரில் காளஹஸ்தீசுவரலிங்க தரிசனம்.

வலம் முடித்து, துவார விநாயகரை - வெள்ளிக் கவசமிட்ட அழகிய கோலத்தில் வணங்கி, பழனியாண்டவரைப் பார்த்து, கவச மிட்ட கொடிமரம் பணிந்து, சுவாமி சந்நிதிக்குள் நுழைந்தால் விளக்கு களின் பிரகாசம் கண்களைப் பறிக்கிறது.

வலப்பால் உற்சவ மூர்த்த மண்டபம். உள்ளே வலமாக வரும் போது சனந்தனர் முதலானோர் வழிபட்ட லிங்கங்கள், நால்வர் (மூல உற்சவ மூர்த்தங்கள்) அறுபத்துமூவர் மூல மூர்த்தங்கள். சப்த கன்னியர், கௌதமர், துர்வாசர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், வேணுகோபால சுவாமி, கஜலட்சுமி, ஆறுமுகர், பிட்சாடனர், அறுபத்துமூவர் உற்சவர்கள், நடராச சபை, முதலிய சந்நிதிகளை ஆனந்தமாகத் தரிசிக்கலாம்.

Koviloor Digital Library

விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், அகத்தியர் முதலானோர் வழிபட்ட லிங்கங்களும், ஜ்வரஹரேசரும், காலசம்ஹாரர், பைரவரும் தொழுதவாறே சென்றால் சுவாமி சந்நிதி. சந்நிதிக்கு இருபுறமும் அழகாக விளக்கு வரிசைகள்.

மூலவர் - அருணாசலப் பெருமான், தங்கக் கவச நாகாபரணத்துடன் வைர விபூதி நெற்றிப்பட்டம் ஜொலிக்க அருமையாகக் காட்சி தருகிறார்.

'அண்ணாமலைக்கு ஹரோஹர' வாய்விட்டுச் சொல்லிக் கையாரக் கூப்பி உள்ளம் கனியத் தொழுகின்றோம்.

கோயிலுள் நுழைந்தவுடனே சர்வசித்தி விநாயகருக்கு வலப்பால் உள்ள பாதாள லிங்கேஸ்வரர் சந்நிதி - ரமணர் தவம் செய்த இடம் - தரிசிக்கத்தக்கது.

கார்த்திகை தீபம், ஆடிப்பூரம் உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்கள், சித்திரை வசந்த விழா, கந்த சஷ்டி, பாவை விழா, பங்குனி உத்திரம் முதலிய விழாக்கள் சிறப்புடையன. இவை தவிர மாதாந்திர உற்சவங்கள் அனைத்தும் முறையாக நடைபெறுகின்றன. 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு பிராகாரங்களுடன் அமைந்துள்ள இத்திருக் கோயில் (திருவாசகத்தில்) திருவெம்பாவை பாடப்பட்ட சிறப்பினை யுடையது. நாடொறும் ஆறுகால வழிபாடுகள்.

கோஷ்டத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, தலவிசேஷமாகிய லிங்கோற்பவர் பிரபையுடன், பிரம்மா, துர்க்கை ஆகியோர் காட்சியளிக் கின்றனர். தலபுராணம் - அருணாசல புராணம், சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார். அருணைக் கலம்பகமும் அவர் அருளியதே. குருநமசிவாயர் பாடியுள்ளது 'அண்ணாமலை வெண்பா' வாகும்.

குருநமசிவாயர் குகைநமசிவாயர் அருணகிரியார் விருபாக்ஷ தேவர், ஈசான்ய ஞானதேசிகர், தெய்வசிகாமணி தேசிகர் முதலியோர் இப்பதியில் வாழ்ந்த அருளாளர்கள், இவர்களுள் பெரும் யோகியாகத் திகழ்ந்த தெய்வசிகாமணி தேசிகரின் வழியில்வந்த நாகலிங்க தேசிகர் என்பவர் இராமேஸ்வரத்திற்கு யாத்திரையாகச் சென்றபோது, இராமநாதபுர ராஜா சேதுபதி அவர்களின் வேண்டுகோளையேற்று, இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஐந்து கோயில் களின் நிர்வாகத்தைத் தாம் மேற்கொண்டதோடு குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனம் என்ற பெயரில் ஓர் ஆதீனத்தையும் ஏற்படுத்தினார். அதுவே 'குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்'

Koviloor Digital Library

என்று வழங்கப்பட்டுவருகின்றது. இவ்வாதீனத்தின் குருமகா சந்நி தானமாக இன்று எழுந்தருளியிருப்பவரே தவத்திரு, 'பொன்னம்பல அடிகளார்' ஆவார்கள்.

நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இத்தலத்தில் படியெடுக் கப்பட்டுள்ளன. இவை தமிழ், சம்ஸ்கிருதம், கன்னடமொழிகளில் உள்ளன. (கல்வெட்டுகளின் விவரத்தை ஆலயத்தலவரலாற்று நூலில் விரிவாகக் காணலாம்.) திருக்கோயில் சார்பில் தங்கும் விடுதிகள் உள்ளன.

இத்திருக்கோயிலின் சிறப்பைப் பற்றிப் பாடியோரும் நூல்களும் :

1. நமசிவாய சுவாமிகள் - சார பிரபந்தம்.

2. திருச்சிற்றம்பல நாவலர் - அண்ணாமலையார் சதகம்.

3. (காஞ்சிபுரம்) பல்லாவரம் சோணாசல பாரதியார் - அண்ணாமலை கார்த்திகை தீப வெண்பா, சோணாசல வெண்பா, திருவருணைக் கலிவெண்பா, சோணாசல சதகம்.

4. வடலூர் இராமலிங்கசுவாமிகள் - திருவண்ணாமலை திருவருட் பதிகம்.

5. புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் - அருணாச லேஸ்வரர் பதிகம்.

6. காஞ்சிபுரம் சபாபதி முதலியார் - அருணாசல பதிகம்.

7. யாழப்பாணம், நல்லூர் தியாகராஜப்பிள்ளை - அண்ணா மலையார் வண்ணம்.

இவையன்றி; உண்ணாமுலையம்மன் பதிகம், உண்ணாமுலை யம்மன் சதகம், அருணாசலேஸ்வரர் அக்ஷரமாலை, அண்ணாமலை பஞ்சரத்னம், அருணாசல நவமணி மாலை, அருணாசல அஷ்டகம், அருணைக் கலம்பகம், திருவருணை வெண்பா முதலிய நூல்களும் உள்ளன.

வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலில் அர்த்த சாமக்கட்டளைக்கு ஒரு லட்சம் வராகன் வைத்துள்ள செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டொன்று கோயிலில் உள்ளது.

''உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணம் அறுமே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''ஓதிமா மலர்கள் தூவி உடையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர் மழுப்படையினானே
ஆதியே அமரர்கோவேஅணி அணா மலையுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவிலேனே.''

(அப்பர்)

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

(திருவாசகம்)

''அஞ்செழுத்தாய் வேதமாய் ஆகமமாய் நின்றமலை
விஞ்செழுத்தாய் ஒன்றாய் விளங்குமலை - நெஞ்சகத்தே
வைத்தமலை நாயேனைத் தன்அடியார் கூட்டத்தில்
வைத்தமலை அண்ணாமலை''.

''உண்ணாமுலையாள் ஒருபாக மானமலை
கண்ணார் அமுதாய காட்சிமலை - விண்ணோர்
துதிக்குமலை அன்பர் தொழுதேத்தி நாளும்
மதிக்குமலை அண்ணாமலை.''

''கண்டங்கரியமலை கண்மூன்றுடையமலை
அண்டரெலாம் போற்றுதற்கு அரியமலை - தொண்டருக்குத்
தோற்றுமலை நாளும் தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணாமலை.''

(அண்ணாமலைவெண்பா - குருநமசிவாயர்)

தருப்பொலியும் அமரா பதிக்கர சானவன்
சபையில் நடராச ரங்கைத்
தமருகத் தெழுசத்த சூத்திர வியாகரண
சாகரம் தான் விரித்தோன்
பொருப்புயர் பரங்கிரியின் மறுகினன் மெய்க்கவிசொல்
பொய்யா மொழிப் புலவராய்
பொன்போ லெனும் கவியுன் முன்பாட உன்பாடல்
பூவுலகிலே கொண்டுமேற்
கருப்பவம் அகற்றவரும் அருணகிரி நாதராய்க்
கந்தரின் அருள் பெற்றபின்

Koviloor Digital Library

கற்பகக் கனிரசக் கடலமுத வாரிதேன்
கடலென மகிழ்ந்து பாடும்
திருப்புகழ் முழக்குமணி ஈராறு செவியனே
சிறுபறை முழக்கியருளே
தென்னருணை வளர்கோபு ரத்துவாழ் முருகனே
சிறுபறை முழக்கி யருளே.

(க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்)

மருளே ரிடைய பவப்பிணிக்கு
மருந்தே வருக வாழ்வளிக்கும்
மணியே வருக மனம் விளக்கும்
மதியே வருக குறையாத
பொருளே வருக மாற்றறியாப்
பொன்னே வருக பொன்னாய
பூணே வருக வேதாந்தப்
பொலிவே வருக சித்தாந்தத்
தெருளே வருக சிவஞானத்
தேனே வருக திருவாளர்
தேடி வைத்த பேரின்பத்
திரளே வருக சன்மார்க்க
அருளே வருக திருவருணை
அருந்தாமுலையாய் வருகவே
அலகில் விளையாட் டயருமெங்கள்
அம்மே வருக வருகவே.

- உண்ணாமுலையம்மை பிள்ளைத்தமிழ்

"-யாம் ஏத்தும்
உண்ணாமுலையாம் உமையோடு மேவு திரு
அண்ணாமலை வாழ் அருட்சுடரே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அருணாசலேஸ்வரர் திருக்கோயில்
திருவண்ணாமலை & அஞ்சல்
திருவண்ணாமலை மாவட்டம். 606 601.

Koviloor Digital Library

55/1. கோயில்.

சிதம்பரம்.

சோழ நாட்டு (வடகரை)த் தலம்.

'கோயில்' என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலைத்தான் குறிக்கும். ஊர்ப்பெயர் தில்லை. கோயிலின் பெயர் சிதம்பரம், இன்று ஊர்ப்பெயர்வழக்கில் மறைந்து, கோயிலின் பெயரே ஊர்ப் பெயராக வழங்கி வருகிறது.

நடராசப்பெருமான் ஆலயத்தால் பிரசித்திபெற்ற இத்தலத்திற்கு தமிழகத்தின் பல இடங்களிலிருந்தும் - சென்னை, கடலூர், விழுப்புரம், திருச்சி, சேலம், தஞ்சை முதலிய பல ஊர்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சென்னை - திருச்சி மெயின்லைன் இருப்புப் பாதையில் உள்ள புகைவண்டி நிலையம். தில்லைமரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையால் தில்லைவனம் என்று பெயர் பெற்றது. (இம்மரங்கள் தற்போது சிதம்பரத்தில் இல்லை. ஆனால் இதற்கு அண்மையிலுள்ள பிச்சாவரத்திற்குப் பக்கத்தில் உப்பங்கழியின் கரைகளில் காணப்படுகின்றன.) வியாக்ரபாதர் (புலிக்கால்முனிவர்) மிகுதியான பற்றினால் பூசித்த ஊராதலின் பெரும்பற்றப்புலியூர் என்றும்; சித் + அம்பரம் (அறிவு - வெட்டவெளி) = சிதம்பரம் ஞானாகாசம் என்றும்; பூலோக கயிலாயம், புண்டரீகபுரம் சிதாகாசத்தலம் எனவும் இதற்குப் பலபெயர்களுண்டு. தில்லைவாழ் அந்தணர்கள் இருந்து பெருமானைப் பூசித்துக் காத்துவரும் அற்புதத்தலம். ஜைமினி. 'வேத பாதஸ்தவம்' அருளிச் செய்ததும்; சேந்தனார் அருள் பெற்றதும்; மாணிக்கவாசகர் திருவாசகமும் திருக்கோவையாரும் பாடி முத்தி பெற்றதும்; வியாக்ரபாதர் பதஞ்சலி உபமன்யு வியாசர், சுகர் திருநீலகண்டர், திருநாளைப்போவார் கூற்றுவநாயனார், கணம்புல்ல நாயனார், சந்தானாசாரியர்கள் முத்தி பெற்ற சிறப்புடையதுமாகிய பழம்பதி. தில்லைவாழ் அந்தணர்களாகிய தீக்ஷிதர்களின் கட்டுப் பாட்டில் உள்ள கோயில். இக்கோயிலுள் 'திருமூலட்டானம்' என்னும் தனிக்கோயில் ஒன்றுள்ளது. அர்த்தசாம வழிபாடு முடிந்தபின் எல்லாக் கோயில்களிலும் உள்ள சிவகலைகள் அனைத்தும் இந்த மூலத்தான இலிங்கத்தில் ஒடுங்குவதால் இம் மூர்த்திக்கு இப்பெயர் உண்டாயிற்று. எனவே தில்லைத்தலத்தில் வசிப்போர், வந்துகண்டு செல்வோர், அர்த்தசாம வழிபாட்டைக் காண வேண்டியது அவசியமாகும்.

Koviloor Digital Library

இறைவன் - விராட்புருஷனின் வடிவத்தில் திருவாரூர் மூலாதார மாகவும், திருவானைக்கா 'உந்தி'யாகவும், திருவண்ணாமலை 'மணி பூரக'மாகவும், திருக்காளத்தி 'கழுத்தாகவும்', காசி 'புருவமத்தி'யாகவும், சிதம்பரம் 'இருதயஸ்தான'மாகவும் சொல்லப்படும். இக்கோயிலில் உள்ள பேரம்பலத்திற்கு 'மேரு' என்றும் பெயருண்டு. ''பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகை மின் பிறங்கு பேரம்பலம்மேரு வருமுறை வலங்கொண்டிறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ்வொடும் சென்றார்'' என்பது சேக்கிழார் வாக்கு (தடு. புரா.) வடக்கிலொரு 'மேரு' இருப் பதால் இதைத் 'தட்சிணமேரு' என்று கூறுவர்.

'மேருவிடங்கன்' என்பது 'சேந்தனார்' தொடர். பஞ்சபூதத் தலங்களுள் இஃது ஆகாயத்தலம். பஞ்சசபைகளுள் இது கனகசபை, பொற்சபை, சிற்சபை. பதஞ்சலி வியாக்ரபாதர்களுக்குப் பெருமான் கனகசபையில் நடனக்காட்சியை அருளிய தலம். தரிசிக்க முத்தி தரும்பதி. மூவர் பாடல் பெற்ற தலம்.

இராசராசன் வேண்டுதலின் பேரில் நம்பியாண்டார் நம்பிகளால் பொல்லாப்பிள்ளையாரின் துணைகொண்டு திருமுறைப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட தெய்விகத்தலம். பெரியபுராணமென்னும் திருத்தொண்டர்புராணம் சேக்கிழார் பெருமானால் அரங்கேற்றச் செய்யப்பட்ட அருமையான தலம். வைணவத்திலும் 'திருச்சித்திர கூடம்' என்று புகழ்ந்தோதப்படும் திருப்பதி. நாற்புறமும் கோபுரங்கள். தெற்குக் கோபுரவாயிலே பிரதான வாயிலாகும்.

இறைவன் - நடராசர், அம்பலக்கூத்தர், திருச்சிற்றம்பலமுடையார், அம்பலவாணர், (கூத்தபிரான், கனகசபாபதி, சபாநாயகர்.)

இறைவி - சிவகாமி, சிவகாமசுந்தரி.

தலமரம் - தில்லை, ஆல் (திருமூலட்டானப் பிராகாரத்தில் 'ஆல்' கருங்கல் வடிவில் செய்து வைக்கப்பட்டுள்ளது.)

தீர்த்தம் - சிவகங்கை, பரமானந்தகூபம், வியாக்ரபாத தீர்த்தம், (திருப்புலீச்சரம்) பிரமதீர்த்தம், அனந்த தீர்த்தம் முதலியன.

(சிவகங்கையே பிரதானதீர்த்தம். இளமையாக்கினார் கோயிலின் எதிரில் வியாக்ரபாததீர்த்தம் உள்ளது.)

Koviloor Digital Library

இக்கோயிலுள் 1. சிற்றம்பலம் 2. பொன்னம்பலம் 3. பேரம் பலம் 4. நிருத்தசபை 5. இராசசபை என ஐந்து பெருமன்றங்கள் உள்ளன.

1. **சிற்றம்பலம் :** நடராசப்பெருமான் திருநடம்புரிந்தருளும் இடம். ''தூய செம்பொன்னினால் எழுதிவேய்ந்த சிற்றம்பலம்'' என்பார் அப்பர். இவ்வம்பலம் 'தப்ரசபா' எனப்படும். முதலாம் ஆதித்த சோழனின் மகன் முதற்பராந்தகசோழன் இச்சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் 'லெய்டன்' நகரப் பெரிய செப்பேடுகளும் கூறுகின்றன. இவனுக்கு முன் இரண்யவர்மன், பொன்வேய்ந்தான் என்று கோயிற்புராணம் தெரிவிக்கின்றது. இச்சிற்றம்பலம் உள்ள இடம் உயர்ந்த அமைப் புடையது, பக்கவாயில் வழியாக மேலே செல்ல வேண்டும். இச்சிற்றம்பலத்தின் உள்ளே செல்வதற்கு ஐந்துபடிகள் - பஞ்சாக்கரப் படிகள் - உள்ளன. இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் உள்ளன. பதினான்கு சாஸ்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்த போது, இப்படிகளிலுள்ள யானைகளில் ஒன்று தன் தும்பிக்கையால் அந்நூலையெடுத்து நடராசப்பெருமான் திருவடியில் வைத்தமையால் அந்நூலுக்குத் 'திருக்களிற்றுப்படியார்' என்ற பெயர் ஏற்பட்டது. நடராசப்பெருமானின் வலப்பால் 'ரஹஸ்யம்' - அருள்ஞானப் பெருவெளி - உள்ளது.

2. **பொன்னம்பலம் (கனகசபை) :** நடராசப்பெருமான் அபிஷேகம் கொண்டருளும் இடம். சிற்றம்பலத்திற்கு முன்னால் உள்ள பகுதி. இங்கு ஸ்படிகலிங்கத்திற்கு நாடொறும் ஆறுகால பூஜையும், இரண்டாங்காலத்தில் ரத்னசபாபதிக்கு அபிஷேக வழிபாடுகளும் நடைபெறுகின்றன, இப்பொன்னம்பலத்தின் முகட்டை, முதலாம் ஆதித்தசோழன், கொங்குநாட்டிலிருந்து கொண்டுவந்த உயர்ந்த மாற்றுடைய பொன்னால் வேய்ந்தான் என்று தெய்வச் சேக்கிழார் 'இடங்கழி' நாயனார் வரலாற்றில் கூறுகின்றார். தில்லைக் கோயில் கல்வெட்டுப்பாடலொன்று சிறந்த சிவபக்தனும், படைத்தலைவனு மான மணவில் கூத்தனான காளிங்கராயன் என்பவன் இப் பொன்னம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான் என்று கூறுகின்றது.

3. **பேரம்பலம் :** இது தேவசபை எனப்படும். மணவில் கூத்தனான காளிங்கராயன் விக்கிரமசோழன் காலத்தில் இச்சபையைச் செம்பினால் வேய்ந்தான் என்று தில்லைக்கோயில் பாடலால் அறியலாம். பின்பு, இப்பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தவன் மூன்றாங்குலோத்துங்க சோழன் ஆவான். இங்குத்தான் பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளி யுள்ளனர். இம்மணவில்கூத்தன் செம்பொற்காளமும் செய்து தந்தான்;

Koviloor Digital Library

நூற்றுக்கால் மண்டபம் அமைத்தான்; நந்தவனம் அமைத்தான்; ஓராயிரம் கறவைப் பசுக்களைக் கோயிலுக்கு வழங்கினான்; திருப் பதிகங்கள் ஓத மண்டபம் அமைத்தான்; திருமுறைகளைச் செப்பேடு செய்வித்தான் என்னும் பல அரிய செய்திகளும் கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன.

4. நிருத்த சபை : நடராசப்பெருமானின் கொடிமரத்துக்கு (துவஜஸ்தம்பத்திற்கு)த் தென்பால் உள்ளது. ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிய இடம் இதுவே. அப்பெருமானின் திருமேனி இங்கே உள்ளது.

5. இராச சபை : இஃது ஆயிரக்கால் மண்டபமாகும். சோழ மன்னர் மரபில் முடிசூடப் பெறுபவர்களுக்கு முன்னர்ச் சொல்லிய பஞ்சாக்கரப்படியில் அபிஷேகமும் இம்மண்டபத்தில் முடிசூட்டு விழாவும் நடைபெற்று வந்தன. இம்முடிசூட்டினைத் தில்லைவாழ் அந்தணர்களே செய்து வந்தனர்.

இத்தலத்தில் நிகழ்ந்த அரிய செயல்களுள் சில :

1) மாணிக்கவாசகர் புத்தரை வாதில்வென்று ஊமைப் பெண்ணைப் பேசுவித்தது.

2) திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் கண்டது.

3) உமாபதிசிவம் 'கொடிக்கவி' பாடிக் கொடியேற வைத்தது.

4) திருப்பல்லாண்டு பாடிச் சேந்தனார் தடைப்பட்ட தேரை ஓடச்செய்தது.

5) திருமுறைகளை வெளிப்படுத்தியது.

6) சேக்கிழார் பெருமானுக்குத் திருத்தொண்டர் புராணம் பாட அடியெடுத்துத் தந்தது முதலிய பலவாகும்.

தேவாரப் பதிகங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, கோயில் நான்மணி மாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமி இரட்டை மணிமாலை, தில்லைக் கலம்பகம், கோயிற் புராணம் முதலிய நூல்களாலும்; ஏனைய அளவற்ற நூல்களில் ஆங்காங்கு வரும் பகுதிகளாலும் இத்தலத்தின் பெருமையை அறியலாம்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியிட்டுள்ள 'சிதம்பர விலாசம்' நூல் இக்கோயிலமைப்பைப் பற்றிக்கூறுகின்றது.

Koviloor Digital Library

இக்கோயிலுக்கு, மிகச்சிறப்பான திருப்பணிகளைச் செய்த விக்கிரம சோழன் காலம் வரையில் வழங்கப்பட்ட நிவந்தங்கள் சண்டேஸ்வரர் பெயரால் நடைபெற்று வந்தன. அம்மன்னனின் காலத்திற்கு பிறகு குறிப்பிட்ட குழுவினரால் கண்காணிக்கப்பட்டு வந்தது. அக்குழுவில் தில்லை வாழ் அந்தணர்கள் சிலரும் வழிபாடு செய்யும் உரிமை கருதிச் சேர்க்கப்பட்டனர். சோழ மன்னர்களின் ஆட்சிக்குப் பிறகு இக்கோயில் தில்லைவாழ் அந்தணர்க்கு உரியதாயிற்று. இவ்வாறு, கல்வெட்டுத் துறையின் ஆண்டறிக்கை கூறுகின்றது. (Annual Reports on South Indian Epigraphy)

'மணவில்' என்ற ஊரின் தலைவனும், முதற்குலோத்துங்க சோழன் விக்கிரமசோழன் ஆகியோரின் படைத்தலைவனுமாகிய பொன்னம்பலக்கூத்தன் என்பவன்; தில்லையில் நூற்றுக்கால் மண்டபத்தைத் தன் மன்னன் பெயரால் விக்கிரம சோழன் மண்டபம் செய்வித்தான்; தேவாரம் ஓதுவதற்கு மண்டபம் கட்டினான்; தேவாரப் பதிகங்களைத் தன் அமைச்சனான காளிங்கராயனைக் கொண்டு செப்பேட்டில் எழுதுவித்தான்; ஞானசம்பந்தப் பெருமான் கோயிலைப் பொன்னால் வேய்ந்தான்; நடராசப் பெருமான் மாசிக்கடலாட்டின் போது எழுந்தருளியிருக்க. 'கிள்ளை' என்னும் ஊரில் மண்டபம் அமைத்தான். பேருந்துச் சாலையோரத்தில் அமைந்துள்ள கீழ்வாசல் கோபுரம் ஏழு நிலைகளுடன் விளங்குகிறது. வாயிலைக் கடந்து உட்சென்றால் உள்கோபுரமும் ஏழுநிலைகளுடன் காட்சியளிக்கிறது. வலப்பால் தில்லைமரம் வளரும் மேடையுள்ளது. நாற்புற வாயில்களிலும் நடனக்கலைச் சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. வாயிலைக் கடந்ததும் வலப்பால் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது.

அடுத்துள்ளது சிவகங்கைத் தீர்த்தம். கரையில் தென், கீழ்புறச் சுவர்களில் திருவாசகப் பாடல்கள் முழுவதும் கல்வெட்டுக்களாகப் பதிக்கப்பட்டுள்ளன. குளத்தின் மேற்கரையில் 'பாண்டி நாயகம்' என்கிற முருகன் சந்நிதி உள்ளது. சிவகாம சுந்தரி சந்நிதி தனிக் கோயிலாகப் பொலிவுற உள்ளது. உள் பிராகாரத்தில் சபாநாயகர் (தருமை) கட்டளை அறை, நிருத்தசபையில் வலக்காலை மேலே தூக்கியுள்ள ஊர்த்துவ தாண்டவர், சரபமூர்த்தி முதலிய சந்நிதிகள் உள்ளன. வெளிப்பக்கத்தில் பிட்சாடனர் சுதை சிற்பம் உள்ளது.

நடராச சந்நிதிக்கான தங்கத்தகடு வேய்ந்த கொடிமரம் உள்ளது. பிராகாரத்தில் அம்பாள் சந்நிதி, கம்பத்திளையனார், தாயுமானவர், விநாயகர், சுப்பிரமணியர், படிகளேறிச் சென்றால் திருமுறை காட்டிய

Koviloor Digital Library

விநாயகர் (பொல்லாப் பிள்ளையார்) சுதை சிற்பம், முதலியனவுள்ளன. தொடர்ந்து பிராகாரத்தில் விசுவநாதர் லிங்கம், வைத்தியநாதர் தையல் நாயகி சந்நிதி, காலபைரவர், சண்டேசுவரர், விநாயகர் அறுபத்துமூவர் திருமேனிகள் உள்ளன. திருமூலட்டானம் சுவாமி சந்நிதி. பக்கத்தில் 'உமைய பார்வதி' தங்கக் கவசத்தில் பேரழகோடு காட்சி தருகின்றாள். அர்த்தசாம அழகர் புறப்பாட்டுச் சபையுள்ளது. உற்சவமூர்த்திகள் வைத்துள்ள மண்டபம், சனிபகவான் சந்நிதி உள்ளது.

சிற்றம்பலத்து நட்டமாடும் சிவக்கொழுந்தைத் தரிசிக்கும்போது மனம் லயிப்புற்றால் 'என்று வந்தாய்' எனும் குறிப்பு நமக்கும் கிடைக்கும், அம்பலக் கூத்தர் இருப்பது சிற்றம்பலம் - சிற்சபை. முன் மண்டபம் பேரம்பலம். நடராசப் பெருமானுக்குப் பக்கத்தில் 'சிதம்பர ரகசியம்' உள்ளது. இந்த ரகசியம் உள்ள இடத்தில் வில்வதளங்கள் தொங்குகின்றன.

நடராசப் பெருமானை நின்று தரிசிக்கும் போது இடப்பால் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியுள்ளது. 'திருச்சித்ரகூடம்' எனப்படும் இச்சந்நிதியில் பெருமாள் கிடந்த கோலத்தில் காட்சி தருகிறார். உள்ளே வலமாக வரும் போது வேணு கோபாலர் சந்நிதி யதிராசர், யோக நரசிம்மர், கூரத்தாழ்வார், ஆசார்யர்களின் உற்சவ மூர்த்தங்கள். ஆஞ்சநேயர் திருமேனிகள் முதலியவை உள்ளன.

தில்லையாடியின் திருவடி - ஆடஎடுத்திட்ட பாதம் - குஞ்சிதபாதம் நம் குறைகளைப் போக்கி நிறைவையும் நல்வாழ்வையும் தருமே! ஆனித் திருமஞ்சனமும் மார்கழித் திருவாதிரையும் இத்திருக்கோயிலில் நடைபெறும் மிகச்சிறப்பான விழாக்களாகும். மகுடாகமப்படி பூசைகள் நடைபெறுகின்றன.

'செல்வநெடு மாடம் சென்று சேணோங்கிச்
செல்வமதி தோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.'

(சம்பந்தர்)

'பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்தி செய்கேன் என்னை நீ இகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை அம்பலத்தா டுகின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே

(அப்பர்)

Koviloor Digital Library

'மடித்தாடும் அடிமைக் கணன்றியே
மனனே நீ வாழு நாளுந்
தடித்தாட்டித் தருமனார் தமர் செக்கி
லிடும் போது தடுத்தாட்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம் பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே'

(சுந்தரர்)

"ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்."

(ஐயடிகள் காடவர்கோன்)

இருவினையின் மதி மயங்கித் - திரியாதே
எழுநரகிலுழலு நெஞ்சுற் - றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் - டுணர்வாலே
பரவு தரிசனையை யென்றெற் - கருள்வாயே
தெரி தமிழை யுதவு சங்கப் - புலவோனே
சிவனருளு முருக செம் பொற் - கழலோனே
கருணை நெறி புரியுமன்பர்க் - கெளியோனே
கனக சபை மருவு கந்தப் - பெருமாளே.

(திருப்புகழ்)

"சொற் பேறு மெய்ஞ்ஞானச் சுயஞ் ஜோதியாந் தில்லைச்
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே - நற்சிவையாந்
தாயின் உலகனைத்துந் தாங்குந்திருப்புலியூர்க்
கோயிலமர்ந்த குணக் குன்றமே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. நடராசப்பெருமான் (சபாநாயகர்) தேவஸ்தானம்
சிதம்பரம் & அஞ்சல் - 608 001.
சிதம்பரம் வட்டம் - கடலூர் மாவட்டம்.

Koviloor Digital Library

56/2. திருவேட்களம்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

அண்ணாமலை நகரில் உள்ளது. சிதம்பரத்திலிருந்து அண்ணா மலை நகர் செல்லும் சாலையில் சென்று, அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்துள் புகுந்து நேரே சென்றால் (பல்கலைக்கழகப் பகுதியைத் தாண்டி) சாலை ஓரத்தில் கோயில் உள்ளது.

அர்ச்சுனனுக்குப் பாசுபதம் தந்தருளிய தலம். ஞானசம்பந்தப் பெருமான் இங்குத் தங்கியிருந்து நாடொறும் சென்று தில்லைச் சபாநாயகரைத் தரிசித்து வந்தார். நாரதர் வழிபட்ட தலம்.

இறைவன்- பாசுபதேஸ்வரர், பாசுபதநாதர்.

இறைவி - சற்குணாம்பாள், நல்லநாயகி.

தலமரம் - மூங்கில்.

தீர்த்தக்குளம் - கோயிலின் எதிரில் உள்ளது.

சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்றது.

(தில்லைக்கூத்தனை வழிபட்டபின் ஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்து பெருமானை வணங்கினார். பின்னர் இங்கேயே சிலநாள்கள் தங்கியிருந்தார். அப்பர் பெருமான் தில்லையை வணங்கிப் பின்பு வந்து இத்திருக்கோயிலைப் பணிந்து, திருக்கழிப்பாலையையும் தொழுது மீண்டும் தில்லை சென்றடைந்தார்).

கிழக்கு நோக்கிய திருக்கோயில். கோயிலின் எதிரில் நாகலிங்க மரமும் குளமும் உள்ளன. நன்கு பராமரிக்கப்பட்டு வரும் இத்திருக் கோயில் 'நகரத்தார்க்கு' உரியது.

கோபுரம் தொழுது வாயிலைக்கடந்து உட்சென்றால் பிராகாரத்தில் சித்திவிநாயகர், சோமாஸ்கந்தர் சந்நிதிகள் உள்ளன. நால்வர்களை யடுத்துச் சொக்கநாதரும் மீனாட்சியும் காட்சிதர, அடுத்துச் சுப்பிர மணியர், மகாலட்சுமி சந்நிதிகள் உள்ளன. தலமரம் மூங்கில் உளது. பைரவர், நவக்கிரகங்கள் சந்திரன் சூரியன் உள்ளனர்.

வலம் முடித்து முன் மண்டபத்தில் சென்றால் வலப்பால் அம்பாள் சந்நிதி. நின்ற கோலம். நேரே சுவாமி காட்சி தருகின்றார் - சிவலிங்கத் திருமேனி - அர்ச்சுனனுக்கருளிய பாசுபதேஸ்வரர், அழகான தோற்றம்.

Koviloor Digital Library

சந்நிதி வாயிலின் முன்னால் இருபுறமும் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன. மகாமண்டபத்தில் வலப்பால் நடராசர் சபை - சிவகாமி தரிசனம். நடராசர் மகுடமணிந்து காட்சி தருவது சிறப்புடையது. இடப்பால் நால்வர் உற்சவத் திருமேனிகளும் தொடர்ந்து உற்சவ மூர்த்தங்களும் வைக்கப்பட்டுள்ளன. இம்மூர்த்தங்களுள் பாசுபதம் ஏந்திய மூர்த்தியும், அருச்சுனன் திருமேனியும் தல வரலாற்றுத் தொடர் புடையவை. இவை இரண்டும் மிகப் பழங் காலத்தில் குளத்திலிருந்து கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்குத் தொடர்புடைய வகையில் (1) முன் மண்டபத் தூண்களில் இறைவனும் இறைவியும் வேடுவ வடிவத்தில் நாய்களுடன் செல்வது (2) அருச்சுனனுடன் போரிடுவது போன்ற சிற்பங்கள் உள்ளன. இன்னொரு தூணில் அர்ச்சுனன் தவம் செய்வது, கீழே (பன்றி) மூகாசூரன் வந்து அதற்கு இடையூறுசெய்வது போன்ற சிற்பமும் உள்ளது. கோஷ்ட மூர்த்திகளாக உச்சி விநாயகர், நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, ஆகியோர் உளர். சண்டேசுவரர் சந்நிதி உளது.

கோயிலில் பெருவிழா, வைகாசி விசாகத்தில் ஏகதின உற்சவமாக நடைபெறுகிறது. அன்று பசுபாதம் அருளிய காட்சியும், பஞ்ச மூர்த்திகள் புறப்பாடும் இடம் பெறுகின்றன.

நவராத்திரி, சிவராத்திரி, கார்த்திகைச் சோமவாரங்கள் முதலியவை நடைபெறுகின்றன. நாடொறும் ஐந்து கால வழிபாடுகள், இக் கோயிலின் பக்கத்திலேயே திருக்கழிப்பாலையும், நெல்வாயிலும் (சிவபுரி) உள்ளன.

''அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணலார்
ஆரழல் அங்கை அமர்ந்திலங்க
மந்த முழவம் இயம்ப மலைமகள்
காண நின்றாடிச்
சந்தம் இலங்கு நகுதலை கங்கை
தண்மதியம் மயலே ததும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும்
வேட்கள நன்னக ராரே'' *(சம்பந்தர்)*

நன்று நாடொறு(ம்) நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்றுநீர் திருவேட்களத்து உள்ளுறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே. *(அப்பர்)*

Koviloor Digital Library

"-மாயமிகும்
வாட்களமுற்றாங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்
வேட்களமுற்றோங்கும் விழுப்பொருளே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பாசுபதேஸ்வரர் திருக்கோயில்
திருவேட்களம்
அண்ணாமலைநகர் அஞ்சல் - சிதம்பரம்
சிதம்பரம் வட்டம் கடலூர் மாவட்டம் 608 002.

57/3. திருநெல்வாயில்

சிவபுரி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

தற்போது மக்கள் வழக்கில் சிவபுரி என்று வழங்குகிறது. திருவேட்களத்திற்குப் பக்கத்தில் உள்ளது.

சிதம்பரத்திலிருந்து அண்ணாமலை நகர் சாலையில் வந்து, பல் கலைக் கழகத்திற்குள் நுழையாமல் வலப்புறமாகத் திரும்பி கவரப்பட்டு சாலையில் சென்று, அது மெயின் ரோடில் சேருமிடத்தில் (கவரப்பட்டு சாலை இடப்புறமாகத் திரும்பிவிட) நாம் நேரே எதிர்ச்சாலையில் - பேராம்பட்டுச் சாலையில் சென்றால் சிவபுரியை அடையலாம். கோயில் வரை வண்டியில் செல்லலாம்.

இறைவன் - உச்சி நாதேஸ்வரர், உச்சிநாத சுவாமி.

இறைவி - கனகாம்பிகை.

தலமரம் - நெல்லி.

தீர்த்தம் - கோயிலின் எதிரில் உள்ளது.

கண்வ மகரிஷி வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில். எதிரில் நீராழி மண்டபத்துடன் குளம் உள்ளது. ஐந்து நிலைகளுடன் காட்சி தரும் ராஜகோபுரத்தைக் கடந்து உட்சென்றால் பிராகாரத்தில் விநாயகர் சந்நிதி. அடுத்து சுப்பிரமணியர்,

Koviloor Digital Library

பைரவர், பஞ்சலிங்கங்கள், சனிபகவான், சந்திரன் முதலிய சந்நிதிகள் உள்ளன. வலம் முடித்து முன்மண்டபம் சென்றால் வலப்பால் நவக்கிரக சந்நிதியும் பள்ளியறையும் உள்ளன.

துவாரபாலகரைத் தொழுது வாயிலைக் கடந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம். நடராசசபையில் சிவகாமியுடன் தரிசனம்.

நேரே சுவாமி - மூலவர் தரிசனம். இலிங்கத் திருமேனி உயரமும் பருமனும் குறைந்த அமைப்புடையது. சதுரபீடம் சுற்றளவில் சிறியது. முன்மண்டபத்தில் நந்தியைச் சுற்றியுள்ள முன், பின் இருதூண்களில் நால்வர் சிற்பங்கள் உள்ளன. இக்கோயிலுக்கு கோட்டையூர் அழ. சித. அழகப்பச்செட்டியார் பரம்பரை அறங்காவலராவார்

பக்கத்தில் உள்ள தலங்கள் திருவேட்களம், திருக்கழிப்பாலை. நாடொறும் ஐந்து காலவழிபாடுகள். வைகாசி விசாகத்தில் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு உண்டு.

'விருத்தனாகி வெண்ணீறு பூசிய
கருத்தனார் கனலாட்டு உகந்தவர்
நிருத்தனார் நெல்வாயில் மேவிய
ஒருத்தனார் எமது உச்சியாரே'.

(சம்பந்தர்)

''-வாழ்க்கைமனை
நல்வாயலெங்கு நவமணிக்குன்றோங்கு திரு
நெல்வாயில் நின்றொளிரும் நீளொளியே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. உச்சிநாதசுவாமி திருக்கோயில்
சிவபுரி & அஞ்சல் அண்ணாமலை நகர் (வழி) - சிதம்பரம்.
சிதம்பரம் வட்டம். கடலூர் மாவட்டம் 608 002.

Koviloor Digital Library

58/4. திருக்கழிப்பாலை

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

திருநெல்வாயிலுக்கு (சிவபுரிக்கு) மிகவும் அருகாமையில் 1/2 கி. மீ.ல் உள்ளது. பாடல் பெற்ற காலத்திலிருந்த பழைய கோயில் தில்லைக்குத் தெற்கில் 11 கி. மீ. தொலைவில் திருக்கழிப்பாலை என்ற இடத்தில் இருந்ததாகவும் அது கொள்ளிட நதியால் கொள்ளப் பட்டமையின், இங்கு அமைக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. சிறிய கோயில். கோயில் வரை வாகனத்தில் செல்லலாம். வால்மீகி முனிவர் வழிபட்ட தலம்.

இறைவன் - பால்வண்ண நாதேஸ்வரர்.
இறைவி - வேதநாயகி.
தலமரம் - வில்வம்.
தீர்த்தம் - கொள்ளிடம்.

மூவர் பாடல் பெற்ற கோயில்.

பழைய - சிறிய கோயில். சுற்று மதிற்சுவர் கிலமாகியுள்ளது. ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. வாயிலின் இரு புறங்களிலும் அதிகார நந்தியர் துணைவியருடன் தரிசனம் தருகின்றனர். கொடிமரம் ஏதுமில்லை. பிராகாரத்தில் சூரியன், விநாயகர், கிராதமூர்த்தி, மகாவிஷ்ணு, சுப்பிரமணியர், மகாலட்சுமி, நவக்கிரகம், காலபைரவர், சந்திரன் சந்நிதிகள் உள்ளன.

வலம்முடித்துப் படிகளேறி மண்டபத்துள் சென்றால் அழகிய முத்திரைகளோடு - ஒன்று வலக்கைச் சுட்டுவிரலைச் சுட்டிச் சாய்த்தும்; மற்றதுவலக்கையை மேலுயர்த்தியும் - விளங்குகின்ற துவாரபாலகர் களைத் தரிசிக்கலாம். அம்பாள் சந்நிதி வலப்பால் உள்ளது.

தெற்கு நோக்கிய தரிசனம் - நின்ற திருமேனி. நடராசசபையில் சிவகாமியின் திருமேனி. தோழியர் இருவர் சூழ ஒரே பீடத்தில் அமைந்துள்ளது.

துவார விநாயகரை, தண்டபாணியைத் தொழுது உட்சென்றால் மூலவர் தரிசனம். பெயருக்கேற்ப வெண்ணிறமாக உள்ளது. மிகச் சிறிய பாணம். மேற்புறம் சதுரமாக, வழித்தெடுத்தாற்போல் நடுவில் பள்ளத்துடன் இலிங்கத் திருமேனி காட்சி தருகின்றது. அதிசயமான அமைப்பு. அபிஷேகத்தின்போது பால் மட்டும்தான் இப்பள்ளத்தில் தேங்கும். மற்ற அபிஷேகங்கள் அனைத்தும் ஆவுடையாருக்குத்தான்.

Koviloor Digital Library

மூலவருக்குப் பின்னால் இறைவன் இறைவி வடிவங்கள் சுவரில் நின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளன.

இத்திருக்கோயிலில் நாடொறும் ஐந்துகால வழிபாடுகள். பெரு விழா நடைபெறவில்லை. நவராத்திரி, சிவராத்திரி, விநாயக சதுர்த்தி முதலிய விசேஷ உற்சவங்கள் மட்டும் நடைபெறுகின்றன. இங்குள்ள கல்வெட்டொன்று கோயிலுக்கு நாளொன்றுக்கு ஒரு நாழி தும்பை மலர்கொண்டு வந்துதர, தொகையை நிபந்தம் ஏற்படுத்திய செய்தியைத் தெரிவிக்கிறது.

'புனலாடிய புன்சடையாய் அரணம்
அனலாக விழித்தவனே அழகார்
கனலாட லினாய்கழிப் பாலையுளாய்
உனவார்கழல் கைதொழுது உள்குதுமே.' *(சம்பந்தர்)*

'வானுலாந் திங்கள் வளர்புன்
சடையானே என்கின்றாளால்
ஊனுலாம் வெண்டலை கொண்டூரூர்
பலிதிரிவான் என்கின்றாளால்
தேனுலாம் கொன்றை திளைக்குந்
திருமார்பன் என்கின்றாளால்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.'' *(அப்பர்)*

'எங்கேனும் இருந்து உன்அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந்து என்னோடும் உடனாகி நின்றருளி
இங்கே யென்வினையை அறுத்திட்டு எனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயவனே.' *(சுந்தரர்)*

-செல்வாய்த்
தெழிப்பாலை வேலைத் திரையொலி போலார்க்குங்
கழிப்பாலை இன்பக் களிப்பே. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி :-

அ/மி. பால்வண்ணநாத சுவாமி திருக்கோயில்
திருக்கழிப்பாலை - சிவபுரி - அஞ்சல் - 608 002.
(வழி) அண்ணாமலை நகர் - சிதம்பரம் வட்டம்
கடலூர் மாவட்டம்.

Koviloor Digital Library

59/5. திருநல்லூர்ப் பெருமணம்

ஆச்சாள்புரம்

திருஞான சம்பந்தர் தன் வாழ்க்கைத் துணைவியுடன்
திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோருடன்
ஜோதியில் கலத்தல்

சோழ நாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் ஆச்சாள்புரம் என்று வழங்குகிறது. ஞான சம்பந்தர் திருமணக் கோலத்துடன் சோதியுள் கலந்ததலம். இக்காரணம் பற்றி இதற்கு முத்தித்தலம் என்ற பெயருமுள்ளது. நல்லூர் - ஊரின் பெயர். பெருமணம் - கோயிலின் பெயர். சிதம்பரம் - சீர்காழிச் சாலையில் கொள்ளிடம் புதிய பாலத்தைத் தாண்டி, கொள்ளிடம் ஊரையடைந்து, மெயின் ரோட்டில் வழிகாட்டிப் பலகையுள்ள இடத்தில் இடப்புறமாக 8 கி. மீ. சென்றால் இவ்வூரையடையலாம்.

Koviloor Digital Library

(இதற்கு மேலும் 3 கி. மீ. செல்ல மயேந்திரப்பள்ளி வரும்.) குறுகலான தார்ப்பாதை.

சிதம்பரம் - மகேந்திரப்பள்ளி } பேருந்துகள் இத்தலம்
சீர்காழி - மகேந்திரப்பள்ளி } வழியாகச் செல்கின்றன.

சாலையோரத்தில் கோயில் உள்ளது. கோயில் எதிரில் குளம்.

இறைவன் - சிவலோகத் தியாகேசர், பெருமணமுடைய மகாதேவர்.

இறைவி - வெண்ணீற்று உமை நங்கை, சுவேத விபூதி நாயகி, விபூதிகல்யாணி.

தலமரம் - மா.

தீர்த்தம் - பஞ்சாட்சரதீர்த்தம் முதலான 11 தீர்த்தங்கள்.

(பஞ்சாட்சர தீர்த்தம் எதிரில் உள்ளது.) பிரமன், முருகன், பிருகு, வசிஷ்டர், அத்ரி, வியாசர், மிருகண்டு, அகத்தியர், ஜமதக்னி முதலியோர் வழிபட்டதும், காகபுசுண்டரிஷி ஐக்கியமான சிறப்புடையதுமான தலம்.

சம்பந்தர் பாடல் பெற்றது. தருமையாதீனத் திருக்கோயில். ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. உட்சென்றால் கவசமிட்ட கொடிமரம் நந்தி உள்ளன. விசாலமான உள் இடம். முன்னால் ஞானசம்பந்தரின் திருமண மண்டபம் உள்ளது. இங்குத்தான் வைகாசி மூலநாளில் சம்பந்தர் கல்யாண உற்சவம் தேவஸ்தான ஆதரவுடன் உபயதாரர்களால் சாதாரணமாக நடைபெறுகிறது. உற்சவநாளில் காலையில் உபநயனச் சடங்கும், இரவு உற்சவத்தில் திருமணமும் வீதியுலாவும், பின்னிரவில் சிவசோதி தரிசன ஐக்கியமும் நடைபெறுகின்றன. மண்டபத்தில் இடப்பால் அலுவலகம், வலப்பால் வாகன மண்டபம் அடுத்து ஞானசம்பந்தர் திருமணஞ்செய்து கொண்ட **'தோத்திர பூர்ணாம்பிகை'** அம்மையுடன் உள்ள மூலத்திரு மேனிகள் உள்ளன. உள்வாயிலில் இருபுறத்திலும் தலப் பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன. வெளிப்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் தனிக் கோயில்களாக உள்ளன. தனிவாயில், சுற்று மதிலுடன் அம்பாள் சந்நிதி உள்ளது. உட்சுற்றில் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இத்திருமேனிகளுள் திரிபுரசம்ஹாரர், சந்திரசேகரர், வாயிலார், சேக்கிழார், பிட்சாடனர், சம்பந்தருடன் உடன் ஐக்கியமான நீலகண்டயாழ்ப்பாணர் மதங்கசூளாமணி, நீலநக்கர், முருகநாயனார், திருமணக்கோலத்தில் 'தோத்திர பூர்ணாம்பிகை'யுடன்

Koviloor Digital Library

கூடியுள்ள ஞானசம்பந்தர் முதலிய திருமேனிகள் கண்டு களித்துத் தொழத்தக்கன. அடுத்து நால்வரும் - தொடர்ந்து அறுபத்துமூவர் சந்நிதி - நாயன்மார்கள் பெயர், குருபூசை நாள் நட்சத்திரம் முதலியன எழுதப்பட்டு அழகாகவுள்ளன.

அடுத்து மகாகணபதி, சுப்பிரமணியர், ரணவிமோசனர், மகாலட்சுமி சந்நிதிகளும், நடராசசபையும், பைரவர், சட்டநாதர், சூரியன் சந்நிதிகளும் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி (வேலைப்பாடமைந்தது), இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். சுவாமி சந்நிதி வாயிலில் மேற்புறம் வண்ணச் சுதையில் சம்பந்தர் ஐக்கியமான காட்சி உள்ளது. வாயில் கடந்தால் நேரே மூலவர் தரிசனம். அழகான சிவலிங்கத் திருமேனி. கோயில் அழகாக நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஞானசம்பந்தர் மனைவியுடன் (தோத்திர பூர்ணாம்பிகையுடன்) இத்தலத்தில் இருப்பது விசேஷமானது. சோழ, பாண்டிய, மகாராட்டிர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டில் இறைவன் 'திருப்பெருமண முடைய மகாதேவர்' என்று குறிக்கப்படுகின்றார். நாடொறும் ஆறுகால வழிபாடுகள் செம்மையாக நடைபெறுகின்றன. இத்தலபுராணம் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் பாடப்பட்டுள்ளது. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் அம்பாள் பேரில் 'வெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்' பாடியுள்ளார்.

ஆரணியைப் பெருங்கருணை வடிவாளை, உலகங்கள் அனைத்தும் ஈன்ற
காரணியை சிற்பரையை வெற்பறையன் புதல்விதனைக்
கடுக்கையென்னும்
தாரணியை யானனத்தர் சிவலோகத்தியாகர் இடந்தன்னில் வாழும்
பூரணியை எழில்தரு வெண்ணீற்றுமையை எப்போதும் போற்றி வாழ்வாம்

(தலபுராணம்)

'அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தையிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே'

(சம்பந்தர்)

''-விழிப்பாலன்
கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக் கச்சோதிதரு
நல்லூர்ப் பெருமணம் வாழ் நன்னிலையே''

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி :-

அ/மி. சிவலோகத்தியாகர் திருக்கோயில்
ஆச்சாள்புரம் & அஞ்சல்
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.
மயிலாடுதுறை RMS - 609 101.

60/6. திருமயேந்திரப் பள்ளி

மகேந்திரப்பள்ளி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

இன்று மக்கள் வழக்கில் மகேந்திரப்பள்ளி என்று வழங்குகிறது. பேருந்துகளிலும் மகேந்திரப்பள்ளி என்ற பெயரே இடம் பெற்றுள்ளது. பண்டைநாளில் (மன்னன் ஆண்ட பகுதி) இருந்த பெயர் கோயிலடிப் பாளையம் என்பது. ஞானசம்பந்தரின் பாடலில் மயேந்திரப்பள்ளி என்றே வருகிறது. இத்தலத்திற்கு 2 கி. மீ. தொலைவில் கடல் உள்ளது.

சிதம்பரம் - சீர்காழிச் சாலையில் கொள்ளிடம் புதிய பாலத்தைத் தாண்டி, கொள்ளிடம் ஊரை அடைந்து மெயின்ரோடில், வழிகாட்டிப் பலகையுள்ள இடத்தில் அது காட்டும் பாதையில் இடப்புறமாக 8 கி. மீ. செல்ல ஆச்சாள்புரம் வரும். இதைத் தாண்டி மேலும் 3 கி. மீ. சென்று, நல்லூர் - முதலைமேடு தாண்டிச் செல்ல, மயேந்திரப்பள்ளியை அடையலாம். குறுகலான தார்ச்சாலை. கோயில்வரை வாகனம் செல்லும். சாலையில் இடை வளைவுகள் அதிகம் இருப்பதால் அங்கங்கே நின்று கேட்டுச் செல்லுதல் நல்லது. ஊர்க்கோடியில் கோயில் உள்ளது.

தஞ்சையிலிருந்தும் } மகேந்திரப்பள்ளிக்குப்
கும்பகோணத்திலிருந்தும் } பேருந்து செல்கிறது.

சிதம்பரம், சீர்காழியிலிருந்து (ஆச்சாள்புரம் வழியாக) நகரப் பேருந்துகள் செல்கின்றன. இந்திரன், மயேந்திரன், சந்திரன் ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - திருமேனியழகர், சோமசுந்தரர்.

இறைவி - வடிவாம்பாள், வடிவாம்பிகை, வடிவம்மை.

Koviloor Digital Library

தலமரம் - கண்டமரம், தாழை.

தீர்த்தம் - மயேந்திரதீர்த்தம். கோயில் எதிரில் உள்ளது. கரைகள் செம்மையாக இல்லை.

சம்பந்தர் பாடல் பெற்றது. சிறிய ஊர். பழமையான கோயில். கிழக்கு நோக்கிய வாயில். மூன்று நிலைகளையுடைய சிறிய ராஜ கோபுரம். வெளிப் பிராகாரத்தில் விநாயகர், காசிவிசுவநாதர், திருமால் தேவியருடன், சிவலிங்கம், பைரவர், சூரியன், சந்திரன் சந்நிதிகள் உள்ளன.

வலம் முடித்து, முன்னுள்ள வௌவால் நெத்தி மண்டபத்தை யடைந்தால் வலப்புறம் அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம். உள்ளே சென்றால் வலப்பால் நடராசசபை. சிவகாமியும் மாணிக்க வாசகரும் உடன் காட்சியளிக்கின்றனர். நேரே சிவலிங்கத் திருமேனி - மூலவர் தரிசனம்.

ஆங்கிலேயர் ஆட்சியில், கிளைவ், இங்கு மன்னன் ஒருவன் ஆண்டு வந்த பகுதியைக் குண்டுவைத்துத் தகர்த்ததாகவும் அப்பகுதி இன்றும் **தீவுக்கோட்டை** என்று வழங்கப்படுவதாகவும் சொல்லப் படுகிறது. இவ்விடம் 1 கி. மீ. தொலைவில் உள்ளது. ஒரு சில வீடுகள் உள்ள இங்குப் பழமையான கொடிக்கம்பம், கொடிமேடை முதலிய சின்னங்கள் உள்ளன. இங்கு மிக அழகான மூர்த்தத்தையுடைய **விஜயகோதண்ட ராமசாமிப் பெருமான் கோயில்** உள்ளது. இத் தீவுக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட நடராசத் திருமேனிதான் இக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்கும், தீவுக்கோட்டை நடராசருக்கும் தனித்தனியே அரசால் மோகினிப் பணம் தரப்பட்டு வருகின்றது. இவ்வூரில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு எவ்வித வசதியும் இல்லை. குருக்கள் வீடு கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

கோயிலில் நித்தியப்படி மட்டுமே நடைபெறுகிறது. நாடொறும் நான்கு கால பூஜைகள். இத்தலத்திற்குப் பக்கத்தில் நல்லூர்ப்பெருமணம் உள்ளது. ஆண்டுதோறும் இன்றும் பங்குனித் திங்களில் ஒரு வாரம் சூரியஒளி சுவாமி மீது படுகிறது. இதைச் சூரிய வழிபாடாகக் கொண்டாடுகின்றனர்.

'சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபடஇருந்த எம் இறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந்துய்ம் மினே.' *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

"-சொல்லுந்
தயேந்திர ருள்ளத் தடம் போலிலங்கு
மயேந்திரப்பள்ளி இன்பவாழ்வே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. திருமேனியழகர் திருக்கோயில்
மகேந்திரப்பள்ளி & அஞ்சல் (வழி) ஆச்சாள்புரம்
சீர்காழி வட்டம். நாகப்பட்டினம் மாவட்டம். 609 101.

61/7. தென்திருமுல்லை வாயில்

திருமுல்லைவாசல்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் திருமுல்லைவாசல் என்று வழங்குகிறது. (திருமுல்லை வாயில் என்னும் பெயருடைய இருதலங்களுள் ஒன்று இஃது. மற்றது வடதிருமுல்லை வாயில் - சென்னைக்குப் பக்கத்தில் உள்ளது.)

சீர்காழியிலிருந்து பேருந்துப் பாதை உள்ளது. 13 கி.மீ தொலைவு.

சீர்காழி - அளக்குடி (வழி) திருமுல்லைவாசல்	நகரப்பேருந்துகள்
சீர்காழி - திருமுல்லைவாசல்	செல்கின்றன.

ஊர், கடற்கரையோரத்தில் உள்ளது. கோயிலுக்கு எதிர்க் கோடியில் கடல் உள்ளது. கோயில் வரை வாகனங்கள் செல்லும்.

சோழ மன்னனின் பிரமகத்தி தோஷம் நீங்கிய தலம். சோழ மன்னனின் குதிரையின் கால்களை முல்லைக் கொடி சுற்றிக்கொள்ள, அதை மன்னன் வெட்டிய போது ரத்தம் சிதற, தோண்டிப் பார்க்கையில் லிங்கம் வெளிப்பட்டது. மன்னன் தன் தவறுணர்ந்து தன் கழுத்தை அறுக்க முயல்கையில் இறைவன் ரிஷபாருடராய்க் காட்சி தந்ததாகத் தல வரலாறு. இதனால் சிவலிங்கத்திருமேனியில் - பாணத்தில் இரு வெட்டுத் தழும்புகள் உள்ளன.

இறைவன் - யூதிகா பரமேஸ்வரர், முல்லைவனேஸ்வரர், முல்லை வனநாதர்

இறைவி - சத்யானந்த சௌந்தரி, கோதையம்மை.

Koviloor Digital Library

தலமரம் - முல்லை.

தீர்த்தம் - சக்கர தீர்த்தம், கோயிலின் பக்கத்தில் உள்ளது.
இந்திரனும், கார்க்கோடனும் வழிபட்ட தலம்.

சம்பந்தர் பாடல் பெற்றது. தருமையாதீனத் திருக்கோயில். கிழக்கு நோக்கிய சந்நிதி. ராஜகோபுரமில்லை. பக்கத்தில் குளம் உள்ளது - படிகள் செம்மையாக இல்லை. உள்நுழைந்தால் வெளிச்சுற்றில் உள்ள கிளுவைப் பத்திர மரத்தில் தலமரமான முல்லைக்கொடி சுற்றியவாறு படர்ந்துள்ளது. கற்பக விநாயகர், விஷ்ணு, க்ஷேத்ரலிங்கம், பாலசுப்பிரமணியர், இலக்குமி முதலிய சந்நிதிகள் உள்ளன. அம்பாள் - அழகான திருமேனி. அடுத்து நவக்கிரக சந்நிதி. வலம் முடித்துப் படிகளேறினால் முல்லை வனநாதர் சந்நிதி - நேரே மூலவர் தரிசனம். மூர்த்தி சுயம்புத் திருமேனி. பாணத்தில் இருவெட்டுத் தழும்புகள் உள்ளன.

இத்தலத்திற்கு வடுகநாத தேசிகர் பாடியுள்ள தலபுராணம் உள்ளது. நாடொறும் நான்கு காலவழிபாடுகள் நடைபெறும் இக் கோயிலின் பெருவிழா மாசி மகத்தன்று ஏகதின உற்சவமாக நடைபெறுகிறது. தைப்பூச நாளில் நூற்றெட்டு காவடிகள் எடுப்பது இங்கு விசேஷ மானது. பக்கத்தில் குருகாவூர் தலம் உள்ளது.

'நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன்
அனலாடு மேனியரனூர்
மஞ்சாரு மாட மனைதோறு மைய
முளதென்றுவைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர் சோறளிக்கொ
டிருமுல்லை வாயிலிதுவே.'

(சம்பந்தர்)

-கயேந்திரனைக்
காயலுறாதன்று வந்து காத்தோன் புகழ்முல்லை
வாயிலினோங்கு மணி விளக்கே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. முல்லைவன நாதர் திருக்கோயில்
திருமுல்லைவாசல் & அஞ்சல் - சீர்காழி (வழி)
சீர்காழி வட்டம். நாகப்பட்டினம் மாவட்டம் - 609 113.

Koviloor Digital Library

62/8. திருக்கலிக்காமூர்

அன்னப்பன் பேட்டை



சோழநாட்டு (வடகரை)த் தலம்.

தற்போது அன்னப்பன் பேட்டை என்று வழங்குகிறது.

(1) திருவெண்காடு சீர்காழிச் சாலையில் 'மங்கைமடம்' ஊரை அடைந்து, அங்கிருந்து திருநகரி போகும் சாலையில் சென்று, 'கோனையாம்பட்டினம்' என்று வழிகாட்டி உள்ள இடத்தில் அது காட்டும் பாதையில் (வலப்புறமாக) சென்றால் அன்னப்பன் பேட்டையை அடையலாம். ஊர் சாலையோரத்தில் உள்ளது. ஊர் நடுவே சாலைக்குப் பக்கத்தில் கோயில் உள்ளது.

(2) சீர்காழி - கோனையாம்பட்டினம் (வழி) அன்னப்பன் பேட்டை நகரப் பேருந்து செல்கிறது. பராசரமுனிவர் வழிபட்டதலம்.

இறைவன் - சுந்தரேஸ்வரர்

இறைவி - சுந்தராம்பாள், அழகம்மை.

தீர்த்தம் - சந்திர தீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது. கோயிலுக்கு எதிரில் குளம் உள்ளது. படிகளின்றிச் சீர்குலைந்து குட்டை போலுள்ளது. முகப்பு வாயிலைக்

Koviloor Digital Library

கடந்து உள் சென்றால் பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வில்வநாதர், அகிலாண்டேசுவரி, மகாலட்சுமி, சந்நிதிகள் உள்ளன. அடுத்துள்ள இடத்தில் பைரவர், சனீஸ்வரன், விநாயகர், கைலாசநாதர் பராசரர், பத்திரகாளி முதலிய சிலாரூபங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

வலம்முடித்து உட்சென்றால் நேரே மூலவர் தரிசனம். சதுரபீடத்தில் சற்று குட்டையான பாணத்துடன் கூடிய சிவலிங்கத் திருமேனி. வெள்ளி நாகாபரணம் சார்த்தித் தரிசிக்கத் தனி ஆனந்தம்.

மூலவரைத் தரிசிக்கும் நமக்கு வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. பெருவிழா நடைபெறவில்லை. மாசிமகத்தன்று சுவாமி, தென் திருமுல்லைவாயிலுக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுக்கும் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. அம்பாளுக்கு ஆடி, தை வெள்ளிக் கிழமைகளில் சிறப்பு அபிஷேகமும்; நவராத்திரியில் இலட்சார்ச் சனையும் விசேஷமானது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களின் ஆசியுடன் 1996-ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இது குறித்த கல்வெட்டு கோயிலின் நுழைவு வாயிலில் பதிக்கப்பட்டுள்ளது. நாடொறும் மூன்று கால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இவ்வூரைச் சேர்ந்தவரும், தற்போது சென்னை, மயிலை 61.லஸ் அவென்யுவில் வசித்துவரும் 88 வயதுடைய முதுபெரும் பண்பாளரு மாகிய திரு T.S. துரைசாமி ஐயர் அவர்கள்; இக்கோயிலின் வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு கொண்டு, 1954, 1965, 1978, 1996 என நான்கு மகா கும்பாபிஷேகங்களைத் தம் சொந்தச் செலவில் ஜகத்குருவின் ஆசியுடன் செய்துள்ளார். கோயிற் பணிகள் தொடர்ந்து நடைபெறத் தக்க வகையில் அறக்கட்டளை ஏற்பாடுகளையும் செய்து வைத்துள்ளார். இவர் பணியை மனதார வாழ்த்துகிறோம். இக்கோயிலின் நிழற்படத்தையும் இப்பெருமகனாரே தந்துதவினார்.

'மடல் வரையின் மதுவிம்மு சோலை வயல் சூழ்ந்தழகாருங்
கடல் வரை ஓதம் கலந்துமுத்தம் சொரியும் கலிக்காழூர்
உடல் வரை இன்னுயிர் வாழ்க்கை யாயவொருவன் கழலேத்த
இடர் தொடரா வினையான சிந்தும் மிறைவன் னருளாமே'.

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-''மேய
பலிக்காவூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காழூர் மேவுங் கரும்பே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சுந்தரேஸ்வரர் திருக்கோயில்
அன்னப்பன்பேட்டை
தென்னாம்பட்டினம் அஞ்சல் - 609 106. மங்கைமடம் S.O.
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

63/9. திருச்சாய்க்காடு

சாயாவனம்

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக் கோயில். சாய் - கோரை. பசுமை + சாய் = பைஞ்சாய். (பைஞ்சாய் என்னும்) கோரை மிகுந்திருந்த தலமாதலின் சாய்க்காடு என்று பெயர் பெற்றதென்பர். காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் ஆறுதலங்களுள் இதுவும் ஒன்று. (ஏனையவை திருவெண்காடு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருவையாறு, ஸ்ரீ வாஞ்சியம்) இயற்பகை நாயனார் தம் மனைவியை இத் தலத் தெல்லை வரை அழைத்து வந்து இறைவனுடன் வழியனுப்பி வைத்தார் என்பது வரலாறு.

சீர்காழி - பூம்புகார்ச் சாலையில் இத்தலம் உள்ளது. திருவெண் காட்டிலிருந்து 3 கி.மீ. தொலைவு. மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்து பூம்புகார் செல்லும் பாதையில் உள்ளது. சாலையில் சாய்க்காடுடையார் திருக்கோயில் என்று பெயர்ப் பலகையுள்ளது. உபமன்யு முனிவர், இந்திரன், ஐராவதம், இயற்பகை நாயனார் ஆகியோர் வழிபட்டதும் பேறு பெற்றதுமான தலம்.

இறைவன்	-	சாயாவனேஸ்வரர், இரத்தினச் சாயாவனேஸ்வரர்
இறைவி	-	கோஷாம்பாள், குயிலினும் நன்மொழியம்மை
தலமரம்	-	பைஞ்சாய்
தீர்த்தம்	-	காவிரி, ஐராவததீர்த்தம் (கோயிலுக்கு எதிரில் உள்ளது).

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இத்தலம் மிகப் பழைமையான சிறப்புடையது - பூம்புகார் எல்லைக்குள் இருப்பது. 'நெடுங் கதிர்க்கழனித்தண் சாயக்கானம் *(அகநானூறு 220)*

'செந்நெலஞ்செறுவின் அன்னந்துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டன்ன' *(அகநானூறு 73)*

இத்திருக்கோயிலுக்கு அண்மையில்தான் பூம்புகார்க்காவல் தெய்வமான சம்பாபதி அம்மன் கோயில் உள்ளது. இக் கோயில், ஓடுகள் வேயப்பட்டு முன்னால் இருபூதங்கள் இருக்க, கோயில் குளத்திற்குத் தெற்கில் உள்ளது. முகப்பு வாயிலைக் கடந்ததும் கொடி மரமில்லை. கொடிமரத்து விநாயகர் மட்டும் உள்ளார். மாடக் கோயிலாதலின் நந்தி உயரத்தில் உள்ளார். வெளிப்பிராகாரத்தில் சூரியன், இந்திரன், இயற்கை நாயனார் துணைவியாருடன் உள்ள சந்நிதிகள் உள்ளன. அடுத்துள்ள நால்வர் சந்நிதியில் 'மூவர் முதலிகளே' உளர். விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, உயர்ந்த பீடத்தில்

Koviloor Digital Library

பைரவர், நவக்கிரக சந்நிதி முதலிய சந்நிதிகளைத் தொழுதவாறே வலம் முடித்து; படிகளேறி, வெளவால் நெத்தி மண்டபத்தை அடைந்தால் வலப்பால் பள்ளியறையும் பக்கத்தில் அம்பாள் சந்நிதியும் உள்ளன.

இங்குத் தனியே வைக்கப்பட்டுள்ள வில்லேந்திய வேலவர் பஞ்சலோகத் திருமேனி மிகச்சிறப்புடையதும், தொழுது நிறைவு பெறத்தக்கதுமாகும். நான்கு கரங்களுடன் வில்லையேந்திக் கம்பீரமாக வேலவரும் உயர்ந்தமயிலும் திகழ்ந்து காண்போர் கண்களுக்குப் பெரு விருந்தாகின்றன. இவை நெடுங்காலம் முன்பு கடலில் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

சுவாமி சந்நிதி வாயிலில் இருபுறமும் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன. வாயிலில் மேற்புறம் இயற்பகை நாயனாருக்கு இறைவன் அருள்செய்த காட்சி சித்திரமாக எழுதப்பட்டுள்ளது. கண்டுதொழுது உள்ளே சென்றால் நேரே மூலவர் தரிசனம். சதுர ஆவுடையாரில் குட்டையான பாணத்துடன் கூடிய சிவலிங்கத்திருமேனி. உள் பிராகாரத்தில் வலம் வர வசதியுள்ளது. மூலவருக்கு வலப்பால் நடராச சபை உள்ளது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் திருமுறை விண்ணப் பத்திற்கான கட்டளை இக்கோயில் 1964-ல் ஏற்படுத்தப்பட்டிருப் பதாகக் கல்வெட்டொன்று பதிக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் பௌர்ணமியில் தொடங்கி இந்திர விழா 21 நாள்களுக்கு நடைபெறுகிறது. ஆடி அமாவாசையில் அன்னமளிப்பு, சித்திரை வைகாசி மாதங்களில் இயற்பகைநாயனார் பெயரில் தண்ணீர்ப் பந்தல் வைகாசியில் குமரகுருபரர் குருபூஜை, மார்கழியில் இயற்பகை நாயனாருக்கு ஐந்துநாள் விழா அதில் நான்காம் நாளிரவு இறைவன் காட்சி கொடுக்கும் ஐதீகம் முதலிய சிறப்புக் கட்டளைகளும் விழாக் களும் நடைபெறுகின்றன.

நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறும் இத்திருக் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள தலம் பல்லவனீச்சுரம். கவிராஜநாயகம் பிள்ளை என்பவரால் பாடப்பட்டுள்ள தலபுராணம் அச்சிடப் படவில்லை என்று தெரிகிறது.

'போய்க்காடே மணந்துறைதல் புரிந்தானும் பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாக உடையானும் விடையானும்
வாய்க்காடு முதுமரமே இடமாக வந்தடைந்த
பேய்க்காடல் புரிந்தானும் பெரியோர்கள் பெருமானே.'

(முதுமரம் - ஆலமரம் என்று மக்கள் வழக்கில் உள்ளது)

- சம்பந்தர்

Koviloor Digital Library

'தோடுலா மலர்கள்தூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செல்லு மஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவினாரே *(அப்பர்)*

'அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அற்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன் - நெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழு நீ சார்ந்து.'

(ஐயடிகள் காடவர்கோன்)

சீர்பூத்த வெண்ணிலவைத் திரைபூத்த
வரநதியைச் செந்தே னூற்று
மார்பூத்த மலரதனைக் கடுக்கைதனைச்
செஞ்சடிலத் தணியுங் கோவைக்
கார்பூத்த மேனியனும் மறைபூத்த
நாவினனும் காணா தோங்கும்
ஏர்பூத்த சின்மயச்சா யாவனத்தெம்
மிறையவனை இறைஞ்சல் செய்வாம்.

-சாயாவனப் புராணம் - தலபுராணம்

வில்லேந்திய வேலவர் துதி

'வினைசேரா சேர்ந்தனவும் மெல்ல விலகும்
நினைவுகள் தூயதாம் நெஞ்சில் - இனையன
எல்லாம் அருள்வான் எழில்மிகு சாய்க்காட்டு
வில்லேந்தி என்றே விளம்பு.'

-'வலிக்காலில்
பாய்க்காடு கின்ற வொரு பச்சைமுகில் பரவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சாயாவனேஸ்வரர் திருக்கோயில்
சாயாவனம் - காவிரிப்பூம்பட்டினம் அஞ்சல் 609 105
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.
மயிலாடுதுறை R.M.S.

தலம் - 17

Koviloor Digital Library

64/10. திருப்பல்லவனீச்சுரம்

காவிரிப்பூம்பட்டினம்

பூம்புகார்

சோழ நாட்டு (வடகரை)த் தலம்.

இன்று காவிரிப்பூம்பட்டினம் - பூம்புகார் என்று வழங்குகிறது. பல்லவமன்னன் வழிபாடு செய்த தலம். பட்டினத்தார், இயற்பகை நாயனார் ஆகியோரின் அவதாரப் பதி. சிலப்பதிகாரக் காப்பியம் தொடங்குவது இத்தலத்தில்தான்.

சீர்காழி, சிதம்பரம், திருச்சாய்க்காடு, மயிலாடுதுறை முதலிய பல ஊர்களிலிருந்து பூம்புகாருக்குப் பேருந்து வசதிகள் உள்ளன. பூம்புகாருக்குள் நுழையும்போது, எல்லையில் உள்ள 'கண்ணகி வளைவை'த் தாண்டியதும் சாலை ஓரத்திலேயே கோயில் உள்ளது.

இறைவன் - பல்லவனேஸ்வரர்

இறைவி - சௌந்தர நாயகி

தலமரம் - மல்லிகை, புன்னை. தற்போதில்லை.

தீர்த்தம் - காவிரி.

கோயிலுக்கு எதிரில் அகத்தியர் உண்டாக்கிய ஜான்னவி தீர்த்தம் - திருக்குளம் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது. ராஜகோபுரம் ஐந்து நிலைகளை யுடையது. கோபுர வாயிலைக் கடக்கும் போது இடப்பால் அதிகார நந்தி சந்நிதியுள்ளது. வாயிலைக்கடந்து வந்தால் வெளிச்சுற்றில் சூரியன், நான்கு சிவலிங்கத் திருமேனிகள், கைகூப்பிநின்ற நிலையில் பட்டினத்தார் சந்நிதி ஆகியவை உள்ளன. விநாயகரையடுத்துள்ள சுப்பிரமணியர் சந்நிதியில் பெருமான் உருவம் பெரியதாகவுள்ளது. அடுத்து கஜலட்சுமி சந்நிதியும், ஒரே சந்நிதிக்குள் சனிபகவான் பைரவர், சந்திரன் ஆகிய திருமேனிகள் வைக்கப்பட்டும் உள்ளன.

வெளிமண்டபத்தில் தலப்பதிகக் கல்வெட்டு உள்ளது. வலப்பால் அம்பாள் சந்நிதி, நேரே மூலவர் தரிசனம். பெரிய, பருத்த சிவலிங்க பாணத்துடன் கூடிய கம்பீரமான காட்சியைத் தந்தவாறு பல்லவ னேஸ்வரர் திகழ்கின்றார். உள்மண்டபத்தில் வலப்பால் தில்லை யமைப்பில் அமைந்துள்ள சபாபதி சபை தரிசிக்கத்தக்கது.

Koviloor Digital Library

5-4-1995-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறுகின்றன. பெருவிழா நடைபெற வில்லை. ஆடி மாதத்தில் பட்டினத்தார் திருவிழா பன்னிரு நாள்களுக்கு நகரத்தார்களால் சிறப்பாக நடத்தப்பெறுகின்றது.

இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்களே உள்ளன. ஒன்று கருவறையின் மேற்குச் சுவரிலும் இன்னொன்று கோயில் முற்றத்திலும் காணப்படுகிறது. மாறவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியனது 17-ஆம் ஆட்சியாண்டில் இராஜாதி ராஜ வளநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக் கோயிலுக்கு நிலம் வழங்கியதை முதற் கல்வெட்டு கூறுகிறது. சாலி வாகனசகம். கலி 4775 சகம் 1670 (கி.பி. 1757) ஜய வருடம் ராயரவுத்த மிண்ட நாயனார் முதலியோர் திருச்சாய்க் காட்டுச்சீனம், காவிரிப்பூம்பட்டினம் மாகாணம் பல்லவனீச்சரக் கோயிலுக்குத் திருப்பணிக்கும் வழிபாட்டிற்கும் நிலம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது அடுத்த கல்வெட்டு.

''எண்ணார் எயில்கள் மூன்றும் சீறும் எந்தைபிரான் இமையோர்
கண்ணாய் உலகம் காக்கநின்ற கண்ணுதல் நண்ணும் இடம்
மண்ணார் சோலைக் கோல வண்டு வைகலும் தேன் அருந்தி
பண்ணார் செய்யும் பட்டினத்துப் பல்லவனீச் சுரமே.''

(சம்பந்தர்)

-வாய்க்கமையச்
சொல்லவ னீச்சரங்கு தோயவும்பராம் பெருமைப்
பல்லவனீச்சரத்தெம் பாவனமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பல்லவனேஸ்வரர் திருக்கோயில்
(பல்லவனீச்சுரம்) - காவிரிப்பூம்பட்டினம்
பூம்புகார் அஞ்சல், சீர்காழி வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம் - 609 105.

Koviloor Digital Library

65/11. திருவெண்காடு



சோழநாட்டு (வடகரை)த் தலம்.

சுவேதாரண்யம், சுவேதவனம் என்றும் பெயருடைய தலம்.

மயிலாடுதுறையிலிருந்து பேருந்துவசதியுள்ளது. மயிலாடுதுறை - மங்கைமடம் செல்லும் நகரப் பேருந்து திருவெண்காடு வழியாகச் செல்கிறது. இந்திரன் வெள்ளையானை வழிபட்ட தலம். அச்சுத களப்பாளர் முலமாக மெய்கண்டார் அவதாரத்தை நாட்டுக்களித்து நலம் செய்த முக்குளநீர் உள்ள பதி.

பெரிய கோயில். சுற்று மதில்களுடன் நன்குள்ளது. நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மூன்று மூர்த்திகள், மூன்று தலமரங்கள், மூன்று அம்பிகைகள், மூன்று தீர்த்தங்கள் ஆகியவற்றைப் பெற்றுள்ள தலம். (சுவேதாரண்யர், அகோரர், நடராசர் - வட ஆலமரம் கொன்றை, வில்வம் - பிரம்மவித்யாநாயகி - துர்க்கை காளி- சூரிய சந்திர, அக்கினி தீர்த்தங்கள்.)

Koviloor Digital Library

இத்திருக்கோயிலில் உள்ள முக்குளத்தில் (வெண்காட்டுமுக்குள நீர்) நீராடி இறைவனை வழிபடின் நினைத்த செயல் கைகூடும் என்பது ஞானசம்பந்தர் அமுதவாக்கு.

'பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினை
வாயினவே வரம் பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையாவரவர் தம்மைத் தோயாவாந் தீவினையே''.

இதுதவிர பின்வரும் பழைய தாலாட்டுப் பாட்டும் இக்குளச் சிறப்பை விளக்கும் :-

''சங்குமுகம் ஆடி சாயாவனம் பார்த்து
முக்குளமும் ஆடி முத்திபெற வந்தானோ''.

ஊர் சிறியது - கோயில் பெரியது.

இறைவன் - சுவேதாரண்யேஸ்வரர், வெண்காட்டு நாதர்.

இறைவி - பிரமவித்யாநாயகி.

தலமரம் - வடஆலமரம்.

தீர்த்தம் - முக்குளம் (சூரிய, சந்திர, அக்கினி தீர்த்தங்கள்). இம்மூன்று திருக்குளங்களும் வெளிப்பிராகாரத்தில் உள்ளன. முதலில் அக்கினி தீர்த்தம், பிறகு சூரிய தீர்த்தம் இறுதியாக சந்திர தீர்த்தம் என்ற வரிசையில் நீராடுவர்.

மூவர் பாடல் பெற்ற தலம்.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சியளிக்கிறது. கிழக்கு வாயிலில் பக்கத்தில் தேவஸ்தானம் நடத்தும் மெய்கண்டார் பாடசாலை யுள்ளது. உள் இடம் பரந்த இடப்பரப்பு. உள்நுழைந்ததும் இடப்பால் முக்குளத்துள் ஒன்றான அக்கினி தீர்த்தம் உள்ளது. கரையில் விநாயகர், மெய்கண்டார் சந்நிதிகள் உள்ளன. பிராகாரத்தில் பக்கத்தில் அடுத்த திருக்குளமாகிய சூரியதீர்த்தமுள்ளது. கரையில் சூரியதீர்த்தலிங்க சந்நிதி உள்ளது. சுப்பிரமணியர் மண்டபம் ஆறுமுகர் சந்நிதி ஆகியவற்றை அடுத்து அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது. முகப்பில் 'புதன்' சந்நிதியும் எதிரில் அடுத்த தான 'சந்திர' தீர்த்தமும் உள்ளது. இத்தலம் புதனுக்குரிய தலமாதலின் புதனை வலம் வந்து வழிபட்ட பின்னரே இங்குத் தரிசனம் பூர்த்தியாகும். புதன் சந்நிதிக்குப் பக்கத்தில் முன் இல்லாத வில்வ மரம் உள்ளது.

Koviloor Digital Library

இதன் பக்கத்தில் பிரமபீடம் உள்ளது. வழிபட்ட பிரமனுக்கு அம்பாள் வித்தையை உபதேசித்தாள். ஆதலின் அம்பாளுக்குப் பிரமவித்யாம்பிகை என்று பெயர் வந்தது.

அம்பாள் சந்நிதிக்குள் வலப்பால் பள்ளியறை. நேரே அம்பாள் தரிசனம். உள்பிராகாரத்தில் **பிள்ளை இடுக்கி அம்பாள்** என்ற பெயரில் நின்ற திருமேனியொன்றும் சுக்கிரவார அம்மன் சந்நிதியும் உள்ளன.

சந்திரதீர்த்தத்தின் கரையில் வடால (வட ஆல) மரமுள்ளது. மிகப்பெரிய மரமாகத் தழைத்து விளங்குகிறது. ஆங்காங்கே விழுதுகள் ஊன்றி அவை அவை தனித்தனி மரமாகக் கிளைத்து விசாலமாகத் தழைத்துள்ளது. மரத்தினடியில் விநாயகரும், அவருக்கெதிரில் ருத்ரபாதம் என்னும் பெயரில் இருதிருவடிகள் செதுக்கப்பட்டும் உள்ளன. சந்திரன் வழிபட்ட லிங்கமும் உள்ளது. வெளிவலம் முடித்து, கொடிமரம் தொழுது உட்சென்றால் வலப்பால் உற்சவ மண்டபம் உள்ளது. பக்கத்தில் அலுவலகம். வாயில் முகப்பில் மேலே வண்ணச் சுதையில் திருக்கல்யாணக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. வாயிலைக் கடந்து உட்சென்றால் பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் தரிசனம். அறுபத்துமூவர் மூல உற்சவத் திருமேனிகள் இருவரிசைகளில் முன் பின்னாக அழகுறக் காட்சி தருகின்றன. (மூலத் திருமேனிகள் பின் வரிசையாகவும் உற்சவத் திருமேனிகள் முன் வரிசையாகவும் இரு வரிசைகளில் வைக்கப்பட்டுள்ளன). அடுத்துப் பத்திரகாளி சந்நிதி உள்ளது. (அகோரமூர்த்தி உள்ள தலமாதலின் இங்குப் பத்திரகாளி சந்நிதி உள்ளது.)

அதை அடுத்து வீரபத்திரர், இடும்பன், சுகாசனமூர்த்தி, நாக லிங்கம், விநாயகர், நால்வர், விஸ்வேஸ்வரர் முதலிய திருமேனிகள் ஒரு மண்டபத்தில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. கஜலட்சுமி தரிசனத்தையடுத்து இத்தலத்துக்குரிய சிறப்பு மூர்த்தியாகிய அகோரமூர்த்தி நின்ற மேனியராய், சூலத்தை இருகைகளிலும் சாய்த்துப்பிடித்து, எண்கரங்களுடையவராய்ச் சற்றுத் தலைசாய்த்து, முன்பின்னாகத் திருவடிகளை வைத்து மிக்க அழகாக - உண்மையி லேயே அகோரராக - அற்புதமூர்த்தியாகக் காட்சி தருகின்றார். கண்களுக்குப் பெருவிருந்தாகக் காட்சிதரும் அகோரமூர்த்தியை விட்டுப் பிரிந்து வரவே மனமில்லை. சலந்தரன்மகன் மருத்துவன். இவன் இறைவனை நோக்கித்தவம் செய்தான். இறைவன் காட்சிதந்து சூலத்தைத்தந்து அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தி அருள் செய்தார். ஆனால் மருத்துவனோ அதைத் தேவர் களைத் தவம் செய்யவொட்டாதவாறு துன்புறுத்தப் பயன்படுத்தினான்

Koviloor Digital Library

அறிந்த இறைவன் சினந்து நந்தியை அனுப்பினார். போர் தொடுக்கையில் மருத்துவன் மாயச் சூலத்தை அவர்மீது ஏவ, அச்சூலம் நந்தியின் உடலை ஒன்பது இடங்களில் துளைத்துவிட்டுப்போயிற்று. இஃதையறிந்த இறைவன் தாமே அகோரமூர்த்தியாக வடிவு கொண்டு வந்து அவனை அழித்தார் என்பது வரலாறு. அவ்வாறு அழித்தநாள் ஞாயிற்றுக்கிழமை பூரநட்சத்திரம். (மாசி மகத்து மறுநாள்) இதனால் இன்றும் இத்திருக்கோயிலில் ஞாயிற்றுகிழமைகளில் இரவு 10 மணிக்குமேல் (இரண்டாங்கால முடிவில்) அகோரமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. திருவெண்காடு வருவோர், ஞாயிறு நாளாக அமைந்தால் அன்றிரவு தங்கி, ஆலயத்தில் இவ்வழிபாடு நடைபெறும் சரியான நேரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு கட்டாயம் இவ்வழிபாட்டைத் தரிசிக்கவேண்டும். இவ்வரலாற்றையொட்டிச் சுவாமி சந்நிதிக்கு எதிரில் வெளியே உள்ள நந்தியின் உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருப்பதை இன்றும் காணலாம்.

மூலஅகோர மூர்த்தியின் பக்கத்தில் உற்சவ அகோர மூர்த்தி காட்சி தருகின்றார். அற்புதமான வேலைப்பாடு. காணக்காணத் தெவிட்ட வில்லை. திருவடியில் ஒருபுறம் மருத்துவன் இழிந்து தலைசாய்த்து விழும் அமைப்பும் மறுபுறம் நந்தியும் உள்ளது. காணத்தக்கது.

இவ்அகோர மூர்த்திக்கு இக்கோயிற் பெருவிழாவில் ஐந்தாம் நாள் அன்று சிறப்பு வழிபாடு செய்யப்பட்டு வீதிஉலா நிகழ்கிறது. இப்புறப்பாட்டின் போது (மாசிப்பூர அபிஷேகத்தின் போது) இம் மூர்த்திக்குச் செய்யப்படும் சிறப்புக்கள் பலப்பல. ஆயிரம் புட்டிகள் பன்னீர் அபிஷேகம், எண்ணற்ற ரோஜா மாலைகள், புறப்பாட்டின் போது அடிக்கொரு பட்டு சார்த்தும் சிறப்பு முதலியனவாக எண்ணற்ற சிறப்புக்கள்.

நடராசசபை தில்லையைப்போலச் செப்பறையில் அமைந்துள்ளது. உள்ளே உள்ள ஸ்படிகலிங்கத்திற்குத் தில்லையைப்போல் நாடொறும் பூசை நடைபெறுகிறது. சிதம்பர ரஹஸ்யமும் உள்ளது. பைரவரை யடுத்து, காசி துண்டீர விநாயகர், அஷ்டபுஜதுர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. துர்க்கை மேற்கு நோக்கியிருப்பது இங்கு விசேஷமானது. திருமணமாகாதோர் இச்சந்நிதியில் பிரார்த்தனை செய்து கொள்வது மரபாக இருந்து வருகின்றது.

வலம் முடித்துப்படிகளேறி முன் மண்டபம் அடைந்தால் நேரே மூலவர் காட்சி தருகிறார். உள்மண்டபத்தில் வலப்பால் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

மூலவர் சந்நிதி - சற்றுயர்ந்த பாணம். அழகான திருமேனி. வழிபடுவோர்க்கு வளமும் அமைதியும் நல்கும் சந்நிதானம். உட்புறச் சுவரில் தலப்பதிகக் கல்வெட்டுகள் உள்ளன. சைவ எல்லப்ப நாவலர் இவ் வூர்க்குத் தலபுராணம் பாடியுள்ளார். மாசிமகத்தில் பெருவிழா நடைபெறுகிறது. நாடொறும் ஆறுகால வழிபாடுகள் சுவேதாரண்யேசுவரருக்கு காமிகாகமத்தின்படியும் அகோர மூர்த்திக்கு காரணாகமத்தின் படியும் இங்குள்ள நடராசப் பெருமானுக்கு மகுடாகமத்தின்படியும் பூசைகள் நடைபெறுகின்றன.

''நாதன் நம்மை ஆள்வான் என்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கண்மேல்
ஏதம் தீரஇருந்தான் வாழும் ஊர்போலும்
வேதத் தொலியால் கிளிசொற் பயிலும் வெண்காடே''. *(சம்பந்தர்)*

''தூண்டுசுடர் மேனித்தூநீறாடிச்
சூலம் கையேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டுபொறியர வங்காதிற்பெய்து
பொற்சடைகள் அவைதாழப் புரிவெண்ணூலர்
நீண்டு கிடத்திலங்கு திங்கள்சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங்கொண்டார்
வேண்டு நடை நடக்கும் வெள்ளேறேறி
வெண்காடுமேவிய விகிர்தனாரே.'' *(அப்பர்)*

''காதலாலே கருதுதொண்டர் காரணத்தீராகி நின்றே
பூதம் பாடப் புரிந்து நட்டம் புவனியேத்த ஆடவல்லீர்
நீதியாக ஏழிலோசை நித்தராகிச் சித்தர்சூழ
வேதமோதித் திரிவதென்னே வேலைசூழ் வெண்காடனீரே.''
(சுந்தரர்)

அகோர மூர்த்தி துதி

''கருநிறமும் மணிமாலை புனையழகும்
வளையெயிறும் கவினைச் செய்ய
எரிசிகையும் நுதல்விழியும் நடைக்கோல
இணையடியும் இலகஎட்டுக்
கரநிலவ மணிபலகை வெண்டலை வாள்
கடிதுடியேர் சூலம்ஏற்று
வெருவ மருத்துவனையடர் அகோரசிவன்
துணைப்பதச்சீர் விளம்புவோமே''.
(சைவ எல்லப்ப நாவலர் - தலபுராணம்)

(சலந்தரன் மகன் - மருத்துவன்)

Koviloor Digital Library

-நல்லவர்கள்
கண்காட்டு நெற்றிக் கடவுளே யென்றுதொழ
வெண்காட்டின் மேவுகின்ற மெய்ப்பொருளே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்
திருவெண்காடு & அஞ்சல் - சீர்காழி வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம் - *609 114.*

66/12. கீழைத்திருக்காட்டுப் பள்ளி

ஆரண்யேசுரர் கோயில்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

ஊர் - கீழைத்திருக்காட்டுப்பள்ளி. கோயில் - ஆரண்யேசுரர் கோயில். மக்கள் வழக்கில் ஊர்ப்பெயர் 'கீழைத்திருக்காட்டுப்பள்ளி' என்றே வழங்குகிறது. இத்தலம் திருவெண்காட்டிற்கும், இலைய முதுகுளபுரத்திற்கும் இடையில் உள்ளது.

1) திருவெண்காட்டிலிருந்து இலையமுதுகுளபுரம் செல்லும் சாலையில் 1 1/2 கி.மீ.ல் இத்தலம் உள்ளது.

Koviloor Digital Library

2) சீர்காழி - தரங்கம்பாடி சாலையில் அல்லி விளாகம் என்னு மிடத்தில் திருவெண்காட்டிற்குப் பிரியும் சாலையில் வந்து இலையமுது குளபுரம் தாண்டி, கீழைத்திருக்காட்டுப்பள்ளியை அடையலாம்.

ஊரில் சாலையின் வலப்பால் சற்றுத் தள்ளி உட்புறமாகக் கோயில் உள்ளது. பழமையான சிறிய கோயில். விருத்திராசுரனைக் கொன்ற பழிநீங்க இந்திரன் வழிபட்ட தலம். நண்டு பூசித்த பதி.

இறைவன் - ஆரண்யசுந்தரேஸ்வரர்

இறைவி - அகிலாண்டநாயகி

தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

கோயிலுள் நுழைந்ததும் இடப்பால் பிரம்மேசர், முனியீசர் என்ற பெயரில் இரு சிவலிங்கங்கள் உள்ளன. அடுத்து, சுப்பிரமணியர், பைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன. கருவறைச் சுவரில் வெளிப் புறத்தில் ஓரிடத்தில் மன்னன் ஒருவன் சிவலிங்கத்தை வழிபடுவது போன்ற சிற்பமுள்ளது. விநாயகர் சந்நிதி நண்டு வழிபட்ட பெருமை யுடையது.

வலம் முடித்து வாயில் நுழைந்தால் மண்டபத்தின் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள. மேற்கு நோக்கிய சுவாமி சந்நிதியும் இடப்பால் அம்பாள் சந்நிதியும் ஒரு சேரத் தரிசிக்கத்தக்க வகையில் அமைந் துள்ளன.

மூலவர் ஆரண்யேஸ்வரர் சதுரபீட ஆவுடையாரில் காட்சி தருகிறார். அகிலாண்டேஸ்வரி அழகிய சிறிய திருமேனி. சிறப்பு விழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. நித்தியப்படி மட்டுமே விடாது நடந்து வருகின்றது.

''பிறையுடையான் பெரியோர்கள் பெம்மான்
பெய்கழல் நாடொறும் பேணிஏத்த
மறையுடையான் மழுவாள் உடையான்
வார்தரு மால்கடல் நஞ்சமுண்ட
கறையுடையான் கனலாடு கண்ணாற்
காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறையுடையான் குறட் பூதச்செல்வன்
குரைகழலே கைகள் கூப்பினோமே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-தண்காட்டிக்
கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள்சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஆரண்யசுந்தரேஸ்வரர் திருக்கோயில்
கீழைத்திருக்காட்டுப்பள்ளி - திருவெண்காடு அஞ்சல்
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம். 609 114.

67/13. திருக்குருகாவூர்.

திருக்கடாவூர்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

பசியோடிருந்த சுந்தரருக்கு இறைவன் கட்டமுதும் நீரும் தந்தருள் செய்து பசிபோக்கிய தலம்.

மக்கள் வழக்கில் திருக்கடாவூர் என்று வழங்குகிறது.

சீர்காழியிலிருந்து தென் திருமுல்லைவாயில் செல்லும் சாலையில் 6-ஆவது கி. மீ.ல் வடகால் என்னும் ஊரில், சாலையில் குருகாவூருக்குச் செல்லும் பாதை பிரிகின்றது. (வழிகாட்டிப் பலகையும் உள்ளது.) அப்பாதையில் சென்றால் 1 கி. மீ.ல் குருகாவூரையடையலாம். ஊர்க்கோடியில் கோயில் உள்ளது.

ஊர் - குருகாவூர். கோயில் - வெள்ளடை.

இறைவன் - சுவேதரிஷபேஸ்வரர், வெள்ளடையீஸ்வரர், வெள்ளடைநாதர்.

இறைவி - நீலோத்பல விசாலாட்சி, காவியங்கண்ணி.

தீர்த்தம் - பால் கிணறு. கோயிலுக்கு வெளியில் தனிச்சுற்று மதிலுடன் உள்ளது. தைமாதத்தில் அமாவாசை நாளில் இறைவன் எழுந்தருளி இங்குத் தீர்த்தம் கொடுப்பது சிறப்பானது.

Koviloor Digital Library

சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

கோபுரமில்லை. முகப்பு வாயிலைக் கடந்து உட்சென்றால் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. வெளிச் சுற்றில், விநாயகர், முருகன், அகத்தியர், சூரியன், மாரியம்மன் சந்நிதிகள் உள்ளன. முன் மண்டபத்தில் ஆறுமுகர் சந்நிதியும், நால்வர் சந்நிதிகளும் உள. உள்மண்டபத்தில் வலப்பால் நடராச சபை. நேரே மூலவர் தரிசனம். சதுர ஆவுடையார் - சிறிய பாணம் கொண்ட சிவலிங்கத் திருமேனி.

சுந்தரருக்கு இறைவன் உணவும் நீரும் தந்து பசியைப்போக்கிய அற்புதம் நிகழ்ந்த இடம் **'வரிசைப்பற்று'** என்றும், **'இடமணல்'** என்றும் மக்களால் சொல்லப்படுகிறது. அவ்விடம் இங்கிருந்து தென்திருமுல்லைவாயிலுக்குப் போகும் வழியில் 1 1/2 கி. மீ.ல் உள்ளது. அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்றும் உள்ளது.

கட்டமுதுதந்தவிழா சித்திரைப் பௌர்ணமியில் நடைபெறுகிறது. தைப்பூச நாளில் பஞ்சமூர்த்தி புறப்பாடு விசேஷமானது. முதலாம் குலோத்துங்கன், முதலாம் இராசேந்திரன், விக்கிரம சோழன் ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்களில் இத்தலத்து இறைவன் பெயர் (1) வெள்ளடை மகாதேவர் (2) குருகாவூர் வெள்ளடையப்பன் எனக் குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டுக்கள் கோயிலுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்திய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறும் இத்திருக் கோயில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் சேர்க்கப் பட்டு நிதியுதவி செய்யப்பட்டு, பொதுமக்களின் பேராதரவால் திருப் பணிகள் செய்யப்பெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

''சுண்ணவெண்ணீறணி மார்பில் தோல் புனைந்து
எண்ணரும் பல்கணம் ஏத்த நின்றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனி எம் பிஞ்ஞகனாரே.''

(சம்பந்தர்)

'பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றோ'.

(சுந்தரர்)

Koviloor Digital Library

-பார்காட்
டுருகாவூ ரெல்லாம் ஒளிநயக்க வோங்குங்
குருகாவூர் வெள்ளடை யெங்கோவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வெள்ளடையீஸ்வரர் திருக்கோயில்
திருக்கடாவூர் - வடகால் அஞ்சல்
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.
மயிலாடுதுறை RMS - *609 115*.

68/14. சீகாழி

சீர்காழி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் சீர்காழி என்றே வழங்குகின்றனர். சிதம்பரம் முதலிய பல ஊர்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சிதம்பரத்தை யடுத்துள்ள தலம் - புகைவண்டி நிலையம். திருஞானசம்பந்தரின் அவதாரப்பதி - ஞானப்பாலுண்டு அற்புதங்கள் நிகழ்த்திய தலம். முருகன், காளி, பிரமன், திருமால், குரு, இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, ஆதிசேஷன், ராகு, கேது, வியாசர் முதலியோர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இத்தலத்திற்குப் பன்னிரண்டு பெயர்களுண்டு.

1. பிரமன் வழிபட்டதால் - பிரமபுரம்.
2. இறைவன் மூங்கில் வடிவமாகத் தோன்றியதால் - வேணுபுரம்.
3. சூரனுக்குப் பயந்த தேவர்களுக்குப் புகலிடமாக விளங்கிய தலமாதலின் - புகலி.
4. குருவான வியாழன் வழிபட்டு, குருத்துவம் பெற்றமையால் - வெங்குரு.
5. பிரளய காலத்தில் இறைவன் உமையோடு சுத்தமாயையைத் தோணியாகக் கொண்டுவந்து தங்கியிருந்ததால் தோணிபுரம்.

Koviloor Digital Library

6. பூமியைப் பிளந்து சென்ற இரணியாக்கனைக் கொன்றவராக மூர்த்தி வழிபட்டதால் - **பூந்தராய்.**

7. தலைக்கூறாகிய ராகு பூசித்ததால் - **சிரபுரம்.**

8. புறா வடிவில் வந்த அக்கினியால் சிபி மன்னன் நற்கதியடைந் தமையால் - **புறவம்.**

9. சண்பைப் புல்லால்மாய்ந்த தம்குலத்தோரால் வந்தபழி தன்னைப் பற்றாதிருக்க, கண்ணபிரான் (திருமால்) வழிபட்டதால் - **சண்பை.**

10. தில்லைப்பெருமானுடன் வாதாடிய குற்றம்போக, காளி இங்கு வந்து வழிபட்டதால் - **ஸ்ரீகாளி (சீகாழி).**

11. மச்சகந்தியைக்கூடிய கொச்சையாம் பழிச்சொல் நீங்கப் பராசரர் பூசித்ததால் - **கொச்சை வயம்.**

12. மலத்தொகுதி நீங்குமாறு உரோமச முனிவர் வழிபட்டதால் - **கழுமலம்** எனவும் பெயர் பெற்றது.

கோயில் ஊர் நடுவே நான்கு கோபுர வாயில்களுடன் அழகுற விளங்குகிறது. கணநாத நாயனார் தொண்டுசெய்து வாழ்ந்த தலம்.

இறைவன் - பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டைநாதர்.

இறைவி - பெரியநாயகி, திருநிலைநாயகி.

தலமரம் - பாரிசாதம்.

தீர்த்தம் - பிரம தீர்த்தம் முதலாகவுள்ள 22 தீர்த்தங்கள்.

பிரமதீர்த்தமே பிறவற்றினும் மேலானது. இக்கரையில்தான் ஞானசம்பந்தர், ஞானப்பாலையுண்டார். **'திருமுலைப்பால்உற்சவம்'** இன்றும் சித்திரைப் பெருவிழாவில் இரண்டாம் நாள் விழாவாக நடைபெறுகின்றது. 'திருமுலைப்பால் உண்டார் மறுமுலைப்பால் உண்ணார்' என்பது இப்பகுதியில் சொல்லப்படும் மொழியாகும்.

இறைவன் திருமேனிகளுள் (1) அடிப்பாகத்திலுள்ள பிரமபுரீஸ்வரர் பிரமன் பூசித்தது - இலிங்கவடிவம். (2) இடைப்பகுதியிலுள்ள தோணியப்பர் (ஞானப்பால் தந்தவர்) குரு வடிவம். (3) சட்டை நாதர் சங்கமவடிவம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

(மாவலியிடம் சென்று மண்கேட்டுப் பெற்ற மகாவிஷ்ணு, செருக்குற்றுத்திரிய; வடுகநாதர் சென்று தம் திருக்கரத்தால் விஷ்ணுவை

Koviloor Digital Library

மார்பிலடித்து வீழ்த்தினார். இலக்குமி மாங்கல்ய பிச்சை கேட்க அவ்வாறே அருள்செய்ய மகாவிஷ்ணு உயிர்பெற்றெழுந்து வணங்கினார். தம் தோலையும் எலும்பையும் அணிந்து கொள்ளுமாறு அவர் வேண்ட, இறைவனும் எலும்பை கதையாகக்கொண்டு, தோலைச் சட்டையாகப் போர்த்து அருள் செய்தார். இவ்வடிவமே சட்டைநாதர் வடிவமாகும்.)

மூவர் பாடல் பெற்ற தலம். தருமையாதீனத் திருக்கோயில். மாணிக்கவாசகர், பூந்துருத்திகாடநம்பி, பட்டினத்தடிகள் நம்பியாண்டார் நம்பிகள், அருணகிரிநாதர், தருமையாதீனத்துப் பத்தாவது குருமூர்த்தி சிவஞானதேசிகர், திருவாவடுதுறை ஆதீனத்து எட்டாவது குருமூர்த்தி மாசிலாமணி தேசிகர், அருணாசலக்கவிராயர் முதலியோர் சீகாழியின் சிறப்பையும் ஞானசம்பந்தரின் பெருமையையும் பல படப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

கிழக்கு ராஜகோபுரம் பிரதானவாயில். இடப்பால் அலுவலகம் உள்ளது. விசாலமான உள்ளிடம். உள்வாயிலில் வெளிப்புறம் ‘தோடுடைய’ பதிகம் சலவைக்கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. வாயிலைக் கடந்து உள்ளேசென்றால் நேரே மூலவர் தரிசனம். விபூதிப்பட்டையும், பட்டும் சார்த்தித் தரிசிக்கும்போது கம்பீரமான தோற்றம் மனத்திற்கு நிறைவாக இருக்கிறது. மூலவர் - பிரமபுரீஸ்வரர். பக்கத்தில் திருஞானசம்பந்தர் சந்நிதி உற்சவத்திருமேனியுடன் (கையில் பாற்கிண்ணம் ஏந்தி நின்ற நிலையில்) உள்ளது. கருவறை வெளிச்சுவரில் ஞானசம்பந்தர் வாழ்க்கைச் சிற்பங்கள் ஓவியங்களாக எழுதப்பட்டுள்ளன. பிராகாரத்தில் அறுபத்து மூவர் சந்நிதி உள்ளது, சோமாஸ்கந்தர் சந்நிதி அழகாகவுள்ளது. மலைப்படிகளேறிக் கட்டு மலையின் மீது சென்றால், ஞானப்பாலைத்தந்தருளிய தோணியப்பரைத் தரிசிக்கலாம். இச்சந்நிதி கயிலாய அமைப்பிலுள்ளது. இங்குள்ள சாளரத்தில் நின்று பார்த்தால் (சற்றுச்சாய்வாக) பிரமதீர்த்தக் குளம் தெரிகிறது. ‘பிரமாபுரம் மேவியபெம்மான் இவன்’ என்று சம்பந்தர் சுட்டிக்காட்டிய அமைப்பு நினைவு கூரத்தக்கது.

அதற்கும் மேலேறிச் சென்றால் சட்டையப்பரைத் தரிசிக்கலாம். சட்டைநாதர் பெயரிலேயே தேவஸ்தானம் விளங்குகிறது. இம்மூர்த்திகரம் தனிச்சிறப்புவாய்ந்தது, இச்சந்நிதி உயரத்தில் உள்ளது. குறுகலான வழியே நுழைந்து, மரப்படிகளேறித் தரிசிக்க வேண்டும். ஆண்கள் சட்டையைக் கழற்றி விட்டு ஏறிச்சென்று தரிசித்துப் பின்னர் வந்து போட்டுக் கொள்ள வேண்டும். அவ்வாறே, பெண்கள்,

Koviloor Digital Library

தலையிலுள்ள பூவையெடுத்து வைத்துக் கொண்டு, சென்று தரிசித்து விட்டுப் பின்பு தலையில் சூடிக்கொள்ள வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.

வாரத்தில் ஒருநாள் - வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்குமேல் அர்த்தசாமம் முடிந்தவுடன் இதற்குப் புனுகுஎண்ணெய் சார்த்தி, நெய்யில் செய்த வடை, பாயசம் நிவேதனம் செய்யப்படுகிறது. நித்தியப்படி நெய்தீபமே ஏற்றப்படுகிறது.

இப்பெருமானுக்குச் சட்டையப்பர், சட்டைநாதர், வடுகநாதர் எனப்பல பெயர்களுண்டு. சட்டைநாதரைப் தரிசித்துக் கீழிறங்கி வலமாக வரும்போது மூங்கில்கன்றும் அதன்பக்கத்தில் பாரிசாதமும் உள்ளதைக் காணலாம். அடுத்துத் தேவேந்திரலிங்கம், நவக்கிரகம், பிரமபுரீஸ்வரலிங்கம் உள்ளன. பிரமதீர்த்தக் குளம் முதன்மை வாய்ந்த தீர்த்தமாகும். முன்னால் வளைவு போடப்பட்டு, அதன் இருபுறங்களிலும், பிரமன் வழிபடுவது, தந்தையாகிய சிவபாத இருதயருக்கு ஞானசம்பந்தர் தோணியப்பரைச் சுட்டுக் காட்டுவது, அம்பிகை பொற்கிண்ணத்தில் ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அளிப்பது முதலியவை சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. பிராகாரத்தில் திருஞானசம்பந்தர் மூலச்சந்நிதி உள்ளது. அம்பாள் சந்நிதி - நின்ற திருக்கோலம் - மனநிறைவான தரிசனம். இச்சந்நிதி உள்மண்டபத்தில் சலவைக் கற்களில் திருஞானசம்பந்தர் பதிகமும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியுள்ள சீகாழிக் கோவைப் பாடல்களும் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன.

சீகாழி அருணாசலக் கவிராயர் தலபுராணம் பாடியுள்ளார். 'திருக்கழுமல மும்மணிக்கோவை' பட்டினத்தடிகளால் பாடப்பட்டது. ஞானசம்பந்தர் மீது மும்மணிக் கோவை, திருச்சண்பை விருத்தம், திருத்தொகை திருவந்தாதி, திருவுலாமாலை, திருக்கலம்பகம் முதலிய பிரபந்தங்களை நம்பியாண்டார் நம்பிகள் பாடியுள்ளார்.

காழிக்குமரவேளைச் சிறப்பித்துப் பாடியுள்ள திருப்புகழும் உள்ளது. இத்தலத்தில் வாழ்ந்த மகான்களில் 1. உலகத் தீமைகளைப் பார்க்க விரும்பாது மச்சைவிட்டு இறங்காமல் மேலேயே தங்கி வாழ்ந்து, மறைஞானசம்பந்தரிடம் அருளுபதேசம் பெற்ற மச்சுச்செட்டியார் 2. 'சிவப்பிரகாசம்' நூலுக்குக் கொளுச் சூத்திரம் எழுதியவரும் காழிப் பழுதை கட்டிச் சிற்றம்பலநாடிப் பண்டாரம் என்னும் பெயர் உடையவருமான சீகாழிச் சிற்றம்பல நாடிகள் 3. 'ஒழிவில் ஒடுக்கம்' நூலைப்பாடிய சீகாழிகண்ணுடைய வள்ளலார் 4. 'காழிப்புராணம்'

Koviloor Digital Library

'காழிப்பள்ளு', 'காழிஅந்தாதி' 'இராமநாடகக் கீர்த்தனை' முதலிய நூல்களைப் பாடிய சீகாழி அருணாசலக்கவிராயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

இத்திருக்கோயிலில் திருஞானசம்பந்தருக்கு நித்திய வழிபாடும் தைஅமாவாசை, வைகாசி மூலம், ஐப்பசி சதயம் ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடுகளும்; மலை மேல் உள்ள பெரிய நாயகருக்கு நாடொறும் நான்கு கால பூஜைகளும் நடைபெறுகின்றன. திருநிலை நாயகிக்கு ஆடிப்பூரம், நவராத்திரி காலங்களில் சிறப்பு வழிபாடுகள் உண்டு.

இரண்டாம், மூன்றாம் குலோத்துங்கன், வீரராசேந்திரன், இராசகேசரி வர்மன், கிருஷ்ண தேவராயர் ஆகிய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றின் இறைவன் பெயர் 1. திருக்கழுமலம் உடையார் 2. திருத்தோணிபுரம் உடையார் எனவும்; ஞானசம்பந்தரின் பெயர் ஆளுடைய பிள்ளையார் என்றும் குறிக்கப் பெறுகின்றது. தலத்தின் பெயரை 'ராஜராஜவள நாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம்' என்று கல்வெட்டு குறிப் பிடுகின்றது.

இத்தலத்தில் உள்ள; திருஞானசம்பந்தர் அவதாரம் செய்த இல்லம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களால் நினைவாலயமாகப் போற்றப்பட்டு வருகின்றது.

'தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசிஎன் உள்ளம்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே'.

''வண்டார் குழலரிவை யொடு பிரியாவகை பாகம்
பெண்தான் மிகவானான் பிறைச் சென்னிப் பெருமானூர்
தண்டாமரைமல ராளுறை தவளந்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே''.

(சம்பந்தர்)

'சிந்தித்து எழுமனமே நினையாமுன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்க வல்லானைப் பசுபதியைச்
சந்தித்த காலமறுத்து மென்றெண்ணி யிருந்தவர்க்கு
முந்தித் தொழுகழல் நாடொறும் நந்தமையாள் வனவே''.

(அப்பர்)

Koviloor Digital Library

'மற்றொருதுணையினி மறுமைக்குங் காணேன்/வருந்தலுற்றேன்
மறவாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன்/துணையென்று நான்
தொழப்பட்ட ஒண்சுடரை
முத்தியு ஞானமும் வானவரறியா/முறைமுறை பலபல
நெறிகளுங்காட்டிக்
கற்பனைகற்பித்தகடவுளை யடியேன்/கழுமல வளநகர்க்கண்டு
கொண்டேனே.'

(சுந்தரர்)

'பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவி யெனுந்தோல் தோணி கண்டீர் - நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.'

(நம்பியாண்டார் நம்பி - மும்மணிக்கோவை)

தலபுராணம்

பிரமபுரீசுவரர்

நீர்பூத்த பேரொளியாய் உயிர்க்குயிராய் அகண்டிதமாய்
நிறைவாய் நீங்காப்
பேர்பூத்த குணம்குறிகள் இகந்தபழ மறைக்கொழுந்தாய்ப்
பெருமை சான்ற
பார்பூத்த பரையினொடு கலந்துகுரு ஆதிமும்மைப்
படிவ மாகிச்
சீர்பூத்த காழிநகர் அமர்ந்தபிர மேசனையாம்
சிந்தை செய்வாம்.

திருநிலைநாயகி

ஒருநிலையே உலகனைத்தும் பொருள்நிலைசேர் வெண்டிருநீ(று)
உயர்ந்து வேதம்
கருநிலையால் வளர்ந்தோங்க இரங்குமரு மறைக்குழலி
தன்பால் அன்பால்
பெருநிலைசேர் முலைக்கண்ணும் சிலைக்கண்ணும் இரங்கியஎம்
பிராட்டி அன்பர்
கருநிலைதீர்த் தருள்காழித் திருநிலைநா யகிதுணைத்தாள்
கருத்துள் வைப்பாம்.

Koviloor Digital Library

சட்டை நாதர்

துங்க மாமணித் தூணில்வந் திரணியன்
தோள்வலி தனைவாங்கும்
சிங்க வேற்றுரி அரைக்கசைத் துலகெலாம்
தேர்ந்தளந் தவன்மேனி
அங்கம் யாவும்ஓர் கதையதாய்க் கொண்டதள்
அங்கியாப் புனைகாழிச்
சங்க வார்குழைச் சட்டைநா யகன்துணைத்
தாமரைச் சரண்போற்றி

திருவாவடுதுறை ஆதீனம் எட்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் இயற்றியருளிய

திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்

கோலொன்று கொண்டகில வலயம் புரக்கவரு
கோமாறன் மேவிய தமிழ்க்
கூடலிற் சமண்மூகர் திருமடத் திட்டஎரி
கொற்றவர் பற்ற மொழியா
மாலொன்று மங்கையர்க் கரசியார் படுதுயரின்
வலிகண்டு சென்று தவிர
வஞ்சப் பெருங்கூனும் வெப்பந் தவிர்த்தருளு
மதுரவா சகமதகு பாய்
காலொன்று மாநதி பரந்துவரு கழனியிற்
கலையெனக் குவளை களைவார்
கண்டுவெரு வித்தங்கள் கைநெரித் தருகுமிடை
கன்னலங் காடு மறையச்
சேலொன்று விளையாடு சீகாழி நாடாளி
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத் தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே.

சிந்துற் றெழுமாமதி அங்கித் - திரளாலே
தென்றற்றரு வாசமிகுந்துற் - றெழலாலே
அந்திப் பொழுதாகிய கங்குற் - றிரளாலே
அன்புற்றெழு பேதை மயங்கித் - தனியானாள்
நந்துற்றிடு வாரியை மங்கத் - திகழாயே
நஞ்சத் தொளிர் வேலினையுந்திப் - பொருவேளே
சந்தக்கவி நூலினர் தஞ்சொற் - கினியோனே
சண்பைப்பதி மேவிய கந்தப் - பெருமாளே. *(திருப்புகழ்)*

Koviloor Digital Library

-அருகாத
கார்காழில் நெஞ்சக் கவுணியர்க்குப் போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்
அ/மி. சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்
சீர்காழி & அஞ்சல் - 609 110
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

69/15. திருக்கோலக்கா

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

சீர்காழிக்குப் பக்கத்தில் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. பெரிய கோயில். திருத்தாளமுடையார் கோயில் என்றழைக்கப்படுகிறது. ஞானசம்பந்தரின் யாத்திரையில் இதுவே முதல்தலம். கைகொட்டிப் பாடிய ஞானசம்பந்தருக்கு இறைவன், திருவைந்தெழுத்து பொறித்த தாளத்தையருள, அதற்குத் தெய்விகஓசையை இறைவி தந்து அருள்செய்த தலம். கோயில்வரை வண்டிகள் செல்லும். சற்றுகுறுகலான பாதை:

இறைவன்- சப்தபுரீஸ்வரர், தாளேஸ்வரர், திருத்தாளமுடையார்

இறைவி - தொனிப்ரதாம்பாள், ஓசை கொடுத்த நாயகி.

தலமரம் - கொன்றை, தீர்த்தம் - ஆனந்ததீர்த்தம். கோயிலின் எதிரில் உள்ளது.

அகத்தியர், கண்வர் முதலியோர் வழிபட்டது. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. (திருவருளைப் பெற்ற ஞானசம்பந்தர் அன்றைய மறுநாள் சென்று தோணியப்பரைத் தொழுது அங்கிருந்தும் கோலக்கா எழுந்தருளினார். ஆரூர் வருமாறு பணித்த இறைவன் கட்டளையை மேற்கொண்ட சுந்தரர் தில்லையிலிருந்து புறப்பட்டுச் சீர்காழியை மிதிக்க அஞ்சி (சம்பந்தரின் அவதாரத் தலமாதலின்) எல்லையில் வலமாகவந்து தோணியப்பரைத் தொழுது அங்கிருந்து திருக்கோலக்கா சென்று தொழுது பின்பு திருப்புன்கூர் வழியே பயணம் தொடர்ந்தார்).

Koviloor Digital Library

கோயில் புதுப் பொலிவுடன் திகழ்கிறது. எதிரில் திருக்குளம் - ஆனந்ததீர்த்தம், முகப்பு வாயிலின் மேற்புறத்தில் வண்ணச் சுதையில் ரிஷபாருடர் தரிசனம் - உள்நுழைந்ததும் வலப்பால் வாகன மண்டபம். நுழையும்போது நால்வர், அதிகார நந்தி சந்நிதிகள் உள. பிராகாரத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், மகாலட்சுமி, சனிபகவான், பைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

உள் மண்டபத்தில் வலப்பால் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நடராச சபை உள்ளது. நேரே மூலவர் தரிசனம். கம்பீரமான இலிங்கத் திருமேனி. அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாக வுள்ளது - நின்ற திருமேனி. ஞானசம்பந்தர் பொன் தாளத்தை இரு கைகளிலும் ஏந்தி நிற்கும் உற்சவத் திருமேனி தரிசிக்கத்தக்கது. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

பிற்காலத்தில் இப்பகுதியில் தன் ஊமை மகன்பேசும் ஆற்றலைப் பெறவேண்டும் என்று, பிரார்த்தித்துக் கொண்ட தாய்ஒருத்தி, அவ் வாறே இறையருளால் தன் மகன் பேசும் வல்லமை பெற, மகிழ்ந்து, கோயிலுக்குத் தன் காணிக்கையாகச் செய்து தந்துள்ள பொற்றாளம் கோயில் உள்ளது.

தேவகோட்டை வைரவன் செட்டியார் இத் திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் ஆவார். இவர் பாட்டனார்தான் இக்கோயிலைச் செம்மையாகக் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. நன்கு பராமரிக்கப் பட்டு வரும் இத்திருக்கோயிலில் நாடொறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. சீர்காழியில் திருமுலைப்பால் உற்சவம் நடை பெறும்போது இங்குத் தாளம் வழங்கும் ஐதீகவிழா நடைபெறுகிறது. கார்த்திகைச் சோமவாரங்கள், நவராத்திரி, சஷ்டி, சிவராத்திரி, பிரதோஷ காலங்கள் முதலிய சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

''மடையில் வாளைபாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவம் என் கொலோ.''

(சம்பந்தர்)

''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பு
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்கு இரங்குந்
தன்மையாளனை யென் மனக்கருத்தை

Koviloor Digital Library

ஆளும் பூதங்கள் பாட நின்றாடும்
அங்கணன்தனை எண்கணம் இறைஞ்சுங்
கோளிலிப் பெருங்கோயிலுள்ளானைக்
கோலக்காவினிற் கண்டு கொண்டேனே'' *(சுந்தரர்)*

-''ஓர்காழிப்
பாலற்கா அன்று பசும்பொற்றாளங் கொடுத்த
கோலக்கா மேவிய கொடையாளா.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சப்தபுரீஸ்வரர் திருக்கோயில்
திருக்கோலக்கா-சீர்காழி அஞ்சல்
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம் 609 110.

70/16. புள்ளிருக்குவேளூர்

வைத்தீஸ்வரன் கோயில்

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

சீர்காழிக்கு அடுத்துள்ள தலம். சீர்காழிக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ள ஊர். கோயில் சாலையோரத்திலேயே உள்ளது.

புள் (சடாயு). இருக்கு (வேதம்) வேள் (முருகன்) ஊர் (சூரியன்) என்ற நால்வரும் வழிபட்டமையால் புள்ளிருக்கு வேளூர் என்று பெயர் பெற்றது. சடாயு வழிபட்டதால் சடாயுபுரி என்றும், வேதம் பூசித்ததால் வேதபுரி என்றும், கந்தன் பூசித்ததால் கந்தபுரி என்றும், சூரியன் பூசித்தவூர் பரிதிபுரி என்றும், அங்காரகன் வழிபட்ட தலம் அங்காரகபுரம் என்றும், அம்பிகை வழிபட்டதால் அம்பிகாபுரம் என்றும், இறைவன் இத்தலத்து மந்திரமும் மருந்தும் ஆகி உயிர்களின் வினைகளைப் போக்குவதால் வினைதீர்த்தான் கோயில் என்றும் இதற்குப் பல பெயர்களுண்டு.

ஊர் நடுவே கோயில். நாற்புறமும் உயர்ந்த சுற்று மதில்கள். கோயிலின் கிழக்கில் வைரவரும், மேற்கில் வீரபத்திரரும், தெற்கில் கற்பக விநாயகரும், வடக்கில் காளியும் இருந்து இக்கோயிலைக்காவல் புரிகின்றனர். இதைப் பின்வரும் தனிப்பாடல் உணர்த்தும் :-

தெற்கிற்கணேசன் திகழ்மேற்கிற் பைரவரும்
தொக்க வடக்கில் தொடர்காளி - மிக்ககிழக்
குள்ளிருக்கும் வீரனையும் உற்றுப் பணிந்துய்ந்தோம்
புள்ளிருக்கும் வேளூரிற் போய்.''

சூரபத்மாவின் மார்பைப் பிளக்க முருகப்பெருமான் வேல் வாங்கிய தலம். இங்கு அங்காரகனுக்குப்பெருமை அதிகம் - அங்காரக க்ஷேத்ரம். உயிர்களின் நோய்களைப் போக்கும் பொருட்டு உமாதேவி, தையல் நாயகியாய் வடிவுகொண்டு தைல பாத்திரமும் சஞ்சீவியும் வில்வமரத்தடி மண்ணும் கொண்டு தம்முடன் வர இறைவன் எழுந்தருளி மருத்துவராகயிருந்து அருள்செய்த சிறப்புடைய தலம்.

இறைவன் - வைத்தியநாதர்

இறைவி - தையல்நாயகி

தலமரம் - வேம்பு

தீர்த்தம் - சித்தாமிர்த குளம். இங்குள்ள முருகப்பெருமான் - செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதி மிகச் சிறப்பு வாய்ந்தது.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

சித்தாமிர்த தீர்த்தம் என்பது சித்தர்கணம் இறைவர் திருமுடியில் அமிர்தத்தால் அபிஷேகித்தபோது அவ்வமிர்தம் வந்து இதில்

Koviloor Digital Library

கலந்தமையால் பெற்றபெயர் ஆகும். இத்திருக்குளத்தில் தவளை இருப்பதில்லை.

கிழக்கு கோபுர வாயிலின் முன்புறம் இரும்புப் பந்தல் போடப் பட்டுள்ளது. பேருந்திலிருந்து இறங்குவோர் இவ்வழியே கோயிலுள் புகுவர். வாயிலைக் கடந்ததும் வலப்பால் அலுவலகம், இடப்பால் வேம்பு தலமரம் உள்ளது. இதனடியில் ஆதிவைத்தியநாதர் தரிசனம் தருகிறார். எதிரில் வீரபத்திரர் சந்நிதி உள்ளது. உள்வாயிலைக் கடந்ததும் தண்டபாணி சந்நிதி. அடுத்து இடப்பால் சித்தாமிர்தகுளம் உள்ளது. காமதேனு இறைவன்மீது பொழிந்து அபிஷேகித்த பால் வழிந்தோடி வந்து கலந்தமையால் இதற்கு கோக்ஷீர தீர்த்தம் என்பது மற்றொரு பெயர்.

இவ்வாலயத்துள் தரப்படும் சந்தனக்குழம்புருண்டை (மருந்துப் பொட்டலம் என்று சொல்வார்கள்) உட்கொண்டு, சித்தாமிர்த குளத்து நீரைப் பருகி வந்தால் வியாதிகள் நீங்கும் என்பது இன்றும் கண்கூடு.

விநாயகரையடுத்து, கிருத்திகை அபிஷேக மண்டபம் உள்ளது. இங்குத்தான் கிருத்திகைதோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குச் சிறப்பான அபிஷேகம் நடைபெறும். வாழ்வில் ஒவ்வொருவரும் காணவேண்டிய அபிஷேகமாகும் இஃது. சுவாமி சந்நிதிக்கு நேரில் இரு கொடிமரங்கள் உள்ளன. ஆடிப்பூர அம்மன் சந்நிதி தொழுது இடப்புறமாகத் திரும்பி உள்வலமாக வரும்போது சுவர்களில் அஷ்டலட்சுமி வண்ண ஓவியங்களைக் கண்டு மகிழலாம். மூலவர் வைத்தியநாதர், மிகப்பெரிய துவாரபாலகர் திருவுருவங்கள். சடாயுவின் உருவமும் உள்ளது.

சிறிய சிவலிங்கத் திருமேனி. மந்திரமும், தந்திரமும், மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள வல்லானாகிய வைத்தியநாதப் பெருமானைக் கண்ணாரத் தரிசிக்கின்றோம். பக்கத்தில்தான் இத்தலத்தில் உள்ள சிறப்பு மூர்த்தமாகிய ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசாமியின் சந்நிதி உள்ளது. குமரகுருபரர் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ் பாடி இப்பெருமானைப் போற்றியுள்ளார். கஜலட்சுமி சந்நிதியையடுத்துத் திருமுறைப் பேழையுள்ளது. நடராச சபையில் சிவகாமியுடன் மாணிக்கவாசகரும் காரைக்காலம்மையாரும் உள்ளனர். ரிக் முதலிய நால்வேதங்கள், அமராவதி, கைலாசநாதர், மீனாட்சி சுந்தரேஸ்வரர், விசுவநாதர் முதலிய பெயர்களில் அமைந்துள்ள சிவலிங்க மூர்த்தங்களும்; சஹஸ்ரலிங்கமும் வரிசையாகவுள்ளன.

Koviloor Digital Library

இத்தலத்தில் (கோயிலில்) நவக்கிரகங்கள் ஒரே வரிசையாக உள்ளன. பைரவர் சந்நிதியடுத்து இராமர், சடாயு, சுப்பிரமணியர், சூரியன், அங்காரகன் ஆகியோர் வழிபட்ட லிங்கங்கள் வரிசையாக உள்ளன. தன்வந்திரி எழுந்தருளியுள்ளார். சுப்பிரமணியர், ஐயனார் சந்நிதிகளையடுத்து அறுபத்துமூவர் உற்சவமூர்த்தங்கள் வரிசை யாக அழகாகவுள்ளன. முடிவில் சடாயுவின் உற்சவமூர்த்தமும் அங்காரகனின் உற்சவமூர்த்தமும் உள்ளன. அங்காரக தோஷ நிவர்த்தி வேண்டுவோர் இம்மூர்த்தத்திற்கு அருச்சனை செய்கின்றனர். வாரந் தோறும் செவ்வாய்க்கிழமை மாலையில் ஆட்டு வாகனத்தில் அங்காரகன் புறப்பாடு பிராகார அளவில் நிகழ்கிறது. உற்சவ விநாயகர், வலஞ்சுழி விநாயகர், சோமாஸ்கந்தர் ஆகிய சந்நிதிகளைத் தரிசித்த வாறே தையல்நாயகித் தரிசனத்திற்குச் செல்லலாம். இறைவனுடன் தைலபாத்திரத்தை ஏந்தி அம்பிகை உடன் வந்தமையால் தைலாம்பாள் என்றும் அம்பாளை வழங்குகின்றனர். நிற்கும் திருக்கோலம் - ஆம்! வழிபடுவோர் உள்ளத்தில் மறையாமல் நிற்கும் திருக்கோலமாகவே உள்ளது.

தலப்பதிகங்கள் சலவைக் கற்களில் பொறித்துப் பதிக்கப் பட்டுள்ளன. பத்திரகாளி சந்நிதி தரிசிக்கத் தக்கது. மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படும் இத்திருக்கோயில் தருமையாதீனத்தின் அருளாட்சிக் குட்பட்டது. ஆதீனத்தின் கட்டளைத்தம்பிரான் ஒருவர் இங்கிருந்து மேற்பார்வை செய்து வருகின்றார். இஃது **வேளூர் தேவஸ் தானம்** என்றழைக்கப்படுகிறது. வடுகநாத தேசிகர் என்பவர் **வேளூர்த் தலபுராணம்** பாடியுள்ளார். அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடலும் உள்ளது. தருமையாதீனத்தின் 10 ஆவது குருமூர்த்தியாகிய சிவஞான தேசிகர் பாடியுள்ள செல்வமுத்துக்குமாரசுவாமி திருவருட்பா, குமரகுருபரர் பாடியுள்ள முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ், படிக்காசுத் தம்பிரான் பாடியுள்ள வேளூர்க்கலம்பகம், சிதம்பர முனிவர் அருளிய க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ், காளமேகப் புலவரின் தனிப்பாடல்கள், முதலியவைகளிலிருந்து இத்திருக்கோயிலின் - மூர்த்திகளின் பெருமைகளையறிந்தின்புற்றுத் தொழுதுய்யலாம்.

இக்கோயில் விளக்கு அழகுக்குப் பெயர் பெற்றது. 'வினை தீர்த்தான் கோயில் விளக்கழகு' என்பது பழமொழி. நாடொறும் காமிகஆகம விதிப்படி ஆறுகால வழிபாடுகள் நடைபெறுகின்றன. பங்குனிப் பெருவிழா சிறப்புடையது. செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு தை மாதத்தில் திருவிழா நடைபெறுகிறது. மாதந்தோறும் வரும் கார்த்திகை நாள்கள், கந்தசஷ்டி போன்ற விசேஷ காலங்களில்தான்

Koviloor Digital Library

செல்வமுத்துகுமாரசுவாமிக்கு அபிஷேகங்கள் நடைபெறும். மற்றைய நாள்களில் செல்வமுத்துக்குமாரசுவாமியின் ஆன்மார்த்த பூஜா மூர்த்தியான ஸ்ரீ முத்துலிங்கத்திற்குத்தான் அபிஷேகம் நடைபெறும்.

இதுதவிர, இக்கோயிலில் உள்ள மற்றொரு சிறப்பு:-

அர்த்தசாம பூஜையில் செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு வழிபாடு நடந்த பிறகே சுவாமிக்கு வழிபாடு நடைபெறும். இதற்குப் புழுகாப்பு என்று பெயர். இப்புழுகாப்பு தரிசனம் இங்குச் சிறப்புடையது.

''கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைப் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் 'புள்ளிருக்குவேளூரே.''

(சம்பந்தர்)

''பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித்தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்உள்ளத்துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின்பாலை
அண்ணிக்கும் தீங்கரும்பை அரனையாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.''

(அப்பர்)

உரத்துறை போதத் தனியான-
உனைச்சிறி தோதத் தெரியாது;
மரத்துறை போலுற் றடியேனும் -
மலத்திருள் மூடிக் கெடலாமோ;
பரத்துறை சீலத் தவர்வாழ்வே-
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே;
வரத்துறை நீதர்க் கொருசேயே-
வயித்திய நாதப் பெருமாளே.

(திருப்புகழ்)

வாராட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென
மணிமுறுவ னிலவுகாலும்
மழலைவாய் முத்துண்டு முச்சிமோந் துந்திரு
மடித்தலத் தினிலிருத்திப்
பாராட்டி யுந்தமது கண்மணிப் பாவைநின்
படிவமா கக்காட்டியிப்

Koviloor Digital Library

பாலரொடும் விளையா டெனப்பணித் துந்தங்கள்
 பார்வைகளி யாடச்செயும்
தாராட்டு மதிமுடித் தீராத வினைதீர்த்த
 தம்பிரா னுந்தம்பிரான்
தழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற
 தையனா யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேனா பதிக்கடவுள்
 சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
 சிறுதே ருருட்டியருளே.

(முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்)

அன்னைசொற் கொருசெவி யையர்சொற் கொருசெவி
 யம்மான் றுதிக்கொருசெவி
யானைசொற் கொருசெவி வீரர்சொற் கொருசெவி
 அயன்றுதிக் கொருசெவிவிணோர்
மன்னர்சொற் கொருசெவி வள்ளிசொற் கொருசெவி
 வான்வனிதை சொற்கொருசெவி
மறைதுதிக் கொருசெவி யடியர்சொற் கொருசெவி
 வல்லசுரர் சொற்கொருசெவி
பன்னிரண் டுங்கொடுத் தென்சொல்கே ளாமற்
 பாராமுகம தாயிருந்தால்
பாவியேன் மெலிவுகுறை யெவர்செவியி லேற்றிப்
 படுந்துயர் களைந்துகொள்வேன்
முன்னமறை நாலும்வந் துன்னுபுள் ளூரனே
 முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
 முத்துக்கு மாரகுருவே.

(செல்வமுத்துக்குமாரசாமி திருவருட்பா)

செவிகளொரு பன்னிரண் டுங்கேட்க அயனையுந்
 தேவர்பணி யுங்குருவையும்
தேவர்கோ னென்றசத மகனையும் செந்தமிழ்சொல்
 தென்பொதிய மலைமுனியையும்
புவியினக் கீரரையும் ஔவையையும் நீமுன்
 புகழ்ந்தபொய் யாமொழியையும்
புகழ்கொண்ட அருணகிரி நாதரையும் வெகுசித்தர்
 போற்றுகரு வூராரையும்
குவியுமன மறாச்சிறு புலவரையும் வருபுலவர்
 கொண்டாடு நல்லபகழிக்

Koviloor Digital Library

கூத்தரையும் வளர்காசி வாழுஞ் சிவானந்த
குமரகுரு பரமுனியையும்
கவிசொலன் றேயடி யெடுத்துக்கொ டுத்தவன்
கனிவாயின் முத்தமருளே
கந்தனே புள்ளூரில் வந்தமுத் துக்குமர
கனிவாயின் முத்தமருளே.

(க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்)

-கோலக்கா

உள்ளிருக்கும் புள்ளிருக்கு மோதும் புகழ் வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய்.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வைத்திய நாதப்பெருமான் திருக்கோயில்
வைத்தீஸ்வரன் கோயில் & அஞ்சல் 609 117
சீர்காழி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்
மயிலாடுதுறை R.M.S.

Koviloor Digital Library

71/17. திருக்கண்ணார் கோயில்

குறுமாணக்குடி

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் குறுமாணக்குடி என்று வழங்குகிறது. வைத்தீஸ்வரன் கோயில் - மயிலாடுதுறை பேருந்துப் பாதையில் 'பாகசாலை' என்னும் கைகாட்டி உள்ள இடத்தில், அதுகாட்டும் வழியில் (இடப்பக்கமாக) 3 கி.மீ. சென்றால் 'கண்ணாயிரமுடையார் கோயில்' என்னும் திருக்கண்ணார் கோயிலை அடையலாம். நெடுஞ்சாலையில் கைகாட்டியின்கீழ் கோயிலின் பெயர்ப் பலகையும் (சிமெண்டில்) வைக்கப்பட்டுள்ளது. கோயில்வரை கார், வேன், பேருந்து செல்லும். பெரிய கோயில். சுற்று மதில், கோயில் நன்கு உள்ளது. வருமானமின்றித் தவிக்குங் கோயில்களுள் இதுவும் ஒன்றாகிறது.

இறைவன் - கண்ணாயிரமுடையார், கண்ணாயிரநாதர், சஹஸ்ரநேத்ரேஸ்வரர்.

இறைவி - முருகுவளர்கோதை, சுகந்தகுந்தளாம்பிகை

தலமரம் - சரக்கொன்றை

தீர்த்தம் - இந்திர தீர்த்தம் (கோயிலுக்கு எதிரில் உள்ளது.)

சம்பந்தர் பாடல் பெற்றது.

ராஜகோபுரமில்லை. கட்டைக்கோபுர வாயிலின் முகப்பின்மேல் ரிஷபாரூடர், விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிரமணியர் உருவங்கள் வண்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

உள்நுழைந்ததும் நீண்ட கல் மண்டபம் அழகாகவுள்ளது. வெளிப் பிராகாரத்தில் சந்நிதிகள் எவையுமில்லை. வாயிலின் ஒரு புறம் குடவரை விநாயகரும் மறுபுறம் தண்டபாணியும் தரிசனம் தருகின்றனர்.

செப்புக் கவசமிட்ட கொடிமரம், கொடிமரத்து விநாயகர், நந்தி பலிபீடங்கள் உள்ளன. உள்மண்டபத்தில் கோஷ்ட தட்சிணா மூர்த்தியை அடுத்தாற்போல் சித்திவிநாயகர் சந்நிதி தனிக்கோயிலாக வுள்ளது. பிராகாரத்தில் நால்வரையடுத்து, கன்னி விநாயகர் உள்ளார். ஆறுமுக சுவாமி இடத்தில் கஜலட்சுமி சந்நிதி உள்ளது. அதனால் எதிரில் மண்டபத்தில் சுப்பிரமணியர் சந்நிதி உள்ளது. பிராகாரத்தில் தொடர்ந்து பைரவர், சனிபகவான், சந்திரன் சந்நிதிகள் உள்ளன. கொடிமரத்தை வலம் வந்து மேலே சென்றால் மண்டபத்தின் வலப்பால் பள்ளி யறையும் பக்கத்தில் அம்பாள் சந்நிதியும் உள்ளன. தெற்கு நோக்கிய சந்நிதியில் அம்பாள் நின்ற திருக்கோலம். பெயருக்கேற்ற அழகு

Koviloor Digital Library

வடிவம். அம்பாள் சந்நிதிக்கு வெளியே மண்டபத்தில் மேற்புறத்தில் பன்னிரண்டு ராசிகளின் உருவங்களும் உரிய கட்டமைப்பில் வடிக்கப்பட்டுள்ளன.

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியது. சுயம்புத் திருமேனி மூலலிங்கம் - சற்று உயரமாக உள்ளது. பெயருக்கேற்பத் திருமேனி முழுவதிலும் கண்கள் போன்று பள்ளம் பள்ளமாக உள்ளன. மனநிறைவான தரிசனம். இந்திரனின் சாபம் இங்கு நீங்கியதாக ஐதீகம். ஆதலின் திருமணமாகாதோர் இங்கு வந்து சுவாமிக்கு மாலை சார்த்தி வழிபடுதலும், அவ்வாறு வழிபட்டோர் திருமணமான பின்னரும் வந்து மாலை சார்த்துதலும் இங்கு மரபாக இருந்து வருகின்றது.

மூலவர் மண்டபத்தில் சந்திரசேகரர் திருமேனி உள்ளது. அடுத்து அம்பலவாணர் தரிசனம். பிரதோஷ நாயகர், அஸ்திரதேவர், சண்டேசுவரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சோமாஸ்கந்தர் விநாயகர் முதலிய உற்சவ மூர்த்தங்கள் உள்ளன.

கோஷ்ட மூர்ததங்களாக நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உளர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. கோயிலின் எதிரில் உள்ள தீர்த்தக் கரையில் விநாயகர், முருகன் சந்நிதிகள் உள்ளன.

கார்த்திகை ஞாயிறு நாள்களில் சுவாமி புறப்பாடு இங்கு விசேஷமாக நடைபெறுகிறது. இங்குள்ள துர்க்கை சந்நிதி விசேஷ மானது - பிரத்யட்ச தெய்வமாகப் போற்றப்படுகிறது. சுவாமிக்குத் தீபாராதனை செய்து அடுத்து அம்பாளுக்கும் தீபாராதனை செய்து அதற்குப்பிறகே திருநீறு குங்குமம் வழங்கும் மரபு இக்கோயிலில் இருந்து வருகின்றது. நாடொறும் ஐந்து கால பூஜைகள்.

'விண்ணவருக்காய் வேலையுணஞ்சம் விருப்பாக
உண்ணவனைத் தேவர்க்கமுதீந் தெவ்வுல கிற்கும்
கண்ணவனைத் கண்ணார்திகழ் கோயிற் கனிதன்னை
நண்ணவல்லோர்கட்கு இல்லை நமன்பால் நடலையே.''

(சம்பந்தர்)

பூமருவு பொய்கைகளும் புனல்மருவு நதிகளுந்தண் பொதும்பர் சேர்ந்து
காமருவு மருதமுஞ்சூழ் திருக்கண்ணார் கோயிலிட்கட் கடவுட்கோவும்
பூமருவி மூவடிமண் கேட்டவரும் கவுணியரும் போற்றவாய்ந்த
தேமருவு கொன்றையந்தார் திகழ்கண்ணாயிரர் பதங்கள் சிந்தை செய்வாம்.

Koviloor Digital Library

உலகமுதல்வி யன்பருள்ளத் துறைமுதல்வி யிறைவருட
நிலவுமுதல்வி மாண்டவியர் நேர்ந்து நிறைந்த பீடத்தே
அலகில் வளஞ்சேர் திருக்கண்ணார் கோயிலமர்ந்த அருள்முதல்வி
இலகி முருகுவளர் கோதை இணையில்முதல்வி பதம்பணிவாம்.

-கள்ளிருக்கும்
காவின் மருவுங் கனமுந்திசை மணக்குங்
கோவின் மருவு கண்ணார் கோயிலாய்.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கண்ணாயிரமுடையார் திருக்கோயில்
குறுமாணக்குடி
கொண்டத்தூர் - அஞ்சல்
தரங்கம்பாடி - வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம் 609 117.

72/18. திருக்கடைமுடி

கீழையூர், கீழூர்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் கீழையூர் என்றும் கீழூர் வழங்குகிறது. (கீழையூர் என்பது ஏழு ஊர்கள் சேர்ந்து - மிகப் பெரிய ஊர். இதனால் இதற்கு ஏழூர் என்றும் பெயர் வழங்குகிறது.)

(1) மயிலாடுதுறை - பூம்புகார்ச் சாலையில்; மேலையூர் மேலப் பாதி தாண்டி, கீழையூர் என்று பெயர்ப்பலகையுள்ள ஊரையும் கடந்து, சற்று மேலே சென்று, 'சத்திரம் Stop' என்னுமிடத்தில் கீழையூர் 2 கி.மீ.' என்று கைகாட்டி உள்ள இடத்தில் அது காட்டும் பாதையில் சென்று, கீழையூர் பேருந்து நிற்குமிடத்தில் இடப்பால் திரும்பிச் சென்றால் கோயிலை அடையலாம். (திருச்சென்னம்பூண்டி - என்னும் ஊரே கல்வெட்டின்படி கடைமுடி என்பர் ஆய்வர்).

இறைவன் - கடைமுடிநாதர், அந்திசம்ரக்ஷணீஸ்வரர்
இறைவி - அபிராமி

Koviloor Digital Library

தலமரம் - கிளுவை.

தீர்த்தம் - கருணாதீர்த்தம்.

கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. பிரமன் கண்வமகரிஷி ஆகியோர் வழிபட்டதலம்.

காவிரி இங்கு வடக்கு முகமாகவந்து மேற்காக ஓடுவதுசிறப்பாகச் சொல்லப்படுகிறது. சம்பந்தர் பாடல் பெற்றது. சிறியகோயில் - பழைமையானது. சுவர்கள் கிலமாகவுள்ளன. குளக்கரையில் விநாயகர் உள்ளார். மேற்கு நோக்கிய சந்நிதி. முகப்பு வாயிலைக் கடந்தால் பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகளும் அடுத்துத் தலமரம் கிளுவையும் உள்ளன. முன் மண்டபம் வௌவால் நெத்தி மண்டப அமைப்புடையது. முன் மண்டபத்தில் பைரவர், நால்வருள் மணிவாசகர் நீங்கலாக மூவர் சிலாருபங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது - நின்ற கோலம். சுவாமி சந்நிதி பக்கத்தில் நடராச சபை உளது. உற்சவமூர்த்தங்கள் பாதுகாப்பு கருதி 'வெள்நகர்' கோயில் வைக்கப்பட்டுள்ளன. சுவாமி சற்று உயர்ந்த பாணத்துடன் தரிசனம் தருகிறார். திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பெருவிழா நடைபெறவில்லை. திருவாதிரை, மாட்டுப்பொங்கலன்று சுவாமி புறப்பாடு, கார்த்திகை தீபம் முதலிய ஒரு சில சிறப்பு விழாக்களே நடத்தப்பெறுகின்றன. நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

'அருத்தனை அறவனை அமுதனை நீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லது இங்கு உலகம் ஏத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே'.

(சம்பந்தர்)

-மாவின்
இடைமுடியின் தீங்கனியென் றெல்லின் முசுத்தாவுங்
கடைமுடியின் மேவுங் கருத்தா.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கடைமுடிநாதர் திருக்கோயில்
கீழையூர் & அஞ்சல் 609 304.
தரங்கம்பாடி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

தலம் - 19

Koviloor Digital Library

73/19. திருநின்றியூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

வைத்தீஸ்வரன்கோயில் - மயிலாடுதுறை சாலையில் இடையில் உள்ள ஊர். மயிலாடுதுறையிலிருந்து 7 கி.மீ. தொலைவு. மக்கள் வழக்கில் திருநின்றியூர் என்றும், கொச்சை வழக்கில் திருநன்றியூர் என்றும் வழங்குகிறது. (திருநின்றவூர் என்பது வேறு. தொண்டை நாட்டில் உள்ளது.)

மன்னன் ஒருவன் கோயிலைக் கட்டும் விருப்புடன் இங்கு வந்து பூமியை இடித்தும் பார்த்தபோது குருதி பீறிட, தோண்டிப் பார்க்கையில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டு, கோயிலைக் கட்டினான் என்பது தலவரலாறு. இடித்த இடி, பட்டமையால் இன்றும் சிவலிங்கத்தின் மீது உச்சியில் குழி இருப்பதைக் காணலாம்.

பழைய நாளில் இதுவும் கோச்செங்கணான் கட்டிய மாடக்கோயில்களுள் ஒன்றாக விளங்கியது. நூறு ஆண்டுகளுக்குமுன் நகரத்தார் திருப்பணி செய்தபோது இதை இப்போதுள்ள அமைப்பில் மாற்றிக் கட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இலக்குமி, பரசுராமர், அகத்தியர் வழிபட்ட தலம். இஃது தருமையாதீனக் கோயில்.

இறைவன் - மகாலட்சுமீசர், லக்ஷ்மிபுரீஸ்வரர்

இறைவி - லோகநாயகி

தலமரம் - விளாமரம்.

தீர்த்தம் - இலட்சுமி தீர்த்தம்.

மூவர் பாடல் பெற்றது. பழைய கோயில். ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. விசாலமான உள்இடம். கொடிமரம் இல்லை. பலிபீடம் நந்தியும் கொடிமரத்து விநாயகரும் உளர்.

பிராகாரத்தில் செல்வப் பிள்ளையார் சந்நிதியுள்ளது. பரசுராமர் வழிபட்ட லிங்கமும், சுப்பிரமணியர் நால்வர், மகாலட்சுமி சிலா ரூபங்கள் ஒரே சந்நிதியில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. அடுத்து நவக்கிரக சந்நிதியும், பைரவர், சந்திரன் உருவங்கள் ஒரு சந்நிதியில் உள்ளன. வலம்முடித்து, துவார விநாயகரையும் தண்டபாணியையும் வழிபட்டுத் துவாரபாலகர்களைத் தொழுது, உட்சென்றால் நேரே சுவாமி சந்நிதியும் வலப்பால் அம்பாள் சந்நிதியும் உள்ளன.

Koviloor Digital Library

மூலவர் சுயம்பு. உயர்ந்த பாணம். பட்டுசார்த்தி கம்பீரமாகக் காட்சி தருகிறது. இலிங்கத்தின் உச்சியில் 'குழி' உள்ளது. அம்பாள் சந்நிதி அழகாகவுள்ளது. நாடொறும் இருகால வழிபாடுகளே நடைபெறு கின்றன. ஆடி வெள்ளிக்கிழமைகள் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. பெருவிழா நடைபெறவில்லை.

''அச்சம்இலர் பாவம்இலர் கேடும்இலர் அடியார்
நிச்சம்முறு நோயும்இலர் தாமுந்நின்றியூரில்
நச்சம் மிடறுடையார் நறுங்கொன்றை நயந்தாளும்
பச்சம் உடையடிகள் திருப்பாதம் பணிவாரே''.

(சம்பந்தர்)

''பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் மங்கி அயலெலாம்
நிறையும் பூம்பொழில்சூழ் திருநின்றியூர்
உறையும் ஈசனை உள்கும்என் உள்ளமே''.

(அப்பர்)

''திருவும் வண்மையும் திண்டிறலரசுஞ்
சிலந்தியார் செய்த செய்பணிகண்டு
மருவுகோச் செங்கணான் றனக்களித்த
வார்த்தை கேட்டுநுன் மலரடியடைந்தேன்
பெருகு பொன்னிவந்துந்து பன்மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவுந் தெற்றியுமுற்றமும் பற்றித்
திரட்டுந் தென்திரு நின்றியூரானே''.

(சுந்தரர்)

-கொடைமுடியா
நன்றியூரென்றறிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவு நிலைமையனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மகாலட்சுமீசர் திருக்கோயில்
திருநின்றியூர் & அஞ்சல்
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம் 609 118.

Koviloor Digital Library

74/20. திருப்புன்கூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

திருநாளைப்போவார் (நந்தனார்) வணங்குவதற்காக இறைவன் நந்தியைச் சற்று விலகியிருக்குமாறு அருள் செய்த தலம். ஏயர்கோன்

Koviloor Digital Library

கலிக்காமர், சுந்தரருடன் வந்து தரிசித்த தலம். வைத்தீஸ்வரன் கோயில் - திருப்பனந்தாள் சாலையில் 3 கி.மீ. சென்றால் ஒருபுறம் திருப்புன்கூர் கைகாட்டியும், மறுபுறம் திருப்புன்கூர் சிவலோக நாதசுவாமி கோயில் என்றவளைவும் உள்ளது. அதனுள் - அச்சாலையில் 1கி.மீ சென்றால் கோயிலை அடையலாம். சாலை ஓரத்திலேயே கோயில் உள்ளது. கோயில் வரை வாகனங்கள் செல்லும்.

இறைவன் - சிவலோகநாதர்

இறைவி - சொக்க நாயகி, சௌந்தர நாயகி

தலமரம் - புங்கமரம்

தீர்த்தம் - கணபதி தீர்த்தம். (கோயிலின் பின்புறம் உள்ளது). (புங்கு + ஊர் = புங்கூர் = புன்கூர். சம்ஸ்கிருதத்தில் கஞ்சாரண்யம் என்று பெயர்). பிரமன், இந்திரன், அகத்தியர், சந்திரன், சூரியன், இராசேந்திர சோழன், அக்கினி, பதஞ்சலி, வியாக்ரபாதர், சப்தகன்னியர், முதலி யோர் வழிபட்ட தலம். சுந்தரர்பால் கோபங்கொண்ட விறன்மிண்ட நாயனார் (இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து) வழிபட்ட சிறப்புடைய தலம். இங்குள்ள தீர்த்தம் விநாயகருடைய துணையால் நந்தனார் வெட்டியதாகும்.

மூவர் பாடல் பெற்ற தலம்.

இத்தலத்திற்குரிய பன்னிருவேலி பெற்ற வரலாறு :- தன் நாட்டில் பஞ்சம் நிலவியதால் இராசேந்திரசோழன் எல்லாச்சிவாலயங்களிலும் பூசைகளைச் செய்தான். அவன் கனவில் இறைவன் தோன்றித் திருப்புன்கூர்ச் சிவலோக நாதரை வழிபடின் மழையுண்டாகும் என்றருள, அவ்வாறே மன்னனும் அங்கு வந்து சுவாமியை வழி பட்டான். அப்போது சுந்தரர் அங்கு வந்தார். அரசன் அவரை வணங்கி, சந்நிதியில் பாடி மழை பெய்விக்குமாறு வேண்டினான். சுந்தரரும் மழைபெய்வித்தால் சுவாமிக்குப் பன்னிருவேலி நிலமளிக்குமாறு மன்னனுக்குக் கட்டளையிட்டுவிட்டுப் பாடினார், மழைபெய்தது. எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழைமிகுதியைக் கண்ட மன்னன், அதை நிறுத்தாவிடில் பெருஞ்சேதம் உண்டாகும் என்றெண்ணிச் சுந்தரரைப் பார்த்து நிறுத்துமாறு பாடியருள வேண்ட, அவரும் மேலும் பன்னிருவேலி கேட்க, மன்னனும் தர, சுந்தரரும் பாடியருள மழையும் நின்றது.

திருநாளைப்போவாரின் (நந்தனாரின்) ஊரான ஆதனூர் இத்தலத்திற்குப் பக்கத்தில் 5 கி. மீ.ல் உள்ளது. திருப்புன்கூருக்கு வந்து

Koviloor Digital Library

சிவலோக நாதரைத்தரிசிக்க முயன்ற நாயனார், தன் குலநிலையை எண்ணி வெளியிலிருந்து பார்க்க, நந்தி மறைத்திருப்பது கண்டு வருந்தினார். இறைவன் இவருடைய உள்ளப் பக்தியைக் கண்டு மகிழ்ந்து நந்தியைச் சற்று விலகியிருக்குமாறு பணித்தார். இன்றும் நந்தி இத்தலத்தில் விலகியிருப்பதைக் காணலாம். இதைக் கோபால கிருஷ்ண பாரதியார் தம் கீர்த்தனையில் பின்வருமாறு சுவை பாடப் பாடியுள்ளார் :-

'சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகிய நந்தி மறைத் திடுதிங்கே
பலகாலஞ் செய்த பாழ்வினை குவிந்து
மலையாகி இப்படி மறைத்ததோ என்றார்.'

''வழிமறைத் திருக்குதே - மலைபோல்
ஒருமாடு படுத்திருக்குதே'
பாவிப் பறையனிந்த ஊரில் வந்து மிவன்
பாவந்தீரேனோ - உன்தன் - பாதத்தில் சேரேனோ
சிவலோக நாதா -

'தேரடியில் நின்று தரிசித்தாலும் போதும்
கோவிலுள் வரமாட்டேனே ஐயே
ஓரடிவிலகினால் போதுமிங்கே நின்று
உற்றுப் பார்க்கச்சற்றே விலகாதோமாடு-'

நந்தியை விலகச்சொன்ன கீர்த்தனை வருமாறு :-

'சற்றே விலகியிரும் பிள்ளாய் - சந்நிதானம் மறைக்குதாம் - நீ
நற்றவம் புரியும் நம்மிடம்திரு நாளைப்போவார் வந்திருக்கின்றார் -
சாதிமுறைமை பேசுறான் - தன்னை இகழ்ந்து பேசுறான்
கோதிலாக் குணமுடையோன் கோபங்கொண்டால் தாளமாட்டாய்
வேதகுலத்தைப் போற்றுறான் விரும்பி விரும்பி போற்றுறான்
பூதலத்தில் இவனைப்போலே புண்யபுருஷன் ஒருவனில்லை
பக்தியில் கரைகண்டவன் பார்த்துப்பார்த்து உண்டவன்
சித்தம் குறையில் நமது செல்வம் முற்றுங்குறையும் - தயவுசெய்து,

நந்தி விலகத்தரிசித்த நாளைப்போவார் கோயிலின் மேற்புறமுள்ள ரிஷபதீர்த்தத்தை வெட்டிச் சீர்ப்படுத்த எண்ணித் தனக்குத் துணை யாருமில்லாததால் இறைவனை வேண்ட, இறைவன் அவருக்குத் துணையாகுமாறு கணபதியை அனுப்பினார். அவர் துணையால்

Koviloor Digital Library

அத்தீர்த்தத்தை வெட்டிச் சீர்ப்படுத்தினார். அதுவே கணபதிதீர்த்தம் என்றும் பெயர் பெற்றது. எனவே இங்குள்ள விநாயகர் 'குளம் வெட்டிய விநாயகர்' என்றழைக்கப்படுகிறார்.

ராஜகோபுரம் புதுப்பொலிவுடன் திருப்பணிகள் செய்யப்பட்டு ஐந்து நிலைகளுடன் காட்சியளிக்கிறது. வெளிப்பிராகாரத்தில் குளம் வெட்டிய விநாயகர் சந்நிதியும், சுப்பிரமணியர் சந்நிதியும் தலமரமும் பிரமலிங்கமும் உள்ளன. உள்சுற்றில் இடப்பால் நந்தனார் திருவுருவம் உள்ளது. வலப்பால் வசந்தமண்டபம். உள்வாயிலின் மேற்புறத்தில் வண்ணச்சுதையில் பஞ்சமூர்த்திகள் அமைக்கப்பட்டு உள்ளன.

கவசமிட்ட கொடிமரம். பெரிய நந்தி (நாளைப்போவாருக்காக) சற்று விலகியுள்ளது. துவார விநாயகரை வணங்கி உள்வாயிலைக் கடந்தால் உள்பிராகாரத்தில் இடப்பால் சூரியன், நால்வருடன் கலிக் காமரும் சேர்ந்த சந்நிதி, சுந்தரவிநாயகர் சந்நிதி முதலியவை உள்ளன. அடுத்துள்ள சோமாஸ்கந்தர் - பெரிய திருமேனி இத்தலத்திற்குரிய தனிச்சிறப்பு - தரிசிக்கத்தக்கது. அடுத்து சூரியன் அக்கினி வழிபட்ட லிங்கங்கள். ஆறுமுகர் சந்நிதி; தத்புருஷ், அகோர, வாமதேவ, சத்யோஜாத முகங்களின் பெயரில் அமைந்துள்ள லிங்கபாணங்கள்: கஜலட்சுமி முதலிய சந்நிதிகள் உள்ளன. தலப்பதிகங்கள் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. இடப்பால் அம்பாள் சந்நிதி தனியாக, வலம்வரும் அமைப்புடன் உள்ளது. நவக்கிரகம், பைரவர் , சந்திரன் சந்நிதிகளைத் தொழுது வலம் முடித்துச் சென்றால் நேரே சுவாமிசந்நிதி - மூலவர் சற்று குட்டையான பாணத்துடன் காட்சிதருகின்றார். எதிரில் உள்ள நந்தி, நீர்கட்டும் தொட்டிக்குள் உள்ளது.

நடராச சபை உள்ளது. இங்குள்ள நடராச வடிவம் கலையழகு வாய்ந்தது. இப்பெருமான் பாதத்தில் தேவர் ஒருவர் அமர்ந்து தன் நான்கு கரங்களாலும் பஞ்சமுக வாத்யத்தை அடித்து இசை எழுப்புகின்றதைத் தரிசிக்கலாம். கோஷ்டங்களில் நர்த்தனவிநாயகர், பிட்சாடனர், அகத்தியர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை, அர்த்தநாரீஸ்வரர், பைரவர் உள்ளனர்.

சுவாமி சந்நிதிக்கு முன்புள்ள இரு துவாரபாலகர்களுள் தென்புற முள்ள வடிவம் சற்றுத் தலையைச் சாய்த்து நந்தியை விலகியிருக்குமாறு கட்டளையிடுவதுபோலக் காட்சிதருவது கண்டு மகிழ்த்தக்கது. மூலவர் சுயம்பு மூர்த்தி-மண்புற்று. இதன்மீது சார்த்தப்பட்டிருக்கும் குவளைக்குத்தான் நாடொறும் அபிஷேகம் நடைபெறுகிறது. பிரதி

Koviloor Digital Library

சோமவாரத்திலும் இரவு அர்த்தசாமப் பூசையின்போது புனுகுசட்டம் சார்த்தப்படுகிறது.

மூவர் திருப்பதிகங்கள் பளிங்குக் கற்களில் பதிக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளன. குளத்துப்படித்துறைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. திருநாளைப்போவார் நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தேரடியில் நின்று தரிசித்த நந்தனாருக்கு, அத் தேரடியைப் புதுப்பித்துக் கோயில் கட்டப்பட்டுள்ளது.

நாடொறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. கல்வெட்டில் இத்தலத்திறைவன் ‘சிவலோகமுடைய நாயனார்’ என்று குறிக்கப்படுகின்றார். இத்தலத்துக் கல்வெட்டுக்களில் இறைவனுடைய திருமஞ்சனத்திற்கும், திருப்பள்ளியெழுச்சிக்கும், பூமாலைகள் கட்டிச்சார்த்துதற்கும் நிலம்விடப்பட்ட செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. இத்தலத்திற்குப் பக்கத்தில் ஏயர்கோனின் அவதாரத் தலமாகிய ‘பெருமங்கலம்’ உள்ளது. 1974ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. கோயிலில் திருப்பணிகள் தொடங்க ஏற்பாடுகள் செய்யவுள்ளன.

‘முந்தி நின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தமில்லா அடிகளவர் போலும்
கந்தமல்கு கமழ்புன் சடையாரே’.

(சம்பந்தர்)

இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை
இனிய நினையாதார்க்கு இன்னாதானை
வல்லானை வல்லடைந்தார்க் கருளும் வண்ணம்
மாட்டாதார்க்கு எத்திறத்து மாட்டாதானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெல்லால் விளைகழனி நீடுரானை
நீதனேன் என்னே நான் நினையாவாறே’’.

(அப்பர்)

‘‘வையகமுற்று மாமழை துறந்து
வயலில் நீரிலை மாநிலந்தருகோம்
உய்யக் கொள்க மற்றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும்

Koviloor Digital Library

பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்தும்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளுஞ்
செய்கை கண்டு நின்திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.''

(சுந்தரர்)

''விரும்புன்கூர் அடியென்னுந் தொழும்பர் தமக்கருள் தழைத்து
வினைக்கீடாக
கரும்புன்கூர் பவப்பிணிகள் அணுகாமலுத்தமாங் கத்தின்மீது
மருப்புன்கூர் வரைகோலால் புண்ணியத்தை வரைந் திருமை
வாழ்வளிப்பத்
திருப்புன்கூரிடை மேவுஞ் சிவலோக நாயகன்தாள் சென்னி சேர்ப்பாம்''

(தலபுராணம்)

-ஒன்றிக்
கருப்புன்கூர் உள்ளக் கயவர் நயவாத்
திருப்புன்கூர் மேவுஞ் சிவனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சிவலோகநாதர் திருக்கோயில்
திருப்புன்கூர் & அஞ்சல் - சீர்காழி வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம் - 609 112.

75/21. திருநீடூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

1) மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் உள்ளது. மயிலாடுதுறை - நீடூர் பேருந்து வசதி உள்ளது.

2) வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து வருவோர் திருப்பனந்தாள் சாலையில் 'பட்டவர்த்தி' வந்து இடப்புறமாகத் திரும்பி மயிலாடுதுறை சாலையில் சென்று நீடூரையடையலாம். சாலைக்குச் சற்று உள்ளடங்கிக் கோயில் உள்ளது. ஊழிக் காலத்தும் இத்தலம் அழியாது நீடித்திருக்கு மாதலின் இஃது 'நீடூர்' என்று பெயர் பெற்றதென்பர். தலமரம் மகிழம் ஆதலின் மகிழவனம். வகுளாரண்யம் எனவும் பெயர்களுண்டு.

Koviloor Digital Library

இந்திரன், சூரியன், சந்திரன், காளி, நண்டு ஆகியோர் வழிபட்ட தலம். முனையடுவார் நாயனார் தொண்டு செய்து முத்தி பெற்ற தலம். இந்நாயனாரின் திருமேனி கோயிலில் உள்ளது.

இந்திரன் காவிரி மணலைப் பிடித்து வைத்துப் பூசித்த லிங்கம் - இதுவே இறுகி வெள்ளையாக மாறியது. பின்னால் நண்டு பூசித்ததும் அதன் காற்சுவடு இலிங்கத்தில் பதிந்தது. வழிபட்ட இந்திரனுக்கு அம்பாள் அருள் புரிந்ததாகத் தலவரலாறு சொல்லப்படுகிறது.

இறைவன் - அருள் சோமநாதேஸ்வரர்

இறைவி - ஆதித்ய அபயப்ரதாம்பிகை, வேதநாயகி, வேயுறுதோளியம்மை.

தலமரம் - மகிழமரம்

அப்பர், சுந்தரர் பாடல் பெற்றது.

முகப்பு வாயில் - மேலே ரிஷபாருடர் வண்ணச் சுதையில் உள்ளார். வாயிலைக் கடந்தவுடன் தலமரம் மகிழம் உள்ளது. நேரே அம்பாள் சந்நிதி. துவார விநாயகராகச் சிவலோக கணபதி உள்ளார். அவரை வணங்கி வாயிலைக் கடந்து சென்றால் நேரே மூலவர் சந்நிதி. சோமநாதரின் சுந்தரத் தரிசனம் மனத்திற்குச் சாந்தியைத் தருகின்றது.

பிராகாரத்தில் இடப்பால் மூவர் கணபதிகள் - சிந்தாமணி கணபதி, செல்வ கணபதி, சிவாநந்த கணபதி ஆகிய மூவர் காட்சி தருகின்றனர். சப்தமாதாக்களும், சின்மயானந்த கணபதியும், சுப்பிரமணியரும் அடுத்தடுத்து உள்ளனர். அடுத்து மூன்று இலிங்கத் திருமேனிகள் - சிவலோகநாதர், கயிலாசநாதர், காசுவிசுவநாதர் பெயர்களைத் தாங்கியுள்ளன. மகாலட்சுமி சந்நிதி உளது. நடராச சபை தரிசிக்கத்தக்கது. காலபைரவர் சந்நிதி, முனையடுவார் நாயனார் கைகூப்பியவண்ணம் உள்ளார்.

உள்வாயிலைக் கடந்து துவார விநாயகரைத் தொழுது கிழக்கு நோக்கிய மூலவரைத் தரிசிக்கின்றோம். வெண்ணிறத் திருமேனி, கோஷ்டங்களில் நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது. பெருவிழா நடைபெறவில்லை. இத்திருக்கோயிலுக்குரிய உற்சவத் திருமேனிகள் பாதுகாப்புக் கருதித் திருவிழந்தூர் பெருமாள் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. செயல் அலுவலர் இவ்விரண்டிற்கும் ஒருவரே. நாடொறும் இருவேளை மட்டும் வழிபாடுகள். தலபுராணம் உள்ளது.

Koviloor Digital Library

3-ஆவது இராசாதிராசன் காலத்திய கல்வெட்டில் இவ்வூர் ராஜசிகாமணிசதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் கந்தமாதவன் என்பவனால் விமானம் கட்டப்பட்டதாகவும், ஊர்ச்சபை கூடிச் சட்டங்களைத் தொகுத்ததாகவும் செய்திகள் தெரிய வருகின்றன.

திருப்புன் கூரும் திருநீடூரும் :

கலைஞானம் கல்லாமே கற்பித்தானைக்
கடுநரகஞ்சாராமே காப்பான் தன்னைப்
பலவாய வேடங்கள் தானேயாகிப்
பணிவார்கட்கு அங்கங்கே பற்றானானைச்
சிலையாற் புரமெரித்த தீயாடியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீடூரானை
நீதனேன் என்னே நான்நினையாவாறே.'

(அப்பர்)

அல்லல் உள்ளன தீர்த்திடுவானை
அடைந்தவர்க்கு அமுது ஆயிடுவானைக்
கொல்லை வல்அரவம் அசைத்தானைக்
கோலமார் கரியின் னுரியானை
நல்லவர்க்கு அணியானவன் தன்னை
நானும் காதல் செய்கின்றபிரானை
எல்லி மல்லிகையே கமழ்நீடூர்
ஏத்தி நாம் பணியாவிடலாமே'.

(சுந்தரர்)

-உருப்பொலிந்தே
ஈடுரிலாதுயர்ந்த வேதுவினா லோங்குதிரு
நீடூரிலங்கு நிழல் தருவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அருட்சோமநாதர் திருக்கோயில்
நீடூர் & அஞ்சல் - 609 203.
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்

Koviloor Digital Library

76/22. திருஅன்னியூர்

பொன்னூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

தற்போது பொன்னூர் என்று வழங்குகிறது.

மயிலாடுதுறையிலிருந்தும், நீடூரிலிருந்தும் செல்லலாம். மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு செல்லும் பேருந்து இவ்வூர் வழியாகச் செல்கிறது. மயிலாடுதுறையிலிருந்து 8 கி.மீ. வருணன். அக்கினி வழிபட்ட தலம். சூரியன், ரதி பாண்டவர், முதலியோரும் வழிபட்டுள்ளனர்.

இத்தலத்திற்கு லிகுசாரண்யம், பாஸ்கர ஷேத்திரம், பானு ஷேத்திரம் என்பன வேறு பெயர்கள். இத்தலத்திற்குச் சுற்றிலும் நீடூர், மயிலாடுதுறை, வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி குறுக்கை முதலிய தலங்கள் உள்ளன.

இறைவன் - ஆபத்சகாயேசுவரர், லிகுசாரண்யேஸ்வரர், அக்னீசுவரர், பாண்டதவேசுவரர், ரதீசுவரர்.

இறைவி - பிருகந்நாயகி; பெரியநாயகி

தலமரம் - எலுமிச்சை

தீர்த்தம் - வருணதீர்த்தம், அக்னிதீர்த்தம் (இரண்டும் ஒன்றே)

Koviloor Digital Library

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய திருக்கோயில். எதிரில் தீர்த்தம். விசாலமான பிராகாரம். வாயிலைக் கடந்ததும் நந்தி பலிபீடம். பிராகாரத்தில் சித்தி விநாயகர், முருகன், மகாலட்சுமி, நவக்கிரக சந்நிதிகள் உள்ளன. மகாமண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இம்மண்டபத்தில் சனி, சூரியன், பைரவர் சந்நிதிகளும் உள்ளன. அம்பாளைத் தொழுது வரும்போது பிராகாரத்தில் ஆதிமூல லிங்கம் - அக்கினிக்குக் காட்சி தந்த மூர்த்தி உள்ளார்.

அர்த்த மண்டபத்தில் விநாயகர் தரிசனம். வாயிலைக் கடந்து உட்சென்றால் மூலமூர்த்தியைத் தரிசிக்கலாம். விநாயகர், முருகன், வள்ளி, தெய்வயானை, சந்திரசேகரர், நடராஜர், சிவகாமி, ஆடிப்பூர அம்மன், துர்க்கை, அஸ்திரதேவர் முதலிய மூர்த்தங்கள் உள்ளன.

மிகப் பழமையான இத்திருக்கோயிலில் கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை உள்ளனர். நாடொறும் மூன்று கால பூஜைகள். இவை தவிர நடராசர் அபிஷேகங்கள், நவராத்திரி, ஐப்பசியில் அன்னாபிஷேகம், கார்த்திகை தீபாவளி, தனுர்மாத வழிபாடுகள், சங்கராந்தி முதலிய சிறப்பு அபிஷேகங்களும் பூசைகளும் நடைபெறுகின்றன.

சம்ஸ்கிருதத்தில் 'விகுசாரண்ய மகாத்மியம்' என்ற பெயரில் தலபுராணமுள்ளது. இவ்வூரில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் உள்ளது.

இவ்வூரில் 'இறைவன் நற்பணி மன்றம்' என்னும் சமய அமைப்பு கோயில் வளர்ச்சிப் பணிகளிலும் வழிபாட்டிலும் ஈடுபட்டுச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

''மன்னியூர் இறை சென்னியார் பிறை
அன்னியூர் அமர் மன்னு சோதியே
பழகுந் தொண்டர்வம் அழகன் அன்னியூர்க்
குழகன் சேவடி தொழுது வாழ்மினே''.

(திருஇருக்குக்குறள் - சம்பந்தர்)

''வேதகீதர் விண்ணோர்க்கும் உயர்ந்தவர்
சோதி வெண்பிறை துன்று சடைக்கணி
நாதர் நீதியினால் அடியார் தமக்(கு)
ஆதியாகி நின்றார் அன்னியூரரே''.

(அப்பர்)

Koviloor Digital Library

-பீடுகொண்டு
மன்னியூரெல்லாம் வணங்க வளங்கொண்ட
வன்னியூர் மேவும் அதிபதியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்
பொன்னூர் - பாண்டூர் அஞ்சல் - 609 203
(வழி) நீடூர் - மயிலாடுதுறை வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம்

77/23. திருவேள்விக்குடி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

குத்தாலத்திற்குப் பக்கத்தில் உள்ளது. மயிலாடுதுறை - மகாராஜபுரம் சாலையில் உள்ளது. சிவபெருமானின் திருமணவேள்வி நடந்த தலமாதலின் இப்பெயர் பெற்றது. இறைவிக்குக் கங்கண தாரணம் செய்தபடியால் இதற்குக் ''கௌதுகாபந்தன க்ஷேத்திரம்'' என்று பெயர். நீண்டநாள் திருமணம் ஆகாதவர்கள் இங்கு வந்து கல்யாணசுந்தரரை வழிபட்டால் திருமணம் நடைபெறும் என்பது இத்தலச் சிறப்பு. மணவாளேஸ்வர சுவாமி திருமணக் கோலத்துடன் திகழ்கிறார்.

இறைவன் - கௌதகேஸ்வரர், கல்யாணசுந்தரேஸ்வரர், மணவாளேஸ்வரர்

இறைவி - பரிமளசுகந்த நாயகி, கௌதகேசி, நறுஞ்சாந்து நாயகி,

தீர்த்தம் - கௌதகாபந்தன தீர்த்தம்.

சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் பாடல் பெற்ற தலம். இத்தலம் திருத்துருத்தியோடு சேர்த்துப் பாடப்பட்டுள்ளது. அரசகுமாரன் ஒருவனுக்கு மணம்புரிய நிச்சயித்திருந்த பெண்ணை, மணம் நிறைவேறு முன் அவள் பெற்றோர் இறக்கவே, அவள் சுற்றத்தார் கொடாது மறுத்தனர். அரசகுமாரன் இறைவனைநோக்கித் தவஞ் செய்து

Koviloor Digital Library

வேண்டினான். இறைவன் அப்பெண்ணை ஒருபூதத்தின்மூலம் கொண்டுவந்து அவனுக்குத் திருமணவேள்வி செய்தருளியதாக வரலாறு சொல்லப்படுகிறது.

திருக்கோயில் ஊர்நடுவே உள்ளது. கோபுரம் கிழக்கு நோக்கியது. கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக இலிங்கோற்பவரும், அர்த்தநாரீஸ்வரரும், சந்திர சேகரரும், தட்சிணாமூர்த்தியும் உள்ளனர். அர்த்த மண்டபத்தில் அகத்தியர் சிலையும், நடராசர், பிள்ளையார் திருமேனிகளும் உள்ளன. முதல் பிராகாரத்தில் அம்பாள் கோயில் தெற்கு நோக்கியுள்ளது. இதன்பின் புறத்தில் ஈசானமூர்த்தி கோயில்' உள்ளது. இக்கோயில் முதற்பராந்தக சோழன் காலத்தில் கட்டபட்டதென்பர். கல்வெட்டுக் களில் இறைவன் பெயர் மணவாளநம்பி, மங்கலநக்கர், திருவேள்விக் குடி உடையார். என்னும் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது.

புரிதரு சடையினர் புலியுரி யரையினர் பொடியணிந்து
திரிதரு மியல்பினர் திரிபுர மூன்றையுந் தீவளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையொ டொருபக லமர்ந்த பிரான்
விரிதரு துருத்தியாரிர விடத்துறைவர் வேள்விக்குடியே''.

(சம்பந்தர்)

''பேருமோர் ஆயிரம் பேருடையார் பெண்ணோ டாணும் அல்லர்
ஊருமதொற்றியூர் மற்றையூர் பெற்றவா நாம் அறியோம்
காருங் கருங்கடல் நஞ்சமுதுண்டு கண்டங் கறுத்தார்க்(கு)
ஆரம் பாம்பாவதறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே''

(சுந்தரர்)

-மன்னர்சுக
வாழ்விக்குடிகளடிமண் பூசலாலென்னும்
வேழ்விக்குடி யமர்ந்த வித்தகனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கல்யாண சுந்தரேசுவரர் திருக்கோயில்
திருவேள்விக்குடி - குத்தாலம் அஞ்சல்
குத்தாலம் R.M.S. - 609 801
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

78/24. எதிர்கொள்பாடி

மேலைத்திருமணஞ்சேரி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் மேலைத் திருமணஞ்சேரி என்றாயிற்று. இன்று இப்பெயர் சொல்லிக் கேட்டாலும் பெரும்பாலான சாதாரண மக்களுக்குத் தெரியவில்லை. கீழைக் திருமணஞ்சேரிதான் பிரசித்தமாக வுள்ளது. மக்களுக்கும் தெரிகிறது.

1) குத்தாலத்திலிருந்து; பந்தநல்லூர் செல்லும் பேருந்துச் சாலையில் வந்து "அஞ்சார் வார்த்தலை" என்னும் ஊரையடைந்து; வாய்க்கால் பாலம் தாண்டி, (இடப்புறமாகப் பந்தநல்லூர்சாலை செல்ல) நாம் வலப்புறமாகத் திரும்பி, திருமணஞ்சேரி சாலையில் சென்றால் முதலில் வரும் ஊர் **மேலைத்திருமணஞ்சேரி** ஆகும். இவ்வூருள் நுழைந்ததும் வலப்புறமாகச் சென்றால் இக்கோயிலைத் தரிசிக்கலாம். இதை **மேலக் கோயில்** என்று கேட்டால்தான் சொல் வார்கள். இத்திருக்கோயில் பலருக்கும் தெரிவதில்லை.

இதே சாலையில் மேலும் சிறிது தூரம் சென்றால் **திருமணஞ்சேரி (கீழைத் திருமணஞ்சேரி)** உள்ளது.

2) மயிலாடுதுறையிலிருந்து குத்தாலம் வழியாகத் திருமணஞ் சேரிக்கு நகரப் பேருந்து செல்கிறது. கோயில்வரை வாகனங்கள் செல்லும்.

வேள்விக்குடியில் திருமணஞ் செய்துகொண்டு அத்திருமணக் கோலத்துடன் வந்த தன் அடியவனான அரசகுமாரனை அவனுடைய அம்மானைப்போல இறைவன் வந்து எதிர்கொண்டழைத்துச் சென்றமையால் இத்தலம் எதிர்கொள்பாடி என்றாயிற்று.

(இப்பெயர் பண்டைக் காலத்தில் 'எருதுபாடி' என்று திரிந்து வழங்கியதாகவும் செய்தியொன்று தெரிவிக்கிறது). ஐராவதம் வழிபட்டது.

இறைவன் - ஐராவதேஸ்வரர், மதயானேஸ்வரர்

இறைவி - சுகந்த குந்தளாம்பிகை, மலர்க்குழல்மாது

சுந்தரர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் மேற்கு நோக்கியுள்ளது. கொடிமரமில்லை. பழமையான கோயில். வெளிப் பிராகாரத்தில் பைரவர், சனிபகவான், சூரியன், விநாயகர் மூர்த்தங்கள் உள்ளன. முன்மண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி சந்நிதிகள். வாயில் கடந்தால் இடப்பால் அம்பாள் சந்நிதி. நேரே மூலவர் தரிசனம். பல்லாண்டுகளாகக் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை.

''மத்த யானையேறி மன்னர்சூழ வருவீர்காள்
செத்த போதிலாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த வுள்ளமாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே''

(சுந்தரர்)

-சூழ்வுற்றோர்
விண்ணெதிர் கொண்டிந்திரன் போன்மேவி நெடுநாள்வாழப்
பண்எதிர்கொள் பாடிப் பரம் பொருளே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஐராவதேஸ்வரர் திருக்கோயில்
மேலைத் திருமணஞ்சேரி, திருமணஞ்சேரி அஞ்சல் - 609 813
குத்தாலம் S.O. மயிலாடுதுறை வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம்.

தலம் - 20

Koviloor Digital Library

79/25. திருமணஞ்சேரி

(கீழைத்) திருமணஞ்சேரி

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

இன்று மக்கள் 'திருமணஞ்சேரி' என்றே வழங்குகின்றனர். மேலைத் திருமணஞ்சேரி என்று ஒன்றிருப்பதால் இதைக் கீழைத் திருமணஞ்சேரி என்றனர். ஆனால் இன்று பலருக்கும் மேலைத் திருமணஞ்சேரி தெரியாததாலும், அது பிரபலமாக இல்லையாதலாலும், இத்தலமே மிகவும் பிரசித்தியாக இருப்பதாலும் மக்கள் இத்தலத்தை **'திருமணஞ்சேரி'** என்றே அழைக்கின்றனர்.

(1) மயிலாடுதுறையிலிருந்து திருமணஞ்சேரிக்குக் குத்தாலம் வழியாக நகரப் பேருந்து செல்கிறது.

(2) தனிப்பேருந்தில் வருவோர் குத்தாலம் வந்து, பந்தநல்லூர் செல்லும் சாலையில் சென்று 'அஞ்சார் வார்த்தலை' என்னும் ஊரை யடைந்து, வாய்க்கால் பாலம் தாண்டி, வலப்புறமாகத் பிரிந்துசெல்லும் திருமணஞ்சேரி சாலையில் சென்றால் இத்தலத்தையடையலாம். (முதலில் வருவது மேலைத் திருமணஞ்சேரி, (எதிர்கொள்பாடி) அதே சாலையில் மேலும் சிறிது தூரம் சென்றால் திருமணஞ்சேரி (கீழைத் திருமணஞ்சேரி) வருகிறது). இறைவன் கல்யாணசுந்தரர் வடிவங் கொண்டு கோகிலாம்பிகையைத் திருமணஞ் செய்து கொண்டதால் இத்தலம் திருமணஞ்சேரி ஆயிற்று. இக்கோயில் மக்களிடையே மிகவும் பிரசித்திபெற்று விளங்குகிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு 15-9-1986ல் மஹாகும்பாபிஷேகமும் நிறைவேறி, கோயில் வண்ணப் பொலிவுடன் விளங்குகிறது.

திருமணம் தடைப்படுகிறவர்கள் இத்தலத்திற்கு வந்து, கல்யாண சுந்தரருக்கு மாலைசார்த்தி அர்ச்சனை செய்து வழிபட்டால் நிச்சயம் திருமணம் கூடப்பெறுவர். அவ்வாறு திருமணம் நிச்சயிக்கப்பட்ட வர்கள் மீண்டும் கோயிலுக்கு வந்து சுவாமிக்கு முன்னால் திருமணத்தை நடத்திக் கொள்கிறார்கள். இக்காட்சியை இன்னும் கண்கூடாகக் காணலாம். திருமணநாள்களிலும் வெள்ளிக் கிழமைகளிலும் இங்கு ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன. கல்யாணசுந்தரரை எழுந்தருளச் செய்து அவர் முன்னால் ஒருபுறம் வரிசையாக மாலை சார்த்தி அருச்சனை செய்பவர்களையும், மறுபுறம் வரிசையாக திருமணம் நடந்தேறிய தம்பதிகளையும் அமரச்செய்து அருச்சனை செய்வதும் கண் கொள்ளாக் காட்சியாகும். கோயிலுக்குள் எப்போதும் கூட்டம்.

Koviloor Digital Library

இவ்வாறே; ராகு கிரக தோஷத்தால் பீடிக்கப்பட்டு மகப்பேறு வாய்க்காதவர்கள் இங்கு வந்து சப்தசாகர தீர்த்தத்தில் மூழ்கி,கோயிலில் உள்ள ராகு பகவானுக்குப் பாலபிஷேகம் செய்து, பால் பொங்கல் நிவேதனம் செய்து அதைச்சாப்பிட்டால் தோஷம் நீங்கிப் புத்திரபேறு அடைவர் என்பது வரலாறு. இதுவும் இன்று கண்கூடாக நடை பெறுகிறது.

தலவரலாற்றுச் செய்தி வருமாறு:- உமையம்மை, இறைவனை நோக்கி, மீண்டும் ஒருமுறை வந்து தன்னை மணந்து கொள்ளுமாறு வேண்டினார். இறைவனருள் தாமதிக்கவே உமாதேவி அக்குறிப் பறியாது நடந்தார். சினமுற்ற இறைவன் உமையைப் பசுவாகப் பிறக்கக் கட்டளையிட்டார். உமையும்; லட்சுமி சரஸ்வதி இந்திராணி சூழப் பசுவடிவங்கொண்டு அரசங்காடு முதலிய இடங்களில் உலவிவந்தார். திருமால், பசுக்களை மேய்ப்பவராக உருவங்கொண்டு அவைகளைப் பராமரித்து வந்தார். அம்பிகை (பசுவாகிய) பொழிந்த பாலால் பெருமான் உள்ளம் குளிரப் பெற்றும், குளம்பின் வருடலால் மகிழ்ந்தும், அம்பிகையை, பரதமகரிஷி நடத்திய யாகவேள்விக் குண்டத்தில் தோன்றித் திருமணஞ்சேரியில் மணஞ்செய்து கொண்டார் என்பது தலவரலாறு.

தேரழுந்தூரில் பசுவாகிப்பிறக்க அம்பாளுக்குச் சாபம் தரப்பட்ட தாகவும்; அசுவதக் காட்டில் பசுஉரு ஏற்று அம்பிகை உலவி வந்ததாகவும்; கோமலில் திருமால், மேய்ப்போனாக வந்து பசுக்களைப் பாதுகாத்து வந்ததாகவும்; திருக்கோழம்பத்தில் குளம்பின் வருடலை ஏற்றதாகவும்; திருவாவடுதுறையில் பசுவுக்கு முக்தி கொடுக்கப் பட்டதாகவும்; குத்தாலத்தில் பரதமகரிஷி நடத்திய யாகத்தீயில் உமையம்மை தோன்றியதாகவும்; திருவேள்விக் குடியில் கல்யாண நீராடலைக் கொண்டு கங்கணதாரணம் கொண்டதாகவும்; குறுமுலைப் பாலையில் பாலிகைஸ்தாபனம் செய்ததாகவும்; எதிர்கொள்பாடியில் இறைவன் எதிர்கொள்ளப்பட்டதாகவும், திருமணஞ்சேரியில் உமையம்மையை இறைவன் திருமணஞ் செய்து கொண்டதாகவும் சொல்லப்படுகின்றது. மன்மதன், ஆமை வழிபட்டதலம்.

இறைவன் - உத்வாகநாதசுவாமி, அருள்வள்ளல்நாதசுவாமி, கல்யாண சுந்தரேஸ்வரர்.

இறைவி - கோகிலாம்பாள்

தீர்த்தம் - சப்த சாகர தீர்த்தம் (இறைவனின் திருமணத்திற்கு மாலைகளாக மாறி வந்த சப்த சாகரங்களும் (ஏழு கடல்களும்)

Koviloor Digital Library

இங்கேயே தங்கித் தீர்த்தமானதாகச் சொல்லப்படுகிறது) - கோயிலின் பக்கத்தில் உள்ளது.

சம்பந்தரும் அப்பரும் பாடப்பெற்றது.

ராஜகோபுரம் பண்டைக் காலத்தில் மல்லப்ப நாய்க்கரால் கட்டப்பட்டதென்பர். இன்று ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. உட்புகுந்தால் கொடிமரம் நந்தி பலிபீடங்கள். அடுத்துள்ள முன் மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. மிகச்சிறிய திருமேனி-சுகாசனத்தில் அமர்ந்த திருக்கோலம். நேரே மூலவர் தரிசனம்.

உள்பிராகாரத்தில் நால்வர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, கால பைரவர், சனீஸ்வரன் சந்நிதிகள். கோஷ்டத்தில் பிட்சாடனர், பால கணபதி, நடராசர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, ராகு, துர்க்கை, கங்காவிசர்ஜனர் மூர்த்தங்கள் உள்ளன.

காரண ஆகமப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன. நாடொறும் ஐந்து கால வழிபாடுகள். சித்திரை மாதம் பூச நட்சத்திரத்தில் சுவாமிக்குக் கல்யாண உற்சவம் மூன்று நாள்கள் நடைபெறுகிறது.

''மொழியானை முன்னொரு நான்மறை ஆறங்கம்
பழியாமைப் பண்ணிசையான் பகர்வானை
வழியானை வானவர் ஏத்து மணஞ்சேரி
இழியாமை ஏத்தவல்லார்க்(கு) எய்தும் இன்பமே.''

(சம்பந்தர்)

''துன்னுவார் குழலாள் உமையா ளொடும்
பின்னுவார்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னுவார் மணஞ்சேரி மருந்தினை
உன்னுவார் வினையாயின் ஓயுமே.''

(அப்பர்)

-நண்ணு
வணஞ் சேரிறைவன் மகிழ்ந்து வணங்கும்
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அருள்வள்ளல்நாத சுவாமி திருக்கோயில்
திருமணஞ்சேரி & அஞ்சல் - 609 813
குத்தாலம் S.O. மயிலாடுதுறை வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

80/26. திருக்குறுக்கை

கொருக்கை

சோழநாட்டு (வடகரை)த் தலம்

மக்கள் வழக்கில் 'கொருக்கை' என்று வழங்குகிறது.

மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை - மணல்மேடு பேருந்துச் சாலையில் நீடூர் தாண்டி 'கொண்டல், பாலந்தாண்டி' 'கொண்டல்' ஊரையடைந்து' 'கொருக்கை' என்று வழிகாட்டிப் பலகை (கைகாட்டிமரம்) உள்ள (குறுக்கைச்) சாலையில் இடப்புறமாக 3 கி.மீ. சென்று (குறுகியபாதை) பாலத்தைக் கடந்து இத்தலத்தை அடையலாம். கார், வேன், பஸ் செல்லும். மயிலாடுதுறை - மணல்மேடு நகரப் பேருந்து உள்ளது.

அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. மன்மதனை எரித்த தலம். "ஆடல் அநங்கனை அமுது செய்த செங்கணான் இருக்கை ஈது" என்பது திருவிளையாடற்புராணத் தொடர். இத்தலம் திருக்குறுக்கை வீரட்டம் எனப்படும்.

தருமையாதீனத் திருக்கோயில். கோயில்வரை வாகனங்களில் செல்லலாம். இங்குள்ள சூல தீர்த்தத்தின் பெருமையறியாது, 'தீர்க்க பாகு' என்னும் முனிவர், கங்கை நீரைப் பெறவேண்டித்தம் கைகளை நீட்டியபோது அக்கைகள் குறுகிவிட்டன. அதுகண்டு தம்பால் பிழை நேர்ந்தது எண்றெண்ணித் தலையைப் பாறைமீது மோதமுற்பட, இறைவன் காட்சி தந்து, அவர் உடற்குறையைப் போக்கினார் என்பது தலவரலாற்றுச் செய்தி. 'குறுங்கை முனிவர்' இவர் பெயரால் இத்தலம் அழைக்கப்பட்டு, நாளடைவில் 'குறுக்கை' என்று ஆனதாகச் சொல்லப்படுகிறது.

யோகீசபுரம், காமதகனபுரம், கம்பகரபுரம் என்பன இதன் வேறு பெயர்கள். இலக்குமி, திருமால், பிரமன், முருகன், ரதி ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - வீரட்டேஸ்வரர்
இறைவி - ஞானாம்பிகை
தலமரம் - கடுக்கா
தீர்த்தம் - சூல தீர்த்தம் - கோயிலின் முன்பு உள்ளது.

அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. எதிரில் சூல தீர்த்தம் உள்ளது.

மேற்கு நோக்கிய சந்நிதி. ராஜகோபுரத்தில் பைரவர், தட்சிணா மூர்த்தி, சதாசிவர் முதலிய பலவகைச் சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் பன்றி, யானை, நரசிம்மம், மனிதன் ஆகிய நான்கு முகங்களையுடைய ஒரு மூர்த்தியின் உருவம் - சிற்பம் காணத்தக்கது.

வாயிலில் உள்புறமாகத் துவாரகணபதியும் சுப்பிரமணியரும் உள்ளனர். வெளிச்சுற்றில் தோட்டம் மட்டுமே - சந்நிதிகள் ஏதுமில்லை. கொடிமரம் இல்லை. நந்தி, பலிபீடம் மட்டும் உளது. வௌவால் நெத்தி மண்டபம். இம் மண்டபத்தில் இடப்பால் அம்பாள் - ஞானாம்பிகை சந்நிதி உள்ளது. தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். நான்கு திருக்கரங்கள். எதிரில் நந்தி, பலிபீடம் உள்ளது. இருபுறமும் துவாரபாலகியர் உள்ளனர். மண்டபத்தின் ஒருபுறம் பள்ளியறை உள்ளது.

வாயிலைக் கடந்து அடுத்த மண்டபத்தையடைந்தால் இடப்பால் வள்ளி தெய்வயானை சுப்பிரமணியர் தரிசனம். அடுத்து கஜலட்சுமி தரிசனம். பக்கத்தில் தலமூர்த்தியாகிய 'காம தகன மூர்த்தி' சந்நிதி உள்ளது. இடக்காலை மடித்து, வலக்காலைத் தொங்கவிட்டு, வலக்கை அபயமுத்திரையுடன், இடக்கையை மடக்கிய கால்மீது வைத்து, அமர்ந்த திருக்கோலத்தில் இம்மூர்த்தி காட்சியளிக்கின்றார். களிற்றுப் படிகள் உள்ளன. சந்நிதியின் உள்ளே பக்கத்தில் உமையும் எதிரில் ரதி, மன்மதன் உற்சவத் திருமேனிகளும் உள. சுவாமிக்குப் பக்கத்தில் சனகாதி முனிவர்களின் திருமேனிகள் உள்ளன. மன்மதன் கையில் கரும்பு வில்லும், ரதியின் கையில் கிளியும் உள்ளன.

காமதகனவிழா மாசிமகத்தன்று, இக்கோயிலில் சிறப்பாக நடை பெறுகின்றது. காமனைத் தகனம் செய்த இடம் 'விபூதிக்குட்டை' என்ற பெயரில் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. இக் குட்டையில் எங்கெடுத் தாலும் மண்ணானது விபூதியாகவேயுள்ளது. உள் பிராகாரத்தில் தலமரம் 'கடுக்கா' உள்ளது. குறுங்கை விநாயகர் - தலவிநாயகர் சந்நிதி உள்ளது. இச் சந்நிதியில் விநாயகர் சதுர ஆவுடையாரில் அமர்ந்த கோலத்தில் உள்ளார். பக்கத்தில் தீர்த்தபாகுமுனிவர் உருவம் உளது. அடுத்து, நின்ற கோலத்தில் 'சோகஹரேஸ்வரர்' காட்சிதரும் சந்நிதியுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாகத் துர்க்கை, பிரமன் (இம் மூர்த்தத்தின் மேலே ரதி, இறைவனை வேண்டுவதுபோல சுதையாலான சிற்பம் உள்ளது). லிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி நர்த்தனவிநாயகர்

Koviloor Digital Library

ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. சண்டேஸ்வரர் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது.

உள்பிராகார வலம் முடித்துப் படிகளேறி, மண்டபத்தை அடையலாம். மண்டபத்தின் வலப்பால் நவக்கிரக சந்நிதி. வாயிலைக்கடந்து உள்சென்றால் இடப்பால் நடராசசபை உள்ளது. எதிரில் வாயில் உள்ளது. இச் சபையில் சிவகாமி, மாணிக்கவாசகர் திருமேனிகள் உள. இச் சபை, 'சம்பு விநோத சபை', 'காமனங்கநாசனி சபை' எனப் பெயர் பெறும்.

துவாரபாலகர்களைக் கடந்து உட்சென்றால் நேரே மூலவர் தரிசனம். சுயம்பு மூர்த்தி. சதுர ஆவுடையார் - உயர்ந்த பாணம், மன்மதன் எறிந்த பஞ்ச பாணங்களுள் (ஐந்து அம்புகளுள்) ஒன்றான பத்மம் (தாமரை) பதிந்துள்ள அடையாளம் சுவாமி பீடத்தின் முன் புறத்தில் நடுவில் உள்ளது. நிறைவான தரிசனம். நாடொறும் நான்கு கால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன. பெருவிழாக்களும் மாதாந்திர விழாக்களும் முறையாக நடைபெறுகின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ள தலபுராணம் உள்ளது. சோழ, விஜயநகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் இக் கோயிலில் உள்ளன.

"நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று தருமராசற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே."

'நிறைமறைக்காடு தன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறை நிறத்தெலிதன் மூக்குச் சுட்டுடக்கனன்று தூண்ட
நிறைகடன் மண்ணும் விண்ணும் நீண்டவானு லகுமெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலும் குறுக்கை விரட்டனாரே.'

(அப்பர்)

-மணஞ்சேர்ந்து
வாரட்ட கொங்கை மலையாளொடுங் கொறுக்கை
வீரட்டமேவும் வியனிறைவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வீரட்டேஸ்வரர் திருக்கோயில்
கொருக்கை
நீடூர் அஞ்சல் - (வழி) நீடூர்
மயிலாடுதுறைவட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம் 609 203.

Koviloor Digital Library

81/27. திருக்கருப் பறியலூர்

மேலைக்காழி,

தலைஞாயிறு.

சோழ நாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'தலைஞாயிறு' என்றும், கொச்சையாக 'தலை ஞாயர்' என்றும் வழங்குகிறது. இஃது கொகுடிக்கோயில். கொகுடி என்பது ஒருவகை முல்லை. இதன் வடிவில் அமைந்த கோயில். ஊர் - கருப்பறியலூர். கோயில் - கொகுடிக்கோயில். கருமூலத்தை அழித்து ஞானம் நல்கும் தலமாதலின் 'கருப்பறியலூர்' என்று பெயர் பெற்றது. கன்மநாசபுரி என்றும் பெயருண்டு. சீகாழிக்கு மேற்கில் இருப்பதால் மேலைக்காழி என்றாயிற்று. சூரியன் வழிபட்டதால் தலைஞாயிறு ஆதித்யபுரி என்றும் பெயராயிற்று. முல்லை; தலமரமாதலின் முல்லை வனம் - யூதிகாவனம் என்றும் பெயர், கோயில் கட்டுமலைமேல் உள்ளது. வைத்தீஸ்வரன்கோயில் - திருப்பனந்தாள் சாலையில், 'தலைஞாயிறு' என்று கைகாட்டி உள்ள இடத்தில், பிரியும் சாலையில் (வலப்புறமாகச்) சென்றால் தலத்தையடையலாம். வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 8கி.மீ. தொலைவு.

இறைவன் - அபராத க்ஷமேஸ்வரர், குற்றம் பொறுத்த நாதர்

இறைவி - விசித்ர பாலாம்பிகா, கோல்வளைநாயகி

தலமரம் - கொகுடிமுல்லை

தீர்த்தம் - இந்திர தீர்த்தம்.

தருமையாதீனத் திருக்கோயில், வசிட்டர், ஆஞ்சநேயர், இந்திரன், ஆகியோர் வழிபட்டது. சம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது. இந்திரன் இறைவன் என்றறியாமல் அவர்மீது வச்சிரம் எறிந்த குற்றத்தைப் பொறுத்தருள் செய்தமையால் குற்றம்பொறுத்த நாதராயினார் என்பது வரலாறு. ராஜகோபுரம் மூன்றுநிலைகளை யுடையது. கிழக்கு நோக்கிய சந்நிதி. உள்மண்டபம் வௌவால் நெத்தி மண்டப அமைப்பினது. பிராகாரத்தில் சீகாழியிலிருப்பது போல உயர்ந்த தனிக்கோயிலாகச் சட்டைநாதர் சந்நிதி உள்ளது. மேலேறிச் சென்று தோணியப்பரைத் தரிசித்து அதற்கும்மேலே சென்று சட்டை நாதரைத் தரிசிக்க வேண்டும். தோணியப்பர் கையில் மான்மழு உளது. சுவாமி அம்பாள் மட்டும் உள்ளனர். சட்டை நாதரைத் தரிசிக்கச்

Koviloor Digital Library

செங்குத்தான மரப்படிகளை ஏறவேண்டும். தோணியப்பர் சந்நிதியை இத்தலத்தில் கர்ப்பஞானேஸ்வரர் கர்ப்பஞானபரமேஸ்வரி சந்நிதி என்றழைக்கின்றனர்.

இலிங்கோற்பவ மூர்த்திக்கு எதிரில் தலமரம் கொகுடி முல்லை உள்ளது. வலம்முடித்து உட்சென்றால் மண்டபத்தில் சித்தி விநாயகர் சந்நிதி. அடுத்து இத்தலத்திற்குரிய சிறப்பாக உள்ள உமாமகேஸ்வரர் சிலா ரூபத்தைத் தரிசிக்கலாம். பக்கத்தில் சுப்பிரமணியர் சந்நிதி. வலப்புறமாக வாயிலைக் கடந்தால் நேரே அம்பாள் சந்நிதி. இடப்பால் சுவாமி சந்நிதி. இலிங்கத் திருமேனி சற்று குட்டையான பாணத்துடன் காடசிதருகின்றது. உள்ளே நடராசத் திருமேனி உள்ளது. உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபச்சுவரில் நாரை வழிபடும் சிற்பம் உள்ளது. இத் தலத்தில் இதற்குண்டான தொடர்பு யாதெனத் தெரியவில்லை. நாடொறும் நான்கு காலவழிபாடுகள். பெருவிழா நடைபெறவில்லை. நவராத்திரி முதலிய சிறப்புக்கள் மட்டும் நடைபெறுகின்றன. பக்கத்தில் 'குரக்குக்கா' என்னும் தலமுள்ளது. மருதூர் அம்பலவாணப் புலவர் பாடிய தலபுராணம் உள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டில் இத்தலம் 'தனிநாயகச்சதுர்வேதிமங்கலம்' என்று குறிக்கப்பெறுகின்றது. இங்குள்ள கல்வெட்டொன்று, ஊர்ச்சபையார் கூடி, ஊர்ச்சபை உறுப்பினர் ஆவதற்குரிய சட்டதிட்டங்களை வகுத்த செய்தியைத் தெரிவிக்கின்றது. இத்திருக்கோயிலில் பூசை செய்யும் சிவாசாரியர் அர்ச்சனை செய்யுங்காலத்தில் அர்ச்சனையையும், அதற்குரிய சங்கல்பத்தையும் கூட அழகாகத் தமிழில் சொல்லிச் செய்த காட்சி மனத்தில் பசுமையாகவுள்ளது.

'வேதமொடு வேதியர்கள் வேள்வி முதலாகப்
போதினொடு போதுமலர் கொண்டு புனைகின்ற
நாதனென நள்ளிருள் முன் ஆடுகுழைதாழும்
காதவன் இருப்பது கருப்பறியலூரே.'

(சம்பந்தர்)

'நீற்றாரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்துதோன்றும்
காற்றானைத் தீயானைக் கதிரானை மதியானைக் கருப்பறியலூர்க்
கூற்றானைக் கூற்றுதைத்துக் கோல்வளையா ளவளோடுங்
கொகுடிக் கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்த போ(து) அவர் நமக்கு இனியவாறே

(சுந்தரர்)

Koviloor Digital Library

-ஓரட்ட
திக்குங்கதி நாட்டிச் சீர்கொள் திருத்தொண்டருளம்
ஒக்குங் கருப்பறிய லூரரசே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. குற்றம் பொறுத்தநாதர் திருக்கோயில்
தலைஞாயிறு &அஞ்சல் - (வழி) இளந்தோப்பு
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம் 609 201

82/28. திருக்குரக்குக்கா

திருக்குரக்காவல்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'திருக்குரக்காவல்' என்று வழங்குகிறது.

Koviloor Digital Library

1) வைத்தீஸ்வரன் கோயில் - திருப்பனந்தாள் சாலையில் 'இளந் தோப்பு' வந்து; ஊர்த் தொடக்கத்திலேயே உள்ள மருத்துவமனைக் கட்டிடத்திற்குப் பக்கத்தில் செல்லும் (திருக்குரக்காவல்) சாலையில் 3 கி.மீ உள்ளே சென்றால் கோயிலையடையலாம். கோயில் வரை வாகனங்கள் செல்லும். குருக்கள் வீடு பக்கத்திலேயே உள்ளது.

2) மயிலாடுதுறையிலிருந்து பஸ்ஸில் வருவோர் - 'பட்டவர்த்தி' செல்லும் நகரப் பேருந்தில் ஏறி,'மதகடி Stop' -ல் இறங்கி, மதகைத் தாண்டி இளந்தோப்பு வந்து, ஊர்த் தொடக்கத்திலயே உள்ள மருத்துவ மனையின் ஓரமாகச் செல்லும் திருக்குரக்காவல் சாலையில் 3 கி.மீ உள்ளே சென்று ஊரையும் கோயிலையும் அடையலாம். இவ்வுட் பாதைக்கு பஸ் வசதியில்லை. நடந்து செல்ல வேண்டும் (அ) இளந் தோப்பிலிருந்து சைக்கிளில் சென்று திரும்பலாம். பழவாற்றின் கரையில் உள்ள தலம். இதன் மறுகரையில் 'கருப்பறியலூர்' உள்ளது. அநுமன் வழிபட்ட பதி.

இறைவன் - குந்தளேஸ்வரர்
இறைவி - குந்தளாம்பிகை
தீர்த்தம் - கணபதிநதி

அப்பர் பாடல் பெற்றது.

ராஜகோபுரமில்லை. முகப்பு வாயிலைக் கடந்து சென்றால் பலிபீடம் நந்தி உள்ளன. கொடிமரமில்லை. பிராகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய ஆறுமுகர் (மயில்வாகனராய்), சந்நிதிகள் உள்ளன.

முன்மண்டபத்தில் வலப்பால் பைரவர், சூரியன், அநுமன் மூர்த்தங்கள் உள்ளன. அப்பர் மூலத்திருமேனி அழகாகவுள்ளது. சுவாமி சந்நிதி நேரே உள்ளது. வாயில் முகப்பில் அநுமன் சுவாமியைப் பூசிப்பதுபோல வண்ண ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

சுவாமி கிழக்கு நோக்கிய சந்நிதி. வலப்பால் அம்பாள் சந்நிதி. தெற்கு நோக்கியது. சிறிய அழகான திருமேனி. சுவாமி, அம்பாள் விமானங்கள் ஏகதள உருண்டையமைப்பில் உள்ளன. நாடொறும் இருவேளை பூஜைகளே பெருவிழாக்கள் எவையுமில்லை. அமா வாசை நாளில் அம்பாளுக்கு ஓமம் நடைபெறுகிறது.

''ஆல நீழல் அமர்ந்த அழகனார்
காலனை யுதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைகள் ஆலும் குரக்குக்காப்
பாலருக் கருள் செய்வர் பரிவொடே.'' *(அப்பர்)*

Koviloor Digital Library

-மிக்கதிரு
மாவளருஞ் செந்தாமரை வளருஞ்செய் குரக்குக்
கா வளரும் இன்பக்கன சுகமே

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. குந்தளேஸ்வரர் திருக்கோயில்
திருக்குரக்காவல் - இளந்தோப்பு அஞ்சல் - 609 201
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

83/29. திருவாழ்கொளிப்புத்தூர்

திருவாளப்புத்தூர், வாளொளிப்புத்தூர்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

தேவாரத்தில் இத்தலம் வாழ்கொளிப்புத்தூர் என்றும், தல புராணத்தில் வாளொளிப்புற்றூர் என்றும்; மக்கள் வழக்கில் திருவாளப் புத்தூர் என்றும் வழங்கப்பெறுகிறது.

1) வைத்தீஸ்வரன்கோயில் - திருப்பனந்தாள் சாலையில், இளந்தோப்பு தாண்டி, மேலும் சென்றால் சாலையில் உள்ள வாளொளிப்புத்தூரை அடையலாம். ஊரில் இடப்புறமாகச் செல்லும் பாதையில் சென்று கோடியிலுள்ள கோயிலை அடையலாம்.

2) மயிலாடுதுறை - மணல்மேடு பேருந்தில் சென்று இவ்வூரை யடையலாம்.

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையில் இங்கு வந்தபோது நீர்வேட்கை மிகுந்தது. இறைவன் முதியவர் உருவில் வந்து ஒரு கதையைத் தந்து, வாகை மரம் ஒன்றினடியில் அதையூன்றி, வெளிப்படும் நீரைப் பருகுமாறு கூறினார். அருச்சுனன் தன்கையிலிருந்த வாளை அவரிடம் தந்து, தான் நீர்பருகிவிட்டு வரும்வரை பாதுகாத்துத் தருமாறு கூறிச் சென்றான். இறைவன் அவன் தந்த வாளை அம்மரப் புற்றில் ஒளித்து வைத்து மறைந்தார். நீர் பருகித் திரும்பிய அர்ச்சுனன், இறைவனிடம் முறையிட அவரும் அதை வெளிப்படுத்தித் தந்து அருள்புரிந்தார் என்பது தலவரலாறு. இதனால் இத்தலம் வாள்ஒளி புற்றூர் ஆயிற்று

Koviloor Digital Library

என்பர். திருமால் மாணிக்க லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்ட தல மாதலின் இதற்கு அரதனபுரம் என்றும் பெயர்.

இறைவன் - மாணிக்கவண்ணர், ரத்னபுரீஸ்வரர்

இறைவி - பிரமகுந்தளாம்பாள், வண்டமர்பூங்குழலி

தலமரம் - வாகை. தீர்த்தம் - பிரமதீர்த்தம்

அர்ச்சுனன், திருமால், வண்டு வழிபட்ட தலம்.

சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

கிழக்கு நோக்கிய ஆலயம். கோயிலின்முன் பிரமதீர்த்தம் தாமரைக் குளமாகக் காட்சி தருகிறது.

முகப்பு வாயிலைக் கடந்து உட்சென்றால் பிராகாரத்தில் இடப்பால் வாகைமரம் உள்ளது. வேறு முக்கிய சந்நிதிகள் இல்லை. வௌவால் நெத்தி மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி. உள் பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, சரஸ்வதி, பைரவர், சந்திரன், சந்நிதிகள் உள்ளன. நால்வர் சந்நிதி உள்ளது. நடராச சபை தரிசிக்கத் தக்கது.

கோஷ்டமூர்த்தங்களுள் துர்க்கைச் சந்நிதி இங்கு மிகவும் விசேஷமாக வழிபடப் பெறுகின்றது. நேரே மூலவர் தரிசனம். சற்று உயர்ந்த பாணத்துடன் கூடிய இலிங்கத் திருமேனி.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இத்தலத்திற்குத் தலபுராணம் பாடியுள்ளார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் இத்திருக்கோயில் திருப்பணிகள் செய்யப்பட்டு 1-9-1985ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறும் இக்கோயிலில் பெருவிழா நடைபெறவில்லை. கார்த்திகைச் சோமவாரங்கள், நவராத்திரி, கார்த்திகைத் தீபம் முதலிய சிறப்பு உற்சவங்கள் மட்டுமே நடைபெறுகின்றன.

சுமார் 250 ஏக்கர் நிலமிருந்தும் கோயில் நித்திய வழிபாட்டிற்கும் வசதியின்றித் தவிக்கிறது. இரண்டாண்டுகளாகப் பணியாளர்களுக்கு ஊதியமில்லை. குருக்களின் முயற்சியால் வழிபாடு நடைபெறுகிறது. திருப்பணி செய்து காக்கப்படவேண்டிய கோயில். அறநிலையத் துறையின் பார்வை இதன் மீது என்றுபடுமோ?

Koviloor Digital Library

''சாகை ஆயிரமுடையார் சாமமும் ஓதுவதுடையார்
ஈகையார் கடைநோக்கி இரப்பதும் பலபலவுடையார்
தோகைமாமயிலனைய துடியிடை பாகமும் உடையார்
வாகைநுண்துளி வீசும் வாழ்கொளி புத்தூர்உளாரே.''

(சம்பந்தர்)

'மெய்யனை மெய்யினின்றுணர்வானை மெய்யிலாதவர்
தங்களுக்கெல்லாம்
பொய்யானைப் புரமூன்றெரித்தானைப் புனிதனைப் புலித்தோல்
உடையானைச்
செய்யனை வெளியதிருநீற்றிற் றிகழுமேனியன் மான்மறியேந்தும்
மை கொள்கண்டனை வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை
மறந்தென்னினைக் கேனே.''

(சுந்தரர்)

'சீர்பூத்த நறுங்கமல மேலவனும் மாலவனும் செம்பொனாய
ஊர்பூத்த சுதன்ம சபையானும் ஒளியீனும் முடிஉம்பராரும்
நார்பூத்த புவியாகும் குவியாரும் வந்திறைஞ்சி நாளும்நல்கி
ஏர்பூத்த வாளொளி புற்றூரமர் மாணிக்க லிங்கம் இருதாள்போற்றி.'

(தலபுராணம்)

-தாவுமயல்
தாழ்கொள் இருமனத்துக் காரிருணீத் தோர்மருவும்
வாழ்கொளி புத்தூர் மணிச் சுடரே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. மாணிக்கவண்ணர் திருக்கோயில்
திருவாளப்புத்தூர் - அஞ்சல் - 609 205
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

84/30. பழமண்ணிப்படிக்கரை

இலுப்பைப்பட்டு

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் இலுப்பைப்பட்டு என்று வழங்குகிறது. இலுப்பை - தலமரம். ஆதலின் இப்பெயர் பெற்றது. இத்தலத்தருகே பண்டைக் காலத்தில் மண்ணியாறு ஓடியதால் 'பழ மண்ணிப் படிக்கரை', ஆயிற்றென்பர். மதூகவனம் என்றும் பெயர் (மதூகம் - இலுப்பை : பட்டு - ஊர்). இறைவன் விஷத்தைப் பருகியபோது உமாதேவி தன் கரத்தால் அவருடைய கழுத்தை ஸ்பரிசித்த தலம்.

வைத்தீஸ்வரன் கோயில் - திருப்பனந்தாள் சாலையில் இளந் தோப்பு, வாளப்புத்தூர் ஆகியவற்றைத் தாண்டி, மணல்மேடு அடைந்து; பஞ்சாலையைத்தாண்டி 'பாப்பாகுடி' என்று கைகாட்டி உள்ள இடத்தில் பிரியும் (அது காட்டும்) சாலையில் (வலப்புறமாகச்) சென்று பாப்பாகுடியைத் தாண்டிச் சென்றால் இத்தலத்தை அடையலாம். பாண்டவர்கள் சித்திரைப் பௌர்ணமி நாளில் இங்கு வந்து பஞ்சலிங்கங்களையும் வழிபட்டதாக வரலாறு. பிரமனும் மாந்தாதாவும் நளனும் கூட, இங்கு வந்து வழிபட்டதாகத் தலவரலாறு கூறுகிறது.

இறைவன்	-	நீலகண்டேஸ்வரர், முத்தீஸ்வரர், பரமேஸ்வரர், மக தீஸ்வரர், படிக்கரைநாதர்.
இறைவி	-	அமிர்தகரவல்லி, மங்களநாயகி
தலமரம்	-	இலுப்பை.
தீர்த்தம்	-	பிரமதீர்த்தம், அமிர்ததீர்த்தம்

தருமர் வழிபட்டது நீலகண்டேஸ்வரர்; வீமன் வழிபட்டது மகதீஸ்வரர்; அருச்சுனன் வழிபட்டது படிக்கரைநாதர்; நகுலன் வழிபட்டது பரமேசர்; சகாதேவன் வழிபட்டது முத்தீசர், என்று சொல்லப்படுகின்றது.

தலவிநாயகர் - வலம்புரி விநாயகர், நடனவிநாயகர் என இரு விநாயகமூர்த்தங்கள். திரௌபதி வழிபட்டது வலம்புரி விநாயகர் எனப்படுகிறது. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

திருவாவடுதுறை ஆதீனக் கோயில்.

ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கிழக்கு நோக்கிய சந்நிதி. உள்ளே இடப்பால் தலமரம் இலுப்பை உள்ளது. பிராகாரத்தில்

Koviloor Digital Library

வீமன், நகுலன், பூசித்த லிங்கங்களும், அடுத்து திரௌபதி வழிபட்ட வலம்புரி விநாயகரும், வலப்பால் அமிர்தகரவல்லி அம்பாள் சந்நிதியும் உள்ளன. இடப்பால் சுப்பிரமணியரும், மகாலட்சுமி சந்நிதிகளும், அடுத்துச் சகாதேவன் லிங்கமும் உள்ளது. வலம்முடித்துப் படிகளேறி மேலே சென்றால் நேரே சுவாமி சந்நிதி (நீலகண்டேஸ்வரர்) தரிசனம்.

மேல் மண்டபத்தில் வலப்பால் தனிக்கோயிலில் படிக்கரை நாதரும் மங்கலநாயகியும் இருதனிச்சந்நிதிகளில் காட்சியளிக்கின்றனர். நடராசசபையில் உற்சவத் திருமேனிகளும் வைக்கப்பட்டு உள்ளன. பெருவிழா சித்திரைப் பௌர்ணமியில் ஏகதின உற்சவமாக நடைபெறுகிறது. சிவராத்திரி, நவராத்திரி, நடராசர் அபிஷேகங்கள், சஷ்டி முதலிய உற்சவ விசேஷங்கள் நடைபெறுகின்றன. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். இத்தலத்திற்குரிய தலபுராணம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களால் பாடப்பட்டுள்ளது.

''முன்னவன் எங்கள் பிரான்முதல் காண்பரிதாயபிரான்
சென்னியில் எங்கள் பிரான் திருநீல மிடற்றெம்பிரான்
மன்னிய எங்கள் பிரான் மறைநான்கும் கல்லால் நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான் பழமண்ணிப் படிக்கரையே.''

(சுந்தரர்)

நீர்பூத்த தாமரைப்பூ வுரியானுங்
    கரியானு நெடிய வானத்
தேர்பூத்த மற்றோரு முற்றோரும்
    பெருவரங்க ளிறைஞ்சி யெய்தக்
கார்பூத்த விருப்பைவன விருப்பைவன
    மெனப்புரிவோன் கலைநி லாவிற்
றார்பூத்த முடிக்கரைகொள் படிக்கரைநா
    யகன்மலர்த்தா டலைமேல் வைப்பாம்

(தலபுராணம்)

-தாழ்வகற்ற
நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துகின்ற
மண்ணிப் படிக்கரைவாழ் மங்கலமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்
இலுப்பைப்பட்டு - மணல்மேடு அஞ்சல் 609 202.
மயிலாடுதுறைவட்டம் - நாகப்பட்டினம்மாவட்டம்

தலம் –21

Koviloor Digital Library

85/31. ஓமாம்புலியூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம். கொள்ளிடக் கரையில் உள்ளது.

சிதம்பரத்திலிருந்தும், காட்டுமன்னார்குடியிலிருந்தும் பேருந்து வசதியுள்ளது. காட்டுமன்னார்குடியிலிருந்து ஓமாம்புலியூருக்கு பேருந்துச்சாலை நன்குள்ளது. சாலை ஓரத்தில் கோயில். கோயிலிருக்குமிடத்தில் பெயர்ப்பலகை உள்ளது. வியாக்ரபாதர் வழிபட்டதலம். இறைவன் தட்சிணாமூர்த்தியாக இருந்து உமாதேவிக்கு பிரணவப் பொருளை உபதேசித்ததலம். ஓமம் - வேள்வி, வேள்விச்சிறப்புடைய ஊர். இவ்வூர் பிற புலியூர்களிலிருந்து வேறுபாடறியும் பொருட்டு ஓமம் ஆம் புலியூர் = ஓமமாம்புலியூர் எனப்பட்டது. ஞானசம்பந்தர் பாடலில் ஓமமாம்புலியூர் என்றே வருகிறது. ஆனால் அப்பர் பாடலில் ஓமாம்புலியூர் என்று மருவிவருகிறது. (இக்கோயில் வடதளி என்றும் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.) பிரணவப் பொருளுபதேசம் நடந்த தலமாதலின் ஓம் - ஆம் - புலியூர் = ஓமாம்புலியூர் என்றாயிற்று என்றும் சொல்வர்.

இறைவன் - பிரணவ வியாக்ர புரீஸ்வரர், துயர்தீர்த்தநாதர், பிரணவபுரீஸ்வரர்

இறைவி - புஷ்பலதாம்பிகை, பூங்கொடி நாயகி.

தலமரம் - வதரி. (இலந்தைமரம்)

தீர்த்தம் - கொள்ளிடம், கௌரிதீர்த்தம்.

ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றதலம்.

கிழக்கு நோக்கிய கோயில். ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. எதிரில் கௌரிதீர்த்தம் உள்ளது. கரையில் தனியே ஒரு சிவாலயம். பிராகாரத்தில் ஆறுமுகப் பெருமான் சந்நிதி உள்ளது. வலமுடித்து உட் சென்றால் நேரே சுவாமி சந்நிதி. சதுரபீடத்தில் உயர்ந்த பாணத்துடன் இறைவன் காட்சிதருகின்றார் - சுயம்புமூர்த்தி. சுவாமி சந்நிதியில் ஒருபுறம் சலந்தரனை அழிக்கத்திருமாலுக்குச்சக்கரம் வழங்கிய சிற்பமும்; மறுபுறம் ஐந்து புலியூர்களில் வழிபடப்பட்ட ஐந்து சிவலிங்கங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இத்தலத்தில் உள்ள தட்சிணா மூர்த்தி மிகச்சிறப்புடையது. குருமூர்த்தத்தலம். உபதேசம் செய்த தட்சிணாமூர்த்தி (கோயிலுக்குள்ளேயே மூலமூர்த்தியாக) உயர்ந்த பீடத்தில் சிலாருபத்தில் காட்சிதருகின்றார். கோஷ்டத்தில் நடராசரின் சிலாருபம் (வியாக்ர பாதருக்குக் காட்சிதந்த வடிவம்) உள்ளது.

Koviloor Digital Library

ஏனையகோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர் முதலியோர் உளர். அம்பாள் சந்நிதி அழகாகவுள்ளது.

3ஆம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டில் இத்தலம் 'வடகரை விருதராசபயங்கர வளநாட்டு மேற்கா நாட்டுப் பிரமதேயம் ஓமாம்புலியூராகிய உலகளந்த சோழசதுர்வேதி மங்கலம்' என்றும்; இறைவன் பெயர் 'வடதளி உடையார்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத்திட்டத்தில் இத்திருக்கோயிலின் சுவாமி, அம்பாள், ஆறுமுகர் விமானங்கள் திருப்பணிகள் செய்து புதுப்பிக்கப்பட்டுள்ளன. மாசிமகத்தில் பெருவிழா, நவராத்திரி, சிவராத்திரி, கார்த்திகைச் சோமவாரங்கள் முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன. நாடொறும் நான்கு காலவழிபாடுகள். பக்கத்தில் உள்ளதலம் திருப்பழமண்ணிப்படிக்கரை.

''சம்பரற்கருளிச் சலந்தரன் வீயத் தழல் உமிழ் சக்கரம் படைத்த
எம்பெருமானார் இமையவர் ஏத்த இனிதின் அங்கு உறைவிடம் வினவில்
அம்பரமாகி அழல் உமிழ் புகையின் ஆகுதியால் மழை பொழியும்
உம்பர்கள் ஏத்தும் ஓமமாம்புலியூர் உடையவர் வடதளி அதுவே.

(சம்பந்தர்)

'அருந்தவத்தோர் தொழுது ஏத்தும் அம்மான்தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தம்மேல்
வருந்துயரம் தவிர்ப்பானை உமையாள் நங்கை
மணவாள நம்பியை என்மருந்து தன்னைப்
பொருந்து புனல்தழுவு அயல் நிலவு துங்கப்
பொழில் கெழுவுதரும் ஓமாம்புலியூர் நாளும்
திருந்து திரு வடதளியெஞ் செல்வன்றன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே.' *(அப்பர்)*

-விண்ணிடை
வாமாம் புலியூர் மலர்ச் சோலை சூழ்ந்திலங்கும்
ஓமாம் புலியூர் வாழ் உத்தமமே. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி :-

அ/மி. துயர்தீர்த்தநாதர் திருக்கோயில்
(பிரணவபுரீஸ்வரர் தேவஸ்தானம்)
ஓமாம்புலியூர் - அஞ்சல் - ஆயங்குடி - S. O.
காட்டுமன்னார்குடி வட்டம் - கடலூர் மாவட்டம். - 608 306.

Koviloor Digital Library

86/32. கானாட்டுமுள்ளூர்

கானாட்டம்புலியூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் கானாட்டம்புலியூர் என்று வழங்குகிறது. கொள்ளிடக்கரையில் உள்ள தலம்.

சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்குடி சென்று, அங்கிருந்து ஓமாம்புலியூர் செல்லும் பேருந்துச் சாலையில் சென்று, 'மோவூர்' தாண்டி, சாலையில் 'முட்டம்' என்று வழிகாட்டிக்கல் உள்ள இடத்தில் பிரியும் சாலையில் 3 கி.மீ. (இடப்புறமாக) சென்று 'முட்டம்' கிராமத்தையடைந்து, ஊருள் புகுந்து செல்லும் சாலை வழியே 1 கி.மீ. செல்ல இத்தலம் வரும். குறுகலான சாலை.

கோயில் வரை வாகனத்தில் செல்லலாம்.

ஓமாம்புலியூரிலிருந்தும் இத்தலத்திற்கு இவ்வழியே வரலாம். சிதம்பரத்திலிருந்து நகரப் பேருந்து உள்ளது.

இறைவன் - பதஞ்சலிநாதர்

இறைவி - கானார்குழலி, அம்புஜாட்சி, கோல்வளைக்கையாள்

தலமரம் - வெள்ளெருக்கு, (தற்போதில்லை)

தீர்த்தம் - கோயிலின் எதிரில் பெருங்குட்டை போலுள்ளது - சூரிய தீர்த்தம் எனப்படுகிறது.

சுந்தரர் பாடல் பெற்றது.

செங்கல்லாலான கோயில். மிகவும் பழமையானது. கிழக்கு நோக்கிய கோயில். மிகப் பழைய கோபுரம். உட்புறம் வலப்பால் அம்பாள் சந்நிதி. நடராச சபை சுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளன.

வலம் முடித்து உட்சென்றால் இடப்பால் பதஞ்சலி சிலையுள்ளது. நேரே மூலவர் சந்நிதி-சிவலிங்கத் திருமேனி, மிகக்குட்டையான பாணத்துடன் காட்சி தருகிறது.

விக்கிரம சோழன் காலத்திய கல்வெட்டில் இத்தலம் 'விருதராச பயங்கர வளநாட்டு கிழ்க்கானாட்டுமுள்ளூராகிய திருச்சிற்றம்பலச் சதுர்வேதி மங்கலம்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

தனியார் ஒருவருக்குச் சொந்தமான இக் கோயில் பல்லாண்டுகளாகத் திருப்பணிகள் செய்யப்படாமல், பெரும் பகுதி சிதைந்திருந்தது. இப்போதுதான் காலம் கணிந்து திருப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் என்பதே நம்பிரார்த்தனை. குருக்கள் 3.கி.மீ தொலைவிலுள்ள குஞ்சமேடு கிராமத்திலிருந்து வந்து பூஜை செய்கறார்.

'அருமணியை முத்தினை ஆன்அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தரு செம்பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழிந்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடும் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே.'

(சுந்தரர்)

-நேமார்ந்த
வானாட்டு முள்ளூர் மருவுகின்றோர் போற்று திருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பதஞ்சலிநாதர் திருக்கோயில்
கானாட்டம்புலியூர் - முட்டம் அஞ்சல் - 608 306
(வழி) ஆயங்குடி
காட்டுமன்னார்குடி வட்டம் - கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

87/33. திருநாரையூர்

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

சிதம்பரம் - காட்டுமன்னார் கோயில் (காட்டுமன்னார்குடி) சாலையில், குமராட்சியை அடுத்து, சாலையில் திருநாரையூர் 1 கி.மீ. என்று கைகாட்டி உள்ள இடத்தில் அதுகாட்டும் பாதையில் (இடப் புறமாக) சென்றால் தலத்தையடையலாம். சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ. சாலையில் சிமெண்ட் பெயர்ப்பலகையும் உள்ளது. சற்று குறுகலான பாதை. கோயில்வரை செல்லலாம். துர்வாசருடைய தவத்திற்கு இடையூறுசெய்த காந்தருவன் ஒருவன் சாபத்தால் நாரையாகி வழிபட்ட தலம். நம்பியாண்டார் நம்பிகள் அவதரித்ததலம். இங்குள்ள பொல்லாப் பிள்ளையாரின் அருளைக் கொண்டு இவர், தில்லையில் சேமித்து வைத்திருந்த தேவாரத் திருமுறைகளை உலகிற்கு வெளிப்படுத்தினார்.

இறைவன் - சௌந்தரநாதர்

இறைவி - திரிபுரசுந்தரி.

தலமரம் - புன்னாகம்.

தீர்த்தம் - காருண்யதீர்த்தம். (கோயிலுக்கு எதிரில் உள்ளது.)

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கிழக்கு நோக்கிய திருக் கோயில். முகப்புவாயிலைக் கடந்ததும் உள்இடம் விசாலமாகவுள்ளது. நந்திமண்டபம்-கொடிமரத்து விநாயகர் உள்ளார். கொடிமரமில்லை.

வலப்பால் அம்பாள் சந்நிதி. உள்கோபுரம் மூன்று நிலைகளை உடையது. உள் முகப்பு வாயிலின் மேற்புறம் ரிஷபாருடர் வண்ணச் சுதையில் அழகுறக் காட்சி தருகிறார். நேரே மூலவர் சந்நிதி தெரிகிறது. உட்பிராகாரத்தில் வலமாக வரும்போது சந்தானாசாரியர் சந்நிதி உள்ளது. அடுத்திருப்பது நால்வருடன் சேக்கிழாரும், அகத்தியரும், பகமுனிவரும் ஒரு சேரசிலாரூபத்தில் எழுந்தருளியுள்ள சந்நிதி. அடுத்த தரிசனம் இத்தலத்திற்குச் சிறப்பாகவுள்ள பொல்லாப்பிள்ளையார் சந்நிதியாகும். இதைச் சுயம்பிரகாசர் சந்நிதி என்றும் அழைக்கின்றனர். (பொள்ளல் - உளி கொண்டு செதுக்குதல். இவ்வாறு செதுக்கப்படாமல் தானே தோன்றியவர். பொள்ளலில்லாப் பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார் என்றாகி விட்டது.) சந்நிதிக்கு முன் மங்களூர் ஓடுவேயப் பெற்ற மண்டபம் உள்ளது. வலம்புரி விநாயகராகப் பிள்ளையார் தரிசனம் தருகின்றார். சந்நிதியில் உட்புறத்தில் திருமுறை கண்ட வரலாறு வண்ணப் படங்களாக வைக்கப்பட்டுள்ளன. நம்பியாண்டார்நம்பிகள், இராசராசன் ஆகியோரின் சிலாரூபங்கள் உள்ளன. அடுத்து சுப்பிரமணியர், கஜலட்சுமி, திருமூலநாதர் சந்நிதிகளும், தலமரமும்

Koviloor Digital Library

யாகசாலையும் உள்ளன. அடுத்துள்ள சந்நிதியில் நவக்கிரகங்கள், சனிபகவான், பைரவர், சூரியன் திருவுருவங்கள் ஒரே வரிசையில் வைக்கப்பட்டுள்ளன.

வலம்முடித்து மண்டபத்துள் நுழைந்தால் வலப்பால் நடராசசபை உளது. இடப்பால் நம்பியாண்டார் நம்பிகள் பாடியுள்ள திருநாரையூர் இரட்டைமணிமாலைப் பாடல்களும் தேவாரப் பதிகங்களும் பதிக்கப் பட்டுள்ளன. துவாரபாலகர்களை வணங்கி உட்சென்றால் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்துவைத்திருத்தலைக் காணலாம். இவற்றுள் நாரை, பொல்லாப்பிள்ளையார், இராசராசன், சந்திரசேகர், நால்வர் முதலியன தரிசிக்கத்தக்கன. கோஷ்டமூர்த்தங்களுள் தட்சிணா மூர்த்தியும், துர்க்கையும் தனிச்சந்நிதிகளாக ஆக்கப்பட்டு வழிபடப் பெறுகின்றன. நேரே மூலவர் தரிசனம். சௌந்தரநாதர் சௌந்தர்ய மாகவே காட்சி தருகிறார். அழகான சிவலிங்கத் திருமேனி.

கோயிலுக்கு எதிரில், நம்பியாண்டார் நம்பிகள் அவதரித்த இல்லம் அவர் பெயரில் நினைவாலயமாக (14-9-84ல்) ஆக்கப்பட்டுள்ளது. முன்புறத்தில் வளைவு உள்ளது. நம்பியாண்டார்நம்பிகள், விதானத்தின் கீழ், நின்ற திருக்கோலத்தில் கையில் அபிஷேகக் கலசத்துடன் காட்சிதருகின்றார். இதன் பின்னிடம் நந்தவனமாக உருவாக்கப்பட்டு வருகின்றது. நம்பியாண்டார் நம்பியின் பெற்றோர் - அநந்தேச சிவாசாரியார், கல்யாணி என்றும்; எருக்கத்தம்புலியூரில் யாழ்ப்பாணர் மரபில் வந்த "ஏந்திசைப்பாடினி" என்றும் ஊமைப்பெண், பொல்லாப் பிள்ளை யாரின் அருளால் பேசும் திறமை பெற்றாள் என்றும், அவரே பாடல்களுக்குப் பண் அமைத்துத் தந்தார் என்றும் சொல்லப்படுகிறது. நம்பியாண்டார் நம்பிகள் குரு பூசை ஆண்டு தோறும் புனர்பூச நாளில் கொண்டாடப்படுகிறது. இதற்கென வைப்பு நிதி ஒரு லட்சம் வைக் கப்பட்டுள்ளது. நித்திய வழிபாட்டுக் கட்டளையும் ஏற்படுத்தப்பட் டுள்ளது.

'பகர் மார்க்கண்டர் திருநாரை பாண்டவாதிபலர் முன்னாள்
அகமார் அன்பால் விதியுளியே அருச்சித்திறைஞ்ச அவ்வவர்க்குத்
தகமாக் கருணை புரிந்தருளித் தமியேம் பிறவி நீங்க நலம்
மிகமா வளஞ்சேர் திருநாரையூர் வாழ் விமலன் தாள்பணிவாம்.'

'பொருநாகப் பணியுடனே குழவிப் பிறையுஞ்
சடைமிசையே யணியும் பெருமான்
இருநாழித் தருமருநென் முதலா
எண்ணான் கறமும் பெருகப் புரிவாள்

Koviloor Digital Library

தருநாகத்தவர் முதல் எவ்வுயிருந்
தழையத் தழையும் பொழிலில் திகழும்
திருநாரைப் பதி வளருங் கருணைத்
திரிபுரசுந்தரி சரணம் பணிவாம்.'

'தன்னைக் குறித்த திருப்பணியுஞ்
சான்றோர் பிறர்க்குச் செயும் பணியும்
முன்னைத் தனது வழிபாடு
முடிப்போர்க் கினிதா முடிப்போனை
என்னை நினைத்துத் தனது பணி
யியற்றப் பணித்த இபமுகனைப்
புன்னைத் தருசூழ் திருநாரைப்
பொல்லா முதல்வன் தனைப்பணிவாம்.'

(தலபுராணம்)

'என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுகமழ் சோலை வியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்தி முகத்தான்.'

(திருநாரையூர் இரட்டைமணி மாலை)

'முகில்போல் பொழியும் மூவர் திருமுறை கண்டெடுக்கச் சோழேசன்
முக்காலத்தின் இயல்புணர்ந்த முத்தர் நம்பி யாண்டார்தாள்
புகழ ஆங்கே நிவேதித்த பொற்பார் மோதகாதியெலாம்
பொருந்தத் துதிக்கை யாலெடுத்துப் புசிக்க அவர்தாம் பின்கேட்க
மகிழைங்கரத் தோன் கனகசபை வாயுதிக்கிலிருக்கு தென்றே
வந்தே யருளத் திருமுறையால் வைய மெல்லாம் வாழவைக்கும்
திகழு நாரையூர்க்குமார சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெய்வக் குறப் பெண் மணவாளா சிறியேஞ் சிற்றில் சிதையேலே'.

*(காஞ்சி சிதம்பர முனிவர் பாடியுள்ள
சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக்கோவை பிள்ளைத் தமிழ்)*

'தீவினையாயின் தீர்க்க நின்றான் திருநாரையூர் மேயான்
பூவினைமேவு சடைமுடியான் புடைசூழப் பலபூதம்
ஆவினிலைந்துங் கொண்டாட்டு கந்தானடங்கார் மதின்மூன்றும்
ஏவினையெய் தழித்தான் கழலே பரவா எழுவோமே.'

(சம்பந்தர்)

Koviloor Digital Library

'பண்ணி னான்மறை பாடலோ டாடலும்
எண்ணிலார் புரமூன் றெரிசெய்ததும்
நண்ணினார் துயர் தீர்த்தலு நாரையூர்
அண்ணலார் செய்கை அம்ம அழகிதே.'

(அப்பர்)

-மேனாட்டுந்
தேரையூர்ச் செங்கதிர் போல் செம்மணிகள் நின்றிலங்கும்
நாரையூர் மேவு நடுநிலையே.

(அருட்பா)

''மருப்பை யொரு கைக்கொண்டு காரையூர் மன்னும்
பொருப்பை யடிபோற்றத்துணிந்தால் - நெருப்பை
அருந்த வெண்ணுகின்ற எறும்பன்றே யவரை
வருத்த வெண்ணுகின்ற மலம்.''

அஞ்சல் முகவரி :-

அ/மி. சௌந்தரநாதசுவாமி திருக்கோயில்
(சுயம்பிரகாசநாதசுவாமி தேவஸ்தானம்)
திருநாரையூர் & அஞ்சல் - 608 303
(வழி) லால்பேட்டை - காட்டுமன்னார்கோயில் வட்டம்
கடலூர் மாவட்டம்.

88/34. திருக்கடம்பூர்

மேலைக்கடம்பூர்,
மேலக்கடம்பூர்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் பேச்சு வழக்கில் மேலக்கடம்பூர் என்று வழங்குகிறது. கருவறை அடிப்பாகம் குதிரை பூட்டிய தேர் போன்ற அமைப்பில் (சக்கரங்களுடன்) உள்ள திருக்கோயில் - கரக்கோயில். 'கடம்பு' தலமரமாதலின் கடம்பூர் ஆயிற்று.

(1) சிதம்பரம் - எய்யலூர் (வழி) காட்டுமன்னார்குடி பேருந்தில் சென்று இத்தலத்தையடையலாம்.

Koviloor Digital Library

(2) காட்டுமன்னார்குடி - எய்யலூர் சாலையில் வந்து ஊரை யடையலாம். மெயின் ரோடில் முதலில் கீழ்க்கடம்பூர் 2 கி.மீ. என்று கைகாட்டி உள்ளது. அதன்பிறகே மேலைக்கடம்பூர் உள்ளது.

(3) ஓமமாம்புலியூர் வழிபட்டு அங்கிருந்து சுருக்கமான வழிமூலம் கடம்பூர் வரவிரும்புவோர், ஓமாம்புலியூர் - காட்டுமன்னார்குடி சாலையில் உள்ள மோவூர் வந்து, அங்கிருந்து ஆயங்குடி சாலையில் சென்று, ஆயங்குடி தாண்டி, எய்யலூர் - காட்டுமன்னார்குடி மெயின் ரோடில் வந்து கலந்து, காட்டுமன்னார்குடி பக்கமாகத்திரும்பிச் சென்றால் மேலக்கடம்பூரை அடையலாம். இது பேருந்து செல்லச் சற்றுச் சிரமமான பாதை -Single Road, வேன், காரில் செல்வோர் சுலபமாகச் செல்லலாம். மழைக்காலத்தில் செல்வதற்கு ஏற்றதன்று.

'தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான் தன்பணி செய்து கிடப்பதே என்கடன்' என்று பாடிய அப்பர் வாக்குக்குரியதலம். (ஊர் கீழைக்கடம்பூர், மேலைக்கடம்பூர் என இரு பிரிவாகவுள்ளது. கீழைக் கடம்பூரில் உள்ளது 'கடம்பூர் இளங்கோயில்' என்னும் (அப்பர்) வைப்புத்தலமாகும். இக்கோயில் கிலமாகியுள்ளது. பாடல் பெற்ற கோயில் மேலைக்கடம்பூரில் உள்ளது)

இந்திரன் வழிபட்டு அமுதகலசமும், முருகன் வழிபட்டு வில்லும் பெற்ற சிறப்புத்தலம். அங்காரகன் வழிபட்டதலமாதலின் இத்தோஷ முடையார் வழிபட அது நீங்கும்.

இறைவன் - அமிர்தகடேஸ்வரர்

இறைவி - வித்யுஜோதி நாயகி, சோதிமின்னம்மை.

தலமரம் - கடம்பு

தீர்த்தம் - சக்திதீர்த்தம் (கோயிலுக்குச் சற்று தூரத்தில் உள்ளது)

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றதலம். நகரத்தார் திருப்பணி பெற்றகோயில். இராசகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கிழக்கு நோக்கிய வாயில். கொடிமரமில்லை. முன்மண்டபத்தில் நின்று பார்த்தால் நேரேமூலவர் சந்நிதி. வலப்பால் அம்பாள் சந்நிதி - தெற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்.

வெளிமண்டபத்தில் நவக்கிரக சந்நிதி உளது. உள்மண்டபத்தில் நடராசசபை உள்ளது. திருமேனி மிகப்பழைமையானது. சுவாமி சந்நிதியில் உள்பக்கத்தில் உற்சவத்திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. நடராசர், சிவகாமி சிலாரூபம் உள்ளன. மூலவர் - இலிங்கத்திருமேனி ஒருபுறம் சாய்ந்து சற்று கூராகவுள்ளது. பிராகாரத்தில் உள்ள விநாயகர்

Koviloor Digital Library

திருவுருவம் சற்று சாய்ந்துள்ளது. இதுபற்றிச்சொல்லப்படும் வரலாறு :- ''இந்திரனின்தாய் இத்தலத்திறைவனை வழிபட்டு வந்தாள். அவள் முதுமை கருதி, எளிதாக வழிபட இந்திரன் குதிரைகளைப்பூட்டி, இக்கருவறையை இழுத்துச்செல்ல முற்பட்டபோது விநாயகரை வேண்டமறந்தான். ஆகவே விநாயகர் வலக்காலை ஊன்ற, அது அசையாமல் அப்படியே நின்றுவிட்டது. தன்பிழை உணர்ந்த இந்திரன் கருவறை எடுத்துச் செல்லும் முயற்சியை விட்டு விட்டு இங்கு வழிபட்டு அருள்பெற்றான்.''

விநாயகர் ஊன்றிய நிலையில் இருப்பதால் சந்நிதியில் விநாயகர் சற்றுச் சாய்ந்துள்ளார். சுப்பிரமணியர், நால்வர், மகாலட்சுமி, துர்வாசர், பைரவர், சனிபகவான், சந்திரன் சூரியன் சந்நிதிகளும் பிராகாரத்தில் உள்ளன. கருவறைச்சுவரின் வெளிப்புறத்தில் அழகான சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் அம்பாளைத் தன்தொடை மீதிருத்தி ஆலிங்கன மூர்த்தியாகக்காட்சிதரும் சிற்பம் மிகவும் அழகாகவுள்ளது. நாடொறும் நான்கு காலவழிபாடுகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் பெருவிழா நடைபெறவில்லை. நவராத்திரி முதலிய விசேஷகாலங்கள் மட்டும் நடைபெறுகின்றன.

''வானமார் திங்களும் நீரும் மருவிய வார்சடையானைத்
தேனமர் கொன்றையினானைத் தேவர் தொழப்படுவானைக்
கானமரும் பிணை புல்கிக் கலைபயிலுங் கடம்பூரில்
தானமர் கொள்கையினானைத் தாள்தொழ வீடெளிதாமே.''

(சம்பந்தர்)

'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே.'

(அப்பர்)

-பாரில்
உடம்பூர் பவத்தை யொழித்தருளு மேன்மைக்
கடம்பூர் வாழ் என்இரண்டு கண்ணே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்
மேலக்கடம்பூர் & அஞ்சல் (வழி) ரெட்டியூர்
காட்டுமன்னார்குடி வட்டம் - கடலூர் மாவட்டம் - 608 304.

Koviloor Digital Library

89/35. பந்தணைநல்லூர்

பந்தநல்லூர்

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் தற்போது பந்தநல்லூர் என்று வழங்குகிறது. அம்பிகை ஆடியபந்து இறைவன் ஏற்ற, வந்து அணைந்த இடமாதலின் பந்தணைநல்லூர் எனப்பெயர் பெற்றது.

கும்பகோணம் - பந்தநல்லூர்

திருப்பனந்தாள் - பந்தநல்லூர்

பேருந்து வசதி உள்ளது. குத்தாலத்திலிருந்தும் வரலாம்.

மயிலாடுதுறையிலிருந்து திருப்பனந்தாள் செல்லும் பேருந்து பந்தநல்லூர் வழியாகச் செல்கிறது. ஊரைத்தாண்டிச் சாலையோரத்தில் சற்று உள்ளடங்கிக் கோயில் உள்ளது. தென்கயிலை, கோவூர், கொன்றைவனம், விஷ்ணுபுரி, இந்திரபுரி, கண்வராச்சிரமம், வாலிநகர், பானுபுரி, ஆவூர், கந்துகபுரி என்பன இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள். காம்பீலி மன்னனின் மகன் குருடுநீங்கிய இடம். இதனால் இம்மன்னன் தன்மகனுக்குப் பசுபதி என்று பெயர் சூட்டியதோடு, திருக்கோயில் திருப்பணிகளையும் செய்து வழிபட்டதாக வரலாறு. இன்றும் திருக்குளம் இதன் தொடர்பாகக் காம்போச மன்னன் துறை என்றழைக்கப்படுகிறது. காமதேனு, திருமால், கண்வமகரிஷி வாலி, இந்திரன், பிரமன், சூரியன் முதலியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - பசுபதீஸ்வரர்

இறைவி - வேணுபுஜாம்பிகை, காம்பனதோளியம்மை

தலமரம் - சரக்கொன்றை

தீர்த்தம் - சூரியதீர்த்தம். கோயிலுக்கு எதிரில் நீராழி மண்டபத்துடன் உள்ளது.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.

ஊர் சிறியது. கோயில் நன்குள்ளது. காம்பீலிமன்னன் திருப் பணிகள் செய்து கட்டிய இக்கோயில் பிற்காலத்தில் சோழ மன்னர் களால் மேலும் திருப்பணிகள் செய்யப்பட்டன.

இத்தலவரலாறு :

உமாதேவி பந்துகொண்டு விளையாட விரும்பினாள். இறைவனும் நால்வேதங்களையே பந்துகளாக்கித் தந்துதவினார். உமாதேவி மிகவும் விருப்புடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அதற்கு இடையூறாக ஆகலாகாது என்றெண்ணிச் சூரியன்

Koviloor Digital Library

அஸ்தமிக்காதிருந்தான். காலநிலை மாறுவதுகண்டு தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். இறைவனும் அவ்விடத்திற்கு வந்தார். அவரையும் கவனியாது உமை விளையாடினாள். அஃதறிந்த இறைவன் கோபங்கொண்டு அப்பந்தைத் தன் திருவடியால் எற்றிட்டார். பந்தைக் காணாத உமை, இறைவனிடம் வந்து வணங்க, அம்பிகையைப் பசுவாகுமாறு சபித்தார். சாபவிமோசனமாக, அப்பந்து விழும்தலத்தில், கொன்றையின்கீழ் தாம் வீற்றிருப்பதாகவும் அங்கு வந்து வழிபடுமாறும் பணித்தார். அவ்வாறே திருமாலை உடன் ஆயனாக அழைத்துக்கொண்டு பசு உருவில் (காமதேனுவாகி) கண்வர் ஆசிரமம் அடைந்து அங்கிருந்து வந்தார். அங்கிருக்கும் நாளில் புற்று உருவிலிருந்த இறைவன் திருமேனிக்குப் பால் சொரிந்து வழிபட்டு வந்தார். ஆயனாக வந்த திருமால் நாடொறும் கண்வமுனிவரின் அபிஷேகத்திற்குப் பால்தந்து வந்தார். ஒருநாள் பூசைக்குப் பசுவிடம் பால் இல்லாமை கண்டு, சினமுற்றுப் பசுவின் பின்சென்று அதுபுற்றில் பால் சொரிவதுகண்டு சினந்து பசுவைத் தன் கைக்கோலால் அடிக்க, அப்பசுவும் துள்ளிட, அதனால் அதன் ஒருகாற் குளம்பு புற்றின்மீது பட - இறைவன் ஸ்பரிசத்தால் உமாதேவி தன்சுயவுருவம் பெற்றுச் சாபம் நீங்கி அருள் பெற்றார்.

பசுவுக்குப் பதியாக வந்து ஆண்டுகொண்டமையால் சுவாமி பசுபதி என்று பெயர் பெற்றார். இறைவன் எற்றிய பந்து வந்து அணைந்த இடமாதலின் பந்தணைநல்லூர் என்று ஊர்ப் பெயருண் டாயிற்று. மூலவர் - புற்று - சுயம்புமூர்த்தி. இதன் சிரசில் பசுவின் குளம்புச்சுவடு பதிந்திருப்பதை இன்றும் காணலாம்.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சி தருகிறது. கோயிலின் எதிரில் திருக்குளம் உள்ளது. உட்சென்றால் விசாலமான மண்டபம். இடப்பால் அம்பாள் சந்நிதியுள்ளது. பக்கத்தில் காளி சந்நிதி. வலப்பால் அலுவலகம் உளது. கவசமிட்ட கொடிமரம் - விநாயகர். பக்கத்தில் சுவர் ஓரத்தில் இவ்வூர்க் கோட்டையில் புதைந்து கிடந்து கண்டெடுக்கப் பட்ட பலரகமான குண்டுகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை சோழர் காலத்து யவனப் பொறிகளை எறிவதற்காகச் சேகரித்த குண்டுகளாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. பிராகாரத்தில் சந்நிதிகள் எவையுமில்லை. முழுவதும் நந்தவனப் பகுதியே. பக்கத்தில் உள்ள ஆதிகேசவப்பெருமாள்தான் உமையுடன் உடன் வந்தவர். தனிக்கோயிலாகப் பரிமளவல்லித் தாயாருடன் ஆதிகேசவப்பெருமாள் வீற்றிருக்கின்றார். வலமாக வந்து நுழையும் சுவாமி சந்நிதி வாயிலுக்குத் திருஞான சம்பந்தர் திருவாயில் என்று பெயர் எழுதப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இருபுறங்களிலும் தலப்பதிகங்கள் பதித்த கல்வெட்டுக்கள் உள. வாயிலைக்கடந்தால் மகாமண்டபம். நடராசசபை. இடப்பால் வாகன அறை. சற்று முன் சென்றால் வலப்பால் கல்யாணசுந்தரர் சந்நிதி. பீடத்தினடியில் தலவரலாற்றுச்சிற்பம் - (கொன்றையடியில் பசு புற்றில் பால் சொரிவது - பசுவைக்கோலோச்சி அடிப்பது) தகட்டில் வைக்கப் பட்டு உள்ளது. பக்கத்தில் இருபுறமும் துவாரவிநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள். பிராகாரத்தில் உள்ள நால்வர் சந்நிதியில் ஞானசம்பந்தர் மட்டும் பேருருவில் உள்ளார். தொடர்ந்து அறுபத்துமூவர் சிலா ரூபங்கள் தரிசனம். சட்டநாதர் சந்நிதி வண்ணச்சுதையில் அமைக்கப் பட்டுள்ளது. பிரமன், வாலி முதலியோர் வழிபட்ட லிங்கங்களும் கஜலட்சுமி, அன்னபூரணி சந்நிதிகளும் உள்ளன. தலமரம் சரக்கொன்றை உள்ளது. தலச்சிறப்பான சிலாரூபம் (பசு இலிங்கத்தின் மீது பால்சொரிவது) உள்ளது. பைரவரை அடுத்து நவக்கிரகங்கள் அனைத்தும் ஒரே வரிசையாகக் காட்சியளிக்கின்றன. இவற்றுக்கும் பக்கத்தில் சந்திரன், சூரியன், விநாயகர் உள்ளனர்.

உள்வலம் முடித்து, துவாரபாலகரைக் கைகூப்பித்தொழுது உட்சென்றால் பசுபதீஸ்வரர் தரிசனம். அர்த்த மண்டபத்தில் உற்சவ மூர்த்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பிட்சாடனமூர்த்தி மிகவும் அழகு. நேரே மூலவர் - சுயம்பு. குட்டையான பாணம். சிரசின் மீது பசுவின் குளம்பு அடையாளம் (பசுக்குளம்பு சேற்றில் படிந்தால் அந்த இடம் எப்படி இருக்குமோ அதுபோல) உள்ளது. புற்றில் பால் சொரிந்து சொரிந்து வெண்மையாகியதால் இலிங்கத் திருமேனி வெண்ணிறமாக வுள்ளது. புற்றாதலின் குவளை (கவசம்) சார்த்தியே அபிஷேகம் செய்கின்றனர். அம்பாள் சந்நிதி வடக்கு நோக்கியது. அம்பாள் தவம் செய்யுங் கோலமாதலின் இருபுறமும் ஐயனாரும் காளியும் காவலாகவுள்ளனர். மாசிமகத்தில் பெருவிழா நடைபெறுகிறது. நாடொறும் ஆறுகால வழிபாடுகள்.

சுமார் 900 ஏக்கர் நிலமிருந்தும் கோயிலுக்குப் பயனின்றியுள்ளது. வழிபாடு நடப்பதே சிரமமாகவுள்ளது. 20 ஆண்டுகளாகியும் குடமுழுக்குக்கு வழியில்லை.

சோழர், விசயநகரர் காலத்திய கல்வெட்டுக்களில் இத்தலத் திறைவன் பசுபதிதேவர் என்றும்; முதலாம் இராசராசன் கல்வெட்டில் இத்தலம் 'பந்தணைநல்லூர்' என்றும் குறிக்கப்பெறுகின்றது. இங்குள்ள கல்வெட்டொன்று முதலாம் இராசராசன் அரியணையேறிய 11 ஆம் ஆண்டில் செம்பியன்மாதேவி, ஒருவிளக்குக்குப் பன்னிரண்டு கழஞ்சு

Koviloor Digital Library

பொன்வீதம் மூன்று விளக்குகளுக்கு நிபந்தம் அளித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

''இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
இவைசொல்லி உல கெழுந் தேத்தக்
கடறினாராவர் காற்று ளாராவர்
காதலித்துறைதரு கோயில்
கொடிறனார்யாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டு கூத்தாடும்
படிறனார்போலும் பந்தணைநல்லூர்
நின்றஎம் பசுபதியாரே.''

(சம்பந்தர்)

''கண்ணமரு நெற்றியார் காட்டார் நாட்டார்
கனமழு வாட்கொண்டதோர் கையார் சென்னிப்
பெண்ணமருஞ் சடைமுடியார் பேரொன்றில்லார்
பிறப்பிலார் இறப்பிலார் பிணியொன்றில்லார்
மண்ணவரும் வானவரும் மற்றையோரும்
மறையவரும் வந்தெதிரே வணங்கியேத்தப்
பண்ணமரும் பாடலார் பைங்கணேற்றார்
பலியேற்றார் பந்தணைநல் லூராரே.''

(அப்பர்)

மந்திரமான ஐந்தெழுத்தினை நெஞ்சிற்
சிந்தித்தனு தினஞ்செபித்தவர் நாளும்
பந்தமதொழிந்து பந்தணைநல்லூர்ச்
சுந்தரன் சேவடி துன்னுவர் சுகமே.

(பசுபதீஸ்வரர்பதிகம்)
(பட்டீச்சுரம் மௌனசுவாமிகள்)

''மருந்தொன்று மில்லையோ பொருந்துநோய் தீர்க்கவும்
மனமதிற்க ருணையி லையோ
வஞ்சனே னென்னினும் அஞ்சினேன் அஞ்சினேன்
வன்பிணிக்கு ஆற்றகில்லேன்
அருந்தவர்க் கிரங்கி நல்லருள் புரியும் அம்பிகை
அமரர் பணிகின்ற அம்மே
அன்றுவளர் காழியர் கவுணியக் கன்றினுக்(கு)
அருள்ஞான அமுதம் உதவி
இருந்தமிழ் வேதமுறை பாடிடக்கேட்டு நல்
இன்புற்றிருந்த தாயே

Koviloor Digital Library

எளியனுக் கிரங்கியே கருணைநோக்கினால் எனக்(கு)
உறுபிணி அகற்றியருள்வாய்
பரிந்து நாவரையர்உறு சூலைமுன் தீர்த்தநின்
பட்சமதுஎனக்கும் வையாய்
பந்தணைநல்லூரில் அமர் காம்பனைய தோளியே
பரமசுகம் அருளும் உமையே.''

(காம்பனதோளிபதிகம்)
(பட்டீச்சுரம் மௌனசுவாமிகள்)

-தடம்பொழிலிற்
கொந்தணவுங் கார்குழலாள் கோலமயில் போலுலவும்
பந்தணைநல்லூர்ப் பசுபதியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பசுபதீஸ்வரர் திருக்கோயில்
பந்தநல்லூர் & அஞ்சல் 609 807.
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்

Koviloor Digital Library

90/36. கஞ்சனூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

(1) மயிலாடுதுறை - கல்லணை - சாலையில் ‘அஞ்சார்வார்த் தலை’ என்னுமிடத்தில் வலப்பால் பிரியும் பந்தநல்லூர் - கும்பகோணம் சாலையில் சென்று, கதிராமங்கலத்தை அடைந்து, அங்கிருந்து இடப்புறமாகச் செல்லும் கும்பகோணம் பாதையில் மேலும் சென்று திருக்கோடிக்காவல் தாண்டி ‘கோட்டூர்’ ‘கஞ்சனூர்’ என்று வழிகாட்டிப் பலகையுள்ள திசையில் பிரிந்து, வலப்புறமாகத் திரும்பிச் சிறிது தூரம் சென்றால் தெருக்கோடியில் கோயிலைக் காணலாம்.

(2) கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதியுள்ளது. திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள தலம்.

Koviloor Digital Library

பலாசவனம், பராசரபுரம், பிரமபுரி, அக்கினிபுரம், கம்சபுரம், முத்திபுரி என்பன இதற்கு வேறுபெயர்கள்.

பராசரருக்குச் சித்தப்பிரமை நீங்கியதும்; பிரம்மனுக்குத் திருமணக் காட்சி தந்ததும்; அக்கினிக்கு உண்டானசோகை நோயைத்தீர்த்ததும்; சந்திரனின் சாபம் நீங்கியதும்; கம்சன் என்னும் மன்னனின் உடற்பிணி நீங்கியதும்; கலிக்காமருக்குத் திருமணம் நடந்ததும்; மானக் கஞ்சாற நாயனார் அவதரித்து வழிபட்டசிறப்பினதும் ஆகிய பல்வகைப் பெருமைகளையும் உடைய தலம். இவற்றுக்கும் மேலாக பஞ்சாட்சர மகிமையை வெளிபடுத்திய ஹரதத்த சிவாசாரியார் அவதரித்த தலம். இவருக்கு இறைவன் அருள்செய்த வரலாறு தனிப்பெருமையுடையது.

இறைவன் - அக்னீஸ்வரர்

இறைவி - கற்பகாம்பிகை

தலமரம் - பலாச மரம்

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம், பராசர தீர்த்தம் முதலியன.

அப்பர் பாடல் பெற்ற தலம்.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத் திருக்கோயில்

ஹரதத்த சிவாசாரியார் வரலாறு வருமாறு :

முன்பொரு காலத்தில் கஞ்சனூரில் வாசுதேவர் என்னும் வைணவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு சுதர்சனர் என்ற குழந்தை பிறந்தது. வைணவக் குடும்பத்தில் பிறந்தாலும் அக்குழந்தை சிவபக்தியில் சிறந்து விளங்கியது. திருநீறு, உருத்திராக்கதாரியாகத் திகழ்ந்த அக்குழந்தை, தந்தை எவ்வளவோ சொல்லியும் கேட்க வில்லை. அவ்வூர் மக்கள் சொல்லியவாறே பழுக்கக் காய்ச்சிய இரும்பு முக்காலிமீதமர்ந்து சிவமே பரம்பொருள் என்று அக்குழந்தை மும்முறை கூறியதைக் கண்டவர்கள் வியந்தனர். இக்காட்சியைச் சித்தரிக்கும் உருவம் இவ்வூர்ப் பெருமாள் கோயிலிலும், அக்னீஸ்வரர் கோயில் நடராசர் சந்நிதியிலும் உள்ளது. பெருமாள் கோயிலிலும் அக்னீஸ்வரர் கற்பகாம்பாள் எழுந்தருளியுள்ளனர். ஹரதத்தருக்கு உபதேசித்தருள் செய்த தட்சிணாமூர்த்தி திருவுருவில் ஹரதத்தரின் உருவமும் உள்ளது. இம்மூர்த்தியே சுதர்சனரை ஆட்கொண்டு ஹரதத்தர் என்ற பெயரளித்துச் சிவநாம தீட்சை செய்தவர்.

ஒரு செல்வந்தர் தினந்தோறும் அக்னீஸ்வரருக்கு நைவேத்தியம் படைத்து வந்தார். அன்றாடம் அவர் கனவில் இறைவன் தோன்றி

Koviloor Digital Library

அவ்வுணவை உண்பதுபோலக் காட்சி தருவார். ஒருநாள் அக்கனவு தோன்றவில்லை. காரணம் புரியாது அவர் விழித்தார். விசாரித்ததில் அன்று அக்னிஸ்வரர், ஹரதத்தரிடம் ஏழைப் பிராமணர் வடிவில் சென்று கஞ்சியை வாங்கியுண்டதாகவும் அதனால் வயிறு நிரம்பிவிட செல்வந்தரின் உணவை ஏற்கவில்லை என்றும் உணர்ந்தார்.

இதன்மூலம் ஹரதத்தரின் பெருமையையறிந்து அச்செல்வர் அவரை நாடிச்சென்று வணங்கியதாக வரலாறு சொல்லப்படுகிறது. ஆலயத்தில் ஹரதத்தரின் குடும்பமும் ஏழை அந்தணராக வந்த இறைவனின் திருவுருவமும் உள்ளன. ஊருள் வரும்போது அரச மரத்தின் எதிரில் கிழக்கு நோக்கி ஹரதத்தர் சிவபூசை செய்வதுபோல உள்ள ஹரதத்தர் தனிக்கோயிலும் இத்தலத்தில் உள்ளது.

கோயில் இராசகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. பழமை யான கோயில். கோயிலின் பக்கத்தில் அலுவலகம் உளது. தெற்கு வாயில் வழியாக உள்வந்தால் உள்மண்டபம் உள்ளது. பிராகாரமாக வலம் வந்து மண்டபத்தையடைந்தால் இடப்பால் விநாயகர் தரிசனம், வலப்பால் விசுவநாதர் சந்நிதி, அடுத்து அம்பாள் சந்நிதி.

உள்வாயிலைத் தாண்டி சுவாமி சந்நிதிக்குச் செல்லும்போது இடப்பால் (வௌவால் நெத்தி மண்டபத்தில்) விநாயகர், மயூர சுப்பிரமணியர், மகாலட்சுமி சந்நிதிகள் உள. தலமரம் - புரசு (பலாசு) உள்ளது. இதன்கீழ் அக்னீஸ்வரர் லிங்கம் தரிசனம். அடுத்து மானக்கஞ்சாறர், கலிக்காமர் திருவுருவங்கள் உள்ளன. பக்கத்தில் சுரைக்காய்ப் பக்தர் என்ற அடியார் மனைவியுடன் காட்சி தருகிறார்.

பக்தர் ஒருவர் இவ்வூரைச் சேர்ந்தவர் சுரைக்காய் விற்றுப் பிழைத்து வந்தார். இதனால் இவர் பெயர் சுரைக்காய் பக்தர் என்றா யிற்று. இவரிடம் ஒரே ஒரு சுரைக்காய்தான் எஞ்சியிருந்தது. அதை விதைக்கு ஆகும் என்று அப்படியே வைத்துவிட்டார். அந்நிலையில் இறைவன் அவரிடம் விருந்தினராக வந்து உணவிடுமாறு கேட்க, அப்போது செய்வதறியாது திகைத்தார். அதிதிகட்குச் சுரைக்காய் கறிக்கு ஆகாது என்றெண்ணிக் கலங்கினார். அப்போது இறைவன் அசரீரியாக 'ஒரு பாதி விதைக்கு, ஒரு பாதி கறிக்கு' என்றருளிச் செய்து ஏற்று, அவருக்கு அருள்புரிந்தார் என்றொரு வரலாறு சொல்லப்படுகிறது.

மகா மண்டபத்தில் பைரவர், சூரியன், சனிபகவான், சந்திரன், நவக்கிரகச் சந்நிதி, நால்வர் சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள நடராச சபை தரிசிக்கத் தக்கது. நடராசர் மூலத்திருமேனியில் சிவகாமியுடன் (சிலாரூபமாக) இருப்பது தனிச் சிறப்பும் அழகும் வாய்ந்தது. இம்

Koviloor Digital Library

மூர்த்தியே பராசரருக்குத் தாண்டவக் காட்சியளித்தவர். இத் தாண்டவம் முத்தித் தாண்டவம் எனப்படுகிறது. இம்மண்டபத்திற்கும் முக்தி மண்டபம் என்று பெயர்.

வாயிலில் கொடிமரத்தை அடுத்துள்ள நந்தி விசேஷமாகச் சொல்லப்படுகிறது. இக்கல் நந்தி புல் அருந்தியதாகச் சொல்லப்படும் செய்தி சுவையானது. பிராமணர் ஒருவர் புல்லுக்கட்டொன்றைத் தெரியாமல் போட்டுவிட்டதால் பசுக் கன்று ஒன்று இறந்தது. இதனால் பசுத்தோஷம் அவருக்கு நேர்ந்தது என்று பிராமணர்கள் அவ்வேழைப் பிராமணரைத் தங்களிடமிருந்து விலக்கி வைத்துவிட்டனர். அவர் செய்வதறியாது ஹரதத்தரிடம் சென்று முறையிட்டார் - அவ்வாறு முறையிடும்போது பஞ்சாட்சரத்தைச் சொல்லியவாறே சென்றார். அதைக்கேட்ட ஹரதத்தர் சிவபஞ்சாட்சரத்தைச் சொல்லியதால் அப்பாதகம் நீங்கிவிட்டதாகச் சொன்னார். பிராமணர்கள் அதை ஏற்காமல் தங்கட்கு நேரடிச் சான்று தந்து நிரூபிக்குமாறு கூறினர். ஹரதத்தர் உடனே அப்பிராமணரை அழைத்து, காவிரியில் நீராடி ஒரு கைப்புல் எடுத்து வந்து அந்தக் கல்நந்தியிடம் தருமாறு பணித்தார். அப்பிராமணரும் அவ்வாறே செய்து, ''கல்நந்தி புல் சாப்பிடுமானால் பஞ்சாக்ஷரத்தால் தோஷம் நீங்கும்'' என்று சொல்லிப் புல்லைத்தர, அந்நந்தியும் உண்டதாக வரலாறு, (இந்நந்தி புல் அருந்தியதால் நாக்கு வெளியில் நீட்டிக்கொண்டிருக்கவில்லை.)

மூலவர் கிழக்கு நோக்கிய சந்நிதி. உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மூலவர் அக்னீஸ்வரர் சுயம்பு மூர்த்தி - உயர்ந்த பாணத்துடன் மனநிறைவான தரிசனம்.

அம்பாள் சந்நிதி - திருமணக்கோலக் காட்சி. நின்ற திருக்கோலம். நாடொறும் ஆறுகால வழிபாடுகள்.

மாசி மகத்தில் பெருவிழா ஏகதின விழாவாக நடத்தப்படுகிறது. தைத்திங்களில் ஹரதத்தருக்குக் காட்சி தந்த விழா சிறப்பாக நடைபெறுகிறது. ஆடிப்பூரம், திருவாதிரை, நவராத்திரி, சிவராத்திரி முதலிய விசேஷங்களும் நடைபெறுகின்றன.

சோழர், விஜயநகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்களில் இத்தலம் 'விருதராச பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டுக் கஞ்சனூர்' என்றும்; இறைவன் பெயர் 'அக்னீஸ்வரம் உடையார்' என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

'மூவிலை நற்சூலம் வலனேந்தினானை
மூன்று சுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடை யொன்றேறுவானை
நால் வேதம் ஆறங்க மாயினானை
ஆனிலைந்து கந்தானை அமரர் கோவை
அயன் திருமால் ஆனானை அனலோன் போற்றும்
காவலனைக் கஞ்சனூராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே.'

(அப்பர்)

-கந்தமலர்

அஞ்சனூர் செய்தவத் தாலப் பெயர் கொண்ட
கஞ்சனூர் வாழும் என்றன் கண்மணியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. அக்கினீஸ்வரர் திருக்கோயில்
கஞ்சனூர் & அஞ்சல் - 609 804
(வழி) துகிலி.
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

91/37. திருக்கோடிகா

திருக்கோடிகாவல்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் திருக்கோடிகாவல் என்று வழங்குகிறது.

(1) கும்பகோணம் - கதிராமங்கலம் சாலையில் சென்று இத்தலத்தை அடையலாம்.

(2) மயிலாடுதுறை - குத்தாலம் (வழி) கதிராமங்கலம் சாலை வழியாகவும் வந்து இத்தலத்தையடையலாம். சாலையோரத்தில் உள்ள ஊர். ஊரில் ''பெரிய கோயில்'' என்று கேட்டால் வழி சொல்லுவார்கள். ஊர்க்கோடியில் கோயில் உள்ளது. கண்டராதித்தசோழன் மனைவியான செம்பியன் மாதேவி இக்கோயிலைக் கற்றளியாக்கினார்.

இறைவன் - கோடீஸ்வரர், கோடிகாநாதர்.

இறைவி - திரிபுரசுந்தரி, வடிவாம்பிகை.

Koviloor Digital Library

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ஐந்து நிலை ராஜகோபுரம் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. கவசமிட்ட கொடிமரமும், கொடிமரத்து விநாயகர், பலிபீடம், நந்தியும் உள்ளன. முன்மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. வடிவாம்பிகை நின்ற கோலத்தில் தரிசனம் தருகிறாள். உள்வலத்தில் கரையேற்றும் விநாயகர், மயில்வாகனர், சிவலிங்கமூர்த்தங்கள், கஜலட்சுமி, ஜேஷ்டாதேவி, காலபைரவர், சூரியன், சந்திரன், சனிபகவான், துர்வாசர் சந்நிதிகள் உள்ளன. கோஷ்டமூர்த்தங்களாக நர்த்தனவிநாயகர், நடராசர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். வலம் முடித்து உள்மண்டபம் சென்று துவார விநாயகரையும் பாலசுப்பிரமணியரையும் தரிசித்து வாயில் கடந்தால் நேரே மூலவர் தரிசனம். சதுரபீடம் - உயர்ந்த பாணம் - கம்பீரமாகக் காட்சியளிக்கின்றார்.

''இன்று நன்று நாளைநன்று என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரி புனல்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.''

(சம்பந்தர்)

''நெற்றிமேல் கண்ணினானே நீறுமெய் பூசினானே
கற்றைப் புன் சடையினானே கடல்விடம் பருகினானே
செற்றவர் புரங்கள் மூன்றும் செவ்வழல் செலுத்தினானே
குற்றமில் குணத்தினானே கோடிகாவுடைய கோவே.'' *(அப்பர்)*

''காலைக் கலையிழையாற் கட்டித்தாங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மைஎழுதி - மேலோர்
பருக்கோடி மூடிப் பலர் அழா முன்னம்
திருக்கோடிகா அடைநீ சென்று.''

(ஐயடிகள் காடவர்கோமான்)

-அஞ்சுகங்கள்
நாடிக்காவுள்ளே நமச்சிவாயம் புகலுங்
கோடிக்காமேவுங் குளிர்மதியே. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி :-

அ/மி. கோடீஸ்வரர் திருக்கோயில்
திருக்கோடிகாவல் & அஞ்சல் 609 802.
(வழி) நரசிங்கன் பேட்டை
திருவிடை மருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்

Koviloor Digital Library

92/38. திருமங்கலக்குடி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

(1) கும்பகோணம் - கதிராமங்கலம் - மயிலாடுதுறை பேருந்துச் சாலையில் திருமங்கலக்குடி உள்ளது. இத்தலத்திலிருந்து திருக்கோடிகாவல், ஆடுதுறை முதலிய தலங்களுக்குச் செல்லலாம். கோயில் வழியாகச் செல்லும் பாதை திருப்பனந்தாள் செல்கிறது. ஊரின் தொடக்கத்தில் இடப்புறமாகப் பிரிந்துசெல்லும் (திருப்பனந்தாள்) சாலையில் சென்றால் வீதியின் கோடியிலுள்ள கோயிலை அடையலாம்.

இறைவன் - பிராணவரதேஸ்வரர்.

இறைவி - மங்கள நாயகி.

தலமரம் - வெள்ளெருக்கு.

தீர்த்தம் - காவிரி.

Koviloor Digital Library

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனக் கோயில். காளி, சூரியன், திருமால், பிரமன், அகத்தியர் ஆகியோர் வழிபட்டது. இத்தலம் பஞ்ச மங்கள க்ஷேத்ரம் என்று புகழப்படும் சிறப்புடையது. (மங்கள விமானம், மங்களவிநாயகர், மங்களாம்பிகை, மங்களதீர்த்தம், மங்கலக்குடி.)

இத்தலவரலாறு வருமாறு :

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மந்திரியொருவன் மன்னனின் வரிப்பணத்தைக் கொண்டு திருமங்கலக்குடியில் அ/மி. பிராணவரதேஸ் வரருக்குக் கோயில் கட்டினான். அதையறிந்த மன்னன் சினமுற்று மந்திரியைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டான். மந்திரியின் மனைவி அத்தலத்து மங்களாம்பிகையிடம் தனக்கு மாங்கல்யக்காப்பு தருமாறு நெஞ்சுருகி வேண்டினாள். மந்திரி அரசனிடம் தன் உடலைத் திருமங்கலக்குடியில் அடக்கம் செய்யுமாறு வேண்டினான். மன்னன் உத்தரவு நிறைவேற்றப்பட்டு, மந்திரியின் உயிரற்ற உடலை எடுத்து வரும்போது திருமங்கலக்குடியை அடைந்ததும், மங்களாம்பிகை அருளால் அவன் உயிர் பெற்றான். மங்களாம்பிகை மாங்கல்யக்காப்பு தந்தருளி ஆட்கொண்டாள். அன்று முதல் தன்னை வழிபடுவோர்க்கும் மாங்கல்ய பலம் அருளுவதாக அம்பிகை அருளினாள் என்பது வரலாறு. ஆகவே திருமணத்தடை ஏற்படுகின்றவர்கள் இங்கு வந்து அம்பாளை அருச்சித்து வழிபடுகிறார்கள். இப்பகுதியில் இவ்வர லாற்றையொட்டி

''பிராணன் தந்த பிராணவரதேஸ்வரர்''
''மாங்கல்யம் தந்த மங்களாம்பிகை''

என்ற மொழி மக்கள் வழக்கில் இருந்து வருகின்றது.

நவக்கிரகங்களின் தோஷம் நீங்கிய தலம் சூரியனார் கோயில். அத்தோஷத்தை நீக்கியருளிய பெருமான் திருமங்கலக்குடியில் எழுந்தருளியுள்ள பிராணவரதேஸ்வரரேயாவார். ஆகவே திருமங்கலக் குடியை வழிபட்ட பின்பே சூரியனார் கோயில் சென்று வழிபட வேண்டும் என்பது மரபாக இருந்து வருகின்றது. கோயிலுக்கு வெளியே திருக்குளம் உள்ளது. ஐந்து நிலை ராஜகோபுரம். முன் மண்டபத்தில் நந்தி, பலிபீடம். வெளிச்சுற்றில் விநாயகர் சந்நிதி, முன்மண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. உள்சுற்றில் பதினோரு சிவலிங்கத் திருமேனிகள் வரிசையாகவுள்ளன; விநாயகர், ஆறுமுகர், கஜலட்சுமி பைரவர் சந்நிதிகளும் நடராசசபையும் உள்ளன. இரு நடராஜ மூர்த்தங்கள் உள்ளன. ஒன்று ஆனித்திருமஞ்சன நாளிலும்

Koviloor Digital Library

மற்றது ஆருத்ராவிலும் உலாவருமாம். வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம்.

மூலவர் - நீண்டுயர்ந்த பாணம். உற்சவ மூர்த்தங்களுள் சந்திர சேகரர், மயில்வாகனர், நால்வர், பிரதோஷ நாயகர் முதலியவை சிறப் பானவை. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, ரிஷபாருடர், பிரம்மா, துர்க்கைத் திருவுருவங்கள். உடலில் வியாதியுள்ளவர்கள் இங்கு வந்து கார்த்திகை முதல் ஞாயிறு தொடங்கி 11 ஞாயிற்றுக்கிழமைகளில் இங்குள்ள வெள்ளெருக்கு இலையில் தயிர்சாதம் சுவாமிக்கு நிவேதனம் செய்து சாப்பிட்டு வந்தால் வியாதியிலிருந்து நீங்கப்பெறுவர் என்பது வரலாறு. இன்றும் பலர் அவ்வாறு செய்து குணமடைந்து வருகிறார்கள்.

1919ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. அதற்குப் பிறகு தற்போது ராஜகோபுரத் திருப்பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

''சீரினார்மணியும் அகில்சந்தும் செறிவரை
வாரிநீர் வருபொன்னி வடமங்கலக்குடி
நீரின் மாமுனிவன் நெடுங்கை கொடுநீர்தனைப்
பூரித்து ஆட்டிஅர்ச்சிக்க இருந்த புராணனே!'.

(சம்பந்தர்)

''செல்வ மல்கு திருமங்கலக்குடி
செல்வ மல்குசிவ நியமத்தராய்ச்
செல்வ மல்கு செழுமறையோர் தொழ
செல்வன் தேவியொடும் திகழ் கோயிலே.''

(அப்பர்)

-ஓடிக்
கருமங்கலக்குடியிற் காண்டு மெனவோதுந்
திருமங்கலக் குடியிற்றேனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பிராணவரதேஸ்வரர் திருக்கோயில்
திருமங்கலக்குடி - அஞ்சல் - 612 102.
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

93/39. திருப்பனந்தாள்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

கும்பகோணத்திலிருந்தும் மயிலாடுதுறையிலிருந்தும் பேருந்தில் செல்லலாம். பனைமரம் தலமரமாதலின் பனந்தாள் என்று பெயர் பெற்றது. கோயிலுக்குத் தாடகையீஸ்வரம் - தாடகேச்சுரம் என்று பெயர். தாடகை பூசித்தமையால் வந்த பெயர். இத்தலத்திற்குத் தாலவனம் என்றும் பெயர் (தாலம் - பனை). தாடகை என்னும் பெண் ஒருத்தி புத்திரப்பேறு வேண்டி இத்தலத்துப் பெருமானை வழிபட்டு வந்தாள். ஒருநாள் இறைவனுக்கு மாலை சாத்தும்போது, ஆடை நெகிழ, அதனை இரு முழங்கைகளாலும் பற்றிக்கொண்டு, மாலை சாத்த முடியாமல் வருந்த, அவளுக்கு இரங்கிப் பெருமான் திருமுடியைச் சாய்த்து மாலையை ஏற்றருளினார். அன்று முதல் சாய்வாக இருந்த நிலையைப் பின்னால் குங்கிலியக்கலய நாயனார் மாற்றினார்.

இறைவன் - செஞ்சடையப்பர், தாலவனேஸ்வரர், ஜடாதரர், அருணஜடேஸ்வரர்.

இறைவி - பிருகந்நாயகி, பெரிய நாயகி, தாலவனேஸ்வரி.

தலமரம் - பனை.

தீர்த்தங்கள் - பிரம தீர்த்தம், ஐராவத தீர்த்தம், தாடகை தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள்.

சம்பந்தர் பாடல் பெற்ற பதி.

''மாலைசாத்துந் தாடகை மானங் காப்பான் தாழ்ந்து பூங்கச் சிட்டீர்க்கும்
பீடுறுகலயன் அன்பின் நிமிர்ந்தஎம் பிரான்ஊர் ஈதால்.''

(திருவிளை. புரா)

பனையின்தாளில் இறைவன் எழுந்தருளியிருத்தலால் 'பனந்தாள்' எனப்பட்டது. பிராகாரத்தில் இரு ஆண் பனைமரங்கள் உள்ளன.

(இவற்றின் பக்கத்தில் தலைசாய்ந்த மூர்த்தம் உளது). இத்தலத்து வழிபட்ட தாடகை இராமாயணத்தில் வருபவள் அல்லள். இவள் வேறானவள்).

மூலவர் சுயம்பு மூர்த்தி. மேற்கு நோக்கிய சந்நிதி. பிரமன், திருமால், இந்திரன், ஐராவதம், அகத்தியர், சூரிய சந்திரர், ஆதிசேஷன்,

Koviloor Digital Library

நாககன்னிகை, தாடகை, குங்கிலியக்கலய நாயனார் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

ஆலயத்துள் அலங்கார மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், வாகன மண்டபம், பதினாறுகால் மண்டபம் முதலியவை உள்ளன.

ஊரின் நடுவில் ஆலயம், உயர் மதில்கள்சூழ, கீழும் மேலும் கோபுரங் கொண்டு சிறந்து விளங்குகிறது. அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது.

மேலைக் கோபுரவாயிலில் நுழைந்ததும் பதினாறுகால் மண்டபமும் அதன்பக்கம் வாகனமண்டபமும், நாககன்னிகை தீர்த்தமும் உள்ளன. இரண்டாம் கோபுரம் தாண்டியதும் அழகான வாகன மண்டபம். பஞ்சமூர்த்திகளின் சுதைச் சிற்பங்களும், குங்குலியக்கலயர், சொக்க நாதர், நர்த்தன விநாயகர் சந்நிதிகளும் உள்ளன. நவக்கிரக மண்டபம் உள்ளது. ஆஸ்தான மண்டபத்தில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தி தரிசனம் தருகின்றார்.

சுவாமி கோயிலில் வடமேற்கில் சுப்பிரமணியர், நடராசசபை, முத்துக்குமாரசாமி (உற்சவர்) - இலக்குமி தரிசனம். கிழக்கில் பஞ்ச பூதலிங்கங்கள், பைரவர், சூரியசந்திரர், உள்ளனர். தென் பிராகாரத்தில் அறுபத்து மூவர் சந்நிதிகள், சப்தகன்னியர், உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர்.

தல விருட்சத்தின் பக்கத்தில் உள்ள சிவலிங்கத்தையடுத்துள்ள கிணறு, நாககன்னிகை பிலம் எனப்படும். இதன் வழியாக நாககன்னியர் வந்து இறைவனை வழிபட்டதாக ஐதீகம் சொல்லப்படுகின்றது. கர்ப்பக்கிருகத்தில் தட்சிணாமூர்த்தியும், சண்டீசர் (ஆலயமும்), துர்க்கையும் காட்சி தருகின்றனர். சுவாமி விமானம் பிரணவவடிவில் மூன்று ஸ்தூபிகளுடன் விளங்குகிறது. அம்பாளின் சந்நிதியில் ஆடிப்பூர அம்மன் உள்ளார்.

பதினாறுகால் மண்டபத்தில் தாடகைக்காகப் பெருமான் வளைந்து கொடுத்ததும், குங்குலியக்கலயனார் பெருமானின் வளைவை நிமிர்த்தியதுமாகிய சிற்பங்கள் உள. ஆலயத்தில் காரண, காமிக ஆகம முறைப்படி, முறையாகப் பூஜைகள் நடைபெறுகின்றன. சித்திரையில் பெருவிழா, இத்திருக்கோயில் தருமையாதீனத்திற்குச் சொந்தமானது. இத்தலத்தில் தான் குமரகுருபர சுவாமிகள் நிறுவியுள்ள ஸ்ரீ காசிமடம் உள்ளது. காசியில் குமரகுருபரர் உண்டாக்கிய குமாரசாமி மடத்தின் வழி வந்த மடம் ஆதலின் ஸ்ரீ காசி மடம் என்று வழங்கப்படுகிறது. இம்மடத்தின் சார்பில் 'செந்தமிழ்க் கல்லூரி' ஒன்று நடைபெறுகின்றது.

Koviloor Digital Library

எண்ணற்ற அருளறப் பணிகளைச் செய்து வரும் இத்திருமடம் தருமையாதீனத்தின் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்ததாகும். நாடொறும் நான்கு காலபூஜைகள். திருப்பனந்தாளில் வாழ்ந்த நக்கன்தரணி என்பவனால் இக்கோயில் கருங்கல்லால் கட்டப்பட்டது. கல்வெட்டில் இத்தலம் திருத்தாடகை ஈச்சரம் என்றும் இறைவன் பெயர் தாடகேச்சரத்து மகாதேவர் என்றும் குறிக்கப்படுகிறது. குங்குலியக் கலயநாயனாரின் கோயில், கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் மேற்கு கோபுரத்தின் தென்பாலுள்ளது. இந்நாயனாரின் மனைவியின் பெயர் நீலாயி என்று கல்வெட்டு கூறுகிறது.

''கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால் விடை யான்
விண்பொலி மாமதிசேர் திருசெஞ்சடை வேதியனூர்
தண்பொலி சூழ்பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே.''

(சம்பந்தர்)

''கரம் ஊன்றிக் கண்இடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரம் ஊன்றி வாய் குதட்டா முன்னம் - புரமூன்றும்
தீச்சரத்தால் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து.''

-ஐயடிகள் காடவர்கோன்

''கல்லா மனத்துக் கடையேனை ஆண்டு கருணை செய
வல்லா யென்றுன் பதம் வந்தடைந்தேன் வினைமாற்றிடுவாய்
செல்லாங்குழல் மலர்ச் செவ்வாய் வரைகுயச் சிற்றிடைசேர்
நல்லாய் பனசை நகர் வாழ் பெரிய நன்னாயகியே.''

(பெரியநாயகி மாலை)

-தரும

மனந்தான் மலரை மருவுவிப்போர் வாழும்
பனந்தாளிற் பாலுகந்த பாகே.

-(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. தாலவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பனந்தாள் - அஞ்சல் 612 504.
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

94/40. திருஆப்பாடி.

திருவாய்ப்பாடி.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'திருவாய்ப்பாடி' ஆயிற்று. கும்பகோணம் - திருப்பனந்தாள் சாலையில், சேங்கனூர் சாலையைத் தாண்டி, திருவாய்ப்பாடி உள்ளது. சாலையோரத்தில் ஊர் உள்ளது. ஊரை அடைந்து இடப்புறமாகச் செல்லும் வீதியில் சென்றால் கோடியில் கோயில் உள்ளது. (சேங்கனூர் என்பது சேய்ஞலூர் ஆகும்). திருவாய்ப்பாடி அடுத்து திருப்பனந்தாள் உள்ளது. இத்தலத்திற்கு அருகில் மண்ணியாறு ஓடுகிறது. இத்தலம் சண்டேசுவரர் வழிபட்ட பெருமையுடையது. மிகப் பழைமையான கோயில். கோயிலுக்கு வெளியில் தென்னந் தோப்பு உள்ளது. நல்ல நிழல்.

இறைவன் - பாலுகந்தநாதர், பாலுகந்தீஸ்வரர்.

இறைவி - பிருகந்நாயகி, பெரியநாயகி.

தலமரம் - ஆத்தி.

அப்பர் பாடல் பெற்றது.

ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் தாண்டிச் சென்றால் வலப் புறத்தில் பயனின்றியிருக்கும் மண்டபமொன்றுள்ளது. கொடிமர மில்லை. வெளிச்சுற்றில் சந்நிதிகள் எவையுமில்லை. முன்மண்டபம் வௌவால் நெத்தியமைப்புடையது. வலப்பால் அம்பாள் சந்நிதி, தெற்கு நோக்கியுள்ளது. நின்ற திருக்கோலம். அடுத்துள்ள மண்ட பத்தைத் தாண்டிச் சென்றால் நேரே மூலவர் சந்நிதி. இம்மண்டபத்தில் வலப்பால் பைரவர், சூரியன், சனிபகவான் திருமேனிகள் உள்ளன.

நடராசமூர்த்தம் கம்பீரமாக அழகாகக் காட்சியளிக்கிறது. மூல மூர்த்தம் - சிவலிங்கத் திருமேனி தீபாராதனை ஒளியில் பிரகாசிக்கின்றது. கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கோயிலுக்கு ஊர் மக்கள் வருகிறார்களா என்பதே ஐயமாகவுள்ளது. திருப்பணிசெய்வது மிகவும் அவசியமானதொன்று. இல்லையெனில் கோயில் அடுத்த தலைமுறை யினருக்குக் காணக்கிடைக்குமோ? என்பதை எண்ணில் நெஞ்சு கலங்குகிறது. குருக்கள் வீடு கோயிலின் பக்கத்தில் உள்ளது. அவருடைய பாதுகாப்பிலேயே இக்கோயில் காப்பாற்றப்பட்டு வருகின்றது. 1961-ல் குடமுழுக்கு நடந்துள்ளது. வாகனங்கள் எல்லாம்

Koviloor Digital Library

பழுதடைந்துள்ளன. நித்ய வழிபாடு தவிர பிற விசேஷம் எவையு மில்லை. கல்வெட்டில் இறைவன் பெயர் 'ஆப்பாடி உடையார்' என்றுள்ளது.

''உள்ளுமாய்ப் புறமும் ஆகி உருவுமாய் அருவும் ஆகி
வெள்ளமாய்க் கரையும் ஆகி விரிகதிர் ஞாயிறாகிக்
கள்ளமாய்க் கள்ளத்து உள்ளார் கருத்துமாய் அருத்தம் ஆகி
அள்ளுவார்க்கு அள்ளல் செய்திட்டு இருந்தஆப் பாடியாரே.''

-அப்பர்.

''உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே! ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன் - கொள்ளிடத்தின்
தென்திரு ஆப்பாடியின் தெய்வமறை நான்கினையும்
தன்திருவாய்ப் பாடியான் தாள்.''

-ஐயடிகள் காடவர்கோன்.

-தினந்தாளிற்
சூழ் திருவாய்ப் பாடியங்கு சூழ்கினு மாமென்றுலகர்
வாழ் திருவாய்ப் பாடியின்ப வாரிதியே

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பாலுகந்தநாதர் திருக்கோயில்
திருவாய்ப்பாடி
திருப்பனந்தாள் அஞ்சல் - திருவிடைமருதூர் வட்டம்
தஞ்சை மாவட்டம் - 612 504.

தலம் – 23

Koviloor Digital Library

95/41. சேய்ஞலூர்.

சேங்கனூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் 'சேங்கனூர்' என்று வழங்குகின்றனர்.

கும்பகோணம் - திருப்பனந்தாள் சாலையில், நெடுங்கொல்லை கிராமம் தாண்டி, சேங்கனூர் கூட்டுரோடு உள்ளது. கூட்ரோடில் "ஸ்ரீ சண்டேசுவர நாயனார், பெரியவாச்சான்பிள்ளை அவதாரத் தலத்திற்குச் செல்லும் வாயில்" என்ற பெயர்வளைவு உள்ளது. அவ்விடத்தில் வலப்புறமாகப் பிரிந்து செல்லும் (சேங்கனூர் சாலையில்) பாதையில்

Koviloor Digital Library

1 கி. மீ. உள்ளே சென்றால் ஊரையடையலாம். இதற்கடுத்த தலம் திருவாய்ப்பாடி ஆகும். கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ.

சண்டேசுவர நாயனாரின் அவதாரத் தலம். மண்ணியாற்றின் கரையிலுள்ள பதி. இத்தலச் சிறப்பைக் கந்தபுராணம், வழிநடைப் படலத்தில் பேசுகிறது. சூரனை அழிப்பதற்காக வந்த முருகப்பெருமான் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டு சர்வசங்காரப் படைக்கலத்தை - உருத்திர பாசுபதத்தைப் பெற்றார். சேய் - முருகன். சேய்க்கு நல்லதாக அமைந்த ஊராதலின் சேய் + நல் + ஊர் = சேய்ஞலூர் என்று பெயர் பெற்றது. சத்தியகிரி, குமாரபுரி, சண்டேசுவரபுரம் என்பன வேறு பெயர்கள்.

இறைவன் - சத்தியகிரீஸ்வரர், சத்யகிரிநாதர்.

இறைவி - சகிதேவியம்மை.

தீர்த்தம் - மண்ணியாறு. (சத்திய புஷ்கரணி - குளம். கோயிலின் பின்னால் உள்ளது.)

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிபி, அரிச்சந்திரன் வழிபட்டது. வைணவப் பெரியவரான பெரியவாச்சான் பிள்ளை அவதரித்த பதி. மண்ணியாற்றுக்குச் சத்திய நதி, சுப்பிரமணிய நதி என்ற பெயர்களுமுண்டு.

கோச் செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில், கோயில் கட்டுமலை மேல் உள்ளது. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிலும் மலைமேல் ஒரு பிராகாரமும், சுற்றிக் கீழே ஒரு பிராகாரமும் உள்ளன.

மகாமண்டபத்தில் நடராசர் தரிசனம். பக்கத்தில் தட்டினால் வெண்கல ஓசை தரும் பைரவரும், சூரியசந்திரரும் நால்வரும் எழுந்தருளி உள்ளனர். விநாயகர், முருகன், கஜலட்சுமி, சண்டேசுவரர் சந்நிதிகள் உள்ளன. சண்டேசுவரரின் திருமுடியில் பிறை, சடை, குண்டலம், கங்கையுள்ளன. நாயனாருக்குக் காட்சி தந்த சிறப்பைக் குறிக்கும் வகையில் இவ்வாறு அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். தீர்த்தக் கிணறு உள்ளது. கட்டுமலைக்குக் கீழே அம்பாள் ஆலயம் தெற்கு நோக்கிய சந்நிதியாகவுள்ளது. மூலவர் - சத்தியகிரீஸ்வரர்.

(சண்டேசுவரர் வரலாற்றைப் பெரிய புராணத்துள் காண்க). திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

Koviloor Digital Library

''பீரடைந்த பாலதாட்டப் பேணாது அவன்தாதை
வேரடைந்து பாய்ந்த தாளை வேர்த்தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்த தென்னே
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் மேயவனே''.

(சம்பந்தர்)

இருமைத்தம் பியர்க ளானநவ வீரருடன்
எழிலிலக் கம்வீரரும்
எண்ணவரு தொகையிரண் டாயிரம் வெள்ளமெனும்
ஏர்கொண்ட பூதகணமும்
பொருதுபடை கைக்கொண்ட நூற்றெட் டெனும்பெரிய
பூதப்ப டைத்தலைவரும்
பூங்கமல நயனனும் நான்முகனும் முனிவரும்
புரந்தரனும் வானோர்களுங்
கருணை வடிவானநின் புடைசூழவே பெரிய
காவேரி நாடு வாழ்க
கைவேலி னால்மண்ணி நதியழைத் தேதேவர்
கம்மியன் றான்படைத்த
திருநகர மாம்பெரிய சேய்ஞலூர் வாழ்முருக
செவ்வாயின் முத்தமருளே
சிவபூசை செய்தருட் படையொன்று பெற்றவன்
செவ்வாயின் முத்தமருளே

(க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்)

-ஏழ்புவிக்குள்
வாய்ஞ்ஞலூர் ஈதேமருவ என வானவர்சேர்
சேய்ஞ்ஞலூர் இன்பச் செழுங்கனியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில்
சேங்கனூர் - திருப்பனந்தாள் அஞ்சல் - 612 504
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

96/42. திருந்துதேவன்குடி

நண்டாங்கோயில் / திருத்தேவன்குடி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மயிலாடுதுறையிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் பேருந்தில் செல்லலாம். நண்டு பூசித்த தலம். ஆதலின் 'நண்டாங் கோயில்' என்று இன்று வழங்குகிறது.

திருந்துதேவன்குடி என்னும் பெயருடைய ஊர் தற்போது இல்லை. கோயில் மட்டுமே உள்ளது. கோயில் இருந்த இடம் நன்செய் நிலங்களாயின. 'கோயிலைச் சுற்றி அகழியுள்ளது. இப்பகுதி திருத்தேவன்குடி என்றும் சொல்லப்படுகிறது, மிகப் பெரிய சிவாலயம், பழுதடைந்துள்ளது. சுவாமி அம்பாள் கருவறைகளும் முன் மண்டபங் களும் மட்டுமே உள்ளன.

இறைவன் - கற்கடகேஸ்வரர் (கற்கடம்; நண்டு)

இறைவி - அருமருந்தம்மை, அபூர்வநாயகி.

(வழிபட்டு நோய் நீங்கப்பெற்ற மன்னன் செய்த பிரதிஷ்டை 'அருமருந்தம்மை யாகும். பின்னர் பழைமையாக இருந்த அம்பாளும் கண்டெடுக்கப்பட்டு அதுவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதுவே 'அபூர்வநாயகி' திருமேனியாகும். சம்பந்தர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில். சுற்றிலும் வயல்கள் 'தேனும் வண்டும் இசைபாடும் தேவன்குடி' என்னும் தேவாரத்தொடருக்கேற்ப கோயிலில் தேனீக்களின் ரீங்கார ஒலி கேட்கிறது. கோயிலில் பாதுகாப்பில்லாததால் திருமேனிகள் வேறிடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன. அருகில் உள்ள தலம் திருவிசலூர். ஒருகால பூசை மட்டுமே குருக்களின் ஆர்வத்தில் நடைபெற்றுவருகின்றது.

"மருந்துவேண்டில் இவை, மந்திரங்கள் இவை,
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை,
திருந்துதேவன் குடிதேவர் தேவு எய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே"

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-வாஞ்சையுறும்
சீவன் குடியுறவிச்சீர் நகரொன்றே யெனுஞ்சீர்த்
தேவன் குடி மகிழ்ந்த தெள்ளமுதே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. கற்கடேஸ்வரர் திருக்கோயில்
திருத்தேவன்குடி - திருவிசலூர் அஞ்சல்
வேப்பத்தூர் S.O. 612 105.
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

97/43. திருவியலூர்

திருவிசநல்லூர் / திருவிசலூர்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

(1) திருவிடைமருதூர் - வேப்பத்தூர் சாலையில் சென்றால் கோயிலையடையலாம். (2) கும்பகோணத்திலிருந்து செல்லலாம், நகரப் பேருந்து உள்ளது.

மக்கள் திருவிசலூர், திருவிசநல்லூர் என்று சொல்கின்றனர். திருவிசலூர் என்ற பெயரில் தஞ்சை மாவட்டத்தில் பல ஊர்களிருப் பதால் இப்பதி "பண்டாரவாடை திருவிசலூர்" திருவிசநல்லூர், என்று வழங்கப்படுகிறது.

இறைவன் - யோகானந்தீஸ்வரர், புராதனேஸ்வரர், வில்வாரண்யேசுவரர்.

இறைவி - சாந்தநாயகி, சௌந்தரநாயகி.

தீர்த்தம் - சடாயுதீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

பெரியகோயில். சடாயு வழிபட்டது. நகரத்தார் திருப்பணி பெற்றது. சைவசித்தாந்தச் சாத்திர நூல்களுள் ஒன்றாகிய 'திருவுந்தியார்' பாடிய 'திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்'' அவதரித்த தலம். தஞ்சை அரண்மனையின் பரிபாலனத்திற்குட்பட்ட கோயில்.

Koviloor Digital Library

சோழர்காலக் கல்வெட்டில் இத்தலம் ''வடகரை ராஜேந்திர சிம்ம சோழவள நாட்டு, மண்ணிநாட்டுப் பிரமதேயமான வேப்பத்தூர் சோழ மார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த ஊர்'' என்றும்; இறைவன் பெயர் ''திருவிசலூர் தேவ பட்டாகரர், சிவயோகநாதர்'' எனவும் குறிக்கப்படுகிறது.

தவிர இரண்டாம் பராந்தகன் காலக் கல்வெட்டொன்று; (1) விளக்கெரிக்க நிலமும் ஆடுகளும் அளித்த செய்தியையும், (2) அபிஷேகத்திற்கு நிலம் விட்ட செய்தியையும் (3) காவிரியிலிருந்து அபிஷேகத்திற்கு நீர் கொண்டுவர ஆட்களை நியமித்து ஊதியம் வழங்க நிலங்களை விட்ட செய்தியையும் தெரிவிக்கின்றன.

அவ்வாறே இராசேந்திரன் காலக் கல்வெட்டு (1) அரசன் கோயிலுக்கு நிலமளித்த செய்தியையும் (2) அவன் மனைவியான அரசி, சுவாமிக்குத் தங்க நகைகளும், அபிஷேகத்திற்கு வெள்ளிக்கலசமும் அளித்த செய்திகளையும் தெரிவிக்கின்றது.

''குரவம் கமழ் நறுமென்குழல் அரிவை அவள்வெருவப்
பொரு வெங்கரி படவென்றதன் அரிவை உடல் அணிவோன்
அரவும் மலைபுனலும் இளமதியும் நகுதலையும்
விரவும் சடை அடிகட்கிடம் விரிநீர் வியலூரே''.

(சம்பந்தர்)

-ஓவின்
மயலூர் மனம்போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. யோகானந்தீஸ்வரர் திருக்கோயில்
திருவிசலூர் & அஞ்சல்
(வழி) வேப்பத்தூர் - 612 105
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்

Koviloor Digital Library

98/44. கொட்டையூர்



ஸ்ரீகோடீஸ்வரர்

ஸ்ரீ பந்தாடுநாயகி

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

கும்பகோணம் - திருவையாறு சாலையில் உள்ளது. கும்ப கோணத்திலிருந்து 4 கி.மீ. தொலைவு. நகரப் பேருந்து செல்கிறது. கும்பகோணம் சுவாமிமலை டவுன்பஸ் கொட்டையூர் வழியாகச் செல்கிறது. சாலையோரத்திலேயே கோயில், ஊர் உள்ளது.

ஆமணக்கு கொட்டைச் செடியின் கீழ் லிங்கம் வெளிப்பட்டதால் ஊர் கொட்டையூர் என்று பெயர் பெற்றது. சோழ மன்னனுக்கும் ஏரண்ட முனிவருக்கும் கோடிலிங்கமாகக் காட்சி தந்தமையால் கோடீஸ்வரர் என்று சுவாமிக்கும் கோடீச்சரம் என்று கோயிலுக்கும் பெயர் வந்தது. தலத்தின் வேறுபெயர்கள் வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்பன. ஊரில் ''கோடீஸ்வரர் கோயில்'' என்று பெயர் சொல்லிக் கேட்டால் மக்கள் எளிதில் கோயிலைக் காட்டுகிறார்கள். (ஏரண்டம்: கொட்டைச்செடி. அதன் கீழிருந்து தவம் செய்தமையால் அம்முனிவர் ஏரண்டமுனிவர் என்று பெயர் பெற்றார்). சுவாமிமலையோடு இணைந்த கோயில். மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். பத்திரயோகி முனிவருக்கு இறைவன் கோடிவிநாயகராக, கோடி அம்மையாக, கோடிமுருகனாக, கோடி தம் திருவுருவாகக் காட்சிதந்ததால் இறைவன் கோடீஸ்வரர் எனப்பட்டார்.

Koviloor Digital Library

இறைவன் - கோடீஸ்வரர்
இறைவி - கந்துக கிரீடாம்பாள், பந்தாடுநாயகி
தலமரம் - கொட்டை (ஆமணக்கு)ச் செடி
தீர்த்தம் - அமுததீர்த்தம் (கிணறு)
அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய ஐந்து நிலை ராஜகோபுரம். பிராகாரத்தில் விநாயகர், முருகன், மகாலட்சுமி சந்நிதிகள். அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. மூலவர் மீது பாணம் முழுவதிலும் கொட்டை கொட்டை யாக - காய்காய்த்த மாதிரி காணப்படுகிறது. இத் தலத்தில் புண்ணியம் செய்தாலும் பாவஞ் செய்தாலும் கோடி மடங்காகப் பெருகும் என்பது நம்பிக்கை. இங்குப் பாவஞ் செய்தால் கோடி ம்டங்காகப் பெருகுவதால் அதற்குக் கழுவாயே இல்லாமற் போகும் என்பதை ''கொட்டையூரிற் செய்த பாவம் கட்டையோடே'' என்னும் பழமொழியால் அறியலாம். இக் கோயிலில் உள்ள நவக்கிரகங்கள் உரிய வாகனங்களுடன், மண்டலம் பொருந்தி குடையுடன் அருமையாகக் காட்சி தருகின்றன. இத் தலத்திற்குப் பக்கத்தில் உள்ள 'ஏரகரம்' என்னும் ஊர் வைப்புத் தலமாகச் சொல்லப்படுகிறது. திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

''கருமணி போல்கண்டத்து அழகன் கண்டாய்
கல்லால நிழற்கீழ் இருந்தான் கண்டாய்
பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய்
பவளக் குன்றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னி வலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமரும் கொட்டையூரில்
கோடீச்சரத்து உறையும் கோமான்தானே''.

(அப்பர்)

-அயலாம்பன்

மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளுங்
கொட்டையூர் உட்கிளருங் கோமளமே.

அஞ்சல் முகவரி :-

அ/மி. கோடீஸ்வரர் திருக்கோயில்
கொட்டையூர்
மேலக்காவேரி அஞ்சல் - 612 002
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

99/45. இன்னம்பர்

இன்னம்புர், இன்னம்பூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் இன்னம்பூர் என்று வழங்குகிறது. நெடுஞ் சாலைத்துறையினரின் பெயர்ப் பலகை 'இன்னம்புர்' என்றே உள்ளது. கும்பகோணம் - திருவையாறு பாதையில் புளியஞ்சேரி சென்று, அங்குச் சாலையில் 'திருப்பிறம்பியம்' என்று கைகாட்டி உள்ள இடத்தில், அதுகாட்டும் பாதையில் (வலப்புறமாகச்) சென்றால் 3 கி.மீ. தொலைவிலுள்ள இன்னம்பரை அடையலாம். சாலையோரத்தில் கோயில் உள்ளது. (இதே பாதையில் மேலும் 3 கி.மீ. சென்றால் திருப்புறம்பியம் அடையலாம்) இக்கோயில் சுவாமிமலையோடு இணைந்தது. ஐராவதம் வழிபட்டது. அகத்தியர் வழிபட்டு இலக்கண உபதேசம் பெற்ற தலம்.

இறைவன் - எழுத்தறிநாதர், தான்தோன்றீசர்

இறைவி - சுகந்தகுந்தளாம்பிகை, நித்யகல்யாணி, (இரு அம்பாள் சந்நிதிகள்)

தலமரம் - பலா, சண்பகம்

தீர்த்தம் - ஐராவத தீர்த்தம்

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கிழக்கு நோக்கிய கோயில். கொடிமரமில்லை; பலிபீடம், நந்தி உள்ளன. உள்ளே இடப்பால் நால்வர் சந்நிதி. வலப்பாகத்தில் சுகந்தகுந்தளாம்பிகை சந்நிதி - சதுர்ப்புஜத்துடன் நின்ற கோலம். இந்த அம்பாளே பிரதான அம்பாளாகும். வெளிச்சுற்றில் சந்நிதிகள் எவையுமில்லை. வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், சூரியன், சந்திரன், நவக்கிரகம் முதலிய சந்நிதிகளைத் தரிசிக்கலாம். உள் முகப்புக் கம்பத்தில் நர்த்தன விநாயகர் காட்சி தருகிறார். உள்ளே சென்றால் வலப்பால் இரண்டாவது அம்பாள் நித்யகல்யாணி சந்நிதி. மூலவர் பெரிய நீண்டுயர்ந்த பாணத்துடன் கம்பீரமாகக் காட்சி தருகின்றார்.

திருப்பணி தொடங்கப்பட்டு பரிவார மூர்த்தங்கள் பாலாலயம் செய்யப்பட்டுள்ளன. திருப்பணிகள் திருச்சி, மலைக்கோட்டை

Koviloor Digital Library

அ/மி தாயுமானவர் உழவாரப் பணி மன்றத்தின் சார்பில் செய்யப்பட்டு வருகின்றன. உற்சவ மூர்த்தங்கள் பாதுகாப்பு கருதி சுவாமி மலையில் வைக்கப்பட்டுள்ளன. நாடொறும் நான்கு காலவழிபாடுகள், கார்த்திகைச் சோமவாரங்கள், நவராத்திரி, மார்கழியில் மாணிக்கவாசகர் உற்சவம் இத்தலத்தில் விசேஷமானவை. இவ்வூரின் பக்கத்தில் கொட்டையூர் உள்ளது.

''எண்டிசைக்கும் புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடையீரே
வண்டிசைக் குஞ்சடையீர் உமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குஞ் தொழிலோரே''

(சம்பந்தர்)

(இப்பதிகம் ''திருமுக்கால்'' என்னும் யாப்பமைதியுடையது).

''தொழுது தூமலர் தூவித்துதித்து நின்(று)
அழுது காமுற்று அரற்று கின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே''.

(அப்பர்)

(இத்தலத்தில் சுந்தரர் 'அங்கம் ஓதியோர் ஆறைமேற்றளி நின்றும் போந்து வந்து இன்னம்பர்' என்று தொடங்கி 'புறம்பயந்தொழப் போதுமே' என்று முடியும் இன்னிசைப் பதிகம் பாடிக் கொண்டே திருப்புறம்பியத்தை அணுகினார்)

-இட்டமுடன்

என்னம்பர் என்னம்பர் என்று அயன்மால் வாதுகொள
இன்னம்பர் மேவுகின்ற என்உறவே

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. எழுத்தறிநாதேஸ்வரர் திருக்கோயில்
இன்னம்புர் - அஞ்சல்
(வழி) திருப்புறம்பியம் - கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம் - 612 303

Koviloor Digital Library

100/46. திருப்புறம்பயம்

திருப்பிறம்பியம்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் திருப்பிறம்பியம் என்றழைக்கின்றனர். பேருந்துப் பலகையும் அவ்வாறுதான் உள்ளது.

கும்பகோணம் - திருவையாறு சாலையில், புளியஞ்சேரி சென்று, அங்குச் சாலையில் திருப்பிறம்பியம் என்று வழிகாட்டிப் பலகை உள்ள இடத்தில் அத்திசையில் சென்றால் இன்னம்புர் (இன்னம்பர்) வரும். அடுத்து 3 கி.மீ. சென்றால் திருப்புறம்பயம் உள்ளது. கும்பகோணத்தி லிருந்து நகரப் பேருந்து உள்ளது. 10கி.மீ. தொலைவு.

பிரளயத்திற்குப் புறம்பாய் இருந்தமையால் (புறம்பு - அயம் திருப்புறம்பயம் என்ற பெயர் பெற்றது. வேறு பெயர்கள் :- கல்யாண மாநகர், புன்னாகவனம் ஆதித் தேஸ்வரம் என்பன.

இறைவன் - சாக்ஷிநாதேஸ்வரர், சாஷீஸ்வரர், புன்னைவனநாதர்
இறைவி - கரும்பன்ன சொல்லி, இக்ஷுவாணி.
தலமரம் - புன்னை
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

Koviloor Digital Library

மூவர் பாடல் பெற்ற தலம்.

செட்டிப்பெண்ணுக்கு இறைவன் சாட்சி சொல்லியமையால் சாட்சிநாதர் என்று இறைவனுக்குப் பெயர். இதற்கு வன்னிமரமும் ஒரு சான்றானது. இம் மரம் தலமரமன்று. தலமரம் புன்னைமரமே. வன்னி மரம் இரண்டாம் பிராகாரத்தில் உள்ளது. சாட்சி சொன்ன வரலாறு திருவிளையாடற் புராணத்திலும், தலபுராணத்திலும் வருகிறது.

கிழக்கு நோக்கிய கோபுரவாயில், முதற்பிராகாரத்தில் நால்வர், அகத்தியர், புலஸ்தியர், சனகர், சனந்தனர், விசுவாமித்திரர் முதலியோர் வழிபட்ட லிங்கங்கள் முதலியவை உள்ளன. குகாம்பிகை சந்நிதி விசேஷமானது.

ஆறுமுகனை குழந்தை வடிவில் இடையில் நந்தி அரவணைத்து நிற்கும் காட்சி அற்புதமாகும். இவ்வன்னைக்கு சாம்பிராணி தைலம் மட்டுமே சார்த்தப் பெறும். தடைபட்ட திருமணம் நடைபெறவும் கருவுற்ற தாய்மார்களுக்கு சுகப்பிரசவம் ஆகவும், புத்திரபாக்கியம் கிடைக்கவும் இது சிறந்த பிரார்த்தனையாகும். பௌர்ணமியில் அம்பிகைக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இரண்டாவது பிராகாரத்தில் அம்பாள் கோயில் உள்ளது. குளத்தின் தென்கரையில் தட்சிணாமூர்த்தி கோயில் உள்ளது. இதற்கு மேலே சட்டைநாதர் சந்நிதி உள்ளது. தலவிநாயகர் - பிரளயங்காத்த பிள்ளையார் - சந்தன திருமேனி, விநாயக சதுர்த்தி நாளில் இரவு முழுவதும் தேன் அபிஷேகம் நடைபெறும். அவ்வளவு தேனும் மூர்த்தத்தில் ஊறிப் போகும். இதனால் இவர் தேன்அபிஷேகப் பிள்ளையார் எனப்படு கின்றார். இந்நாளில் பெருமளவில் மக்கள் வந்து தரிசிக்கின்றனர். தலபுராணமும், உலா நூலும் உள்ளனவாகத் தெரிந்தாலும் அச்சிடப் பட்டுக் கிடைக்கவில்லை. திருவையாறு வித்வான் வை. சுந்தரேச வாண்டையார் அச்சிட்டுள்ள 'புறம்பயமாலை' என்னும் நூலில் 10 பாடல்களே கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. இக்கோயில் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு உரியதாகும். கி.பி. 800ல் நடந்த போரில் பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் ஆதித்த சோழன், செங்கற் கோயிலாக இருந்த இந்த ஆலயத்தைக் கருங்கற்களால் கட்டியதாக வரலாறு.

''மறம்பய மலைந்தவர் மதிற் பரிசறுத்தனை
நிறம்பசுமை செம்மை யொடிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்(கு)
அறம்பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்''. *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

''மறியிலங்கு கையர் மழுவொன்றேந்தி
மறைக்காட்டேன் என்றோர் மழலைபேசிச்
செறியிலங்கு திண்தோள்மேல் நீறுகொண்டு
திருமுண்ட மாவிட்ட திலகநெற்றி
நெறியிலங்கு கூந்தலார் பின்பின்சென்று
நெடுங்கண் பனிசோர நின்று நோக்கிப்
பொறியிலங்கு பாம்பார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பய நம்முரென்று போயினாரே''.

(அப்பர்)

''பதியும் சுற்றமும் பெற்றமக்களும் பண்டையாரலர் பெண்டிரும்
நெதியிலிம் மனைவாழும் வாழ்க்கையு நினைப்பொழி மடநெஞ்சமே
மதியஞ்சேர் சடைக்கங்கை யானிட மகிழுமல்லிகை செண்பகம்
புதிய பூமலர்ந் தெல்லிநாறும் புறம்பயத் தொழப் போதுமே''.

(சுந்தரர்)

-முன்அம்பு
மாற்கும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுளம்
ஏற்கும் புறம்பியம் வாழ்என் உயிரே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. சாட்சி நாதேஸ்வரர் திருக்கோயில்
திருப்பிறம்பியம் - அஞ்சல் 612 303
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

101/47. திருவிசயமங்கை

திருவிஜயமங்கை

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

திருவைகாவூரிலிருந்து ஆற்றோரமாக - (இடப்பால் திரும்பி)ச் செல்லும் கிளைப்பாதையில் 2 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம். அருச்சுனன் - விசயன் வழிபட்ட தலம். ஆதலின் 'விசயமங்கை' எனப்படுகிறது.

இறைவன் - விஜயநாதர்

இறைவி - மங்களாம்பிகை - மங்கை நாயகி

தீர்த்தம் - அருச்சுன தீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது.

சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்றது.

ராஜகோபுரமில்லை. மிகவும் பழமையான கோயில். சற்று கிலமாகவும், பழுதடைந்தும் உள்ளது. மண்டப முகப்பு வாயில் கிழக்கு நோக்கியுள்ளது. கொடிமரமில்லை. வாயிலில் நுழைந்து நேரே பார்த்தால் மூலவர் சந்நிதி உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி, மகாமண்டபம் கல்மண்டபம். ஒருமூலையில் நவக்கிரக சந்நிதி உள்ளது. வெளிப் பிராகாரம் விசாலமானது. மூலவர் - கிழக்கு நோக்கிய சந்நிதி. அருச்சுனன் அம்பு பட்ட தழும்பு - கோடு - சிவலிங்கத் திருமேனியில் கீற்று போல் உள்ளது. சதுர ஆவுடையார், அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது - நின்றநிலை.

கோயிலின் செங்கல் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. பராமரிப்பார் இலர். ஒருவேளை பூஜைமட்டுமே நடைபெறுகிறது. அதுவும் சிவாசாரியரின் சொந்த முயற்சியால் நடைபெறுகிறது. சுவாமி, அம்பாள் விமானங்களில் கலசங்களும் சுதையாலேயே அமைக்கப்பட்டுள்ளன. கோஷ்டமூர்த்தமாகத் தட்சிணாமூர்த்தி மட்டுமே காட்சி தருகிறார். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

''மருவமர் குழலுமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கை எம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கையே''.

(சம்பந்தர்)

Koviloor Digital Library

"பாண்டு வின் மகன் பார்த்தன் பணி செய்து
வேண்டு நல் வரங்கொள் விசய மங்கை
ஆண்டவன் அடியே நினைந்து ஆசையால்
காண்டலே கருத்தாகி இருப்பனே''.

(அப்பர்)

-மாற்கருவின்
கண்விசைய மங்கைக் கனிபோற் பெறத் தொண்டர்
எண்விசைய மங்கையில் வாழ் என்குருவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. விஜயநாதேஸ்வரர் திருக்கோயில்
திருவிஜய மங்கை
புள்ளம் பூதங்குடி அஞ்சல் 612 301.
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்

102/48. திருவைகாவூர்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

திருவிசயமங்கைக்குப் பக்கத்தில் உள்ளது. கொள்ளிடக் கரையில் உள்ள தலம். கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை வழியாகத் திருவைகாவூருக்கு நகரப் பேருந்து (Town Bus) செல்கின்றது.

சுவாமிமலையிலிருந்து 'நாகுகுடி' செல்லும் கிளைப்பாதையில் 'நாகுகுடி' சென்று, அங்கிருந்து 'திருவைகாவூர்' செல்லும் பாதையில் சென்று இத்தலத்தை அடையலாம். சிவராத்திரிக்குச் சிறப்புடைய தலம். சிவராத்திரி நாளில் புலிக்குப் பயந்து வில்வ மரத்தின்மேல் ஏறியிருந்த வேடன் இரவெல்லாம் வில்வத்தைப் பறித்துப்போட்ட வண்ணம் தூங்காமல் இருக்க, காலையில் இறைவன் வெளிப்பட்டு அருள்புரிந்த அற்புதத் தலம்.

இறைவன்	-	வில்வவனேஸ்வரர், வில்வவனநாதர்.
இறைவி	-	சர்வஜனரக்ஷகி, வளைக்கைநாயகி.
தீர்த்தம்	-	எமதீர்த்தம், கோயிலுக்கு எதிரில் உள்ளது.
தலமரம்	-	வில்வமரம்.

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலத்திற்கு 'வில்வவனம்' என்றும் பெயர். 'திருவைகா' என்றும் இத்தலம் அழைக்கப்படுகின்றது. ராஜகோபுரம் இல்லை. முகப்பில் விநாயகர் காட்சி தருகின்றார். முகப்பு வாயில் மட்டுமே ஐந்து கலசங்களுடன் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. உள்நுழைந்தால் 'நந்தி' நமைநோக்கித் திரும்பி (கிழக்கு நோக்கி) இருப்பதைக் காணலாம். இத்தல வரலாறாகிய வேடன் நிகழ்ச்சி தொடர்பாக - அதாவது வேடனைப் பிடிக்க எமன்வர, நந்தியும், துவாரபாலகர்களும், ஏனையோரும் தடுக்க, மீறி வருமவனைத் தடுத்து விரட்ட இவ்வாறு திரும்பி நோக்கியிருப்பதாக்ச் சொல்லப்படுகிறது. இதனால் இக்கோயிலில் துவாரபாலகர்கள், நவக்கிரகங்கள் இல்லை எனப்படுகிறது.

உள் கோபுரவாயில் நுழைந்தால் - வாயிலில் இடப்பால் வேடன் நிகழ்ச்சி சுதையால் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழலாம். வெளிப் பிராகாரத்தில் சப்தகன்னியர் சந்நிதியும், விநாயகர் சந்நிதியும், வள்ளிதெய்வயானையுடன் கூடிய ஆறுமுகப்பெருமான் சந்நிதியும் உள்ளன. இச் சந்நிதியில் மயிலின் முகம் திசை மாறியுள்ளது. கோஷ்ட மூர்த்தமாக உள்ள தட்சிணாமூர்த்தி அழகான திருவுருவம். அரிய வேலைப்பாடுடையது. இலிங்கோற்பவரும், அர்த்தநாரீஸ்வரரும், பிரம்மாவும் உள்ளனர். துர்க்கைக்கு எதிரில் இரு சண்டேஸ்வரர் திருமேனிகள் உள்ளன.

திருமால், நாராயணி, பைரவர், சூரியன், சந்திரன், சனிபகவான் முதலிய மூலத் திருமேனிகள் பீடமிட்டு வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. மகா மண்டபத்தில் விநாயகர், பிரம்மா, விஷ்ணு, வீணா தட்சிணாமூர்த்தி மூலத்திருவுருவங்கள் உள்ளன. இத்தலத்தில் சிவராத்திரியன்று சிறப்பு விழா நடைபெறுகின்றது. சிவராத்திரியன்று நான்காம் யாமத்தில் வேடன், வேடுவச்சி, இறைவன் காட்சிதரும் ஐதீகம் புறப்பாடு நடைபெறுகின்றது.

மூலவர் - சுயம்புமூர்த்தி - கிழக்கு நோக்கிய சந்நிதி. இடப்பால் அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம். மிகவும் பிரசித்திபெற்ற அம்பாள்.

> "கோழைமிடறாக கவிகோளும் இலவாக இசைகூடும் வகையால்
> ஏழை அடியாரவர்கள் யாவை சொன சொல்மகிழும் ஈசன்இடமாம்
> தாழை இளநீர்முதிய காய் கமுகின்வீழ நிரைதாறு சிதறி
> வாழை உதிர்வீழ் கனிகள் ஊறி வயல் சேறுசெயும் வைகாவிலே."
>
> *(சம்பந்தர்)*

தலம் - 24

Koviloor Digital Library

-மன்னுலகில்
வைகாவூர் நம்பொருட்டான் வைகிய தென்றன்பர் தொழும்
வைகாவூர் மேவிய என்வாழ் முதலே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வில்வவனேஸ்வரர் திருக்கோயில்
திருவைகாவூர் & அஞ்சல் - 612 304
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

103/49. வடகுரங்காடுதுறை

ஆடுதுறைபெருமாள் கோயில்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் ஆடுதுறைபெருமாள் கோயில் என்று வழங்குகிறது.

கும்பகோணம் - திருவையாறு, சாலையில், சுவாமிமலை, உமையாள்புரம், கபிஸ்தலம் தாண்டி, உள்ளிக்கடை என்னும் ஊரையடுத்து இத்தலம் - ஆடுதுறை உள்ளது. (ஆடுதுறை என்ற பெயரில் மற்றொரு தலம் இருப்பதாலும், இத்தலத்திற்குப் பக்கத்தில் பெருமாள் கோயில் என்னும் வைணவத்தலம் இருப்பதாலும், இத்தலம் அந்த ஆடுதுறையினின்றும் வேறுபட்டறிய ஆடுதுறை பெருமாள் கோயில் என்று வழங்குகிறது. வடகுரங்காடுதுறை என்று கேட்டால் எவர்க்கும் தெரியாது.) இத்தலம் குடந்தையிலிருந்து 20 கி. மீ. - திருவையாற்றிலிருந்து 5 கி. மீ. தொலைவு. சாலையோரத்தில் சற்று உள்ளடங்கிக் கோயில் உள்ளது. வாலி வழிபட்ட தலம். இறைவன் - தயாநிதீஸ்வரர், குலைவணங்கீசர், வாலிநாதர், சிட்டிலிங்க நாதர்.

இறைவி - ஜடாமகுடேஸ்வரி, அழகுசடை முடியம்மை.
தலமரம் - தென்னை.
சம்பந்தர் பாடல் பெற்றது.

(கர்ப்பிணி ஒருத்தியின் தாகத்தைத் தீர்க்கத் தென்னங்குலையை இறைவன் வளைத்துக் கொடுத்ததால் குலைவணங்கீஸ்வரர் என்றும்,

Koviloor Digital Library

சிட்டுக்குருவி வழிபட்டதால் சிட்டிலிங்கேஸ்வரர் என்றும் இறைவனுக்குப் பெயர்கள் ஏற்பட்டன). தஞ்சை அரண்மனை இலாகாவுக்குச் சொந்தமான கோயில். பராமரிப்பின்றிக் கிடக்கின்றது.

ஐந்து நிலை ராஜகோபுரம் - செங்கற்களே தெரிகின்றன. மிகப் பழமையானது. வெளிப் பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. உள்ளே வலப்பால் வாகனமண்டபம் சிதலமாகியுள்ளது. சுற்று மதில் முழுவதும் அழிந்துள்ளது. சற்று மேலே சென்றால் வலப்பால் அம்பாள் சந்நிதி. எதிரில் ரிஷபம் உள்ளது. பின்னப்பட்ட பழைய அம்பாள் திருமேனியும் வாயில் முகப்பில் வைக்கப்பட்டுள்ளது. உள் வாயிலைக் கடந்து பிராகாரத்திற்கு வந்தால் பலவேறு மூர்த்தங்கள் வெட்ட வெளியில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, விசுவநாதர் சந்நிதிகளைத் தொழலாம். விமானத்தில் வாலி வழிபடும் சிற்பமுள்ளது. இத்தலத்தில் நடராசப் பெருமான் சிவகாமியுடன் மூலவராகக் காட்சியளிக் கின்றார். இது அற்புதமான தரிசனம். சனி, பைரவர், சூரியன், சந்திரன் திருமேனிகள் உள்ளன. நால்வர் சந்நிதியில் மூவரேயுள்ளனர். இத்தலத்து வரலாறான (கர்ப்பிணி) செட்டிப் பெண்ணின் உருவம் உள்ளது. உள்வாயிலைத் தாண்டியதும் வலப்பால் நவக்கிரக சந்நிதி. மூலவர் - சற்று குட்டையான பாணம் - தரிசிக்கின்றோம். இக்கோயிலில் கோஷ்டத்தில் உள்ள அர்த்த நாரீஸ்வரர் வடிவம் மிகமிக அழகாக வுள்ளது - கண்ணுக்குப் பெருவிருந்து. இக்கோயில் பராமரிப்பின்றி அழிந்து கொண்டிருக்கும் நிலையைக் காணும்போது கண்ணீர் பெருகுகின்றது, என்று தான் வருமோ நற்காலம்? நாடொறும் நான்கு கால வழிபாடுகள். நடராசருக்கு மட்டும் ஆண்டில் நடைபெற வேண்டிய ஆறு அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. இவை நீங்கலாக எவ்விழாவும் நடைபெறவில்லை.

இவ்வூரிலுள்ள 79 வயது நிரம்பிய திரு. கணேசஐயர் அவர்களை அணுகி விசாரித்த போது இந்த ஆலயத்தில் அவருக்குத் தெரிந்து கும்பாபிஷேகம் நடக்கவில்லை என்று கூறியதைக் கேட்டபோது அடைந்த வேதனைக்கு அளவேயில்லை.

இங்குள்ள மூலமூர்த்தியான நடராசப்பெருமானின் மண்டபத்தை யாவது சீர்செய்து காப்பாற்றினாலும் அதுவே பெரும்புண்ணியமாகும். எச்செல்வந்தர் முன்வருவாரோ? இறையருளே துணை. (இக்கோயில் குருக்கள் கணபதி அக்ரஹாரத்தில் உள்ளார்.)

Koviloor Digital Library

''நீலமா மணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஏலமோடு இலை இலவங்கமே இஞ்சியே மஞ்சள் உந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடைகுரங் காடு துறையே.''

(சம்பந்தர்)

-உய்யும் வகைக்
காத்தும் படைத்தும் கலைத்துநிற்போர் நாடொறும்
ஏத்தும் குரங்காட்டின் என்னட்பே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. தயாநிதீஸ்வரர் திருக்கோயில்
ஆடுதுறை பெருமாள் கோயில்
உள்ளிக்கடை அஞ்சல் - 614 202.
(வழி) கணபதி அக்ரஹாரம்.
பாபநாசம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

104/50. திருப்பழனம்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

கும்பகோணம் - திருவையாறு சாலையில், திருவையாற்றுக்கு அண்மையில் உள்ள தலம். சாலையோரத்தில் கோயில் உள்ளது. சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. கதலிவனம் என்ற பெயரும் இத்தலத்திற்குண்டு. சந்திரன் வழிபட்ட தலம்.

இறைவன் - ஆபத்சகாயர்.
இறைவி - பெரியநாயகி.
தலமரம் - வாழை.
தீர்த்தம் - மங்கள தீர்த்தம் (பயனின்றி அழிந்துவிட்டது).

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

பழமையான ராஜகோபுரம் - மூன்று நிலைகளையுடையது. செடிகள் முளைத்துள்ளன. சிதலமடைந்துள்ளது. உள்கோபுரத்திற்கும் இதே கதி. கொடிமரமில்லை. பலிபீடம் நந்தி உள்ளன. வெளிச்சுற்றில் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள்.

Koviloor Digital Library

முன்மண்டபத்தில் வலப்பகுதி வாகன மண்டபமாகவுள்ளது. விநாயகரைத் தொழுது வாயிலைக் கடந்து உட்சென்றால் இடப்பால் பிராகாரத்தில் சப்த மாதர்கள், விநாயகர், வேணுகோபாலர் சந்நிதிகளும், பல்வகைப் பெயர்களில் அமைந்த சிவலிங்கங்களும், நடராச சபையும், பைரவர், நவக்கிரகமும் உள்ளன.

உள்மண்டபத்தில் நுழைந்ததும் நேரே மூலவர் காட்சி. ஆபத் சகாயேஸ்வரர். ''பாவந்தீர்க்கும் பழன நகரார்'' என்று போற்றிப் பாடிய பழனப் பெருமான் விளக்கொளியுமின்றி இருட்டிலிருப்பதைக் கண்டு தரிசிக்கும்போது உள்ளத்தெழும் வேதனை உரைத்தலுக்கடங்காது. உயர்ந்த பாணம் - அழகான மூர்த்தி. ஆலயம் பராமரிப்பின்றி அழிகின்றது.

வெளிப்பிராகாரத்தில் அம்பாள் சந்நிதி. பலாமரம், தலமரமான வாழை உள்ளன. சுற்று மதில் வீழ்ந்து சிதலமடைந்துள்ளது. தஞ்சை அரண்மனை இலாகாவுக்குச் சொந்தமான கோயில் - எவ்வித வசதியு மின்றி போதிய விளக்கு வசதிகூட இல்லாமல் காட்சியளிக்கிறது. நித்தியப்படி இருவேளை பூஜை மட்டுமே. எந்த உற்சவமும் நடைபெறவில்லை. ஏழூர் சப்தஸ்தான விழாவுக்கு மட்டும் சுவாமி கண்ணாடிப் பல்லக்கில் எழுந்தருளுகிறார். கும்பாபிஷேகம் நடை பெற்று நாற்பதாண்டுகளுக்கு மேலாகிறதாம்.

(கோயிற் குருக்கள் திருவையாற்றிலிருந்து வந்து பூஜை செய்கின்றார்). இங்கிருந்து 2 கி. மீ. தொலைவில் திங்களூர் உள்ளது.

''வேதமோதி வெண் ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவு(ம்) நக்கா எனவு(ம்) நம்பா எனநின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே.'' *(சம்பந்தர்)*

''மண்பொருந்தி வாழ்பவர்க்கு(ம்) மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனம் சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போதத்துங் கைவிட நான்கடவேனோ.'' *(அப்பர்)*

''பாங்கார் பழனத்து அழகா!'' *(மணிவாசகர்)*

Koviloor Digital Library

-மாத்தழைத்த
வண் பழனத்தின் குவிவெண் வாயிற்றேன் வாக்கியிட
வுண் பழனத்தென்றன் உயிர்க்குயிரே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்
திருப்பழனம் - அஞ்சல் (THIRUPPAYANAM)
(வழி) திருவையாறு - 613 204. தஞ்சை மாவட்டம்.

105/51. திருவையாறு.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள பெரிய ஊர். தஞ்சாவூருக்கு 11 கி. மீ. தொலைவில் உள்ளது. தஞ்சை கும்பகோணம் முதலிய ஊர்களிலிருந்து இத்தலத்திற்கு வரப் பேருந்துகள் உள்ளன. சிறப்புக்கள் பல வாய்ந்த தலம். அப்பர் பெருமான் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த அற்புதத் தலம். இவ்வற்புதம் - கயிலைக் காட்சித் திருவிழா ஆண்டு தோறும் ஆடி அமாவாசையன்று நடைபெறுகிறது. சப்த ஸ்தானத் தலங்களுள் இதுவும் ஒன்று. இந்திரன், இலக்குமி ஆகியோர் வழிபட்ட தலம். தருமையாதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட பெருங்கோயில். மிகப் பழைமையும் சிறப்பும் வாய்ந்த 'அரசர் தமிழ்க் கல்லூரி' இத் தலத்தில்தான் உள்ளது. சுந்தரரும் சேரமானும் வந்த போது இறைவன் காவிரி வெள்ளத்தை ஒதுங்கி வழிவிடச் செய்து காட்சி தந்தருளிய தலம்.

''அரியலால் தேவியில்லை
ஐயன் ஐயாறனார்க்கே''

என்னும் திருமுறை வாக்கின்படி இங்கு அம்பாளே அரியின் அம்சமாதலின் இத்தலத்தில் விஷ்ணு ஆலயம் இல்லை. தேவியே மகாவிஷ்ணுவின் அம்சம் என்பதற்கேற்ப, அம்பாளுக்கு எதிரில் கிழக்கே பாவாசாமி அக்ரஹாரத்தில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. 'பஞ்ச நதக்ஷேத்திரம்' 'ஐயாறு' எனப்படும், இத்தலம் நாற்புறமும் கோபுர வாயில்களைக் கொண்டது.

Koviloor Digital Library

இறைவன் - பஞ்சநதேஸ்வரர், ஐயாற்றீசர், செம்பொற்சோதீஸ்வரர், பிரணதார்த்திஹரன்.

இறைவி - தர்மசம்வர்த்தினி, அறம்வளர்த்தநாயகி.

தலமரம் - வில்வம்.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம், காவிரி.

மூவர் பாடல் பெற்ற சிறப்புத்தலம். இத்தலத்திற்குப் பதினெட்டு பதிகங்கள் உள்ளன.

கிழக்கு ராஜகோபுரமே பிரதானவாயில். ஏழு நிலைகளையுடையது. சிற்பங்களையுடைய பழைமையான கோபுரம். விசாலமான உள்ளிடம். வலப்பால் பெரிய மண்டபம் உள்ளது. இதில் வல்லபை விநாயகர், தண்டபாணி சந்நிதிகள் உள்ளன. உள்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. சிற்பங்கள் அதிகமில்லை. வலப்பால் அம்பாள் கோயிலுக்குப் போகும் வழியுள்ளது.

உள்நுழைந்து வலமாக வரும்போது சூரிய தீர்த்தம் நீராழி மண்டபத்துடன் நல்ல கட்டமைப்பில் உள்ளது. தெற்கு வாயில் வழியைக் (தெற்கு வாயிலில் வெளிப்புறம் ஆட்கொண்டார் சந்நிதி உள்ளது. இதற்கு எதிரில் உள்ள வேலியிட்ட பள்ளத்தில் குங்கிலியம் இட்டுப் புகைக்கும் பழக்கம் உள்ளது. இங்குக் குங்கிலியப் பொட்டலங்களை விற்கிறார்கள். மக்கள் அவற்றை வாங்கி அக்குழியில் புகையும் நெருப்பில் கொட்டுகிறார்கள்) கடந்து சென்றால் பிராகாரத்தில் அப்பருக்குக் கயிலைக் காட்சியருளிய சுவாமி கோயில் (தென்கயிலை) தனிக்கோயிலாக - கோபுர, விமான அமைப்புகளுடன் உள்ளது. மூன்று நிலைக் கோபுரத்தையுடைய இக்கோயிலின் உட்சுற்றில் அழகிய வேலைப்பாடமைந்த தூண்கள் உள்ளன. நுழைவு மண்டபத்தில் வலப்பால் அப்பர் பெருமானின் நின்ற திருக்கோலம் காட்சியளிக்கிறது. மூலவர் சிவலிங்கத் திருமேனி. பின்னால் சுவாமி அம்பாள் நின்ற கோலம் உள்ளது. இக்கோயில் வாயிலில்தான் அப்பர் கயிலைக் காட்சி கண்ட ஐதீகம், ஆடி அமாவாசையன்று நடைபெறுகின்றது.

பிராகாரத்தில் தொடர்ந்து வலம் வரும்போது விநாயகர் சந்நிதி உள்ளது. அடுத்து மேலக் கோபுரவாயில். ஏழுநிலைக் கோபுரம் சிற்பங்களுடன் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது. அடுத்துள்ள கோயிலும் விநாயகர் சந்நிதியே உள்ளது. அடுத்து இடப்பால் வடகயிலாயம் உலகமாதேவீச்சரம் என்று வழங்கப்படும் தனிக்கோயில் பிராகார மதிலையடுத்து அப்பால் உள்ளது. செல்வதற்கு வாயில் உள்ளது.

Koviloor Digital Library

மூலவர் சிவலிங்கத் திருமேனி. வலம் முடித்து, மூன்று நிலைகளை யுடைய மூன்றாவது கோபுரத்தைக் கடந்து துவார விநாயகராகவுள்ள இரட்டை விநாயகர்களையும் தண்டபாணியையும் வணங்கி உட்சென்றால் கவசமிட்ட கொடிமரம், முன்னால் சித்தி விநாயகரும் உள்ளார். பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை.

இப்பிராகாரத்தின் கோடியில் ஒலி கேட்கும் இடம் என்று குறிப் பிட்டுக் காட்டியுள்ள இடத்தில் நின்று, கற்சுவரில் அமைக்கப்பட்டுள்ள சிறிய குழியில் வாய்வைத்து, உரத்த குரலில் 'ஐயாறா' என்று அழைத்தால் அவ்வொலி பன்முறை பிரதிபலிப்பதைக் கேட்கலாம். (நாம் அழைத்தபோது ஐந்துமுறை கேட்டது, இன்னும் உரத்து அழைத்தால் ஏழுமுறை கேட்பதாகச் சொல்கிறார்கள்).

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்னும் அப்பர் வாக்கு இங்கு நினைவிற்கொள்ளத் தக்கது.

இப்பிராகாரத்தை வலமாக வந்து, கொடிமரத்தைத் தாண்டி, படிகள் ஏறினால் மிகப்பெரிய மண்டபம் உள்ளது. நீண்ட விசாலமான மண்டபம். மூலவர் நுழைவு வாயிலுக்குப் பக்கத்தில் உள்ள மண்ட பத்தில் - சந்நிதியில் ஓர் இரும்புப் பேழையில் மரகத லிங்கம், ஸ்படிக லிங்கம், ஸ்படிக அம்பாள் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு நாடொறும் காலையில் பூஜை நடைபெறுகின்றது. சுவாமி தன்னைத்தானே பூசிப்பதாக ஐதீகம். இது தொடர்பாகச் சொல்லப்படும் வரலாறு வருமாறு :-

இக்கோயில் பூஜைமுறை உள்ள சிவாசாரியார் ஒருமுறை காசிக்குச் சென்றார். அவருடைய பூஜை முறைக்காலம் வந்து விட்டது. ஆனால் அதற்குள் அவரால் திரும்பி வர முடியவில்லை. அந்நிலையில் இறைவனே அந்த சிவாசாரியார் போல சிவவேடமணிந்து அவருடைய பூஜை முறையைத் தவறாது செய்து வந்தார். திரும்பி வந்த சிவாசாரியார் தன்னைப்போலவே ஒருவர் தன் முறையைச் செய்து வருவதறிந்து அவரைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்க, அவரும் 'நீ யார்?' என்று கேட்டுவிட்டு, 'உள்ளே வா காட்டுகிறேன்' என்று கூறிச் சென்றார். சிவாசாரியார் பின்தொடர்ந்து செல்ல, உள்ளே சென்ற உருவம் மறைந்தது. அப்போது இதுகாறும் பூஜை செய்து வந்தவர் இறைவனே என்று தெரிய வந்தது, ஆகவே தான் "தன்னைத் தானே வழிபடுவது" என்ற ஐதீகத்தில் இரு லிங்கங்களும் ஓர் அம்பாளும் அப்பேழையுள் வைத்துப் பூசிக்கப்படுகின்றன. இந்த அற்புதத்தையொட்டியே இன்றும் இக்கோயிலில் சித்திரை ஆயில்யத்தன்று சுவாமி புறப்பாடும்

Koviloor Digital Library

செய்து, இறைவனாக வந்த சிவாசாரியார், பூஜை முறையினராகிய சிவாசாரியார் என்கிற ஐதீகத்தில் இரு சிவாசாரியார்களுக்கும் பரிவட்டம் சார்த்தி, சுவாமியுடன் வலம் வரும் சிறப்பு விழா நடைபெறுகின்றது, இந்த அதிசயத்தையே மாணிக்கவாசகர் தம் அமுதவாக்கில் ''ஐயாறு அதனில் சைவனாகியும்'' என்று குறித்துள்ளார்.

இக்கோயிலில் சித்திரையில் நடைபெறும் பெருவிழாவில் இந்த மூன்று திருமேனிகளுக்கும் - ஸ்படிகலிங்கம், ஸ்படிக அம்பாள், மரகதலிங்கம் - ஐந்தாம் நாளில் சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது.

சுதையாலான பெரிய துவாரபாலகர் உருவங்களைக் கண்டு தொழுது துவார விநாயகரையும், முருகனையும் வணங்கி உள்ளே சென்றால் நேரே பஞ்சநதேஸ்வரர் சந்நிதி தெரிகின்றது.

உள் பிராகாரத்தில் உள்ள அலங்கார மண்டபத்தின் சுவர்களில் பலவகை வரலாற்றுச் சிற்பங்கள் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. பவானிநாதர் சிவலிங்கமும், ஆதிவிநாயகரும் இவற்றையடுத்து நவக் கிரகங்களும், பஞ்சபூத லிங்கங்களும், சந்திரசேகரர் சந்நிதியும் உள்ளன. ஆதி விநாயகர், முன்பு ஒரு கல்வெட்டு உள்ளது. இச்சந்நிதியில் இரவு பகல் எந்நேரமும் எரியும் விதத்தில் எட்டு இழையாலான திரிஇட்டு நேத்திர தீபம் ஏற்றும் தர்மத்திற்காக நிபந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ள செய்தி இதில் சொல்லப்படுகிறது. இத்தீபத் தொண்டு தடைப்படு மாயின் இன்ன முகவரிக்குத் தெரிவித்தால் அது தொடர்ந்து செய்ய மேற்கொள்ளப்படும் எனும் குறிப்பும் உள்ளது. இதன் பக்கத்தில் மாடிக்குச் செல்லும் வழியுள்ளது. அதன்மேற் சென்றால் அழகிய சிற்பங்கள் பலவற்றைக் கண்டு மகிழலாம். அடுத்துப் பிராகாரத்தில் சித்தி விநாயகர், விசுவநாதர் விசாலாட்சி, தண்டபாணி உருவத் திருமேனிகள் உள்ளன. தனுசு சுப்பிரமணியரும், செல்வ விநாயகரும் உள்ளனர்.

ஆவுடை விநாயகர் தரிசிக்கத்தக்கது. (ஆவுடையார்) மீது விநாயகர். மகாலட்சுமி சரஸ்வதி கூடியுள்ள சந்நிதி, துர்க்கத்தாம்பாள் சந்நிதி கண்டு தொழுதவாறே வந்து சண்டேசுவரரைத் தரிசிக்கலாம். சண்டீசுவரர் சந்நிதி தனிக்கோயிலாக விமானத்துடன் அமைந்துள்ளது. விமானத்தில், ஒரு புறத்தில் பாற்குட அபிஷேகக் காட்சியும் மற்றொரு புறம் இறைவன் விசாரசருமருக்குச் சண்டீசப் பதத்தையருளும் காட்சியும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. நடராச சந்நிதி அழகுடையது. சப்தஸ்தானத் தலங்களுள் இத்தலம் நீங்கலாக ஏனைய ஆறு தலங் களின் சிவலிங்கத் திருமேனிகள் வரிசையாக உள்ளன. சுரஹரேஸ்வரர் திருமேனி உள்ளது.

Koviloor Digital Library

மூலவர் தரிசனம். பஞ்சநதேஸ்வரர் அழகான திருமேனி. சுயம்பு மூர்த்தி, மூலவர் முன் கவசமிடப்பட்டுள்ளது. இக்கவசத்தில் பசுவின் உருவமும் அதன்மீது சூலமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதனால் சுவாமிக்குத் 'திரிசூலி' என்ற பெயரும் சொல்லப்படுகிறது. "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" என்னும் திருமுறைத் தொடர் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. அலங்காரம் செய்து பார்க்கும் நிலையில் சிவலிங்கத் திருமேனி, பாம்பு படமெடுப்பது போலவும், கொண்டை போட்டிருப்பது போலவும் பலவித வடிவங்களில் தோன்றுவதைக் காணலாம். சுவாமிக்குப் புனுகு சட்டம் மட்டுமே சார்த்தப்படுகிறது. அதுவும் கைபடாமல் சார்த்தப்பட வேண்டும். மற்ற அபிஷேக மெல்லாம் ஆவுடையாருக்கே.

மூலவரின் கருவறை அகழி அமைப்புடையது. கோஷ்டமூர்த்த மாகத் தட்சிணாமூர்த்தி உள்ளார். இதைத் தட்சிணாமூர்த்தி பிராகாரம் என்கின்றனர். சுவாமி ஜடாபாரமாக இருப்பதாக ஐதீகம். ஆதலால் இவ்வுள் பிராகாரத்தில் எவரும் நுழைந்து வலம் வரக்கூடாது என்பர். வெளிவரும்போது இடப்பக்க மூலையில் மெய்கண்டார், உமாபதி சிவம் அருணந்தி சிவம் ஆகியோர் சந்நிதி உளது.

சுவாமிக்குப் 'பஞ்சநதேஸ்வரர்' என்னும் பெயர் வந்தமைக்குரிய வரலாறு வருமாறு :-

இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள அந்தணக்குறிச்சி என்னு மிடத்தில் பங்குனித் திருவாதிரையில் சிலாதமகரிஷிக்கு நந்தியெம் பெருமான் அவதரித்தார். அன்று மாலையே இறைவன் நந்தியை இங்கு அழைத்து வந்து, ஐந்துவித தீர்த்தங்களால் ((1) சூரியதீர்த்த நீர் (2) சந்திரதீர்த்த நீர் (3) நந்தி வாயில் ஒழுகிய நுரை நீர் (4) காவிரி நீர் (5) அம்பாளின் திருமுலைப்பாலாகிய நீர்) அவருக்கு அபிஷேகம் செய்து, 'அதிகார நந்தி' பட்டஞ்சூட்டிக் காவற் பொறுப்பை ஒப் படைத்தார். மறுநாள் புனர்பூசத்தன்று திருமழபாடியில் நந்திக்குத் திருமணம் செய்து வைத்தார். இதனுடைய அங்கமாகத்தான் சப்தஸ்தானத் திருவிழா - ஏழூர் திருவிழா சித்திரையில் நடைபெறுகிறது.

நந்தியெம்பெருமானுக்குத் திருமழபாடியில் நடைபெற்ற திருமண விழாவின் ஊர்வலமாகச் சப்தஸ்தான விழா இவ்வேழு தலங்களிலும் நிகழ்கிறது. ஐயறப்பர் நந்தியெம்பெருமானுடன் சித்திரை மாதம் முழுமதி நாளுக்கடுத்த விசாகத்தில் புறப்பட்டு ஏழூர்களுக்குச்செல்வர். ஏழூர் இறைவரும் ஐயாறப்பரை எதிர்கொண்டழைத்துத் தாமும் திருவுலாவிற்கு எழுந்தருளுவர். ஏழூர் இறைவரும் உலா வரும்

Koviloor Digital Library

இவ்வினிய விழா தமிழகத் திருக்கோயில் விழாக்களில் புகழ் பெற்றதாகும்.

அம்பாள் ஆலயம் தர்மசம்வர்த்தினியின் திருச்சந்நிதி. தனிக் கோயிலாகப் பக்கத்தில் உள்ளது. கிழக்கு நோக்கியது. கவசமிட்ட கொடிமரம், நந்தி, பலிபீடங்கள் உள்ளன. கருவறை, சிற்ப அழகு வாய்ந்தது - இழைக்கப்பட்ட கருங்கல்லால் ஆனது. வலம்வர வசதியுள்ளது. சூரியன், விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரி சந்நிதிகள் உள.

அம்பாள் நின்ற கோலம். அபயகரமும் தொடையைத் தொட்டுக் கொண்டிருப்பது போல மற்றொரு கரமும் உள்ள அமைப்பு. நான்கு திருக்கரங்கள் நல்ல பொலிவு.

அறம் வளர்த்த நாயகி, தரிசிக்கும் நம் உள்ளத்தில் ஆனந்தத்தையும் வளர்த்து அமைதியையும் அருளுகின்றாள். மாதந்தொறும் சித்திரைச் சதய நாளில் தென்கயிலைக் கோயிலிலும் சித்திரை ஆதிரையில் வடகயிலையீச்சரம் உலகமாதேவீச்சரம் கோயிலிலும் சிறப்பு ஆராதனை நடைபெறுகின்றது.

திருக்கோயிலின் தெற்கு வாயிலுக்கு நேரேவுள்ள வீதியின் கோடியில் காவிரியில் இறங்கி நீராட நல்ல படித்துறைகளுடன் கூடிய நீராடு கட்டம் உள்ளது. ஆளுநாயகன் கயிலையில் இருக்கையைக் காணுமது காதலித்த அப்பர், 'பழுதில் சீர் திருவையாற்றில் காண்' என இறைவன் பணிக்க. வடகோடியில் தீர்த்தத்தில் மூழ்கித் திருவையாற்றில் வந்து எழுந்த அத்திருக்குளம் - அப்பர் குளம் - தற்போது மக்கள் வழக்கில் 'உப்பங்குளம்' என்று மருவி, கோயிலின் மேலக்கோபுர வாயில் வழியே சென்று வலப்பக்கம் திரும்பிச் சென்றால் வீதியின் கோடியில் உள்ளது. நல்லபடித் துறைகள் உள்ளன.

குளத்தின் எதிரில் 'அபீஷ்ட வரத மகாகணபதி' கோயில் உள்ளது. இக்கோயிலில் மகாகணபதி சந்நிதியும், பக்கத்தில் விசுவநாதர் விசாலாட்சி சந்நிதியும், துர்க்கை சந்நிதியும் உள்ளன. அப்பர்பெருமானின் சந்நிதியும் உள்ளது. இதற்கு எதிரில், சுவற்றில், குளத்திலிருந்து அப்பர் எழுவது போலவும் எதிரே இறைவன் ரிஷபாரூடராய்க் காட்சி தருவது போலவும் சித்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. ஐயாறு செல்லும் அன்பர்கள், அவசியம் இத்திருக்குளத்தையும் கண்டு வர வேண்டும்.

பஞ்ச நதீஸ்வரர் சந்நிதி முகப்பு வாயிலின் முன்னுள்ள ஒரு கல்வெட்டு வள்ளல் பச்சையப்பரின் அறக்கட்டளையை உணர்த்துகிறது. ''இக்கட்டளை மூலம் ஒருலட்சம் வராகன், முதல் தொகையாக வைக்கப்பட்டு அதிலிருந்து வரும் வட்டித்தொகையிலிருந்து;

Koviloor Digital Library

(1) பஞ்ச நதீஸ்வரர் நித்திய கட்டளை நடைபெறவும்.

(2) மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அன்னதானம் மகேஸ்வர பூசையும் நடைபெறவும்.

(3) இந்துக்குழந்தைகளுக்கு, இந்து விவகார சாஸ்திரங்களையும் ஆங்கிலப் பாடத்தையும் போதிப்பதற்கு ஒரு பண்டிதரையும், ஒரு ஆசிரியரையும் நியமித்து அவர்களுக்கு ஊதியம் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செய்திகளை இக்கல்வெட்டுச் செய்தி விளம்பரப் படுத்துகிறது. கோயிலுக்குப் பக்கத்தில் சற்று தள்ளி, தியாகப் பிரம்மத்தின் சமாதி உள்ளது. சாலையிலேயே இதற்கான வளைவு கட்டப்பட் டுள்ளது. சென்று தரிசிக்கலாம்.

''புலன் ஐந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
அறிவு அழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமருங்கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவு அதிர மழையென்று அஞ்சிச்
சில மந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே''.

(சம்பந்தர்)

''உற்றார் இலாதார்க்கு உறுதுணையாவன ஓதி நன்னூல்
கற்றார் பரவப் பெருமையுடையன காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந்தான் கொடுக்கும்
அற்றார்க்கு அரும் பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே''.

'எல்லா உலகமும் ஆனாய் நீயே, ஏகம்பம் மேவியிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே, ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே, புகழ்ச்சேவடி என்மேல்வைத்தாய் நீயே
செல்வாய செல்வந்தருவாய் நீயே, திருவையாறு அகலாத செம்பொற் சோதீ''. *(அப்பர்)*

''பிழைத்த பிழை யொன்றறி யேனான் பிழையைத் தீரப்பணியாயே
மழைக்கணல்லார் குடைந்தாட மலைவு நிலனுங் கொள்ளாமைக்
கழைக் கொள் பிரசங் கலந்தெங்குங் கழனி மண்டிக்கையேறி
இழைக் குந்திரைக் காவிரிக் கோட்டத்தையாறுடைய அடிகளோ''.

(சுந்தரர்)

Koviloor Digital Library

''குந்தி நடந்து குனிந்தொரு கைகோலூன்றி
நொந்திருமி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயா முன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.''

(ஐயடிகள் காடவர் கோமான்)

-பண்பகன்ற
வெய்யாற்றில் நின்றவரை மெய்யாற்றில் ஏற்று திரு
வையாற்றின் மேவிய என் ஆதரவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. பஞ்சநதேஸ்வரர் திருக்கோயில்
திருவையாறு - அஞ்சல் 613 204.
திருவையாறு வட்டம் தஞ்சை மாவட்டம்

106/52. திருநெய்த்தானம்

தில்லைஸ்தானம்

சோழநாட்டு (வடகரை)த் தலம்

திருவையாற்றுக்கு மிக அருகாமையில் உள்ளது. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தானத் தலங்களுள் இதுவும் ஒன்று. மக்கள் வழக்கில் தில்லைஸ்தானம் எனப்படுகிறது.

சரசுவதி, காமதேனு, கௌதமமுனிவர் ஆகியோர் வழிபட்டதலம். இங்கு இறைவனுக்குப் பசுநெய் அபிஷேகம் விசேஷமானது.

இறைவன் – நெய்யாடியப்பர் கிருதபுரீஸ்வரர்.
இறைவி – பாலாம்பிகை

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய ராஜகோபுரம். முதற்பிராகாரம் விசாலமானது. அம்பாள் கோயில், தனிக்கோயிலாகத் தெற்கு நோக்கியுள்ளது. உள் பிராகாரத்தில் விநாயகர், முருகன் சந்நிதிகள் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி லிங்கோற்பவர், பிரம்மா ஆகியோர் மூர்த்தங்கள் உள்ளன. மூலவர் நெய்யாடியப்பர். சிறந்த மூர்த்தம்

Koviloor Digital Library

பெயருக்கேற்ப பசு நெய் இவருக்குகந்த அபிஷேகம் ஆகும். துவார கணபதி நர்த்தன கணபதியாக உள்ளார்.

அம்பிகையின் திருப்பெயர் தேவாரப் பதிகத்துள் இளமங்கை யம்மை என்றும் குறிக்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் இத்தலம் ''இராஜராஜ வளநாட்டு பைங்காநாட்டு திருநெய்த்தானம்'' என்றும்; சுவாமியின் பெயர் நெய்த்தானமுடையார் என்றும் குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டுக்களிலிருந்து, நிபந்தமாக நிலங்கள் அளித்தமை, விளக் கெரிக்கப் பொற்காசுகள் தந்தமை, ஊர்ச்சபையார் ஸ்தபன மண்டபம் கட்டியது, கோயிற் பணியாளர்களுக்கு (மேளக்காரர், தேவரடியார்கள்) நிலங்கள் அளித்தமை சுவாமியின் நைவேத்யத்திற்கு நிலங்கள் விட்டது முதலிய செய்திகள் தெரிய வருகின்றன. இலங்கையரசன் கயவாகு என்பவன் இப்பெருமானைத் தன் குலதெய்வமாகக் கொண்டு திருவிழாக்கள் செய்வித்த செய்தியும் கல்வெட்டால் தெரியவருகின்றது. இக்கோயிலில் பல்லவர்களும் திருப்பணி செய்துள்ளனர் என்பதற்குச் சான்றாக சிம்மத் தூண்கள் உள்ளதைக் காணலாம்.

இத்திருக்கோயிலின் கருவறை விமானம் ஏகதள அமைப் புடையது.

''மையாடிய கண்டன்மலை மகள் பாகமதுடையான்
கையாடிய கேடில் கரியுரி மூடிய வொருவன்
செய்யாடிய குவளைம் மலர் நயனத் தவளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே''

(சம்பந்தர்)

''வானவர் வணங்கியேத்தி வைகலு மலர்கள் தூவத்
நானவர்க் கருள்கள் செய்யுஞ் சங்கரன் செங்கணேற்றன்
தேனமர் பொழில்கள் சூழத் திகழு நெய்த்தான மேய
கூனிள மதியினானைக் கூடுமாறறி கிலேனே''.

(அப்பர்)

–''பொய்யகற்றி
மெய்த்தான நின்றோர் வெளித்தானமேவு திரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. நெய்யாடியப்பர் திருக்கோயில்
தில்லைஸ்தானம் & அஞ்சல் - 613 203
திருவையாறு வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

107/53. பெரும்புலியூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

திருவையாறு - கல்லணை, திருக்காட்டுப்பள்ளி செல்லும் சாலையில் தில்லைஸ்தானத்திற்கு வலப்புறமாகப் பிரியும் கிளைச் சாலையில் 4 கி.மீ சென்றால் பெரும்புலியூரை அடையலாம். கோயில் வரை காரில் செல்லலாம். வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) வழிபட்ட தலமாகும்.

இறைவன் - வியாக்ரபுரீஸ்வரர்
இறைவி - சௌந்தரநாயகி
தலமரமில்லை. தீர்த்தம் பக்கத்தில் உள்ளது.
சம்பந்தர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. கொடிமரம் இல்லை. பலிபீடம் மட்டுமே உள்ளது. கோபுரத்தில் உள்ள சிற்பங்கள் மிகப் பழமையானவை - கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்புறம் சுதையாலும் அமைந்தவை.

உள்ளே நுழைந்தால் நேரே மூலவர் காட்சி தருகின்றார். பிராகார வலம் வரும்போது சூரியன், விநாயகர் சந்நிதிகள் உள்ளன. அடுத்து சுப்பிரமணியர் சந்நிதி. இக்கோயிலைப் பாதுகாத்து பிரபலமாகச் செய்த சுந்தர சுவாமிகள் என்பவருடைய உருவச்சிலை உள்ளது.

அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. நின்றநிலை. அழகான உருவம் - இனிய புன்முறுவலுடன் இதமான காட்சி. நவக்கிரக சந்நிதியில் எல்லா உருவங்களும் நடுவிலுள்ள சூரியனைப் பார்த்தவாறே அமைந்துள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும், இலிங்கோற்பவரிடத்தில் அர்த்தநாரீஸ்வரரும் காட்சி தருகின்றனர். சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது.

சுவாமியின் கருவறை, கீழே அமைந்த நான்கு அடுக்குகளாலான பத்மபீடத்தின்மீது அமைந்துள்ளது. கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி சுதையாலும் ஆனது. சிறிய விமானம் - செடிகள் மூடியுள்ளன. மூலவர் கிழக்கு நோக்கிய சந்நிதி. சற்று உயரமான ஆவுடையார், மூலவருக்குப் பக்கத்தில் வெளியே காசி விசுவநாதர் இலிங்கம் வலப்பால் உள்ளது.

பெருவிழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. நித்திய வழிபாடுகள் மட்டுமே நடைபெறுகின்றன.

Koviloor Digital Library

''மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார் வேதமுடைய விமலர்
கண்ணுமோர் பாகமுடையார் கங்கை சடையிற்கரந்தார்
பெண்ணுமோர் பாகமுடையார் பெரும்புலியூர் பிரியாரே''.

(சம்பந்தர்)

-''மைத்த
கரும்புலியூர்க் காளையொடுங் கண்ணோட்டம் கொள்ளும்
பெரும்புலியூர்வாழ் கருணைப் பேறே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி :-

அ/மி. வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில்
பெரும்புலியூர் - திருநெய்த்தானம் அஞ்சல்
(வழி) திருவையாறு - *613 203.*
திருவையாறு வட்டம் - தஞ்சை மாவட்டம்.

108/54. திருமழபாடி

Koviloor Digital Library

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

முற்காலத்தில் மழவர் என்னும் பிரிவினர் ஆண்டு வந்த பகுதி யாதலால் மழவர்பாடி என்று பெயராகி அது பின்பு மழபாடி ஆயிற்று. பாடி - படைகள் தங்குமிடம். கொல்லிமழவன் என்பவன் இப்பகுதியை ஆண்டு வந்தபோது அவனுடைய படைகள் - மழவர் சேனை தங்கியிருந்த இடமாதலின் மழவர்பாடி என்றாகிப் பின்பு மழபாடி ஆயிற்று என்பர்.

மார்க்கண்டேய முனிவரின் பொருட்டு இறைவன் மழு ஏந்தி நடனமாடிக் காட்சி தந்தமையால் இத்தலம் 'மழுவாடி' என்று பெயர் பெற்றது. இதுவே பிற்காலத்தில் மழபாடி என்று வழங்கலாயிற்று என்பது தலபுராணச் செய்தியாகும்.

அரியலூரிலிருந்தும், திருவையாற்றிலிருந்தும், திருச்சியில் இருந்தும் இத்தலத்திற்குப் பேருந்து வசதியுள்ளது.

இறைவன் - வைத்தியநாதர், மழுவாடீசுவரர், வைரத்தூண் நாதர், வச்சிரதம்பேஸ்வரர்

இறைவி - சுந்தராம்பிகை, அழகம்மை பாலாம்பிகை

தலமரம் - பனை

தீர்த்தம் - இலக்குமி தீர்த்தம் (அம்பாள் சந்நிதிக்கு எதிரில் உள்ளது). கொள்ளிடம்.

தலவிநாயகர் - சுந்தர விநாயகர்

மூவர் பாடல் பெற்ற தலம்.

திருமால், இந்திரன் ஆகியோர் வழிபட்டது. நந்திதேவர் திருமணம் கொண்டதுமான சிறப்புடைய தலம். சுந்தரர் கனவில் இறைவன் ''மழபாடி வர மறந்தனையோ'', என்று உணர்த்திட, அவர் சென்று வழிபட்ட தலம். சந்திரனின் களங்கத்தைப் போக்கியதால் வைத்திய நாதர் என்றும், பிரமனின் சத்தியலோகத்திலிருந்து புருஷா மிருகம் சிவலிங்கத்தை எடுத்து வந்து இங்குப் பிரதிஷ்டை செய்து வழிபட்டது. அதை யறிந்த பிரமன் வந்து அச்சிவலிங்கத்தை மீண்டும் எடுக்க முயன்றபோது முடியாமற் போகவே ''இது வைரத்தூணோ'' என்று சொல்லிப் புகழ்ந்ததால் வைரத்தூண் நாதர் என்றும் வச்சிர தம்பேஸ்வரர் என்றும் இறைவனுக்குப் பெயர்கள் வந்தன. திருநாவுக்கரசர் பெருமான் தம் பதிகத்தில் ''மழபாடி வைரத்தூணே'' என்று பாடிப் போற்று கின்றார்.

Koviloor Digital Library

வைத்திய நாத சுவாமி சந்நிதி என்பது ஜ்வரஹரேஸ்வரர் சந்நிதியாகும் என்பர் ஆய்வாளர்கள். இது இராசேந்திரன் காலத்தியது. பாலாம்பிகை கோயில் இராசராசன் காலத்தது. நூற்றுக்கால் மண்டபம், சோமாஸ்கந்த மண்டம் ஆகியவை 13ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. நடுச் சுற்றிலுள்ள கோபுரம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டது. வெளிச்சுற்றுச்சுவரின் உள்ள நுழைவு வாயில் கோபுரம் பாண்டியர் திருப்பணி. கோயிலுக்கு வெளியில், எதிரில் உள்ள மண்டபம் - கோனேரிராயன் மண்டபம் என்றழைக்கப்பட்டது. கோனேரிராயன் என்பவன், விஜய நகர ஆட்சியின் தொடர்புடையவனாக இருந்தான். இக்கோயில் வழிபாட்டுக்கென கிருஷ்ண தேவராயர் நிலங்களைத் தந்த செய்தியை ஈங்கோய் மலை கல்வெட்டு தெரிவிக்கிறது. இவ்வாறு பல மன்னர்களும் பல்வேறு காலங்களில் செய்து வைத்த திருப்பணிகளின் மொத்த வடிவமே இன்று நாம் காணும் கோயிலாகும்.

இத் தலத்தில் கொள்ளிடம் நதி, உத்தரவாகினியாக - வடக்கு முகமாகப் பாய்ந்தோடுவது சிறப்புடையதாகும். இங்குள்ள ஒரே கல்லில் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் திருவுருவம் தரிசிக்கத்தக்கது.

கிழக்கு நோக்கிய பெரிய திருக்கோயில், ஏழு நிலைகளையுடைய கோபுரம். உள் நுழைந்ததும் கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளன. இரண்டாங் கோபுரத்தைக் கடந்ததும் மிகப்பெரிய அலங்கார மண்டபம் உள்ளது. இங்கு இரு நந்தி சந்நிதிகள் உள.

பிராகாரத்தில் அகோரவீரபத்திரர், விநாயகர், முருகர் ஆகியோர் காட்சி தருகின்றனர். மூன்றாவது வாயிலைக் கடந்தால் மகா மண்டபத்தை அடையலாம் - கருவறையும் சோமாஸ்கந்தர் கோயிலும் இணைந்து பெரிய கோயிலாகக் காட்சியளிக்கின்றன.

ஜ்வரஹரேசுவரர் சந்நிதியுள்ளது. உற்சவ மூர்த்தங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி, புருஷாமிருகத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப் பட்டதாகும்.

இரு அம்பாள் சந்நிதிகள் உள்ளன. பாலாம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் எழுதிய தலபுராணம் உள்ளது. லால்குடி, புலவர் திரு. ப. அரங்கசாமி அவர்கள் மும்மணிக் கோவையும், திருவரங்கம் ஆசுகவியரசு திரு. க. இராசவேலு அவர்கள் (வழக்கறிஞர்) இரட்டை மணி மாலையும்பாடியுள்ளனர். ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் நந்திதேவர் திருமண விழா பெருவிழாவாக

Koviloor Digital Library

நடைபெறுகின்றது. அன்றைய நாளில் திருவையாற்று இறைவன் இங்கு எழுந்தருள்வதும், திருவையாற்றில் நடைபெறும் சப்தஸ்தான விழாவுக்கு இங்கிருந்து நந்தி தேவர் புறப்பட்டுச் செல்லும் மரபாக இருந்து வருகின்றது. இங்கு நவக்கிரகங்கள் இல்லை. சுவாமி சந்நிதியில் மூன்று குழிகள் போலவுள்ளன. இதை நவக்கிரமாக எண்ணி வழிபடு கின்றனர். சோழர், பாண்டிய, காலத்திய கல்வெட்டுக்கள் கிடைத் துள்ளன. அவற்றிலிருந்து, அரசர்களும் அரசியர்களும் ஆலயத்திற்குத் தந்த பல்வேறு நிபந்தங்கள் தெரிய வருகின்றன.

இக்கோயில் எண்ணற்ற கல்வெட்டுக்களைக் கொண்டுள்ளது. கோயிற் சுவர்களில் முதற் பராந்தகன் - முதலாம் இராசராசன் - முதலாம் இராசேந்திரன் - முதலாம் இராதிராசன் - இரண்டாம் இராசேந்திரன் - முதற்குலோத்துங்கன் - விக்ரம சோழன் - இரண்டாம் குலோத்துங்கன் - மூன்றாம் குலோத்துங்கன் - சடைய வர்மன் சுந்தரபாண்டியன் - ஒய் சளமன்னன் வீரசோமேசுவரன் ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. 10 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை இவர்களால் இக்கோயில் பல பணிகளைப் பெற்றுள்ளது.

விளக்கெரிக்க ஆடுகள் தந்தமை - கோயில் விமானம் புதுப் பித்தமை - திருவமுதுக்கு நிலம் தந்தது - நந்தவனம் அமைத்தது - கமுகந்தோட்டம் தந்தது - திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டுவர ஏற்பாடு செய்து அதற்கென நிலம் ஒதுக்கியது போன்ற அரிய செய்திகள் இக் கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன. மாசி மகத்தில் பெருவிழா நடைபெறுகிறது. அப்பர் அருள் நெறி மன்றம் - இத்தலத்தில் தெய்வப் பணிகளில் ஈடுபட்டுச் செயற்பட்டு வருகிறது. திருமழபாடித் தமிழ்ச்சங்கம் தல வரலாற்றை வெளியிட்டுள்ளது. அதிலுள்ள வரலாறு கல்வெட்டுச் செய்திகள் நன்றியுடன் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

''சந்தவார் குழலாளுமை தன்னொரு கூறுடை
எந்தையானி மையாத முக்கண்ணினன் எம்பிரான்
மைந்தன் வார் பொழில் சூழ் மழபாடி மருந்தினைச்
சிந்தியா யெழுவார் வினையாயின தேயுமே''.

(சம்பந்தர்)

''ஆலாலம் உண்டுகந்த ஆதிகண்டாய்
அடையவர்தம் புரமூன்றும் எய்தான் கண்டாய்
காலாலக் காலனையும் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள் செய்த காளைகண்டாய்

Koviloor Digital Library

பாலாரும் மொழிமடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலும் அறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன்தானே''.

(அப்பர்)

''பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மினனே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.''

(சுந்தரர்)

''இழவாடிச் சுற்றத்தார் எல்லாரும் கூடி
விழவாடி ஆவி விடாமுன்னம் -மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை.''

(ஐயடிகள் காடவர்கோன்)

-''விரும்பிநிதம்
பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு மழபாடி வச்சிரமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி.வச்சிரதம்பேசுவரர் திருக்கோயில்
திருமழபாடி & அஞ்சல் (THIRUMALAVADI) 621 851
அரியலூர் வட்டம் - பெரம்பலூர் மாவட்டம்.

Koviloor Digital Library

109/55. திருப்பழுவூர்

கீழப்பழுவூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் கீழப்பழுவூர் என்று வழங்குகின்றனர். திருச்சி- அரியலூர் சாலையில் உள்ளது. இவ்வூர் மேலப்பழுவூர், கீழைப்பழுவூர் என்று இருபிரிவாகவுள்ளது. இத்தலம் கீழைப்பழுவூர் ஆகும்.

பழு-ஆல். ஆல் தலமரமாதலின் பழுவூர் என்று பெயர் பெற்றது. அம்பிகை தவஞ் செய்ததால் யோகவனம் எனப்படுகிறது. பரசுராமர், தன் தாயைக் கொன்ற பழிதீரும் பொருட்டு வழிபட்டபதி, மூலவர் முன்னாலுள்ள மேல் உத்தரத்தில் பரசுராமர் உருவம் உள்ளது. ஜமதக்னி முனிவர் உருவம் மேலப் பழுவூரில் உள்ளது. சாலை யோரத்தில் கோயில் வளைவு உள்ளது. பழமையான கோயில். அறநிலையத்துறைக்கு உட்பட்டது - போதிய பராமரிப்பில்லை.

இறைவன்	-	வடமூலேஸ்வரர், யோகவனேஸ்வரர், ஆலந்துறையார் (வடம்-ஆல்)
இறைவி	-	அருந்தவநாயகி
தலமரம்	-	ஆல்
தீர்த்தம்	-	பிரமதீர்த்தம் (எதிரில் உள்ளது)

சம்பந்தர் பாடல் பெற்றது.

உமை தவம்செய்த பதி, மற்றும் பிரமன், திருமால், இந்திரன், அகத்தியர், சந்திரன், வசிட்டர்,காசிபர், வியாசர் முதலியோர் வழிபட்ட பெருமையுடைய தலம். இத் தலத்துப் பெருமையை விளக்கும் தலபுராணப் பாடல் வருமாறு:-

''மறைகளுக்கு மேல் மறையதாய் நிற்பது மனத்தின்
நிறையவா வினைமுற்றுறச் செய்வது நிலைசேர்
பொறையும் ஞானமும் போற்றுவார்க் களிப்பது புரைதீர்
தரையின் மேம்படு பழுவை யென்றுள தொருதலமே.''

பேருந்து நிலையத்திற்கு அருகில் கோயில் உள்ளது. கிழக்கு நோக்கியது. எதிரில் குளம் உள்ளது. அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. அர்த்த மண்டபச் சுவரையொட்டி காலசம்ஹாரர், அர்த்தநாரீஸ்வரர், கல்யாணசுந்தரர், கங்காளர், பைரவர், உருவங்கள் உள்ளன. தென்புற மேடைமீது அறுபத்துமூவர், திரிபுராந்தகர், ரிஷாபாரூடர் முதலிய

Koviloor Digital Library

உற்சவத் திருமேனிகள் உள்ளன. இவைகள் சிற்ப வேலைப்பாடுடையன. பிராகாரத்தில் துர்க்கை, திருநாவுக்கரசர், சம்பந்தர், விநாயகர், வீரபத்திரர், சப்தமாதாக்கள் ஆகிய திருமேனிகள் உள்ளன. கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர்.

கயமுகாசூரனை அழித்த பின்னர் இங்கு வந்து விநாயகர் ஆனந்தநடனஞ் செய்ததால் இங்குள்ள விநாயகர் ''நிருத்த விநாயகர்'' என்றழைக்கப்படுகிறார். மூலவர் - தரிசனம். அரியலூர் சிவன் கோயிலில் உள்ள சுவாமி, அம்பாள் திருமேனிக்கும் ஆலந்துறையார், அருந்தவ நாயகி என்றே பெயர். நாடொறும் நான்கு கால பூசைகள். 1974ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. ''திருப்பழுவூர்ப்புராணம்'' - யோகவன மான்மியம்'' - தலபுராணம் கபிஸ்தலம் வேலையர் பாடியுள்ளார்.

பங்குனியில் நடைபெறும் விழாவில் 3ஆம் நாள் சுவாமி மேலப்பழுவூர் சென்று அங்குள்ள ஜமதக்னி முனிவருக்குக் காட்சிதரும் ஐதீகம் நடைபெறுகிறது. இக்கோயில் முதலாம் பராந்தகன் காலத்திலேயே கற்றளியாக எடுக்கப்பட்டதாகும். இத் தலத்துள் உள்ள மற்றொரு சிவாலயம்-பசுபதீஸ்வரம். பழையபெயர் மறவனீஸ்வரம். இச்சிவாலயம் பழுவேட்டரைய மன்னன் என்பவன் மகன் 'கண்டன்' என்பவன் கட்டியதாகும்.

''பெரும்பழுவூர் பழுவேட்டரையர்'' என்ற தொடர் கல்வெட்டில் காணப்படுவதிலிருந்து சோழ மன்னர்களுடைய அதிகாரிகளாகிய பழுவேட்டரையர் என்னும் பட்டம் பெற்ற கூட்டத்தினர் சிலர் அக்காலத்தில் கோயில் காரியங்களைக் கவனித்து வந்ததாகத் தெரிகிறது என்பர். கல்வெட்டில் 'பிரமதேயமான சிறு பழுவூர், ஆலந்துறை' என்று தலமும், 'ஆலந்துறை மகாதேவர்' என்று சுவாமியும் குறிக்கப்படுகின்றனர். குலோத்துங்கன், ராஜாதிராஜன், ராஜேந்திரசோழன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இம் மன்னர்கள் இக் கோயிலுக்கு நிலங்களை விட்டதும் வெள்ளிப் பாத்திரங்களையும் பொன்னாபரணங்களையும் வழங்கியதுமான செய்திகள் கல்வெட்டுக்களினால் தெரியவருகின்றன. கோயிலுக்குப் பக்கத்தில் குருக்கள் வீடு உள்ளது.

''முத்தன மிகு மூவிலை நல்வேலன் விரிநூலன்
அத்தன் எமை ஆளுடைய அண்ணல் இடமென்பர்
மைத்தழை பெரும் பொழிலன் வாசம் அதுவீசப்
பத்தரொடு சித்தர் பயில்கின்ற ஊரே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

தலபுராணப்பாடல்:

''சீர்கொண்ட சுகவடிவாய் அருமறையின் உட்பொருளாய்த் தெளிவாய்
மேலாய்ப்
பேர்கொண்ட ஐந்தொழிலும் இயற்றி இயற்றாத தனிப் பிரமமான
கார்கொண்ட மணிமிடற்றெம் பெருமானை யோக வனக் கடவுளானை
ஏர்கொண்ட வடமூலநாதனை மெய் யன்பினால் இறைஞ்சல் செய்வாம்.''

''அளவில் பெரும்புகழ்ச்சேர் மெய்ஞ் ஞானவிழியால் நோக்கி
அன்பென்றோதும்
தளர்வில் மணிக்கரத்தால் அஞ்சலித்து அறிவாஞ் சிரத்தினால் தாழ்ந்து
மேன்மை
விளைவு நெறிப் பத்தியெனு மணிவாயற் புகழ்ந்துருகி விரும்பியென்றும்
தவள நகைக் களபமுலை அருந்தவநாயகி கமலச் சரண்புக்கேமால்.''

-துன்னுகின்ற
நாய்க்கும் கடையேன் நவைதீர நற்கருணை
வாய்க்கும் பழுவூர் மரகதமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வடமூலேஸ்வரர் திருக்கோயில்
கீழப்பழுவூர் & அஞ்சல் (KILAPALUVUR) 621 707
அரியலூர் வட்டம் - பெரம்பலூர் மாவட்டம்.

110/56. திருக்கானூர்

சோழநாட்டு (வடகரை)த் தலம்

கொள்ளிடக் கரையில் கோயில் மட்டும் தனியே உள்ளது. மக்கள் குடியிருப்பு ஏதுமில்லை. கோயிலைச் சுற்றி மரங்கள் அடர்ந்து பசுமையான சூழல் உள்ளது. கோயில் இருப்பதைத் தவிர இங்கு எவ்வித வசதியுமில்லை. இத்தலத்திற்குச் செல்வோர் காலையில் சூரிய வெப்பம் ஏறுவதற்கு முன்பும் அல்லது மாலையில் சூரிய வெப்பம் தணிந்த பின்பும் தான் வசதிப்படிச் செல்லவேண்டும். காரணம் சிறிது

Koviloor Digital Library

தூரம் மணலில் நடக்கவேண்டும். இருட்டி விட்டால் இங்குச் சென்று வரமுடியாது.

(1) தனிப் பேருந்தில் திருக்கூட்டமாகச் செல்வோர் திருக்கண்டியூரிலிருந்து, சிவாலயத்திற்கு நேர் எதிரில் செல்லும் திருக்காட்டுப் பள்ளிச் சாலையில் சென்று திருக்காட்டுப்பள்ளியை அடைந்து, அங்கிருந்து காவிரிப் பாலத்தைத் தாண்டி, வலப்புறமாகப் பிரிந்து செல்லும் கும்பகோணம், மயிலாடுதுறை பாதையில் சிறிது தூரமே வந்து, உடனே இடப்புறமாகப் பிரியும் விஷ்ணம்பேட்டை சாலையில் திரும்பிச் சென்று, விஷ்ணம்பேட்டையை அடைந்து, பேருந்தை நிறுத்தி விட்டு, திருக்கானூர் கோயிலுக்குச் செல்லும் வழியைக் கேட்டறிந்து அச்சாலையில் (மண்சாலை) நடந்து செல்ல வேண்டும். வயல்களின் நடுவே செல்லும் இச்சாலையின் முடிவில் மக்கள் குடியிருக்கும் பகுதிவரும். அங்கிருந்து மணலில் கொஞ்ச தூரம் நடந்து மேட்டைக் கடந்து கொள்ளிடக் கரைமீதேறி வலப்புறமாகத் திரும்பி சென்றால் சிறிது தூரத்தில் கோயிலை அடையலாம். (Van Car களில் வருவோர் கூட மேற்சொல்லியவாறு நிறுத்திவிட்டு நடந்து வருவதே நல்லது.)

(2) தனியாக வருவோர் திருக்காட்டுப் பள்ளியிலிருந்து வாடகை சைக்கிள் எடுத்துக் கொண்டு மேற்சொல்லியவாறு அவ்வழியே வந்து, மணற்பகுதிக்கு முன்புள்ள மக்கள் குடியிருப்புப் பகுதியில் சைக்கிளை விட்டு விட்டு நடந்து சென்று கோயிலை அடையலாம். (இக் கோயில் குருக்கள் விஷ்ணம்பேட்டையில் உள்ளார். அவரையழைத்துக் கொண்டுதான், தரிசனத்திற்குச் செல்லவேண்டும்) அக்கினி வழிபட்ட தலம்.

1924ல் வெள்ளம் வந்தபோது கோயில் முழுவதும் மூடிவிட்டது. அதன்மீது ஒரு கரும்பு மட்டுமே முளைத்திருக்கக்கண்டு, திரு.N.சுப்பிரமணியஐயர் என்பவர் முயன்று தோண்டிப் பார்த்தபோது கோயில் கண்டுபிடிக்கபட்டது. இதனால் இப்பெருமானுக்குக் கரும்பேஸ்வரர் என்று பெயராயிற்று.

இறைவன் - செம்மேனிநாதர், கரும்பேஸ்வரர்

இறைவி - சிவலோக நாயகி

தீர்த்தம் - கொள்ளிடம்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

கிழக்கு நோக்கிய சிறியராஜகோபுரம், பிராகாரத்தில் விநாயகர் முதலான சந்நிதிகள் முறையாகவுள்ளன. உள்ளிடம் விசாலமாக உள்ளது. சுற்று மதிலும் கோயிலும் நன்குள்ளன. மூலவர் அழகான மூர்த்தி. விமானம் ஏகதளம்-உருண்டை வடிவமானது. அம்பாள் சாளக்ராம விக்ரஹம். தெற்கு நோக்கிய சந்நிதி. தன்னந்தனியே கோயில் இருந்தாலும், காண்பதற்கு அழகாகக் காட்சியளிக்கிறது. 24.8.1980ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. நித்தியபூஜை இரு காலம் நடைபெறுகிறது.

(திருக்கானூர் என்னும் ஊர்ப் பெயர் மாறி, இன்று மக்கள் குடியிருப்பு ஒருசிலவே இருப்பதாலும், மணற்பகுதியை அடுத்திருப்பதாலும் மக்கள் இவ்விடத்தை மணல் மேடு என்றே வழங்குகின்றனர்.)

''தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல
முழவ மொந்தை மல்கு பாடல் செய்கையிட மோவார்
குமிழின்மேனி தந்து கோல நீர்மையது கொண்டார்
கமழுஞ் சோலைக் கானூர் மேய பவள வண்ணரே.''

(சம்பந்தர்)

''திருவின் நாதனும் செம்மலர் மேலுறை
உருவனாயுலகத்தின் உயிர்க் கெலாம்
கருவனாகி முளைத்தவன் கானூரில்
பரமனாய பரஞ்சுடர் காண்மினே.''

(அப்பர்)

-தேய்க்களங்கில்
வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூர் உயர் தங்கக் கட்டியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

திருக்கானூர் கோயில் சிவாசாரியார்
விஷ்ணம் பேட்டை & அஞ்சல்
(வழி) திருக்காட்டுப் பள்ளி.
தஞ்சை மாவட்டம்.613 105.

Koviloor Digital Library

111/57. அன்பிலாலந்துறை

கீழ்அன்பில், அன்பில், அம்பில்.

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

திருச்சிக்குப் பக்கத்தில் உள்ளது. திருச்சியிலிருந்தும் லால்குடியிலிருந்தும் பேருந்தில் செல்லலாம். ஊர்ப்பெயர்-அன்பில். கோயிலின் பெயர்-ஆலந்துறை. வாகீசமுனிவர் பிரமன் ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - சத்திய வாகீஸ்வரர், பிரமபுரீஸ்வரர், ஆலந்துறையார்.

இறைவி - சௌந்தர நாயகி

தலமரம் - ஆலமரம்.

தீர்த்தம் - சந்திர தீர்த்தம். (கோயிலுக்குத்தெற்கில் உள்ள குளம். இதில் ஐந்துகிணறுகள் உள்ளன)இத்தல விநாயகர் 'செவிசாய்த்த விநாயகர்' என்றழைக்கப்படுகிறார். கொள்ளிடத் தென் கரையில் நின்று பாடிய சம்பந்தரின் பாடல்களைச் செவிசாய்த்துக் கேட்டமையின் விநாயகர் இப்பெயர் பெற்றார்.

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற தலம்.

ஐந்து நிலைகளையுடைய ராஜகோபுரம். கிழக்கு நோக்கியது. நேரே பார்த்தால் மூலவர் சந்நிதி தெரிகின்றது. துவாரபாலகர்களின் பக்கத்தில், பிரமன் வழிபடுகின்ற சிற்பம் உள்ளது. இதுபோலவே கருவறையின் வெளிச்சுவரில் நாற்புறமும் பிரமன், அம்பாள் வழிபடுவது போலவும் சிற்பங்கள் உள்ளன. பிராகாரமாக வலம் வரும் போது தலவிநாயகராகிய 'செவிசாய்த்த விநாயகர்' சந்நிதி உள்ளது.

அடுத்துச் சப்த கன்னியரும், பிட்சாடனரும், காசிவிசுவநாதர் விசாலாட்சியும், பைரவரும், வள்ளிதெய்வயானையுடன் சுப்பிரமணியரும் காட்சி தருகின்றனர்.

கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும், இலிங்கோற்பவர் இடத்தில் மத்தியில் விஷ்ணுவும் இருபுறமும் சூரிய சந்திரர்களும் உள்ளனர். பிரம்மா சந்நிதியும் உள்ளது. மூலவர்-சிவலிங்கத் திருமேனி - சுயம்பு; சதுரபீட ஆவுடையார். நடராசசபை நேரே வாயில் உள்ளது. அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது-நின்ற திருக்கோலம். இக்கோயில் பராந்தக சோழன் காலத்தில் கட்டப்பட்டது. அதற்கு முன்பு மாடக் கோயிலாக இருந்ததாம்.

Koviloor Digital Library

பராந்தக சோழன் நூற்றெட்டு அக்னிஹோத்திரிகளைக் கொண்டு வந்து இத்தலத்தில் குடியேறிச் செய்தான். இந்த குடும்பத்தார்கள் ஜைமினி சாமவேதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய சாமவேதப் பாராயணத்தை முன்னரே கேட்டருளிய விநாயகர், பின்னர் ஞானசம்பந்தர் பாடலையும் கேட்டருளினார். ஆதலின் செவி சாய்த்த விநாயகருக்குச் ''சாமகானம் கேட்ட விநாயகர்'' என்ற பெயரும் உண்டு.

முன்மண்டபத்தில் உள்ள தூணில் பாம்பின் வால் ஒருபுறமும் தலை மறுபுறமுமாக கல்லுள் நுழைந்து வந்திருப்பது போலச் சிற்ப மொன்று அழகாக உள்ளது. மற்றொரு தூணில் இருபாம்புகள் ஒன்றோ டொன்று பலமுறை பின்னிக் கொண்டிருக்க மத்தியில் சிவலிங்கம் உள்ளதாக ஒரு சிற்பம் உள்ளது. முருகப் பெருமான் சிவலிங்கத்தை வழிபடும் சிற்பமும் உள்ளது.

''செடியார் தலையில் பலி கொண்டினி துண்ட
படியார் பரமன் பரமேட்டி தன்சீரைக்
கடியார் மலரும் புனல்தூவி நின்றேத்தும்
அடியார் தொழும் அன்பில் ஆலந்துறையாரே.''

(சம்பந்தர்)

''பிறவி மாயப் பிணக்கில் அழுந்தினும்
உறவெலாஞ் சிந்தித்துன்னி யுகவாதே
அறவன் எம்பிரான் அன்பில் ஆலந்துறை
மறவாதே தொழுதேத்தி வணங்குமே.''

(அப்பர்)

-நானூறு

கோலந் துறைகொண்ட கோவையருள் கோவைமகிழ்
ஆலந்துறையின் அணி முத்தே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சத்திய வாகீஸ்வரர் திருக்கோயில்
அன்பில் & அஞ்சல்
திருச்சி மாவட்டம். 621 702.

Koviloor Digital Library

112/58. திருமாந்துறை

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

லால்குடிக்குப் பக்கத்தில் உள்ளது. திருச்சி - லால்குடி சாலையில் உள்ள தலம். திருச்சியிலிருந்து 15கி.மீ. திருச்சியிலிருந்தும் லால்குடியிலிருந்தும் செல்லலாம். பேருந்துப் பாதையுள்ளது. இது 'வடகரை மாந்துறை' என்றழைக்கப்படுகிறது. (கும்பகோணம் அருகில் திருமங்கலக்குடிக்குப் பக்கத்தில் உள்ள மாந்துறை என்னும் ஊர் தென்கரை மாந்துறை எனப்படுகிறது. அஃது வைப்புத்தலம்.) சூரியன், சந்திரன், இந்திரன், மிருகண்டுமுனிவர் ஆகியோர் வழிபட்டது.

(தாயை இழந்த மான்குட்டிக்காக இறைவனே தாயாக மாறியதாக வரலாறு)

இறைவன் - ஆம்ரவனேஸ்வரர், சுத்தரத்னேஸ்வரர், மிருகண்டீசுவரர் ஆதிரத்னேஸ்வரர்

இறைவன் - அழகம்மை, பாலாம்பிகை.

தலமரம் - மாமரம் (ஆம்ரம்)

தீர்த்தம் - காயத்ரி நதி.

இத்தலத்தின் பெயர்கள்- ஆம்ரனம், பிரம்மானந்தபுரம், மிருகண்டீசுவரபும் என்பன.

சம்பந்தர் பாடல் பெற்றது - அருணகிரியாரும் பாடியுள்ளார்

Koviloor Digital Library

வயல்களும் தென்னந் தோப்பும் சூழ கோயில் சாலையை அடுத்துள்ளது. கிழக்கு நோக்கிய கோபுரம். 1987ல் கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றது. கோபுரத்தின் முன்னால் காவல் தெய்வம் உள்ளது. வாயிலைக் கடந்து உட்புகுந்தால் பிராகாரத்தில் தலமரம், விநாயகர், முருகன், இலக்குமி, நவக்கிரகங்கள், பைரவர், சந்நிதிகள் உள்ளன. கோஷ்டமூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கைத் திருமேனிகள் காட்சி தருகின்றன. நால்வருள், சுந்தரர் கைத்தடியேந்தி நிற்கின்றார்.

வாயிலைக் கடந்து சென்றால் மிருகண்டுமுனிவர் இறைவனை வழிபடும் சித்திரங்களைக் கண்டு மகிழலாம். நுழைவு வாயிலில் மேலே இறைவன் மான்குட்டித் தாயாக வந்த வரலாறு சுதை சிற்பமாகக் காட்சியளிக்கிறது. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியது. அம்பாள் தெற்கு நோக்கிக்காட்சி தருகின்றாள். உற்சவமூர்த்தங்கள் சுவாமி சந்நிதியில் உள்ளன. இத் தலத்தில் இராசராசன் காலத்திய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் கோயில் நந்தவனத்தைப் பராமரிக்க நிலம்விட்ட செய்திகளும்; வரிதரமுடியாமல் வருந்திய மக்கள், நகரை விட்டு வெளியேறுவதை அறிந்த மன்னன், வரியைத் தள்ளுபடி செய்து, குடிமக்கள் வெளியேறுவதைத் தடுத்துக் குடிபுகச் செய்த செய்திகளும் தெரிய வருகின்றன. ஆடிவெள்ளி, நவராத்திரி, அன்னாபிஷேகம், கார்த்திகைச் சோம வாரங்கள், திருவாதிரை, சிவராத்திரி முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் முதல் 3 நாள்களில் சூரிய ஒளி சுவாமி மீதுபடுகிறது.

செம்பொனார்தரு வேங்கையுஞாழலுஞ் செருந்தி செண்பகமானைக்
கொம்புமாரமு மாதவிசுர புனை குருந்தலர் பரந்துந்தி
அம்பொனேர்வரு காவிரிவடகரை மாந்துறையுறைகின்ற
எம்பிரானிமை யோர்தொழுபைங்கழ லேத்துதல் செய்வோமே

(சம்பந்தர்)

-நீலங்கொள்
''தேத்துறையில் அன்னமகிழ் சேக்கைபல நிலவும்
மாந்துறை வாழ் மாணிக்கமலையே.'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆம்ரவனேஸ்வரர் திருக்கோயில்
மாந்துறை & அஞ்சல் - லால்குடி. S.O.
(வழி) ஆங்கரை.
லால்குடி வட்டம் -திருச்சி மாவட்டம். 621 703.

Koviloor Digital Library

113/59. திருப்பாற்றுறை

திருப்பாலத்துறை

சோழநாட்டு (வடகரை)த் தலம்.

மக்கள் வழக்கில் திருப்பாலத்துறை என்று வழங்குகிறது. திருவானைக்காவிலிருந்து 10கி.மீ. தொலைவில் உள்ளது. திருவானைக்கா-கல்லணை சாலையில் வந்து பனையபுரம் கிராமத்திற்குள் திரும்பிச் செல்ல வேண்டும். 'திருச்சி மெயின்கார்டு கேட்' டிலிருந்து திருவானைக்கா வழியாகக் கல்லணை செல்லும் நகரப் பேருந்தில் சென்று பனையபுரம் என்ற இடத்தில் இறங்கி, கொள்ளிடம் நோக்கி வரவேண்டும். மார்க்கண்டேயர், சூரியன் வழிபட்ட தலம்.

இறைவன் - ஆதிமூலேசுவரர், ஆதிமூலநாதர்.

இறைவி - மேகலாம்பிகை, மோகநாயகி, நித்யகல்யாணி.

தலமரம் - வில்வம்.

தீர்த்தம் - கொள்ளிடம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

பிரதான கோபுரம் மூன்று நிலைகளையுடையது. விநாயகர், முருகர், மகாலட்சுமி, துர்க்கை சந்நிதிகள் உள்ளன. பைரவர், நவக்கிரகமும் உள்ளன. அம்பாள் தெற்கு நோக்கிய சந்நிதியில் நான்கு திருக்கரங்களுடன் (அபய, வரதம், நீலோற்பலமும் தாமரையும் ஏந்தி) காட்சியளிக்கின்றாள். மூலவர் சுயம்புத் திருமேனி. சிறிய மூர்த்தி. அர்த்த மண்டபத்தில் சிற்ப வேலைப்பாடுடன் நான்கு தூண்கள் விளங்கி, "தேவசபை" என்றழைக்கப்படுகின்றது.

இங்குள்ள அம்பாளை நெஞ்சுருகி வழிபட்டால் மகப்பேறு கிட்டும், பிணிதீரும் என்று நம்புகின்றனர் மக்கள். பள்ளத்தூரைச் சேர்ந்த நகரத்தாரின் தனி நிர்வாகத்தில் கோயில் உள்ளது. 11-7-1956ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. நாடொறும் நான்குகால வழிபாடுகள்.

அண்மையில் உள்ள தலங்கள் (1) திருமாந்துறை (2) திருவானைக்கா (3) திருவெறும்பியூர் (4) திருத்தவத்துறை (லால்குடி) முதலியன. தலபுராணம் உள்ளதாகத் தெரியவில்லை. கல்வெட்டில் இத்தலம் "கொள்ளிடத் தென்கரைத் நாட்டுப் பிரமதேயமான உத்தமசீவி சதுர்வேதி மங்கலத் திருப்பாற்றுறை" என்றும் இறைவன்

Koviloor Digital Library

பெயர் "திருப்பாற்றுறை மகாதேவர்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. முதற்பராந்தகன், விக்கிரமசோழன் காலத்திய இக்கல்வெட்டுக்களில் ஒன்றின் மூலம் கோயிலருகில் திருநாவுக்கரசர் திருமடம் இருந்ததாக அறிகிறோம்.

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுரை
ஆரார் ஆதி முதல்வரே."

(சம்பந்தர்)

-ஏந்தறிவாம்
நூற்றுறையில் நின்றவர்கள் நோக்கி மகிழ்வெய்து திருப்
பாற்றுறையில் நின்ற பரஞ்சுடரே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆதிமூலநாதர் திருக்கோயில்
திருப்பாற்றுறை & அஞ்சல் (வழி) திருவானைக்கா
திருச்சி வட்டம் & மாவட்டம். 620 005.

Koviloor Digital Library

114/60. திரு ஆனைக்கா

சோழநாட்டு (வடரை)த் தலம்

திருச்சிக்குப் பக்கத்தில் உள்ளதலம். திருச்சியிலிருந்து நகரப் பேருந்து அடிக்கடி செல்கிறது. கோயில்வரை வாகனங்கள் செல்லும். திருச்சியின் ஒருபகுதியாகவே இத்தலம் உள்ளது. இத்தலத்திற்குப் பக்கத்தில் தான் ஸ்ரீரங்கம்-திருவரங்கம் உள்ளது. 'ஜம்புகேஸ்வரம்' என்று புகழப்படும் இத்தலம் பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்தலமாக (நீர்த்தலமாக) விளங்குவது. வெண்ணாவல் மரத்தடியில் (ஜம்பு) சுவாமி எழுந்தருளியிருப்பதால் இத்தலம் ஜம்புகேஸ்வரம் என்று வழங்கப்படுகிறது. சுவாமி ஜம்புகேஸ்வரர். சம்புமுனிவரே வெண்ணாவல் மரமாக வந்து பிறந்தார் என்பது வரலாறு.

Koviloor Digital Library

வெள்ளையானையும் சிலந்தியும் வழிபட்ட தலம். யானை (ஆனை) வழிபட்டதால் ஆனைக்கா என்றும் பெயருண்டாயிற்று. முற்பிறவியில் சிலந்தியாக இருந்து வழிபட்டதே பின்பு கோச் செங்கட் சோழனாகப் பிறந்து இறைவனுக்கு (யானைபுகாத வண்ணம்) மாடக் கோயில்கள் எழுபதைக் கட்டியதாக வரலாறு.

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில் மாடம் எழுபது செய்து உலகாண்ட
திருக்குலத்து வளச் சோழன்''

என்பது திருமங்கையாழ்வார் வாக்கு.

பிரமன், சிலந்தி, யானை, அஷ்டவசுக்கள், அம்பிகை, பராசரர், கோச்செங்கட் சோழன் முதலியோர் வழிபட்ட சிறப்புடையது. அப்புத்தலம் என்பதற்கேற்ப சுவாமியின் அடியில் முன்பு நீர் ஊறிக் கொண்டிருந்தது. தற்போது நீர்க் கசிவு உள்ளது.

இறைவன் - ஜம்புகேஸ்வரர், அப்புலிங்கேஸ்வரர், வெண்ணாவலீசர், ஜம்புநாதர், ஆனைக்கா அண்ணல், நீர்த்திரள் நாதர்,

இறைவி - அகிலாண்டேஸ்வரி

தலமரம் - வெண்ணாவல் மரம் (ஜம்பு) (கருவறையின் வெளியில் பிராகாரத்தில் உள்ளது.

தீர்த்தம் - (அருகில் ஓடும்) காவிரி.

மூவர் பாடல் பெற்றது.

திருப்பணிகள் செய்யப்பட்டுப் பொலிவுடன் விளங்குகிறது. சுவாமி மேற்கு நோக்கிய சந்நிதி. சுவாமியின் கருவறையில் ஒன்பது வாயில் கொண்ட சாளரம் உள்ளது. உயர்ந்த கோபுரங்களையும் நீண்டுயர்ந்த மதில்களையும் உடைய பெரியகோயில்.

அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது. கிழக்கு நோக்கிய அழகான சந்நிதி. அம்பிகையே இறைவனைப் பூசித்து வழிபட்ட தலம் இதுவாதலின் இன்றும் இக்கோயிலில் உச்சிக் காலத்தில் அம்பாள் கோயில் குருக்கள், அம்பிகையைப்போல வேடம் தரித்துச் சுவாமி கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்கிறார். இங்குள்ள பரம்பரை அர்ச்சகர்களுக்குப் பண்டிதர்கள் என்று பெயருண்டு. இத்தலத்து இறைவன், உறையூர்ச் சோழனின் பதக்கத்தினை அணிந்து அருள் புரிந்த வரலாற்றைச் சுந்தரர் இத்தலப் பதிகத்தில் 7ஆம் பாடலில்

Koviloor Digital Library

சிறப்பித்துப் பாடியுள்ளார். பெரியபுராணம் இச்செய்தியை "வளவர் பெருமான் திருஆரம்" என்று தொடங்கும் ஏயர்கோன் வரலாற்றுப் பாடலால் குறிக்கின்றது.

திருப்பணிகள் செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் திகழும் இக்கோயிலின் உள்ளே, கோயில் வரலாற்றுப் படங்கள் அழகான வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறே அம்பிகையின் பல வடிவங்களும் வண்ணத்தில் எழுதப்பட்டு அம்பாள் சந்நிதியின் வழியில் காட்சியளிக்கின்றன. அம்பாள் சந்நிதிப்பிராகாரத்தில் ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரிப் பாடல்களின் (அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் மொழிபெயர்த்த) தமிழாக்கப்பாடல்கள் சலவைக் கற்களில் எழுதப்பட்டுச் சுவரில் பதிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடத்திற்கு உரிமையுடையதாகும். ஈஸ்வர சாந்நித்தியத்திற்காக ஸ்ரீ ஆதிசங்கரர் யந்திர பிரதிஷ்டை செய்துள்ள பல ஆலயங்களுள் இதுவும் ஒன்று. அகிலாண்டேஸ்வரிக்கு முன்பாக விநாயகரைப் பிரதிஷ்டை செய்து அம்பாளின் இரு திருச்செவிகளுக்கும் ஆபரணமாக ஸ்ரீ சக்கரங்கள் இரண்டைச் செய்துஸ்ரீ ஆதிசங்கரர், அம்பிகைக்கு அவற்றைத் 'தாடங்கமாக' அணிவித்தார் என்பது வரலாறு. அதை யொட்டியே, இன்றும், இத்திருக்கோயிலில் திருப்பணி செய்வதோ, தாடங்கத்தைப் பழுதுபார்த்து அணிவிப்பதோ, மகாகும்பாபிஷேகம் செய்விப்பதோ இவைகளெல்லாம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களாலேயே பரம்பரையாகச் செய்யப்பட்டு வருகின்றன. ஸ்ரீ சக்கரத்தோடுகள் (தாடங்கம்) அம்பிகையின் திருச்செவிகளில் காட்சியளிக்கின்றன. இத்தலத்திற்குக் கச்சியப்ப முனிவர் தலபுராணம் பாடியுள்ளார். இக்கோயின் நான்காவது பிராகார மதிற்சுவருக்குத் "திருநீற்றான் மதில்" என்று பெயர். இம்மதிற்சுவர் 32 அடி உயரமும் 8000 அடி நீளமும் உடையது. இறைவன், சித்தராக வந்து, திருநீற்றையே கூலியாகக் கொடுத்து இம்மதிற்சுவரைக் கட்டியதாக வரலாறு.

இத்திருக்கோயிலுக்கு வள்ளல் பச்சையப்பர் செய்துள்ள நிபந்தங்கள் பற்றிய செய்தி பொறித்த ஒரு கல் (வெட்டு) கோயிலுக்கு வெளியே இராசகோபுரத்தையொட்டி நடப்பட்டுள்ளது. இதைப் பாதுகாப்பது அவசியம். காலப்போக்கில் இக்கல் காணாமற் போய் விடின் ஓர் அரிய செய்தி மறைந்து போய்விடும். எனவே இக்கல்லை உட்புறத்தில் எங்கேனும் நட்டுப் பாதுகாப்பு செய்ய வேண்டுவது

Koviloor Digital Library

முக்கியமான ஒரு பணியாகும். அண்மையில் 12-7-2000-ல் மஹா கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

அகிலாண்டேஸ்வரியின் அருள் பெற்றுக் கவிமழை பெய்யத் தொடங்கிய காளமேகப் புலவர் ஆனைக்கா உலா மற்றும் தனிப் பாடல்கள் பலவும் பாடியுள்ளார். சைவப் எல்லப்ப நாவலர், கச்சியப்ப முனிவர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய பெருமக்கள் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

'தாரமாய மாதராள் தானொர் பாகமாயினான்
ஈரமாய புன்சடை யேற்ற திங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்கா விலண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே.''

(சம்பந்தர்)

''துன்ப மின்றித் துயரின்றி என்றுநீர்
இன்பம் வேண்டில் இராப் பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன் என்றுள் குவார்க்(கு)
அன்பனா யிடும் ஆனைக்கா அண்ணலே.''

(அப்பர்)

''வலங்கொள்வார் அவர்தங்கள் வல்வினை தீர்க்கு மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப்பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக்காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையு மாளுடையாரே.''

(சுந்தரர்)

''குழீஇயிருந்த சுற்றம் குணங்கள் பாராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம்-தழீஇயிருந்தும்
என்னானைக்காவா இதுதகா தென்னாமுன்
தென்னானைக் காஅடை நீ சென்று.''

(ஐயடிகள் காடவர்கோன்)

''ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினால்-வாராத
புத்தி வரும் பத்தி வரும் புத்திர உற்பத்தி வரும்
சக்தி வரும் சித்தி வருந்தான்.''

(காளமேகம்)

Koviloor Digital Library

திருப்புகழ்

நாடித் தேடித் - தொழுவார்பால்
நானத் தாகத் - திரிவேனோ
மாடக் கூடற் - பதிஞான
வாழ்வைச்சேரத் - தருவாயே
பாடற் காதற் - புரிவோனே
பாலைத் தேனொத் - தருள்வோனே
ஆடற் றோகைக் - கினியோனே
ஆனைக்கா விற் பெருமாளே

-நாற்றிசையும்
தேனைக்காவுண் மலர்கள் தேங்கடலென்றாக்குவிக்கும்
ஆனைக்கா மேவி யமர் அற்புதமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்
திருவானைக்கா & அஞ்சல்-திருச்சி-620 005
திருச்சி வட்டம் & மாவட்டம்.

115/61. திருப்பைஞ்ஞீலி

சோழநாட்டு (வடகரை)த்தலம்.

திருச்சியிலிருந்து பேருந்து செல்கிறது. திருச்சியிலிருந்து மண்ணச்ச நல்லூர் வழியாக இத் தலத்தையடையலாம். கோயில் வரை வாகனங்கள் செல்லும். ஞீலி - இது ஒருவகை வாழை. தனி இனம். வேறிடத்தில் பயிராவதில்லை. இதன் இலை காய் கனி அனைத்தும் இறைவனுக்கே பயன்படுத்தப்படுகிறது. இவற்றை மனிதர் பயன்படுத்தினால் பிணி வருதல் இன்றும் கண்கூடு. இக்கனியைச் சுவாமிக்கு நிவேதித்து தண்ணீரில் விட்டுவிடுவார்கள். அந்தணர் வடிவில் இறைவன் வந்து அப்பர் பெருமானுக்குப் பொதி சோறளித்துப் பசியைப் போக்கிய தலம். உமாதேவி வழிபட்டது.

Koviloor Digital Library

ஊர் நடுவில் கோயில் உள்ளது. ஸ்ரீலிவனம், கதலிவனம், அரம்பை வனம், விமலாரண்யம், தரளகிரி,சுவேதகிரி, வியாக்ரபுரி மேலைச் சிதம்பரம் முதலியன தலத்திற்கு வேறுபெயர்கள்.

இறைவன் - நீலகண்டேஸ்வரர், ஸ்ரீலிவனநாதர், கதலிவசந்தர், ஆரண்யவிடங்கர் முதலிய பல பெயர்கள்.

இறைவி - விசாலாட்சி

தலமரம் - ஸ்ரீலிவாழை

தீர்த்தம் - அப்பர் தீர்த்தம்

மூவர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோபுரம். மதிலின் மேற்றளம் புலிவரிக் கற்களால் ஆனவை. இவ்வகைக் கற்கள் இங்கு மட்டுமே கிடைக்கின்றன. இதனால்தான் இத்தலம் வியாக்ரபுரி என்னும் பெயரைப் பெற்றது போலும். இரண்டாங் கோபுரவாயிலில் அப்பருக்குக் கட்டமுது தந்து அருள்புரிந்து மறைந்த இடமான-கோயில், நிலமட்டத்திற்குக் கீழே அமைந்துள்ளது. பல்லவர் கால அமைப்புடையது. இப்பெருமான் ''சோறுடையீசுவரர்'' என்றழைக்கப்படுகிறார். அர்த்த மண்டபத்தில் வசிட்ட முனிவருக்கு நடராசப் பெருமான் நடனக் காட்சியருளிய இடம் உள்ளது. இதனால் இத் தலம் மேலைச்சிதம்பரம் என்னும் பெயர் பெறுகின்றது.

அம்பாள் சந்நிதி இரண்டு உள்ளன. பிரதான சந்நிதி சுவாமிக்கு இடப்பால் கிழக்கு நோக்கியுள்ளது. பழைய சந்நிதி தெற்கு நோக்கியது. சோழர் காலக் கல்வெட்டுக்களில் ''பைஞ்ஞீலி மகாதேவர், பைஞ்ஞீலி உடையார்'' என்னும் பெயர்களால் இறைவன் குறிக்கப்படுகிறார். இத் தலத்திற்கு மதுரை மெய்ப்பாத புராணிகர் தலபுராணம் பாடியுள்ளார்.

''தூயவன் தூயவெண்ணீறு மேனிமேல்
பாயவன் பாய பைஞ்ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச் செயுந் தன்மை என்கொலோ

(சம்பந்தர்)

''மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்தராய்த் திரிவார் வினை தீர்ப்பரால்
பத்தர்தாம் தொழுதேத்து பைஞ்ஞீலியெம்
அத்தனைத் தொழவல்லவர் நல்லரே.''

(அப்பர்)

Koviloor Digital Library

''தக்கை தண்ணுமைதாளம் வீணை தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்கரை குடமுழவினோடு இசைகூடப் பாடி நின்றாடுவீர்
பக்கமே குயில்பாடுஞ் சோலைப் பைஞ்ஞீலியேயென்று நிற்றிரால்
அக்குமாமையும் பூண்டிரோ சொலும் ஆரணியவிடங்கரே''

(சுந்தரர்)

-மானைப்போன்
மைஞ்ஞீல வாட்கண் மலராள் மருவிதிருப்
பைஞ்ஞீலிமேவும் பரம்பரமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்
திருப்பைஞ்ஞீலி -அஞ்சல்-621 005
திருச்சி வட்டம்-மாவட்டம்.

116/62. திருப்பாச்சிலாச்சிராமம்

திருவாசி

சோழநாட்டு (வடகரை)த் தலம்

திருச்சி-சேலம் பேருந்துச் சாலையில் உள்ளது. (12கி.மீ தொலைவு) ''பாச்சில் கூற்றத்து ஆச்சிராமம் ஆதலின் பாச்சிலாச்சிராமம் என்று பெற்றது. திருவாசிராமம் என்பது மருவி இன்று **திருவாசி என்று வழங்குகிறது.**

சுந்தரர் பொன்பெற்ற தலம். பிரமன், லட்சுமி, உமாதேவி வழிபட்டது. கொல்லி மழவனின் புதல்விக்கு நேர்ந்த 'முயலகன்' நோயைச் சம்பந்தர் தீர்த்த பதி. இதனால் நடராசர் திருவடியில், முயலகனுக்குப் பதிலாக பாம்பு உள்ளது. (சர்ப்ப நடன மூர்த்தி) ('முயலகன் என்பது வலிப்பும் வயிற்று வலியும் வரும் ஒரு வகை நோய்)

இறைவன் - 1) மாற்றறிவரதர் (சுந்தரர் தம் பொன்னை மாற்றுக் குறைவதாக உரைத்துக் காட்ட அறிந்த பிரான்)
2) சமீவனேஸ்வரர், (வன்னிசூழ்ந்த வனத்தில் உள்ளவர்)
3) பிரமபுரீசுவரர், (பிரமன் வழிபட்டவர்)

Koviloor Digital Library

இறைவி - பாலாம்பிகை, பாலசௌந்தரி

தலமரம் - வன்னி

தீர்த்தம் - சிலம்பாறு. (பங்குனியாறு, அமலையாறு என்றும் கூறுவர்)

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கோயில் ஊர் நடுவே கிழக்கு நோக்கியுள்ளது. முதற் கோபுரத்திற்கும் இரண்டாம் பிராகாரத்திற்கும் இடையிலுள்ள மண்டபம் **ஆவுடையாப்பிள்ளை மண்டபம்** எனப்படும். இம் மண்டபத் தூணில் சம்பந்தர், கொல்லிமழவன், புதல்வியின் நோயைத் தீர்த்த சிற்பங்கள் உள்ளன.

சுவாமி சந்நிதியில் சுந்தரருக்குப் பொற்கிழி தந்த ஸ்தபன மண்டபம் உள்ளது. இவ்விடத்தைக் கல்வெட்டு "கிழி கொடுத்தருளிய திருவாசல்', என்ற பெயரால் குறிக்கின்றது. "பாச்சில் திருவாச் சிராமத்துப் பெருமானடிகள்" என்பது இறைவனின் கல்வெட்டுப் பெயர். இங்குள்ள சுந்தரர் மூர்த்தம், இரு கைகளிலும் தாளம் ஏந்திப் பாடும் அமைப்பில் உள்ளது.

இக் கோயிலுக்கு முதலாம் இராசராசன், சுந்தபாண்டியன், முதற் குலோத்துங்கன், கிருஷ்ணதேவராயர் ஆகியோர் திருப்பணிகள் செய்துள்ளனர். கி.பி.1253ல் சமயபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஹொய்சளமன்னனான, வீரசோமேஸ்வரன் காலத்தில் இக் கோயிலுக்கு பதினாயிரம் கலம் நெல் கிடைந்து வந்ததாகக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். அம்பாள் சந்நிதி சுவாமியை நோக்கி மேற்காக விளங்குகிறது. எதிரில் குளமும், கரையில் வன்னிமரமும் உள்ளன.

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொங்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சிலாச் சிராமத் துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர்
மாண்போ"

(சம்பந்தர்)

"ஒருமையேயல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க்கு அடிமையுமானேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்

Koviloor Digital Library

அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி
லாச்சிராமத் தெம் மடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவரலாது இல்லையோ பிரானார்.'' *(சுந்தரர்)*

''இட்ட குடிநீர் இருநாழி ஓர் உழக்காச்
சட்ட ஒருமுட்டைநெய் தான்கலந்- தட்ட
அருவாச்சா ரென்றங் கழாமுன்னம் பாச்சிற்
றிருவாச்சி ராமமே சேர்.''

(ஐயடிகள் காடவர்கோன்)

-எஞ்ஞான்றும்
ஏச்சிராமங் கலத்தோடின்பந் தரும்பாச்சி
லாச்சிராமஞ்சேர் அருள்நிலையே

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. மாற்றறிவரதர் திருக்கோயில்
திருவாசி & அஞ்சல் 621 216
(வழி) பிச்சாண்டார் கோயில்- S.O. திருச்சி மாவட்டம்

Koviloor Digital Library

117/63. திருஈங்கோய்மலை

திருவிங்கநாதமலை



சோழ நாட்டுத் தலங்களுள் காவிரியின் வடகரையில் உள்ள திருமுறைத் தலங்களுள் இது கடைசித்தலம். இதற்கு நேர் எதிரில், தென்கரையில் உள்ள முதல் தலமான வாட் போக்கி உள்ளது. தற்போது மக்கள் வழக்கில் திருவிங்கநாதமலை என்று வழங்கப்படுகிறது. திருச்சி-சேலம் பெருவழிப் பாதையில் முசிறிக்கு அண்மையில் இத்தலம் உள்ளது. கடம்பந்துறை (குளித்தலை) யிலிருந்து சென்று அகண்ட காவிரியைக் கடந்து அக்கரையில் உள்ள இத்தலத்தை அடையலாம். திருச்சி-நாமக்கல்-சேலம் பேருந்தில் செல்லலாம். கோயில் குன்றின் மேல் உள்ளது. அம்பிகை வழிபட்டதால் இதற்குச் சிவசக்திமலை என்று பெயர் வழங்குகின்றது. அகத்தியர், ஈவடிவில் சென்று சுவாமியைத் தரிசித்த தலம்.

இறைவன் - மரகதாசலேசுவரர், மரகத நாதர்.

இறைவி - மரகதவல்லி.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

சிவலிங்கம் மரகதக்கல் போல நல்ல பச்சை நிறத்தில் பளபளப்பாக இருக்கிறது. நக்கீரர் இம்மலை மீதுள்ள பெருமான் மீது 'ஈங்கோய் எழுபது' என்ற நூலைப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

கோயிலின் அடிவாரத்தில் போக முனிவர் கோயில் உள்ளது. செங்குத்தான படிகள்-அதிக எண்ணிக்கையில், ஏறிச்செல்வதற்கு வசதியாக ஓரளவுக்குப் பரப்பப் பட்டுள்ளன. கோயிலுள் நுழையும் போது தட்சிணாமூர்த்தி, விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. வலமாக வரும்போது கோயிலின் விசாலமான பழைமையான திறந்த வெளி அமைப்பைக்காண முடிகிறது. உள்ளே நவக்கிரக, நால்வர் சந்நிதிகள் உள்ளன. அம்பாளுக்கும் சுவாமிக்கும் தனித்தனியே கோயில் விமானங்கள். துவஜஸ்தம்பங்கள் உள்ளன. இவை கோயிலுள்-மண்டபத்துள் சுவாமி, அம்பாள் முன் நாட்டப்பட்டுள்ளன. இவற்றின் முனைப்பகுதி கல்மண்டபத்தைத் துளையிட்டு மேலே செலுத்தப் பட்டுள்ளது. இது பிற்காலத்தில் புதியதாகச் செய்து வைத்த அமைப்பாக இருக்கலாம். துவஜஸ்தம்பத்தின் முன் விநாயகர் உள்ளார். பால தண்டாயுதபாணி சந்நிதி தனியே உள்ளது.

சிவராத்திரியன்று அல்லது முன் நாள்களில் சூரிய ஒளி லிங்கத்தின மீது படுகின்றது. சுவாமிக்குத் தீபாராதனை செய்யும் போது தீபஒளி இலிங்கத்தில் தெளிவாகத் தெரிகிறது. ஈங்கோய்மலைக் கோயில் வாட்போக்கிமலை கடம்பத்துறையைப் பார்க்கிறது;கடம்பந்துறைக் கோயில் ஈங்கோயைப் பார்த்த வண்ணமுள்ளது. இம் மூன்று மலைகளும் சோமாஸ்கந்த வடிவில் உள்ளதென்பர்.

ஒரே நாளில் காலையில் கடம்பர் கோயிலையும் (கடம்பந்துறை) நண்பகலில் வாட்போக்கியையும், மாலையில் திருஈங்கோய் மலையையும் தரிசித்தல் விசேஷமானது என்பர். 'காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தி ஈங்கோய்நாதர்' என்னும் வழக்குள்ளது. இவ்வாறு ஒரே நாளில் தரிசிப்பதற்கு எல்லா நாள்களும் ஏற்றவை யெனினும் கார்த்திகைச் சோமவாரம் சிறப்பான நாளாகச் சொல்லப் படுகிறது.

''வினையாயின தீர்த்(து) அருளே புரியும் விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேல் மதியஞ் சூடுநம்பா நலமல்கு
தனையார் கமல மலர் மேல் உறைவான் தலையோ(டு) அனல் ஏந்தும்
எனை ஆளுடையான் உமையாளோடும் ஈங்கோய் மலையாரே.''

(சம்பந்தர்)

-நீச்சறியா
தாங் கோய்மலைப் பிறவியார் கலிக்கோர் வார்கலமாம்
ஈங்கோய் மலைவாழ் இலஞ்சியமே.

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி. மரகதாசலேஸ்வரர் திருக்கோயில்
திருவிங்க நாதமலை (திருஈங்கோய்மலை)
(வழி) மணமேடு- தொட்டியம் வட்டம்
திருச்சி மாவட்டம். 621 209

118./1. திருவாட்போக்கி

ஐயர்மலை, ரத்னகிரி, சிவாயமலை

சோழநாட்டுத் தென்கரைத் தலங்களுள் முதலாவது தலமாகும். குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் வழியில் இத்தலம் உள்ளது. இதற்கு நேர் எதிராக, ஈங்கோய்மலை (வடகரைத் தலம்) உள்ளது. தற்போது மக்கள் வழக்கில் ஐயர்மலை என்று வழங்கப் படுகிறது. இதற்குரிய வேறுபெயர்கள் இரத்தினகிரி, மாணிக்கமலை, சிவாயமலை. அரதனசலம் என்பன.

சுவாமி - ரத்னகீரீசர், அரதனாசலேஸ்வரர், மாணிக்க ஈசர், முடித்தழும்பர்,

அம்பாள்-சுரும்பார்குழலி

அப்பர் பாடல் பெற்ற தலம்.

மேற்கு நோக்கிய சந்நிதி. இந்திரன், சயந்தன், வாயு, ஆதிசேஷன் முதலியோர் வழிபட்ட தலம்.

அகத்தியர் இங்குச் சுவாமியை நண்பகலில் தரிசித்து அருள் பெற்றமையால் இங்கு நண்பகல் தரிசனம் விசேஷம். இதனால் இறைவனுக்கு மத்தியான சுந்தரர் என்றும் பெயர். மாணிக்கம் வேண்டிவந்த ஆரிய மன்னன் ஒருவனுக்கு, இறைவன் தொட்டி ஒன்றைக் காட்டி காவிரி நீரால் நிரப்பச் சொன்னார். அது எப்படியும் நிரம்பால் இருக்கக் கண்டு, கோபங் கொண்ட அரசன், உடைவாளை ஒச்ச, இறைவன் மாணிக்கத்தைத் தந்து அருளினார். மனம் திருந்திய அரசன் அதை விரும்பாது, சிவப்பணிசெய்து முக்திபெற்றான் என்பது வரலாறு. இதனால் சுவாமிக்கு முடித்தழும்பர் என்றும் பெயர் இன்றும் சிவலிங்கத்தின் மேற்புறத்தில் வெட்டுப்பட்ட வடுவைக் காணலாம். மூர்த்தி-சுயம்பு மூர்த்தி. கோயில் மலைமேல் மிக உயரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

அழகாக அமைக்கப்பட்டுள்ள 1140 படிகளைக் கடந்து ஏறிச் செல்லவேண்டும். அடிவாரத்தில் உள்ள பிராதன விநாயகரைத் தரிசித்து ஏறத் தொடங்கவேண்டும். அடிவாரத்தில் நால்வர் சந்நிதிகள். அலங்கார வளைவுள்ளது. ஏறுதற்குச் சற்று உடற்சிரமம்தான். 750 படிகளைத் தாண்டிய பின்பு "உகந்தாம் படி" வருகிறது. அங்கு விநாயகர் சந்நிதியும், சுரும்பார் குழலி சந்நிதியும் உள. அவற்றை வலமாகவந்து மேலேறிச்சென்றால் வாட்போக்கிநாதர் சந்நிதியை அடையலாம். கோயிலுனுள் நுழையும்போது நம்மை முதலில் வரவேற்பது தட்சிணா மூர்த்தி சந்நிதிதான். முகத்தில் தவழும் (இம்மூர்த்தியின்) அழகை, புன்சிரிப்பைக்கண்டதும், இதுவரை ஏறிவந்த உடற்சிராமம் அனைத்தும் இல்லாமற் போகின்றது. அவ்வளவு அருமையான புன்சிரிப்பு. தரிசித்து உள்ளே நுழைந்தால் ரத்னகிரீசரைக் காண்கிறோம். ரத்னகிரீசர், மாணிக்க ஈசர் ஆகிய இப்பெயர்கள் சுந்தரரால் பாடப்பட்டபெயர்களாம். மன்னன் வழிபட்டதால் ராஜலிங்க மூர்த்தி என்ற பெயருண்டு. சிவராத்திரி நாள்களில் அல்லது முன்பின் நாள்களில் சூரியஒளி, சுவாமிக்கு நேரே அமைக்கப்பட்டுள்ள சாளரம் வழியாக வந்து சுவாமி மீது படுகிறது. சிவலிங்கத்தின் முன்பு பொய்வாசிக் கொப்பரை என்னும் நீர்த்தொட்டி உள்ளது.

கோயிலுள் நடராஜர், சிவகாமி சந்நிதிகளும், சுப்பிரமணியர் சந்நிதியும், வைரப்பெருமாள் சந்நிதியும் உள்ளன. இப்பெருமானுக்கு நாடொறும் அருகிலுள்ள காவிரியிலிருந்து 10குடங்களில் நீர்கொண்டு வரப்பட்டு உச்சிக்கால அபிஷேகம் செய்யப்படுகிறது. இன்றும் இப்பொறுப்பை "பன்னிரண்டாம் செட்டியார்" என்னும் மரபினர் ஏற்றுக்கொண்டு, குருக்கள் மூலம் நடத்துவிக்கின்றனர். சுவாமிக்கு அணிகலன்கள் நிரம்ப உள்ளன. அவைகளும், மற்றும் தேர், வாகனங்கள் முதலிய அனைத்தும் இம்மரபினர் பொறுப்பிலேயே உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை முதல்நாளில் சுவாமிக்கு எல்லா நகைகளையும் சார்த்தி அலங்காரம் செய்கிறார்கள்.

சித்திரைமாதம் அஸ்த நட்சித்திரம் தொடங்கிப்பத்து நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகின்றது. கார்த்திகைச் சோமவாரங்கள் விசேஷம். அருணகிரிநாதர் "பத்தியால் யானுனைப் பலகாலும்" என்று தொடங்கிப் பாடும் திருப்புகழில் "ஒப்பிலா **மாமணிக்கிரி** வாசா" என்று இத்தலத்தைக் குறிப்பிடுகின்றார்.

இடையன் ஒருவன் சுவாமிக்காகக் கொண்டு சென்ற பாலைக் கவிழ்த்த காகம் எரிந்து போனதால், இம்மலையில் காகங்கள் உலவுவ தில்லை என்பது செவிவழிச்செய்தி. "காகம் அணுகாமலை" என்பர்.

Koviloor Digital Library

''காகம் மேவுறில் கடுந்தழல் வீசிடும் பரம்பு'' என்பது நாகைக் காரோணப் புராணத் தொடர். கடம்பர் கோயில், வாட்போக்கி, ஈங்கோய்மலை ஆகிய மூன்று தலங்களையும் ஒரே நாளில் முறையே காலை, நண்பகல், அந்தியில் தரிசித்தல் சிறப்பு என்பது மரபும் வழக்கமு மாகும்.

'நாடிவந்து நமன்தமர் நல்லிருள்
கூடிவந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாடல் உகந்தவாட் போக்கியை
வாடியேத்த நம் வாட்டந்தவிருமே.'

(அப்பர்)

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதானசற் குணர்நேயா
ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகாஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப்பெருமாளே

(திருப்புகழ்)

-ஓங்காது
''நாட்போக்கி நிற்கும் நவையுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி.ரத்னகிரீஸ்வரர் திருக்கோயில்
(வாட்போக்கி) ஐயர்மலை
சிவாயம் அஞ்சல்-639 124
(வழி) வைகநல்லூர்
திருச்சி மாவட்டம்.

Koviloor Digital Library

119/2. கடம்பந்துறை

கடம்பர் கோயில்,
குழித்தலை-குளித்தலை.

சோழநாட்டுத் தென்கரைத் தலம்.

தற்போது கடம்பர் கோயில், குழித்தலை, குளித்தலை என வழங்கப்படுகிறது. கல்வெட்டில் 'குளிர்த் தண்டலை' என்று காணப் படுகிறது.புகைவண்டி நிலையம். திருச்சி ஈரோடு பாதையில் உள்ளது. கண்வ முனிவருக்கு இறைவன் கடம்ப மரத்தில் காட்சி தந்த தலம்.

இறைவன் - கடம்பவனேஸ்வரர், கடம்பவன நாதர்

இறைவி - பாலகுஜாம்பாள், முற்றிலாமுலையாள்.

தலமரம் - கடம்பு

தீர்த்தம் - அருகில் உள்ள காவிரி.

அப்பர் பாடல் பெற்றது.

கோயிலுள் நுழையும் போது அம்பாள் சந்நிதி உள்ளது. இதைத் தாண்டித்தான் மூலவரைத் தரிசிக்கச் செல்லவேண்டும். மூலவர் அழகான சிவலிங்கத் திருமேனி. சப்தகன்னிகைகளின் பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தியான தலம் இதுவாதலின், மூலவர் பின்னால் சப்தகன்னிகைகளின் உருவங்கள் கல்லில் பிம்பமாகச் செதுக்கப் பட்டுள்ளன. விநாயகப் பெருமான் இடம்மாறி, மறுகோடியில் உள்ளார். உள் பிராகாரத்தில் அறுபத்து மூவருடைய மூல, உற்சவத் திருமேனிகள் உள்ளன. இத்திருக்கோயிலில் இரு நடராஜ வடிவங்கள் உள்ளன. ஒன்றில் முயலகன் இருக்க, மற்றொன்றில் இல்லை.

'பூமென் கோதையுமை யொரு பாகனை
ஓமம் செய்தும் உணர்மின்கள் உள்ளத்தால்
காமற் காய்ந்த பிரான் கடம்பந்துறை
நாம மேத்த நந்தீவினை நாசமே.'

(அப்பர்)

அழுகு திரிகுரம்பை ஆங்கது விட்டாவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா-கழுகு
கழித்துண்ட லையாமுன் காவிரியின் தென்பால்
குழித் தண்டலை யானைக் கூறு.'

(ஐயடிகள் காடவர்கோன்)

Koviloor Digital Library

-கோட் போக்கி

நில்லுங்கடம்ப நெறிபோல் எனப்பூவை
சொல்லுங் கடம்பந்துறை நிறைவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி.கடம்பவனேஸ்வரர் திருக்கோயில்
குளித்தலை & அஞ்சல்.
கரூர் மாவட்டம் 639 104.

120/3. திருப்பராய்த்துறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

திருச்சி-ஈரோடு இருப்புப் பாதையில் உள்ளது. எலமனூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கிச் செல்லலாம். திருச்சியிலிருந்து கரூர், குளித்தலை செல்லும் பேருந்துச் சாலையில் சென்று இத்தலத்தை அடையலாம்.

பராய் மரக்காட்டில் இறைவன் எழுந்தருளியிருப்பதால் இத்தலம் 'பராய்த்துறை' எனப்படுகிறது. காவிரிக் கரைத் தலம். இத்தலத்திற்குத் 'தாருகாவனம்' என்று பெயர். (பராய் மரம், சமஸ்கிருத்தில் 'தாருகா விருக்ஷம் ஏனப்படும்.

இறைவன் பிட்சாடனராய்ச் சென்று தாருகாவனத்து முனிவர் களின் செருக்கை அகற்றி அவர்க்கு அருள்புரிந்த சிறப்பையுடைய தலம். இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

இறைவன் - தாருகவனேஸ்வரர், பராய்த்துறைநாதர்,

இறைவி - ஹேமவர்ணாம்பாள், பசும்பொன்மயிலாம்பாள்

தலமரம் - பராய் மரம் (பிராகாரத்தில் உள்ளது.)

தீர்த்தம் - காவிரி

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற பதி.

Koviloor Digital Library

முன்மண்டப வாயில். மேலே ரிஷபாரூடர் சிற்பம் சுதையால் ஆனது உள்ளது. உள்கோபுரம் ஏழு நிலைகளையுடையது. இடப்பால் குளம் உள்ளது. வலப்பால் உள்ள கல் மண்டபத்தில் (வசந்த மண்டபத்தில்) விவேகானந்தர் தொடக்கபள்ளி நடைபெறுகின்றது. முகப்பில் விநாயகர் காட்சி தருகிறார்.

செப்புக் கவசமிட்ட கொடிமரம். இதுவும் பலிபீடமும் நந்தியும் சேர்த்து ஒரு மண்டபத்தில் உள்ளன. இது நந்தி மண்டபம் எனப்படும். இத்தூண்களில் சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் உருவங்களும், திருப்பணி செய்த செட்டியாரின் உருவமும் உள்ளன.

வெளிப்பிராகாரத்தில் விநாயகரும் தண்டபாணியும் உள்ளனர். அடுத்துள்ள கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. உள்ளே நுழைந் ததும் நேரே மூலவர் சந்நிதி தெரிகின்றது. கிழக்கு நோக்கியது. உள்சுற்றில் வலம்புரி விநாயகரும், சப்தகன்னியரும், அறுபத்து மூவரும் (திருமேனிகளும்) உள்ளனர். அடுத்து சோமஸ்கந்தர், மகா கணபதி, பஞ்சபூத லிங்ககள், ஆறுமுகர், பிட்சாடனர், பிரம்மா,துர்க்கை, கஜலட்சுமி, மயிலேறிப் பன்னிரு கையும் கொண்டு திகழும் சண்முகர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. நவக்கிரகங்களுள் சனீஸ்வரனுக்கு மட்டும் காக்கை வாகனமுள்ளது. பைரவரும் உள்ளார்.

கோஷ்ட மூர்த்தமாக விநாயகரும், தட்சிணாமூர்த்தியும், இலிங் கோற்பவர் இடத்தில் அர்த்தநாரீஸ்வரரும், பிரம்மாவும், துர்க்கையும் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. சிங்கங்கள் தாங்கி நிற் கின்ற அழகிய வேலைப்பாடமைந்த தூண்கள் - பரந்த கல்லாலமர வேலைப்பாடு.

நடராசர் சந்நிதி உள்ளது. துவாரபாலர்களைத் தரிசித்து உள் சென்று மூலவரைத் தரிசிக்கலாம். மூலவர் அழகான திருமேனி. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. அம்பாள் மண்டபத்தில் உள்ள முன்தூணில் ஊர்த்துவதாண்டவ சிற்பமும், எதிர்த் தூணில் காளியின் சிற்பமும் உள்ளன.

வைகாசி விசாகத்தில் பத்துநாள்களுக்குப் பெருவிழா நடைபெறு கின்றது. முதற் பராந்தக சோழன் காலத்தில் கட்டப்பட்ட இத்திருக் கோயில் பின்பு நாட்டுக்கோட்டை நகரத்தாரின் திருப்பணியும் பெற்றது. கல்வெட்டில் இத்தலம் ''உத்தம சீவிச் சதுர்வேதிமங்கலத்துத் திருப் பராய்த்துறை'' என்று குறிக்கப்படுகின்றது. இறைவன் பெயர் ''பராய்த்துறை மகாதேவர்'' என்றும், ''பராய்த்துறைப் பரமேஸ்வரன்'' என்றும் குறிக்கப்படுகின்றது.

Koviloor Digital Library

ஐப்பசி துலா நீராடலும், அகண்ட காவிரியில் சென்று சுவாமி தீர்த்தம் கொடுப்பதும் விசேஷமானது. இத்தலத்தின் கீழ் எல்லையில் சுவாமி சித்பவானந்தரின் இராமகிருஷ்ண தபோவனமும், மேல் எல்லையில் இராமகிருஷ்ண குடிலும் பள்ளிகளும் உள்ளன.

''விரவி நீறுமெய் பூசுவர் மேனிமேல்
இரவினின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம் பராய்த் துறை
அரவமார்த்த அடிகளே.'' *(சம்பந்தர்)*

''தொண்டு பாடியுந் தூமலர் தூவியும்
இண்டை கட்டி இணையடி ஏத்தியும்
பண்டரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடியேனுய்ந்து போவனே.''

(அப்பர்)

''பராய்த் துறை மேவிய பரனே போற்றி''

(திருவாசகம்)

-''மல்லலொடு
வாழும் பராய்த் துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும் பராய்த்துறை வாழ் தோன்றலே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ.மி. தாருகாவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பராய்த்துறை & அஞ்சல் -*639 115*
கரூர் மாவட்டம்.

தலம் - 27

Koviloor Digital Library

121/4. கற்குடி

உய்யக்கொண்டான் மலை, உய்யக் கொண்டான் திருமலை

சோழநாட்டு (தென்கரை) த்தலம்.

தற்போது 'உய்யக்கொண்டான்' மலை என்று வழங்குகிறது. திருச்சிக்குப் பக்கத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து பேருந்து வசதி உள்ளது. இதற்கு 'உய்யக் கொண்டீஸ்வரம்' என்று பெயர்.

இறைவன் கல்லில்-மலையில் குடியிருப்பதால் கற்குடி என்னும் பெயர் பெற்றது. நந்திவர்ம பல்லவ மன்னனால் அமைக்கப் பெற்ற கோயில். இப்பகுதிக்கு 'நந்திவர்ம மங்கலம்' என்னும் பெயருண்டு. மார்க்கண்டேயரைக் காப்பாற்றுவதாக உறுதியளித்து இறைவன் அருள் புரிந்ததலம். இவ்வரலாற்றுச் சிற்பம் கோயிலின் வாயில் முகப்பில் மேலே சுதையால் ஆக்கப்பட்டுள்ளது.

கரன் வழிபட்ட தலம். வெளிச்சுற்றில் இச்சிவலிங்கம் 'இடர்காத்தார்' என்னும் பெயருடன் திகழ்கின்றது. நாரதர், உபமன்யுமுனிவர், மார்க்கண்டேயர்,கரன் அருணகிரிநாதர் ஆகியோர் வழிபட்டதலம்.

இறைவன் - உஜ்ஜீவநாதஸ்வாமி, உச்சிநாதர், முக்தீசர், கற்பகநாதர்.

இறைவி - அஞ்சனாக்ஷி(மைவிழியம்மை)பாலாம்பிகை.

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - (1) பொன்னொளி ஓடை (2) குடமுருட்டி (3) ஞானவாவி (4) எண்கோணதீர்த்தம் (5) நாற்கோணதீர்த்தம் என்பன. இவற்றுள் முதல் 2 தீர்த்தங்கள் வெளியிலும் பின் 3 தீர்த்தங்கள் கோயிலிலும் உள்ளன. (நாற்கோணக் கிணற்று நீரே அபிஷேகம் முதலியவைகளுக்குக் கொண்டு வரப்படுகிறது.

இங்குக் குறிக்கப்படும் 'குடமுருட்டி' என்பது தஞ்சை மாவட்டத்தில் ஓடும் ஆறு அன்று. இது வேறு. இது சர்ப்பநதி, உய்யக் கொண்டான் நதி என்று சொல்லப்படுகிறது. கல்வெட்டில் இந்நதி. வைரமேகவாய்க்கால் என்று குறிக்கப்படுகின்றது. இது காவிரியின் கால்வாய்களில் ஒன்று. 'ஞானவாவி'க்கு முத்திதீர்த்தம் என்றும் பெயர்.

மூவர் பாடல் பெற்ற சிறப்புடைய தலம்.

Koviloor Digital Library

கோயில் மலை மேல் உள்ளது. அழகான கற்கோவில். கிழக்கு நோக்கிய முகப்பு வாயில். திருக்குளம் (ஞானவாவி) படிகள் செல்லும் போது இடப்பால் விநாயகர் உள்ளார். மேலேறிச் சென்றால் செப்புக் கவசமிட்ட கொடிமரம் உள்ளது. அதன் முன்பு- மார்க்கண்டனைக் காப்பதற்காக-எமனைத் தடுப்பதற்காகக் கருவறை விட்டுநீங்கி வந்து நின்ற, சுவாமியின்-பாதம் உள்ளது. படிகளேறி உட் சென்றால் முதலில் 'அஞ்சனாட்சி' -அம்பாள் சந்நிதி உள்ளது. மேற்கு நோக்கிய சந்நிதி- பழைய அம்பாள். இத்திருமேனியின் திருக்கரத்திலுள்ள பூவின் இதழ் உடைந்துபோய் உள்ளது. இதனால் புதிய அம்பாளை பிரதிஷ்டை செய்துள்ளனர். எனினும் அம்பாள் கனவில் வந்து உணர்த்தியவாறு இப்பழைய அம்பாளை அப்புறப்படுத்தாது அப்படியே வைத்துள் ளனர். இரு அம்பாளுக்கும் நித்திய பூசை நடைபெற்று வருகின்றது. புதிய அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது. ''பாலாம்பிகை''. சண்முகர் சந்நிதி அழகானது.

உள் நுழைந்ததும் நேரே கோஷ்ட தட்சிணா மூர்த்தி தரிசனம். வலமாக வரும்போது நால்வர் பிரதிஷ்டையும், அம்பாளுடன் காட்சி தரும் விநாயகர் சந்நிதியும், மறுபுறம் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. கஜலட்சுமி, ஜ்யேஷ்டாதேவி, பைரவர், சூரியன், சனிபகவான் சந்நிதிகளும் உள. கோஷ்டமூர்த்தங் களாகத் தட்சிணாமூர்த்தியுடன் துர்க்கையும், பிரம்மாவும், அர்த்த நாரீஸ்வரரும் உள்ளனர். நவக்கிரக சந்நிதி உள்ளது.

மூலவர்-சுயம்பு-மேற்கு நோக்கிய சந்நதி-சதுர ஆவுடையார். மூலவர் அழகான தோற்றம். மனம் ஒன்றிச் சிந்திக்க, நிறைவு உண்டா கின்றது. மூலவருக்கு நேரே உள்ள மண்டபத்தில் நடராஜ சந்நிதி உள்ளது. பக்கத்தில் பிட்சாடனர், சந்திரசேகரர், வள்ளி தெய்வானை யுடன் கூடிய சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர் முதலிய உற்சவத் திருமேனிகள் அழகாக உள்ளன. இங்குப் பௌர்ணமி விசேஷம். பங்குனியில் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. தைப்பூசத்தில் சந்திரசேகரர் சோமரசம்பேட்டைக்கு எழுந்தருளுகின்றார்.

கல்வெட்டில் 'நந்திவர்ம மங்கலம்.' 'ராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலம்' என்று இவ்வூர் குறிக்கப் பெறுகின்றது; சுவாமியின் பெயர் 'உய்யக் கொண்ட நாதர்' எனப்படுகின்றது. கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற கர்நாடகப் போரின் போது இக்கோயில் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் மைசூர்க்காரரும் மாறிமாறித் தங்கியிருப்பதற்குரிய யுத்த அரணாக விளங்கியது என்ற செய்தியை 'கெஜட்' வாயிலாக அறிகிறோம்.

Koviloor Digital Library

இத்திருக்கோயில் தருமையாதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட தாகும். இத்தலத்துப் பெருமான்மீது மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ''கற்குடிமாமலை மாலை'' என்னும் நூலைப் பாடியுள்ளார்- இந்நூல் 100 தோத்திரப் பாடல்களை உடையது. இத்தலத்திற்குப் பக்கத்தில் 'வயலூர்' முருகன் கோயில் உள்ளது.

''வடந்திகழ் மென்முலை யாளைப் பாகமதாக மதித்துத்
தடந்திரை சேர்புனன் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொடு இன்பமது எல்லாம்
கடந்தவர் காதலில் வாழும் கற்குடி மாமலை யாரே.''

(சம்பந்தர்)

''வானவனை வானவர்க்கு மேலனானை
வணங்கும் அடியார் மனத்துள் மருவிப்புக்க
தேனவனைத் தேவர் தொழு கழலான் தன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லை விடையேற்றினானைக்
குழல் முழவம் இயம்பக் கூத்தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.''

(அப்பர்)

''மறையோர் வானவரும் தொழுதேத்தி வணங்க நின்ற
இறைவா எம் பெருமான் எனக்கு இன்னமுது ஆயவனே
கறையார் சோலைகள் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
அறவா அங்கணனே அடியேனையும் அஞ்சல் என்னே''

(சுந்தரர்)

''செயிரறு நினது திருவருள் காட்டுந்
திறத்தினாற் காண்பதை யன்றிப்
பயிறரு கேள்வி யானின்னைப்
பளகறக் காணவும் படுமோ
வயிரமா மலைச் செம்மணிக்கு வால் பச்சை
மணிக்கு வாலொடு பிறங்கிடுதல்
கயிலை நீ உமையோடி ருப்பது தெரிக்குங்
கற்குடி மாமலைப் பரனே.''

(கற்குடி மாமலை மாலை)

கூழும்பல்

''நற்குடியும் ஓங்கி நலம் பெருகு மேன்மை திருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே.'' *(அருட்பா)*

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி. உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில்
உய்யக் கொண்டான் திருமலை & அஞ்சல்
(வழி) சோமரசம் பேட்டை. S.O.
திருச்சி மாவட்டம் - 620 102

122/5. மூக்கீச்சுரம்

உறையூர், (திருச்சி)

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதி உறையூர். இதுவே மூக்கீச்சுரம் எனப்படுவது. திருச்சி - உறையூர் - அடிக்கடி பேருந்துகள் உள்ளன. சோழ மன்னர்களின் தலைநகரமாக உறையூர் ஒரு காலத்தில் விளங்கி வந்தது. புகழ்ச்சோழ மன்னர் ஆண்ட பதி. ''ஊரெனப்படுவது உறையூர்' 'என்னுந் தொடர் இதன் சிறப்பினையுணர்த்தும். ''உறந்தை'' என்றும் இதற்குப் பெயர். மூவேந்தரும் வழிபட்ட சிறப்புடைய தலம்.

உதங்கமுனிவருக்கு இறைவன் ஐந்து காலங்களில் ஐந்து வண்ணங்களோடு காட்சி நல்கிய தலம். இதனால் இறைவனுக்குப் பஞ்சவர்ணேஸ்வரர் என்று பெயர். வீரவாதித்தன் என்னும் சோழ மன்னன் உலா வரும்போது அவனது யானையைக் கோழியொன்று வென்றமையால் இத்தலம். 'கோழியூர்' என்றும் பெயர் பெற்றது. இச்சிற்பம் (யானையைக் கோழி தாக்குவது) ஆலயத்துள் பலவிடங் களில் உள்ளது. பழைமையும் சிறப்பும் உடைய இப்பதி இன்று வாணிபத்தில் மேலோங்கியுள்ளது.

இறைவன் - பஞ்சவர்ணேஸ்வரர்

இறைவி - காந்திமதி

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - சிவதீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்திருக்கோயில் கடை வீதியில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய முகப்பு வாயில். கல் மண்டபம். உட்சென்றால் பெரிய

Koviloor Digital Library

நந்தியைத் தரிசிக்கலாம். செப்புக் கவசமிட்ட கொடிமரம். உள் கோபுரம் நுழைந்து, சென்றால் முன்மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி யுள்ளது - தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். நேரே மூலவர் சந்நிதி தெரிகின்றது. மூலமூர்த்தி மிகவும் சிறிய சிவலிங்கத் திருமேனி. சுயம்பு மூர்த்தியாகத் திகழும் இத் திருவுரு உள்ளங்கையளவே உள்ளது.

நடராசசபை உள்ளது. மூலவரின் அணுக்க வாயிலில் இருபுறமும் துவாரபாலகர்கள் உளர். உள் மண்டபத்தில் இடப்பக்க முதல் தூணில் உட்புறம் ''யானைமீது அம்பாரியில் சோழ மன்னன் வரும் போது, அவ்யானையைக் கோழி குத்தித் தாக்கும் சிற்பம்' உள்ளது. இதன் பக்கத்தில் உதங்கமுனிவர் இறைவனை வழிபடும் சிற்பம் உள்ளது, புகழ்ச்சோழர் திருமேனி உள்ளது. உதங்கமகரிஷியின் எதிரில் நடராச சபை உள்ளது. கோஷ்ட மூர்த்தமாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவரிடத்தில் மகாவிஷ்ணு, பிரமன், துர்க்கை ஆகிய திருவுருவங்கள் உள்ளன.

பெரியதும் சிறியதுமாக இரு தட்சிணாமூர்த்தி உருவங்கள் உள்ளன. பெரிய உருவம் சிறந்த சிற்பக் கலையழகுடன் திகழ்கின்றது. சிறியது சோழர் காலத்தியது. பெரியதாக வைக்க எண்ணி நாட்டுக் கோட்டை நகரத்தார் தம் திருப்பணியில் செய்து இரண்டையும் வைத்து விட்டார்கள். திருமாலுக்கு எதிரில் உள்ள தூணில் பிட்சாடனர் உருவம் உள்ளது. இதற்கு எதிர்க் கம்பத்தில் தாருகாவனத்து ரிஷிபத்தினிகளின் உருவங்கள் உள. உறையூர்க் கோயிலில் சிற்பங்களுக்குக் குறை வில்லை என்பதுபோல, கருவறையின் வெளிப்பக்கச் சுவரில் ஏராள மான சிற்பங்கள் உள்ளன. கருவறை வெளிச் சுவரில் மேற்புறத்தில் நான்கு பக்கங்களிலும், வரிசையாக இறைவனின் பல்வகையான தாண்டவங்களின் சிற்பங்கள் மிக்க கலையழகுடன் காணப்படுகின்றன.

சுற்றியுள்ள தூண்களில் பலவகையான சிற்பங்கள் உள்ளன. ஒரு தூணில் ஐந்து பெண்கள் உருவத்தையே ஒரு குதிரையாக அமைந் துள்ள சிற்பமும்; நான்கு பெண்கள் உருவத்தையே ஒரு குதிரையாக அமைந்துள்ள சிற்பமும் கண்ணுக்குப் பெருவிருந்தாவன. மற்றுமுள்ள பலதூண்களில், இறைவனின் கண்ணை அப்புதல், மன்மதன் பாணம், தபஸ்காமாட்சி, கோழியும் யானையும் நேருக்கு நேர் நின்றவாறு சண்டையிடும் காட்சி முதலான அற்புதமான சிற்பங்கள் உள்ளன.

அம்பாளின் (காந்திமதியின்) சந்நிதியின் - கருவறையின் வெளிப்புறத்தில் வலம் வரும்போது பறவையின் கால், மனித உடல், யானைமுகம் கொண்ட அழகான சிற்பம் உள்ளது. **அதன் மறு**

Koviloor Digital Library

பக்கத்தில் யானையைக் கோழி கொத்துகின்ற மிக அழகான சிற்பம் உள்ளது - காணத் தகுந்த அற்புதக் காட்சி.

இங்குள்ள தீர்த்தம் - சிவதீர்த்தம். இது கோயிலுள் உள்ளது. இத் தீர்த்தத்தின் சிறப்பு வருமாறு:-

''திருப்பராய்த்துறையில் இருந்து வாழ்ந்து வந்த அன்பரொருவர் திருநீற்றைப் பெற்று வாயால் ஊதிய பாவத்திற்காகக் காட்டுப் பன்றியாய்ப் பிறந்து, பல்காலும் திரிந்து கடைசியில் வில்வவனமாகிய இத்தலத்தை அடைந்து, அழிக்கத் தொடங்கியபோது வேடர்கள் அதுகண்டு துரத்த அப்போது அப்பன்றி ஓடமாட்டாது இங்குள்ள சிவதீர்த்தத்தில் வீழ்ந்தது. இத் தீர்த்தத்தில் வீழ்ந்தமையால் அப் பன்றி பேறு பெற்று உய்ந்தது. அத்தகைய உயர்ந்த தீர்த்தம் இத் தீர்த்த மாகும்.''

இச்சிறப்பினை விளக்கும் சிற்பம், இத் திருக்குளத்தில் இறங்கும் போது வலப்புறத்தில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. வைகாசி விசாகத்தில் பத்து நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகின்றது. சோழ மன்னர் களின் திருப்பணியும், அடுத்து நகரத்தாருடைய திருப்பணி களும் பெற்றுச் சிற்பக்கலையழகுடன் திகழும் உறையூர்த் தரிசனம் உள்ளத் துக்கு உவப்பைத் தருவதில் மேலோங்கி நிற்கின்றது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலத்திற்குத் தலபுராணம் பாடியுள்ளார்.

''சாந்தம் வெண்ணீறெனப் பூசி வெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும் விரலேழை யொடாடிய காரணம்
ஆய்ந்து கொண்டாங்கறியந் நிறைந்தார வரார்கொலோ
வேந்தன் மூக்கிச் சரத்தடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே.''

(சம்பந்தர்)

-சிற்சுகத்தார்
பிற்சநந மில்லாப் பெருமைதரும் உறையூர்ச்
சற்சனர்சேர் மூக்கீச் சரத்தணியே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பஞ்சவர்ணேஸ்வர் திருக்கோயில்
உறையூர் & அஞ்சல் - 620003
திருச்சி.

Koviloor Digital Library

123/6. திரிசிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி

சோழ நாட்டு (தென்கரை)த் தலம்.

திருச்சிராப்பள்ளி - திருச்சி என்றழைக்கப்படும் இத்தலம் தமிழகத்தின் பெரிய நகரங்களுள் ஒன்றாகும். புகைவண்டி சந்திப்பு நிலையம். தமிழகத்தின் எல்லா நகரங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சென்னையிலிருந்து விரைவுப் பேருந்துகள் மூலமாகவும், புகைவண்டிகள் மூலமாகவும் இந்நகரையடையலாம். சிவில் விமான நிலையமும் உள்ளது காவிரிக்கரையில் உள்ள ஊர்.

இறைவன் - மாத்ருபூதேஸ்வரர், தாயுமானேஸ்வரர், தாயுமானவர்

இறைவி - மட்டுவார்குழலி, சுகந்தகுந்தளாம்பிகை

தீர்த்தம் - காவிரி

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.

எல்லா உயிர்க்கும் தந்தையாகவுள்ள இறைவன் ஒரு பெண்ணுக்கு மகப்பேறு காலத்தில் தாயாக வந்து உதவி செய்தமையால் தாயுமானவர் (தாயும் ஆனவர்) என்று பெயர் பெற்றார். திரிசிரன் (மூன்று தலைகளைக் கொண்ட அசுரன்) வழிபட்ட இடமாதலின் இஃது 'திரிசிராப் பள்ளி' என்று பெயர் பெற்றது. "முச்சென்னி மடங்கலேறு அனையான் நாமவரை இது" - என்பது திருவிளையாடற்புராணம். இத் தலத்திற்குத் தென் கயிலாயம்' (தக்ஷிண கைலாசம்) என்றும் பெயருண்டு. பிரமன், இந்திரம், சடாயு, சப்தரிஷிகள், திரிசிரன், சாரமாமுனிவர், மௌனகுரு, தாயுமானவர் முதலியோர் வழிபட்ட தலம். தாயுமானவர் திருக்கோயில் மலைமேல் நடுவிடத்தில் உள்ளது. இவ்விடத்திற்கு மலைக்கோட்டை என்று பெயர். திருச்சி என்றாலே மலைக்கோட்டையும், இம்மலையின் உச்சியில் அமர்ந்துள்ள 'உச்சிப் பிள்ளையார்' கோயிலும் தான் நினைவுக்கு வரும்.

இம்மலைக் கோட்டை நகரின் நடுவே, அமைந்துள்ளது.

மலைக்கோட்டை அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சந்நிதி உள்ளது. அருமையான - அற்புதமான விநாயகர். உண்மையிலேயே மாணிக்கமான விநாயகர் முன் நிற்கும்போது நம்மை நாம் மறக்கிறோம். மாணிக்க விநாயகரைத் தொழுது வலம் வந்து படிகளேறத் தொடங்க வேண்டும். சிராப்பள்ளிக் குன்றுடையானைக் காணும் ஆர்வங்

Koviloor Digital Library

கொண்டு ஏறும் நம்முன் வழியில் வலப்பால் தருமையா தீனத்தின் ஸ்ரீ மௌன சுவாமிகள் கட்டளை மடம் வருகின்றது. மடத்தின் முகப்பில் 'முத்துக் குமார சந்நிதி. கைதொழுது மேலேறினால் நூற்றுக்கால் மண்டபத்தைக் காணலாம். தொடர்ந்து ஏறிச் சென்றால் மலையின் நடுவிடத்தில் தாயுமானவர் திருக்கோயில் இடப்பால் உள்ளது. வலப்பால் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் மலைப்பாதை செல்கின்றது.

திருக்கோயிலுள் விசாலமான முன் மண்டபம் உள்ளது. உயரமான வரிசையில் அறுபத்துமூவர் மூலத் திருமேனிகளும்; வாயில் முகப்பில் கம்பத்தடி விநாயகர், ஆறுமுகர் சந்நிதிகளும் உள்ளன. உள்ளே சென்று வலம்வர அறுபத்துமூவர் உற்சவத் திருமேனிகளும் 'செவ்வந்தி விநாயகரும்' காட்சி தருகின்றனர். மலையடிவாரத்திலிருந்து 258 படிகளைக் கடந்தேறிய பிறகு தாயுமானவப் பெருமானின் சந்நிதியை அடைகிறோம். முகப்பில் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. தெய்விக மணங்கமழும் திவ்வியமான சந்நிதி. மேற்கு நோக்கியது.

மூலவர் - பெரிய பருத்த சிவலிங்கத் திருமேனி. திருநீற்றுப் படையுடன் கூடிய கம்பீரமான காட்சி - நன்றுடையான், தீயதில்லான், சிராப்பள்ளிக் குன்றுடையான். இவர் பெயர் கூறித்தொழும் உள்ளம் குளிருமல்லவா! ஆம்! ஒன்றித்தொழ உண்மையிலேயே நெஞ்சம் குளிர்கின்றது. ஞானசம்பந்தர் பதிகம் சலவைக் கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. பிராகாரத்தில் இறைவனின் பல்வேறு மூர்த்தங்கள் சுவரில் வண்ணங்களில் எழுதப்பட்டுள்ளன. சண்டேஸ்வரரைத் தொழுது வெளியே வந்து அம்பாள் சந்நிதியை அடையலாம். 'மட்டுவார் குழலி' நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிக் காட்சி தந்தருளுகின்றாள். பிராகாரத்தில் அருட்சக்திகளின் மூலத் திருமேனிகள் உள்ளன. நவக்கிரகங்களை வழிபட்டு மனநிறைவுடன் வெளியே வந்து கொடிக் கம்பத்தினிடத்தில் வீழ்ந்து வணங்கி, பழைய படியே படிகள் இறங்கி, சென்ற வழியே திரும்பி வரவேண்டும். தாயுமானவர் இத்தலத்தில் வாழ்ந்தார். இவருடைய குருவே, மௌன சுவாமிகள் ஆவார். சைவ எல்லப்ப நாவலர் இத்தலத்திற்குத் தல புராணம் (செவ்வந்திப் புராணம்) பாடியுள்ளார்.

> "நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே(று)
> ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
> சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
> குன்றுடையானைக் கூறஎன் உள்ளங்குளிரும்மே."

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''தாயுமாய் எனக்கேதலை கண்ணுமாய்
யேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப் பள்ளி மேவிய
நாயனார் என நம்வினை நாசமே.'' *(அப்பர்)*

''சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி'' *(திருவாசகம்)*

''கழிந்தது நென்னற்று கட்டுவிட்டு நாறி
ஒழிந்தது உடல் இராவண்ணம் - அழிந்தது
இராமல் ஐயா! கொண்டு போ என்னா முன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.''

(ஐயடிகள் காடவர்கோன்)

- மற்செய்
அராப்பள்ளிமேவுமவனின்று வாழ்த்துஞ்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. தாயுமானவசுவாமி திருக்கோயில்
மலைக்கோட்டை திருச்சி - 620 002.

124/7. திருஎறும்பியூர்

திருவெறும்பூர்

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

மக்கள் வழக்கில் 'திருவெறும்பூர்' என்றும் திருவரம்பூர் என்றும் வழங்குகின்றது.

திருச்சியை அடுத்த இருப்புப்பாதை நிலையம், திருச்சி - தஞ்சை நெடுஞ்சாலையில் உள்ளது. திருச்சியிலிருந்து அடிக்கடி நகரப் பேருந்துகள் உள்ளன. தொல் பொருளாய்வுத் துறையின் பாதுகாப்பில் இருந்து வரும் இக்கோயில் மலைமீது உள்ளது. மலைக்கோயில் புராணப்படி இதற்கு; பிப்பிலீச்சரம், மணிக்கூடம், இரத்தினக்கூடம், திருவெறும்பிபுரம், எறும்பீசம், பிரமபுரம், இலக்குமிபுரம், மதுவனபுரம் குமாரபுரம் எனப் பல பெயர்களுண்டு.

Koviloor Digital Library

திருமாலும், பிரமனும், நைமிசாரண்ய ரிஷிகளும் வழிபட்ட தலம். தென் கயிலாயம் என்றும் இத்தலத்தைச் சொல்வர். இந்திரனும் தேவர்களும் எறும்பு வடிவங்கொண்டு வழிபட்ட தலமாதலின் இத்தலம் இப்பெயர் பெற்றது.

இறைவன் - பிப்பிலிகேஸ்வரர், எறும்பீஸ்வரர், எறும்பீசர், மதுவனேஸ்வரர், மணிகூடாசலபதி, மாணிக்க நாகர். (பிப்பிலி - எறும்பு)

இறைவி - சௌந்தரநாயகி, மதுவனேஸ்வரி, நறுங்குழல் நாயகி (சுகந்த குழலேஸ்வரி). இரத்தினாம்பாள்

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - பிரம தீர்த்தம் (எதிரில் உள்ளது).

அப்பர் பாடல் பெற்ற தலம்.

கல்வெட்டில் இறைவனின் திருப்பெயர், 'திருமலையாழ்வார்' என்றும், 'திருவெறும்பியூர் உடைய நாயனார்' என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. முகப்பில் பக்கத்தில் செல்வ விநாயகர் சந்நிதி உள்ளது. வாயில் கல் மண்டபம்.

கிழக்கு நோக்கிய வாயில் வழியே 125 படிகளேறிச் செல்ல வேண்டும். மேலே சந்நிதி நுழைவு கிழக்கு நோக்கியுள்ளது. கல்லாலான கருவறைக் கட்டடம். முன்னால் செப்புக் கவசமிட்ட கொடிக்கம்பம் உள்ளது. சுவாமி கிழக்கு நோக்கியுள்ளார்.

மலைமீது உள்ளும் வெளியுமாக இருபிரகாரங்கள் உள்ளன.

உள்பிராகாரத்தில் நுழைந்தால் நேரே மூலவர் சந்நிதி. வலமாக வரும்போது நால்வர் பிரதிஷ்டை, சப்தமாதாக்களின் உருவங்கள், விநாயகர் சந்நிதி, காசி விசுவநாதர், ஆறுமுகர், கஜலட்சுமி முதலியவை உள்ளன.

கோஷ்ட மூர்த்தங்களாக, நர்த்தன விநாயகர், அழகான தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவரிடத்தில் சங்கர நாராயணர் உருவம், விஷ்ணு, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. நவக் கிரக சந்நிதியில் சூரியன் திருவுருவம் இருமனைவியரோடும் நடுவில் உள்ளது. பைரவர், உள்ளார். உள் பிராகாரத்தில் நால்வர் சந்நிதியை அடுத்துள்ள வாயில் வழியே சென்று பார்த்தால் சுரங்கப் பாதை ஒன்று உள்ளது; மேலே மூடப்பட்டுள்ளது; படிகள் தெரி கின்றன. திருச்சி மலைக்கோட்டையிலிருந்து தப்புவதற்கான வழியாக இது இருக்கலாம் என்பது செவிவழிச்செய்தி.

Koviloor Digital Library

மூலவர் வாயிலின் முன்னால் ஒருபுறம் விநாயகரும் மறுபுறம் வேலவரும் காட்சி தருகின்றனர். துவாரபாலகர்களைக் கடந்து உட் சென்று மூலவரைத் தரிசிக்கலாம். மூலலிங்கம் மண்புற்றாக மாறி யிருப்பதால், நீர் படாமல் பாதுகாக்கப்படுகிறது. சிவலிங்கத் திருமேனி வடபால் சாய்ந்துள்ளது; மேற்புறம் சொரசொரப்பாகவுள்ளது. இது பற்றிச் சொல்லப்படும் தலவரலாறு;- ''தாருகாசூரனை'' அழிக்கத் தேவர்கள் வழிகேட்டுப் பிரமனை அணுகினர். அவர் சொல்லிய வண்ணம் இந்திரனும் தேவர்களும் தங்கள் உருவம் அசுரர்க்குத் தெரியக் கூடாதென்றெண்ணி, எறும்பு வடிவங்கொண்டு இத்தலத்திற்கு வந்து வழிபட்டனர். அவ்வாறு வழிபடும்போது சிவலிங்கத்தின் மீதிருந்த எண்ணெய்ப் பசையால் மேலேற முடியாது கஷ்டப்பட, சுவாமி புற்றாக மாறி, எறும்புகள் மேலேறிப் பூசை செய்வதற்கு வசதியாகச் சொரசொரப்பான திருமேனியுடையவரானார்; அவைகள் மேலேறு வதற்கு வசதியாகச் சாய்ந்தும் பூசையை ஏற்றுக்கொண்டார்'' என்று சொல்லப்படுகிறது.

'திரிசிரன்' திருச்சியில் வழிபட்டதுபோல அவனுடைய சகோதரன் 'கரன்' என்பவன் எறும்பு உருக்கொண்டு இங்கு வழிபட்டதாகவும் சொல்லப்படுகிறது. சிவலிங்கத்தின் மீது எறும்புகள் ஊர்ந்த அடை யாளங்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தில் உள்ள கல் தூண்கள் சிற்ப வேலைப்பாடமைந்தவை. கருவறையின் வெளிப்புறம் கல்வெட்டுக்கள் உள்ளன. பழைய அம்பாள் கோயில், கோயிலுக்கு வெளியே முகலாயப் படையெடுப்பால் உண்டான இடிபாடுகளுடன் காணப் படுகிறது. மொட்டையாக நின்றிருக்கும் தூண்களேயன்றி, கோயில் முழுவதுமாக அழிந்துள்ளது. அம்பாளும் பின்னப்பட்டுள்ளது. ஆதலின் வேறொரு புதிய அம்பாள் திருமேனி. கோயிலுக்குள்ளே வெளிப்பிராகாரத்தில் தனிச் சந்நிதியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது; தெற்கு நோக்கிய சந்நிதி நின்ற திருக்கோலம்.

கோயிலுள் தலப்பதிகங்கள் கல்லிற் பொறித்துப் பதித்து வைக்கப்பட்டுள்ளன. வைகாசி மாதத்தில் பத்து நாள்களுக்குப் பெரு விழா நடைபெறுகின்றது. கல்வெட்டில் இத்தலம் ''ஸ்ரீ கண்டசதுர்வேதி மங்கலம்'' என்று குறிக்கப்படுகின்றது.

'எறும்பியூர்த் தலபுராணம்' உள்ளது. கி.பி. 1752ல் ஆங்கி லேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் நடந்த போரின்போது இவ்விடம் போர் வீரர்கள் தங்கும் ராணுவத் தளமாக விளங்கியது. தற்போது இப்பகுதியில் துப்பாக்கித் தொழிற்சாலை, கொதிகலன் தொழிற்சாலை, தொழிற் பயிற்சி நிலையம் முதலியவை உள்ளன.

Koviloor Digital Library

''பன்னிய செந்தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்நிறைந்த கலைகளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியிலேனைத்
தன் திறமும் அறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையையும் போல அன்பாய்
அடைந் தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக்கொண்ட
தென்எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.'' *(அப்பர்)*

''தனச்சிலம்பா மணியேட்டிற்றன் மருப்பால்
வரைந்தருள் காசன னன்வே
கினச்சிலம்பா னிகரகடுவிழி வதன
மாதர்படைத் தலைவனாம்
தனச்சிலம்பா வணமுறச் செய்கண்ணுதலோன்
தருமூத்த தனையனேர
தனச்சிலம்பாருங் கமலமணிப் பதத்தை
அனுதினமும் வணங்கி வாழ்வோம்''

(தலபுராணம் - விநா. துதி)

''இறும்பான சிறகரரிந்து லகுயிரைக் காத்த இருங்குலிசக் கையான்
எறும்பான அஃறிணையின் உருக்கொடுநம் இறைவனை இகவா அன்பான்
நறும் பாதவஞ்செறியும் எறும்பீசந்தனை யெய்தி நண்ணிப்பூசை
உறும் பாசமகற்றிடச் செய்எறும்பீசன் அடிமலரை உன்னி வாழ்வாம்.''

(தலபுராணம் - சுவாமி துதி)

''மகந்தனையே பலபுரிந்த மகவானும் அமலனடிமருவுமின்ப
சுகந்தனை யெய்திட எறும்பின் உருக்கொ டெறும் பீசத்தே சூழ்ந்து
போற்ற
உகந்தனையான் தனக்குதவும் இறைவனிடப் பாகத்தே ஒருவ தோங்கும்
சுகந்தநறுங் குழலமுதை அன்பின் மொழிந்தென் பிறவித் துரிசுதீர்வாம்.''

(தலபுராணம் - அம்பாள்துதி)

''நின்றழல் மெய்யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துகின்ற
நன்றெறும்பி யூரிலிங்கு நன்னெறியே.'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. எறும்பீஸ்வரர் திருக்கோயில்
திருவெறும்பூர் & அஞ்சல் - 620 013.
திருச்சி

Koviloor Digital Library

125/8. திருநெடுங்களம்



சோழநாட்டு (தென்கரைத்) தலம்.

1) திருச்சி - தஞ்சை சாலையில் வந்து, துவாக்குடி என்னுமிடத்தில் பிரியும் சாலையில் 4 கி.மீ. சென்று நெடுங்களத்தையடையலாம்.

Koviloor Digital Library

2) திருச்சி மெயின்கார்டு கேட்டிலிருந்து திருநெடுங்களத்திற்கு நகரப் பேருந்து உள்ளது.

3) திருச்சி - மாங்காவனம், நகரப் பேருந்து இத்தலம் வழியாகச் செல்கிறது. (மக்கள் கொச்சையாகப் பேசும்போது மட்டும் திருநட்டாங் குளம் என்கின்றனர். மற்றபடி நெடுங்களம் என்ற பெயரே வழக்கில் உள்ளது)

திருவெறும்பூர் கோயிலுடன் இணைந்தது; அச்செயல் அலுவலரே இதன் நிர்வாகத்தையும் பார்த்து வருகின்றார்.

இறைவன் - நித்யசுந்தரேஸ்வரர், நெடுங்களநாதர்.

இறைவி - மங்களநாயகி, ஒப்பிலா நாயகி

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - அகத்திய தீர்த்தம். சுந்தர தீர்த்தம். சுந்தர தீர்த்தக் கரையில் உள்ள கருப்பண்ண சுவாமிக்குப் பானக நைவேத்யம் செய்து பலருக்கும் வழங்கினால் நோய் தீருமென்பது நம்பிக்கையாக இருந்து வருகின்றது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய ஊர், பழைய கோயில். அகத்தியர் வழிபட்டது.

ராஜகோபுரம் கிழக்கு நோக்கியுள்ளது. அம்பாள் ஆலயம் வெளிப்புறம் அமைந்துள்ளது. உற்சவ மூர்த்தங்கள் சோமாஸ்கந்தர், விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிரமணியர் முதலியன சிறப்பாகவுள்ளன. இங்குள்ள வெண்கலக்குதிரை விந்தையான அமைப்புடையது. மகாமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள சோழர் காலக் கல்உரல் சிறந்த வேலைப்பாடமைந்தது.

நெடுங்களப் பதிகத்தில் வரும் பாடற் கருத்துக்கள் அனைத்தும் ராஜ கோபுரத்தில் முன்னும் பின்னும் சுதை சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம், சதுர்ப் புஜம். தவஞ்செய்த அம்பிகையை இறைவன் கள்ள உருவில் தோன்றிக் கைத்தலம் பற்ற, அச்சமுற்று அம்பிகை ஓடியொளிந்த இடம், ஒளிமதிச்சோலை என்று வழங்குகிறது.

மூலவர் - நிறைவான மூர்த்தி - 'நினைவார்தம் இடர்களையும்' நிமலனின் தரிசனம். மூலத்தானத்தின்மேல் இரு விமானங்கள் அமைந்து புதுமையாகக் காட்சியளிக்கின்றன. இங்குள்ள தட்சிணாமூர்த்தி

Koviloor Digital Library

விந்தையான அமைப்புடையது - யோகதட்சிணாமூர்த்தி, சித்தாசனத்தில் அமர்ந்து, மேற்கரங்களில் மான் மழுவும், கீழ்க் கரங்களில் சின் முத்திரையும் திருநீற்றுப் பெட்டகமும் ஏந்தி, இடக்காலைச் சுற்றியவாறு யோக பட்டம் விளங்கக் காட்சி தருகிறதாம். நாடொறும் நான்கு கால பூஜைகள். மாதவிழாக்களுடன் நவராத்திரி, பிரதோஷ காலங்கள், தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலியவை சிறப்பாக நடைபெறு கின்றன. வைகாசி விசாகத்தில் பெருவிழா.

அண்மையிலுள்ள தலம் திருவெறும்பியூர். கல்வெட்டில் இத் தலம் ''பாண்டிகுலாசினி வளநாட்டு வடவீர நாட்டு திரு நெடுங்களம்'' என்றும்; இறைவன் பெயர் 'நெடுங்களத்து மகாதேவர்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. 30-6-1999ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இத்தலத்தில் 30க்கு மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன.

''நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என் அடியான் உயிரை வெளவேல் என்றுஅடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர் களையாய் நெடுங்கள மேயவனே.''

(சம்பந்தர்)

''தொட்டுத் தடவிப் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்கள் அத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.''

(ஐயடிகள் காடவர்கோன்)

-துன்றுகயற்
கண்ணார் நெடுங்களத்தைக் கட்டழித்த மெய்த்தவர்சூழ்
தண்ணார் நெடுங்களமெய்த் தாரகமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நித்தியசுந்தரேஸ்வரர்,
நெடுங்களநாதர் திருக்கோயில்
திருநெடுங்களம் & அஞ்சல் - 620 015
திருச்சி வட்டம் - மாவட்டம்.

Koviloor Digital Library

126/9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி

திருக்காட்டுப்பள்ளி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் திருக்காட்டுப்பள்ளி என்று வழங்குகிறது. திருக்காட்டுப்பள்ளி என்னும் பெயருடைய இரு தலங்கள் உள்ளன. காவிரியின் வடகரையில் உள்ளது கீழைத் திருக்காட்டுப்பள்ளி எனப்படும். அது திருவெண்காட்டிற்கு அருகில் உள்ளது.

இத்தலம் தென்கரையில் உள்ளது. மேலைத் திருக்காட்டுப்பள்ளி எனப்படும். இங்குத்தான் குடமுருட்டியாறு பிரிகின்றது.

திருச்சி, தஞ்சையிலிருந்தும், திருக்கண்டியூர் திருவையாறு, கல்லணை முதலிய இடங்களிலிருந்தும் இத்தலத்திற்குப் பேருந்துகள் உள்ளன. திருவையாறு - கல்லணை சாலையில் திருக்காட்டுப்பள்ளி உள்ளது.

இறைவனைத் திருமால், பிரமன், சூரியன், பகீரதன், உறையூர் அரசி ஆகியோர் வழிபட்ட தலம். அக்கினி வழிபட்ட தலமாதலின் கோயிலுக்கு 'அக்னீஸ்வரம்' என்பது பெயர்.

இறைவன் - அக்னீஸ்வரர், தீயாடியப்பர்

இறைவி - சௌந்தரநாயகி, அழகம்மை

தலமரம் - வன்னி, வில்வம் இரண்டும் உள்ளன.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம், காவிரி. (அக்கினி தீர்த்தம் கிணறுவடிவில் உள்ளது.) இத் தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிறு, மாசிமகம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் முதலிய நாள்களில் நீராடி வழிபடுதல் சிறப்பென்பர்.

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற தலம்.

இத்தலம் பற்றிச் சொல்லப்படும் ஒரு செய்தி:-

உறையூரிலிருந்து ஆண்டு வந்த மன்னன், உறையூர் நந்த வனத்தில் இறைவனுக்குரியதாகப் பூத்து வந்த செவ்வந்தி மலர்களைப் பணியாளன் பறித்து வந்து தர அவற்றைப் பெற்றுத் தன் இரு மனைவியருக்கும் தந்தான். மூத்த மனைவி அம்மலர்களைத் தான் சூடிக் கொள்ளாமல் சிவபெருமானுக்கு அணிவித்து வந்தாள், இளைய

Koviloor Digital Library

மனைவி தான் சூடி மகிழ்ந்தாள். இதனால் இளையவள் இருந்த உறையூர் மண் மாரியால் அழிந்தது. மூத்தவள் இருந்த திருக்காட்டுப் பள்ளி மட்டும் அழியாமல் பிழைத்தது என்று சொல்லப்படுகின்றது.

ஐந்து நிலைகளுடன் கூடிப் பொலிவுடன் ராஜகோபுரம் உள்ளது. செப்புக் கவசமிட்ட கொடிமரம் உள்ளது. வலமாகச் சென்றால் விநாயகர் சந்நிதி உள்ளது. உட்சென்றதும் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது - தெற்கு நோக்கியது - நின்ற திருக்கோலம். சந்நிதி வாயிலில் சுதையாலான துவாரபாலகிகள் உளர்.

உள் கோபுரம் மூன்று நிலைகளுடன் உள்ளது. உட்சென்றால் வலப்பால் நடராச சபை உள்ளது. உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நவக்கிரக சந்நிதியில், எல்லாக் கிரகங்களும் சூரியனைப் பார்த்தவாறே அமைந்துள்ளன.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி. நான்கு படிகள் பூமியில் தாழ உள்ளார். வெள்ளிக் கவச அலங்காரம், உள்ளத்திற்கு ஓர் அலாதியான மனநிறைவு. படிகள் இறங்கிச் சுற்றி வலம் வரலாம். சோழ மன்னன் பிரதிஷ்டை, மூலவரைச் சுற்றி வரும் பிராகாரத்தில் கோஷ்ட மூர்த்தமாக யோக தட்சிணாமூர்த்தி விளங்குகின்றார்.

உள் பிராகாரத்தில் விநாயகர் உள்ளார். இலிங்கோற்பவர், கோஷ்ட மூர்த்தமாக இருக்காமல், விநாயகருக்குப் பக்கத்தில் சந்நிதியாகவுள்ளது. இலிங்கோற்பவரிடத்தில் அர்த்த நாரீஸ்வரர் உள்ளார். அடுத்து வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகப்பெருமானுள்ளார். பக்கத்தில் காசி விசுவநாதர் விசாலாட்சி, கஜலட்சுமி, துர்க்கை சந்நிதிகள் உள.

முன் மண்டபத்தில் வலப்பால் பைரவர், நால்வர் திருமேனிகள் உள்ளன. நித்திய வழிபாடுகள் முறையாக நடைபெறுகின்றன. மாசிமகமும் பங்குனிப் பெருவிழாவும் இங்குச் சிறப்புடையன.

முதல் ஆதித்திய சோழனின் காலத் திருப்பணியைப் பெற்ற கோயில். 'பள்ளி' என்ற சொல்லைக் கொண்டு இவ்வூரில் ஒரு காலத்தில் சமணர்கள் வாழ்ந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். அதற்கேற்ப 24-ஆவது தீர்த்தங்கரரின் சிலை இத்தலத்தில் கிடைத்துள்ளதாம்.

"வேதனார் வெண்மழு ஏந்தினார் அங்கமுன்
ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்த காட்டுப் பள்ளி
நாதனார் திருவடி நாளும் நின்றேத்துமே."

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''மாட்டைத் தேடி மகிழ்ந்து நீர் நும்முளே
நாட்டுப் பொய் யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட் டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளி யுளான் கழல் சேர்மினே.''

(அப்பர்)

-எண்ணார்

தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழுந்
திருக்காட்டுப் பள்ளியில் வாழ் தேவே,

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அக்னீசுவரர் திருக்கோயில்
திருக்காட்டுப்பள்ளி & அஞ்சல் 613 104
தஞ்சை மாவட்டம்.

127/10. திரு ஆலம்பொழில்

திருவாலம் பொழில், திருவாம்பொழில்

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

(1) திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்குச் செல்லும் சாலையில் உள்ள தலம். (மேலத்திருப்பூந்துருத்தியை அடுத்துள்ளது). மக்கள் வழக்கில் திருவாலம் பொழில், திருவாம்பொழில் என வழங்குகிறது. கண்டியூரிலிருந்து நகரப் பேருந்து செல்கிறது. சாலையோரத்திலேயே கோயில் உள்ளது.

(2) திருவையாற்றிலிருந்து பூதலூர் வழியாகத் திருச்சி செல்லும் பேருந்தில் வந்தால் இத் தலத்திலேயே இறங்கலாம். காசிபர், அஷ்ட வசுக்கள் வழிபட்டது.

இறைவன் - ஆத்ம நாதேஸ்வரர்

இறைவி - ஞானாம்பிகை.

தலமரம் - ஆல். (தற்போதில்லை)

அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

மேற்கு நோக்கிய சந்நிதி. சிறிய ராஜகோபுரம். வாயில் துவார பாலகர் தரிசனம். உட்புகுந்தால் இடப்பால் சுப்பிரமணியர் சந்நிதி. அம்பாள் சந்நிதியை வலமாகச் சுற்றியவாறே வரும்போது பிராகாரத்தில் விநாயகர், விசுவநாதர், விசாலாட்சி, சந்நிதிகள் உள்ளன. அடுத்த மண்டபத்தில் வலப்பால் நவக்கிரக சந்நிதி. இடப்பால் அம்பாள் சந்நிதி. நின்றகோலம். நேரே மூலவர் தரிசனம்.

உள் மண்டபத்தில் வலப்பால் நால்வர் காட்சி. அணுக்க வாயிலில் பழைமையான அப்பர் திருமேனி தனியே உள்ளது. மூலவர் அழகான மூர்த்தி. நாடொறும் இரு பூஜைகள். இத்தலக் கல்வெட்டு இறைவனை ''தென் பரம்பைக்குடி திருவாலம் பொழில் உடைய நாதர்'' என்று குறிக்கிறது. அப்பரும் தம் திருத்தாண்டகத்தில் ''தென் பரம்பைக் குடியின்மேய திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே'' என்று பாடியுள்ளார். இதிலிருந்து ஊர் - பரம்பைக்குடி என்றும்; கோயில் - திருவாலம் பொழில் என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. ஆவணி மூலவிழா, சஷ்டி, நவராத்திரி, கார்த்திகைச் சோமவாரங்கள், சிவராத்திரி முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன.

''கருவாகிக் கண்ணுதலாய் நின்றான் தன்னைக்
கமலத்தோன் தலையரிந்த காபாலிய்யை
உருவார்ந்த மலைமகளோர் பாகத்தானை
உணர்வெலா மானானை ஓசையாகி
வருவானை வலஞ்சுழியெம் பெருமான் றன்னை
மறைக்காடும் ஆவடு தண்துறையுமேய
திருவானைத் தென் பரம்பைக் குடியின்மேய
திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே.'' *(அப்பர்)*

-மருக்காட்டு
நீலம் பொழிற்குள் நிறைதடங் கட்கோர் காட்டும்
ஆலம் பொழிற்சிவயோகப் பயனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆத்மநாதேசுவரர் திருக்கோயில்
திருவாலம் பொழில் - அஞ்சல்
திருப்பந்துருத்தி - S.O. 613 103.
(வழி) திருக்கண்டியூர் - திருவையாறு வட்டம்
தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

128/11. திருப்பூந்துருத்தி

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்குச் செல்லும் சாலையில் கண்டியூரை அடுத்து உள்ள தலம். மக்கள் வழக்கிலும் - அஞ்சல் பெயர் வழக்கிலும் திருப்பந்துருத்தி என்று வழங்குகிறது. கோயில் உள்ள பகுதி மேலத்திருப்பூந்துருத்தி ஆகும். திருவையாற்றி லிருந்தும் செல்லலாம். திருக்கண்டியூரிலிருந்து 3 கி. மீ. தொலைவு.

ஆற்றிடைக் குறையிலுள்ள ஊர்கள் ''துருத்தி'' என்று பெயர் பெறும். இத்தலம் காவிரிக்கும் குடமுருட்டிக்கும் இடையில் உள்ளதால் இப்பெயர் பெற்றது. (மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு தலமும் (குத்தாலமும்) துருத்தி என்று வழங்கப்படுகிறது.) இந்திரன், திருமால், இலக்குமி, சூரியன், காசிபர் ஆகியோர் வழிபட்ட தலம்.

சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. ஏழூர் திருவிழா நடைபெறும் தலங்களுள் இதுவுமொன்று. ''பூந்துருத்தி காடவநம்பி'' யின் அவதாரத் தலம். இத் தலத்தில் நந்தி விலகியுள்ளது. அப்பர் உழவாரத் தொண்டு செய்த தலமென்று எண்ணி, காலால் மிதிக்கவும் அஞ்சி வெளியில் நின்ற ஞானசம்பந்தருக்கு இறைவன் நந்தியை விலகச் செய்து காட்சி தந்ததாகத் தலபுராணம் கூறுகிறது. ஞான சம்பந்தரின் பல்லக்கை அப்பர் பெருமான் தன் தோளிற் சுமந்ததலம். இவ்விடம் சம்பந்தர்மேடு என்று சொல்லப்படுகிறது. திருவாலம்பொழிலுக்குப் பக்கத்தில் வெள்ளாம் பரப்பூரையடுத்து இம் மேடு உள்ளது. அங்கு இருவருக்கும் கோயில் கட்டப்பட்டு, விழா நடைபெறுகிறது.

அப்பர் அமைத்த - ''திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம்'' என்று புகழப்படும் திருமடம் உள்ள தலம். இத் திருமடம் கோயிலுக்கு எதிரில் சற்றுத் தள்ளி உள்ளது. ஊர் பெரியது. மேலை, கீழை என இரு பிரிவாகவுள்ளது. மேலைப்பூந்துருத்தியில்தான் கோயில் உள்ளது.

இறைவன் - புஷ்பவனேஸ்வரர், ஆதிபுராணர், பொய்யிலியர்
இறைவி - சௌந்தரநாயகி,
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.

அப்பர் பாடல் பெற்றது.

ராஜ கோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்ததும் பஞ்சமூர்த்தி மண்டபம். பெரிய நந்தி விலகியுள்ளது.

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. உள்வாயிலைத் தாண்டியதும் வசந்த மண்டபம். கொடிமரம், பலிபீடம், நந்தி சந்நிதிவிட்டு விலகிய வாறு உள்ளன. சுவாமி சந்நிதிக்குத் தென்பால் சோமாஸ்கந்த மண்ட பமும் அடுத்து நடராச சபையுமுள்ளது. உள் பிராகாரத்தில் விநாயகர், சப்தமாதர்கள், நால்வர் வரலாற்றுச் சித்திரங்கள் உள்ளன. கருவறையின் தென்பால் தென்கயிலையும் வடபால் வடகயிலையு மாகிய கோயில்கள் விளங்குகின்றன. வாகன மண்டபம், மகா மண்டபம் - அர்த்த மண்டபம். மூலவர் தரிசனம்.

அம்பாள் கோயிலில் பழைய திருமேனியும் வைக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு வெளியே அப்பர் அமைத்த திருமடம் உள்ளது. இங்கு இருந்துதான் அப்பர் பெருமான் திரு அங்கமாலை உள்ளிட்ட பல தாண்டகங்களையும் பல பதிகங்களையும் பாடியருளினார். கோஷ்ட மூர்த்தங்களில் வீணாதர தட்சிணாமூர்த்தி திருமேனி மிகவும் சிறப் பானது. மகிடனையழித்த பாவத்தைப்போக்க ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும் துர்க்கையும், அமர்ந்த கோலத்தில் அப்பர் பெருமானும் பூந்துருத்தி காடவ நம்பியின் திருவுருவமும் தரிசிக்கச் சிறப்புடையன. பெருவிழா நீங்கலாக மற்ற பிரதான விழாக்களெல்லாம் நடைபெறு கின்றன. வள்ளலாரும் அருணகிரிநாதரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

''எனக்கென்றும் இனியானை எம்மான் தன்னை
எழிலாரும் ஏகம்பம் மேயான்தன்னை
மனக்கென்றும் வருவானைவஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான்றன்னைத்
தனக்குஎன்றும் அடியேனை ஆளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழை யான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புநிதன்றன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன்நானே.''

(அப்பர்)

-சீலநிறை
வாந்துருத்தி கொண்டுள்ளனலெழுப்புவோர் புகழும்
பூந்துருத்திமேவுசிவ புண்ணியமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பந்துருத்தி & அஞ்சல்
(வழி) கண்டியூர் - 613 103
திருவையாறு வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

129/12. திருக்கண்டியூர்

சோழ நாட்டு (தென்கரை)த் தலம்.

தஞ்சை - திருவையாறு பேருந்துச் சாலையில் உள்ளது. தஞ்சையிலிருந்து 9. கி.மீ தொலைவு. திருவையாற்றிலிருந்து 3. கி. மீ. தொலைவு. பேருந்து வசதி உள்ளது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. பிரமன் சிரத்தைத் (ஐந்தனுள் ஒன்றை) தம் சூலத்தால் கண்டனம் செய்த (கொய்த) காரணத்தால் கண்டனபுரம் - கண்டியூர் எனப் பெயர் பெற்றது. சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்றாகும்.

''சாதாதாப'' முனிவருக்காக இறைவனால் வில்வமரம் கயிலையிலிருந்து கொண்டு வரப்பட்டதால் இத்தலத்திற்கு 'ஆதிவில்வாரண்யம்' என்றும் பெயர். இம்முனிவர் பிரதோஷத்தில் காளத்தி சென்று தரிசனம் செய்து வந்தார். ஒருமுறை கண்டியூர் வந்தபோது, காளத்திக்கு, நேரத்தில் செல்ல முடியாமற்போயிற்று. அப்போது இறைவன், அவருக்குக் காளத்தி தரிசனத்தை இத்தலத்திலேயே காட்டியருளினார் என்பது வரலாறு. பிரமகத்தி தோலும் நீங்கும் தலமாகவும் சொல்லப்படுகிறது. சூரியன் வழிபட்டதலம் இது. ஆதலின், மாசிமாதம் 13, 14, 15, ஆம் நாள்களில் மாலையில் 5 - 45 மணிமுதல் 6, 10 மணிவரை சூரிய ஒளி சுவாமிமீது படுகின்றது. அருணகிரி நாதர் பாடல் பெற்றது.

இறைவன் - பிரமசிரக் கண்டீஸ்வரர், வீரட்டேஸ்வரர்,
பிரமநாதர், ஆதிவில்வவனநாதர்.

இறைவி - மங்கள நாயகி

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - நந்திதீர்த்தம், தக்ஷதீர்த்தம், பிரமதீர்த்தம்.
குடமுருட்டியாறு முதலியன.

சம்பந்தர், அப்பர் பாடிய சிறப்புடைய தலம்.

பெரிய ஊர். மேற்கு நோக்கிய கோயில். ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சிதருகின்றது. கவசமிட்ட கொடிமரம் - நந்தி, பலி பீடங்கள் உள்ளன. கொடிமர விநாயகர் காட்சி தருகின்றார். இடப்பால் தண்டபாணி சந்நிதி தனிக்கோயிலாக மண்டபத்துடன் உள்ளது. இம்மண்டபம் வௌவால் நெத்தி மண்டப அமைப்புடையது. சப்தஸ்தானத் திருவிழாவில் (ஏழூர்திருவிழாவில்) சுவாமி இங்கிருந்து

Koviloor Digital Library

புறப்பட்டுச் செல்லும். சுவாமி இங்கு வந்து இறங்கி, (ஐந்தாவது தலமாக) சற்று இளைப்பாறிச் செல்லும். சிலாத முனிவருக்கும், சாதாதாப முனிவர் தமையனாராதலின், இளைப்பாறிச் செல்லும்போது மூத்தமாமனார் என்ற வகையில் கட்டிச் சோறு கட்டித் தரும் ஐதீகமாக அன்று (தயிர்சாதம், புளியோதரை) - கட்டித் தந்து சுவாமியுடன் அனுப்புவது மரபாக இருந்து வருகின்றது.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். பெயருக்கேற்ற மங்களப் பொலிவு. வலப்பால் விநாயகர், உள்வாயில் கடந்ததும் இடப்பால் வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர் தரிசனம். அடுத்து மகாலட்சுமி சந்நிதி. எதிரில் நடராசசபை உள்ளது. வலமாக வரும் போது விஷ்ணுதுர்க்கை சந்நிதி உள்ளது. பைரவரும், பலவகை விநாயகர்களும், (வெவ்வேறு வகை மூர்த்தங்கள்,) சூரியனும் அமர்ந்த கோலத்திலுள்ள அர்த்தநாரீஸ்வரரும் அடுத்தடுத்துக் காட்சி தருகின்றனர்.

சண்டேஸ்வரர் சந்நிதி தனிக் கோயிலாகவுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக பிரமன், லிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர் மூர்த்தங்கள் உள.

உள் வலம் முடித்து, துவாரபாலகர்களை வணங்கி உட்சென்றால் இடப்பால் நவக்கிரகங்கள் உள்ளன. துவாரபாலகர்களுக்குப் பக்கத்தில் சாதாதாப முனிவர் உருவம் உள்ளது. சப்தஸ்தானலிங்கங்கள், பஞ்ச பூதலிங்கங்கள், சாதாதாபருக்குக் காட்சி தந்த காளத்தி நாதர் சந்நிதி முதலியவைகள் உள்ளன. நவக்கிரகங்களில் சூரியன் இரு மனைவி யருடன் காட்சி தருகின்றார். மூலவர் தரிசனம். மூலவர் சுயம்பு. துவாரகணபதியும் சுப்பிரமணியரும் உள்ளனர். மூலவர் பாணம் சற்று உயரமாகவுள்ளது. சுவாமி சந்நிதிக்குப் பக்கத்தில் பிரமன், சரஸ்வதி சிலாரூபம் உள்ளன. பிரமனின் நான்கு முகங்களும் அழகாகவுள்ளன. பூ, ஜபமாலை ஏந்தி, இருகைகளும் பிரார்த்திக்கும் அமைப்பில், அமர்ந்த திருக்கோலத்தில் உள்ள இவ்வுருவம் (பிரமன்) அழகுடையது. பிரமன் சிரம்கொய்த பின், அவன் வேண்டிட ஐம்முகங்களின் அழகினை சதுர் முகங்களில் (நான்கு முகங்களில்) இறைவன் அருளிச் செய்ய, பிரமன் பெற்றுப் பயனடைந்ததாக வரலாறு,

பிரமன் சிரம் கொய்வதற்காக இறைவன் மேற்கொண்ட வடுகக் கோலம். சுவாமி சந்நிதிக்கு எதிரில், இடப்பால், பிரமன் சந்நிதிக்குச் செல்லும் வாயிலில் சுவரையொட்டிக் கதவோரமாகச் சிறிய சிலா ரூபமாகவுள்ளது. நவக்கிரக சந்நிதியில் தீபமேற்றி வழிபடுவதற்காகத்

Koviloor Digital Library

தீபங்கள் வைக்கும் அமைப்பில் மேடை அமைத்துக்கட்டுப்பட்டுள்ளது. நாடொறும் நான்கு காலபூஜைகள் நடைபெறுகின்றன.

சித்திரை மாதத்தில் ஏழூர் திருவிழா நடைபெறுகின்றது. வைகாசி விசாகத்தில் பதின்மூன்று நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகிறது. கல்வெட்டில், இப்பெருமான் பெயர், 'திருவீரட்டானத்து மகாதேவர்', 'திருக்கண்டியூர் உடைய மகாதேவர் எனக் குறிக்கப் பெறுகின்றது.

''அடியராயினீர் சொல்லுமின்னறி கின்றிலேன் அரன் செய்கையைப்
படியெலாந் தொழு தேத்து கண்டியூர் வீரட்டத்துறை பான்மையான்
முடிவுமாய் முதலாயிவ் வையமுழுதுமாய் அழகாயதோர்
பொடியதார் திருமார்பினிற்புரி நூலும் பூண்டெழு பொற்பதே.''

(சம்பந்தர்)

''வானவர் தானவர் வைகன் மலர் கொணர்ந் திட்டிறைஞ்சித்
தானவர் மால் பிரமன்னறியாத தகைமையினான்
ஆனவனாதி புராணன் அன்றோடியப் பன்றி யெய்த
கானவனைக் கண்டியூர் அண்டவாணர் தொழுகின்றதே''

(அப்பர்)

-காந்தருவத்
தண்டியூர் போற்றுந் தகைகாசிக்கட் செய்து
கண்டியூர் வாழும் களைகண்ணே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பிரமசிரக் கண்டீஸ்வரர் திருக்கோயில்
திருக்கண்டியூர் -அஞ்சல் 613 202
(வழி) திருவையாறு - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

130/13. திருச்சோற்றுத்துறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருவையாற்றிலிருந்து செல்லலாம். பேருந்து வசதிகள் உள்ளன. குடமுருட்டியாற்றின் கரையிலுள்ள தலம். திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தானத்தலங்களுள் ஒன்று. வழிபடும் அடியவர்களின் பசிப் பிணி தீர இறைவன் உணவு வழங்குபவன். எனவே சோற்றுத்துறை என்று பெயர் பெற்றது. (பிறவிப்பிணி தீர இறைவன் வீடு பேறு வழங்குபவன் என்பது பொருள்.) ஊர்ப்பெயருக்கேற்ப சப்தஸ்தான விழாவில் ஏழூர்வலம் வரும் அடியார்களுக்கு இங்கு அன்னம் பாலிப்பு நடைபெறுகிறது. இந்திரன், சூரியன், கௌதமர் ஆகியோர் வழிபட்டது. ஊர்பெரியது.

Koviloor Digital Library

இறைவன் - ஓதனவனேஸ்வரர், தொலையாச் செல்வர், சோற்றுத்துறை நாதர்

இறைவி - அன்னபூரணி, ஒப்பிலாம்பிகை.

தீர்த்தம் - காவிரி

(அடியார்கள் பசிப்பிணியால் வருந்திய போது இறைவன் அக்ஷயபாத்திரம் வழங்கி அனைவரின் பசியையும் போக்கியதால் இறைவன் இறைவிக்குத் தொலையாச் செல்வர், அன்னபூரணி என்ற திருப்பெயர்கள் வழங்கலாயிற்று.)

மூவர் பாடல் பெற்றது.

கோயிலின் வெளிச் சுற்றில் அம்பாள் கோயில் உள்ளது. மூன்று நிலை ராஜகோபுரத்தின் வலப்பால் விநாயகரும் இடப்பால் முருகனும் உள்ளனர். முன் மண்டபத்தில் நடராசசபை உள்ளது. உற்சவ மூர்த் தங்கள் இங்குப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. தலப் பதிகக் கல் வெட்டு உள்ளது. அர்த்த மண்டப நுழைவு வாயிலில் பெரிய ஆறுமுகப் பெருமான் மூர்த்தம் உள்ளது. இத்தலத்திற்குச் சிறப்புதரும் மூர்த்தி இதுவே. தனிக்கோயில். அடுத்து இருபுறமும் கௌதமர் சிலையும் அவர் வழிபட்ட ஐதிகக்காட்சி செதுக்கப்பட்ட சிலையும் உள்ளது.

அம்பாள் கோயில் தனிக்கோயிலாக வலப்பால் கிழக்கு நோக்கி யுள்ளது. திருமணக்கோலம். முதலாம் ஆதித்த சோழன் இக்கோயி லுக்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளான். சோழர் காலக் கல் வெட்டுக்கள் இக்கோயிலுக்கு அம்மன்னர்கள் விளக்கெரிக்கவும், நிவேதனத்திற்காகவும், விழாக்கள் எடுக்கவும் நிலமும் பொன்னும் தந்த செய்திகளைத் தெரிவிக்கின்றன.

''துடிகளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங் காடரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகள் சோற்றுத்துறை சென்றடைவோமே.'' *(சம்பந்தர்)*

''நம்பனே நான்மறைகள் ஆயினானே
நடமாடவல்லானே ஞானக்கூத்தா
கம்பனே கச்சிமா நகருளானே
கடிமதில்கள் மூன்றினையும் பொடியாளய்த
அம்பனே அளவிலாப் பெருமையானே
அடியார்கட்கு ஆரமுதே ஆனேறுஏறும்
செம்பொனே திருச்சோற்றுத் துறையுளானே
திகழொளியே சிவனே உன் அபயம் நானே.'' *(அப்பர்)*

Koviloor Digital Library

''பண்டைவினைகள் பறியநின்ற
அண்டமுதல்வன் அமலன் இடமாம்
இண்டைகொண்டு அன்புஇடையறாத
தொண்டர் பரவுஞ் சோற்றுத் துறையே.''

(சுந்தரர்)

-கொண்டியல்பின்
வேற்றுத் துறையுள் விரவாதவர் புகழுஞ்
சோற்றுத் துறையுட் சுகவளமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சோற்றுத்துறைநாதர் திருக்கோயில்
திருச்சோற்றுத்துறை - அஞ்சல்
(வழி) கண்டியூர் - S.O. 613 202
திருவையாறு வட்டம் - தஞ்சை மாவட்டம்.

131/14. திருவேதிகுடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

தஞ்சாவூர் - திருவையாறு பேருந்துச்சாலையில் உள்ள தலம். திருக்கண்டியூருக்கு மிகவும் அருகில் (1 கி.மீ) உள்ளது.

வேதி - பிரமன். பிரமன் பூசித்த தலமாதலின் வேதிகுடி என்று பெயர் பெற்றது. வேதம் வழிபட்டதாகவும் கூறுவர். 'விழுதிகுடி' என்பது மருவி 'வேதிகுடி' ஆயிற்று என்பர் ஒருசாரார். திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தானங்களுள் இத்தலமும் ஒன்று.

இறைவன் - வேதபுரீசுவரர், வாழைமடுநாதர்
இறைவி - மங்கையர்க்கரசி
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - வேததீர்த்தம். (கோயிலின் எதிரில் உள்ளது)
தலவிநாயகர் - வேத விநாயகர்

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

கிழக்கு நோக்கிய கோயில். சிறிய ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. மகாமண்டபத்தில் வேதவிநாயகர் (தலவிநாயகர்) இறைவன் நான்கு முகங்களாலும் அருளிச்செய்யும் நான்கு வேதங்களையும் செவிசாய்த்துக் கேட்கும் நிலையில்; இடக்காலை உயர வைத்து அற்புதமாகக் காட்சியளிக்கிறார். உற்சவ மூர்த்தங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி. சுவாமி வாழைமடுவில் உற்பத்தி யானதால் 'வாழைமடு நாதர்' என்றும் அழைக்கப்படுகின்றார்.

அண்மையில் உள்ள தலங்கள் திருக்கண்டியூர், திருச்சோற்றுத் துறை முதலியன. முதலாம் ஆதித்த சோழன் காலக்கோவிலான இக்கோயிலின் சுவாமியைக் கல்வெட்டு ''வேதிகுடி மகாதேவர்''. ''பரகேசரி சதுர்வேதி மங்கலத்து மகாதேவர்'' எனக் குறிப்பிடுகின்றது.

''உன்னி இருபோதும் அடிபேணும் அடியார்தம் இடர் ஒல்க அருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல் நிழலிருந்த துணைவன்தன் இடமாம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பி அருமங்கலம் மிக
மின்னியலும் நுண்ணிடை நன்மங்கையர் இயற்றுபதி வேதிகுடியே''.

(சம்பந்தர்)

''மையணிகண்டன் மறைவிரி நாவல் மதித்துகந்த
மெய்யணி நீற்றன் விழுமிய வெண் மழுவாட்படையான்
செய்ய கமலம் மணங்கமழும் திருவேதிகுடி
ஐயனை ஆராவமுதினை நாமடைந்து ஆடுதுமே.''

(அப்பர்)

''-ஆற்றலிலாத்
தீதிக்குடியென்று செப்பப்படார் மருவும்
வேதிக்குடியின்ப வெள்ளமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வேதபுரீசுவரர் திருக்கோயில்
திருவேதிகுடி - கண்டியூர் அஞ்சல் - 613 202
திருவையாறு வட்டம் - தஞ்சை மாவட்டம்

Koviloor Digital Library

132/15. தென்குடித்திட்டை

திட்டை

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

கும்பகோணம் - திருக்கருகாவூர் பாதையில் உள்ளது.

கும்பகோணம் - திருக்கருகாவூர் நகரப் பேருந்து இவ்வூர் வழியாகச் செல்கிறது. தஞ்சை - மயிலாடுதுறை இருப்புப் பாதையில் உள்ள புகைவண்டி நிலையம். காவிரியின் கிளைகளான வெண்ணாறு, வெட்டாறு ஆகியவற்றின் இடையில் - திட்டில் - அமைந்துள்ள ஊராதலின் திட்டை எனப் பெயர் பெற்றது. 'குடித்விபம்' (குடித் திட்டை) எனப்படும் இத்தலம் வசிட்டர், தேவர், பைரவர், முருகன், பிரமன், திருமால், காமதேனு, ஆதிசேஷன் ஆகியோர் வழிபட்ட தலம். சுமாலி என்பவனின் தேர் அழுந்திய இடமாதலின் ரதபுரி-தேரூர் என்றும்; காமதேனு வழிபட்டதால் தேனுபுரி என்றும் ரேணுகை வழிபட்டதால் ரேணுகாபுரி என்றும் பெயர் பெற்றது.

உலகப் பிரளய காலத்தில் இப்பகுதி திட்டாகத் தோன்றிய தென்றும், இறைவன் சுயம்பாக வெளிப்பட்டு அருள்புரிந்தான் என்பதும் வரலாறு. இதனால் 'குடித்திட்டை' எனப்பெயர் பெற்றது. நல்ல கட்டமைந்த கற்கோயில். எல்லாச் சந்நிதிகளும் மழமழப்பாக்கப் பட்ட கருங்கற்களாலானவை.

Koviloor Digital Library

இறைவன் - வசிஷ்டேஸ்வரர், பசுபதீஸ்வரர், பசுபதிநாதர், தேரூர்நாதர், தேனுபுரீஸ்வரர், ஸ்வயம்பூதேஸ்வரர், அனந்தேஸ்வரர், நாகேஸ்வரர், ரதபுரீஸ்வரர்

இறைவி - உலகநாயகி, மங்களாம்பிகை, மங்களேஸ்வரி, சுகந்தகுந்தளாம்பிகை

தலமரம் - சண்பகம். தற்போது இல்லை

தீர்த்தம் - சூல தீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது. இதற்குச் சக்கர தீர்த்தம் என்றும் பெயர். இது பாவம் போக்கவல்ல சிறப்புடையது. மிகப்பெரிய குளம் - நல்ல படித்துறைகளுடன் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்ற பதி.

சாலையோரத்தில் கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. சுற்று மதில் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் மட்டுமே. துவாரகணபதியும் மறுபுறம் தண்டபாணியும் தரிசனம். உள் நுழைந்தால் முன்மண்டபம்.

மண்டபத்தில் ஒரு தூணில் வலப்பால் நால்வர் வடிவங்களும் மறுபுறத் தூணில் ரிஷபாரூடர் வடிவமும் செதுக்கப்பட்டுள்ளது. எதிரில் இத்திருக்கோயிலை 1926ல் கற்கோயிலாகக் கட்டிய பலவான் குடி கிராமம் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரின் உருவம் அவர் மனைவி யுடன், கைகுவித்து வணங்கும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளது.

கொடிமரம் கருங்கல்லால் ஆனது. முன்னால் 'திருநீற்றுக்கோயில்' அமைக்கப்பட்டுள்ளது. இத்துவாரத்துள்ளிருந்து திருநீறு எடுத்து அணிந்து கொள்ளலாம். உயரத்தில் பலிபீடம் நந்தி உள்ளது. வலப்பால் அம்பாள் (மங்களேஸ்வரி) சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. சந்நிதிக்கு முன்னால் செப்பாலான நந்தி பலிபீடம் உள்ளன. அம்பாள் சந்நிதிக்கு வெளியே எதிரில் மண்டபத்தின் மேற்புறத்தில் பன்னிரண்டு ராசிகளுக்குரிய உருவங்கள் உரிய கட்டமைப்பில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

குருபகவான் சந்நிதி தனிக் கோயிலாகவுள்ளது. அடுத்துத் துவார விநாயகரும் மறுபுறம் கந்தக் கடவுளும் காட்சி தருகின்றனர். வெளிப் பிராகாரத்தில் உள்ள படிகள் வழியாக மேலேறிச் சென்று விமானத்தைத் தரிசிக்கலாம். எல்லா விமானங்களும் கருங்கற்களால் ஆனவையே. உள் வாயில் நுழைந்து வரும்போது சூரியன், விநாயகர் சந்நிதிகள் உள்ளன. அடுத்து, சிறப்பு பெற்ற சிறுவாச்சூர் காளிதேவியின் மகாமேருவும்

Koviloor Digital Library

சிவலிங்கமும் மரப்பீடத்தில் வைக்கப்பட்டுள்ளன. அடுத்து, பால சுப்பிரமணியர், கஜலட்சுமி, நடராசர் சந்நிதிகள் உள. நவக்கிரக சந்நிதி உள்ளது.

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியது. சிவலிங்கத் திருமேனி சிறியதாக வுள்ளது. சதுர ஆவுடையார். முன்னால் செப்பினாலான நந்தி பலிபீடம் உள்ளன. மூலத்திருமேனி சுயம்பு. திருமேனியின் மீது வரி வரியாகக் கோடுகள் சுற்றிலும் உள்ளன. நான்கு பட்டையாக உள்ளது. பிரமரந்திரத்திலிருந்து சிவலிங்கத் திருமேனியின் மீது நீர் சொட்டுவது இத்தலத்தில் வியப்புக்குரிய ஒன்றாகும். 25 மணித்துளிகளுக்கு ஒருமுறை ஒரு சொட்டு நீர் சுவாமிமீது இன்றும் சொட்டுகிறது.

தொன்றுதொட்டு, சுவாமியின் விமானத்துள் சந்திரகாந்தக்கல் இருந்து வருவதாகவும், 1922ல் இவ்விமானத்தைப் பழுதுபார்த்துக் கட்டும்போது அக்கல் அப்படியே வைத்துக் கட்டப்பட்டுள்ளதாகவும், அதுவே சந்திரனின் ஈரத்தை வாங்கித் தேக்கி வைத்துச் சொட்டுவ தாகவும் சொல்லப்படுகிறது.

கோஷ்டமூர்த்தங்களாக நர்த்தன விநாயகரும், தட்சிணா மூர்த்தியும், இலிங்கோற்பவரும், பிரம்மாவும், துர்க்கையும் உள்ளனர். சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது.

சித்திரையில் பெருவிழா நடைபெறுகிறது. இத்தலபுராணம் சமஸ்கிருதத்தில் "தக்ஷிண குடித்வீப மஹாத்மியம்" என்ற பெயரில் உள்ளது. திரு. வி. பத்மநாபன் என்பவர் கிரந்தத்தில் உள்ள "சுயம்பூதேஸ்வரர் புராணத்தை" - இத்தலபுராணத்தை தமிழாக்கம் செய்துள்ளதாகத் தெரிகிறது.

"கானலைக்கும் மவன் கண் ணிடந்தப்பநீள்
வானலைக்குந் தவத்தேவு வைத்தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக்கும் வயல்தென் குடித் திட்டையே."

(சம்பந்தர்)

- கோதியலும்
வன்குடித்திட்டை மருவார் மருவு திருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே. *(அருட்பா)*

"தென்குலத் திட்டையினில் பேருல நாயகிக்குப்
பங்கு கொடுத்த பசுபதியே"

(உமாபதிசிவம்)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்
திட்டை - பசுபதிகோயில் அஞ்சல் - 614 206
தஞ்சை மாவட்டம்.

133/16. திருப்புள்ளமங்கை

பசுபதி கோயில்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் - தஞ்சாவூர் இருப்புப் பாதையில் பசுபதிகோயில் புகைவண்டி நிலையம். நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஊர் உள்ளது. கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் நெடுஞ் சாலையில் ஐயம்பேட்டையைத் தாண்டி, மாதாகோயிலிடத்தில் வலப்புறமாகப் பிரியும் - கண்டியூர் செல்லும் பேருந்துச் சாலையில் சென்றால் பசுபதி கோயிலை அடையலாம். தஞ்சையிலிருந்து பசுபதி கோயிலுக்குப் பேருந்து வசதியுண்டு. திருவையாறு - கும்பகோணம் பேருந்து இவ்வூர் வழியாகச் செல்கின்றது. ஊர்ப்பெயர் பண்டை நாளில் 'புள்ள மங்கை' என்றும், கோயிற் பெயர் 'ஆலந்துறை' என்றும் வழங்கப்பெற்றது.

''புள்ள மங்கை ஆதியவர் கோயில் திருவாலந்துறை தொழுமின்'' என்னும் பதிகத் தொடர் இக்கருத்தைத் தெரிவிக்கின்றது. கல்வெட்டுக் களில் 'ஆலந்துறை மகாதேவர் கோயில்' என்று இக்கோயில் குறிக்கப் படுகின்றது. இன்று ஊர்ப் பெயர் மாறி 'பசுபதி கோயில்' என்று வழங் கப்படுகிறது. 'புள்ளமங்கை' என்றதற்கேற்ப இப்போதும் கோபுரத்தில் கழுகுகள் இருக்கின்றன. திருச்சக்கரப் பள்ளியின் சப்தஸ்தானத் தலங்களுள் இதுவும் ஒன்று.

குடமுருட்டி ஆற்றின் கரையில் திருக்கோயில் உள்ளது. ஆல மரத்தைத் தலமரமாகக் கொண்டு விளங்கிய நீர்த்துறைத் தலம் ஆதலின் 'ஆலந்துறை' என்றுபெயர் பெற்றிருத்தல் வேண்டுமென்பர்.

அமுதத்தைக் கடைந்தபோது தோன்றிய விஷத்தை இறைவன் அமுது செய்த இடம் இஃது என்பது தலபுராணச் செய்தி. பசுபதி கோயில் - பெரிய ஊர். சோழர் காலச் சிற்பச் சிறப்புக்களுடைய கோயில்.

Koviloor Digital Library

இறைவன் - பிரமபுரீஸ்வரர், ஆலந்துறைநாதர், பசுபதீஸ்வரர், பசுபதிநாதர்

இறைவி - அல்லியங்கோதை, சௌந்தரநாயகி

திருக்குளம் (தீர்த்தம்) எதிரில் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

மூன்று நிலைகளைக் கொண்ட சிறிய - பழைய ராஜகோபுரம். கிழக்கு நோக்கியது. உள்சென்றால் பெரிய முன்மண்டபம். இம் மண்டபத்தின் வடபால் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற நிலை.

பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள், அகழி அமைப்புடைய கர்ப்பக்கிருகம். கீழே கருங்கல் கட்டமைப்பும் மேலே சுதை அமைப்பும் உடையது. இராமாயண வரலாற்றுச் சிற்பங்கள் அழகுறச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

கோஷ்ட மூர்த்தங்களாக; விநாயகர், தட்சிணாமூர்த்தி, நேர்பின் புறத்தில் திருமால் பிரமன் உருவங்களுடன் இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் உளர்.

இங்குள்ள துர்க்கை - மகிஷாசுரமர்த்தினி (வடக்குப் பிராகாரத்தில்) உருவம் தனிச் சிறப்புடையதாகத் திகழ்கின்றது. கருங்கல் குடை நிழலில், எருமைத் தலைமீது நின்று, சங்கு சக்கரம், மற்றும் வாள், வில், கதை, சூலம், கேடயம், அங்குசம், முதலிய ஆயுதங்களையும் ஏந்தி இருபுறமும் கலைமானும் சிங்கமும் இருக்க; இரு வீரர்கள் கத்தியால் தலையை அரிந்து தருவதுபோலவும், தொடையைக் கிழித்து இரத்த பலி தருவது போலவும் காட்சிதர; திரிபங்கியாய் ஒரு கையில் வில்லேந்தி, மற்றது அபயகரமாக மோதிர விரல் மடக்கிய முத்திரையுடன் பின்புறம் அம்பறாத்தூணி விளங்க, துர்க்காம்பிகை விளங்கும் கோலம் - இக்கோலம் இக்கோயிலுக்கே தனிச் சிறப்பைத் தருவதாகும்.

திருநாகேச்சுரம், பட்டீச்சுரம், திருப்புள்ளமங்கை ஆகிய இம் மூன்று ஊர்களிலும் உள்ள துர்க்கைகள் ஒரே சிற்பியால் செய்யப் பட்டவை என்றும்; இம்மூன்றுமே மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும் சொல்லப்படுகிறது.

சண்டேஸ்வரர், நவக்கிரக சந்நிதிகள் உள. நவக்கிரகங்களுக்கு நடுவில் நந்தி உள்ளார். நால்வர் சந்நிதி உள்ளது. மூலவர் - பெரிய உருண்டை வடிவமான திருவுருவம். அர்த்த மண்டபத் தூண்கள் சோழர்கால வேலைப்பாடு உடையவை. முதற் பராந்தகன் காலத்தில்

Koviloor Digital Library

(கி.பி. 907-955) கருவறையும், அர்த்த மண்டபமும் திருப்பணி செய்யப்பெற்றுள்ளன.

"பொந்தின் னிடைத் தேன் ஊறிய பொழில்சூழ் புளமங்கை
அந்தண் புனல்வரு காவிரி ஆலந்துறையானைக்
கந்தம்மலி கமழ் காழியுள் கலைஞான சம்பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி ஆடத் தவம் ஆமே."

(சம்பந்தர்)

(இப்பாட்டில் 'பொந்தின்னிடைத் தேன்ஊறிய' என்று பாடியிருப்பதற்கேற்ப, கோயில் சாளரத்தில் தேனடை இருக்கின்றது).

- நன்குடைய
உள்ளமங்கை மார் மேலுறுத்தாதவர் புகழும்
புள்ள மங்கை வாழ் பரம போகமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பசுபதீஸ்வரர் திருக்கோயில்
பசுபதி கோயில் -அஞ்சல் - 614 206
தஞ்சை மாவட்டம்.

134/17. சக்கரப்பள்ளி

ஐயம்பேட்டை

சோழநாட்டு (தென்கரை)த்தலம்

மக்கள் வழக்கில் இவ்வூர் ஐயம்பேட்டை என்று வழங்குகிறது. இப்பெயரில் பல ஊர்கள் இருப்பதால் வழக்கில் இவ்வூரைத் தஞ்சாவூர் ஐயம்பேட்டை என்று கூறுகின்றனர்.

கும்பகோணம் - தஞ்சாவூர் சாலையில் ஐயம்பேட்டை உள்ளது. நெடுஞ்சாலையின் ஓரத்திலேயே சற்று உள்ளடங்கி, கோயில் உள்ளது.

சாலையில் திருக்கோயிலின் பெயர்ப் பலகை உள்ளது. ஊர்ப் பெயர் - ஐயம்பேட்டை. கோயிலிருக்கும் பகுதி சக்கரப்பள்ளி என்று வழங்குகிறது. கும்பகோணம் - தஞ்சாவூர் புகைவண்டிப் பாதையில்

Koviloor Digital Library

ஐயம்பேட்டை புகைவண்டி நிலையம் உள்ளது. இக்கோயில் சுவாமி மலை தேவஸ்தானத்தோடு இணைந்ததாகும். திருமால் வழிபட்டுச் சக்கராயுதம் பெற்ற தலம். சக்கரவாளப் பறவை வழிபட்ட தலம் என்பாருமளர். ''வண்சக்கிரம் மால் உறைப்பால் அடி போற்றக் கொடுத்த பள்ளி'' என்பது இத் தலபுராண வரலாற்றை உறுதிப்படுத்தும்.

இறைவன் - சக்கரவாகேஸ்வரர்

இறைவி - தேவநாயகி.

சயந்தனும் தேவர்களும் வழிபட்ட தலம்.

சம்பந்தர் பாடல் பெற்றது. இன்று கோயிலைச் சுற்றி இஸ்லாமியர்களின் குடியிருப்புக்கள் மிகுதியாகவுள்ளன. திருக் குளத்தை அடுத்து கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கொடி மரமில்லை. உள்ளே நுழைந்ததும் முதலில் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. தெற்கு நோக்கியது. நின்றநிலை. அதைத் தாண்டி உள்ளே சென்றால் மூலவர் வாயில் மண்டபத்தில் முகப்பில் மேலே ரிஷபாரூடர். விநாயகர், வேலவர் உருவங்கள் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை கீழ்ப்புறம் கருங்கல்லாலும் மேற்புறம், விமானம் சுதையாலும் ஆக்கப்பட்டவை. விமானத்தில் அதிக சிற்பங்களில்லை.

கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி. இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உளர். பிராகார வலம் வரும்போது விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. மகாமண்டபத்தில் சூரியன், சந்திரன், அழகான பைரவர், நால்வர் ஆகியோர் காட்சி தருகின்றனர். அர்த்த மண்டபத்தூண்கள் அழகு உடையவை. மூலவர் - சிவலிங்கத் திருமேனி. கிழக்கு நோக்கிய சந்நிதி. உயர்ந்த தோற்றம்.

கல்வெட்டுக்களில், இவ்வூர், ''குலோத்துங்க சோழவள நாட்டு, விளநாட்டு, இராசேந்திர சோழ சதுர்வேதிமங்கலம்'' என்று குறிக்கப் பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் 12 ஆவது ஆண்டுக் கல்வெட்டு, இவ்வூர்ச்சபைக்குரிய சில விதிகளைக் கூறுகின்றது. நாற்பது வயதுக்கும் மேற்பட்டவரே ஊர்ச்சபை உறுப்பினராகலாம் என்றும், அவர்களும் பத்து ஆண்டுகளுக்குள் உறுப்பினர்க்கு நிற்காத வராக இருக்கவேண்டுமென்றும் ஊர்ச்சபை விதிகள் கூறப்பட்டுள்ளன.

''படையினார் வெண்மழுப்பாய் புலித்தோல் அரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே,'' *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

- கள்ளமிலஞ்
சக்கரப்பள்ளி தனிற்றாம் பயின்ற மைந்தர்கள்சூழ்
சக்கரப்பள்ளி தனிற்றண்ணளியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சக்ரவாகேஸ்வரர் திருக்கோயில்
ஐயம்பேட்டை -அஞ்சல் 614 201
தஞ்சை மாவட்டம்.

135/18. திருக்கருகாவூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் - ஆவூர் - மிலட்டூர் வழியாகத் - தஞ்சாவூர் செல்லும் சாலையில் உள்ள தலம். தஞ்சை பழைய பேருந்து நிலையத்திலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் நகரப் பேருந்து

Koviloor Digital Library

உள்ளது. தஞ்சையிலிருந்து 20 கி.மீ. குடந்தையிலிருந்து 20 கி.மீ. காவிரியில் கிளையாகிய வெட்டாற்றின் கரையிலுள்ளது. ஊர்த்துவ மகரிஷியின் சாபத்தால் நித்துவரின் மனைவி வேதிகைக்கு ஏற்பட்ட கருச்சிதைவை இறைவன் மருத்துவம் பார்த்து அவள் கருவைக் காத்ததால் - கருகாவூர் என்று பெயர் பெற்றது.

வேறுபெயர்கள்:- (1) முல்லைவனம் (2) மாதவிவனம் (3) கர்ப்பபுரி என்பன. கருச்சிதைவுற்று மகப்பேறின்றி இருப்போர் இத்தலத்திற்கு வந்து வழிபட்டு மகப்பேறு அடைகின்றனர். காவிரியின் தென்கரையிலுள்ள பஞ்ச ஆரண்யங்களுள் இதுவுமொன்று. அவை:-

(1) கருகாவூர் - முல்லைவனம்

(2) அவளிவணல்லூர் - பாதிரிவனம்

(3) அரதைப்பெரும்பாழி - வன்னிவனம்

(4) இரும்பூளை - பூளைவனம்

(5) கொள்ளம்புதூர் - வில்வவனம்.

இவ்வைந்து தலங்களையும் முறையே வைகறை, காலை, நண் பகல், மாலை, அர்த்த சாமம் ஆகிய காலங்களில் வழிபடும் பழக்கமும் வழக்கில் உள்ளது. ஸ்காந்தத்தில் க்ஷேத்திர வைபவக் காண்டத்தில் சனற்குமார சங்கிதையில் நாரதருக்கு சனற்குமாரர் கூறுவதாகவுள்ள பகுதியில் இத் தலச்சிறப்பு இடம் பெற்றுள்ளது. பிரமன், கௌதமர் சந்திரன் வழிபட்டது.

இறைவன் - கர்ப்பபுரீஸ்வரர், முல்லைவனநாதர், மாதவிவனேஸ்வரர்

இறைவி - கர்ப்பரக்ஷாம்பிகை, கருக்காத்தநாயகி,

தலமரம் - முல்லை

தீர்த்தம் - க்ஷீரகுண்டம், பிரமதீர்த்தம் முதலியன.

தலவிநாயகர் - கற்பகவிநாயகர்

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

இத்தலத்தை வழிபடுவோர்க்குக் குறைப்பிரசவம் ஏற்படுவதில்லை. கர்ப்ப வேதனையும் மிகுதியாவதில்லை. கருவுடன் மரணமடைவோரும் இலர். கருவைத் தருவதும், காப்பதுமாகிய அருள் திறன் பொருந்தி அம்பாள் விளங்குகிறாள். ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சி தருகிறது. எதிரில் 'பாற்குளம்' - க்ஷீரகுண்டம் உள்ளது.

Koviloor Digital Library

வலப்பால் சர்வசித்தி விநாயகர் தரிசனம். வெளிப்பிராகாரம் நந்தவனப் பகுதி.

உள்சுற்றில் விநாயகர், இரட்டைநந்தி இரு பலிபீடங்கள், அறுபத்துமூவர், ச்ந்தானாசாரியார்கள், விநாயகர், முருகன், கஜலட்சுமி, தலமரம், ரதவடிவிலான சபாமண்டபமும் அதில் நித்துவ முனிவர் பூசித்த லிங்கமும் ஆகிய சந்நிதிகள் உள்ளன. மகா மண்டபத்தில் நவக்கிரகம், நடராச சபைகள் உள்ளன. சுவாமி - சுயம்பு. மேற்புறம் பிருதிவிபாகம். புற்றுமண்ணாலாகியது. புனுகு சட்டம் மட்டும் சார்த்தப்படுகிறது. அபிஷேகம் ஆவுடையாருக்கே. சுவாமி திருமேனியில் முல்லைக்கொடி சுற்றிய வடு உள்ளது. சுவாமிக்கு முல்லைமலர் (பூக்குங் காலத்தில்) சார்த்தப்படுகிறது. நல்ல உயரமான திருமேனி நிறைவான தரிசனம்.

இங்குள்ள நந்தி - உளிபடாத விடங்கமூர்த்தம் என்பர். கோயிலில் சுவாமி சந்நிதி, அதன் இடப்பால் அம்பால் சந்நிதி - மத்தியில் முருகன் சந்நிதி என அமைந்து இது சோமாஸ்கந்த நிலையை நமக்கு நினைவூட்டுகிறது. அம்பாள் சந்நிதிக்குச் செல்லும் வழியில் கௌத மேசர் கோயிலுள்ளது. இத்தலத்திற்கு (1) தலபுராணமும் (2) பதிற்றுப்பத்தந்தாதியும் (3) இரட்டைமணிமாலையும் (4) நான்மணி மாலையும் உள்ளன. கோயிலில் திருமணங்கள், கருவளர்சிறப்பு முதலிய நற் சடங்குகள் நடைபெறுகின்றன. சுத்தமான நெய்யால் தீபமிட்டு, நெய்யால் அம்பாள் திருவடியில் அபிஷேகம் செய்து அந் நெய்யை யுண்டால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இத்தலத்தில் உள்ளது. இதற்கெனக் கோயிலில், அர்ச்சனை நெய்யைத் தபாலில் பெறவும் ஏற்பாடுள்ளது. கருவுற்ற பெண்களுக்குச் சுகப் பிரசவம் உண்டாகும் பொருட்டு, ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகையின் திருவடியில் வைத்து, மந்திரித்து விளக்கெண்ணெய் தரப்படுகிறது. பிரசவ வலியேற்படும் காலத்தில் இதை வயிற்றில் தடவி வர, சுகப்பிரசவ மாகும். இதையும் அஞ்சல் மூலம் பெறலாம்.

குழந்தையில்லாத பெண்கள் நேரில் வந்து, அம்பாள் சந்நிதிப் படியை சிறிது நெய்யால் மெழுகி, கோலமிட்டு, அர்ச்சனை செய்தால், விரைவில் குழந்தைப் பேறு கிடைக்கும். கோயிலில் துலாபார பிரார்த் தனையுள்ளது.

முதலாம் ராசராசன் கல்வெட்டில் ''நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துத் திருக்கருகாவூர்'' என்று தலம் குறிக்கப்படுகிறது. இவ்வூர்க்கு அருகில் ஓடிய உட்பலாறு - உப்பலாறு என்று வழங்கியது. தற்போது வெட்டாறு ஓடுகிறது.

Koviloor Digital Library

''மாசில் தொண்டர் மலர் கொண்டு வணங்கிட
ஆசையாரவரு ணல்கிய செல்வத்தர்
காய்சினத்த விடையார் கருகாவூர்எம்
ஈசர்வண்ணம் எரியும் எரிவண்ணமே.''

(சம்பந்தர்)

''மூலனா(ம்) மூர்த்தியா(ம்) முன்னே தானா(ம்)
மூவாத மேனி முக்கண்ணினானாம்
சீலனாஞ் சேர்ந்தார் இடர்கள் தீர்க்கும்
செல்வனாம் செஞ்சுடர்க் கோர் சோதிதானாம்
மாலனா(ம்) மங்கையோர் பங்கனாகு
மன்றாடியாம் வானோர் தங்கட்கெல்லாம்
காலனாங் காலனைக் காய்ந்தானாகுங்
கண்ணாங் கருகாவூர் எந்தைதானே.''

(அப்பர்)

-மிக்க
அருகாவூர் சூழ்ந்தழகு பெறவோங்குங்
கருகாவூர் இன்பக் கதியே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில்
(முல்லைவன நாதர் கோயில்)
திருக்கருகாவூர் அஞ்சல் - 614 302
தஞ்சை RMS - பாபநாசம் வட்டம் - தஞ்சை மாவட்டம்
தொலைபேசி: 04374-73423.

136/19. திருப்பாலைத்துறை

சோழநாட்டு (தென்கரை)த்தலம்

கும்பகோணம் - தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சென்றால் இத்தலத்தை அடையலாம் - கோயில் வாயிலில் இறங்கலாம். குடமுருட்டியாற்றின் கரையில் உள்ளது. கும்பகோணம் - தஞ்சை இருப்புப் பாதையில் பாபநாசம் நிலையத்தில் இறங்கி 1 கி.மீ. வடகிழக்கில் சென்று இத்தலத்தை அடையலாம். பாபநாசத்திலுள்ள நூற்றெட்டுச் சிவலிங்கக் கோயிலோடு இணைக்கப்பெற்ற கோயில்.

Koviloor Digital Library

திருமால், பிரமன், திசைப்பாலகர்கள் வசிட்டர், தேவர்கள் - வழி பட்ட தலம். பாண்டவர்களின் வனவாசகாலத்தில், தௌமிய முனிவரின் ஆலோசனைப்படி அருச்சுனன் இத்தலத்திற்கு வந்து, வழிபட்டு, வில்வித்தையின் நுட்பங்களை உணர்ந்து, பாதாள உலகம் சென்று உலூபியை மணந்து வந்தான் என்று சொல்லப் படுகின்றது.

தாருகாவனத்து முனிவர்கள், இறைவனைப் புறக்கணித்து அவரையே அழிக்க எண்ணி, தீயவேள்வி செய்து, புலியை வர வழைத்து, அதை இறைவன் மீது ஏவ, இறைவனும் அப்புலியின் தோலை உரித்து உடுத்திக் கொண்ட செயலைச் செய்த தலம். பாலை வனம், பிரம்மவனம், அரசவனம், புன்னாகவனம் எனப்பல பெயர்கள் இத்தலத்திற்குண்டு. திருநல்லூரைச் சேர்ந்த சப்தஸ்தானங்களில் இத்தலமும் ஒன்றாகச் சொல்லப்படுகின்றது.

வேதங்களின் நடுவணதாகிய யஜுர்வேதத்தின் நடுவின் பஞ்சாக்ஷரம் விளங்குவது போல, திருமுறைகளில் தேவாரத்துள் நடுவணதாகிய அப்பர் தேவாரத்துள், குறுந்தொகையில், நடுப்பதிக மாகிய 51 ஆவது பதிகம் இத்தலத்துப் பதிகமாகும். இப்பதிகத்தின் நடுப்பாடலாக உள்ள ''விண்ணினார் பணிந்து'' என்று தொடங்கும் பாடலின் நடுவில் சூட்சும பஞ்சாக்ஷரம் விளங்குகிறது. இச்சிறப்பினை யுடைய (பதிகத்திற்கு) உரிய தலம் இதுவேயாகும்.

''விண்ணினார் பணிந்து ஏத்த வியப்புறும்
மண்ணினார் மறவாது சிவாய என்று
எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்
பண்ணினார் அவர் பாலைத் துறையரே.''

இறைவன் - பாலைவனேஸ்வரர், பாலைவனநாதர்,

இறைவி - தவளவெண்ணகையாள், (மக்கள் தவளாம்பிகை தவளாம்பாள் என வழங்குகின்றனர்).

தலமரம் - பாலை, இப்போது இல்லை.

தீர்த்தம் - வசிஷ்ட தீர்த்தம், இந்திர தீர்த்தம், எம தீர்த்தம் முதலியன.

அப்பர் பாடல் பெற்ற தலம்.

ஐந்து நிலைகளைக் கொண்ட ராஜகோபுரம் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறது. கோபுரவாயில் முகப்புத் தூண்களில் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறுகள் சிற்பங்களாக உள்ளன. ராஜகோபுரத்தில் சிற்பங்களில்லை. கீழ்ப்பகுதி கருங்கல்லிலும், மேற்பகுதி செங்கற்

Koviloor Digital Library

கட்டமைப்பிலும் காணப்படுகிறது. உள் நுழைந்தால் கொடிமரமில்லை. வலப்பால் ஒரு பெரிய நெற்களஞ்சியம் - செங்கல்லால் கட்டப்பட்டது காட்சிதருகிறது. வட்ட வடிவில் கூம்பு முனையுடன் கட்டப்பட்டுள்ள இக்களஞ்சியம் 12 ஆயிரம் கலம் கொள்ளளவுடையது. இவ்வளவு அதிகமான நெல் வருவாயைக் கொண்டதாக இக்கோயில் விளங்கிய தென்பது நமக்குத் தெரிகின்றது. இன்று பயன்படுத்தப்படாமல் உள்ளது.

உள்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. வலமாக வரலாம் - விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், வசிஷ்டர் பூசித்த சிவலிங்கம், மகாலட்சுமி, பார்த்திபன், மலையத்துவசன் ஆகியோர் வழிபட்ட இலிங்கங்கள் ஆகியவை உள்ளன. அறுபத்துமூவர் மூலவத் திருமேனிகள் உள்ளன. நடராசசபை உள்ளது. காலபைரவர், சூரியன் சந்நிதிகளும் உள. மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியது. அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாக, சுவாமிக்கு வலப்பால் உள்ளது. அதுவும் கிழக்கு நோக்கிய சந்நிதியே. நின்ற கோலம். பழைமையான கட்டமைப்பு உடையது.

சுவாமி அம்பாள் இருவரும் கல்யாணகோலத்தில் விளங்கு கின்றனர். கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், ஊர்த்துவ தாண்டவர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேஸ் வரர் சந்நிதி உள்ளது. நான்குகால பூஜைகள் முறையாக நடைபெறு கின்றன.

இக்கோயிலில் முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் குலோத் துங்கன் ஆகியோருடைய காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் இவ்வூர், ''நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டைச் சேர்ந்த ஊர்'' என்றெழுதப்பட்டுள்ளது. சுவாமி, 'திருப் பாலைத்துறை மகாதேவர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். முதற் குலோத்துங்கன் காலத்தில் இக்கோயில் கருங்கல் திருப்பணியாக ஆக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர் கருத்து.

இத்தலத்திற்கு அருகில் உள்ள 'பாவநாசத்தில்' இருக்கும் 'நூற்றெட்டுச் சிவலிங்கக் கோயில்' தரிசிக்கத் தக்கது. இது 'கீழை ராமேஸ்வரம்' எனப்படுவது. கர, தூஷணர்களைக் கொன்ற பாவம் தீர, இராமர் இத்தலத்தில் 108 சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுப் பாவந்தீரப் பெற்றார் என்பது வரலாறு. இதனாலேயே இத்தலம் பாவநாசம் எனப் பெயர் பெற்றது. தனிமண்டபத்தில்

Koviloor Digital Library

ஆவுடையாரோடு சிவலிங்கங்கள் வரிசையாக அமைந்துள்ளன. திரு நல்லூர், திருக்கருகாவூர், திருச்சக்கரப்பள்ளி முதலிய தலங்கள் அண்மையிலுள்ளன.

''உரத்தினால் அரக்கன் உயர் மாமலை
நெருக்கினானை நெரித்தவன் பாடலும்
இரக்கமா அருள் செய்த பாலைத்துறை
கரத்தினால் தொழுவார் வினை ஓயுமே''.

(அப்பர்)

''அந்தரத்து இழிந்து வந்து அழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந்து அருளியும்''

(திருவாசகம் - கீர்த். திரு)

- முருகார்ந்த
சோலைத்துறையிற் சுகஞ்சிவ நூல் வாசிக்கும்
பாலைத்துறையிற் பரிமளமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பாலைவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பாலைத்துறை
பாபநாசம் அஞ்சல் & வட்டம்
தஞ்சை மாவட்டம் - 614 205.

137/20. திருநல்லூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

தஞ்சாவூர் - கும்பகோணம் சாலையில் சென்று; பிரிகின்ற வலங்கைமான் சாலையில் 2 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம். கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில். திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருவடி சூட்டியதும், அமர்நீதி நாயனாரை ஆட்கொண்டதுமாகிய அற்புதத் தலம்.

ஒருசமயம் ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் தமக்குள் யார் வலியவர் என்பதில் போட்டி எழுந்தது. ஆதிசேடன் கயிலையைத் தன்

Koviloor Digital Library

ஆயிரம் மகுடங்களாலும் இறுகப்பற்றிக் கொள்ளவும், வாயுதேவன் சண்டமாருதமாக மலையை அசைக்க முற்பட்டு வீசினார். தேவர்கள் அஞ்சினர். ஆதிசேடன் தன்பிடியைச் சிறிது தளர்த்த; தக்கசமயமென் றெண்ணி, வாயு இருசிகரங்களைப் பெயர்த்துக் கொண்டு வந்து தென்னாட்டில் திருநல்லூரிலும், ஆவூரிலும் விடுத்தனன். அம்மலைச் சிகரமே நல்லூரில் இறைவன் எழுந்தருளியுள்ள மலையாகும். இச்சிகரத் திற்கு - மலைக்குச் 'சுந்தரகிரி' என்ற பெயர்; தென் கயிலாயம் என்று இத்தலமும் வழங்கப்படுகின்றது.

திருச்சித்திமுற்றத்துச் சிவக்கொழுந்தீசரை வழிபட்டு, 'கோவாய் முடுகி' என்ற பதிகம் பாடி, தனக்குத் திருவடி தீட்சை செய்யுமாறு அப்பர் வேண்ட, அவரை இறைவன் திருநல்லூருக்கு வருமாறு அருளி, ''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம், என்று அவர்தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டி''யருளினார். இச் செய்தியை நம்பியாண்டார் நம்பிகளும் தாம் அருளியுள்ள திருத்தொண்டர் திருவந்தாதியுள் ''நற்றவன் நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் பெற்றவன்'' எனக் குறித்துள்ளார். இதுபற்றியே இன்றும் இத்தலத்தில் சடாரி போன்று திருவடி சூட்டப்படுகின்றது.

அமர்நீதி நாயனார் துலையேறியபோது இறைவன் அவருக்குக் காட்சி வழங்கி ஆட்கொண்டருளிய (முத்தியருளிய) அருட்சிறப்பும் உடையது இத்தலம். மிகப்பழமையான, அருமையான, சிறப்புமிக்க திருக்கோயில்.

இறைவன் - பஞ்சவர்ணேஸ்வரர், கல்யாண சுந்தரேஸ்வரர், பெரியாண்டேஸ்வரர்.

இறைவி - கிரிசுந்தரி, பர்வதசுந்தரி, கல்யாணசுந்தரி.

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - சப்தசாகர தீர்த்தம். கோயிலின் முன்னால் உள்ளது. படித்துறைகளையுடையது, குளக்கரையில் ஒருபுறம் அமர்நீதி நாயனார் மடாலயம் உள்ளது. சற்றுகிலமாகவுள்ளது. அக்குடும்ப வழிவந்தோர் அமர்நீதி நாயனார் விழாவை இம்மடத்தில் ஆண்டு தோறும் நடத்துகிறார்கள்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ஐந்து நிலைகளையுடைய அழகான ராஜகோபுரம் நம்மை அழைக்கின்றது. உள்ளே விசாலமான இடம். கவசமிட்ட கொடிமரம் உள்ளது. முன்பு விநாயகர் உள்ளார். அடுத்து வடபால் வசந்த

Koviloor Digital Library

மண்டபமும், தென்பால் அமர்நீதியார் துலையேறிய துலா மண்டபமும் உள்ளன. இங்குள்ள அஷ்டபுஜ காளி பிரசித்தி பெற்றது.

உள்கோபுரம் மூன்று நிலைகளையுடையது - கீழே கல்கட்டிடம் மேலே சுதை வேலைப்பாடுடையது. உள்ளே நுழைந்தால் நேரே காசி விநாயகர் தரிசனம். வலம்வர, பாணலிங்கம், விசுவநாதர் சந்நிதிகள்.

சோமாஸ்கந்தர் மண்டபமும், முருகன் சந்நிதியும் உள்ளன. வடபால் அமர்நீதி நாயனார், மனைவி, குழந்தை, குந்திதேவி முதலியோரின் உருவங்கள் உள்ளன. மாடக்கோயிலில் கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், அடுத்து யோகத்தின் மேன்மையை விளக்கும் விநாயகரின் மற்றொரு உருவம், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. அழகான நடராசசபை.

மூலவர் - பஞ்சவர்ணேஸ்வரர் (கட்டு) மலைமீது உள்ளார். இங்குள்ள இறைவனின் சிவலிங்கத் திருமேனி வேறு எங்கும் காண முடியாத அற்புதமான அமைப்பை உடையது. ஒருநாளில்; ஆறு நாழிகைக்கு ஒருமுறை - ஒருநாளில் ஐந்துமுறை நிறம் மாறுகின்றது. இதனால்தான் இறைவனுக்குப் பஞ்சவர்ணேஸ்வரர் என்று பெயர் வழங்குகின்றது. பிருங்கி முனிவர், வண்டு வடிவமாய் வழிபட்டதால் இச்சிவலிங்கத்தில் துளைகள் உள்ளன. சதுர ஆவுடையார் சிவலிங்கத்தின் பின்னால், அகத்தியருக்குத் திருமணக்கோலங்காட்டியருளிய கல்யாண சுந்தரர் உருவம் சுதைவடிவில் காட்சியளிக்கின்றது. இருபக்கத்திலும் திருமாலும், பிரமனும் காட்சி தர, அகத்தியர் வழிபடும் நிலையில் நிற்கின்றார். மூலவருக்குப் பக்கத்தில் அகத்தியலிங்கம் உள்ளது.

மூலவர் - பஞ்சவர்ணேஸ்வரர் - சுயம்பு மூர்த்தி. இத்திருமேனி முழுவதும் வண்டுகள் துளைத்த அடையாளங்கள் உள்ளன. மூலவர் பிராகார வலம்வரக் குறுகலான வழியுள்ளது.

கிழக்கு நோக்கிய சந்நிதி. மூலவர் - சிவலிங்கத் திருமேனி பார்ப்பதற்கு ஓர் உலோகம் போலக் காட்சி தருகின்றது. (இக்குறிப்பை எழுதுவதற்காகச் சென்று தரிசித்த போது சிவலிங்கம் பித்தளை வடிவமாகக் காட்சி தந்ததைக் கண்ணாரக்கண்டு தரிசித்தேன்).

சந்நிதியில் பலகணி உள்ளது. சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வாயிலின் பக்கத்தில் அம்பாள் சந்நிதி உள்ளது. தெற்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம்.

Koviloor Digital Library

இத்தலத்தில் உள்ள சப்த சாகரதீர்த்தம் மிக்க பெருமையுடையது. இதில் நீராடினால் உடற்பிணி நீங்கப் பெறுவர். குந்திதேவி, கர்ணனை பெட்டியில் வைத்து ஆற்றில் வைத்துவிட்ட பாவத்திற்குப் பிராயச்சித்தமாகத் தௌமிய முனிவர் சொற்படி இத்தலத்தையடைந்து, இங்கு இருந்த உரோமசர முனிவரைப் பார்த்துத் தனக்குக் கழுவாய் கூறுமாறு வேண்டினாள். அவரும் "நாளை மாசிமகம். சப்த சமுத்திர ஸ்நானம் செய்க" என்றார். "நாளைக்குள் எங்ஙனம் ஏழுகடல்களில் ஸ்நானம் செய்ய முடியும்?" என்று.அவளும் இறைவனை வேண்ட, அவள் வேண்டுதலையேற்ற இறைவனும் இத்தீர்த்தத்தினை ஏழுகடல்களாகப் பாவித்து நீராடுமாறு அருள, குந்தியும் அவ்வாறே நீராடிப் பாவம் தீரப்பெற்றாள் என்று சொல்லப்படுகிறது. (கோயிலுள் குந்தியின் உருவம் உள்ளது மேலே குறிக்கப்பட்டுள்ளது.) இதனால் இத்தீர்த்தம் 'சப்தசாகர தீர்த்தம்' என்று பெயர் பெற்றது.

முசுகுந்தன், இந்திரனிடமிருந்து தியாகராஜப் பெருமானைப் பெற்றுத் திருவாரூர் செல்லும்போது இத்தலத்தில் மூன்று நாள்கள் இருந்து, தியாகராஜப்பெருமானை எழுந்தருளுவித்துப் பூசித்து வழிபட்டான் என்னும் பெருமையுடைய இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்டதாகும்.

கமலைவைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டுள்ள திருநல்லூர்ப் புராணம். உரைநடைப்படுத்தி, திருவாவடுதுறை ஆதீனத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

"அலைமல்கு தண்புனலும் பிறையஞ்சூடி அங்கையில்
கொலைமல்கு வெண்மழுவும் அனலும் ஏந்துங்கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே."

(சம்பந்தர்)

"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத்தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே."

(அப்பர்)

Koviloor Digital Library

"நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்."

(பெ. புரா)

- சீலத்தர்

சொல்லூரடியப்பர் தூய முடி மேல்வைத்த
நல்லூர் அமர்ந்த நடுநாயகமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில்
திருநல்லூர் கிராமம் -அஞ்சல்
(வழி) சுந்தரப்பெருமாள் கோயில்
வலங்கைமான் வட்டம்
திருவாரூர் மாவட்டம். 614 208.

138/21. ஆவூர்ப்பசுபதீச்சுரம்

ஆவூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

ஊர் - ஆவூர். கோயில் - பசுபதீச்சுரம்.

(1) கும்பகோணம் - மன்னார்குடிச்சாலையில் வலங்கைமான் வந்து அங்கிருந்து கோவந்தகுடி வழியாக இத்தலத்தை யடையலாம்.

(2) கும்பகோணத்திலிருந்து பேருந்துகள் உள்ளன.

கோச் செங்கட் சோழன் திருப்பணி - மாடக் கோயில். வசிட்டரால் சாபம் பெற்ற காமதேனு, பிரமன் அறிவுரைப்படி உலகிற்கு வந்து இங்கு வழிபட்டுச் சாபம் நீங்கியதலம். (காமதேனு உலகிற்கு வந்த இடம். கோ+வந்த+குடி = கோவந்தகுடி ஆயிற்று)

கொடிமரத்தில் பசு, சிவலிங்கத்தின் மீது பால் சொரிந்து வழிபடும் சிற்பமுள்ளது. மணிகூடம், அசுவத்தவனம் என்பன இத்தலத்தின் வேறு

Koviloor Digital Library

பெயர்கள். கயிலையிலிருந்து, ஆதிசேடனுடன் போட்டியிட்டு வாயு தேவனால் கொண்டு வரப்பட்ட இருமலைச் சிகரங்களில் ஒன்று நல்லூரிலும் மற்றது ஆவூரிலும் தங்கியதாகப் புராணவரலாறு கூறுகிறது.

இறைவன் - பசுபதீஸ்வரர், அஸ்வத்தநாதர், ஆவூருடையார்.

இறைவி - 1) மங்களாம்பிகை (குளத்திலிருந்து எடுத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டது)

2) பங்கஜவல்லி (இதுவே பழைமையானது. தேவாரத்தில் 'பங்கயமங்கை விரும்பும் ஆவூர்' என்று வருகிறது. ஆனால் இங்குச் சிறப்பு மங்களாம்பிகை சந்நிதிக்கே).

தலமரம் - அரசு

தீர்த்தம் - பிரமதீர்த்தம், காமதேனு தீர்த்தம். (காமதேனு தீர்த்தம் வழக்கில் தேனுதீர்த்தம் என்று சொல்லப்படுகிறது)

சம்பந்தர் பாடல் பெற்றது.

பிரமன், சப்தரிஷிகள், தேவர்கள், இந்திரன், சூரியன், நவக்கிர கங்கள், வசிட்டர் ஆகியோர் வழிபட்டது. சங்கப்புலவர்கள் ஆவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார் முதலிய சான்றோர்களைத் தந்த ஊர் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் இவ்வூர் சோழ மன்னர்களின் கோட்டையாக விளங்கியது. கல்வெட்டுச் செய்தியில் ''நித்தவிநோத வளநாட்டைச் சேர்ந்த ஆவூர்க் கூற்றத்தைச் சேர்ந்த பசுபதீஸ்வரமுடையார்'' என்று இறைவனின் பெயர் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தின் கீழ் இக்கோயிலில் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன.

புண்ணியர் பூதியர் பூதநாதர்
    புடைபடுவார் தம் மனத்தார் திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர்
    கை தொழுதேத்த இருந்த ஊராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
    விரைகமழ் சோலை சுலாவி யெங்கும்
பண்ணியல் பாடலறாத ஆவூர்ப்
    பசுபதியீச்சரம் பாடு நாவே''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

- மல்லார்ந்த
மாவூர் இரவியின் பொன்வைய மளவுஞ்சிகரி
ஆவூரில் உற்ற எங்கள் ஆண்டகையே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பசுபதீஸ்வரர் திருக்கோயில்
ஆவூர் -அஞ்சல் 612 701.
(வழி) கும்பகோணம் RMS.
வலங்கைமான் வட்டம் - தஞ்சைமாவட்டம்.

139/22. திருச்சத்திமுற்றம்

சத்திமுத்தம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

1) கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ள தலம்.

2) கும்பகோணம் - ஆவூர் நகரப் பேருந்தில் சென்றால் கோயிலை அடையலாம்.

தலம் – 30

Koviloor Digital Library

இறைவனை உமை வழிபட்டுத் தழுவி முத்தமிட்டதால் 'சத்தி முத்தம்' என்று வழங்குகிறது. மூலவர் பக்கத்தில் இறைவி சிவலிங்கத்தைக் கட்டித் தழுவி முத்தமிட்ட திருக்கோல உருவத்தைத் தரிசிக்கலாம். அப்பர், தனக்குத் திருவடி தீட்சையருளுமாறு வேண்டிப்பாட, இறைவன் திருநல்லூருக்கு வருமாறு அருளிய சிறப்புடைய பதி. இவ்வாறு அருளிய மூர்த்தியே இங்கு மூலவராகவுள்ளார்.

இறைவன் - சிவக்கொழுந்தீசர்

இறைவி - பெரியநாயகி

தீர்த்தம் - சூலதீர்த்தம்

அப்பர் பாடல் பெற்றது.

பெரிய கோயில். கிழக்கு நோக்கியது. வாயிலில் வல்லபை கணபதி காட்சியளிக்கிறார். ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. வெளிப் பிராகாரம் பெரியது. இரண்டாங் கோபுர வாயிலில் விநாயகர் முருகன் சந்நிதிகள் உள்ளன.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. நடராச சபை உள்ளது. மூல வாயிலின் முன்னால் ஒருபுறம் சோமாஸ்கந்தரும், மறுபுறம் சத்தி, முத்தம் தரும் தல ஐதீக மூர்த்தியும் உள்ளனர். உட் பிராகாரத்தில் தலவிநாயகரும் சோமாஸ்கந்தரும் ஆறுமுகர், கஜலட்சுமி சந்நிதிகளும் உள்ளன.

சம்பந்தர் இத்தலத்திலிருந்து இறைவன் அருளிய முத்துப்பந்தர் நிழலில் திருப்பட்டீச்சரம் சென்று வணங்கிப் பதிகம் பாடினார்.

'நாரைவிடுதூது' பாடிய சத்திமுற்றுப்புலவர் இவ்வூரினரே. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தின் கீழ் இக்கோயிலில் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. கல்வெட்டில் இறைவன் திருச்சத்தி முற்றம் உடையார், திருச்சத்திவனப் பெருமாள் எனக் குறிக்கப்படுகிறார். அக் காலத்தில் கோயில் நிலங்களில் வரிகளை வசூலிக்கும் விதிமுறைகளைப் பற்றியும், விளக்கெரிக்க காசும் ஆடும் அளித்ததையும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

"கருவுற்றிருந்து உன்கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெழிவிற் புகுந்தேன் திகைத்து அடியேனைத் திகைப்பொழுவி
உருவிற் றிகழும் உமையாள் கணவா!விடில் கெடுவேன்
திருவிற் பொலி சத்தி முற்றத் துறையும் சிவக் கொழுந்தே".

(அப்பர்)

Koviloor Digital Library

சிவக்கொழுந்தீசர்

தவநெறியே பரப்புமுயர் நாயன்மார்
தமைப்புரந்து, தாவில் தீமை
அவநெறியே கிடப்போர்க்கும் அருளுமுயர்
பெருங்கருணை அமைத்து வையப்
பவநெறியே பிடித்தொழுகும் மும்மலத்தோர்
தமக்குமருட் பாங்களிக்கும்
சிவநெறியே சிவக்கொழுந்தாம் செம்பொருளே
சேவடிகள் சிரங்கொள் வோமே.

பெரியநாயகி

திருஞானங் குழைந்தருளின் சேய்க்கருளும்
பெருங்கருணைத் திருக்கை போற்றி
வருஞானம் பலபொழிந்து வளர்ஞானக்
கொழிக்கும்கை வண்மை போற்றி
பெருஞானம் பிறங்குமருட் சேவடியாம்
கமலப்பூப் பிரசம் போற்றி
மருஞானம் தருஞானப் பெரியநா
யகியம்மை மலர்த்தாள் போற்றி.

(தலபுராணம்)

- ஓவாது
சித்த முற்றயோகஞ் செழும் பொழிலிற் பூவைசெயுஞ்
சத்தி முற்ற மேவுஞ் சதாசிவமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்
திருச்சத்திமுற்றம்
பட்டீஸ்வரம் அஞ்சல் - 612 703
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

140/23. பட்டீச்சரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

ஊர் - பழையாறை. கோயில் - பட்டீச்சரம்

1) கும்பகோணம் - ஆவூர் - சாலையில் சென்று இத்தலத்தை யடையலாம். கோயில்வரை வாகனங்கள் செல்லும்.

சத்திமுற்றமும் பட்டீச்சரமும் ஒன்றுக்கொன்று அருகில் உள்ள தலங்கள் - இடையில் வீதிதான் உள்ளது. ஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துப்பந்தர் அருளிய சிறப்புடைய தலம். காமதேனுவின் புதல்வியருள்

Koviloor Digital Library

'பட்டி' பூசித்தது ஆதலின் பட்டீச்சரம் என்னும் பெயர் பெற்றது. அம்பிகை தவஞ்செய்ததால் 'தேவிவனம்' என்றும் பெயர். கோயிலின் தூண் ஒன்றில் இச்சிற்பம் - பசு பாலைச் சொரிந்து வழிபடுவது போன்ற சிற்பமுள்ளது. இறைவன் சந்நிதியிலும் இச்சிற்பம் சுதையிலுள்ளது.

இத்தலத்தில் ஐந்து நந்திகள் உள்ளன. அனைத்தும் சந்நிதியிலிருந்து விலகியேயுள்ளன. ஞானசம்பந்தர் வரும் காட்சியைக் காண இறைவன் நந்தியை விலகியிருக்குமாறு சொன்னதாகச் சொல்லப்படுகிறது. விசுவாமித்திரர், பிரம்மரிஷி பட்டம் பெற்றது இத்தலத்தில் தான். மார்க்கண்டேயர் பூசித்த சிறப்புடையது.

இராமேஸ்வரத்தில் இராமர் இராமநாதரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுத் திரும்பியபோது இங்கும் வில்முனையால் கோடி தீர்த்தம் உண்டாக்கி வழிபட்டதாக வரலாறு. இதனையொட்டி இங்கும் இராமலிங்கச் சந்நிதியும் கோடி தீர்த்தமும் உள்ளன.

இறைவன் - பட்டீச்சுரர், தேனுபுரீஸ்வரர்

இறைவி - ஞானாம்பிகை, பல்வளை நாயகி,

தலமரம் - வன்னி

தீர்த்தம் - ஞானதீர்த்தம். (கோடி தீர்த்தக் கிணறு)

தலவிநாயகர் - அனுக்ஞை விநாயகர், மதவாரணப்பிள்ளையார்

சம்பந்தர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில். நான்கு கோபுர வாயில்களுடன் ஊர் நடுவில் உள்ளது. உட்புகுந்தால் விலகிய நந்தி பலிபீடங்கள் உள்ளன. கோயில் எதிரில் தீர்த்தமுள்ளது. இரண்டாம் கோபுர வாயிலில் விநாயகர் முருகன் சந்நிதிகள் உள. உட்புகுந்தால் இங்கும் விலகிய நந்தியைக் காணலாம். அலங்கார மண்டபம் அழகானது. மதவாரணப் பிள்ளையார் சந்நிதியுள்ளது. அடுத்த சுற்றில் சப்த கன்னியர், ரேணுகாதேவி, சுவர்ண விநாயகர், மகாலிங்கர், பால முருகன், சண்முகர், இராமலிங்கர், மகாலட்சுமி சந்நிதிகள் உள்ளன.

கோடிதீர்த்தம் கிணறு வடிவில் உள்ளது. அர்த்த மண்டபத்துள் சோமாஸ்கந்தர், ஞானசம்பந்தர் காட்சி தருகின்றனர். அம்பாள் கோயில் தனியே கிழக்கு நோக்கியுள்ளது. இக்கோயில் மகா மண்டபத்தில் திருப்பணிகளைச் செய்த கோவிந்த தீக்ஷிதரும் அவர் மனைவியும் உளர். இங்குள்ள துர்க்கைக் கோயில் விசேஷமானது. சோழர்காலப் பிரதிஷ்டை. அதுபோலவே இங்குள்ள கற்சிலை பைரவரும் சிறப்புடையது.

Koviloor Digital Library

ஆனித் திங்கள் முதல் நாளில் ஞானசம்பந்தர் முத்துப்பந்தர் பெற்ற திருவிழா நடைபெறுகிறது.

தலபுராணம் சமஸ்கிருதத்தில் உள்ளது. இது தமிழில் உரை நடையில் பட்டீஸ்வரர் மான்மியம் எனும் பெயரில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இத்தலத்திற்குத் தலபுராணம் பாடத் தொடங்கினார் என்றும் அது முற்றுப் பெறவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

''பாடல் மறைசூடல் மதிபல் வளையொர்
பாகமதில் மூன்றொர் கணையால்
கூடஎரியூட்டி எழில்காட்டி நிழல்
கூட்டு பொழில்சூழ் பழையைசயுள்
மாடமழபாடி யுறை பட்டிசர
மேய கடிகட்டர வினார்
வேடநிலை கொண்டவரை
வீடுநெறி காட்டிவினை நீடுமவரே''.

(சம்பந்தர்)

(இப்பாட்டிலிருந்து இத்தலத்திற்குப் பண்டைநாளில் மழபாடி என்ற பெயர் இருந்ததாகத் தெரிகின்றது).

- ''பத்தியுற்றோர்
முட்டீச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டீச் சுரத்தெம் பராபரமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பட்டீஸ்வரர் திருக்கோயில்
பட்டீச்சுரம் -அஞ்சல் - 612 703
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

141/24. பழையாறைவடதளி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் - ஆவூர் பாதையில் முழையூர் சென்று அவ் வழியாக இத்தலத்தை அடையலாம்.

சோழமன்னர்களின் தலைநகர்களுள் ஒன்றாக விளங்கிய தலம். பல்லவ மன்னவர்க்கு அடங்கிச் சோழர்கள் சிற்றரசாக இருந்த காலத்தில் அவர்கள் வாழ்ந்த இடம் பழையாறை பிற்காலச் சோழர் ஆட்சியில் இவ்வூர் இரண்டாவது தலைநகரமாயிற்று. சோழர் அரண்மனை இருந்த இடம் ''சோழமாளிகை'' என்னும் தனி ஊராக உள்ளது.

தேவார காலத்தில் (1) முழையூர் (2) பட்டீச்சரம் (3) சத்திமுற்றம் (4) சோழமாளிகை ஆகிய நான்கு ஊர்களும் சோழர்களின் நாற்படையூர்களாக விளங்கின. இவ்வூர் (1) கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் - பழையாறை நகர் என்றும், 8-ஆம் நூற்றாண்டில் - நந்திபுரம் என்றும், 9, 10-ஆம் நூற்றாண்டில் முடிகொண்ட சோழபுரம் என்றும், 12-ஆம் நூற்றாண்டில் இராசபுரம் என்றும் வழங்கப்பெற்றது.

பழையாறை நான்கு சிறு பிரிவுகளாகும்.

1) வடதளி:- தாராசுரத்திலிருந்து 5 கி.மீ. தொலைவு, அப்பர் உண்ணாவிரதமிருந்த இடம். தற்போது அதிக வீடுகளில்லை. சிதலமான கோயில் உள்ளது. கோயிலுக்குப் பக்கத்தில் துறையூர் சிவப்பிரகாசர் சமாதியுள்ளது.

2) மேற்றளி

3) கீழ்த்தளி (பழையாறை)

4) தென்தளி.

இத்தகு சிறப்புடைய இவ்வூர் சிற்றூராகவுள்ளது. தெற்கிலும் வடக்கிலும் முடிகொண்டான் ஆறும், திருமலைராயன் ஆறும் ஓடு கின்றன. முடிகொண்டான் ஆறு முற்காலத்தில் பழையாறு எனப் பட்டதால் அதன் கரையிலுள்ள ஊர் பழையாறை எனப்பட்டது. அதன் வடகரையில் உள்ள ஊர் **பழையாறை வடதளி** எனப்பட்டது.

சமணர்களால் மறைக்கப்பட்டு அப்பரால் உண்ணாநோன்பிருந்து வெளிப்படுத்தப்பட்ட பெருமான் வீற்றிருக்கும் தலம். மங்கையர்க் கரசியார், அமர்நீதி நாயனார் ஆகியோர் அவதரித்த தலம். அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

மங்கையர்க்கரசியார் - இவர் மணிமுடிச் சோழனின் மகள் என்பர். இவன் பழையாறையைத் தலைநகராகக் கொண்டவன். இவனே அப்பர் பொருட்டுச் சிவலிங்கத்தை வெளிப்படுத்தியவனாக இருக்க வேண்டும். திருப்பனந்தாளில் சாய்ந்த சிவலிங்கத்தை நிமிர்த்த முயன்றவனும் இவனேயாகும். (திரு. K.M. வேங்கடராமையா அவர்களின் ஆய்வுக்குறிப்பு - பெரிய புராணம் - பட்டுசாமி ஓதுவார் பதிப்பு.)

வடதளி : (மாடக்கோயில்)

இறைவன் - தர்மபுரீஸ்வரர்

இறைவி - விமலநாயகி

இதன் பக்கத்தில் முழையூர் (வைப்புத்தலம்) உள்ளது. மக்கள் இக்கோயிலை முழையூர்க் கோயில் என்று வழங்குகின்றனர்.

பழையாறை :

இறைவன் - சோமேசர்

இறைவி - சோமகலாம்பிகை

தலமரம் - நெல்லி

தீர்த்தம் - சோம தீர்த்தம் (எதிரில் உள்ளது. இக்குளத்துநீர் சித்தப்பிரமை முதலியவைகளைப் போக்கவல்லது)

கருடன், ஆதிசேஷன் வழிபட்ட தலம்.

பழையாறையில் நாணயச் சாலை இருந்த இடம் இன்று 'கம்பட்ட விசுவநாதர்' ஆலயம் உள்ள இடமென்பர். (கம்பட்டம் - நாணயச் சாலை) இராசராச சோழனால் திருப்பணி செய்யப்பட்ட இக்கோயில் அவனுடைய இயற்பெயரால் அருண்மொழித் தேவேச்சரம் என்றழைக்கப்படுகிறது. குந்தவைப் பிராட்டி இவ்வூரில்தான் இராசேந்திரனை வளர்த்தாள். இத்தகு சிறப்புடைய பழையாறை, பாண்டியர் ஆதிக்கம் மேலோங்கியபோது தன் சிறப்பை இழந்தது.

இக்கோயில் சோழர் திருப்பணி பெற்றது. கிழக்கு பார்த்த சந்நிதி. எதிரில் குளம். இன்று சீர்கெட்டுள்ளது. வெளிப்பிராகாரத்தில் அம்பாள் கோயில் தெற்கு நோக்கியுள்ளது. கோயில்முன் மண்டபத்தில் உள்ள கைலாசநாதர் உருவமும், மகாமண்டபத்தில் உள்ள துர்க்கை உருவமும் அழகுடையன. இத்தலத்தைச் சூழ்ந்துள்ள (1) நல்லூர் (2) வலஞ்சுழி (3) சத்திமுற்றம் (4) பட்டீச்சரம் (5) ஆவூர் என்னும் ஐந்து தலங்களையும் ஒரே நாளில் தக்ஷிணாயன புண்ணிய நாளில் - வழிபடுவது சிறப்புடையதென்று மக்கள் வழக்கில் சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

''தலையெலாம் பறிக்கும் சமண் கையருள்
நிலையினான் மறைத்தான் மறைக் கொண்ணுமே
அலையினார் பொழில் ஆறை வடதளி
நிலையினானடியே நினைந்துய்ம்மினே''

(அப்பர்)

- துட்டமயல்

தீங்கு விழையார் தமை வான் சென்றமரச் செய்விக்க
ஓங்கு பழையாறையில் என்னுள்ளுவப்பே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சோமேசர் திருக்கோயில்
பழையாறை - பட்டீஸ்வரம் அஞ்சல் - 612 703
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

142/25. திருவலஞ்சுழி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

சுவாமிமலைக்குப் பக்கத்தில் உள்ள தலம்.

கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர், பாவநாசம், சுந்தரப் பெருமாள் கோயில் முதலிய ஊர்களுக்குச் செல்லும் பேருந்துச் சாலையில் சென்று கோயிலை அடையலாம். கோயில் சாலை யோரத்தில் உள்ளது. குடந்தையிலிருந்து அடிக்கடி பேருந்து உள்ளது. காவிரி வலமாகச் சுழித்துச் செல்லுமிடத்தில் உள்ளதால் 'வலஞ்சுழி' என்று பெயராயிற்று. திருவிடைமருதூருக்குரிய பரிவாரத் தலங்களுள் இஃது விநாயகருக்கு உரிய தலமாகும்.

சக்திவனம், தக்ஷிணாவர்த்தம் என்பன வேறு பெயர்கள், பாய்ந்து வந்த காவிரியாறு, ஆதிசேஷன் வெளிப்பட்ட பள்ளத்தில் பாய்ந்து பாதாளத்தில் இறங்கிவிட்டது. அதுகண்ட சோழமன்னன் கவலை யுற்றுத்திகைத்தபோது, அசரீரியாக இறைவன். ''மன்னனோ மகரிஷியோ இறங்கி அப்பாதலத்தில் பலியிட்டுக்கொண்டால் அப்பிலம் மூடிக் கொள்ளும். அப்போது காவிரி வெளிப்படும்'' என்றருளினார்.

Koviloor Digital Library

அதுகேட்ட மன்னன், கொட்டையூரில் ஏரண்டம் என்னும் கொட்டைச் செடியின் அருகில் தவம் செய்த ஏரண்ட முனிவரையடைந்து, செய்தியைச் சொல்ல, அவர் அவ்வாறே இறங்க, அப்பிலம் மூடப்பட்டு காவிரி வெளிப்பட்டது என்பது தலவரலாறு. இம்முனிவர் உருவம் கோயிலுள் உள்ளது. ஏரண்ட முனிவர், ஆதிசேஷன், உமையம்மை, இந்திரன், திருமால், பிரமன் ஆகியோர் வழிபட்ட தலம்.

இன்றும் மஹாசிவராத்திரி நாளில் நான்கு யாமங்களிலும் ஆதிசேஷன் வெளிப்பட்டு வலஞ்சுழி, நாகேச்சுரம், பாம்புரம், நாகைக் காரோணம் என்னும் நான்கு தலங்களிலும் வந்து வழிபடுவதாகச் செவிவழிச் செய்தி சொல்லப்படுகிறது.

இறைவன்	-	கபர்த்தீசுவரர், செஞ்சடைநாதர், கற்பகநாதேஸ்வரர், வலஞ்சுழிநாதர்,
இறைவி	-	பிருகந்நாயகி, பெரியநாயகி
தலமரம்	-	வில்வம்
தீர்த்தம்	-	காவிரி, அரசலாறு, ஜடாதீர்த்தம்
தலவிநாயகர்	-	வெள்ளைவாரணப் பிள்ளையார், சுவேதவிநாயகர்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

வெள்ளைப் பிள்ளையாரே இத்தலத்தின் சிறப்பு மூர்த்தியாவார். இப்பிள்ளையார் உள்ள மண்டபம் இந்திரனால் அமைக்கப்பட்ட அழகான மண்டபம். சித்திரத் தூண்களும், கல்குத்துவிளக்கும் மிக்க அழகுடையவை. கடல் நுரையால் செய்யப்பட்டு இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியே வெள்ளைப் பிள்ளையார் ஆவார். இப்பெருமானுக்குப் பச்சைக்கற்பூரம் மட்டும் சார்த்தி அபிஷேகம் செய்யப்படுகிறது.

அழகான கோபுரம் கிழக்கு நோக்கியுள்ளது. அம்பாள் வலப் பக்கம் திருமணக் கோலக் காட்சி தருகிறார். இங்குள்ள அஷ்டபுஜகாளி சிறப்புவாய்ந்த மூர்த்தம். இங்குள்ள பைரவமூர்த்தி மிகவும் உக்கிரமம் வாய்ந்தவராக விளங்கியமையால் அதைத் தணிப்பதற்காகச் சிறிது பின்னப்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. சனீஸ்வரர் சந்நிதி உள்ளது. மூலவர் அழகான மூர்த்தி. வாணி, கமலாம்பாள் சமேத விநாயகர் உற்சவ மூர்த்தி உள்ளது. ஆவணி சதுர்த்தி விழா இங்கு விசேஷம். இத்தலம் திருமுறைத் தலம் என்பதைவிட வெள்ளை விநாயகர் தலம் என்ற பெயரிலேயே மிகுதியும் பிரசித்தியாகத் திகழ்கின்றது.

Koviloor Digital Library

''என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன(ம்) நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே'' *(சம்பந்தர்)*

''நறைகொள் பூம்புனல் கொண்டு எழுமாணிக்காய்க்
குறைவிலாக் கொடுங்கூற்று உதைத் திட்டவன்
மறைகொள் நாவன் வலஞ்சுழி மேவிய
இறைவனை இனிஎன்றுகொல் காண்பதே.'' *(அப்பர்)*

க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்

மந்தர மெனுங்கிரியை மத்தாக நிறுவியே
வாசுகியை நாணதாக்கி
மாலயனொ டிந்திராதி யமரரெல் லாம்கூடி
வளர்பயோ ததிகடையும்நாள்
எந்தையைங் கரனைமுன் வணங்காம லதுசெய்ய
இயம்புமலை கீழிழுப்ப
இந்திராதி யோரறிந்து ஐங்கர விநாயகன்
இணையடிகள் பூசைசெய்ய
அந்தமந் தரகிரி அழன்றமுதம் உதவவே
அன்புடன் பின்பவரெலாம்
அமுதமபி டேகிக்க அமுதநிறம் ஆதலால்
அருள்வெள்ளை வாரணமெனும்
தந்திமுக வற்கிளவல் திருவலஞ் சுழிமுருக
சப்பாணி கொட்டி யருளே
சந்திரசே கரனான அந்திவன் ணன்மதலை
சப்பாணி கொட்டியருளே. *(சிதம்பர முனிவர்)*

- சேர்ந்த

''மலஞ்சுழிகின்ற மனத்தார்க் கரிதாம்
வலஞ்சுழி வாழ் பொன் மலையே'' *(அருட்பா)*

அ/மி. வலஞ்சுழிநாதர் திருக்கோயில்

வலஞ்சுழி - சுவாமிமலை அஞ்சல் - 612 302
கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

143/26. குடமூக்கு

கும்பகோணம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறை - தஞ்சைக்கு இடையிலுள்ள பெரிய தலம். சென்னை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர், சிதம்பரம் முதலிய பல ஊர்களிலிருந்து இத்தலத்திற்குப் பேருந்து வசதிகள் நிரம்பவுள்ளன. இத்தலம், சென்னை - திருச்சி மெயின்லயனில் உள்ள இருப்புப் பாதை நிலையம்.

''கோயில் பெருத்தது கும்பகோணம்'' என்னும் முதுமொழிக் கேற்ப எண்ணற்ற கோயில்களையுடையது. சைவம் வைணவம் ஆகிய இருசமயப்புகழும் கொண்டது. இலக்கியத்தில் குடமூக்கு என்று குறிப் பிடப்பட்டாலும் மக்கள் வழக்கில் உள்ள **கும்பகோணம்** என்ற பெயரே பிரசித்தமானது. உலகப்புகழ் பெற்ற மகாமக உற்சவம் நடைபெறும் தலமும் மகாமகதீர்த்தம் உள்ளதும் இத்தலமே. பன்னி ரண்டு ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறும் இவ்வுற்சவத்தின்போது லட்சக்கணக்கான மக்கள் வந்து மகாமகக் குளத்தில் நீராடுவர், இக்குளம் பதினைந்து ஏக்கர் பரப்பளவில், நான்கு கரைகளிலும் 16 சந்நிதிகளை யுடையதாய், நடுவில் 9 கிணறுகளைக் கொண்டு விளங்குகிறது.

பேருழிக் காலத்தில் பிரமனின் வேண்டுகோளுக்கிணங்கி, இறைவன் தந்த அமுத கலசம் தங்கிய இடமாதலின் இத்தலம் கும்பகோணம் என்று பெயர் பெற்றது. இத்தலத்தில் பதினான்கு கோயில்களும் பதினான்கு தீர்த்தங்களும் உள்ளன. குருசிம்மராசியில் நிற்க, சந்திரன் கும்பராசியி லிருக்கும் (மாசிமக) பௌர்ணமி நாளில் தான் மகாமகம் நடை பெறுகிறது. இத்தீர்த்தம், அமுதகும்பம் வழிந்தோடித் தங்கியதால் **''அமுதசரோருகம்''** என்றும் அழைக்கப்படுகிறது.

மகாமக உற்சவநாளில் கங்கை முதலிய ஒன்பது புண்ணிய நதிகளும் (கங்கை, சரயு, யமுனை, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி,) - நவகன்னியர்களாக வந்து நீராடியதால் **'கன்னியர் தீர்த்தம்'** என்றும் பெயர் பெற்றது.

''பூமருவும் கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடுங்கோயில்

(பெ. புரா)

Koviloor Digital Library

கும்பகோணத்தில் குடமூக்கு - கும்பேசுவரர் கோயில்

குடந்தைகீழ்க் கோட்டம் - நாகேசுவர சுவாமி கோயில்

குடந்தைக் காரோணம் - சோமேசர் கோயில் என வழங்கப்படுகிறது. மூர்க்கநாயனார் தொண்டு செய்து வாழ்ந்த தலம். ஏமரிஷி பூசித்தபதி.

தலவரலாற்றின்படி:-

(1) அமுதகும்பம் வைத்திருந்த இடம் - கும்பேசம்

(2) அமுதகும்பம் வைத்திருந்த உறி சிவலிங்கமான இடம் - சோமேசம்

(3) அமுதகும்பத்தில் சார்த்தியிருந்த வில்வம் இடம் - நாகேசம்

(4) அமுதகும்பத்தில் வைத்திருந்த தேங்காய் இடம் - அபிமுகேசம்

(5) பெருமான் அமுதகுடத்தை வில்லால் சிதைத்த இடம் - பாணபுரேசம் (பாணாதுறை)

(6) கும்பம் சிதறியபோது அதன்மீதிருந்த பூணூல் சிதறிய இடம் - கௌதமீசம்

என வழங்கப்படுகின்றன.

மகாமகத் தீர்த்தக் கரையில் சுற்றிலும் பிரமதீர்த்தேசம், முகுந்தேசம், தனேசம், ரிசபேசம், பாணேசம், கோனேசம், பக்தேசம், பைரவேசம், அகத்தீசம், வியாகேசம், கங்காதரேசம், பிரமேசம், முத்ததீர்த்தேசம் முதலிய ஆலயங்கள் உள்ளன. இந்நகரிலுள்ள 14 தீர்த்தங்களில் தடாகங்கள் 7, கிணறுகள் 3, காவிரித்துறைகள் 4 ஆகும். மகாமகக்குளத் திருப்பணியும் அதைச்சுற்றிப் பதினாறு சிவலாய விமானங்களையும் அமைத்த மகான், அச்சுதப்ப நாயக்க மன்னனின் அமைச்சரான கோவிந்த தீக்ஷிதர் ஆவார். இவர் தன் துலாபாரத் தங்கத்தைக்கொண்டே இத்திருப்பணிகளை யெல்லாம் செய்திருக்கிறார். கும்பேசுவரர் கோயிலில் இவருடைய வடிவம் உள்ளது.

சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு இவரால் நிறுவப்பட்டதே ராஜா வேதபாடசாலை. இவருக்கு அந்தக் காலத்தில் ஐயன் என்று பெயர். கும்பகோணத்திலுள்ள ஐயன்தெரு இவர் பெயரால் ஏற்பட்டது. தஞ்சாவூரிலுள்ள ஐயன் ததரு, ஐயங்குளம், பசுபதி கோவிலுக்கு அடுத்த ஐயம் பேட்டை, திருவாரூக்கு மேற்கிலுள்ள மணக்கால் ஐயம்பேட்டை போன்ற இடங்களெல்லாம் இவருடைய

Koviloor Digital Library

பெயரால் அமைந்தவை. கல்விச்சாலையைத் தவிர இவர் தர்ம நூல்களில் சொல்லப்பட்ட எல்லா மகாதானங்களையும் செய்தார். மகாதானபுரம், திருவிடைமருதூரிலும், மாயூரம், திருவெண்காடு முதலிய ஊர்களிலு முள்ள மகாதானத் தெருக்கள், திருவையாறு, தஞ்சை வெண்ணாற்றங் கரை, திருவலஞ்சுழி, கும்பகோணம், திருவிடைமருதூர், மாயூரம் முதலிய இடங்களில் நதி தீரத்தில் ஜோடியான விமானங்களையுடைய புஷ்ப மண்டபங்களும் இவர் கைங்கர்யமே. கும்பகோணத்தில் ராஜா பாடசாலைக்கு அடுத்த யாக சாலைத்தெரு இவருடைய வேள்விச் சாலை. திருவிடைமருதூர் புத்யோத்ஸவ வெள்ளி ரதமும், வெள்ளி ரிஷப வாகனமும் இவருடைய திருப்பணி. அநேகமாகச் சோழர் களுக்குப்பின் ஆலயத் திருப்பணிகளை எல்லாம் திருத்தியமைத்தவர் இந்த மகான். கும்பகோண க்ஷேத்திர மாகாத்மியத்தின் முடிவில் ஒரு சிறு சுலோகம் தென்படுகிறது.

அதாவது:-

கோவிந்ததீக்ஷிதோ நாம மஹாநாஸீத் கலௌ யுகே
தேந ஷோடசலிங்காநி ஸ்தாபிதாதி ஸரோவரே

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் திருமடம் உள்ள இத் தலத்தில் பல கோயில்கள் இருப்பினும் பிரதானமானது அ/மி. கும்பேசுவரர் கோயிலேயாம். இதுவே தலைமைக் கோயில்.

இறைவன் - கும்பேசுவரர், அமுதேசுவரர், குழகர்,
இறைவி - மங்களாம்பிகை
தலமரம் - வன்னி.
தீர்த்தம் - ஆதிவிநாயகர்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய சந்நிதி. பிரதானகோபுரம் ஒன்பது நிலைகளை யுடையது. தெற்கு நீங்கலாக ஏனைய மூன்று திசைகளிலும் மூன்று கோபுரங்கள். கோயிலுக்கு மூன்று பிராகாரங்கள். முற்றவெளி விநாயகரையும் தண்டபாணியையும் தொழுது வாயிலைக் கடந்தால் வலப்பால் லட்சுமி நாராயணப் பெருமாள் தரிசனம். நேரே கவசமிட்ட கொடிமரம் - முன் மண்டபம் - மங்களவிலாச மண்டபம் - அலங்கார மண்டபம் என்றெல்லாம் வழங்கப்படுகிறது. வேலைப்பாடமைந்த தூண்களையுடையது.

மண்டபத்தில் இடப்பால் திருஞானசம்பந்தரின் திருவெழு கூற்றிருக்கை, தேர்வடிவில் வண்ணச்சலவைக் கல்லில் பதிக்கப் பட்டுள்ளது. வலப்பால் நவக்கிரக சந்நிதி. வல்லப விநாயகரைத் தொழுது உட்செல்கிறோம்.

Koviloor Digital Library

அறுபத்துமூவர் திருமேனிகள் அற்புதத் தரிசனம். அடுத்து உற்சவ மூர்த்தங்கள் - வீரபத்திரர், சப்தகன்னியர், அஷ்டலிங்கங்கள் முதலிய சந்நிதிகள். வலப்பால் சோமாஸ்கந்தர் காட்சி. வலஞ்சுழி விநாயகரும், மகாலிங்கேசுவரரும் இங்கேயும் தரிசனம் தருகின்றனர். பிட்சாடனர், சண்முகர், கார்த்திகேயர், சிவலிங்கமூர்த்தங்கள். அன்னபூரணி, மகா லட்சுமி, சரஸ்வதி ஆகியோர் திருமேனிகளைத் தொழுது, அம்பாளையும் சேர்ந்து வலமாக வருகின்றோம்.

மங்களாம்பிகை சந்நிதி - தொழும்போதே சாந்தத்தையும் மன நிறைவையும் தருகின்ற வகையில் அழகாக அமைந்துள்ளது. பெயருக் கேற்ற திருக்கோலம். அடுத்து; 'அமுதகடத்தை வில்லாலடித்துச் சிதறச்செய்த மூர்த்தியாக - கிராதகோலத்தில் இறைவன் காட்சி தருகிறார் - பைரவர், மூன்று திருவடிகளுடன் ஜ்வரஹரேசுவரர் சாஸ்தா, பக்கத்தில் கோவிந்ததீக்ஷிதர் அவருடைய மனைவியார், சந்திர சூரியர்கள் முதலிய சந்நிதிகளைத் தொழுதவாறே படியேறிச் செல்லும்போது நடராசசபை தரிசனம். வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம்.

கும்பேசுவரர் - சிவலிங்கத் திருமேனி. பருத்து - சற்று சாய்ந்த பாணம் - திருமேனி (பிருதிவி) மணல் லிங்கமாதலின் தங்கக்கவசம் சார்த்தப்பட்டுள்ளது. பாணத்தின் உச்சி கும்பத்தின் வாயைப் போலவுள்ளது. புனுகுசட்டம் சார்த்தப்படுகிறது. நாடொறும் ஆறு கால பூஜைகள். 1722ல் இருந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாதேவந்திர சரஸ்வதி சுவாமிகள் திருப்பணிகளைச் செய்துள்ள இத்திருக்கோயில் இப்போதும் அம்மரபு வழியில் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் கும்பகோணம் பொன்விழாக் கமிட்டியார் மூலமாக ரூ.15 லட்சம் செலவில் திருப்பணிகள் செய்து 24.11.1985ல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

இத் தலத்தில் உள்ள வைணவத் திருக்கோயில்களுள்,

(1) அ/மி. சாரங்கபாணிப் பெருமாள் கோயில்

(2) அ/மி. சக்ரபாணிப் பெருமாள் கோயில்

(3) அ/மி. இராமசாமி கோயில்

(4) அ/மி. வரதராசப்பெருமாள் கோயில்

முதலியவை சிறப்புடையன. திருக்குடந்தைப்புராணம் - தலபுராணம் மகாவித்வான். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடி யுள்ளார்.

Koviloor Digital Library

அரவிரி கோடனீடலணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே.

(சம்பந்தர்)

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடியார்களைத்
தீவணத்திரு நீறு மெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே.

(அப்பர்)

திருக்குடந்தைப்புராணம்

பூமேய வாரணனும் நாரணனும்
வாரணனும் பொற்பூ மாலைத்
தேமேய விண்ணவரும் நண்ணவரும்
பசுமுலதாஞ் சிறப்பு நல்கி
மாமேய குடமூக்கி னிடமூக்கின்
பார்கருணை வடிவின் மேய
பாமேய புகாதி கும்பேசர்
தாமரைத்தாள் பணிந்து வாழ்வாம்.

எண்ணிய அனைத்தும் எண்ணியாங்கெய்த
எண்ணிய அடியவர்க் கருளும்
புண்ணியமுதலே பூரணப் பொருளே
போக்கருஞ் சுடர்ப்பெரு விளக்கே
தண்ணிய சாந்தரூபியே நாளும்
தவாதமந் திராசன வாழ்வே
மண்ணியமணியே வளமலி குடந்தை
மங்களையே நின்தாள் போற்றி.

மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்.

மகாவித்துவான் திரிசிரபுரம்
மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடியது

"தானே தனக்குச் சரியாய
தாயே வருக உரைக்க வினை
தடிவாய் வருக நினைக்க முத்தி
தருவாய் வருக மலர் பொதிந்த

Koviloor Digital Library

கானே புரையும் கருங்கூந்தற்
கவுரி வருக மெஞ்ஞானக்
கரும்பேவருக அருள்பழுத்த
கனியேவருக தெவிட்டாத
தேனே வருக ஆனந்தத்
திருவே வருக பெருவேதச்
செல்வி வருக எங்கள் குல
தெய்வம் வருக உருகுநர்உள்
மானே வருக இமயவரை
வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசால் திருக்குடந்தை
மடந்தாய் வருக வருகவே

(திருப்புகழ்)

மாலைதனில் வந்து வீதிதனில் நின்று
வாசமலர்சிந்து குழல்கோதி
வாரிருதனங்கள் பூணொடுகுலுங்க
மால்பெருகி நின்ற மடவாரைச்
சாலைவழி வந்து போமவர்கணின்று
தாழ் குழல்கள் கண்டு தடுமாறித்
தாகமயல் கொண்டு மாலிருளழுந்தி
சாலமிகு நொந்து தவியாமல்
காலையிலெழுந்து னாமமெமொழிந்து
காதலுமைமைந்த எனவோதிக்
காலமுமுணர்ந்து ஞானவெளிக்கண்கள்
காண அருளென்று பெறுவேனோ
கோலமுடனன்று சூர்படையின்முன்பு
கோபமுடனின்ற குமரேசா
கோதையிருபங்கின் மேவவளர்கும்ப
கோண நகர்வந்த பெருமாளே

- நிலஞ்சுழியா

தோணத்தில் வந்தோனுடன்றுதித்து வாழ்கும்ப
கோணத்திற் றெய்வ குலக்கொழுந்தே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கும்பேசுவரர் திருக்கோயில்
கும்பகோணம் & அஞ்சல் - 612 001
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

தலம் – 31

Koviloor Digital Library

144/27. குடந்தைக் கீழ்க்கோட்டம்

(நாகேசுவர சுவாமி திருக்கோயில்)

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

கும்பகோணத்தின் (குடந்தையின்) கீழ்த்திசையில் அமைந்துள்ள கோயில். அமுதகலசத்தின் (குடத்தின்) வில்வம் சிவலிங்கமான தலம். நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கும்பகோணத்திற்குப் பேருந்து வசதிகள் நிரம்பவுள்ளன. திருக்கோயில், பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே உள்ளது. நாகராசன் சூரியன் ஆகியோர் வழிபட்ட தலம். இங்குள்ள காவிரித்துறைக்கு, **'பகவத் படித்துறை'** என்று பெயர் சொல்லப்படுகிறது. 'கோயிற் பெருத்தது கும்பகோணம்' என்னும் மொழிக்கேற்ப இத்தலத்தில் ஏராளமான கோயில்கள் உள்ளன.

இறைவன் - நாகேஸ்வரர், நாகநாதர்.

இறைவி - பிருகந்நாயகி, பெரிய நாயகி.

பெரிய கோயில். அப்பர் பாடல் பெற்ற தலம்.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே இடப்பால் நந்தவனம். சிங்கமுக தீர்த்தக்கிணறு உள்ளது. படிகள் இறங்கிச் செல்லவேண்டும். இறங்கு வாயிலில் கல்லில் இரு சிங்கங்கள் சுதையில் உள்ளன. வலப்பால் பிருகந்நாயகி சந்நிதி. தெற்கு நோக்கியுள்ளது. உள்ளே சென்றால் இடப்பால் பதினாறுகால் மண்டபமும் வலப்பால் நடராசசபையும் உள்ளன. இங்குள்ள நடராச **மண்டபம், பேரம்பலம்** என்றழைக்கப்படுகிறது. ரத அமைப்பில் உள்ளது, இருபுறங்களிலும் உள்ள கல் (தேர்ச்) சக்கரம் கண்டு மகிழத் தக்கது, இச்சக்கரங்களின் ஆரங்களாக 12 ராசிகளும் இடம் பெற, 2 குதிரைகளும் நான்கு யானைகளும் இழுக்கும் நிலையில் இத்தேர் மண்டபம் அமைந்துள்ளது அழகாவுள்ளது. பெயரே **ஆனந்தத் தாண்டவ நடராசசபை** அல்லவா? நடனத்திற்குச் சிவகாமி தாளம் போடும் பாவனையும் மகாவிஷ்ணு குழலூதும் காட்சியும் பேரழகுடையன, சுவரில் ஒருபுறம் சரபமூர்த்தி, மறுபுறம் சிவலிங்கம், நந்தி, விநாயகர், அம்பாள், முருகன், நால்வர் உருவங்கள் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. கொடிமரம் வணங்கியுட் சென்று வாகன மண்டபம் கடந்து வலம் வரும்போது 'படைவெட்டி மாரியம்மன் சந்நிதி' உள்ளது. பிரளயகாலருத்ரர் சந்நிதி, வலஞ்சுழி விநாயகர், ஐயனார், சப்தமாதாக்கள், சுப்பிரமணியர், சப்தலிங்கங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன. வில்வ மரத்தடியில் அமர்ந்த நிலையில் உள்ள

Koviloor Digital Library

திருமேனியைப் **பகவத்ரிஷி** என்று பெயரிட்டு அழைக்கின்றனர். இங்குள்ள விஷ்ணு துர்க்கை சந்நிதி விசேஷமானது. வெள்ளிக்கவச தரிசனம் மன நிறைவு தருகிறது. வைத்தீஸ்வரர், சூரியன், சோமாஸ் கந்தர், சண்டேசுவரர் சந்நிதிகள் உள்ளன.

வலம் முடித்து முன் மண்டபங்கடந்து ‘சிவசிவ ஒலி மண்டபமும்’ நவக்கிரக சந்நிதியும் கண்டு, தொழுதவாறே சென்றால் நேரே மூலவர் தரிசனம். மூலவர் - அழகான திருமேனி - உயரமான ஆவுடையார் - மிகவும் குட்டையான பாணம். பிறைசூடி, நாகாபரணம் கொண்டு தரும் தரிசனம் மிகவும் பொலிவாகவுள்ளது. கருவறை வாயிலில் தண்டூன்றிய விநாயகர் உள்ளார். கோஷ்டமூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரி, - ரிஷபத்தின் முன் நின்று வலக்கையை ரிஷபத்தின் தலைமீதூன்றி நிற்கும்நிலை, பிரம்மா, முதலிய சந்நிதிகள் உள்ளன.

அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது. பள்ளியறை உள்ளது. அம்பாளின் பக்கத்தில் உள்ளது ஆடிப்பூர அம்மன் சந்நிதி. இத் திருமேனி அம்பாளுக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. அம்பாள் வரத அபயத்துடன் கூடிய நின்ற திருக்கோலம். நாடொறும் ஐந்து கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தின் கீழ் திருப்பணிகள் 29-11-85ல் தொடங்கப்பட்டுச் செய்யப்பட்டுள்ளன.

‘பாடகச்சேரி ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள்’ என்னும் மகான்; புதர் மண்டிக்கிடந்த இத் திருக்கோயிலைச் சீர்த்திருத்தித் திருப்பணிகள் செய்வித்து 1923ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்வித்துள்ளார். ராஜகோபுரம், மேற்குக் கோபுரம், நடராசசபை, சுற்றுச்சுவர்கள், சிங்கமுகதீர்த்தக்கிணறு முதலிய திருப்பணிகள் அவரால் செய்யப் பட்டவை. இதற்காக இம் மகான், தம் கழுத்தில் பித்தளைச் செம்பு ஒன்றை உண்டிக் கலயமாகக் கட்டிக் கொண்டு தெருக்கள்தோறும் சென்று பிச்சையெடுப்பது போல நிதி திரட்டிய அருஞ்செயலை இன்றும் கேட்டாலும், நினைத்தாலும் நம் மனம் நெகிழ்கின்றது.

“சொன்மலிந்த மறை நான்காறங்கமாகிச்
சொற்பொருளும் கடந்த சுடர்ச் சோதிபோலும்
கன்மலைந்த கயிலைமலை வாணர் போலும்
கடல்நஞ்சம் உண்டுஇருண்ட கண்டர்போலும்
மன்மலிந்த மணிவரைத் திண்தோளர்போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர்போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர்போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத் தெங்கூத்தனாரே.” *(அப்பர்)*

Koviloor Digital Library

''கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நா அடங்கா முன்னம் - பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக்கிட,''

(ஐயடிகள் காடவர்கோன்)

- மாணுற்றோர்
காழ்க்கோட்ட நீங்கக் கருதுங் குடமூக்கிற்
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நாகேசுவரசுவாமி திருக்கோயில்
கும்பகோணம் & அஞ்சல் - 612 001
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

145/28. குடந்தைக்காரோணம்

சோமேசர் திருக்கோயில்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

கும்பகோணத்தில் பொற்றாமரைக் குளத்தின் கீழ்க்கரையில் உள்ள கோயில். மக்கள் 'சோமேசர் கோயில்' என்று வழங்குகின்றனர். மகாசங்கார காலத்தில் ஆன்மாக்களை இறைவன் ஐக்கியமாக்கிக் கொண்டதலம் காரோணம் எனப்படும். இக்கோயில் அம்பிகை, இறைவன் திருமேனியை ஆரோகணித்த தலமாதலின் காரோணம் என்றாயிற்று.

(மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ள 'காசி விசுவேசம்' என்னும் கோயிலைக் குடந்தைக் காரோணம் என்று சிலர் சொல்கின்றனர். இத்தலத்தில் இராமன், இரவணனைக்கொல்ல ருத்ராம்சம் வேண்டி வழிபட்டு உடலில் ருத்ராம்சம் ஆரோகணிக்கப் பெற்றதால் காய - ஆரோகணம் - காரோணம் என்று இஃது பெயர் பெற்றாலுங்கூட; திருஞானசம்பந்தர் பாடலில்

Koviloor Digital Library

''தேனார் மொழியாள் திளைத்தங்காடித் திகழும் குடமூக்கில்
கானார் நட்டம் உடையார் செல்வக்காரோணத்தாரே''

என்று குறிப்பிட்டுள்ளமையால், அம்பிகை பெயர் வழங்கும் தலம் (சக - உமேசம்) சோமேசம் ஆதலின் இதுவே பாடல் பெற்ற தலமாகக் கொள்ளப்படுகிறது.)

வியாழன், சந்திரன் வழிபட்டதலம். அமுத கலசம் வைத்திருந்த உறி சிவலிங்கமான தலமிது. (சிக்கம் - உறி) எனவே சிக்கேசம் என்றும் பெயர்.

இறைவன் - சோமேசர், சிக்கேசர், சோமநாதர்

இறைவி - சோமசுந்தரி, தேனார் மொழியாள்,

தீர்த்தம் - சோம தீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

பழைய ராஜகோபுரம் கிழக்கு நோக்கியது. ஐந்து நிலை. உட்சென்றால் வலப்பால் மங்களநாயகி சந்நிதியுள்ளது. பெரிய மூர்த்தம் - நின்றநிலை. பக்கத்தில் மாலீஸ்வரர் சிவலிங்கத் திருமேனியுள்ளது. இச்சந்நிதிக்கு முன்னால் கல்யாணசுந்தர விநாயகர் காட்சி தருகிறார்.

உள்கோபுரம் மூன்றுநிலை, வாயில் கடந்து உள்ளே சென்றால் வலப்பால் தேனார் மொழியாள் (அம்பாள்) சந்நிதி. குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் இத்திருக்கோயிலையே குடந்தைக் காரோணமாக ஏற்றுக்கொண்டு 1958-ஆம் ஆண்டில் காரோணப் பதிகத்தைக் கல்லிற் பொறித்துச் சுவரில் பதித்துள்ளனர். கோடி பஞ்சாக்கரக் கோயில் உள்ளது. உள் பிராகாரத்தில் விநாயகர் வள்ளி தெய்வயானை ஆறுமுகர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளன.

வாயிலில் திருமுறைக் கோயில் உள்ளது. அடுத்து விநாயகர், சேக்கிழார், நால்வர் திருமேனிகள், நடராசசபை, மூலவர் சோமேசர் - சிவலிங்க மூர்த்தம் குட்டையான சிறிய பாணம்.

''மூப்பூர்நலிய நெதியார் விதியாய் முன்னே யனல்வாளி
கோப்பார் பார்த்தனிலை கண்டருளுங் குழகர்குடமூக்கில்
தீர்ப்பார் உடலில் அடுநோய் அவலம் வினைகள் நலியாமைக்
காப்பார் காலனடையா வண்ணம் காரோணத்தாரே''

(சம்பந்தர்)

- வாழ்க்கோட்டத்

Koviloor Digital Library

தேரோண மட்டுந் திகழ் குடந்தை மட்டுமன்றிக்
காரோண மட்டுங் கமழ் மலரே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சோமசர் திருக்கோயில்
கும்பகோணம் & அஞ்சல் - 612 001
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

146/29. திருநாகேச்சுரம்

திருநாகேஸ்வரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ளது. நகரப்பேருந்து அடிக்கடி செல்கிறது. சேக்கிழார் திருப்பணிசெய்த பெருமையுடையது. அவர் மிகவும் நேசித்ததலம். இதனால் தம் ஊரான குன்றத்தூரில் இப்பெயரில் ஒரு கோயிலைக் கட்டினார்.

ராகு கிரகத்திற்குரிய தலம். ஆதிசேஷன், தக்ஷன், கார்க்கோடகன் முதலிய நாகராஜாக்களும் கௌதமர் நந்தி நளன் பராசரர், பகீரதன் முதலியோரும் வழிபட்டது. சண்பகவனம், கிரிகின்னிகைவனம் என்பன வேறு பெயர்கள். பெரிய கோயில் - நான்கு கோபுர வாயில்கள்.

(காலையில் குடந்தைக் கீழ்க்கோட்டம், நண்பகலில் திருநாகேச்சுரம், மாலையில் திரும்பாம்புரம் என்று ஒரே நாளில் வழிபடுவது விசேஷம் என்பர்).

இறைவன் - நாகேஸ்வரர், நாகநாதர், சண்பகாரண்யேஸ்வரர்

இறைவி - கிரிகுஜாம்பிகை, குன்றமாமுலையம்மை

தலமரம் - சண்பகம்

தீர்த்தம் - சூரியதீர்த்தம் (மூன்றாம் பிராகாரத்தில் உள்ளது)

தலவிநாயகர் - சண்பகவிநாயகர்

மூவர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

பிரதான வாயில் கிழக்கு கோபுரம் - ஐந்து நிலைகளையுடையது. நிருத்த கணபதி, நந்தி, சூரியதீர்த்தம் உள்ளன. நூற்றுக்கால் மண்டபம். சூரியதீர்த்தத்தின் கரையில் மழுப்பொறுத்த விநாயகர் சந்நிதி.

இரண்டாம் பிராகாரத்தில் நாகராஜா உருவமுள்ளது. சேக்கிழார் திருப்பணி செய்த மண்டபமுள்ளது. சேக்கிழார், அவர் தாயார், தம்பி உருவங்கள் உள்ளன. நடராசசபையும் எதிரே நால்வர் சந்நிதியும் உள்ளன. அம்பாள் சந்நிதி இரண்டு உள்ளது.

1) சுவாமிக்கு அருகிலுள்ளது - 'பிறையணிநுதலாள்' சந்நிதி.

2) கிரிகுஜாம்பிகை சந்நிதி தனிக்கோயிலாகச் சிறப்புடன் விளங்குகிறது. சுதைஉருவம், தை மாதத்தில் மட்டும் புனுகு சட்டம் சார்த்தப்படுகிறது.

கண்டராதித்த சோழன் இக்கோயிலைக் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. (1) சேக்கிழார் உள்மண்டபத்தையும்; (2) அச்சுதப்ப நாய்க்கரிடம் மந்திரியாக இருந்த கோவிந்த தீக்ஷிதர் வெளிமண்டபத்தையும் கட்டியதாகக் கூறுவர். கார்த்திகையில் பெருவிழா. வைகாசி பூசத்தில் சேக்கிழார் குருபூஜை நடைபெறுகிறது. இப்பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்தால் பால் நீல நிறமாகிவிடுகிறது. அண்மையில் உள்ளது ஒப்பிலியப்பன் கோயில். திருநாகேச்சுரம் சுவாமிநாத முதலியார் நாகேச்சுரப் பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். நாகநாத வெண்பா எனும் நூலொன்று இருந்ததாகத் தெரிகிறது. இப்போது அது கிடைக்கவில்லை.

''பொன்னேர் தரு மேனியனே புரியும்
மின்னேர் சடையாய் விரை காவிரியின்
நன்னீர் வயல் நாகேச்சர நகரின்
மன்னே என வல்வினை மாய்ந்து அறுமே'',

(சம்பந்தர்)

''நல்லர் நல்லதோர் நாகங் கொண்டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கு மருந்துகள்
பல்லிலோடு கையேந்திப் பலிதிரி
செல்வர் போற்றிரு நாகேச்சரவரே''

(அப்பர்)

''பாலனது ஆருயிர்மேற் பரியாது பகைத்தெழுந்த
காலனை வீடுவித்துக் கருத்தாக்கியது என்னை கொலாம்
கோலமலர்க் குவளை கழுநீர் வயல்சூழ் கிடங்கில்
சேலொடு வாளைகள் பாய் திருநாகேச் சரத்தரனே''. *(சுந்தரர்)*

Koviloor Digital Library

-சீரோங்கும்
யோகீச்சுரர் நின்று வந்து வணங்குதிரு
நாகீச்சுர மோங்கு நங்கனிவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நாகேஸ்வரர் - நாகநாதசுவாமி திருக்கோயில்
திருநாகேஸ்வரம் & அஞ்சல்
கும்பகோணம் RMS-கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம் - 612 204.

147/30. திருவிடைமருதூர்



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1) மயிலாடுதுறை - கும்பகோணம் இருப்புப் பாதையில் உள்ள நிலையம்.

2) மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்துச் சாலையில் உள்ள தலம்.

'இடைமருது' - 'மத்தியார்ச்சுனம்' எனப் புகழப்படும் பதி. வடக்கே ஆந்திரத்தில் உள்ள ஸ்ரீ சைலம் (மல்லிகார்ச்சுனம்) தலைமருது என்றும்; தெற்கில் நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு

Koviloor Digital Library

அருகில் உள்ள 'திருப்புடைமருதூர்' (புடார்ச்சுனம்) கடைமருது என்றும் வழங்கப்படும். இவையிரண்டுக்கும் இடையில் இருப்பதால் இஃது இடைமருது ஆயிற்று, (அர்ச்சுனம் - மருதமரம்)

மருதவனம், சண்பகாரண்யம், சத்திபுரம் என்பன வேறு பெயர்கள். வரகுண பாண்டியனுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம், (கிழக்குக் கோபுர வாயிலில் பிரமகத்தி உள்ளது.)

மகாலிங்கத் தலம் என்று புகழப்படும் இத்தலத்தைச் சுற்றிப் பரிவாரத் தலங்கள் ஒன்பது உள்ளன. அவை:-

1) விநாயகர் - திருவலஞ்சுழி
2) முருகன் - சுவாமிமலை
3) நடராசர் - தில்லை
4) நவக்கிரகம் - சூரியனார் கோயில்
5) தட்சிணாமூர்த்தி - ஆலங்குடி
6) பைரவர் - சீர்காழி
7) நந்தி - திருவாவடுதுறை
8) சோமாஸ்கந்தர் - திருவாரூர்
9) சண்டேஸ்வரர் - திருவாய்ப்பாடி.

திருவாவடுதுறை ஆதீனக்கோயில். 'திருவிடைமருதூர் தெரு அழகு' என்பது முதுமொழி.

இறைவன்	- மகாலிங்கேஸ்வரர், மருதவனேஸ்வரர், மருதவாணர்.
இறைவி	- பிருகத்சுந்தரகுஜாம்பிகை, பெருநலமுலையம்மை
தலமரம்	- மருது (அர்ஜுனம்)
தீர்த்தம்	- காவிரி, காருண்ய அமிர்த தீர்த்தம்
தலவிநாயகர்	- ஆண்டவிநாயகர் (முதற் பிராகாரத்தில் சுவாமிக்குத் தெற்கிலுள்ளார்.)

மூவர் பாடல் பெற்ற தலம். கருவூர்த்தேவர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் பாடல்களிலும் இப்பதி புகழ்ந்து பாடப்படுகிறது.

பெரிய கோயில். நான்கு பிராகாரங்கள். வீதியையும் சேர்த்தால் பிராகாரம் ஐந்தாகும். வெளிப்பிராகாரம் பெரிய பிராகாரம் "அஸ்வ மேத பிராகாரம்" எனப்படும். இதன் மூலம் சுவாமி அம்பாள் கோயிலை வலம் வரலாம். இப்பிராகாரத்தை வலம் வந்தால் பேய்,

Koviloor Digital Library

பைத்தியம் முதலியன நீங்கும். இன்றும் இவற்றால் பீடிக்கப்பட்டோர் வந்து வலம் செய்து குணமடைவதைப் பார்க்கலாம். அடுத்துள்ள பிராகாரம் **"கொடுமுடிப்பிராகாரம்"** - இதன் மூலம் சுவாமியை மட்டும் வலம் வரலாம். அடுத்து **பிரணவப் பிராகாரத்தினால்** சுவாமியை வலம் வரலாம். இப்பிராகாரத்தில் தலமரம் உள்ளது. அம்பாள் கோயில் உள்ளது **உள் பிராகாரம்.** (இதனுள்ளும் ஒரு பிராகாரமுள்ளது.)

தேரோடும் நான்கு வீதிகளின் மூலைகளிலும் நான்கு விநாயகர் கோயில்கள் உள்ளன. தேரடியில் விநாயகர் கோயிலும், கீழவீதியில் விசுவநாதர் கோயிலும், மேல வீதியில் ரிஷிபுரீஸ்வரர் கோயிலும், தெற்கு வீதியில் ஆத்மநாதர் கோயிலும், வடக்கு வீதியில் சொக்கநாதர் கோயிலும் இருக்க; இவற்றிற்கு மத்தியில் மகாலிங்கேஸ்வரர் வீற்றிருக்கின்றார். எனவே இத்தலத்தை **"பஞ்ச லிங்கத்தலம்"** என்றும் சொல்வர். வடக்குக் கோபுர வாயிலில் அகோர வீரபத்திரர் கோயிலும், மேற்குக் கோபுர வாயிலில் குமரன் கோயிலும் உள்ளன. கிழக்கு வாயிலில் படித்துறை விநாயகரும் பட்டினத்தாரும்; மேல் வாயிலில் பர்த்ருஹரியாரும் தரிசனம் தருகின்றனர். சொக்கநாதர் கோயிலில் உள்ள மூர்த்திக்கு அபிஷேகம் செய்து மேகராகக் குறிஞ்சி பண்பாடினால் மழைபெய்யும் என்பது மக்களிடையே உள்ள நம்பிக்கையாகும்.

சுவாமி அம்பாள் சந்நிதிகள் கிழக்கு நோக்கியன. கோயிலின் உள்ளே உள்ள பாண்டியன் கோபுரத்தையும் சேர்த்து ஐந்து ராஜ கோபுரங்கள் உள்ளன. உமாதேவியார், விநாயகர், முருகன், திருமால், காளி, இலக்குமி, சரஸ்வதி, வேதம், வசிட்டர், உரோமேச முனிவர், ஐராவணம், சிவவாக்கியர், கபிலர், அகத்தியர், வரகுண பாண்டியன் முதலியோர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். மருத மரத்தின் கீழே **கட்டுண்ட கண்ணனின் உருவம்** உள்ளது. பக்கத்தில் காவிரி ஓடுகிறது.

மூலவர் மகாலிங்கேஸ்வரர் - அழகான மூர்த்தி. நிறைவான தரிசனம். அம்பாள் அழகிய கோலத்துடன் தரிசனம். அம்பிகை மௌனமாக இருந்து தவஞ்செய்த மூகாம்பிகை சந்நிதியும், மேரு பிரதிஷ்டையும் தரிசிக்கத் தக்கவை. கோயில் நன்கு பராமரிக்கப்பட்டுப் பொலிவுடன் திகழ்கிறது. தைப்பூசத்தில் சுவாமி காவிரிக்கு எழுந்தருளி ஐராவணத்துறையில் தீர்த்தம் கொடுப்பது சிறப்பாக நடைபெறுகிறது.

இத்தலத்திற்குக் கொட்டையூர்சிவக்கொழுந்து தேசிகர் பாடியுள்ள தலபுராணமும்; மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடியுள்ள

Koviloor Digital Library

'உலா'வும் உள்ளன. (தலபுராணம் - மருதவனப்புராணம்) இத்திருக் கோயிலில் ஆதித்தபிச்சன் என்பவனால் நிறுவப்பட்ட அறக் கட்டளைகள் **'பிச்சைக் கட்டளை'** என்றழைக்கப்படுகின்றன. இக் கட்டளை தருமையா தீனத்தின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றது. இக்கோயிலில் 149 கல்வெட்டுக்கள் உள. இவற்றுள் ஒரு கல்வெட்டிலிருந்து அந் நாளில் சுவாமி திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டுவர மண்குடங்களே பயன்படுத்தப்பட்டன என்னும் செய்தியை அறிகிறோம். கல்வெட்டில் இத்தலம் உய்யக்கொண்ட சோழவளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிடை மருதூர்' என்று குறிக்கப்பெறுகின்றது.

''பொங்குநூன் மார்பினீர் பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேத மோதனீர்
எங்கும் எழிலார் மறையோர்கண் முறையாலேத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.''

(சம்பந்தர்)

''சூலப்படையார்தாமே போலுஞ்
சுடர்த்திங்கள் கண்ணியுடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமும் தந்திரமும் ஆனார்போலும்
வேலைக் கடல்நஞ்சை யுண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக்கமழ் குழலாள் பாகர் போலும்
இடைமருதுமேவிய ஈசனாரே.''

(அப்பர்)

''முந்திச்செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்கனாகிக் கழிந்தன காலம்
சிந்தித்தே மனம் வைக்கவுமாட்டேன்
சிறுச்சிறிதே யிரப்பார்கட் கொன்றீயேன்
அந்தி வெண்பிறை சூடும் எம்மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தைநீ எனக்கு உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே.''

(சுந்தரர்)

எந்தையெந்தாய் சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ.

Koviloor Digital Library

(திருவாசகம்)

- யோகையுளந்
தேக்கும் வரகுணனாந் தென்னவன்கண்சூழ் பழியைப்
போக்கும் இடைமருதிற் பூரணமே

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில்
திருவிடைமருதூர் & அஞ்சல் - 612 104
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாட்டம்.

148/31. தென்குரங்காடுதுறை

ஆடுதுறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் இன்று **'ஆடுதுறை'** என்று வழங்குகின்றனர்.

மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் உள்ளதலம். தென்னலக் குடி (திருநீலக்குடி) யிலிருந்தும் பாதை செல்கிறது. 3 கி.மீ. தொலைவு. ஆடுதுறை பேருந்து நிலையத்திலிருந்து கும்பகோணம் சாலையில் சென்றால் சாலையோரத்தில் குளம் வருகிறது. அங்கு இடப்புறமாகத் திரும்பிச் (குளத்தையொட்டிச் செல்லும்) சாலையில் சென்று வலப்பக்க வீதியில் திரும்பினால் கோடியில் திருக்கோயில் உள்ளது. சுக்ரீவன் வழிபட்டதலம். கண்டராதித்தன் மனைவியார் கட்டிய கற்றளி.

இறைவன் - ஆபத்சகாயேஸ்வரர்

இறைவி - பவளக்கொடியம்மை

சம்பந்தர், - அப்பர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. நந்தி பலிபீடம் உள்ளது. முன்மண்டபத்தில் தலப்பதிக்கல்வெட்டுள்ளது. மறுபுறம் பள்ளியறையும் பக்கத்தில் அம்பாள் சந்நிதியும். இடப்பால் மூத்தபிள்ளையார் காட்சிதருகிறார். சற்று உள்ளடங்கிப் புராண

Koviloor Digital Library

மண்டபம் உள்ளது. வாயிலைக்கடந்து உள்ளே சென்றால் பிராகாரத்தில் நால்வர், விநாயகர், சிவலிங்கம், அம்பாள், சுக்ரீவன் அமைத்த சந்நிதி, விசுவநாதர், மயில்வாகனர், கஜலட்சுமி, நடராசர் சந்நிதி, சனீஸ்வரன், சூரியன், சந்திரன், நவக்கிரகம் ஆகியோர் காட்சி தருகின்றனர். அடுத்துள்ள மண்டபத்தில் செல்லும்போது மேலே முகப்பில் சுக்ரீவன் பெருமானை வழிபடுவதும், பக்கத்தில் ரிஷபாருடராய்க் காட்சி தருவதும் சுதையில் அமைக்கப்பட்டுள்ளன.

நேரே மூலவர் தரிசனம். திருமுறைக்கோயில் உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தன விநாயகர், அகத்தியர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, உள்ளனர். இங்குள்ள துர்க்கைக்கு விசேஷ அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. சுவாமி கருவறை அகழியமைப்புடையது. நாடொறும் நான்கு கால பூசைகள், சோழ, பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் இத்தலம் ''தென்கரைத் திரைமூர் நாட்டு திருக்குரங்காடுதுறை''; ''பூபாலகுலவல்லி வளநாட்டு திரைமூர் நாட்டு திருக்குரங்காடுதுறை'' எனக் குறிக்கப்படுகின்றது; சுவாமியைத் 'திருக்குரங்காடுதுறை மாதேவர்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

''பரவக்கெடும் வல்வினை யாரிடஞ்சூழ
இரவிற்புறங் காட்டிடை நின்றெரியாடு
அரவச்சடை யந்தணன் மேய அழகார்
குரவப்பொழில் சூழ்குரங்கா டுதுறையே''

(சம்பந்தர்)

''நற்றவஞ்செய்த நால்வர்க்கு நல்லறம்
உற்ற நன்மொழியால் அருள்செய்த நல்
கொற்றவன் குரங்காடு துறை தொழப்
பற்றுந் தீவினையாயின பாறுமே.''

(அப்பர்)

- நீக்கமிலா
நன்குரங்காணு நடையோரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே.'

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்
ஆடுதுறை & அஞ்சல் - 612 101
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

149/32. திருநீலக்குடி

தென்னலக்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

மக்கள் 'தென்னலக்குடி' என்று வழங்குகின்றனர். கும்பகோணம் காரைக்கால் சாலையில், கும்பகோணத்தை அடுத்துள்ளது. ஆடுதுறை யிலிருந்தும் தென்னலகுடிக்கு வரலாம். சாலையோரத்தில் கோயில் உள்ளது. பாற்கடலில் அமுதுகடைந்த காலத்தில் தோன்றிய நஞ்சை யுண்டு இறைவன் நீலகண்டராக எழுந்தருளி விளங்கும் தலமாதலின் திருநீலக்குடி என்றாயிற்று.

பஞ்சவில்வாரண்யக்ஷேத்திரம். வசிட்டர், காமதேனு, தேவமாதர் மார்க்கண்டேயர் வழிபட்ட சிறப்புடையது. திருவாவடுதுறை ஆதீனத்துத் திருக்கோயில். அப்பர் வாக்கில் 'நெல்லுநீள் வயல் நீலக்குடி' என்று வருவதற்கேற்ப சுற்றிலும் வயல்கள் உள்ளன.

இறைவன் - மனோக்ஞ நாதசுவாமி, வில்வாரண்யேசுவரர் பிரமநாயகர், நீலகண்டேஸ்வரர், தைலாப்பியங்கேசர், காமதேனு புரீஸ்வரர்.

இறைவி - அநூபமஸ்தனி (திருமணக்கோலம்)
பக்தாபீஷ்டதாயினி (தவக்கோலம்)

தலமரம் - பஞ்சவில்வம்

தீர்த்தம் - 1) தேவிதீர்த்தம் (எதிரில் உள்ள குளம்)
2) பாரத்வாஜதீர்த்தம் (வெளியில் உள்ள குளம்)
3) மார்க்கண்டேய தீர்த்தம் (உட் கிணறு)
4) பிரம தீர்த்தம் (கிணறு)
5) க்ஷீரகுண்டம் (காவிரிக் கரையோரம்)

அப்பர் பாடல் பெற்றது.

சாலையோரத்தில் கோவிலுள்ளது. முகப்பு வாயிலைக் கடந்ததும் நேரே மூலவர் தரிசனம். உட்பிரகாரத்தில் சூரியன், பிரம்மா வழிபட்ட பிரம்மலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், ஷண்முகர், விசுவநாதர், மகாலட்சுமி, தெய்விகப்பலாமரம், நவக்கிரகம், பைரவர் சந்நிதிகள்

Koviloor Digital Library

உள்ளன. இக்கோயிலில் இரு அம்பாள் சந்நிதிகள் அடுத்தடுத்து உள்ளன. மூலவர் - சிறப்பான, அதிசயமான மூர்த்தி.

இங்கு மூலவருக்குத் தைலாபிஷேகம் (எண்ணெய் அபிஷேகம்) விசேஷம். எவ்வளவு எண்ணெய் வார்த்துத் தேய்த்தாலும் அவ் வளவும் பாணத்திற்குள்ளேயே சுவறிப்போகும்; வெளியே வழியாது. தவமிருக்கும் அம்பாளே, சுவாமிக்குத் தைலாபிஷேகம் செய்வதாக ஐதீகம். ஆகவே அம்பாள் முன் எண்ணெய் வைத்துப் பின்பு எடுத்துச்சென்று சுவாமிக்குத் தேய்ப்பர். சித்திரை, மாசி, கார்த்திகையில் இந்த அபிஷேகம் செய்வது சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

இங்குள்ள பலாமரம் தெய்விகமானது. காய்க்குங் காலத்தில் நித்யபடியாக பலாச்சுளை நிவேதனமுண்டு. நிவேதித்த பலாச்சுளை யைச் சாப்பிடுவது நல்லது. ஆனால் நிவேதிக்காமல் பலாப்பழத்தையே வெளியில் எடுத்துக் கொண்டு போனால் நிச்சயமாக அப்பலாப்பழத்தில் வண்டுகள் உண்டாகிப் பழம் கெட்டுப் போவது இன்றும் கண்கூடான தொன்றாகும் என்று சொல்லப்படுகிறது. மேலும் இத்தலம் சிறந்த பிரார்த்தனையிடமாகும். மரணபயம், எமபயம் உடையோர் இத் தலத்திற்கு வந்து பெருமானைத் தொழுது எருமையோடு, நீலப்பட்டுத் துணி எள் முதலியவற்றைத் தானம் செய்தால் அப்பயம் நீங்கும். அவ்வாறே ராகு தோஷமிருந்தால் உளுந்து, நீலவஸ்திரம், வெள்ளி நாகர், வெள்ளிப் பாத்திரம் முதலியவைகளை இத்தலத்தில் தானம் செய்தால் அத்தோஷம் நிவர்த்தியாகும்.

இத்தலத்தில் நடைபெறும் சித்திரைப் பெருவிழா சிறப்புடையது. இவ்விழாவில் பன்னிரண்டாம் நாளில் சுவாமி பல்லக்கில் புறப்பட்டு ஏழூர் சென்று வருவது அற்புதமான காட்சியாகும். (ஏழூர்களாவன:- இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேச்சரம், திருபுவனம், திருவிடை மருதூர், மருத்துவக்குடி, திருநீலக்குடி). இத்தலத்தில் பெருமான் மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்திருப்பதால் திருவிழாக்காலத்தில் சுவாமிக்கு முன்னால் எதிர்முகமாக மார்க்கண்டேயர் செல்கின்றார். (மார்க்கண்டேயர் உற்சவமூர்த்தி உள்ளார்).

நாடொறும் நான்கு கால வழிபாடுகள் - குருக்கள் இல்லம் கோயிலின் பக்கத்தில் உள்ளது.

> ''கல்லினோடு எனைப்பூட்டி அமண்கையர்
> ஒல்லை நீர் புகநூக்க என் வாக்கினால்
> நெல்லு நீள் வயல் நீலக்குடி அரன்
> நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே''. *(அப்பர்)*

Koviloor Digital Library

- புன் குரம்பை
ஏலக்குடி புகுந்த எம்மனோர்க்கு உண்மைதரு
நீலக்குடி விலங்கு நிஷ்களமே.

(அருட்பா)

அஞ்சல் முவரி:-

அ/மி. மனோக்ஞ நாதசுவாமி திருக்கோயில்
திருநீலக்குடி & அஞ்சல் - (வழி) கும்பகோணம்
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம் - 612 108.

150/33. வைகல் மாடக் கோயில்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

ஊர் - வைகல். கோயில் - மாடக்கோயில். கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் பாதையில் திருநீலக்குடி தாண்டி, பழியஞ்சிய நல்லூர் கூட்ரோடு என்னுமிடத்தில் வலப்புறமாகப் பிரிந்து செல்லும் சாலையில் திரும்பி, "நாட்டார் வாய்க்காலைக் கடந்து, பழியஞ்சிய நல்லூரை அடைந்து, மேலும் 2 கி.மீ. அதே சாலையில் சென்றால் வைகலை அடையலாம். 'நாட்டார் வாய்க்கால்' மீது உள்ள பாலம் குறுகலானது. ஆதலின் பேருந்து செல்லாது - நடந்தே செல்ல வேண்டும். இத்தலத்தில் மூன்று கோயில்கள் உள்ளன:-

1) விசுவநாதர் ஆலயம்:- ஊரின் தென்பால் உள்ளது. 'வளநகர்' என்று இப்பகுதி வழங்குகிறது. (திருமால் வழிபட்டது).

2) பிரமபுரீசுவரர் ஆலயம் - தற்போது சிறப்பாக உள்ள கோயில். (பிரமன் வழிபட்டது)

3) வைகல்நாதர் ஆலயம் - இதுவே மாடக்கோயில். பாடல் பெற்றது.

இறைவன் - சண்பகாரண்யேஸ்வரர், வைகல்நாதர்

இறைவி - சாகாகோமளவல்லி, கொம்பியல் கோதை, வைகலாம்பிகை.

தலமரம் - சண்பகம். (தற்போதில்லை)

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்திருக்கோயில் இலக்குமி வழிபட்டது. சண்பகாரண்யம். நித்யவாசபுரம் முதலியன இத்தலத்தின் வேறு பெயர்கள். முகப்பு வாயிலைக் கடந்து சென்றால் பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், சனீஸ்வரன், சூரியன் சந்நிதிகள் உள்ளன. படிகளேறிச் சென்றால் நேரே மூலவர் தரிசனம். சுயம்புமூர்த்தி - அழகானபாணம். பக்கத்தில் கீழே தனியே அம்பாள் கோயில் உள்ளது.

கோயில் பாடல் பெற்ற பெருமையுடையதாயினும் இன்று சீரழிந்து காண்போர் நெஞ்சும் கலங்குமளவில் உள்ளது. பிராகாரச் சந்நிதிகள் கிலமாகவுள்ளன. பாதுகாப்பும் வசதியும் அற்று கோயில் பொலிவுகுறைந்து காணப்படுகிறது. தரிசிக்கும்போது உள்ளத்தில் மிஞ்சுவது கோயிலின் நிலையை எண்ணிவருந்தும் ஏக்கமே! குட முழுக்கு நடைபெற்றுப் பல்லாண்டுகள் ஆயினவாம். நாடொறும் ஒருகால வழிபாடு சிவாசாரியாரின் உள்ளத்து ஆர்வத்தால் நடை பெறுகிறது.

தற்போதுதான் திருப்பணிகள் செய்வதற்காக குழு அமைக் கப்பட்டு அறநிலையத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்பதே நம் பிரார்த்தனை.

''துளமதியுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதியுடையவர் வைகலோங்கி
வளமதி தடவிய மாடக் கோயிலே.''

(சம்பந்தர்)

- ''ஞாலத்து
நீடக்கோர் நாளுநினைந்தேத்திடும் வைகல்
மாடக் கோயிற்குண் மதுரமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வைகல்நாதர் திருக்கோயில்
வைகல் - மேலையூர் அஞ்சல்
(வழி) ஆடுதுறை - 612 101
தஞ்சை மாவட்டம்

தலம் - 32

Koviloor Digital Library

151/34. திருநல்லம்

கோனேரிராஜபுரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

(1) கும்பகோணம் - காரைக்கால் பேருந்துப்பாதையில் 'S.புதூர்' அடைந்து, அங்கிருந்து: வலப்புறமாகப் பிரிந்து செல்லும் சாலையில் (கோனேரி ராஜபுரம் என்று வழிகாட்டி உள்ளது) சென்று கோனேரி ராஜபுரம் கூட்ரோடினையடைந்து (கூட்ரோடில் பெயர்ப் பலகை யில்லை - விசாரித்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்); அங்கிருந்து இடப்புறமாகப்பிரிந்து ஊருக்குள் செல்லும் சாலையில் 1 கி.மீ. சென்றால் ஊரையடையலாம்.

(2) பேருந்தில் செல்வோர் கும்பகோணம் - வடமட்டம், ஆடு துறை - வடமட்டம் செல்லும் நகரப் பேருந்துகளில் சென்று கோனேரி ராஜபுரம் கூட்ரோடில் இறங்கி 1 கி.மீ. நடந்து சென்று ஊரை யடையலாம். கண்டராதித்தன் மனைவியான செம்பியன் மாதேவியின் திருப்பணிபெற்ற தலம். ஊர் செழிப்பாகவுள்ளது. "நலமார் மறையோர் வாழ் நல்லம் நகர்" என்னும் ஞானசம்பந்தரின் வாக்குக்கேற்ப அந்தணர்கள் மிகுதியாக, வளத்தோடு வாழ்கின்ற ஊராகத் திகழ்கின்றது. கோயில் ஊர்த் தொடக்கத்திலேயே உள்ளது.

இறைவன் - உமாமகேஸ்வரர், பூமீஸ்வரர், பூமிநாதர்.

இறைவி - தேகசௌந்தரி, அங்கவளநாயகி.

தலமரம் - அரசு

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ஊருக்குள் நுழையும்போதே கோயில், எதிரில் தீர்த்தத்துடன் காட்சியளிக்கின்றது. மேற்கு நோக்கிய சந்நிதி. குளக்கரையில் தலமரம் 'அரசு' உள்ளது. முகப்பு வாயில், தாண்டி உள்சென்றால் நீண்ட முன்மண்டபம் உள்ளது. இதன் மேற்பாகத்தின் உட்புற முழுவதும் அறுபத்துமூவர், சிவமூர்த்தம், பன்னிரண்டுராசிகள், மகரிஷிகள் முதலிய உருவங்கள் அனைத்தும் வண்ண ஓவியங்களாக எழுதப்பட்டுள்ளன.

கவசமிட்ட கொடிமரம், கொடிமரத்து விநாயகர், நந்தி, பலி பீடம் உள்ளன. பிராகாரத்தில் சண்முகர் சந்நிதி. இடப்பால் உள்ள வழியாகச்

Koviloor Digital Library

சென்றால் அம்பாள் சந்நிதியை அடையலாம் - தனிக் கோயில். அடுத்துள்ளது வைத்தியநாதர் சந்நிதி. புரூரவமன்னனின் குட்டநோயைத் தீர்த்த பெருமான் இவரே. இச்சந்நிதியில் ஜபம் செய்தால் பலமடங்கு பயனுண்டு எனப்படுகிறது. அடுத்துள்ளவை யாகசாலை மண்டபம், மகாகணபதி சந்நிதிகள். வலமுடித்து வாயில்கடந்து, உள்மண்டபம் சென்றால் இடப்பால் பிரம்மலிங்கம், சுப்பிரமணியர், மகாலட்சுமி, நடராசசபை, உற்சவத் திருமேனிகள் பாதுகாப்பறை - நால்வர், விநாயகர்கள், அகத்திய லிங்கம், நவக்கிரகங்கள் முதலியவை உள்ளன. சனிபகவான், பைரவர் தொழுது வாயிலைக் கடந்தால் மூலவர் தரிசனம். மூலவர் - சதுரபீடம், உயர்ந்த பாணம்.

அம்பாள் கோயில் அழகாகவுள்ளது. நின்ற திருக்கோலம். இக் கோயிலில் உள்ள நடராசமூர்த்தம் மிகப்பேரழகு - பெரிய உருவம். புகழ்பெற்ற மூர்த்தி. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர். தக்ஷிணா மூர்த்தி, அகத்தியர், ஜ்வரஹரர், லிங்கோற்பவர், கங்காதரர், அர்த்தநாரீஸ் வரர், துர்க்கை ஆகியோர் உளர். கோயில் நல்ல பொலிவு. பராமரிப்பு, கல்வெட்டில் இறைவன் 'திருநல்லம் உடையார்' என்று குறிக்கப் பட்டுள்ளார். இங்குள்ள கல்வெட்டுகள் இராசராசன், இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் காலத்தியவை. இவற்றிலிருந்து; (1) வேங்கிபுரம் முதலிப்பிள்ளை என்பவன் நன்கொடையால் கோயில் கட்டப்பட்ட தாகவும் (2) 'நக்கன் நல்லத் தடிகள்' என்பவனால் சண்டேசுவரர் உற்சவத் திருமேனி செய்து தரப்பட்டது என்றும் (3) குந்தவை பல நன்கொடைகளைக் கோயிலுக்குத் தந்துள்ளாள் என்றும் பல செய்திகள் (கல்வெட்டுகள் வாயிலாகத்) தெரிய வருகின்றன. தலபுராணம் சம்ஸ் கிருதத்தில் உள்ளது. காரணாகம முறைப்படிப் பூஜைகள் நடைபெறு கின்றன.

''கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாஎன்(று)
எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண் மூன்றும் வெந்து விழஎய்த
நல்லான் நமையாள் வான் நல்ல(ம்) நகரானே.''

(சம்பந்தர்)

''பொக்கம்பேசிப் பொழுது கழியாதே
துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர் நல்ல(ம்) நண்ணுதல் நன்மையே.''

(அப்பர்)

Koviloor Digital Library

- பாடச்சீர்

வல்லதமிழ்ப்புலவர் மன்னிவணங்குதிரு
நல்லம் மகிழ்இன்ப நவவடிவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பூமீஸ்வரர் திருக்கோயில்
(உமாமகேஸ்வரர்)
கோனேரி ராஜபுரம் & அஞ்சல் - கும்பகோணம் RMS 612 201
தஞ்சை மாவட்டம்.

152/35. திருக்கோழம்பம்

திருக்குழம்பியம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் திருக்குழம்பியம் - திருக் கொழம்பியம் என்று மாறியுள்ளது.

கும்பகோணம் - காரைக்கால் சாலையில் திருநீலக்குடியை அடுத்துள்ள "எஸ். புதூர்" வந்து, அங்கிருந்து திருக்குழம்பியத்திற்குச் செல்லும் தனிப்பாதையில் சென்றால் கோயிலையடையலாம். நரசிங்கன் பேட்டையிலிருந்தும் வரலாம். S.புதூருக்கு வடக்கில் 1 கி.மீ. தொலைவு.

பசுவின் காற்குளம்பு இடறியபோது வெளிப்பட்ட மூர்த்தி இவராதலின் "கோகிலேசுவரர்" என்று பெயர் வந்தது.

திருக்கொளம்பியம் - திருக்கோழம்பம் என்று திரிந்து அதுவும் மாறி இன்று வழக்கில் திருக்குழம்பியம் என்றாயிற்று.

அம்பிகை பசு வடிவங்கொண்டு, சாபநீக்கங்கருதிப் பல தலங்களையும் வழிபட்டவாறே திருவாவடுதுறைக்கு வரும்போது இத்தலத்தையும் அடைந்து வழிபட்டதாகத் தலவரலாறு கூறுகிறது. இந்திரன் வழிபட்ட தலம்.

இறைவன் - கோகிலேசுவரர், கோழம்பநாதர்

இறைவி - சௌந்தர நாயகி

Koviloor Digital Library

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரில் குளம். மகாமண்டபத்தில் நடராச சபை உள் பிராகாரத்தில் விநாயகர், அப்பர், முருகன், கஜலட்சுமி பைரவர் சந்நிதிகள்.

கோஷ்டத்தில் முறையான மூர்த்தங்களோடு நடராசரும், சட்டை நாதரும் பிட்சாடனரும் காட்சியளிக்கின்றனர். மூலவரின் ஆவுடை யாரில் பசுவின் குளம்பு காணப்படுகிறது. இக்கோயிலின் உற்சவ மூர்த்திகள் வேறு கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்நூலின் முன் பதிப்பில், இக்கோயிலைக் காப்பாற்ற எவருக்கு என்று மனம் வருமோ என்று முன் பதிப்பில் மனமுருகி எழுதியிருந்தோம். அதன் பலன் தற்போது; திருவாவடுதுறை தருமபுரம், சூரியனார் கோயில், திருப்பனந்தாள் காசிமடம் முதலிய குரு மகாசந்நிதானங்களின் அருள் முன்னிலையில் 24.8.1998ல் திருப்பணிகள் தொடங்கப் பெற்று; நிறைவுபெற்று அக்குருமகாசந்நிதானங்களின் அருள் முன்னிலையி லேயே 22.3.2000 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இத்திருப்பணிகளை ஏற்றுச் செய்துள்ள கோவை - Lic காலனி (சிட்கோநகர்) 14. ஏ எண்ணில் வாழும் அருட்செல்வர் திரு. ஆர். வசந்தகுமார் மற்றும் அவருக்குத் துணையிருந்தோர் அனைவரையும் நெஞ்சாரப் போற்றுகின்றோம்.

கோயில் குருக்கள் திருவாவடுதுறையில் சந்நிதி வீதியில் வசிக் கின்றார். அங்கிருந்து வந்து - காலை வேளையில் பூஜை செய்துவிட்டுப் போகிறார். ஆதலின் யாத்திரையாக வருபவர்கள் முன்கூட்டியே நாளும் நேரமும் தெரிவித்துவிட்டுச் செல்வதே நல்லதாகும்.

பராந்தகனின் மனைவி செம்பியன்மாதேவியால் கட்டப்பட்ட கோயில். இது தேரழுந்தூர் செயல் அலுவலரின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது.

''நீற்றானை நீள்சடைமேல் நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென் முலையாளையோர்
கூற்றானைக் குளிர் பொழிற் கோழம்பமேவிய
ஏற்றானை ஏத்துமின் உம்இடர் ஏகவே''.

(சம்பந்தர்)

''முன்னை நான் செய்த பாவமுதலறப்
பின்னை நான் பெரிதும் அருளப் பெற்றது
அன்னமார் வயற் கோழம்பத்து உள்ளமர்
பின்னல் வார்சடையானைப் பிதற்றியே''. *(அப்பர்)*

Koviloor Digital Library

- இல்லமயல்

ஆழம்பங் கென்ன அறிந்தோர் செறிந்தேத்துங்
கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கோகிலேசுவரர்/கோழம்பநாதர் திருக்கோயில்
திருக்கொழம்பியம் - எஸ். புதூர் அஞ்சல்
(வழி) கும்பகோணம் - RMS - 612 205
திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

153/36. திருவாவடுதுறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் சென்று இத்தலத்தை யடையலாம். சாலையில் ஆதீன வளைவு உள்ளது. திருவாவடுதுறை ஆதீனக் கோயில். அருகிலுள்ள இருப்புப்பாதை நிலையம் நரசிங்கன் பேட்டையாகும். இறைவி பசுவடிவில் வழிபட்ட பதி. ஆதீனமும் கோயிலும் ஒன்றையொன்று அடுத்துள்ளன.

Koviloor Digital Library

1) ஞானசம்பந்தர், தன் தந்தையின் வேள்விக்காக இறைவனிடம் பொற்கிழி பெற்றது; (2) சுந்தரர் உடற்பிணி தீரப் பிரார்த்தித்தது; (3) திருவிடைமருதூரின் பரிவாரத் தலங்களுள் நந்தித் தலமாக விளங்குவது; (4) தேவர்கள் 'படர் அரசு' ஆக விளங்க அதன்கீழ் இறைவன் எழுந்தருளியது; (5) திருமூலர் தங்கியிருந்து தவம்செய்து திருமந்திரம் அருளியது; (6) போகசித்தருடைய மாணவராகிய திருமாளிகைத் தேவர் பல அற்புதங்களை நிகழ்த்தியது; (7) சேரமான் பெருமான் நாயனார், விக்ரம பாண்டியன் ஆகியோர் வழிபட்டது; (8) முசுகுந்தனுக்கு மகப்பேறு அருளி இத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் காட்டியது (புத்திரத் தியாகேசர்) (9) சித்தர்க்கு அட்டமா சித்திகளை அருளியது; (10) தருமதேவதை இறைவனை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றது; (11) திருமூலர், திருமாளிகைத் தேவர் முதலிய மகான்களுடைய சமாதிகள் இருப்பது முதலிய எண்ணற்ற சிறப்புக்களையுடைய தலம்.

இங்குள்ள நந்தி மிகப்பெரியது. இறைவன் வீரசிங்க ஆசனத்திருந்து சுந்தர நடனம் ஆடி மகாதாண்டவம் புரிந்த தலமும் இதுவே. கோமுக்தி நகர், அரசவனம், முத்தி க்ஷேத்ரம், கோகழி, சிவபுரம், பிரமபுரம், அகத்தியபுரம், தருமநகர், கஜாரண்யம், நந்திநகர், நவகோடி சித்திபுரம் முதலியன இத்தலத்தின் வேறு பெயர்கள்.

ஆ+அடுதுறை = பசுக்கள் நிறைந்துள்ள காவிரிக் கரையிலுள்ள ஊர். சமஸ்கிருதத்தில் **கோமுக்திபுரம்** எனப்படும்.

இறைவன்	-	மாசிலாமணீசுவரர், கோமுக்தீஸ்வரர்
இறைவி	-	ஒப்பிலாமுலையம்மை, அதுல்யகுஜாம்பிகை
நந்தி	-	தருமநந்தி
தலமரம்	-	படர் அரசு
தீர்த்தம்	-	கோமுக்தி தீர்த்தம், பத்ம தீர்த்தம், கைவல்ய தீர்த்தம்
தலவிநாயகர்	-	துணைவந்த விநாயகர்

மூவர் பாடல் பெற்றது.

கோயில் கிழக்கு நோக்கியது. எதிரில் கோமுக்தி தீர்த்தம் உள்ளது. பசுவான உமைக்குத் துணையாக வந்த விநாயகர், முருகன் சந்நிதிகள். இரண்டாங் கோபுர வாயிலில் பெரிய நந்தியுள்ளது. பின்னால் உள்ள பலிபீடமே ஞானசம்பந்தருக்குப் பொற்கிழி அளித்த இடமாகும்.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இக்கோயிலில் நவக்கிரகம் இல்லை. தியாகேசர் கோயில் உள்ளது. தியாகேசர்,

Koviloor Digital Library

செம்பொன் தியாகர், புத்திரத் தியாகேசர், சொர்ணத் தியாகேசர் மூர்த்தங்கள் உள்ளன. திருமாளிகைத் தேவர் வாழ்ந்த இடமே ஆதீனமாகச் சொல்லப் படுகிறது. திருமாளிகைத்தேவர் ஆலயமுள்ளது. இதற்குப் பக்கத்தில் நமசிவாய மூர்த்திகள் கோயிலுள்ளது. இவருக்குப் பூசை நடைபெற்ற பின்னரே திருமடத்தில் நமச்சிவாய மூர்த்திக்குப் பூசை நடைபெறுவது வழக்கமாம். கோயிலின் மேற்குப் பிராகாரத்தில் திருமூலர் சந்நிதி உள்ளது.

திருமாளிகைத் தேவர்; நரசிங்கன் என்னும் மன்னனின் படைகளை, கோயில் மதிலில் உள்ள நந்திகளை உயிர் பெற்றெழச் செய்து விரட்டியமையால் இன்றும் கோயில் மதில்களில் நந்திகள் இல்லையென்று சொல்லப்படுகிறது.

ஆதீனக் கோயில். நன்கு பராமரிக்கப்பட்டுச் சிறப்பாகவுள்ளது. முதற் பராந்தகன் காலத்திய கல்வெட்டிலிருந்து புரட்டாசி விழாவில் ஒரு நாளில் திருமூலர் நாடகமும் - ஆரியக் கூத்தும் நடந்து வந்ததாகச் செய்தி தெரிய வருகிறது.

''இடரினும் தளிரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவே எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறையரனே. *(சம்பந்தர்)*

''மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வினானே
துஞ்சும் போதாகவந்து துணையெனக்காகி நின்று
அஞ்சல் என்றருள வேண்டும் ஆவடுதுறையுளானே''. *(அப்பர்)*

''மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை
வலிய வந்தெனையாண்டு கொண்டானே
கண்ணிலேன் உடம்பில்அடு நோயால்
கருத்தழித்து உனக்கே பொறையானேன்.
தெண்ணிலா எறிக்குஞ் சடையானே
தேவனே திருவாவடு துறையுள்
அண்ணலே எனை அஞ்சல் என்றருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே''. *(சுந்தரர்)*

- ''வீழும்பொய்
தீராவடுவுடையார் சேர்தற் கருந்தெய்வச்
சீராவடுதுறையெஞ் செல்வமே.'' *(அருட்பா)*

Koviloor Digital Library

க்ஷேத்ரக் கோவை பிள்ளைத்தமிழ்

தேவாதி தேவன்சொல்வேதாக மங்களைத்
திருமந்த்ர மாலையென்றே
திகழ்சமா தியிலிருந் துலகத்து எருள்விழி
திறந்தாண் டினுக்கொன்றெனும்
பாவாக வேசொன்ன பரமசிவ னானகுரு
பணியோக அட்டாங்கமும்
பகர்வரியசித்தியுந் திரிகால ஞானமும்
பரிபக்கு வர்க்கருளுவோன்
சேவேறுமொரு வனே பரமதத் துவமெனுந்
திருமூல் நாதன்மகிழ்வூர்
திருவிசைப் பாவென்னும் அதிமதுர கவிபாடு
திருமாளி கைத்தேவர் வாழ்
காவேரி சூழ்ந்ததிரு வாவடுது றைக்குமர
கனிவாயின் முத்தமருளே
கங்கா நதிச் சரவணத்துவளர் காங்கேய
கனிவாயின் முத்தமருளே.

அஞ்சல் முகவரி:-

அ/மி. மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்
திருவாவடுதுறை & அஞ்சல் - 609 803
(வழி) நரசிங்கன் பேட்டை மயிலாடுதுறை RMS.
நாகப்பட்டினம் மாவட்டம்.

154/37. திருத்துருத்தி

குத்தாலம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'குத்தாலம்' என்று வழங்குகின்றது. மயிலாடு துறை - கும்பகோணம் இருப்புப்பாதையில் உள்ள இருப்புப் பாதை நிலையம். தஞ்சாவூர், மயிலாடுதுறை முதலிய நகரங்களிலிருந்து இத்தலத்திற்குப் பேருந்து வசதிகள் உள்ளன. ஆற்றிடைக் குறையாக வுள்ள தலங்களுக்குத் 'துருத்தி' என்று பெயர் வழங்கப்படுகின்றது. இத்தலமும் ஆற்றிடைக்குறையில் அமைந்துள்ளதால் இப்பெயர் (துருத்தி) பெற்றது. முன் இருபுறம் சென்ற காவிரி தற்போது கோயிலின்

Koviloor Digital Library

வடபுறம் ஓடுகின்றது. ஒருவகை ஆத்திமரம் - 'உத்தால மரம்' தல விருட்சமாதலின் இத்தலம் 'உத்தாலவனம்' என்று பெயர் பெற்றது. இதுவே மருவி 'குத்தாலம்' என்றாயிற்று.

இறைவன் - உக்தவேதீஸ்வரர், சொன்னவாறு அறிவார்.

இறைவி - அமிர்த முகிழாம்பிகை, மிருது முகிழாம்பிகை பரிமள சுகந்த நாயகி அரும்பன்ன வன முலையாள்(ம்ருதமுகுளகுஜாம்பிகை)

தலவிநாயகர் - துணைவந்த பிள்ளையார்.

தீர்த்தம் - 1. காவிரி, 2. சுந்தர தீர்த்தம், 3. வடகுளம் (பத்மதீர்த்தம்) முதலியன.

தலமரம் - உத்தால மரம் (ஆத்தியில் ஒருவகை)

மூவர் பாடல் பெற்ற தலம்.

சுந்தரருக்கு உண்டான உடற்பிணி இத்தலத்தீர்த்தத்தில் (சுந்தர தீர்த்தத்தில்) நீராட நீங்கியது. தீர்த்தக்கரையில் சுந்தரர் கோயில் உள்ளது. ஐயடிகள் காடவர்கோன் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

மேற்கு நோக்கிய சந்நிதி. திருக்கோயில்; ஊரின் நடுவில் மிகவும் சிறப்புடன் விளங்குகிறது. இரு பிராகாரங்கள். இறைவன் மேற்கு நோக்கியும் இறைவி தெற்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர். தனித் தனிக்கோயில்கள். இராசகோபுரம் மேற்கு வாயிலாக உள்ளது.

இறைவனைப் பூசித்த அம்மைக்குக் காட்சிதந்த இறைவன் அம்பிகையின் கரம் பற்ற; அம்பிகை, தன் பெற்றோர் மகிழ விதிமுறைப் படி மணங்கொள்ளுமாறு வேண்டினார். இறைவனும் அதற்கிசைந்து 'நாமே விதித்த விதியின்படி நடந்து உம்மை மணங்கொள்வோம்' என்று அருள்புரிந்தார். இதனால் இறைவனுக்கும் 'சொன்னவாறு அறிவார்' என்று பெயர் வந்தது.

உமையை மணந்துகொள்ள வந்தவடிவம் 'மணவாள நாதர்'. பாதுகையாக வந்த வேதமே - குடையே - உத்தாலமரமாயிற்று. தலவிருட்சத்தின் அடியில் 'பாதுகை' வடிவில் உள்ளது. இதன் எதிர்ப்புறத்தில் - உமையம்மை, திருமணத்திற்கெனக் கோலங்கொண்ட திருமேனியாகிய 'நறுஞ்சாந்திளமுலை அம்மை' உருவம் உள்ளது. அம்பிகையை மணந்து கொள்ளவந்த இறைவனுக்குத் துணையாக வந்த விநாயகர் - 'துணைவந்த விநாயகர்' - இவரே தலவிநாயகர். இச் சந்நிதி, 'சொன்னவாறு அறிவார்' சந்நிதியிலுள்ளது. உமை வழிபட்டதும்;

Koviloor Digital Library

வருணன் வழிபட்டுச் 'சலோதரம்' என்னும் பிணி நீங்கியதும்; காளி வழிபட்டுப் பேறு பெற்றதும் தலச்சிறப்பாகும். மற்றும் காசிபன், ஆங்கிரசன், கௌதமன், மார்க்கண்டேயர், வசிஷ்டர், புலஸ்தியர், அகஸ்தியர் ஆகிய சப்தரிஷிகளும் வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றுள்ளனர்.

கார்த்திகை ஞாயிறு நாள்கள் இத்தலத்தில் விசேஷம். சூரியன் - கதிரவன் வழிபட்டுத் தவஞ்செய்த இடம் கதிராமங்கலம் என்றழைக்கப் படுகின்றது. ''ஆடுவார் பாவம் தீர்த்து அஞ்சனம் புலம்பித் திகழுமா காவிரி'' ஆலயத்தின் வடபால் ஓடுகின்றது. மற்றதாகிய சுந்தர தீர்த்தம் - பதும தீர்த்தம் என்றும் அழைக்கப்படும். இது ஆலயத்தின் வடமேற்கி லுள்ளது. இவை தவிர, இத்தலத்தைச் சுற்றிலும் அக்கினி தீர்த்தம், காளி தீர்த்தம், புண்டரீக தீர்த்தம், காம தீர்த்தம், கதிரவ தீர்த்தம், மார்க் கண்டேய தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன. இத்தலத்திற்குப் பக்கத்தில் திருவாவடுதுறை, தென்குரங்காடுதுறை, திருக்கோடிகா, சூரியனார் கோயில், கதிராமங்கலம், திருமணஞ்சேரி, திருப்பந்தணை நல்லூர், திருவேள்விக்குடி முதலிய தலங்கள் உள்ளன. ஆலயத்துள் அலங்காரமண்டபமும், காவிரிக் கரையில் தீர்த்தவாரி மண்டபமும் உள்ளன.

இத்திருக்கோயில் தருமையாதீனத்திற்குச் சொந்தமானது. நாடொறும் காரண, காமிக ஆகமங்களின் முறைப்படி பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. கல்வெட்டில் இத்தலம் 'வீங்குநீர் திருத் துருத்தியுடைய மகாதேவர்', உடையார் சொன்னவாறறிவார்'. 'திருக்கற்றளி மகாதேவர்' என்று குறிக்கப்படுகிறது. இத்தலபுராணம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களால் - திருத்துருத்திப் புராணம் - பாடப்பட்டுள்ளது. நாடொறும் ஐந்து கால பூஜை.

''துறக்குமாறு சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்கு மாறிலாதஎன்னை மையல்செய்து இம்மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்(டு)
இறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே''

(சம்பந்தர்)

''அள்ளலைக்கடக்க வேண்டில் அரனையே நினைமின் நீர்கள்
பொள்ளலிக் காயந்தன்னுள் புண்டரீகத்திருந்த
வள்ளலை வானவர்க்குங் காண்பரிதாக நின்ற
துள்ளலைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே''.

(அப்பர்)

Koviloor Digital Library

''மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந்தருவி
வெடிபடக் கரையொடுந் திரை கொணர்ந்தெற்றும்
அன்னமாங் காவிரி யகன்கரை யுறைவார்
அடியிணை தொழுதெழு மன்பராமடியார்
சொன்னவாறறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளாரடிகளைச் செடியனேன்நாயேன்
என்னைநான் மறக்குமாறெம் பெருமானை
யென்னுடம்படும்பிணி இடர்கெடுத்தானே''

(சுந்தரர்)

''உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே''

(திருவாசகம்)

''வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின் மேல்கொண்டிருந்து - கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான் பாதஞ் சேர்''

(ஐயடிகள் காடவர்கோன்)

''- பேராங்
கருத்திருத்தி யேத்துங் கருத்தர்க்கருள் செய்
திருத்துருத்தி யின்பச் செழிப்பே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. உக்தவேதீஸ்வரர் திருக்கோயில்
குத்தாலம் & அஞ்சல் - 609 801
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

155/38. திருவழுந்தூர்

தேரழுந்தூர், தேரழந்தூர்



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் தேரழுந்தூர், தேரழந்தூர் என்றெல்லாம் வழங்குகிறது. நகரப்பேருந்தும் (Town Bus) 'தேரழந்தூர்' என்ற பெயர் தாங்கியே செல்கிறது.

Koviloor Digital Library

(1) மயிலாடுதுறை, கும்பகோணம் சாலையில் வந்து, 'கோமல்' ரோடில் திரும்பிச் சென்றால் மூவலூரையடுத்துத் திருஅழுந்தூர் வருகிறது.

(2) கும்பகோணம், மயிலாடுதுறையிலிருந்து நகரப்பேருந்து செல்கிறது. கோயிலிலேயே இறங்கலாம்.

(3) குத்தாலத்திலிருந்தும் வரலாம்; பேருந்துகள் உள்ளன. இத்தலம் மயிலாடுதுறை - கும்பகோணம் இருப்புப் பாதையில் உள்ள நிலையம். ஊரின் தொடக்கத்திலேயே - 'கம்பர் நினைவாலயம்' என்னும் பெயர்ப்பலகையுள்ள இடத்தில் இடப்பக்கமாகத் திரும்பினால் வீதியின் கோடியில் திருக்கோயில் உள்ளது. வலப்புறமாகத் திரும்பிச் சென்றால் அவ்வீதியின் கோடியில் ஆமருவியப்பன் ஆலயமும் அதற்கு முன்பாகவே கம்பர் நினைவு மண்டபமும் உள்ளன. (கம்பர் கோட்டம்) இத்தலம் சைவம் வைணவம் இரண்டிற்கும் சிறப்புடையது.

கம்பர் அவதரித்த ஊர். அவர் வாழ்ந்த இடம் 'கம்பர்மேடு' என்று வழங்கப்படுகிறது. இவ்விடம் தொல் பொருள் ஆய்வுத்துறையின் கண்காணிப்பில் உள்ளது. அகத்தியர் இங்கு இறைவனை வழிபடுங்கால் அஃதையறியாத மன்னன் ஒருவன் வானவெளியில் செலுத்திச் சென்ற தேரானது, இவ்விடத்தில் அழுந்திய காரணத்தால் இத்தலம் தேர் - அழுந்தூர் = தேரழுந்தூர் என்று பெயர் பெற்றதாகச் சொல்கின்றனர்.

தமிழ்ச் சான்றோரான இரும்பிடர்த் தலையார் வாழ்ந்த தலம். வேதங்கள், தேவர்கள், திசைப்பாலகர்கள் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது. 'சந்தனவனம்' என்றும் இதற்குப் பெயர்.

இறைவன் - வேதபுரீஸ்வரர், அத்யாபகேசர்

இறைவி - சௌந்தரநாயகி

தலமரம் - சந்தனம்

தீர்த்தம் - வேதாமிர்த தீர்த்தம்.

விநாயகர் - ஞானசம்பந்த விநாயகர்

சம்பந்தர் பாடல் பெற்றது.

கோயில் அழகாகவுள்ளது. ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் பொலிவோடு விளங்குகிறது. மேற்கு நோக்கிய சந்நிதி. உள்ளே சென்றால் விசாலமான இடம். இடப்பால் ஸ்ரீ மடேஸ்வரர் ஆலயம்.

Koviloor Digital Library

வலப்பால் அம்பாள் சந்நிதி. அம்பாள் சுவாமி நோக்கியவாறு தரிசனம் தருகின்றாள். உட்பிராகாரத்தில் சுப்பிரமணியர், நவக்கிரகம் க்ஷேத்ர லிங்கம், கடம்பவனேஸ்வரர், முதலாகவுள்ள சிவலிங்க மூர்த்தங்கள், வலஞ்சுழி விநாயகர், சந்நிதிகள் உள்ளன. வலம் முடித்து உள்மண்டபத்துள் சென்றால் தலப்பதிகக் கல்வெட்டுள்ளது. மண்டபத்தின் மேற்புறத்தில் திசைப்பாலகர்களின் வண்ண ஓவியங்கள் உள்ளன. சுதையாலான துவார பாலகர்கள். நேரே மூலவர் தரிசனம்.

சித்திரையில் பெருவிழா. ஏனைய சிறப்பு விழாக்கள்:- ஆனித்திருமஞ்சனம், நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகைச் சோமவாரங்கள், ஆருத்ரா முதலியன. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தென்முகக் கடவுள், லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். நாடொறும் நான்குகால வழிபாடு. காவிரித்தாய்க்கும் அகத்தியருக்கும் தனிச் சந்நிதிகள் உள்ளன. மாசியில் நடைபெறும் புனர்வசு விழா சிறப்பானது. பக்கத்தில் உள்ள தலங்கள் குத்தாலம், ஆடுதுறை, மூவலூர் (வைப்புத்தலம்) முதலியன. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கல்வெட்டுக்களில் இத்தலம் ''ஜயங்கொண்ட சோழவள நாட்டுத் திருவழுந்தூர்'' என்றும்; இறைவனின் திருப்பெயர் ''திருவழுந்தூர் உடையார்'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டிலிருந்து சுவாமிக்கு நாடொறும் காவிரியிலிருந்து திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு வருவதற்குக் கட்டளை வைத்துள்ள செய்தி தெரிய வருகின்றது. 23.6.1999ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இங்குள்ள சௌந்தரநாயகி வழிபாட்டு மன்றம் சிறந்த பணிகளைச் செய்து வருகிறது.

''தொழுமாறு வல்லார் துயர் தீர நினைந்(து)
எழுமாறு வல்லார் இசைபாட விம்மி
அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்
வழிபாடு செய்மாமட மன்னினையே''.

(சம்பந்தர்)

''கம்பன் பிறந்தஊர் காவேரி தங்கும் ஊர்
கும்பமுனி சாபம் குலைந்தவூர் - செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தந்தையும் தேடிக்காணா
ஓதகத்தார் வாழும் அழுந்தூர்''.

(தனிப்பாடல்)

Koviloor Digital Library

- வருத்துமயல்
நாளுமழுந்தூர் நவையறுக்கும் அன்பருள்ளம்
நீளுமழுந்தூர் நிறைதடமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வேதபுரீஸ்வரர் திருக்கோயில்
தேரிழந்தூர் & அஞ்சல்
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம் - 609 808.

(மற்ற பெயர்ப்பலகைகள் எல்லாம் 'தேரழுந்தூர்' என்றிருக்க, அஞ்சல் நிலையப் பெயர் மட்டும் 'தேரிழந்தூர்' என்று மாறியுள்ளது. வியப்பாகவுள்ளது.)

156/39. மயிலாடுதுறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

சென்னை திருச்சி - இராமேஸ்வரம் மெயின்லைன் இருப்புப் பாதையில் உள்ள சந்திப்பு நிலையம். சென்னை, கடலூர், தஞ்சை, விழுப்புரம் முதலான பல ஊர்களிலிருந்தும் இத்தலத்திற்குப் பேருந்து வசதிகள் ஏராளமாகவுள்ளன. இத்தலத்தின் ஒரு பகுதியாகிய தருமபுரத்தில் தான் **தருமையாதீனம்** உள்ளது. ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகுமா? (மாயூரம் - மயிலாடுதுறை) என்னும் முதுமொழி இதன் சிறப்பை விளக்கும். காசிக்குச் சமமான ஆறுதலங்களுள் இதுவுமொன்று.

அம்பாள் மயில்வடிவில் வழிபட்ட தலம். அம்மை மயில் வடிவங் கொண்டு ஆடிய தாண்டவம் கௌரி தாண்டவம் எனப்படும். இத்தலம் இதனால் **கௌரி மாயூரம்** என்றும் பெயர் பெறும். சூதவனம், சிகண்டிபுரம், பிரமபுரம், தென்மயிலை என்பன இத்தலத்தின் வேறு பெயர்களாம். இந்திரன், பிரமன், வியாழபகவான், அகத்தியர், சப்த மாதாக்கள், உமாதேவி ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - மயூரநாதர்
இறைவி - அபயாம்பிகை
தலமரம் - மா, வன்னி
தீர்த்தம் - பிரமதீர்த்தம், காவிரி, ரிஷபதீர்த்தம்.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

(ஆவடுதுறையில் உலவாக்கிழி பெற்ற ஞானசம்பந்தர் அங்கிருந்தும் போந்து வழிபட்ட தலங்களுள் இஃதும் ஒன்று. திருத்துருத்தி வழிபட்டுப் பின்பு இங்குவந்து தொழுது, திருவிளநகர் சென்றார். கோலக்கா வரை வந்து ஞானசம்பந்தர் வழியனுப்ப அப்பர் சோழ நாட்டுத் தலயாத்திரையைத் தொடங்கியபோது திருச்செம்பொன்பள்ளி தொழுத பின்பு இங்கு வந்தார்.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குரியது. இங்கு உள்ள முருகன் சந்நிதி - குமரக்கட்டளை மட்டும் தருமையாதீனத்திற் குரியது. மிகப்பெரிய கோயில். ராஜகோபுரம் ஒன்பது நிலைகளுடனும், அழகான சிற்பங்களுடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. உட் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. ராஜ கோபுரத்துள் நுழைந்ததும் இடப்பால் திருக்குளம். வலப்பால் குமரக்கட்டளை அலுவலகம்.

பிராகாரத்தில் இடப்பால் குமரக்கட்டளைக்குரிய (தருமையாதீனத் திற்குரியதான) ஆஸ்தான மண்டபம் உள்ளது. மண்டபத்தில் இருபுறமும் விநாயகர் சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. மண்டபத்தில் இரு கொடிமரங்கள் உள. நேரே பார்த்தால் சுவாமி சந்நிதி தெரிகிறது. வாயிலை தாண்டிச் சென்றால் உட்சுற்றில் இடப்பால் சந்திரன், **மயிலம்மை** சந்நிதிகளும்; வலப்பால் உற்சவ மூர்த்தங்களின் பாது காப்பறையும், இடப்பால் நால்வர், சப்த மாதாக்களைத் தொடர்ந்து அறுபத்துமூவர் உற்சவத் திருமேனிகளும், இந்திரன் அக்கினி எமன் நிருதி ஆகியோர் வழிபட்ட இலிங்கங்களும், மகாவிஷ்ணுவும், வருணன் வாயு வழிபட்ட லிங்கங்களும், மகாலட்சுமியும், அஷ்டலட்சுமியும் நமக்குக் காட்சி தருகின்றனர். திருமுறைக்கோயில் தனிச் சந்நிதியாக வுள்ளது. நடராச சபையில் உள்ள அம்பலவர் திருமேனி மிகவும் கம்பீரமாகக் காட்சி தருகிறது. அருணாசலேஸ்வரர், நவக்கிரக சந்நிதி, சனிபகவான், சூரியன் ஆகியோரை வழிபட்டு மேலே சென்று துவார பாலகரைத் தொழுது உட்சென்றால் மூலவர் தரிசனம்.

கோஷ்டத்தில் நர்த்தனகணபதி, ஜ்வரதேவர், ஆலிங்கன சந்திர சேகரர், தட்சிணாமூர்த்தி, பிரமன், பிட்சாடனர், கங்காவிசர்சனர் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதி தனியாகவுள்ளது. அபயாம் பிகை சதகப் பாடற் கல்வெட்டு உள்ளது. உள் மண்டபத்தில் அனவித் யாம்பிகை சந்நிதியில் சிவலிங்கம் உளது. இத்திருமேனிக்குப்புடவை சார்த்தப்பட்டுள்ளது. ஆடிப்பூர அம்மன் தரிசனம். அபயாம்பிகைக் கீர்த்தனைகளும் கல்லிற் பதிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

அம்பாள் நின்ற திருமேனி - அழகான திருக்கோலம். இத்தலத்துக் காவிரித் துறையில் (ஐப்பசி) துலா நீராடுதல் மிகவும் விசேஷமானது அங்கு காசி விசுவநாதர், விசாலாட்சி கோயிலுள்ளது. உத்தரமாயூரம் எனப்படும் வள்ளலார் கோயில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. இங்கு மேதாதட்சிணாமூர்த்தி, ரிஷபதேவருக்கு உபதேசிக்கும் மூர்த்தி யாக (யோகாசனத்தில் அமர்ந்து ஞான முத்திரையுடன்) எழுந்தருளி யுள்ளார். கடைமுழுக்கு நாளன்று (ஐப்பசி இறுதி நாள்) இங்குள்ள எல்லாக் கோயில்களிலுமுள்ள மூர்த்திகளும் உலாவாக எழுந்தருளி வந்து மயூரநாரதரோடு தீர்த்தம் கொடுக்கும் சிறப்பு, மிகவும் விசேஷ மான திருவிழாவாக நடைபெறுகிறது. ஐப்பசிப் பெருவிழாவில் மயிலம்மை வழிபாட்டு ஐதீகமும் வைகாசியில் சஷ்டி விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

நாடொறும் ஆறுகால வழிபாடுகள். கந்தபுராணத்தில் வழிநடைப் படலத்தில் இத்தலம் பற்றிய குறிப்பு வந்துள்ளது. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் தலபுராணமும், அபயாம்பிகை மாலையும், அபயாம்பிகை அந்தாதியும் பாடியுள்ளார். நல்லத்துக்குடி கிருஷ்ணய்யர் என்பவரும் அபயாம்பிகை சதகம் பாடியுள்ளார். கல்வெட்டில் இத்தலத்திறைவன் 'மயிலாடுதுறை உடையார்' என்று குறிக்கப் பெறுகின்றார்.

'ஊனத்திருள் நீங்கிடவேண்டில்
ஞானப்பொருள் கொண்டடியேனும்
தேனொத்தினியான மருஞ்சேர்
வானம் மயிலாடுதுறையே' *(சம்பந்தர்)*

'குறைவிலோம் கொடு மானுட வாழ்க்கையால்
கறைநிலாவிய கண்டன் எண்தோளினன்
மறைவலான் மயிலாடுதுறை யுறை
இறைவன் நீள்கழல் ஏத்தியிருக்கிலே.' *(அப்பர்)*

க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்

ஐந்தரு வெனுங்கற்ப கச்சோலை வருகஅறி
வானந்த வெள்ளம்வருக
அனந்தகல் யாணமே ருகிரி வருகவே
அங்கையா மலகம்வருக
சிந்தையில் மகோதயஞ் செய்திருளை நீக்கிடும்
சிவஞான பானுவருக
செனனவெப் பந்தணிக் குங்கோடி மதிவருக
தித்திக்கு மமுதம்வருக

Koviloor Digital Library

எந்தையே வருகஎனை ஈன்றதா யேவருக
என்கண்மணி வருகவருக
எண்ணனந் தங்கோடி மன்மதா காரமாம்
என்றுமிளை யோன்வருகவே
மைந்தனே வருகமணி யேவருக வள்ளலே
வருகவைப் பேவருகவே
மாயூர நகர்மேவு கேயூர மணிபுய
மயூரவா கனன்வருகவே.

(சிதம்பரநாத முனிவர்)

அபயாம்பிகை சதகம்

கனிந்து கனிந்துன் றனைப்பாடிக்
கசிந்தே இருகண் புனல்பெருகக்
காது உபயம் உனதருளாம்
கதையைக் கேட்க உனதடியார்
இனந்தான் உறவாய் மனம்புதைய
எந்த நாளும் அவர் இருந்த
இடத்தை இருதாள் சுற்றிவர
இரவும் பகலும் நினதருளை
நினைந்த படியே சிந்தைசெயும்
நெறியை உதவி எனைக்காப்பாய்
நித்யா னந்தப் பழம் பொருளே
நிமலி அமலை புகழ்விமலி
வனைந்த சடலத் தொழில்உனது
அடிக்கே இதமாய் அருள்புரிவாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே.

(நல்லத்துக்குடி கிருஷ்ணசாமி ஐயர்)

- வேளிமையோர்

வாயூரத்தேமா மலர்சொரிந்து வாழ்த்துகின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. மயூரநாதசுவாமி திருக்கோயில்
மயிலாடுதுறை & அஞ்சல் 609 001
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR 36933

Koviloor Digital Library

157/40. திருவிளநகர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் பொறையாறு சாலையில் 6 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து செல்கிறது. அருள்வித்தன் என்னும் அந்தணன் நாடொறும் இறைவனுக்கு மாலை கட்டிக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வந்தான். இவனுக்கு அருள விரும்பிய இறைவர், ஒருநாள் அவன் தன் தொண்டில் நின்று ஆற்றைக் கடக்கும் போது, வெள்ளம் பெருகி; வாயளவாய் பெருகிட, அப்போதும் அவ்வந்தணன் மலர்க் கூடையை இருகைகளால் நீந்த முடியாமலும், மலர்க் கூடையை விடாமலும், பற்றியவாறே விரைந்து வந்து கொண்டிருந்தான். அவனுடைய உறுதியையும், அன்பையும் கண்ட இறைவன் அவனுக்கு அருள் சொரிந்து துறைகாட்டி அவனைக் கரையேறச் செய்தார். பின்னர், திருஞானசம்பந்தர் 'திருக்கடைமுடி' வணங்கி, மயிலாடுதுறை வந்து மயூரநாதரை வணங்க விரும்பி, ஆற்று வெள்ளங்கண்டு அஞ்சி, கடக்கமுடியாது வருந்தி நின்று; 'துறை காட்டுவார் எவரேனும் உளரோ' என்று உள்ளத்து உன்னினார். அப்போது இறைவனே வேடனாக வந்து தோன்றித் தாம் அழைத்துப் போவதாகச் சொல்லி அழைத்துச் சென்றான். காவிரி வெள்ளமும் ஞானசம்பந்தரின் பாதத்து அளவே ஆயிற்று. கரையேறிய ஞான சம்பந்தர், தன்னை அழைத்து வந்த வேடன் மறைந்தது கண்டு அதிசயித்து, வந்தவர் இறைவனே என்றுணர்ந்து, 'துறைகாட்டும் வள்ளலோ' என்று வணங்கிப் போற்றினார். இவ்வரலாற்றை ஞான சம்பந்தர் தேவாரம் நன்கு விளக்கும்.

இறைவன் - துறைகாட்டும் வள்ளல், உசிரவனேஸ்வரர்

இறைவி - வேயுறுதோளி

தீர்த்தம் - மெய்ஞ்ஞான தீர்த்தம்

சமபந்தர் பாடல் பெற்றது.

ஊருக்கு 'விழல்' என்று பெயர். இதுவே பின்னர் (விழல் நகர்) விளநகர் என்றாயிற்று. உசிரம் : விழல்.

கபித்தன் என்னும் மன்னன் வழிபட்டுப் பிரமகத்திதோஷம் நீங்கப் பெற்ற தலம்.

Koviloor Digital Library

இத்திருக்கோயிலுக்குத் தலபுராணம் உள்ளது. இக்கோயிலுக்கு நான்கு பக்கங்களிலும் நான்கு (இறைவர்) வள்ளல்களாக வீற்றிருப்ப தாகத் தலபுராணம் கூறும். அவை - மயூரநாத வள்ளல், மயிலாடு துறையில் நடுவில் வீற்றிருக்க, கிழக்கே திருவிள நகரில் துறைகாட்டும் வள்ளல், தெற்கே பெருஞ்சேரியில் மொழிகாட்டும் வள்ளல், மேற்கே மூவலூரில் வழிகாட்டும் வள்ளல், வடக்கே உத்தர மயிலாடுதுறையில் கைகாட்டும் வள்ளல் (தட்சிணாமூர்த்தி) என நால்வர் இறைவர் உள்ளனர் என்பதாகும்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில். பூஜைகளும் வழிபாடுகளும் விழாக்களும் முறையாக நடைபெறுகின்றன. தஞ்சை நாய்க்கர் மன்னர் அச்சுதப்ப நாய்க்கர் காலத்தில் கோயிலில் பல திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. கல்வெட்டில் இறைவன் 'துறைக் காட்டுத் தம்பிரானார்; 'துறைநாட்டுவான்' எனும் பெயர்களால் குறிக்கப்படுகின்றார். உத்தமச்சோழன் மனைவி இக்கோயிலின் அர்த்த சாமக்கட்டளைக்கு நிவந்தம் வைத்த செய்தியைக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

கையிலங் கிய வேலினார் தோலினார் கதிகானார்
பையிலங்கர வல் குலாள் பாகமாகிய பரமனார்
மையிலங் கொளி மல்கிய மாசிலாமணி மிடறினார்
மெய்யிலங்கு வெண்ணீற்றினார் மேயது விளநகரதே

(சம்பந்தர்)

- தேயா
''வளநகர் என்றெவ்வுலகும் வாழ்த்தப்படுஞ்சீர்
விளநகர் வாழ் எங்கண் விருந்தே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. உசிரவனேஸ்வரர் திருக்கோயில்
திருவிளநகர் -
(வழி) மன்னம்பந்தல் - 609 305
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

158/41. திருப்பறியலூர்

(கீழப்) பரசலூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் **கீழப் பரசலூர்** என்று வழங்குகின்றது.

வீரட்டேஸ்வரர் கோயில் என்று கேட்டால்தான் மக்கள் எளிதில் புரிந்து கொள்கிறார்கள். மயிலாடுதுறை - தரங்கம்பாடி பாதையில், 'செம்பொன்னார் கோயிலை, அடைந்து, அவ்வூர் மெயின் ரோட்டில் நல்லாடை' என்று கைகாட்டி காட்டும் பாதையில் (வலப்புறமாக) சிறிது தூரம் சென்று, 'பரசலூர்' என்று கைகாட்டி உள்ள இடத்தில் பிரியும் சாலையில் (வலப்புறமாக) திரும்பி 2 கி.மீ. செல்லவேண்டும். இப்பாதை ஒரு வழிப்பாதை - குறுகலானது. இதன் வழியே சென்றால் கோயிலை அடையலாம். கோயில் சாலையோரத்தில் உள்ளது.

அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. வீரபத்திரை ஏவித் தக்கனைச் சம்ஹரித்த தலம். தருமையாதீனத் திருக்கோயில்.

தக்கன் யாகம் செய்த தலமாதலின் தக்ஷபுரம் என்றும்; தேவர்களுக்கு ஏற்பட்ட பாவத்தைத் தண்டனைமூலம் பறித்ததால் 'பறியலூர்' என்றும் பெயர்களுண்டு.

இறைவன் - வீரட்டேஸ்வரர், தக்ஷபுரீஸ்வரர்.

இறைவி - இளங் கொம்பனையாள்,

தலமரம் - வில்வம். (பலா என்றும் குறிப்பிடப்படுகின்றது).

தீர்த்தம் - உத்தரவேதி தீர்த்தம். கோயிலின் பக்கத்தில் உள்ளது.

சம்பந்தர் பாடியது.

சிறிய கிராமம். பழைமையான கோயில். மேற்கு நோக்கியது. ராஜகோபுரம் இல்லை, முன்னால் இரும்புப்பந்தல் போடப்பட்டுள்ளது. கோயில் எதிரில் சாலையில் (மறுபுறத்தில்) விநாயகர் கோயில் உள்ளது. கொடிமரம் இல்லை. நந்தி, பலிபீடம் உள்ளன. கொடிமர விநாயகர் உள்ளார். இங்கிருந்து பார்த்தாலே மூலவர் சந்நிதி தெரிகின்றது. வலம் வந்து உள் பிராகாரம் நுழைந்தால் விநாயகர், விசுவநாதர், பைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

கோஷ்ட மூர்த்தங்களாகத் துர்க்கை, பிரம்மா, லிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி, நர்த்தனவிநாயகர் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. கருவறைச்சுவரில், தக்கன் சிவலிங் கத்தைப் பூசிக்கும் சிற்பம் உள்ளது. விநாயகரையும், நால்வரையும் வணங்கி, உள்நுழைந்து மண்டபத்தில் இடப்பால் உள்ள தக்ஷ சம்ஹார மூர்த்தியைத் தரிசிக்கலாம். எதிரில் சாளரவாயில் உள்ளது. சூலம், தண்டு, வாள், மணி, கபாலம் வாள் முதலியன ஏந்திய ஆறு திருக்கரங் களுடன் இம்மூர்த்தி (உற்சவத்திருமேனி) காட்சி தருகின்றார். கீழே செப்புத் தட்டில் தக்கன் யாகம் செய்வது போலவும் பிரமன் இருப்பதுபோலவும் சிற்பம் உள்ளது.

இம்மூர்த்தியின் திருவடியில் தக்கன் வீழ்ந்து கிடப்பதைப்போன்று சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இதைத் தகட்டால் மூடிவைத்துள்ளனர். சிவாசாரியரிடம் கேட்டு, அத்தகட்டைத் தள்ளச் செய்து, இச்சிற்பத்தைக் கண்டு தரிசிக்கலாம். சம்ஹாரமூர்த்திக்குப் பக்கத்தில் நடராச சபை யுள்ளது. மூலவர் பெரிய திருமேனி - சுயம்பு - சதுர ஆவுடையார். கோமுகம் மாறியுள்ளது. மண்டபத்தில் உற்சவத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மயில்மீது ஒரு காலூன்றி நிற்கும் முருகன், சோமாஸ்கந்தர், விநாயகர். பிரதோஷ நாயகர் முதலியன சிறப்பாகவுள்ளன.

வெளிமுன் மண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். இக் கோயிலில் நவக்கிரகங்கள் ஒன்பதும் இல்லை. சூரியன் மட்டுமே உள்ளார். இங்கு அர்த்தசாம வழிபாடு பைரவருக்கு நடத்தப்படுகின்றது.

கார்த்திகை ஞாயிறு நாள்களில் சுவாமி புறப்பாடு நடை பெறுகிறது. திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீ லஸ்ரீ வேலப்ப தேசிக சுவாமிகள் அருளிச் செய்துள்ள தலபுராணம் உள்ளது. சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலக் கல்வெட்டில் இத்தலம் ''ஜயங் கொண்ட சோழவளநாட்டு வீழைநாட்டு ராஜ நாராயண சதுர்வேதி மங்கலமான பறியலூர்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் 'திருவீரட்டான முடையார்', 'தக்ஷேஸ்வரமுடையார்' என்று குறிக்கப் பெற்றுள்ளார்.

''விளங்கொள் மலர்மேல் அயன் ஓதவண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத் தழலாய் நின்றான்
இளங் கொம்பனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப் பறியல் வீரட்டத்தானே''. *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

- ''இளமைச்
செறியலூர் கடந்தற் றிருவனையாராடும்
பறியலூர் வாழ் மெய்ப்பரமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வீரட்டேஸ்வரர் திருக்கோயில்
கீழ்ப்பரசலூர் - பரசலூர் அஞ்சல் - 609 309
(வழி) செம்பனார் கோயில்
தரங்கம்பாடி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

159/42. திருச்செம்பொன்பள்ளி

செம்பனார் கோயில்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் செம்பனார் கோயில் என்று வழங்குகின்றனர்.

1) மயிலாடுதுறையிலிருந்து பொறையாறு செல்லும் பேருந்துப் பாதையில் உள்ளது.

2) மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்து செல்கிறது. 10 கி.மீ. தொலைவு.

இறைவன் - சொர்ணபுரீஸ்வரர், தேவப்பிரியர், சுவர்ணலட்சுமீசர், செம்பொன்பள்ளியார்.

இறைவி - மருவார்குழலி, புஷ்பாளகி, தாக்ஷாயணி, சுகுந்தகுந்தளாம்பிகை, சுகந்தவனநாயகி,

தீர்த்தம் - சூரிய தீர்த்தம், காவிரி

தலமரம் - வன்னி, வில்வம் (சுவாமி அம்பாள் சந்நிதிகளிடையே வன்னியும் வடக்குச் சுற்றில் வில்வ மரமும் உள்ளன.)

சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்றது.

வசிட்டர், அகத்தியர், பிரமன் இந்திரன் குபேரன் வழிபட்ட தலம்.

Koviloor Digital Library

கோயில் அழகுறச் சோலை நடுவே அமைந்துள்ளது. நெடுஞ் சாலையில் அமைக்கப்பட்டுள்ள தேவஸ்தான வளைவை (Arch)ப் பின்பற்றிச் சென்றால் கோயிலை அடையலாம். கிழக்கு நோக்கிய ஆலயம். கோயிலுக்குப் பக்கத்தில் தீர்த்தம் உளது. இத்தலம் தாக்ஷாயணிக்கு அருள்புரிந்ததும், வீரபத்திரர் தோன்றியதுமாகிய சிறப்பினையுடையது.

இத்தலத்திற்கு இலக்குமிபுரி என்றும் பெயருண்டு. இந்திரன் நீராடி வழிபட்டு விருத்திராசுரனைக் கொல்ல வச்சிராயுதம் பெற்ற தலம். இதனால் இந்திரபுரி என்றும் பெயர். கந்தபுரி என்ற பெயருமுள்ளது.

கிழக்கு நோக்கிய திருவாயில். கோச்செங்கட் சோழன் திருப்பணி. கீழே பதினாறும் மேலே பதினாறும் இதழ்களையுடைய தாமரை போன்ற ஆவுடையில் மூலவர் - இலிங்கத் திருமேனி - சுயம்பு மூர்த்தமாகக் காட்சி தருகிறார். வட்டவடிவமான ஆவுடையார் உள்ள திருமேனி திருமாலாலும், சதுர வடிவுடைய ஆவுடையாருள்ள திருமேனி பிரமனாலும் பூசிக்கப்பட்டதாகும்.

அர்த்த மண்டபத்தில் துவாரபாலகர்கள் உளர். ஸ்தபன மண்டபத்தில் சோமாஸ்கந்தர், நடராஜர், சந்திரசேகர் முதலிய உற்சவத் திருமேனிகள் உள்ளன. இங்குள்ள பிட்சாடனத் திருக்கோலம் மிகப்பழைமையானது. மகாமண்டபத்தில் விநாயகர், சூரிய சந்திர லிங்கங்கள், சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. தெற்குச்சுவரில் துறவி ஒருவரோடும் அமைச்சர் ஒருவரோடும் நின்று வழிபடும் அரசனின் உருவம் உள்ளது.

தேவி சந்நிதி தனியே உள்ளது. தெற்கு நோக்கிய சந்நிதி. இத்தலத்திற்கு தென்மேற்கேயுள்ள பறியலூரில் தந்தையான தக்கன் செய்த வேள்விக்குச் செல்லும் கோலத்தில் மேற்கு நோக்கியிருப்பதாகச் செவிவழிச் செய்தி சொல்லப்படுகிறது. அம்பிகைக்கு ஆலயத்தின் தென்மேற்கில் சப்தகன்னிகையர் கோயில் உள்ளது. மேற்கில் தலவிநாயகர் - பிரகாசப் பிள்ளையார் உள்ளார். மற்றும் வனதுர்க்கை, விசுவநாதர், சீனிவாசப்பெருமாள், சிபிகாட்சிநாதர் எனப்படும் மான்மழுவேந்திய சிவபெருமான், உருத்திராக்கமாலையும் சக்தி ஆயுதம் தரித்த நான்கு கைகளையுடைய பாலசுப்பிரமணியர், கஜலட்சுமி, ஜோஷ்டாதேவி, வீரபத்ரர், சூரியர், பைரவர் முதலிய மூர்த்தங்களும் ஆலயத்தில் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்கள்: இந்திர கணபதி, தக்ஷிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், துர்க்கை. சித்திரை மாதம் 7ஆம் நாள் முதல் 18ஆம் நாள் முடிய சூரிய ஒளி சுவாமிமீது படுவதாகச்

Koviloor Digital Library

சொல்லப்படுகிறது. இந்நாள்களில் விடியற்காலையில் சூரிய வழிபாடு நடைபெறுகிறது.

இக்கோயிலில் சோழர் காலத்திய ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. இவை மூன்றாம் குலோத்துங்க சோழன், ராஜாதிராஜசோழ தேவர், தஞ்சை சரபோஜி மன்னர் காலத்தியவை.

நவக்கிரக தோஷத்திற்கு இத்தல வழிபாடு சிறந்த பரிகாரமாக இன்றும் சொல்லப்படுகிறது. இக்கோயிலின் அமைப்பு முறை ஜேஷ்டாதேவியின் பிரதிஷ்டை முதலியவைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது இக்கோயில் கி.பி 879-907 வரை அரசாண்ட முதலாம் ஆதித்த சோழன் செய்த திருப்பணியாகக் கருத இடமுண்டு என்னும் செய்தி இவ் ஆலயத் தலவரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் திருப்பணிகள் செய்யப் பட்டுள்ளன. 24.6.1999ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

இத்தலத்தில் துர்க்கை வழிபாடு விசேஷமானது.

இவ்வூரில் 8.2.1965ல் தோற்றுவிக்கப்பட்ட 'மணிவாசக மன்றம்' மிகச் சிறப்பான தெய்விகப் பணிகளைச் செய்து வருகிறது. கடந்த 35 ஆண்டுகளாக வெள்ளிக்கிழமை தோறும் வார வழிபாடு மன்றம் வாயிலாக நடைபெறுகிறது. நால்வர் பெருமக்களின் குருபூஜைகளை நடத்துதல், மணிவாசகர் குருபூஜையைச் சிறப்பாக ஆண்டு விழாவாகக் கொண்டாடுதல், பள்ளிக்குழந்தைகட்குப் பரிசளித்தல், தல வரலாறு பதிகங்கள் வெளியிடுதல், தலயாத்திரை மேற்கொள்ளல் முதலிய பணிகளை மன்றம் சிறப்பாகச் செய்து வருகிறது. இம் மன்றத்தின் பெரும் முயற்சியால் செம்பொன்பள்ளிக் குடமுழுக்கு 24.6.1999ல் சிறப்பாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பிரதோஷ வழிபாடும் - நடராசர் அபிஷேகங்களும் - கார்த்திகைச் சோமவார வழிபாடுகளும் நன்கு நடைபெற்றுவருகின்றன. இம்மன்றத்தின் செயலர் கவிக்குரிசில் ''தென்னவன்'' என்று புகழப்படும் திரு. சி. தட்சிணாமூர்த்தி அவர்கள் ''மருவார் குழலி விருத்த மணி மாலை'' பாடி அதை மன்றம் 1978ல் வெளியிட்டுள்ளது.

'செம்பனார் கோயில் மணி வாசக மன்றம்' அப்பகுதியில் மிகச் சிறந்த பணிகளைச் செய்து வருகிறது. மன்ற அன்பர்களின் மேலான ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியதாகும். பேராசிரியர் திரு. தா. மா. வெள்ளைவாரணம் அவர்கள் சிறப்புத் தலைவராக இருந்து

Koviloor Digital Library

மணிவாசக மன்றத்தை நெறிப்படுத்தி, அனைவரும் போற்றத்தக்க வகையில் நடத்திச் செல்கின்றார்.

''மருவார் குழலி மாதொர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே''.

(சம்பந்தர்)

''தந்தையும் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி
முந்திய தேவர்கூடி முறைமுறை இருக்குச் சொல்லி
எந்தை நீ சரணம் என்றங்(கு) இமையவர் பரவிஏத்தச்
சிந்தையுள் சிவமதானார் திருச் செம்பொன் பள்ளியாரே''.

(அப்பர்)

க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்

தேசுமிகு தேவர்களில் ஒருவன் நீ இந்த்ராதி
 தேவரெல்லாம் கூடியே
சிவபரப் பிரமம் இவனே என்று பூசித்த
 செம் பொற் பதாம் புயத்தோன்
வாச மலைரோனைமுன் குட்டியே சிறைவைத்து
 மண்டு மண்டம் படைத்தோன்
மாலும் அயனும் தேடி அடிமுடிகள் காணாத
 வளர் பரஞ் சோதி மைந்தன்
தாசரடியார் தாசன் என இருந்திடு முனைத்
 தன் பெருமை யறியாமலே
தனை ஒத்த பேரெனப் பிள்ளை விளையாட்டினைத்
 தருமிளம் பருவத்தினால்
ஆசையோடழைத் தனன் எங்கள் குமரேசனுடன்
 அம்புலீ ஆடவாவே
அழகு **செம்பொன் பள்ளி** ஆறானனத்துடன்
 அம்புலீ ஆடவாவே.

(சிதம்பர முனிவர்)

- நெறிகொண்டே

''அன்பள்ளி யோங்கும் அறிவுடையோர் வாழ்த்துஞ் செம்
பொன்பள்ளி வாழ் ஞான போதமே''.

(அருட்பா)

Koviloor Digital Library

மருவார் குழலி விருத்த மணிமாலை

'' வினைகள் தீரவும் வியன் புகழ் சேரவும்
வேண்டிய யாவும் விரைவில் கூடவும்
மனைவி மக்களும் வீடும் நாடும்
மங்கலம் பொங்கவும் மதிப்பில் உயரவும்
தினமுனை நினைந்துந் தொழுவார் எவர்க்குந்
திருவைத்தந்தே வளத்தை அருள்வாய்
நனவிலும் கனவிலும் தோன்றும் என்றன்
ஞானாம்பிகையே குழலி அம்மே.''

(கவிக்குரிசில் - ''தென்னவன்''
செயலர் - மணிவாசக மன்றம் -
செம்பனார் கோயில்.)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்
செம்பனார் கோயில் & அஞ்சல் - 609 309
தரங்கம்பாடி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

160/43. திருநனிபள்ளி

புஞ்சை

Koviloor Digital Library

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் "புஞ்சை" என்று வழங்குகின்றனர். மயிலாடு துறையிலிருந்து செல்லலாம். அடிக்கடி பேருந்து செல்கிறது. செம்பொனார் கோயிலுக்கு அருகில் உள்ளது. சம்பந்தரின் தாயார் பகவதியம்மையார் அவதரித்த பதி.

சம்பந்தர், தன் தந்தையார் தோளிலிருந்து இத்தலப்பதிகத்தை அருளினார் என்பது வரலாறு. இதை அத்தலப்பதிகத்தின் கடைசி பாடலால் அறிகிறோம். பாலையாக இருந்த இவ்வூரை நெய்தல் நிலமாக மாறுமாறு பாடியருளியதாகவும்; நெய்தலைப் பின்னும் கானகமும் வயலுமாக ஆக்கியருளினார் என்பர்.

இறைவன் - நற்றுணையப்பர்

இறைவி - பர்வதபுத்திரி

தீர்த்தம் - சொர்ணதீர்த்தம்.

மூவர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில் இக்கோயில் கருவறை அழகான வேலைப்பாடுடையது. கோயிலருகில் தீர்த்தமுள்ளது. கோபுர வாயிலில் பஞ்சமூர்த்திகள் கதைசிற்பங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. நால்வர், விநாயகர், சூரியன் சந்நிதிகளும் உள்ளன. மகாமண்டபத்தில் நடராசசபை உள்ளது.

அகத்தியருக்கு இறைவன் திருமணக்கோலங் காட்டிய கல்யாண சுந்தரேசர் கோயில் உள்ளது. சுவாமி கிழக்கு நோக்கித் தரிசனம் தருகின்றார். கோஷ்ட மூர்த்தங்களாக அகத்தியர், விநாயகர், தட்சிணா மூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சோழர் காலக்கல்வெட்டில் இத்தலம் "ஜயங் கொண்ட வளநாட்டு ஆக்கூர் நாட்டுப்பிரமதேயமாகிய நனிபள்ளி" என்று குறிக்கப்படுகிறது.

"கடல்வரை ஓதமல்கு கழி கானல் பானல்
கமழ் காழி என்று கருதப்
படுபொருளாறு நாலுமுள தாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்ற அத்தர் பியன் மேலிருந்(து)
இன் இசையால் உரைத்த பனுவல்
நடு இருள் ஆடும் எந்தை நனிபள்ளி உள்க
வினை கெடுதல் ஆணைநமதே."

(சம்பந்தர்)

Koviloor Digital Library

"புலா்ந்தகால் பூவுநீருங் கொண்டடி போற்ற மாட்டா
வலஞ்செய்து வாயினூலால் வட்டணைப் பந்தா் செய்த
சிலந்தியை அரையனாக்கிச் சீா்மைகள் அருளவல்லாா்
நலந்திகழ் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே."

(அப்பா்)

"ஆதியன் ஆதிரையன் அயன் மால் அறிதற்கரிய
சோதியன் சொற் பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையும்
ஓதியன் உம்பா் தங்கோன் உலகத்தினுள் எவ்வுயிா்க்கும்
நாதியன் நம் பெருமான் நண்ணும் ஊா் நனிபள்ளியதே".

(சுந்தரா்)

- இன்புள்ளித்
தெள்ளியாா் போற்றுத் திகழும் திருநன்னிப்
பள்ளியாா்ந் தோங்கும் பரசிவமே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நற்றுணையப்பா் திருக்கோயில்
புஞ்சை - கிடாரங்கொண்டான் அஞ்சல்
(மாயவரம்) கீழையூா் S.O.- 609 304
மயிலாடுதுறை RMS - மயிலாடுதுறை வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம்.

161/44. திருவலம்புரம்

மேலப்பெரும்பள்ளம்

சோழ நாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் 'மேலப் பெரும்பள்ளம்' என்று வழங்குகின்றனா். பூம்புகாருக்கு அதைச்சுற்றிய அகழியாக இவ்வூா் முற்காலத் திருந் தமையின் இஃது பெரும்பள்ளம் என்று பெயா் பெற்றது. கீழ்ப்புற முள்ளது கீழப்பெரும் பள்ளம் என்றும் மேற்புறமுள்ளது மேலப் பெரும்பள்ளமென்றும் பெயா் வரலாயிற்று. காவிரிக்கு வலப்புற மிருப்பதால் **வலம்புரம்** என்றாயிற்று.

(1) மயிலாடுதுறை பூம்புகாா்ச் சாலையில் சென்று காவிரி கடைமுக அணையை அடைந்து; அங்கிருந்தும், (2) சீகாழி - காவிரிப் பூம்பட்டினம்

Koviloor Digital Library

பேருந்தில் மேலையூர் சென்று அங்கிருந்தும்; இத் தலத்தையடையலாம். திருமால் வழிபட்டு வலம்புரிச் சங்கினைப் பெற்றதலம். ஏரண்ட முனிவர் திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கி, இவ்வூரில் கரையேறியதாகக் கூறப்படுகிறது. அம்முனிவருடைய கோயில் இங்குள்ளது.

இறைவன் - வலம்புரநாதர்

இறைவி - வடுவகிர்க்கண்ணி

தலமரம் - பனை

தீர்த்தம் - பிரமதீர்த்தம், லட்சுமி தீர்த்தம்.

(கோயில் எதிரில் உள்ளது)

மூவர் பாடல் பெற்றது.

மாடக்கோயில், எதிரில் உள்ள தீர்த்தக்கரையில் விநாயகர், வீற்றிருக்கின்றார். அருகே ஏரண்ட முனிவர் உருவமும் அவர் வழிபட்ட இலிங்கமும் உள்ளன. கிழக்கு நோக்கிய கோயில். உள் பிரகாரத்தில் சூரியன், விநாயகர், நால்வர், விசுவநாதர், முருகர், இராமநாதர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளன. அம்பாள் சந்நிதி மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியுள்ளது. இங்குள்ள பிட்சாடனர் மூர்த்தம் - வட்டணை நாயகர் என்று அழைக்கப்படுகிறது. சிறப்பாகவுள்ளது. கருவறை சிற்ப வேலைப்பாடுடையது. தலப்பதிகக் கல்வெட்டுள்ளது. நடராசசபை அழகாகவுள்ளது.

மூலவர் - பிருதிவிலிங்கம். திருமுடியில் பள்ளம் உள்ளது. சாம்பிராணித் தைலம், புனுகுசட்டம் சார்த்தப்படுகிறது. குவளை சார்த்தி அபிஷேகம் செய்யப்படுகிறது. இக்கோயிலில் ''பட்டினத்தாரை மன்னன் வரவேற்கும் ஐதீகவிழா'' என்று ஒருவிழா நடைபெறுகிறது. அது தொடர்பாகச் சொல்லப்படும் செய்தி வருமாறு:-

மன்னவன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான். விளையாட்டுக்காகத் தான் இறந்து விட்டதாகப் பொய்ச் செய்தி சொல்லியனுப்பினான். அச்செய்தி கேட்ட அரசி அதிர்ச்சியுற்று இறந்தாள். மன்னனைப் பழி சூழ்ந்தது. நாடொறும் ஆயிரம் பேருக்கு உணவளித்தால் (சஹஸ்ர போஜனம்) அதில் எவரேனும் மகான் 'ஒருவர் வந்து உணவுண்டால் அரண்மனை வாயிலில் உள்ள மணி ஒலிக்கும்; அப்போது பழிதீரும் என்று மன்னனுக்குச் சொல்லினர். அது கேட்ட மன்னனும் அவ்வாறே செய்வித்தான். பட்டினத்தார் ஒரு நாள் அங்கு வந்தார். உணவிடுதலையறிந்து அவ்விடம் சென்றார். அங்கிருந்தோர் அவரைப் பின்புறமாக வருமாறு சொல்ல அவரும் அவ்வாறே சென்றார். சென்றவர் அங்குக்

Koviloor Digital Library

குழியில் கஞ்சி வடிந்திருக்கக் கண்டு பசிபொறாமல் அதைத் தம் கைகளால் வாரிப் பருகினார். அவ்வளவில் மணியொலித்தது. மன்னன் ஓடிவந்து செய்தியறிந்து பட்டினத்தாரை வணங்கி வரவேற்றான்.''

விக்ரமசோழன் கல்வெட்டில் இத்தலம் ''இராசராச வளநாட்டு ஆக்கூர் நாட்டு தலைச்சங்காட்டுத் திருவலம்புரம்'' என்றும்; சுவாமி ''வலம்புரி உடையார்'' என்றும் அம்பாள் ''தடங்கண் நாச்சியார்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுச் செய்தி ஒன்று ''பண்டைநாளில் கோயில்களுக்கு ஆண்களை விற்கும் பழக்கம் இருந்ததாகத்'' தெரிவிக்கின்றது.

''கொடியுடை மும்மதிலூடுருவக் குனிவெஞ்சிலை தாங்கி
இடிபட எய்த அமரர் பிரான் அடியார் இசைந்தேத்தத்
துடியிடை யாளையொர் பாகமாகத் துதைந்தாரிடம் போலும்
வடிவுடைமேதி வயல் படியும் வலம் புர நன்னகரே.''

(சம்பந்தர்)

''நினைக்கின்றேன் நெஞ்சு தன்னால் நீண்ட புன்சடையினானே
அனைத்துடன் கொண்டு வந்து அன்பினால் அமைய ஆட்டிப்
புனைக்கின்றேன் பொய்ம்மை தன்னை மெய்ம்மையைப் புணர மாட்டேன்
எனக்கு நான் செய்வ தென்னே இனிவலம் புரவனீரே.''

(அப்பர்)

''எனக்கினித் தினைத் தனைப் புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம் படும் பரவையின் கரைமேல்
எனக்கினியவன் தமர்க்கினியவன் எழுமையும்
மனக்கினியவன் தனதிடம் வலம்புரமே,''

(சுந்தரர்)

- எள்ளுறுநோய்
ஏயவலம் புரத்தை எண்ணாமல் எண்ணுகின்றோர்
மேயவலம் புரத்து மேதகவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வலம்புரநாதர் திருக்கோயில்
மேலப் பெரும் பள்ளம் - மேலையூர் அஞ்சல்
மயிலாடுதுறை RMS- 609 107
தரங்கம்பாடி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

162/45. திருத்தலைச்சங்காடு

தலைச்செங்காடு

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

ஆக்கூர் திருவலம்புரம் ஆகியவற்றிற்கு அருகிலுள்ளது.

(1) மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் வழியாகப் பூம்புகார்ப் பாதையில் சென்று இத்தலத்தையடையலாம்.

(2) சீர்காழியிலிருந்து ஆக்கூர் செல்லும் பாதையிலும் சென்று இத்தலத்தைச் சேரலாம். கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில். சங்குவனம், சங்காரண்யம், தலைச்செங்கானம் என்பன வேறு பெயர்கள். திருமால் வழிபட்டுப் பாஞ்சசன்னிய சங்கைப்பெற்ற தலம்.

இறைவன் - சங்காரண்யேசுவரர், சங்கவனேஸ்வரர், சங்கருணாதேஸ்வரர்.

இறைவி - சௌந்தரநாயகி.

தலமரம் - புரசு.

தீர்த்தம் - சங்குதீர்த்தம் (கோயிலுக்கு எதிரில் உள்ளது).

இத்தீர்த்தத்தில் பௌர்ணமி நாளில் நீராடுவது விசேஷமாகும்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில் எதிரில் சங்கு தீர்த்தமுள்ளது. வெளிப் பிராகாரத்தில் தலவிநாயகர், ஸ்ரீதேவி பூதேவிசமேதராய்ப் பெருமாள். சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. நடராசர், சோமாஸ்கந்தர் சந்நிதிகள் சிறப்பானவை. உள் பிராகாரத்தில் நால்வர், திருமால், ஜ்வரஹ ரேஸ்வரர், காவிரித்தாய், பட்டினத்தார், அகத்தியர் முதலிய சந்நிதிகள் உள்ளன.

மூலவர் - சங்கு போன்ற உருண்டையான வடிவில் காட்சியளிக்கின்றார் - கருவறை விசாலமானது. சோழர்காலக் கல்வெட்டொன்று இக்கோயிலுக்குச் செம்பியன் மாதேவி வெள்ளிப் பாத்திரங்களை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது.

"நலச்சங்க வெண் குழையும் தோடும் பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை இல்லாதீர் சுடுகாடு அல்லால் கருதாதீர்
குலைச் செங்காய்ப் பைங் கமுகின் குளிர்கொள் சோலைக்குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத்தாழ்ந்தீர்". *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

- ''தூயகொடி
அங்காடு கோபுரம் வானாற்றாடு கின்றதலைச்
சங்காடு மேவுஞ்சயம் புவே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சங்காரண்யேஸ்வரர் திருக்கோயில்
தலைச்சங்காடு - ஆக்கூர் அஞ்சல்
மயிலாடுதுறை RMS - 609 301
தரங்கம்பாடி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

163/46. ஆக்கூர்



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1) மயிலாடுதுறை - பொறையாறு பேருந்துச் சாலையில் ஆக்கூர் உள்ளது.

2) மயிலாடுதுறையிலிருந்தும், சீர்காழியிலிருந்தும் ஆக்கூருக்கு நகரப் பேருந்து செல்கிறது.

ஊர் - ஆக்கூர் - கோயில் - தான்தோன்றி மாடம்.

Koviloor Digital Library

கோச் செங்கட்சோழனின் திருப்பணி பெற்ற **மாடக்கோயில்.** சிறப்புலி நாயனார் அவதரித்த பதி. கபிலதேவநாயனார் 11 ஆம் திருமுறையில் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

இறைவன் - தான்தோன்றீஸ்வரர், சுயம்புநாதர்.

இறைவி - கடகநேத்ரி, வாள் நெடுங்கண்ணி.

தீர்த்தம் - குமுத தீர்த்தம்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுரவாயிலில் விநாயகர் காட்சி தருகிறார்.

அகத்தியருக்குத் திருமணக்காட்சி தந்த தலங்களுள் இதுவும் ஒன்றாதலின் சுவாமிக்கு வலப்பால் கிழக்கு நோக்கி அம்பாள் சந்நிதி உள்ளது. படிகளேறி மேலே சென்றால் உள்சுற்றில் பாணலிங்கம், விசுவநாதர் விசாலாட்சி, சிறப்புலி நாயனார், நால்வர், விநாயகர், முருகன், இலக்குமி, ஆகிய சந்நிதிகள் உள்ளன. அடுத்துள்ள மூர்த்தி **''ஆயிரத்துள் ஒருவர்''** என்று வழங்கப்படுபவர். இவரே இத்தலத்திற் குரிய **சிறப்பு மூர்த்தி** யாவார். இச்சந்நிதி தனி விமானத்துடன் காட்சி தருகிறது.

''மன்னன் ஒருவன் இறைவன் கட்டளைப்படி நாடொறும் ஆயிரம் அந்தணர்களுக்கு உணவளித்து வந்தான். இறைவனும் அவர் களுள் ஒருவராக வந்து உணவுண்டு அம்மன்னனுக்கு அருள் புரிந்தார். ஆகவே இம்மூர்த்தி ஆயிரத்துள் ஒருவர் என்று போற்றப்படுகின்றார்'' கோஷ்ட மூர்த்தங்கள் முறையாகவுள்ளன.

இரண்டாம் இராசாதிராசன், கோப்பெருஞ்சிங்கப்பல்லவன், வீரகிருஷ்ண தேவராயர் முதலியோர் காலத்திய கல்வெட்டுக்கள் இத் தலத்திற்கு உள்ளன. அருகில் உள்ளதலம் ''செம் பொன்னார் கோயில்'' ஆகும்.

இத்தலத்துப் பதிகத்தில் வேளாளரைச் சிறப்பித்து ஞான சம்பந்தர் பாடியுள்ளார்.

''வாளார்கண் செந்துவர் வாய் மாமலையான்றன் மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் தொல் கோயில்
வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

"கண்ணார்ந்த நெற்றியுடையார் போலும்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலும்
உண்ணா வரு நஞ்சம் உண்டார் போலும்
ஊழித் தீயன்ன ஒளியார் போலும்
எண்ணாயிரங்கோடி பேரார் போலும்
ஏறேறிச் செல்லும் இறைவர் போலும்
அண்ணாவும் ஆரூருமேயார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றியப்பனாரே."

(அப்பர்)

- பொங்குமிருட்
கூறுதிரு வாக்கூர் கொடுப்பன போற்சூழ்ந்து மதில்
வீறு திருவாக்கூர் விளக்கமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி தான் தோன்றீசுவரர் திருக்கோயில்
ஆக்கூர் & அஞ்சல் - 609 301
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

164/47. திருக்கடவூர்

திருக்கடையூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறை - தரங்கம்பாடி பேருந்துச் சாலையில் இத்தலம் உள்ளது. அடிக்கடி பேருந்து வசதியுண்டு.

அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத் தருளிய தலம்.

"கறுவி வீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ் சாத்திச்
சிறுவனுக்கு ஆயுள் ஈந்த சேவகப் பெருமான் மேய
அறை புனற் பழன மூதூர்"

(திருவிளை. புரா - அருச் 22)

திருக்கடவூர் வீரட்டம், கடபுரி, வில்வாரண்யம், பிரமரந்திரத்தலம், பாபவிமோசன புண்ணிய வர்த்தம் என்பன வேறு பெயர்கள்.

Koviloor Digital Library

அகஸ்தியர், புலஸ்தியர், வாசுகி, துர்க்கை வழிபட்ட தலம். பிரமனுக்கு உபதேசம் செய்த இடம். குங்கிலியக்கலய நாயனார், காரி நாயனார் ஆகியோர் வாழந்து, தொண்டாற்றி முத்தியடைந்த தலம். உள்ளமுருகப் பாராயணம் செய்யப்படும் அபிராமி அந்தாதி பாடப்பட்ட அற்புதப் பதி. அன்னை அபிராமியின் அருள் தலம். யமபயம் போக்கவல்ல பதி. மிகப்பெரிய கோயில். தருமையாதீனத் திருக்கோயில்.

இறைவன் - அமிர்தகடேஸ்வரர், அமிர்தலிங்கேஸ்வரர்

இறைவி - அபிராமி

தலமரம் - வில்வம், ஜாதி (பிஞ்சிலம்)

தீர்த்தம் - அமிர்த தீர்த்தம், சிவகங்கை,

மூவர் பாடல் பெற்றது.

இங்குள்ள காலசம்ஹாரமூர்த்தி - காலனை சம்ஹரித்த மூர்த்தி - மிகப்பெரிய மூர்த்தி - கம்பீரமான தோற்றம் - திருமேனியில், எமன் வீசிய பாசத்தின் தழும்பு உள்ளது. பிள்ளையார் - கள்ளவாரணப் பிள்ளையார்.

மார்க்கண்டேயர் இறையருள் பெற வழிபட்ட 108 தலங்களுள் இது 108-ஆவது தலமாகும். (107-ஆவது தலம் திருக்கடவூர் மயானம்) மார்க்கண்டேயர் கங்கை நீருடன் பிஞ்சிலப் புஷ்பங்களையும் கொண்டு வந்து அர்ச்சித்ததாக வரலாறு. இச்செடி (பிஞ்சிலம்) கோயிலுள் உள்ளது. இதனால் இத்தலத்திற்குப் **'பிஞ்சிலாரண்யம்'** என்றும் பெயர். தற்போது தலமரம் இதுவே. ஆதியில் தலவிருட்சம் வில்வம் என்பர். சுவாமிக்கு நாடொறும் அபிஷேகத்திற்குரிய நீர் திருக்கடவூர் மயானத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. (இது பற்றிய விளக்கத் தைத் திருக்கடவூர் மயானத் தலக்குறிப்பில் காண்க)

(மிருகண்டு முனிவரின் அவதாரத் தலம் மணல்மேடு ஆகும்).

பூமிதேவி அனுக்ரஹம் பெற்ற தலம். ம்ருத்யுஞ்சஹோமம்,

உக்ரக சாந்தி, பீமரதசாந்தி, சஷ்டியப்த பூர்த்தி (மணிவிழா), சதாபிஷேகம், ஆயுள்ஹோமம் முதலியவை செய்வதற்குரிய சிறப் புடைய தலம் இதுவேயாகும். இச்சாந்திகளை வேறு தலத்தில் செய்ய நேர்ந்தாலும் இம் மூர்த்தியை நினைத்துத்தான் செய்ய வேண்டும்.

இத்திருக்கோயிலில் நவக்கிரக சந்நிதி இல்லை. அளப்பரிய சிறப்புக்களுடன் அருமையாகத் திகழும் இத்திருக்கோயில் எழுநிலை களுடைய ராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

Koviloor Digital Library

ராஜகோபுரத்தில் உள்ள அரிய சிற்பங்களுள் பாற்கடலைக் கடைந்தது, கஜசம்ஹரர மூர்த்தி, சிவபாத இருதயரின் தோளில் சம்பந்தர், சம்பந்தரின் சிவிகையை அப்பர் தாங்குவது முதலியன கண்டு மகிழத்தக்கன.

உள்கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கவசமிட்ட கொடி மரம், கொடிமரத்து விநாயகர் தரிசனம். பலிபீடம். இதைச் சுற்றி நான்கு சிறிய நந்திகள் உள்ளன. கோபுர வாயில் நுழைந்து பிராகாரத்தில் வலம் வரும்போது மார்க்கண்டேஸ்வரர், நாகநாதேஸ்வரர், சுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளன. பக்கத்தில் நடராசசபை உள்ளது. பக்கத்தில் வரிசையாகப் பாற்கடல் கடைந்தது, மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்தது முதலான வரலாறுகள் ஓவியங்களாக எழுதப் பட்டுள்ளன.

அடுத்து 'பஞ்சலிங்கங்கள்' சந்தானாசாரியர்கள், குங்கிலியக்கலய நாயனார், சந்திரபூஷணராஜா, அமைச்சர், குங்கிலியம் கொண்டுவந்த வணிகர், வீரபத்திரர். பிராமி முதலான அம்பிகைகளின் திருமேனிகள் அசுவினி தேவர் முதலானோரின் சந்நிதிகள் வரிசையாகவுள்ளன. இங்குத் தலமரமாகிய 'பிஞ்சிலம்' செடி உள்ளது. பக்கத்தில் தர்மராஜா (எமன், உற்சவத் திருமேனி - சந்நிதி உள்ளது. தொடர்ந்து அறுபத்து மூவர் திருமேனிகள் உள்ளன. சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், உற்சவமூர்த்தி, பள்ளியறை இவற்றைக் கண்டு தொழுதவாறே, வாயிற்படிகளேறிச் சென்றால் மண்டபத்தை அடையலாம். இங்கு உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

சந்திரசேகரரைத் தொழுது வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம்.

இடப்பால் காலசம்ஹாரமூர்த்தி, பாலாம்பிகையுடன் காட்சி தருகிறார். காலசம்ஹாரமூர்த்தி - அற்புதமான திருமேனி. மேலே வெள்ளிப்பிரபை, பக்கத்தில் உள்ள வெள்ளிப்பேழையில் 'உடையவர்' மரகதலிங்கம் உள்ளது. நாடொறும் காலசந்தி, சாயரட்சை வழிபாடு இதற்கு நடைபெறுகின்றது.

இம்மூர்த்தியின் திருவடிக்கீழ்; மார்க்கண்டேயர் கைகூப்பிய நிலையில் இருப்பது. எமன் உதைபெற்றுக் கீழே வீழ்ந்து கிடப்பது ஆகிய இக்காட்சி - பீடத்தினடியில் வெள்ளித் தகட்டால் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. தீபாராதனைக் காலத்தில் இதைத் தரிசிக்கலாம்.

பூமிதேவி பிரார்த்திக்க, மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் வேண்ட இறைவன், எமனை (தர்மராஜா) எழுப்பித் தந்தருளினாராதலின்,

Koviloor Digital Library

அநுக்ரஹம் பெற்ற (எழுப்பப்பெற்ற) தர்மராஜா - எமனின் திருவுருவம் இம்மூர்த்திக்கு நேர் எதிரில் உள்ளதைக் காணலாம்.

கன்றிய காலனைக் காலாற்கடிந்த காலசம்ஹார மூர்த்திக்கு ஆண்டில் 11 விசேஷ காலங்களில் (சித்திரைவிஷு, பெருவிழாவில் 5,6-ஆம் நாள்கள், பிராயசித்த அபிஷேகம், தக்ஷிணாயனபுண்ணிய காலம், ஆனி உத்திரம், புரட்டாசியில் கன்யாசதுர்த்தி, துலாவிஷு ஆருத்ரா, உத்தராயண புண்ணிய காலம், மாசி மகம் கும்பசதுர்த்தி) அபிஷேகம் நடைபெறுகின்றது.

மூலவர் மேற்கு நோக்கிய சந்நிதி. அற்புதமான அழகுத் திருமேனி. மனநிறைவான தரிசனம். சித்திரையில் பெருவிழா பதினெட்டு நாள்கள் நடைபெறுகிறது. கார்த்திகைச் சோமவார 1008 சங்காபிஷேகம் சிறப்பாகக் கொண்டு தரிசிக்கத் தக்கது. மாதாந்திர விசேஷகால பூஜைகளும் வழக்கம் போல நடைபெறுகின்றன. சோம வாரங்களில் சுவாமிக்கும், அமாவாசை பௌர்ணமி நாள்களில் அம்பாளுக்கும், சனிக்கிழமைகளில் காலசம்ஹார மூர்த்திக்கும் விசேஷ வழிபாடுகள் நடை பெறுகின்றன.

அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. 'அபிராமி' - பெயரிலும் அழகு; வடிவிலும் அழகு. அழகுருவாய - அம்பிகை. ரம்யம் - அழகு. ரம்யத்தை உடையவள் - ராமி. (அழகுடையவள்) அபி - மேலான. எனவே 'அபிராமி' என்ற சொல்லுக்கு 'மேலான அழகுடையவள்' என்பது பொருள்.

தன்னையே துதித்து, தன் பெயரையே பெயராக்கிக் கொண்ட பக்தன் ஒருவனுக்கு அருள்புரிந்த - அபிராமிபட்டருக் கருள் செய்த - அதன் வழி உலகுக்கு அபிராமி அந்தாதி கிடைக்கச் செய்த அபிராமி சந்நிதியில் நின்று அப்பெருமாட்டியைத் தரிசிப்பதே ஒருவகை ரம்யந்தான்.

வௌவால் நெத்தி மண்டபம். முன்னால், சுதையில் துவார பாலகியர் உருவங்கள், அபிராமி அந்தாதிப் பாடல்கள் கல்லிற் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன. வாயில் கடந்து உட்சென்று அம்பிகைமுன் நிற்கும்போது நம்மையே மறக்கின்றோம். நின்ற திருக்கோலம். வலப்பால் உற்சவத் திருமேனி. அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். வெள்ளிக் கவசத்தில் ஒளிரும் ஒண்கொடி கண்ணுக்குப் பெரு விருந்தாகிறாள்.

'அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியை' உளமாரத் துதித்து வேண்டுகிறோம். அம்பாள் சந்நிதியை வலம்வர வசதியுள்ளது.

Koviloor Digital Library

'சிலம்பில்' வரும் நடன மகள் 'மாதவி'யின் இல்லம் இத்திருக் கடவூரில் தேரோடும் வீதியில் உள்ளது. தற்போது இவ்வீடு பாழடைந்த நிலையில் உள்ளது. பக்கத்தில் உள்ள பிற தலங்கள் திருஆக்கூரும் திருத்தலைச்சங்காடும் ஆகும்.

''பண்பொலி நான்மறை பாடியாடிப் பலவூர்கள் போய்
உண்பலி கொண்டுழல் வானும் வானின்ஒளி மல்கிய
கண்பொலி நெற்றி வெண்திங்களானும் கடவூர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டானத்தரன் அல்லனே''.

(சம்பந்தர்)

''பெரும் புலர்காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும் பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி நல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே''.

(அப்பர்)

''பொடியார் மேனியனே புரிநூலொருபால் பொருந்த
வடியார் மூவிலைவேல் வளரங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்துஎம்
அடிகேள் என் அமுதே எனக்கு ஆர்துணை நீயலதே''.

(சுந்தரர்)

''என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே யன்றி யார் குறைகாண் இருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே.

(அபிராமி அந்தாதி)

''கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழு பிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

Koviloor Digital Library

அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.''

(அபிராமியம்மைப் பதிகம்)

- ''மாறகற்றி
நன்கடையூர் பற்பலவும் நன்றி மறவா தேத்துந்
தென்கடையூர் ஆனந்தத் தேறலே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்
திருக்கடையூர் & அஞ்சல் - 609 311
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

165/48. திருக்கடவூர் மயானம்

திருமயானம்.
திருமெய்ஞ்ஞானம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் இத்தலத்தை 'திருமெய்ஞ்ஞானம்' 'திருமயானம்' என்று வழங்குகின்றனர். திருக்கடவூருக்கு நேர்கிழக்கில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. கோயில்வரை பேருந்து, கார் செல்லும். மயிலாடுதுறை - வேப்பஞ்சேரி நகரப்பேருந்து இத்தலத்தின் வழியாகச் செல்கிறது. கோயிலைச்சுற்றிச் சில வீடுகளே உள்ளன. சிவபெருமான் பிரமனை நீறாக்கி, மீண்டும் உயிர்ப்பித்து, அவருக்குப் படைப்புத் தொழிலை அருளிய தலம். பிரமன் வழிபட்ட தலம். பழைமையான கோவில். போதிய பராமரிப்பு இல்லை. கோயிலுள் உள்ள மூர்த்திகளும் மிகப் பழைமையானவை. ஒருசில பழுதடைந்தும் உள்ளன.

இறைவன் - பிரமபுரீசுவரர்.
இறைவி - மலர்க்குழல் மின்னம்மை.
அம்மலக்குஜ நாயகி. பழைய நூலில்
'அமலக்குய மின்னம்மை' என்று குறிக்கப்பட்டுள்ளது.

தீர்த்தம் - காசி தீர்த்தம்

Koviloor Digital Library

மூவர் பாடல் பெற்ற தலம்.

இத் தீர்த்தத்திலிருந்துதான் நாடொறும் திருக்கடவூர்ப் பெருமானுக்குத் திருமஞ்சனத்திற்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகின்றது. ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் மட்டுமே உள்ளது. கொடிமரம் இல்லை. பலிபீடம் மட்டும் உள்ளது. விசாலமான உள்ளிடம். உள் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. வாயிலுள் நுழைந்து வலமாக வரும்போது நடராசசபையும். மறுகோடியில் பைரவர் சந்நிதியும் உள்ளன. வில்வமரம் உள்ளது. விநாயகரை வணங்கி வாயிலைக் கடந்து உள்மண்டபத்தினை யடைந்தால் இடப்பால் வள்ளி தெய்வ யானையுடன் சிங்காரவேலர், வில்லேந்திய கோலத்தில் தரிசனம் தருகின்றார்.

சிங்காரவேலர் சந்நிதியில் எதிரில் மண்டபத்தின் மேற்புறத்தில் பன்னிரு ராசிகளும் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. இவை அழிந்த நிலையிலுள்ளன. நேரே பார்த்தால் மூலவர் தரிசனம். பழைமையான மூர்த்தி. சதுர ஆவுடையார் மேற்கு நோக்கியது. தரிசிக்கும்போது தக்க பராமரிப்பு இன்மையை உணர்ந்து உள்ளம் துன்புறுகின்றது. கோஷ்ட மூர்த்தங்களாகத் துர்க்கை, தட்சிணாமூர்த்தி, நர்த்தன விநாயகர், அர்த்தநாரீசுவரர், கல்யாணசுந்தரர் முதலிய மூர்த்தங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

''கடவூர் தீர்த்தக்கிணறு'' எனப்படும் ''காசி தீர்த்தம்'' கோயிலுக்குப் பக்கத்தில் - தென்புறத்தில், சற்றுத் தொலைவில் வயல்களின் மத்தியில் நாற்புறச் சுவர்கள்சூழ நடுவில் கிணறு வடிவில் உள்ளது. இங்கிருந்து கடவூருக்குத் தண்ணீர் வண்டியில் கொண்டு போகப் படுகிறது. மார்க்கண்டேயருக்காக, பங்குனிமாதம், அசுவினி நட்சத்திரத்தில் கங்கையானது, இத்தீர்த்தமாக வந்ததாக வரலாறு. ஆதலின் இத்தீர்த்தம் 'அசுவினி தீர்த்தம்' எனவும் வழங்கப்படுகின்றது. இந்த ஐதீகப்படி, பங்குனி அசுவினி நாளில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெறுகிறது.

சுவாமியின் கருவறையுள் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. சஷ்டிவிழா சிறப்பாக நடைபெறுகிறது. தலப் பதிகம் சலவைக் கல்லிற் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது. அம்பாள் கோயில் எதிரில் உள்ளது. கிழக்கு நோக்கியது. மூன்று நிலைகளை யுடைய முன்கோபுரம் உள்ளது. துவாரபாலகியர் உருவங்கள் சிதைந்துள்ளன. அம்பாள் நின்ற கோலம். அபயவரதத்துடன், கூடிய நான்கு திருக்கரங்கள்.

Koviloor Digital Library

"பாசமான களைவார் பரிவார்க் கமுத மனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேசவருவார் ஒருவர் அவர் எம் பெருமான் அடிகளே."

(சம்பந்தர்)

"குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர்தாங் கடவூரின் மயானத்தார்
பழையதம் அடியார் செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமான் அடிகளே".

(அப்பர்)

"நறைசேர் மலர் ஐங்கணையானை நயனத்தீயாற் பொடிசெய்த
இறையார் ஆவர் எல்லார்க்கும் இல்லையென்னாது அருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு பயிலும் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமானடிகளே."

(சுந்தரர்)

"உய்யும் மருந்து இதனை உண்மின் என உற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்கால் - பைய
எழுந்து இருமியான் வேண்டேன் என்னாமுன் நெஞ்சே!
செழுந்திரு மயானமே சேர்."

(ஐயடிகள் காடவர்கோன்)

- வன்மையிலாச்
சொற் கடவி மேலோர் துதித்தல் ஒழியாது ஓங்கும்
நற்கடவூர் வீரட்ட நாயகனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பிரமபுரீசுவரர் திருக்கோயில்
திருக்கடையூர் மயானம்
திருக்கடையூர் அஞ்சல் - 609 311
மயிலாடுதுறை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

166/49. வேட்டக்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

காரைக்காலுக்குப் பக்கத்தில் உள்ளது. தரங்கம்பாடி - நாகப் பட்டினம் நெடுஞ்சாலையில், புதுவை மாநில எல்லையில் நுழைந்து 'பூவம்' கிராமத்தைத்தாண்டி, 'வரிச்சுக்குடி' என்னும் கிராமத்தை அடைந்து, அங்கிருந்து பிரியும் கிளைப்பாதையில் 2 கி.மீ. சென்றால் இத்திருக்கோயிலை அடையலாம். வரிச்சுக்குடியில், இக்கிளைப்பாதை பிரியும் இடத்தைக் காட்டும் - திருவேட்டக்குடி என்னும் பெயர் தாங்கிய - கைகாட்டி உள்ளது. சாலை ஓரத்தில் கோயில் உள்ளது. பேருந்தில் கோயில் வாயில்வரை செல்லலாம். அருச்சுனன் வந்து தவஞ்செய்ய, இறைவன் வேட வடிவத்தில் வெளிப்பட்டு அருள் செய்ததாகப் புராண வரலாறு சொல்கிறது. கோயில் அமைந்துள்ள பகுதி 'கோயில் மேடு' என்றழைக்கப்படுகிறது.

இறைவன் - சுந்தரேஸ்வரர், திருமேனியழகர்
இறைவி - சௌந்தரநாயகி, சாந்தநாயகி.
தீர்த்தம் - தேவதீர்த்தம், கோயிலுக்கு எதிரில் உள்ளது.
தலமரம் - புன்னை, தற்போது இல்லை.

சம்பந்தர் பாடல் பெற்ற பதி.

ஊர் நடுவே கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் நம்மை வரவேற்கிறது. கோபுரத்தில் சிற்பங்கள் அதிகமாக உள்ளன. உள்ளே விசாலமான இடம். செப்புக் கவசமிட்ட கொடிக்கம்பம் - முன்னால் விநாயகர் சந்நிதி. பிராகார வலம் வரும் போது; சித்தி விநாயகர் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது. சுப்பிரமணிய சுவாமி கோயிலும் தனியே உள்ளது. பக்கத்தில் புன்னை வனநாதர் சந்நிதி உள்ளது. கஜலட்சுமி சந்நிதி, சாஸ்தா சந்நிதிகளும் நால்வர், பைரவர், சூரியசந்திரர்களும் உள்ளனர். கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும், துர்க்கையும் உள்ளனர். படிகளேறிச் சென்று மூலவரைத் தரிசிக்கலாம். மூலவர் - சிவலிங்கத் திருமேனி. கிழக்கு நோக்கி சந்நிதி.

சற்று உயரமான மூர்த்தி. தீபாராதனை ஒளி திருமேனியில் தெளிவாகத் தெரிகின்றது - அழகான மூர்த்தி. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. வேடனாக வந்த தலமூர்த்தி, வேடுவச்சியாக

Koviloor Digital Library

வந்த அம்பாள் ஆகிய (வேடரூபர், வேடநாயகி) திருமேனிகள் சிறப்பானவை. வேடரூபர் கையில் வில்லேந்திக் கம்பீரமாகக் காட்சி தருகிறார். சோமாஸ்கந்தர், பிரதோஷநாயகர் திருமேனிகளும் நன்றாக உள்ளன. கோயில் நல்ல பராமரிப்பில் உள்ளது. நான்கு கால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் மாசி மகத்தில் பெரு விழா நடைபெறுகிறது. மாசிமகத்தன்று திருமேனியழகரான சுவாமி வேட மூர்த்தியாகக் காட்சி தந்து கடல் நீராடுகிறார். இது 'கடலாடுவிழா' என்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தலத்தில் உமாதேவி மீனவர் குலத்தில் வந்து அவதரித்ததாகப் புராண வரலாறு கூறுவதால் இக் 'கடலாடு விழாவை கடலோர ஊர்களில் (அக்கம்பேட்டை, மண்டபத்தூர், காளிக்குப்பம்) வாழும் மீனவர்கள் ஏற்று நடத்துகிறார்கள். மாசிமகத்தில் இக்கோயில் தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பானதாகச் சொல்லப்படுகிறது.

''தோத்திரமா மணலிலிங்கம் தொடங்கி ஆனிரையின் பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறை நால்வர்க் கறம்புரி நூலன்றுரைத்த
தீர்த்த மல்கு சடையாரும் திருவேட்டக் குடியாரே.'' *(சம்பந்தர்)*

''உருமேனி பலவகையென்றுரைத் திடினு மறிவுறலால்
கருமேனி யுடையரென்றுங் கனகம்பால் செம்பவள
தருமேனி யுடையரென்றுஞ் சாற்றருள் கூருருவருவாந்
திருமேனி யழகர்தாள் சிந்தனைசெய் தேத்துவாம்.'' *(தலபுராணம்)*

''சங்குவளைக் கரத்தாளைச் சராசரமெலாமீன்ற தாயை நீரில்
தங்குவளைச் செவியாளைச் சைவல மாங் சூழலாளைத் தாழ்வில்லாளைப்
பொங்குவளைப் புயத்தாளைப் பொருப்பரையன் அளித்தருளும்
புதல்வி தன்னை
அங்குவளை விழியாளை அரனிடத்தில் அமர்வாளை அன்பிற்றாழ்வாம்.''
(தலபுராணம்)

– வற்கடத்தும்
வாட்டக்குடி சற்றும் வாய்ப்பதே யில்லையெனும்
வேட்டக்குடிமேவு மேலவனே. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி சுந்தரேசுவரர் திருக்கோயில்
திருவேட்டக்குடி - வரிச்சிகுடி அஞ்சல்
(வழி) கோட்டுச்சேர். 609 610
காரைக்கால் வட்டம் - புதுவை மாநிலம்.

Koviloor Digital Library

167/50. திருத்தெளிச்சேரி

காரை - கோயில்பத்து

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

தற்போது கோயில் பத்து என்று வழங்குகிறது. காரைக்கால் நகரில் ஒரு பகுதியில் உள்ளது. (பாரதியார் சாலை வழியே சென்று கோயிலை யடையலாம்). இதற்கு ''சமீவனம்'' என்று பெயர். சிறியகோயில், மேற்கு பார்த்த சந்நிதி.

இறைவன் - பார்வதீஸ்வரர், பார்ப்பதீஸ்வரர், சமீவனேஸ்வரர்.

இறைவி - பார்வதியம்மை, சத்தியம்மை, சுயம்வர தபஸ்வினி.

தலமரம் - வில்வம், வன்னி.

தலவிநாயகர் - சம்பந்த விநாயகர்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலம், தவம் செய்வதற்கு உகந்த இடம் என்பது புராண வரலாறு. இதற்குப் பிரமவனம், முத்திவனம் என்றும் பெயர்களுண்டு. பிரமன் வழிபட்டதலம். புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்த தலம். இக்கோயில் அழகானது. கற்கோயில். ஐந்து நிலைகள் கொண்ட பெரிய ராஜகோபுரம். மேற்கு நோக்கிய வாயில்.

சிவசுப்பிரமணியர், இலக்குமி துர்க்கை, சூரியன், சனீஸ்வரர், பைரவர், வன்னிலிங்கம், தட்சிணாமூர்த்தி, நர்த்தனகணபதி, அறுபத்து மூவர் சந்நிதிகள் லிங்கோற்பவர், நடராசர் முதலிய பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் உள்ளன. பிரதோஷ விநாயகர் (அம்பாளுடன்) சந்நிதி விஷேமானது. கோயிலின் பிரதான உற்சவமூர்த்தி கிராத மூர்த்தி (வேடவடிவம்) ஆகும்.

இங்குள்ள தீர்த்தங்கள்:- சூரியபுஷ்கரணி, குகதீர்த்தம், தவத் தீர்த்தம், முதலியன. இவற்றுள் சூரிய புஷ்கரணி சிறந்ததாகும். ஞாயிறு நாள்களில் வைகறையில் இத் தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

இங்குள்ள இலிங்க மூர்த்தி, பிரமன் வழிபட்டதால், மகாலிங்கம், பிரம்மலிங்கம் என்றும்; அம்பரீஷனால் வழிபடப்பட்டதாதலின் ராஜ லிங்கம் என்றும்; சூரியனும் வழிபடப்பட்டதாதலின் பாஸ்கரலிங்கம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் சோமவார (திங்கட்கிழமை)

Koviloor Digital Library

வழிபாடு சிறப்பாகச் சொல்லப்படுகிறது. அம்பாள் திருவுருவம் அழகானது. இக்காரைக்காலில், ''காரைக்காலம்மையார்'' கோயில் தனியே உள்ளது. சென்று தரிசிக்க வேண்டும்.

''திக்குலாம் பொழில் சூழ் **தெளிச்சேரி** யெஞ்செல்வனை
மிக்க காழியுள் ஞானசம்பந்தன் விளம்பிய
தக்க பாடல்கள் பத்தும் வல்லார்கள் தடமுடித்
தொக்க வானவர் சூழ இருப்பவர் சொல்லிலே.''

(சம்பந்தர்)

குறையாத செல்வமும் நிறைவான கல்வியும்
கோடாத ஞான வொளியும்
குன்றா ஒழுக்கமும் பொன்றாத பொறுமையும்
குணமான இனிய முகமும்
கறையிலா உள்ளமும் கபடிலா மாற்றமும்
கண்ணோட்ட மிகவு டைமையும்
கலையா முயற்சியும் அலையாப் பயிற்சியும்
காய்தலொ டுவத்த லின்றி
முறையாக ஆய்தலும் நீதிதவ றாதநன்
முடிவு தரு நற்கு ணங்கள்
மூடனேற் கென்றென்றும் அமைய அருள்புரிகுவாய்
முடிவிலா ஆற்ற லுடையாய்!
செறிதருங் கன்னலது கமுகென வளர்ந்திடும்
தெளிச்சேரி தனில்வி ளங்கும்
செப்பரிய பார்வதீச் சுரரிடப் பாலமர்
சிவசக்தி யம்மை யுமையே!

(சுயம்வர தபஸ்வினி விருத்தம்)

- நாட்டமுற்ற
வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க் கின்பநல
மாக்குந் தெளிச்சேரியங் கணனே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பார்வதீஸ்வரர் திருக்கோயில்
கோயிற்பத்து - காரைக்கால் & அஞ்சல் - 609 602
புதுவை மாநிலம்

Koviloor Digital Library

168/51. தருமபுரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருநள்ளாற்றிலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்துச்சாலையில் 2 கி.மீ. சென்று, வலப்பால் மாதாகோயில் (Church) உள்ள இடத்தில், வலப்புறமாகப் பிரியும் பாதையில் சென்றால் கோயிலையடையலாம். பாதையில் சாலை பிரியுமிடத்தில் பெயர்ப் பலகையும் உள்ளது. கோயில்வரை வாகனங்களில் செல்லலாம். தருமையாதீனக் கோயில். கோயிலைச் சுற்றிலும் தென்னைமரங்கள். மார்க்கண்டேயரின் உயிரைப் பறித்த பிழை நீங்க எமன் (தருமன்) வழிபட்ட பதியாதலின் தருமபுரம் என்று பெயர் பெற்றது. திருஞானசம்பந்தரின் யாழ்முரிப் பதிகம் பெற்ற சிறப்புடையது. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அவதாரத் தலம். இத்தலத்தில்தான் திருஞான சம்பந்தரின் இசை, திருநீலகண்ட யாழ்ப்பாணரின் யாழிசையில் அடங்காமையை இறைவன் வெளிப்படுத்தினார். (முரி = ஒருவகை இசைப் பாடல். யாழில் அமைத்துப் பாடும் இசையமைப்பாதலின் 'யாழ்முரி' எனப் பெயர் பெற்றது.) நான்முகன் வழிபட்ட பதி. இதற்கு அண்மையில் 'தக்களூர்' என்னும் வைப்புத் தலமுள்ளது.

சிறிய ஊர். கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. முகப்பு வாயில் உள்ளது.

இறைவன்	-	தருமபுரீஸ்வரர், யாழ்முரிநாதர்
இறைவி	-	மதுரமின்னம்மை, தேனமிர்தவல்லி.
தலமரம்	-	வாழை.
தீர்த்தம்	-	தருமதீர்த்தம், பிரமதீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

முகப்பு வாயில் கடந்து உள்ளே சென்றால் பலிபீடம் - நந்தி. வலப்பால் அம்பாள் சந்நிதி. மண்டபத்தூணிலேயே துவார விநாயகரும் சுப்பிரமணியரும் காட்சி தருகின்றனர். அம்பாள் நின்ற திருக்கோலம் - சதுர்ப்புஜ நாயகி. சுவாமி சந்நிதி முகப்பு வாயில் மேலே நடுவில் ரிஷபாருடரும், ஒருபுறம் சம்பந்தர் பாட, யாழ்ப்பாணர் யாழ் வாசிக்க அவர் மனைவி பக்கத்தில் நிற்பது போலவும், மறுபுறம் சம்பந்தர், யாழுடன் பாணர், அவர் மனைவி ஆகியோருடன் நிற்பது போலவும் சுதை வேலைப்பாடுகள் உள்ளன.

Koviloor Digital Library

முகப்பு வாயிலைக் கடந்து உட்சென்றால் இடப்பால் வலத்தில் விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி சந்நிதிகளும், தலமரம் வாழையும் நவக்கிரகங்களும் உள்ளன. வலமுடித்துப் படியேறி சென்றால் மூலவர் சந்நிதி. யாழ்முரிநாதர் தரிசனம் - சிறியபாணம் - நாகாபரணம் சார்த்தப்பட்டு அழகாகக் காட்சி தருகின்றார்.

கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தனகணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கை சந்நிதிகள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது.

யாழ்முரிநாதர் எமன் உற்சவமூர்த்திகள் சிறப்பானவை.

நாடொறும் நான்கு காலவழிபாடுகள். யாழ்முரிப் பதிகப் பாடல்.

''மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொடு ஏழிசைபாடுவர் ஆழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச் சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே.''

(சம்பந்தர்)

- ''நீக்குங்
கருமபுரத்திற் கலவா தருள்செய்
தருமபுரஞ் செய்தவமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. யாழ்முரிநாதர் தேவஸ்தானம்
தருமபுரம் - (வழி) காரைக்கால் & அஞ்சல்
புதுவை மாநிலம் - 609 602.

தலம் - 35

Koviloor Digital Library

169/52. திருநள்ளாறு



(1) காரைக்கால் - கும்பகோணம் சாலையில் காரைக்காலிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. பேரளம், காரைக்கால், கும்பகோணம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் முதலிய இடங்களிலிருந்து இத் தலத்திற்கு அடிக்கடி பேருந்துகள் செல்கின்றன.

சிவத்தலமாயினும் இங்குள்ள சனிபகவான் சந்நிதி மிகவும் பிரசித்தி பெற்றது. சனிபெயர்ச்சிக்கு இங்கு வந்து கூடும் மக்கள் ஆயிரக் கணக்காவர். நிடத நாட்டுமன்னனான நளன், விதர்ப்ப நாட்டு வீரசேனன் மகள் தமயந்தியைச் சுயம்வரத்தின் மூலமாக மணந்து கொண்டான். தேவர்களைப் புறக்கணித்து நளனைத் தமயந்தி மணந்தது கேட்டுச் சனிபகவான் நளன்மேல் கோபம் கொண்டார். நளனிடம் ஏதும் குறைகாணாது 12 ஆண்டுகள் காத்திருந்து, காலில் நீர்பட்டும் படாமலும்

Koviloor Digital Library

கழுவிச் சென்ற குற்றங்கண்டு அவனைப்பற்றினார். இதனால் நளன் பட்ட துன்பங்களை நாடறியும். துன்பங்கள் தீர்ந்து நாடாளத் தொடங்கியும் சனியின் வேகந்தணியாமையின் தீர்த்தயாத்திரையை நாரதர் உபதேசப்படி மேற்கொண்டான். திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலத்தில்) அவனைச் சந்தித்த பரத்வாஜ முனிவர், திருநள்ளாறு சென்று வழிபடுமாறு அறிவுரை கூறினார். அவ்வாறே நளன், திருநள்ளாறடைந்து, தீர்த்தம் உண்டாக்கி, நீராடி, இறைவனை வழிபட, திருநள்ளாற்று ஆலயத்துள் நுழைந்தான். அவனைப் பற்றியிருந்த 'சனி' உள்ளே நுழைய அஞ்சி அங்கேயே தங்கிவிட்டார். இதனால் இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகவும் விசேஷமானதாகக் கருதப்படுகின்றது.

இத்தலம் சப்த விடங்கத்தலங்களுள் ஒன்று ஏனையவை:-

1. திருவாரூர் 2. நாகப்பட்டினம் 3. திருமறைக்காடு 4. திருக்காறாயில் 5. திருவாய்மூர் 6. திருக்கோளிலி என்பன. இங்குள்ள தியாகராஜர் - நகவிடங்கத் தியாகர் என்று அழைக்கப்படுகின்றனர். நடனம் - உன்மத்த நடனம். திருஞானசம்பந்தர் அனல் வாதத்தில் எழுதியிட்ட 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் பதிகம் - பச்சைத் திருப்பதிகம் - இத்தலத்திற்குரிய பாடலேயாகும். 'சனி' யைப் பற்றிய வரலாறாவது:-

''சூரியனுக்குச் 'சஞ்ஞிகை' என்றொரு மனைவியிருந்தாள். அவள் துவட்டா என்பவனின் மகள். அவள் சூரியனுடன் கூடிவாழ்ந்து 'வைவஸ்தமனு' வையும் யமனையும், யமுனை என்னும் பெண்ணையும், பெற்றாள். பின்பு, சூரியனுடைய வெப்பத்தைத் தாங்க முடியாமல், தன் நிழலையே 'சாயாதேவி' எனப் படைத்து கணவனை நீங்காமல் இருக்குமாறு கூறித் தந்தை வீடு சென்றாள். தந்தை கடிந்து கொள்ளவே, கணவனிடம் வர அஞ்சி வடதுருவம் சென்று குதிரை வடிவுடன் சூரியனை நோக்கித் தவம் செய்திருந்தாள்.

சாயாதேவி சூரியனுடன் வாழ்ந்து, 'சாவர்ணி' என்ற மனுவையும், 'சனி' யையும், 'பத்திரை' என்ற பெண்ணையும் பெற்றாள். மூத்தாள் பிள்ளைகளைச் சாயாதேவி கொடுமைப்படுத்தினாள். யமன் அவளைக் காலால் உதைக்க முன்வர, அவளும் 'அவன்கால்முறியுமாறு' சாபமிட்டாள். சூரியன் இதை அறிந்து, குணமுடைய வரமளித்து, சாயாதேவியிடம் சென்று, அவள் இன்னாள் என்பதை அறிந்து, 'சஞ்ஞிகை' யைத்தேடிச் சென்றான். தவத்தில் இருக்கும் அவளை அழைத்து வந்து இருமனைவியரோடும் இல்லறம் நடத்தினான். மனுவை மன்னனாகவும், யமனைக்காலனாகவும், யமுனையை நதியாகவும், சனியைக் கிரகங்களுள் ஒன்றாகவும் இருக்குமாறு செய்தான். 'சனி'யும் காசி

Koviloor Digital Library

சென்று விசுவநாதரை வழிபட்டுத் தன், பதவிக்கு வேண்டிய வலிமையைப் பெற்றார்.

சனிபகவானுக்கு 'மந்தன்', 'சனைச்சரன்' என்னும் பெயர்களுண்டு. சனைச்சரன் என்பதே 'சனீஸ்வரன்' என்றாயிற்று. யமன் தன் இரண்டாந்தாயின்மீது கொண்ட கோபத்தால் சனியை அடித்தான். அதனால் 'சனி' யின் கால் நொண்டியாயிற்று. தக்ஷயாகத்தில் 'சனி' ஒரு கண்ணையிழந்தார்.

'சனி' பகவான் 4 கரங்களுடையவர். வலக்கைகளில் வர, தான முத்திரையும் பாம்புங்கொண்டவர். இடக்கைகளில் வில்லும் சூலமும் உடையவர். இவருக்கு கருநிறமுள்ள கழுகு வாகனமாகச் சொல்லப் பட்டிருந்தாலும் சில ஆகமங்களில் இவருக்குக் 'காகம்' வாகனமாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர் மனைவியின் பெயர் 'ஜ்யேஷ்டாதேவி' இவருக்குத் தானியம் எள், சமித்து - வன்னி, மலர் - கருநீலம், சுவை - கசப்பு, நண்பர்கள் - புதன், குரு, சுக்கிரன் ஆகியோர். பகைவர் - சூரியன், சந்திரன், செவ்வாய்.

சனி பகவான் நவக்கிரகங்களில் ஒருவர். ஒவ்வொரு ஜாதகருக்கும் ஆயுள் காரகனாக விளங்குபவர். 'சனியைப்போலக் கொடுப்பவருமில்லை. கெடுப்பவருமில்லை' என்பது பழமொழி. ஆதலின் இவரை அனைவரும் பயபக்தியுடன் வழிபடுவர்.

இத்தலத்தில் சனிபகவான் அனுக்கிரக மூர்த்தியாக விளங்கு கின்றார். இவருக்குத் தனியே அஷ்டோத்ரம், சஹஸ்ரநாம அர்ச்சனைகள் உண்டு. திருமால், பிரமன், இந்திரன், திசைப் பாலர்கள், அகத்தியர், புலஸ்தியர், அர்ச்சுனன், நளன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

"நள்ளாறா என நம் வினை நாசமே" என்பார் அப்பர்.

இறைவன் - தர்ப்பாரண்யேசுவரர், திருநள்ளாற்றீஸ்வரர்.

இறைவி - பிராணாம்பிகை, பிராணேஸ்வரி, போகமார்த்த பூண்முலையாள்.

தலமரம் - தர்ப்பை,

தீர்த்தம் - நளதீர்த்தம்.

தலவிநாயகர் - சொர்ணவிநாயகர்.

மூவர் பாடலும் பெற்ற தலம்.

நான்கு வீதிகளுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. ஐந்து நிலைகளோடு கூடிய ராஜகோபுரம். அதற்கு முன்புள்ள முற்றம் மண்டபமாக்கப்பட்டுள்ளது. இங்கு வடபுறம் அலுவலகமும் தென் புறம் இடையனார் கோயிலும் உள்ளது. இக்கோயிலில் இடையன்,

Koviloor Digital Library

அவள் மனைவி, கணக்கன் ஆகியோர் உருவங்கள் உள்ளன. இதுப்பற்றிச் சொல்லப்படும் தலவரலாற்றுச் செய்தியாவது:-

''இடையன் ஒருவன் அரசன் ஆணைப்படிக் கோயிலுக்குப் பால் அளந்து கொடுத்து வந்தான். கணக்கன் அப்பாலைத் தன் வீட்டுக்கு அனுப்பிப் பொய்க் கணக்கு எழுதி, இடையனையும் அச்சுறுத்தி வந்தான். செய்தியறிந்த மன்னன் கோபம் கொண்டான். அப்போது இறைவன், இடையனைக் காக்கவும் கணக்கனைத் தண்டிக்கவும் எண்ணித் தம் சூலத்தை ஏவினார். அச்சூலத்திற்கு வழிவிடவே இக் கோயிலினுள் **பலிபீடம்** சற்று விலகியுள்ளது. சூலம் கணக்கன் தலையைக் கொய்தது - இடையனுக்கு இறைவன் காட்சி தந்து அருள் புரிந்தார்.''

விசாலமான பிராகாரம். உயர்ந்த சுற்றுமதில். சுவரில் நளன் வரலாறு வண்ண ஓவியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. வசந்த மண்டபம் உள்ளது. கோபுரவாயிலின் வடபால் 'சனிபகவான்' சந்நிதி உள்ளது. மகர, கும்பராசிகளுக்குச் சனி, அதிபதியாதலின் முன்னால் மகர, கும்பராசிகளின் உருவங்கள் உள்ளன. இத்தலத்தில் பிரதானம் இப்பகவானுக்கே. சனிபகவானுக்குத் தங்கத்தாலான காகவாகனமும் தங்கக் கவசமும் உள்ளது. சனிதோஷமுள்ளவர்கள் நெய்தீபம் ஏற்றும் பிரார்த்தனை இங்கு விசேஷம். அதையடுத்து அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம்.

உள் சுற்றில் சுந்தரர், அறுபத்துமூவர் மூல உருவங்கள் உள்ளன. வரிசை முடிவில் நளன் வழிபட்ட நளேஸ்வரர் சிவலிங்கம் உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும், விநாயகரும், பிரமனும் துர்க்கையும் உள்ளனர்.

சொர்ண கணபதி சந்நிதி தலவிநாயகர் சந்நிதியாகும். சப்தவிடங்கத் தலசிவலிங்கத் திருமேனிகளும், சுப்பிரமணியர் சந்நிதியும், ஆதி சேஷன், நளநாராயணப் பெருமாள், மகாலட்சுமி, பைரவர் முதலிய சந்நிதிகளும் உள்ளன. நடராசா அழகு. படிகளேறிச் செல்லும்போது பலிபீடம் சற்று விலகியிருப்பதைக் காணலாம். உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி - சுயம்பு. (மூலவர் தர்ப்பையில் முளைத்த சுயம்புமூர்த்தி. சிவலிங்கத்தின் மீது முளைத்த தழும்புள்ளது). பக்கத்தில் உன்மத்த நடன தியாகேசர் தரிசனம். (நகவிடங்கத் தியாகர்) தேவி நீலோத் லாம்பாள். இச்சந்நிதியில் செய்யப்படும் மரகதலிங்க வழிபாட்டுச் சிறப்பைக் காணப் பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

Koviloor Digital Library

நாடொறும் ஆறுகால வழிபாடுகளும் செம்மையாக நடைபெறும் இத்திருக்கோயில் தருமையாதீனத்தின் அருளாட்சிக்குட்பட்டதாகும். வைகாசியில் பெருவிழா நடைபெறுகிறது.

நளதீர்த்தம் கோயிலுக்குச் சற்று தள்ளி உள்ளது. இத்தலத்திற்கு வரும் மக்கள் எண்ணெய் தேய்த்து இதில் நீராடுகின்றனர். இத்தீர்த்தத்திற்குச் செல்லும் வழி தெளிவாக வளைவின் (Arch)மூலம் காட்டப்பட்டுள்ளது. இதில் நவக்கிரகங்களுக்கும் தனித் தனிக் கிணறுகள் உள்ளன. நளன் தோஷம் நீங்க வழிபட்ட தலம். நவக்கிரக சந்நிதி இல்லை. கோயிலுக்கு எதிரில் சந்நிதி வீதியில் தேவஸ்தானச் சுற்றுலா விடுதி உள்ளது. ஆதீன மடாலயம் தெற்கு வீதியில் உள்ளது.

கோயிலுள்ளும் பொது மண்டபம் உள்ளது. யாத்திரிகர்கள் இரவு தங்கிச் செல்லலாம். தக்கபாதுகாப்பு உள்ளது. இத்தலபுராணம் சுப்பிரமணியக் கவிராயரால் பாடப்பட்டுள்ளது. இத்தலத்திற்குப் பக்கத்தில் 2 கி.மீ. தொலைவில் 'தக்களூர்' என்னும் வைப்புத்தலம் உள்ளது.

''போகமார்த்த பூண்'முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங் கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.'' *(சம்பந்தர்)*

''குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை இடப் பாலானை
மலங் கொடுத்து மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையினானைச்
சலங் கொடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்
நலங் கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப்பெற்றுய்ந்த வாறே''

(அப்பர்)

''மாதினுக்கு உடம்பு இடங் கொடுத்தானை
மணியினைப் பணிவார் வினை கெடுக்கும்
வேதனை வேதவேள் வியர் வணங்கும்
விமலனை அடியேற்கு எளி வந்த
தூதனைத் தன்னைத் தோழமையருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே.'' *(சுந்தரர்)*

Koviloor Digital Library

சனிபகவான் துதி

''பெருவாச நளனொடு வந்தவன் தீர்த்தமாடுதலாற் பெற்றபேற்றால்
ஒருவா வந்தெம் பெருமானருள் பெற்று மிகவுமனம் உவகைபூப்பக்
கருவாசல் புக்கார்போல் புகுந்தொளிரு நள்ளாற்றுக் கனக வச்ரத்
திருவாசலிடனின்ற ''மந்தன்'' இரு செந்தளிர்த்தாள் சிந்தை செய்வாம்.''

(தலபுராணம்)

- ''இருமையினும்
எள்ளாற்றின் மேவாத வேற்புடையோர் சூழ்ந்திறைஞ்சும்
நள்ளாற்றின் மேவிய என் நற்றுணையே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி தர்ப்பாரண்யேஸ்வரர் திருக்கோயில்
திருநள்ளாறு & அஞ்சல் - 609 607
(வழி) மயிலாடுதுறை. காரைக்கால்.

170/53. கோட்டாறு.

கொட்டாரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் இவ்வூர் 'கொட்டாரம்' என்று வழங்கப்படுகிறது.

1) காரைக்கால் - கும்பகோணம் சாலையில் திருநள்ளாறு தாண்டி, அம்பகரத்தூர் சென்று, காளிகோயிலை அடைந்து; அவ்விடத்திலிருந்து பிரிந்து செல்லும் பாதை வழியாக - வயல் வழியாக 2 கி.மீ. நடந்து சென்று இக்கோயிலை அடையலாம்.

2) கொல்லுமாங்குடியிலிருந்து நெடுங்காடு வழியாகத் திருநள்ளாற்றுக்குப் போகும் மயிலாடுதுறை - காரைக்கால், கும்பகோணம் - காரைக்கால் பேருந்துகளில் சென்று 'கொட்டாரம் கூட்ரோடில்' இறங்கி 1 கி.மீ. நடந்து இவ்வூரை (இக்கோயிலை) அடையலாம்.

Koviloor Digital Library

இறைவன் - ஐராவதீஸ்வரர்
இறைவி - சுகந்தகுந்தளாம்பிகை, வண்டமர் பூங்குழலி
தலமரம் - பாரிஜாதம், தற்போது இல்லை.
தீர்த்தம் - வாஞ்சியாறு, மற்றொன்றாகிய சூரிய தீர்த்தம்.

கோயிலின் முன்பு உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றது.

பழைமையான கோயில், வெள்ளையானை (ஐராவதம்) வழிபட்ட தலம். இத்தலத் தேவாரத்தில்.

''நின்று மேய்ந்து நினைந்து மாகரி நீரொடும் மலர்வேண்டி வான்மழை
குன்றின் நேர்ந்து உகுத்திப் பணி செய்யும் கோட்டாறு''

என வரும் தொடரால், வெள்ளை யானை வழிபட்ட தலம் என்னும் குறிப்பு பெறப்படுகிறது. வெள்ளை யானை தன் கோட்டினல் மேகத்தை இடித்து மழையை ஆறு போலச் சொரிவித்து வழிபட்டதால் இத்தலம் கோட்டாறு எனப் பெயர் பெற்றதென்பர்.

கோடு - கரை. (வாஞ்சி) யாற்றின் கரையில் இருத்தலாலும் இப்பெயர் பெற்றதென்பர். திருவிளையாடற்புராணத்துள் சொல்லப் படும் வரலாறாகிய 'வெள்ளையானை சாபம் நீங்கியது' தொடர்பாக: (வெள்ளையானை துர்வாச முனிவரின் சாபப்படி காட்டானையாகிப் பல தலங்களுக்கும் சென்று இறைவன் வழிபட்டு இறுதியில் மதுரையில் இறையருளால் பழைய வடிவம் பெற்றது.) வெள்ளையானை (ஐராவதம்) சென்று வழிபட்ட பல தலங்களுள் இதுவும் ஒன்று என்பர்.

கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. உள்ளே நுழையும் நம்மை மூன்று நிலைகள் கொண்ட ராஜகோபுரம் வரவேற்கின்றது. உள்ளே சென்றதும் நேரே சுவாமி சந்நிதி தெரிகிறது. வலமாக வரும்போது விநாயகர் சந்நிதியுள்ளது. விசாலமான வெளிச் சுற்று. நடராச சபைக் கான பக்க வாயில். கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும், பிரம்மா, விஷ்ணு, உருவங்களும் உள. பிராகாரத்தில் சுந்தரர், பரவையார், சுபமகரிஷி, மூலத்திருமேனிகள் உள. அடுத்து ஆறுமுகர், குமார புவனேஸ்வரர், அகத்தியர் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். சுபமகரிஷியின் சிலையும், குமார புவனேஸ்வரரின் உருவச்சிலையும் வெளிச்சுற்றில் பின்புறத்தில் வைக்ககப்பட்டுள்ளன. ஞானசம்பந்தரின் பதிகம் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. மூலவர் மிகச் சிறியவர்.

மூலவர் சந்நிதியில் முன்னால் தேன்கூடு உள்ளது. இக்கூடு பல்லாண்டுக காலமாக இருந்து வருகின்றது என்று சொல்கின்றனர்.

Koviloor Digital Library

இத்தேன் கூட்டைப் பற்றிச் சொல்லப்படும் செவி வழிச் செய்தி வருமாறு:- சுபமகரிஷி என்பவர் நாடொறும் வந்து இப்பெருமானைத் தரிசித்து வந்தார். ஒருநாள் அவர் வருவதற்கு நேரமானதால் கோயில் கதவு சார்த்தப்பட்டது. அதைக் கண்ட 'சுபர்' தேன் வடிவம் கொண்டு உள்ளே சென்று பெருமானை வழிபட்டார். அதுமுதல் அங்கேயே தங்கிவிட்டார். அக்காலந் தொடங்கி மூலவர் சந்நிதியில் தேன்கூடு இருந்து வருகிறது.'' தரிசிக்கச் செல்வோர் அக்கூட்டைத் தொடாது எட்டி நின்று பார்த்தவிட்டு வரவேண்டும். ஆண்டுக்கொரு முறை இக்கூட்டிலிருந்து தேனையெடுத்துச் சுவாமிக்குச் சார்த்துகிறார்களாம். மீண்டும் கூடுகட்டப்படுகின்றதாம். இம் மகரிஷியின் - சுபமக ரிஷியின் உருவமே வெளிச் சுற்றில் பின்புறத்தில் உள்ளது.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். ஆருத்ரா, வைகாசி விசாக விழா இங்குச் சிறப்பானவை.

கல்வெட்டுக்களில் இவ்வூர் ''இராசராசப் பாண்டி நாட்டு உத்தமச் சோழ வளநாட்டு நாஞ்சில் கோட்டாறான மும்முடிச்சோழ நல்லூர்'' என்று குறிக்கப்படுகிறது. இக்கோயிலைக் கட்டுவித்தவன் 'சோழ மண்டலத்து மண்ணி நாட்டு முழையூர் உடையான் அரையன் மதுராந்தகனான குலோத்துங்க சோழ கேரள ராசன்'' ஆவான். (காலம் கி.பி. 1253), கல்வெட்டில் இறைவனின் பெயர், ''இராசேந்திர சோழீசுவரமுடைய மகாதேவர்'' என்று காணப்படுகின்றது.

''வேதியன் விண்ணவர் ஏத்த நின்றான் விளங்கும் மறை
ஓதிய ஒண் பொருளாகி நின்றான் ஒளியார்கிளி
கோதிய தண் பொழில் சூழ்ந்தழகார் திருக் கோட்டாற்றுள்
ஆதியையே நினைந்தேத்த வல்லார்க்கு அல்லல் இல்லையே.''

(சம்பந்தர்)

- தெள்ளாற்றின்
''நீட்டாறு கொண்டரம்பை நின்று கவின்காட்டும்
கோட்டாறு மேவும் குளிர் துறையே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஐராவதீஸ்வரர் திருக்கோயில்
கொட்டாரம் & அஞ்சல் - 609 703
தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

171/54. அம்பர்பெருந்திருக்கோயில்

அம்பர், அம்பல்.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

தற்போது மக்கள் வழக்கில், அம்பர், அம்பல் என்று வழங்குகிறது. நெடுஞ்சாலைத் துறையினரின் ஊர்ப்பலகையில் "அம்பல்" என்றே எழுதப்பட்டுள்ளது. அம்பர் மாகாளத்திலிருந்து அதே சாலையில் மேலும் 1 கி.மீ. சென்றால் சாலையோரத்தில் உள்ள இக்கோயிலை யடையலாம். கோயில் வரை பேருந்து செல்லும்.

கோச்செங்கட் சோழனின் கடைசி திருப்பணியாகச் சொல்லப் படும் இஃது மாடக்கோயிலாகும். பிரமன் வழிபட்ட தலம். சோமாசிமாற நாயனார் வசித்தபதி.

இறைவன் - பிரமபுரீஸ்வரர்

இறைவி - சுகந்த குந்தளாம்பிகை, பூங்குழலம்மை.

தலமரம் - புன்னை

தீர்த்தம் - பிரமதீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது - பழமையானது. உள்ளே சென்றால் விசாலமான இடைவெளி, சுதையாலான பெரிய நந்தி உள்ளது. இடப் பக்கத்தில் உள்ள கிணறு "அன்னமாம் பொய்கை" என்று வழங்குகிறது. பக்கத்தில் சிவலிங்க மூர்த்தம் உள்ளது. பிரமன் இக்கிணற்றுத் தீர்த்தத்தில் நீராடி, பக்கத்தில் உள்ள சிவலிங்கமூர்த்தியை வழிபட்டு அன்ன வடிவம் பெற்ற சாபம் நீங்கப்பெற்றார் என்பது வரலாறு.

படிக்காசு விநாயகர் சந்நிதியில் அடுத்தடுத்து மூன்றுசிறிய விநாயக மூர்த்தங்கள் உள்ளன. பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி, ஜம்புகேஸ்வரர் சந்நிதிகள் உள்ளன. அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. நின்றதிருமேனி. சந்நிதிக்கு வெளியில் இருபுறமும் ஆடிப்பூர அம்மன் சந்நிதியும் பள்ளியறையும் உள்ளன. வலம் முடித்துப் படிகளேறி மேலே சென்றால் சோமாஸ்கந்தர் சந்நிதியும் மறுபுறம் விநாயகர், கோச்செங்கட் சோழன், சரஸ்வதி, ஞானசம்பந்தர், அப்பர் ஆகிய மூலத்திருமேனிகளும் உள்ளன. துவாரபாலகர்களையும் விநாயகரையும் வணங்கிச் சென்று சிறியவாயில் வழியாக உள்ளிருக்கும்

Koviloor Digital Library

மூலவரைத் தரிசிக்கலாம். மூலவரின் பின்னால் சோமாஸ்கந்தர் காட்சியளிக்கின்றார்.

வலப்பால் நடராசசபை. இக்கோயிலில் அம்பலவாணர் மூர்த்தங்கள் மூன்று உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணா மூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா உள்ளனர்.

உற்சவமூர்த்தங்களுள் (1) பிரம்மாவுக்கு காட்சிதந்த சுவாமி, நந்தியுடன் நின்றிருக்கும் பெரிய மூர்த்தம் (2) பிரம்மா (3) நால்வர் ஆகியவை தரிசிக்கத்தக்கன.

மாசிமக நாளில் திருவிழா நடைபெறுகிறது. இத்தலத்திற்கு மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தலபுராணம் பாடியுள்ளார்.

''சுங்கணி குழையினர் சாமம் பாடுவார்
வெங்கனல் கனல்தர வீசியாடுவர்
அங்கணி விழவமர் அம்பர் மாநகர்ச்
செங்கணலிறை செய்த கோயில் சேர்வரே.'' *(சம்பந்தர்).*

(செங்கணலிறை - கோச்செங்கட்சோழன்)

- கூட்டாக

''கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்
அம்பல் & அஞ்சல் - (வழி) பூந்தோட்டம் - S.O.
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம். 609 503.

Koviloor Digital Library

172/55. அம்பர்மாகாளம்

கோயில் திருமாளம்/திருமாகாளம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் **'கோயில் திருமாளம்'** என்று வழங்குகின்றனர். மயிலாடு துறை - திருவாரூர்ச் சாலையில் பேரளம் தாண்டிப் **பூந்தோட்டம்** சென்று அங்குக் கடைவீதியில் **''காரைக்கால்''** என்று வழிகாட்டி யுள்ள இடத்தில் அதுகாட்டும் சாலையில் (இடப்புறமாகச்) சென்று ரயில்வே கேட்டைத் தாண்டி நேரே (அச்சாலையில்) சுமார் 4 கி.மீ. சென்றால் **''கோயில் திருமாளம் - மங்களநாதர் கோயில்''** என்று பெயர்ப் பலகையுள்ளது - அவ்விடத்தில் திரும்பினால் கோயிலை யடையலாம். சாலையோரத்தில் கோயில் உள்ளது. கோயில்வரை வாகனங்கள் செல்லும். அரிசிலாற்றின் கரையில் தலம் அமைந்துள்ளது. அம்பன், அம்பாசூரன் என்னும் அசுரர்களைக்கொன்ற பாவந்தீரக்காளி, இறைவனைப்பூசித்து வழிபட்ட தலம். எனவே ''மாகாளம்'' என்று பெயர் பெற்றது. வெளிப் பிராகாரத்தில் காளி கோயில் உள்ளது. பழைமையான கோயில். சோமாசிமாறநாயனார் சோமாயாகஞ் செய்த இடம் இதுதான்.

இது தொடர்பாகச் சொல்லப்படும் வரலாறு:-

சோமாசிமாறநாயனார், நாடொறும் சுந்தரருக்கு அவர் திருவாரூரில் இருந்த போது உணவுக்குத் தூதுவளை கீரை கொண்டு தரும் தொண்டைச் செய்துவந்தார். பரவையாரும் அதைச் சமைத்து இட சுந்தரர் விரும்பிச் சாப்பிட்டு வந்தார். ஒரு நாள் சுந்தரர் அக்கீரை கொண்டு வந்து நாடொறும் தருபவர் யார் என்று கேட்டு சோமாசிமாறரைப் பற்றியறிந்து நேரில் கண்டு, அவர் விருப்பம் யாதென வினவினார். அதற்கு அவர், தான் செய்ய விருக்கும் சோமாயாகத்திற்குத் திருவாரூர் தியாகேசப் பெருமான் எழுந்தருளி அவிர்ப்பாகம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அதற்குச் சுந்தரர் உதவ வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். மறுக்கமுடியாத சுந்தரர், சோமாசி மாறரை அழைத்துக் கொண்டு திருவாரூர்ப் பெருமானிடம் வந்து வேண்டுகோளைத் தெரிவித்தார். செவிமடுத்த இறைவன் இசைந்து, தான்வரும் வேடம் தெரிந்து நாயனார் அவிர்ப்பாகம் தரவேண்டும் என்று பணித்தார். நாயனாரும் அதற்கிசைந்தார்.

நாயனார் யாக குண்டம் அமைத்து யாகத்தைத் தொடங்கினார். அவ்விடம் அம்பர் மாகாளத்திற்கும் அம்பர் பெருந்திருக்கோயிலுக்கும்

Koviloor Digital Library

இடையில் சாலையோரத்தில் உள்ளது. அவ்விடத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. அவ்விடத்தை இன்று ''பண்டார வாடை திருமாளம்'' என்று சொல்கின்றனர். இன்றும் சோமயாக உற்சவம் இவ்விடத்தில் தான் நடைபெறுகிறது.

யாகம் நடைபெறும் இடத்திற்கு, தியாகராசப் பெருமான் வெட்டியான் வேடத்தில் (நீசவடிவினராய்) வருகை தந்தார். (நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கி உடன் பிடித்துக்கொண்டு; தோளில் இறந்துபோன கன்றினைப் போட்டுக்கொண்டு, தடித்த பூணூலணிந்து, தலையில் முண்டாசு (தலைப்பாகை) கட்டி, விநாயகரையும், சுப்பிரமணியும் சிறுவர்களாக்கி, உமாதேவியை வெட்டிச்சி வேடத்தில் தலையில் கள்குடம் ஏந்தியவாறு அழைத்துக்கொண்டு) இக்கோலத்தில் வந்த இறைவனைப் பார்த்து, எல்லோரும் அபசாரம் நேர்ந்து விட்டதென்று எண்ணியும், இக்கோலத்தைக் கண்டு பயந்தும் ஓடினர். ஆனால் சோமாசிமாறரும் அவர் மனைவியாரும் அவ்விடத்திலேயே அஞ்சி நிற்க: தந்தைவருவதை நாயனாருக்கு விநாயகர் குறிப்பாக வுணர்த்தி அச்சத்தைப் போக்கினார் - நாயனாரும் அவர் மனைவியும் இறைவனை அந்நீச வடிவில் நின்று வீழ்ந்து வரவேற்க; இறைவன் மகிழ்ந்து நாயனாருக்குக் காட்சி தந்து அருள்புரிந்தார் என்பது வரலாறு. அதனால்தான் அவ்விநாயகரை **அச்சந்தீர்த்த விநாயகர்** என்றழைக் கின்றனர்.

அருள்புரிந்த இறைமூர்த்தமே ''காட்சி கொடுத்த நாயகர்'' எனப்போற்றப்படுகிறார். இம்மூர்த்தி வலக்காலை ஊன்றி இடக்காலைச் சற்று மடக்கி வலக்கரத்தில் பெருவிரலும் நடுவிரலும் இணைய, இடக் கரத்தை ரிஷபத்தின் சிரசில் ஊன்றிக் காட்சி தருகிறார்.

இறைவன் யாகத்திற்கு நீசவடிவில் எழுந்தருளியபோது அம்பிகையின் தலையிலிருந்து கட்குடம் பொங்கிய இடம் ''பொங்கு சாராய நல்லூர்'' (இன்று வழக்கில் கொங்கராய நல்லூர்) என்றும்; இறைவன் சுமந்துவந்த பறை தானாக அடிபபட்ட இடம் ''அடியுக்க மங்கலம்'' (இன்று அடியக்க மங்கலம்) என்றும்; இறந்த கன்றை ஏந்திய இடம் ''கடா மங்கலம்'' என்றும் இன்றும் வழங்குகின்றன.

இறைவன் - மாகாளேஸ்வரர், காளகண்டேஸ்வரர்.

இறைவி - பக்ஷயாம்பிகை

தலமரம் - கருங்காலி

தீர்த்தம் - மாகாள தீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

கிழக்கு நோக்கிய ராஜகோபுரம் - ஐந்து நிலைகள். உள்ளே விசாலமான இடைவெளி. வலப்புறம் அலங்கார மண்டபம். இடப்புறம் மருதப்பர் சந்நிதி. பிராகாரத்தில் மோக்ஷலிங்கம், காளிகோயில் சிவலோக நாதர் சந்நிதி. யாகசாலை முதலியன உள்ளன. இரண்டாவது கோபுரம் அதிகார நந்தி கோபுரம் என்றழைக்கப்படுகிறது. உள்ளே சென்றால் பிராகாரத்தில் வன்மீகநாதர், சோமாசியார், அவர் மனைவி சுசீலை, அறுபத்துமூவர், விநாயகர், சுப்பிரமணியர், மேலே உயரத்தில் சட்டநாதர் சந்நிதி, மகாலட்சுமி, ஈசான, ஜ்வரஹர லிங்கங்கள், நவக்கிரகம், நடராச மண்டபம், சனிஸ்வரர், பைரவர், தண்டபாணி முதலிய சந்நிதிகளைத் தொழலாம்.

நேரே மூலவர் தரிசனம். காளி தன் கையால் பிடித்து வைத்து வழிபட்டதாலின் மிகச்சிறிய பாணமாகவுள்ளது. பக்கத்தில் தியாகராஜர் சந்நிதி உள்ளது. இங்குள்ள சுப்பிரமணியர் வடிவம் வில்லேந்தியவாறு மிக்க அழகாகவுள்ளது. அம்பாள் சந்நிதி தனியே கிழக்குநோக்கி அமைந்துள்ளது. நாடொறும் ஐந்துகால வழிபாடுகள்.

யாக உற்சவம் மிகவும் ஐதீகமாக வைகாசி ஆயில்யத்தில் சிறப்பாக நடைபெறுகிறத. அன்று தியாகராஜா வெட்டியான் கோலத்திலும், காட்சி தந்த நாயகர் கோலத்திலுமாக எழுந்தருள்கிறார். அன்று 17 மூர்த்தங்கள் புறப்பாடு - மிகச்சிறப்பாக இருக்குமாம். ஆயில்யத்தில் சோமாசிமாறருக்கு அருள்புரிந்த இறைவன் அவரைக் கண்டு பயந்து யாகத்திலிருந்து ஓடியவர்களுக்கெல்லாம் மறுநாள் மகநாளில் காட்சி தருவதாகவும் விழா அமைகிறது.

உற்சவ மூர்த்தங்களுள் தியாகராஜா, காட்சிகொடுத்த நாயகர், சோமாசிமாறர், அவர் மனைவியார், வில்லேந்திய முருகன், சோமாஸ் கந்தர், காளி கையில் சிவலிங்கம் பிடிக்கும் அமைப்புடன் - முதலியவை தரிசிக்கத்தக்கன.

'அம்பர்புராணம் - தலபுராணம், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்கள்.

(கோயில் சிவாசாரியார் 'அம்பர்' ஊரில் குடியிருக்கிறார். அவரே மாகாளத்திற்கும் வந்து பூஜை செய்கிறார்.)

''அடையார்புரம் மூன்றும் அனல்வாய் விழ எய்து
மடையார் புனல் அம்பர் மாகாளம் மேய
விடையார் கொடி எந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழல் ஏத்தச் சாரா வினை தானே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

- ஒருவந்தர்
மாகாளங்கொள்ள மதனைத் துரத்துகின்ற
மாகாளத் தன்பர் மனோலயமே.

(அருட்பா)

''காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து - சூளையர்கள்
ஓகாளஞ் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து''

(ஐயடிகள் காடவர்கோன்)

அஞ்சல் முகவரி:-

அ/மி. மாகாளேஸ்வரர் திருக்கோயில்
கோயில் திருமாளம் - பூந்தோட்டம் அஞ்சல் - 609 503
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

173/56. திருமீயச்சூர்
174/57. திருமீயச்சூர் இளங்கோயில்

சோழ நாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பேரளம் வந்து; இடப்புறமாகப் பிரியும் காரைக்கால் பாதையிற் செல்லாமல், வலப்புறமாகத் திரும்பும் திருவாரூர்ச் சாலையில் திரும்பிச் சிறிதுதூரம் சென்றதும், கடைவீதியில் - கடைவீதிக்கு இணையாகப் பின்புறமாகப் பிரிந்து செல்லும் **'கம்பூர்'** பாதையில் சென்று - ரயில்வே கேட்டைத் தாண்டி, சுமார் 2 கி.மீ. சென்றால் மீயச்சூரை அடையலாம். சரளைக்கல்பாதை, கோயில்வரை வாகனங்கள் செல்லும். இக்கோயில் திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீனத்திற்குரியது. மீயச்சூர் கோயிலுக்குள்ளேயே இளங்கோயில் உள்ளது. **மீயச்சூர் கோயில்:** சூரியன் வழிபட்டது. இக்கோயில் விமானம் கஜப்பிரஷ்ட அமைப்புடையது.

இறைவன் - மேகநாதர், முயற்சிநாதர்
இறைவி - சௌந்தர நாயகி, லலிதாம்பாள்
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - சூரியதீர்த்தம்

Koviloor Digital Library

ஆயிரம் மகுடங்களாலும் இறுகப்பற்றிக் கொள்ளவும், வாயுதேவன் சண்டமாருதமாக மலையை அசைக்க முற்பட்டு வீசினார். தேவர்கள் அஞ்சினர். ஆதிசேடன் தன்பிடியைச் சிறிது தளர்த்த; தக்கசமயமென்றெண்ணி, வாயு இருசிகரங்களைப் பெயர்த்துக் கொண்டு வந்து தென்னாட்டில் திருநல்லூரிலும், ஆவூரிலும் விடுத்தனன். அம்மலைச் சிகரமே நல்லூரில் இறைவன் எழுந்தருளியுள்ள மலையாகும். இச்சிகரத்திற்கு - மலைக்குச் 'சுந்தரகிரி' என்ற பெயர்; தென் கயிலாயம் என்று இத்தலமும் வழங்கப்படுகின்றது.

திருச்சித்திமுற்றத்துச் சிவக்கொழுந்தீசரை வழிபட்டு, 'கோவாய் முடுகி' என்ற பதிகம் பாடி, தனக்குத் திருவடி தீட்சை செய்யுமாறு அப்பர் வேண்ட, அவரை இறைவன் திருநல்லூருக்கு வருமாறு அருளி, ''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம், என்று அவர்தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டி''யருளினார். இச் செய்தியை நம்பியாண்டார் நம்பிகளும் தாம் அருளியுள்ள திருத்தொண்டர் திருவந்தாதியுள் ''நற்றவன் நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் பெற்றவன்'' எனக் குறித்துள்ளார். இதுபற்றியே இன்றும் இத்தலத்தில் சடாரி போன்று திருவடி சூட்டப்படுகின்றது.

அமர்நீதி நாயனார் துலையேறியபோது இறைவன் அவருக்குக் காட்சி வழங்கி ஆட்கொண்டருளிய (முத்தியருளிய) அருட்சிறப்பும் உடையது இத்தலம். மிகப்பழமையான, அருமையான, சிறப்புமிக்க திருக்கோயில்.

இறைவன் - பஞ்சவர்ணேஸ்வரர், கல்யாண சுந்தரேஸ்வரர், பெரியாண்டேஸ்வரர்.

இறைவி - கிரிசுந்தரி, பர்வதசுந்தரி, கல்யாணசுந்தரி.

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - சப்தசாகர தீர்த்தம். கோயிலின் முன்னால் உள்ளது. படித்துறைகளையுடையது, குளக்கரையில் ஒருபுறம் அமர்நீதி நாயனார் மடாலயம் உள்ளது. சற்றுகிலமாகவுள்ளது. அக்குடும்ப வழிவந்தோர் அமர்நீதி நாயனார் விழாவை இம்மடத்தில் ஆண்டு தோறும் நடத்துகிறார்கள்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ஐந்து நிலைகளையுடைய அழகான ராஜகோபுரம் நம்மை அழைக்கின்றது. உள்ளே விசாலமான இடம். கவசமிட்ட கொடிமரம் உள்ளது. முன்பு விநாயகர் உள்ளார். அடுத்து வடபால் வசந்த

Koviloor Digital Library

மண்டபமும், தென்பால் அமர்நீதியார் துலையேறிய துலா மண்டபமும் உள்ளன. இங்குள்ள அஷ்டபுஜ காளி பிரசித்தி பெற்றது.

உள்கோபுரம் மூன்று நிலைகளையுடையது - கீழே கல்கட்டிடம் மேலே சுதை வேலைப்பாடுடையது. உள்ளே நுழைந்தால் நேரே காசி விநாயகர் தரிசனம். வலம்வர, பாணலிங்கம், விசுவநாதர் சந்நிதிகள்.

சோமாஸ்கந்தர் மண்டபமும், முருகன் சந்நிதியும் உள்ளன. வடபால் அமர்நீதி நாயனார், மனைவி, குழந்தை, குந்திதேவி முதலியோரின் உருவங்கள் உள்ளன. மாடக்கோயிலில் கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், அடுத்து யோகத்தின் மேன்மையை விளக்கும் விநாயகரின் மற்றொரு உருவம், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. அழகான நடராசசபை.

மூலவர் - பஞ்சவர்ணேஸ்வரர் (கட்டு) மலைமீது உள்ளார். இங்குள்ள இறைவனின் சிவலிங்கத் திருமேனி வேறு எங்கும் காண முடியாத அற்புதமான அமைப்பை உடையது. ஒருநாளில்; ஆறு நாழிகைக்கு ஒருமுறை - ஒருநாளில் ஐந்துமுறை நிறம் மாறுகின்றது. இதனால்தான் இறைவனுக்குப் பஞ்சவர்ணேஸ்வரர் என்று பெயர் வழங்குகின்றது. பிருங்கி முனிவர், வண்டு வடிவமாய் வழிபட்டதால் இச்சிவலிங்கத்தில் துளைகள் உள்ளன. சதுர ஆவுடையார் சிவலிங்கத்தின் பின்னால், அகத்தியருக்குத் திருமணக்கோலங்காட்டியருளிய கல்யாண சுந்தரர் உருவம் சுதைவடிவில் காட்சியளிக்கின்றது. இருபக்கத்திலும் திருமாலும், பிரமனும் காட்சி தர, அகத்தியர் வழிபடும் நிலையில் நிற்கின்றார். மூலவருக்குப் பக்கத்தில் அகத்தியலிங்கம் உள்ளது.

மூலவர் - பஞ்சவர்ணேஸ்வரர் - சுயம்பு மூர்த்தி. இத்திருமேனி முழுவதும் வண்டுகள் துளைத்த அடையாளங்கள் உள்ளன. மூலவர் பிராகார வலம்வரக் குறுகலான வழியுள்ளது.

கிழக்கு நோக்கிய சந்நிதி. மூலவர் - சிவலிங்கத் திருமேனி பார்ப்பதற்கு ஓர் உலோகம் போலக் காட்சி தருகின்றது. (இக்குறிப்பை எழுதுவதற்காகச் சென்று தரிசித்த போது சிவலிங்கம் பித்தளை வடிவமாகக் காட்சி தந்ததைக் கண்ணாரக்கண்டு தரிசித்தேன்).

சந்நிதியில் பலகணி உள்ளது. சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வாயிலின் பக்கத்தில் அம்பாள் சந்நிதி உள்ளது. தெற்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம்.

Koviloor Digital Library



ஊர் - திலதர்ப்பணபுரி - கோயில் - மதிமுத்தம் - கோயில் உள்ள இடம் ''கோயிற்பத்து ஆகும்.

அரிசிலாற்றின் கரையில் உள்ளதலம். பிதிர்களுக்குச் செய்ய வேண்டிய சிராத்தம், தர்ப்பணம் முதலிய கடமைகளைச் செய்வதற் குரிய தலம்

1) மயிலாடுதுறை - திருவாரூர்ச் சாலையில் பூந்தோட்டம் வந்து; அரிசிலாற்றுப் பாலங் கடந்து, வலப்புறமாகப் பிரியும் கும்பகோணம் நாச்சியார் கோயில் சாலையில் சென்று கூத்தனூரை அடைந்து; ஊர்த் தொடக்கத்தில் உள்ள மரத்தினடியில் பேருந்தை நிறுத்திவிட்டு வலப் புறமாகச் செல்லும் அரிசிலாற்றின் கரைமீது நடந்து செல்லவேண்டும். 2 கி.மீ. நடந்தபின்பு இடப்புறமாக வரும் இறக்கத்தில் இறங்கி, மண் பாதையில் சிறிதுதூரம் நடந்து ''செதலபதி'' ஊரையடைந்து; ஊர்க் கோடியில் வலப்புறமாகச் செல்லும் சாலையில் சென்றால் கோயிலை அடையலாம். (இத்தலத்திற்குப் பேருந்து செல்லாது. ஆற்றின் கரைமீது

Koviloor Digital Library

நடந்தே செல்லவேண்டும். கோயில் சாவி கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள செட்டியார் வீட்டில் இருக்கிறது. யாத்திரையாகச் செல்வோர் முன்பே கடிதம் எழுதிவிட்டு, அக்காலத்தில் சென்றால்தான் தரிசிக்க முடியும். இல்லையெனில் நாம் செல்லும் நேரத்தில் செட்டியார் குடும்பத்தினர் வெளியே சென்றிருந்தால் சிரமப்பட்டுச் சென்றும் தரிசிக்க முடியாமற்போய்விடும். கோயிற்குருக்கள் பக்கத்து ஊரிலிருந்து வந்து பூஜை செய்துவிட்டுப் போகிறார்.)

2) திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை சாலையில் வருவோர் பூந்தோட்டம் ஊருக்குள் செல்லாமல் முன்பாகவே (அரிசிலாற்றுப் பாலத்திற்கு முன்னால்) இடப்புறமாகச் செல்லும் கும்பகோணம் நாச்சியார் கோயில் சாலையில் சென்று கூத்தனூரையடைந்து மேலே சொல்லியவாறு சென்றடையலாம்.

இராமலட்சுமணர்கள் தம் தந்தையாகிய தசரதனுக்கும் சடாயு வுக்கும் திலதர்ப்பணம் (திலம்- எள்) செய்த தலமெனத் தலபுராணம் சொல்கிறது. இச்சிற்பம் கோயிலில் பிராகாரத்தில் உள்ளது. சூரியன் சந்திரன் யானை சிங்கம் இராமர் இலக்குவன் ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - முத்தீஸ்வரர், மந்தாரவனேஸ்வரர்

இறைவி - சுவர்ணவல்லி, பொற்கொடிநாயகி

தலமரம் - மந்தாரை

தீர்த்தம் - சந்திர தீர்த்தம் (வெளியே பக்கத்தில் உள்ளது) அரிசிலாறு

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய கோயில் - கிழக்கு நோக்கிய சந்நிதி. இரும்புக் கம்பிகளாலான கதவையுடைய முகப்பு வாயில். உள்ளே சென்றால் கொடிமரம், நந்தி, உள் வாயிலைக் கடந்து முன் மண்டபம் அடைந்தால் நேரே மூலவர் தரிசனம். வலப்பால் அம்பாள் சந்நிதி. பிராகாரத்தில் விநாயகர், இராம இலக்குவர்கள் திருமேனிகள். அவர்கள் பிரதிஷ்டை செய்த சிவலிங் கங்கள், ஆறுமுகர், கஜலட்சுமி நவக்கிரகம், பைரவர், நால்வர், சூரிய சந்திரர், தேவியருடன் பெருமாள் ஆகியோர் காட்சி தருகின்றனர்.

கோஷ்டத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை உள்ளனர். கோயிலுக்கு எதிரில் உள்ள சிறிய சந்நிதியைத் தவறாமல் தரிசிக்க வேண்டும். இது ஆதி விநாயகர் சந்நிதி எனப் படுகிறது. இங்கு விநாயகர் தும்பிக்கையில்லாமல், வலக்கால் தொங்க விட்டு, இடக்கால், மடித்து, இடக்கையை இடக்காலின்மீது வைத்து,

Koviloor Digital Library

வலக்கை சற்று சாய்ந்த அபயகரமாக விளங்க, அதிசயமான அழகான கோலத்தில் காட்சி தருகின்றார்.

கோயிலுக்கு வெளியே பக்கத்தில் (பின்புறத்தில்) அழகீசர் கோயில் - அழக நாதர் சந்நிதி ஒன்றுள்ளது. சிவலிங்கத் திருமேனி. நகரத்தார் திருப்பணியும், பராமரிப்பும் பெற்றுள்ள இக்கோயிலில் நாடொறும் ஒருவேளை பூஜையே.

கூத்தனூரில் உள்ள துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி கோயில்கள் தரிசிக்கத்தக்கன. **சரஸ்வதிக்குத் தனிக் கோயில் இங்கிருப்பது விசேஷமானது.** இக்கோயிலை (சரஸ்வதி கோயிலை)க் கட்டியவர் ஒட்டக் கூத்தரின் பேரர் ஓவாக்கூத்தர் என்பது கல்வெட்டுச் செய்தி). யாழ்ப்பாணம், திரு. சி. நாகலிங்கப் பிள்ளை என்பவர் திலதைப்பதிப் புராணம் பாடியுள்ளார். இந்நூல் 1941-ல் தேவ கோட்டை மெ. ராம. லெட்சுமணன் செட்டியாரால் வெளியிடப்பட்டுள்ளது.

''விண்ணர் வேதம் விரித்தோத வல்லார் ஒரு பாகமும்
பெண்ணர் எண்ணார் எயில் செற்றுகந்த பெருமானிடம்
தெண்ணிலா வின்ஒளி தீண்டு சோலைத் திலதைப்பதி
மண்ணுளார் வந்தருள் பேண நின்றம்மதி முத்தமே.''

(சம்பந்தர்)

தலபுராணம் - ஆதி விநாயகர் துதி

''அங்குமாய் இங்குமாகி அநாதியாய்ப் பலவாயானைத்
துங்கமா முகமுந்தூய துதிக்கரம் தானுமின்றிப்
பங்கயப் பழன வேலித் திலதையாம் பதியின் மேவும்
புங்கவன் ஆதிநாதன் புதுமலர்த் தாள்கள் போற்றி.''

முத்தீசுவரர் துதி

''மலரயன் முகுந்தன் பூமின் மாதுமை வணங்கி யேத்தத்
திலதருப் பணப் பேர் கொண்ட திருத்தலம் அதனின் மன்னி
இலகு முத்திராக்க மேனியீசனை யெம்மான் தன்னைக்
குலவு முத்தீச னென்னுங் குழகனை யேத்தி வாழ்வாம்.''

சுவர்ண வல்லி துதி

''சுரும்பமர் குழல்கள் போற்றி சுந்தர வதனம் போற்றி
அரும்பு புன்முறுவல் போற்றி ஆரணற் கருள் செயம்மை
கரும்புறு பழனவேலித் திலதைக் காஞ்சன மாவல்லி
சிரம்பெறு பதும நேருஞ் சேவடி போற்றி போற்றி.''

Koviloor Digital Library

- "வளங்கோவை
நாடுந் திலத நயப்புலவர் நாடோறும்
பாடுந் திலதைப் பதி நிதியே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. முத்தீஸ்வரர் திருக்கோயில்
திலதைப்பதி - பூந்தோட்டம் அஞ்சல் - 609 503
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

176/59. திருப்பாம்புரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருமீயச்சூருக்குப் பக்கத்தில் உள்ளது.

காரைக்கால் - கும்பகோணம் (வழி) பேரளம் - சாலையில் கற்கத்தி வந்து அங்கிருந்து திரும்பி 2 கி.மீ. அச்சாலையில் வந்தால் ஊரை யடையலாம். கோயில் வரை வண்டிகள் வரும்.

நாகராசன் (ஆதிசேஷன்) வழிபட்டதலம், பாம்பு+புரம்-பாம்புரம் என்று மருவியது. சம்பந்தர் தம் பாடலில் **பாம்புர நன்னகர்** என்று பாடுகிறார். இதன் வேறு பெயர்கள் (1) உரகபுரம் (2) சேஷபுரி என்பன. நாகதோஷம் நீங்கவும், மகப்பேறு வாய்க்கவும், ராகு கேது போன்ற சர்ப்ப தோஷங்கள் விலகவும் இத்தலம் சிறந்த பிரார்த்தனையிடமாக விளங்குகிறது. இத்தலத்தில் பாம்பு கடித்து இறப்பவர்கள் இல்லையாம். வீடுகளில் பாம்பு வந்தாலும் சாதாரணமாகப் போய்விடும் - கடிப்ப தில்லையாம். ஆதிசேஷன் உலகைத் தாங்கும் சோர்வு நீங்கி நல்ல வலிமை பெற இறைவனருளை வேண்டி, உலகிற்கு வந்து, மஹா சிவராத்திரி நாளில் முதற்காலத்தில் குடந்தை நாகேஸ்வரரையும், இரண்டாங் காலத்தில் திருநாகேச்சுரம் நாகநாதரையும், மூன்றாங் காலத்தில் திருப்பாம்புரம் பாம்புரேஸ்வரரையும், நான்காங் காலத்தில் நாகூர் நாகேஸ்வரரையும் வழிபட்டு உடல் வளம் பெற்றான் என்பது தலவரலாறு. இத்தலத்தில் நாகராஜனுக்கு மூல, உற்சவ விக்ரஹங்கள் உள்ளன.

Koviloor Digital Library

இறைவன்	-	பாம்புரேஸ்வரர், சேஷபுரீஸ்வரர், பாம்பீசர், பாம்புரநாரதர்,
இறைவி	-	பிரமராம்பிகை, வண்டார்குழலி
தலமரம்	-	வன்னி
தீர்த்தம்	-	ஆதிசேஷ தீர்த்தம் (கோயிலுக்கு எதிரில் குட்டை போலுள்ளது)

சம்பந்தர் பாடல் பெற்றது.

ராஜகோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் நேரே சந்நிதி தெரிகிறது. இடப்பால் திருமலையீசுவரர் சந்நிதி உயரத்தில் தனிக் கோயிலாகவுள்ளது. இக்கோயிலின் கன்னி மூலையில் நின்று பார்த்தால் திருவீழிமிழலை விமானம் தெரியும் எனப்படுகிறது. தற்போது மரங்கள் மறைக்கின்றன.

சட்டநாதர் சந்நிதி விசேஷமானது. தலவிநாயகர் ராஜராஜ விநாயகர், பிராகாரத்தில் தலமரமாகிய வன்னியையும் அதன் பக்கத்தில் வன்னீசுவரர் காட்சியையும் காணலாம். அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது. ஒரு கையில் தாமரையும் ஒருகையில் உருத்திராக்க மாலையையும் கொண்டு அம்பிகை வரத அபயமொடு அற்புதமாகக் காட்சி தருகின்றாள்.

அடுத்துள்ள மண்டபத்தில் பைரவர், சூரியன், மகாவிஷ்ணு, பிரம்மா, மாணிக்கவாசகர், சுந்தரர், அப்பர், சம்பந்தர், ஆதிசேஷன், சனீஸ்வரன் முதலிய மூல உருவங்கள் வரிசையாகக் காட்சியளிக்கின்றன. மூலவர் நோக்கிச் செல்லும்போது முன் மண்டபத்தில் நடராச சபையுள்ளது; வாயில் கடந்தால் வலப்பால் உற்சவ மூர்த்தங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நேரே மூலவர் தரிசனம்.

பாம்பு வழிபட்ட தலமாதலின் மூலத்தானத்தில் எப்போதேனும் ஒரொரு காலங்களில் இன்றும் பாம்பினுடைய நடமாட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி நாள்களில் மல்லிகை, தாழம்பூ வாசனை கோயிலுக்குள் கமகமவென வீசுமாம். அப்போது பாம்பு கோயிலுக்குள் எங்கேனும் ஓரிடத்தில் உலாவிக் கொண்டிருக்கும் என்பது பொருளாம்.

உற்சவத் திருமேனிகளுள் சுப்பிரமணியர் மூர்த்தம் மிகவும் விசேஷமானது. வள்ளி தெய்வயானையுடன், வச்சிரம், வேல்தாங்கி இடக்காலால் மயிலை மிதித்துக் காட்சி தருகிறார்.

Koviloor Digital Library

மாசிமகத்தில் நடைபெறும் பஞ்சமூர்த்தி அபிஷேகமும் சிவராத்திரி உற்சவமும் இங்கு விசேஷம். மகாசிவராத்திரியில் ஆதிசேஷன் புறப்பாடு ஐதீகத் திருவிழாவாக நடைபெறுகிறது. மகா சிவராத்திரியில் ஆதிசேஷன் இறைவனை வழிபட சிற்றம்பல விநாயகர் துணையுடன் ஏற்படுத்திய குளம், வடக்கு வீதியில் சிற்றம்பலக் குட்டை என்னும் பெயரில் உள்ளது.

நாடொறும் நான்கு கால வழிபாடுகள். இராசராசன், இராசேந்திரன், சுந்தர பாண்டியன், சரபோஜி மன்னன் முதலியோர் காலத்திய 15 கல்வெட்டுக்கள் இக் கோயிலில் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் இறைவன் ''பாம்புரம்உடையார்'' என்றும், விநாயகர் ''ராஜராஜப் பிள்ளையார்'' என்றும் இறைவி ''மாமலையாட்டி'' என்றும் குறிக்கப் பட்டுள்ளனர். சரபோஜி மன்னனின் பிரதிநிதி சுபேதரர் ரகுபண்டிதராயன் என்பவனால் வசந்த மண்டபமொன்று கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இத்தலத்திற்கருகில் திருவீழிமிழலையும், சிறுகுடியும், வன்னியூரும் உள்ளன.

''ஓதிநன் குணர்வார்க் குணர்வுடை யொருவர்
ஒளிதிகழ் உருவஞ் சேர் ஒருவர்
மாதினை யிடமா வைத்த எம் வள்ளல்
மான்மறி யேந்திய மைந்தர்
ஆதி நீ அருள் என்று அமரர்கள் பணிய
அலைகடல் கடைய வன்றெழுந்த
பாதி வெண் பிறை சடை வைத்த எம்பரமர்
பாம்புர நன்னகராரே.''

(சம்பந்தர்)

- ''ஆடுமயில்
காம்புரங்கொள் தோளியர் பொற்காவிற் பயில்கின்ற
பாம்புரங் கொள் உண்மைப் பரம்பொருளே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பாம்புரேஸ்வரர் திருக்கோயில்
திருப்பாம்புரம் - சுரைக்காயூர் அஞ்சல் 612 203
(வழி) பாலையூர் S.O.
குடவாசல் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

177/60. சிறுகுடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1. பேரளத்தையடுத்துள்ள பூந்தோட்டம் வந்து, அரசலாற்றுப் பாலத்தைக்கடந்து, வலப்புறமாகப் பிரியும் கும்பகோணம். நாச்சியார் கோயில் சாலையில் சென்று, கடகம்பாடி என்னும் ஊரையடைந்து; அங்கிருந்து வலப்புறமாகப் பிரிந்து சிறுகுடிக்குச் செல்லும் சாலையில் 3 கி.மீ. உள்ளே சென்றால் ஊரையடையலாம். ஊர்க்கோடியில் கோயில் உள்ளது. இப்பிரிவுச் சாலையில் சைக்களில் (அ) நடந்து செல்லலாம். பஸ் போகாது, சிறிய சிறிய வளைவுகள் கொண்ட சரளைக் கல் பாதை. எனவே பஸ்ஸில் போக முயற்சிக்கத் தேவையில்லை.

2. தனியேவருவோர் கடகம்பாடியில் வாடகை சைக்கிள் பெற்றுக் கொண்டு செல்லலாம்.

கோயிலும், பக்கத்தில் குருக்கள் வீடும் ஊர்க்கோடியில் தனியே உள்ளன; வழிகேட்டுச் செல்ல வேண்டும். ஊர்ப்பெயர் 'சிறுகுடி' யானாலும், கோயில் நன்கு பொலிவோடுதிகழ்கிறது. சங்க இலக்கியத்தில்

Koviloor Digital Library

புகழப்படும் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளனாம் **'பண்ணன்'** என்னும் கொடை வள்ளல் இத்தலத்தில் வாழ்ந்தவன்; அம்பிகை; கைப்பிடியளவு மணலால் பிடித்துவைத்து மங்கள தீர்த்தம் உண்டாக்கி வழிபட்ட தலம். **சிறுபிடி** - என்பது மருவி **சிறுகுடி** என்றாயிற்று என்பர். நன்னிலம் வட்டத்தில் சிறுகுடி என்னும் பெயரில் பல ஊர்களிருப்பதால் அவற்றினின்றும் வேறுபாடறிய இத்தலம் **திருச் சிறுகுடி** என்றழைக்கப்படுகிறது. **சூட்சுமபுரி** என்பதும் இதன் பெயர். கருடன், செவ்வாய், கந்தர்வர் ஆகியோர் வழிபட்டது.

இறைவன்	- சூக்ஷ்மபுரீஸ்வரர், மங்கள நாதர், சிறுகுடியீசர்
இறைவி	- மங்களநாயகி, மங்களாம்பிகை
தலமரம்	- வில்வம்
தீர்த்தம்	- மங்கள தீர்த்தம் (கோயிலின் எதிரில் உள்ளது)
தலவிநாயகர்	- மங்கள விநாயகர்

சம்பந்தர் பாடல் பெற்றது (இத்தலத்துப் பதிகம் 'திருமுக்கால்' யாப்பில் அமைந்துள்ளது.

மங்கள தீர்த்தத்தில் செவ்வாய் தோஷமுள்ளவர்கள் செவ்வாய்க் கிழமை காலை மாலை வந்து நீராடி, கோயிலுக்கு வந்து வழிபட்டுத் திருநீறு பெற்றுச் செல்வதை இன்றும் காணலாம். இஸ்லாமியர் முதலிய வேற்றுமதத்தவர்களும் வந்து நீராடி வழிபட்டுத் திருநீறு பெற்றுச் செல்கின்றனர். செவ்வாய் தோஷமுடையவர்கள். திருமணமாகா தவர்கள் இங்கு வந்து வழிபட்டால் அங்காரகதோஷம் நிவர்த்தியாகிறது. என்பது இங்கு பிரசித்தம் - செவ்வாய் வழிபாடு விசேஷமானது.

மூன்று நிலைகளுடன் கூடிய ராஜகோபுரம் கிழக்கு நோக்கியது. உள்ளே சென்றால் விசாலமான இடம். பிராகாரத்தில் மங்களவிநாயகர் சுப்பிரமணியர் சந்நிதிகள். முன்மண்டபத்தில் நவக்கிரக சந்நிதி. நவக் கிரகங்களில் சனீஸ்வரனுக்கு கீழே **சனைச்சரன்** என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. இதுவே சரியான பெயர். இதற்கு **மெதுவாக ஊர்ந்து செல்பவன்** என்று பொருள். இதுவே மருவி சனீச்வரன் என்றாயிற்று. இங்குள்ள குருக்கள் தமிழறிந்தவராதலால் அழகாகத் தமிழில் சனைச்சரன் என்று எழுதியிருப்பது காணும்போது தமிழ் நெஞ்சங்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேது! அதன்பக்கத்தில் சுவர் ஓரமாக ஞானசம்பந்தர் - பெரிய மூலத் திருமேனி, இடுப்பில் அரைஞாண். கயிறு கழுத்து மாலை பொலிய அழகாகக் கயிறு கழுத்து மாலை பொலிய அழகாகக் காட்சியளிக்கிறது. பக்கத்தில் ஆதிகணபதி, சனீஸ்வரர், பைரவர் ஆகியோர் உளர். வலப்பால் அம்பாள் சந்நிதி. அபயவரத்துடன் நின்ற திருக்கோலம் - பெயருக்கேற்ற முகவிலாசம்.

Koviloor Digital Library

நேரே மூலவர் சந்நிதி. சுயம்புத் திருமேனி. நெற்றியில் பள்ளமும் இருபுறமும் கைபிடித்த அடையாளமும் உள்ளது. எப்போதும் குவளை சார்த்தியே வைக்கப்பட்டுள்ளது. சுவாமிக்கு அபிஷேகம் கிடையாது. அம்பாளுக்கு உண்டு. கடினமான பாணம். சாம்பிராணித் தைலம் சார்த்தப்படுகிறது. ''தேனமலர் பொழிலணி சிறுகுடி'' - என்னும் ஞான சம்பந்தர் வாக்குக்கேற்பச் - சுவாமிக்கு முன்னால், முன் மண்டபத்தில் வலப்புறத்தில் சுவர் ஓரத்தில் தேனடை உள்ளது. சாளரம் அமைத்து அதன்வழியே வெளியிலிருந்து தேனீக்கள் வந்து போகுமாறு செய்து, மண்டபத்தின் உட்புறத்தில் இரும்புவலை போட்டுப் பாதுகாத் துள்ளனர். கோஷ்டமூர்த்தங்கள் முறையாக உள்ளன.

இங்குள்ள உற்சவ மூர்த்தங்களுள் சந்திரசேகர் அழகாகவுள்ளது. இத்தலத்திற்குரிய சிறப்பு மூர்த்தமாகிய **''சந்தோஷ ஆலிங்கன மூர்த்தி''** மிகமிகச் சிறப்பானது. அம்பிகையின் பூஜைக்கு மகிழ்ந்து அம்பாளை ஆலிங்கனம் செய்யும் அமைப்பில் அவள் தோள்மீது கை போட்டுக்கொண்டு காட்சிதரும் அழகு - கண்டு அநுபவித்தால் உணர முடியும்.

மாசியில் ஏகதின உற்சவம். இம்மாதத்தில் நான்கு செவ்வாய்க் கிழமைகளில் விசேஷ வழிபாடுகள். மார்கழி ஆதிரையும் பிரசித்தி. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். இத்தலத்தின் கிழக்கில் திருப்பாம் புரமும், தெற்கில் திருவீழிமிழலையும், மேற்கில் அன்னியூரும், வடக்கில் தேரழுந்தூரும் உள்ளன.

''செந்நெல வயலணி சிறுகுடி மேவிய
ஒன்னலர்புரம் எரித்தீரே
ஒன்னலர் புரம் எரித்தீர்உமை உள்குவார்
சொன்னலமுடையவர் தொண்டே.'' *(சம்பந்தர்)*

- ஆம்புவனந்

''துன்னும் பெருங்குடிகள் சூழ்ந்துவலஞ் செய்துவகை
மன்னுஞ்சிறுகுடி யான்மார்த்தமே.'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. சூட்சுமபுரீசுவரர் திருக்கோயில்
திருச்சிறுகுடி
சரபோஜிராஜபுரம் அஞ்சல் - 609 503.
(வழி) பூந்தோட்டம் - குடவாசல் வட்டம்
திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

178/61. திருவீழிமிழலை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறை - திருவாரூர் இருப்புப் பாதையில் பேரளத்தை யடுத்துள்ள பூந்தோட்டம் நிலையத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள தலம். திருவாரூர், கும்பகோணம்,பேரளம், ஆடுதுறை, பூந்தோட்டம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் செல்லலாம். வீழிச் செடிகள் நிறைந்திருந்தமையால் வீழிமிழலை என்று பெயர் வந்தது. இத்தலத்திற்குப் பூகைலாசம், கல்யாணபுரம், பஞ்சாக்கரபுரம், தக்ஷிணகாசி, ஷண்மங்களஸ்தலம், சுவேதகானனம், ஆகாசநகரம், பனசாரண்யம், நேத்திரார்ப்பணபுரம், தேஜிநீவனம் எனப் பத்துப் பெயர்களுண்டு.

இறைவன் - நேத்திரார்ப்பணேசுவரர், விழியழகீசர்,விழியழகர்.
இறைவி - சுந்தரகுஜாம்பிகை, அழகுமுலையம்மை.
தலமரம் - வீழிச்செடி.
தீர்த்தம் - விஷ்ணுதீர்த்தம்

மூவர் பாடல் பெற்ற தலம். இத்தலம் 23 திருப்பதிகங்களை யுடையது. சேந்தனார் பாடிய திருவிசைப்பாவும். அருணகிரிநாதரின் திருப்புகழும் பெற்ற தலம்.

கோயிலின் எதிரில் பெரிய குளம் உள்ளது. மிகப் பெரிய கோயில். உற்சவமூர்த்தி- கல்யாணசுந்தரர் - விநாயகர் - படிக்காசு விநாயகர். இத்தலத்தில், திருமால் சக்கரம் வேண்டி இறைவனைப் பூசை செய்யும் போது ஒருநாள் ஒருமலர் குறையத் தம் கண்ணையே இடந்து சாத்தி சக்கரத்தைப் பெற்றார். இவ்வரலாறு திருமுறையில் கூறப்பட்டுள்ளது. கல்யாணசுந்தரரின் பாதத்தில் விஷ்ணு தம் கண்ணைப் பறித்து அருச்சித்த அடையாளம் உள்ளது. உற்சவமூர்த்தியின் வலப்பாதத்தின் மேலே திருமாலின் கண்ணும் கீழே சக்கரமும் உள்ளன. ஞானசம்பந் தருக்கும், அப்பருக்கும் இறைவன் படிக்காசு தந்தருளி அவர்கள் மூலமாகச் சிவனடியார்க்கு அமுதூட்டிய தலம். அவ்வாறு வைத்தருளிய பலிபீடங்கள் கோயிலின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ளன. படிக்காசுப் பிள்ளையார் மேற்கு பலிபீடத்தின் அருகில் உள்ளார். அருகில் சம்பந்தர், அப்பரின் உருவங்கள் உள்ளன. இவ்விருவரும் தங்கியிருந்த திருமடங்கள் வடக்கு வீதியில் கீழ்க்கோடியிலும் (சம்பந்தர்) மேற்குக் கோடியிலும் (அப்பர்) உள்ளன.

Koviloor Digital Library

இறைவன், ஞானசம்பந்தருக்குத் தாம் சீகாழியில் இருக்கும் திருக்கோலத்தை இங்குள்ள விண்ணிழி விமானத்தில் காட்டியருளினார். 'தில்லை மூவாயிரவர்' என்பதுபோல இத்தலத்து வாழ்ந்த ஐந்நூறு அந்தணர்கள் (வீழி ஐஞ்ஞூற்று அந்தணர்) போற்றப்பட்டனர். இத்திருக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது. இத்தலத்துத் தலபுராணம், திருவாவடுதுறை ஆதீனத்து, இரண்டாவது குருமூர்த்தி களான ஸ்ரீ மறைஞானதேசிகருடைய மாணவரான ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவரால் இயற்றப்பட்டது - உள்ளது. இக்கோயிலில் உள்ள வெளவால் நத்து (வாவல்நெற்றி) மண்டபம் மிகச் சிறப்பான வேலைப்பாடுகள் உள்ளதாகும்.

கோயில் திருப்பணிகள் செய்யும் ஸ்தபதிகள் சில தலங்களில் உள்ள அரிய திருப்பணிகள் நீங்கலாகச் செய்யும் ஒப்பந்தங்களில் இம் மண்டபமும் ஒன்றாகும். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. ராஜ கோபுரம் கடந்து நுழைந்தவுடன் வெளவால் நத்திமண்டபம் - கல்யாணமண்டபம் உள்ளது. அகலமான அமைப்பு - நடுவில் தூணில்லாமல், சுண்ணாம்பு கொண்டு ஒட்டப்பட்டுள்ள அமைப்பு - பார்ப்பவரை வியக்கச் செய்யும். இரண்டாம் கோபுரத்தைக் கடந்ததும், வெளிச்சுற்றில், படிக்காசு வைத்தருளிய பலிபீடங்கள் உள்ளன. இக்கோயில் மாடக்கோயில் அமைப்புடையது. தெற்குப் பிரகாரத்தில் தலவிநாயகர் (படிக்காசு விநாயகர்) சந்நிதியும், மேற்கில் சோமாஸ்கந்தர், முருகன், மகாலட்சுமி சந்நிதிகளும், வடக்கில் சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளது. நடராசர் சந்நிதி சிறப்பானது.

சுவாமி உள்ள இடம் விண்ணிழி விமானம் என்று சொல்லப் படுகிறது. இவ்விமானம், திருமால் கொணர்ந்தது என்பதனை ''தன்றவம் பெரிய சலந்தரனுடலந் தடிந்த சக்கிரம் எனக்கருள் என்று அன்று அரி வழிபட்டு இழிச்சிய விமானத்து இறையவன் பிறையணி சடையவன்' என்னும் ஞானசம்பந்தர் வாக்கால் அறியலாம். செப்புத் தகடுகள் வேயப்பெற்றுத் தங்கக்கலசத்தோடு விளங்கும் இவ்விமானம் தனி அழகுடையது. பதினாறு சிங்கங்கள் தாங்கும் தனிச்சிறப்புடையது. கர்ப்பகிருக விமானத்தில் ஞானசம்பந்தர் கண்ட சீகாழிக்காட்சி சிற்பங் களாகக் காட்டப்பட்டுள்ளது.

மூலவரின் (வீழிநாதேசுரரின்) பின், இறைவன் உமையோடு உள்ள திருமணக்கோலமுள்ளது. இறைவன் உமையை மணந்து கொண்ட தலம் என்னும் நிலைக்கேற்ப, கர்ப்பக்கிருக வாயிலில் அரசாணிக்கால் என்னும் தூணும், வெளியில் மகாமண்டபத்தில் பந்தக்கால் என்னும் தூணும் உள்ளன. மகாமண்டபத்தில் - தனி

Koviloor Digital Library

மண்டபத்தில் கல்யாணசுந்தரர் - மாப்பிள்ளை சுவாமியாகக் காட்சி தருகிறார். பாதத்தில் திருமாலின் கண்ணாகிய மலர் உள்ளது. பிட்சாடனர், ரதிதேவி, வசிஷ்டர், காமதேனு, மனு முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம் இஃது. இங்குத்தான் மிழலைக் குறும்பர் என்னும் வேடுவர் விளாங்கனியை நிவேதித்து அருள்பெற்றார்.

ஞானசம்பந்தரும், அப்பரும், படிக்காசு பெற்றபோது அவற்றைக் கடைத்தெருவிற்குக் கொண்டு சென்று பொருள்களை வாங்கிய கடைத்தெரு இப்போது ஐயன்பேட்டை என வழங்குகிறது. அங்கே உள்ள சுவாமிபெயர் - செட்டியப்பர். அம்பாள் - படியளந்த நாயகி. உற்சவமூர்த்தி தராசுபிடித்த கையோடும், அம்பாள் படியைப் பிடித்த கையோடும் காட்சி தருகின்றனர். நடராஜர், சோமாஸ்கந்தர், சந்திர சேகரர், சக்கரதானர், பிட்சாடனர், காலசம்ஹாரர், சுவர்க்காவதாநேசர், நாயன்மார்கள் முதலிய உற்சவத்திருமேனிகள் உள்ளன. தலவிருக்ஷம் ஒவ்வொரு யுகத்துக்கும் ஒவ்வொன்றாக உள்ளதாகச் சொல்லப்படு கின்றது. முதலில் சந்தனமாகவும், பிறகு சண்பகமாகவும், பின் வீழிச்செடியாகவும் உள்ளது. அடுத்து இருக்கவுள்ளது பலாமரமாகும். இத்திருக்கோயிலைச் சுற்றி; பத்மதீர்த்தம், புஷ்கரணி, விஷ்ணுதீர்த்தம், திரிவேணிசங்கமம், குபேரதீர்த்தம், இந்திரதீர்த்தம், வருணதீர்த்தம், இலக்குமிதீர்த்தம், வசிட்டதீர்த்தம் முதலாக 25 தீர்த்தங்கள் உள்ளன.

சுவாமி சந்நிதியில் உள்ளது - புஷ்கரணிதீர்த்தம்
மேற்கு மதிலைச் சார்ந்து உள்ளது - விஷ்ணுதீர்த்தம்
தாமரைக் குளம் உள்ளது - பிரம, பத்மதீர்த்தங்கள் என்பன.

சித்திரை மாதத்தில் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறுகிறது. நவராத்திரி, சஷ்டி, ஆதிரை முதலிய பெரு உற்சவங்களும் நன்கு நடைபெறுகின்றன.

''கண்ணிற் கனலாலே பொடியாகப்
பெண்ணுக் கருள் செய்த பெருமானுறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழிம்மிழலையே''.

(சம்பந்தர்)

நீற்றினைநிறையப் பூசி நித்தல் ஆயிரம் பூக் கொண்டு
ஏற்றுழி ஒருநாள் ஒன்று குறையக்கண் ணிறைய விட்ட
ஆற்றலுக் காழிநல்கி அவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந்தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்தனாரே

(அப்பர்)

Koviloor Digital Library

விடங் கொண் மாமிடற்றீர் வெள்ளைச் சுருளொன்றிட்டுவிட்ட காதினீர் என்று
திடங்கொள் சிந்தையினார் கலிகாக்குந் திருமிழலை
மடங்கல் பூண்ட விமான மண்மிசை வந்திழிச்சிய வானநாட்டையும்
அடங்கல் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே'. *(சுந்தரர்)*

'பங்கயம் ஆயிரம் பூவினி லோர் பூக் குறையத்
தங்கண் இடந்துஅரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற்கருளிய வா(று)
எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ'. *(திருவாசகம்)*

'ஒழிவில் உயிர்கட்கு உயிராய்க் குணங்களின்றி
உருவருவ மென்றின்றி மலமொன்றின்றி
அழிவில் வியாபகமா யானந்த ரூப
மாய்விளங்கும் பரம் பொருள்தான் அருளினாலே
பழுதில் அரிபூசை கொள்வானருளு ருக்கொள் எந்தை
பக்தியுடன் கமலம்போல் அவன் இடந்து சாத்தும்
விழி மருவும் வீழிமிழலை மேவும்
விண்ணிழிந்த நாயகன் சீர் விளம்பி உய்வாம்.'

(தலபுராணம்)

''காரணகாரியங் கடந்த இபமுகன் பாரதத்தைக்
கனககிரிதனில் வரைந்தகோடுடைய எந்தை
ஏருறு நற்றமிழ்வேத மாகிய பாமாலை
இசையுள கொற்குருகி உளமிறைஞ்சி நின்றே சாத்திச்
சீருறு சம்பந்தருக்கும் அப்பருக்கும் மிரங்கித்
தீவினைக் காலத்திவணுற் றின்புறுதிர் என்றே
பாரறிய அநுதினமும் வீழிநகர் தனின் முன்
படிக்காசு வைத்த கணபதி யிருதாள் பணிவாம்''

(தலபுராணம்)

- முன்அரசும்
காழிமிழலை யருங்கண்டு தொழக் காசளித்த
வீழிமிழலை விராட்டுருவே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி.நேத்ரார்ப்பணேஸ்வரர் திருக்கோயில்
திருவீழிமிழலை & அஞ்சல் - 609505
தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

179/62. வன்னியூர்.

அன்னியூர்,
அன்னூர்.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

அரிசிலாற்றின் வடகரையில் உள்ளது. மக்கள் **அன்னியூர்** என்று வழங்குகின்றனர்.

(1) தனிப் பேருந்தில் வருவோர் கும்பகோணம் - காரைக்கால் (வழி) உப்பிலியப்பன் சாலையில் **S.புதூர்** என்ற இடத்திற்கு வந்து, அங்கிருந்து தெற்கில் திரும்பி **வடமட்டம்** சென்று அங்கிருந்து அதே சாலையில் (திருவீழிமிழலை சாலையில்) மேலும் சென்றால் ஊரை யடையலாம்.

(2)திருவீழிமிழலையிலிருந்து 4 கி.மீ. தொலைவு. (3) கும்ப கோணம் - அன்னியூர் நகரப்பேருந்து செல்கிறது.

சாலையோரத்திலேயே கோயில் உள்ளது. தக்கன் வேள்வியில் பங்குகொண்ட சாபம்தீர அக்கினி வழிபட்டதலமாதலின் வன்னி - அனல், (நெருப்பு). வன்னியூர் என்று பெயர் பெற்றது.

இறைவன் - அக்கினிபுரீசுவரர், அக்னீஸ்வரர்
இறைவி - கௌரி
தலமரம் - வன்னி.
தீர்த்தம் - அக்கினிதீர்த்தம் (கோயிலுக்கு எதிரில் உள்ளது.

இதில் நீராடினால் இரத்தக் கொதிப்பு, உஷ்ணரோகம் முதலியன நீங்கும்)

அப்பர் பாடல் பெற்றது.

நகரத்தார் திருப்பணியில் கோயில் நன்குள்ளது. காத்யாயனி மகளாக அம்பாள் வந்து தோன்றி, இறைவனை மணக்க இத்தலத்தில் தவமிருந்து அவ்வெண்ணம் திருவீழிமிழலையில் ஈடேறப் பெற்றதால், திருமணமாகாதவர்கள் இங்கு வந்து வழிபடின் திருமணம் கூடும் என்பது இன்றுமுள்ள நம்பிக்கை, சிறிய ராஜகோபுரம். உள்ளே நுழைந்து வலமாக வரும்போது கருவறைச் சுவரில் அப்பர், அக்கினி, கௌரி, சிவலிங்கம், காமதேனு பால்சொரிவது, ரிஷபாருடர் சிற்பங்கள் வரிசையாக வுள்ளன - பக்கத்தில் ஆலமர் கடவுள் உள்ளார்.

Koviloor Digital Library

விநாயகர், பாலசுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகளும் தலமரம் வன்னியும் உள்ளன.

முன்மண்டபத்தில் நால்வர் சந்நிதி. வலப்பால் அம்பாள் தரிசனம், சிறிய திருமேனி. நேரே மூலவர். துவாரபாலகர்கள் கல்சிற்பங்களாகவே வடிக்கப்பட்டுள்ளனர்.மூலவர் மிக்க பிரகாசத்துடன் காட்சியளிக்கின்றார். இங்குள்ள சோமாஸ்கந்தர், நடராசர் திருமேனிகள் மிக்க அழகுடையவை. மாசிமகம் விசேஷம்.

"ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தன்னடைந்தார்க் கெலாம்
தானம் காட்டித் தன் தாளடைந்தார் கட்கு
வானம் காட்டுவர் போல் வன்னியூரரே."

(அப்பர்)

- ஊழிதொறும்
மன்னியூர் மால்விடையாய் வானவா என்று தொழ
வன்னியூர் வாழு மணிகண்டா.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அக்கினீஸ்வரர் திருக்கோயில்
அன்னியூர் & அஞ்சல்
(வழி) கோனேரி ராஜபுரம் - குடவாசல்வட்டம்
தஞ்சை மாவட்டம் - 612 201
கும்பகோணம் RMS.

180/63. கருவிலிக்கொட்டிட்டை

கருவேலி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் கருவேலி என்று வழங்குகின்றனர். பூந்தோட்டத்திலிருந்து நாச்சியார் கோயில் செல்லும் பேருந்துச் சாலையில் கூந்தலூரையடைந்து அரிசிலாற்றுப் பாலத்தைக் கடந்து சென்றால் தலத்தை யடையலாம். கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் பூந்தோட்டம் செல்லும் சாலையில் உள்ளது. கூந்தலூரில் பேருந்து

Koviloor Digital Library

நிற்குமிடத்தில் கருவிலி வழி காட்டிப் பலகை உள்ளது. கோனேரி ராஜபுரத் (திருநல்லம்) திற்குப் பக்கத்தில் உள்ள தலம். கோயில் - கொட்டிட்டை. ஊர்; கருவிலி.



இந்திரன், உருத்திரகணத்தர் வழிபட்டது சோழர்களின் திருப்பணி பெற்ற தலம். பழமையான கோயில்.

இறைவன் - சற்குண நாதேஸ்வரர்

இறைவி - சர்வாங்க நாயகி

தீர்த்தம் - எமதீர்த்தம் (எதிரில் உள்ளது)

அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்பாள் கோயில் தனிக்கோயிலாக இடப்பால் உள்ளது. அம்பிகைத் திருமேனி பெரியது. அழகானது. பிராகாரத்தில் கணபதி பாலசுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. இக் கோயிலில் உள்ள நர்த்தன விநாயகர், அர்த்த நாரீஸ்வரர், தட்சிணா மூர்த்தி, பைரவர் உருவங்கள் பழைமையும் கலைச்சிறப்பும் வாய்ந்தவை.

இத்தலத்தின் பக்கத்தில் திருநல்லம், வன்னியூர், திருவீழிமிழலை முதலிய தலங்கள் உள்ளன. கல்வெட்டில் இத்தலம் ''உய்யக் கொண்டான் வளநாட்டு வெண்ணாட்டுக் குலோத்துங்க சோழ நல்லூராகிய கருவிலிக் கொட்டிட்டை'' என்று குறிக்கப்படுகிறது.

27.3.31997ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. நித்திய வழிபாட்டு டிரஸ்ட் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலம் – 37

Koviloor Digital Library

"வாடிநீர் வருந்தாதே மனிதர்காள்
வேடனாய் விசயற்கு அருள் செய்த வெண்
காடனார் உறைகின்ற கருவிலிக்
கோடு நீள் பொழில் கொட்டிட்டை சேர்மினே"

(அப்பர்)

- "இந்நிமிடஞ்
சிந்துங் கருவிலியின் திண்மை யென்று தேர்ந்தவர்கள்
முந்துங் கருவிலி வாழ் முக்கண்ணா."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சற்குண நாதேஸ்வரர் திருக்கோயில்
கருவேலி. கூந்தலூர் அஞ்சல் - எரவாஞ்சேரி - S.O.
கும்பகோணம் R.M.S.
தஞ்சை மாவட்டம் **605 501.**

181/64. பேணுபெருந்துறை

திருப்பந்துறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் - காரைக்கால் பேருந்துப் பாதையில் அமைந்துள்ள தலம். (நாச்சியார் கோயிலையடுத்து எரவாஞ்சேரி பாதையில் 1 கி.மீ தொலைவில் உள்ளது). கோயில் வரை வாகனங்கள் செல்லும்.

அரிசிலாற்றின் கரையிலுள்ள ஊர். 'திருப்பெருந்துறை'யினின்றும் வேறுபாடறிய 'பேணு' என்னும் அடைசேர்த்துப் 'பேணு பெருந்துறை' என்று வழங்கப்படுகிறது.

இறைவன் - சிவானந்தேஸ்வரர், பிரணவேஸ்வரர்,
இறைவி - மங்களாம்பிகை, மலையரசி.
தலமரம் - வன்னி.
தீர்த்தம் - மங்கள தீர்த்தம். எதிரில் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

பிரமன், உமாதேவி, முருகன் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது. கிழக்கு நோக்கிய சிறிய ராஜகோபுரம், கொடிமரம் நந்தி பலிபீடம் உள்ளன. பிராகாரத்தில் விநாயகர், நால்வர், சோழ மன்னன் மனைவி ஆகியோர் உளர். உள்சுற்றில் விநாயகர், முருகன், கஜலட்சுமி, நவக்கிரக சந்நிதிகள். சுவாமி சந்நிதியில் பழைமையான முருகப் பெருமான் உருவமுள்ளது.

சின்முத்திரையுடன் தியான நிலையிலுள்ள தண்டபாணி அருமையான திருமேனி. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. கோஷ்டங்களில் நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். தலமரம் வன்னி. மிகப் பழைமையானது. மங்கள தீர்த்தக் கரையில் இரட்டை விநாயகர் சந்நிதி உள்ளது. இக் கோயிலில் உள்ள பிக்ஷாடனர் மிகச் சிறப்பான மூர்த்தியாவார். இவருக்குச் சித்திரை பரணியில் அமுதுபடையல் நடைபெறுகிறது.

செங்கற் கோயிலாக இருந்த இக்கோயில் கரிகாற்சோழன் காலத்தில் கற்கோயிலாயிற்று என்றொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. மற்றும் சுவாமி புறப்பாட்டிற்கு ஒரு மாது நிலமளித்த நிவந்தமும் கல்வெட்டால் தெரிகின்றது. கல்வெட்டில் சுவாமி ''பேணு பெருந்துறை மகாதேவர்'' என்றும் அம்பிகை ''மலையரசியம்மை'' என்றும் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

''பைம்மா நாகம் பன்மலர் கொன்றை
பன்றிவெண் கொம்பொன்று பூண்டு
செம்மாந்தையம் பெய்கென்று சொல்லிச்
செய் தொழில் பேணியோர் செல்வர்
அம்மானோக்கிய அந்தளிர் மேனி
அரிவையோர் பாகமமர்ந்த
பெம்மானல்கிய தொல் புகழாளர்
பேணு பெருந்துறையாரே''. *(சம்பந்தர்)*

-''மந்தணத்தைக்
காணு மருந்துறையிக் காமர் தலம் என்றெவரும்
பேணு பெருந்துறையிற் பெம்மானே.'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்
திருப்பந்துறை - நாச்சியார் கோயில் அஞ்சல்
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம். 612602

Koviloor Digital Library

182/65. திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

ஊர்ப் பெயர் - திருநறையூர் - கோயில் சித்தீச்சரம்.

கும்பகோணம் - நாச்சியார் கோயில் சாலையில் வந்து நாச்சியார் கோயிலின் முற்பகுதியாகிய திருநறையூரில் இறங்கிக் கோயிலை யடையலாம். சாலையோரத்தில் இறங்கினால் வீதியின் கோடியிலுள்ள கோயிலைக் காணலாம். (நாச்சியார் கோயில், திருநறையூர் இரண்டும் ஒன்றொடொன்று இணைந்ததாகும். முற்பகுதி திருநறையூர். பிற்பகுதி நாச்சியார் கோயில்). கோயில் வரை பேருந்து செல்லும்.

பிரமன், சித்தர்கள், குபேரன், மார்க்கண்டேயன் ஆகியோர் வழிபட்டது. துர்வாசமுனிவரால் பறவை உருவச்சாபம் பெற்ற மனிதன் (நரன்) வழிபட்டதால் இத்தலத்திற்கு 'நரபுரம்' என்றும் பெயர். பிரமன் வழிபட்டதால் பிரமபுரம் எனவும் சொல்லப்படுகிறது. சுகந்தவனம் என்பது வேறொரு பேர்.

இறைவன் - சித்தநாதேஸ்வரர், வேதேஸ்வரர், நரேஸ்வரர், சித்தநாதர்.

இறைவி - சௌந்தரநாயகி, அழகம்மை

தலமரம் - பவளமல்லிகை

தீர்த்தம் - சூலதீர்த்தம் (கோயிலின் வடபால் உள்ளது)

சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

மேற்கு நோக்கிய பெரிய கோயில். சோழர்காலத் திருப்பணியைப் பெற்ற இக்கோயிலின் ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது - ஏராளமான சிற்பங்கள். உள்ளே கவசமிட்ட கொடிமரம். கொடிமரத்து விநாயகர். பலிபீடம், நந்தி உள்ளன. பிராகாரத்தில் சந்நிதிகளில்லை. முன்மண்டபத் (வௌவால் நெத்தி) தில் இடப்பால் அம்பாள் சந்நிதி. நேரே மூலவர் தரிசனம். உள்வலத்தில் நவக்கிரகங்கள், நடராசசபை, பைரவர், வீரபைரவர் சந்நிதிகள்.

மூலவர் மிக்க அழகானமூர்த்தி - கருவறையின் பின்புறத்தில் லிங்கோற்பவருக்குப் பக்கத்தில் நரன் (மனிதன்) வழிபடும் சிற்பம் உள்ளது. கோஷ்டமூர்த்தங்களாக நர்த்தனவிநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, பிட்சாடனர், அர்த்த நாரீஸ்வரர், துர்க்கை மூர்த்தங்கள் உள்ளன. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். பிற விழாக்கள் ஏதுமில்லை.

முதலாம் இராசராசன் முதல் மூன்றாம் குலோத்துங்கன் வரையிலான மன்னர்களின் காலத்திய கல்வெட்டுகள் உள்ளன. இக் கல்வெட்டுக்களில் இத்தலம் 'க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு, திருநறையூர் நாட்டுத் திருநறையூர்' என்றும்; இறைவன் பெயர் 'சித்தீச்சரமுடையார்' கங்காள தேவர்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டில் இவ்வூர் ''குலோத்துங்க சோழ வளநாட்டுத் திருநறையூர்'' என்றும்; ''பஞ்சவன் மாதேவியான சதுர்வேதி மங்கலத்துத் திருநறையூர்'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுக்களிலிருந்து; (1)பிட்சாடனருக்கு நிவேதனம் செய்யப் பொன் தந்தது (2) நாளொன்றுக்குச் சிவயோகியார் ஒருவருக்கு உணவு படைக்க, மண்ணி நாட்டுக் கருப்பூர் உடையான் என்பவர் நிலம்விட்டது (3)கோயிலில் விளக்கெரிக்க நிலங்கள் வழங்கியது போன்ற செய்திகள் தெரியவருகின்றன. பக்கத்தில் வைணவத் தலமான நாச்சியார்கோயில் உள்ளது.

''நீடவல்ல நிமிர் புன்சடை தாழ
ஆடவல்ல அடிகள் இடமாகும்
பாடல் வண்டு பயிலு நறையூரில்
சேடர் சித்தீச்சரமே தெளிநெஞ்சே.'' *(சம்பந்தர்)*

''நீரும் மலரு(ம்) நிலவுஞ் சடைமேல்
ஊரும் அரவமும் உடையானிடமாம்
வாரும் மருவி மணி பொன் கொழித்துச்
சேருந் நறையூர்ச் சித்தீச்சரமே.'' *(சுந்தரர்)*

Koviloor Digital Library

- ஏனுடன்கா
ஈட்டும் பெருநறையா றென்ன வயலோடி
நாட்டும் பெருநரையூர் நம்பனே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சித்தநாதேஸ்வரர் திருக்கோயில்
திருநறையூர் - நாச்சியார் கோயில் அஞ்சல்
குடந்தை வட்டம் - தஞ்சை மாவட்டம் 612102

183/66. அரிசிற்கரைப்புத்தூர்

அழகாபுத்தூர். அளகாபுத்தூர்.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோயிலுக்குச் செல்லும் பேருந்துப் பாதையில் சென்றால் திருநறையூருக்கு முன்னாலேயே உள்ள இத்தலத்தையடையலாம். நெடுஞ்சாலைத்துறையின் பெயர்ப் பலகை அழகாபுத்தூர் என்றுள்ளது. மக்கள் **அளகாபுத்தூர்** என்று வழங்கின்றனர். தேவாரத்தில் **அழகார்புத்தூர்** என்று வருகின்றது. பெரிய புராணத்தில் இத்தலம் **செருவிலிபுத்தூர்** என்று குறிப்பிடப் பெறுகின்றது. இத்தலத்தையடுத்துத் திருநறையூர்ச் சித்தீச்சரம் உள்ளது. சாலையோரத் தலம். கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்த தலம். புகழ்த்துணை நாயனார் முத்திப்பேறு பெற்ற தலம். ஊரின் தொடக்கத்தி லேயே கோயில் பேருந்துச்சாலையோரத்தில் சற்றுத் தள்ளி வயலில் உள்ளது. நகரத்தார் திருப்பணி பெற்று அரிசிலாற்றின் கரையில் அழகாகக் காட்சியளிக்கிறது.

இறைவன் - சொர்ணபுரீஸ்வரர், படிக்காசளித்தநாதர்.
இறைவி - சௌந்தரநாயகி, அழகாம்பிகை
தலமரம் - வில்வம்.
தீர்த்தம் - (கோயில் எதிரில் உள்ளது).

மூவர் பாடல் பெற்ற தலம்.

Koviloor Digital Library

மூன்று நிலைகளுடைய ராஜகோபுரம், உட்புறம் விசாலமாக உள்ளது. கோபுரவாயிலில் சூரியன் சந்திரன் உருவங்கள் உள்ளன. வலப்பால் விநாயகர் சந்நிதியும் இடப்பால் ஆறுமுகர் சந்நிதியும் உள்ளன. இந்த ஆறுமுகர் பன்னிருகரங்களுடன் மயில்வாகனராக விளங்குகிறார். இவருடைய வடிவில் வலப்பால் உள்ள ஆறுகரங்களுள் முதல் கரம் சக்கரமும்; இடப்பாலுள்ள ஆறுகரங்களுள் முதலாவது கரம் சங்கும் ஏந்தியிருப்பது விந்தையான அமைப்பாகவுள்ளது. இச்சந் நிதியில் பிரார்த்தனை செய்துகொண்டால் விஷக்கடி நீக்கம் பெறுவது இன்றும் பிரசித்தமாகவுள்ளது.

அடுத்து கஜலட்சுமி சந்நிதியும், பைரவர், நவக்கிரகசந்நிதிகளும் உள. முகப்பு வாயிலின் மேற்புறம் ரிஷபாரூடர் சுதைசிற்பமுள்ளது. வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முன்மண்டபத்தில் இடப்பால் அம்பாள் சந்நிதி, மகாமண்டபத்தில் விநாயகர், நால்வர், புகழ்த்துணை நாயனார் அவர் மனைவியார் இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்ற உண்மையானந்த முனிவர் முதலிய சந்நிதிகள் உள்ளன.

மூலவர் - சதுரபீடம். உயர்ந்தபாணம். நீண்ட உருத்திராக்க மாலையுடன் தரிசிக்கும் அழகு அனுபவித்துணரத்தக்கது. நாடொறும் மூன்றுகால வழிபாடுகள். கோங்செங்கட் சோழனின் கல்வெட்டில் இத்தலம் ''குலோத்துங்க சோழ வளநாட்டு அழகார்திருப்புத்தூர்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

''மின்னுஞ் சடைமேல் இளவெண் திங்கள் விளங்கவே
துன்னுங் கடல்நஞ் சிருள்தோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலார் அரிசில் அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென்கரைமேற் புத்தூரே'' *(சம்பந்தர்)*

''வேதனை மிகுவீணையின் மேவிய
கீதனைக் கிளருந் நறுங்கொன்றையம்
போதனைப் புனல் சூழ்ந்த புத்தூரனை
நாதனை நினைந்து என்மனம் நையுமே''. *(அப்பர்)*

''அகத்தடிமை செய்யும் அந்தணன்தான் அரி
சிற்புனல் கொண்டு வந்தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக்குடத்தையும் நம்முடி
மேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற்படியும்
வருமென்றொரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து உகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர் புனிதன்நீரே''. *(சுந்தரர்)*

Koviloor Digital Library

-''காட்டும்

''பரிசிற்கரைப்புற்றோர் பாங்குபெற ஓங்கும்
அரிசிற்கரைப் புத்தூரானே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்
அழகார்புத்தூர் - கிருஷ்ணாபுரம் - 612401
சாக்கோட்டை S.O. - (வழி) கும்பகோணம்
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

184/67. சிவபுரம்.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

(1) கும்பகோணம் - திருவாரூர் நெடுஞ்சாலையில் சாக்கோட்டை சென்று, சாக்கோட்டையில், ''பட்டாமணிஜயர்ஸ்டாப்'' இடத்திற்குப் பக்கத்தில் பிரியும் (சிவபுரி) கிளைப் பாதையில் (மண் பாதையில்) சென்று, வழியில் மலையப்பநல்லூர் ஆலமரத்துப் பிள்ளையாரை வணங்கியவாறே 2 கி.மீ. சென்றால் சிவபுரத்தை அடையலாம். கோயில் வாயில்வரை காரில், பேருந்தில் செல்லலாம்.

(2) கும்பகோணம் - திருவாரூர்; கும்பகோணம் - மன்னார்குடிச் சாலையில் சாக்கோட்டை சென்று - வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு அருகில் பிரியும் சாலையில் 2 கி.மீ. சென்று சிவபுரம் அடையலாம்.

Koviloor Digital Library

திருமால் வெள்ளைப் பன்றி வடிவிலிருந்து பூசித்த தலம். குபேரன் இராவணன் பட்டினத்தார் அருணகிரிநாதர் ஆகியோர் வழிபட்ட தலம்.

இவ்வூரிலுள்ள பட்டினத்து விநாயகர் கோயிலில் பட்டினத்தார் சிலை அமர்ந்த நிலையில் உள்ளது. பட்டினத்தாரின் தமக்கை இவ்வூரில் வாழ்ந்தார்.

'குபேரபுரம்', 'பூகயிலாயம்', 'சண்பகாரண்யம்' என்பன தலத்தின் வேறு பெயர்கள். இவ்வூரில் பூமிக்கடியில் ஓர் அடிக்கு ஒரு சிவலிங்கம் இருப்பதாக ஐதீகம். இதனால்தான் ஞானசம்பந்தர் முதலியோர் இத்தலத்தில் நடக்காமல், அங்கப்பிரதட்சணம் செய்து சுவாமியை தரிசித்துப் பின்பு ஊர் எல்லைக்கு அப்பால் தள்ளி நின்று பெருமானைப் பாடியதாக வரலாறு. அவ்வாறு பாடிய இடம் இன்று 'சுவாமிகள் துறை' என்றழைக்கப்படுகிறது. (அரிசொல்ஆறு) அரிசிலாறு பக்கத்தில் ஓடுகின்றது. பழைமையான கோயில்.

இறைவன் - சிவகுருநாதசுவாமி, சிவபுரீஸ்வரர்,
பிரமபுரீஸ்வரர், சிவபுரநாதர்

இறைவி - ஆர்யாம்பாள், சிங்காரவல்லி, பெரியநாயகி.

தலமரம் - சண்பகம் (இப்போதில்லை)

தீர்த்தம் - சந்தர தீர்த்தம் - எதிரில் உள்ளது.

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற பதி.

ஐந்து நிலைகளையுடைய பழமையான ராஜகோபுரம் கிழக்கு நோக்கியுள்ளது. கொடிமரம் இல்லை. பலிபீடம் மட்டுமே உள்ளது. உள்கோபுரம் மூன்று நிலைகளுடன் காட்சி தருகின்றது. உள்ளே நுழைந்தால் நேரே மூலவர் சந்நிதி - கிழக்கு நோக்கியது. முன்னால் விசாலமான கல்மண்டபம் உள்ளது. உள்கோபுரத்தில் உட்சுவரில் சந்நிதியைப் பார்த்தவாறு சூரிய சந்திரரின் உருவங்கள் உள்ளன. விசாலமான பிராகாரம்.

கோஷ்ட மூர்த்தமாக நடன விநாயகரும், பக்கத்தில் தட்சிணா மூர்த்தியும் அடுத்து இலிங்கோற்பவரும், பிரமனும், துர்க்கையும் உள்ளனர். தட்சிணாமூர்த்திக்குப் பக்கத்தில் சுவரில் இத்தல வரலாறாகிய திருமால் வெண் பன்றியாக இருந்து வழிபட்ட சிற்பம் - (சிவ லிங்கம், வெண்பன்றி வாயில் மலருடன், திருமால்) - உள்ளது. இந்நிகழ்ச்சியை அப்பர் பெருமான் இத்தலத்துத் திருத்தாண்டகத்தில் ''பாரவன்காண்'' என்று தொடங்கும் பாடலில் ''பிறை எயிற்று வெள்ளைப் பன்றி பிரியாது பலநாளும் வழிபட்டேத்தும் சீரவன்காண்'' என்று பாடி யுள்ளார்.

Koviloor Digital Library

வெளிச் சுற்றில் விநாயகர் சந்நிதியும், அடுத்து சுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகளும் உள்ளன. தீர்த்தக் கிணற்று நீர் சுவையாக உள்ளது. மூலவர் கம்பீரமான சற்றுப் பெரிய சிவலிங்கத் திருமேனி. மகாவிஷ்ணு பூசித்தது, வழிபடுங்கால் உள்ளத்தில் ஒருவித மனநிறைவு உண்டாகின்றது. முன் மண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி யுள்ளது. நின்ற திருக்கோலம். நகரத்தார் இக்கோயிலை அற்புதமாகக் கற்கோயிலாகக் கட்டியுள்ளனர்.

கார்த்திகைச் சோமவாரத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறு கின்றது. இங்குள்ள நடராசர் திருமேனி மிகவும் அழகானது. இத்திரு வுருவச் சிலைதான் அமெரிக்காவுக்குக் கடத்தப்பட்டுவிட்டது. அது கண்டுபிடிக்கப்பட்டு, இந்திய அரசின் பெரு முயற்சியால் திரும்பக் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பு கருதி, திருவாரூர்ச் சிவாலயத்தில் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது வேறொரு நடராசத் திருவுருவம் சிவகாமியுடன் எழுந் தருளுவித்து வழிபட்டு வரப்பெறுகின்றது. நடராசப் பெருமானுக்கு எதிரில் உள்ள நால்வர் பிரதிஷ்டையில் பரவையாரும் இடம் பெற்றுள்ளார்.

இங்குள்ள பைரவர் விசேஷமான மூர்த்தி. இவருக்கு காலைசந்தி, அர்த்தசாமம் ஆகிய காலத்தில் அபிஷேகம் செய்து வடைமாலை சாத்தி - தயிர்சாதமும் கடலையுருண்டையும் நிவேதித்து சிவகுருநாதரை அங்கப்பிரதட்சணம் செய்து வந்தால் - வழக்குகளில் வெற்றி, தீராத நோய் தீரும் என்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

குபேரன் பூசித்த வரலாறு வருமாரு;

ஒருமுறை இராவணன், தூய்மையற்றவனாய் இறைவன் வழிபட வந்தான். நந்தி அவனைத் தடுத்தார். உண்மையறியாது குபேரன் இராவணனுக்காகப் பரிந்து பேச, நந்தி சாபமளித்தார். தளபதி என்னும் பெயருடன் பேராசைக்காரனாக இரறவனை வழிபட்டு வந்தான். ஒரு நாள் வடக்குப் பிராகாரத்தில் கோமுகம் அருகில் காணப்பட்ட செப்புப் பட்டயத்தில் இருந்த சுலோகத்தைப் படித்தான். மாசி மாதத்தில் சிவராத்திரி, சோமவாரம், பிரதோஷம் இவை மூன்றும் சேர்ந்து வரும் நாளில் உடற் குறையில்லாத ஆண் குழந்தையை பெற்றோர் பிடிக்க அரிந்து - ரத்தத்தால் சுவாமிக்கு அபிஷேகம் செய்தால் பெரும் பொருள் கிடைக்கும் என்று அறிந்தான். அவ்வாறே வறுமையால் வாடிய தம்பதிகட்குப் பொருள் தந்து அவர்களைச் சம்மதிக்க வைத்து - மன்னன் வாள் கொண்டு அரியும் போது - குழந்தை, அன்னை சிங்கார வல்லியை

Koviloor Digital Library

வேண்டிட, அத்தாயும் இறைவனிடம் வேண்டினாள். இறைவன் மகிழ்ந்து தளபதியின் சாபம் நீங்கவே இவ்வாறு நேர்ந்ததாக அருளி, தளபதியைக் குபேரனாக்கினார். இதை நினைவூட்டும் வகையில் பெருமானின் முடியில் ரத்தத்துளி இருப்பதைக் காணலாம்.

தாயாக வந்த இந்திராணியும் - தந்தையாக வந்த இந்திரனும் - குழந்தையாக வந்த அக்னியும்; கிழக்குப் பிராகாரத்தில் சிவலிங்கத் திருமேனி தாங்கி இருப்பதாகவும் கூறுவர்.

(ஆதாரம் - கோயில் வரலாறு)

''சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழி யொழுகுமெயுறு பொறியெரழி
அருதவ முயல்பவர் தனதடியடை வகை நிலையரனுறை பதி
திருவயர் சிவபுர நினைபவர் திகழ்குலனில னிடைநிகழுமே.''

(சம்பந்தர்)

'பாரவன்காண் பாரதனிற் பயிரானான்காண்
பயிர் வளர்க்குந் துளியவன்காண் துளியினின்ற
நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித்தான்காண்
நிலவேந்தர் பரிசாகநினைவுற் றோங்கும்
பேரவன்காண் பிறைஎயிற்று வெள்ளைப் பன்றி
பிரியாது பலநாளும் வழிபட்டேத்தும்
சிரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாஞ்
சிவனவன்காண் சிவபுரத்துளம் செல்வன்தானே.''

(அப்பர்)

''ஓழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி.''

(திருவாசகம் - போற் திருவக)

- தரிசனத்தெக்
காலஞ்சிவ புரத்தைக் காதலித்தோர் தங்கமுதி
யேலுஞ் சிவபுரத்தில் எம் மானே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சிவகுருநாதசுவாமி திருக்கோயில்
சிவபுரம் - சாக்கோட்டை அஞ்சல் - 612401
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

185/68 திருக்கலயநல்லூர்

சாக்கோட்டை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் சாக்கோட்டை என்ற பெயரில் வழங்குகிறது. கும்பகோணம் - மன்னார்குடி பேருந்துச் சாலையில் உள்ள தலம். கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ. கோயில் அருகிலேயே சாலை செல்கிறது.

மக்கள் இக்கோயிலை ''கோட்டைச் சிவன்கோயில்'' என்று சொல்கின்றனர். ஒரு காலத்தில் கோயிலைச் சுற்றிக் கோட்டை இருந்த தாகச் சொல்லப்படுகிறது. இன்று அதன் இடிபாடுகளே மேடாகக் காணப்படுகின்றன. கோயிலுக்கு வெளியிலும் உள்ளுமாக இரு அகழிகள் உள்ளன. இதனால் பண்டைநாளில் இது சோழ மன்னர்களின் முக்கிய இடமாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இன்று இங்குக் கோயிலும் ஒருசில வீடுகளுமே உள்ளன. ஞான சம்பந்தர் தம் பதிகத்தில் இப்பகுதியில் சாக்கியர் (பௌத்தர்) வாழ்வதாகக் குறிப்பிட்டுள்ளதால் 'சாக்கியர் கோட்டை' என்று பெயர் வழங்கி அதுவே பின்பு சாக்கோட்டையாக மாறி வழங்குகின்றது என்பர். ஊழிக்காலத்தில் உயிர்களை அடக்கிய கலயம் இங்குத் தங்கியதால் கலயநல்லூர் என்று பெயர் வந்ததாகத் தலவரலாறு சொல்லப்படுகிறது.

இறைவன் - அமிர்தகலசநாதர், அமிர்தகலேஸ்வரர்.
இறைவி - அமிர்தவல்லி.
தலமரம் - வன்னி,(இன்று இல்லை).
சுந்தரர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய சந்நிதி, முன்புறம் மதிலும் வாயிலும் உள்ளன. அடுத்து மூன்றுநிலை கோபுரம். நாய்க்கர் காலச் செங்கல் மண்டபம் உள்ளது. இதன் வடபால் அம்பாள் கோயில்தெற்கு நோக்கியுள்ளது. மகாமண்டப வாயிலில் வடபால் சிறிய தண்டபாணியும் தென்பால் நர்த்தன விநாயகரும் உள்ளனர். முன் மண்டபத்தில் நந்தி பலிபீடம் உள்ளது. ஒரே கல்லில் புடைச்சிற்பமாகவுள்ள சப்தமாதர் சிற்பங்கள் தரிசிக்கத்தக்கன.

இங்குள்ள (1) தட்சிணாமூர்த்தி - புதிய திருமேனி அதிசயமான அமைப்புடையது. இத்திருமேனி வலது மேற்கையில் ருத்ராக்ஷ

Koviloor Digital Library

மாலையும் இடது மேற்கையில் அக்கினியும், வலக்கையில் சின்முத்திரையும், இடக்கையில் சுவடியும், தலைமுடி சூரியபிரபை போலவும் அமைப்புடையதாகி விளங்குகிறது.

(2)லிங்கோற்பவர் - பச்சைக்கல்லால் ஆனது. மான் மழுவேந்தி, அபயகரமாகவும் கடிஹஸ்தமாகவும் உள்ளது. பாதத்தில் திருமால் மகுடமணிந்த வராகமாகவும் மேலே அன்னமும் பக்கத்தில் திருமாலும் பிரமனும் (சுமார் 2' உயரத்தில்) வணங்கி நிற்கின்றனர்.

(3) அர்த்தநாரி வடிவம் (4 அடி உயரம் புடைப்புசிற்பம்) இடக்காலூன்றி, வலக்காலை ஒய்வாக நிறுத்தி, விடைமேற் சாய்ந்து வலதுமேற்கையில் மழுவும் இடதுமேற்கையில் தாமரையும் கொண்டு: வலக்கையை காளைதலை மீது வைத்தும், இடக்கையைத் தொடையில் ஊன்றியும் (காளை பின்னால் நிற்க) காட்சி தருகின்றார்.

(4) தபஸ்வியம்மன் (புடைப்புச்சிற்பம்) மிகவும் அழகானது. வலக்கால் தரையில் ஊன்றி, இடக்காலை வலது தொடையில் பொருந்த மடக்கி மேல்நோக்கிய நின்றநிலையில் வைத்து; வலக்கரம் உச்சிமீது உள்ளங்கை கவித்துவைத்து, இடக்கரம் வயிற்றின்கீழ் அங்கைமேல் நோக்கி வ்வைத்துத் தவம் செய்கின்ற கோலத்தில் அமைந்துள்ளது அழகாகவுள்ளது.

இக்கோயில் இராசராசனுக்கு முன்பே கற்கோயிலாகக் கட்டப் பட்டது. எனினும் 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூன்றாங் குலோத் துங்க மன்னனாலும், மீண்டும் 16 (அ) 17 ஆம் நூற்றாண்டில் தஞ்சை நாய்க்க மன்னர்களாலும் புதுப்பிக்கபட்டுள்ளதாக அறிகின்றோம். கீழ்ப்பால் உள்ள மண்டபத்தில் ஒரு தூணில் உள்ள மனித வடிவம் மூன்றாம் குலோத்துங்கனாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

(கோயில் குருக்கள் வீடு சிவபுரத்தில் உள்ளது. எனவே முன்கூட்டியே கடிதம் எழுதித் தெரிவித்துவிட்டுத் தரிசனத்திற்குச் செல்வது நல்லது.)

"தண்புனலும் வெண்மதியும் தாங்கிய செஞ்சடையன்
தாமரையோன் தலை கலனாக் காமரமுன்பாடி
உண்பலி கொண்டுழல் பரமன் உறையும் ஊர் நிறைநீர்
ஒழுகுபுனல் அரிசிலின் கலய நல்லூரதனை
நண்புடைய நன் சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர் கோன் ஆரூரன் நாவில் நயந்துறை செய்
பண்பயிலும் பத்துமிவை பத்தி செய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவம் இலர்தாமே". *(சுந்தரர்)*

Koviloor Digital Library

-''மாலுங்கொள்
வெப்புங்கலைய நல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங்கலைய நல்லூர்ச்சின்மயனே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அமிர்தகலேஸ்வரர் திருக்கோயில்
சாக்கோட்டை & அஞ்சல் - 612 401
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

186/69. கருக்குடி

மருதாந்தநல்லூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் ''மருதாந்தநல்லூர்'' என்று வழங்குகின்றனர்.

கும்பகோணம் - மன்னார்குடிச் சாலையில் உள்ள தலம்.

இறைவன் - கருக்குடிநாதர், பிரம்மபுரீசுவரர்.
சற்குணலிங்கேஸ்வரர்

இறைவி - அத்வைதநாயகி, கல்யாணநாயகி,
சர்வாலங்காரநாயகி

சம்பந்தர் பாடல் பெற்றது.

இராமேசுவர வரலாறு இங்கும் சொல்லப்பட்டு, அநுமத்லிங்கம் என்ற பெயரால் வழிபடப் பெறுகிறது. சிறிய பழைமையான கோயில், கிழக்கு நோக்கியது. சுவாமி, அம்பாள் ஆகிய இரு சந்நிதிகளும் கிழக்கு நோக்கியுள்ளன. கருவறை விமானங்கள் மிகவும் உயர்ந்தவை. வாயிலில் விநாயகர், கார்த்திகேயர் சந்நிதிகள் உள்ளன. பக்கத்தில் உள்ளது அநுமத்லிங்கம். சிவலிங்கத் திருமேனி - சிறிய மூர்த்தி. மிகமிகத் தாழ்வான ஆவுடையார். மண்ணாலானது. கல்லாலானபீடம்.

கோஷ்டங்களில் நர்த்தனவிநாயகர், இருபுறம் பூதகணங்கள்; தட்சிணாமூர்த்தி (மேலே வீணாதர தட்சிணாமூர்த்தி); லிங்கோற்பவர் மூர்த்தங்கள் உள்ளன. இத்தலத்திற்குப் பக்கத்தில் ஏனாதிநாயனார் அவதரித்த ஏன நல்லூர் என்னும் எயினனூர் உள்ளது.

Koviloor Digital Library

''வானுடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்
கானிடை ஆடலாள் பயில் கருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே.''

(சம்பந்தர்)

-''செப்பமுடன்
ஓங்குந்திருத் தொண்டருள்குளிர நல்லருளால்
தாங்குங்கருக் குடிவாழ் சங்கரனே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சற்குணலிங்கேசுவரர் திருக்கோயில்
மருதாந்த நல்லூர் &அஞ்சல்
திப்பிராஜபுரம். S.O. 612 402
கும்பகோணம் R.M.S.
தஞ்சை மாவட்டம்.

187/70. ஸ்ரீவாஞ்சியம் - திருவாஞ்சியம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1. நன்னிலம் - குடவாசல் பேருந்துச் சாலையில் இத்தலம் உள்ளது.

Koviloor Digital Library

2. நன்னிலம் - கும்பகோணம் பேருந்தில் செல்வோர் அச்சுத மங்கலத்தில் இறங்கித் திருவாரூர் பாதையில் 1 கி.மீ. சென்றால் இத் தலத்தையடையலாம்.

3. தனிப்பேருந்தில் செல்வோர் கும்பகோணம் - மன்னார்குடிப் பாதையில் சென்று, குடவாசல் கைகாட்டி காட்டும்பக்கம் திரும்பி, திருவாரூர்ப் பாதையில் சென்று, நாச்சியார் கோயிலை தாண்டிப் பிரிகின்ற நன்னிலம் பாதையில் சென்று அச்சுதமங்கலத்தையடைந்து, குடவாசல் திருவாரூர்ப் பாதையில் திரும்பிச் சென்றால் ஸ்ரீ வாஞ்சி யத்தை அடையலாம்.

காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் ஆறு காவிரித் தலங்களுள் இது ஒன்றாகும். மற்றவை:- 1. திருவையாறு 2. வேதாரண்யம் 3. மயிலாடுதுறை 4. திருவிடைமருதூர் 5. திருவெண்காடு திருமால் சிவபெருமானை வழிபட்டு, இலக்குமி தம்மிடம் வாஞ்சையுடன் இருக்குமாறு வரம் பெற்ற தலம். (திருவை வாஞ்சித்த தலம் - திருவாஞ் சியம்) எமன் வழிபட்ட தலம். இங்கு எமனுக்குத் தனிக்கோயிலுள்ளது.

இத்தலத்தில் இறப்பவர்க்கு எமவாதனையில்லை. கோயிலுள் எம வாகனமும் உள்ளது. வாஞ்சியப்பதி, சந்தனவனம், ஜாந்தாரண்யம், பூகைலாசம் என்பன இத்தலத்தின் வேறு பெயர்கள். பிரமன், இந்திரன், பராசரர், அத்ரி முதலியோர் வழிபட்ட தலம். இங்குள்ள குப்தகங்கைத் தீர்த்தம் மிகவும் புனிதமானது. கார்த்திகை ஞாயிறு நீராடல் இங்குச் சிறப்பாகும். பின்வரும் தலபுராணப் பாடல் இக்கருத்தையுணர்த்தும்:-

"மெய்தரு கயநோய் குட்டம் விளைத்தமுற் கொடிய சாபம்
பெய்துறல் செய்யும் வன்கண் பிரமராக்கதம் வேதாளம்
எய்திடின் அன்னதீர்த்தம் இழிந்ததில் படியத்தீரும்
செய்திரும்கடத்தின் ஏற்றுத் தெளிக்கினும் தீருமன்றே".

இறைவன் - வாஞ்சிநாதேஸ்வரர், வாஞ்சிலிங்கேஸ்வரர்,

இறைவி - மங்களநாயகி, வாழவந்தநாயகி.

தலமரம் - சந்தனம்

தீர்த்தம் - குப்தகங்கை, எமதீர்த்தம்.

மூவர் பாடல் பெற்றது.

(1. ஞானசம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையிலிருந்து புறப்பட்டு இத்தலத்திற்கு வந்து பெருமானை வணங்கினர். 2. சுந்தரர், நன்னிலத்துப் பெருங்கோயிலைப் பணிந்து, திருவீழிமிழலை வணங்கி இத்தலத்திற்கு வந்து தொழுதார்).

Koviloor Digital Library

திருவாசகத்திலும் அருணகிரிநாதர் வாக்கிலும் இத்தலம் இடம் பெறுகின்றது. ராஜகோபுரம் ஐந்து நிலைகளைக்கொண்டு கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்ததும் இடப்பால் எமனுக்குத் தனிக் கோயில் உள்ளது. எமன் நான்கு கரங்களுடன் (பாசம், கதை, சூல மேந்தி) இடக்காலை மடித்து, வலக்காலைத் தொங்கவிட்டு, பாதக் குறடுடன் அமர்ந்த நிலையில் காட்சி தருகின்றான். அவன் பக்கத்தில் ரிஷி ஒருவருடைய உருவச்சிலை உள்ளது. இன்னாரென்று தெரிய வில்லை ஒருவேளை எமனிடம் உபதேசம் பெற்ற நசிகேதன் போன்றிருக்கலாமோ? அவனோ சிறியவன். இவ்வடிவமோ தாடியுடன் ஒரு கையில் கதையையூன்றி, ஒரு கையை உயர்த்தி, ஒரு கையைத் தொங்கவிட்டுக் கொண்டு நின்ற நிலையில் காட்சி தருகிறது. தரிசித்துக் கொண்டு முன்மண்டபத்தில் நுழைந்தால் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள். உள்வாயிலைத் தாண்டியதும் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது.

கவசமிட்ட கொடிமரம் - பலிபீடம் நந்தி உள்ளன. வெளிப் பிராகாரத்தில் ஏதுமில்லை. அடுத்து 'நட்டுவன் பிள்ளையார் சந்நிதி'. தலப்பதிகம் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளது. இடப்பால் அதிகார நந்தி உள்ளார். மண்டபத்தில் உற்சவத் திரு மேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மூலவர் - சிவலிங்கத் திருமேனி - சுயம்பு - சற்று தடித்த உயர்ந்த பாணம். தீபஒளியில் வணங்கும்போது மனம் நிறைவு பெறுகிறது. உள் சுற்றில் வெண் ணெய்ப் பிள்ளையார், விநாயகர், சுப்பிரமணியர், பஞ்சபூத லிங்கங்கள், ஜேஷ்டாதேவி, சனிபகவான் ஆகிய சந்நிதிகள் உள்ளன. அதையடுத்துக் காசிக்குச் சமமான தலங்களுக்குரிய சிவலிங்கச் சந்நிதிகள் அகோரேஸ்வரர், பஞ்சநாதேஸ்வரர், மயூரநாதேஸ்வரர், மகாலிங்கேசர் - முதலான பெயர்களில் உள்ளன.

இங்குள்ள துர்க்கை சந்நிதி விசேஷமானது. நடராசசபையிலுள்ள நடராச மூர்த்தம் மிகச்சிறப்பாக, உரிய லட்சணங்களுடன் அமைந் துள்ளன தரிசிக்கத்தக்கது. அடுத்து யோகபைரவர், சூரியன், சந்திரன், ராகு முதலிய மூலத்திருமேனிகள் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை சந்நிதிகள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. இத்திருக்கோயிலில் உள்ள நந்திதேவர் 'கருவறுத்த தேவர்' என்றழைக்கப்படுகிறார். தலபுராணம் - ஸ்ரீ வாஞ்சிநாத பிரபாவம் - சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் உள்ளது. நாடொறும் ஆறு காலபூஜைகள், காமிக ஆகம அடிப்படையில் நடைபெறுகின்றன. அர்த்த சாம தேசாந்திரி கட்டளை (இருவருக்கு) உள்ளது.

Koviloor Digital Library

ஆடிப்பூரம், கார்த்திகை ஞாயிறு நாள்கள், மாசிமகப்பெருவிழா முதலிய விழாக்கள் சிறப்பானவை. எமன், உலக உயிர்களைக் கொல்லும் பாவம் தீர, இங்கு இறைவனை வழிபட்டு இறைவனுக்கு வாகனமாகும் தன்மையைப் பெற்றான் ஆதலின், எமனுக்குக் காட்சி தரும் ஐதீகவிழா மாசிமகப்பெருவிழாவில் இரண்டாம் நாள் விழாவாக நடைபெறுகிறது. அன்று சுவாமி எமவாகனத்தில் புறப்பாடாகி எம தீர்த்தத்தில் தீர்த்தவாரி.

ஊரில் வழங்கும் செவிவழிச் செய்திகள் வருமாறு:-

(1) இவ்வூர் பெரிய ஊராக இருந்தது. கமலமுனி என்னும் சித்தர் இவ்வூருக்கு வந்தபோது அவர் பெருமையறியாது சிறுவர்கள் அவரை இகழ்ந்ததால், அவர் சாபம் தர அதனால் இவ்வூர் சிறிய கிராமமாகி விட்டது.

(2) ஷ சிறுவர்கள் வண்ணார், குலாலர், ஆயர் மரபைச் சேர்ந்தவர்களாகயிருந்தமையால் இன்றும் ஷ பிரிவினர் தத்தம் குலத் தொழிலைத் செய்துகொண்டு இங்கு வாழ்வதில்லை. இம் மரபைச் சேர்ந்தவர்கள் பிறதொழில்களைச் செய்வோராய் வாழ்கின்றனர். ஆனால் தங்கள் மரபுத் தொழிலைச் செய்ய முற்படும்போது அதற்குத் தடங்கல் வந்து விடுகிறது.

பிற்காலச் சோழர்கள், பாண்டியர் காலத்தைச் சேர்ந்த இத்தலக் கல்வெட்டில் இவ்வூர் ''குலோத்துங்க சோழவள நாட்டுப் பனையூர் நாட்டுத் திருவாஞ்சியம்'' என்று குறிக்கப்படுகிறது. இவ்வூருக்கு 'ராஜகம்பீர சதுர்வேதி மங்கலம்' என்ற பெயர் உண்டு என்பதும்; கல்வெட்டுகள் மூலம் நிலதானம், வரிவிலக்கு முதலிய செய்திகளும் தெரியவருகின்றன.

''வன்னி கொன்றை மதமத்தமெருக் கொடு கூவிளம்
பொன்னயன்ற சடையிற் பொலிவித்த புராணனார்
தென்னவென்று வரி வண்டிசைசெய் திருவாஞ்சியம்
என்னையாளுடை யானிடமாகவுகந்ததே''.

(சம்பந்தர்)

''நீறுபூசி நிமிர்சடை மேற்பிறை
ஆறுசூடும் அடிகள் உறைபதி
மாறுதானொருங்கும் வயல் வாஞ்சியம்
தேறிவாழ்பவர்க்குச் செல்வமாகுமே''

(அப்பர்)

Koviloor Digital Library

''பொருவனார் புரிநூலர் புணர்முலையுமையவளோடு''
மருவனார் மருவார்பால் வருவதுமில்லை நம்மடிகள்
நிருவனார் பணிந்தேத்துந் திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலியவொட்டாரே''

(சுந்தரர்)

''திருவாஞ்சியத்தில் சீர்பெறஇருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்''.

(திருவாசகம்)

''-ஆங்ககனந்
தாஞ்சியத்தை வேங்கைத் தலையாற் றடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வாஞ்சிநாதசுவாமி திருக்கோயில்
ஸ்ரீ வாஞ்சியம் & அஞ்சல் - 610 110
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

188/71. நன்னிலம்



Koviloor Digital Library

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் பேருந்துகள் நன்னிலம் வழியாகவும் செல்கின்றன. நன்னிலம் பேருந்து நிலையத்திலிருந்து திருவாரூர் போகும் பாதையில் அரசு மருத்துவமனை எதிரில் செல்லும் வழியில் சென்றால் கோயிலை அடையலாம்.

நன்னிலம் - ஊர். பெருங்கோயில் - கோயில். இத்தலத்திற்கு வேறு பெயர்கள் (1)மதுவனம் (2) தேவாரண்யம் (3) சுந்தரவனம் (4) பிருகத்புரம் என்பன.

சூரியன், அகத்தியர் வழிபட்ட சிறப்புடையது. கோச்செங்கட் சோழனின் மாடக்கோயில். தேவாரத்தில் 'நன்னிலத்துப் பெருங் கோயில்' என்று குறிக்கப்படுகின்றது. விருத்திராசுரனின் துன்பம் தாளாமல் தேவர்கள் தேனீக்களாய் மாறியிருந்து வழிபட்டதலம் ஆதலின் மதுவனம் என்று பெயர் பெற்றது.

இறைவன் - மதுவனேஸ்வரர், பிரகாசநாதர், தேவாரண்யேசுவரர்.

இறைவி - மதுவனேஸ்வரி, தேவகாந்தார நாயகி.

தலமரம் - வில்வம், கோங்கு, வேங்கை, மாதவி, சண்பம், தற்போது வில்வம் மட்டுமே உள்ளது.

தீர்த்தம் - பிரமதீர்த்தம், சூலதீர்த்தம்

சுந்தரர் பாடல் பெற்றது.

முகப்பு வாயிலுள் புகுந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதியுள்ளது. நேர் எதிரில் பிரமன் வழிபட்ட மகாதேவலிங்கம் உள்ளது. பக்கத்தில் அகத்தியர் வழிபட்ட அகத்தீஸ்வரர் உள்ளார். வலமாக வந்தால் விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, சந்நிதிகளைக் தரிசிக்கலாம்.

வலமுடித்துப் படிகளேறி மேலே செல்லவேண்டும். சுவாமி மலை மேல் உள்ளார். மேலேயுள்ள பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி அழகாகவுள்ளது. மூலவர் மதுவனேஸ்வரர் - சதுரபீடம். சற்றுயர்ந்த பாணம். விசேஷகாலங்களில் குவளை, நாகாபரணம் சார்த்தப் படுகின்றது. கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர்.

நாடொறும் நான்கு காலவழிபாடுகள். வைகாசி விசாகத்தில் பெருவிழா முன்பு நடந்துவந்தது. தற்போது ஒருநாள் உற்சவமே நடைபெறுகிறது. சஷ்டி உற்சவம் முடிந்து கார்த்திகையில் ஒரு நாளில்

Koviloor Digital Library

வள்ளிகல்யாண உற்சவம் இத்தலத்தில் மிகச்சிறப்பாக நடைபெறு கிறது. கோயிலின் வெளிமதிற்சுவர் கிலமாகிவுள்ளது - சில விடங்களில் சரிந்துமுள்ளது. உற்சவமூர்த்தங்கள் பாதுகாப்பாக வேறு கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. 15.9.1996ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

''கருவரை போலரக்கன் கயிலைம் மலைக் கீழ்க்கதற
ஒருவிரலால் அடர்த்தி இன்னருள் செய்த உமாபதிதான்
திரைபொரு பொன்னி நன்னீர்த் துறைவன் திகழ் செம்பியர் கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே.'' *(சுந்தரர்)*

-''ஆஞ்சியிலா(து)
இந்நிலத்தும் வானாதி எந்நிலத்தும் ஓங்குபெரு
நன்னிலத்து வாழ் ஞானநாடகனே.'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. மதுவனேஸ்வரர் திருக்கோயில்
நன்னிலம் & அஞ்சல்
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம் - 610 105

189/72. கொண்டீச்சரம்

திருக்கண்டீஸ்வரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் திருக்கண்டீஸ்வரம் என்று வழங்குகின்றனர். நாகப்பட்டினம் - நன்னிலம்; மயிலாடுதுறை - திருத்துறைப்பூண்டி - வழி நன்னிலம்; நாகப்பட்டினம் - கும்பகோணம் - (வழி) நன்னிலம் முதலிய பாதைகளில் வருவோர்; நன்னிலத்துக்குள் நுழைவதற்கு முன்னால் ''தூத்துகுடி Stopping'' என்னுமிடத்தில் பிரியும் பாதையில் உள்ளே சென்றால் வெகு அருகாமையிலுள்ள கோயிலையடையலாம். காமதேனு வழிபட்டதலம். வில்வாரண்யம் எனப்படுவது. உமை, பசுவின் வடிவில், தன்கொம்பால் பூமியைக் கிளறியவாறே இறைவனைத் தேடிவந்தபோது, கொம்புபட்டுக் குருதி பெருகி இறைவன் வெளிப்பட்டார். உமை (பசு) தன்பாலையே பெருமான்மீது (சிவலிங்க மூர்த்தம்) சொரிந்து புண்ணை ஆற்றினாள் என்பது தலவரலாறு. மூலத்திருமேனியின் மீது வெட்டுப்பட்டது போன்ற - பசுவின் கொம்பு பதிந்த ஆழமான வடுஉள்ளது.

Koviloor Digital Library

இறைவன் - பசுபதீஸ்வரர்
இறைவி - சாந்தநாயகி
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - க்ஷீரபுஷ்கரணி (நல்லநிலையில் இல்லை)
அப்பர் பாடல் பெற்றது.

கோயில் மிகமிகப் பழைமையாகவுள்ளது - பொலிவு குறைந்துள்ளது. ராஜகோபுரமில்லை. வாயில் கடந்து உள்ளே சென்றால் பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகள் கிலமாகவுள்ளன. நவக்கிரகங்கள், சூரியன் மூர்த்தங்கள் உள. வௌவால் நெத்தி மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி. இம் மண்டபத்தில் ஆபத்சகாய மகரிஷி உருவமுள்ளது, ஒருபால் மூன்று திருவடிகளுடன் கூடிய ஜ்வரஹரேசர் உருவமுள்ளது. சுரநோயால் வாடுபவர்கள் இம்மூர்த்திக்கு வெந்நீரால் அபிஷேகம் செய்து, புழுங்கலரிசி நிவேதனம் செய்தால் சுரம் நீங்குவது இன்றும் கண்கண்ட பிரார்த்தனையாக உள்ளது. மற்றொரு தூணில் காமதேனு, அம்பாள் வடிவம் போன்ற சிற்பங்கள் உள்ளன. மூலவர் சந்நிதி. சிறிய பாணம். சிவலிங்கத் திருமேனி ஆழமான வடுப்பட்டு இரண்டாகப் பிளந்திருப்பது போலக் காட்சியளிக்கிறது.

இக்கோயில் உற்சவமூர்த்தங்கள் திருப்புகலூர்க் கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச்சரத்துளானே".

(அப்பர்)

-"மன்னுமலர்
வண்டீச்சுரம்பாடி வார்மதுவுண்டுள் களிக்கும்
கொண்டீச்சுரத்தமர்ந்த கோமானே" *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. பசுபதீஸ்வரர் திருக்கோயில்
திருக்கண்டீஸ்வரம் - தூத்துகுடி அஞ்சல்
(வழி) சன்னாநல்லூர் - நன்னிலம் R.M.S.
திருவாரூர் மாவட்டம் 609 504.

Koviloor Digital Library

190/73. திருப்பனையூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1) பேரளம் - திருவாரூர்ச் சாலையில், சன்னாநல்லூரைக் கடந்து, மேலும் சென்றால் 'பனையூர்' என்று கைகாட்டி உள்ளது. அக்கிளைப் பாதையில் 1 கி.மீ. செல்ல வேண்டும். குறுகலான மண் பாதை, பேருந்து செல்லாது. கார், வேன் செல்லும்.

2) இதே சாலையில், மேலும் சென்று, ஆண்டிப்பந்தல் என்னும் ஊரை அடைந்து, திருமருகல், நாகூர் செல்லும் பாதையில் திரும்பி, 'கோணமது' என்னும் இடத்தில் இடப்பக்கமாகத் திரும்பிச் செல்லும் குறுகலான கிளைப்பாதையில் 1 கி.மீ. சென்றால் திருப்பனையூரை அடையலாம். பேருந்து செல்வது சற்றுச் சிரமம். வேன், கார் செல்லும்.

பழமையான கோயில், சிறிய ஊர். கரிகாற் சோழன் வளர்ந்த ஊர். பனைமரங்களை மிகுதியாக உடைய மணற்பாங்கான ஊர். ''தாலவனம்'' என்னும் பெயர் கொண்டது. (தாலம் - பனை) கோயிலுக்குத் 'தாலவனேஸ்வரம்' என்று பெயர். சப்தரிஷிகள், பாரசர முனிவர் மகாலட்சுமி, கரிகாற்சோழன் ஆகியோர் வழிபட்ட தலம்.

(சப்தரிஷிகள்: 1) கௌசிகர் 2) காசிபர் 3) பரத்வாஜர் 4) கௌதமர் 5) அகத்தியர் 6) அத்ரி 7) பிருகு)

இறைவன் - சௌந்தரேஸ்வரர், அழகியநாதர், தாலவனேஸ்வரர்

இறைவி - பிரஹந்நாயகி, பெரியநாயகி

தலமரம் - பனைமரம் (கோயிலில் உள்ளன)

தீர்த்தம் - பராசர தீர்த்தம், (அமிர்தபுஷ்கரணி, திருமகள் தீர்த்தம்) தீர்த்தம் கோயிலின் எதிரில் உள்ளது.

(கல்வெட்டில் இறைவன் திருப்பெயர் 'பனையடியப்பன்' 'பனங்காட்டிறைவன்' என்று குறிக்கப்பெறுகின்றது).

சுந்தரர், திருவாரூர்ப் பங்குனி உத்தரத் திருநாளுக்காகப் பரவையாரின் வேண்டுகோளின்படி, திருப்புகலூர் இறைவனிடம் பொன் பெற்று ''தம்மையே புகழ்ந்து'' என்று பாடித் திருப்புகலூர் வணங்கிய பின்பு, திருப்பனையூர் நினைத்துவரலானார். அப்போது ஊரின் புறத்தே இறைவன் நடனக் காட்சி காட்டியருள, எதிர் சென்று

Koviloor Digital Library

தொழுது, வீழ்ந்து வணங்கி, 'அரங்காடவல்லார் அழகியர்' என்று பதிகம் பாடி, அருள் பெற்றார். இந்நிகழ்ச்சியின் நினைவாக இன்றும், ஊர்க்கு வடகிழக்கில் உள்ள மாணிக்க நாச்சியார் திட்டிற்கு அருகே உள்ள குளம் 'சந்தித்த தீர்த்தம்' என்னும் பெயருடன் திகழ்கின்றது. சம்பந்தர், சுந்தரர், பாடிய பதி.

கோயில் வாயில் முகப்பு கிழக்கு நோக்கியுள்ளது. ராஜகோபுர மில்லை. வாயில்மேல் ரிஷபாரூடர் சிற்பம் சுதையால் ஆக்கப் பட்டுள்ளது. உள்நுழைந்ததும் வலப்பால் பெரியநாயகி அம்பாள் சந்நிதி உள்ளது - நின்ற திருக்கோலம் - தெற்கு நோக்கியது. தலப்பதிகம் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. முன்னால் துணை இருந்த விநாயகர் சந்நிதி உள்ளது. இப்பெயர்க்குச் சொல்லப்படும் காரணம் வருமாறு:-

தந்தையை இழந்து, பிறந்த கரிகாலனை, கொன்று அரசைக் கைப்பற்ற நினைத்த தாயத்தார்களிடமிருந்து காப்பாற்ற முயன்ற தாய்மாமனாகிய 'இரும்பிடர்த்தலையார்' என்னும் சங்கப் புலவர், பிறர் அறியாமல், குழந்தையையும் தாயையும் பனையூர்க்கு அனுப்பி வைத்தார். அரசி, தன் மகனுடன் இவ்வூர்க்கு வந்து, இக்கோயிலில் அடைக்கலம் புகுந்து, இவ்விநாயகரிடம் முறையிட்டு, அவர் துணையால் எட்டு ஆண்டுகள் பாதுகாப்பாக இருந்தாள். ஆகவே கரிகாற் சோழனுக்குத் துணையிருந்ததனால் இவ்விநாயகர் 'துணையிருந்த விநாயகர்' என்னும் பெயர் பெற்றார்.

அடுத்துத் தலமரங்களாகிய இரு பனைமரங்கள் உள்ளன. இம் மரங்கள் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. வளர்ந்துள்ளவை முதிர்ச்சியுறுங் காலத்தில், வித்திட்டு முளைக்காததாக, இரண்டின் அடியிலும் முறையே பனங்கன்றுகள் தாமாகவே தோன்றி வளர்ந்து வருகின்றன.

பிராகாரத்தில் முதலில் பராசர முனிவர் உருவம் உள்ளது. அடுத்து விநாயகர் சந்நிதி உள்ளது. சுந்தரர் வரலாற்றுத் தொடர்புடைய திருவாரூரில் உள்ள மாற்றுரைத்த பிள்ளையார் நினைவாக இவ் விநாயகரும் 'மாற்றுரைத்த விநாயகர்' என்றழைக்கப்படுகின்றார். அடுத்து சுப்பிரமணியர் சந்நிதி.

கோஷ்ட மூர்த்தமாக, தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரமன், துர்க்கை ஆகியோர் காட்சி தருகின்றனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. சப்தரிஷிகள் வழிபட்ட ஏழு சிவலிங்கங்கள் வரிசையாக உள்ளன. திருமகள் கோயில் உள்ளது.

Koviloor Digital Library

பராசர முனிவர் பிரதிஷ்டை செய்து வழிபட்ட சிவலிங்கத் திருமேனி - தாலவனேஸ்வரர் - மேற்கு நோக்கியது - சதுர ஆவுடையார் - இப்பெருமானே தலத்திற்குரிய இறைவராவார்.

மூலவர் சந்நிதி மண்டபத்துள் நால்வர் பிரதிஷ்டை - நடராஜர்

சந்நிதி உள்ளன. துவாரபாலகர்கள் முகப்பில் உன்னனர். உள்ளே சிவலிங்கத் திருமேனி அழகுடன் சற்று உயரமாக அருட்பொலிவுடன் விளங்குகிறது. இக்கோயிலில் உள்ள சோமாஸ்கந்தர் திருமேனி புதுமையான அமைப்புடையது - இடக்கையில் பழம் ஒன்றை ஏந்திய வண்ணமுள்ளது.

இக்கோயில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கருங்கல் திருப்பணியாகக் கட்டப்பட்டது என்றும்; கல்வெட்டில் இக்கோயில் ''இராசேந்திர சோழப் பனையூர்'' என்று குறிக்கப் பெறுகின்றது என்றும் சொல்லப்படுகின்றது.

''அணியார் தொழவல்ல வரேத்த
மணியார் மிட றொன்று டையானூர்
தணியார் மலர் கொண்டு இருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே''. *(சம்பந்தர்)*

''வஞ்சிநுண்ணிடை மங்கை பங்கினர் மாதவர் வளரும் வளர்பொழில்
பஞ்சின் மெல்லடியார் பயிலும் திருப்பனையூர்
வஞ்சியும் வளர் நாவலூரன் வனப்பகைய வளப்பன் வன்றொண்டன்
செஞ்சொற் கேட்டுகப் பார் அவரே அழகியரே''.

(சுந்தரர்)

''திருப்பனையூரில் விருப்பன் ஆகியும்''

(திருவாசகம்)

-கண்டீச

''நண் பனையூரன் புகழும் நம்ப என உம்பர் தொழும்
தண் பனையூர் மேவும் சடாதரனே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சௌந்தரேஸ்வரர் திருக்கோயில்
பனையூர் - சன்னாநல்லூர் அஞ்சல் - 609 504
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

191/74. திருவிற்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

(1) மயிலாடுதுறை - திருவாரூர் பேருந்துச் சாலையில், வெட்டாறு தாண்டி, கங்களாஞ்சேரிக்குப் பிரியும் வலப்புறப் பாதையில் திரும்பி, நாகூர் - நாகப்பட்டினம் சாலையில் சென்று, விற்குடி புகைவண்டி நிலையத்தை (ரயில்வே கேட்டை) தாண்டி, விற்குடியை அடைந்து, 'விற்குடி வீரட்டேசம்' என்னும் பெயர்ப் பலகை காட்டும் பாதையில் இடப்புறமாகத் திரும்பி 2 கி.மீ. சென்று, இடப்புறமாகப் பிரியும், ('வளப்பாறு' பாலத்தைக் கடந்து) சாலையில் சென்றால் கோயிலை அடையலாம்.

(2) நாகூர், நாகப்பட்டினத்திலிருந்து காரைக்கால் வழியாகத் திருவாரூருக்குச் செல்லும் பேருந்தில் வந்து, விற்குடியில் கூட்ரோடில் இறங்கி 1 கி.மீ. சென்றும் கோயிலை அடையலாம். கோயில்வரை பஸ், கார் செல்லும். ஊரின் தென்புறம் விளப்பாறும் (ரக்த நதி) வடபுறம் பில்லாலி ஆறும் பாய்கின்றன.

அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. சலந்தரனை சம்ஹரித்தலம். சலந்தரனின் மனைவியான பிருந்தையை திருமால் துளசியாக ஏற்ற தலம். நகரத்தார் திருப்பணி பெற்று, கோயில் அழகாகவுள்ளது. மேற்கு நோக்கிய சந்நிதி. கோயிலுள் நுழையும்போது மூலவர் சந்நிதி நேரே தெரிகின்றது.

நல்ல கட்டமைப்புள்ள கற்கோயில்.

இறைவன் - வீரட்டானேஸ்வரர்.

இறைவி - ஏலவார்குழலி, பரிமள நாயகி.

தலமரம் - துளசி.

தீர்த்தம் - 1) சக்கரதீர்த்தம் (கோயிலின் முன்னால் உள்ளது).

2) சங்குதீர்த்தம் (கோயிலின் பின்புறம் உள்ளது).

சம்பந்தர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. எதிரில் சக்கர தீர்த்தம் உள்ளது. நல்லபடித்துறைகளும் சுற்றுச்சுவரும் கொண்ட பெரிய குளம். தீர்த்தக்கரையில் விநாயகர் கோயில் உள்ளது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும்; எதிரில் வலப்புறமாக உள்ள முதல் தூணில் நாகலிங்கச்சிற்பம் அழகாகவுள்ளது.

Koviloor Digital Library

வெளிப்பிராகாரத்தில் பிருந்தையை, திருமாலுக்காக இறைவன் துளசியாக எழுப்பிய இடமும், திருமால் வழிபட்ட சிவாலயமும் உள்ளன. உள்பிராகாரத்தில் வலமாக வரும்போது மகாலட்சுமி, வள்ளிதெய்வயானையுடன் சுப்பிரமணியர் பள்ளியறை, பைரவர், சனிபகவான், தனிக் கோயில் கொண்டுள்ள பைரவர், நவக்கிரகங்கள், சூரியன், சந்நிதி, ஞானதீர்த்தமென்னும் கிணறு, பிடாரி முதலிய சந்நிதிகள் உள்ளன. சலந்தரனைச் சம்ஹரித்தமூர்த்தி - 'ஜலந்த்ரவத மூர்த்தி - தலச்சிறப்பு மூர்த்தி (உற்சவத்திருமேனி) தரிசித்து மகிழ வேண்டிய ஒன்று. வலது உள்ளங்கையில் சக்கரம் ஏந்தியுள்ளார். ஏனையகரங்களில் மான்மழு ஏந்தி, ஒருகை ஆயுத முத்திரை தாங்கி யுள்ளது. அழகான ஐம்பொன் திருமேனி - வலமாக வந்து நேரே சென்றால் மூலவர் சந்நிதி.

முன்னால் இடப்புறம் அம்பாள் சந்நிதி. தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் அமைந்த நான்கு திருக்கரங்கள். எதிரில் நந்தி உள்ளது. அம்பாள் சந்நிதியின் எதிரில் மண்டபத்தின் மேற்புறத்தில் பன்னிரு ராசிகளும் உரிய கட்டமைப்பில் அமைக்கப் பட்டுள்ளன. அபிஷேக நீர் வெளிவரும் கோமுகம், ஒரு பெண் தாங்குவது போன்ற அமைப்பில் உள்ளது. மண்டபத்தின் இடப்பால் நடராச சபை. எதிரில் (தெற்கு) வாயிலும் சாளரமும் உள்ளன. பக்கத்தில் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

துவார பாலகரைத் தொழுது, துவார கணபதி, சுப்பிரமணியரை வணங்கியுட் சென்றால் மூலவர் தரிசனம். மூலவர் - சுயம்பு. சதுர ஆவுடையார், மூர்த்தியின் பாணம் உருண்டையாகவுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக, பிரம்மா, மகாவிஷ்ணு, தட்சிணாமூர்த்தி, நர்த்தன விநாயகர் ஆகியோர் உளர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. நாடொறும் நான்குகால பூஜைகள் நடைபெறுகின்றன.

கோயிலின் கீழ்ப்பால் மயாளேஸ்வரர் கோயில் உள்ளது. மக்கள் ''மெய்ஞ்ஞானேஸ்வரர் கோயில்'' என்றழைக்கின்றனர்.

''வடிகொள் மேனியர் வானமாமதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினருடை புலியதளார்ப்பர்
விடையதேறும் எம்மான் அமர்ந்தினிதுறை விற்குடி வீரட்டம்
அடியராகி நின்றேத்த வல்லார்தமை அருவினை அடையாவே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

"திருவும் உரைமகளும் நிறைசெம்பொன் மணிமாடம்
மருவும்மொரு திருவிற்குடி வளமுற்றிடு தளியின்
வருவாரருள் பெறவே தருவய வீரட்டநாதன்
இருதாள் மலரெழில் நாள் மலர் இட்டுப் பணிவோமே."

(தனிச்செய்யுள்)

"சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கு அன்று அருளியவாறு என்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம் இடந்து அரனடிக்கீழ்
அலராக இட வாழியருளினன்காண் சாழலோ." *(திருவாசகம்)*

-"பண்புடனே
எற்குடியானங்கொண்டிருக்க மகிழ்ந்தளித்த
விற்குடியின் வீரட்டமேயவனே." *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. வீரட்டானேசுவரர் திருக்கோயில்
திருவிற்குடி - அஞ்சல் 610101
(வழி) கங்களாஞ்சேரி
நாகப்பட்டினம் வட்டம் - மாவட்டம்.

192/75. திருப்புகலூர்

193/76. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்



Koviloor Digital Library

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

நன்னிலம் - நாகப்பட்டினம் சாலையில் உள்ள தலம். சாலையோரத்தில் கோயில் வளைவு உள்ளது. அதனுள் சென்றால் கோயிலையடையலாம். கோயிலின் முன்னால் வேளாக்குறிச்சி ஆதீனம் உள்ளது. எதிரில் சிவாகம தேவார பாடசாலை உள்ளது.

இத்திருக்கோயில் வேளாக்குறிச்சி ஆதீனத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டது.

உயிர்கள் இறைவன் திருவடிகளைப் புகலாக அடைந்த ஊர். எனவே திருப்புகலூர் என்று பெயர் பெற்றிருக்கலாம் என்பர். இத்தலத்திற்குப் புன்னாகவனம், சரண்யபுரம், ரக்தாரண்யம் என்பன வேறு பெயர்கள். திருநாவுக்கரசு நாயனார் சித்திரைச் சதய நாளில் இறைவனடி சேர்ந்த பெருமையுடைய தலம். முருகநாயனார் அவதாரத் தலம். சுந்தரருக்கு இறைவன் செங்கற்களைப் பொன்னாக மாற்றித் தந்தருளிய தலம். அக்கினி, பாரத்வாஜர் முதலியோர் வழிபட்டது.

இத்தலத்திருந்த முருகநாயனார் திருமடத்தில் சம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலியோர் கூடியிருந்து மகிழ்ந்த செய்தி பெரிய புராணத்தில் வருகின்றது. இத்திருமடம் தற்போது ஆதீனமுள்ள இடமாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

இறைவன் - அக்னிபுரீஸ்வரர், சரண்யபுரீசுவரர், கோணப்பிரான்

இறைவி - சூளிகாம்பாள், கருந்தார்குழலி

தலமரம் - புன்னை

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்

மூவர் பாடல் பெற்ற தலம்.

சுற்றிலும் அகழியால் சூழப்பட்ட பெரிய கோயில். பாணாசூரன் தோண்டிய அகழியே நாற்புறமும் தீர்த்தமாக உள்ளது. கிழக்கு நோக்கிய ராஜகோபுரம். ஐந்து நிலைகளையுடையது. உள்கோபுரம் மூன்று நிலைகள். உள்ளே நுழைந்ததும் பிரதான விநாயகர். உள்ளே வலப்பால் அம்பாள் சந்நிதி - தெற்கு நோக்கி. வெளிப்பிராகாரத்தில் சிந்தாமணியீஸ்வரர், நர்த்தன விநாயகர், பாரத்வாசர் வழிபட்ட லிங்கம், அப்பர் ஐக்கிய சிற்பம் முதலிய சந்நிதிகள் உள. உள் பிரகாரத்தில் அக்கினி, அறுபத்துமூவர், பஞ்சலிங்கங்கள், அப்பர் சந்நிதி, வாதாபி விநாயகர், சுப்பிரமணியர், மகரிஷிகள் வழிபட்ட லிங்கங்கள், மகாலட்சுமி, சனீஸ்வரன், நளன், நவக்கிரகம், கலைமகள், அன்னபூரணி, காலசம்ஹாரர் முதலிய சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

(நளச்சக்ரவர்த்திக்கு இங்குச் சனியின் அனுக்கிரகம் கிடைத்து, திருநள்ளாற்றில் விடுதலையாயிற்று என்பர்.) தலமரம் புன்னை உள்ளது.

மூலவர் - வாணாசூரன் (பெயர்த்தெடுக்கமுயன்றதால்) கோணப் பிரான் என்னும் பெயருக்கேற்பச் சற்று வடக்காகச் சாய்ந்துள்ளது. குவளை சார்த்தப்பட்டுள்ளது. மூலவருக்குப்பக்கத்தில் சந்திரசேகரர் தனிச்சந்நிதி உள்ளது. இங்கு இவரே பிரதானமாவார். கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், நடராசர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, பிட்சாடனர் ஆலிங்கனகல்யாண சுந்தரர் முதலிய மூர்த்தங்கள் உள்ளன. நடராசசபை அழகாகவுள்ளது. உற்சவ மூர்த்தங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1) அக்கினி (2 முகம் 7 கரங்கள் 3 திருவடி 4 கொம்புகள் 7 ஜ்வாலைகளுடன் கூடிய உருவம்) 2) மூகாசூரசம்ஹார மூர்த்தி, 3) சோமாஸ் கந்தர் முதலியவை மிகச்சிறப்பானவை.

திருப்புகலூர்க் கோயிலுக்குள்ளேயே திருப்புகலூர் வர்த்த மானீச்சரம் உள்ளது. மூலவரைத் தரிசிக்கும்போது வலப்பால் உள்ளது, **வர்த்தமானீச்சரம்** ஆகும் - தனிக்கோயில். சந்நிதியுள் நுழைந்ததும் இடப்பால் முருகநாயனார் சந்நிதி. சம்பந்தர் பதிகக் கல்வெட்டுள்ளது. **வர்த்தமானலிங்கம்** அழகான மூர்த்தி. அம்பாள் **மனோன்மணி**சிறிய அழகான சந்நிதி. இத்திருக்கோயில் சம்பந்தர் பாடல் மட்டுமே பெற்றது. வைகாசி விசாகத்தில் பெருவிழா ஏகதினஉற்சவமாகியுள்ளது. அப்பர் சுவாமி விழா சித்திரைச் சதயத்தில் பத்து நாள்களுக்கு மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது.

இத்தலத்துக் கல்வெட்டு ஒன்று **திருநாவுக்கரசரை ''குளிச் செழுந்த நாயனார்''** என்றும்; முருகநாயனார் மடத்தை ''நம்பி நாயனார்திருமடம்'' என்றும்; திருநீலகண்டயாழ்ப்பாணரை'' யாழ்முரி நாயனார், தருமபுரத்து நாயனார்'' என்றும் குறிப்பது, உணர்ந்து இன்புறத்தக்க செய்தியாகும். பெரியகோயில் - நல்ல பராமரிப்பு.

'குறிகலந்த இசைபாடலினானசையா லிவ்வுல கெல்லாம்
நெறிகலந்ததொரு சீர்மையனா யெருதேறிப் பலிபேணி
முறிகலந்ததொரு தோலரை மேலுடையானிட மொய்ம்மலரின்
பொறி கலந்தபொழில் சூழ்ந்தயலே புயலாரும் புகலூரே''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

எண்ணுகேன் என்சொல்லி எண்ணி கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

(அப்பர்)

''தம்மையே புகழ்ந் திச்சைபேசினும் சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே''

(சுந்தரர்)

புகலூர் வர்த்தமானீச்சரம்

''ஈசன்ஏறமர்கடவுள் இன்னமுது எந்தை எம்பெருமான்
பூசுமாசில் வெண்ணீற்றர் பொலிவுடைப் பூம்புகலூரில்
மூசுவண்டறை கொன்றை முருகன்முப்போதுஞ் செய்முடிமேல்
வாசமாமல ருடையார் வர்த்த மானீச்சரத்தாரே.''

(சம்பந்தர்)

-சொற்கெசடிய
வன்புகலா நெஞ்சில் மருவுமொரு தகைமைத்
தென்புகலூர் வாழ்மகாதேவனே - இன்பமறை
அர்த்தமா நீக்கரிய ஆதாரமாநின்ற
வர்த்தமா நேச்சரத்து வாய்ந்தவனே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அக்கினிபுரீஸ்வரர் தேவஸ்தானம்
திருப்புகலூர் & அஞ்சல் - 609 704
(வழி) திருக்கண்ணபுரம் - S.O.
நாகப்பட்டினம் வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

194/77. இராமனதீச்சரம்

திருக்கண்ணபுரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருச்செங்காட்டங் குடியிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ளது.

நன்னிலம், திருப்புகலூர் முதலிய இடங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. மக்கள் வழக்கில் 'கண்ணபுரம்' என்றாயிற்று. இராமன் (இராவணனைக்கொன்ற கொலைப்பாவம், நீங்க) இறைவனை வழிபட்ட தலம் - இராமனது ஈச்சுரம்.

இராமர் வந்தபோது நந்தி தடுத்ததாகவும், அம்பாள் கருணை கொண்டு நந்தியைத் தடுத்து, காட்சி தந்ததாகவும் பின்பு இராமன் தீர்த்தத்தில் நீராடி வழிபட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதனால் இராம - நந்தீச்சரம் என்பது மருவி இராமனதீச்சரம் ஆயிற்று என்பர். இதற்குச்சான்றாக இத்தலத்துக்குரிய சோமாஸ்கந்த மூர்த்தத்தில் நந்திதேவர் (அம்பாள் கரத்தில்) உள்ளார். இப்போது இம்மூர்த்தம், பாதுகாப்பு கருதித் திருப்புகலூர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

இறைவன் - இராமனதீஸ்வரர்.
இறைவி - சூளிகாம்பாள், சரிவார்குழலி.
தலமரம் - சண்பகம் (தற்போது மகிழமரம்தான் உள்ளது.)
தீர்த்தம் - இராமதீர்த்தம் (கோயிலின் எதிரில் உள்ளது.)

சம்பந்தர் பாடியது.

கிழக்கு நோக்கிய திருக்கோயில். எதிரில் இராமதீர்த்தம் உள்ளது. கொடிமரமில்லை. வலப்பால் அம்பாள் சந்நிதியுள்ளது. நின்ற திருக்கோலம் - தெற்கு நோக்கியது. வெளிச்சுற்றில் நந்தவனம் உள்ளது. விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, காலபைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

மூலவர் - பெரிய திருவுருவம். உயரமான பெரிய சுற்றுடைய ஆவுடையாருடன்கூடிய உயர்ந்த பாணம். தீபாராதனையின்போது திருமேனியில் சோதியைக் காணலாம். கோஷ்டமூர்த்தங்களாக, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். எதிரில் சண்டேசுவரர் சந்நிதி. சுவாமி விமானம் வேசர அமைப்புடையது.

Koviloor Digital Library

மார்கழித் திருவாதிரை, சஷ்டி, தைப்பூசம் முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். இவ்வூரில் உள்ள அ/மி. சௌரிராசப்பெருமாள் கோயில் சிறப்பு வாய்ந்தது. இத்தலத்திற்குப் பக்கத்தில் திருமருகல், திருசெங்காட்டங்குடி, திருப்புகலூர் முதலிய திருமுறைத்தலங்கள் உள்ளன.

கல்வெட்டில் சுவாமியின் பெயர் 'இராமனதீச்சர முடையார்' என்று காணப்படுகின்றது. குலோத்துங்கன் இக்கோயிற்பூசைக்காகச் 'சிவபாதசேகரமங்கலம்' என்னும் பெயருடைய நிலப்பகுதியைத் தானமாக அளித்த செய்தி இக்கல்வெட்டால் தெரியவருகிறது.

"சரிகுழல் இலங்கிய தையல் காணும்
பெரியவன் காளிதன் பெரிய கூத்தை
அரியவனாட லோனங்கை யேந்தும்
எரியவனிராமன தீச்சரமே." *(சம்பந்தர்)*

-"மித்தையுற்ற
காமனதீசங்கெடவே கண்பார்த்தருள் செய்த
ராமனதீசம்பெறு நிராமயனே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. இராமனதீஸ்வரர் திருக்கோயில்
திருக்கண்ணபுரம் & அஞ்சல் - 609704
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

195/78 திருப்பயற்றூர்

திருப்பயத்தங்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் 'திருப்பயத்தங்குடி' என்றழைக்கின்றனர்.

திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை செல்லும் பேருந்துச்சாலையில் கங்களாஞ்சேரியை அடைந்து, அதையடுத்து வலப்பக்கமாகப் பிரிந்து செல்லும் நாகூர் சாலையில் சென்று, மேலப்பூதனூர் அடைந்து அங்கிருந்து பிரியும் திருமருகல் சாலையில் சென்றால் திருப்பயத்தங்குடியை அடையலாம். (இத்தலத்தையடுத்து செங்காட்டங்குடியும்

Koviloor Digital Library

அடுத்து திருமருகலும் உள்ளது.) ஊர் சாலையோரத்தில் உள்ளது, திருவிற்குடிக்கு இத்தலம் பக்கமே. பைரவ மகரிஷி வழிபட்ட தலம்.

சுங்கம் கொடுக்க அஞ்சிய வணிகன் ஒருவன், சுங்கமில்லாத பயறு மூட்டைகளாகத் தன் மிளகுப் பொதிகளை மாற்றித் தருமாறு வேண்ட, அவனுக்கு இறைவன் பயறு மூட்டைகளாக மாற்றித் தந்து அருளியதால் பயற்றுநாதர் என்று பெயர் பெற்றார் என்பது செவி வழிச் செய்தி.

இறைவன் - முக்தபுரீஸ்வரர், திருப்பயற்றுநாதர்

இறைவி - நேத்ராம்பிகை, காவியங்கண்ணி

தலமரம் - சிலந்தி மரம் (இம்மரத்தின் மலர் மஞ்சள் நிறத்தில் சிலந்திப் பூச்சி வடிவில் இருக்கும். சித்திரை வைகாசியில் பூக்கும் - மணமுண்டு. இலை, புன்னையிலைபோல இருக்கும். இம்மரம் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் உள்ளது.)

தீர்த்தம் - கருணா தீர்த்தம் (கோயில் முன்பு உள்ளது.)

இதனைப் பிரம தீர்த்தம் என்றும் கூறுவர்.

அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு வாயில் வழியே உட்சென்றால் நந்தி, பலிபீடம், தண்டபாணி சந்நிதி வடபால் தனியே உள்ளது. வாகன மண்டபமுளது. தலவிநாயகர் - சித்தி விநாயகர். மகாமண்டபத்தில் நடராசசபை. அடுத்து நால்வர், வீரமாகாளி, அகத்தியர், பிரதோஷநாயகர், சுப்பிரமணியர், விநாயகர், உற்சவத் திருமேனிகள் உள்ளன.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. இங்குள்ள பெரிய மண்டபத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி சிறப்பாகவுள்ளது. சுவாமி - மூலவர் - ஆவுடையார் நாற்கோண வடிவம். பழமையான திருமேனி.

இங்குள்ள கருணா தீர்த்தத்தில் மூழ்கி அம்பிகையை வழிபட்டால் கண்நோய் நீங்கும் என்றொரு செய்தி சாசனத்தின் மூலம் தெரிய வருகிறது. அம்பாள் வலக்கை அபயமும், இடக்கையில் ருத்ராக்ஷ மாலை, மற்றொரு வலக்கையில் தாமரை, இடக்கையைத் தொடையில் ஊன்றியவாறு, நான்கு கரங்களுடன் காட்சி தருகின்றாள்.

அம்பாளுக்கு ஆடி வெள்ளிக்கிழமைகளில் மிகவும் விசேஷமாக அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. கார்த்திகைச் சோம வாரங்கள் சுவாமிக்கு விசேஷம்.

Koviloor Digital Library

"தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணி யுள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற ஏழுலகு உடனுமாகி
எந்தை யெம்பிரானே என்றென்று உள்குவார் உள்ளத்தென்றும்
சிந்தையும் சிவமுமாவர் திருப்பயற் றூரனாரே."

(அப்பர்)

-"கோமுண்
மயற்றூர் பறிந்த மனத்துள் விளைந்த
பயற்றூர் திசை அம்பரனே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. முக்தபுரீஸ்வரர் திருக்கோயில்
திருப்பயத்தங்குடி & அஞ்சல்
(வழி) கங்களாஞ்சேரி S.O. - 609701.
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

196/79. திருச்செங்காட்டங்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருவாரூர் - திருமருகல் சாலையில், 'செங்காட்டங்குடி' என்று பெயர்ப் பலகை உள்ள இடத்தில் அது காட்டும் பாதையில் சென்று சந்தைப்பேட்டை வழியாக வந்து, திருமருகல் கால்நடை மருந்தகத்தைத் தாண்டி, பாதை வழியே 3 கி.மீ. சென்றால் தலத்தை அடையலாம்.

திருவாரூரிலிருந்தும் திருமருகலிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சிறுத் தொண்டர் நாயனார் அருள் பெற்ற தலம். கணபதி இறைவனை வழிபட்டதால் கணபதீச்சரம் என்று கோயிலுக்குப் பெயர். விநாயகர், கயமுகாசூரனைக் கொன்ற பழிதீர இங்கு இறைவனை வழிபட்டார். அசுரனைக் கொன்றபோது அவனுடைய உடற்குருதி படிந்து இப்பகுதி செங்காடாக ஆயினமையின் 'செங்காட்டங்குடி' என்று பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

பைரவ வேடத்தில் இறைவன் வந்து சிறுத்தொண்டரிடம் பிள்ளைக்கறியமுது கேட்டு அவருக்கும் அவர் மனைவி, மகன்,

Koviloor Digital Library

வேலைக்காரி ஆகியோருக்கும் அருள்புரிந்த தலம். பல்லவ மன்னனின் தளபதியாக 'வாதாபி' சென்று சாளுக்கியரோடு போர் செய்து வாகை சூடி வந்தபோது உடன் கொண்டுவந்த விநாயகரை இக்கோயிலில்தான்

Koviloor Digital Library

பிரதிஷ்டை செய்துள்ளார். (வாதாபிகணபதி) இக்கோயிலுக்கு மந்திர புரீசம், கணபதீச்சரம், சக்திபுரீசம், இந்திரபுரீசம், ஆத்திவனம், பாஸ்கர புரீசம் எனப் பல பெயர்களுண்டு.

இறைவன் - உத்தராபதீஸ்வரர், ஆத்திவனநாதர்,
மந்திரபுரீசுவரர், பிரமபுரீசுவரர், பாஸ்கரபுரீஸ்வரர்.

இறைவி - சூளிகாம்பாள் (குழலம்மை.)

தலமரம் - ஆத்தி.

தீர்த்தம் - தீர்த்தக்குளம் கோயிலுக்கு எதிரில் உள்ளது.

இத்தலத்தில் ஒன்பது தீர்த்தங்கள் உண்டென்று சொல்லப்படுகிறது. அவை - சத்திய தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம், இந்திரதீர்த்தம், யமதீர்த்தம், வருண தீர்த்தம், வாயு தீர்த்தம், சீராள தீர்த்தம் என்பன.

சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்ற தலம். ஊரின் நடுவில் கோயில் உள்ளது.

இராசகோபுரம் ஐந்து நிலைகளையுடையது - கிழக்கு நோக்கியது. கோயில் வாயிலில் உள்ள திருக்குளம் சத்திய தீர்த்தமாகும். குளக் கரையில் 'மங்களவிநாயகர்' எழுந்தருளியுள்ளார், ராசகோபுரத்தின் உட்பக்கம் ஆத்திமரம் உள்ளது. இறைவன் அமர்ந்திருக்க, சிறுத் தொண்டர் அவரை அமுதுசெய்ய அழைக்கும் சிற்பம் இங்குள்ளது. முன் மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி. நின்ற திருக்கோலம் - கவசமிட்ட கொடிமரம் தாண்டி, உட்பிராகாரத்தில் பிட்சாடனர் கல்லில் வடித்துள்ள கோலத்தையும், சந்தனநங்கை, சீராளதேவர், திருவெண் காட்டு நங்கை, சிறுத்தொண்டர் ஆகியோர் மூலத் திருமேனிகளையும், அறுபத்துமூவர் திருமேனிகளையும் தரிசிக்கலாம். தலமரம் 'ஆத்தி' உள்ளது. பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், சித்தி விநாயகர், நால்வர், சங்கபதுமநிதிகள் ஆகிய சந்நிதிகள் அடுத்து உள்ளன. வாதாபிகணபதி தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். சத்பாஷாட மகரிஷி, அவர் பூசித்த இலிங்கம், பிரமன் வழிபட்ட இலிங்கம் வள்ளிதெய்வயானை சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன.

இக்கோயிலில் உள்ள அஷ்டமூர்த்தி மண்டபம் கண்டு தொழத் தக்கது. துர்க்கை, வீரட்டலிங்கம், விஸ்வலிங்கம், புஜங்கலளிதர், கஜசம்ஹாரர், ஊர்த்துவதாண்டவர், காலசம்ஹாரர், கங்காளர், பிட்சாடனர், திரிபுராரி, பைரவர், விநாயகர் முதலிய மூலத் திருமேனிகள் மிக அருமையான வேலைப்பாடுடையவை - இம் மண்டபத்தில்

Koviloor Digital Library

உள்ளன. நடராச சபை உள்ளது. நவக்கிரகங்கள், பைரவர், ஸ்தம்ப முகூர்த்த விநாயகர், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

திண்டி, முண்டி எனும் துவாரபாலகர்களைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம் - கணபதீச்சரமுடையார். சுவாமி கருவறை அகழி அமைப்புடையது. உத்ராபதீஸ்வரர் உற்சவத் திருமேனி கொண் டுள்ளார். இவருக்கு நாடொறும் பச்சைக்கற்பூரமும் குங்குமப் பூவும் சார்த்தப்படுகிறது. பேழையில் மரகதலிங்கம் உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, அர்த்த நாரீஸ்வரர் (ரிஷபத்தின் மீது கை ஊன்றியநிலை). துர்க்கை சந்நிதிகள் உள்ளன. சண்டேசர் சந்நிதி எதிரிலுள்ளது.

கோயிலின் பின்புற வீதியில் இருக்கும் மடாலயத்தில்தான் சித்திரைப் பரணியில் உத்தராபதீஸ்வரர் அமுது செய்த ஐதீகவிழா நடைபெறுகிறது. இதன் வடபாலுள்ள சிறுத்தொண்டர் மாளிகை இன்று கோயிலாகவுள்ளது. இங்குச் சிறுத்தொண்டர் உத்ராபதீஸ்வரர் திருவெண்காட்டு நங்கை அன்னம் பரிமாறும் கோலத்தில் திரு வுருவங்கள் உள்ளன. நான்கு வீதிகளின் கோடியிலும் விநாயகர் ஆலயங்கள் உள்ளன. கோயிலின் கீழவீதியில் உள்ள விநாயகர் 'வேண்டும் விநாயகர்' என்றழைக்கப்படுகிறார். உற்சவகாலங்களில் வீதி உலாவரும் நாதர் உத்தராபதியாரே. (வடநாட்டுப்பைரவ கோலத்தில் வந்த பெருமான்)

உத்தராபதியார் திருமேனி உருவான விதம் பற்றிச் சொல்லப்படும் வரலாறு:-

ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ மன்னன், சிறுத் தொண்டருக்கு இறைவன் அருள் புரிந்த செய்தியைக் கேட்டு, இத் தலத்திற்கு வந்து, பல நாள்கள் தங்கி வழிபட்டு வந்தார். உத்தராபதி யாரின் தோற்றத்தைக் காண விரும்பினார். இறைவன், ''இத்திருக் கோயிலைத் திருப்பணி செய்து, உத்தராபதியார் திருவுருவம் அமைத்துச் சித்திரைத் திருவோணத்தில் குடமுழுக்கு செய்வாயாகில், யாம் சண்பகப்பூ மணம் வீசக் காட்சி தருவோம்'' என்றருளினார். ஐயடிகள் அவ்வாறே செயல்படலானார்.

கொல்லர்கள் உத்தராபதியார் உருவம் அமைக்கத் தொடங்கினர். பல இடர்ப்பாடுகள் - கும்பாபிஷேக நாள் நெருங்கியது. மன்னனோ விரைவில் முடிக்கக் கட்டளை யிட்டான். வடிவம் நன்கு அமைய வேண்டுமே என்ற கவலையுடன் உலைக்களத்தில் ஐம்பொன்னை உருக்கிக் கொண்டிருந்தனர்.

Koviloor Digital Library

இறைவன் சிவயோகியார் வடிவில் அங்கு வந்து நீர் கேட்டார். இருந்தவர்கள் ''உலைக்களத்தில் நீர் ஏது? காய்ச்சிய மழுதான் உள்ளது. வேண்டுமானால் ஊற்றுகிறோம்'' என்றனர்.

சிவயோகியார், ''நல்லது. அதையே ஊற்றுங்கள்'' என்றார். கொல்லர்கள் காய்ச்சிய மழுவை ஊற்ற, வாங்கியுண்ட சிவயோகியார் மறைந்தார் - உத்தராபதீஸ்வரர் உருவானார். செய்தியறிந்த மன்னன் வியந்து போற்றி, அத்திருவுருவை கோயிலில் எழுந்தருளுவித்து - கும்பாபிஷேகம் செய்வித்தான். ஐயடிகள் காடவர் கோனுக்கு இறைவன் சண்பகப்பூவின் மணம் வீச, காட்சி தந்தருளினார்.

(ஆதாரம் - கோயில் வரலாறு)

நாடொறு ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. இத்தலத்தில் சில மருந்துப் பொருள்களும் சேர்த்து செய்யப்படும் சீராளங்கறி எனும் பிரசாதம்- அமுது படையல் விழா நாளன்று மட்டுமே கிடைக்கும். மக்கட்பேறில்லாதவர்கள் உத்தராபதியாரை வழிபட்டு, இப்பிரசாதத்தை உண்டால் புத்திரப் பேறு அடையப் பெறுவர்.

கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் 1) செங்காடுடைய நாயனார் 2) கணபதீச்சரமுடைய மகாதேவர் 3) கணபதீஸ்வரமுடையார் எனவும்; தலத்தின் பெயர் ''கயா மாணிக்க வளநாட்டு மருகல் நாட்டு திருச்செங் காட்டங்குடி'' என்றும் குறிப்பிடப்படுகிறது.

இத்திருக்கோயில் வேளாக்குறிச்சி ஆதீனத்தின் கோயிலாகும். உத்தராபதியாருக்கு ஆனி உத்திரம், மார்கழித் திருவாதிரையில், பங்குனி பரணியில் அபிஷேகம் நடைபெறுகிறது. நடராசர், அபிஷேகங்கள், நவராத்திரி, கார்த்திகைச் சோமவாரங்கள், தீபம், மார்கழியில் பாவை விழா, சிவராத்திரி முதலிய விசேஷ வழிபாடுகளும் உற்சவங்களும் நடைபெறுகின்றன.

''பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந்த விர்த்தென்னைத் தவிரா நோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத் தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.''

(சம்பந்தர்)

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தேமன்னி
இருந்தமணி விளக்கதனை நின்றபூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்தோள்வீசி

Koviloor Digital Library

அருந்திறல்மா நடமாடும் அம்மான்தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்றாலின்கீழ்த்
திருந்துமறைப் பொருள் நால்வர்க்கருள் செய்தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

(அப்பர்)

-''இயற்றுஞ்சீர்
ஆச்சிரமேவுஞ் செங்காட்டங்குடியின் அங்கணப
தீச்சரம் வாழுஞ் சந்திரசேகரனே.'' *(அருட்பா)*

சூதாவி நீலநிகர் முலைவிழிவல் லபையணைந்து தொண்டர்செய்தி
ஓதாமுன் பொன்னிநதி கொணர்ந்துசிவன் பாதத்தை உன்னிச்செய்தி
தீதாவி செவிகவருந் தீங்குழலோன் விழியளித்துச் செல்வநல்கும்
வாதாவி மதக்களிற்றின் பதயுகத்தா மரையுளத்தில் வைத்து வாழ்வாம்.

சீர்தந்த நவப்பொருளா யெண்வடிவா யேழிசையாய்த் திகழாதாரஞ்
சார்தந்த வாறாக யைந்தெழுத்தாய் நான்மறையாய்ச் சாத்துகாதிப்
போர்தந்த முக்குணமா யிருசுடரா யொருமுதலாய்ப் பெருகா நின்ற
கார்தந்த ஆத்திவனக் கணபதீச் சரத்தானைக் கருத்துள் வைப்பாம்.

கங்காட்டுங் கர்ங்களத்துக் கறைகாட்டும் பிறைமவுலிக் கடவுள் மாலோ
டங்காட்டு நான்முகனை ஐங்கரனை அறுமுகனை அளித்தபேதை
சங்காட்டும் புனற்கரஞ்சேர்க் காவேரி வளங்காட்டுந் தமிழ்நன் னாட்டிற்
செங்காட்டங் குடிவாய்த்த திருக்குழலி உபயபதஞ் சென்னி சேர்ப்பாம்

பனியுண்ணா தகல்விசும்பிற் பரிதிதேர் தடுத்தமலை பதித்த கும்ப
முனியுண்ணா கடலினெழு விடந்தொடர முண்டகன்மால் முறையிட் டோட
நனியுண்ணா துயிரளித்து நரமதலைக் கறிவேட்டு நல்லோ ரின்றித்
தனியுண்ணா வைரவனார் சிலம்பார்க்க நடந்தமலர் சரணஞ் சார்வாம்.

கடிக்கமலஞ் சூழ்புவியில் மறையவராம்
வாதாவிக் கடிந்து மன்னாற்
படிக்கமல மறவடியார்க் கனம்படைத்தோர்
சீராளற் பயந்த நங்கை
பிடிக்கமலங் காதரிந்து சமைத்தகறி
வயிரவராம் பெருமாற்கீந்தே
அடிக்கமலங் குடிபெறுநற் பரஞ்சோதி
சிறுத்தொண்டர்க் கன்புசெய்வாம்

Koviloor Digital Library

மருங்காட்டு மறவாளர் விரும்பு முடற் சீராளன் மலர்க்காலாதி
ஒருங்காட்டுந் தலைக்கறிசெய் சந்தனத்தார் சரண மெலா வுலகுங் கூட்டி
நெருங்காட்டு திங்கள்விழா வொலிகூரு முகிலூரு நெடிய கன்னற்
கருங்காட்டுச் செங்காட்டு வெண்காட்டு நங்கைபதக் கமலஞ் சேர்வாம்

காரேழுந் தடுத்தசிறு கண்ணனெனக் காசினியோ ரேவரும் போற்றப்
பாரேழும் படைத்தளிக்கும் ஒருமுதற்குப் பசிதீர்க்கு மருந்தாய் நின்றே
நீரேழு கலங்கிடினு நிலையலையான் றுணியுமென நிகழ்த்துஞ் செல்வச்
சீராளப் பிள்ளையிரு சிறுசதங்கை பதமெமது சென்னி சேர்ப்பாம்.

(தலபுராணம்)

அஞ்சல் முகவரி:-

அ/மி. உத்தராபதீஸ்வரர் திருக்கோயில்
திருச்செங்காட்டங்குடி - திருக்கண்ணபுரம் அஞ்சல்
நாகப்பட்டினம் வட்டம் - மாவட்டம் 609 704

197/80. திருமருகல்

சோழநாட்டுத் (தென்கரை)த் தலம்.

திருவாரூர் - மயிலாடுதுறை சாலையில் உள்ள தலம். திருவாரூர் நன்னிலம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை முதலிய ஊர்களிலிருந்து இத்தலத்திற்குப் பேருந்துகள் உள்ளன.

'மருகல்' என்பது ஒருவகை வாழை. இது 'கல்வாழை' என்றும் சொல்லப்படுகிறது. இதைத் தலமரமாகக் கொண்டதாதலின் இத்தலம் 'திருமருகல்' என்று பெயர் பெற்றது.

கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோயில்களுள் (யானை யேறாப் பெருங்கோயில்களுள்) இதுவும் ஒன்று. பாம்பு கடித்து இறந்த செட்டி மகனை, ஞானசம்பந்தர் 'சடையாய் எனுமால்' பதிகம் பாடி எழுப்பியருளிய தலம். இவ்வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்தர் வரலாற்றில் சேக்கிழார் பெருமான் மிகச்சிறப்பாகப் பாடியுள்ளார். இவ்வரலாற்றுச் சிற்பம் கதையில் இராச கோபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

இறைவன் - மாணிக்கவண்ணார், ரத்னகிரீஸ்வரர்
இறைவி - வண்டுவார்குழலி, ஆமோதாளகநாயகி
தலமரம் - (மருகல் என்னும் ஒருவகை) வாழை
தீர்த்தம் - இலக்குமி தீர்த்தம் (அ) மாணிக்கதீர்த்தம்
(கோயிலுக்கு எதிரில் உள்ளது.)

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடியது.

இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் புதுப்பொலிவுடன் திகழ் கின்றது. எதிரில் திருக்குளம் நீராழி மண்டபத்துடன் உள்ளது. கரையில் முத்து விநாயகர் சந்நிதி.

வாயில் கடந்து உட்சென்றால் கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளன. இடப்பால் மேடையுடன் வன்னி மரம் உள்ளது. இம்மரத்தி னடியில்தான் ஞானசம்பந்தர், விஷந்தீர்த்து எழுப்பிய செட்டி மகனுக்கும், செட்டிப் பெண்ணுக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார் என்று சொல்லப்படுகிறது.

படிகளேறி முன் மண்டபத்தையடைந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. தலப்பதிகக் கல்வெட்டு இடப்பாலுள்ளது. சனி பகவான் சந்நிதி உள்ளது. மேலேறிச் சென்றால் நேரே சோமாஸ் கந்தர் சந்நிதி. பக்கத்தில் மாணிக்கவண்ணர் சந்நிதி உள்ளது. இருபுறமும் விநாயகரும், செட்டிப் பிள்ளையும், பெண்ணும் உள்ளனர்.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி - சுயம்பு மூர்த்தி எனப்படுகிறது. கிழக்கு நோக்கியது. எடுப்பான தோற்றம் - சதுர ஆவுடையார். 'மடையார் குவளை மலரும் மருகல் உடைய' பெருமானை மனமாரத் தொழுதுபாடி வணங்குகிறோம். உள்பிராகாரத்தில் அறுபத்துமூவர் மூலத்திருமேனிகள், பராசரலிங்கம் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய சந்நிதிகள் உள்ளன. தலமரம் - வாழை, வளர்கின்றது.

நடராச சபையின் வாயிலில் பதஞ்சலி, வியாக்ரபாதர் உருவங்கள் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. நவக்கிரக சந்நிதியும், பைரவர் சூரியன் திருவுருவங்களும், ஒரேபீடத்தில் அமைந்துள்ள செட்டி மகன், செட்டிப் பெண் மூலத்திருவுருவங்களும், பக்கத்தில் ஞானசம்பந்தர் மூலமேனியும் அடுத்தடுத்துள்ளன.

வெளிச்சுற்றில் சப்தமாதாக்கள், விநாயகர், சௌந்தரநாயகி, மருகலுடையார் சந்நிதிகள் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாகக் கணபதியும், தட்சிணாமூர்த்தியும், லிங்கோற்பவரும், பிரம்மாவும், துர்க்கையும் உள்ளனர். அம்பாள் சந்நிதியில் குசகேது மன்னன் வரலாறும், ஞானசம்பந்தர் விடந்தீர்த்த வரலாறும் வண்ணத்தில் எழுதப் பட்டுள்ளன. நாடொறும் ஐந்து கால பூசைகள். நடைபெறுகின்றன.

Koviloor Digital Library

சித்திரையில் பெருவிழா, இவ்விழாவில் ஆறாம் நாள் திருவிழா விடந்தீர்த்த ஐதீகமாகவும்; ஏழாம் நாள் விழா செட்டிமகன், செட்டிப் பெண் திருக்கல்யாணமாகவும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. அம்பாள் சந்நிதிக்கு எதிரில் உள்ள தெற்கு வீதியின் கோடியில் விடந் தீர்த்த விநாயகர் கோயில் உள்ளது. பக்கத்தில் உள்ள மடமே வணிகன், செட்டிப்பெண், படுத்துறங்கிய இடம். இங்கு விஷம் தீர்ந்ததால் இங்குள்ள பிள்ளையார் 'விடந்தீர்த்த பிள்ளையார்' என்ற பெயருடன் விளங்குகிறார். இதனால் இன்றும் அவ்வீதியில் பாம்பைக் காண்பது அரிது என்றும், பாம்பு கடிப்பது இல்லை, கடித்து இறப்பதும் இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

விடந்தீர்த்த விநாயகரின் இருபுறமும் உள்ள விநாயகர்கள், சீராளன் (சிறுத்தொண்டரின் மகனார்) வழிபட்டவை என்று சொல்லப் படுகிறது. முன்பு மடமாக இருந்த இடத்தில் தற்போது அலுவலகம் உள்ளது. இப்பகுதிதான் சீராளர் படித்த இடம் என்றும், இதன்பின் உள்ள குளம், சீராளன் குளம் என்றும் அழைக்கப்படுகிறது.

(இத்தல வரலாற்றில் வரும் 'வைப்பூர்' என்பது காவிரிப்பூம் பட்டினத்தையடுத்துள்ள ஊரேயாகும் என்பர்.) அருகாமையில் உள்ள தலம் திருச்செங்காட்டங்குடி.

> "சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
> விடையாய் எனுமால் வெருவா விழுமால்
> மடையார் குவளை மலரும் மருகல்
> உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே." *(சம்பந்தர்)*

> "பெருகலாந்தவம் பேதமை தீரலாம்
> திருகலாகிய சிந்தை திருத்தலாம்
> பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
> மருகலானடி வாழ்த்தி வணங்கவே." *(அப்பர்)*

> –"ஏச்சகல
> விண்மருவினோனை விடநீக்க நல்லருள்செய்
> வண்மருகன் மாணிக்க வண்ணனே."
>
> *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில்
திருமருகல் & அஞ்சல் - 609702
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

198/81. திருச்சாத்தமங்கை

(கோயில்) சீயாத்தமங்கை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் **கோயில் சீயாத்தமங்கை. சீயாத்தமங்கை.** செய்யாத்தமங்கை என்று பல பெயர்களில் வழங்கப் பெறுகின்றது. திருமருகலையடுத்த தலம்.

திருமருகலிலிருந்து நாகூர் செல்லும் சாலையில் 1 கி.மீ. சென்று, 'கோயில் சீயாத்தமங்கை' என்னும் வழிகாட்டிக் கல் உள்ள இடத்தில் பிரிந்து செல்லும் சாலையில், எதிர்ப்புறமாக 1 கி.மீ. செல்லவேண்டும். முதலில் வரும் ஊர்ப்பகுதி சீயாத்தமங்கையாகும். சற்று உள்ளே மேலும் சென்றால் கோயில் உள்ள பகுதியை அடையலாம். இப்பகுதி 'கோயில் சீயாத்தமங்கை' எனப்படுகிறது. இடையில் முடிகொண்டான் ஆறு பாய்கிறது.

ஊர்க்குச் 'சாத்தமங்கை' என்றும், கோயிலுக்கு 'அயவந்தீசம்' என்றும் பெயர். பிரமன் பூசித்த தலம். திருநீலநக்க நாயனாரின் அவதாரப்பதி. நகரத்தார் திருப்பணிபெற்றது.

இறைவன் - அயவந்தீஸ்வரர், பிரமபுரீஸ்வரர்.

இறைவி - உபய புஷ்ப விலோசனி, இருமலர்க்கண்ணம்மை.

தலமரம் - கொன்றை

தீர்த்தம் - கோயிலின் முன் உள்ள தீர்த்தக்குளம். இக்குளத்தில் மேற்பாதி சந்திர தீர்த்தம் என்றும் கீழ்ப்பாதி சூரிய தீர்த்தம் என்று சொல்லப்படுகிறது.

சம்பந்தர் பாடிய தலம்.

மேற்கு நோக்கிய திருக்கோயில். சுவாமி அம்பாள் சந்நிதிகள் தனித்தனி வாயில்களுடனும், கோபுரங்களுடனும் மேற்கு நோக்கியே உள்ளன. உயர்ந்த சுற்றுமதிலையுடைய பெரிய கோயில். ஆலயத்தின் பக்கத்தில் நகரத்தார் சத்திரம் உள்ளது. சுவாமி ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. விசாலமான உள் இடம். வெளிச்சுற்றில் வலம் வரும்போது சந்திரன், சனிபகவான் (காகத்தின் மீது ஒரு காலூன்றிய அமைப்பில்), சப்தமாதர்கள், பைரவர், நவக்கிரகங்கள், மகாலிங்கம், விசுவநாதர் விசாலாட்சி, விநாயகர் முதலிய சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

உள்வாயிலைக் கடந்து முன்மண்டபம் அடைந்து, வலம் வரும் போது, வள்ளிதெய்வயானை சுப்பிரமணியர், மகாலட்சுமி, நால்வர் சந்நிதிகள் உள, அடுத்து திரு நீலநக்க நாயனார், அவருடைய மனைவி ஆகியோரின் உருவங்கள் உள்ளன. நாயனாரின் மனைவியின் பெயர் **மங்கையர்க்கரசி** என்று இங்கு வழக்கில் சொல்லப்படுகிறது. சோமஸ் கந்தர், மகாகணபதி சந்நிதிகளைத் தரிசித்துப் படிகளேறி உட்சென்றால் வலப்பால் உள்ள நீலநக்கர், அவருடைய மனைவி, நடன சுந்தரர் முதலிய உற்சவத் திருமேனிகளைத் தரிசிக்கலாம். நடராச சபை உள்ளது. அம்பலக்கூத்தர், அம்மை சிவகாமி மணிவாசகருடன் காட்சி தருகின்றார்.

நேரே மூலவர் தரிசனம் - தெய்வீகப்பொலிவு கோஷ்ட மூர்த்தங்க ளாகத் தட்சிணாமூர்த்தி, நர்த்தனகணபதி, இலிங்கோற்பவர். பிரம்மா, பிட்சாடனர், துர்க்கை, அர்த்தநாரீஸ்வரர் முதலிய மூர்த்திகள் உள்ளனர். இவற்றுள் அர்த்தநாரீஸ்வரத் திருமேனி ரிஷபத்தின் தலைமீது ஒரு கை வைத்திருக்கும் அமைப்பில் இருப்பது தரிசிக்கத்தக்கது. இம்மூர்த்தங் களுடன் அகத்தியரும் உள்ளார்.

அம்பாள் சந்நிதி பக்கத்தில் தனிக்கோயிலாகவுள்ளது. சூரியன் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. கொன்றை (தலமரம்) உள்ளது. நந்தி சற்று உயரத்தில் உள்ளது படிகளேறிச் சென்றால் மூஞ்சூறு வாகனத்தின் மீது அமர்ந்துள்ள விநாயகரையும், தண்டபாணியையும் துவாரமூர்த்திகளாகத் தரிசிக்கலாம். நேரே அம்பாள் தரிசனம் - நான்கு திருக்கரங்களுடன்கூடிய நின்ற திருக்கோலம், பள்ளியறை உள்ளது.

'ருத்ர வியாமள தந்திர' ஆகம முறைப்படி நாடொறும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. ஆவணிமூலவிழா சிறப்பாக நடைபெறு கிறது. இக்கோயிலுக்குப் பக்கத்தில் திருமருகல், திருநள்ளாறு முதலிய திருமுறைத் தலங்கள் உள்ளன.`

(சோழர்காலக்) கல்வெட்டில் இத்தலத்து இறைவன் 'அயவந்தி உடையார்' என்று குறிக்கப்பட்டுள்ளார்.

''வேதமாய் வேள்வியாகி விளங்கும் பொருள் வீடதாகிச்
சோதியாய் மங்கை பாகன் நிலைதான் சொல்லலாவதொன்றே
சாதியான் மிக்க சீரார் தகுவார் தொழும் சாத்தமங்கை
ஆதியாய் நின்ற பெம்மான் அயவந்தி அமர்ந்தவனே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-"திண்மைகொண்ட
மாத்தமங்கையுள்ள மருவிப்பிரியாத
சாத்தமங்கை கங்கைச் சடாமுடியோய்."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அயவந்தீஸ்வரர் திருக்கோயில்
சீயாத்தமங்கை & அஞ்சல் - 609702
நன்னிலம் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

199/82. நாகைக்காரோணம்

நாகப்பட்டினம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

சென்னை, கும்பகோணம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை முதலிய பல ஊர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. தஞ்சை - நாகூர் இருப்புப் பாதையில் உள்ள இருப்புப்பாதை நிலையம். சோழ மன்னர் களின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கிய நகரம். நாகப்பட்டினம் நாகூர் இரண்டும் ஒன்றையொன்று அடுத்து உள்ளன. நாகர்கள் என்ற வகுப்பினர்கள் குடியேறி வாழ்ந்ததால் இப்பகுதி நாகப்பட்டினம் என்று பெயர் பெற்றது. (கடற்கரையை அடுத்துள்ள ஊர்-பட்டினம்) துறைமுகப்பட்டினம். உரோமானிய, சீனவாணிகம் பண்டைநாளில் இத்துறைமுகம் வாயிலாக நடந்து வந்தது. பிறநாட்டு வணிகர்கள் இத்தலத்தில் வந்து நிறைந்திருந்தனர் என்று தெரிகின்றது. நாகப் பட்டினம் என்பது மருவி 'நாகை' என்று வழங்கலாயிற்று. புண்டரீக முனிவரை இறைவன் தன் மேனியில் ஆரோகணம் செய்து கொண்ட பெருமை பெற்ற பதி.

சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. அகத்தியருக்குத் திருமணக் காட்சியருளியதும், அதிபத்தநாயனார் அவதரித்ததுமாகிய சிறப்பு கொண்ட தலம். ஆதிபுராணம், சிவராசதானி, பார்ப்பதீச்சரம், அரவநகரம் என்பன இதற்குரிய வேறு பெயர்கள். ஆதிசேஷன் பூசித்ததாக வரலாறு. ஊர் - நாகப்பட்டினம். கோயில் - காரோணம்.

Koviloor Digital Library

இறைவன் - காயாரோகணேஸ்வரர், ஆதிபுராணர்
இறைவி - நீலாயதாக்ஷி
தலமரம் - மா
தீர்த்தம் - 1) புண்டரீக தீர்த்தம் (கோயிலின் மேற்கில் உள்ளது.)
2) தேவ தீர்த்தம் (முத்தி மண்டபம் அருகில் உள்ளது.)
தியாகராஜா - சுந்தரவிடங்கர்
நடனம் - தரங்கநடனம்
மூவர் பாடல் பெற்றது.

ஊர் நடுவே கோயில் கிழக்குநோக்கி உள்ளது. வாயில் நுழைந்ததும் சிறப்பு மூர்த்தியாகிய நாகாபரணப் பிள்ளையாரைத் தரிசிக்கலாம். பலிபீடம் நந்தி உள்ளன. சுதையாலான பெரிய நந்தி. ஐந்துநிலை கோபுரத்தைக் கடந்தால் ராசதானி மண்டபம் - கவசமிட்ட கொடிமரம் பலிபீடம் நந்தி உள்ளன.

பிராகாரத்தில் அதிபத்த நாயனார், வல்லபகணபதி, அகோர வீரபத்திரர், ஆத்மலிங்கம், பிள்ளையார், பழனியாண்டவர், இடும்பன் சந்நிதிகள் உள்ளன. வலம்முடித்து ராஜதானி மண்டபம் சென்றால் விநாயகர், ஆறுமுகர் (வள்ளி தெய்வயானையுடன் மயில்மீதமர்ந்துள்ள பெரியமூர்த்தி), காசிவிசுவநாதர், பைரவர் சந்நிதிகளைத் தரிசிக்கலாம். இம்மண்டபத்தில் வலப்பால் நீலாயதாக்ஷி (கருந்தடங்கண்ணி) சந்நிதி உள்ளது - நின்ற திருக்கோலம்.

துவாரபாலகரைக் கடந்து ஒருபுறம் உள்ள விநாயகரையும் மறுபுறம் உள்ள அதிகார நந்தியையும் தொழுது உட்சென்றால்; சூரியன், அறுபத்துமூவர், மாவடிப்பிள்ளையார், வெண்ணெய்ப் பிரான், அருணாசலேஸ்வரர், பைரவர், கஜலட்சுமி ஆகியோரைத் தொழலாம். நவக்கிரகங்களுள் சனீஸ்வரர் தனியே உள்ளார். நவக்கிரகங்கள் வரிசைக்கு மூன்றாக மூன்று வரிசைகளில் ஒரே திசையை நோக்கி - சுவாமியை நோக்கியவாறு உள்ளன.

நடராசசபையைத் தொழுது உள்வலமுடித்துப் படிகளேறிச் சென்றால் மண்டபத்தில் வலப்பால் உற்சவமூர்த்தங்கள் 1) பிட்சாடனர் 2) நடராசர் 3) சிவகாமி 4) காட்சிநாயகர் ஆகியவை வரிசையாக உள்ளன.

துவாரபாலகரைத் தொழுது வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம் - நெற்றிப்பட்டத்துடன் அழகாகக் காட்சி தருகின்றார்-பெரிய பாணம் - காயாரோகணர். பின்னால் தனிமாடத்தில் இறைவன் இறைவி

Koviloor Digital Library

திருக்கோலமுள்ளது. மூலவருக்குப் பக்கத்தில் தியாகராஜா சந்நிதி. சுந்தரவிடங்கர் - பாராவாரதரங்க நடனம். கோஷ்டத்தில் தட்சிணா மூர்த்தி, லிங்கோற்பவர், பிரமன், துர்க்கை, அர்த்தநாரீசுவர், பிட்சாடனர் மூர்த்தங்கள் உள்ளன.

நாடொறும் ஆறுகால பூஜைகள் காமிக ஆகமப்படி நடைபெறு கின்றன. வைகாசி விசாகத்தில் விழா. நாகைக்காரோணத் தலபுராணம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பாடியுள்ளார்கள். அதிபத்த நாயனாருக்கு இறைவன் அருள்செய்த விழா ஆவணியில் நடக்கிறது, அந்நாயனார் வாழ்ந்த இடம் - செம்படவர்சேரி - தற்போது நம்பியாங்குப்பம் என்று வழங்குகிறது.

இத்தலத்தில் உள்ள சௌந்தரராசப் பெருமாள் கோயில் திரு மங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டதாகும். முதலாம் இராசராசன் காலத்திய கல்வெட்டொன்று இக்கோயிலுக்கு உள்ளது. டச்சு கவர்னர் ஒருவர் இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்த செய்தியைச் சாசனம் ஒன்றின் மூலம் அறிகின்றோம்.

''ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள்நல்கிச்
சேணின்றவர்க் கின்னஞ் சிந்தை செய வல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந் தொண்டர்
காணுங்கடல் நாகைக் காரோணத்தானே.''

(சம்பந்தர்)

''நிறைபுனல் அணிந்த சென்னி நீள்நிலா அரவஞ்சூடி
மறையொலிபாடி ஆடல் மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைமலி கடல்சூழ் நாகைக் காரோணங் கோயில் கொண்ட
இறைவனை நாளும் ஏத்த இடும்பை போய் இன்பமாமே.''

(அப்பர்)

''பத்தூர் புக்கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறி பேசிப் படிறாடித்திரிவீர்
செத்தார்தம் எலும்பு அணிந்து சேஏறித்திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு நாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கி மிளிர் மணி வயிரக்கோவை
அவை பூணத் தந்தருளி மெய்க்கினிதா நாளும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.''

(சுந்தரர்)

Koviloor Digital Library

'தடிகடற் புகுதல் போலச் சைவமாம் கடலிற் புக்கு
முடிவலை வீசல் போல முதிர்பத்தி வலையை வீசி
நெடியமீன் கவர்தல் போல நிராமய உமையோர் பாகத்(து)
அடிகளாம் மீன்க வர்ந்த அதிபத்தர்க் கன்பு செய்வாம்'

(தலபுராணம்)

திருப்புகழ்

ஓலமிட்டு ரைத்தெழுந்த வேலைவட்ட மிட்டவிந்த
ஊர்முகிற்ற ருக்களொன்றும் அவராரென்
றூமரைப்ர சித்தரென்றும் மூடரைச்ச மர்த்தரென்றும்
ஊனரைப்ர புக்களென்றும் அறியாமல்
கோலமுத்த மிழ்ப்ரபந்த மாலருக்கு ரைத்தனந்த
கோடியிச்சை செப்பிவம்பில் உழல்நாயேன்
கோபமற்று மத்துழன்ற மோகமற்று னைப்பணிந்து
கூடுதற்கு முத்தியென்று தருவாயே
வாலைதுர்க்கை சத்தியம்பி லோககத்தர் பித்தர்பங்கில்
மாதுபெற்றெ டுத்துகந்த சிறியோனே
வாரிபொட்டெ ழக்ரவுஞ்சம் வீழநெட்ட யிற்றுரந்த
வாகை பொற்பு யப்ரசண்ட மயில்வீரா
ஞாலவட்ட முற்றவுண்டு நாகமெத்தை யிற்றுயின்ற
நாரணற்க ருட்சுரந்த மருகோனே
நாலுதிக்கும் வெற்றிகொண்ட சூரபத்ம னைக்களைந்த
நாகபட்டி னத்தமர்ந்த பெருமாளே.

க்ஷேத்திரக்கோவை பிள்ளைத் தமிழ்

தாணுமா லயனுடன் மயேசுரர் சதாசிவர்
சச்சிதா னந்தசாந்தர்
தந்தநவ சத்தியருள் போகாங்க மூர்த்திகள்
தருமட்ட வித்தியேசுரர்
பேணுமெழு கோடிமா மந்திரே சுரரைந்தும்
பேதமா மாகேசுரர்
பேதமொன் றில்லாத நந்திமா காளர்சொல்
பிருங்கியுட னைங்கரத்தோன்

Koviloor Digital Library

பூணிடபர் நீள்கௌரி தண்டியெண் திசைநாதர்
　　போற்றுந்த சாயுதங்கள்
பூமண்ட லத்திலுள தெய்வங்கள் வேதங்கள்
　　புகழ்கொண்ட தேவர்முனிவர்
காணவரு சிவராச தானியெனும் நாகைவரு
　　கந்தசுவா மிவருகவே
கைகண்ட அடியார்பணி மெய்கண்ட வேலவன்
　　கருணையங் கடல்வருகவே. - *ஸ்ரீ சிதம்பரமுனிவர்*

-"தூத்தகைய
பாகைக்காரென்னும் பணிமொழியார் வாழ்த்தோவா
நாகைக் காரோண நயந்தோனே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. காயாரோகணேஸ்வரர் திருக்கோயில்
நாகப்பட்டினம் & அஞ்சல்
நாகப்பட்டினம் வட்டம் - மாவட்டம். 611 001

200/83. சிக்கல்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருவாரூர் - நாகப்பட்டினம் பேருந்துச்சாலையில் உள்ள தலம். சிக்கல் ஊரையடைந்து வலப்புறமாகத் திரும்பினால் கோயிலையடையலாம். கோயில்வரை வாகனங்கள் செல்லும். இத்தலத்தையடுத்து இதே சாலையில் நாகப்பட்டினம் உள்ளது.

வசிட்டர், காமதேனுவின் வெண்ணெய்யினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு, பூசைமுடிவில் அதையெடுக்க முயன்றபோது முடியாமற் சிக்கிக் கொண்டமையின் '**சிக்கல்**' என்று பெயர் பெற்றது. மல்லிகைவனம் என்பது இதன்வேறு பெயர்.

இறைவன் - நவநீதேஸ்வரர், வெண்ணெய்நாதர், வெண்ணெய்ப்பிரான்

இறைவி - சத்தியதாட்சி, வேல்நெடுங்கண்ணி.

Koviloor Digital Library

தலமரம் - குடமல்லிகை

தீர்த்தம் - க்ஷீரபுஷ்கரணி, கயாதீர்த்தம், லட்சுமி தீர்த்தம் என்பன.

சம்பந்தர் பாடல் பெற்றது.

மாடக்கோயில். சுவாமி சந்நிதி கட்டுமலைமேல் உள்ளது. மிகப் பெரியகோயில். இங்குள்ள சிங்காரவேலர் சந்நிதி மிகவும் புகழ் பெற்றது. க்ஷீரபுஷ்கரணி (பாற்குளம்) கோயிலின் மேற்கில் உள்ளது. இதற்கு அமிர்ததடாகம் என்றும் பெயர். கோலவாமனப் பெருமாள் நீராடி இறைவனை வழிபட்டதீர்த்தம் கயாதீர்த்தம் - மேற்கே உள்ளது.

இப்பெருமாளுக்கு ''கயாமாதவன்'' என்றும் பெயர். இலக்குமி தீர்த்தம் கிழக்கில் உள்ளது.

இக்கோயிலருகில் விருத்தகாவேரி எனப்படும் ஓடம்போக்கியாறு ஓடுகிறது. நகரத்தார் திருப்பணி பெற்ற கோயில். கோயிலின் முன்னால் பெரிய கல்யாண மண்டபம் உள்ளது. ஏழுநிலை ராஜகோபுரம் கடந்து உள்ளே சென்றால் பிராகாரம் நந்தவனப்பகுதியாக உள்ளது. பக்கத்தில் கோலவாமனப் பெருமாள் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது. (தாயார் கோமளவல்லி). உள்வாயிலைத் தாண்டிச் சென்றால் பிராகாரத்தில் விநாயகர், அறுபத்துமூவர், சனீஸ்வரன், (கருவறைச்சுவரில் வசிட் டரும் அவருடைய சீடர்களும் காமதேனுவும் வழிபடுவது போன்ற சிற்பம் உள்ளது). தலமரம் மல்லிகை, விசுவநாதர், கார்த்திகைவிநாயகர், கஜலட்சுமி, ஆறுமுகர், பைரவர், நவக்கிரகம், சூரியன் சந்திரன் முதலிய சந்நிதிகள் உள்ளன.

வலமுடித்து முன்மண்டபம் அடைந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதியுள்ளது - நின்ற திருக்கோலம். சுந்தரகணபதியைத் தொழுது படிகளேறிக் கட்டுமலைமீது சென்றால் நேரே தியாகராஜ சந்நிதி உள்ளது. இது சப்தவிடங்கத்தலங்களுள் அடங்காது. இங்கு மரகத லிங்கம் உள்ளது. (மரகதவிடங்கர்) வலப்பால் சிங்காரவேலர் - மிகவும் பிரசித்தி பெற்றது. இத்தலம் இப்பெருமான் பெயராலேயே (சிக்கல் சிங்காரவேலர்) புகழ்பெற்று விளங்குகிறது. இம்முருகப் பெருமானுக்கு எல்லாவிதமான ஆபரணங்களும் தங்கத்தால் செய்யப்பட்டுள்ளன. நேரே மூலவர் தரிசனம் - சிவலிங்கத்திருமேனி. சதுர பீடம் - குழைவான குட்டையான பாணம். சோமாஸ்கந்தர் சந்நிதி சிறப்பானது. நடராசசபை உள்ளது. உற்சவத்திருமேனிகள் வரிசையாக வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

சித்திரையில் சுவாமிக்கு விழா நடைபெறுகிறது. ஐப்பசியில் சிங்காரவேலருக்குப் பத்துநாள்களுக்குப் பெருவிழா. இதில் ஐந்தாம் நாள் தேர்விழா முடிந்து வேலவர் அம்மையிடம் சூரனை சம்ஹாரம் செய்ய வேல் வாங்கி மலைக்குச் சென்றபின், வேலவர் திருமேனியில் சில மணிநேரம் வியர்வைத் துளிகள் காணப்படும். இஃது ஓர் அற்புதமான காட்சி. ''சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்ஹாரம்'' என்பது இப்பகுதியில் வழங்கும் பழமொழி. வசதியும் நல்ல பராமரிப்பும் உடைய கோயில், ஆலயச்சார்பில் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

நாடொறும் ஆறுகால வழிபாடுகள். கல்வெட்டு இத்தலத்து இறைவனை ''பால் வெண்ணெய் நாயனார்'' என்று குறிப்பிடுகிறது. விழாக்கள் நடத்தவும் விளக்கெரிக்கவும் நிலங்களை நிவந்தமாக அளித்த செய்திகள் கல்வெட்டால் தெரியவருகின்றன. 'சிக்கல் மகாத்மியம்'- தலபுராணமுள்ளது.

''வானுலாவு மதி வந்துல வும்மதின் மாளிகை
தேனுலாவு மலர்ச் சோலை மல்குந்திகழ் சிக்கலுள்
வேனல்வேளை விழித்திட்ட வெண்ணெய்ப் பெருமானடி
ஞானமாக நினைவார் வினையாயின நையுமே.''

(சம்பந்தர்)

க்ஷேத்திரக்கோவை பிள்ளைத் தமிழ்

முக்கட்பு ராரியொடு சக்கரா யுதக்கடவுள்
முண்டகத் தவிசிருந்தோன்
மூவரும் சிரகர கம்பிதஞ் செய்துநம்
முருகன்பர ராக்கிரமனெனச்
சக்ரவா ளத்துடன் மிக்கநவ கண்டமும்
தருமட்ட குலகிரிகளும்
சத்தசா கரமும் கணத்தினிற் சுற்றிவரு
தாருகன் வாயினுதிரம்
கக்கிப் பதைத்துக் கிடந்தே யிருக்கக்
கடைக்கண் சிவந்தவேலன்
கற்பகா டவிதடவு மண்டபம் கோபுரம்
கனகமதில் நின்றிலங்கும்
சிக்கலம் பதிமேவு சிங்கார வேலனாம்
தேவர்நாய கன்வருகவே
திகமும்வெண் ணெய்ப்பிரா னொருபா லுறைந்தமெய்ச்
செல்விபா லகன்வருகவே.

Koviloor Digital Library

-"ஓகையற
விக்கல் வருங்கால் விடாய் தீர்த்துல கிடைநீ
சிக்க லெனுஞ்சிக் கற்றிறலோனே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நவநீதேஸ்வரர் திருக்கோயில்
சிக்கல் & அஞ்சல்
(வழி) நாகப்பட்டினம்.
நாகப்பட்டினம் வட்டம் - மாவட்டம். 611108

201/84. கீழ்வேளூர்

கீவளூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் கீவளூர் என்று வழங்குகின்றனர். திருவாரூர் - நாகப்பட்டினம் பேருந்துச் சாலையில் உள்ள தலம். சாலையோரத்திலேயே கோயில் உள்ளது. (இவ்வூரையடுத்து இதே சாலையில் 'சிக்கல்' தலமுள்ளது). அகத்தியருக்கு வலதுபாத தரிசனம் தந்த தலம். ஆதிசேஷன், வசிட்டர், மார்க்கண்டேயர் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது. பதரிகாரண்யம் (இலந்தைமரக்காடு) என்னும் பெயருண்டு. முருகப்பெருமான் வழிபட்ட பதி. அவர் வழிபட்டபோது அதற்கு இடையூறு நேராதவாறு ஐந்து திக்குகளிலும் காவல்புரிந்த "அஞ்சுவட்டத்தம்மன் காளி கோயில்" இங்குச் சிறப்புடையதாக வழிபடப் படுகின்றது. அகத்தியருக்குக் காட்சிதந்த நடராசர் அழகானமூர்த்தம் - தாண்டவபேதம் தரிசிக்கத்தக்கது.

இறைவன் - கேடிலியப்பர், அக்ஷயலிங்கேஸ்வரர்
இறைவி - சுந்தரகுஜாம்பாள், வனமுலைநாயகி
தலமரம் - இலந்தை
தீர்த்தம் - சரவணதீர்த்தம்
தலவிநாயகர் - பதரிவிநாயகர்
சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

மாடக்கோயில். பெரியகோயில். ஊர் நடுவில் கிழக்கு நோக்கியுள்ளது. எதிரில் சரவணப் பொய்கை. ராஜகோபுரம் ஏழுநிலைகளையுடையது. வசந்தமண்டபமுள்ளது. விமானத்தில் தென்புறம் இருப்பது சோமாஸ்கந்த விமானம், வடபுறமிருப்பது கேடிலியப்பர் விமானம். தலவிநாயகர் பதரிவிநாயகர். அத்துடன் சுந்தர விநாயகரும் உள்ளார். தட்சிணாமூர்த்தி பழைமையானது. இத்தலத்திலுள்ள ஏகபாதமூர்த்தி தனிச்சிறப்புடையது. மூலவர் - சுயம்புத்திருமேனி. பெரிய ஆவுடையார். மெல்லியபாணம். காளிஉருவம் சுதையாலானது. எதிரில் பலிபீடமுள்ளது. இத்திருமேனிக்குப் புனுகுசட்டம், சாம்பிராணித் தைலம் சார்த்தப்படுகிறது. சோழர்காலக் கல்வெட்டு இரண்டும் மராட்டியர் காலக் கல்வெட்டு ஒன்றும் இத்தலத்திற்குள்ளன. அவை ஆலய வழிபாட்டிற்கு மன்னர்கள் நிபந்தமாக நிலங்களை அளித்த செய்கைகளைக் குறிக்கின்றன.

''கொத்துலாவியகுழல் திகழ் சடையனைக் கூத்தனைமகிழ்ந்து உள்கித்
தொத்துலாவிய நூலணி மார்பினர் தொழுது எழு கீழ் வேளூர்ப்
பித்துலாவிய பக்தர்கள் பேணிய பெருந் திருக்கோயில் மன்னு
முத்துலாவிய வித்தினை ஏத்துமின் முடுகிய இடர்போமே.''

(சம்பந்தர்)

''ஆளான அடியவர்கட்கு அன்பன் தன்னை
ஆன் அஞ்சும்ஆடியை நானபயம் புக்க
தாளானைத் தன்ஒப்பார் இல்லாதானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்துஒப்பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையிலார்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளுங்கோவைக்
கேடிலியை நாடும் அவர்கேடு இலாரே.'' *(அப்பர்)*

-''மிக்கமினார்
வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரிற் செங்கண் விடையோனே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கேடிலியப்பர் திருக்கோயில்
கீவளூர் & அஞ்சல் - 611 104
நாகப்பட்டினம் வட்டம் - மாவட்டம்.

Koviloor Digital Library

202/85. தேவூர்



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1) கீவளூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் உள்ளது. சாலையோர ஊர், கோயிலும் அருகில் உள்ளது.

2) திருவாரூர் - வலிவலம் நகரப்பேருந்து தேவூர் வழியாகச் செல்கிறது. தேவூரில் அக்ரஹார Stopping என்று கேட்டு இறங்கினால் கோயிலுக்கு எதிரிலேயே இறங்கலாம்.

3) திருவாரூர் - நாகப்பட்டினம் சாலையில் கீவளூர் வந்து அங்கிருந்து திருத்துறைப்பூண்டி சாலையில் சென்றால் தேவூரை யடையலாம்.

தேவர்கள் வழிபட்டதால் தேவூர் என்று பெயர் பெற்றது. மாடக்கோயில், கௌதமர், வியாழபகவான், இந்திரன், குபேரன், சூரியன் ஆகியோர் வழிபட்டது. கதலிவனம், விராடபுரம், அரசங்காடு, தேவனூர் என்பன தலத்தின் வேறு பெயர்கள் விருத்திரனைக் கொன்ற பழிநீங்க இந்திரன் வழிபட்ட தலம். குபேரன் வழிபட்டு சங்க, பதுமநிதிகளைப் பெற்றான். விராடன் தன் மகள் உத்தரையுடன் இங்கு வந்து இறைவனை வழிபட்டான். கோயில் ஊர் நடுவே உள்ளது.

Koviloor Digital Library

இறைவன் - தேவபுரீஸ்வரர், கதலிவனேஸ்வரர், தேவகுருநாதர்.

இறைவி - மதுரபாஷிணி, தேன்மொழியம்மை.

தலமரம் - வெள்வாழை (வாழையில் ஒரு வகை)

தீர்த்தம் - தேவதீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய மூன்று நிலைகளையுடைய ராஜகோபுரம். உட்புறத்தில் இடப்பால் அதிகார நந்தி தரிசனம். கவசமிட்ட கொடி மரமும் நந்தி, பலிபீடம் காட்சி. கீழே உள்சுற்றில் அறுபத்துமூவர், வலம்புரி விநாயகர், சுப்பிரமணியர். அகல்யை வழிபட்டலிங்கம், மகாலட்சுமி, எதிரில் கட்டுமலை மேல் கௌதமர் வழிபட்டலிங்கம், நவக்கிரகம் முதலிய சந்நிதிகள் உள்ளன. நடராசசபை தனியே அழகாக உள்ளது. கட்டுமலையின் அடிவாரத்தில் இந்திரன், முருகன் விநாயகர் சந்நிதிகள் பக்கத்துப் பக்கத்தில் உள்ளன.

வலம்முடித்துப் படிகளேறி மேலே - கட்டுமலைமீது சென்றால் நேரே சோமாஸ்கந்தர் தரிசனம். வலப்பக்கம் திரும்பி வாயிலைக் கடந்தால் மூலவர் காட்சி. சதுரபீடம் - ஆவுடையாரின் அளவை நோக்கச்சற்று சிறியபாணம்-அருமையானதரிசனம். சுவாமி சந்நிதிக்கும் பக்கத்தில் அம்பாள் சந்நிதி - தனிக்கோயில். நின்ற திருக்கோலம். 6.9.1999ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. இங்குள்ள தட்சிணா மூர்த்தியின் திருவடிக்கீழ் முயலகனில்லை - புதுமையான அமைப்பு. நாடொறும் ஐந்துகால பூசைகள். வைகாசியில் பெருவிழா. பாண்டியர் காலக் கல்வெட்டு இவ்வூரை ''அருண்மொழித் தேவ வளநாட்டுத் தேவூர்'' என்றும்; இறைவனை ''ஆதித்தேச்சுரமுடையார்'' என்றும் குறிப்பிடுகின்றது.

''பண்ணிலாவிய மொழி உமைபங்கன் எம்பெருமான்
விண்ணில் வானவர்கோன் விமலன் விடையூர்தி
தெண்ணிலா மதிதவழ் மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி அடைந்தனம் அல்லம் ஒன்று இலமே.''

(சம்பந்தர்)

''தேவூர்த் தென்பால் திகழ் தருதீவில்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்''

(திருவாசகம்)

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதியில் காணப்படும் ஒரு பாடல்

''தீமருவு செங்கையான் திருத்தே வூர்வாழ் நாதன் தேவபுரீசுரரை வளரும்
காமருவு கதலியின்பால் கருத்தர்தமைக் கௌதமரும் குபேரனோ
டிந்திரன் தானும்
நாமருவு குருவுடனே சூரியனும் போற்றிசெயச் சம்பந்தர் பதிகமோத
மாமதுர பாஷணி மலர்க்கழலை மறுமையொடு இம்மைக்கும் மறவேன்
நானே.''

(மு.ஆ. அருணாசலமுதலியார் இயற்றியது)

''-நீளுவகைப்
பாவூரிசையிற் பயன் சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர்தேவ தேவனே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. தேவபுரீஸ்வரர் திருக்கோயில்
தேவூர் & அஞ்சல் 611 109
(வழி) கீவளூர் - கீவளூர் வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

203/86. திருப்பள்ளியின் முக்கூடல்

திருப்பள்ளிமுக்கூடல்
குருவிராமேஸ்வரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'திருப்பள்ளிமுக்கூடல்' என்று இன்று வழங்கு கிறது.

பழைய சிவத்தலமஞ்சரிநூலில் இத்தலத்தின் பெயர் 'அரியான் பள்ளி' என்று குறிக்கப்பட்டுள்ளது. (அரிக்கரியான் பள்ளி என்றும் அரியான்பள்ளி என்றும் அக்கால மக்கள் வழங்கி வந்தனராதலின் அரியான்பள்ளி என்று அந்நூலில் குறித்தனர்.) ஆனால் இன்று அப்பெயர் மாறி, 'திருப்பள்ளிமுக்கூடல்' என்றே வழங்குகிறது. இப்பெயர் சொல்லிக் கேட்டால் இன்றுள்ள மக்களுக்குத் தெரிகிறது. மேலும்; இத்தல வரலாறு ஜடாயுவுடன் தொடர்புடையதாதலால்

Koviloor Digital Library

இத்தலத்தை இங்குள்ள மக்கள் ''குருவிராமேஸ்வரம்'' என்றும் கூறுகின்றனர்.

திருவாரூரிலிருந்து கடைத் தெரு வழியாகக் 'கேக்கரை' ரோடில் வந்து, ரயில்வே லெவல்கிராசிங்கைத் தாண்டி, 'கேக்கரை'யை அடைந்து; அங்கிருந்து அதே சாலையில் மேலும் 1 கி.மீ. சென்று சிறிய பாலத்தைத் தாண்டி, சிறிது தூரம் சென்று, அங்கு இரண்டாகப் பிரியும் பாதையில் இடப்பக்கமாகச் செல்லும் பாதையில் 1 கி.மீ. சென்றால் ஊரையடையலாம். (கேக்கரை ரோடினை மக்கள் ராமகே ரோடு என்றும் கூறுகின்றனர்). பேருந்து ஊர் வரை செல்லும். சரளைக்கல் பாதைதான் (Single Road) மிக அதிக அகலமான பேருந்தாக இருப்பின் செல்வதற்குச் சிரமப்படும்.

ஊர்த் தொடக்கத்திலேயே கோயில் உள்ளது. மூர்க்கரிஷி பூசித்த தலம், நகரத்தார் திருப்பணியுடன் கோயில் நன்கு பொலிவுடன் காட்சி தருகிறது-கிழக்கு நோக்கிய சந்நிதி. திருவாரூர்க் கோயிலோடு இணைந்தது.

இறைவன் - முக்கோணநாதர், திரிநேத்ர சுவாமி, முக்கூடல்நாதர்.

இறைவி - அஞ்சனாட்சி, மைம்மேவு கண்ணி.

தீர்த்தம் - முக்கூடல் தீர்த்தம், கோயில் எதிரில் உள்ளது.

(இத்தீர்த்தம் திரிவேணி சங்கமத்திற்கு ஒப்பாகச் சொல்லப் படுகிறது).

(இறைவன் பெயர், சம்ஸ்கிருதப் பெயரை நோக்கத் தமிழில் 'முக்கண்நாதர்' என்றிருக்க வேண்டும். ஆனால் பேச்சு வழக்கில் சிதைவுற்று - தொடர்பே இல்லாமல் 'முக்கோணநாதர்' என்று வழங்குகிறது.

அப்பர் பாடல் பெற்றது.

இக்கோயில் தொடர்பாகச் சொல்லப்படும் வரலாறு:-

''ஜடாயு இறைவனை நோக்கித் தவம் செய்து, தனக்கு இறுதி எப்போது என்று கேட்க; இறைவன் அவரைப் பார்த்து, ''இராவணன் சீதையை எடுத்து வரும் நேரத்தில் நீ தடுப்பாய். அப்போது அவன் உன் சிறகுகளை வெட்ட நீ வீழ்ந்து இறப்பாய்'' என்றாராம். அது கேட்ட ஜடாயு ''பெருமானே! அப்படியானால் நான் காசி, கங்கை, இராமேஸ்வரம், சேது முதலிய தீர்த்தங்களில் மூழ்கித் தீர்த்தப் பலனை அடைய முடியாமற்போகுமே என் செய்வேன்'' என்று வேண்ட; இறைவன் முக்கூடல் தீர்த்தத்தை உண்டாக்கி அதில் மூழ்குமாறு பணிக்க அவரும்

Koviloor Digital Library

அவ்வாறே மூழ்கிப் பலனைப் பெற்றாராம். இவ்வரலாற்றை யொட்டித்தான் மக்கள் பேச்சு வழக்கில் இப்பகுதியை 'குருவி ராமேஸ்வரம்' என்று கூறுகின்றனர். இதனால் இத்தீர்த்தமும் திரிவேணி சங்கமத்திற்கு நிகராகவும்; இதில் மூழ்குவோர்க்குப் பதினாறு மடங்கு (கங்கை, சேது) தீர்த்த விசேஷப் பலனைத் தருவதால் இத்தீர்த்தம் ''ஷோடசசேது'' என்றும் சொல்லப்படுகிறது.''

கோயிலின் முகப்பில் மேற்புறத்தில் இறைவன், இராமர், ஜடாயு விநாயகர், சுப்பிரமணியர் சுதை உருவங்கள் உள்ளன. வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம் - உள் நுழைந்ததும் வலப்பால் சூரியன் சந்திரன் திருமேனிகள். தலப்பதிகக் கல்வெட்டுள்ளது.

உள்பிராகாரத்தில் நால்வர், விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளன. உள் மண்டபத்தில் வலப்பால் அம்பாள் சந்நிதி - தெற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்.

நேரே மூலவர் அழகாகத் தரிசனம் தருகிறார். கோஷ்ட மூர்த்தங்கள் முன்பாக உள்ளன. நாடொறும் இருகால வழிபாடே. குருக்கள் வீடு கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

''ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அயனொடும் மால் அறியாத ஆதியானை
தாராரும் மலர்க் கொன்றைச் சடையான் தன்னைச்
சங்கரனைத் தன்னொப்பார் இல்லான் தன்னை
நீரானை காற்றானை தீயானானை
நீள் விசும்பாய் ஆழ்கடல்கள் ஏழும் சூழ்ந்த
பாரானை பள்ளியின் முக்கூடலானைப்
பயிலாதே பாழே நான் உழன்றவாறே.''

(அப்பர்)

-''பூவினிடை
இக்கூடன் மைந்த இனிக் கூடல் என்றுபள்ளி
முக்கூடல் மேவியமர் முன்னவனே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. முக்கோணநாதர் திருக்கோயில்
திருப்பள்ளி முக்கூடல்
கேக்கரை அஞ்சல் - 610 002 (வழி) திருவாரூர்
திருவாரூர் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

204/87. திருவாரூர்
205/88. ஆரூர் அரநெறி
206/89. ஆரூர்ப்பரவையுண்மண்டளி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மயிலாடுதுறை, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சி, காரைக்கால் முதலிய ஊர்களிலிருந்து பேருந்துகள் நிரம்பவுள்ளன. இருப்புப் பாதை நிலையம். இத்தலத்தின் வடபால் சுக்கனாறும், தென்பால் ஓடம் போக்கியாறும் ஓடுகின்றன.

''பிறக்க முத்தி திருவாரூர்'' என்று புகழப்படும் சிறப்பினது. மூலாதாரத்தலம். 'திருவாரூர்த்தேர் அழகு.' பஞ்சபூதத்தலங்களுள் பிருதிவித்தலம், எல்லாச் சிவாலயங்களின் சந்நிதித்தியமும் சாயரக்ஷை எனப்படும் திருவந்திக்காப்பு நேரத்தில் இத்தலத்தில் விளங்குவதாக ஐதீகம், சுந்தரர், திருத்தொண்டத் தொகையைப் பாடுவதற்கு, அடியார்களின் பெருமைகளை விளக்கிய பெருமை இப்பதிக்கேயுரியது. பரவையார் அவதரித்த பதி. 'கமலை' என்னும் பராசக்தி தவம் செய்யுமிடம். திருமகள் இராமர் மன்மதன் முதலியோர் வழிபட்ட பதி, முசுகுந்தசோழன் ஆட்சி செய்த சீர்மையுடையது. இத்தலத்திற்குரிய வேறுபெயர்கள்:- (1) க்ஷேத்ரவரபுரம் (2) ஆடகேசுரபுரம் (3) தேவயாகபுரம் (4) முசுகுந்தபுரம் (5) கலிசெலா நகரம் (6) அந்தரகேசுபுரம் (7) வன்மீகநாதபுரம் (8) தேவாசிரியபுரம் (9) சமற்காரபுரம் (10) மூலாதாரபுரம் (11) கமலாலயபுரம் என்பன.

தியாகராஜா பெருஞ்சிறப்புடன் அஜபா நடன மூர்த்தியாகத் திகழும் தலம். செல்வத்தியாகேசர், மனுச்சோழனுக்கு அருள்செய்த பெரும் பதி. இவ்வரலாற்றைப் பெரிய புராணத்தின் வாயிலாக அறியலாம். இத்தியாகேசப் பெருமானே சோமாசிமாற நாயனாரின் வேள்விக்கு எழுந்தருளி அவிர்ப்பாகம் ஏற்றார் என்னும் வரலாற்றை திருமாகாளத் தலபுராணத்தால் அறிகிறோம். திருவாரூரில் பாடல் பெற்ற தலங்களுள் மூன்று, அவை:- (1) திருவாரூர் (2) ஆரூர் அரநெறி (3) ஆரூர்ப்பரவையுள் மண்டளி என்பன.

திருவாரூர்க் கோயில் - தியாகராஜா கோயில், திருமூலட்டானம், பூங்கோயில் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுவது. ஆரூர் அரநெறி, என்னும் கோயில் திருவாரூர்க் கோயிலுக்குள்ளேயே தெற்குச்

Koviloor Digital Library

சுற்றில் உள்ளது. கிழவீதியில் தேரடியில் உள்ளது ஆரூர்ப்பரவையுள் மண்டளியாகும். (1) தண்டியடிகள் (2) கழற்சிங்கர் (3) செருத் துணையார் (4) விறன் மிண்டர் (5) நமிநந்தியடிகள் முதலிய நாயன் மார்களுடைய திருத்தொண்டுகள் பரிமளித்த பதி இதுவே. கமலை ஞானப்பிரகாசரும் இங்கிருந்தவரே. இத்தலத்தில் பெருஞ்சிறப்பு தியாகேசருக்குத்தான்.

இவருக்கு வீதிவிடங்கர், தேவரகண்டப்பெருமான் தியாகப் பெருமான், ஆடரவக்கிண்கிணிக்காலழகர், செங்கழுநீரழகர், செவ்வந்தித்தோடகர், கம்பிக்காதழகர், தியாகவிநோதர், கருணாகரத் தொண்டைமான், அசைந்தாடும் அப்பர், அடிக்காயிரம் பொன் வழங்கியவர், கமலேசர், செம்பொன் தியாகர், தேவசிந்தாமணி, தியாகசிந்தாமணி முதலாக அறுபதுக்கு மேற்பட்ட பெயர்கள் (தியாகராஜாவுக்குச்) சொல்லப்பட்டுள்ளன.

இப்பெருமானுக்குரிய அங்கப்பொருள்களாவன:-

1) ஆடுதண்டு - மணித்தண்டு
2) கொடி - தியாகக்கொடி
3) ஆசனம் - இரத்தின சிம்மாசனம்
4) மாலை - செங்கழுநீர்மாலை
5) வாள் - வீரகண்டயம்
6) நடனம் - அஜபா நடனம்
7) யானை - ஐராவணம்
8) மலை - அரதன சிருங்கம்
9) முரசு - பஞ்சமுக வாத்தியம்
10) நாதஸ்வரம் - பாரி
11) மத்தளம் - சுத்தமத்தளம்
12) குதிரை - வேதம்
13) நாடு - சோழநாடு
14) ஊர் - திருவாரூர்
15) ஆறு - காவிரி
16) பண் - பதினெண்வகைப்பண் - என்பன.

சாயரட்சை பூஜையின்போது தேவேந்திரனே வந்து பெரு மானைப் பூசிப்பதாக ஐதிகமாதலால் அர்ச்சகர் நீண்ட அங்கி, தலைப் பாகை அணிந்துதான் எதிரில் நின்று பூசை செய்கின்றார். சப்த விடங்கத்

Koviloor Digital Library

தலங்களுள் ஒன்று. மற்றையவை (1) நாகைக்காரோணம் (2) திருநள்ளாறு (3) திருமறைக்காடு (4) திருக்காறாயில் (5) திருவாய்மூர் (6) திருக்கோளிலி என்பன.

''சீரார் திருவாரூர் தென்நாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் - பேரான
ஒத்த திருவாய்மூர் உவந்த திருக்கோளிலி
சத்த விடங்கத் தலம்'' - என்பது பழம் பாடல்.

திருவாரூர்க் கோயிலுக்குள் சென்றுவிட்டால் ஏராளமான சந்நிதிகள் இருப்பதால், குவித்த கரங்களை - விரிப்பதற்கு வழியே யில்லையெனலாம். இதையே மகாவித்வான், மீனாட்சிசந்தரம் பிள்ளை யவர்கள் ''குவித்தகரம் விரித்தல் செலாக் கோயில்களும் பல உளவால்'' என்று தம் வாக்கால் புகழ்ந்து பாடுகின்றார்.

இறைவன் - வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார்.

இறைவி - கமலாம்பிகை, அல்லியங்கோதை, நீலோத் பலாம்பாள்.

தலமரம் - பாதிரி.

தீர்த்தம் - 1) கமலாலயம் (5 வேலிப் பரப்புடையது, தேவ தீர்த்தம் - எனப்படுகிறது).

(கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, ஓடை ஐந்துவேலி என்பது இங்கு வழங்கும் பழமொழி) கமலாலயம் 64 கட்டங்களை யுடையது. மாற்றுரைத்த விநாயகர் சந்நிதி மேலைக்கோபுரத்தின் எதிரில் குளக்கரையில் உள்ளது).

2) சங்குதீர்த்தம் - ஆயிரக்கால் மண்டபத்தின் அருகிலுள்ளது. அமுததீர்த்தம் என்றும் பெயர்.

3) கயாதீர்த்தம் - ஊருக்கு அப்பால் கேக்கரை என்று வழங்கும் இடத்தில் உள்ளது.

4) வாணிதீர்த்தம் - (சரஸ்வதி தீர்த்தம்) மேற்குப் பெரிய பிராகாரத்தில் சித்திரசபை மண்டபத்திற்கு எதிரில் உள்ளது.

இது தவிர 'செங்கழுநீர் ஓடை' எனப்படும் ஓரோடை கோயிலுக்கு அப்பால் 1 கி.மீ. தொலைவில் உள்ளது.

மூவர் பாடல் பெற்றது.

கோயில் நாற்புறமும் உயர்ந்த மதில்களுடன் - கோபுரங்களுடன் விளங்குகிறது. கீழ்க்கோபுரம் 118 அடி உயரமுள்ளது. மொத்தம் வீதிப்

Koviloor Digital Library

பிராகாரங்களையும் சேர்ந்து ஐந்து பிராகாரங்கள், கிழக்குக் கோபுர வாயில் வழியாகச் செல்வோம். விநாயகர் முருகன் கோயில்கள் இரு புறமும். உள்ளே நுழைந்தால் வீதிவிடங்க விநாயகர் தரிசனம். பின்னால் பிரமநந்தி எழுந்தருளியுள்ளார். மழைவேண்டின் இப்பெருமானுக்கு நீர் கட்டுவதும், பசுக்கள் பால் கறக்க உதைத்தால் நன்கு கறக்க இவர்க்கு அறுகுசாத்தி அதைப் பசுக்களுக்குத் தருதலும் இன்றும் மக்களிடையே யுள்ள நம்பிக்கையும் பழக்கமுமாகும், அடுத்து பெரிய பிராகாரத்தில் வலமாக வந்தால் பக்தகாட்சி மண்டபம் (பங்குனி உத்திர விழா முடிந்து நடனக்கோலத்தில் தியாகராசர் எழுந்தருளுருமிடம்); ஊஞ்சல் மண்டபம் (சந்திரசேகரரின் ஊஞ்சல் உற்சவம் நடக்குமிடம்) காணலாம். அடுத்து ஆகாசவிநாயகர், துலாபாரமண்டபம், சரஸ்வதீர்த்தம் முதலியவை உள்ளன.

அடுத்துள்ளது சித்திரசபாமண்டபம் - பெரியது. இதன் பக்கத்தில் கோயில் ஓரமாகவிருப்பது சிறியது - புராணமண்டபம். அடுத்துக் கமலாம்பாள் சந்நிதி. பராசக்தி பீடங்களுள் ஒன்று. அம்பிகை தவக் கோலத்தில் தரிசனம் தருகின்றாள். ஆடிப்பூர விழா இச்சந்நிதியில் விசேஷம். பக்கத்தில் உச்சிட்ட பிள்ளையார் உள்ளார்.

மகாமண்டபம் தாண்டி உட் சென்றால் கமலாம்பிகை தரிசனம். நான்கு கரங்களுடன் (தாமரை, பாசம், அக்கமாலை, அமைந்தநிலை) யோகாசனத்தில் காட்சி தருகிறாள்.

அம்பாள் கோயிலின் மேற்கு மூலையில் அக்ஷரபீடமுள்ளது. இதில் பீடமும் ஐம்பத்தோரு எழுத்துக்கள் எழுதப்பெற்ற திருவாசியுமே உள்ளன. நின்று தியானித்துச் செல்லவேண்டும். அடுத்தாற்போல் சண்முகர், பாலசுப்பிரமணியர், கலைமகள், மகரிஷிகள் வழிபட்ட லிங்கங்கள் - சந்நிதிகள் உள்ளன.

வெளிவந்தால் எதிரில் பார்ப்பதீச்சரம். இங்குள்ள தீர்த்தக் கிணறு 'முத்திக்கிணறு' எனப்படும். இதை மக்கள் உருமாற்றி 'மூக்குத்திக் கிணறு' என்றழைக்கிறார்கள். ஒட்டுத்தியாகர் கோயில் உள்ளது. சுந்தரரைக் கோயிலுள் போகாதவாறு விறன் மிண்டர் தடுக்க, இறைவன் இங்கு வந்து சுந்தரரை ஆட்கொண்டார் என்பர். "ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட" என்னும் சுந்தரர் வாக்கு இங்கு எண்ணத்தக்கது. அடுத்துள்ளது, **தேவாசிரியம் எனப்படும் ஆயிரக்கால் மண்டபம்.** செல்வத்தியாகர் ஆழித்தேர் விழா முடிந்து இம்மண்டபத்தில்தான் வந்து மகாபிஷேகம் கொண்டு-செங்கோல் செலுத்துவார். அதனால் இஃது ராஜதானி மண்டபம் என்று வழங்கப்படும்.

Koviloor Digital Library

''தேவாசிரியன் எனும் திருக்காவணம்'' என்னும் சேக்கிழார் வாக்குக்கேற்ப இம்மண்டபத்தின் முன்னால் பந்தலிட பலகால்கள் நடப்பெற்றுள்ளமையைக் காணலாம். அடுத்துள்ள தீர்த்தம் - சங்க தீர்த்தம். இதில் இறங்கிக் கைகால் சுத்திசெய்து கொண்டு, ஆரியன் கோபுரம் வழியாக உட்செல்ல வேண்டும்.

கோபுர வாயிலில் இடப்பால் விறன்மிண்டர் காட்சிதருகிறார். இவரை வணங்கி வாயிலைக் கடந்து சென்றால் - இந்திரன் கொடி மரமும், ராஜநாராயண மண்டபமும் வரும். பங்குனி உத்திர விழா இறுதியில் பெருமான் இம்மண்டபத்தில் எண்ணெய்க் காப்பு கொள்வா ராதலால் இதற்கு எண்ணெய்க் காப்பு மண்டபம் என்று பெயர் ராஜ நாராயண சோழன் கட்டியது.

இம் மண்டபத்தின் வலப்பால் விநாயகர், இடப்பால் துர்க்கை. அடுத்து ஜ்வரஹரேஸ்வரர், ஏகாதசருத்ரர் வழிபட்ட சிவலிங்கங்களை வழிபட்டுச் சென்று, அபிஷேகக் கட்டளை அறை, வாகன அறை, ராஜன் கட்டளை அறை இவைகளைக் கடந்து முசுகுந்தரைத் தொழுது, இந்திரலிங்கம் வணங்கி, அங்குள்ள சதுரக்கல்லின் மேல் நின்று ஏழுகோபுரங்களையும் ஒருசேர ஆனந்தமாகத் தரிசித்துப்பின்பு ஆரூர் அரநெறியை அடையவேண்டும்.

ஆரூர் அரநெறி: இஃது ஒரு தனிக்கோயில். அப்பர் பாடல் பெற்றது.

இறைவன் - அகிலேஸ்வரர்.

இறைவி - வண்டார் குழலி, புவனேஸ்வரி.

நமிநந்தியடிகள் வழிபட்டது. இக்கோயில் அசலேச்சரம் என்று வழங்கப்படுகிறது. இச்சந்நிதியில் சிவராத்திரி வழிபாடு விசேஷமானது. இப்பெருமானின் - அசலேசுவரரின் நிழல் கிழக்குத் திசையிலன்றி மற்றத் திசையில் விழுவதில்லை என்ற செய்தி தனி மகிமை வாய்ந்தது.

இதை வழிபட்டு, தக்ஷேசவரர், மனுச்சக்ரேஸ்வரர், பகீரதேசுவரர், கைலாசத்தியாகர், பாண்டியநாதர், சப்தமாதர், சப்தரிஷீசுவரர், சேரநாதர் ஆகிய சந்நிதிகளை வழிபட்டு, ஆடகேசுவரத்தை அடையலாம்.

ஆடகேசுவரம் - அப்புத்தலம். இங்கொரு நாகபிலமுள்ளது. வழிபட்டு வலமாக வரும்போது தலமரம் - பாதிரி உள்ளது. வணங்கி, விசுவாமித்திரேசுவரர், புரூர்வசக்கரேசுவரர், மகாபலீசுவரர், ரௌத்திர துர்க்கை, அருணாசலேசுவரர், வருணேசுரவிநாயகர், வருணேசுரர் முதலிய மூர்த்தங்களைத்தொழுதவாறே ஆனந்தேஸ்வரத்தை யடையலாம்.

Koviloor Digital Library

மங்கண முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட பெருமான் உள்ள இடம். அடுத்துள்ள கோயில் விசுவகர்மேசம் - கருங்கற் கோயில். அழகான கொடுங்கைகள், சிற்பக்கலை வாய்ந்த தட்சிணாமூர்த்தி, கணபதி, துர்க்கை, பிரம்மா முதலிய உருவங்கள் உள.

வணங்கி, வழியிலுள்ள மூர்த்தங்களைத் தொழுதவாறே சித்தீஸ் வரத்தை யடையலாம். மேற்கு நோக்கிய சந்நிதி. அடுத்துள்ளது தான் தட்சிணாமூர்த்தி சந்நிதானம். இங்குத்தான் தருமபுர ஆதீன ஆதிகுரு ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் கமலை ஞானப்பிரகாசரைத் தம் குருவாக ஏற்றுக்கொண்டு உபதேசம் பெற்று சொக்கலிங்கமூர்த்தி பூசையினை ஏற்றுக்கொண்டார்கள். வழியிலுள்ள ஏராளமான சந்நிதிகளை வணங்கி, தட்டச்சுற்றி மண்டபம் அடைந்து வல்லபை விநாயகரைத் தொழுது துவஜஸ்தம்பத்தை யடையலாம். கொடி மரத்து விநாயகர் இங்கு ''பொற்கம்ப விநாயகர்'' என்றழைக்கப்படுகிறார். தொழுது மேற்கே திரும்பினால் வன்மீகநாதர் சந்நிதி தோன்றுகின்றது, இச்சந்நிதிக்குச் செல்லும் வழியில் உள்ள கோபுரம் அழகியான் கோபுரம் எனப்படும். சுதையாலான துவாரபாலகர்கள், கோபுர வாயிலின் நடுவில் வடபால் அதிகார நந்தி காட்சி.

உள்ளே வலமாக வரும்போது பிரதோஷநாயகர், சந்திரசேகரர், சோழமன்னன், மாணிக்கவாசகர். திரிபுரசம்ஹாரர், ஐங்கலக்காசு விநாயகர் (ஐந்து கலம் பொற்காசு கொண்டு ஆக்கப்பட்டவர் என்பது செவிவழிச் செய்தி) சந்நிதிகளைத் தரிசித்துச் சென்றால் மூலவர் தரிசனம் - வன்மீநாதர். சுவாமியின் வலப்பால் அர்த்த மண்டபத்தில் சோம குலாம்பிகை சந்நிதி. அடுத்துள்ளது தியாகராஜா சந்நிதி - எதிரில் நந்தி. மூலாதாரக் கணபதி, நால்வர், பஞ்சமுகவாத்யம், அறுபத்துமூவர் உற்சவமேனிகள், மூலத்திருமேனிகள் ஆகியவை தொழுதவாறே தென்னன் திருவாசல் வழியாகச் சென்று, தியாகேசப் பெருமானைத் தொழலாம். இரத்தின சிம்மாசனத்தில் செல்வத்தியாகர் முன்னே இருவாட்படை விளங்க நடுவில் பூச்செண்டு பொருந்த எழுந்தருளிக் காட்சி தருகிறார்.

தியாகராசாவின் பக்கத்திலுள்ள அம்மை 'கொண்டி' எனப் படுவள். தியாகேசர் சந்நிதியில் வலப்பால் ஒருபீடத்தில் உள்ள பெட்ட கத்தில் வீதிவிடங்கராகிய மரகத சிவலிங்கமூர்த்தி உள்ளார். இவருக்குத் தான் நாடொறும் காலை மாலை வேளைகளில் அபிஷேகம். தியாக ராசாவின் முகம் மட்டுமே தெரியும். மார்கழி ஆதிரையில் தியாகராசாவின் இடப்பாதத்தையும், பங்குனி உத்திரத்தில் வலப்பாதத்தையும்

Koviloor Digital Library

கண்டு தரிசிக்கவேண்டும். மற்றைய அங்கங்கள் மூடி வைக்கப் பட்டிருக்கும் - அவை மிகவும் ரகசியமானவை.

வரும்போது வாதாபி கணபதியைத் தொழலாம். அடுத்து சஹஸ்ரலிங்கம், பிட்சாடனர், மகாலட்சுமி, துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, உற்சவ மூர்த்தங்கள் ஆகியவைகளைத் தரிசித்தவாறே வந்து, மந்திர பீடத்தையும் தொழுதல் வேண்டும். நவக்கிரகங்கள் நேர் வரிசையில் உள்ளன.

வடக்குப்பிராகாரத்தில் உள்ள ரணவிமோசனேசுவரர் சந்நிதியில் சென்று தொழுதால் ஆறாத புண்கள் ஆறும்; கடன்கள் நீங்கும். காணிக்கையாக உப்பு கொட்டப்படுகிறது.

இக்கோயிலில் இரண்டு சண்டேசுவரர் சந்நிதிகள் உள்ளன.

(1) எமசண்டர் - எமனே சண்டராக அமர்ந்திருக்கிறான்.

(2) ஆதிசண்டர் - (சண்டேஸ்வரர்)

சந்திரசேகரர் கோயில், பைரவர் சந்நிதி தரிசிக்கத் தக்கது. அம்மையின் கோயில். தேவி நீலோத்பலாம்பாள் (அல்லியங்கோதை) நான்கு திருக்கரங்கள் - இவற்றுள் இடக்கரம்; தோழி இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் முருகனின் தலையைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வமைப்பு மிகவும் அற்புதமானது.

கமலாலயத்தின் குளத்தின் மத்தியில் உள்ளது யோகாம்பாள் சமேத நாகநாத சுவாமி கோயிலாகும். பிரதோஷ காலத்தில் இங்கு வந்து வழிபடுவது மிகச் சிறந்த பலன்களைத் தரும். திருமுறைப் பாடல்கள், திருவாரூர் மும்மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை குறவஞ்சி, பள்ளு, திருவாரூர் உலா, முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோரின் கீர்த்தனைகள் கமலாம்பிகைமீது சியாமா சாஸ்திரிகள் பாடியுள்ள நவாவரணக் கிருதிகள் முதலியவைகள் இத்தலத்தைப் பற்றியும் சுவாமி அம்பாளையும் புகழ்ந்து பாடுபவை.

பரவையுண்மண்டளி மற்றொரு தலமாகும். இது தேர் நிலைக்கு அருகில் கீழவீதியில் உள்ளது. தனிக்கோயில் - கிழக்கு பார்த்த சந்நிதி. வருணன் அனுப்பிய கடலை சுவறச் செய்த இறைவன் எழுந்தருளி யுள்ள தலம். துர்வாச முனிவர் பூசித்தது.

இறைவன் - தூவாய்நாதர். மக்கள் இக்கோயிலைத் தூவாநாயனார் கோயில் என்றழைக்கின்றனர். சுந்தரர் பாடல் பெற்றது. இதன் பின்புறம் திருநீலகண்ட நாயனார் கோயிலும், தெற்குச் சந்நிதியில் பரவை நாச்சியார் கோயிலும் உள்ளன.

Koviloor Digital Library

வன்மீகநாதரின் சந்நிதியிலுள்ள நந்தியின் மேற்பரப்பிலுள்ள கல்லில் 27 நட்சத்திரங்களும் இராசிச் சக்கரமும் அமைந்துள்ளன. இத்தலத்து தேர் அழகுடையது - ஆழித் தேர் என்று பெயர். தியாகேசர் சந்நிதியில் தேர் வடிவில் ஒரு விளக்கு உள்ளது, பஞ்சமுக வாத்யம் சிறப்பானது - ஒன்று பாம்பு சுற்றியது போலவும், ஒன்று ஸ்வஸ்தி வடிவிலும், ஒன்று தாமரைப் பூப் போலவும், ஒன்று எவ்வித அடையாளமுமில்லாமலும், நடுவில் உள்ளது பெரியதாகவும் இருக்கும். மான் தோலால் கட்டப்பட்டது.

இஃது, ஒவ்வொரு முகத்திலும் தனித் தனியாக அடிக்கப்படும் போது ஏழு முறையும்; ஐந்திலும் சேர்ந்து அடிக்கும்போது முகத்திற்கு ஒன்றாக ஐந்து முறையும் அடிக்கப்படும். இங்கு வாசிக்கப்படும் நாதஸ்வரம் - மிகப் பெரியது. நாடொறும் ஆறு கால பூஜைகள். பங்குனிப் பெருவிழாவும் சித்திரை வசந்தோற்சவமும் ஆடிப்பூரமும் சிறப்புடையன. எல்லா விழாக்களும் மாதாந்திர உற்சவங்களும் முறையாக நடைபெறுகின்றன.

இக்கோயிலில் மட்டுமே செய்யப்படும் முசுகுந்த சஹஸ்ரநாம அர்ச்சனைக்கு ரூ. 3,500/- கட்டளையாகும். இவ்வர்ச்சனை ஆண்டு தோறும் தைமாதத்தில் தியாகராஜாவுக்குக் கோயிலில் செய்யப் படுகிறது. இக்கோயிலில் உள்ள மிகப் பெரிய கட்டளைகளுள் மிகப் பெரியது அபிஷேகக்கட்டளை. அடுத்தது ராஜன் கட்டளை. ராஜன் கட்டளை தருமையாதீனத்தின் பொறுப்பில் உள்ளது. இவற்றைத் தவிர அன்னதானக் கட்டளை, உள்துறைக் கட்டளை முதலிய பலவும் உள்ளன.

தியாகராஜ லீலை - மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பாடியது.

அஜபாரஹஸ்யம், தியாகராய லீலை. தியாகராஜபுர மான்மியம் முதலாக 16 நூல்கள் இத்தலத்தைப்பற்றி சம்ஸ்கிருதத்தில் உள்ளன. கீழ்க்கோபுரத்திற்கு இடப்புறத்தில் ஆரூரான் கல்யாண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

கமலாலயக் கரையில் வடபால் பச்சையப்ப முதலியார் சத்திர முள்ளது. வடகரையில் திருவாவடுதுறை ஆதீன மடமும் தெற்கு வீதியில் தருமையாதீன ராஜன்கட்டளை மடமும் உள்ளன. இக் கோயிலில் 65 கல்வெட்டுக்கள் உள்ளன. இவைபெரும்பாலும் சோழர் காலத்தியவை. செம்பியன்மாதேவி ஆரூர் அரநெறிக் கோயிலைக் கட்டியதாகக் கல்வெட்டு தெரிவிக்கிறது, ஆண்டொன்று ஐம்பத்தாறு திருவிழாக்கள் நடைபெற்றனவாம்.

Koviloor Digital Library

"நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன நித்த நோய்கள்
வாதியாவாதலானாளு நாளின்பமே மருவினாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணனமேத்து முக்கண்
ஆதியாரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே."

(சம்பந்தர்)

"பாடிளம் பூதத்தினானும் பவளச் செவ்வாய் வண்ணத்தானும்
கூடிளமென் முலையாளைக் கூடிய கோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானும் ஒளிதிகழ் சூலத்தினானும்
ஆடிளம்பாம் பசைத்தானும் ஆரூரர் அமர்ந்த அம்மானே."

(அப்பர்)

"சொல்லிடில் எல்லையில்லை சுவையிலாப் பேதைவாழ்வு
நல்லதோர் கூரைபுக்கு நலமிக அறிந்தேனல்லேன்
மல்லிகைமாட நீடு மருங்கொடு நெருங்கியெங்கும்
அல்லிவண்டியங்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே."

(சுந்தரர்)

"விழித்தனர் காமனை வீழ்தர விண்ணின் (று)
இழித்தனர் கங்கையை ஏத்தினர் பாவம்
கழித்தனர் கல்சூழ் கடியரண் மூன்றும்
அழித்தனர் ஆரூர் அரநெறியாரே." *(அப்பர்)*

"அம்மானே ஆகமசீலர்க்கு அருள் நல்கும்
பெம்மானே பேரருளாளன்பிட வூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி யம்மானே." *(சுந்தரர்)*

வன்மீகநாதர்

பூமேவு திருமடந்தை பொன்முகத்தா மரைமலரப் புவிவிளங்க,
நாமேவு சுருதியிசை முனிஞிமிறு ஞானமண நனியுண் டார்ப்பக்,
காமேவு தமனியநாட் டமரர்மனக் கவலையிருட் கங்குல் நீங்கத்,
தேமேவு பொழிலாரூர்ப் புற்றிங்கொண் டெழுசுடரைச் சிந்தை செய்வாம்.

தியாகராசர்

கார்பொருவும் கருங்கூந்தல் செவ்வாய் வெண்ணகைப் பச்சைக்
கன்னியோடும்,
தார்கமழ்பூங் காந்தளந்தோட் குமரனொடு மணிச்சிங்கா தனத்து மேவிச்,
சீர்பரவு வான் புலவர் நினைந்தனயா வையும் நல்கிச் சிறப்பின் வைகும்,
வார்புனல்சூழ் வயற்கமலைத் தேவர்கள்சிந் தாமணியை மனத்துள்
வைப்பாம்.

Koviloor Digital Library

கமலாம்பிகை

அறந்தழையக் கலைத்தெரிவை வனப்பெய்தச்
சசியெனும்பேர் அரிவை வாழ
நிறங்கெழுபூ மடந்தையோடு நிலமங்கை
மங்கலத்தின் நிறைந்து மல்கப்
பிறங்குமுயிர்த் தொகையனைத்தும் களிகூரத்
தவம்புரியும் பீடு சான்ற
சிறந்தகம லாலயநா யகிசெம்பொற்
சேவடிகள் சென்னி சேர்ப்பாம்.

அல்லியங்கோதை

தொல்லைமா ஞாலமாதித் தொகையிலா அண்டம் நல்கிச்
செல்வமாண் கருணையாகுஞ் சிறகால் அணைத்துப் போற்றும்
மல்லலஞ் செழுநீர் வாவி வண்கம லாலயத்துள்
அல்லியங்கோதை என்னும் அன்னத்தை அகத்துள் வைப்பாம்.

திருப்புகழ்

நீதானெத் தனையாலும் - நீடூழி க்ருபையாகி
மாதானத் தனமான - மாஞானக் கழல்தாராய்
வேதாமைத் துனவேளே - வீராசற் குணசீலா
ஆதாரத் தொளியானே - ஆரூரிற் பெருமாளே.

அசபாநடனப் பதிகம்

நீடுசந்த் ரோதயம் போல்வதன மசையவருள்
நிறைகமல நயனமசைய
நின்றநதி மதியசைய வொன்றுசடை முடியசைய
நிகழ்மந்த காசமசையத்
தோடலர் செவந்தியந் தோடசைய மார்பில்
தொடுத்தசெங் குவளையசையத்
துங்கமழு மானசைய வங்கதஞ் சதகோடி
சூரியர்கள் போலசையமால்
தேடுமர வக்கிண் கிணிப்பாத மசையவொரு
செம்பொன்மலை வல்லியசையச்
செய்யகும ரேசர்நடு நின்றசைய நவரத்ன
சிம்மா சனத்திருந்தே
ஆடுமுன் னசபைநட மடியனென் றுங்காண
அருளுவாய் தியாகேசனே
அசைவில்கம லேசனே அசபா நடேசனே
ஆனந்த உல்லாசனே.

(ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்)

Koviloor Digital Library

ஆரூரன் சந்நிதிபோல் ஆரூரன் ஆலயம்போல்
ஆரூரன் பாதத்த ழகுபோல் - ஆரூர்
மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே
ஒரு இடத்தில் உண்டோ உரை. *(தனிப்பாடல்)*

-தக்கநெடும்
தேரூர் அணிவீதிச் சீரூர் மணிமாட
ஆருரில் எங்கள் அரு மருந்தே - நீரூர்ந்த
காரூர் பொழிலுங் கனியீந்திளைப்பகற்றும்
ஆரூர் அரனெறி வேளாண்மையே - ஏரார்ந்த
மண்மண்டலிகர் மருவும் ஆரூர்ப்பரவை
யுண்மண்டலியெம் உடைமையே.'' *(அருட்பா)*

க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்

உன் கருணை மெய்யாட வுதயரவி யொளியாட
உபயசரணங்களாட
உயர்நாதமான சபை யொலியாட விந்துவாம்
ஓங்குமிகு தண்டையாட
மின்குலவு நவரத்ன மகரகுண்டலமாட
மிகு கருணை வதனமாட
வெற்றிவேல் தாங்கு செங்கையாட அருளாட
விமல மலர் நயனமாட
என்கண்ணி னிற்குமருள் நகையாட நுதலாட
இட்ட வெண்ணீறாடவே
ஏரார் விராட் புருட னாறுதானத்தே
இலங்கு மூலாதாரமாந்
தென்கமல நகர்மேவு தேவாதி தேவனே
செங்கீரை யாடியருளே
தியாகேசனுமை தவசி நடனஞ் செய்கந்தனே
செங்கீரை யாடியருவே.

''காளைவடி வொழிந்து கையுறவோடை யுறவாய்
நாளும் அணுகி நலியாமுன் - பாளை
அவிழ் கமுகம் பூஞ்சோலை ஆரூரற்காளாய்க்
கவிழ்கமுகம் கூம்புக என் கை.'' *(ஐயடிகள் காடவர் கோன்)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. தியாகராஜசுவாமி திருக்கோயில்
திருவாரூர் & அஞ்சல் - 610 001
திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

207/90. திருவிளமர்

விளமல்



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் 'விளமல்' என்றழைக்கின்றனர். திருவாரூர் - தஞ்சாவூர் சாலையில், திருவாரூரையடுத்து அருகாமையில் உள்ள தலம். சாலையோரத்திலேயே ஊர் உள்ளது. ஓடம் போக்கியாற்றின் கரையில் உள்ளது. திருவாரூர்க் கோயிலோடு இணைந்த கோயில். பதஞ்சலி முனிவர் வழிபட்டது.

இறைவன் - பதஞ்சலி மனோகரர்.

இறைவி - மதுரபாஷிணி.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய ஊர். கோயிலும் சிறியது. கிழக்கு நோக்கிய சந்நிதி. கோயில் எதிரில் தீர்த்தம் உள்ளது. கோபுரவாயிலின் இருபுறமும் விநாயகரும் முருகனும் வீற்றிருக்கின்றனர். உள்ளே நந்தி, பலிபீடம், பிராகாரம் நந்தவனமாகவுள்ளது. பைரவர் சந்நிதி தெற்கு நோக்கித் தனிக்கோயிலாக உள்ளது. பிராகாரத்தில் சனீஸ்வரன், சந்திர சூரியர், விநாயகர், கஜலட்சுமி, உள்ளனர். முன்மண்டபத்தில் பதஞ்சலியின் உருவமும் மகாமண்டபத்தில் வியாக்ரபாதர் உருவமும் உள்ளன. மூலவர் கிழக்கு நோக்கிய தரிசனம். அம்பாள் சந்நிதி தெற்கு. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

Koviloor Digital Library

"மத்தக மணிபெற மலர்வதொர் மதிபுரைநுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதொர் அரவினர் ஒளிகிளர்
அத்தகவடி தொழ அருள்பெறுகண்ணொடும் உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வளநகர் விளமரே."

(சம்பந்தர்)

"-திண்மைக்
களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொளும் எம் விருப்பே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பதஞ்சலி மனோகரர் திருக்கோயில்
விளமல் & அஞ்சல்
(வழி) திருவாரூர் (வடக்கு) S.O. 610 002
திருவாரூர் மாவட்டம்.

208/91. கரவீரம்

கரையபுரம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் **கரையபுரம்** என்று வழங்குகின்றனர்.

(1) திருவாரூர் - கும்பகோணம் சாலையில் 'வடகண்டம்' என்னும் ஊரையடுத்து 'கரையபுரம்' என்று கேட்டு அவ்வழியில் சென்றால் கோயிலையடையலாம். கோயில் வரை வாகனங்கள் செல்லும். வெட்டாற்றின் கரையிலுள்ளது.

கரவீரம் - பொன்அலரி. அலரியைத் தலமரமாகக் கொண்டதால் இத்தலம் கரவீரம் என்று பெயர் பெற்றது. கௌதமர் பூசித்ததலம். திருக்கண்ணமங்கை பெருமாள் கோயிலோடு இணைந்த கோயில்.

இறைவன் - கரவீரேஸ்வரர்
இறைவி - பிரத்யக்ஷமின்னம்மை
தலமரம் - அலரி
தீர்த்தம் - அனவரத தீர்த்தம்.

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய ஊர் - கோயில் பெரியது. கிழக்கு நோக்கி உயர்ந்த விமானங்களுடன் கம்பீரமாகக் காட்சிதருகிறது. எதிரில் தீர்த்தம். கோபுர வாயிலைக் கடந்ததும் நந்தி, பலிபீடங்கள். அம்பாள் சந்நிதி (திருமணக் கோலத்தில்) வலப்பால் உள்ளது. சுவாமி அம்பாள் கோயில்களைச் சேர்த்த பெரிய பிராகாரத்தில் விநாயகர், முருகன், சூரியன், சந்திரன், சனீஸ்வரன், பைரவர் சந்நிதிகள் உள்ளன. அம்பாள் திருமேனி பெரியது. சுவாமி கம்பீரமாகக் காட்சி தருகிறார். கோஷ்டத்தில் தட்சிணா மூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

''தங்குமோ வினை தாழ்சடை மேலவன்
திங்களோடுடன் சூடிய
கங்கையான் திகழுங் கரவீரத்தெம்
சங்கரன் கழல் சாரவே.''

(சம்பந்தர்)

-வளமை

எருக்கரவீரஞ் சேர் எழில் வேணி கொண்டு
திருக்கரவீரஞ் சேர்சிறப்பே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கரவீரேஸ்வரர் திருக்கோயில்
கரையபுரம்.
மணக்கால் ஐயம்பேட்டை அஞ்சல்
திருவாரூர் வட்டம் - திருவாரூர் மாவட்டம். 610 104

209/92. பெருவேளூர்

மணக்கால் ஐயம்பேட்டை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் - குடவாசல், திருவாரூர்ப் பேருந்துச் சாலையில், மணக்கால் என்ற இடத்தில் இறங்கி, இடப்புறமாக 1/2 கி.மீ. சாலையில் சென்றால் கோயிலை அடையலாம். பழைய நூல்களில் இத் தலம் 'காட்டூர் ஐயம்பேட்டை' என்று குறிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library



Koviloor Digital Library

முருகன் வழிபட்டதாக வரலாறு சொல்லப்படுவதால் 'வேளூர்' என்றும்; 'பெருவேள்' என்பவன் வாழ்ந்த இடமாதலின் 'பெருவேளூர்' என்றும் பெயர் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. வாயுவுக்கு ஆதிசேடனுக்குமிடையே நடந்த போட்டியில் வந்து விழுந்த கயிலைச் சிகரங்களுள் இதுவும் ஒன்றாகும்.

மோகினி வடிவம் எடுத்த திருமால், அவ்வவதார நோக்கம் நிறைவேறிய பின்பு இறைவனை வழிபட்டுத் தன் ஆண்வடிவினைப் பெற்ற தலம் என்பர். திருமால் கோயில் ஆலயத்துள் உள்ளது. பிருங்கி, கௌதமர் ஆகியோர் வழிபட்ட தலம். கோச்செங்கட் சோழனின் திருப்பணியாலான மாடக்கோயில். இத்தலத்திற்கு அருகில் திருவிளமர், கரவீரம், தலையாலங்காடு, எண்கண் முதலிய தலங்கள் உள்ளன. சிறிய கிராமம்.

இறைவன் - அபிமுக்தீஸ்வரர், பிரியாஈஸ்வரர்.

இறைவி - அபின்னாம்பிகை, ஏலவார்குழலி.

தலமரம் - வன்னி.

தீர்த்தம் - சரவணப் பொய்கை. கோயிலின் பின்புறமுள்ளது.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.

ராஜகோபுரம் மூன்று நிலைகளோடு, திருப்பணி முடிந்து அழகோடு காட்சியளிக்கிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. கோபுரத்துள் நுழைந்ததும் கொடிமர விநாயகர் - வெள்ளை விநாயகர் காட்சியளிக்கிறார். நந்தி, பலிபீடம் மட்டும் உள்ளன. பிராகாரத்தில் விநாயகர் சந்நிதிகள், பக்கத்தில் வைகுந்த நாராயணப்பெருமாள் சந்நிதியும் உள்ளன. இச்சந்நிதியில் மூல, உற்சவத் திருமேனிகள் உள்ளன. வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியை அடுத்து அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாக கிழக்கு நோக்கி உள்ளது. அடுத்து நவக்கிரக சந்நிதிகள், சனிபகவான், க்ஷேத்திரபைரவர், சூரியன், நால்வர், மகாலிங்கம், சரஸ்வதீசர், ஜம்புகேஸ்வரர், ஐராவதீஸ்வரர், பிரம்மபுரீஸ்வரர், துர்க்கை முதலிய சந்நிதிகள் உள்ளன.

தரிசித்துப் படிகள் ஏறி மேலே சென்றால் நேரே சோமாஸ்கந்தர் சந்நிதி. வலப்பால் திரும்பி, வாயில் நுழைந்தால் நேரே நடராஜ சபை உள்ளது. இம்மண்டபம் 'வௌவால் நெத்தி மண்டபம்' அமைப்புடையது. மண்டபத்தில் தூணில் துவார கணபதி உள்ளார். துவார பாலகர் உருவங்கள் இருபுறமும் உள. மூலவர் - சுயம்பு. சதுர ஆவுடையார். மூலவருக்கு நேர் எதிரில் சாளரம் வைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், மிருகண்டு மகரிஷி துர்க்கை முதலியோர் உள்ளனர். துர்க்கைச் சந்நிதி தனிச் சந்நிதியாகவுள்ளது. சண்டேசுவரர் உருவம் கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. அம்பாள் சந்நிதி - அமர்ந்தநிலை - வீராசனம். அபய வரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்களுடன் அழகிய தரிசனம். இத் தலத்தில் சஷ்டி விழா சிறப்பாக நடைபெறுகிறது. தலபுராணம் உள்ளது.

மறப்பிலா அடிமைக்கண் மனம்வைப்பார் தமக்கெல்லாம்
சிறப்பிலார் மதில்எய்தசிலை வல்லார் ஒருகணையால்
இறப்பிலார் பிணியில்லார் தமக்குஎன்றும் கேடிலார்
பிறப்பிலாப் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.

(சம்பந்தர்)

''விரிவிலா அறிவினார்கள் வேறோரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்
பரிவினாற் பேரியோர் ஏத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்தி உய்யும் வகையது நினைக்கின்றேனே.''

(அப்பர்)

''ஏகன் அநேகன்என விளங்கி எங்குந் தமதுதிருவுருவாம்
யோக ஞானநிஷ்கள உருஅருவன் சகல வடிவமதாய்
பாகம் பிரியாதருள் பெற்ற பாவைமகிழப் பெருவேளூர்
நாகமதன்மேற் பிரியா நாதன் திருத்தாள் வணங்குவாம்.''

(தலபுராணம்)

''-உருக்க
வருவேளூர்மாவெல்லா மாவேறுஞ்சோலைப்
பெருவேளூர் இன்பப் பெருக்கே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அபிமுக்தீஸ்வரர் திருக்கோயில்
மணக்கால் ஐயம்பேட்டை & அஞ்சல்
(வழி) திருவாரூர் - 610 104.
குடவாசல் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

210/93. தலையாலங்காடு.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருவாரூர் - கும்பகோணம் பேருந்துச் சாலையில் தலையாலங்காடு அடைந்து (*18 கி.மீ.*), வாய்க்கால்கள் இரண்டைக் கடந்து சென்றால் கோயிலை அடையலாம். முயலகனை அடக்கி அவன் முதுகை நெரித்து இறைவன் நடனமாடிய தலம். கபிலமுனிவர் வழிபட்டது. சங்க காலத்தில் இவ்வூர் தலையாலங்கானம் என்னும் பெயரில் விளங்கியது. தலையாலங்கானப் போரும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் பெயரும் அனைவரும் அறிந்ததே.

இறைவன் - நடனேஸ்வரர், ஆடவல்லநாதர்

இறைவி - உமாதேவி

அப்பர் பாடல் பெற்றது.

கோயிலின் முன்பு தீர்த்தம் உள்ளது. இது மிகவும் விசேஷமானது. இதில் நீராடி இறைவனுக்குத் தீபமிட்டு உறுதியுடன் வழிபட்டால் வெண்குஷ்டநோய் நீங்கப்பெறும் என்பது இன்றும் மக்களின் அசையாத நம்பிக்கையாகும். சிறிய ஊர். கோயில் தெற்கு நோக்கியது. சுவாமி அம்பாள் கோயில்கள் மட்டுமே உள்ளன. சுவாமி சந்நிதியில் விநாயகர், விசுவநாதர், தலவிநாயகர், முருகன், பைரவர், நால்வர் சந்நிதிகள் உள்ளன. மூலவர் அழகான மேனி. அம்பாள் தெற்கு நோக்கிய சந்நிதி. இக்கோயில் 'எண்கண்' கோயிலுடன் இணைந்தது. அருகாமையில் எண்கண், குடவாயில், பெருவேளூர் முதலிய திருமுறைத் தலங்களும்; மணக்கால், காட்டூர் முதலிய வைப்புத் தலங்களும் உள்ளன.

''மெய்த்தவத்தை வேதத்தை வேதவித்தை
 விளங்குகள மாமதிசூடும் விகிர்தன் தன்னை
எய்த்தவமே யுழிதந்த ஏழையேனை
 இடர்க்கடலில் வீழாமே ஏறவாங்கி
பொய்த்தவத்தவர் அறியாதநெறி நின்றானை
 புனல் கரந்திட்டு உமையோடு ஒருபாக நின்ற
தத்துவனைத் தலையாலங்காடன் தன்னைச்
 சாராதே சாலநாள் போக்கினேனே.''

(அப்பர்)

Koviloor Digital Library

-கருமை
மிலையாலங்காடு மிடற்றாய் என்றேத்தும்
தலையாலங் காட்டுத் தகவே

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நடனேஸ்வரர்/ஆடவல்லநாதர் திருக்கோயில்
தலையாலங்காடு
செம்பங்குடி அஞ்சல் - 612 603
குடவாசல் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

211/94. குடவாயில்.

குடவாசல்.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் குடவாசல் என்று வழங்குகின்றது. திருவாரூரிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. தொலைவிலும் இத்தலம் உள்ளது.

கும்பகோணம், திருவாரூர், மயிலாடுதுறை முதலிய ஊர்களிலிருந்து வருவதற்குப் பேருந்துகள் உள்ளன. ஊர் - குடவாயில். கோயில் - குடவாயிற் கோட்டம். கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக் கோயில்களுள் மேற்கு நோக்கிய வாயிலைப் பெற்றுள்ளதால் குடவாயில் என்னும் பெயர் பெற்றது.

உலகப் பிரளய காலத்தில் இறைவன், உயிர்கள் அனைத்தையும் அமிர்தகுடம் ஒன்றிலிட்டு அக்குடத்தின் வாயிலில் (முகத்தில்) சிவலிங்கமாக இருந்து காத்தார். (அமிர்ததுளி விழுந்த இடம் அமிர்த தலமாயிற்று; அமுதநீர் தேங்கிய இடம் அமிர்த தீர்த்தமாயிற்று. உயிர்களைக் காத்தமையால் கோ-நேசர் = கோணேசர் ஆயினார்.) காலம் செல்லச் செல்ல குடத்தின் வாயிலில் லிங்கத்தின்மீது புற்று மூடியது. புற்றால் மூடியிருந்த அமிர்த குடத்தைக் கருடன் தன் மூக்கினால் பிளந்து வெளிப்படுத்தியதால் இறைவனுக்கு வன்மீகாசலேசர், கருடாத்ரி எனப்பெயர்கள் வழங்கலாயின.

Koviloor Digital Library

தன் மூக்கால் பிளந்து வெளிப்படுத்திய கருடன், இறையருளால் இக்கோயிலைக் கட்டி வழிபட்டார் என்பது வரலாறு. சூரியன் வழி பட்டமையால் 'சூரியேசுவரர்' என்று; தாலப்பிய முனிவர் வழி பட்டதால் 'தாலப்பியேசுவரர்' என்றும், பிருகுமுனிவர் வழிபட்டதால் 'பிருகநாதர்' என்று சுவாமிக்குப் பல பெயர்களுண்டு. தாலப்பிய முனிவர் இத்தலத்து மந்தார மரத்தின் கீழிருந்து தவஞ்செய்ததாக வரலாறு.

குடத்திலிட்டுக் காத்த உயிர்களை, மீண்டும் படைப்புக் காலத்து வெளிப்படுத்தத் தொடங்கிய போது குடம் மூன்றாக உடைந்து. முதற்பாகமாகிய அடிப்பாகம் விழுந்த இடத்தில் இறைவன் திருமேனி கொண்டார். அதுவே குடமூக்கு எனப்படும் கும்பகோணம் (ஆதிகும்பேசம்) ஆகும். அடுத்து நடுப்பாகம் விழுந்த இடமே கலைய நல்லூராகும். குடத்தின் முகப்பு (வாயில்) பாகம் விழுந்த இடமே குடவாயிலாகும் என்பது தலவரலாறு.

இத்தலத்து திருண பிந்து முனிவர் வழிபட, இறைவன் காட்சி தந்து அவருடைய உடற்பிணியைத் தீர்த்தருளியதாகவும் வரலாறு. இத் தலத்திற்குப் பக்கத்தில் சுற்றிலும் திருச்சேறை, கரவீரம், பெருவேளூர், தலையாலங்காடு, கடுவாய்க்கரைப்புத்தூர், கொள்ளம்பூதூர், நாலூர் மயானம் முதலிய தலங்கள் உள்ளன. கதலிவனம், வன்மீகா சலம் என்பன தலத்திற்குரிய வேறு பெயர்கள்.

இத்தலம் சங்ககாலச் சிறப்பும் பழைமையும் வாய்ந்தது. சோழன் கோச்செங்கணான், சேரமான் கணைக்கால் இரும் பொறையை வென்று, அவனை இக்குடவாயிற் சிறைக் கோட்டத்தே சிறை வைத் தான் என்னும் செய்தி புறநானூற்றால் தெரிகிறது. இதனால் அன்றைய குடவாயில், சோழப்பேரரசின் சிறைக்கோட்டமாக இருந்ததெனத் தெரிகின்றது. குடவாயில் கீரத்தனார், குடவாயில் நல்லாதனார் போன்ற புலவர்கள் பாடியுள்ள பாடல்கள் அகநானூறு முதலிய சங்க இலக் கியங்களில் இடம் பெற்றுள்ளன.

அகநானூற்றில் வரும் செய்தி ஒன்றால், சங்ககாலத்தில் குடவாயில் சோழர்களின் கருவூல நிலையமாக இருந்த தென்று அறிய முடிகிறது. கல்வெட்டுச் சிறப்பு உடைய தலம் இஃது. மூன்று கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கல்வெட்டில், இறைவன் பெயர் 'குடவாயில் உடையார்' என்றும்; இறைவி பெயர் 'பெரிய நாச்சியார்' என்றும்; கோயிலின் பெயர் 'பெருந்திருக்கோயில்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் சனிபிரதோஷம் மிகச்சிறப்பு வாய்ந்ததாகும்.

Koviloor Digital Library

172/55. அம்பர்மாகாளம்

கோயில் திருமாளம்/திருமாகாளம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் '**கோயில் திருமாளம்**' என்று வழங்குகின்றனர். மயிலாடு துறை - திருவாரூர்ச் சாலையில் பேரளம் தாண்டிப் **பூந்தோட்டம்** சென்று அங்குக் கடைவிதியில் "**காரைக்கால்**" என்று வழிகாட்டி யுள்ள இடத்தில் அதுகாட்டும் சாலையில் (இடப்புறமாகச்) சென்று ரயில்வே கேட்டைத் தாண்டி நேரே (அச்சாலையில்) சுமார் 4 கி.மீ. சென்றால் "**கோயில் திருமாளம் - மங்களநாதர் கோயில்**" என்று பெயர்ப் பலகையுள்ளது - அவ்விடத்தில் திரும்பினால் கோயிலை யடையலாம். சாலையோரத்தில் கோயில் உள்ளது. கோயில்வரை வாகனங்கள் செல்லும். அரிசிலாற்றின் கரையில் தலம் அமைந்துள்ளது. அம்பன், அம்பாசூரன் என்னும் அசுரர்களைக்கொன்ற பாவந்தீரக்காளி, இறைவனைப்பூசித்து வழிபட்ட தலம். எனவே "மாகாளம்" என்று பெயர் பெற்றது. வெளிப் பிராகாரத்தில் காளி கோயில் உள்ளது. பழைமையான கோயில். சோமாசிமாறநாயனார் சோமாயாகஞ் செய்த இடம் இதுதான்.

இது தொடர்பாகச் சொல்லப்படும் வரலாறு:-

சோமாசிமாறநாயனார், நாடொறும் சுந்தரருக்கு அவர் திருவாரூரில் இருந்த போது உணவுக்குத் தூதுவளை கீரை கொண்டு தரும் தொண்டைச் செய்துவந்தார். பரவையாரும் அதைச் சமைத்து இட சுந்தரர் விரும்பிச் சாப்பிட்டு வந்தார். ஒரு நாள் சுந்தரர் அக்கீரை கொண்டு வந்து நாடொறும் தருபவர் யார் என்று கேட்டு சோமாசிமாறரைப் பற்றியறிந்து நேரில் கண்டு, அவர் விருப்பம் யாதென வினவினார். அதற்கு அவர், தான் செய்ய விருக்கும் சோமாயாகத்திற்குத் திருவாரூர் தியாகேசப் பெருமான் எழுந்தருளி அவிர்ப்பாகம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அதற்குச் சுந்தரர் உதவ வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். மறுக்கமுடியாத சுந்தரர், சோமாசி மாறரை அழைத்துக் கொண்டு திருவாரூர்ப் பெருமானிடம் வந்து வேண்டுகோளைத் தெரிவித்தார். செவிமடுத்த இறைவன் இசைந்து, தான்வரும் வேடம் தெரிந்து நாயனார் அவிர்ப்பாகம் தரவேண்டும் என்று பணித்தார். நாயனாரும் அதற்கிசைந்தார்.

நாயனார் யாக குண்டம் அமைத்து யாகத்தைத் தொடங்கினார். அவ்விடம் அம்பர் மாகாளத்திற்கும் அம்பர் பெருந்திருக்கோயிலுக்கும்

Koviloor Digital Library

இடையில் சாலையோரத்தில் உள்ளது. அவ்விடத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. அவ்விடத்தை இன்று ''பண்டார வாடை திருமாளம்'' என்று சொல்கின்றனர். இன்றும் சோமயாக உற்சவம் இவ்விடத்தில் தான் நடைபெறுகிறது.

யாகம் நடைபெறும் இடத்திற்கு, தியாகராசப் பெருமான் வெட்டியான் வேடத்தில் (நீசவடிவினராய்) வருகை தந்தார். (நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கி உடன் பிடித்துக்கொண்டு; தோளில் இறந்துபோன கன்றினைப் போட்டுக்கொண்டு, தடித்த பூணூ லணிந்து, தலையில் முண்டாசு (தலைப்பாகை) கட்டி, விநாயகரையும், சுப்பிரமணியும் சிறுவர்களாக்கி, உமாதேவியை வெட்டிச்சி வேடத்தில் தலையில் கள்குடம் ஏந்தியவாறு அழைத்துக்கொண்டு) இக்கோலத்தில் வந்த இறைவனைப் பார்த்து, எல்லோரும் அபசாரம் நேர்ந்து விட்டதென்று எண்ணியும், இக்கோலத்தைக் கண்டு பயந்தும் ஓடினர். ஆனால் சோமாசிமாறரும் அவர் மனைவியாரும் அவ்விடத்திலேயே அஞ்சி நிற்க: தந்தைவருவதை நாயனாருக்கு விநாயகர் குறிப்பாக வுணர்த்தி அச்சத்தைப் போக்கினார் - நாயனாரும் அவர் மனைவியும் இறைவனை அந்நீச வடிவில் நின்று வீழ்ந்து வரவேற்க; இறைவன் மகிழ்ந்து நாயனாருக்குக் காட்சி தந்து அருள்புரிந்தார் என்பது வரலாறு. அதனால்தான் அவ்விநாயகரை **அச்சந்தீர்த்த விநாயகர்** என்றழைக் கின்றனர்.

அருள்புரிந்த இறைமூர்த்தமே ''காட்சி கொடுத்த நாயகர்'' எனப்போற்றப்படுகிறார். இம்மூர்த்தி வலக்காலை ஊன்றி இடக்காலைச் சற்று மடக்கி வலக்கரத்தில் பெருவிரலும் நடுவிரலும் இணைய, இடக் கரத்தை ரிஷபத்தின் சிரசில் ஊன்றிக் காட்சி தருகிறார்.

இறைவன் யாகத்திற்கு நீசவடிவில் எழுந்தருளியபோது அம்பிகையின் தலையிலிருந்து கட்குடம் பொங்கிய இடம் ''பொங்கு சாராய நல்லூர்'' (இன்று வழக்கில் கொங்கராய நல்லூர்) என்றும்; இறைவன் சுமந்துவந்த பறை தானாக அடிபபட்ட இடம் ''அடியுக்க மங்கலம்'' (இன்று அடியக்க மங்கலம்) என்றும்; இறந்த கன்றை ஏந்திய இடம் ''கடா மங்கலம்'' என்றும் இன்றும் வழங்குகின்றன.

இறைவன் - மாகாளேஸ்வரர், காளகண்டேஸ்வரர்.
இறைவி - பக்ஷயாம்பிகை
தலமரம் - கருங்காலி
தீர்த்தம் - மாகாள தீர்த்தம்
சம்பந்தர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

திருப்புகழ்

''அயிலார் மைக்கடு விழியார் மட்டைக
ளயலார் நத்திடு விலைமாதர்
அணைமீதிற் றுயில் பொழுதே தெட்க
ளவரேவற் செய்து தமியேனும்
மயலாகித்திரி வதுதானற்றிட
மலமாயைக் குண மதுமாற
மறையால் மிக்கருள் பெறவே யற்புத
மதுமாலைப் பத மருள்வாயே
கயிலாயப் பதியுடையாருக் கொரு
பொருளே கட்டளை யிடுவோனே
கடலோடிப்புகு முதுசூர் பொட்டெழ
கதிர்வேல் விட்டிடு திறலோனே
குயிலாலித்திடு பொழிலே சுற்றிய
குடவாயிற் பதி உறைவோனே
குறமாதைப் புணர் சதுராவித்தக
குறையா மெய்த் தவர் பெருமாளே.

-நிலைகொள்
தடவாயில் வெண்மணிகள் சங்கங்கள் ஈனும்
குடவாயில் அன்பர் குறிப்பே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கோணேசுவரர் திருக்கோயில்
குடவாசல் & அஞ்சல் - 612 601
குடவாசல் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

212/95. திருச்சேறை.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1) கும்பகோணத்திலிருந்து செல்லலாம். 15 கி.மீ. தொலைவு. திருவாரூரிலிருந்தும் வரலாம்.

2) கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்து உள்ளது.

Koviloor Digital Library



இத்தலம் சைவம், வைணவம் ஆகிய இருசமயங்களின் சிறப்பும் வாய்ந்தது. இங்குள்ள சாரநாதப் பெருமாள் கோயில் மங்களா சாசனம் பெற்றது. மார்க்கண்டேயர், தௌமியமுனிவர் வழிபட்டது.

இறைவன் - செந்நெறியப்பர், சாரபரமேஸ்வரர்.
இறைவி - ஞானவல்லி.
தலமரம் - மாவிலங்கை.
தீர்த்தம் - மார்க்கண்டேய தீர்த்தம்.
சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

ஊர் பெரியது. **செந்நெறியப்பர் கோயிலை மக்கள் வழக்கில் "உடையார் கோயில்"** என்று **அழைக்கின்றனர்.** வயல் சூழ்ந்த **'சேற்றூர்'.** இச்சொல்மருவி **"சேறை"** ஆயிற்று. கிழக்கு நோக்கிய கோயில், எதிரில் ஞானதீர்த்தம் உள்ளது. கோபுர வாயிலைக் கடந்தால் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள. இரண்டாம் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. உள்ளே விநாயகர் சந்நிதி, மார்க்கண்டேயர் வழிபட்ட அமுதகடேஸ்வர லிங்கம், அம்பாள் சந்நிதி, சப்தமாதர்கள், நால்வர், முருகன், கஜலட்சுமி, ஜேஷ்டாதேவி சந்நிதிகளும் உள்ளன. நடராச சபை உள்ளது. கடன் தொல்லையிலிருந்து வழிபடுவோரை விடுபடச் செய்யும் "ரிண விமோசன லிங்கேஸ்வரர்" சந்நிதி விசேஷ மானது. பைரவர் சிறந்த பிரார்த்தனாமூர்த்தி.

சுவாமி - மூலத்திருமேனி, பெரியபாணம். அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது. அருகிலுள்ள தலங்கள் அரிசிற்கரைப்புத்தூர், திருநறையூர், குடவாசல் முதலியன.

Koviloor Digital Library

"முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரியதள் படவுரிசெய்த விறலினர்
நறியுறும் இதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி அடிகள்தம் வளநகர் சேறையே."

(சம்பந்தர்)

"நிறைத்த மாமணலைக் கூப்பி நேசமோடு ஆவின்பாலைக்
கறந்து கொண்டாட்டக் கண்டு கறுத்த தன் தாதைதாளை
எறித்த மாணிக்கு அப்போதே எழில்கொள் சண்டீசன் என்னச்
சிறந்தபேர் அளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே."

(அப்பர்)

-"மடவாட்கோர்
கூறை உவந்தளித்தகோவே யென்றன்பர் தொழச்
சேறை உவந்திருந்த சிற்பரமே"

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. செந்நெறியப்பர் திருக்கோயில்
திருச்சேறை & அஞ்சல் - 612 605
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

213/96. நாலூர் மயானம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் - குடவாசல் பேருந்துச் சாலையில் திருச்சேறையை அடுத்து இத்தலமுள்ளது. நாலூர், நாலூர்மயானம் என இருதலங்களாக உள்ளது. நாலூர் - வைப்புத்தலம் - நாலூர்மயானந்தான் பாடல் பெற்றது. நாலூர் - பேருந்துச் சாலையில் உள்ளது. இது மாடக்கோயில். நாலூர் மயானம் 1 கி.மீ. உட்புறத்தில் கிழக்கில் உள்ளது. இதுமுதலாம் ஆதித்தசோழன் முதலியோருடைய திருப்பணிகள் பெற்றது.

சோழர் காலத்தில் சதுர்வேதி மங்கலமாக இருந்த ஊர். தமிழில் 'நால்வேதியூர்' என்று வழங்கத்தொடங்கி நாலூர் என்று மருவியிருக்கலாம் என்கின்றனர்.

Koviloor Digital Library

நான்குமயானங்களுள் இது ஒன்று. மற்ற மூன்றும் (1) கச்சிமயானம் (2) கடவூர்மயானம் (3) காழிமயானம் என்பவை.

இறைவன் - ஞானபரமேஸ்வரர்.

இறைவி - ஞானாம்பிகை

தீர்த்தம் - ஞானதீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

ஆபஸ்தம்பரிஷி வழிபட்ட சிறப்புடையது.

சிறிய ஊர். சோழர் பாணியில் அமைந்த கோயில். கிழக்கு நோக்கியது. எதிரில் ஞானதீர்த்தம் உள்ளது. கருவறை சதுர அமைப்புடையது. விமானம் உருண்டை வடிவம். தூண்கள், போதிகைகள் முதலியன மிக்க அழகுடையன. கல்வெட்டில் இத்தலம் ''செற்றூர்க் கூற்றத்துப் பிரமதேயம்'' என்றும், இறைவன் பெயர் 'மயானத்துப் பரமசுவாமி' என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

(நாலூர் - வைப்புத்தலம் . சுவாமி - பலாசவனநாதர், கிழக்கு பார்த்தசந்நிதி. படிகளேறிச்சென்று மூலவரைத் தரிசிக்கிறோம். சுயம்புத் திருமேனி - மேனியில் ரேகைகள் உள்ளன. அம்பாள் பெரிய நாயகி தெற்கு பார்த்த சந்நிதி. தலமரம் - பலாசு - கஜப்பிரஷ்ட விமானம்.)

''கோலத்தார் கொன்றையான் கொல்புலித்தோலாடையான்
நீலத்தார் கண்டத்தான் நெற்றியோர் கண்ணான்
ஞாலத்தார் சென்றேத்து நாலூர் மயானத்தில்
சூலத்தான் என்பார்பால் சூழாவாம் தொல்வினையே''

(சம்பந்தர்)

-''வேறுபடாப்
பாலூர் நிலவிற் பணிலங்கள் தன்கதிர்செய்
நாலூரில் அன்பர் பெறு நன்னயமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஞானபரமேஸ்வரர் திருக்கோயில்
நாலூர் மயானம்
திருச்சேறை அஞ்சல் - 612 605
குடவாசல் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

214/97. கடுவாய்க்கரைப்புத்தூர்

ஆண்டார் கோயில்



Koviloor Digital Library

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

குடவாசல் - வலங்கைமான் பேருந்துச் சாலையில் சென்று இக் கோயிலையடையலாம். குடமுருட்டியாற்றின் கரையில் உள்ள தலம். 'குடமுருட்டி'க்குப் பழைய பெயர் 'கடுவாய்'. புத்தூர் - என்பது ஊர்ப்பெயர். இப்பெயரில் பல ஊர்களிருப்பதால், வேறுபாடு தெரிவதற்காக இத்தலம் 'கடுவாய்க்கரைப்புத்தூர்' என்று வழங்கலாயிற்று. நகரத்தார் திருப்பணி பெற்றதலம். கோயில் ஊரின் மத்தியில் கிழக்கு நோக்கியுள்ளது.

காசிப முனிவர் வழிபட்டது.

இறைவன் - சொர்ணபுரீஸ்வரர்

இறைவி - சொர்ணாம்பிகை, சிவாம்பிகை

தலமரம் - வன்னி

தீர்த்தம் - திரிசூல கங்கை (கோயிலின் வலப்புறம் உள்ளது.)

அப்பர் பாடல் பெற்றது.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சியளிக்கிறது. கோபுர வாயிலில் சித்தி விநாயகர் உள்ளார். கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ளன. முன் மண்டபம் கருங்கல்லால் ஆனது. சுவாமி, அம்பாள் சந்நிதிகள் உயரமான இடத்தில் அமைந்துள்ளன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

''ஒருத்தனை மூவுலகொடு தேவர்க்கும்
அருத்தனை அடியேன் மனத்துள் அமர்
கருத்தனைக் கடுவாய்ப் புனலாடிய
திருத்தனைப் புத்தூர்ச் சென்று கண்டுய்ந்தெனே.''

(அப்பர்)

-''மேலூரும்
நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் சூழ்ந்த கடு
வாய்க்கரையுண் மேவுகின்ற வண்மையே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்
ஆண்டார் கோயில் & அஞ்சல்
வலங்கைமான் S.O. 612 804.
திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

215/98. இரும்பூளை

ஆலங்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் ஆலங்குடி என்று வழங்குகிறது.

கும்பகோணம் - நீடாமங்கலம் சாலையில் உள்ள ஊர். பேருந்து வசதி உள்ளது. பூளை என்னும் செடியைத் தலவிருட்சமாக உடைய தாதலின் இரும்பூளை எனப்பெயர் பெற்றது.

இறைவன் - காசிஆரண்யேஸ்வரர், ஆபத்சகாயேஸ்வரர்.

இறைவி - ஏலவார்குழலி. இத்தலத்தில் தட்சிணாமூர்த்தி விசேஷம் இதைத் தட்சிணா மூர்த்தித் தலம் என்பர்.

தீர்த்தம் - அமிர்த புஷ்கரணி மற்றும் உள்ள தீர்த்தங்கள்.

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்றது.

விசுவாமித்திரர் வழிபட்ட தலம். ஆலகால விஷத்தை இறைவன் உண்டு தேவர்களைக்காத்தபிரான் உள்ள தலம். இதனால் ஆலங்குடி என்றாயிற்று என்பர். இதற்குச் சான்றாகச் சொல்லப்படும் காளமேகப் புலவர் பாடல் வருமாறு.

''ஆலங்குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான் என்று ஆர் சொன்னார் - ஆலம்
குடியானேயாகில் குவலயத்தோரெல்லாம்
மடியாரோ மண் மீதினில்.''

இவ்வூரில் விஷத்தால் எவர்க்கும் எவ்விதத் தீங்கும் உண்டாவ தில்லை என்று சொல்லப்படுகிறது. ஆலயம் ஊரின் நடுவே அழகாக, ஐந்து நிலைகள் கொண்ட ராஜகோபுரத்துடன் காட்சியளிக்கின்றது. அழகான கோயில் சிற்பங்கள் அதிகம் உள்ளன.

உள்ளே நுழைந்ததும் மேலக்குடவரையில் ''கலங்காமல் காத்த விநாயகர்'' காட்சி தருகிறார். வணங்கி உள் நுழைந்தால் அம்பாளின் தெற்கு நோக்கிய சந்நிதி. இரண்டாம் வாயிலைக் கடந்தால் சூரியன் சந்நிதி உற்சவ சுந்தரர் தரிசனம். உள் பிராகாரத்தில் நால்வர், சூரியர், சோமேசர், குருமோட்சேஸ்வரர், சோமநாதர் சப்தரிஷிநாதர், விஷ்ணுநாதர், பிரமீசர் ஆகிய சப்தலிங்கங்களோடு காசிவிசுவநாதரும் விசாலாட்சி அகத்தியரும் உள்ளனர்.

ஆக்ஞாகணபதி, சோமாஸ்கந்தர், பெரிய வடிவோடுகூடிய விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், கல்யாணசாஸ்தா, சப்த மாதாக்கள் முதலிய உற்சவமூர்த்தங்களும் உள்ளன. சபாநாதர் சந்நிதியில் திருமுறைக் கோயில் உள்ளது. உற்சவ தட்சிணாமூர்த்தி சனகாதி நால்வருடன் காட்சி தருகின்றார்.

சுவாமி மகாமண்டபத்தில் நந்தி பலிபீடம் செப்புத் திருமேனி யுடன் உள்ளது. மகாமண்டப வாயிலில் துவார பாலகர்களும் உளர். ஆபத்சகாயர் கிழக்கு நோக்கிய சந்நிதி. இத்தலத்துச் சிறப் புடைய தட்சிணாமூர்த்தி தெற்கு கோஷ்டத்திலுள்ளார். மேற்கில் இலிங்கோற் பவரும், வடக்கில் பிரம்மாவும், துர்க்கையும் உளர். 'ஞானகூபம்' என்னும் தீர்த்தக் கிணறு உள்ளது. சுக்கிரவார அம்மன் சந்நிதி, சனீஸ்வரர் சந்நிதி, வசந்த மண்டபம், சப்தமாதா ஆலயமும் உள்ளன.

இத்தலத்தின் கிழக்கே 'பூளைவள ஆறு' பாய்கிறது. ஐப்பசியில் இதன் தீர்த்தத்தைக் கொண்டு வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்கிறார்கள்.

Koviloor Digital Library

திருவிடைமருதூர் (மத்தியார்ச்சுன) மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரமாக உள்ள தலங்களுள் இதுவும் ஒன்று. ஏனையவை:- (1) திருவலஞ்சுழி (விநாயகர்) (2)திருவேரகம் (முருகன்) (3) திருவாவடுதுறை (நந்தி) (4) சூரியனார் கோயில் (நவக்கிரகம்) (5) சேய்ஞலூர் (சண்டேஸ்வரர்) (6) தில்லை (நடராசர்) (7) சீர்காழி (பைரவர்) (8) திருவாரூர் (சோமாஸ் கந்தர்) என்பன. பஞ்ச ஆரண்யத்தலங்களுள் இதுவும் ஒன்று. குருபெயர்ச்சி ஆராதனை, சித்திரைப் பௌர்ணமி விழா, தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. தட்சிணாமூர்த்திக்குத் தேர்விழா நடைபெறுகிறது.

''நச்சித் தொழுவீர்காள் நமக்கிது சொல்லீர்
கச்சிப் பொலி காமக்கொடியுடன் கூடி
இச்சித்து இரும்பூளை இடங்கொண்ட ஈசன்
உச்சித்தலையில் பலி கொண்டுழல் ஊணே.'' *(சம்பந்தர்)*

''பொல்லாத பாவங்கள் கோடானகோடி இப்
புவிமிசையிலோர் வடிவமாம்
புலையனேனுனை மறந்தனு தினஞ்செய்து வரும்
பொல்லாத வினையெண்ணிலேன்
அல்லாரு மலமாயை கருமங்களணுகாத
அகள நிஷ் பிரபஞ்சமாம்
அகளங்க சுத்த நித்யானந்த அநுபவம்
அணுவளவு (ம்) வந்ததில்லை
நல்லார் முன் அணுகாத யமதூதர் கொண்டு போய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்கா நின்றதுள்ள முனைநம்பினேன்
நம்பினேன் வட கயிலையாய்
உல்லாச பரமகுரு நாதனே ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்(கு)
உயிரான பரமசிவமே''.

(தட்சிணாமூர்த்தி திருவருட்பா)

-''வாய்த்த
பெரும்பூகந் தெங்கிற்பிறங்க வளங் கொள்ளும்
இரும்பூளை மேவியிருந்தோய்''.

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்
ஆலங்குடி & அஞ்சல் - 612 801
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

216/99. அரதைப்பெரும்பாழி

ஹரித்வாரமங்கலம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் அரித்துவாரமங்கலம் என்று வழங்குகிறது.

தஞ்சையிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் பேருந்துகள் உள்ளன. தஞ்சையிலிருந்து இத்தலத்திற்கு நகரப்பேருந்து (Town Bus)

உள்ளது. கும்பகோணம் மன்னார்குடிப் பாதையில் வெட்டாற்றுப் பாலத்தைத் தாண்டி, அமராவதி ஊரிலிருந்து, வலப்பால் பிரியும் அம்மாப்பேட்டை சாலையில் சென்று, கீழ்ப்பாலம் என்னுமிடத்தில் இடப்பக்கமாகப் பிரியும் கிளைப் பாதையில் சென்று பெருங்குடி என்னும் ஊரைத் தாண்டிச் சென்றால் அரதைப் பெரும் பாழியை அடையலாம். தஞ்சையிலிருந்து, அம்மாப்பேட்டைக்கு இவ்வூர் வழியாக நகரப் பேருந்து செல்கிறது.

பழைய கோயில். திருமால் பன்றி வடிவங்கொண்டு இறைவன் முன்பு பள்ளம் (துவாரம்) பறித்தமையால் அரி-துவார-மங்கலம் என்று பெயர் பெற்றது என்பர்.

இறைவன் - பாதாளேஸ்வரர், பாதாள வரதர்
இறைவி - அலங்காரவல்லி
தலமரம் - வன்னி
தீர்த்தம் - பிரம தீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

மூன்று நிலைகளுடைய கோபுரம் - கிழக்கு நோக்கியது. உள்ளே சென்றதும் வலப்பால் நடராசர் தெற்கு நோக்கிய காட்சி. பதஞ்சலி, வியாக்ரபாதர். சிவகாமி உடன் எழுந்தருளியுள்ளனர். வெளியில் சுப்பிரமணியர் சந்நிதி. சம்பந்தர் பதிகம் பொறிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

வெளிப்பிராகாரத்தில் விநாயகர் சந்நிதி உள்ளது. தட்சிணாமூர்த்தி சந்நிதி, தனிச் சந்நிதியாக உள்ளது. எதிரில் வன்னி மரம் உள்ளது. கோயிலின் முன்னும் பின்னுமாக இரு வன்னி மரங்கள் உள்ளன. மூலவர் திருவாயிலுக்கு வலப்பால் கஜலட்சுமி திருமேனி உள்ளது. சுவாமி, அம்பாள் சந்நிதிகள் பக்கத்துப் பக்கத்திலேயே கிழக்கு நோக்கி உள்ளன.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி. இதன் முன்னால் சற்றுப் பக்கவாட்டில் வட்டமாகக் கல் இட்டி மூடியுள்ள இடமே, அரி- துவாரம் (பிலம்) என்றும், இவ்வழி அரி, வராகமாகத் தோண்டிச் சென்ற ஐதீகமாகவும் சொல்லப்படுகிறது.

அம்பாள் சந்நிதி - நின்ற திருக்கோலம். அம்பாள் சந்நிதிக்கு நேரே தனிக் கோபுர வாயில் உள்ளது. இத்திருக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு உள்ளதென்பர் கல்வெட்டு ஆய்வாளர்.

''மண்ணர் நீரார் அழலார் மலிகாலினார்
விண்ணர் வேதம் விரித் தோதுவார் மெய்ப் பொருள்
பண்ணர் பாடல் உடையார் ஒரு பாகமும்
பெண்ணர் கோயில் அரதைப்பெரும் பாழியே''. *(சம்பந்தர்)*

-''விரும்பும்
விரதப் பெரும்பாழி விண்ணவர் களேத்தும்
அரதைப் பெரும்பாழி ஆர்ந்தோய்''. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. பாதாளேஸ்வரர் திருக்கோயில்
ஹரித்வாரமங்கலம் & அஞ்சல் 612 802
குடந்தை வட்டம் - தஞ்சை மாவட்டம்.

217/100. அவளிவணல்லூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

1) கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய ஊர்களிலிருந்து இத்தலத்திற்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

2) கும்பகோணத்திலிருந்து அம்மாப்பேட்டை செல்லும் நகரப் பேருந்து இத்தலத்தின் வழியாகச் செல்கிறது.

Koviloor Digital Library

3) தஞ்சையிலிருந்து அரித்துவார மங்கலம் செல்லும் நகரப் பேருந்தும் இத்தலத்தின் வழியாகச் செல்கிறது.

4) அரித்துவார மங்கலத்திலிருந்து 3 கி.மீ. மன்னார்குடிசாலையில் சென்றால் இவ்வூரையடையலாம். சாலை ஓரத்திலேயே கோயில் உள்ளது.

அவள் - இவள் - நல்லூர் என்பது ஊர்ப் பெயர். இப்பெயர் பற்றிய வரலாறு வருமாறு:-

"பண்டைநாளில் இத்தலத்தில் இறைவனைப் பூசித்து வந்த ஆதி சைவ அந்தணர் ஒருவருக்கு இரு பெண்கள் இருந்தனர். மூத்த பெண்ணை ஒருவருக்கு மணம் முடித்தார். மணந்து கொண்டவர் சிறிது காலங்கழித்து, காசி யாத்திரை சென்றார். அக்காலத்தில் மூத்த பெண்ணுக்கு அம்மை வார்க்கப்பெற்று, உருவம் மாறியதோடு கண்களையும் இழந்தாள். இரண்டாவது பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றது. சில ஆண்டுகள் கழித்து, காசியாத்திரை சென்றிருந்த மூத்த மருமகன் வீடு திரும்பினார். தன் மனைவியின் உருவ வேறுபாட்டைக்கண்டு, "இவள் என் மனைவியல்லள், இளையவளே என் மனைவி" என்று வாதிட்டார்.

மனங்கலங்கிய ஆதிசைவர் இறைவனைப் பிரார்த்திக்க, இறைவன் காட்சிதந்து மனந்தடுமாறிய மருமகனைப் பார்த்து, மூத்தவளே அவர் மனைவி என்னும் பொருளில் "அவள் இவள்" என்று சுட்டிக் காட்டி மறைந்தார். மேலும் இறைவன் "அருளியவாறு மூத்தவளும் இத் தலத்துத் தீர்த்தத்தில் மூழ்கிப் பண்டைய உடலும் கண்களும் பெற்றாள்; கணவனுடனும் சேர்ந்து இன்புற்று வாழ்ந்தாள்". இத்தலத்திற்குப் 'புல்லாரண்யம்', 'சாட்சிநாதபுரம்', 'பாதிரிவனம்' எனப் பலபெயர்களுண்டு. திருமால், காசிபமுனிவர், முருகன், சூரியன், அகத்தியர், கண்வமகரிஷி ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - சாட்சிநாதர்

இறைவி - சௌந்தரநாயகி; சௌந்தரவல்லி

தீர்த்தம் - சந்திரதீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது.

தலமரம் - பாதிரி. மதிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்ற தலம்.

ராஜகோபுரமில்லை. கோயில் முகப்பு கிழக்கு நோக்கியது. உள்ளே நுழைந்தவுடன் வெளிச்சுற்றில் அம்பாள் சந்நிதி தெற்கு

Koviloor Digital Library

நோக்கியுள்ளது. நின்ற திருக்கோலம். வழிபட்டுச் சென்றால் முகப்பில் விநாயகர் ஒருபுறமும், துவார பாலகர்களாக 'ஆட்கொண்டார்', 'உய்யக்கொண்டார்' உருவங்களும் உள்ளன. உள்ளே நுழைந்தால் நேரே மூலவர் காட்சி தருகிறார். மூலவர் - சுயம்பு மூர்த்தி, கிழக்கு நோக்கியது. உள்ளும் துவாரபாலகர்கள் உள்ளனர். மூலவருக்குப் பின்னால், தலவரலாற்றின்படி சாட்சி சொன்ன நிலையில் சாக்ஷிநாதராக - ரிஷபாருடர், பார்வதி காட்சி தருகின்றனர்.

உள்சுற்றில் விநாயகர், நால்வர், சந்நிதிகள் பரவையாருடன், கண்வமுனிவர், வீரபத்திரர், சப்தகன்னியர், அறுபத்துமூவர் மூலத் திருமேனிகள் ஆகிய சந்நிதிகள் உள்ளன. சோமாஸ்கந்தர், விநாயகர், சிவகாமி, நால்வர், ஆறுமுகர், மகாலட்சுமி ஆகிய உற்சவத் திரு மேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நடராசர் சந்நிதி உள்ளது. பக்கத்தில் குமாரலிங்கம், காசிவிசுவநாதர், விசாலாட்சி, தபஸ்அம்பாள் திருமேனிகள் உள்ளன. எதிரில் நவக்கிரக சந்நிதிகள் உள்ளன. கால பைரவர், சூரியன் சந்நிதிகள் உள. கோஷ்டமூர்த்தங்களாக: அகத்தியர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் உளர். எதிரில் சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது.

தை அமாவாசையன்று பிரம்மோற்சவம் ஏகதின (ஒருநாள்) உற்சவமாக நடத்தப்படுகின்றது. மூன்றாம் இராசேந்திரனின் கல் வெட்டுக்களில் (கி.பி. 1246 - 1279) இக்கோயிலைப் பற்றிய குறிப் புக்கள் உள்ளன. கல்வெட்டில் இறைவனின் பெயர் 'தம்பரிசுடையார்' என்று குறிக்கப்படுகிறது.

''துஞ்சல்இலராய் அமரர் நின்று தொழுதுஏத்த அருள்செய்த
நஞ்சுமிடறுண்டு கரிதாய வெளிதாகியொரு நம்பன்
மஞ்சுற நிமிர்ந்துமை நடுங்க அகலத்தொடு அளாவி
அஞ்ச மதவேழ உரியான் உறைவது அவளிவள் நல்லூரே''

(சம்பந்தர்)

''நன்மைதான் அறியமாட்டான் நடுவிலா அரக்கர் கோமான்
வன்மையே கருதிச்சென்று வலிதனைச் செலுத்தலுற்றுக்
கன்மையான் மலையையோடிக் கருதித்தான் எடுத்துவாயால்
அம்மையோ என்ன வைத்தார் அவளிவணல்லூராரே''. *(அப்பர்)*

-சரதத்தால்
ஏதும் அவள் இவள் என்று எண்ணாதவர் இறைஞ்சி
ஓதும் அவளிவணல் லூருடை யோய்''. *(அருட்பா)*

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி. சாட்சிநாதர் திருக்கோயில்
அவளிவணல்லூர் - ஹரித்வார மங்கலம் அஞ்சல்
612 802
கும்பகோணம் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

218/101. பரிதிநியமம்

பருத்தியப்பர் கோயில், பரிதியப்பர் கோயில்.



சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் 'பருத்தியப்பர்' கோயில் என்றழைக்கின்றனர்.

(1) தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை பேருந்துச் சாலையில் மேல உளூர் (உழவூர்) சென்று அங்கிருந்து 2 கி.மீ. ல் உள்ள இத்தலத்தை யடையலாம். வழியில் கோயில் வளைவு ஒன்று அமைக்கப்பட் டுள்ளது. சாலையின் பக்கத்தில் கோயில் உள்ளது.

(2) தஞ்சையிலிருந்து மாரியம்மன் கோயில் வழியாகவும், மன்னார்குடிச் சாலை சடையார் கோயில் பொன்றாப்பூர் வழியாகவும் நகரப் பேருந்து செல்கிறது.

Koviloor Digital Library

பரிதி - சூரியன். நியமம் - கோயில். ஒருகாலத்தில் சூரியன் கோயிலாக இருந்து பின்பு சிவாலயமாக மாறியிருக்கலாம் என்பர். சூரியன் வழிபட்ட தலம் - சூரியன் வழிபடும் உருவம் கோயிலில் உள்ளது. பரிதிவனம், பரிதிகேசுவரம் என்பன வேறு பெயர்கள்.

இறைவன் - பாஸ்கரேஸ்வரர், பரிதியப்பர்.

இறைவி - மங்களாம்பிகை, மங்களநாயகி

தலமரம் - அரசமரம் - (இத்தலத்திற்கு அரசவனம் என்றும் பெயர்)

தீர்த்தம் - சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம், (சூரியதீர்த்தம் கோயிலின் முன்பும் சந்திரதீர்த்தம் பின்பும் உள்ளது)

சம்பந்தர் பாடல் பெற்றது.

பழைமையான கோயில் - கிழக்கு நோக்கியுள்ளது. ஐந்து நிலை ராஜகோபுரம். இரண்டாம் கோபுரம் மூன்று நிலை. முதல் கோபுரம், உள்ளே நுழைந்ததும் கொடிமரம், விநாயகர், நந்தி, பலிபீடம் வசந்த மண்டபத்திற்குப் பக்கத்தில் அம்பாள் கோயில் தெற்கு பார்த்து உள்ளது. இரண்டாங் கோபுர வாயிலைக் கடந்து பிராகாரத்தில் வந்தால் விநாயகர், முருகன், கஜலட்சுமி, சந்நிதிகளைத் தரிசிக்கலாம். நடராச சபை உள்ளது. அருகில் பைரவர், சூரியன், சந்திரன் நவக்கிரகங்கள் உள்ளன. இங்குள்ள முருகப் பெருமான் சிறந்த வரப்பிரசாத மூர்த்தியாக வழிபடப் பெறுகின்றார்.

துவாரபாலகர்களையும் விநாயகரையும் தொழுது உட்சென்றால் சுயம்பு மூர்த்தமாகத் திகழ்கின்ற மூலவரைத் தரிசிக்கலாம். மூலவருக்கு எதிரில் நந்தி, பலிபீடம் - அடுத்துச் சூரியன் வழிபடும் நிலையில் உருவம் உள்ளது. சண்டேசுவரர் சந்நிதியில் மூன்று திருமேனிகள் உள்ளன. கோயிலுக்குத் தென்பால் பிடாரி கோயில் உள்ளது. கோயிலருகில் இடும்பன் கோயிலும் உள்ளது. ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத்திட்டத்தின்மூலம் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். பிரதோஷ வழிபாடு நடைபெறுகிறது. இக்கோயில் தஞ்சை மாவட்டம் கீழ்வேங்கை நாட்டாருக்கும் சொந்தமானது. பங்குனித்திங்கள் 17,18,19 நாள்களில் சூரிய ஒளி சுவாமி மீதுபடுகிறது. சூரியன் வழிபட்ட 7 தலங்களுள் இதுவும் ஒன்று. ஏனையவை 1. திருக்கண்டியூர் 2. வேதிகுடி 3. குடந்தைக்கீழ்க் கோட்டம் 4. தெளிச்சேரி 5. புறவார் பனங்காட்டூர் 6. நெல்லிக்கா.

Koviloor Digital Library

"கண்டியூர் வேதிகுடி கற்குடந்தைக் கீழ்க்கோட்டம்
பண்பரிதி நன்நியமம் பாங்கார் தெளிச்சேரி
பொற்புறவார் பனங்காட்டூர் நெல்லிக்கா ஏழும்
பொற் பரிதி பூசனை ஊர்." *(தனிப்பாடல்)*

"விண் கொண்ட தூமதி சூடி நீடுவிரிபுன்
சடைதாழப்
பெண் கொண்ட மார்பில் வெண்ணீறு பூசிப்
பேணார் பலிதேர்ந்து
கண் கொண்ட சாய லொடேர் கவர்ந்த
கள்வர்க் கிடம் போலும்
பண் கொண்ட வண்டினம் பாடியாடும்
பரிதின் நியமமே".

(சம்பந்தர்)

-"கோதகன்ற
நீட்டுங் கருதி நியமத்தோர்க்கு இன்னருளை
நீட்டும் பருதி நியமத்தோய்".

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பாஸ்கரேஸ்வரர்/பரிதியப்பர் திருக்கோயில்
பருத்தியப்பர் கோயில்
மேலவுளூர் அஞ்சல் (MELAVULUR)
தஞ்சை RMS.614 904

219/102. வெண்ணி.

கோயில்வெண்ணி.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

(1) தஞ்சை - நீடாமங்கலம் (2) தஞ்சை - திருவாரூர்; பேருந்துச் சாலையில் சாலியமங்கலத்தைக் கடந்து, 'கோயில்வெண்ணி'; நிறுத் தத்தில் (Stop) இறங்கி, இடப்புறமாகச் சாலையில் 1/2 கி.மீ. சென்றால் கோயிலை அடையலாம். ஊர், சாலையின் வலப்புறம் உள்ளது.

தலம் - 43

Koviloor Digital Library

மக்கள் வழக்கில் 'கோயில் வெண்ணி' என்று வழங்குகிறது. பழைமையான ஊர். சங்ககாலப் புலவர் வெண்ணிக் குயத்தியார், புறநானூற்றுப் பாட்டில் கரிகாற் சோழனின் வெண்ணிப் போரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். 'வென்றியூர்' என்பது 'வெண்ணியூர்' என்று வழங்கி, 'வெண்ணி' என்று சுருங்கியிருக்கலாம் என்பது ஒரு கருத்து. கரும்பு, நந்தியாவர்த்தக் காடுகளாக இருந்த இவ்விடத்தில் இருமுனிவர்கள் தமக்குள் மாறுபட்டுக் கூச்சலிட, அவ்வழியே வந்த முசுகுந்தன் அதுகேட்டு, வந்து, இருவரையும் சாந்தப்படுத்தி, சுவாமி இருப்பதறிந்து கோயில் எடுப்பித்தான் என்பர்.

இறைவன் - வெண்ணிக் கரும்பேஸ்வரர், வெண்ணிநாதர்.

இப்பெயருக்கு ஏற்ப சிவலிங்கம், கருப்பங்கழிகளை ஒன்று சேர்த்து வைத்துள்ளது போலவுள்ளது).

இறைவி - சௌந்தர நாயகி

தலமரம் - நந்தியாவர்த்தம்

தீர்த்தம் - சூரிய, சந்திர தீர்த்தங்கள்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில். எதிரில் சூரியதீர்த்தம் - குட்டை போல் உள்ளது. நகரத்தார் திருப்பணி பெற்ற கோயில். ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் பழைமையாகக் காட்சியளிக்கின்றது. உள்ளே நந்தி, பலிபீடம் உள்ளன. பிராகாரத்தில் விநாயகர், முருகன், கஜலட்சுமி, பைரவர், நவக்கிரக சந்நிதிகள் உள்ளன. கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை ஆகியோர் உளர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. சுவாமியையும் அம்பாளையும் ஓரிடத்திலிருந்து ஒருசேரத் தரிசிக்கும் அமைப்பு உள்ளது. சுவாமி கிழக்கு நோக்கியது. அம்பாள் தெற்கு நோக்கியது. கருவறை அகழி அமைப்புடையது.

துவாரபாலகர்களைக் கடந்து, துவாரகணபதியை வணங்கி உட்சென்று மூலவரைத் தரிசிக்கலாம். மூலவர் - சுயம்பு - சதுர ஆவுடையார். அம்பாள் சந்நிதிக்குப் பக்கத்தில் நடராசசபை உள்ளது. தலப்பதிகம் கல்வெட்டில் பதிக்கப்பட்டுள்ளது. அம்பாள் நின்ற திருக் கோலம் - அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள், இருபுறமும் துவாரபாலகியர் உருவங்கள் கதையில் உள்ளன. அம்பாளுக்குப் பிரார்த்தனையாக வளையல்களைக் கோர்க்கும் பழக்கம் இங்குள்ளது. இவ்வாறு வளையல்களைக் கோர்த்துள்ள ஒருகழி சந்நிதிக்கு

Koviloor Digital Library

எதிர்த் தூணில் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். நவராத்திரி, சஷ்டி, பங்குனி உத்திரம் முதலிய விழாக்கள் சிறப்புடையன.

கல்வெட்டில் இத்தலம் ''சுத்தமலி வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து வெண்ணி'' என்று குறிக்கப்பெறுகின்றது. இராசராசன் குலோத்துங்கன் (சோழர்) காலக் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இவற்றுள் ஒரு கல் வெட்டு 1196 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாதலின், இக்கோயில் 12 ஆம் நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்திருந்தது என்று அறிகின்றோம்.

''சடையானைச் சந்திரனோடு செங்கண் அரா
உடையானை உடை தலையிற் பலி கொண்டூரும்
விடையானை விண்ணவர்தாம் தொழும் வெண்ணியை
உடையானை அல்லது உள்காது எனதுள்ளமே''.

(சம்பந்தர்)

''முத்தினை பவளத்தை முளைத்த எம்
தொத்தினைச் சுடரை சுடர் போல் ஒளிப்
பித்தனைக் கொலு நஞ்சினை வானவர்
நித்தனை நெருநற் கண்ட வெண்ணியே''.

(அப்பர்)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வெண்ணிக்கரும்பேஸ்வரர் திருக்கோயில்
கோயில் வெண்ணி & அஞ்சல்
நீடாமங்கலம் வட்டம்.
திருவாரூர் மாவட்டம் 614 403.

220/103. பூவனூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

வெண்ணாற்றின் தென்கரையில் உள்ள ஊர்.

(1) திருவாரூர், நீடாமங்கலம் - மன்னார்குடி செல்லும் பேருந்தில் ஏறிப் பூவனூர் நிறுத்தத்தில் (Stop) இறங்கி, பாமணி ஆற்றைக் கடந்து சிறிது தூரம் சென்றால் கோயிலை அடையலாம். ஆற்றைக் கடப் பதற்குப்

Koviloor Digital Library

பாலம் உள்ளது. பாலத்தில் போகும்போது பார்த்தாலே கோபுர தரிசனம் கிட்டும்.



Koviloor Digital Library

(2) மன்னார்குடி - அம்மாப்பேட்டை; வலங்கைமான் - மன்னார்குடி; நகரப் பேருந்துகள் பூவனூர் வழியாகச் செல்கின்றன. இவற்றில் வந்து பூவனூர் நிறுத்தத்தில் இறங்கிக் கோயிலை அடையலாம்.

சுகப்பிரம்மரிஷி மலர்வனம் வைத்து வழிபட்ட தலம். கோயிலின் எதிரில் பெரிய குளம் உள்ளது. இதற்கு 'க்ஷீரபுஷ்கரணி' என்று பெயர். மற்றொரு தீர்த்தமாகிய 'கிருஷ்ண குஷ்டஹரம்' (கருங்குஷ்டம் போக்கும் குளம்) கோயிலின் பின்னால் உள்ளது. இவையிரண்டும் பிணிதீர்க்கும் சிறப்புடையன.

இத்தலத்தில் உள்ள சாமுண்டீஸ்வரி சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. விஷம் தோஷம் நீக்கவல்ல பிரத்யட்ச பிரார்த்தனைச் சந்நிதி, விஷக்கடிக்கு, எலிக்கடிக்கு இங்குத்தரப்படும் வேரைக்கட்டிக் கொண்டு இவ்வம்பிகையை வழிபட்டு மக்கள் குணமடைகின்றனர். கோயிலின் மாட வீதிகளின் கோடியில் நாற்புறமும் விநாயகர் கோயில் உள்ளது. ஊர் இருபகுதிகளாக உள்ளது. கீழ்ப்பகுதியில் சிவாலயம் உள்ளது.

இறைவன் - புஷ்பவன நாதர், சதுரங்க வல்லபநாதர்.
இறைவி - கற்பகவல்லி, ராஜராஜேஸ்வரி.
தலமரம் - பலா.
தீர்த்தம் - க்ஷீரபுஷ்கரணி, கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தம்.

(வசுசேன மன்னனுக்கு மகளாகப் பிறந்து சதுரங்க ஆட்டத்தில் சிறந்து விளங்கிய அம்பாளை, சதுரங்கத்தில் வென்று, மணந்து கொண்டதால் இறைவன் சதுரங்கவல்லப நாதர் என்னும் பெயர் பெற்றார்).

அப்பர் பாடல் பெற்றது.

பழைமையான ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கூடியது- கிழக்கு நோக்கியது. உள்ளே நுழைந்ததும் வலப்பால் அலுவலகம். முன்மண்டபத்தில் இடப்பக்கம் புகழ்பெற்ற சாமுண்டீஸ்வரி சந்நிதி உள்ளது. அம்பிகை சூலமேந்தி அமர்ந்த கோலம். செப்புக் கவசமிட்ட கொடிமரம், முன்னால் பலிபீடம் நந்தி உள்ளது. வெளிப்பிராகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை. அடுத்துள்ள மண்டபத்தில் வலப்பால் கற்பகவல்லி அம்பாள் சந்நிதி. அடுத்துப் பள்ளியறை. பக்கத்தில் ராஜராஜேஸ்வரி அம்பாள் சந்நிதி. இரு அம்பிகை சந்நிதிகளும் தெற்கு நோக்கியுள்ளன.

உள்வாயில் நுழைந்து பிராகார வலம் வரும்போது பிரதான விநாயகர் சந்நிதி, லட்சுமி நாராயணர் சந்நிதி, காசி விசுவநாதர் சந்நிதி முதலியவை உள்ளன. தலமரம் பலா உள்ளது. எதிரில் வசுசேனன், அகத்தியர், ஐயனார், நால்வர், கோதண்டராமர், வள்ளி, மகாலட்சுமி,

Koviloor Digital Library

துர்க்கை, பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், பிட்சாடனர், சண்டேஸ்வரர் சிலா ரூபங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. வள்ளி தெய்வயானை யுடன் சுப்பிரமணியர், பசுபதீஸ்வரர், பைரவர், நவக்கிரகங்கள், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

படிகளேறி மண்டபம் அடைந்தால் நடராசர் தரிசனம். அடுத்துள்ள மண்டபத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. இங்குத் தியாகராஜா இருப்பதாக ஐதீகமாதலால் எதிரில் செப்பாலான நந்தி உள்ளது. துவாரபாலகரைக் கடந்து சென்றால் மூலவர் தரிசனம். மூலவருக்கு முன்னால் பித்தளையாலான கோபுர அமைப்பு செய்து வைக்கப் பட்டுள்ளது. கோஷ்டமூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், துர்க்கை, பிட்சாடனர் ஆகியோர் உளர். சண்டேஸ்வரர் உள்ளது.

நாடொறும் ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. தைப்பூசம், மாசிமகம், ஆவணிமூலம் ஆகிய விசேஷ நாள்களில் சுவாமி புறப் பாடாகி 'கிருஷ்ணகுஷ்ட ஹர' தீர்த்தத்தில் இறங்கித் தீர்த்தம் தரும் மரபு நடைபெறுகின்றது.

வைகாசி விசாகத்தில் பெருவிழா நடைபெறுகிறது. சாமுண்டீஸ்வரி அம்பிகைக்குச் சித்திரையில் அமாவாசையில் காப்புகட்டிப் பத்து நாள்களுக்கு விழா தனியாக நடைபெறுகிறது.

''பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான்
நாவினூறு நூறாயிர நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்களாவரே''.

(அப்பர்)

–''காட்டியநம்
தேவனூர் என்று திசைமுகன் மால்வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய்''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. புஷ்பவனநாதர் திருக்கோயில்
பூவனூர் & அஞ்சல் - 612 803
திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

221/104. பாதாளேச்சுரம்

பாமணி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'பாமணி' என்று வழங்குகிறது. மன்னார் குடிக்குப் பக்கத்தில் 2 கி.மீல் உள்ள ஊர். டவுன் பஸ் செல்லுகிறது. மன்னார்குடியிலிருந்து பாமணிக்குச் செல்லும் சாலையில் சென்று, பாமணியை அடைந்து, அங்குள்ள உரத் தொழிற்சாலையை ஒட்டிய சாலையில் சென்றால் கோயிலையடையலாம். கோயில் வரை வாகனங்கள் செல்லும். பாம்பணி - சர்ப்பபுரம் என்பன இதன்வேறு பெயர்கள். பாம்பணி - என்பது மருவி இன்று பாமணி' யாயிற்று. பாதாளத்திலிருந்து ஆதிசேஷன் வெளிப்பட்டு (தனஞ்சய முனிவராய்)

Koviloor Digital Library

வழிபட்ட தலம், ஆகவே பாதாளீச்சுரம் என்று பெயர் பெற்றது. சுகலமுனிவர் வழிபட்டது. நகரத்தார் திருப்பணி பெற்றுக்கோயில் சிறப்பாகவுள்ளது. கர்ப்ப தோஷ நிவர்த்தித் தலம்.

இறைவன் - சர்ப்பபுரீஸ்வரர், நாகநாதர்
இறைவி - அமிர்தநாயகி
தலமரம் - மா
தீர்த்தம் - நாக தீர்த்தம் (கோயிலுக்கு எதிரில் உள்ளது)
சம்பந்தர் பாடல் பெற்றது.

முகப்பு வாயிலைத் தாண்டியுட் புகுந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதி. உட்கோபுர வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம். உள்பிராகாரத்தில் சூரியன், தலவிநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, துர்வாசர், சாஸ்தா, காலபைரவர், சனிபகவான், நவக்கிரகம், நால்வர், சந்திரன் சந்நிதிகள் உள்ளன.

உள்மண்டபத்தில் வலப்பால் நடராச சபை. மூலவர் உள்ள இடம் புற்றாக அமைந்துள்ளது. இடப்பால் தனஞ்சயர் உருவமுள்ளது. நாகலிங்கப் பிரதிஷ்டை காணப்படுகிறது. மூலவர் - சுயம்பு. முப்பிரிவாக அமைத்து செப்புத் தகட்டால் ஒன்றாகப் பொருத்தப்பட்டு விளங்குகிறது. இது குறித்த வரலாறு வருமாறு:- "சுகல முனிவர் வளர்த்த காமதேனு பால் சொரிந்து சிவலிங்கத்தை வழிபடுவதைக் கண்டு, முனிவர் தமக்குப் பால் குறைந்து விடுமே என்று கோபித்து அடித்தார்-அதுகண்டு வருந்திய காமதேனு ஓடிச்சென்று; வழிபட்டதனால் தனக்கு நேர்ந்த நிலையை உணர்த்துவது போலச் சிவலிங்கத்தின்மீது முட்டி ஓடி - (வடக்கு வீதியில் உள்ள) பசுபதி தீர்த்தத்தில் விழுந் திறந்தது. அப்போது இறைவன் காட்சி தந்து பசுவை உயிர்ப்பித்தார்".

அக்காமதேனு முட்டியதால் மூலத்திருமேனி மூன்று வடுக்களை யுடையதாய் - முப்பிரிவாக; மேற்குறித்துள்ளவாறு காட்சி தருகின்றது. சுயம்பாதலின் மேற்புறம் சொர சொரப்பாகவுள்ளது. பாம்பு வழிபட்டமையால் பாம்பு போன்ற வடுவும் முன்புறத்தில் உள்ளது.

ஆதிசேஷன், தனஞ்சயர் வடிவில் தோன்றி, பிரதிஷ்டை செய்து இறைவனை வழிபட்ட நாள் ஐப்பசி முதல் நாளாகும். எனவே அந் நாளில் நம் உணவு போலவே சோறு, குழம்பு, காய்கறி வகைகள் வடை பாயசம் சமைத்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து நிவேதித்தால் தோஷம் நிவர்த்தியாகிறது என்ற நம்பிக்கையில் சிறப்பு செய்து வழி படுகின்ற வழக்கம் இன்றுமுள்ளது. பச்சை திராட்சையும், மாங்கனியும், மாம்பழச் சாறும் இங்குச் சிறப்பு நிவேதனம்.

Koviloor Digital Library

நாடொறும் இருகால வழிபாடு நடைபெறுகிறது. கார்த்திகை சோமவாரங்கள், கடைசி சோமவாரத்தன்று 108 கலசாபிஷேகம் விசேஷம். ராஜராஜசோழன் காலக் கல்வெட்டில் இத்தலம் சுற்ற வேலி வளநாட்டு பாம்பணி கூற்றத்துப் பாமணி என்று குறிக்கப்படுகிறது.

''அங்கமு (ம்) நான்மறையும் அருள் செய்தழகார்ந்த அஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோன் உறைகோயில்
செங்கயனின்றுகளுஞ் செறுவிற்றிகழ்கின்ற சோதிப்
பங்கய (ம்) நின்றலரும் வயல்சூழ்ந்த பாதாளே''. *(சம்பந்தர்)*

(சம்பந்தர் பாட்டில் பாதாளேச்சுரம் என்று குறிக்கப்படும் பெயர் பிற்காலத்தில் சுந்தரர் வாக்கில் பாம்பணி என்று மாறி வருவதை நோக்குங்கால் அக்காலத்திலேயே இப்பெயர் மாறிப்போய் விட்டிருப் பதை அறியமுடிகிறது).

-''பூவுலகாம்
ஈங்கும் பாதாளமுதல் எவ்வுலகும் எஞ்ஞான்றும்
தாங்கும் பாதாளேச்சரத்து அமர்ந்தோய்''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி.சர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில்
பாமணி & அஞ்சல் - 614 014
(வழி) மன்னார்குடி - மன்னார்குடி வட்டம்
திருவாரூர் மாவட்டம்.

222/105. திருக்களர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருத்துறைப்பூண்டி - மன்னார்குடி சாலையில் சென்று இத் தலத்தை அடையலாம். மன்னார்குடியிலிருந்து 21 கி.மீ தொலைவில் உள்ளது. பேருந்து வசதியுண்டு.

பராசரமுனிவர், காலபைரவர், துர்வாசர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இத்தலத்திற்குப் பாரிஜாதவனம் தருவனம், கற்பகவனம், என்னும் பெயர்களுண்டு.

Koviloor Digital Library

இறைவன் - பாரிஜாதவனேஸ்வரர், களர்முளைநாதர்.
இறைவி - அமுதவல்லி, இளங்கொம்பன்னாள், அழகேஸ்வரி
தீர்த்தம் - துர்வாச தீர்த்தம் முதலியன
தலமரம் - பாரிஜாதம் (பவழமல்லி).
சம்பந்தர் பாடல் பெற்றது.

களரி என்பதற்குக் கூட்டம், சபை, அரங்கம் எனப் பல பொருள்கள். துர்வாசருக்குச் சிவபெருமான் பிரமதாண்டவ தரிசனம் தந்தருளியமையால் 'களரி' என்னும் இத்தலப்பெயர் பின்பு 'களர்' என்றாயிற்று. துர்வாசருக்கு நடராஜர் நடனக் காட்சிதந்த வடிவமும் அதன் எதிரில் துர்வாசரின் வடிவமும் (கைகூப்பிய நிலையில்) உள்ளது.

வலம்புரி விநாயகர் சந்நிதியும் காணச்சிறப்பானது.

கோவிலூர் மடாலயத்தில் அதிபராக இருந்த வீரசேகர ஞான தேசிக சுவாமிகளின் சமாதிக் கோயில் ஆலயத்திற்குப் பக்கத்தில் உள்ளது. அவருக்குத் திருக்களர் ஆண்டவர் என்று பெயர். நன்கு பராமரிக்கப் படும் இக்கோயிலில் - மடாலயத்தில் சாதுக்கள் இருந்து வருகின்றனர். கோவிலின் பக்கத்தில் வேதபாடசாலையும், பசுமடமும், வேதாந்த மடமும், அறுபத்துமூவர் குருபூஜை மடமும் உள்ளன. இத்தலத்தில் பிடாரி கோயிலும், ஐயனார் கோயிலும், மாரியம்மன் கோயிலும் உள்ளன. இத்திருக்கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலுக்குள் மூன்று பிராகாரங்கள் உள்ளன. முன்னே இருப்பது துர்வாச தீர்த்தம்.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டது. உள்நுழைந்தால் நந்தியும் கொடிமரமும் உள்ளன. ஆலயத்தின் தென்மேற்கு முனையில் விநாயகர் கோயிலும், வடக்கில் வசந்த மண்டபமும் யாகசாலையும் உள்ளன. இதையடுத்து சுவாமிக்கும் அம்பாளுக்கும் ஒரே வரிசையில் இரண்டு கோபுரவாயில்கள் உள்ளன. உள்ளே ஆண்டவர் உருவமும் நவக்கிரகங்களும் உள. உள்வாயிலைக் கடந்து சென்றால் சந்திரன், பிரம்மா, விஸ்வகர்மா, வழிபட்ட சந்நிதிகளும் உள்ளன. நால்வர் சந்நிதி உளது. மோக்ஷத்துவாரேஸ்வரர், சோமாஸ்கந்தர், தல (வலம்புரி) விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், கஜலட்சுமி சந்நிதிகள் தரிசிக்கத்தக்கன. நடராஜர் சந்நிதி (பிரம தாண்டவமூர்த்தி) இத்தலத்தில் விசேஷமானது.

கிழக்கில் பெருமாள் சந்நிதியும் சூரியசந்நிதியும் உள்ளன. மூலவர் - பாரிஜாதவனேஸ்வரர். சிவலிங்கத் திருமேனி. இருபுறமும் துவார பாலகர்கள்; நந்தி பலிபீடமும் உள்ளன. அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது தனியே உள்ளது. இருபுறமும் துவாரசக்திகள். வெளி மண்டபத்தின்

Koviloor Digital Library

கிழ்க்கோடியில் அஷ்டபுஜ துர்க்கை சந்நிதி உள்ளது. சுவாமி, அம்பாள் சந்நிதிகளுக்கு மத்தியில் தல விருக்ஷம் உள்ளது. கல்வெட்டில் சுவாமி யின் பெயர் - களர் முளைத்த நாயனார், அடைந் தார்க்கு அருள் செய்த நாயனார் - என்று குறிக்கப்படுகின்றது. ஞான சம்பந்தர் தம் பதிகத்தில் 'அடைந்தார்க்கு அருளாயே' என்று பாடுவது இங்கு நினைக்கத்தக்கது.

வலம்புரி விநாயகர் சந்நிதியில் - கோபுரத்திற்கு உள்புறத்தில் அகோர வீரபத்ரர் மேற்கு நோக்கி வீரமுடன் காட்சி தருகின்றார். 'விடங்கர் லிங்கம்' நடராஜருக்குப் பக்கத்தில் பேழையில் உள்ளது. நடராஜர் (பிரபையுடன்) அழகாகத் தரிசனம் தருகின்றார் - அறபுதத் தரிசனம். ஆண்டுக்கொருமுறை ஆதிரையில் மட்டும் புறப்பாடு. இங்குள்ள தீர்த்தங்களுள் துர்வாச தீர்த்தமே சிறப்புடையது. மற்றையவை- (1) பிரமதீர்த்தம் (சிந்தாமணிதீர்த்தம்) (தெற்கு வீதியில் உள்ளது)

(2) ருத்ரதீர்த்தம் (மேல வீதியில் உள்ளது)

(3) ஞானதீர்த்தம் (வடக்கு வீதியில் உள்ளது)

சுவாமிக்குச் செய்துள்ள திருப்பணிகளுள், திருக்களர் ஆண்டவர் செய்துள்ள திருப்பணிகளே சிறப்பானவை. பூஜைகள் செம்மையாக முறையாக நடைபெறுகின்றன. சிறப்பான உற்சவங்களும் அவ்வப் போது உரிய காலங்களில் நடத்தப்பெறுகின்றன. மாசி மாதத்தில் (மகத்தில்) சிந்தாமணி தீர்த்தத்திலும் பங்குனி உத்திரத்தில் ருத்ர தீர்த்தத்திலும் நடைபெறும் தீர்த்தவாரி சிறப்பு.

அம்பாளுக்கு முழு உருவத்திற்குமாக ஓர் அன்பரின் உபயமாகத் தங்கக்கவசங்கள் செய்யப்பட்டு, விசேஷ காலங்களில் மட்டும் சார்த் தப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தங்கக்கவசக் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும் - அற்புதமான ஆனந்தக் காட்சி. மனதிற்குப் பெரும் நிறைவைத் தருகின்றது. அழகேஸ்வரிக்கு அழகான அலங்காரம். இத்தலத்திற்குத் தலபுராணம் உள்ளது-இயற்றியவர் களப்பால் என்னும் ஊரில் வாழ்ந்த ஆதியப்பர்,

''நீருளார் கயல் வாவி சூழ்பொழில்
    நீண்ட மாவயலீண்டு மாமதில்
தேரினார் மறுகில்
    விழா மல்கு திருக்களர்
ஊருளாரிடு பிச்சை பேணும்
    ஒருவனே ஒளிர் செஞ்சடைம்மதி
ஆர நின்றவனே
    அடைந்தார்க்(கு) அருளாயே''. *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

-''ஓங்குபுத்தி
மான்களரிலோட்டி மகிழ்வோ டிருந்தேத்தும்
வான்களரில் வாழு மறை முடிபே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயில்
திருக்களர் & அஞ்சல் - 614 720
திருவாரூர் மாவட்டம்.

223/106. திருச்சிற்றேமம்

சிற்றாய்மூர் - சித்தாய்மூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் சித்தாய்மூர் என்று அழைக்கின்றனர். திருவாரூர் - திருத்துறைப் பூண்டி சாலையில் ஆலத்தம்பாடி வந்து, அங்கிருந்து சித்தாய்மூர் செல்லும் பாதையில் 3 கி.மீ நடந்து செல்ல வேண்டும். இத்தலத்திற்கு வருவோர் கூட்டமாகத் தனிப் பேருந்தில் வந்து தரிசிப்பதே சிறந்தது. அரிச்சந்திர நதியின் வடபால் உள்ளதலம். ஊர் அருகில் செண்பகநதி உள்ளது. பிரமரிஷி, சித்தர்கள் வழிபட்ட தலம்.

இறைவன் - சுவர்ண ஸ்தாபனேஸ்வரர். பொன் வைத்தநாதர்
இறைவி - அகிலாண்டேஸ்வரி
தலமரம் - ஆத்தி
தீர்த்தம் - சுவர்ண புஷ்கரணி.
தலவிநாயகர் - ஆத்திமர விநாயகர்
சம்பந்தர் பாடல் பெற்றது.

அழகான ராஜகோபுரம். கிழக்கு நோக்கியது. திருச்சிற்றேமத்திற்கு வடபாலுள்ள முத்தரசபுரத்தை ஆண்டு வந்து மன்னனுக்கு நாடொறும் இவ்வூர் வழியாகப் பாற்குடம் செல்வது வழக்கம். சில நாள்களில் அப்பாற்குடம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் விழுந்து உடையலாயிற்று. அரசன் அவ்விடத்தை வெட்டிப் பார்க்க, சிவலிங்கத் திருமேனி கண்டான். அவ்விடத்துக் கோயில் எழுப்பினான் என்பது வரலாறு. இதற்கு அடையாளமாக சிவலிங்கத்தின் மீது வெட்டுக்காயம் உள்ளது.

Koviloor Digital Library

நடராசர் அழகான வடிவம். பிராகாரத்தில் கன்னிவிநாயகர், முருகன், மகாலட்சுமி சந்நிதிகள் உள. பிரமரிஷி, ஐயனார், பைரவர், சனிபகவான், சூரியன், விசுவநாதர் சந்நிதிகள் தரிசிக்கத்தக்கவை. தலப்பதிகம் அம்பாள் சந்நிதி முன்பு பதிக்கப்பட்டுள்ளது.

வேலவர், சோமாஸ்கந்தர், ஆடிப்பூர அம்மன், பிரதோஷநாயகர், சந்திரசேகரர், மற்றும் தலவரலாற்றுடன் தொடர்புடைய செட்டியார், அவர் மனைவி ஆகியோர், சம்பந்தர் முதலியோரின் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

தலவரலாறு:- இவ்வூரில் வாழ்ந்த சங்கரன் செட்டியார், மனைவி கருவுற்ற மிக்க அண்மைக் காலத்தே பொருளீட்டும் முயற்சி மேற் கொண்டு வெளியூர் சென்றார். சிவப்பற்று கொண்டு, சிவந் தொண்டு செய்து வாழ்ந்து வந்து அம்மங்கைக்கு இறைவன் நாடொறும் ஒரு பொன் காசுவைத்து உதவ, அவள் அதை விற்று வாழ்வு நடத்தி வந்தாள். மகப்பேறு காலம் நெருங்கியது. இறைவனை நோக்கி அழுது வேண்ட, அகிலாண்டேஸ்வரியே தாயாக வந்து உதவிட, மகவினைப் பெற்றெடுத்தாள். செட்டியார் ஊர் திரும்பினார். புல்லறிவினர் சிலர் அம்மாதின் மேல் பொய் ஒழுக்கக் குற்றச்சாட்டுக்களைச் செட்டியாரிடம் கூறினர். அம்மங்கை இறைவனிடம் சென்று பல்லோர் முன்னிலை யிலும் வேண்டி, தன் கற்பை வெளிப்படுத்துமாறு கலங்கி வேண்ட, இறைவன் - கோயிற்கதவைத் தானே திறக்கச் செய்தும், ஆத்திமரத்தை இடம் பெயர்ந்து முன்புறம் வரச்செய்தும், நந்திதேவரைப் பலிபீடத்தின் பின் போகச் செய்தும் - பல அற்புதங்களை நிகழ்த்தி அப்பெண்ணின் கற்புத்திறத்தை ஊரறியச் செய்தார் என்பர்.

இவ்வூரின் மேற்கே 6 கி.மீ. தொலைவிலுள்ள இடம் -செட்டிப் பெண்ணிற்கு இறைவன் அன்றாடம் பொன் நிறுத்துத்தந்த இடமாகும் (பொன் + நிறை) - 'பொன்னிறை' என்னும் பெயருடையது.

இக் கோயிலில் உள்ள தேன்கூடு வியப்பானது. இதுபற்றிய ஒரு செய்தி:- நாடொறும் அர்த்த சாமத்தில் வழிபட்டு வந்த பிரமரிஷி ஒருநாள் காலம் தாழ்ந்து வர, ஆலயக்கதவு காப்பிடப்பட்டுவிட்டது. அப்போது அவர் தேனீ உருக்கொண்டு உள்ளே சென்று பெருமானை வழிபட்டு அங்கேயே வசிக்கத் தொடங்கினார் என்பர். உற்சவங்களும் பூஜைகளும் முறையாக நடைபெறுகின்றன.

இத்திருக் கோயிலின் பக்கத்தில் திருமால் ஆலயமுள்ளது. இவ்வூர்க்குக் கிழக்கில் திருவாய்மூரும், மேற்கில் கைச்சினமும், வடக்கில் வலிவலமும் திருக்குவளையும் குண்டையூரும், வடகிழக்கில் எட்டுக் குடியும் உள்ளன.

Koviloor Digital Library

''நிறைவெண் திங்கள் வாண் முக மாதர் பாட நீள்சடைக்
குறைவெண் திங்கள் சூடியோர் ஆடல் மேய கொள்கையான்
சிறைவண்டி யாழ் செய் பைம் பொழிற் பழனஞ் சூழ் சிற்றேமத்தான்
இறைவன் என்றே உலகெலாம் ஏத்த நின்ற பெருமானே''.

(சம்பந்தர்)

-''மேன்மைதரும்
முற்றேமம் வாய்ந்த முனிவர் தினம்பரவும்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சுவர்ணஸ்தாபனேஸ்வரர் திருக்கோயில்
சித்தாய்மூர் & அஞ்சல். பொன்னிரை - S.O.
திருவாரூர் வட்டம் - திருவாரூர் மாவட்டம் 610 203.

224/107. திருவுசாத்தானம்

கோயிலூர்/கோவிலூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் கோயிலூர் என்றழைக்கின்றனர்.

கோயிலூர் என்ற பெயரில் பலவூர்களிருப்பதாலும், இவ்வூர் முத்துபேட்டைக்கு அருகில் இருப்பதாலும் வழக்கில் இத்தலம் 'முத்துப்பேட்டை - கோயிலூர்' என்று வழங்கப்படுகிறது.

தஞ்சை, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், மன்னார்குடி பட்டுக்கோட்டை முதலிய பலவூர்களிலிருந்து முத்துப்பேட்டைக்குப் பேருந்துகள் உள்ளன. முத்துப்பேட்டையிலிருந்து மன்னார்குடி சாலையில் 2 கி.மீ. சென்றால் சாலையிலேயே கோயிலின் வளைவு ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் தேவஸ்தானம் என்று உள்ளது. அதனுள் நுழைந்து சென்றால் கோயிலை அடையலாம்.

இறைவன் - மந்திரபுரீஸ்வரர்

இறைவி - பிருகந்நாயகி, பெரியநாயகி

தலமரம் - மா

Koviloor Digital Library

தீர்த்தம் - அநுமன் தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், கௌதம தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

இந்திரன், விசுவாமித்திரர், இராமர், இலக்குவன், ஜாம்பவான், சுக்ரீவன், அநுமன் ஆகியோர் வழிபட்டது. விசுவாமித்திரருக்கு நடனக் காட்சி காட்டியருளிய தலம். இராமர்சேது அணைகட்டுவதற்கு இத்தலத்து இறைவனிடம் மந்திர உபதேசம் பெற்றதாக வரலாறு. எனவே இறைவன் திருப்பெயர் மந்திரபுரீஸ்வரர் என்று வழங்குகிறது. மற்றும் கடலில் அணை கட்டுவதற்குரிய வழிமுறைகளை இராமபிரான் இப்பெருமானிடம் உசாவிய (கேட்டறிந்த) காரணத்தால் இத்தலம் 'உசாத்தானம்'என்று பெயர் பெற்றது. இவ்வரலாற்றுக்கு ஆதரவாக இவ்வூருக்கு அருகில் இராமன் கோயில், சாம்பவான் ஓடை, அநுமான் காடு, சுக்ரீவன்பேட்டை, தம்பிக்குநல்லான் பட்டினம் முதலிய ஊர்கள் உள்ளன. இறைவன் மாமரத்தினடியில் திகழ்வதால் இத்தலம் சூதவனம் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கேற்ப தலவிநாயகர் மாவிலையைக் கரத்தில் ஏந்தியுள்ளார்.

கோயில் மிக்க பொலிவோடு அழகுறக் காட்சியளிக்கிறது. கிழக்கு நோக்கியது. எதிரில் திருக்குளம். குளக்கரையில் விநாயகர் சந்நிதி. ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடையது. உட்புறத்தில் இடப்பால் சிறிய தீர்த்தம், வலப்பாகத்தில் அம்பாள் கோயில் உள்ளது தனிக்கோயில். சுவசமிட்ட கொடிமரம், பலிபீடம் நந்தி தரிசனம்.

இரண்டாங்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. துவார கணபதி, சுப்பிரமணியரைத் தொழுது, உள்புகும்போது வாயிலில் இடப்பால் அதிகார நந்தி காட்சி தருகிறார்.

உள்வலத்தில் சூரியன், தலப்பதிகக் கல்வெட்டுக்கள், அறுபத்து மூவர், (நேர் எதிரில் கருவறைச் சுவரில் ஜ்வரஹரேஸ்வரர் மூன்று முகங்களுடனும் மூன்று திருவடிகளுடன் காட்சி தருகிறார் - அழகான உருவம், தரிசிக்கத் தக்கது) காட்சி கொடுத்த நாயகர் அம்பாளுடன், சப்த மாதர்கள், சப்த கன்னியர், வீரபத்திரர், காளி, காசிவிசுவநாதர், சூதவன விநாயகர், சோமாஸ்கந்தர், வருணன் அவர் வழிபட்ட லிங்கம், இராமர் அவர் வழிபட்ட லிங்கம், மார்க்கண்டேயர் அவர் வழிபட்ட லிங்கம், அன்னபூரணி, சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானையுடன் காட்சி தரும் சுப்பிரமணியர், கஜலட்சுமி, சரஸ்வதி நவகன்னியர், சனிபகவான், நடராச சபை, பைரவர், சந்திரன் முதலிய சந்நிதிகள் உள்ளன.

உள்வலமுடித்து முன்மண்டபம் அடைந்தால் அங்குத் தல வரலாறு வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

Koviloor Digital Library

வாயிலின் இருபுறங்களிலும் சங்கநிதி, பதுமநிதி மூர்த்தங்கள் உள்ளன. துவாரபாலகர் தொழுது, வாயில் கடந்தால் வலப்பால் உற்சவ மூர்த்தங்களின் பாதுகாப்பிடத்தைத் தரிசிக்கலாம்.

நேரே மூலவர் தரிசனம், சதுரபீடம் - சுயம்பு மூர்த்தியாதலின் சொர சொரப்பாக வெண்ணிறமாகக் காட்சி தருகின்றார். வெளிச்சுற்றில் தலமரம் - மா - உள்ளது. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். வைகாசியில் பெருவிழா நடைபெறுகிறது.

விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன், சுந்தரபாண்டியன், ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் சுவாமியும் அம்பாளும் 'திருவுசாத்தானமுடைய நாயனார், பெரிய நாச்சியார்', என்னும் பெயர்களால் குறிக்கப்படுகின்றனர். இறையிலியாக நிலங்களும் தோப்புகளும் இக் கோயிலுக்கு வழங்கப்பட்ட செய்திகள் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகின்றன.தலபுராணம் - சூதவனப் புராணம் உள்ளது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமை, மாதகார்த்திகை, பிரதோஷம், சித்திரைப்பெருவிழா, ஆடிப்பூரம், ஆவணி மூலம், விநாயக சதுர்த்தி, நவராத்திரி, சஷ்டி, மார்கழி திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம் போன்ற விழாக்களும் குறிப்பாக நடைபெறுகின்றன.

முதல் நிலைக் கோயில் . அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ளது. 1081 ஏக்கர் நன்செய், 1018 ஏக்கர் புன்செய் நிலங்களும் - தென்னந்தோப்புகளும் - 36 கபடிடஸ்களும் - 229 மனைக்கட்டுகளும் இக்கோயிலுக்குச் சொந்தமாகவுள்ளன. பொன், வெள்ளி நகைகள், நகரத்தார் அளித்துள்ள நன்கொடைகள், வெள்ளிக் கவசங்களும் உள்ளன. இக்கோயில் நிர்வாகத்தில் முத்துப்பேட்டையில் அ/மி பெரியநாயகி மகளிர் மேல்நிலைப்பள்ளி நடைபெற்று வருகிறது.

(ஆதாரம் - தலவரலாறு)

'நீரிடைத் துயின்றவன், தம்பி, நீள்சாம்புவான்
போருடைச் சுக்ரீவன் அநுமன் தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர் வாழ் திருவுசாத்தானமே''.

(சம்பந்தர்)

-கற்றவர்கள்
எங்குமு சாத்தானம் இருங்கழக மன்றமுதல்
தங்கும் உசாத்தானத் தனிமுதலே''

(அருட்பா)

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி. மந்திரபுரீஸ்வரர் திருக்கோயில்
கோவிலூர் - முத்துப்பேட்டை அஞ்சல் - 614 704
திருத்துறைப்பூண்டி வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

225/108. இடும்பாவனம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

(1) முத்துப்பேட்டை - வேதாரண்யம் பேருந்துச் சாலையில் உள்ள தலம்.

(2) திருத்துறைப்பூண்டியிலிருந்து - தொண்டியக்காடு செல்லும் டவுன்பஸ் ஏறி இத்தலத்திற்கு வரலாம்.

(3) முத்துப்பேட்டையிலிருந்து வரவும் பேருந்து உள்ளது. கோயில் பேருந்துச் சாலையின் அருகில் உள்ளது.

இடும்பன் வழிபட்ட தலம். இடும்பனின் சகோதரி இடும்பையை வீமன் மணந்து கொண்டதால் வியாசமுனிவர் பாண்டவர்களைப் பார்த்து ''இடும்பைக்கு அருள் செய்த இப்பதி இன்றுமுதல் இடும் பாவனம் என்று வழங்குவதாகுக'' என்றமையால் இப்பதி இடும்பா வனம் என்று பெயர் பெற்றது என்பது புராண வரலாறு. இடும்பனின் ஊர் இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள குன்றளூர் என்பர். அகத்தி யருக்குத் திருமணக்கோலம் காட்டியருளிய தலம். சுவாமிக்குப் பின்னால் மணவாளக்கோலம் உள்ளது. வில்வவனம், சற்கு ணேச்சபுரம், மங்கலநாயகிபுரம், மணக்கோலநகர் என்பன இத்தலத்தின் வேறு பெயர்கள். பிரமன், அகத்தியர், எமன், இராமர் ஆகியோர் வழிபட்டது.

இறைவன் - சற்குணேஸ்வரர், சற்குணநாதர், மணக்கோல நாதர், கல்யாணேஸ்வரர், இடும்பாவனேஸ்வரர்

இறைவி - மங்களவல்லி, மங்களநாயகி, கல்யாணேஸ்வரி

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - பிரமதீர்த்தம், அகத்தியதீர்த்தம், எமதீர்த்தம். (எதிரில் உள்ளது)

தலவிநாயகர் - வெள்ளை விநாயகர்

சம்பந்தர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

இத்தலம் பிதிர்முத்தித் தலங்களுள் ஒன்றாகும். ஆகவே பிதிர் வழிபாடுகளைச் செய்வதற்கு இத்தலம் மிகவும் விசேஷமானது. மூன்று நிலை ராஜகோபுரம். வாயிலில் விநாயகர், முருகன் காட்சியளிக்கின் றனர். எதிரில் குளம், கொடிமரம், நந்தி பலிபீடமுள்ளன. பிராகாரத்தில் சூரியன், அகத்தியர், இடும்பை, விநாயகர், சனீஸ்வரர், கஜலட்சுமி, முருகன், பைரவர் சந்நிதிகள் உள்ளன. தலவிநாயகர் மகாமண்டபத்தில் காட்சி தருகிறார்.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கோஷ்டங்களில் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். வைகாசியில் விழா நடைபெறுகிறது. அருகில் உள்ள தலம் கடிக்குளம். மராட்டிய மன்னர்கள் இக்கோயிலுக்கு அளவற்ற மான் யங்களை அளித்துள்ள செய்தியைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

''நீறேறிய திருமேனியர் நிலவும் உலகெல்லாம்
பாரேறிய படுவெண்டலை கையிற் பலிகொள்ளா
கூறேறிய மடவாளொடு பாகம் மகிழ்வெய்தி
ஏறேறிய இறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே''.

(சம்பந்தர்)

-பொங்குபவ
அல்லல் இடும்பாவ நத்தமட்டொளி செய்கின்ற திரு
மல்லலிடும் பாவனத்து மாட்சிமையே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சற்குணேஸ்வரர் திருக்கோயில்
இடும்பாவனம் & அஞ்சல் - 614 735
திருவாரூர் மாவட்டம்.

226/109. கடிக்குளம்

கற்பகநாதர் குளம்

சோழ நாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் கற்பகநாதர் குளம் என்று வழங்குகின்றனர். (அஞ்சல் துறையிலும் கற்பகநாதர் குளம் என்றே வழங்குகிறது) கடிக்குளம் - கோயிலில் உள்ள தீர்த்தத்தின் பெயர். இதுவே ஊர்க்குப் பெயராயிற்று.

Koviloor Digital Library

1) திருத்துறைப் பூண்டியிலிருந்து தொண்டியக்காடு செல்லும் பேருந்துச் சாலையில் சென்றால் இத்தலத்தை (கோயிலை) அடையலாம். திருத்துறைப்பூண்டியிலிருந்து 17 கி.மீ. தொலைவு.

2) முத்துப்பேட்டையிலிருந்து வேதாரண்யம் சாலையிலும் வரலாம். பட்டுக்கோட்டையிலிருந்தும் பேருந்து வசதியுள்ளது. விநாயகர் இறைவனை வழிபட்டு மாங்கனி பெற்ற தலம். எனவே இங்குள்ள கற்பகவிநாயகர், மாங்கனிப் பிள்ளையார் என்றும் அழைக்கப் பெறுகிறார்.

இறைவன் - கற்பகநாதர், கற்பகேஸ்வரர்

இறைவி - சௌந்தரநாயகி, பாலசௌந்தரி.

தலமரம் - பலா

தீர்த்தம் - விநாயகதீர்த்தம் - இதுவே கடிக்குளம் எனப்படுவது. (கடி - மணம். மணம் மிக்க குளம்)

தலவிநாயகர் - கற்பகவிநாயகர், மாங்கனிப் பிள்ளையார்

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய ஊர் - கோயில் மூன்று நிலை ராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கியுள்ளது. வடபால் தீர்த்தம் உளது. கோபுர வாயிலில் விநாயகர், சுப்பிரமணியர் காட்சி தருகின்றனர். பிராகாரத்தில் நால்வர், தலவிநாயகர், முருகப்பெருமான், கஜலட்சுமி, தலமரம் பலா, சனீஸ்வரன், பைரவர், சூரியன், சந்திரன் சந்நிதிகள் உள்ளன. மூலவர் - சிறிய மூர்த்தி. எட்டுப் பட்டைகளுடன் எழிலாகக் காட்சி தருகிறார். அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். ஆனித்திரு மஞ்சனம், நவராத்திரி, கார்த்திகை தீபம், திருவாதிரை, தைப்பூசம், அன்னாபிஷேகம், மகாசிவராத்திரி முதலிய சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இவ்வூருக்குப் பக்கத்தில் 2 கி.மீ. தொலைவில் 'துளசியாம் பட்டினம்' என்னும் ஊர் உள்ளது. அங்கு ஔவையாருக்கு தனிக் கோயில் உள்ளது. அது தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனின் தந்தையான துளசா மகாராஜாவால் கட்டப்பட்டது. ஔவையாரை முருகன் சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா என்று கேட்டு அருள்புரிந்த தலம் இது என்பது சொல்லப்படுகிறது. இங்குச் செல்வோர் அ/மி கோதண்ட ராமசாமி கோயிலையும் தரிசிக்க வேண்டும். இப் பெருமான் மீது கடலூர் வித்வான் திரு. தே. ஆ. சீனிவாசாரியார். "திருக்கடிக்குளம் கோதண்ட ராமசாமிபதிகம்" பாடியுள்ளார்.

Koviloor Digital Library

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மகாராஷ்டிர மன்னர்கள் இத்தலத்திற்குப் பல நிபந்தங்கள் அளித்துள்ள செய்திகள் கல்வெட்டுக்கள் வாயிலாகத் தெரிய வருகின்றன. இத்தலத்திற்குப் பக்கத்தில் இடும்பாவனமுள்ளது.

''பொடிகொள் மேனி வெண்ணூலினர் தோலினர்
புலியுரி அதளாடை
கொடிகொள் ஏற்றினர் மணிகிணன் எனவரு
குரைகழல் சிலம் பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையும் கற்பகத்தைத்தம்
முடிகொள் சாய்த்தடி விழ்தரும் அடியரை
முன்வினை மூடாவே''.

(சம்பந்தர்)

-''தொல்லைப்
படிக்குள் நோவாத பண்புடையோர் வாழ்த்தும்
கடிக்குளத்து அன்பர் களிப்பே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கற்பகநாத சுவாமி கோயில்
கற்பகநாதர்குளம் & அஞ்சல்
குன்னலூர். S.O.- 614 703
திருத்துறைப்பூண்டி வட்டம் - திருவாரூர் மாவட்டம்

227/110. தண்டலை நீள்நெறி

தண்டலைச்சேரி,
தண்டலச்சேரி.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் தற்போது 'தண்டலைச் சேரி' என்றும் 'தண்டலச்சேரி' என்றும் வழங்குகின்றனர். திருத்துறைப்பூண்டியிலிருந்து 3 கி.மீ. தொலைவு. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி பேருந்து வழியில் வருவோர் கோயில் வாயிலில் இறங்கலாம். இத்தலத்திற்குப் பக்கத்தில் 'மணலி' புகைவண்டி நிலையம் உள்ளது.

Koviloor Digital Library



அரிவாட்டாய நாயனார் முக்தி பெற்ற தலம். இந்நாயனார் பிறந்த ஊராகிய 'கணமங்கலம்' பக்கத்தில் உள்ளது. மக்கள் அதை 'கண மங்கலத்திடல்' என்றும், 'கண்ணந்தங்குடி' என்றும் வழங்குகின்றனர். இங்குள்ள பழைமையான சிவன் கோயில் அழிந்துவிட்டது. இதுவே கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில். இக்கோயில் அழிந்து விடவே, பிற்காலத்தில் தேவகோட்டை ராம. அருஅரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் இப்போதுள்ள கற்கோயிலைக் கட்டித் தந்துள்ளார்கள். (கோயில் - நீள் நெறி - ஊர் - தண்டலை) கோயில் கற்றளி. விமானங்கள் சுதை வேலைப்பாடுடையவை.

இறைவன் - ஸ்திரபுத்தீஸ்வரர், நீள்நெறி நாதர்.

இறைவி - ஞானாம்பிகை

தலமரம் - குருந்தை

தீர்த்தம் - ஓமக தீர்த்தம், கோயிலின் பக்கத்தில் சாலையின் கீழ்ப்பால் உள்ளது. ஞானசித்தி விநாயகர் கோயிலின் எதிரில் நீராடல் சிறப்புடையது.

சம்பந்தர் பாடியது.

முகப்பு வாயில் உள் நுழையும்போது இடப்பால் அதிகார நந்தி சந்நிதி உள்ளது. கொடி மரமில்லை. பலிபீடம், நந்தி உள்ளன. கொடி மரத்து விநாயகர் உள்ளார். பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியும், கருவறையின் பின்புறத்திற்கு நேர் எதிரில் சிவலிங்க சந்நிதியும்,

Koviloor Digital Library

தொடர்ந்து சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், வியாக்ரபாதர் பதஞ்சலி ஆகியோர் பூசித்த சிவலிங்கங்கள், சூரியன், சந்திரன் முதலிய சந்நிதிகளும் உள்ளன.

கருவறை முன்மண்டபத்தில் கோச்செங்கட்சோழன், அரிவாட்டாய நாயனார், நால்வர் மூலத்திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. துவாரபாலகர்களைத் தொழுது, விநாயகரை வணங்கி உட்செல்லும் போது, மேற்புறத்தில் இருமருங்கும் அரிவாட்டாய நாயனார் - அவர் மனைவி அரிசியும் மாவடுவும் கொட்டுவது இறைவனின் திருக்கரம் வெளிப்பட்டு நாயனாரைத் தடுப்பது, நாயனாருக்கும் மனைவியாருக்கும் இறைவன் ரிஷபாருடராகக்காட்சி தருவது முதலியவை சிற்பங்களாகக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளதைக் கண்டு மகிழலாம். உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நடராசர், நால்வர், மனைவியுடன் அரிவாட்டாய நாயனார், கோச்செங்கட்சோழன் ஆகிய திருமேனிகள் சிறப்புடையவை. நடராச சபை வலப்பால் உள்ளது. சிவகாமி, மாணிக்கவாசகர், பதஞ்சலி, வியாக்ரபாதர் திருமேனிகள் உள்ளன.

மூலவர் - சிவலிங்கம் அழகான சிறிய திருமேனி.அம்பாள் சந்நிதி அழகாகவுள்ளது. சுவாமிக்கு வெள்ளியிலான நாகாபரணமும்; அம்பாளுக்கு வெள்ளிக் கவசமும் பொன்னாலான செவ்வந்திப்பூ மாலையும் சார்த்தித் தரிசிக்கும்போது உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. கோஷ்டமூர்ததங்களாகத் தட்சிணாமூர்த்தி, துர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. துர்க்கைச் சந்நிதி, தனியாக விமானங் கட்டப்பட்டுப் பொலிவுடன் திகழ்கிறது-பிற்காலப் பணி. நாடொறும் நான்கு காலபூஜைகள் நடைபெறுகின்றன.

தை மாதத்தில் பெருவிழா 3 நாள் உற்சவமாக நடைபெறுகிறது. நடராசர் அபிஷேகங்களும் மாதாந்திரக் கட்டளைகளும் நடைபெறுகின்றன. அரிவாட்டாய நாயனார் குருபூசை 'அறுப்புத் திருவிழாவாகப் பெருவிழாவில் உரியமுறைப்படி நடத்தப்பெறுகிறது. படிக்காசுப் புலவர் இத்தலத்து இறைவன்மீது 'தண்டலையார் சதகம்' பாடியுள்ளார்.

பக்கத்தில் உள்ள பாடல்பெற்ற தலங்கள் திருச்சிற்றேமம். திருவாய்மூர், திருக்குவளை, திருக்களர் முதலியன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத் திருப்பணித் திட்டத்தில் இக்கோயிலின் சுவாமி அம்பாள்

Koviloor Digital Library

விமானங்கள் திருப்பணிகள் செய்யப்பெற்று, 7-11-1985 ல் கும்பாபி ஷேகம் நடைபெற்றுள்ளது.

'விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழசடை யார்க்கிடம்
கரும்புஞ் செந்நெல்லுங் காய்கமுகின் வளம்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே'

(சம்பந்தர்)

''பரிவுறு சிந்தை அன்பர் பரம்பொருளாகி யுள்ள
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின்
வரிவிடு விடேல் எனாமுன் வன்கழுத்தரிவாள் பூட்டி
அரிதலால் **'அரிவாட்டாயர்'** ஆயினார் தூய நாமம்''

(பெரிய-புரா)

''அல்லமரும் குழலாளை வரகுண பாண்
டியராசர் அன்பால் ஈந்தார்
கல்லை தனில் மென்றுமிழ்ந்த ஊண் அமுதைத்
கண்ணப்பர் கனிவால் ஈந்தார்
சொல்லிய தண்டலையார்க்குக் கீரையும்
மாவடுவும் ஒரு தொண்டர் ஈந்தார்
நல்லது கண்டாற் பெரியோர் நாயகனுக்(கு)
என்(று) அதனை நல்குவாரே''.

(படிக்காசுப் புலவர் - தண்டலையார் சதகம்)

–''கடிக்குளத்தின்
வண்டலைக்கத் தேனலரின் வார்ந்தோர் தடமாக்கும்
தண்டலைக்குள் நீணெறிச் சிந் தாமணியே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நீள்நெறிநாத சுவாமி திருக்கோயில்
தண்டலைச்சேரி கிராமம்
வேளூர் அஞ்சல் - 614 715.
(வழி) திருத்துறைப்பூண்டி
திருத்துறைப்பூண்டி வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

228/111. கோட்டூர்.

Koviloor Digital Library

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருத்துறைப்பூண்டியிலிருந்தும் மன்னார்குடியிலிருந்தும் இத் தலத்திற்குப் பேருந்து வசதி உள்ளது. இவற்றிற்கிடையில் இவ்வூர் உள்ளது. கோயில், 'கொழுந்தீசர் ஆலயம்' என்று வழங்குகிறது. அரம்பையும், ஐராவதமும் வழிபட்ட தலம். ஐராவதம் வழிபட்டதால் இத்தலத்திற்கு 'ஐராவதேச்சுரம்' என்றும் பெயர் என்பதைப் புராணத்தால் அறிகிறோம். ஞானசம்பந்தர் இத்தலத்துப் பெருமானைக் ''கோட்டூர் நற்கொழுந்தே'' எள்று புகழ்ந்து பாடுகின்றார். கீழ்க்கோட்டூர் சிவாலயம் (மணியம்பலம்) கருவூர்த்தேவரின் திருவிசைப்பாப் பாடல் களைப் பெற்றது. மேலக்கோட்டூரில் உள்ள கோயிலே பாடல் பெற்றது.

இறைவன் - கொழுந்தீஸ்வரர், சமீவனேஸ்வரர்,

இறைவி - மதுரபாஷிணி, தேனார்மொழியாள், தேனாம்பாள்.

தலமரம் - வன்னி

தீர்த்தம் - அமுதகூபம் (சந்நிதிக்கு முன் உள்ள குளம்) முதலாக உள்ள ஒன்பது தீர்த்தங்கள்.

(1) முள்ளியாறு. (2) சிவகங்கை (கோயிலின் பின்புறம் உள்ளது ஐராவதம் உண்டாக்கியது) (3) பிரமதீர்த்தம் (சிவகங்கையின் கிழக்கில் உள்ளது) (4) இந்திரதீர்த்தம் (மேல வீதியிலுள்ள தேரடிக்குளம். (5) சிவதீர்த்தம் (தெற்கு வீதியில் உள்ளது) (6) விசுவகர்மதீர்த்தம் (வடக்கில் ஐயனார் குளம் எனப்படுவது) (7) அரம்பை தீர்த்தம் (வழக்கில் கருப்புட்டியான் குளம் எனப்படுவது) (8) மண்டைத் தீர்த்தம் (மேல, கீழ்க்கோட்டூர்களுக்கிடையில் உள்ளது) சம்பந்தர் பாடல் பெற்ற பதி.

இராச கோபுரமில்லை. மேற்கு நோக்கிய கோயில். கோயிலுக்கு முன்னும் பின்னும் குளங்கள் உள்ளன. (தீர்த்தம் எனும் பெயரில் இவை குறிக்கப்பட்டுள்ளன). உள் நுழைந்ததும் சுவசமிட்ட கொடி மரமும், பலிபீடம் நந்தியும் உள்ளன. உள்கோபுரம் மூன்று நிலைகளை யுடையது. பழைமையான கோபுரம். இடப்பால் நந்தவனம்.

அடுத்துள்ள பிராகாரத்தில் சந்திரன், தேவியர்சூழ மகாவிஷ்ணு' நால்வர், சுப்பிரமணியர், அகோர வீரபத்திரர் சந்நிதிகள் உள்ளன. அடுத்துள்ள அரம்பையின் தவக்கோலம் தரிசிக்கத்தக்கது. ஒருகாலை மடித்து மேற்புறமாகத் தூக்கியும், ஒருகையைத் தலைமேல் படிய வைத்தும் உள்ள அரம்பையின் திருமேனி அமைப்பு அற்புதமானது. அடுத்து உமாமகேஸ்வரரும், அற்புதமான அர்த்தநாரீசுவரரும், காட்சியளிக்கின்றனர் - பிரதோஷமூர்த்தி மூலமூர்த்தியாக இருப்பது

Koviloor Digital Library

இத்தலத்தில் விசேஷமானது. மீனாட்சி சுந்தரரேஸ்வரர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, வல்லபை கணபதி, சூரியன் சந்நிதிகளும் உள்ளன.

முன்மண்டபத்தில் தலப்பதிகக் கல்வெட்டுள்ளது. நேரே மூலவர் தரிசனம். வலப்பால் உற்சவ மூர்த்தங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இடப்பால் நடராசசபை உள்ளது. இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள 'மயிலேறுபுரம்' கிராமத்தில் நிலத்தை உழுத போது கண்டெடுக்கப்பட்டுள்ள பழைமையான நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகிய மூன்று மூர்த்தங்களே சபையில் வைக்கப்பட்டுள்ளவை. மற்றொரு நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் வெளியில் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் கற்றூண்களின் அமைப்பு நோக்குவோர்க்கு வியப்பைத்தரும்.

மூலவர் நாகாபரணத்துடன் பொலிவுடன் திகழ்கின்றார். திருமேனி பளபளப்பாகவுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. தேனாம்பாள் அம்பிகை சந்நிதி அழகாகவுள்ளது. கிழக்கு பார்த்த சந்நிதி. நின்ற திருக்கோலம். வெளியே வலப்பால் பள்ளியறை உள்ளது.

கோயில் நன்கு பராமரிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் தை மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமையில் திருவிளக்கு வழிபாடு நடைபெறுகிறது. இதற்கான குத்துவிளக்குகள் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. சிவராத்திரி, கார்த்திகைச் சோமவாரங்களில் சங்காபிஷேகம், ஆதிரை, ஆனித்திருமஞ்சனம், பங்குனி உத்திரம் முதலிய உற்சவங்களும்; மாதாந்திர உற்சவக் கட்டளைகளும்; வைகாசியில் பெருவிழா மூன்று நாள் விழாவாகவும் நடைபெறுகின்றன. தலவரலாறு உள்ளது. நாடொறும் ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன.

இத்தலத்திற்குப் பக்கத்தில் திருக்களர், திருவெண்டுறை முதலிய திருமுறைத் தலங்கள் உள்ளன.

"நீலமார் தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே
ஒற்றை விடைச்
சூலமார் தரு கையனே துன்றுபைம் பொழில்கள்
சூழ்ந்தழகாய
கோலமா மலர் மணங்கமழ் கோட்டூர் நற்கொழுந்தே
என்றெழுவார்கள்
சாலநீடல மதனிடைப் புகழ் மிகத் தாங்குவர்
பாங்காலே".

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''தளரொளி மணிப்பூம் பதஞ் சிலம் பலம்பச்
சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலை முத்தரும்பித்
திருமுக மலர்ந்து சொட்டட்டக்
கிளரொளி மணி வண்டறை பொழிற் பழனங்
கெழுவு கம்பலை செய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனென் மனங் கலந்தானே.''

(திருவிசைப்பா) - கருவூர்த்தேவர்

-''கொண்டலென
மன்கோட்டூர் சோலை வளர் கோட்டூர் தண்பழனத்
தென்கோட்டூர் தேவ சிகாமணியே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கொழுந்தீஸ்வரர் திருக்கோயில்
கோட்டூர் & அஞ்சல்
(வழி) மன்னார்குடி - மன்னார்குடி வட்டம்
திருவாரூர் மாவட்டம் - *614 708.*

229/112. திருவெண்டுறை

வண்டுதுறை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'வண்டுதுறை' என்று வழங்குகிறது.

1. மன்னார்குடி - வீராக்கி செல்லும் நகரப் பேருந்துகள் வண்டுதுறை வழியாகச் செல்கின்றன.

2. மன்னார்குடி - சேந்தங்குடி செல்லும் நகரப் பேருந்துகள் வண்டுதுறை வழியாகச் செல்கின்றன.

3. திருத்துறைப்பூண்டியிலிருந்து மன்னார்குடிக்குப் போகும் சாலையில் 'வீராக்கி' என்று வழிகாட்டிக்கல் உள்ள இடத்தில் பிரியும் சாலையில் சென்று இத்தலத்தையடையலாம். நல்ல சாலை.

Koviloor Digital Library

பிருங்கி முனிவர் வண்டு உருவில் இறைவனின் திருமேனியின் இடையில் துளைத்துச் சென்று அவரை மட்டும் வலம் வந்தமையால், அம்பிகை சாபம் தர, வண்டு உருவில் இருந்து இங்கு வழிபட்டார் என்பது வரலாறு. கருவறையில் வண்டின் ரீங்கார ஒலி கேட்பதாகப் பண்டை நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது கேட்கவில்லை. வித்யாதரர், பிரமன், துருவன், திருமால் ஆகியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - மதுவனேஸ்வரர், பிரமரேஸ்வரர், பிரமபுரீசர், வெண்டுறைநாதர்

இறைவி - சத்யதாயதாக்ஷி, பிரஹதாம்பாள், வேல்நெடுங்கண்ணி

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - பிரமதீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

இராசகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கிழக்கு நோக்கிய கோயில். கோயிலின் வடபால் தாமரைக் குளம் உள்ளது. வாயிலைக் கடந்து சென்றால் கொடிமரமில்லை - பீடம் மட்டுமுள்ளது. பலிபீடம் நந்தி உள்ளன.

பிராகாரத்தில் 'மதாபோத கணபதி' சந்நிதியும், சுப்பிரமணியர் சந்நிதியும் உள. சுற்று மதிலுடன் தரை தளவரிசையிடப்பட்டு வலம் வருவதற்கு வசதியாகவுள்ளது.

இங்குப் பிட்சாடனர் மூலத் திருமேனி, பிராகாரத்தில் உள்ளது. தரிசிக்கத் தக்கதும் விசேஷமானதுமாகும். கருவறை முன் மண்டபத்தில் அம்பாள் சந்நிதி வலப்பால் உள்ளது. நின்ற திருக்கோலம். நேரே மூலவர் தரிசனம் அழகிய சிவலிங்கத் திருமேனி. நடராச சபையுள்ளது.

கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, அர்த்த நாரீஸ்வரர் (ரிஷபத்தின்மீது கை ஊன்றிய நிலையில்), பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது. நாடொறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

''ஆதியன் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியொர் மாதினொடும் பயிலும் பரமா பரமன்
போதியலும் முடிமேற் புனலோடரவம் புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்புமிடம் வெண்டுறையே''.

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-''தென்கூட்டிப்
போய் வண்டுறை தடமும் பூம்பொழிலும் சூழ்ந்தமர்
ஆய் வெண்டுறை மாசிலாமணியே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வெண்டுறைநாதர் திருக்கோயில்
அ/மி. மதுவனேஸ்வரர் திருக்கோயில்
வண்டுதுறை & அஞ்சல் - 614 717.
ஆதிச்சபுரம் S.O.
மன்னார்குடி வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

230/113. கொள்ளம்பூதூர்

திருக்களம்புதூர்,
திருக்களம்பூர்.

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

கும்பகோணம் வழியாகக் குடவாசல் செல்லும் பேருந்தில் சென்று கொள்ளம்பூதூரை அடையலாம். ஊருக்குப் பக்கத்தில் முள்ளியாறு எனப்படும் வெட்டாறு ஓடுகின்றது. இது அகத்திய காவேரி எனப்படும். இவ்வாற்றின் எதிர்க்கரையில் ஞானசம்பந்தர் கோயில் உள்ளது. இக் கோயிலை 'நம்பர் கோயில்' என்றழைக்கின்றனர். நம்பர் என்பது ஞானசம்பந்தரைக்குறிக்கும்.

இவ்வாற்றில்தான் ஞானசம்பந்தர், அடியவரோடு ஓடம் ஏறிப் பதிகம் பாடிச் செலுத்தி மறுகரையைச் சேர்ந்த அற்புதம் நிகழ்ந்தது. (இந்த ஆற்றை ஓடம் போக்கி ஆறு என்றும் மக்கள் வழங்குகின்றனர்) ஞான சம்பந்தர், பாண்டிய நாட்டில் சைவம் தழைக்கச் செய்து, சோழ நாட்டில் கொள்ளம்பூதூருக்கு வருகைதந்தபோது முள்ளியாற்றில் வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. ஓடஞ்செலுத்த முடியாமையால் ஓடக்காரர்கள் தங்கள் ஓடங்களைக் கரையில் நிறுத்திவிட்டுப் போயிருந்தனர். அங்கு வந்த ஞானசம்பந்தர் அவ் ஓடங்களுள் ஒன்றினை அவிழ்த்து நாவினையே ஓடக் கோலாகக் கொண்டு

Koviloor Digital Library

''கொட்டமே கமழும்'' என்று தொங்கும் பதிகம் பாடி மறுகரையை அடைந்தார். இறைவன் காட்சிதர, தரிசித்து, ஆலயத்தை அடைந்து போற்றிப் பதிகத்தை நிறைவு செய்து வழிபட்டார். இவ்வற்புதம் இன்னும் இத்தலத்தில் 'ஒடத் திருவிழா' வாக ஐப்பசி அமாவாசைக்கு மறுநாள் சிறப்பாக நடைபெறுகின்றது. இத்தலம் வில்வவனம் - கூவிளவனம் என்னும் சிறப்பினது. (கூவிளம் - வில்வம்) கூவிளம்புதூர் - கொள்ளம்புதூர் ஆயிற்று. இதுதவிர, பிரமவனம், பஞ்சாட்சரபுரம், காண்டீபவனம் என்னும் பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு. அருச்சுனன் வழிபட்டதாகவும் வரலாறு தல புராணத்தில் சொல்லப் பட்டுள்ளது.

இறைவன் - வில்வாரண்யேஸ்வரர், வில்வவனநாதர்

இறைவி - செளந்தரநாயகி, அழகு நாச்சியார்

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - பிரமதீர்த்தம், அகத்திய தீர்த்தம் காண்டீப தீர்த்தம் (அருச்சுன தீர்த்தம்), முள்ளியாறு எனப்படும் வெட்டாறு முதலியன.

சம்பந்தர் பாடல் பெற்றது.

விநாயகர், கங்கை, காவிரி, ஆதிசேடன், இடைக்காடர், வரகுண பாண்டியன், கோச்செங்கட்சோழன், பிருகுமுனிவர், காசிபர், கண்வர், அகத்தியர், வசிட்டர், வாமதேவர் முதலியோர் வழிபட்ட தலம்.

''பொற்புறு கொள்ளம் பூதூர் எனவொரு புகழ்ப் பேர் கொண்ட
விற்பொலி மதில்சூழ் வில்வ வனமது விண்ணோர் போற்றும்
சிற்பரன் உகந்த காசி செறி அகத்திய காவேரி
அற்புதமாகுங் கங்கை பலமும் அப்படியே யாமால்''

(தலபுராணம்)

சுவாமி விபுலானந்தர் அவர்கள் - யாழ்நூலின் ஆசிரியர் பலகாலம் ஆராய்ந்து வெளியிட்ட யாழ்நூலை அரங்கேற்றிய இடம் இத்தலமே யாகும் (1947 -ல்). திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. நகரத்தார் திருப்பணி பெற்றது. முகப்பு வாயிலின் மேற்புறத்தே ரிஷபாரூடர், விநாயகர், சுப்பிரமணியர் திருமேனிகள் வண்ணத்தில் சுதையில் அமைக்கப்பட்டுள்ளன. துவார விநாயகர் இருபுறமும் உள்ளார். கோயிலின்முன் பிரம தீர்த்தம் உள்ளது. உள்நுழைந்ததும் வலப்பால் நந்தவனத்தின் மத்தியில் மகாலட்சுமி சந்நிதி உள்ளது. இரண்டாங் கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. வாயிலில் இருபுறமும் பொய்யாத விநாயகர், தண்டபாணி சந்நிதிகள் தனித்தனிக் கோயில்களாக உள்ளன. வெளிப்பிராகாரத்தில் சந்நிதிகள் எவையுமில்லை.

Koviloor Digital Library

கோபுரத்துள் நுழைந்ததும் வலப்பக்க கற்தூணில் சம்பந்தர் ஓடம் ஏறிச் செலுத்தும் சிற்பம் உள்ளதைக் கண்டு மகிழலாம். பிராகாரத்தில் வலம் வரும்போது நால்வர், வலம்புரி விநாயகர், சோமாஸ்கந்தர், கஜமுத்தீசர், முல்லைவனநாதர், சாட்சிநாதர், பாதாளவரதர், மகாலிங்கர், விநாயகர், கங்கையம்மன், தட்சிணாமூர்த்தி, சரஸ்வதி, விசாலாட்சி, சோழமன்னன், அவன் மனைவி ஆகிய சந்நிதிகள் உள்ளன. அடுத்தாற் போல ஆறுமுகசுவாமி, மகாலட்சுமி, பைரவர், பள்ளியறை, நவக்கிர கங்கள், சனிபகவான், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

வலம் வந்து தரிசித்து, செப்புக் கவசமிட்ட கொடிமரத்தையும், கொடிமரத்து விநாயகரையும் வணங்கி, மண்டபத்தில் சென்றால் தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதி உள்ளது. சந்நிதிக்கு முன்னால் வெளியில் மண்டபத்தின் மேற்புறத்தில் பன்னிரண்டு ராசிகளின் உருவங்கள் உரிய கட்டட அமைப்பில் வடிக்கப்பட்டுள்ளது.

அம்பாள் நின்ற திருக்கோலம். சந்நிதிகளின் எதிரில் உள்ள தூண்களில் இத்திருக்கோயிலில் திருப்பணியைச் செய்வித்த நகரத்துச் செட்டியார் உருவங்கள் உள்ளன. துவாரபாலகர்களையும் துவார விநாயகரையும் முருகனையும் தரிசித்து மூலவர் மண்டபத்தை அடை யலாம். வலப்பால் திருமுறைக்கோயில் - பக்கத்தில் நடராச சபை. இம் மண்டபத்தில் விநாயகர், பிட்சாடனர், சந்திரசேகரர் முதலிய உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

நேரே மூலவர் தரிசனம், கோஷ்ட மூர்த்தங்களாக நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். சண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது. இத்திருக்கோயிலில் நாடொறும் ஆறுகால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன. நற்சாந்துப்பட்டி பெ. ராம இராமன்செட்டியார், பெ. ராம. லட்சுமணன் செட்டியார் குடும்பத்தினர் இத்திருக்கோயிலின்பால் அளவிலாதபற்று கொண்டு இலட்சக் கணக்கில் திருப்பணிகளைச் செய்வித்து - கோயில் முழு வதையும் கருங்கல் திருப்பணியாக செய்வித்து - 1.7.1979ல் மகா கும்பாபிஷேகத்தை மிகச்சிறப்பாகச் செய்து முடித்துள்ளனர். இன்றும் இக்குடும்பத்தினர் இக்கோயிலைச் செம்மையாகப் போற்றி வருவது நம்நெஞ்சுக்கு மகிழ்வூட்டும் அமுதச் செய்தியாகும். மூன்றாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்திய கல்வெட் டுக்கள் இக்கோயிலுள் உள்ளன. கல்வெட்டுக் குறிப்பில் சுவாமி 'கொள்ளம்பூதூர் உடையார்' என்றும்; தேவி 'அழகிய நாச்சியார்'

Koviloor Digital Library

என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். ஆலயத்தில் நந்தா விளக்கெரிக்கவும், நாள்வழிபாட்டுக்கும் நிவந்தங்கள்விட்ட செய்திகளை இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இத்தலம் கல்வெட்டில் 'அருமொழிதேவ வளநாட்டுச் சோற்றூர்க் கூற்றத்துத் திருக்கொள்ளம்பூதூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

''கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நட்டமாடிய நம்பனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார் தொழ
நல்குமாறருள் நம்பனே''

''கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுன் ஞானசம்பந்தன்
இன்று சொன்மாலை கொண்டேத்த வல்லார் போய்
என்றும் வானவரோடு இருப்பாரே''

(சம்பந்தர்)

''தேவர் பிரான் அமர்ந்த திருக்கொள்ளம்பூதூர்
எதிர்தோன்றத் திருவுள்ளம் பணியச் சென்று
மேவுதலால் ஓடங்கள் விடுவார் இன்றி
ஒழிந்திடவும் மிக்கதோர் விரைவார் சண்பைக
காவலனார் ஓடத்தின் கட்டவிழ்த்துக்
கண்ணுதலான் திருத்தொண்டர் தம்மை யேற்றி
'நாவலமே கோலாக' அதன் மேல்நின்று
நம்பர்தமைக் 'கொட்டமே' நவின்று பாட''

(பெ.புரா)

வில்வவனேசர் துதி

''சீர்கொண்ட ஒருகோடிப் பரிதியென ஒளிவிரிக்கும் செவ்வியானைப்
பார்கொண்ட மணிச்சுடிகைப் பன்னகப்பொற் பணியானைப் பசுந்தேன் நல்கும்
தார்கொண்ட தண்துளபத் திருமாலும் சதுர்முகனும் தாழ்ந்து போற்றக்
கார்கொண்ட முகத்தானை வில்வவனப் பெருமானைக் கருத்துள் வைப்பாம்''.

(தலப்பாடல்)

Koviloor Digital Library

வெண்ணிலாக்கண்ணி

''வில்வவனமேவு நாதர் வெண்ணிலாவே - எங்கள்
விமலர்தமை ஏத்துவம் வா வெண்ணிலாவே
நம்பர்பதம் அபயமென வெண்ணிலாவே - நீதான்
நண்ணியுற்ற நலமறிந்தோம் வெண்ணிலாவே.
நாட்டுக்கெலாம் நம்பனென வெண்ணிலாவே - அந்த
நம்பனுறை கொள்ளம் பூதூர் வெண்ணிலாவே.''

(கொள்ளம்பூதூர் வைத்தியலிங்க முதலியார் பாடியது)

-'தோய்வுண்ட
கள்ளம்பூதாதி நிலைகண்டு உணர்வு கொண்டவர்சூழ்
கொள்ளம்பூதூர் வான்குல மணியே'

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வில்வாரண்யேசுவரர் திருக்கோயில்
திருக்களம்பூர் - 622 414
திருவாரூர் மாவட்டம்.

231/114. பேரெயில்

ஓகைப்பேரையூர் - வங்காரப்பேரையூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

பேரையூர் என்ற பெயரில் பலவூர்களிருப்பதால் மக்கள் இப்பதியை ஓகைப்பேரையூர் என்று வழங்குகின்றனர். வங்காரப் பேரையூர் என்ற பெயரும் வழங்குகிறது.

1) திருவாரூர் - மன்னார்குடிச் சாலையில் கமலாபுரம் அடுத்த மூலங்குடி வந்து அங்கிருந்து இத்தலத்தையடையலாம்.

2) மாவூர்ரோடு - வடபாதி மங்கலம் சாலை வழியாகவும் இத்தலத்திற்கு வரலாம்.

Koviloor Digital Library

சோழ நாட்டின் தலைநகராகத் திருவாரூர் விளங்கியபோது அதைச் சார்ந்த கோட்டை இருந்தது என்றும்; அக்கோட்டையின் அருகே எழுந்த ஊர் 'பேரெயிலூர்' என்று பெயர் பெற்றதென்றும் அப்பெயரே மருவி பேரையூர் என்றாயிற்று என்பது ஆய்வாளர் கருத்து. இவ்வூரில் தோன்றிய பெண் புலவர் ஒருவர் - பேரெயில் முறுவலார் - பாடிய பாடல்கள் குறுந்தொகையிலும், புறநானூற்றிலும் உள்ளன.

இறைவன் - ஜகதீஸ்வரர்

இறைவி - ஜகந்நாயகி

தலமரம் - நாரத்தைமரம்

தீர்த்தம் - அக்னிதீர்த்தம்

அப்பர் பாடல் பெற்றது.

சிறிய கிராமம். நகரத்தார் திருப்பணி பெற்ற கோயில். கிழக்கு நோக்கிய மூன்று நிலை ராஜகோபுரம். பிராகாரத்தில் கற்பக விநாயகர், முருகன், மகாலட்சுமி, பைரவர், ஐயனார், சூரியசந்திரர் சந்நிதிகள் உள்ளன. மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள், நடராசசபை உள்ளன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கைத் திருமேனிகள் உள்ளன. திருப்பணிகள் நடைபெற வேண்டும்.

''மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறைகொள் கண்டம் உடைய கபாலியர்
துறையும் போகுவர் தூய வெண்ணீற்றினர்
பிறையும் சூடுவர் பேரெயி லாளரே''.

(அப்பர்)

-வெள்ளிடைவான்
வாம் பேரெயிற் சூழ்ந்த மாண்பாற் றிருநாம
மாம் பேரேயில் ஒப்பிலாமணியே

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஜகதீஸ்வரர் திருக்கோயில்
ஓகைப்பேரையூர் (வங்காரப்பேரையூர்)
வடபாதிமங்கலம் அஞ்சல் - 610 206
திருவாரூர் வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

232/115. திருக்கொள்ளிக் காடு

கள்ளிக்காடு

சோழ நாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் 'கள்ளிக்காடு' என்றும் வழங்குகிறது. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி மெயின்ரோடில், 'நெல்லிக்கா' என்று கைகாட் உள்ள திசையில் திரும்பி, திருநெல்லிக்கா' சென்று; அங்கிருந்து அருகாமையிலுள்ள 'தெங்கூர்' சென்று: அங்கிருந்து 'கொள்ளிக்காடு' செல்லும் பாதையில் 5 கி.மீ. சென்று, கீராலத்தூர் என்னும் கிராமத்தை அடைந்து; அங்கிருந்து மேலும் சென்றால் சாலையோரத்தில் தாமரைக் குளமும் அதையொட்டிக் கோயிலும் இருப்பதைக் காணலாம். நல்ல தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. பஸ், கார், வேன் கோயிலுக்குச் செல்ல வசதியுள்ளது. கோயில் வரை மினிபஸ் போகிறது. கோயிலைக் சுற்றிச் சில வீடுகளே உள்ளன. கொள்ளி- நெருப்பு. அக்கினி வழிபட்ட தலமாதலின் கொள்ளிக்காடு என்று பெயர் பெற்றது.

சோழ மன்னன் ஒருவனுக்குச் சனிதோஷம் விலகிய தலம். ஆதலின் இங்குச் சனிபகவான் சந்நிதி விசேஷமானது. நகரத்தார் திருப்பணியைப் பெற்றுள்ள கோயில். கோயில் நல்ல நிலையில் உள்ளது. இத்தலத் தேவாரத்தில் இறைவன் யானையை உரித்த செயல் குறிப்பிடப்படுவதால் மக்கள் ஒருகாலத்தில் இக்கோயிலை 'கரியுரித்த நாயனார் கோயில்' என்றும் அழைத்து வந்ததாகத் தெரிகிறது.

இறைவன் - அக்கினீஸ்வரர்

இறைவி - மிருதுபாதநாயகி, பஞ்சின் மெல்லடியம்மை.

தலமரம் - வன்னி, கோயிலுக்கு எதிரில் உள்ளது.

தீர்த்தம் - தீர்த்தக்குளம், கோயிலின் பக்கத்தில் உள்ளது.

சம்பந்தர் பாடியது.

Koviloor Digital Library

ராஜகோபுரமில்லை. முகப்பு வாயில் வழியாக உட்சென்றால் பலபீடம் நந்தி மட்டும் உள்ளது. கொடிமரமில்லை. பிராகாரத்தில் வள்ளிதெய்வயானை சமேத வில்லேந்திய சுப்பிரமணியர், மகாலட்சுமி, சனிபகவான், பைரவர் சந்நிதிகள் உள்ளன. நவக்கிரகங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. விநாயகர், காசிவிசுவநாதரை வணங்கி வலம் முடித்து உட்சென்றால் நேரே மூலவர் தரிசனம். மேற்கு பார்த்த சந்நிதி. சிவலிங்கத் திருமேனி சற்று சிவந்த நிறமாகவுள்ளது. (அக்கினி வழிபட்டது) குட்டையான சிறிய பாணம். சுவர் ஓரத்தில் நால்வர் சந்நிதி உள்ளது.

சந்நிதிக்கு முன்னால் இடப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. சிறிய திருமேனி. நின்ற திருக்கோலம். உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நடராசர், சிவகாமி, சனீஸ்வரர் காகவாகனத் துடன், விநாயகர், முதலிய திருமேனிகள் உள்ளன.

கோஷ்ட மூர்த்தங்களாக பிரம்மா, இலிங்கோற்பவர், தட்சிணா மூர்த்தி, விநாயகர், துர்க்கை ஆகியோர் காட்சி தருகின்றனர். இலிங் **கோற்பவருக்குப் பக்கத்தில் பிரம்மாவும் விஷ்ணுவும் நின்று காட்சி தருகின்றது விசேஷ அமைப்பாகவுள்ளது.** விநாயகருக்குப் பக்கத்தில் சுவரில், சிவலிங்கத்தை, ரிஷிஒருவர் வழிபடுவது போன்று ஒரு சிற்பம் உள்ளது. கோயிலில் விசாரித்ததில் அகத்தியர் வழிபடும் கோலம் என்கின்றனர்.

நாடொறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன்விழாத் திட்டத்தில் இடம்பெற்றுத் திருப்பணிகள் நடைபெற்றுப் பொலிவுடன் காட்சி தருகின்றது. ஊர் மக்களும் இப்பணிகளுக்கு உதவியுள்ளனர். இத் தலத்து இறைவனருளால் சனி தோஷம் நீங்கப் பெற்ற திரிபுவனசக்கரவர்த்தி, தானமாகத் தந்த 120 ஏக்கர் நன்செய் (கோயிலைச் சுற்றி) இன்று கோயில் நிர்வாகத்தில் உள்ளது.

இத்தலத்திற்குப் பக்கத்தில் நெல்லிக்காவும், தெங்கூரும் உள்ளன. இக்கோயில் குருக்கள் திருத்தெங்கூரில் உள்ளார். கோயிலைக்காணச் செல்வோர் அவருக்குத் தெரிவித்து, உடன் அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

"பஞ்சு தோய்மெல்லடிப் பாவையாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாடொறும்
வெஞ்சுன மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக்காடரே." *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

-'தாம்பேரா
வீட்டிலன் பரானந்த மேவச் செயுங்கொள்ளிக்
காட்டிலமர்ந்த என்கண் காட்சியே'

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அக்கினீஸ்வரர் திருக்கோயில்
திருக்கொள்ளிக்காடு - கீராலத்தூர் அஞ்சல் - 610 205
(வழி) திருநெல்லிக்காவல் - திருத்துறைப்பூண்டி வட்டம்
திருவாரூர் மாவட்டம்.

233/116. திருத்தெங்கூர்

திருத்தங்கூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

மக்கள் வழக்கில் திருத்தங்கூர் என்றும் வழங்கப்படுகிறது. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் 'நெல்லிக்கா' என்று கை காட்டி உள்ள திசையில் திரும்பி, திருநெல்லிக்கா சென்று, அங்கிருந்து 2 கி.மீ. உள்ள இத்தலத்தையடையலாம். தனிப் பேருந்தில் செல்வோர், கோயில்வரை செல்லலாம். பொதுப் பேருந்துப் பயணம் மேற் கொள்வோர், 'நெல்லிக்கா' கைகாட்டி உள்ள இடத்தில் இறங்கி நடந்து வரவேண்டும். ஊழிக்காலத்தில் கடல் பொங்கியெழுந்து அதனால் உலகம் கொள்ளப்பட்டும், இத்தலத்தில் மட்டுமே தெளிந்த நீர் தேங்கி நின்றதால் 'தேங்கூர்' என்று பெயர் பெற்றது என்பது தலபுராணச் செய்தி. தென்னை வளம்பெற்ற ஊராதலின் 'தெங்கூர்' எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

இலக்குமியும் நவக்கிரகங்களும் வழிபட்டதலம்.

இறைவன் - ரஜதகிரீஸ்வரர், வெள்ளிமலைநாதர்.

இறைவி - பிருகந்நாயகி, பெரியநாயகி.

தலமரம் - தென்னை

தீர்த்தம் - சிவகங்கை.

சம்பந்தர் பாடல் பெற்றது.

இராசகோபுரமில்லை. கொடிமரமில்லை - கொடிமரத்து விநாயகர் உள்ளார். நந்தி பலிபீடங்கள் உள்ளன. வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது.

Koviloor Digital Library

தனிக்கோயில், உள்வாயிலைத்தாண்டிச்சென்றால் நேரே மூலவர்தரிசனம். பிராகாரத்தில் சோமாஸ்கந்தர், விநாயகர், சுப்பிர மணியர், மகா லட்சுமி, நவக்கிரகங்கள் வழிபட்ட லிங்கங்கள், நவக்கிரக சந்நிதி முதலியவைகள் உள்ளன. நடராசசபை உள்ளது. பைரவர், சூரியன் சந்நிதிகளும் உள.

துவாரபாலகர்களையும், விநாயகரையும், சுப்பிரமணியரையும் வணங்கி உட்சென்று மூலவரைத் தரிசிக்கின்றோம். கிழக்கு நோக்கிய சந்நிதி, சற்று உயர்ந்த பாணமுடைய சிவலிங்கத் திருமேனி. அக்க மணிமாலையும், திருநீற்றுப் பட்டமும், வெள்ளியாலான பிறையும் வில்வதளமும், சார்த்தப்பட்டுத் தரிசிக்கும்போது எடுப்பான திருக் கோலம் உள்ளத்திற்குச் சாந்தியைத் தருகின்றது. கோஷ்ட மூர்த்தங் களாக, நர்த்தனவிநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உளர். நாடொறும் ஆறு கால பூஜைகள் நடை பெறுகின்றன.

வைகாசி விசாகத்தில் பெருவிழா - ஏகதினவிழா உற்சவமாக நடைபெறுகிறது. அருகில் உள்ள திருமுறைத் தலங்கள் திருநெல்லிக்கா, திருக்கொள்ளிக்காடு என்பன. திருத்தேங்கூர்த்தலபுராணம் உள்ளது. இக்கோயில் திருப்பணிகள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொருளுதவியாலும் ஊர்மக்களின் பேராதரவாலும் நடைபெற்றுள்ளன. மூன்றாம் ராசராசன் மூன்றாம் குலோத்துங்கன். மூன்றாம் ராசேந்திரன் காலத்திய கல் வெட்டுக்கள் இக்கோயிலுக்கு விளக்கெரியவும், விழா எடுக்கவும் நிபந்தங்கள் அளித்த செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

''புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால் கடல் நஞ்சையுண்டவர் கருதலர் புரங்கள்
நிரைசெய்து ஆரழலூட்டி யுழல்பவர் இடுபலிக்கெழில் சேர்
விரைசெய் பூம்பொழில் தேங்கூர் வெள்ளியங்குன்ற மர்ந்தாரே''

(சம்பந்தர்)

''மருவேழம் புராசி யெழு வரையேழும்
வலமயிலோன் வருமுன் தான்போய்
ஒருவேழந்தரு பரனை உமையை வலம்
வந்து கனியுடன் கொண்டோனைப்
பெருவேழந் தீர்த்தன்பு தருமோம்
பனைப்பசுந்தேன் பிலிற்றுத் தூற்றுங்
கருவேழ மருந்து துகிர்ச் செவ்வேழ
முகத்தானைக் கருத்துள் வைப்பாம்''.

(விநாயகர்துதி - தலப்புராணம்)

Koviloor Digital Library

-நீட்டுமொளி
ஆங்கூரிலை வேலவனாதியர் சூழத்
தேங்கூரில் வாழ் தேவ சிங்கமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அருள்மிகு. ரஜதகிரீஸ்வரர் தேவஸ்தானம்
அருள்மிகு. வெள்ளிமலைநாதர் திருக்கோயில்
திருத்தங்கூர் - திருநெல்லிக்காவல் அஞ்சல் - 610205
திருத்துறைப்பூண்டி வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

234/117. திருநெல்லிக்கா

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

நெல்லி மரங்கள் அடர்ந்த சோலையாக இவ்விடம் இருந்தமையின் இப்பெயர் பெற்றது.

1) திருவாரூர் - திருத்துறைப்பூண்டி இருப்புப்பாதையில் உள்ள புகைவண்டி நிலையம். இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஊர் சற்று உள்ளடங்கியுள்ளது.

2) திருவாரூர் - திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில், திருவாரூரை அடுத்து, 14 ஆவது கி.மீ -ல் 'திருநெல்லிக்கா' என்று வழி காட்டிக்கல் உள்ள இடத்தில் பிரியும் சாலையில் சென்று, 'புதூர்' ஊரையடைந்து, அதைத்தாண்டி திருநெல்லிக்காவல் 'ரயில்வேகேட்'டையும் கடந்து, திருநெல்லிக்காவல் ஊரையடையலாம். கோயில் ஊர்க்கோடியில் உள்ளது. கோயில்வரை பேருந்து செல்லும், நல்ல பாதை.

3) திருவாரூரிலிருந்து இத்தலத்திற்கு நகரப்பேருந்து வசதியுள்ளது. சிறியஊர். நெல்லிக்காவல், ஆம்லகவனம் என்பன இத் தலத்திற்குரிய பெயர்கள். 'பஞ்சகூடபுரம்' என்று சொல்லப்படும் ஐந்து தலங்களுள் ஒன்று. ஏனையவை (1) நாட்டியத்தான் குடி, (2) காறாயில் (3) திருத்தெங்கூர் (4) நமசிவாயபுரம் என்பன.

இத்தலம் சூரியன், பிரமன், திருமால், சந்திரன், சனி, கந்தர்வர், துர்வாசர் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது. இத்தலத்தில் தான் இறைவன் துர்வாசருக்கு கோபத்தை நீக்கியருளினார் என்பர்.

Koviloor Digital Library

சூரியன் வழிபட்டதால் அருணபுரம் என்றும்; பிரமன் தீர்த்தமுண்டாக்கி வழிபட்டதனால் பிரமதீர்த்தம் என்றும்; கந்தர்வன் ஒருவனின் குட்ட நோய் நீங்கப்பெற்றதால் குஷ்டரோகஹரம் என்றும்; வழிபடு பயன்கள் எளிதில் பெறத்தக்க தலமாதலின் சர்வஉத்தமபுரம் என்றும்; ஐந்தெழுத்தும் இறைவனை வழிபட்டதால் பட்சாட்சரபுரம் என்றும்; ஐந்து தீர்த்தங்கள் இருப்பதால் பஞ்சதீர்த்தபுரம் என்றும்; இறையருளால் அமுதம் கிடைக்கப்பெற்றதால் அமிர்த வித்யாபுரம் என்றும் இதற்குப் பல பெயர்களுள்ளன.

இறைவன் - ஆம்லகவனேஸ்வரர், ஆம்லகேஸ்வரர், நெல்லிவனநாதர், நெல்லி நாதேஸ்வரர்.

இறைவி - ஆம்லகேஸ்வரி, மங்களநாயகி

தலமரம் - நெல்லிமரம்

தீர்த்தம் - கோயில் எதிரில் உள்ளது பிரமதீர்த்தம், வடபால் உள்ளது ரோகநிவாரண தீர்த்தம் (சூரியதீர்த்தம்) பிரமதீர்க்கரையில் படித்துறை விநாயகர் உள்ளார்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

கோயில் வயல்களுக்கு மத்தியில் உள்ளது. மேற்கு நோக்கிய திருக்கோயில் கவசமிட்ட கொடிமரத்தையும், விநாயகரையும் பணிந்து செல்லும் நம்மை ஐந்து நிலைகளையுடைய ராசகோபுரம் அழைக்கின்றது. பிராகாரத்தில் நால்வர், கஜலட்சுமி, விநாயகர், வள்ளி தெய்வயானை சுப்பிரமணியர், சனிபகவான், தலமரம், நெல்லி, மரத்தினடியில் நெல்லிவனநாதர் பைரவர், நவக்கிரகங்கள் முதலிய சந்திதிகள் உள்ளன. வலம்முடித்துப் படிகளேறி முன்மண்டபத்தை அடைந்தால் இடப்பால் சோமாஸ்கந்தர் தரிசனம். நேரே நடராசசபை உள்ளது. இருபுறத்திலும் உற்சவத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தில் மேற்புறத்தில் நவக்கிரகங்கள், பன்னிரு ராசிகள், தசாவதாரங்கள் முதலியன தீட்டப்பட்டுள்ளன. மூலவர் திருமேனி - மேற்கு நோக்கிய காட்சி.

கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை சந்நதிகளும் உள்ளன. சண்டேசுவரர் உள்ளார். அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். சோழர் காலத்திய கல்வெட்டுக்களில் இத்தலம் இராஜேந்திரசோழ வளநாட்டு, அருவாள கூற்றத்து நெல்லிக்கா என்றும்; இறைவன் பெயர் நெல்லிக்கா உடையார், ஆம்லகேஸ்வரர் எனவும் குறிக்கப்பட்டுள்ளன. இராசராச தேவன்

Koviloor Digital Library

காலத்திய கல்வெட்டு கோயிலில் விளக்கெரிக்க நிபந்தமாக நிலம் விடப்பட்டதைக் கூறுகிறது.

நாடொறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரையில் பெருவிழா பத்து நாள்களுக்கு நடைபெறுகின்றது. தவிர, ஆவணிமுதல் வெள்ளிக்கிழமையில் அம்பாள் கல்யாண உற்சவம், நவராத்திரி, சஷ்டி, கார்த்திகைச் சோமவாரங்களில் சங்காபிஷேகம், கார்த்திகை தீபம், தைப்பூசம், தைமாதம் கடைசி வெள்ளிக்கிழமைகளில் திருவிளக்கு வழிபாடு முதலிய உற்சவ விசேஷங்களும் நடைபெறுகின்றன. தலபுராணம் உள்ளது.

''மறைத்தான் பிணிமாதொரு பாகந்தன்னை
மிறைத்தான் வரையால் அரக்கன் மிகையைக்
குறைத்தான் சடைமேற் குளிர்கோல் வளையை
நிறைத்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே.''

(சம்பந்தர்)

''நெல்லிவனம் மேவும் நித்தன் திருவடியைப்
புல்லும் மனத்துடனே போற்றினால் - தொல்லை
வினைத்தொகுதியாவும் விரைந்திடும் கண்டீர்
எனைத்தும் துயரமினி ஏன்.'' *(தனிப்பாடல்)*

-''ஓங்குமலை
வல்லிக்கா தாரமணிப்புய என்று அன்பர்தொழ
நெல்லிக்கா வாழ் மெய்ந்நியமமே''. *(அருட்பா)*

-''தருத்தாங்கு
நெல்லிக்கா மேவு நிகழ் மங்கள மாது
புல்லுகின்ற நெல்லிவனப் புண்ணியா''

(சிவநாயக்கலிவெண்பா)

(திருக் கோயில் மண்டபங்களின் நீதிமொழிகள் எழுதப்பட்டுள்ளன.)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நெல்லிவனேஸ்வரர் திருக்கோயில்
திருநெல்லிக்காவல் - அஞ்சல் - 610 205.
திருவாரூர் வட்டம் - மாவட்டம்.

Koviloor Digital Library

235/118. திருநாட்டியத்தான்குடி

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் கூட்டுரோடு வந்து, அங்கிருந்து வடபாதி மங்கலம் செல்லும் பாதையில் சென்றால் இத்தலத்தையடையலாம். சாலையோரத்தில் ஊர் உள்ளது.

கோட்புலி நாயனாரின் அவதாரத்தலம். அவருடைய இரு புதல்வியர்களை-சிங்கடி, வனப்பகை-சுந்தரர் தம் புதல்வியர்களாக ஏற்றருளியபதி.

இறைவன் - மாணிக்கவண்ணர், ரத்னபுரீசுவரர், கரிநாலேஸ்வரர், நாட்டியத்து நம்பி

இறைவி - மங்களாம்பிகை

தலமரம் - மாவிலங்கை

தீர்த்தம் - சூரியதீர்த்தம், கரிதீர்த்தம் (இவைமுறையே கோயிலின் முன்னும் பின்னும் உள்ளன.)

சுந்தரர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில். நகரத்தார் திருப்பணிபெற்றது. கிழக்குக் கோபுர வாயிலின் முன் சுந்தரருக்கு கைகாட்டிய விநாயகர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. ஐந்துநிலை ராஜகோபுரம், உட்பிரகாரத்தில் விநாயகர், முருகன், விசுவநாதர், கஜலட்சுமி, நவக்கிரக சந்நிதிகள் உள்ளன. கோஷ்டத்தில் உள்ள மூர்த்தங்கள் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா ஆகியன. கோட்புலி நாயனார் உருவம் உள்ளது. மகா மண்டபத்தில் நடராசசபையும் உற்சவமூர்த்தங்களும் உள்ளன. இத்தல வரலாறு வருமாறு:-

1) கோட்புலி நாயனார் வீட்டில் சுந்தரர் தங்கியிருந்தபோது வழிபடக் கோயிலுக்குச் சென்றார். அங்கு இறைவனையும் இறைவியையும் காணாது திகைத்தார். விநாயகரைக் கேட்க, அவர் வாய் திறந்து பேசாமல் ஈசான்யதிசையை நோக்கிக் கை காட்டினார். அவ்வழியே சுந்தரர் சென்று, அங்குள்ள ஒரு வயலில் சுவாமியும் அம்பிகையும் உழவன், உழத்தியாக நடவு நட்டுக் கொண்டிருந்ததைக் கண்டார். கண்டதும்,

Koviloor Digital Library

''நட்ட நடாக்குறை நாளைநடலாம்
நாளை நடாக்குறை சேறு தங்கிடவே
நட்டதுபோதும் கரையேறி வாரும்
நாட்டியத்தான்குடி நம்பி'' என்று பாடினார்.

அது கேட்டதும் சுவாமியும் அம்பிகையும் மறைந்து கோயிலுக்குச் செல்ல, சுந்தரர் பின் தொடர்ந்து கோயிலுள் செல்லும்போது பாம்பு வாயிலில் தடுக்க அப்போது ''பூணாணாவதோர்'' என்று தொடங்கிப் பாடித் தரிசித்தார் என்று தலவரலாறு சொல்லப்படுகிறது.

2) யானை (கரி) யொன்று வழிபட்டதால் கரிநாலேஸ்வரர் என்று சுவாமிக்குப் பெயர் வந்தது.

3) அண்ணன் தம்பியருக்கிடையில் பாகம்பிரிக்க நேர்ந்தபோது தமக்குள் இரத்தினங்களை மதிப்பிடுவதிலும் பிரிப்பதிலும் உடன்பாடு வரமுடியாமல் இறைவனிடம் முறையிட, இறைவன் இரத்தின வியாபாரியாக வந்து பிரித்துக் கொடுத்ததால் ரத்னபுரீசுவரர் என்று பெயர் பெற்றார்.

''பூணாணாவதொர் அரவம் கண்டு அஞ்சேன்
புறங்காட்டு ஆடல் கண்டு இகழேன்
பேணீராகிலும் பெருமையை யுணர்வேன்
பிறவேனாகிலு மறவேன்
காணீராகிலுங் காண்ப னென்மனத்தாற்
கருதீராகிலுங் கருதி
நானேல் உம் அடிபாடுதல் ஒழியேன்
நாட்டியத்தான்குடி நம்பீ.''

(சுந்தரர்)

-''எல்லற்கண்
சேட்டியத்தானே தெரிந்து சுரர் வந்தேத்தும்
நாட்டியத்தான் குடிவாழ் நல்லினமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. மாணிக்கவண்ணர் திருக்கோயில்
திருநாட்டியத்தான்குடி - அஞ்சல்
(வழி) மாவூர் S.O. 610 202.
திருவாரூர் வட்டம் - மாவட்டம்.

Koviloor Digital Library

236/119. திருக்காறாயில்

திருக்காறைவாசல், காரவாசல்

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

திருவாரூர் - திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில் உள்ள ஊர், திருவாரூர் - திருநெல்லிக்கா, நகரப்பேருந்து இவ்வூர் வழியாகச் செல்கிறது. திருவாரூர், திருத்துறைப்பூண்டியிலிருந்து அடிக்கடி பேருந்துகள் உள்ளன. இவ்வூர் நெடுஞ்சாலையிலேயே உள்ளது. 'கார்அகில்' மரக்காடாக இருந்த இடமாதலின் 'காரகில்வனம்' என்பதே காரகில்-காறாயில் என்றாகியிருக்க வேண்டும் சம்ஸ்கிருதத்தில் 'பனசாரண்யம்', 'காளாகருவனம்' எனப்படுகிறது. தேவதாரு வனம், கபாலபுரம், பிரமபுரம், கபித்தவனபுரம் (கபித்தவன் என்பவன் தொண்டு செய்து வாழ்ந்த தலம்) எனவும் பெயர்களுண்டு. கபால முனிவர்க்கு இறைவன் காட்சி கொடுத்த இடம். சப்தவிடங்கத் தலங்களுள் இது ஆதிவிடங்கத் தலமாகும். தியாகராஜா எழுந்தருளியுள்ள பெரும் பதி, இங்குத்தான் இறைவன், பதஞ்சலிக்கு எழுவகைத் தாண்டவங்களையும் காட்டியருளியதாக வரலாறு.

இறைவன் - கண்ணாயிரநாதர், கண்ணாயிரமுடையார்.

இறைவி - கைலாசநாயகி.

தலமரம் - 'பலா' எனப்படுகிறது ('அகில்'தான் இருக்க வேண்டும்)

தீர்த்தம் - பிரமதீர்த்தம் (கோயிலுள் வடபால் உள்ளது) வடக்குப் பிரகாரத்தில் உள்ள 'சேஷதீர்த்தமும்' சிறப்புடையது. பௌர்ணமிதோறும் இக்கிணற்றுத் தீர்த்தத்தைத் தொடர்ந்து பருகிவரின் பணிதீரும் என்பது நம்பிக்கை.

சம்பந்தர் பாடியது.

கிழக்கு நோக்கிய கோயில். வலப்பால் கோயில் அலுவலகமுள்ளது. ராஜகோபுரமில்லை. கவசமிட்ட கொடிமரம், பலிபீடம், சற்று உயரத்தில் நந்தி உள்ளது. உள்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. வாயிலைத் தாண்டி உட்சென்று வலமாக வரும்போது, தலப்பதிகக் கல்வெட்டு, சுந்தரர் (உற்சவர்) சந்நிதி, தியாகராஜசபை, விநாயகர், பல சிவலிங்கத் திருமேனிகள், மகாவிஷ்ணு, ஆறுமுகசுவாமி, சரஸ்வதி, கஜலட்சுமி, பைரவர் முதலான சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

தியாகராஜசபை தரிசிக்கத்தக்கது. பெருமான் ஆதிவிடங்கர். சபை உயரத்தில் அழகான பிரபையுடன் காட்சிதருகிறது. ஆதிவிடங்கன் ஆசனம் - வீரசிங்காசனம்; நடனம் - குக்குட நடனம். தியாகராஜா சந்நிதியில் வெள்ளிப்பேழையில் மரகதலிங்கம் உள்ளது. தியா கேசருக்கு நேர் எதிரில் சுந்தரர் சந்நிதி அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. நாடொறும் காலையில் இச்சந்நிதியில் அபிஷேகம் மரகதலிங்கத்திற்கு வழிபாடு நடைபெறும்போது மக்கள் பலரும் வந்து வழிபடுகிறார்கள். வலம்முடித்துப் படிகளேறி முன்மண்டபத்தில் சென்றால் நேரே மூலவர் தரிசனம் - சிவலிங்கத் திருமேனி சுயம்பு. வலப்பால் அம்பாள் சந்நிதி. நின்ற திருக்கோலம் - எடுப்பான தோற்றம் - தெற்கு நோக்கியது.

ஓரிடத்தில் நின்று நேரே பெருமானையும் வலப்பால் அம்பாளையும் தரிசித்து மகிழத்தக்க அமைப்புடைய சந்நிதிகள். மூலவருக்கு முன்னால் பக்கத்தில் நடராசசபை உள்ளது. உற்சவத் திருமேனிகளுள் 'காட்சி தந்த நாயனார்' - பின்னால் நந்தியும், பக்கத்தில் உமையும் கூடிய - திருமேனி தரிசிக்கத்தக்கது. நகரத்தார் திருப்பணி பெற்றுள்ள இக்கோயில் நன்கு உள்ளது. கோஷ்டமூர்த்தங்களாக தட்சிணாமூர்த்தி மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. நாடொறும் ஆறுகால வழி பாடுகள் நடைபெறுகின்றன. வைகாசியில் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. நடராசர், தியாகராசர் அபிஷேகங்கள் முறையாக நடைபெறுகின்றன. இத்தலத்தில் சொல்லப்படும் செவிவழிச் செய்திகளாவன:-

1) பிரமதீர்த்தக் கரையில் உள்ள விநாயகருக்குக் 'கடுக்காய் விநாயகர்' என்று பெயர். ஒருசமயம் வணிகன் ஒருவன் சாதிக்காய் மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வந்தவன் சற்று இளைப்பாற இத் தீர்த்தக் கரையில் அமர்ந்தான். அப்போது விநாயகர், ஒரு சிறுவனைப் போல வந்து, என்ன மூட்டைகள் என்று கேட்க, வணிகன் உண்மை யைச் சொல்லாமல் 'கடுக்காய் மூட்டைகள்' என்று சொல்ல, சிறுவனும் மறைந்தான். மூட்டைகள் அத்தனையும் கடுக்காய் மூட்டைகளாக மாறியிருப்பது கண்ட, வணிகன் மனம் நொந்து, தன்பிழை பொறுக்கு மாறு உள்ளம் உருகி வேண்ட, விநாயகரும் அவனை மன்னித்து, அம்மூட்டைகளைப் பழையபடியே சாதிக்காய்களாக மாற்றித் தந்தாராம். இதனால் இக்குளக்கரை விநாயகருக்குக் 'கடுக்காய் விநாயகர்' என்று பெயர் வந்தது.

2) தாசி ஒருத்திக்கு இறைவன் இத்தலத்தில் காட்சி தந்தார். ஆதலின் இங்குப் பெருமானுக்கு 'காட்சி தந்த நாயனார்' என்றும் பெயராம்.

Koviloor Digital Library

3) ஒருசமயம் இத்தலத்தில் கும்பாபிஷேகம் நடந்தபோது குருட்டுப் பெண்ணொருத்தி, பக்கத்தில் உள்ள 'வெள்ளையாறு' என்னுமிடத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். கும்பாபிஷேகத்தின்போது கூட்டத்தினர் எழுப்பிய குரலொலி கேட்டுத் தன்னால் பார்க்க முடியவில்லையே என்று உருக்கமுடன் பிரார்த்திக்க, இறைவன் அப்பெண்ணுக்குக் கண்பார்வை தந்து, அப்பார்வையும் நம் பார்வையைப் போல் சாதாரணமாக இல்லாமல் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகுமாறு ஒளிதந்து அருளும் புரிந்து, அவளும் பார்த்து மகிழுமாறு செய்தாராம். இதனால் இறைவனுக்குக் 'கண்ணாயிரநாதர்' என்று பெயர் வந்தது. கல்வெட்டில் இப்பெருமானின் பெயர் 'காறாயில் மகாதேவர்' என்று குறிக்கப்பெற்றுள்ளது.

''தாயானே தந்தையுமாகிய தன்மைகள்
ஆயானே ஆய நல்லன்பர்க் கணியானே
சேயானே சீர் திகழுந் திருக் காறாயில்
மேயானே என்பவர்மேல் வினை மேவாவே.'' *(சம்பந்தர்)*

''செங்கமலை வாணியுறை காறாயில் **ஆயிரங்கண் சிவன்** செம்பாதி
அங்கமதில் தங்கிஉயிர் அத்தனையும் சுகானு பவமாரச் சந்தி
கங்குல் பகல் எனும் மூன்று காலத்தும் பொதுச் சிறப்பிற் கடைக் கணித்து
மங்களத்தைச் செய்தருளும் **கைலாச நாயகியை** வாழ்த்தி வாழ்வாம்.''
(தலபுராணம்)

''ஏறேய வாழ்முதலே ஏகம்பா எம்பெருமான்
ஏறேறி யூரும் எரியாடீ - ஏறேய
ஆதி விடங்கா காறை அண்டத்தாய் எம்மானே
ஆதி விடங்கா வுமை நன்மாட்டு.''
(11 ஆம் திருமுறை பரணதேவ நாயனார்)

- நாட்டுமொரு
''நூறாயிலன்பர் தமை நோக்கியருள் செய் திருக்
காறாயில் மேலோர் கடைப்பிடியே.''
(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

**அ/மி. கண்ணாயிரமுடையார் திருக்கோயில்
காறைவாசல் & அஞ்சல் - 610202
திருவாரூர் வட்டம் - மாவட்டம்**

Koviloor Digital Library

237-120 கன்றாப்பூர்

கோயில் கண்ணாப்பூர்

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

(1) நாகப்பட்டினம் - திருத்துறைப்பூண்டி சாலையில் வருவோர் சாட்டியக்குடி வந்து, அக்கூட்டுரோடில் பிரியும் சாலையில் 2 கி.மீ. சென்று, ஆதமங்கலம் தாண்டி, **கோயில் கண்ணாப்பூர் கூட்டுரோடு** என்று கேட்டு அவ்விடத்தில் வலப்புறமாகப் பிரியும் உள்சாலையில் 1 கி.மீ. சென்றால் தலத்தையடையலாம். (சாலை பிரிபும் இடத்தில் சிறிய ஊர்ப்பலகையுள்ளது. இது மழைக்காலத்தில் விழுந்து விடலாம். எனவே வழிகேட்டுச் சென்று திரும்புதலே சிறந்தது.)

(2) திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் வருவோர் மாவூர் கூட்டுரோடு வந்து அங்குப் பிரியும் சாலையில் மருதூர் வந்து, அதற்கு அடுத்துள்ள **கோயில் கண்ணாப்பூர் கூட்டுரோடு** என்று கேட்டு அவ்விடத்தையடைந்து அங்கு (இடப்புறமாகப்) பிரியும் உள் சாலையில் 1 கி.மீ. சென்றால் தலத்தையடையலாம்.

கோயில் வரை வாகனங்கள் செல்லும். (கீழ கண்ணாப்பூர் என்று ஊர் ஒன்றுள்ளது. தலம் அதுவன்று. எனவே **கோயில் கண்ணாப்பூர்** என்று கேட்கவேண்டும்.)

சைவப் பெண் ஒருத்தி வைணவன் ஒருவனுக்கு மனைவியாகி, மாமியார் வீட்டார் காணாதவாறு சிவலிங்க வழிபாடு செய்ய, கணவன் அது கண்டு அவ்இலிங்கத்தைக் கிணற்றில் எறிந்து விட, அப் பெண் வேறுவழியின்றி கன்று கட்டியிருந்த முளை (ஆப்பு)யையே சிவபெருமானாகப் பாவித்து வழிபட; ஒரு நாள் கணவன் அதையும் கண்டு, கோபித்து அம்முளையைக் கோடரியால் வெட்ட இறைவன் வெளிப்பட்டு அருள்புரிந்த தலம். (கன்று - ஆப்பு - ஊர்) சுவாமி மீது வெட்டிய தழும்பு உள்ளதைக் காணலாம். இடும்பன் வழிபட்ட தலம்.

இறைவன் - வஸ்ததம்பபுரீஸ்வரர், நடுதறியப்பர், நடுதறிநாதர்
இறைவி - ஸ்ரீ வல்லிநாயகி, மாதுமையம்மை
தலமரம் - கல்பனை (பனைமரத்தில் ஒருவகை) தற்போதில்லை.
தீர்த்தம் - சிவகங்கை (எதிரில் உள்ளது.)
அப்பர் பாடல் பெற்றது.

Koviloor Digital Library

கிழக்கு நோக்கிய கோயில் - மூன்று நிலைகளையுடைய இராஜ கோபுரம். எதிரில் வெளியில் அலுவலகமுள்ளது. கொடிமரமில்லை - பலிபீடம் நந்தி உயரமான பீடத்தில் உள்ளன. உள்வலத்தில் தீர்த்தக் கிணறு; விநாயகர்; அடுத்துள்ள மண்டபத்தில் வரிசையாக சிவலிங்கம், விநாயக மூர்த்தங்கள் நான்கு; பிடாரியம்மன்; சுப்பிரமணியர்; சந்திரன்; சூரியன்; நவக்கிரகம்; சனீஸ்வரன்; சந்நிதிகள் உள்ளன. சனிபகவானை அடுத்துள்ள நால்வர்களுள் இருவர் சம்பந்தராகவும் இருவர் அப்ப ராகவும் காட்சி தருகின்றனர் - மற்றிருவர் இல்லை.

வலமுடித்து முன் மண்டபமடைந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதி - நின்ற திருமேனி. நேரே மூலவர் தரிசனம். வாயிலைக் கடந்தால் வலப்பால் நடராசசபை, இடப்பால் உற்சவ மூர்த்தங்கள், மூலவர் - சதுரபீடம், பாணத்தில் (தலவரலாற்றுக் கேற்ப) வெட்டிய தழும் புள்ளது. பிரபையுடன் தரிசிக்கும் போது மனநிறைவாக இருக்கிறது. கோயிலின் பார்வையில் பசுமடம் ஒன்றுள்ளது.

தேவக்கோட்டை திரு. முத்து. க. அ. ராம. அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் நிவேதனக்கட்டளையிலிருந்து, ஆலயத் திற்குத் தரிசனம் செய்யவரும் வெளியூர் அன்பர்கள் - தக்கவர்களுக்கு உணவு அளிக்கப்படுகின்றது. நாடொறும் ஐந்துகால பூஜைகள். கோயில் நன்கு பராமரிக்கப்பட்டுப் பொலிவுடன் தோற்றமளிக்கிறது.

வைகாசி விசாகத்தில் உற்சவம். சித்திரையில் மாரியம்மனுக்கு பத்துநாள்கள் சிறப்பாக விழா நடைபெறுகிறது. இவ்வூரில் உள்ள எல்லா நிலங்களும் அ/மி. நடுதறிநாதர் பெயரிலேயே பட்டாவாக உள்ளன. தனிப்பட்ட எவருக்கும் சொந்தமாக வேறு பட்டா நிலங்கள் இல்லையாம். அக்காலத்து ஆலயத்தின் பால் சமுதாயத்திற்கிருந்த ஆர்வம்தான் என்னே!

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பா யென்றும்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்
சுடலைதனில் நடமாடும் சோதீ யென்றும்
கடிமலர்தூய்த் தொழும் அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

(அப்பர்)

Koviloor Digital Library

அருள்மிகு நடுதறிநாதர் துதி

நயந்திருக்கும் அன்பிற்காய் நடுதறியில் வந்தபிரான்
பயனளிக்கும் பெருங்கருணை படர்ந்திடும் திருவடிகள்
அயர்ந்திருக்கும் மருள்நீக்கி அகத்தடைப்பார் தமக்குநலம்
உயர்ந்திருக்கும் என்பதன்றோ உலகேத்தும் உண்மையதே.

அருள்மிகு மாதுமையாள் துதி

பாண்டவ யாற்று மருங்கினிலே
பாரோர்க் கெல்லாம் நெறிகாட்டி
வேண்டுவ ஈந்தே மாதுமையாள்
வீற்றினி திருந்து அருள்புரிவாள்
காண்டகு மமுதாய்க் கலந்தேத்தும்
காதலர் நெஞ்சுள் தனியொளியாய்
தூண்டாச் சுடராய் நின்றிடுவாள்
துலங்கும் அவளின் அடிபோற்றி.

''கன்றாப்பூர் நின்ற தறி''

நெஞ்சத்து மாசகற்றி நேர்மை வழிநடந்து
கொஞ்சுதமிழ்ப் பாவிசைத்துப் போற்றிடுவாய் - அஞ்சாதே
என்றுமுனைக் காத்தருளி ஏற்றமுறு வாழ்வருள்வான்
கன்றாப்பூர் நின்ற தறி.

-''வீறாகும்
இன்றாப்பூர் வந்தொட்டிருந்த திவ்வூரென்னவுயர்
கன்றாப்பூர் பஞ்சாக் கரப்பொருளே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. நடுதறியப்பர் திருக்கோயில்
கோயில் கண்ணாப்பூர் & அஞ்சல்
(வழி) வலிவலம், SO. 610 207.
திருவாரூர் வட்டம் - மாவட்டம்

தலம் - 46

Koviloor Digital Library

238/121. வலிவலம்

Koviloor Digital Library

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

1) திருவாரூர் - திருத்துறைப்பூண்டி (வழி கீவளூர்) சாலையில் உள்ள தலம். சாலையோரத்திலேயே கோயில் உள்ளது.

2) திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் புலிவலம், மாவூர் வழியாகவும் இத்தலத்திற்கு வரலாம். இரண்டுமே நல்ல பாதைகள். திருவாரூரிலிருந்து 10 கி.மீ. கொன்றைவனம், வில்வவனம், ஏகச்சக்கர புரம், முந்நூற்றுமங்கலம் முதலியன இப்பதியின் வேறு பெயர்கள். சூரியன், கரிக்குருவி (வலியன்) பூசித்த தலம். கோயில் பொலிவொடு காட்சி தருகின்றது.

இறைவன் - இருதய கமலநாதேஸ்வரர், மனத்துணைநாதர்

இறைவி - வாளையங்கண்ணி, அங்கயற்கண்ணி

தலமரம் - புன்னை

தீர்த்தம் - சங்கரதீர்த்தம்

மூவர் பாடல் பெற்ற தலம்.

கோச் செங்கணான் கட்டிய மாடக்கோயில். சுவாமி செங்குன்றின் மீது (கட்டுமலை மேல்) காட்சி தருகிறார். தேவாரப் பாடல்களை ஓதத் தொடங்கும்போது பொதுவாக முதலிற் பாடத் தொடங்கும் 'பிடியதன் உருஉமை கொள' என்னும் பாடல் இத்தலத்திற்குரியதேயாம்.

வலியன் (கரிக்குருவி) வழிபட்டதால் வலிவலம் என்ற பெயர் வந்தது. காரணமாமுனிவர் வழிபட்ட பதி.

நுழைவு வாயிலில் கணபதி தரிசனம், பிராகாரத்தில் வலம்புரி விநாயகர் சுப்பிரமணியர், இலக்குமி, காசிவிசுவநாதர், நவக்கிரகங்கள் ஆகிய சந்நிதிகள் உள்ளன. அறுபத்துமூவர் சந்நிதி உள்ளது. ஈசானிய மூலையில் பிடாரி கோயில் உள்ளது.

இவ்வூர் இறைவனை, இறைவியைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும் 'வலிவலமும்மணிக்கோவை' என்னும் நூலொன்று, ''தமிழ்த்தாத்தா'' திரு. உ.வே. சாமிநாத ஐயர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அதைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. அண்மையில் உள்ள தலங்கள்; (1) கச்சனம் (2) கன்றாப்பூர் (3) சாட்டியக்குடி என்பன.

இக்கோயிலில் சோழர் காலத்திய ஒன்பது கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் சித்திரையில் பெருவிழா நடைபெறுகிறது. கந்த சஷ்டித் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

Koviloor Digital Library

''பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடுதனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே''

(சம்பந்தர்)

''தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐயர் நின்றொன்றலொட்டார்
மாயமே என்றஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே''

(சம்பந்தர்)

''நல்லான்காண் நான் மறைகளாயினான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன்றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலானான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர் மூன்றுமாயினான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான்ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கியேத்தும்
வலிவலத்தான்காண் அவன் என்மனத்துளானே.''

(அப்பர்)

''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானைத்
தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்லியல் மனத்தைக் கசிவித்துக்
கழலடிகாட்டி என்களைகளையறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின்றானை
வலிவலந்தனில் வந்து கண்டேனே.''

(சுந்தரர்)

-துன்றாசை
வெய்யவலிவலத் தைவீட்டி அன்பர்க் கின்னருள்செய்
துய்ய வலிவலத்துச் சொன்முடிபே. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. இருதயகமலநாதேஸ்வரர் திருக்கோயில்
வலிவலம் & அஞ்சல் 610207
திருக்குவளை வட்டம் - திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

239/122. கைச்சினம்

கச்சனம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

திருவாரூர் - திருத்துறைப்பூண்டி பேருந்து மார்க்கத்தில் உள்ள தலம். பேருந்து வசதி உள்ளது. திருக்கைச்சின்னம் என்னும் இத்தலத்தின் பெயர் மக்கள் வழக்கில் தற்போது 'கச்சனம்' என்று வழங்கப்படுகிறது.

இறைவன் - கைச்சினேஸ்வரர், கரச்சினேஸ்வரர்.

இறைவி - சுவேதவளை நாயகி, வெள்வளைநாயகி

தலமரம் - கோங்கு இலவு (இதன் அடியில் உள்ள லிங்கம் கோங்கிலவு வனநாதேஸ்வரர்)

தீர்த்தம் - வச்சிர தீர்த்தம், இந்திர தீர்த்தம், அகத்திய தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

திருணபிந்து முனிவர் வழிபட்ட தலம். இந்திரன், அகத்தியர் முதலியோரும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

இந்திரன் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டு, அதை எடுத்து வைக்கும்போது அவன் கை அடையாளம் சுவாமிமீது படிந்தது. எனவே கைச்சின்னம் என்ற பெயர் பெற்றது. இது தற்போது வழக்கில் கச்சனம் என்றாயிற்று. சுவாமி மீது விரல்கள் பட்ட அடையாளம் உள்ளது.

முற்காலத்தில் இப்பகுதியில் கோங்கு மரங்கள் அடர்ந்திருந் தமையால் கோங்குவனம், கர்ணிகாரவனமென்றும் பெயர்கள் உண்டு. இத்தலத்திற்குக் கிழக்கில் 'கோளிலி'யும், தெற்கில் 'திருத்துறைப் பூண்டி'யும், மேற்கில் 'நெல்லிக்காவும்', வடக்கில் 'திருக்காறாயிலும்' உள்ளன. மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில். முகப்பில் மூன்று நிலைகளையுடைய இராஜகோபுரம் காட்சி தருகிறது.

இக்கோயில் மாடக்கோயில் என்னும் அமைப்பைச் சார்ந்தது. கோயிலுக்குள் ஒரு பிராகாரமும் மதிலை அடுத்து ஒரு பிராகாரமும், வெளிவீதியில் உள்ளன. உள் பிராகாரத்தில் மேற்கில் விநாயகர் அஷ்டவசுக்களில் ஒருவனான விதூமன் வழிபட்ட விதூமலிங்கம்,

Koviloor Digital Library

சுப்பிரமணியர், அம்பாள் சந்நிதிகளும் உள்ளன, கிழக்கில் நடராஜ மண்டபம் உள்ளது.

மதிலுக்கு வடப்புறம் இந்திரதீர்த்தமும் தென்புறம் வச்சிரத் தீர்த்தமும் உள்ளது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நஞ்சையில் வெட்டும் பொழுது கிடைத்த சங்கு சக்கரபாணியாகத் திகழும் பெருமாள்சிலை, உள்பிராகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்திரன் சாபம் விலகியதும் தியாகராஜர் காட்சி தந்ததும், அகத்தியரின் பிரமகத்தி விலகியதுமாகிய சிறப்புடைய தலம். யானை ஏறாதபடி கட்டப்பட்ட மாடக் கோயிலாகத் திகழும் இக்கோயில் மிகவும் பழமையானது. திருநாவுக்கரசர் தாம் பாடிய க்ஷேத்திரக் கோவையில் இடம் பெற்றுள்ள இக்கோயில் மாடக் கோயிலாதலின் உயர்ந்த மேடையுடன் அமைந்துள்ளது.

இக்கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி - ரிஷபாரூட தட்சிணா மூர்த்தியாகக் காட்சி தருவது சிறப்பாக உள்ளது. (பின்புறத்தில் நந்தி உள்ளது தெரிகிறது) நடனச்சிற்பங்களும், அர்த்தநாரீஸ்வர வடிவமும் அழகாக உள்ளன. இத்திருக்கோயிலில் பதினெரு கல்வெட்டுகள் காணப்பெற்றுள்ளன. அவைகளில் இக்கோயிலுக்கும் பிறவுக்கும் அளிக்கப்பட்ட நிபந்தங்கள் - நிலபுலன்கள் குறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களில் இறைவனுக்கு, 'கோங்கு இலவுவனேஸ்வரசுவாமி, திருக்கைச்சின்னம் உடைய நாயனார், கரச்சின்னேஸ்வரர்' முதலிய பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. பூஜைகள், வழிபாடுகள் முதலியவை செம்மையாக நடைபெறுகின்றன. விசேஷ நாள்களில் சுவாமிக்கு வெள்ளி நாகாபரணமும், அம்பாளுக்கு வெள்ளி அங்கியும் சார்த்தப் பெறுகின்றன.

வைகாசி விசாகத்தில் கோயிற் பெருவிழா பத்துநாள்களுக்கு நடைபெறுகிறது. ஆனித் திருமஞ்சனம், கார்த்திகை ஞாயிறு நாள்கள், மார்கழித் திருவாதிரை, மாசிமகம், பங்குனி உத்திரம் முதலிய விசேஷ காலங்களிலும், பிரதோஷ காலங்களிலும் சுவாமி புறப்பாடு நடைபெறுகின்றது. கந்தசஷ்டிவிழா சிறப்பாக நடத்தப்பெறுகிறது. பேய் பிடித்தல் போன்ற தோஷங்கள் இத்தலத்தில் நீங்குவதாக வரலாறு சொல்லப்படுகிறது.

"தையலோர் கூறுடையான் தண்மதிசேர் செஞ்சடையான்
மையலாமணி மிடற்றான் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவேல் ஏந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே." *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

-நையுமன
மைச் சினத்தை விட்டோர் மனத்திற் சுவை கொடுத்துக்
கச்சினத்தினுட் கரையாக் கற்கண்டே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

**அ/மி. கைச்சின்னேஸ்வரர் திருக்கோயில்
கச்சனம் & அஞ்சல் *610201*
திருவாரூர் வட்டம் - மாவட்டம்.**

240/123. திருக்கோளிலி

திருக்குவளை

சோழநாட்டு (தென்கரை)த் தலம்

இது மக்கள் வழக்கில் **திருக்குவளை** என்று வழங்கப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெல்மலையை எடுத்துச் செல்ல ஆள்வேண்டிப் பாடிய சிறப்புக்கு உரியதாய் விளங்குவது இத்தலம். திருவாரூர் எட்டிக்குடி சாலையில் எட்டிக்குடிக்கு முன்னால் உள்ள தலம். திருவாரூரிலிருந்து *19* கி.மீ. தொலைவில் உள்ளது. திருவாரூரில் இருந்து அடிக்கடி பேருந்து உள்ளது. நேரே செல்லலாம்.

திருவாருருக்கு அடுத்தபடியாக தியாகேசப் பெருமான் இத் தலத்தில் சிறந்து விளங்குகிறார். இந்தத் தேவஸ்தானம் ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம் என்று வழங்குகிறது. சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. (அவனி விடங்கத்தலம், பிருங்கநடனம்) பிரமன் வழிபட்ட தலம். அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் உள்ளது. பகாசூரனைக் கொன்றதனால் உண்டான பாவத்தை (பிரமகத்தித்தோஷம்) வீமன் இங்குப் போக்கிக் கொண்டான் என்பது வரலாறு. முன்கோபுரத்தில் பகாசூரன் உருவமும் பிரமகத்தி உருவமும் உள்ளது.

இறைவன்-பிரமபுரீசுவரர், கோளிலி நாதர், கோளிலி நாதேஸ்வரர், (திருவாரூரில் பெருமான் புற்றிடங் கொண்டவராக விளங்குதல் போல இங்கு இறைவன்) வெண்மணலால் ஆன சிவமூர்த்தமாக காட்சி தருகிறார்.

Koviloor Digital Library

இறைவி - வண்டமர் பூங்குழலி.

தீர்த்தம் - பிரமதீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது.

தலமரம் - 'தேற்றாமரம்'.

மூவர் பாடல் பெற்ற தலம்.

இத்தலத்திற்குப் பிரமதபோவனம், கதகாரண்யம் (தேற்றாமர வனம்.) புஷ்பவனம், தென்கயிலை எனப்பல பெயர்களுண்டு. நவக்கிரகங்கள் முதலியோர்க்கு உண்டாய குற்றங்களை நீக்கி அருள் புரிந்தமையால் கோளிலி என்று பெயர் பெற்றது. "கோளாய நீக்குமவன் **கோளிலி** எம்பெருமான்" - ஞானசம்பந்தர் வாக்கு. இங்குள்ள தியாகராஜப் பெருமானின் பெயர் - ஊழிப்பரன், அவனிவிடங்கத் தியாகர். அம்பிகை - நீலோற்பலாம்பாள். விநாயகர் - தியாகவிநாயகர், முருகன் - சுந்தரவடிவேலர்.

இத்திருக்கோயில் ஊரின் மத்தியில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. ஆழகான ராஜகோபுரம். உள்ளே நுழைந்தால் வடபுறம் வசந்த மண்டபம். துவஜஸ்தம்பம் தாண்டி இரண்டாம் கோபுரத் திருவாயில். உள்பிராகாரத்திற்கு எதிரே சுவாமி சந்நிதி, தென்பால்தியாசேகர். எதிரே சுந்தரர் உற்சவமூர்த்தியாகப் பரவையாருடன் காட்சி தருகின்றார். பிராகாரவலம் வரும் போது தென் மேற்கில் தியாகவிநாயகரும், அடுத்து விசுவநாதர் இலிங்கமூர்த்தமும், வாகன மண்டபமும், விசாலாட்சி, இந்திரபுரீசர் முதலிய சந்நிதிகளும் உள. முருகப்பெருமானுக்கு அழகான சந்நிதி வடபால் சொக்கலிங்கம், அண்ணாமலையார் இலிங்க வடிவங்கள்; தொடர்ந்து நால்வர், மகாலட்சுமி மூர்த்திகள் உள. அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது, தனிக்கோவிலாகவுள்ளது.

சபாநாதர் தரிசனம் அழகானது. நவக்கிரகங்கள் ஒருமுகமாகத் தென்திசையை நோக்கி விளங்குகின்றன. சுவாமி கர்ப்பக்கிருஹத்தில் வடபுறம் அர்த்தநாரீசுவரர், பிரம்மா, துர்க்கை, உமாமகேசுவரர் தென்புறம் தேவகோஷ்டங்களில் முறையே நடராஜர், நர்த்தனகணபதி, பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி மூர்த்தங்களும் உள்ளன. மேற்பால் சங்குசக்கரத்துடன் திருமால் உருவமுள்ளது. பிராகாரத்தின் கீழ்ப்புறம் சந்திர சூரியர் உருவங்களும்; இரண்டாம் கோபுர தென்மதிலில் பஞ்சபாண்டவர் பூசித்து வழிபடும் கோலமும், பிரமன் வழிபடுவதும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன.

சுவாமி, அம்பாள் கோயில்களுக்குநடுவில் அகத்தியர் பூசித்த இலிங்க முள்ளது. அது தனி கர்ப்பக்கிருக, அர்த்தமண்டபத்துடன் உள்ளது.

Koviloor Digital Library

சண்டீசர் சந்நிதியும் உளது. ஆலயத்திருப்பதிகங்கள் பொறிக்கப்பட்ட சலவைக்கற்கள் சுவாமி சந்நிதியில் பதிக்கப் பெற்றுள்ளன.

ஆலயத்திற்கு அண்மையில் சந்திரநதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. கோயிலுக்கு எதிரில் பிரமதீர்த்தமும்; தென்புறம் இந்திரதீர்த்தமும், மேற்புறம் அகத்தியர் தீர்த்தமும் சிவலோக விநாயகர் கோயிலருகில் விநாயக தீர்த்தமும் உள்ளன. அம்பாள் சந்நிதியில் கிணறு வடிவில் சத்திதீர்த்தம் உள்ளது. புனிதமான இந்நீரே அபிஷேகத்திற்குப் பயன் படுகிறது. ஆலயத்திற்குத் தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் (ஹேமகாந்த மன்னனுக்குச் சிவலோகம் காட்டியவர்) சந்நிதி உளது. இத்தலத்தில் பிரமன், திருமால், இந்திரன், அகத்தியர், முசுகுந்தன், பஞ்சபாண்டவர்கள், நவக்கிரகங்கள், ஹேமகாந்த மன்னன் முதலிய பலர் வழிபட்டுப் பேறடைந்துள்ளனர்.

இத்தலத்தின் வடபால் அருகில் குண்டையூரும் வலிவலமும், தென்பால் முருகன் தலமான எட்டுக்குடியும், மேற்கில் கச்சனமும், கிழக்கில் சந்திரதீர்த்தம் கடலொடு சங்கமமாகுமிடமான காமேசுரமும் உள்ளன. இது நீராடும் துறையாக விளங்குகிறது. தை, ஆடி மஹாளய பக்ஷ அமாவாசைகளில் மக்கள் இத்துறையில் நீராடுகின்றனர். இங்கு நடைபெறும் முக்கிய விழாக்கள்:- மாசிமகத்தில் 'நெல்அட்டிச் செல்லும் விழா, கார்த்திகை ஞாயிறு நாள்கள், முசுகுந்த அர்ச்சனை, வசந்த உற்சவம், தைப்பூசம் முதலியன. உற்சவ காலங்களில் - தியாகராஜத் தலங்களில் சந்திரசேகரர் உற்சவமூர்த்தியாகப் புறப்பாடாவது அறியத் தக்கது.

ஞானசம்பந்தர், தம் திருப்பதிகத்தில்; கோள்களின் தீமையகலும் குறிப்பினையும், மார்க்கண்டேயன், சண்டீசர்க்கு அருள் செய்தது. பாண்டவர்கள் வழிபட்டது, பாணபத்திரர்க்கு, அருச்சுனனுக்கு, நமி நந்தியடிகளுக்கு, இராவணனுக்கு அருள் புரிந்தது போன்ற குறிப்புக்கள் உள்ளன. நாவுக்கரசரின் திருப்பதிகத்தில்; (திருக்குறுந்தொகை) உபமன்யு முனிவர்க்கும் பாற்கடலீந்த வரலாறு சொல்லப்படுகிறது.

சுந்தரருக்கு நெல் அனுப்ப இயலாது வருந்திய குண்டையூர்க் கிழார்க்கு இறைவனருளால் நெல்மலை கிடைத்தது. அதை 'சுந்தரர் கோளிலியப்பரை வேண்டி ஆள்பெற்றுத் திருவாரூருக்குக் கொணர் வித்தார் என்ற செய்திக் குறிப்புடையது' நீள நினைந்தடியேன் எனும் சுந்தரர் பதிகம். தியாகராஜர் உலா உள்ளது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இக்கோயிலில் 19 கல்வெட்டுகள் - சோழர், பாண்டியர் காலத்தியவை, கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் 'திருக்கோளிலி

Koviloor Digital Library

உடைய நாயனார்' என்றும், தியாகேசர் 'அவனிவிடங்கத் தியாகர்' என்றும் குறிக்கப்படுகிறார். இக்கோவிலின் வடக்குவீதி 'திருமறைக் காடன் திருவீதி' எனப்படுகிறது.

இத்திருக்கோயில் தருமையாதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட திருக்கோயிலாகும். நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. சுவாமி அம்பாளுக்கு ஏராளமான ஆபரணங்களும் தியாகராஜவுக்கு வெள்ளி சிம்மாசனமும் செய்யப்பட்டுள்ளது. 1999 ஜனவரியில் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

"நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோ மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய நம் கிளை கிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி யெம்பெருமானே."

(சம்பந்தர்)

"ஆவின் பால்கண்டள விலருந்தவப்
பாலன் வேண்டலும் செல்லென்று பாற்கடல்
கூவினான் குளிரும் பொழிற் கோளிலி
மேவினானைத் தொழவினை வீடுமே." *(அப்பர்)*

"நீளநினைந்தடியேன் உமைநித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே."

(சுந்தரர்)

"கோளிலியப்பர் குணமூன்று டையார் தம்
தோளிலுலாமாலை சூட்டுதற்கு - வாளவுணன்
கற்பக வேல் தொட்ட கடவுட்கு முன்வந்த
கற்பகத்தின் பொற்கழல்கள் காப்பு."

(திருக்குவளை தியாகராஜசுவாமி உலா - விநாயகவணக்கம்.)

- "நெற்சுமக்க
ஆளிலை என்று ஆரூரனார் துதிக்கத் தந்தருளுங்
கோளிலியின் அன்பர் குலங்கொள் உவப்பே".

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கோளிலி நாதேஸ்வரர் திருக்கோயில்
திருக்குவளை & அஞ்சல் 610 204
திருவாரூர் வட்டம் - மாவட்டம்.

Koviloor Digital Library

241/124. திருவாய்மூர்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

(1) நாகப்பட்டினம் - திருத்துறைப்பூண்டி பேருந்துச் சாலையில் சென்று, எட்டிக்குடிக்குப் பிரியும் சாலையில் திரும்பிச் சென்றால் தலத்தையடையலாம். லீலாஹாஸ்யபுரம் என்னும் பெயருடையது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. விடங்கர் - நீலவிடங்கர். நடனம் - கமலநடனம். இருக்கை - இரத்தினசிம்மாசனம். சூரியன் வழிபட்ட தலம். ''வாய்மூரில் இருப்போம் தொடர்ந்து வா'' என்று அப்பர் பெருமானை இறைவன் உணர்த்தி அழைத்துச் சென்ற அரிய செய்தி.

இறைவன் - வாய்மூர்நாதர்.

இறைவி - க்ஷீரோப வசனி, பாலின் நன்மொழியாள்

தலமரம் - பலா.

தீர்த்தம் - சூரியதீர்த்தம்.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கோயிலுக்கெதிரில் குளம் உள்ளது. கரையில் விநாயகர் உள்ளார். மூன்று நிலைகளுடன் கூடிய ராஜகோபுரம் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கின்றது. வெளிச்சுவற்றில் நால்வர், பைரவர் சந்நிதிகளும் உள் சுற்றில் விநாயகரும், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியரும், மகாலட்சுமியும் உள்ளனர். நடராசசபை உள்ளது. நடராசர் அழகான மூர்த்தி. இத்தலத்தில் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன. மூலவருக்குத் தென்பால் தியாகராஜ - நீலவிடங்கர் சந்நிதியுள்ளது. வடபால் வேதாரண்யேஸ்வரர் தரிசனம் தருகிறார். மூலவர் அழகான தோற்றம்.

கோஷ்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி ரிஷபத்தின் மேலுள்ளார். ஐப்பசி மாதப்பிறப்பன்று தியாகராஜருக்கு விசேஷ அபிஷேகம் நடைபெறுகின்றது. இத்தலத்திற்குப் பக்கத்தில் எட்டுக்குடி, திருக்கோளிலி முதலிய தலங்கள் உள்ளன.

''வெந்தழல் வடிவினர் பொடிப்பூசி
விரிதரு கோவண உடை மேலோர்
பந்தஞ் செய்து அரவசைத்து ஒலிபாடி
பலபல கடைதொறும் பலிதேர்வார்
சிந்தனை புகுந் தெனக்கு அருள் நல்கிச்
செஞ்சுடர் வண்ணர்தம் அடிபரவ
வந்தனை பலசெய இவராணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே''. *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

''பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங்கண்டேன் மொய்த்தபூதம்
ஆடல்முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கையாளைக்
காடல் அரவார் சடையிற்கண்டேன்
கொக்கின் இதழ் கண்டேன் கொன்றைகண்டேன்
வாடற்றலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவறே''.

(அப்பர்)

- நீளுலகம்
''கர்ய்மூர்க்கரேனுங் கருதில் கதி கொடுக்கும்
வாய்மூர்க்கமைந்த மறைக்கொழுந்தே''. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. வாய்மூர்நாதர் திருக்கோயில்
திருவாய்மூர் & அஞ்சல்
(வழி) திருக்குவளை S O. 610 204
திருவாரூர் வட்டம் - மாவட்டம்.

242/125.திருமறைக்காடு

வேதாரண்யம்

சோழநாட்டு (தென்கரை)த் தலம்.

தற்போது **வேதாரண்யம்** என்று வழங்குகிறது.

கும்பகோணம், மயிலாடுதுறை, மன்னார்குடி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் முதலிய ஊர்களிலிருந்து செல்லலாம், வேதங்கள் வழிபட்டதலம். மறைவனம், வேதவனம், சத்யகிரி, ஆதிசேது, தென்கயிலாயம் என்பன வேறு பெயர்கள். ஏழு திருமுறைகளிலும் இடம் பெற்ற சிறப்புடைய தலம். சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று.

இராமர் இங்கு வந்து வழிபட்டுத் தோஷம் நீங்கியதாகத் தல வரலாறு சொல்லப்படுகிறது. சேரமான் பெருமாள் நாயனாருடன் சுந்தரர் வந்து தரிசித்ததலம். விளக்கைத்தூண்டிய எலியை, மாவலி யாகப் பிறக்குமாறு அருள் செய்த இறைவன் எழுந்தருளியுள்ள பதி.

Koviloor Digital Library

நசிகேது, சுவேதகேது ஆகியோர் இத்தலத்தில்தான் தவஞ்செய்தனர். ஞானசம்பந்தரும் அப்பரும்; வேதங்களால் அடைக்கப்பட்ட கதவு, திறக்கவும் அடைக்கவும் பாடப்பட்ட சிறப்புடைய தலம்.



Koviloor Digital Library

''வேதாரண்யம் விளக்கு அழகு'' என்பது பழமொழி. அப்பர் சுவாமிகள் தூண்டு சுடரனைய சோதி கண்டாய்' என்று பாடுகிறார். இன்றும் கோயிலில் விளக்குகளின் பேரொளியைக் காணலாம். பரஞ்சோதி முனிவர், தாயுமானவர் ஆகியோர் அவதரித்த தலம். சித்தர் சிவப்பிரகாசர், திருவாவடுதுறை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளுக்கு இத்தலத்தில்தான் அருளுபதேசம் செய்தார் என்பது வரலாறு. அகத்தியர், முசுகுந்தன், கௌதமர், விசுவாமித்திரர், வசிட்டர், நாரதர், பிரமன், மாந்தாதா முதலியோர் வழிபட்டது. அகத்தியருக்குத் திருமணக்காட்சியருளிய பதி.

இறைவன்	-	மறைக்காட்டீசுவரர், வேதாரண்யேசுவரர், வேதவனேசர், வேதாரண்யநாதர்.
இறைவி	-	வீணாவாதவிதூஷணி, யாழைப்பழித்த மொழியம்மை
தலமரம்	-	வன்னி - (இம்மரத்தடியில் விசுவாமித்திரர் தவஞ் செய்ததாக வரலாறு)
தீர்த்தம்	-	வேததீர்த்தம் (எதிரில் உள்ள கடல்)
தியாகராஜா	-	புவனி விடங்கள், மரகதத்திருமேனி
நடனம்	-	ஹம்சபாத நடனம்
பீடம்	-	ரத்தினசிம்மாசனம்

மூவர் பாடல் பெற்ற தலம்.

இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியது. முன் மண்டபத்தின் பக்கத்தில் தலமரம் வன்னி உள்ளது - அடியில் எண்ணற்ற நாகப்பிரதிஷ்டைகள். எதிரில் தீர்த்தமுள்ளது. உள்சுற்றில் அறுபத்துமூவர், இராமநாதலிங்கம் உள்ளன. வெளிப்பிரகாரத்தில் இராமரை தொடர்ந்து வந்த வீரஹத்திபாவத்தைப் போக்கிய வீரஹத்தி விநாயகர் - பக்கத்தில் குமரன் சந்நிதி. சேர சோழ பாண்டிய லிங்கங்கள் தனித்தனியே மூன்று சந்நிதிகளாக உள்ளன. புன்னைமரத்தடியில் நசிகேது, சுவேத கேது ஆகியோரின் மூலத்திருமேனிகளைக் காணலாம்.

சுவாமிக்குப் பக்கத்தில் அம்பாள் சந்நிதி (கிழக்கு நோக்கி) உள்ளது - தனிக்கோயில். உள்வலமாக வரலாம். முன்மண்டபத்தின் மேற்புறம் வண்ண ஓவியங்கள் உள்ளன. தலவிநாயகர், காட்சிகொடுத்த நாயனார், ஆறுமுகர், ஜ்வரதேவர், சனிபகவான், வீணையில்லாத சரஸ்வதி, அன்ன பூரணி, துர்க்கை, சோழீஸ்வரலிங்கம் முதலிய சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

இங்குள்ள நடராசசபை - தேவசபை எனப்படும். நவக்கிரகங்கள் - இத்தலம் கோளிலித் தலங்களுள் ஒன்றாதலின் - வரிசையாகவுள்ளன. பள்ளியறையை அடுத்துப் பைரவர், சூரிய சந்திரர்கள் சந்நிதிகள். உள்வலமுடித்துப் படிகளேறி முன்மண்டபத்தை யடைந்தால் தியாகராஜ சபை. விடங்கர், பெட்டிக்குள் பாதுகாப்பாக வுள்ளார்.

உள் வாயிலைக் கடந்தால் இருபுறமும் உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. சுதையாலான துவாரபாலகர்களைத் தொழுது உட் சென்றால் மூலவர் தரிசனம்.

மூலவர் - வேதாரண்யேசுவரர் - சிவலிங்கத்திருமேனி, சுவாமிக்குப் பின்னால் 'மறைக்காட்டுறையும் மணாளர்' திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார். இம்மணாளருக்கு ஆண்டுக்கொருமுறை தான் திருமஞ்சனம். திருமஞ்சனம் முடிந்ததும் சந்தனக்காப்பு சார்த்தப்படும். அஃது அடுத்த திருமஞ்சனத்தின்போதுதான் களையப்படும். ஆகவே மணாளர், சந்தனக்காப்பு மணத்தில் ஆண்டுதோறும் காட்சியளிக்கிறார் என்பது விசேஷமான செய்தியாகும்.

மரகத் விடங்கருக்கு நாடொறும் திருமஞ்சனமுண்டு. வீதியுலாவில், தியாகேசர் புறப்படாத நாள்களில் சந்திரசேகரரே எழுந்தருளுகிறார். தியாகேசருக்குப் பதிலாக இவருக்குப் பட்டம் கட்டும் நாளை ''சந்திர சேகரப் பட்டம்'' என்பர். ''பட்டம் கட்டிய சென்னிப் பரமர்'' என்பது தேவாரம். இக்கோயிலில் 92 கல்வெட்டுக்கள் - சோழர் காலத்தியவை - கண்டெடுக்கப்பட்டுள்ளன. இறைவனை 'வேதவன முடையார்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

யாழ்ப்பாணத்து 'சின்னத்தம்பி நாவலர்' என்பவர் இத்தலத்துப் பெருமான் மீது ''மறைசை அந்தாதி'' பாடியுள்ளார்.

அண்மையில் உள்ள தலங்கள் (1) கோடிக்கரை (2) அகத்தியான் பள்ளி முதலியன. யாழ்ப்பாணம் வரணி, ஆதீனத்தைச் சேர்ந்த இத் திருக்கோயிலின் நிர்வாகம் தமிழ்நாடு இந்து அறநிலையத் துறையுடன் இணைந்து நடைபெறுகின்றது. நாடொறும் ஆறுகால வழிபாடுகள் 14.7.2000ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

''குரவம் குருக்கத்திகள் புன்னைகண் ஞாழல்
மருவும் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
சிரமமும் மலருந் திகழ் செஞ்சடை தன்மேல்
அரவம் மதியோடடை வித்தலழகே''. *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

''விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கள் விரும்பியோதப்
பண்ணினார் கின்னரங்கள் பத்தர்கள் பாடியாடக்
கண்ணினார் கண்ணினுள்ளே சோதியாய் நின்ற எந்தை
மண்ணினார் வலங்கொண் டேத்துமாமறைக் காடனாரே''.

(அப்பர்)

''யாழைப் பழித்தன்ன மொழி மங்கையொரு பங்கன்
பேழைச் சடைமுடிமேல் பிறை வைத்தானிடம் பேணில்
தாழைப் பொழிலூடே சென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக் கனி கூழைக் குரங்குண்ணும் மறைக்காடே''.

(சுந்தரர்)

பதினோராந் திருமுறை

ஊரெலாம் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெலாம் பாடவிந்த பாயிருட்கண்-சீருலாம்
மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக்காட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள்.

துயரும் தொழும் அழும் துகிலும் கலையும் செல்லப்
பெயரும் பிதற்றும் நகும்வெய் துயிர்க்கும் பெரும்பிணி கூர்ந்து
அயரும் அமர்விரிக்கும்மூரி நிமிர்க்கும் அந் தோஇங்ஙனே
மயரும் மறைக்காட்டு இறைக்காட்டகப்பட்டவாணுதலே.

கொட்டும் சிலபல சூழநின் றார்க்கும் புற்றெழுந்து
நட்ட மறியுங்கி ரீடிக்கும் பாடும் நகும்வெருட்டும்
வட்டம் வரும் அருந் தாரணை செல்வம் மலர்தயங்கும்
புட்டங் கிரும்பொழில் சூழ்மறைக் காட்டரன் பூதங்களே.

(பொன்வண்ணத்தந்தாதி)

வேதாரண்ய புராணம்

வேதாரண்யேஸ்வரர் துதி

கார்தாங்கு வடிவநெடு மாலும் ஞாலங்
கண்டவனும் அடிமுடிகள் காணாதோங்கிப்
பேர்தாங்கு குணங்குறியொன் றின்றே யேனும்
பிறங்குதொழில் ஐந்துதவும் பெருமைத் தாகிப்
பார்தாங்கும் உலகமுதற் புவனம் யாவும்
பரிப்பதற்கோர் முதலாகிப் படர்ந்தி டப்பால்
வார்தாங்கு முலைக்கொடியும் படரும் வேத
வனத்துறையும் தாணுவையாம் வணங்கல் செய்வாம்

Koviloor Digital Library

யாழைப் பழித்த மொழியம்மை துதி

வாலமதி நுதல்காட்ட, வதனம் செந்தா
மறைகாட்ட, வறைகாட்ட வளர்ந்த கொங்கை
நீலமலர் விழிகாட்ட, இமைய மென்னும்
நெடுங்கிரியில் உதித்தறங்கள் நிகழ்த்தி யாவும்
ஞாலமெலாம் பெற்றெடுத்தும் கன்னி யாகி
நவிலுமறை நாதனிடம் நயந்து நிற்கும்
பாலினையின் னமுதையருந்தேனை யாழைப்
பழித்தமொழி உமைபாதம் பணிதல் செய்வாம்.

திருப்புகழ்

சூழும்வி னைக்கட் டுன்பநெ டும்பிணி கழிகாமஞ்
சோரமி தற்குச் சிந்தைநி னைந்துறு துணையாதே
ஏழையெ னித்துக் கங்களு டன்தின முழல்வேனோ
ஏதம கற்றிச் செம்பத சிந்தனை தருவாயே
ஆழிய டைத்துத் தங்கையி லங்கையை யெழுநாளே
ஆண்மைசெ லுத்திக்கொண்ட கரும்புயல் மருகோனே
வேழமு கற்குத் தம்பியெ னுந்திரு முருகோனே
வேத வனத்திற் சங்கரர் தந்தருள் பெருமானே

(அருணகிரிநாதர்)

– "நேயமுணத்
தேடெலியை மூவுலகுந் தேர்ந்து தொழச் செய்தருளும்
ஈடில் மறைக்காட்டில் என்றன் எய்ப்பில் வைப்பே."

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. வேதாரண்யநாதர் திருக்கோயில்
வேதாரண்யம் & அஞ்சல் - 614810
வேதாரண்யம் வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

தலம் – 47

Koviloor Digital Library

243/126. அகத்தியான்பள்ளி

அகஸ்தியம்பள்ளி

சோழநாட்டு (தென்கரை)த்தலம்.

மக்கள் 'அகஸ்தியம் பள்ளி' என்று வழங்குகின்றனர். வேதாரணியத்திலிருந்து கோடிக்கரை செல்லும் வழியில் 1 1/2 கி.மீ. ல் உள்ளது. (இதையடுத்து உள்ளது கோடிக்கரையாகும்). சாலையோர ஊர் - இத்திருக்கோயிலை சிவன் கோயிலை - இங்குள்ள மக்கள் அகஸ்தியர் கோயில் என்றே கூறுகின்றனர். நெடுஞ்சாலைத் துறையின் பெயர்ப் பலகையும் **அகஸ்தியர் கோயில்** என்றே எழுதப்பட்டுள்ளது. அகஸ்தியர் இறைவனின் திருமணக் கோலங்காணத் தவஞ்செய்த பதி. எமன் வழிபட்ட சிறப்புடையது. கிழக்கு நோக்கிய கோயில் நகரத்தார் திருப்பணி.

இறைவன் - அகத்தீஸ்வரர்

இறைவி - மங்கைநாயகி

தலமரம் - வன்னி

தீர்த்தம் - அகத்திய தீர்த்தம் (கோயிலின் மேற்பாலுள்ளது)
அக்னிதீர்த்தம் (கடல்) அருகாமையில் உள்ளது.

சம்பந்தர் பாடல் பெற்றது.

சுவாமி சந்நிதியில் உள்ள குளம் அக்னி புஷ்கரணி எனப்படுகிறது. ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. சுவாமி கிழக்கு நோக்கியும் அம்பாள் மேற்கு நோக்கியும் காட்சி தருகின்றனர். அம்பாள் கோயிலுக்குப் பக்கத்தி சுவாமியைப் பார்த்தவாறு அகத்தியர் கோயில் உள்ளது.

இராசராசன் மாறவர்மன் குலசேகரன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோயிலுக்கு உள்ளன.

"வாடிய வெண்டலை மாலைசூடி மயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய எம்பெருமான் அகத்தியான் பள்ளியை
பாடிய சிந்தையினார்கட்கு இல்லையாம் பாவமே." *(சம்பந்தர்)*

- "நாடும்எனை
நின் அகத்தியான்பள்ளி நேர்ந்தேன் என்று ஆட்கொண்ட
தென் அகத்தியான் பள்ளிச் செம்பொன்னே." *(அருட்பா)*

Koviloor Digital Library

அஞ்சல் முகவரி:-

அ/மி. அகஸ்தியர் திருக்கோயில்
சேது ரஸ்தாசாலை
அகஸ்தியம்பள்ளி & அஞ்சல் - *614 810*
(வழி) வேதாரண்யம் - S. O.
வேதாரண்யம் வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

244/127. திருக்கோடி

கோடிக்கரை/கோடியக்கரை, குழகர் கோயில்

சோழநாட்டு (தென்கரை)த்தலம்

வேதாரண்யத்திலிருந்து கோடிக்கரைக்குப் பேருந்து செல்கிறது. சாலையின் இருபுறமும் உப்பளங்கள், மரங்கள் காட்சி தருகின்றன. கோடிக்கரை காட்டுப் பகுதியில் உள்ளது. வேதாரண்யத்திலிருந்து பேருந்தில் வருவோர் குழகர் கோயில் எனக்கேட்டுக் கோயிலருகில் இறங்கவேண்டும். சிறிய ஊர், (இதற்கு 1 1/2 கி.மீ-ல் கோடிக்கரை தீர்த்தமும் (கடல்) ருத்தரகோடி தீர்த்தமும் உள்ளன.)

கோயில் - அமைதியான சூழல், நகரத்தார் திருப்பணி.

இறைவன் - அமுதகடேஸ்வரர், குழகேஸ்வரர்

இறைவி - அஞ்சனாக்ஷி, மைத்தடங்கண்ணி.

தலமரம் - குராமரம்

தீர்த்தம் - அக்னி தீர்த்தம் (கடல்). அமுதகிணறு (கோயிலுள் உள்ளது).

சுந்தரர் பாடல் பெற்றது.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமுதகலசத்தை வாயு, தேவருலகிற்கு எடுத்துச் சென்றபோது அமுதம் சிதறிக் கீழே விழ, அது சிவலிங்கமாயிற்று என்பது வரலாறு. அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்ற பதி. சுவேதமுனிவரின் மகன் பிரமன், சித்தர்கள், நாரதர், இந்திரன், குழகமுனிவர் ஆகியோர் வழிபட்ட தலம்.

Koviloor Digital Library

உயர்ந்தோங்கிய ராஜகோபுரம், கொடிமரமில்லை. பிராகாரத்தில் அமிர்த விநாயகர், முருகன் சந்நிதிகள் தனித்தனிக் கோயிலாய் உள்ளன. இங்குள்ள முருகப்பெருமான் சிறப்பான மூர்த்தி - ஒருமுகம், ஆறுகரங்கள், ஒருகரத்தில் அமுதகலசம், மற்றகரங்களில் நீலோற்பலம், பத்மம், அபயம், வச்சிரம், வேல் முதலியவை ஏந்திய அழகிய திருக்கோலம், மயில் வடக்கு நோக்குகிறது. இத்தலம் கோளிலித் தலமாதலின் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன. முன்மண்டபத்தில் வலப் பால் (காட்டுப் பகுதியாதலின்) 'காடுகிழாள்' கோயிலும், அடுத்து தெற்கு நோக்கி அம்பாள் சந்நிதியும் உள்ளன.

மகாமண்டபத்தில் குழகமுனிவர் உருவமுள்ளது. மூலவர் - அழகிய திருமேனி - சதுரபீடம். இங்கிருந்து 1 1/2 கி.மீ. ல் ஆதிசேது எனப்படும் கோடியக்கரை உள்ளது. கடல் தீர்த்தம். தக்ஷிணாயன, உத்தராயண புண்ணிய காலங்களில் இங்கு நீராடுதல் விசேஷம் - கடற்கரையிலுள்ள சித்தர்கட்டம் (சித்தர் கோயில்) சிறப்பான இடம். சித்தர்கள் பலர் இங்கு வாழ்வதாக இன்னமும் நம்புகின்றனர். (குழகர் கோயில் உள்ள இடம் கோடியக்காடு - கடல் உள்ள இடம் கோடியக் கரை என்று சொல்லப்படுகிறது). சேரமான் பெருமாள் நாயனாருடன் வந்த சுந்தரர், கோயில் கடலருகே தனித்திருப்பதைக் கண்டு உள்ளம் வருந்தி பாடியதாக வரலாறு. தற்போது வீடுகள் உள்ளன.

"கடிதாய்க் கடற்காற்று வந்து எற்றக்கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கு ஆர்துணையாக இருந்தீரே".

(சுந்தரர்)

- "தொன்னெறியோர்
நாடிக்குழக நலமருள் என்று ஏத்துகின்ற
கோடிக் குழகரருட் கோலமே".

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. கோடிக்குழகர் கோயில்/அமுதகடேஸ்வரர் திருக்கோயில்
கோடியக்காடு & அஞ்சல் - 614821
(வழி) வேதாரண்யம் - S. O.
வேதாரண்யம் வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

245/1.திருஆலவாய்

மதுரை

பாண்டிய நாட்டுத் தலம்.

புகைவண்டி நிலையம். தமிழகத்தின் தலைசிறந்த பெரிய நகரங்களுள் ஒன்று. தென்பாண்டி நாட்டின் தலைநகர். தமிழ் வளர்த்த தலம். வைகைக் கரையில் அமைந்த வளமிக்க பதி. மாவட்டத் தலைநகரம். சென்னையிலிருந்தும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் புகை வண்டிகள் மூலமாகவும் பேருந்துகள் மூலமாகவும் வருவதற்கு நிரம்ப வசதிகள் உள்ளன.

புலவர்களுடன் இறைவனும் ஒருவராயிருந்து தமிழ்ச் சங்கத்தில் தமிழாராய்ந்த தனிச்சிறப்புடைய தலம். இறைவன் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை - அற்புதச் செயல்களை நிகழ்த்திய அரிய தலம். மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவம் காத்து மன்னனான கூன் பாண்டியனின் வெப்பு நோயை ஞானசம்பந்தர் மூலம் தீர்த்து வைத்து அவனை நின்றசீர் நெடுமாறனாக மாற்றிய அற்புதத் தலம். கபிலர் பரணர் நக்கீரர் முதலிய தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த பதி. தமிழ்ச் சங்கம் அமைந்த தலம். மூர்த்தி நாயனார் வாழ்ந்த ஊர். இவ்விறைவனே பாண பத்திரர் மூலம் சேரமான் பெருமாளுக்குத் திருமுகப்பாசுரம் தந்தருளியவர். திருஞானசம்பந்தர், அனல், புனல் வாதங்களை நிகழ்த்தி, சைவத்தைத் தழைக்கச் செய்த தண்பதி. பல்வேறு இலக்கியங்கலும் பாராட்டுகின்ற பதி. யோகநிலையில் இத்தலம் 'துவாத சாந்தத் தலம்' எனப்படும். பஞ்ச சபைகளுள் இத்தலம் வெள்ளிச்சபை எனப் போற்றப்படுகிறது. வரகுண பாண்டியனுக்காக இறைவன் கால் மாறி ஆடிய அற்புதம் இத்தலத்தில்தான் நிகழ்ந்தது. சங்ககாலப் புகழ்பெற்ற தங்கப்பதி. இறைவியே தடாதகையாக அரசாண்ட தலம். முப்பெருஞ் சக்தி பீடங்களுள் ஒன்று. திருஞானசம்பந்தர் இத்தலத்தில் வந்து தங்கியிருந்து சைவம் பெருக்கிய திருமடாலயம் - மிகப் பழமையான ஆதீனம் (மதுரை திருஞாசம்பந்தர் ஆதீனம்) தெற்காவணி மூலவீதியில் உள்ளது.

குமரகுருபர சுவாமிகள் இத்தலத்துப் பெருமாட்டியின் (மீனாட்சியம்மை) மீது பிள்ளைத் தமிழ், குறம், கலம்பகம் முதலிய பலவகைப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். மாநகராட்சிதகுதியில் உள்ள மக்கட் செறிவு கொண்ட மிகப் பெரிய நகரம் - இங்குக் காமராசர் பல்கலைக் கழகம்

Koviloor Digital Library

உள்ளது. ஊரின் பெயர் - மதுரை. கோயிலின் பெயர் - ஆலவாய். சிவராசதானி, பூலோக கயிலாயம், கடம்பவனம், கூடல், நான்மாடக் கூடல் என்பன இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்.

நாகம் உமிழ்ந்த விஷத்தை இறைவன் அமுதத்தால் மாற்றி மதுரமாக்கினமையால் இத்தலம் மதுரை என்று பெயர் பெற்றதென்பர்.

இறைவன் - சோமசுந்தரக்கடவுள், சொக்கலிங்கநாதர், சொக்கேசர், ஆலவாய் அண்ணல், சொக்கநாதர்

இறைவி - மீனாட்சி, அங்கயற்கண்ணி.

தலமரம் - கடம்பு

தீர்த்தம் - பொற்றாமரைக்குளம். கோயிலுள் உள்ளது.

ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற பழம்பதி. இத்தலத்தின் சிறப்புக்கள் திருவாசகத்துள் புகழந்தோதப்பட்டுள்ளன.

இக்கோயில் மிகவும் பரப்புடையது - பெரியது, விண்ணிழி விமானம். சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் அழகிய கோபுரங்களை நாற்புறமும் பெற்றுள்ள நகரம் தெற்குக் கோபுரமே பிறவற்றினும் உயர்ந்தது. கோயில் நகரின் நடுவே அமைந்துள்ளது. கோயிலை மையமாகக் கொண்டே இத்தலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கோயிலுள் அன்னை மீனாட்சிக்கே முதலில் வழிபாடு நடைபெறுகிற தாதலின் அன்பர்கள் பலரும் கீழ வீதியிலுள்ள அம்பாள் சந்நிதி வாயில் வழியாகவே ஆலயத்துள் செல்வர்.

மிகப் பெரிய கோபுரம். ஏராளமான சிற்பங்கள். சிற்பக்கலை அழகுடையவை. இக்கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தால் முதலில் உள்ளது அஷ்டசக்தி மண்டபம். வாயிலில் மீனாட்சி கல்யாணச்சிற்பம் சுதை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பெயருக் கேற்ப எட்டு பெருந்தூண்கள் எட்டு சக்திகளின் வடிவங்களை அழகுறப் பெற்றுள்ளன. திருவிளையாடற் புராணக் காட்சிகள் பல இதில் இடம் பெற்றுள்ளன. அடுத்துள்ள நாய்க்கர் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள எண்ணற்ற விளக்குகளைக் கொண்ட பித்தளை யாலான திருவாசி கண்களைக் கவருகின்றது. அடுத்துள்ள வழியே சென்றால் பொற்றாமரைக் குளத்தை அடையலாம். மிகப் பெரிய குளம் இந்திரன் தன் வழிபாட்டிற்காகப் பொன்மலர் பறித்த குளம் இது வென்பர். திருக்குறள் நூலை இக்குளத்தில் சங்கப் பலகையில் வைத்துத் தான் சங்கப் புலவர் ஏற்றுக் கொண்டதாக ஒரு வரலாறும் உண்டு. அழகிய படிக்கட்டுக்கள் உள்ள இக்குளத்தின் வடக்குக் கரையில் உள்ள

Koviloor Digital Library

தூண்களில் சங்கப் புலவர்களின் உருவங்கள் உள்ளன. தென்கரை மண்டபத்தில் திருக்குறட்பாக்கள் முழுவதும் சலவைக் கற்களில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன.

பொற்றாமரைக் குளத்தின் மேற்கே ஊஞ்சல் மண்டபம் உள்ளது. அழகான கண்ணாடி அறை. வெள்ளிதோறும் மாலையில் சுவாமி அம்பாள் பொன்னூசல் நடைபெறுகிறது. அடுத்துள்ள கிளிக்கூட்டு மண்டபம் அழகான சிற்பக்கலையழகுடையவை. பாண்டவர்கள், வாலி, சுக்ரீவன், திரௌபதி, புருஷாமிருகம் முதலிய சிற்பங்கள் இங்குள்ளன. மண்டபத்தின் மேற்பகுதியில் தெய்வங்களின் பல்வேறு தோற்றங்களும், மீனாட்சி கல்யாணமும் வண்ணச் சித்திரங்களாக எழுதப்பட்டுள்ளன. அம்பாள் சந்நிதி வெளிப் பிரகாரத்தில் திருமலை நாய்க்கர், இருதுணைவியாருடன் உள்ள சுதையாலான சிற்பங்கள் உள்ளன. அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் குமரன் சந்நிதியில் செதுக்கப்பட்டுள்ளன. இப்பிரகாரத்தில் உள்ள ஆறுகால் பீடத்தில்தான் குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் செய்யப்பட்டதென்பர்.

மகாமண்டபத்தில் ஐராவதவிநாயகர் சந்நிதியும் முருகப் பெருமான் சந்நிதியும் உள்ளன. அம்பாள்-மீனாட்சி கையில் கிளியுடன் செண்டு ஏந்தி நின்ற திருக்கோலத்தில் நமக்கு அருட்காட்சி வழங்கும் அற்புதம்-அநுபவித்தோர்க்கே அருமை தெரியும். திங்கள்தோறும் அம்பிகைக்குத் தங்கக்கவசம், வைரக்கிரீடம் சார்த்தப்படுகிற. அம்பாளை வணங்கிய பின், கிளிக்கூட்டு மண்டபம் வழியாக வந்து கோபுரவாயிலை கடந்து சுவாமி சந்நிதிக்குப் போகும் நமக்கு எதிரில் முக்குறுணி விநாயகர் தரிசனம் கிடைக்கின்றது. எட்டு அடி உயரமுள்ள மிகப்பெரிய திருமேனி. பிராகாரத்தில் சங்கப்புலர், சம்பந்தர் சந்நிதிகள் உள்ளன.

சுவாமி சந்நிதிக்கு எதிரில் உள்ள கம்பத்தடி மண்டபம் சிற்பக் கலையின் கருவூலம் எனலாம். மண்டபத்தின் நடுவில் தங்கக் கொடி மரமும் நந்தியும் பலிபீடமும் உள்ளன. சுற்றிலும் உள்ள எட்டுத் தூண்களிலும் அற்புதமான சிலைகள் உள்ளன. சங்கரநாராயணர், சோமாஸ்கந்தர், அர்த்தநாரீஸ்வரர் போன்ற தோற்றங்களும் திருமாலின் தசாவதாரக் காட்சிகளும் அற்புதமானவை. இவற்றுக்கு முத்தாய்ப்பு அமைந்துள்ளது மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணச் சிற்பமாகும். இச்சிற்ப அழகை எங்ஙனம் வருணிப்பது? அவ்வளவு தத்ரூபமான அமைப்பு. கம்பத்தடி மண்டபத்திற்குப் பக்கத்தில் இரு பெரிய தூண்களில் வடிக்கப்பட்டுள்ள (1) அக்கினி வீரபத்திரர் (2) அகோர

Koviloor Digital Library

வீரபத்திரர் சிலாரூபங்களும்; அடுத்துள்ள தூண்களிலுள்ள (1) ஊர்த்துவதாண்டவர் (2) காளியின் சிலாரூபங்களும் கொள்ளை யழகுடையன.

சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வாயிலில் இரு பெரிய துவார பாலகர்கள் கம்பீரமாகக் காட்சி தருகின்றனர். உள் நுழைந்ததும் பிராகாரத்தில் திருவிளையாடற்புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்ட ஆறுகால் பீடம் உள்ளது. அறுபத்துமூவர் தரிசனம், கலைமகள் சந்நிதி உள்ளது. காசிவிசுவநாதர், பிட்சாடனர், சித்தர், துர்க்கைச் சந்நிதிகளும் உள்ளன. கடம்பமரம் - தலமரம், வெள்ளிக் கவசமிட்டுப் பாதுகாக்கப் பட்டு கனகசபையும், யாகசாலையும், சாட்சி சொல்லிய வன்னி கிணறும் அடுத்தடுத்து உள்ளன.

வெள்ளியம்பலம், கால்மாறி ஆடிய அம்பலக் கூத்தனின் அற்புத நடன அழகு. தரிசித்து உள்ளே சென்று சோமசுந்தரப் பெருமானைக் காண்கின்றோம். சுவாமியின் கருவறை - இந்திர விமானம், விண்ணிழி விமானம் என்றழைக்கப்படுகிறது. அஷ்டதிக்கு யானைகளும் முப்பத்தி ரண்டு சிங்கங்களும், அறுபத்துநான்கு பூதகணங்களும் தாங்கும் அமைப்பில் இவ்விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

மூலவர் - சிவலிங்கத் திருமேனி. ஆலவாய் அழகன் - அழகு மிளிரக் காட்சி தருகிறார். சிறிய திருமேனி. இம்மூர்த்தி தொடர்பான ஒரு செய்தி:-

கி.பி. 1330-ல் முகமதிய படையெடுப்பு நடைபெற்றபோது மன்னனாக இருந்த பராக்கிரமபாண்டியன் காளையார்கோயில் சென்று விட்டார். கோயில் ஸ்தானிகர் சிவலிங்கத்தை மூடி, கிளிக்கூடு வைத்து மணலைப்பரப்பி, கருவறைவாயிலையும் கல்லினால் அடைத்து, முன்புள்ள அர்த்தமண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை வைத்து விட்டனர். படையெடுத்து வந்த முகமதிய மன்னன் முன்னால் இருந்த சிவலிங்கத்தை நிஜமானதென்றெண்ணித் தாக்கிச் சிதைத்தான். படை யெடுப்பு முடிந்து 48 ஆண்டுகள் கழித்து கம்பண்ணர் படையெடுத்து வந்து முகமதியரை வென்று, கோயில் வந்து ஸ்தானிகருடன் தோண்டிப் பார்க்க; சுவாமி மேற்பூசிய சந்தனம் மணம் மாறாமல், பக்கத்தில் ஏற்றிவைத்த 2 வெள்ளி விளக்குகளும் சுடர் எரிந்து கொண்டிருந்தன வாம்; அன்றிருந்து சுவாமிக்கு இன்றுவரை முறையாகப் பூஜைகள் நடைபெறுகின்றனவாம்.

இக்கோயிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபம் மிகவும் பெரியது. மண்டப வாயிலின் மேற்புறத்தில் தமிழ் ஆண்டுகள் அறுபதையும்

Koviloor Digital Library

குறிக்கும் சக்கரம் வரையப்பட்டுள்ளது. இங்குள்ள பிட்சாடனர் குறவன் குறத்தி முதலிய 'சிற்ப அழகு மிக்க சிலைகள் காணத் தெவிட்டாத கலைச்சுவையுடையன. மண்டபத்தில் எங்கு நின்று நோக்கினாலும் இத்தூண்கள் அனைத்தும் ஓர் ஒழுங்கான வரிசையில் இருப்பதைக் கண்டு வியக்கிறோம். இங்கு நிருத்த கணபதி, சரஸ்வதி, அர்ச்சுனன், ரதி, மோகினி, மன்மதன், கலிபுருடன் முதலிய பல சிற்பங்களும் உள்ளன. இங்குள்ள நடராசரின் சிலை அற்புதமானது. இம்மண்டபத்தில் "கலைக் காட்சியகம்" நடத்தப்பட்டு வருகிறது. தெய்விகத் திருமேனிகளையும், தொல்பொருள்களையும் இங்குக் கண்டு மகிழலாம்.

ஆயிரக்கால் மண்டபத்திற்குப் பக்கத்தில் மங்கையர்க்கரசி பெயரால் புதிய மண்டபமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் கூன் பாண்டியன், மங்கையர்க்கரசி, ஞானசம்பந்தர், குலச்சிறையார் ஆகியோருடைய உருவங்கள் உள்ளன. சிவலிங்கத் திருமேனி ஒன்றும் நடுவிலுள்ளது. இதனையொட்டி மருதுபாண்டியர் கட்டிய சேர்வைக் காரர் மண்டபமும், அழகிய மரவிதானங் கொண்ட கல்யாண மண்டபமும் உள்ளன.

சுவாமி அம்பாள் புறப்பாடு நிகழும் வீதி 'ஆடிவீதி' எனப் படுகிறது. வடக்கு ஆடிவீதியில் பெரிய கோபுரத்தையடுத்து ஐந்து இசைத்தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணிலும் 22 சிறு தூண்கள். இவைகளைத் தட்டினால் விதவிதமான இனிய ஓசை எழுகின்றது. இசைத்தூண்களின் அமைப்பும் அழகும் மிகவும் அதிசயமானவை.

கிழக்குக் கோபுரத்திற்கு எதிரில் வசந்த மண்டபம் உள்ளது. இதைப் புதுமண்டபம் என்கின்றனர். திருமலை நாய்க்கர் கட்டியது. இதில் தடாதகைப் பிராட்டி, மீனாட்சி திருமணம், திருமலை நாய்க்கர், கல்யானை கரும்பு தின்னுவது, இராவணன் கயிலையைத் தூக்குவது, முதலிய பல சிற்பங்கள் உள்ளன. புதுமண்டபத்தின் எதிரே ராய கோபுரம் முடிவு பெறாத நிலையில் உள்ளது.

மதுரை செல்வோர் அனைவரும் திருமலை நாய்க்கர் மகாலைக் கண்டு மகிழவேண்டும். திருமலை நாய்க்கர் தம் தலைநகரை திருச்சியி லிருந்து மதுரைக்கு மாற்றியபோது இதைக் கட்டியதாகத் தெரிகிறது. செங்கல், வெண்சுதைச்சாந்து ஆகியவற்றைக் கொண்டே (மரம் முதலியவற்றின் தொடர்பின்றிக்) கட்டப்பட்டுள்ள இம்மகால் அழகு வேலைப்பாடுடையது.

மதுரையில் உள்ள மாரியம்மன் தெப்பக்குளம் - (வண்டியூர் தெப்பக் குளம்) மிகவும் பெரிய அழகான குளமாகும். இங்குத் தைப்பூசத்தன்று

Koviloor Digital Library

நடைபெறும் தெப்பத் திருவிழா மிகச்சிறப்புடையதாகும். திருமாலிருஞ் சோலை (அழகர் கோயில்), பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம் முதலியவை அண்மையிலுள்ள தரிசிக்கத் தக்க தலங்களாகும்.

சித்திரைப் பௌர்ணமியன்று அழகர் வைகையாற்றில் வந்து இறங்கும் திருவிழா இத்தலத்துச் சிறப்பானதொரு திருவிழாவாகும். 3600 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையுடைய பதி, இம் மதுரையாகும். ஞானசம்பந்தர் காலத்தில் சுவாமி கோயில் மட்டுமே இருந்ததாகத் தெரிகின்றது.

மதுரையை ஆண்ட சடையவர்மன் குலசேகரபாண்டியன் 12 ஆம் நூற்றாண்டில் மீனாட்சியம்மைக்குத் தனிக்கோயில் எடுப்பித்தான் என்று தெரிகிறது. 13 ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கீழ்க்கோபுரத்தைக் கட்டிச் சுற்று மதில்களை அமைத்தான். 14 ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியனால் மேற்குக் கோபுரம் கட்டப் பட்டது. 16 ஆம் நூற்றாண்டில் செவ்வந்திச் செட்டியார் தெற்குக் கோபுரத்தைக் கட்டினார். ஆயிரக்கால் மண்டபத்தை அரியநாத முதலியார் அமைத்தார். 17 ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட திருமலைநாய்க்கர் காலத்தில் புதுமண்டபம், அஷ்டசக்தி மண்டபம் கிளிக்கூட்டு மண்டபம் முதலியன கட்டப்பட்டன. ஆடிவீதிகளில் உள்ள சுற்று மண்டபங்கள் இராணி மங்கம்மாள் அவர்களால் கட்டப்பட்டன.

இவ்வாறு நூற்றாண்டுகள் தொறும் வளர்ச்சி பெற்று 'ஆலவாய்' இன்று முழுமை பெற்றுப் பெருஞ்சிறப்புடன் திகழ்கின்றது. மன்னர் களும் செல்வந்தர்களும் இத்திருக்கோயிலின் திருப்பணிகளில் ஈடு பட்டுச் செய்து வந்துள்ள தொடரில், தமிழவேள் திரு. பி.டி. ராஜன் அவர்கள் தலைமையில் 1960-63ல் மேலும் திருப்பணிகள் செய்யப் பட்டு, அனைத்துக் கோபுரங்களும் புதுப்பிக்கப்பட்டன. மங்கையர்க் கரசியார் மண்டபம் புதிதாகக் கட்டப்பட்டது. ஒவ்வொரு தமிழ் மாதம் முதல்நாளில் தங்கரதம் புறப்பாடு நடைபெறுகின்றது. பெருவிழாக் களும் மற்ற மாதாந்திர விழாக்களும் முறையாக நடைபெறுகின்றன.

"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவைவரி வளைக்கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூத நாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும்இதுவே".

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''நலந்திகழ் வாயின் நூலாற் சருகிலைப் பந்தர் செய்த
சிலந்தியை அரசதாள அருளினாய் என்று திண்ணம்
கலந்துடன் வந்து நின்தாள் கருதி நான் காண்பதாக
அலந்தனன் ஆலவாயில் அப்பனே அருள் செயாயே''.

(அப்பர்)

''பாலவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை
ஆலவாய்ச் சொக்கழ கானந்தமே''- *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. மீனாட்சியம்மை சமேத
சோமசுந்தரப் பெருமான் திருக்கோயில்
மதுரை - 625001.

246/2. திருஆப்பனூர்

ஆப்புடையார் கோயில்

பாண்டியநாட்டுத் தலம்

தற்போது ஆப்புடையார் கோயில் என்று வழங்குகிறது.

மதுரையில் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் வையை ஆற்றுக்கு அருகில் உள்ளது. நகரப் பேருந்து மதுரைப் பேருந்து நிலையத்திலிருந்து செல்கிறது. சோழாந்தகன் என்னும் பாண்டிய மன்னன் பொருட்டு ஓர் ஆப்பினிடத்தில் இறைவன் வெளிப்பட்ட தலம். அர்ச்சகர் ஒருவர் உலையில் இட்ட வையை ஆற்று மணலை இறைவன் அன்னமாக ஆக்குவித்த அற்புதப் பதி. இதனாலேயே இங்கு இறைவனுக்கு ''அன்னவிநோதன்'' என்ற பெயருண்டாயிற்று.

இறைவன் - இடபுரேசர் (ரிஷபுரரேசர்), அன்னவிநோதன், ஆப்புடையார்.

இறைவி - குரவங்கழ் குழலி

தீர்த்தம் - வையை, இடபதீர்த்தம்

சம்பந்தர் பாடல் பெற்றது.

இக்கோயிலில் உள்ள நடராசர், சிவகாமி ஆகிய மூர்த்தங்கள் பெரியதாகவும், கலையழகு மிக்கதாயும் உள்ளன.

Koviloor Digital Library

நாடொறும் நான்கு காலபூஜைகள். கந்தசாமிப் புலவர் பாடியுள்ள தலபுராணம் உள்ளது.

"முற்றும் சடைமேல் முதிரா இளம் பிறையன்
ஒற்றைப்பட அரவம் அதுகொண்டு அரைக்கணிந்தான்
செற்றமில் சீரானை திருஆப்பனூரானைப்
பற்றும் மனமுடையார் வினை பற்றறுப்பாரே".

(சம்பந்தர்)

- "சீலர்தமைக்
காப்பனூரில்லாக் கருணையால் என்றுபுகும்
ஆப்பனூர் மேவு சதானந்தமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆப்புடையார் திருக்கோயில்
ஆப்புடையார் கோயில் & அஞ்சல்
மதுரை - 625 002.

247/3. திருப்பரங்குன்றம்

பாண்டிய நாட்டுத் தலம்.

மதுரைக்குப் பக்கத்தில் உள்ளது. மதுரையிலிருந்து நகரப் பேருந்து செல்கிறது. புகைவண்டி நிலையம், முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுள் முதலாவதாக விளங்கும் தலம். கோயில்வரை வாகனங்கள் செல்லும், முருகப்பெருமான் தெய்வயானையை மணம் புரிந்த தெய்வப் பதி.

நக்கீரர் வாழ்ந்த தலம். பராசரமுனிவரின் புதல்வர், நக்கீரர், சிபிமன்னன், பிரம்மா ஆகியோர் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற பதி. இத்தலம் சிவத்தலமாயினும், இன்றைய நடைமுறையில் முருகனுக்குரிய சிறப்புதலமாகவே வழிபடப்படுகின்றது.

இறைவன் - பரங்கிரி நாதர்

இறைவி - ஆவுடை நாயகி.

Koviloor Digital Library

தீர்த்தம் - சரவணப்பொய்கை, இலட்சுமி தீர்த்தம், பிரமகூபம்

சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடல் பெற்றது.

ஆறுமுகர் சந்நிதி மிகவும் விசேஷமானது. மூலவர் தெய்வயானை திருமணக் கோலத்துடன் முருகன் காட்சியளிக்கின்றார். பரங்கிரி நாதர் - மூலத்திருமேனி - சிவலிங்கம் குடவரைக் கோயிலில் தரிசனம் தருகின்றார். பின்னால் கல்யாண சுந்தரேஸ்வரர் வடிவம் புடைப்புச் சிற்பமாகவுள்ளது.

இத்தலத்தில் முருகப் பெருமானின் (ஞான) வேலுக்குப் பாலபிஷேகம் செய்வது தனிச் சிறப்பானது. கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. நாடொறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் அருள் முன்னிலையில் 11.6.2000 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

தலபுராணம் உள்ளது - நிரம்ப அழகிய தேசிகர் பாடியது.

இத்தலத்தில் 11 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. முகமதியர் ஆட்சியில் திவானாக இருந்த ராஜகோபாலராயர் என்பவர் - ஐரோப்பியர் படைகள் மதுரையில் புகுந்து கோயிலை அழித்துக் கொண்டு வந்தபோது அவர்களை எதிர்த்து வயிராவி முத்துக் கருப்பன் குமரன் செட்டி என்பவன் தடுத்து அப்பணியில் கோபுரத்திலிருந்து கீழே விழுந்து இறந்துவிட, அவன் குடும்பத்தாருக்கு இறையிலியாக நிலங்கள் அளித்த செய்தி இத்தலத்தின் கல்வெட்டு ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

"பொன்னியல் கொன்றை பொறிகிளர் நாகம் புரிசடைத்
துன்னிய சோதியாகிய ஈசன் தொன்மறை
பன்னிய பாடல் ஆடலன்மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை உடையவர்க்கு இல்லை உறுநோயே". *(சம்பந்தர்)*

"பாரொடு விண்ணும் பகலுமாகிப்
பனிமால் வரையாகிப் பரவையாகி
நீரோடு தீயு(ம்) நெடுங்காற்றுமாகி
நெடு வெள்ளிடையாகி நிலனுமாகித்
தேரோட வரையெடுத்த அரக்கன்
சிரம்பத்து இறுத்தீர் உம செய்கையெல்லாம்
ஆரோடும் கூடா அடிகேள் இது என்
அடியோமுக்கு ஆட்செய அஞ்சுதுமே" *(சுந்தரர்)*

Koviloor Digital Library

-''மாப்புலவர்
ஞானபரங்குன்றமென நண்ணி மகிழ்கூர்ந்தேந்த
வான பரங்குன்றலின்பானந்தமே''. (அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பரங்கிரிநாதர் திருக்கோயில்
திருப்பரங்குன்றம் & அஞ்சல்
மதுரை - 625 005.

248/4. திருஏடகம்

பாண்டிய நாட்டுத் தலம்.

வைகையின் கரையிலுள்ளது. திருஞானசம்பந்தர் ஆற்றிலிட்ட ஏடு எதிரேறி கரையடைந்த இடம் இதுவே. ''வாழ்க அத்தணர்'' என்னும் பதிக ஏட்டை ஞானசம்பந்தர் வைகையில் இட, அது நீரை எதிர்த்துச் செல்ல, பின்பு ''வன்னியும்மத்தமும்'' என்னும் திருப்பதிகம் பாடியவுடன் அந்த ஏடு ஒதுங்கி நின்ற தலம். (ஏடு-அகம்=ஏடகம்) மதுரையிலிருந்து சோழவந்தான் சாலையில் சென்று இத்தலத்தை யடையலாம்.

பிரமன், திருமால், ஆதிசேஷன், கருடன், வியாசர், பராசரர் ஆகியோர் வழிபட்டது.

இறைவன் - ஏடகநாதேஸ்வரர்
இறைவி - ஏலவார்குழலி, சுகந்த குந்தளாம்பிகை
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - பிரம தீர்த்தக்குளம்
சம்பந்தர் பாடல் பெற்றது.

கிழக்கு நோக்கிய கோயில். வண்ண வளைவுள்ளது. அம்மை யப்பருக்கு ஐந்து நிலைக் கோபுரங்கள் தனித்தனியே காட்சி தருகின்றன. உள்செல்கிறோம் - காட்சி தருவது, கம்பத்தடி மண்டபம்' நடுவிலுள்ள பலிபீடம், ஓங்கிய துவஜஸ்தம்பம், நுழைவு வாயிலில் இடப்பால் விநாயகரையும், முருகப் பெருமானையும் கண்டு தொழுகின்றோம். துவாரபாலகர் தரிசனம், மூலவர் ஏடகநாதர். சிவலிங்கத் திருமேனி.

Koviloor Digital Library

வேலைப்பாடுகள் மிக்க கருவறை. பிராகாரத்தில் அறுபத்து மூவர் சந்நிதிகள். பாலகணபதி, தட்சிணாமூர்த்தியைத் தொழுது வணங்க உள்ளம் சாந்தியுறும். ஏடகநாதர், ஏலவார்குழலி ஆறுமுக சுவாமி, கணபதி, சோமாஸ்கந்தர், ஞானசம்பந்தர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

இலிங்கோற்பவர், பஞ்சலிங்கங்கள் தரிசனம். ஆறுமுகப் பெருமானைத் தரிசித்துக் கிழக்கில் திரும்பினால் சப்தமாதர்கள், இரட்டை விநாயகர் சுப்பிரமணியர், நாகலட்சுமி, துர்க்கை, சக்தி விநாயகர், சண்டேஸ்வரர் சந்நிதிகள் உள்ளன.

ஆடல் வல்ல பெருமானாகிய நடராசர் சந்நிதியில் திருவேடகத் திருப்பதிகம் சலவைக் கற்களில் எழுதப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளது. நவக்கிரகங்கள், வல்லப கணபதி, சாஸ்தா, சந்திரன், கார்த்திகை ஆகியோர் சந்நிதிகள் உள.

அம்பாள் கோயில் தனியே உள்ளது. தலைவாயிலில் உள்ள 'மணி' மலாயாவிலிருந்து வரவழைக்கப்பட்டதாகும். சண்டிகேஸ்வரி சந்நிதியும், பள்ளியறை தரிசனமும் முடித்துத் திரும்பும்போது ஒருவித மனநிறைவு. பள்ளியறையில் கண்ணாடி வாசலில் அம்மையப்பரைக் காண்பதே தனியழகு. இத்தலத்து உள்ள பிரம்ம தீர்த்தக் குளத்தில் நீராடி, இறைவனை வழிபடின் 'சித்தப்பிரமை' நீங்குவது இத்தலத்தின் தனிப் பெருமையாகும். அம்பாள் கோயிலில் கற்றூணில் ஞான சம்பந்தரின் அழகான சிற்பம் சின்முத்திரையுடன், தலைமாலையுடன் (கைத்தாளமின்றி) காட்சி தருகின்றது. நாடொறும் பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன.

ஏடு எதிரேறிய விழா ஆவணி முதல் நாளில் நடைபெறுகிறது. கந்த சஷ்டி, நவராத்திரி, ஆடிப்பூரம், மாசிமகக் கடலாட்டு, சிவராத்திரி, பங்குனி உத்திரம் முதலிய உற்சவங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. கார்த்திகைச் சோமவார 108 சங்காபிஷேகம் சிறப்பானது. தலபுராணம் உள்ளது. கல்வெட்டில் இத்தலம் ''பாகனூர்க் கொற்றத்து திருவேடகம்'' என்று; இறைவன் பெயர் திருவேடகம் உடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

''ஏலமார் தருகுழல் ஏழையோ டெழில் பெறும்
கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்
சாலமா தவிகளுஞ் சந்தனஞ் சண்பகம்
சீலமார் ஏடகஞ் சேர் தலாஞ் செல்வமே.''

(சம்பந்தர்)

Koviloor Digital Library

-''வானவர்கோன்
தேமேடகத்த னொடுசீதரனும் வாழ்த்துஞ்சீர்
ஆமே டகத்தறி வானந்தமே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஏடகநாதேஸ்வரர் திருக்கோயில்
திருவேடகம் & அஞ்சல் - 624 234
மதுரை மாவட்டம்.

249/5. கொடுங்குன்றம்

பிரான்மலை

பாண்டிய நாட்டுத் தலம்.

தற்போது மக்கள் வழக்கில் 'பிரான்மலை' என்று வழங்கப் படுகிறது. மதுரையில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டுப் பொன்னமராவதி செல்லும் பேருந்துகள் பிரான்மலை வழியாகச் செல்கின்றன. மதுரையிலிருந்து சிங்கம்புணரி, மேலூர் ஆகிய ஊர்களுக்குச் சென்றால் அங்கிருந்து பிரான்மலைக்குப் பேருந்துகள் உள்ளன. மதுரையிலிருந்து சிங்கம்புணரி சென்றால் அங்கிருந்து பிரான் மலைக்கு அடிக்கடி பேருந்துகள் செல்கின்றன.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

பிரான் மலை - மலையின் சரிவில் கோயில் உள்ளது. கோயி லுக்குச் செல்லும் வழியில் உள்ள பெரிய குளம் ''அடையாளஞ்சான் குளம்'' என்று கொச்சையாக வழங்கப்படுகிறது. கோயிலின் முன் மண்டபம் உள்ளது. தெற்கு நோக்கிய நுழைவு வாயிலின் உள் புகுந்து படிக்கட்டுகள் ஏறிக் கோயிலை அடையவேண்டும். வலம்புரி விநாயகரைத் தரிசித்து இடப்பால் திரும்பி, படிகளேறி, சந்நிதி நுழையும் முன் ஏகாந்த விநாயகரைத் தரிசித்து உட்சென்றால் நடராச மண்டபம் உள்ளது.

இறைவன்-உமாமகேஸ்வரர், மங்கைபாகர்

இறைவி-தேனாம்பிகை, தேனாம்பாள்.

Koviloor Digital Library

மேலேயுள்ள மூலவர் உருவங்கள் கல்யாண கோலத்தில் உள்ளன. இவை குகையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. எதிரில் சிறிய சிவலிங்கம் உள்ளது. இதை 'உடையவர்' என்றழைக்கின்றனர். பெருமானைத் தரிசித்து வெளி வந்து கீழிறங்கின் வலப்பால் தனியே பைரவர் சந்நிதி உள்ளது. துவாரபாலகர்கள் இருபுறமும், மூலவரான பைரவர் நின்றகோலத்தில் காட்சிதருகிறார். உற்சவ (பைரவர்)த் திருமேனியும் உள்ளது. விசுவநாதர் விசாலாட்சி சந்நிதி உள்ளன. பைரவர் கோயிலை வலமாக வந்து, மலைக்கற்கள் மீதேறி வெளி வலமாக வரலாம்.

கீழிறங்கி வரும்போது வலப்பால் 'கடோரகிரீஸ்வரர்' சந்நிதி உள்ளது.

இறைவன் - கொடுங்குன்றநாதர், கடோரகிரீஸ்வரர்.

இறைவி - குயிலமுதநாயகி, அமிர்தேஸ்வரி.

கிழக்கு நோக்கிய சந்நிதி. பாடல் பெற்ற சந்நிதி இதுவே.

கடோரகிரீஸ்வரர் மூலவர் - மிகச் சிறிய லிங்கம். வலமாக வரும் போது அறுபத்துமூவர் மூலமூர்த்தங்களும், விநாயகர், அம்மையப்பர், சந்நிதிகளும் உள்ளன. அம்பாள் சந்நிதி - நின்றகோலம், நவக்கிரக சந்நிதிகளில் அனைத்தும் அமர்ந்த நிலையில் உள்ளன. கோயில் மண்டபங்கள் முழுவதும் நன்கு கட்டமைந்துள்ளன.

இக்கோயிலில் மேற்புறம், நடுப்புறம், இடப்புறம் ஆகிய மூன்று அமைப்புக்கள் சொர்க்கம், அந்தரம், பூமி என்றழைக்கப்படுகின்றன சொர்க்கத்தில் மங்கைபாகரும், அந்தரத்தில் பைரவரும், பூமியில் கடோரகிரீஸ்வரும் எழுந்தருளியுள்ளனர். முறையாக பூஜைகள் நடைபெறுகின்றன. மேலே காரணாகம முறையிலும் கீழே காமிகாகம முறையிலும் பூஜைகள் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்குரிய தீர்த்தம் - தேனாழிதீர்த்தம் - கோயிலுள்ளே உள்ளது. தலமரமாக இரண்டு மரங்கள் சொல்லப்படுகின்றன. 1) உறங்காப்புளி. இது கோயிலுள் உள்ள தீர்த்தத்தின் கரையில் உள்ளது. 2) பெயரில்லா மரம், இம்மரம் மலைமீது சுவாமி (மங்கை பாகர்) சந்நிதிக்குப் பக்கத்தில் மலைக்கற்களின் இடுக்கில் உளள்து. இதற்குப் பெயர் தெரியவில்லை. இதுகாறும் எவராலும் பெயர் தெரிந்து சொல்லப்படாமையால் இதைப் 'பெயரில்லாமரம்' என்றே அழைக் கின்றனர்.

தலம் - 48

Koviloor Digital Library

இத்திருக்கோயில் குன்றக்குடி (திருவண்ணாமலை) ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். இப்பதி பாரிவள்ளலின் பறம்பு மலையாகும். சித்திரைத் திங்களில் நடைபெறும் பெருவிழாவில் ஏழாம் திருவிழாவன்று 'பாரிவிழா' மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

''கைம்மா மதகரியின்னினமிடியின் குரலதிரக்
கொய்ம்மா மலர்ச்சோலைபுக மண்டுங் கொடுங்குன்றம்
அம்மானெனவுள்கித் தொழுவார்கட்கருள் செய்யும்
பெம்மானவனிமையோர் தொழமேவும் பெரு நகரே.''

(சம்பந்தர்)

-''பூமீதின்
நற்றவருங்கற்ற நவசித்தரும் வாழ்த்தி
உற்றகொடுங் குன்றத்தெம் ஊதியமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. உமாமகேஸ்வரர் திருக்கோயில்
பிரான்மலை & அஞ்சல் - 624 503.
பசும்பொன் சிவகங்கை மாவட்டம்.

250/6. திருப்புத்தூர்

பாண்டியநாட்டுத் தலம்.

மதுரைக்கும் காரைக்குடிக்கும் மத்தியில் உள்ளது. மதுரையிலிருந்தும் காரைக்குடி, புதுக்கோட்டை, சிவகங்கை முதலிய ஊர்களிலிருந்தும் இத்தலத்திற்குப் பேருந்துகள் செல்கின்றன.

(வடாற்காடு மாவட்டத்தில் இதே பெயரில் ஓர் ஊர் உள்ளது - திருப்பத்தூர். இது திருப்புத்தூர். அதனின் இது வேறானது. மக்கள் வழக்கில் இதுவும் திருப்பத்தூர் என்றே வழங்குகிறது. இத்தலம் பசும்பொன் மாவட்டத்தைச் சேர்ந்தது.)

கோயிலுக்கு (ஸ்ரீ தளி) திருத்தளி என்று பெயர். ஊர்ப்பெயர் திருப்புத்தூர்.

இறைவன் - ஸ்ரீ தளீஸ்வரர், ஸ்ரீ தளிநாதர், திருத்தளிநாதர்
இறைவி - சிவகாமி

Koviloor Digital Library

தீர்த்தம் - ஸ்ரீ தளி (திருத்தளி தீர்த்தம்), சிவகங்கை, (கோயிலுக்குப் பக்கத்தில் வெளியில் உள்ளது.) விசாலமான பரந்த குளம்.

தலமரம் - சரக்கொன்றை.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.

பெருமான் ஆடியருளிய கௌரி தாண்டவத்தைக் கண்டு இலக்குமி வழிபட்டு இத்தலத்து வேண்டிய பேற்றைப் பெற்றாள். அவள் பெருமானிடம் வேண்டியவாறே இக்கோயில் தொடர்புடைய அனைத்தும் இலக்குமி சம்பந்தமுடையதாகவே விளங்கலாயிற்று. ஸ்ரீ - இலக்குமி. ஆகவே கோயில் ஸ்ரீ தளி, இறைவன் - ஸ்ரீ தளீஸ்வரர், தீர்த்தம் - ஸ்ரீ தளிதீர்த்தம் என வழங்கப்படுகின்றது. இத்திருக்கோயில் நீண்ட மதிற்சுற்றை உடைய பெரிய கோயில். முகப்பு வாயில் கிழக்கு நோக்கியது. இராஜகோபுரமில்லை - மண்டபம் மட்டுமே உள்ளது. உள் நுழைந்தால் உள்ள மண்டபத்திற்கு அநபாய சோழன் மண்டபம் என்று பெயர். வலப்பால், திருப்புத்தூர், தமிழ்ச் சங்கம் நடைபெறுகின்ற மண்டபம் உள்ளது. இக்கோயிலில் மூன்று பிரகாரங்கள் உள்ளன. வெளிப் பிரகாரத்தில் யானை மண்டபம் உள்ளது. வேப்பமரத்தடி விநாயகர் தரிசனம். எதிரில் மதிலையொட்டி நந்தவனப் பகுதிகள். கொன்றை மரங்கள் உள்ளன.

அடுத்த உள்பிரகாரத்தில் நுழையும்போது செப்புக் கவசமிட்ட கொடிக்கம்பம் - சற்றுப் பெரிய நந்தி. வாயிலில் சம்பந்தர், அப்பர் பாடல்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமானின் திருக்கோல தரிசனம் மனதிற்கு மகிழ்வூட்டு கின்றது. இங்குள்ள **பைரவர் சந்நிதி** மிகவும் விசேஷமானது - தனிச் சிறப்பும் தனிச்சக்தியும் வாய்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. தனிக் கோயிலாக அழகிய விமானத்துடன் அமைந்துள்ள இப்பைரவரின் சந்நிதியில் முன்மண்டபம் மருதுபாண்டிய சகோதர்களால் கட்டப் பட்டது. அவர்கள் இருவரின் உருவங்களும் அம்மண்டபத்தில் உள்ளன. இங்குப் பைரவர் யோகாசன நிலையில் அமர்ந்துள்ளார். இந்திரன் மகன் சயந்தன் வழிபட்டுப் பேறடைந்தான் ஆதலின் அவன் உருவம் சந்நிதிக்கு வெளியில் வாயிலில் உள்ளது. இப்பைரவப் பெருமானுக்கு நாடொறும் அர்த்தசாமத்தில் புனுகு சார்த்தப்பட்டு வடைமாலை, சம்பாநைவேத்தியம் நிவேதிக்கப்படுகிறது. "அர்த்தசாம வழிபாட்டிற்காகக் குருக்கள் மணியடித்து விட்டால் அதற்குப் பிறகு

Koviloor Digital Library

மக்கள் யாரும் பைரவர் சந்நிதிக்குப் போக கூடாது. ஏற்கெனவே சென்றிருப்போரும் விரைந்து தரிசனம் முடித்துத் திரும்பி விடுவர். அர்த்தசாமத்தின்போது குருக்கள், பரிசாரகர், நைவேத்தியம் கொண்டு செல்வோர் ஆகிய மூவர் மட்டுமே செல்வர். மற்றையோர் எவரும் வரக்கூடாது'' என்பது இத்திருக்கோயிலில் இப்பைரவர் சந்நிதியில் தொன்று தொட்டு இருந்துவரும் ஐதீகமாகும்.

சித்திரை முதல் வெள்ளியன்று இவருக்குத் தங்க அங்கி சார்த்தப் படுகிறது. அடுத்த உள்பிராகாரத்தில் சூரியன், மகாலட்சுமி, வீரபத்திரர், உற்சவமூர்த்தங்கள், அகத்தியலிங்கம், மகாவிஷ்ணு, துர்க்கைச் சந்நிதி, கொன்றைமரம் முதலிய சந்நிதிகள் உள்ளன. நடராசசபை மிக அழகாக வுள்ளது. சுவரின் வெளிப்புறத்தில் வண்ணத்தில் பதஞ்சலி முதலானோர் உருவங்கள் எழுதப்பட்டுள்ளன. இங்குப் பெருமான் ஆடும் நடனம் கௌரிதாண்டவமாகும். இச்சபையில் வெளியில் உள்ள சிற்ப வேலைப் பாடுடைய ஐந்து கற்றூண்களும் இசைத் தூண்களாக அமைந்துள்ளன. சிற்பங்களைத் தட்டினால் மெல்லிய ஓசை எழுகின்றது.

மூலவர் சந்நிதி முகப்பில் நால்வர் திருமேனிகளும், பொல்லாப் பிள்ளையாரும், நர்த்தன விநாயகரும் ஒருபுறமும்; வள்ளி தெய்வ யானை உடனாய சுப்பிரமணியர், திருமுறைக்கோயில் மறுபுறமும் உள்ளன. சுதையாலான துவாரபாலகர்கள். உள்ளே விசாலமான மண்டபம். மூலவர்-சிவலிங்கத் திருமேனி-கிழக்கு நோக்கிய சந்நிதி. சதுரபீடமான ஆவுடையார். அக்கினி நட்சத்திரக் காலத்தில் தாரா பாத்திரம் வைக்கப்படுகின்றது. ''திருத்தளியான்காண் அவன் என் கண்ணுளானே''-அப்பரின் அமுதவாக்குடன் தரிசிப்போர்க்கு அமைதி கிடைக்கிறது. இங்கும் பிரான்மலையில் உள்ளது போலவே நவக்கிர கங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன. அம்பாள் ஆலயம் மிகவும் விசால மானது. கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம். சண்டிகேஸ்வரி சந்நிதி உள்ளது. சுற்றி வலம்வர பிரகாரம் உள்ளது. காமிக ஆகமப்படிப் பூஜைகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் வைகாசியில் பெருவிழா நடைபெறுகிறது. இத்திருக்கோயில் குன்றக்குடி (திருவண்ணாமலை) ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயிலாகும்.

''பாங்கு நல்ல வரி வண்டிசை பாடத்
தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
ஓங்கு கோயில் உறைவார் அவர் போலும்
தாங்கு திங்கள் தவழ் புன் சடையாரே''.

(சம்பந்தர்)

Koviloor Digital Library

''மின் காட்டுங் கொடி மருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்பு வலிச்சிலைக் கையோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும் புறவில் திருப்புத்தூரின்
திருத்தளி யான்காண் அவன் என் சிந்தையானே''.

(அப்பர்)

- ''முற்றுகதி
இத்தூரமன்றி இனித்தூரமில்லையெனப்
புத்தூர் வரும் அடியார் பூரிப்பே'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. திருத்தளிநாதர் திருக்கோயில்
திருப்புத்தூர் & அஞ்சல் - 623 211
சிவகங்கை மாவட்டம்.

251/7. திருப்புனவாயில்

திருப்புனவாசல்



Koviloor Digital Library

பாண்டியநாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் திருப்புனவாசல் என்றாகியுள்ளது. அறந்தாங்கி ஆவுடையார் கோயில், திருவாடானை முதலிய ஊர்களிலிருந்து இத்தலத்திற்கு வரலாம். விருத்தபதி, விருத்தகாசி, இந்திரபுரம், பிரமபுரம், வச்சிரவனம், கைவல்யஞானபுரம், தட்சிணசிதம்பரம் என்பன வேறு பெயர்கள். ஊர்ப்பக்கத்தில் பாம்பாறு (சர்ப்பநதி) ஓடுகிறது. பக்கத்தில் கடல்-பாண்டிய நாட்டு தலங்கள் 14ம் இங்கிருப்பதாக ஐதீகம். இதனால் கோயிலுள் 14 சிவலிங்கங்கள் உள்ளன. வேதங்கள் வழிபட்ட தலம்.

இறைவன் - விருத்தபுரீஸ்வரர், பழம்பதிநாதர், மகாலிங்கேஸ்வரர்.

இறைவி - பிருகந்நாயகி, பெரியநாயகி.

தலமரம் - (1) சதுரக்கள்ளி (2) குருந்து(3) மகிழம்(4) புன்னை

தீர்த்தம் - இந்திரதீர்த்தம் முதலாகவுள்ள பத்து தீர்த்தங்கள்.

சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

மிகப்பெரிய கோயில். ஊர்நடுவில் கிழக்கு நோக்கியுள்ளது. நீண்ட மதில்கள். கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள். கிழக்கில் இருவாயில்கள் சுவாமி அம்பாள் சந்நிதிகளுக்கு நேராகவுள்ளன. சுவாமி கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. அம்பாள் எதிரில் உள்ள மொட்டைக் கோபுர வாயிலில் குடவறையில் காளி எழுந்தருளியிருப்பதால், அத்தெய்வம் மிகச்சக்தி வாய்ந்ததாகையால் இக்கதவு எப்போதும் மூடப்பட்டிருக்கிறது.

கோயிலுக்கு வெளியில் உள்ள தீர்த்தம்-பிரமதீர்த்தம். அழகான படிகளை நாற்புறமும் பெற்றுள்ளது. உள்ளே முதலாம், ஏழாம் திருநாள் மண்டபங்கள் உள்ளன. கோபுரத்திற்கு வெளியில் தென்பால் வல்லப கணேசர் சந்நிதியும், வடபால் தண்டபாணி சந்நிதியும் இருக்கின்றன. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் வலப்பக்கம் சூரிய, பைரவர் சந்நிதிகளும், இடப்பால் சந்திரன் சந்நிதியும் மேற்கு நோக்கியுள்ளன. சபாமண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபங்கள் உள்ளன.

மூலவர் சிவலிங்கத் திருமேனி அழகானது. மிகப் பெரியது. தஞ்சை பிரஹதீஸ்வரருக்கு அடுத்தபடி பெரிதாக உள்ள இலிங்க மூர்த்தி இதுவாகும். இதனையொட்டி 'மூன்றுமுழமும் ஒருசுற்று முப்பது முழமும் ஒருசுற்று' என்ற பழமொழி வழங்குகிறது. (சுவாமிக்கு 3 முழம், ஆவுடையாருக்கு 30 முழம் ஆடைவேண்டும்). உயரம் 9 அடி. சுற்றளவு $8\,^1/_2$ அடி. ஆவுடையார் சுற்றளவு 33 அடி. கோமுகி $3\,^1/_2$ அடி நீளம்.

Koviloor Digital Library

நந்தியும் பெரியதே. மகாமண்டபத்தில் வடபால் நடராசர் உற்சவ மூர்த்தியும், தென்பால் சோமாஸ்கந்தர், நால்வர், சேக்கிழார் ஆகியோர் காட்சி தருகின்றனர்.

சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித்தனி கோயில்கள். ஆலயத்தில் ஐந்து விநாயகர்கள், சதுர்முகலிங்கம், கபிலபுத்திரர் ஒன்பதின்மர் ஆகியோரின் உருவங்கள் உள. இந்திரன் வழிபட்ட விநாயகர் ''ஆகண்டல விநாயகர்'' தனியே உள்ளார். (ஆகண்டலன் = இந்திரன்). கோஷ்ட மூர்த்தமாக நிருத்த கணபதியும் தட்சிணாமூர்த்தியும் உளர்.

மேற்கு பிராகாரத்தில் குருந்த மரமுள்ளது. மதிலையொட்டி அகத்தியலிங்கம் (முனீசுவரர்) உள்ளது. இவருக்குத் திங்கட்கிழமை களில் மட்டுமே பூஜை. கோஷ்ட மூர்த்தமாகப் பொதுவாக ஆலயங் களில் (கர்ப்பக்கிருகப் பின்சுவரில்) இடம் பெறும் இலிங்கோற் பவருக்குப் பதிலாக இங்கு திருமாலும் அநுமனும் காட்சி தருகின்றனர். நான்முகன் சந்நிதியும் உள்ளது. அம்பாள் ஆலயம் தனிக்கோயில்.

இத்தலத்தில் திருமால், பிரமன், இந்திரன், சூரியசந்திரர், எமன், ஐராவதம், வசிட்டர் முதலிய முனிவர்கள், அகத்தியர், சௌந்திர பாண்டியன் முதலியோர் வழிபட்டுப் பேறடைந்துள்ளனர். சக்தி வாய்ந்த குடவறைக் காளியை யொட்டி இப்பகுதியில் பெரும் பாலோர்க்கு காளியப்பன், காளியம்மாள் எனும் பெயர்கள் வழங்கப் படுகின்றன. இத்திருக்கோயிலில் உள்ள நடராஜ சபை **சிவஞான சபை** எனப்படுகிறது.

தீர்த்தங்களின் பெயர்களும் இருக்குமிடங்களும்:-

(1) இந்திரதீர்த்தம்-கோயில் சந்நிதிக்கு எதிரில் சற்று தொலைவில்

(2) பிரம தீர்த்தம்-கோபுரவாயிலுக்கு வெளியில் தென்பால்

(3) சக்கர தீர்த்தம்-தெற்கு மேற்கு வீதிகள் கூடுமிடம்

(4) சூரிய தீர்த்தம்-அம்பாள் சந்நிதிக்குக் கிழக்கில்

(5) இலக்குமி தீர்த்தம்-சூரிய தீர்த்தத்திற்கு மேற்கில்

(6) சந்திர தீர்த்தம்-பிரமதீர்த்தத்திற்குக் கிழக்கில்

(7) பாம்பாறு-கோயிலுக்குத் தென்பால் ஓடும் ஆறு (நாகநதி, அரவநதி, சர்ப்பாறு)

(8) வருணதீர்த்தம்-ஊருக்குப் பக்கத்திலுள்ள ''தீர்த்தாண்ட தானம்'' என்னும் ஊருக்கருகிலுள்ள கடல்.

(9) கல்யாண தீர்த்தம்-ஊருக்குச் சற்றுத்தூரத்தில் உள்ள கல்யாணபுரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

(10) சிவகங்கைத் தீர்த்தம்-தெற்கு, கீழவீதிகள் கூடுமிடம்.

தலமரங்களுள்:- (1) புன்னை, மகிழ், குருந்து ஆகிவை கோயிலுக் குள்ளும், (2) சதுரக்கள்ளி குடவறைக்காளியின் சந்நிதியின் பக்கத்திலும் உள்ளன. அம்பாளுக்கு அழகிய சிறியதேர் உள்ளது.

இத்தலபுராணம் திருவாரூர் தியாகராஜ கவிராயரால் பாடப் பட்டுள்ளது. பாண்டிய மன்னர்களின் காலத்திய கல்வெட்டுக்கள் ஐந்து இத்தலத்தில் கண்டெடுக்கப்பட்டுப் படியெடுக்கப்பட்டுள்ளன. நித்திய பூஜைகளும் உற்சவங்களும் முறையாக நடைபெறுகின்றன. இறை வனைக் கல்வெட்டுச் செய்தி ''திருப்புனவாசலுடைய நாயனார்' என்ற பெயரால் குறிக்கின்றது. 5.9.1998ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

'மின்னியல் செஞ்சடை வெண்பிறையன் விரிநூலினன்
பன்னிய நான்மறை பாடியாடிப் பல வூர்கள் போய்
அன்னம் அன்னந் நடை யாளோடும் அமரும் இடம்
புன்னை நன்மாமலர் பொன்னுதிர்க்கும் புனவாயிலே.'

(சம்பந்தர்)

''சித்த நீ நினை என்னொடு சூளறும் வைகலும்
மத்த யானையின் ஈர்உரி போர்த்த மணாளன் ஊர்
பத்தர் தாம் பலர் பாடி நின்றாடும் பழம்பதி
பொத்திலாந்தைகள் பாட்டறாப் புனவாயிலே.'' *(சுந்தரர்)*

''அத்தனே போற்றி அகில காரணமாம்
　　அம்பிகை பாகனே போற்றி
முத்தனே போற்றி ஐந்தொழிலினையும்
　　முடித்திடு மூலமே போற்றி
நித்தனே போற்றி அறிவினுக்கறிவாய்
　　நிறைந்தருள் நிமலனே போற்றி
மத்தனே போற்றி வச்சிர வனத்தின்
　　வாழுமா இலிங்கமே போற்றி.'' *(தலபுராணம்)*

''நயந்தரு பரையாய் ஆதியாய் இச்சை
　　ஞானமாய்க் கிரியையாய் நம்பற்
கியங்குறுமேனி யணி படைக் கலமற்
　　றெவையுமாய் மூவகை யாகத்
தயங்கு மான் மாவின் வாழ்க்கைமுன்முத்தி
　　தமக்குமோர் காரணமாகி
வயங்குறு புனவைப் பெரியநாயகி நின்
　　மலரடித் துணை மனத் துணையே.'' *(தலபுராணம்)*

Koviloor Digital Library

'கார் கொண்ட பைங்குழற் கணை கொண்ட துணைவிழிக்
கமலை பணி விமலை யம்பொன்
வார் கொண்ட கும்பமுலை மலைவல்லி படர்பவன
வரைதந்த தந்தி வதனன்
சீர்கொண்ட தேவர்பணி மூவரும் பணிவிடைகள்
செய்யவரு உய்ய புகழ்சேர்
பார்கொண்ட தென்புனவை ஆகண்டலப்பிள்ளை
பாதமுடி மீது புனைவாம்'

(தலபுராணம்)

அஞ்சல் முகவரி:-

அ/மி. விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில்
திருப்புனவாசல் & அஞ்சல் 614629.
(வழி) பொன் பேத்தி
ஆவுடையார் கோயில் - வட்டம்
புதுக்கோட்டை மாவட்டம்.

252/8. இராமேஸ்வரம்

Koviloor Digital Library

பாண்டிய நாட்டுத் தலம்.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் யாத்ரிகர்கள் வந்து தரிசித்துச் செல்லும் புண்ணியத் தலம்.

சென்னை - இராமேஸ்வரம் இருப்புப்பாதை உள்ளது. பேருந்தில் வருவோர் முன்னர் மண்டபத்தில் நிறுத்திவிட்டு, புகைவண்டி மூலம் பாம்பன் பாலம் கடந்து இத்தலத்தையடைய வேண்டும். தற்போது கடலின் மேலே பாலம் கட்டப்பட்டு அது பூர்த்தியாகிவிட்டதால் கோயில் வரை எல்லா வாகனங்களும் செல்ல மிகவும் வசதியாக இருக்கிறது.

இத்தலம் பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாகும்.

இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமன் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம். கயிலையிலிருந்து அநுமன் கொண்டுவர, காலந்தாமதமாக, சீதை மணலால் அமைத்த லிங்கத்தை இராமர் வழிபட்டார். இம்மூர்த்தியே இராமநாத சுவாமி ஆவார். காலந் தாழ்ந்து அநுமன் கொண்டு வந்த லிங்கம் (விசுவலிங்கம்) பக்கத்தி லேயே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சிறந்த, புண்ணிய யாத்திரைத் தலம்.

தனுஷ்கோடி - சேது இத்தலத்தையடுத்துள்ளது. இங்கு வந்து மூழ்கினால்தான் காசி யாத்திரை பூர்த்தியாகும் என்பது மரபு. பல்லாண்டு களுக்கு முன்னால் வீசிய புயலால் தனுஷ்கோடி இடம் அழிந்து போயிற்று. இப்போது அங்குச் செல்வோர் மிகக்குறைவு. அங்குக் கடல் சங்கமம் தவிர வேறொன்றுமில்லை. இத்தலம் ஒரு தீவு. பாம்பன் பாலம் அற்புதமான அமைப்புடையது. இப்பாலம் பாம்பனையும், மண்ட பத்தையும் இணைக்கிறது.

இங்குள்ளவர்கள் பெரும்பாலோர் இக்கோயிலையே நம்பி வாழ்கின்றனர். கடற்பகுதி 'அக்கினி தீர்த்தம்' என்றழைக்கப்படுகிறது. இக்கரையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடத்தின் கிளை மடமும்; சந்நிதி வீதியில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் கிளை மடமும் உள்ளன. மற்ற மடங்களின் கிளை களும், ஏராளமான சத்திரங்களும் கோயிலைச் சுற்றியுள்ளன.

இத்திருக்கோயிலின் நீண்டு அகன்ற பிராகாரங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை. மூன்றாவது வெளிப் பிராகாரம் மிக நீளமானது என்னும் சிறப்பினைப் பெற்றது. வெளிப்பிராகாரத்தில் 1200 தூண்கள் உள்ளன. கலையழகு மிக்க இக்கோயிலின் சிறப்பு அளவிடற்கரியது.

Koviloor Digital Library

இக்கோயிலின் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமானவர்கள் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களேயாவர். இம்மன்னர்கள் பலரும் அவரவர் காலங்களில் திருப்பணிகளைச் செய்து இக்கோயிலைக் கட்டி வளர்த்து வந்துள்ளனர்.

இறைவன் - இராமநாதசுவாமி, இராமலிங்கேஸ்வரர்

இறைவி - பர்வத வர்த்தினி, மலைவளர்காதலி

தீர்த்தம் - கோயிலுக்குள்ளே உள்ள 22 தீர்த்தங்களும் கோயிலுக்கு வெளியே 22 தீர்த்தங்களும் (வெளியிலுள்ள 22 தீர்த்தங்கள் தேவிபட்டினம், திருப்புல்லாணி, பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம் முதலிய இடங்களில்) உள்ளன.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

மிகப்பெரிய கோயில். உயர்ந்த கோபுரங்கள், மூல லிங்கத்தையும் கருவறையையும் அம்பிகைக் கோயிலையும் கி.பி. 12 - ஆம் நூற்றாண்டில் இலங்கை மன்னர் 'பராக்கிரமபாகு' என்பவன் கட்டியதாகச் சான்றுகள் இருப்பதாகத் தலவரலாறு கூறுகின்றது.

தேவஸ்தானம், யாத்ரிகர்களுக்கு மிகச் சிறப்பான வசதிகளைச் செய்து தருகின்றது. பலவகைகளில் தங்கும் விடுதிகள் பலவுள்ளன. இராமநாத சுவாமி சந்நிதியிலுள்ள இலிங்கம் சீதையால் அமைக்கப் பட்டது. அநுமன் கொண்டு வந்த மூர்த்தம் விசுவலிங்கம், முதற் பூசை இச்சந்நிதியில்தான் தொடங்குகிறது. அம்பாள் சந்நிதியில் உள்ள ஸ்ரீ சக்கரம் தரிசிக்கத்தக்கது. இக்கோயிலில் உள்ள சேது மாதவர் சந்நிதி சிறப்பானது.

இக்கோயிலுக்கு வடக்கில் 2 கி.மீ. தொலைவில் 'கந்த மாதன பர்வதம்' உள்ளது. இங்குள்ள இருபாத சுவடுகள் 'இராமர் பாதம்' எனப்படுகின்றன. இங்குள்ள தீர்த்தம் ஜடா தீர்த்தம் எனப்படும். கோதண்டராமர் கோயில் சேது (தனுஷ்கோடி) ஸ்நான கட்டத்திற்குச் செல்லும் வழியில் - 5 கி.மீ. தொலைவில் உள்ளது. நாடொறும் ஆறு கால பூசைகள் முறையாக நியமப்படி நடைபெறும். இத்திருக்கோயிலில் எல்லாச் சிறப்பு விழாக்களும் நடைபெறுகின்றன. சிவராத்திரி அபிஷேகங்கள், திருக்கல்யாண உற்சவம், தெப்போற்சவம், வாராந்திரத் தங்கப் பல்லக்குப் புறப்பாடு (வெள்ளிக்கிழமைகளில்) வசந்தோற்சவம் இராமலிங்கப் பிரதிஷ்டை விழா முதலியவை சிறப்புடையவை.

Koviloor Digital Library

இத்தலபுராணம் நிரம்ப அழகிய தேசிகரால் (சேது புராணம்) பாடப்பட்டுள்ளது. சொக்கநாதப் புலவர் **'தேவையுலா'** பாடியுள்ளார்.

கிழக்குக் கோபுரம் பிரதான வாயில். பிரதான வாயில் முகப்பில் உள்ள சேதுபதி மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் உடையது. உட்புகும்போது ஆஞ்சநேயர் சந்நிதி உளது. உள்ளே சென்றால் பெரிய சுதையாலான நந்தி தரிசிக்கத்தக்கது. இருபுறமும் மதுரை அரசர்களான விசுவநாத நாய்க்கர், கிருஷ்ணப்ப நாய்க்கர் உருவங்கள் உள்ளன. கோயிலுக்குள் உள்ள தீர்த்தங்கள் அனைத்தும் கிணறுகள் வடிவில் உள்ளன. நீரை முகந்து எடுத்தே நீராட வேண்டும். அக்கினி தீர்த்தத்தில் (கடலில்) நீராடி, நேரே கோயிலுக்குள் வந்து முறையாக-வரிசையாக எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடுவர். கோயில் பிராகாரங்களில் நீராடிச் சுற்றுவோர் கூட்டமும் தண்ணீர் ஈரமும் எப்போதும் இருக்கும்.

மூலவர் சிவலிங்க மூர்த்தி. சிறிய திருமேனி, கங்கா ஜலம் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. பண்டாக்கள் பூஜைகளைச் செய்கின்றார்கள். அம்பாள் சந்நிதி வலப்பால் உள்ளது. நின்ற கோலம் - அழகான திருமேனி - தனிக்கோயில்.

இத்திருக்கோயிலில் உள்ள பிற சந்நிதிகள் வருமாறு:-

1. விசுவநாதர், விசாலாட்சி

2 பள்ளிகொண்ட பெருமாள்

3. சந்தான கணபதி 4. மகாகணபதி 5. முருகர் 6. சேதுமாதவர் 7. சபாபதி (நடராசர்) 8. ஆஞ்சநேயர்9. மகாலட்சுமி 10. நந்திதேவர் முதலியன.

இங்குள்ள தீர்த்தங்களுள் உயர்வானது 'கோடி' தீர்த்தமாகும். இஃது கிணறு வடிவில் உட்புறத்தில் அமைந்துள்ளது. நீராடுவோர் வெளியே இருந்து தீர்த்தத்தை ஏற்றுக்கொள்ள கோமுகம் அமைக்கப்பட்டுள்ளது.

'காசி - இராமேஸ்வரம்' என்னும் பேச்சு வழக்கிலிருந்து இத்தலத்தின் மேன்மையை அறியலாம். வாழ்நாளில் ஒவ்வொருவரும் இவ் யாத்திரையைத் தவறாமல் பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு செல்வோர் முதலில் இராமேஸ்வரம் வந்து கடல் நீராடி இராமநாதரைத் தொழுது, இங்கிருந்து (கடல்) மண்ணையெடுத்துக் கொண்டு - காசி சென்று, கங்கையிற் கரைத்து, கங்கையில் நீராடி விசுவநாதரைத்

Koviloor Digital Library

தொழுது கங்கை நீருடன் திரும்பவும் இராமேஸ்வரம் வந்து இராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்து வணங்கியே யாத்திரையைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதுவே முறையானது. (கோயில் மிகப் பெரிய தாதலின் பிற விவரங்களையும் சந்நிதிகளையும் நேரில் தரிசிக்கும்போது கேட்டும் கண்டும் பேறு பெறலாம்.)

தேவியை வவ்விய தென்னிலங்கைத் தச மாமுகன்
பூவியலும் முடி பொன்றுவித்த பழி போய் அற
ஏ(வு) இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல் வினை வீடுமே.

(சம்பந்தர்)

கோடி மாதவங்கள் செய்து, குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்கரத்தால் எறிந்து, பின் அன்பு கொண்டு
தேடி மால் செய்த கோயில் திருஇரா மேச்சுரத்தை
நாடி வாழ் நெஞ்சமே! நீ நன்னெறி ஆகும் அன்றே.

(அப்பர்)

திருப்புகழ்

வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே, பணிக்கும் வகை அறியாதே
மானார் வலைக் கண் அதி லே, தூளி மெத்தையினில்
ஊடே அணைத்(து) உதவும் அதனாலே
தேனோடு, மருப்பில் எழு பாகேர, இதற்(கு) இணைகள்
ஏதோ எனக் கலவி பலகோடி
தீரா மயக்கினொடு, நாகா படத்தில் எழு
சேறாடல் பெற்ற துயர் ஒழியேனோ?
மேனாடு பெற்றுவலர் சூராதி பற்(கு) எதிரின்
ஊ(டு) ஏகி நிற்கும் இரு கழலோனே!
மேகார உக்ர பரி தான் ஏறி, வெற்றிபுனை
வீரா! குறச் சிறுமி மணவாளா!
ஞானா பரற்(கு) இனிய வேதாக மப்பொருளை
நாணாது உரைக்கும் ஒரு பெரியோனே!
நாராயணற்கு மருகா! வீறு பெற்றிலகு
ராமேச்சு ரத்திலுறை பெருமாளே!

Koviloor Digital Library

தாயுமானவர் பாடல்

பதியுண்டு, நிதியுண்டு, புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண்(டு), எக்காலமும்
பவிசுண்டு, தவிசுண்டு திட்டாந்தம் ஆக யம
படர் எனும் திமிரம் அணுகாக்
கதியுண்டு, ஞானமாம் கதிருண்டு, சதிருண்டு
காயசித் திகளும் உண்டு;
கறையுண்ட கண்டர்பால், அம்மை! நின்தாளிற்
கருத்(து) ஒன்றும் உண்டாகுமேல்;
நதியுண்ட கடலெனச் சமயத்தை உண்டபர
ஞான ஆநந்த ஒளியே;
நாதாந்த ரூபமே; வேதாந்த மோனமே!
நான் எனும் அகந்தை தீர்த்(து)என்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே!
மது சூதனன் தங்கையே!
வரை ராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப் பெண் உமையே!

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
புராந்தகி, த்ரியம்பகி, எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனோதீத நாயகி, குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே
நான் உச்சரிக்க வசமோ?
ஆரணி, சடைக்கடவுள் ஆரணி எனப் புகழ,
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியும் இரு கொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை அரசே!
வரை ராஜனுக்(கு) இரு கண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப் பெண் உமையே!

Koviloor Digital Library

தெய்வ கணபதி துதி

வேணிமுடிப் பகீரதிநீர் புழைக்கை வாங்கி விடுத்(து)
அயன்வெண் தலையுருட்டி, மிளிர்வெண் கோட்டால்
கோண்இளைய மதிக்குழவி உழுது, மேருக்
கொடுமுடியிற் கிளைத்த எண்தோள் குழையத் தாக்கி,
தாள்நெடிய விடைமுனிந்து, கயிலை முக்கண்
தாதையொடும் விளையாடித் தன்பால் அன்பர்
மாண்நிலவு மனத்தறி நின்(று) உலவும் தெய்வ
வாரணத்தை நினைத்திறைஞ்சி வழுத்தல் செய்வாம்.

(சேதுபுராணம்)

- 'சித்தாய்ந்து
நாம் ஈசராகும் நலம்தரும் என்று உம்பர்தொழும்
ராமீசம் வாழ் சீவரத்தினமே'.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. இராமநாதசுவாமி திருக்கோயில்
இராமேஸ்வரம் & அஞ்சல் - 623526.

253/9. திருஆடானை

திருவாடானை

பாண்டிய நாட்டுத் தலம்.

காரைக்குடியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள தலம். தேவகோட்டையிலிருந்து 10 கி.மீ. தொலைவு. தேவகோட்டை வந்து திருவாடனை வரவேண்டும். காரைக்குடியிலிருந்தும் தேவகோட்டையிலிருந்தும் அடிக்கடி பேருந்துகள் உள்ளன.

மிகப் பழமையான ஆலயம். வருணன் மகன் வாருணிதுருவாசரைப் பழித்தமையால் ஆனை உடலும் ஆட்டுத் தலையுமாய் இருந்து இங்கு வழிபட்டுச் சாப விமோசனம் பெற்ற தலம்.

(ஆடு + ஆனை = ஆடானை)

Koviloor Digital Library

இறைவன் - ஆதிரத்னேஸ்வரர், அஜகஜேஸ்வரர்.

இறை - சிநேகவல்லி, அன்பாயிரவல்லி.

தலமரம் - வில்வம்

தீர்த்தம் - க்ஷீரகுண்டம், வருணதீர்த்தம், அகத்தியதீர்த்தம், சூரியதீர்த்தம், மார்க்கண்டேயதீர்த்தம் முதலானவை.

சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலத்தின் வேறு பெயர்கள் - பாரிசாதவனம், வன்னிவனம், வில்வவனம், ஆதிரத்னேஸ்வரம், மார்க்கண்டேயபுரம், கோமுத்தீசம், விஜயேச்சரம் என 12 பெயர்கள் சொல்லப்படுகின்றன.

இத்திருக்கோயிலின் கோபுரம் மிக மிக உயரமானது. மநு, மாந்ததா, அர்ச்சுனன், வருணன், காமதேனு, சூரியன், அகத்தியர் வாருணி முதலியோர் வழிபட்ட சிறப்புடையது. அருணகிரியார் இத்தலத்துப் பெருமானைப் பாடியுள்ளார். ராஜகோபுரம் ஒன்பது நிலைகளை பெற்று 130 அடி உயரமுடன் கம்பீரமாகக் கிழக்கு நோக்கியுள்ளது. விநாயகர், முருகன், சோமாஸ்கந்தர், இலக்குமி சந்நிதிகள் உள்ளன. நடராசசபை உள்ளது. அம்பாள் கிழக்கு நோக்கிய திருக்கோலம்-சதுர்ப்புஜக் காட்சி.

மூலவர்-சிவலிங்கத்திருமேனி, ரத்னேஸ்வரர் தரிசனம், இம்மூர்த்தி நீலக்கல்லில் ஆவுடைசேர்க்கப்பட்டுக் காட்சி தருகிறார். நீல நிற ரத்தினத்தால் இம்மூர்த்தியைச் செய்து சூரியன் வழிபட்டதாக வரலாறு சொல்லப்படுகிறது. இக்கோயில் இராமநாதபுரம் ராஜா சேதுபதி குடும் பத்தினரின் பரம்பரை அறங்காவலர் ஆட்சிக்குட்பட்டதாக விளங்கு கிறது. தற்போதுள்ள இராமநாதபுரம் இராணி திருமதி. இந்திராதேவி அவர்களே பரம்பரை அறங்காவலராக உள்ளார்.

நாடொறும் ஆறுகால பூசைகள் முறையாக நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்தில் பெருவிழா பத்து நாள்களும் ஆடிப்பூர உற்சவம் 15 நாள்களும் நடைபெறுகின்றன. ஆடிசுவாதி, திருக்கல்யாணத்தபசு முதலிய விழாக்களும் விசேஷமானவை.

தலபுராணம் திருவாரூர் சாமிநாத தேசிகரால் பாடப்பட்டுள்ளது. மாசி மாதத்தின் பிற்பகுதியில் சுவாமி, அம்பாள் திருமேனிகளில் சூரிய கிரணங்கள் படுவது அற்புதமான காட்சியாகும். அண்மையில் உள்ள தலங்கள் திருப்புனவாயில், தேவிபட்டணம் முதலியன.

Koviloor Digital Library

''மங்கை கூறினன் மான்மறியுடை
அங்கையானுறை ஆடானை
தங்கையாற்றெழு தேத்த வல்லவர்
மங்குநோய் பிணிமாயுமே''.

(சம்பந்தர்)

திருப்புகழ்

ஊனாறு முட்பிணியு மானாக வித்தவுட
லூதாரி பட்டொழிய வுயிர்போனால்
ஊரார் குவித்துவர ஆவாவெனக் குறுகி
ஓழா முழக்கமெழ அழுதோய
நானா விதச்சிவிகை மேலே கிடத்தியது
நாறா தெடுத்தடவி யெரியூடே
நாணாமல் வைத்துவிட நீறாமெனிப்பிறவி
நாடா தெனக்குன் அருள் புரிவாயே
மானாகத்துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்
ஆனா வரக்கருடன் வானார் பிழைக்கவரு
மாலால முற்றவமு தயிவோன்முன்
ஆசார பத்தியுடன் ஞானா கமத்தையருள்
ஆடானை நித்தமுறை பெருமாளே.

-''பூமீது
நீடானைசூழு நிலமன்னர் வாழ்த் துதிரு
வாடானைமேவு கருணாகரமே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அஜகஜேஸ்வரர் திருக்கோயில்
திருவாடானை & அஞ்சல் - 623407
திருவாடானை வட்டம் - இராமநாதபுரம் மாவட்டம்.

தலம் – 49

Koviloor Digital Library

254/10. திருக்கானப்பேர் - திருக்கானப்பேரூர்

காளையார் கோயில்



பாண்டிய நாட்டுத் தலம்.

சிவகங்கை சமஸ்தானத்தின் கோயில், தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தினரால் கோயில் திருப்பணி செய்யப்பட்டது. நீராழி மண்டபமும் கட்டப்பெற்றது. அவர்களுடைய கட்டளையில் 6 காலபூசைகளும் நடைபெறுகின்றன. இத்தலம் தற்போது காளையார் கோயில் என்று வழங்குகிறது.

1) சென்னை-இராமேஸ்வரம்; திருச்சி - மானாமதுரை இருப்புப் பாதைகளில் உள்ள நாட்டரசன் கோட்டை இருப்புப்பாதை நிலையத்தில் இறங்கி அண்மையிலுள்ள இத்தலத்தையடையலாம்.

2) சிவகங்கை, தேவகோட்டை, மதுரை ஆகிய ஊர்களிலிருந்தும் இத்தலத்திற்குப் பேருந்து வசதிகள் உள்ளன. இறைவன் காளை வடிவங்கொண்டு கையிற் பொற்செண்டும் திருமுடியில் சுழியுங் கொண்டு சுந்தரருக்குக் காட்சி தந்து யாம் இருப்பது கானப்பேரூர் என்று கூறி ஆற்றுப்படுத்திய தலம்.

ஐராவதம் வழிபட்டது. தக்ஷிணகாளிபுரம், சோதிவனம், மந்தாரவனம், மோக்ஷப்பிரதம், அகத்தியக்ஷேத்ரம், காந்தாரம், தவசித்திகரம், தேவதாருவனம், பூலோக கைலாசம், மகாகாளபுரம் என்பன வேறு பெயர்கள். சங்ககாலத்தில் கானப்பேரெயில் என்ற பெயருடன்

Koviloor Digital Library

விளங்கிய இத்தலம் உக்கிரப்பெருவழுதியின் கோட்டையாகத் திகழ்ந்தது. இத்திருக்கோயிலில் மூன்று சந்நிதிகள் உள்ளன.

1) காளீஸ்வரர் - சொர்ணவல்லி.

2) சோமேசர் - சௌந்தர நாயகி.

3) சுந்தரேசர் - மீனாட்சி.

சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

முதல் சந்நிதி நடுவிலும், இரண்டாவது வலப்புறத்தும், மூன்றாவது இடப்புறத்தும் உள்ளன. தேவாரப்பாடல் பெற்றவர் காளீஸ்வரரே. இவர் பெயரில்தான் நிலபுலன்கள் உள்ளன. இப்பகுதியில் இம்மூன்று சந்நிதிகளையொட்டி வழங்கும் பழமொழி: **''காளைதேட - சோமர் அழிக்க - சொக்கர் சுகிக்க''** என்பதாகும். விழாக் காலத்தில் வீதியுலா வருபவர் சோமேஸ்வரரே. படையல் நிவேதனம் முதலியவைகள் சொக்கருக்கு.

தீர்த்தம் - கஜபுஷ்கரணி (யானைமடு), சிவகங்கைக் காளி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், கௌரி தீர்த்தம், ருத்ர தீர்த்தம், லட்சுமி தீர்த்தம், சுதர்சன தீர்த்தம் முதலியன.

நீராழி மண்டபத்துடன்கூடிய பெரிய தெப்பக்குளம் - கஜபுஷ்கரணி தீர்த்தம் என்னும் யானைமடு. கோயிலின் எதிரில் மருதுபாண்டியர் சமாதி இருக்கிறது.

சோமேசர் சந்நிதிக்கு எதிரில் உள்ள பெரிய கோபுரம் மருதுபாண்டியரால் கட்டப்பெற்றது. இக்கோபுரத்தின் மீதேறிப் பார்த்தால் மதுரைக் கோபுரம் தெரியுமாம். இதையொட்டி ''மதுரைக் கோபுரம் தெரியக் கட்டிய மருதுபாண்டியன் வாராண்டி'' என்னும் கும்மிப் பாட்டும் இங்கு வழக்கில் உள்ளது. மருதுபாண்டியர் கோபுரத்தைக் கட்டியது மட்டுமன்றித் தம் உயிரையும் கொடுத்து அக்கோபுரத்தைக் காத்த செய்தி நம் நெஞ்சத்தை உருக்குவதாகும். அஃதாவது:- மருதுபாண்டியரை கைது செய்ய எண்ணிய ஆங்கிலேயர், அவர்கள் வந்து சரணடையாவிட்டால் இக்கோபுரத்தை இடித்துவிடப் போவதாகப் பறை சாற்றினர். காட்டில் திரிந்து வாழ்ந்து கொண்டிருந்த மருதுபாண்டியர் இதையறிந்து கோபுரத்தைக் காக்க விரும்பி உயிரைப் பொருட்படுத்தாமல் வந்து சரணடைந்து, வெள்ளையரால் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்றனர் என்பதாம். சிறியகோபுரம் வரகுண பாண்டியனால் கட்டப்பட்டது.

பண்டாசுர வதத்தின்பின் காளி இங்கு வந்து காளீசுவரை வழி பட்டுக் கரிய உருவம்மாறி சுவர்ணவல்லியாகி இறைவனை மணந்தாள்

Koviloor Digital Library

என்பது வரலாறு. நந்தியிடம் சாபம் பெற்ற ஐராவதம் இங்கு வந்து ஆனைமடு என்னும் தீர்த்தத்தில் நீராடிச் சோமேசரையும் காளீசு வரரையும் வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்றதாகவும் வரலாறு சொல்லப் படுகிறது. சுந்தரர், சேரமானுடன் திருச்சுழியல் தலத்தை வணங்கி, இரவு துயிலும்போது அவர் கனவில் காளைவடிவம் தாங்கிக் கையில் பொற் செண்டு பிடித்துத் திருமுடியில் சுழியும் அணிந்து காட்சிதந்து, ''யாம் இருப்பது கானப்பேர்'' எனக்கூறி மறைய, துயிலுணர்ந்த சுந்தரர், சேரர் பெருமானுடன் இத்தலத்திற்கு வந்து பணிந்து பதிகம் பாடிப் பரவினார்.

பதினோராந் திருமுறை திருக்கண்ணப்பர் திருமறம், கபிலதேவ நாயனார் சிவபெருமான் அந்தாதி, பரணதேவ நாயனார் அந்தாதி, திருவிளையாடற்புராணம் அருச்சனைப்படலம், அருணகிரியாரின் திருப்புகழ் முதலியவற்றில் இத்தலம குறிப்பிடப் பெறுகின்றது.

இத்தலத்துக் கல்வெட்டுக்கள் மூலம் - தளியிலார், தேவரடியார் முதலியோர்களைப் பற்றியும், ஆடல்வல்லோர்க்குத் 'தலைக்கோல்' பட்டம் அளிக்கப்பெற்ற செய்தியும் அறியமுடிகிறது.

நாடொறும் ஆறுகால வழிபாடுகள். இங்கு வேதாந்த மடாலயம் ஒன்று உள்ளது.

''பிடியெலாம் பின்செலப் பெருங்கை மா மலர்தழீஇ
விடியலேதடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம் பொழில் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ அடியரே.''

(சம்பந்தர்)

''தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
தூய மறைப் பொருளா நீதியை வார்கடனஞ்
சுண்டதனுக் கிறவா தென்று மிருந்தவனை
யூழிபடைத்தவனோ டொள்ளரியும் முணரா
அண்டனை அண்டர் தமக்காகமநூன் மொழியும்
மாதியை மேதகுசீ ரோதியை வானவர்தம்
கண்டனை அன்பொடு சென்றெய்துவ தென்று கொலோ
கார்வயல் சூழ் கானப் பெருறை காளையையே.''

(சுந்தரர்)

''சரதவேதம் பரவு புனவாயின கருந்தவசித்தர்
இரதவாதஞ் செய்து சிவனுருவங் கண்ட வெழினகரும்
வரதனாகி அரனுறையும் கானப்பேரு மலைமகளை
விரதயோக நெறிநின்று மணந்தார் சுழியல்
வியனகரும் *(திருவிளை, புரா - அர்ச். பட)*

Koviloor Digital Library

''கோலக் காதிற் குழையாலே - கோதிச் சேர்மைக் குழலாலே
ஞாலத்தாரைத் துயரே; செய் - நாரிக்காசைப் படலாமோ
மேலைத் தேவர்க் கரியோனே - வீரச் சேவற் கொடியோனே
காலப் பாசத் துயர் தீராய் கானப்பேரிற் பெருமாளே.''

(திருப்புகழ்)

பதினோராம் திருமுறை

முலைநலஞ்சேர் கானப்பேர் முக்கணா னென்னு
முலைநலஞ்சேர் மொய்சடையானென்னு - முலைநலஞ்சேர்
மாதேவா வொன்று வளர்கொன்றை வாய்சோர
மாதேவா சோரல் வளை.

(கபிலதேவர்)

நிலைத்திவ் வுலகனைத்து நீரேயாய் நின்றீர்
நிலைத்திவ் வுலகனைத்து நீரே - நிலைத்தீரக்
கானப்பே ரீகங்கை சூடினீர் கங்காளீர்
கானப்பே ரீகங்கை யீர்.

(பரணத்தேவர்)

-''சேடான
வானப் பேராற்றை மதியை முடிசூடுங்
கானப்பேரானந்தக் காளையே.''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. காளேஸ்வரர் திருக்கோயில்
காளையார் கோயில் & அஞ்சல் - 623 551
சிவகங்கை மாவட்டம்.

255/11. திருப்பூவணம்

பாண்டியநாட்டுத் தலம்.

பாண்டியநாட்டுத் தலங்களுள் மூவர் பாடலும் பெற்றது. இத் தலத்திற்கு மதுரையிலிருந்து செல்லலாம். இத்தலம் மதுரை - மானாமதுரை பாதையில் உள்ள புகைவண்டி நிலையம். இவ்வூர் (1) பழையூர் (2) புதூர் (3) கோட்டை (4) நெல் முடிக்கரை என நான்கு

Koviloor Digital Library

பகுதிகளாகவுள்ளது. இவற்றுள் 'கோட்டை' எனும் பகுதியில் திருக்கோயில் உள்ளது. குலசேகர பாண்டியன் இந்நகரில் முடிசூட்டிக் கொண்ட விழாவில் நெற்கதிரை முடியாகச் சூடிக்கொண்டான். எனவே இத்தலத்திற்கு நெல்முடிக்கரை என்ற பெயருண்டாயிற்று. வேறு பெயர்கள்:- புஷ்பவனகாசி, பிதுர்மோக்ஷபுரம், பாஸ்கரபுரம், லட்சுமிபுரம், பிரமபுரம், ரசவாதபுரம் என்பன. பொன்னனையாள் என்பவள் வாழ்ந்து சிவனடியார்களை உபசரித்த தலம். இவளுக்காக இறைவன் மகிழ்ந்து இரசவாதம் செய்த திருவிளையாடல் இத்தலத்தில் நிகழ்ந்ததே. இக்கோயிலில் உள்ள கொடுங்கைகள் மிகவும் அழகானவை.

பிரமன் வழிபட்ட பதி. வைகைக்கரையில் கோயில். இங்கு வைகையாறு வடக்கு நோக்கி - உத்தரவாகினியாகப் பாய்கிறது. எனவே இவ்விடம் மிகவும் விசேஷமானதாகும். இறந்தோரின் எலும்புகளை இங்குப் புதைப்பதால் அவர்கள் மேலான நற்கதியைப் பெறுகிறார்கள் என்பது மரபு. மூவர் பெருமக்களுக்கும் வைகை மணல் சிவலிங்கமாகத் தோன்றியமையால் மூவரும் மறுகரையிலிருந்தே - இத்தலத்தை மிதிக்க அஞ்சி - வணங்க, இறைவன் அவர்கள் தம்மை நேரே கண்டு வணங்குவதற்கு ஏதுவாக நந்தியை விலகச் செய்தருளினார் என்பது வரலாறு. இதனால் நந்தி சாய்ந்துள்ளதைக் காணலாம். வைகையின் மறுகரையிலிருந்து அவர்கள் தொழுத இடம் மூவர் மண்டபம் என்று வழங்குகிறது. (பழைய மண்டபம்) திருவாசகத்திலும், கருவூர்த் தேவரின் திருவிசைப்பாவிலும் இத்தலம் புகழப்படுகிறது.

இறைவன் - புஷ்பவனேஸ்வரர், பூவணநாதர்

இறைவி - சௌந்தரநாயகி, மின்னனையாள்

தலமரம் - பலா

மூவர் பாடல் பெற்றது.

இங்குள்ள நடராசமூர்த்தம் அற்புதமான வேலைப்பாடுடையது - பெரியது - அழகு மிக்கது. மூலவர் - சிவலிங்கத் திருமேனி - நிறைவான தரிசனம். அழகான மூர்த்தம். பொன்னனையாள் என்னும் ஒருத்திக்காக இறைவன் சித்தராக வந்து இரசவாதம் செய்து பொன் கொடுக்க, அவள் அதனால் சிவலிங்கம் அமைத்து, வழிபட, அது மிகவும் அழகாயிருப்பதைக் கண்டு ஆசையுடன் அத்திருமேனியை - சிவலிங்கத்தைக் கிள்ளி முத்தமிட்டாளாம். இவ்வாறு கிள்ளிய அடையாளம் சிவலிங்கத்தில் உள்ளதை இன்றும் காணலாம். கோயிலில் பொன்னனையாள், சித்தர் ஆகியோர் உருவங்கள் உள்ளன.

Koviloor Digital Library

நாடொறும் முறையாகப் பூஜைகள் நடைபெறுகின்றன. நல்ல பராமரிப்பு. பங்குனியில் பெருவிழா நடைபெறுகிறது. காசிக்குச் சமமான தலங்களுள் ஒன்றாக விளங்கும் இத்தலத்திற்குக் கந்தசாமிப் புலவர் தலபுராணம் பாடியுள்ளார். திருப்பூவணநாதர் உலாவும் மிகச் சிறப்பான நூல். கோனேரின்மைகொண்டான் குலசேகரதேவன் காலத்திய கல்வெட்டுக்கள் இத்தலத்திற்கு வேதபாராயணத்திற்கும், விழாக்களுக்கும் நிவந்தங்கள் அளித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன.

''நன்றுதீது என்று ஒன்றிலாத நான்மறையோன் கழலே
சென்று பேணி ஏத்த நின்ற தேவர் பிரான் இடமாம்
குன்றில் ஒன்றியோங்க மல்கு குளிர் பொழில் சூழ் மலர்மேல்
தென்றல் ஒன்றி முன்றிலாருந் தென்திருப் பூவணமே''

(சம்பந்தர்)

'வடிவேறு திரிசூலந்தோன்றும் தோன்றும்
வளர்சடை மேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில் வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திரு முடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே'.

(அப்பர்)

'எண்ணியிருந்து கிடந்து நடந்தும்
அண்ணல் எனாநினைவார் வினைதீர்ப்பார்
பண்ணிசையார் மொழியார் பலர் பாடப்
புண்ணியனார் உறை பூவணம் ஈதோ'

(சுந்தரர்)

-மோனருளே
பூவணமும் பூமணமும் போல அமர்ந்ததிருப்
பூவணத்திலானந்தப் பொக்கிஷமே.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. பூவணநாதர் திருக்கோயில்
திருப்பூவணம் & அஞ்சல் 623 611
இராமநாதபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

256/12. திருச்சுழியல்

திருச்சுழி

பாண்டிய நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் திருச்சுழி என்றும், கொச்சையாகத் திருச்சுளி என்றுமே வழங்குகிறது.

இராமநாதபுரம், பரமக்குடி அருப்புக்கோட்டை பேருந்துச் சாலையில் உள்ள தலம். அருப்புக்கோட்டையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. கோயில்வரை வாகனங்களில் செல்லலாம். மதுரை, மானாமதுரை, விருதுநகர் முதலிய ஊர்களிலிருந்தும் பேருந்து களில் செல்லலாம்.

விருதுநகர் - மானாமதுரை இருப்புப் பாதையில் உள்ள ரயில் நிலையம். இத்தலத்துக்குரிய வேறு பெயர்கள் - வயலூர், முத்திபுரம், ஆவர்த்தபுரம், சூலபுரம், அரசவனம், சுழிகை, சுழிகாபுரி என்பன.

சிவபெருமான் ஒருசமயம் பிரளயத்தைச் சுழித்துப் பூமிக்குள் புகச் செய்தார் ஆதலின் (திருச்)சுழியல் என்று பெயர் பெற்றது. மிகப் பழமையான தலம்.

இறைவன் - திருமேனிநாதர், சுழிகேசர், பிரளயவிடங்கர், தனுநாதர், மணக்கோலநாதர், கல்யாணசுந்தரர், புவனேஸ்வரர், பூமீஸ்வரர், (''செற்றார் திருமேனிப் பெருமானூர்'' என்பது இத்தலத்துத் தேவாரத் தொடர்)

இறைவி - துணைமாலையம்மை, சகாயவல்லி, சொர்ணமாலை, முத்துமாலையுமையாள், மாணிக்கமாலை.

தலமரம் - அரசு, புன்னை.

தீர்த்தம் - 1. பாவகரி நதி (கௌண்டின்ய ஆறு (அ) குண்டாறு)
2. கவ்வைக்கடல் (ஒலிப்புணரி)-சந்திதிக்கு எதிரில் உள்ளது.

இத்தீர்த்தம் சுந்தரர் தேவாரத்தில் சிறப்பிக்கப் பெறுகிறது. சிவபெருமான் பிரளயத்தைச் சுழித்து இத்தீர்த்தத்தில் புகச்செய்தார் என்பது தலவரலாறு.

3. பூமி தீர்த்தம்:- சந்நிதிக்கு எதிரில் ஆற்றுக்குச் செல்லும் வழியில் உள்ளது.

Koviloor Digital Library

4. சூலதீர்த்தம்:- கவ்வைக்கடல் மைய மண்டபத்தின் பின் உள்ளது. இவை தவிர, பிரமதீர்த்தம், ஞானவாளி முதலியவையும், அருச்சுனன் தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்டுப் பாண்டிய நாடு வந்து, சித்திராங்கதையை மணந்து அவளுடன் திருச்சுழியல் வந்து இறைவனை வணங்கித் தன் காண்டீவத்தின் முனையால் கல்லி உண்டாக்கிய 'கோடி தீர்த்தமும்' (அம்மன் சந்நிதி முன்புள்ள கிணறு) உள்ளன.

சுந்தரர் பாடல் பெற்றது.

தலவிநாயகர்கள்:- தாவர விநாயகர், போதி விநாயகர், அரசு விநாயகர், வேலடி விநாயகர், தருமதாவரப் பிள்ளையார்

தீர்த்தத்தில் (கவ்வைக்கடல்) தூய்மை செய்துகொண்டு ஆலயத்துள் நுழைந்ததும் குடவரை வாயிலில் - கம்பத்தடி மண்டபத்தைக் காண்கிறோம். இதில் பலிபீடம் கொடிமரம் உள்ளன. விநாயகர் சுப்பிரமணியர், சந்நிதிகள் உள. அடுத்துள்ளது ஏழுநிலை கோபுரம். அதிகார நந்தியை வணங்கி உட்புகுந்தால் சுந்தரர் பதிகம் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அடுத்துள்ளவை சபா மண்டபம், அந்தராள மண்டபம், அர்த்த மண்டபம். அடுத்து மூலஸ்தானம் - திருமேனிநாதர், சுயம்புலிங்கம் மூலவர். சதுர ஆவுடையார். கருவறை அகழி அமைப்பு.

சபா மண்டபத்தில் நடராசர் சந்நிதி. நடராசர் மூலவராகச் சிவகாமி, பதஞ்சலி, வியாக்ரபாதருடன் சிலாரூபத்தில் பிரபையுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறார். உற்சவமூர்த்திகள் தரிசனம். முதற் பிராகாரத்தில் - நாயகமண்டபப் பிராகாரத்தில் உஷா, பிரத்யுஷா சமேத சூரியன், அறுபத்துமூவர், சந்தானாசாரியர், சப்தமாதர்கள் சந்நிதிகள் உள்ளன. நடராசர் சந்நிதிக்கு எதிரில் கௌதமர், அகலிகை உருவங்கள் உள்ளன. உற்சவ மூர்த்தங்களிலும் இவ்விரு வடிவங்களும் உள. சோமாஸ்கந்தர், காசிவிசுவநாதர், சுழிகைக் கோவிந்தர், பூமி நீளாதேவியும் காட்சி தருகின்றனர். கருவறையில் கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தியும், லிங்கோற்பவரும், துர்க்கையும் தரிசனம், சண்டேசுவரருக்கு எதிரில் மேற்புறத்திலிருந்து தண்ணீர் கீழே இறங்குவதற்குக் கருங்கல்லில் குழாய் அமைந்திருப்பது காணத்தக்கது. பிராகாரம் விலாசமானது. மேற்புறத்தில் சித்திர வேலைப்பாடுகள்.

பிரளயவிடங்கருக்குத் தனிக்கோயில் - தேவகோட்டை செட்டியாரின் திருப்பணி, எதிரில் நந்தனம் - பழனியாண்டவர் சந்நிதி. வெளிப்பிராகாரத்தில் தல மரமான "புன்னை மரக்கன்று" வைத்து வளர்க்கப்படுகிறது.

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதி வலப்பால் பக்கத்தில் உள்ளது. சந்நிதியின் உட்புறத்தில் அம்பாளுக்கு எதிரில் உள்ள மண்டபத்தின் மேற்புறத்தில் ஸ்ரீ சக்கரம் கல்லில் வடிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

கருவறை அகழி அமைப்பு-மேற்புறத்தில் சுற்றிலும் சாரங்கள். அம்பாள்; திரிபங்கி லட்சண அமைப்பில், இடுப்பு, கழுத்து, இடக்கால் சற்று சாய்ந்து நடன அமைப்பில் தரிசனம்.

திருமால், இந்திரன், பிரமன், சூரியன், பூமிதேவி, கௌதமர், அகலிகை, கண்வமுனிவர், அருச்சனன், சித்திராங்கதை, சேரமான் பெருமான் முதலியோர் வழிபட்ட தலம்.

திருவண்ணாமலையில் தங்கி அருள் மழை பொழிந்து அவனிக்கு ஞான தீபமாய் விளங்கிய ஸ்ரீரமண மகரிஷி அவதரித்த தலமும் இதுவே. இம்மகான் அவதரித்த இல்லம் கோயிலுக்குப் பக்கத்தில் நினைவாலய மாகப் போற்றப்பட்டு வருகின்றது. அங்கு அவருடைய படமும், பாதுகையும் வைத்து வழிபடப் பெறுகிறது. தலத்தை வழிபடுவோர் இங்கும் சென்று தரிசிக்க வேண்டும்.

திருச்சுழியல், மதுரை, இராமேஸ்வரம் ஆகிய மூன்று கோயில் களும் ஒரே அமைப்புடைய கட்டுமானம் என்பர்.

பராக்கிரம பாண்டியன் காலத்திய கல்வெட்டுகளிலிருந்து இக்கோயில் கருவறை அவனால் கட்டப்பட்டது என்று தெரிகிறது. பிற்காலத்தில் நகரத்தார், கருவறை நீங்கலான பிற பகுதிகளைப் பிரித்துப் பல நிலைகளில் திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

நாடொறும் பூசைகள் குறைவின்றி நடைபெறுகின்றன. நவ ராத்திரி, ஆவணி மூலம், சித்திரை விஷு, கார்த்திகைச் சோமவாரங்கள், ஆடித்தவசு, தைப்பூசம் முதலிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

பங்குனி மாதத்தில் கௌதமருக்குத் திருமணக்காட்சி, சித்ரா பௌர்ணமி புறப்பாடு முதலியவை விசேஷம்.

திருச்சுழியற்புராணம் - தலபுராணம் உள்ளது. தவிர திருச்சுழியல் வெண்பா, அந்தாதி, திருச்சுழியல் கொம்பிலா வெண்பா, திரிசூலபுர மகாமித்யம், துணைமாலையம்மை, பிள்ளைத்தமிழ், திருச்சுழியல் கயிற்றுப்பின்னல் முதலிய நூல்களும் உள்ளன.

''ஊனாய் உயர்புகலாய் அகலிடமாய் முகில் பொழியும்
வானாய் வருமதியாய் வீதி வருவானிடம் பொழிலின்
தேனா தரித்திசை வண்டின மிழற்றுந் திருச் சுழியல்
நானா விதநினைவார்தமை நலியார் நமன் தமரே''.

Koviloor Digital Library

''கவ்வைக்கடல் கதறிக் கொணர் முத்தங் கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார் குடைந்தாடுந் திருச்சுழியல்
தெய்வத்தினை வழிபாடு செய்தெழுவார் அடி தொழுவார்
அவ்வைத் திசைக்கு அரசாகுவர் அலராள் பிரியாளே''.

(சுந்தரர்)

''அன்புடை நெஞ்சத்திவள்பேதுற அம்பலத் தடியார்
என்பிடை வந்தமிழ்தூற நின்றாடியிருஞ் சுழியல்
தன்பெடை நையத்தக வழிந்தன்னஞ் சலஞ் சலத்தின்
வன்பெடை மேல்துயிலும் வயலூரன் வரம் பிலனே''.

(உழையரிற்பழித்தல் - துறை. திருக்கோவையார் 37)

திருமேனிநாதர் துதி

''வருமேனிப் பிறப்பொழித்து மருவிய சாயுச்சியமே
தருமேனிக் கவலையினித் தளர்வொழி நீமடநெஞ்சே
கருமேனிப் பரந்தாமற் கொரு பாகங்கலந்தளித்த
திருமேனிப் பெருமானைப் பணி கமலச் சேவடியே''.

(தலபுராணம்)

வாழ்த்து

''திங்கள் மும்மாரி பெய்க புரவலர் செங்கோல் ஓங்க
மங்கையர் கற்புநீட மாநிலஞ் செழித்து வாழ்க
புங்கவர் கருணைகூர்க பூசுரர் சுருதி பொங்க
சங்கரன் திருவெண்ணீறும் சைவமும் தழைக்கமாதோ''

(தலபுராணம்)

''துணைமாலையோடும் சுழியல் நகர் மேவும்
இணையார் திருமேனி ஈசா''

-*(சிவக்ஷேத்ரசிவ நாமக்கலிவெண்பா- உமாபதிசிவம்)*

-'தீவணத்தில்
கண்சுழியல் என்று கருணையளித்து என்னுளஞ்சேர்
தண்சுழியல் வாழ்சிவ சாக்ஷியே'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. திருமேனிநாதர் திருக்கோயில்
திருச்சுழி & அஞ்சல் - 626 129.
திருச்சுழி வட்டம் - விருதுநகர் மாவட்டம்.

Koviloor Digital Library

257/13. திருக்குற்றாலம்

பாண்டியநாட்டுத் தலம்.

நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் இடையில் குற்றாலம் உள்ளது. தென்காசியிலிருந்தும் செங்கோட்டையிலிருந்தும் அடிக்கடி பேருந்துகள் உள்ளன. மதுரை திருநெல்வேலியிலிருந்தும் பேருந்துகள் குற்றாலம் வழியாகச் செங்கோட்டை செல்கின்றன. (1) சென்னை - கொல்லம் மெயிலில் (2) சென்னை - செங்கோட்டை பாசஞ்சரில், சென்று செங்கோட்டையில் இறங்கி அங்கிருந்தும் பேருந்தில் வரலாம். இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்:- திரிகூடாசலம், திரிகூடமலை என்பன.

Koviloor Digital Library

இறைவன் - குற்றாலநாதர், குறும்பலாஈசர், திரிகூடாசலபதி, திரிகூடாசலேஸ்வரர்.

இறைவி - குழல்வாய்மொழியம்மை, வேணுவாக்குவாஹினி.

தலமரம் - குறும்பலா.

தீர்த்தம் - வடஅருவி.

சம்பந்தர் பாடல் பெற்ற பதி.

இறைவனுக்குரிய பஞ்ச சபைகளில் இத்தலம் சித்திரசபை. பட்டினத்தார், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் ஆகியோர் பாடல்களில் இத்தலம் சிறப்பிக்கப்படுகின்றது. அப்பர், தாம் பாடிய திருவங்க மாலையில் இத்தலத்தைக் குறித்துள்ளார். மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் அவர்கள் இத்தலத்திற்குத், திருக்குற்றாலத் தலபுராணம் மற்றும் குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும் பாடியுள்ளார். இதன் அருகில் 'இலஞ்சி', 'பண்பொழி' முதலிய முருகன் தலங்களும் தென்காசி சிவத்தலமும் உள்ளன.

திருமால் வடிவில் இருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கத் திருமேனியாக மாற்றிய தலம். கோயில், மலைகள் சூழ்ந்த இயற்கை யழகு வாய்ந்த சூழலில் மலையடிவாரத்தில் உள்ளது. இங்குள்ள மலைத்தொடர் 'திரிகூடமலை' என்றழைக்கப்படுகிறது. கோயிலுக்குப் பக்கத்தில் பேரருவி வீழ்கின்றது. கோயிலுக்குப் பக்கத்தில் செல்லும் பாதை வழியே சென்றால் ஐந்தருவியைக் காணலாம். மலை உயரத்தில் சண்பக அருவி, செண்பகாதேவி கோயில், தேனருவி, புலியருவி முதலிய பல அருவிகள் உள்ளன. ஜூன் மாத இறுதி, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அருவிகளில் நீர் பொழிய, அவைகளில் நீராடி நலம்பெற ஆயிரக்கணக்கில் மக்கள் இத்தலத்திற்கு வருவர். குற்றால அருவியிற் குளித்தல் உடலுக்குச் சுகத்தைத் தரும். குளிப்பதற்குரிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

கோயில் சங்கு வடிவில் அமைந்துள்ளது. சிறிய ராஜகோபுரம் முக்கலசங்களுடன் முகப்பில் காட்சி தருகிறது. களிற்று படிகளேறி 2000- ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடைய குற்றாலநாதர் கோயிலுள் நுழைந்தால் மிக விசாலமான மண்டபம் உள்ளது. தூண்களின் வரிசையமைப்பு அழகுடையது. இக்கல்மண்டபம் வசந்த மண்டபம் எனப்படுகிறது. மண்டபத்தின் நடுவில் உயர்ந்த யாகசாலை மேடையும் ஒரு மூலையில் தீர்த்தவாரி மண்டபமும் உள்ளன. நுழைவு வாயிலில் இருபுறமும் உள்ள அம்பலவிநாயகரையும்,

Koviloor Digital Library

ஆறுமுக சுவாமியையும் வணங்கி நுழைந்தார் நேரே மூலவர் சந்நிதி தெரிகின்றது. அலங்கார மண்டபம் நுழைந்து வலமாகச் சுற்றித் துவார பாலகர்களைக் கடந்து, மிகக் குறுகலான பிராகாரத்தை வலம் வரும் போது, அதிகார நந்தி, சூரியன், கும்பமுனி மற்றும் அருட்சத்தியர்கள், எதிரில் கோஷ்ட மூர்த்தமாகவுள்ள தட்சிணாமூர்த்தி, விநாயகர் முதலிய சந்நிதிகளைத் தரிசிக்கலாம். பஞ்சபூதலிங்கங்களும், சுப்பிரமணியர், சனிபகவான் சந்நிதிகளும் உள. கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் கல்வெட்டுக்கள் உள்ளன. கோயில் கற்றளி, பிராகாரம் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட தெனத் தெரிகிறது. மகாமண்டபத்தில் வலப்பால் நடராசர் திருமேனி உள்ளது. மூலவர் சிவலிங்கத் திருமேனி - மிகச் சிறிய லிங்கம். அகத்தியரால் சிவத்திருமேனியாக மாற்றப்பட்டதாதலின் திருமேனியின் மீது அகத்தியரின் ஐந்து விரல்களும் பதிந்துள்ளன. திருமால் திரு மேனியைச் சிவத்திருமேனியாகவும், ஸ்ரீதேவியைக் குழல்வாய்மொழி யம்மையாகவும், பூதேவியைப் பராசக்தியாகவும் மாற்றியதாக ஐதீகம்.

சுவாமி கிழக்கு நோக்கியுள்ளார். சுவாமிக்கு வலப்பால் அம்பாள் - குழல்வாய்மொழியம்மை சந்நிதி உள்ளது. இதுவும் கிழக்கு நோக்கிய சந்நிதியே. படிக்கட்டுகள் ஏறி உள்நுழைய வேண்டும். நுழைவு வாயிலில் உள்ள வாயில் தூணில் உள்ள கல்வெட்டுக் குறிப்பொன்று. அம்பாள் கோவில் திருப்பணிகொல்லமாண்டு 1108ல் (ஸ்ரீ முக ஆண்டு - ஆனி - 19) பூர்த்தி செய்யப்பட்டுத் தேவகோட்டை காசி விசுவநாத செட்டியார் அவர்களால் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்ட செய்தியை தெரிவிக்கின்றது.

விசாலமான சந்நிதி. வலப்பால் பள்ளியறை. அம்பாள் நின்ற கோலம். உள்பிராகாரத்தை வலம் வரும்போது கைலாசநாதர், துர்க்கை சந்நிதிகள் உள்ளன. அம்பிகையை வழிபட்டு வெளிவந்து வலமாக வரும்போது தலமரமான குறும்பலா (புதிய தலமரம்) உள்ளது. அதற்கு எதிரில் பிராகாரத்தில் ஆதிகுறும்பலா மரத்தின் கட்டைகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அதையடுத்து அறுபத்து மூவர் மூலத்திரு மேனிகள், நன்னகரப் பெருமாள் சந்நிதி; பாபவிநாசர் உலகாம்பாள்; நெல்லையப்பர் காந்திமதி; நாறும்புநாதர்; சங்கரலிங்க நாதர்; பால் வண்ணநாதர் ஒப்பனை அம்பாள்; சொக்கலிங்கர்; ஐயனார் மதுநாதேசு வரர் அறம் வளர்த்த நாயகி சந்நிதிகள் உள்ளன. எதிர்ப்புறத்தில் அருவியைப் பார்க்குமிடத்தைக் குறித்துள்ளனர். அங்கிருந்து பார்த்தால் பேரருவி விழுவது தெரிகிறது. சோழலிங்கம், அகத்தியர், வாசுகி, மகாலிங்கம், சஹஸ்ரலிங்கம் முதலியவைகளும் உள்ளன.

Koviloor Digital Library

வலமாக வரும்போது அகத்தியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தாக சொல்லப்படும் 'பராசக்தி பீடம்' உள்ளது. இங்கு மகாமேரு உள்ளது. பைரவர் சந்நிதி உள்ளது. குற்றாலமலை 5134 அடி உயரம். வடஅருவி 288 அடி உயரத்திலிருந்து வீழ்கிறது. மகுடாகம முறைப் படிப் பூசைகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் தைமகம் தெப் போற்சவம், மார்கழித் திருவாதிரை, சித்திரை விஷு உற்சவங்கள் சிறப்புடையன.

சித்திர சபை, கோயிலுக்குப் பக்கத்தில் தனிக்கோயிலாக உள்ளது. எதிரில் தெப்பக்குளம் - நடுவில் மணிமண்டபம். சபா மண்டபத்தில் நுழைந்தால் குறவஞ்சி சிலைகளின் அருமையான காட்சி. கீழே கல்பீடம், மேலே முன்மண்டபம் மட்டும் மரத்தால் ஆனது. விமானம் செப்புத்தகடு. எட்டு கலசங்கள் உச்சியில்.

இச்சித்திர சபையின் வெளிச்சுற்றில் ஊர்த்துவதாண்டம், பத்திர காளி, முருகன், சூரபத்மன், சிங்கமுகன், தாரகன், மன்மதன், ரதி ஆகிய உருவங்கள் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. முன் மண்டபத்தின் உட்புறத்தில் மேற்புறத்தில் உள்ள கொடுங்கைகளின் அழகு கண்டின் புறத்தக்கது.

சபையின் உட்சுற்றில் துர்க்கையின் பல்வேறு வடிவங்கள், வீரபத்திரர், கஜேந்திரமோட்சம், திருவிளையாடற்புராண வரலாறுகள், அறுபத்துமூவர் உருவங்கள், பத்மநாபரின் கிடந்தகோலம், இரணிய சம்ஹாரம், பைரவரின் பல்வேறு உருவங்கள், சனிபகவான் ஆகியவை வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. இவை காலப்போக்கால் அழிந்தாற் போல் உள்ளன.

சபையின் உள்ளே - சித்திரசபையாதலின் - நடராசர் உருவம் சிவகாமியுடன், தேவர்கள் தொழுமாறு அழகாக வண்ணத்தில் (சித்திரமாக) வரையப்பட்டுள்ளது. பார்வதி கல்யாணச் சிற்பமும் அழ்கு. மரத் தூபியில் கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. குற்றாலநாதர் அகத்தி யருக்குக் காட்சி தந்தது, சுப்பிரமணியரின், விநாயகரின் பல்வகைச் சிற்பங்கள் முதலான ஏராளமான சிற்பங்கள் இச்சபையில் உள்ளன. இச்சபை கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே இருக்கும் நடராச சிற்பம் தெற்கு நோக்கியுள்ளது. ஆலயப்பெருவிழாவில் எட்டாந்திருவிழாவில் நடராசர், ஆலயத்திலிருந்து இச்சபைக்கு எழுந்தருளி, (பச்சைசார்த்தி) ஆஸ்தானம் திரும்புவது வழக்கம்.

சுற்றுலாத்தலமாதலின் இங்கு ஏராளமான சத்திரங்களும், உணவுக் கடைகளும் உள்ளன. இக்கோயிலில் 89 கல்வெட்டுக்கள் படி

Koviloor Digital Library

யெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து நீட்டலளவைகோல்- சுந்தர பாண்டியன் கோல் என்ற பெயரால் வழங்கியமை தெரிகிறது. மற்றும் மக்கள்சபை, ஐந்நூற்றுமூவர்சபை முதலிய குழுக்களைப் பற்றியும் தெரியவருகின்றது.

''வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்குற்றாலம்
அம்பா னெய்யோடாடலமர்ந்தான் அலர் கொன்றை
நம்பான்மேய நன்னகர் போலும் நமரங்காள்.''

''திருந்தமதி சூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் ஏலங் கமழ் சோலையின வண்டியாழ் செய்
குருந்த மண நாறுங் குன்றிடஞ் சூழ் தண்சாரற்குறும் பலாவே.''

(சம்பந்தர்)

உற்றார் ஆருளரே - உயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ?''

(அப்பர் - திருவங்கமாலை)

''உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே''.

(திருவாசகம்)

''காலன் வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே - மேல் விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு''. *(பட்டினத்தார்)*

''சத்தி பீடத்தின்மேவும் தாரகப் பிரமம் போற்றி
முத்தி தந்தருள வேண்டி முளைத்தருள் முதலே போற்றி
யத்திர விழி பண்பாட வந்தரப்பேரியார்ப்பச்
சித்திர சபையிலாடுந் தெய்வ நாயகனே போற்றி''.

(தலபுராணம்)

Koviloor Digital Library

''சுற்றாத ஊர்தேடிச் சுற்றவேண்டாம் புலவீர்
குற்றாலமென்றொரு காற்கூறின் - வற்றா
வடவருவியானே மறு பிறவிச் சேற்றில்
நடவருவியானே நமை'' *(குற். குறவஞ்சி)*

''-பண்செழிப்பக்
கற்றாலங் குண்மைக் கதிதருமென்றற்றவர்சூழ்
குற்றாலத் தன்பர் குதூகலிப்பே''. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. குற்றாலநாதர் திருக்கோயில்
குற்றாலம் & அஞ்சல் - 627 802.
திருநெல்வேலி மாவட்டம்.

258/14. திருநெல்வேலி

பாண்டிய நாட்டுத் தலம்.

திருநெல்வேலி, மாவட்டத் தலைநகரம். சென்னையிலிருந்து விரைவுப் பேருந்துகளும், புகைவண்டி வசதிகளும் உள்ளன.

Koviloor Digital Library

மதுரையிலிருந்தும், பிறவூர்களிலிருந்தும் மதுரை வழியாகவும் நெல்லைக்கு அடிக்கடி பேருந்துகள் உள்ளன.

வேதபட்டர், இறைவனுக்குத் திருவமுது ஆக்குவதற்கு உலரப் போட்டிருந்த நெல், மழையினால் நனையாதவாறு இறைவன் வேலியிட்டுக் காப்பாற்றியமையால் இறைவனுக்கு நெல்வேலிநாதர் என்று பெயர் ஏற்பட்டது. ஆகவே இத்தலம் நெல்வேலி (திருநெல் வேலி) எனப் பெயர் பெற்றது.

பாற்குடம் சுமந்து சென்ற அன்பனை (முழுதுங்கண்ட ராமக் கோன்) இறைவன் மூங்கில் வடிவமாக இருந்து இடறச் செய்து பாலைத் தன்மீது கவிழச் செய்து, அதனால் வெட்டுண்டு, காட்சி தந்தருளியதால் சுவாமிக்கு வேணுவனநாதர் என்றும் பெயர். இத்தலமும் வேணுவனம் என்று வழங்கலாயிற்று.

ஊர்ப்பெயர்:- வேணுவனம், நெல்வேலி, நெல்லூர், சாலிவேலி, சாலிவாடி, சாலிநகர், பிரம விருந்தபுரம், தாருகாவனம் என்பன. கோயில் கல்வெட்டுக்களில் இத்தலம் 'கீழ்வேம்பு நாட்டுக் குலசேகர சதுர்வேதி மங்கலம்' என்று காணப்படுகிறது.

இறைவன் - நெல்லையப்பர், வேணுவனநாதர்,
வேய்முத்தநாதர், நெல்வேலிநாதர், சாலிவாடீசர்,
வேணுவனேஸ்வரர், வேணுவன
மகாலிங்கேஸ்வரர், மூலவர் சுயம்பு மூர்த்தி.

இறைவி - காந்திமதி அம்மை, வடிவுடையம்மை.

தலமரம் - மூங்கில் (வேணு, வேய்)

தீர்த்தம் - பொற்றாமரைக்குளம் (ஸ்வர்ண புஷ்கரணி)
கருமாறித் தீர்த்தம், சிந்துபூந்துறை.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இக்கோயிலில் மிகப் பழமையான கல்வெட்டுக்கள் உள. இக் கோயில் 14 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. காமிக ஆகம முறைப்படி அமைந்து நாடி வருவோர்க்கு நலமருளும் இத்திருக்கோயில் திருநெல் வேலி நகரின் நடுவண் அமைந்துள்ளது.

கோயிலுள் பொற்றாமரைக் குளம் உள்ளது. நாற்புறமும் நல்ல படிகள். நடுவில் நீராழி மண்டபம் உள்ளது. இக்கோயிலில் ஊஞ்சல் மண்டபம், திருக்கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வசந்த மண்டபம், சங்கிலி மண்டபம், சோமவார மண்டபம்,

Koviloor Digital Library

நவக்கிரக மண்டபம், மகா மண்டபம் போன்ற மண்டபங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன.

மூன்று தெப்பக் குளங்கள் இக்கோயிலில் உள்ளன. சுவாமிக்கு நான்கு ராஜகோபுரங்களும் அம்பாளுக்கு ஒரு கோபுரமும் உள்ளன. சுவாமி, அம்பாள் ஆகிய இரு சந்நிதிகளும் கிழக்கு நோக்கியவை. நந்தி பெரியது-சுதையாலானது சுவாமி. சந்நிதிக்குச் செல்லும் வழியில் இசைத் தூண்கள் உள்ளன. துவாரபாலகர்களைக் கடந்து மகா கணபதி, முருகன் சந்நிதிகளைத் தரிசித்து உட்புகுந்தால் சுவாமி சந்நிதி மிகவும் விசாலமானது.

நெல்லையப்பர் - சிவலிங்கத் திருமேனி, மேற்புறம் வெட்டப் பட்ட அடையாளம் உள்ளது. இப்போதுள்ளது 21-ஆவது ஆவுடை யார் என்றும் 20 ஆவுடையார்கள் பூமியின் கீழ் உள்ளன என்றும் சொல்லப்படுகிறது. இம்மூர்த்தி 'மிருத்யஞ்சமூர்த்தி' ஆவார்.

அன்வர்கான் என்ற இஸ்லாமியரின் மனைவிக்கு உண்டான வயிற்றுவலி நீங்காமையால் அவன் வழிபட்டுப் பேறு பெற்ற சிவலிங்கம் 'அனவரத லிங்கம்' என்று வழங்கப்படுகிறது. இதற்கு அவர் தந்துள்ள நகை முதலியவைகளும் உள்ளன.

நாள்தோறும் ஆறுகால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன. இவற்றுள் உச்சிக்காலத்தில் மட்டும் காந்திமதி அம்பிகையே - இறைவியே நேரில் வந்து சுவாமியை வழிபட்டுச் செல்வதாக ஐதீகம். அகத்தியருக்கு இறைவன் கல்யாண காட்சியைக் காட்டி அருளிய தலமிதுவே. சுவாமிக்குப் பக்கத்தில் கோவிந்தராஜர் சந்நிதி உள்ளது.

இங்குள்ள உற்சவத் திருமேனி கையில் தாரை வார்த்துத் தரும் பாத்திரத்துடன் இருப்பதைக் காணலாம். திருமால் பார்வதியைத் தாரை வார்த்துத் தர இறைவன் மணந்து கொள்ளும் நிகழ்ச்சியை இது நினை வூட்டுகிறது. திருமாலின் மார்பில் சிவலிங்க அடையாளம் உள்ளது.

இன்றும் ஐப்பசியில் நடைபெறும் திருக்கல்யாண விழாவில் ஒரு நாள் வைணவர் வந்து தாரை வார்த்துத் தர, சிவாசாரியார் பெற்றுக் கொள்ளும் ஐதீகம் நடைபெறுகின்றது. சுவாமி பிராகாரத்தில் கன்னி விநாயகர், நந்தி தேவர், பாண்டியராஜா சந்நிதிகள் உள்ளன. பிட்சாடனர், ரிஷிபத்தினியர் உருவங்கள் கல்லில் வண்ணந் தீட்டப்பட்டுள்ளன.

அகத்தியர் பிரதிஷ்டை செய்த சால்வடீஸ்வரர், சிவலிங்கத் திருமேனி சற்றுத் தாழ்வில் உள்ளது. இத்தலம், பஞ்ச சபைகளுள் தாமிரச் சபையாகும். இச்சபை தனியே உள்ளது. இங்குள்ள நடராசர்

Koviloor Digital Library

'தாமிர சபாபதி' என்றழைக்கப்படுகிறார். சபைக்கு மேலே தாமிரத் தகடு வேயப்பட்டுள்ளது. பின்னால் உள்ள நடராஜர் - சிலாரூபம் - சந்தன சபாபதி என்றழைக்கப்படுகிறார்.

உள்ளே ருத்திர விஷ்ணு, பேதங்கள், ரிஷிகளின் உருவங்கள் உள்ளன. கீழே மரத்தாலும் மேலே தாமிரத்தாலும் ஆக்கப்பட்டு ஏழு அடுக்குகளைக் கொண்டு திகழும் இச்சபை சித்திர வேலைப்பாடு களுடன் அருமையாகத் திகழ்கின்றது. சபைக்குப் பக்கத்தில் தலமரம் உள்ளது.

இக்கோயிலில் இரு துர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. மகிஷாசுர மர்த்தினி சந்நிதி தெற்கு நோக்கியும், பண்டாசுரமர்த்தினி சந்நிதி வடக்கு பார்த்தும் உள்ளன.

ஆறுமுகர் சந்நிதி இங்கு மிகவும் விசேஷமானது. வள்ளி தெய்வ யானையுடன் ஆறு முகங்களும் சுற்றிலும் திகழ, ஒவ்வொரு முகத் திற்கும் நேரே இரண்டிரண்டு திருக்கரங்கள் வீதம் சுற்றிலும் திகழ, அவ்வவற்றிற்குரிய ஆயுதங்களும் கொண்டு மயில் மீது அமர்ந்துள்ள பாங்கு அற்புதமானது. அமாவாசைப் பரதேசி என்பவர் ஒருவர் 120 வயது வரை வாழ்ந்திருந்து இச்சந்நிதியை விசேஷித்துக் காவடி எடுத்து இறுதியில் ஓர் அமாவாசையில் சித்தியடைந்தார். இவராலேயே இச்சந்நிதி மிக்க சிறப்பு பெற்றது. பாம்பன் சுவாமிகள் பதிகம் சுவரில் பதிக்கப்பெற்றுள்ளது.

இக்கோயிலில் உள்ள 'சுரதேவர்' - 'ஜ்வரதேவர்' சந்நிதி மிகவும் சிறப்புடையது. மூன்று தலைகள், மூன்று கால்கள், மூன்று கைகளுடன் இம்மூர்த்தி, கையில் தண்டம், மணி, சூலத்துடன் காட்சி தருகின்றார். எவருக்கேனும் சுரம் இருப்பின், இம்மூர்த்திக்கு மிளகு அரைத்துச் சார்த்தி வெந்நீரால் அபிஷேகம் செய்தால் தீரும் என்னும் செய்தி மக்கள் வழக்கில் சொல்லப்படுகிறது.

பொல்லாப் பிள்ளையார் சந்நிதி இங்கு மிகவும் விசேஷமானது. புத்திரப்பேறில்லாதவர்கள் நாற்பத்தொரு நாள்கள் விரதமிருந்து, கருப்பமுற்று, குழந்தையைப் பெற்றெடுத்தபின் இச்சந்நிதிக்கு எடுத்து வந்து இங்கு சன்னல் போல் உள்ள பகுதியில் உட்புறமாகத் தந்து வெளிப்புறமாக வாங்கும் பழக்கம் உள்ளது. இதனால் இவருக்குப் 'பிள்ளைத் துண்ட விநாயகர்' என்றும் பெயர்.

அறுபத்துமூவர் மூலத் திருமேனிகளைத் தொடர்ந்து மேலே கயிலாய பர்வதக் காட்சி உள்ளது. இங்குப் பெருமான் இராவணனை அழுத்திய - நொடித்த பாவனை நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

நடராசர் சந்நிதி மற்றொன்று தனியே உள்ளது. இப்பெருமான் அக்கினி சபாபதி என்றழைக்கப்படுகிறார். சிவகாமி உடன் நிற்க, காரைக்காலம்மையார் கையில் தாளமிட்டுப் பாட, சிரித்த முகத்துடன் ஆடும், அம்பலக்கூத்தன் அழகைக் காணக்கண் ஆயிரம் வேண்டும்.

காந்திமதி அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. கிழக்கு நோக்கியது. நின்ற திருக்கோலம், வியாழன் தோறும் அம்பாளுக்குத் தங்கப் பாவாடை சார்த்தப்படுகிறது. அம்பாள் சந்நிதி முன்புள்ள மண்டபத்தில் உள்ள இரு தூண்கள் இசைத் தூண்களாக விளங்குகின்றன.

இத் தலத்திற்குத் தல புராணம் உள்ளது. 'காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்' சிறப்புடைய நூலாகும்.

ஆனியில் 41 நாள்களுக்குப் பெருவிழா, மண்டலாபிஷேகத் துடன் சேர்ந்து நடத்தப்படுகின்றது.

ஆடிப்பூர உற்சவம் அம்பாளுக்குப் பத்து நாள்களுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றது. ஐப்பசியில் கல்யாண உற்சவம் 10 நாள்களுக்கு நடைபெறுகின்றது.

கார்த்திகை மாதத்தில் காலை 4 மணிக்கெல்லாம் கோயில் தரிசனத் திற்காகத் திறந்திருக்கும். நான்கு சோம வாரங்களும் சிறப்பானவை.

மார்கழித் திருவாதிரை உற்சவம், தைப்பூச உற்சவம், பங்குனி உத்திரத்தில் செங்கோல் உற்சவம் முதலியவை ஒவ்வொன்றும் பத்து நாள்களுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. மாசி மகத்தில் அப்பர் தெப்பம் சிறப்பு. வைகாசி விசாகத்தில் சங்காபிஷேகம் விசேஷமானது.

இத்திருக்கோயிலின் சார்பில், தேவாரப் பாடசாலை நடைபெறு கின்றது. சமய நூலகம் உள்ளது. (காந்திமதி) அம்பாள் மகளிர் மேல் நிலைப் பள்ளி (2) நெல்லையப்பர் ஆதாரப் பள்ளி (3) ஞானசம்பந்தர் பாலர் பள்ளி முதலியவை நடைபெறுகின்றன.

''மருந்தவை மந்திர மறுமை நன்னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்து தண் புறவினிற் கொன்றை பொன் சொரிதரத்துன்றுபைம்பூ
செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே

''வெடிதரு தலையினர் வேனல் வெள்ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியதளாடையார் பொங்கரவர்''
வடிவுடை மங்கையோர் பங்கினர் மாதரைமையல் செய்வார்
செடிபடு பொழிலணி திருநெல்வேலியுறை செல்வர்தாமே''. *(சம்பந்தர்)*

Koviloor Digital Library

உட்டிரு விளக்கான அகரமுகரம் மகரம்
ஒளிர்விந்து நாதவடிவாய்
உயர்மந்த்ர பதவன்ன புவன தத்துவ கலைகள்
ஓராறி னுக்குமுதலா
மட்டில் குடிலைப்பொரு ணிறைமுறையுஞ் சொல்ல
மாட்டாத படியினாலே
மனத்தெழு மகந்தையா னானென்னும் வறுமைதனை
மாற்றியருள் வாழ்வு தரவே
எட்டிருங் கைக்கமல னைக்குட்டி யேபின்
இருஞ்சிறையிலிட்டு வைத்தே
இருநூ றெனுங்கணக் கோடுநா லாறா
மெனும் புவன மண்டகோடி
சிட்டியுஞ் செய்துபின் அயன்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
செல்வந் தழைத்து வளர் நெல்வேலி வாழ்செட்டி
செங்கீரை யாடியருளே

(க்ஷேத்திரக்கோவை பிள்ளைத் தமிழ்)

- ''பொற்றாம
நல்வேலி சூழ்ந்து நலன்பெறுமொண் செஞ்சாலி
நெல்வேலி யுண்மை நிலயமே'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:

அ/மி. நெல்லையப்பர் திருக்கோயில்
திருநெல்வேலி 627 001.

259/1. (திருப்புக்கொளியூர்) அவிநாசி

கொங்கு நாட்டுத் தலம்.

மக்கள் வழக்கில் அவிநாசி என்று வழங்கப்படுகிறது. கோயம் புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் முதலிய ஊர்களிலிருந்து பேருந்தில் செல்லலாம்.

கோவையிலிருந்து 40 கி.மீ; திருப்பூரிலிருந்து 14 கி.மீ; திருமுருகன்பூண்டியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் கோவை - ஈரோடு நெடுஞ்சாலையில் இத்தலம் உள்ளது. பழையபதியாகிய புக்கொளியூர்

Koviloor Digital Library

நத்தம் தற்போது அழிந்து வெட்ட வெளியாகவுள்ளது. பிற்காலத்தில் தோன்றிய புதிய நகரமே, தற்போதுள்ள அவிநாசியாகும். அவிநாசி - விநாசம் இல்லாதது. ஊர்ப்பெயர் - புக்கொளியூர், இறைவன் - அவிநாசி. இறைவன் பெயரே இன்று ஊர்ப்பெயராயிற்று.



இறைவன் - அவிநாசி லிங்கேஸ்வரர், அவிநாசி ஈஸ்வரர், அவிநாசிநாதர், பெருங்கேடிலியப்பர்.

இறைவி - கருணாம்பிகை, பெருங்கருணை நாயகி.

தலமரம் - பாதிரி (ஆதியில் மாமரம்) மிகப்பெரிய நந்தி.

சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

இக்கோயிலில் முதலில் உள்ள வழிகாட்டி விநாயகரைத் தரிசித்து, பிறகு தவத்திலிருக்கும் (பாதிரி மரத்து) அம்பாளைத் தரிசித்து, பிறகு தான் சுவாமியைத் தரிசிக்கச் செல்லவேண்டும். கோயிலின் முன் உள்ள கல்லால் ஆன (துவஜ) தீபஸ்தம்பத்தின் கீழ் தனியே சுந்தரர் உருவம், முதலை பிள்ளையை வெளிப்படுத்தும் சிற்பம் முதலியவை கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. உள் பிரகாரத்தில் துர்க்கை சந்நிதி தனியே உள்ளது. அடுத்த உள்சுற்றில் அறுபத்துமூவர் திருமேனிகளும், சுப்பிரமணியர், காலபைரவர் சந்நிதிகளும் உள்ளன. அவிநாசி முருகன் சந்நிதி சிறப்புடையது. அதுபோலவே காலபைரவர் சந்நிதியும். (இச்சந்நிதி உள் பிராகாரத்தில் இருப்பது இங்கு மட்டும் தான்) இவருக்கு

Koviloor Digital Library

வடைமாலை அணிவிப்பது விசேஷமான பிரார்த்தனையாம். நடராசர் சந்நிதி உள்ளது. கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு கி.மீ. தூரத்தில் முதலை யுண்ட பாலனை மீட்ட ஏரியும், கரையில் சுந்தரர் சந்நிதியும் உள்ளன.

அம்பாள் சந்நிதியில் சுவரில் தேள் உருவம் உள்ளது. இப் பகுதியில் தேள் கடித்தால், அவர்கள் இங்கு வந்து வலம் வந்தால் விஷம் இறங்கி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. விசேஷ காலங்களில் சுற்றுப்புறக் கிராம மக்கள் இங்கு வந்து தீர்த்தம் எடுத்துச் செல்கிறார்கள். இவ்வூர்த் தேர் சிறப்புடையது. கோயிலுள் காசிக்கிணறும், நாககன்னிகைத் தீர்த்தமும் ஐராவதத் தீர்த்தமும் உள்ளன.

திருவாசகத்தில் ஆனந்தமாலையில் ''அரிய பொருளே அவிநாசி யப்பாபாண்டி வெள்ளமே'' என்று பாடுகிறார். அப்பரும் திருத்தாண்ட கத்தில் 'அவிநாசி கண்டாய், அண்டத்தான் கண்டாய்'' எனப் பாடுகிறார்.

அருணகிரிநாதர் ''அவிநாசிப் பெருமாளே'', ''புக்கொளியூருடையார் புகழ் தம்பிரானே'' என்று பலவிடங்களில் பாடியுள்ளார்.

இத்தலத்துத் தலபுராணம் இளையான்கவிராயரால் இயற்றப் பட்டது - கிடைக்கிறது. மற்றும் கருணாம்பிகைசதகம், கருணாம்பிகை யமக அந்தாதி, கருணாம்பிகை பிள்ளைத்தமிழும் உள்ளன. 1695-ல் வாழ்ந்த சிக்கதேவராய உடையார் காலத்திய கல்வெட்டுக்கள் சுற்றுப் புற மண்டபச் சுவர்களிலும்; சந்நிதித்தூண்களிலும் உள்ளன.

இத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள சேவூரும், மொக்கணீசுரரும் வைப்புத்தலங்கள். புதிதாக ஏழுநிலை ராஜகோபுரம் கட்டப் பெற் றுள்ளது. அம்பாளுக்கும் புதிய ராஜகோபுரம் ஐந்துநிலைகளில் கட்டப் பட்டு வருகின்றது. இக்கோயிலின் மிகப்பெரிய தேர் அண்மையில் தீவிபத்தில் எரிந்து போய் விட்டது. இக்குறையை ஈடு செய்யும் வகையில் 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய தேர் கௌமார சுவாமிகள் மடாலயம் தவத்திரு. சுந்தர சுவாமிகள் அவர்களின் தலைமையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுச் செய்யப்பட்டுள்ளது.

''எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்றுன்னையே உள்குகின்றேன் உணர்ந்துள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே''.

''உரைப்பாருரையுகந்துள்க வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப்புக் கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே''

Koviloor Digital Library

"மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறும் சலபுட்பமிட்டு வழிபடப்
புந்தியுறைவாய் புக்கொளியூர் அவிநாசியே
நந்நியுனை வேண்டிக்கொள்வேன் நரகம் புகாமையே". *(சுந்தரர்)*

திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் - எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான - பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே - குகனே சொற்குமரேசா
அறநாலைப் புகல்வோனே - அவிநாசிப் பெருமாளே.

ஆன்று நிறைந்தோர்க்கு அருள் அளிக்கும் புக்கொளியூர்த்
தோன்றம் அவிநாசிச் சுயம்புவே" *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. அவிநாசி லிங்கேஸ்வரசுவாமி திருக்கோயில்
அவிநாசி & அஞ்சல் - 641 654.
அவிநாசி வட்டம் - கோவை மாவட்டம்.

260/2. திருமுருகன்பூண்டி



Koviloor Digital Library

கொங்குநாட்டுத் தலம்.

அவிநாசியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதியுண்டு. முருகப்பெருமான் வழிபட்ட தலம். அகத்தியர் மார்க்கண்டேயர் துர்வாசர் ஆகியோர் வழிபட்ட தலம். இதற்கு மாதவிவனம் என்றும் பெயர். துர்வாசர் கற்பகவுலகிலிருந்து மாதவிமர (குருக்கத்தியை)த்தை இங்குக் கொண்டு வந்தார் என்பர். சுந்தரர் இவ்வழியே செல்லும்போது, இறைவன் தன் பூதககணங்களை வேடர் வடிவில் ஏவிச் சுந்தரரின் செல்வங்களைப் பறித்துக் கொண்ட தலம்.

இறைவன் - முருகநாதேஸ்வரர், முருகநாதசுவாமி.

இறைவி - ஆலிங்கபூஷணஸ்தனாம்பிகை, (முயங்குபூண் முலையம்மை) ஆவுடை நாயகி, மங்களாம்பிகை.

சுந்தரர் பாடல் பெற்றது.

சுவாமியும் அம்பாளும் மேற்கு பார்த்த சந்நிதிகள். மூலவர் அம்பாள் பீடத்தின் கோமுகம் வடக்கு நோக்கியுள்ளது. வழிமறித்து நிதிபறித்த இறைவன் இருக்குமிடத்தைக் கூப்பிட்டுச் சுந்தரருக்குக் காட்டிய (வேடுபறி நடந்த இடம்) ‘கூப்பிடுவிநாயகர்’ அவிநாசிக்குப் போகும் வழியில் 1 கி.மீ. தொலைவில் பாறைமேல் உள்ளார்.

கோயில் நுழைவு வாயிலில் பதினாறுகால் மண்டபத்தில் விநாயகர் சந்நிதி உள்ளது. இதைத் தாண்டி உள்ளே சென்றால் வலப்பால் வேடுவர் உருவமும் சுந்தரர் உருவங்கள் இரண்டு (ஒன்று பறிகொடுத்து முகம் வாடிய நிலையிலும் மற்றொன்று மீண்டும் பெற்ற மகிழ்ச்சி நிலையிலும்) உள்ளன. கோயில் பிராகாரத்தில் பைரவர் சந்நிதியும் நவக்கிரகங்களும் உள்ளன. இங்குள்ள சண்முகநாதர் சந்நிதி சிறப்பானது. பிரமதீர்த்தம், ஞானதீர்த்தம், சுப்பிரமணிய தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன. தலமரம் = வில்வம். இத்தலம் பிரமகத்தி தோஷம் நீங்கிய தலம். சித்தப்பிரமை, பைத்தியம், பில்லி, சூன்யம் இவை நீங்க வேண்டுவோர் இங்குவந்து நீராடி வழிபடுவதையும், பல நாள்கள் இங்கேயே தங்கியிருப்பதையும் இன்றும் காணலாம். இங்குள்ள பிரமதாண்டவ நடராசர் சந்நிதி விசேஷமானது. இக்கோயிலுக்குப் பக்கத்தில் சற்றுத் தொலைவில் மாலாதரன் எனும் வேட மன்னன் வழிபட்ட மாதவனேஸ்வரர் கோயில் உள்ளது. நல்ல கல் கட்டிடம். வலப்புறம் பைரவர் சந்நிதி. இது விசேஷமானது. சுவாமி கிழக்கு நோக்கியுள்ளார். (சுயம்புமூர்த்தி என்று சொல்லப்படுகிறது) கோயிலின் முன் மண்டபம் உள்ளது. எங்கும் இல்லாத புதுமையாக இங்கு, இம்மண்டபத்தின் மேலே பெரியநந்தி, ஆலயத்தைப் பார்த்தவாறு சுதையால் அமைக்கப்பட்டு உள்ளது. ஆலயச்சுவற்றில் நிருதி விநாயகர்,

Koviloor Digital Library

கேது ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. இத்தலத்திற்குத் தலபுராணம் உள்ளது. செட்டிப்பாளையம் வாசுதேவ முதலியார் பாடியது. நாடொறும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் 11 நாள்களுக்குப் பெருவிழா நடைபெறுகிறது.

''கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறை கொண்டாறலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டிமா நகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கிங்கிருந்தீரெம்
பிரானிரே.'' *(சுந்தரர்)*

திருப்புகழ்

அவசியமும் வேண்டிப் பலகாலும்
அறிவினுணர்ந்தாண்டுக் கொருநாளில்
தவசெபமும் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும்பூண்டடற் கருள்வாயே
சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்
சடுசமயங் காண்டற் கரியானே
சிவகுமரன்பூண்டிற் பெயரானே
திருமுருகன் பூண்டிப் பெருமாளே.

-''சான்றவர்கள்
தம்முருகன் பூணுட் டலம்போல வாழ்கின்ற
வெம்முருகன் பூண்டி இருநிதியே.'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. முருகநாதேஸ்வரர் தேவஸ்தானம்
திருமுருகன்பூண்டி & அஞ்சல் 641 652
அவிநாசி வட்டம் - கோவை மாவட்டம்.

261/3. திருநணா

பவானி

கொங்கு நாட்டுத் தலம்.

தற்பொழுது பவானி என்று வழங்கப்படுகிறது.

சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் முதலிய நகரங்களிலிருந்து பேருந்தில் செல்லலாம். (ஈரோட்டிலிருந்து 12 கி.மீ.)

Koviloor Digital Library

பவானி ஆறு காவிரியில் கூடும் இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. பழைமையான பெரிய கோயில், பவானி, பவானிகூடல், பவானிமுக்கூடல், வதரிகாசிரமம் முதலிய அனைத்தும் ஒன்றே. குபேரன், விசுவாமித்திரர், பராசரமுனிவர் முதலியோர் வழிபட்ட தலம்.

இறைவன் - சங்கமுகநாதேஸ்வரர், சங்கமேஸ்வரர்

இறைவி - வேதாம்பிகை

தீர்த்தம் - பவானி காவிரி சங்கமம்

தலமரம் - இலந்தை

சம்பந்தர் பாடல் பெற்றது.

கோயிலின் நுழைவு வாயிலில் கோட்டை விநாயகர் உள்ளார். உட்புறத்தில் ஒருபுறம் ராஜகணபதி சந்நிதியும், மறுபுறம் முத்துக் குமாரசுவாமி சந்நிதியும் காட்சி தருகின்றன. கோயிலுள் நுழைந்ததும் வலப்பக்கம் அழகான மண்டபம் உள்ளது. இங்கு ஆதிகேசவப் பெருமாள் சௌந்தரநாயகி யோகநரசிம்மர் சந்நிதிகள் உள்ளன.

உள் பிராகாரத்தில் அறுபத்துமூவர் சந்நிதிகளும், பஞ்சபூத லிங்கங்களும், சனிபகவான் சந்நிதியும் உள்ளன. கோஷ்ட மூர்த்தமாகத் பெரிய தட்சிணாமூர்த்தி காட்சி தருகிறார். காசிவிசுவநாதர், ஆறுமுக சுவாமி சந்நிதிகள் உள்ளன. அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. ஆடிப் பெருக்கன்று இத்தலத்தில் நீராடல் விசேஷம். அன்று இலட்சக்கணக் கானோர் இத்தலத்திற்கு வந்து சங்கமத்தில் நீராடி, இறைவனை வழி படுகின்றனர். சித்திரை பௌர்ணமியில் பெருவிழா நடைபெறுகிறது.

இத்திருக்கோயிலின் பெருமையை விளக்குவதான செவி வழிச் செய்தியொன்று இப்பகுதியில் சொல்லப்படுகிறது. 19-ஆம் நூற் றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் போது கோவை மாவட்டத்தில் திரு. காரோ (W. GARO) என்னும் வெள்ளையதுரை மாவட்ட ஆட்சியாளராக இருந்தார். அவர் ஆட்சிப் பொறுப்புக் காரணமாகப் பவானி வந்து ஆய்வாளர் மாளிகையில் தங்கினார். இரவு படுத்து உறங்கும்போது மின்னலுடன் இடி இடித்துக் கொண்டிருந்தது. ஒரு சிறிய குழந்தை வந்து உறங்குகின்ற துரையைக் கையைப் பிடித்து வெளியே வெகு வேகமாக இழுத்து வந்தது. மறுநிமிடம் பேரிரைச்சலுடன் அக்கட்டிடத்தின் கூரை கீழே விழுந்து நொறுங்கியது. நடந்தது அறிந்த துரை திரும்பிப் பார்த்தார். தன்னை எழுப்பிய குழந்தை நடந்து சென்று கொண் டிருப்பதைக் கண்டார். கூப்பிட்டார், கேட்கவில்லை போலும், குழந்தை

Koviloor Digital Library

திரும்பாமல் சென்று கொண்டிருந்தது. துரை பின்தொடர்ந்து வேகமாகச் சென்றார். அவர் அக்குழந்தையைச் சென்றடையும்முன் அக்குழந்தை கோயிலுள் புகுந்து மறைந்துவிட்டது. அன்னை வேதாம்பிகை - வேதநாயகியே குழந்தை வடிவில் வந்து தன்னைக் காப்பாற்றியதை உணர்ந்து திகைப்பும் சொல்லொணா மகிழ்வும் கொண்டார். அம்பிகையைத் தரிசிக்க எண்ணினார். பிற மதத்தினர் ஆலயத்துள் புக அனுமதிக்கப்படுவதில்லை யாதலால் அந்நெறியை மீற மனமின்றி, அம்பாள் சந்நிதிக்கு நேரே வெளிமதிலில் துவாரம் செய்வித்து அதன் வழியே அம்பாளைக் கண்குளிரத் தரிசித்தார். அர்த்த ராத்திரியில் வெளியே வந்து தன் உயிர் காத்த அம்பிகைக்கு துரை தன் நன்றிக் கடனாகப் பள்ளியறையில் வைப்பதற்குத் தந்தத்தாலான ஊஞ்சல் ஒன்றைப் பரிசாக அளித்தான்'' இவ்வரலாறு ''கொங்கு நாட்டுக் கோயில்கள்'' பற்றி அன்பர் திரு. சிவகளை மு. சுப்பையா அவர்கள் எழுதியுள்ள நூலில் இடம் பெற்றுள்ளது.

''பந்தார் விரல் மடவாள் பாகமா நாகம் பூண்டு ஏறதேறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக்கனி யுதிர்க்குந் திருநணாவே''

(சம்பந்தர்)

திருப்புகழ்

கலைமேவு ஞானப் பிரகாசக் - கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே - பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின் - மனமேவு வாலக்குமரேசா
சிலைவேட சேவற்கொடியோனே - திருவாணிகூடற் பெருமாளே

-''துஞ்சலெனும்
இன்னலகற்ற இலங்கு பவானிக்கூடல்
என்னு நணாவின் இடை இன்னிசையே''.

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. சங்கமேஸ்வரர் தேவஸ்தானம்
பவானி - 638 301 - ஈரோடு மாவட்டம்.

Koviloor Digital Library

262/4. கொடிமாடச் செங்குன்றூர்

திருச்செங்கோடு



Koviloor Digital Library

கொங்கு நாட்டுத் தலம்.

தற்போது திருச்செங்கோடு என்று வழங்கப்படுகின்றது. சேலம், ஈரோடு, நாமக்கல் முதலிய ஊர்களிலிருந்து பேருந்தில் செல்லலாம். (ஈரோட்டிலிருந்து 18 கி.மீ. நாமக்கல்லிலிருந்து 32 கி.மீ.)

சிவத்தலமாகயிருப்பினும் இது முருகப்பெருமானுக்கு மிகவும் உகந்த தலமாகும். மலைமீது கோயில் உள்ளது. மேலமாட வீதியி லிருந்து பார்த்தால் இம்மலையே பார்ப்பதற்கு நாகம் போன்றிருப்பதால் நாகாசலம் நாககிரி என்றும் பெயர்.

''நாகாசல வேலவ'' என்பது கந்தர் அநுபூதித் தொடர். அர்த்த நாரித்தலம். மலை சிவந்தநிறமாக இருப்பதால் செங்கோடு என்றும் பெயர். தெய்வத்திருமலை, நாகமலை, உரசகிரி எனப் பல பெயர்க ளுண்டு.

இறைவன் - அர்த்தநாரீஸ்வரர்

இறைவி - பாகம்பிரியாள்,

முருகன் - செங்கோட்டு வேலவர்

தலமரம் - இலுப்பை

சம்பந்தர் பாடல் பெற்றது.

மலைமீதிருந்து பார்த்தால் காவிரி ஆறு தெரியும். கோயிலுக்குச் செல்ல மலைமீது 1200 படிகள் ஏறவேண்டும். படிக்கட்டுக்களில் பாம்பு உருவங்கள் உள்ளன. ஓரிடத்தில் நீளமான பாம்பு வடிவத் திலேயே (20 அடி நீளம்) ஏறும் வழி அமைந்துள்ளது. ஏறிச் செல்லும்போது குரங்குகளின் தொல்லைகள் உண்டு. வழியில் பல தீர்த்தங்களும் உள்ளன. இப்படிகளுள் 60 ஆம் படி மிகச்சிறப்பு வாய்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கு நின்று சத்தியம் செய்தால் அது நீதிமன்றத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நிலை இருந்ததாம். இத்தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம், தேவாரம், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் முதலியவைகளில் உள்ளன. மலையேறி ஐந்தடுக்குள்ள ராஜகோபுரம் கடந்து, கீழிறங்கி, இறைவன் சந்நிதிக்குச் செல்லுமுன் செங்கோட்டுவேலவர் சந்நிதி அழகான நின்ற திருவுருவம். கிழக்கு நோக்கிய சந்நிதி. வலக்கையில் மேலே ஊன்றி இடக்கையை இடுப்பில் ஊன்றியவாறு நிற்கின்ற நிலையைக் கண்டால் நிச்சயமாக அந்த அழகை அனுபவிக்க 'நாலாயிரம் கண்கள் தேவை.' உணர்ந்த அநுபவித்த, ஏக்கவெளிப்பாடே அருணகிரிநாதரின் வாக்கு என்பதை நேரில் அறியலாம். வெள்ளைப் பாஷணத்தால் ஆன சுயம்பு மூர்த்தி.

Koviloor Digital Library

உளிபடாதது விடங்கம் - அடியில் சதுரபீடம். சுவாமியின் நெற்றில் பள்ளம் - சந்தனத்தை அப்பியுள்ளார்கள் திலகமாக; தலையில் ஜடா மகுடம் இடக்கையில் சேவற்கொடி, சந்நிதி முன்பு ஒருபுறம் விநாயகர், மறுபுறம் அருணகிரிநாதர், நக்கீரர்சிலையும் உள்ளது. தெய்வத் திருமலைச் செங்கோட்டு வேலவன் சந்நிதி தரிசனமே தெய்வீகந்தான். எதிரில் உள்ள வேளாளக்கவுண்டர் மண்டபத்தூண் ஒன்றில் வீரபத்திரர் உருவம் தத்ரூபமாக உள்ளது. சிற்பக்கலையழகு வாய்ந்தது. மற்றொன்றில் அர்ச்சுனன் தவக்கோலம், வேடன், குருவிக்காரியின் வடிவங்கள் முதலியன மிக அழகாக வடிவாக்கப்பட்டுள்ளன.

செங்கோடனின் உற்சவத் திருமேனி கிருத்திகை நாள்களில் தங்கக் கவசம் சார்த்தி, தங்கமயிலேறித் தங்கக்காவடியுடன் புறப்பாடு நடை பெறுகின்றது. திருமுறைத்தலமான இஃது அர்த்தநாரீஸ்வரத் தலமாகும். அர்த்தநாரீஸ்வரர் மூலவர் - நின்ற திருமேனி - (இலிங்க வடிவமில்லை) மேற்கு நோக்கிய சந்நிதி, மூலவர் உருவ அமைப்பு அற்புதமாக உள்ளது. ஒரு பாதி புடவை - ஒரு பாதி வேஷ்டி அலங்காரம். பெண் பாகத்தில் ஜடை. முழுவடிவமும் வெள்ளைப் பாஷாணத்தால் ஆனது. இந்தக் கோலத்திலேயே அலங்காரத்துடனேயே (மூலவர்) காட்சி தருகின்றார். திருவடியின்கீழ் குளிர்ந்த நீர் சுரக்கின்றது. இது தேவ தீர்த்தம் எனப்படுகிறது. இத்தீர்த்தப் பிரசாதம் நாடொறும் வரும் அன்பர்க்கு வழங்கப்படுகிறது. அமாவாசை நாள்களில் இத்தீர்த்தம் 3, 4 அண்டாக்களில் சேகரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகிறது. மூலவர் முன்னால் மரகதலிங்கமும், பிருங்கி மகரிஷியின் உருவரும் உள்ளது.

அர்த்தநாரீஸ்வரர் உற்சவத் திருமேனி மிக அற்புதமாகவுள்ளது. ஆண்பக்கத்தில் (வலம்) கையில் தண்டாயுதம், பெண்பக்கத்தில் (இடம்) கை இடுப்பில் வைத்த அமைப்பு; மார்பில் பெண் பக்கத்தில் கொங்கை, திருவடிகளில் ஒன்றில், சிலம்பு மற்றொன்றில் கழல், கண்களில் கூட ஆண், பெண் பாக வேறுபாடு ஒரு மயிரிழையில் அகல மாகவும் குறுகலாகவும் காட்டப்பட்டுள்ளன.

கேதாரகெளரி, மரகதலிங்கத்தைப் பூசித்து, இறைவனின் பாகத்தைப் பெற்றதாக வரலாறு சொல்லப்படுகிறது. கேதாரகெளரி உற்சவத்திருமேனி உள்ளது. சிலாரூப தக்ஷிணாமூர்த்தி அழகுடையதாகத் திகழ்கிறது. ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி, ஸ்ரீ தேவி, பூதேவியுடன் உற்சவத் திருமேனியும் உள்ளது. இச்சந்நிதி, நம்மாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்டதாகும்.

Koviloor Digital Library

கோயில் நல்ல நிலையில் அமைந்துள்ளது. மேலிருந்து நோக்கின் ஊர் முழுவதையும் நன்கு காணலாம்.

இத்தலத்திற்கு வீரகவிராஜபண்டிதரால் பாடப்பட்ட தலபுராணம் உள்ளது. ஊரின் நடுவில் சுகந்த குந்தளாம்பிகை சமேத கயிலாசநாதர் கோயில் உள்ளது.

திருஞான சம்பந்தர் கொங்கு நாட்டுத் தல யாத்திரையில் முதலில் இப் பதியை வணங்கி, பின்பு சில ஊர்களுக்குச் சென்றுவிட்டுத் திரும்பவும் இங்கு வந்தபோது, அவருடன் வந்த அடியார்களை 'நளிர்சுரம்' பற்றி வருத்த 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் பதிகம்பாடி, 'தீவினைவந்தெம்மைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்' என ஆணையிட்டு அந்நாடு முழுவதும் பிணிதீர்த்தார் என்பது பெரியபுராண வரலாறு.

இத்தலத்தில் முதலாம் இராசராசன், சுந்தரபாண்டியத் தேவர், மைசூர்கிருஷ்ணராஜ உடையார் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலத்துச் சொல்லப்படும் ஒரு செய்தி:- இங்கு வாழ்ந்த குணசீலர் என்ற புலவருக்காகச் செங்கோட்டுவேலர் மாடு மேய்க்கும் சிறுவனாக வந்து குணசீலரின் கடைமாணாக்கர் என்று தன்னைக் கூறிக்கொண்டார். பாண்டிப்புலவரேறு என்பவர்;

''சமரமுகத் திருச்செங்கோடு சர்ப்பசயிலமெனில் அமரிற்படம் விரித்து ஆடாடதென்னே'' - என்று பாடி அதற்குமேல் எழுதமுடியாது திண்டாடினார் அப்போது, சிறுவனாக வந்த வேலவன் ''அஃது குமரன் திருமால் முருகன் மயில்வாகனம் கொத்துமென்றே'' - எனப் பாட்டினை முடித்து அப்புலவரைத் திரும்பிப் போகும்படிச் செய்தார் என்ற செய்தி, இம்மலையடிவாரத்தில் நிகழ்ந்ததாகுமென்று பேசப் படுகிறது. வைகாசியில் பெருவிழா நடைபெறுகிறது. வீரகவிராஜ பண்டிதர் எழுதிய தலபுராணம் உள்ளது. வண்ணச்சரபம் அவர்களும் பத்துப் பதிகங்கள் பாடியுள்ளார்.

''வெந்த வெண்ணீ றணிந்து விரிநூல் திகழ்மார்பினல்ல
பந்தணவும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பவரே. *(சம்பந்தர்)*

''அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லுமஃ தறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்''. *(சம்பந்தர்)*

தலம் - 51

Koviloor Digital Library

''கூகா வென என்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே''. *(கந்தர் அநுபூதி)*

''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே''.
(கந். அலங்)

''தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வை வைத்த வேற்படை வானவனே மறவேன் உனையான்
ஐவர்க் (கு) இடம்பெறக் காலிரண்டு ஒட்டி அதிலிரண்டு
கை வைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே''. *('')*

''மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல் பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே''. *('')*

திருப்புகழ்

அன்பாக வந்து உன்றாள் பணிந்து
ஐம்பூத மொன்ற நினையாமல்
அன்பால் மிகுந்து தஞ்சாரு கண்க
ளம்போருகங்கள் முலைதானும்
கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடுகின்றன குழலாரைக்
கொண்டே நினைந்து மன்பேதுமண்டி
குன்றா மலைந்து அலைவேனோ
மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை யணிவோனே
வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே தொலைந்த வடிவேலா
சென்றே யிடங்கள் கந்தா எனும் பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்ச மொன்றாய் வளர்ந்த
செங்கோட மர்ந்த. பெருமாளே.

Koviloor Digital Library

-''செம்மையுடன்
அங்குன்றா தோங்கும் அணிகொள் கொடிமாடச்
செங்குன்றூர் வாழுஞ்சஞ்சீவியே''. (அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்
திருச்செங்கோடு 637211 நாமக்கல் மாவட்டம்.

263/5. வெஞ்சமாக்கூடல்

வெஞ்சமாங்கூடலூர்

கொங்கு நாட்டுத்தலம்.

மக்கள் வழக்கில் வெஞ்சமாங்கூடல், வெஞ்சமாங்கூடலூர் (Venjaman Gudalore) என வழங்குகிறது.

1. கரூர் - அரவக்குறிச்சி சாலையில் 13 கி.மீ. சென்று, சீத்தப்பட்டி (அ) ஆறுரோடு பிரிவில் 8 கி.மீ. செல்ல வேண்டும்.

2. கரூர் - ஆற்றுமேடு நகரப் பேருந்து (Town Bus) வெஞ்சமாங் கூடல் வழியாகச் செல்கிறது.

3. இதுதவிர, கரூரிலிருந்து திண்டுகல்லுக்குப் போகும் இரு பேருந்துகளும் இந்தக் கிராமம் வழியாகப் போகின்றன. தனிப் பேருந்தில், காரில், Vanல் செல்வோர் கோயில் வரை செல்லலாம்.

வேடசந்தூர் பக்கத்திலுள்ள அணைக்கட்டு உடைந்து, குடக னாற்றில் வெள்ளப்பெருக்கெடுத்ததனால் இக்கோயில் கருங்கற்கள் 2 கி.மீ. தூரம் அடித்துச் செல்லப்பட்டன என்பதிலிருந்தே வெள்ளப் பெருக்கின் நிலைமையை உணரலாம். ஊரும் அழிந்தது. இந்நிலை நேர்ந்த பல்லாண்டுகட்குப் பின்பு, 5-5-82ல் ஈரோடு அருள் நெறித் திருக்கூட்டத்தார் இக்கோயில் திருப்பணியைத் தொடங்கி, பெருமுயற்சி செய்து, பல லட்சங்கள் திரட்டி, திருக்கோயிலைப் புதியதாக எடுப் பித்து, 26-2-1986 அன்று (குரோதன ஆண்டு மாசி 14 - புதன்கிழமை) மகா கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்துள்ளனர் - பெருஞ்சாதனை.

இத்தலம், வெஞ்சமன் என்னும் வேட்டுவ மன்னன் ஆண்ட தாலும்; அமராவதியின் கிளை நதியான சிற்றாறு, அமராவதியுடன்

Koviloor Digital Library

கூடுமிடத்தில் உள்ளதாலும் (கூடல்) வெஞ்சமாக்கூடல் என்று பெயர் பெற்றது. கோயிலுக்குப் பக்கத்தில் ஓடும் ஆறு, குடகனாறு, குழகனாறு, குடவன் ஆறு எனப்பலவாறு அழைக்கப்படுகிறது. இத்தலத்துள்ள இறைவன் ஒரு சமயம், உமையே ஒரு முதிர்ந்த கிழவியாக வடிவு கொண்டு வீற்றிருக்க, சுந்தரர் பாட்டிற்கு மகிழ்ந்து தன் பிள்ளைகளை அக்கிழவியிடம் ஈடு காட்டிப் பொன் வாங்கிச் சுந்தரருக்கு அளித்தார் என்ற செய்தியைக் கொங்கு மண்டலச்சதகச் செய்யுள் தெரிவிக்கிறது. இச் செய்தி பெரிய புராணத்துள் இல்லை. அச் சதகப் பாடல் வருமாறு:-

''கிழவேதி வடிவாகி விருத்தையைக் கிட்டி என்றன்
அழகாகும் மக்கள் அடகு கொண்டு அம்பொன் அருளுதி என்று
எழுகாதலால் தமிழ்பாடிய சுந்தரர்க்கு ஈந்தஒரு
மழுவேந்திய விகிர்தேசுவரன் வாழ் கொங்கு மண்டலமே.''

இறைவன் - கல்யாண விகிர்தேஸ்வரர், விகிர்தநாதேஸ்வரர்

இறைவி - மதுரபாஷிணி, பண்ணோர்மொழியம்மை, விகிர்தநாயகி.

தீர்த்தம் - குடகனாறு.

சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

அருணகிரிநாதரின் திருப்புகழும் உள்ள தலம். இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. உள்ளே நுழைந்ததும் வலப்பால் சூரியனும் இடப்பால் சந்திரனும் உளர். வெளிச்சுற்றில் பஞ்சலிங்கங்கள் உள்ளன. வள்ளி தெய்வயானை உடனாக ஆறுமுகப் பெருமான் மயிலின் மீது காலை வைத்துன்றிய நிலையில் காட்சிதருவது தரிசிக்கத் தக்கது.

நவக்கிரகம், பைரவர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், அறுபத்துமூவர் சந்நிதிகள் உள்ளன. நாயன்மார்களின் மூர்த்தங்களின் கீழ், நாடு, மரபு, காலம், திருநட்சத்திரம் முதலிய விவரங்களும் எழுதப்பட்டுள்ளன.

உற்சவ மூர்த்தங்களுள்; சோமாஸ்கந்தர், பல்லக்குச் சொக்கர், சுப்பிரமணியர், முதலியவை தரிசிக்கத்தக்கன. நடராசதரிசனம் நம்மை மகிழ்விக்க, மேலே சென்றால் மூலவர் சந்நிதி வாயிற் கதவுகளில் கொங்குநாட்டுத் தலங்கள் ஏழிலும் உள்ள மூர்த்தங்கள் செதுக்கப்பட்டுள்ளது மிகச் சிறப்பாகவுள்ளது. கோஷ்டமூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர்.

Koviloor Digital Library

அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அம்பாள் நின்ற திருக்கோலம். நாடொறும் இரண்டு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இத்திருக்கோயிலைப் புதியதாக நிர்மாணித்த பெரும்பணிக்குத் துணையான பெருமக்கள் தவத்திரு. சுந்தரசுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், பொள்ளாச்சி தொழிலதிபர் திரு. N. மகாலிங்கம், ஈரோடு திரு. M. அழகப்பன், திரு. A.V. இராமச்சந்திர செட்டியார், மற்றும் உள்ளோராவார். மகாகும்பாபிஷேக விழாவில் காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீன குருமகாசந்நிதானம் 230வது பட்டம், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள், கௌமார மடாலயம் தவத்திரு சுந்தர சுவாமிகள் பேரூர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்த வாரியார்; நெரூர் சுவாமிகள் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அருகில் உள்ள திருமுறைத் தலம் 'கருவூர் ஆநிலை' - கரூர் ஆகும். கல்வெட்டில் இறைவன் பெயர் 'வெஞ்சமாக்கூடல் விகிர்தர்' என்றும் இறைவி பெயர் 'பனிமொழியார்' என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

''பண்ணேர் மொழியாளை யொர் பங்குடையாய்
படுகாட்டகத் தென்றுமோர் பற்றொழியாய்
தண்ணார் அகிலுந்நல சாமரையும் மலைத்
தெற்று சிற்றாறதன் கீழ் கரைமேல்
மண்ணார் முழவுங் குழலுமியம்ப
மடவார் நடமாடு மணியரங்கில்
விண்ணார் மதிதோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே''.

(சுந்தரர்)

திருப்புகழ்

வண்டுபோற் சாரத் தருள்தேடி
மந்திபோற் காலப் பிணிசாடிச்
செண்டுபோற் பாசத் துடனாடிச்
சிந்தைமாய்த்தேசித் தருள்வாயே
தொண்டராற் காணப் பெறுவோனே
துங்கவேற் கானத் துறைவோனே
மிண்டராற் காணக் கிடையானே
வெஞ்சமாக் கூடற் பெருமாளே.

Koviloor Digital Library

-''தங்குமன
வஞ்சமாக்கூடல் வரையாதவர்சூழும்
வெஞ்ச மாக்கூடல் விரிசுடரே''. (அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. விகிர்தநாதேஸ்வரர் திருக்கோயில்
வெஞ்சமாங்கூடலூர் & அஞ்சல் - 639109
(வழி) மூலப்பட்டி - அரவக்குறிச்சி வட்டம் - கரூர் மாவட்டம்.

264/6. திருப்பாண்டிக்கொடுமுடி

கொடுமுடி

கொங்கு நாட்டுத்தலம்.

தற்போது மக்கள் 'கொடுமுடி' என்று வழங்குகின்றனர். திருச்சி-ஈரோடு இருப்புப் பாதையில் உள்ள ஒரு நிலையம்.

ஈரோட்டிலிருந்து செல்ல பேருந்து வசதி உள்ளது. (ஈரோட்டிலிருந்து 39 கி.மீ.) சுயம்புமூர்த்தி தலம் - திருப்பாண்டிக் கொடுமுடி. கோயில்-கறையூர். ''கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி'' என்பது திருமுறைத் தொடர்.

Koviloor Digital Library

இறைவன் - மகுடேஸ்வரர், கொடுமுடிநாதர். (கல்வெட்டில் 'மலைக்கொழுந்தீசர்' என்ற பெயருள்ளது.)

இறைவி - மதுரபாஷிணி, திரிபுரசுந்தரி, பண்மொழிநாயகி, வடிவுடைநாயகி.

தீர்த்தம் - தேவதீர்த்தம், பிரமதீர்த்தம், காவிரி. தலமரம் - வன்னி.

மூவர் பாடல் பெற்ற தலம். பக்கத்தில் காவிரி உள்ளது. கொங்கு நாட்டில் மூவர் பாடலும் பெற்ற தலம் இஃதொன்றேயாம்.

ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் நடந்த போட்டியில் ஆதிசேஷன் சுற்றிய மேருவின் ஆயிரம் சிகரங்களுள் ஒன்று, ஐந்து மணிகளாக உடைப்பட்டுச் சிதறியது.

அவற்றுள் சிவப்புமணி திருவண்ணாமலையாகவும், மரகதம் ஈங்கோய் மலையாகவும், மாணிக்கம் திருவாட்போக்கியாகவும், நீலம் பொதிகையாகவும், வைரம் கொடுமுடியாகவும் ஆயின என்பது தலபுராணம்.

மேருமலையின் ஒரு கொடுமுடி (சிகரம்) இங்கு வீழ்ந்தமையால் இப்பெயர் வந்தது என்பது வரலாறு. அதுவே சிவலிங்கமாக உள்ளது. சிவலிங்கம் மிகவும் குட்டையானது. சிகர வடிவில் உள்ளது. அகத்தியர் தழுவிய விரல் தழும்பு மேலே உள்ளது. சதுரபீடம். பாண்டிய மன்னனின் விரல் வளர்ந்து குறை தீர்ந்த தலமாதலின் 'பாண்டிக் கொடுமுடி' என்றாயிற்று (அங்கவர்த்தனபுரம்) பரத்வாசர், அகத்தியர் வழிபட்ட தலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமசிவாயத் திருப்பதிகம் பாடியருளிய தலம். இத்தலத்தை வழிபட்டால் சிவன், விஷ்ணு, பிரமன் ஆகிய மூவருடைய தரிசனம் கிடைக்கிறது-மும்மூர்த்தித்தலம்.

இத்திருக்கோயிலில் அழகான உற்சவ மூர்த்திகள் உள்ளன. இவைகளைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

சித்திரை பௌர்ணமியில் பரத்துவாசருக்கு நடனக்காட்சி தந்த குஞ்சிதபாத நடராசர் முயலகன் இல்லாமல் நின்று சதுர்முகத்தாண்டவ நடனமிடுவதாக அமைந்துள்ள மூர்த்தம். இதுபோல் காண்பது அரிது. (2) பிக்ஷாடனர் (3) சந்திரசேகரர் (4) உமாமகேஸ்வரர் (5) திரிபுரசம்ஹார மூர்த்தி - நின்றநிலை. உள்பிரகாரத்தில் நால்வர் சந்நிதிகளும் தொடர்ந்து அறுபத்துமூவர் திருமேனிகளும் உள்ளன.

இங்குள்ள தட்சிணாமூர்த்தியின் கீழ் முயலகன் வடிவமும் சனகாதி நால்வர்களுக்குப் பதிலாக ஒருவருடைய வடிவமுமே உள்ளது.

Koviloor Digital Library

தட்சிணாமூர்த்திக்குச் சடாமுடி உள்ளது. ரிஷபம் உள்ளது. காவிரி கண்ட விநாயகர் சந்நிதி உள்ளது. ஆடிப்பெருக்கு இத்தலத்திலும் விசேஷம். உள்சுற்றில் கஜலட்சுமி, உமாமகேஸ்வரர், சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. சுப்பிரமணியரைத் தாங்கும் மயில் வழக்கத்திற்கு மாறாக எதிர்த் திசையைப் பார்த்த வண்ணம் உள்ளது. பெருமானின் பன்னிருகைகளிலும் ஆயுதங்கள் உள்ளன. நடராஜர், சிவகாமசுந்தரி சந்நிதி மிக அழகு.

அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. பிராகாரத்தில் சப்தமாதர் உருவங்கள் கல்லில் உள்ளன. சரஸ்வதி சந்நிதி உள்ளது.

கோயிலுள் வெளிச்சுற்றில் மிகப் பெரிய வன்னி மரம் உள்ளது. மிக வயதான மரம், கீழே பிரம்மா (கற்சிலை) 3 முகங்களோடு காட்சி தருகிறார். வன்னி மரத்தையே ஒருமுகமாகப் (தவஞ்செய்து) பெற்றார் என்பது வரலாறு. மூன்று தீர்த்தங்கள் உள்ளன. துலா ஸ்நானம் இங்குச் செய்வது கங்காஸ்நானத்திற்குச் சமம் என்னும் குறிப்பு சேது புராணத்தில் உள்ளது. பிரம்மாவுக்குப் பக்கத்தில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. பெருமாள் (வீரநாராயணப் பெருமாள்) மகாலட்சுமித்தாயாருடன் காட்சித்தருகிறார். சனீஸ்வரர், காலபைரவர் சந்நிதிகளும் உள்ளன.

சுந்தரபாண்டியன் கேசரி காலத்திய கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. இங்குள்ள காவிரியின் நடுவிலுள்ள 'அகத்தியர் பாறையில்' தான், அகத்தியரின் கமண்டல நீரைக் காகம் உருக்கொண்டு விநாயகர் கவிழ்த்த நிகழ்ச்சி நடந்ததென்பர். சித்திரையில் பெருவிழா நடைபெறு கிறது.

''பெண்ணமர் மேனியினாரும் பிறைபுக்கு செஞ்சடையாரும்
கண்ணமர் நெற்றியினாருங் காதமருங் குழையாரும்
எண்ணமருங் குணத்தாரும் இமையவரேத்தநின்றாரும்
பண்ணமர் பாடலினாரும் பாண்டிக்கொடு முடியாரே''

(சம்பந்தர்)

''சிட்டனைச் சிவனைச் செழுஞ்சோதியை
அட்ட மூர்த்தியை ஆலநிழலமர்
பட்டனைத் திருப்பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழநம் வினை நாசமே'' *(அப்பர்)*

''மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே'' *(சுந்தரர்)*

Koviloor Digital Library

திருப்புகழ்

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட்டலையப் புகுதாதே
திருவருட்கருணைப் ப்ரபையாலே
திரமெனக்கதியைப் பெறுவேனோ
அரிய யற்கறிதற் கரியானே
அடியவர்க்கெளியற் புதநேயா
குருவெனச் சிவனுக் கருள்போதா
கொடிமுடிக் குமரப் பெருமாளே.

''-துன்னியருள்
வேண்டிக் கொடுமுடியா மேன்மைபெறு மாதவர்சூழ்
பாண்டிக் கொடுமுடியிற் பண்மயமே''

(அருட்பா)

அஞ்சல் முகவரி:-

அ/மி. மகுடேஸ்வரர் தேவஸ்தானம்
கொடுமுடி - *638 151.*
ஈரோடு மாவட்டம்.

265/7.கருவூர்

கரூர்

கொங்கு நாட்டுத் தலம், திருச்சி - ஈரோடு பாதையில் உள்ள புகை வண்டி நிலையம். தற்போது மக்கள் வழக்கில் 'கரூர்' என்றழைக்கப் படுகிறது. பெரிய ஊர் சென்னை, சேலம், திருச்சி, ஈரோடு முதலிய பல ஊர்களிலிருந்தும் செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன.

ஊருக்குக் 'கருவூர்' என்றும் கோயிலுக்கு 'ஆநிலை' என்றும் பெயர். காமதேனு வழிபட்டதலம். இதனால், சுவாமிக்குப் பசுபதி என்ற பெயருண்டு.

புகழ்ச்சோழ நாயனார் ஆண்டபதி. எறிபத்த நாயனார் பிறந்த தலம், சிவகாமியாண்டார் வாழ்ந்து தொண்டுசெய்த தலம். திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவரின் அவதாரத் தலம்.

Koviloor Digital Library

இறைவன் - பசுபதீஸ்வரர், பசுபதி நாதர், பசுபதி.

இறைவி - கிருபாநாயகி, சௌந்தர்ய நாயகி,

Koviloor Digital Library

தீர்த்தம்-ஆம்பிரவதி (அமராவதி) நதி.

சம்பந்தர் பாடிய தலம், மூலவர் சுயம்பு மூர்த்தி, சிறிது சாய்வாக உள்ளது. (கருவூராருக்காகச் சுவாமி சாய்ந்து கொடுத்தார் என்பது செவிவழிப் பெற்ற செய்தி) சோழர் காலத் திருப்பணி பெற்ற தலம். ஆவுடையார் சதுரமாக உளள்து.

கோயிலுக்குள் நுழையும்போது கருங்கல்லால் ஆன கொடிமரம் (துவஜஸ்தம்பம்) உள்ளது. இதில் ஒரு பக்கத்தில் புகழ்ச் சோழ நாயனார் கையில் தலையோடு கூடிய தட்டுடன் நிற்கும் சிற்பமுள்ளது. மறு புறத்தில் பசு, சிவலிங்கத்தை நாவால் வருடுவதுபோலவும், அதன்பின் கால்களுக்கிடையில், பால் மடிக்கு நேர்கீழே சிவலிங்கம் அமைந் துள்ளதான சிற்பமும் உள்ளது.

புகழ்ச் சோழர் மண்டபம் - நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. சோழர்கள் இருந்து அரசாண்ட ஐந்து தலைநகரங்களுள் இந்நகரமும் ஒன்று. விசாலமான கோயில். கருவூர்த் தேவர் சாமதிக்கோயில் தனியே உள்ளது. (கருவூர்ச்சித்தர் எனப்படுபவர் வேறு) கோயிலுள் மூலவரைத் தரிசிக்கச் சேவார்த்திகள் செல்லும் நுழைவு வாயிலில் வலப்பக்கமுள்ள கல்தூண் ஒன்றில் - மத்தியில் சேவார்த்திகள் செல்லும் பக்கமாகவே கீழ்க்காணுமாறு சக்கரம் ஒன்று உள்ளது. இதன் பொருள் எவர்க்கும் தெரியவில்லை, விசாரித்ததில், இக்கோயில் அமைக்கப்பட்ட காலத் தைப் பற்றிய குறிப்பு அச்சக்கரம் என்கின்றனர். உண்மை விளங்க வில்லை. (இதைக் காண்போர் அப்பொருள் தெரிந்து வெளிப்படுத்து வாராயின் சமய உலகம் அவர்க்கு என்றும் நன்றியுடையதாகும்.)

அச்சக்கரம் வருமாறு:-



Koviloor Digital Library

நடராஜர் சந்நிதியும், கோஷ்டமூர்த்தமாக தட்சிணாமூர்த்தி முதலியவையும் உள. பிராகாரத்தில் ஒரு சுவாமி சந்நிதியும், இலக்குமி சந்நிதியும் அடுத்து ஆறுமுகர் சந்நிதியும் உள்ளது. (இறையனார் களவியலுரையில் 'கருவூர் உள்ளிவிழா' என்று வருகின்ற குறிப்புக்கும் உண்மைப் பொருள் விளங்கவில்லை என்ற ஏக்கமும் ஓர் அன்பரின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டது.

மூலவர் - சிவலிங்கத்தின் மீது மாட்டுக்குளம்பு பட்டது போல இருபக்கங்களிலும் பள்ளங்கள் உள்ளன. மேற்புறம் சொரசொரப்பாகவும் உள்ளது.

இரு அம்பாள் சந்நிதிகள் இருக்கின்றன. இது பற்றித் தெரியவரும் செய்திகள்:- இவ்விரு அம்பாள் சந்நிதிகளுள் கிழக்கு நோக்கியுள்ள அலங்கார நாயகி சந்நிதியே ஆதியானது. மற்றதாகிய சௌந்தர நாயகி சந்நிதி பற்றி ஒரு வரலாறு சொல்லப்படுகிறது. (1) அதாவது கருருக்குப் பக்கத்தில் ஆண்டவர் கோயிலூர் என்னும் ஊர் உள்ளது. அங்கு வாழ்ந்து வந்த ஒரு பெண், ஆண்டாள்போல - இவ்விறைவனை மணந்துகொண்டனளாம்; அதனால்தான் சுவாமி, திருவிழாவில் ஒரு நாள் அவ்வூருக்கு இன்றும் சென்று வருகின்றதாம். மற்றொரு செய்தி (2) மாலிக்காபூரின் படையெடுப்பின்போது அம்மன் திருமேனி புதைத்து வைக்கப்பட்டது. அது பிறகு தோண்டியபோது கிடைக்கவில்லை. ஆதலால் புதிய அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்பு, புதைத்து வைக்கப்பட்ட முன்னதும் கிடைத்து விட்டது. அனதால் அதையும் இரண்டாவதாகப் பிரதிஷ்டை செய்து விட்டனர் என்பது. நவக்கிரகத்திற்கு எதிரில் பைரவர் சந்நிதி, சற்று உயரத்தில் உள்ளது. கோயில் சந்நிதி வீதிக்கு கிழக்கில் நான்கு வீதிகள் கூடுமிடத்தில் (தெருவில்) தான் பெரியபுராணத்தில் வரும் நிகழ்ச்சியான எறிபத்த நாயனார் பட்டத்துயானையை வெட்டிய வரலாறு நடந்ததாம். இவ்விழா இன்றும் நவராத்திரியில் ஒரு நாளில் இவ்விடத்தில், கோவை, **சிவக்கவிமணி** திரு. C.K. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பெறுகின்றது.

மாசி மாதத்தில் ஐந்து நாள்கள் சூரிய ஒளி சுவாமிமீது படுவதாகச் சொல்லப்படுகிறது.

'நீதியார் நினைந்தாய நான்மறை
ஓதியாரொடுங் கூடலார் குழைக்
காதினார் கருவூருளானிலை
ஆதியாரடியார் தமன்பரே.

Koviloor Digital Library

பண்ணினார் படியேற்றர் நீற்றர் மெய்ப்
பெண்ணினார் பிறைதாங்கு நெற்றியர்
கண்ணினார் கருவூருளானிலை
நண்ணினார் நமையாளு நாதரே' *(சம்பந்தர்)*

திருப்புகழ்

மதியால் வித்தனாகி - மனதாலுத்தமனாகிப்
பதிவாகிச் சிவஞான - பரயோகத் தருள்வாயே
நிதியே நித்தியமேயென் - நினைவேநற் பொருளாயோய்
கதியே சொற் பரவேளே - கருவூரிற் பெருமாளே.

-''தீண்டரிய
வெங்கருவூர் வஞ்ச வினைதீர்த்தவர் சூழந்த
நங்கருவூர்ச் செய்யுள் நவரசமே'' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. பசுபதீஸ்வரர் திருக்கோயில்
கரூர் - 639 001.
கரூர் மாவட்டம்.

266. திருஅஞ்சைக்களம்

ஸ்ரீவாஞ்சிகுளம்

மலை (சேர) நாட்டுத்தலம்.

சென்னை - கொச்சி இருப்புப்பாதையில் 'இரிஞாலக்குடா' நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள இத்தலத்தினை அடையலாம், திருச்சூரிலிருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது. மலை நாட்டில் உள்ள ஒரே திருமுறைத்தலம். மக்கள் வழக்கில் ஸ்ரீ வாஞ்சி குளம் என்று வழங்கப்படுகிறது. பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்க வழிபட்ட தலம். தனிப்பேருந்தில் செல்வோர் கோயில்வரை செல்லலாம், சேரமான்பெருமாள் ஆண்ட ஊர் - கொடுங்கோளூர், பக்கத்தில் $1^1/_2$ கி.மீ.ல் உள்ளது. கோயில் அமைந்துள்ள வீதியின் முனையில் மகாதேவர் கோயில் என்று, வழிகாட்டும் பலகை வைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கேரள பாணியில் அமைந்த கோயில்,

இறைவன் - அஞ்சைக்களத்தீஸ்வரர், மகாதேவர்.

இறைவி - உமையம்மை.

தீர்த்தம் - சிவகங்கை

தலமரம் - சரக் கொன்றை

சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

கோயில் பெருவாயில் மேற்கு நோக்கியது - சுவாமி சந்நிதி கிழக்கு. அம்மை சந்நிதி தனியே இல்லை. சுவாமிக்குப் பக்கத்திலேயே உள்ளது. துவஜஸ்தம்பத்தில் அஷ்ட வித்யேஸ்வரர்களின் உருவங்கள் உள்ளன. உள்ளே குளம் உள்ளது. கேரள முறையைப் பின்பற்றி இத்தலத்திலும் வெடிவெடித்துப் பிரார்த்தனை செய்யும் வழக்கமுண்டாம்.

மூலவர் மிகச்சிறிய சிவலிங்கம். கோஷ்டமூர்த்த அமைப்பு இல்லை. விமானத்தில் யோக நரசிம்மர் உருவம் உள்ளது. உக்கிர ரூபம். இங்குள்ள நடராசர், சேரமான் பெருமாள் பூசித்தது. பஞ்சலோகச்சிலை. இதன் கீழ் "திருவஞ்சைக் களத்து சபாபதி" என்றெழுதப்பட்டுள்ளது.

கோயிலுக்குச் செல்லும் போது, வீதியில் நடுவில் உள்ள பெரிய மேடையை "யானைவந்த மேடை" என்று வழங்குகிறார்கள். கயிலாயத்திலிருந்து வெள்ளை யானை வந்து சுந்தரரைக் கயிலாயத் திற்கு ஏற்றிச் சென்றது வரலாறு.

கிழக்கு ராஜகோபுர முன்புறத்தில் நுழையும் போது, பக்கக் கற்சுவரில், யானை உருவங்கள், வெளியிலிருந்து கோயிலுக்குள் செல்வது போலவும், எதிர்ச்சுவரில் கோயிலிலிருந்து வெளியே வருவது போலவும் அமைக்கப்பட்டுள்ளன. சுந்தரர், சேரமான் உருவங்களம் உள்ளன. (யானை வந்து ஏற்றிச் சென்றதாக ஐதீகம்).

சுந்தரர் கயிலை சென்ற ஆடி, சுவாதி நன்னாளன்று, ஆண்டு தோறும் கோவை, சேக்கிழார் திருக்கூட்டத்தார் இத்தலத்திற்கு வந்து சுந்தரர், சேரமானுக்கு அபிஷேகம் செய்து இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். பாதுகாப்பு கருதி, கொடுங்கோளூர் பகவதி. அம்மன் கோயிலில் வைக்கப்பட்டுள்ள சுந்தரர், சேரமான் சிலைகளுக்கு அங்கேயே உள்ள திருமண்டபத்தில் அபிஷேகம் செய்து அலங்கரித்து யானை குதிரை வாகனங்களில் வைத்து, அஞ்சைக் களத்திற்கு விழாப் பொலிவுடன் எடுத்துச் செல்லப்பட்டு, இத்திருவிழா சிரத்தையுடன் நன்கு செய்யப்படுகிறது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சேரமான்

Koviloor Digital Library

பெருமாள் பெயரில் ரூ. 5000/- தேவாரப் பரிசு அறக்கட்டளையும், விழாவில் மகேஸ்வர பூசைக்கு ரூ. 7000/- அறக்கட்டளையும் ஏற்படுத்தியுள்ளார்கள். கேரள வழிபாட்டு முறையில் இத்திருக்கோயிலில் (தந்திரமுறையில்) வழிபாடுகள் நடந்தாலும், இந்த ஒரு நாளில் மட்டும் தமிழ்நாட்டு முறைப்படி ஆகம பூஜை நடைபெறுகின்றது. ஏகாதசருத்ரம் சங்காபிஷேகம், ம்ருத்யுஞ்சஹோமம் முதலியவைகள் இக்கோயிலில் நடத்தப் பெறுவது விசேஷமாகச் சொல்லப்படுகிறது. இங்குள்ள மரவேலைப்பாடுகள் காணத்தக்கவை.

''சிந்தித்து எழுவார்க்கு நெல்லிக்கனியே
சிறியார் பெரியார் மனத்தேறலுற்றால்
முந்தித் தொழுவார் இறவார் பிறவார்
முனிகள் முனியே அமரர்க்கமரா
சந்தித்தடமால் வரைபோற்றிரைக(ள்)
தணியாதிடறுங் கடலங்கரைமேல்
அந்தித் தலைச் செக்கர் வானே யொத்தியா(ல்)
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே''

(சுந்தரர்)

(வெள்ளையானையின் மீதேறிக் கயிலை சென்றபோது சுந்தரர் பாடியருளியது வருமாறு.)

'தானெனைமுன் படைத்தான் அதறிந்து தன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலையுத்தமனே'.

'மந்திரமொன்றறியோன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களாற்றுரிசே செயுங் தொண்டனெனை
அந்தரமால் விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தரமோ நெஞ்சமே நொடித்தான் மலையுத்தமனே'.

'மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேனின்றுகண் டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்பிய வெள்ளையானையின்மேல்
என் உடல் காட்டுவித்தான் நொடித்தான் மலையுத்தமனே'.

'இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திரமாமுனிவர் இவனாரென எம் பெருமான்
நந்தமரூரன் என்றார் நொடித்தான்மலை உத்தமனே'.

Koviloor Digital Library

'ஊழி தொறூழி முற்றுயர் பொன்னொடித்தான் மலையைச்
சூழிசையின கரும்பின் சுவை நாவலவூரன் சொன்ன
ஏழிசையின் தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க்(கு) அறிவிப்பதே.'

(சுந்தரர்)

(நொடித்தான் மலை - திருக்கயிலை)

''நஞ்சைக் களத்துவைத்தநாத எனத் தொண்டர் தொழ
அஞ்சைக் களஞ்சேர் அருவுருவே.' *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

Sri. MAHADHEVA SWAMY TEMPLE
Sri Vanchi Kulam & Post
(Via) Kodungalloor - 680 664.
Kerala (Trichur Dt.)

267. திருக்கோகர்ணம்

கோகர்ணா

துளுவநாட்டிலுள்ள ஒரே திருமுறைத்தலம்.

இத்தலம் கர்நாடக மாநிலத்தில் மேற்குக் கடற்கரையில் உள்ளது.

1) பெங்களூர் சென்று அங்கிருந்து அரசு விரைவுப் பேருந்து (Govt. Express Bus) மூலம் திருக்கோகர்ணம் சென்றடையலாம்..

2) சென்னையிலிருந்து புகைவண்டி மூலம் செல்வதாயின், குண்டக்கல் வழியாக ஹுப்ளி சென்று, அங்கிருந்து பேருந்தில் ஏறித் திருக்கோகர்ணத்தை அடையலாம்.

3) மங்களூரிலிருந்தும் கோகர்ணத்திற்குப் பேருந்து செல்கின்றது. கோ - பசு, கர்ணம் - காது, சுவாமி பசுவின் காதுபோலக் குழைந்து காணப்படுவதால் இத்தலம் இப்பெயரைப் பெற்றது. இதற்கு ருத்ரயோனி, வருணாவர்த்தம் முதலிய பெயர்களுண்டு.

இத்தலத்தை அப்பர், தாம் அருளிய திரு அங்கமாலையில் வைத்துப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

''கால்களாற் பயனென், கறைக்கண்டன் உறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணம் சூழாக், கால்களாற் பயனனென்'.

ஒரு சமயம் இராவணன் இலங்கையில் பிரதிஷ்டை செய்விப்பதற்காகக் கயிலையிலிருந்து (சிவபெருமானிடம்) ஒரு சிவலிங்கம் பெற்று வந்தான். வந்தவன்; வழியில் இத்தலத்தில் சற்று இளைப்பாற எண்ணித் தரையில் வைத்தான். இறைவன் இத்தலத்திலேயே வீற்றிருக்கத் திருவுள்ம் கொண்டாராதலின், அவன் சிறிது நேரம் இளைப்பாறிய பின்னர் அச்சிவலிங்கத்தை மீண்டும் எடுக்க முயன்றபோது அது அசைந்து கொடுக்கவில்லை. அவன் தன் வலிமையனைத்தையும் பயன்படுத்தி எடுக்க முயன்றபோது அச்சிவலிங்கபாணம் பசுவின் காது போலக் குழைந்துவிட்டது. அதனால் தலத்திற்குக் கோகர்ணம் என்று பெயர் வந்தது.

இறைவனுக்கு மகாபலேஸ்வரர் என்று பெயருண்டாயிற்று. ஆலயத்தில் நேரிற்காண்போர், சிவலிங்கம் ஒரு கொட்டைப்பாக்கு அளவில் ஆவுடையாரில் அடங்கியிருப்பதைக் காணலாம். இத்தலத்து வழக்கப்படி மக்கள் திருமேனியைத் தொட்டு நீராடி மலர்சூட்டி வழிபடலாம்.

இறைவன் - மஹாபலேஸ்வரர், பிராணலிங்கேஸ்வரர், ஆத்மலிங்கேஸ்வரர்.

இறைவி - கோகர்ணேஸ்வரி, தாம்ரகௌரி.

சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

இத்தலத்தில் சிவராத்திரி வழிபாடு சிறப்புடையது. இத்தலச் சிறப்பை பிரமோத்திர காண்டம், உபதேசகாண்டம் முதலிய நூல்கள் புகழ்கின்றன. பிரமன், அகத்தியர், காமதேனு, மார்க்கண்டேயர், சரஸ்வதி, வசிட்டர் முதலான மகரிஷிகள், இராவணன், நாகராசன் முதலிய எண்ணற்றோர் இப்பெருமானை வழிபட்டுள்ளனர்.

கோயிலமைப்பு, தமிழ்நாட்டு அமைப்பினின்றும் வேறானது. தெற்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள்ளன. மேற்குவாயில் வழியாகக் கடற்கரைக்குச் செல்லலாம். கோயில் கடற்கரைக்கு அருகில் உள்ளது. தெற்கு வாயில் வழியாக உட்சென்றால் கோபுர வாயில் கடந்ததும் விசாலமான வெளிப்பிராகாரம். உள்வாயில் தாண்டியதும் ரிஷபதேவர் தரிசனம். அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது - பக்கத்தில் தாம்ரகுண்டமென்னும் தடாகம் உள்ளது. உட்புறம்ம மகாபலேஸ்வரர் கருவறை பக்கத்தில் தத்தாத்ரேயர், ஆதிகோகர்ணேஸ்வரர் சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

மூலத்தானம் சிறிய அளவுடையது. நடுவில் சதுரமேடை - அதில் வட்டமான பீடம் - இப்பீடத்தின் தென்கிழக்குப் பகுதியில் வெடிப் பொன்று உள்ளது. இதனைச் சுவர்ணரேகையுள்ள சாளக்கிராம பீடமென்பர். இதன் நடுவில் வெள்ளை நிறமான பள்ளம் உள்ளங்கை யளவு உள்ளது. அப்பள்ளத்தின் நடுவில் கொட்டைப்பாக்கு அளவில் மகாபலேஸ்வரர் சிவலிங்கபாணம் தென்படுகிறது. விரலால் தொட்டுத் திருமேனியை உணரலாம். பசுவின் காதுபோலக் குழைந்து தோற்ற மளிக்கும் அருட்காட்சி நம்மை ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது.

பிராகாரத்தில் விநாயகர், மகிஷாசுர மர்த்தனி சந்நிதிகள். விநாயகர், யானைமுகத்துடனும் இரண்டு திருக்கரங்களோடு நின்ற கோலத்தில் ''துவிபுஜ'' விநாயகராகக் காட்சி தருகின்றார். இவர்முடியில் யானைத் தலையில் இருப்பதுபோல இருபுறமும் மேடும் நடுவில் பள்ளமும் உள்ளது. இஃது இராவணன் குட்டியதால் ஏற்பட்ட பள்ளமென்பர். கோயில் மதிலுக்கு வெளியே வடபால் தரைமட்டத்தின் கீழ் தண்ணீரில் பெரிய சிவலிங்கவடிவில் ஆதிகோகர்ணேஸ்வரர் காட்சி தருகிறார்.

இத்தலத்தில் உள்ள கோகர்ப்பக்குகை கண்டுகளிக்கத்தக்கது. இங்கு 33 தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் கோகர்ண தீர்த்தம், தாம்ர கௌரிநதி, கோடி தீர்த்தம், பிரமகுண்ட தீர்த்தம் முதலியவை சிறப் புடையன. இவற்றுள்ளும் கோடி தீர்த்தம் மிக்க சிறப்புடையது. இத்தலவரலாறு வருமாறு:-

இலங்கை வேந்தன் இராவணன் கயிலைமலை சென்று சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். சிவபிரான் உமையம்மையோடு காட்சியளித்து வேண்டும் வரம் யாதென வினவினார். இராவணன் இலங்கை அழியாதிருக்க அருளவேண்டும் என்றான். அதற்கிசைந்த பெருமான் இராவணன் கையில் பிராண லிங்கத்தைக் கொடுத்து இதனை இலங்கைக்கு எடுத்துச் சென்று பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தால் இலங்கை அழியாது. இச்சிவலிங்கத்தை தலையில் சுமந்து செல்ல வேண்டும். வழியி இதனைக் கீழே வைத்தால் எடுக்கவாராது என அருளி மறைந்தார். இராவணன் பிராணலிங்கத்தைச் சிரசில் சுமந்து இலங்கை நோக்கிச் சென்றான்.

நாரதர் மூலம் இதனை அறிந்த இந்திரன் பிராண லிங்கத்தை இராவணன் எடுத்துக்கொண்டு சென்று பிரதிட்டை செய்தால் இராவணன் அழியான், தேவர்கள் துயர்நீங்காது என எண்ணித் தேவர்கள் புடை சூழக் கயிலைமலை சென்று விநாயகரை வேண்டினான். இந்திரனின் வேண்டுகோளை ஏற்ற விநாயகர் இராவணன் கோகரணத்தை அடையும் வேளையில் அவன் வயிற்றில் நீர்சுரக்குமாறு செய்ய

Koviloor Digital Library

வருணனை ஏவினார். அந்தணச் சிறுவன் போல அவன் முன் தோன்றி நின்றார்.

இராவணன் வந்த அந்தச் சிறுவனை நோக்கிச் சிவலிங்கத்தை அச்சிறுவன் கையில் கொடுத்துச் சிறுநீர் கழித்து வருமளவும் அதனைக் கையில் வைத்துக்கொண்டு நிற்குமாறு வேண்டினான். சிறுவனாக வந்த விநாயகர் இராவணனை நோக்கி என்னால் சுமைபொறுக்க இயலாத நேரத்தில் மூன்றுமுறை உன்னை அழைப்பேன் அதற்குள் வரா விட்டால் நிலத்தில் வைத்து விடுவேன் என அருளினார். இராவணனும் இசைந்து சென்றான். நெடுநேரம் ஆகியும் அவன் வராததால் மூன்றுமுறை, அழைத்து சிவலிங்கத்தைப் பூமியில் வைத்து விட்டார். இராவணன் வந்து சிவலிங்கத்தை இருபது கரங்களாலும் எடுக்க முயன்றான். பெருமான் பசுவின் காதுபோலக் குழைந்து காட்டினார். இராவணன், மகாபலம் உடையவர் இவ்விறைவர் எனக் கூறி அந்தணச்சிறுவன் செய்த தவறுக்காக மூன்று முறை அவனது தலையில் குட்டினான். சிறுவனாக வந்த விநாயகர் தம் உண்மை வடிவை அவனுக்குக் காட்டிப் பந்து போல அவனைத் தூக்கி எறிந்து விளை யாடினார். இராவணன் பிழைபொறுக்க வேண்டினான். விநாயகர் உன் தலையில் இவ்வாறே மூன்றுமுறை குட்டிக்கொள் என்று கூறினார். இராவணன் தான் செய்த பிழைக்கு வருந்திக் குருதிசோரத் தலையில் குட்டிக்கொண்டு அவரை வழிபட்டு அருள் பெற்றான். விநாயகர் சினம் தணிந்து தலையில் குட்டிக்கொண்டு வழிபடுவோர்க்கு வேண்டும் வரங்கள் தருவதாகக்கூறி இராவணனின் பிழைகளைப் பொறுத்து அவனுக்கு நல்வரங்கள் தந்தருளினார்.

இத்தலத்திற்கு வருவோர் முதலில் கோடி தீர்த்தத்தில் நீராடி, பின்பு கடல் நீராடி, பிண்டதர்ப்பணம் செய்து, மீண்டும் நீராடி பிறகு மகாபலேஸ்வரரை வழிபடவேண்டும். அமாவாசை நாள் கடல் நீராட்டுக்கு விசேஷமானது இத்தலம்; பாஸ்கரத்தலங்களுள் ஒன்றாகும். ஏனையவை:- காசி, புஷ்பகிரி, காஞ்சிபுரம், ஸ்ரீசைலம், சேது, கேதாரம் முதலியன. சிவராத்திரி விழா சிறப்பானது.

பேதைமட மங்கையொரு பங்கிட
    மிகுத்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலெ முந்தவிட
    முண்டசிவன் வாழுமிடமாம்
மாதரொடும் ஆடவர்கள் வந்தடி
    யிறைஞ்சிநிற மாமலர்கள்தூய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல்
    கின்றவளர் கோகரணமே. (சம்பந்தர்)

Koviloor Digital Library

சந்திரனுந் தண்புனலுஞ் சந்தித் தான்காண்
தாழ்சடையான்காண் சார்ந்தார்க் கமுதா னான்காண்
அந்தரத்தி லசுரர்புரம் மூன்றட் டான்காண்
அவ்வுருவி லவ்வுருவ மாயி னான்காண்
பந்தரத்து நான்மறைகள் பாடி னான்காண்
பலபலவும் பாணி பயில்கின் றான்காண்
மந்திரத்து மறைப்பொருளு மாயி னான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. *(அப்பர்)*

க்ஷேத்திரக்கோவைபிள்ளைத்தமிழ்

ஏகநா யகன்கயிலை இமையவர்கள் தம்பிரான்
இராவண னுள்ளமகிழ
ஈந்துசிவ லிங்கமொ ரீதுதரை வையா
திலங்கையில் கொடுபோவெனச்
சாகரத் தின்கரையில் வரும்வேளை யொருபிரம
சாரியாய் வாங்கியதனைக்
தரைவைக்க அதுசத்த பாதாளம் வேருறச்
சமர்செயுமி ராவணன்றன்
ஆகமொரு பந்தென வெடுத்தண்ட கூடமுற
அம்மானை ஆடிவிளையா
டதிபலப ராக்கிரம விநாயகன் மகிழ்தம்பி
அம்பரவை ஏத்தினாகரச்
சீகரம் வந்துலவு கோகரணம் வாழ்முருக
சிறுதே ருருட்டியருளே
சிவன்மகா லிங்கபெல லிங்கமூர்த் தியருள்குக
சிறுதே ருருட்டி யருளே.

கோகர்ண ஸ்தல ஸ்துதி சுலோகம்

கோகர்ணம் ஸா மஹா காசீ, விசுவ நாதோ மஹாபல:
கோடி தீர்த்தஸ் தத்ர கங்கா ஸமுத்ரோயம் விசிஷ்யதே.
குஞ்சா மாத்ரா திகம் காசியா கோகர்ண மபிதீயதே
கோகர்ண ஸத்ருசம் க்ஷேத்ரம் நாஸ்தி ஜகத்ரயே.
ஸர்வேஷாம் சிவலிங்காநம் ஸார்வபௌமோ மஹாபல:
மஹாபல ஸமலிங்கம் நபூதோ நபவிஷ்யதி.
கங்காதி ஸரிதோ யஸ்மாத் ஸாகரம் ப்ரவிசந்தி ஹி
தஸ்மாத் ஸமுத்ரேஹ்யதிகோ கோகர்ண தத் விசிஷ்யதே
ஆத்யம் பசுபதே ஸ்தாநம் தர்சநாத்ஏவ முக்திதம்
யத்ர பாபோபி மநுஜ: ப்ராப்நோத்ய பயதம் பதம்.

Koviloor Digital Library

பச்சிமாம்புதி தீரஸ்தம் கோகர்ணக்ஷேத்ர முத்தமம்
மஹாபல ஸமம் லிங்கம் நாஸ்தி ப்ரஹ மாண்ட கோளகே.
பூர்வே ஸித்தேச்வரோ நாம, தக்ஷிணத் யக நாசிநீ,
உத்தரே சால்மலீ கங்கா, பச்சிமே லவணாம் விதி:

பொருள்:-

(1) கோகர்ணமே மஹாகாசி, மஹாபலரே விசுவநாதர், கோடி தீர்த்தமே கங்கை; சமுத்திரம்கூட இருப்பததால் பின்னும் விசேஷம். (2) காசியிலும் ஒரு பங்கு அதிகம் கோகர்ணம், அதற்கு இணையான தலம் மூவுலகிலும் இல்லை. (3) எல்லாச் சிவலிங்கங்களுக்கும் மஹாபலரே சக்ரவர்த்தி; அவருக்கு இணை இன்றும் இல்லை, என்றும் இராது. (4) கங்கை முதலான சகல தீர்த்தங்களும் இங்கு கடலிற் சேர்கின்ற படியால் கோகர்ணத்தில் உள்ள சமுத்திரதீர்த்தம் பெருமைவாய்ந்தது. (5) மஹாபாலேசுவரர் ஆதிமூர்த்தி; தரிசித்த மாத்திரத்தில் அவர் முத்தியளிப்பவர்; பாபியான மனிதனுக்கும் அவர் அபயம் அளிப்பார். (6) மேற்குக்கரையில் உத்தம கோகர்ணம் அமைந்துள்ளது; பிரம்மாண்ட கோளத்தில் மஹாபல லிங்கத்துக்கு இணையில்லை. (7) கிழக்கில் சித்தேசுரர், தெற்கே அகநாசினி, வடக்கில் சால்மலி கங்கை; மேற்கே உப்புக்கடல்.

"—

"கோபலத்திற்காண்பரிய கோகரணம் கோயில் கொண்ட
மாபலத்து மாபலமா மாபலமே". *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

அ/மி. மகாபலேஸ்வரர் திருக்கோயில்
திருக்கோகர்ணம் & அஞ்சல் - 576 234 (GOKARNA)
(கர்நாடகா)

268/1. திருப்பருப்பதம்

ஸ்ரீசைலம்

வடநாட்டுத் தலங்களுள் ஒன்று.

ஆந்திர மாநிலத்தில் கர்நூல் மாவட்டத்தில் நந்தியாலுக்குப் பக்கத்தில் உள்ளது. திருப்பதியிலிருந்து 500 கி.மீ. தொலைவிலுள்ள இத்தலத்திற்கு அங்கிருந்து நேரே செல்லப் பேருந்து வசதியுள்ளது. சென்னையிலிருந்தும் ஸ்ரீ சைலத்திற்குப் பேருந்து செல்கிறது.

Koviloor Digital Library

பன்னிரண்டு ஜோதிர்லிங்கத்தலங்களுள் ஒன்று. சக்திபீடத்தில் இத்தலம் பிரமராம்பாள் பீடமாகப் போற்றப்படுகிறது. அர்ஜுனம் - மருதமரம். இம்மருதமரத்தைத் தலமாகக் கொண்டுள்ள தலங்கள் மூன்று அவை அர்ஜுனத் தலங்கள் எனப்படும். இத்தலம் அவற்றுள் மல்லி கார்ஜுனம் எனப்படும். ஏனைய இரண்டும்;

(1) திருவிடைமருதூர் - மத்தியார்ச்சுனம் (2) நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள திருப்புடைமருதூர் - புடார்ச்சனம் என்பன. சந்திரவதி என்னும் பெண் அடியவர், மல்லிகை மலர்களால் இப்பெருமானை அருச்சித்து வழிபட்டதால் இத்தலத் திறைவன் மல்லிகார்ச்சுனர் என்று பெயர் பெற்றார்.

சிலாத முனிவர் தவஞ்செய்த தலமாதலின் (ஸ்ரீ) சைலம் எனப் படுகிறது. நந்திதேவர் இங்குத் தவஞ்செய்து இறைவனைச் சுமக்கும் ஆற்றலைப் பெற்றார் என்றும்; அவரே இங்கு மலையாக இருந்து பெருமானைத் தாங்குகிறார் என்றும் தலபுராணம் கூறுகிறது.

இத்தலத்தின் அருகில் நந்திமலை, நந்தியால் உள்ளன. வீரசைவர்கள் இம்மலைப்பகுதியை 'பூகயிலாயம்' என்று புகழ்வர். சிவராத்திரி வழிபாடு ஜோதிர்லிங்கத் தலங்களில் விசேஷமானது. அம்முறையில் இங்கும் சிவராத்திரி நாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஜோதிர்லிங்கத் தலங்களுள் தேவார திருமுறைப் பதிகங்களைப் பெற்றுள்ள மூன்று தலங்களுள் இதுவும் ஒன்று. ஏனைய இரண்டும் இராமேசுவரம், திருக்கேதாரம் என்பன.

இறைவன் - மல்லிகார்ச்சுனர், ஸ்ரீசைலநாதர், சீபர்ப்பதநாதர்

இறைவி - பிரமராம்பிகை.

தலமரம் - மருதமரம், திரிபலாமரம்.

தீர்த்தம் - பாலாழி முதலாகவுள்ள பல தீர்த்தங்கள்.

மூவர் பாடல் பெற்ற தலம்.

மேதி, ரவி, ஜுவி என்னும் மூன்று மரங்களின் சேர்க்கையே திரிபலா மரம் ஆகும். தத்தாத்ரேயர் இம்மரத்தினடியில் தவஞ் செய்த தால் இது தத்தாத்ரேய விருக்ஷம் என்றும் சொல்லப்படும். இம்மரம் விருத்த மல்லிகார்ஜுனர் கோயிலில் உள்ளது. (கரவீரம் என்னும் பழமையான மரமும் இங்குள்ளது.)

சம்பந்தரும், சுந்தரரும் காளத்தியைத் தொழுத பின்னர் அங் கிருந்தே வடக்கு நோக்கித் தொழுது பாடினர். திருநாவுக்கரசர் மட்டும்,

Koviloor Digital Library

தம்முடைய கயிலையாத்திரையில் இத்தலத்திற்கு எழுந்தருளி வழிபட்டுப் பாடினார்.

சம்பந்தர், அப்பர் பதிகங்களில் இத்தலம் திருப்பருப்பதம் என்றும் சுந்தர் பதிகத்தில் சீபர்ப்பதம் என்றும் குறிக்கப்படுகின்றது.

இம்மலையடிவாரத்தில் கிருஷ்ணாநதி பாய்ந்தோடுகிறது. இதனைப் பாதாள கங்கை என்று கூறுகின்றனர். இவ்வாற்றின் தென்கரையில்தான் கோயில் அமைந்துள்ளது.

இம்மலையில் எட்டு சிகரங்கள் உள்ளன. அவை (1) வைடூரிய சிகரம் (2) மாணிக்க சிகரம் (3) பரவாளி சிகரம் (4) பிரம்ம சிகரம் (5) ரௌப்ய சிகரம் (6) க்ஷேமா சிகரம் (7) மரகத சிகரம் (8) வஜ்ர சிகரம் என்பன. இங்கு ஒன்பது நந்திகள் உள்ளன. அவை (1) பிரதம நந்தி (2) நாக நந்தி (3) விநாயக நந்தி (4) கருட நந்தி (5) சிவ நந்தி (6) மகா நந்தி (7) சூரிய நந்தி (8) விஷ்ணு நந்தி (9) சோம நந்தி என்பன.

இவ்வாறே இங்கு ஒன்பது கோயில்களும் உள்ளன. அவை (1) பிரமேஸ்வரம் (2) வருணேஸ்வரம் (3) இந்திரேஸ்வரம் (4) ஜனார்த்தனேஸ்வரம் (5) சப்தகோடீஸ்வரம் (6) குக்குடேஸ்வரம் (7) ஹேமேஸ்வரம் (8) அக்னேஸ்வரம் (9) மோக்ஷேசுவரம் என்று வழங்கப்படுகின்றன.

கோயில், மலை உச்சியில் கிழக்கு நோக்கியுள்ளது. நாற்புறமும் கோபுரவாயில்கள். பிரதான வாயில் கிழக்கு கோபுரமே, ஆலய வாயிலில் உள்ள பெரிய மண்டபத்தில் கல்லால் ஆன நந்தி உள்ளது. ஆலய முகப்பில் சித்தி விநாயகர் தரிசனம். மேற்குப் பிராகாரத்தில் பாண்டவர்கள் கட்டியதாகச் சொல்லப்படும் ஆறு ஆலயங்கள் உள்ளன. பளிங்குக் கல்லால் ஆன சண்முகர் கோயில், அன்னபூரணி ஆலயம், சஹஸ்ரலிங்கேசுவரர் கோயில், பஞ்ச நதீஸ்வரர் ஆலயம் முதலியன தரிசிக்கத்தக்கன. தெற்கு வாயில் கோபுரம் 'ரங்க மண்டபம்' எனப்படும். கிழக்கு வாயிலில் கல்யாண மண்டபமுள்ளது. நாடொறும் காலை 5 மணிமுதல் இரவு 10 மணி வரை பலவித அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. மஹாசிவராத்திரியில் பாதாள கங்கையில் நீராடி, மல்லிகார்ச்சுனரைச் சேவிப்பது மிகப்பெரும் புண்ணியமாகும்.

யாத்திரிகர்கள் தங்கவதற்குச் சத்திரங்களும் விடுதிகளும் உள்ளன.

இத்தலத்திற்குரிய கல்வெட்டுக்கள் விஜய நகர மன்னர்கள், சாளுவ காகதீய மன்னர்கள் காலத்தியவை. இவற்றிலிருந்து; அன்னதானத் திற்குக் கட்டளைகள் அமைத்தது, தீர்த்தக்குளம் வெட்டியது.

Koviloor Digital Library

கோயிலில் திருப்பணிகள் செய்தது, கோயிற் பணியாளர்கட்கு வீடுகள் கட்டித் தந்தது, முதலான செய்திகள் தெரியவருகின்றன.

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே. *(சம்பந்தர்)*

கரவிலா மனத்தராகிக் கைதொழு வார்கட்கென்றும்
இரவுநின் றெரியதாடி யின்னருள் செய்யுமெந்தை
மருவலார் புரங்கண்மூன்று மாட்டிய வகையராகிப்
பரவுவார்க் கருள்கள் செய்து பருப்பத நோக்கினாரே.

(அப்பர்)

மானும்மரை இனமும்மயி லினமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முறிஞ்சிப்பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழற்றுயில் சீபர்ப்பத மலையே.

(சுந்தரர்)

ஜோதிர்லிங்கத் தலங்கள் பற்றிய சுலோகம்:

''ஸௌராஷ்ட்ரே ஸோமநாதம்ச ஸ்ரீ சைலே மல்லிகார்ச்சுனம்
உஜ்ஜயின்யாம் மகாகாளம் ஓங்காரம் அமலேச்வரம்
பரல்யாம் வைத்யநாதம்ச டாகின்யாம் பீமசங்கரம்
சேதுபந்தேது ராமேசம் நாகேசம் தாருகாவனே
வாராணஸ்யாம் து விச்வேசம் த்ரயம்பகம் கௌதமீதடே
ஹிமாலயேது கேதாரம் குஸ்மேசம் சிவாலயே
ஏதானி ஜோதிர் லிங்கானி ஸாயம் ப்ராத: படேந்த:
ஸப்த ஜன்ம கிருதம் பாபம் ஸ்மரணே வினச்யதி''

ஜோதிர்லிங்கத் தலங்கள் பன்னிரண்டையும் இச்சுலோகங்கள் தெரிவிக்கின்றன. அவை சோமநாதம், ஸ்ரீசைலம், உஜ்ஜையினி, ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுவரம், நாருகசம், விஸ்வேசம்(காசி), த்ரயம்பகம், கேதாரம், குஸ்மேசம் எனப்படும். இவற்றுள் சோமநாதம் குஜராத்திலும், வைத்தியநாதம், பீமசங்கரம், நாகேசம், த்ரயம்பகம், குஸ்மேசம ஆகியன மகாராஷ்டிர மாநிலத்திலும், ஸ்ரீ சைலம் ஆந்திர மாநிலத்திலும், ஓங்காரம், உஜ்ஜையினி மத்தியப் பிரதேசத்திலும், வாரணாசி (விஸ்வேசம்), கேதாரம் உத்தரப் பிரதேசத் திலும், இராமேசுவரம் தமிழ்நாட்டிலும் உள்ளன.

Koviloor Digital Library

திருப்புகழ்

ஒன்பது மிருபது மறுபது முடனறு
முணர்வுற இருபத முளநாடி
உருகிட முழுமதி தழலென வொளிதிகழ்
வெளியோடு வொளிபெற விரவாதே
தெருவினில் மரமென எவரொடு முரைசெய்து
திரிதொழி லவமது புரியாதே
திருமகள் மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெற அருள் புரிவாயே
பரிவுடனழகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதிய கணபதி யிளையோனே
பெருமலை யுருவிட அடியவ ருருகிட
பிணிகெட அருள்தரு குமரேசா
பிடியொடு களிறுகள் நடையிடகலைதிரள்
பிணையமர் திருமலை பெருமாளே.

''பாகியற்சொன் மங்கையொடும் பாங்கார் பருப்பதத்தில்
போகியர்கள் ஏத்திட வாழ் ஒப்புரவே''. *(அருட்பா)*

அஞ்சல் முகவரி:-

SRI MALLIKARJUNESWARAR TEMPLE
Sri Sailam - 518 100
Kurnool Dt. - Andra Pradesh.

269/2. இந்திரநீல பருப்பதம்

வடநாட்டுத் தலம்.

இமயமலைச் சாரலில் உள்ளது. இந்திரனால் வழிபட்ட தலம்.

இறைவன் - நீலாசலநாதர்

இறைவி - நீலாம்பிகை

தீர்த்தம் - இந்திரதீர்த்தம்

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்றது.

தென்கயிலாயமான திருக்காளத்தியைத் தொழுத பின்பு அங்கிருந்தே இத்தலத்தைத் தொழுது பாடிப் போற்றினார்.

பத்ரிநாத் கோயிலை இரவு அடைந்து, அடிவாரத்தில் இரவு தங்கி, விடியற்காலை 4 மணியளவில் எழுந்து பார்த்தால் இந்திரநீல பருப் பதத்தைத் தரிசிக்கலாம். அந்நேரத்தில் இம்மலை இந்திரநீல நிறத்தில் கண்கொள்ளாக் காட்சியாகத் தரிசனம் தருகிறது. நேரம் ஆக ஆக பின்பு நிறம் மாறிவிடுகிறது. திருவருள் உடையவர்க்கே இத்தரிசனம் கிடைக்கும். இங்குள்ளோர் இம்மலையை நீலகண்ட பர்வதம் என்று வழங்கு கின்றனர்.

''பூவினானொடு மாலும் போற்றுறுந்
தேவனிந்திர நீலபர்ப்பதம்
பாவியா எழுவாரைத் தம்வினை
கோவியா வருங் கொல்லுங் கூற்றமே''. *(சம்பந்தர்)*

-''போகிமுதல்
பாடியுற்ற நீலப் பருப்பதத்தில் நல்லோர்கள்
தேடிவைத்த தெய்வத் திலகமே''. *(அருட்பா)*

270/3. அநேகதங்காபதம்

வடநாட்டுத் தலம்.

அம்பிகை தவஞ்செய்த இடம். ஹரித்வாரிலிருந்து கேதாரம் (கேதார்நாத்) செல்லும் வழியிலுள்ள 'கௌரிகுண்டம்' என்னும் இடமே இஃது என்று சொல்லப்படுகின்றது. இங்குள்ள வெந்நீர் ஊற்றில் அவசியம் நீராடவேண்டும். சூரியனும் சந்திரனும் வழிபட்ட தலம்.

கேதார் நாத் யாத்திரையில் கௌரிகுண்டம் வரையில்தான் பேருந்துகள் செல்லும். அங்கிருந்தோ நடந்தோ, குதிரைமீதோ, டோலியிலோ, 14 கி.மீ. கரடுமுரடான மலைப் பாதையில் ஏறிச் சென்று கேதார நாதரைத் தரிசித்துத் திரும்ப வேண்டும்.

இறைவன் - அருள்மன்னேஸ்வரர்
இறைவி - மனோன்மணி

Koviloor Digital Library

சம்பந்தர் பாடல் பெற்றது.

தென்கயிலாயமான திருக்காளத்தியை வணங்கிய பின்பு அங்கிருந்தே தொழுது இத்தலத்தைப் பாடினார்.

''தந்தத்திந்தத் தடமென்றருவித் திரள்பாய்ந்து போய்ச்
சிந்தவெந்த கதிரோனொடு மாசறு திங்களா (ர்)
அந்தமில்ல அளவில்ல அனே கதங்காபத (ம்)
எந்தை வெந்த பொடி நீறணிவார்க்கு இடமாவதே''. *(சம்பந்தர்)*

-''நீடுபவம்
தங்காதவனேக தங்கா பதஞ்சேர்ந்த
நங்காதலான நயப்புணர்வே.'' *(அருட்பா)*

271/4. திருக்கேதாரம்

வடநாட்டுத் தலம்.

ஹரித்வாரிலிருந்து 250 கி.மீ. தொலைவு. ஆறுமாதகாலம் (தேவ பூஜை) கோயில் குளிர்காலத்தில் பனியால் மூடப்பட்டிருக்கும். எவரும் செல்ல முடியாது. ஜோதிர்லிங்கத்தலம். ஆறுமாத காலம் (மனிதபூஜை) கோயில் திறந்து பூஜை நடைபெறுகின்றது. கோயில் அக்டோபர் மாதம் மூடப்பட்டுப் பனிக்காலம் கழிந்த பின்னர் மே மாதம் திறக்கப்படுகிறது. பிருங்கி முனிவரின் பொருட்டு உமையம்மை இறைவனை வழிபட்டு இடப்பாகம் பெற்ற தலம். புதுடில்லியிலிருந்தும் ஹரித்துவாரிலிருந்தும் பேருந்தில் சென்று கௌரி குண்டம் அடைந்து அங்கிருந்து நடந்தும் குதிரைமேலும் டோலியிலும் 14 கி.மீ. மலையேறிச் செல்ல வேண்டும். கடினமான பாதை - மலைச்சூழல். ஏற்ற பருவகாலம் அறிந்து செல்ல வேண்டும்.

இறைவன் - கேதாரேஸ்வரர்

இறைவி - கேதாரகௌரி

சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

இருவரும் தென்கயிலாயமான திருக்காளத்தியிலிருந்தே இமய மலைச் சாரலில் உள்ள இத்தலத்தைப் பாடித் தொழுதனர்.

Koviloor Digital Library

''தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டுபாட மயில் ஆல மான்கன்றுதுள்ள வரிக்
கெண்டைபாயச் சுனைநீலம் மொட்டு அலருங்கேதாரமே.''

(சம்பந்தர்)

''வாள்ஓடிய தடங்கண்ணியர் வலையில் அழுந்தாதே
நாள்ஓடிய நமனார் தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாய் உய்ம்மின் அடிகட்கு இடம் அதுவோ எனில் இதுவே
நீளோடு அரவு அசைந்தான் இடம் கேதாரம் எனீரே.''

(சுந்தரர்)

-''சிங்காது
தண்ணிறைந்து நின்றவர்தாஞ்சார் திருகேதாரத்திற்
பண்ணிறைந்த கீதப் பனுவலே.'' *(அருட்பா)*

கோயிலின் பின்புறம் வெள்ளிப்பனி மலையாகக் காணக்கிடக்கும் காட்சி அற்புதமானது. பக்கத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் கோயிலும் உள்ளது - தரிசிக்க வேண்டும். திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சாமித் தம்பிரான் மற்றுமுள்ள பெருமக்கள் பலருடைய முயற்சியாலும் ஆதரவாலும், திருஞானசம்பந்தர் பதிகக்கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது.

272/5. நொடித்தான்மலை

திருக்கயிலாயம்

வடநாட்டுத்தலம்.

சிவபெருமான் அம்பிகையோடு உடனாகி எழுந்தருளியுள்ள மலை திருக்கயிலாயம். இம்மலை இமயமலையின் வடக்கில் திபெத் நாட்டின் மேற்பால் அமைந்துள்ளது.

இங்கு இயற்கையான கோயிலமைப்பில் பனி முடியே சிவலிங்கமாகக் காட்சியளிக்கின்றது. இத்திருமலை எப்பக்கமிருந்து யாரொருவர் எவ்வண்ணமாக நோக்கினும் அவ்வவர்க்கு அவ்வண்ணமாகவே அக்கோயிலாகவே காட்சி தருகிறது என்பது இம்மலையின் கண் அமைந்துள்ள அதிசயமாகும். இதுகண்டு அனுபவித்தோர் வாக்கும் ஆகும். இம்மலையின் சிகரம் தென்திசை நோக்கியதாக உள்ளது.

Koviloor Digital Library

29 மைல் சுற்றளவு உடையதாய் விளங்கும் இம்மலையில் சதுரம், முக்கோணம், வட்டம் போன்ற சித்திர வேலைப்பாடுடைய மேடைகளும் காட்சியளிக்கின்றன. இந்தியாவில் கன்னியாகுமரி முதல் இமயம் வரையில் எத்தனை வகையான கோபுரங்கள் உள்ளனவோ அத்தனை மாதிரிக் கோபுரங்களும் இக்கயிலை மலையில் காணக்கிடக்கின்றன.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பெருமக்களும் பாடியுள்ளனர்.

ஞானசம்பந்தர் திருக்காளத்தியைத் (தென் கயிலாயம்) தரிசித்த பின்பு அங்கிருந்தே கயிலாயம் நோக்கி மனத்தாற்கண்டு பாடிப் பரவினார். அப்பர் பெருமான், கயிலாயத்தையும், அங்கு ஆளு நாயகன் வீற்றிருக்கும் அற்புதக் கோலத்தையும் காணுமது காதலித்து நெடிய யாத்திரையை மேற்கொண்டு சென்றார். இந்த யாத்திரையின் பயனாகவே அவர் ஐயாற்றில் கயிலைத் தரிசனம் பெற்றார். அப்பர் பெருமான் பாடியுள்ள திருக்கயிலைத் திருத்தாண்டகங்கள் 'போற்றித் திருத்தாண்டகங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

இறைவனருளால் அஞ்சைக்களத்திலிருந்து வெள்ளையானையேறி சுந்தரர் கயிலைக்குச் சென்றபோது, திருவருட் கருணையை நினைந்து, "தானெனை முன்படைத்தான்" என்று தொடங்கும் பதிகம் பாடியவாறே போற்றிச் சென்றார். இத்திருப்பதிகம் வருணனால் இவ்வுலகில் திருஞ்சைக் களத்தில் சேர்ப்பிக்கப் பெற்று உலகிற்குக் கிடைத்தது. சேரமான் பெருமாள் நாயனாரும், காரைக்காலம்மையாரும் கூடக் கயிலாயம் சென்ற வரலாற்றை நாமறிவோம்.

கயிலாய யாத்திரைக்கு இந்திய அரசு ஆண்டுதோறும் ஏற்பாடுகளைச் செய்து தருகிறது. இன்று திருக்கயிலாயம் உள்ள இமயமலைப் பகுதி சீன அரசின் கட்டுப்பாட்டுள் இருந்து வருகின்றது. ஆண்டுதோறும் கயிலாய தரிசனத்திற்குச் செல்ல விண்ணப்பித்துக் கொள்ளும் அன்பர்களைத் தேர்ந்தெடுத்து இந்திய அரசு அனுப்பி வைக்கின்றது. சீன அரசும் இவர்களுக்கு வசதிகளைச் செய்து தருகின்றது.

"பொடி கொள் உருவர் புலியின்அதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள் கொன்றை கலந்த நீற்றர் கறைசேர் கண்டத்தர்
இடியகுரலால் இரியுமடங்கல் தொடங்கு முனைச்சாரல்
கடிய விடைமேல் கொடியொன்றுடையார் கயிலை மலையாரே."

Koviloor Digital Library

''ஏதமில பூதமொடு கோதை துணை
யாதிமுதல் வேத விகிர்தன்
கீதமொடு நீதிபல வோதி மற
வாது பயினாதனகர்தான்
தாதுபொதி போதுவிட வூதுசிறை
மீதுதுளி கூதல்நலியக்
காதன்மிகு சோதிகிளர் மாதுபயில்
கோது கயிலாயமலையே.'' *(சம்பந்தர்)*

''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! *(அப்பர்)*

''தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே.''
(சுந்தரர்)

''உருவுபல கொண்டு உணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால் இருக்கை - மருவினிய
பூக்கையிற் கொண்டு எப்பொழுதும் புத்தேளிர் வந்திறைஞ்ச
மாக்கயிலை என்னும் மலை'' *(நக்கீரர்)*

புமியதனிற் ப்ரவுதான - புகலியில் வித்தகர்போல
அமிர்தகவித் தொடைபாட - அடிமைதனக் கருள்வாயே
சமரி லெதிர்த்தசுர்மாள - தனியயில் விட்டெறிவோனே
நமசிவயப் பொருளானே - ரசதகிரிப் பெருமாளே, *(திருப்புகழ்)*

-''எண்ணிறைந்த
சான்றோர் வணங்கு நொடித்தான் மலையில் வாழ்கின்ற
தேன்தோய் அமுதச் செழுஞ்சுவையே - வான்தோய்ந்த
இந்திரரும் நாரணரும் எண்ணில் பிரமர்களும்
வந்திறைஞ்சும் வெள்ளி மலையானே - தந்திடுநல்
தாய்க்குங் கிடையாத தண்ணருள் கொண்டன்பருளம்
வாய்க்கும் கயிலை மலையானே.'' *(அருட்பா)*

Koviloor Digital Library

273/1. திருக்கோணமலை

ஈழநாட்டுத்தலம்

திருக்கோணேஸ்வரம் கிழக்கு மாநிலத்தில் உள்ளது. திருக்கோணமலை என்னும் பெயரால் பழைய மாவட்டம் நிலவுகிறது. திருக் கோணேஸ்வரத்துக்கு இரயில் மூலம் கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் போகலாம். பேருந்து மூலமும் போவதற்கு வசதியுண்டு. திருக்கோணமலை இரயில் நிலையத்திலிருந்து திருக்கோயிலுக்கு நடந்து போகலாம். திருக்கோணமலையன்பர்கள் உள்ளன்போடு விருந்து கொடுப்பார்கள். பிரதான வீதியில் சிவயோக சமாஜம், இந்து இளைஞர் பேரவை, அப்பால் தொண்டர் சண்முகராசா அவர்களின் திருநெறிக்கழகம் விருந்தினரை விரைந்தேற்கும்.

உலகப்புகழ் பெற்ற திருக்கோணமலை மாவட்டத்தில் அறுபதுக்கும் அதிகமான சைவக்கோயில்கள் உள்ளன. இயற்கையாய் அமைந்த பாதுகாப்பான பெரிய துறைமுகம் இங்கே உண்டு. சைவம் கமழும் தமிழ்த் திருநாமங்கள் தாங்கிய பழைய ஊர்களில் இங்கே செந்நெல்லும் கரும்பும் தென்னையும் செழித்து வளருகின்றன. மிகப்பழைய காலத்து, இதிகாச நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற்றன என்பதற்கு நிரம்பிய ஆதாரங்களோ நிறைய உண்டு. குளக்கோட்டு மன்னன் செய்த தொண்டுகள் பலவற்றின் சுவடுகள் இன்றும் அறியக் கூடியனவாயுள்ளன. கோயில்களை மையமாகக் கொண்டெழுந்த குடியேற்றங்கள் இங்கே உள்ளன. கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோண மாமலை அமர்ந்தாரே எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அற்புதமாகத் திருப்பதிகம் பாடியருளித் தோத்திரஞ் செய்துள்ளார். திருக்கோணேஸ்வரப் பெருமானின் அருளாட்சி நடைபெறும் வகையில் மக்கள் வாழ்கின்றார்கள். எங்கு நோக்கினாலும் சைவத் தமிழ்ப் பெயர்களே இங்குக் கேட்கின்றன.

இன்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்னரே திருக்கோணேஸ்வரம் தேவாரம் பெற்ற திருத்தலமாக ஒளிவீசியது. சோழ மன்னர்களும் தங்கள் புகழ் நிலவுமாறு இத்திருக்கோயிலில் நற்பணி புரிந்துள்ளார்கள். பாண்டியன் திருக்கோண மலையில் இணைக்கயல் பொறித்துள்ளமை வரலாற்றுப் பெருமையாகும்.

திருக்கோணேஸ்வரம் இலங்கைக்குப் பெருமைதரும் பெற்றியைச் சேக்கிழார் சுவாமிகள் "ஆழிபுடைசூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்

Koviloor Digital Library

மன்னு திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார்'' என்று பாடியருளியுள்ளார்.

இக்கோவிலின் வரலாறு 3287 ஆண்டுப் பழமை வாய்ந்ததாகும். இதற்குத் திரிகூடம் என்றும் பெயர் உண்டு. திருக்கோணேஸ்வரத் திருக்கோவில் பரிபாலனத்திற்குப் போதியளவு வருவாயுண்டு. இங்கே சுவாமிக்கு விளக்கேற்றுவதற்குப் போதியளவு நெய்யும் திரியும் கிடைப்பதற்கு வழி வகுத்தவர்கள், தாமரைத்தண்டின் நூலெடுத்துத் திரிசெய்தார். அந்த ஊர் இன்றும் ''திரிதாய்'' என வழங்குகின்றது.

போர்த்துக்கேயர் 1624 ஆண்டில் இத்திருக்கோயிலை பாழ்செய் துள்ளனர். அன்று அருணகிரிநாதர் மனமுருகிக்கண்ட தலத்தாறு கோபுரத்தழகைப் பறங்கியர்களின் தளபதியும் பார்த்துருகியுள்ளான். அவன் தன் படையில் ஓவியம் வல்லானைக் கொண்டு அவற்றின் அழகை ஓரளவு வரைந்து எடுத்துக் கொண்ட பின்பே கோயிலைத் தரைமட்டமாக்க உத்திரவு பிறப்பித்தான். அந்தக் கோபுரத்தழகைக் காட்டும் சித்திரம் இன்றும் லிஸ்பன் நகரில் உள்ளது என்பர். திருக் கோயிலிருந்த நிலத்தில் வழிபாடாற்றுவதற்கு ஏதாவது செய்யத் துணிந்தார்கள். சுதந்திரம் பெற்றபின் 1950ஆம் ஆண்டில் ஓர் ஆலயம் அமைக்க முற்பட்டுக் காசியிலிருந்து சிவலிங்கப்பெருமானை எழுந்தருளச் செய்தார்கள்.

அக்காலத்தில் நகரசபையார் கிணறு தோண்ட முயன்றபோது மூன்றடி தோண்டிய வேளையில் அற்புதமோ சிவனருளோ யாதோ என்று கண்டவர்கள் அதிசயிக்கும் வண்ணம் மாதுமையாள் சமேத கோணேசுவரப் பெருமானோடு, சந்திரசேகரர், பார்வதியார், பிள்ளையார், அஸ்திரதேவர் முதலாய தெய்வத்திருவுருவங்கள் வெளிக்கிளம்பின. அவையாவும் அண்மைக் காலத்திலமைக்கப் பெற்ற திருக்கோயிலில் ஆங்காங்கே எழுந்தருளச் செய்யப்பெற்றுள்ளன. இவை யாவும் ஓரளவு நிறைவு பெறவே 1963ம் ஆண்டில் கும்பாபிடேகம் நடை பெற்றது. அன்றுதொட்டு மேலும் பல திருப்பணிகள் நிறைவேறியபின் 1981 அம் ஆண்டில் இரண்டாம் கும்பாபிடேகம் நிறைவேறியது. இரண்டாம் கும்பாபிடேகத்தின் பின் பூரணமாயமைந்த இக்கோயிலின் புனிதமும் சாந்நித்யமும் அனைவரையும் காந்தம்போல இழுக்கின்றன. ஐம்பொன்னாலாய அழகு மிக்க மூர்த்தங்கள் இருக்கும் மண்டபம் - தேவ மண்டபம், கண்கொள்ளாக்காட்சி தருவதாகும்.

முன்னொரு காலத்திலேயே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோணமலையிலே உச்சியிலும் இடையிலும் அடிவாரத்திலுமாக

Koviloor Digital Library

மூன்று பெருங்கோயில்கள் இருந்தன என்பர். இன்றைய ஆலயம் ஆகமவிதிகளுக்கமைய அமைந்துள்ளது. அர்த்தமண்டபம், ஸ்நபன மண்டபம், வசந்தமண்டபம், யாகசாலை, பாகசாலையாகவும் ஒழுங் காகவுள்ளன. ஆலயம் அடக்கமாகவும் அலங்காரமாகவும் உள்ளது. இராஜகோபுரம் அழகாகவுள்ளது. ஸ்நபனமண்டபத்தில் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் ஆடல் புரிந்தவண்ணம் எழுந்தருளி யுள்ளார். தேவசபை என்னும் அமைவில் வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியப் பெருமானும், சோமாஸ்கந்த மூர்த்தமும் சந்திரசேகர மூர்த்தமும் உள்ளனர். இவர்கள் எழுந்தருளிகளாக இருக்கிறார்கள். அப்பால் சுற்றுப்பிராகாரங்கள், சூரியன், சந்திரன், நாகதம்பிரான், பைரவர், சண்டேசுவரர் ஆங்காங்கே அமர்ந்திருக்கிறார்கள். கல்லால மரம் தலவிருட்சமாயுள்ளது. பறங்கியர் கெடுபிடியின் பின் ஆங்கி லேயர் காலத்தில் கிடைத்த வழிபாட்டு அனுமதியின்போது நடைபெற்ற மலைபூசை ஆகாச வெளியில் இன்றும் நடைபெற்று வருகிறது. ஆலயப் பூசைகளுக்கு முன் ஆகாசப்பூசை வெளியிடையொன்றாய் விளங்குபவர்க்கு அக்ரபூசையாய் நடைபெறுகிறது. நாள்தோறும் ஆறுகாலபூசை ஆகம விதிகள் தவறாமல் நடைபெறுகின்றன.

ஆண்டுதோறும் பங்குனி உத்திர நாளில் கொடியேறிப் பதினெட்டு நாள் திருவிழா நடைபெறுகிறது. இங்கே நடைபெறும் சிவராத்திரி விழா அருமையானது. சிவராத்திரிக்கு முன்னுள்ள பதினைந்து நாள்களிலும் அபிடேகம் நடைபெறும். சிவராத்திரிக்கு அடுத்த நாள் பெருமாட்டி சமேதராய் எழுந்தருளி நகர்வலம் வருகிறார். அயலில் உள்ள ஆலயங்களில் வரவேற்புப்பூசையும் விழாவும் நடைபெற்ற பின் மூன்றாம்நாள் திருக்கோயிலுக்கு மீளும் விழா நடைபெறுகிறது. மூன்று நாளும் திருக்கோணமலை நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கும். வீதிகள் தோறும் மக்கள் மனைகள் தோறும் மங்கல விளக்கேற்றி மண்டகப்படி வைத்து மகிழும் காட்சி பண்டைய இந்திர விழாவை நினைவுபடுத்தும்.

திருக்கோணேசப் பெருமானின் விழாக்களில் வெளிவாரியாக நடைபெறுவது ஆடி அமாவாசை விழாவாகும். கடலில் தீர்த்தமாடு வதற்குப் பெருமான் எழுந்தருளும்போது நகரிலுள்ள ஆலயங்களின் மூர்த்திகளும் தீர்த்தமாட அங்கே எழுந்தருளுவார்கள். இதுபோலவே மகாமகத் தீர்த்த விழாவும் நடைபெறுகிறது. பங்குனி மாத மகோற் சவத்தை அடுத்துவரும் பூங்காவனத் திருவிழாவும் தெப்பத் திருவிழாவும் அலங்காரமானவை. தெப்பத்திருவிழாவில் சுவாமி தெப்பமேறிக் கடற்கரையில் காட்சி கொடுத்தல் நகரத்தையே ஒளியூட்டு வதாய் அமைகிறது. அவ்வேளை நகரத்துக்குப் பெருவிருந்தாகக்

Koviloor Digital Library

கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. மார்கழி மாதத்துத் திருவெம்பாவை சிறப்பாக நடைபெறுகிறது. அம்பிகை யுற்சவம் ஆடிப்பூர நாளைத் தீர்த்தமாகக் கொண்டு முன் பத்துநாள் உற்சவம் நடைபெறுகிறது. அம்பிகைக்குரிய நவராத்திரி நாட்களில் ஸ்ரீ சக்ரபூஜை வெகுசிறப்பாக நடைபெறுகிறது. இங்ஙனமெல்லாம் நடைபெறும் போது நிரைநிரையாக அடியார்கள் சாதிமதபேதமின்றி வந்து வழிபட, ''நினைத்த காரியம் அனுகூலமே தரும்'' பெருமானாக அவர் பெருமாட்டியாருடன் இங்கே எழுந்தருளியுள்ளார். ஈழத்திருநாட்டின் பாடல் பெற்ற திருத்தலங்கள் இரண்டுள் இதுவொன்று, மற்றது திருக்கேதீச்சரம்.

திருக்கோணசுவரப் பெருமானின் திருக்கோயில் வரலாறு கூறும்போது, அயலிலமைந்த தம்பலகாமத்தைப் பற்றிக் கூறாவிட்டால் வரலாறு பூரணமாகாது. அன்று பறங்கியர் பாழ்படுத்திய வேளையில் பக்தர்களாகிய பாசுபதவிரதிகளும் பணியாளரும் பதைத்துருகித் திருக்கோயிலிருந்த திருவுருவங்களை எடுத்துச் சென்று அயலிலுள்ள கிணறுகளிலும் குளங்களிலும் பாதுகாப்புக்காக இட்டார்கள். அவர்கள் ஒரு திருவுருவத்தை அயலூராய தம்பலகாமம் என்னும் மருதவளம் நிறைந்த ஊரில் மறைந்து வைத்தார்கள். மிகவும் இரகசியமாக வழிபாடு செய்து வந்தவர்கள் அந்த இடத்தை ஆதிகோணநாயகர் கோயில் என வழங்கி வணங்கினார்கள். அது ஆதிகோணநாயகர் ஆலயமாகவே பழைய கோணேசுவரர் ஆலயத்துக்குச் சொந்தமான மானியங்களிற் பெரும்பகுதி தம்பலகாமத்திற்குச் சேர்ந்தன.

தம்பலகாமத்தருகே பாண்டியன் ஊற்று, திருநகர் முதலிய ஊர்கள் உள்ளன. முன்னர் முதற்பராந்தக சோழனுக்கு அஞ்சிய பாண்டியன் இலங்கையில் பாதுகாப்புக்காகப் புகுந்திருந்த காலத்தில் தம்பலகாமத்தில் திருப்பணிகள் செய்ததாக வரலாறு கூறுகிறது. முன்னர் குளக்கோட்டு மகாராசா குளங்கள் தொட்டு வளஞ்செய்த காலத்தில் கந்தளாய் முதலிய பெரிய குளங்களைக் கட்டி அவற்றின் கரைகளில் விநாயகர், வீரபத்திரர், ஐயனார், காளி, பைரவர், புலத்தியர் முதலாய திருவுருவங்களை அமைத்தார்.

தம்பலகாமத்து இராஜகோபுரம் அழகானது, அமைவானது. வயல்சூழ்ந்த தென்னஞ் சோலைகளுக்கு மேலாகத் திருக்கோபுரக் காட்சி கண்ணையும் கருத்தையும் வெகுவாகக் கவருகிறது. திருக்கோயில் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், ஸ்நபனமண்டபம், ஸ்தம்பமண்டபம் என்பன யாவும் அமைவாகவுள்ளது. கற்கோயிலாய இதற்குச் சுற்று

Koviloor Digital Library

மதில் உட்பிராகாரத்தைக் காக்கிறது. இங்கே எழுந்தருளியுள்ள ஆதிகோணேசநாயகரோடு உடனுறையும் தேவியார் அம்சகமனாம்பிகை இருவருக்கும் தனியாக அழகிய இருப்பிடம் உண்டு. இன்னும் பரிவாரத் தெய்வங்களாக விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், நவக்கிர கங்கள் உள்ளார்கள். ஆனி உத்தரகாலங்களில் கொடியேறிப் பதி னெட்டு நாள்கள் நடைபெறும் திருவிழாக்களின் பொலிவு பெரிது, ஆடி அமாவாசை நாளில் பெருமான் மாவலிகங்கைப் படுக்கையில் தீர்த்த மாடுஞ் சிறப்பு கண்கொள்ளாக் காட்சியாகும். திருகோணேஸ்வரத்தின் தொல்புகழ் பாடும் தேவாரம், திருப்புகழ் தவிரப் பல புராணங்களும், பிரபந்தங்களும் உள்ளன. கல்வெட்டுச் செய்திகளும் உண்டு.

சம்பந்தர் பாடல் பெற்றது.

''தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
    தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினு மனத்து மருவி நின்றகலா
    மாண்பினர் காண் பலவேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
    நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனைங் கடலுடன் சூழ்ந்த
    கோணமாமலை யமர்ந்தாரே''. *(சம்பந்தர்)*

''நாட்டும் புகழ் ஈழநாட்டில் பவ இருளை
வாட்டுந் திருக்கோண மாமலையாய்''. *(அருட்பா)*

274/2. திருக்கேதீச்சரம்

இலங்கை என்னும் ஈழநாட்டிலேயுள்ள இணை யில்லாத ஈஸ்வரங்களுள் திருக்கேதீஸ்வரமும் ஒன்று. முன்னொரு காலத்தில் கேது பூசித்தமையால் இது கேதீஸ்வரம் என்று பெயர் பெற்றது என்பர். ''செய்ய கேது தலையற்றஅந்நாள் திருந்து பூசனை செய்து முடிப்போன்'' என்பது பழம்பாடல். தொண்டர்கள் நாள்தோறும் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே என்பது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்.

தமிழ்நாட்டார் இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் வழி வந்து, தலைமன்னாரிலிருந்து இங்கே வரலாம். கொழும்பிலிருந்து

Koviloor Digital Library

மன்னார்வரை புகைவண்டியில் வருவதாயின் திருக்கேதீஸ்வர நிலையத்தில் இறங்கி வரலாம்.

இலங்கையில் வடபாகத்தில் மாந்தை என்னும் மாதோட்ட நகரிலே உள்ளது திருக்கேதீஸ்வரம். பாலாவிக் கரையில் கௌரியம்பாள் சமேதராய் எழுந்தருளியுள்ளார் திருக்கேதீஸ்வரர். தலவிருட்சம் - வன்னிமரம்.

சிதம்பரத்தைப்போல நாற்பது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது இத்தலம். மன்னாரையடுத்த மாதோட்டம் முன்னாளில் மிகப் பெரிய துறைமுக நகரமாய் நிலவியது. கிரேக்க, உரோமர், அரேபியர் முதலானோர் கடல் கடந்து வந்து இங்கே வர்த்தகம் செய்தனர். மாதோட்டத்தை மருவினாற்போல அமைந்த வங்காலை என்னும் இடம் வங்கங்கள் நிறைந்து விளங்கியது. ''வங்கம்மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில், பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல், தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளினார். இப்பதி ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் பாடல் பெற்றது.

பழைய திருக்கேதீஸ்வரம் பொலிவு 16 ஆம் நூற்றாண்டில் முற்பகுதியிலேயே அக்காலத்து வீசிய புயற்காற்றில் மங்கிவிட்டது. திருக்கேதீஸ்வரத்தின் அழிபாடுகள் பரந்துபட்ட நிலப்பரப்பெங்கும் காணக்கூடியனவாகப் பழைய செங்கட்டிகள், ஓடுகள், அத்திவாரங்கள் எங்கும் கிடக்கின்றன. பாலாவி ஆறு பரந்து பாயும் நிலை தடுக்கப்பட்டுப் பெருங்குளமாகக் குறுகியுள்ளது. அதனையடுத்து பாப்பாமோட்டை, மாளிகைத்திடல், வேட்டையாமுறிப்பு, கோயிற்குளம், பரந்துபட்ட நெல்வயல்கள், தென்னந்தோப்புகள் இன்றும் உள்ளன. அங்கே கிடைத்த மாந்தைக் கல்வெட்டுகள் சோழர் பணிகளைப் பற்றிக் கூறுகின்றன.

அக்காலத்தில் திருக்கேதீஸ்வரப் பகுதி கோயில் நகரம் என வழங்கியது. அதனை இராசஇராசசேகரன் மகன் இராசேந்திரன் தன் தந்தை பெயரால் அருள்மொழித்தேவன் வளநாடு என வழங்கினான். இன்று பாப்பாமோட்டை என வழங்குமிடம் பிராமணர் குடியேறியிருந்த மேட்டு நிலமாகும். வேட்டையாமுறிப்பு என்பது அக்காலத்தில் கேதீஸ்வரநாதன் வேட்டைத் திருவிழாவுக்கு உலாப் போந்த பகுதியாகும்.

சோழர் காலத்தில் மாதோட்டத்து இராசராசபுரம் என வழங்கிய பகுதி, தமிழ்நாட்டுக் குலசேகரப்பட்டினம் போலப் பெருமைவாய்ந்ததாயிருந்தது. சோழரின் பின்வந்த பாண்டியர்களுள் சுந்தரபாண்டியன்

Koviloor Digital Library

இங்கே செய்த திருப்பணிகள் பற்றிய விவரம் சிதம்பரத்துக் கல்வெட்டுக்களில் உள்ளன.

திருக்கேதீஸ்வரத்தைப் பரிபாலித்த சிங்கையாரிய சக்கரவர்த்திகள் தமிழ்நாட்டில் இராமேசுவரத்தையும் பரிபாலித்து வந்தனர். அவர்களின் காசுகளில் சேது என்னும் பெயரும் இடபக்குறியும் இலச்சனையாயிருந்தது.

திருக்கேதீஸ்வரம் உருக்குலைந்தபோதிலும் சில திருவுருவங்கள் பூமிக்குள் புதைக்கப்பெற்றுப் பாதுகாக்கப் பெற்றன. மாதோட்டம் மண்ணோடு மண்ணாய் உருக்குலைந்து கிடந்தத. எங்கும் காடும் மணலும் மேடுகளும் மண்டிக் கிடந்தன. இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் 1872 ஆம் ஆண்டளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சிந்தையில் அந்த இடைமருதின் ஆனந்தத்தேன் சொரியும் பொந்துபோல இந்த இலங்கையிலும் ஒரு தேன் பொந்து திருக்கேதீஸ்வரம் என்னும் எண்ணம் உதித்தது. அதனை அவர் இலங்கை வாழ் சைவமக்களுக்கு நினைவூட்டினார். தமது காலத்திலேயே திருக்கேதீஸ்வரத்திற்கு அதற்குரிய நாற்பது ஏக்கர் நிலத்திலேயே பழையபடி உருப்பெற்றுச் சாந்நித்தியம் பெறுவதற்கான முயற்சியைச் செய்தார்.

நாவலர் அவர்கள் நவின்றதைக் கேட்ட சைவ மக்கள் இருபது ஆண்டுகளாக முயற்சி செய்து 1893 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த நாற்பது ஏக்கர் நிலத்தைப் பகிரங்க ஏலத்தில் விலைக்குப் பெற்றுத் திருப்பணி வேலைகள் செய்யத் தொடங்கினார்கள்.

நிலத்தை வாங்குவதற்கு பொதுமக்கள் சார்பில் முன்னின்று பழநியப்ப செட்டியார் அவர்களும், திருப்பணி வேலைகளில் முன்னின்று உழைத்த பசுபதிச் செட்டியார், நீராவியடி வை. ஆறுமுகம், வைத்தியர் இராமுப்பிள்ளை, இராகவப்பிள்ளை முதலானோரும் குறிப்பிடத்தக்க சைவச் சான்றோர் ஆவர்.

திருப்பணி வேலைகள் தொடங்கிய நாள்களில் காடுவெட்டிப் பூமிதிருத்திய வேளையில் பழைய கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் பலிபீடம், துவசத்தம்பம் முதலியன அமைந்த இடங்களைக் கண்டனர். தெய்வச் செயலாகத் தொடர்ந்து பழைய சிவலிங்கம், நந்தி, விநாயகர் முதலிய திருவுருவங்கள் கிடைத்தன. அங்கே கிடைத்த மிகப் பெரிய சிவலிங்கமே இன்றைய மகாலிங்கம், அவரை வெளியில் எடுத்தபோது ஒரு சிறு பழுது உண்டாகவே, அவரை வெளியில் பிராகாரத்தில் ஒதுக்கமான இடத்தில் எழுந்தருளச் செய்தனர்.

Koviloor Digital Library

இவ்வாறாக ஆலயத்துக்கு வேண்டிய அத்தியாவசிய அமைப்புகளைக் கட்டியெழுப்பியதும், சோபகிருது வருடம் ஆனித்திங்கள் வளர்பிறை சதுர்த்தசி 28-6-1903 ஆம் நாளில் மகா கும்பாபிடேகத்ததை ஆகமவிதிப்பிரகாரம் செய்தார்கள். மேலும் தொடர்ந்து திருப்பணி வேலைகளைச் செய்த பின்னர், 1910 ஆம் ஆண்டிலும் ஒரு கும்பாபிடேகம் செய்தார்கள்.

பின்னர் ஆர்வமிக்க கொழும்புவாசிகள் 19-10-1948 ஆம் நாளில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் ஒன்றைக் கூட்டி முந்திய பழைய அடியார்களோடு சேர்ந்து திருப்பணி வேலைகளில் ஈடுபட்டபோது, குலசேகர பட்டினத்தைச் சேர்ந்த சோமசுந்தரச் செட்டியார் என்னும் வணிகர் தமது சொந்தப் பொறுப்பில் 1952-ஆம் ஆண்டில் ஒரு கும்பாபிடேகத்தைச் செய்து நிறைவேற்றினார்கள். அப்பெரிய வணிகனாரே பின்னர்த் துறவு பூண்டு மதுரைத் திருஞானசம்பந்தர் திருமடத்துக் குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்தார்.

பின்னர் காடடர்ந்து மிருகங்களின் உறைவிடமாய்ப் போக்குவரத்துப் பாதைகள் வசதிகளற்றுக் கிடந்த இடத்தில் 1903 ஆம் ஆண்டின் பின் ஓரளவுக்கு ஒளிவீசிய வழியில் 1910 ஆம் ஆண்டு கும்பாபிடேகம். பின்னர் 1952 ஆம் ஆண்டில் அருமையாக நடைபெற்ற கும்பாபிடேகத்தைச் சைவப்பெரியார் புலோலி சிவபாத சுந்தரம் முதலானோர் முன்னின்று செய்தனர். அதுமுதல் ஆலய பரிபாலனம் நாட்டுக்கோட்டைச் செட்டிமாரிடமிருந்து ஈழத்துச் சிவனடியார்களிடம் சேர்ந்தது.

சிவபாதசுந்தரனார் தமது பொறுப்பில் ஆடவல்லானின் அற்புதத் திருவுருவத்தை வார்த்துக் கொடுத்தார். இன்று புதியவர் புதுப் பொலிவோடு வந்திருந்தும் பழையவர் அங்கே ஆடிக்கொண்டே இருக்கிறார்.

ஆலய பரிபாலன சபையர் மேலும் புரனமைப்பு செய்வதற்கு ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களை வரவேற்றனர். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் மாணாக்கர். காசிவாசி செந்திநாதஐயர் அவர்களின் மாணாக்கர் எழுவருள் ஒருவராவர். இவருடைய மேற்பார்வையில் தமிழ்நாட்டுக் கைத்திறன வாய்ந்த ஸ்தபதியர்கள் பணிசெய்து 31-10-60 ஆம் நாளிலும், பின்னர் 6-6-71 ஆம் நாளிலும் கும்பாபிடேகங்கள் நடைபெற்றன. அண்மையில் 4-7-76 ஆம் நாள் மிகப்பெரிய கும்பாபிடேகம் நடைபெற்றது.

Koviloor Digital Library

இன்றைய திருக்கேதீச்சரம் கிழக்கு நோக்கிய எழில்மிகு இராச கோபுரத்தோடு ஒளி வீசுகின்றது. கோபுரத்தோடு மருவினாற்போல பெரிய மணிமண்டபமும் ஒய்யாரமாயெழுந்து ஒலிபரப்புகிறது. வாசலில் பெரிய நந்தியெம் பெருமான் காவல் புரிகின்றார். அருகில் தெற்கு நோக்கியவாறு மிகப்பெரிய அளவில் சிவசிவ மண்டபம் அமைந்துள்ளது. மண்டபத்தில் முகப்பில் காரியாலயம், நீர்த்தொட்டி முதலியன அமைந்துள்ளன. அங்கே அர்ச்சனைப் பொருள்கள், தேவஸ்தான வெளியீடகள் பெறுவதற்கான வசதியும் உள்ளன. இன்றைய வெளிப்பிராகாரம் பொன்னாச்சி மரங்களாலும் வேப்ப மரங்களாலும் பொலிவு பெறுகிறது.

கிழக்கு வீதியில் திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நாட்டுக்கோட்டைச் செட்டிமார் மடம், அம்மா மடம், பசுமடம், பூநகரியார் மடம் முதலியன உள்ளன. தெற்கு வீதியில் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் பாலாவிப் பெருங்குளம் பரவியுள்ளது. அதற்கு இப்பால் வேப்பஞ்சோலைச் சூழலில் பாண்டியன் தாழ்வுச் சபாரத்தின சுவாமி மடம், சிவராத்திரி மடம், நெசவு மடம், சிற்பிகள் தங்கும் மடம் முதலியன உள்ளன. மேற்குவீதியை அலங்கரிக்கும் மடங்களுள் மடாலயத்தோடும், அன்னதான மண்டபத்தோடும் கூடிய குருகுல மடம் முதலியன உள்ளன. வடக்கு வீதியில் நாவலர் மடம், விசுவகன்மா மடம், திருக்குறிப்புத் தொண்டர்மடம் முதலியவற்றோடு, சிவமணி எனப்புகழ் பெற்ற தொண்டர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் குடில், திருக்கேதீஸ்வரப் பெருமானிடம் தம்மை ஒப்படைத்துத் தினமும் திருத்தொண்டு செய்து வருகின்ற செல்வர் முன்னாள் பொன்னாவெளி உடையார் அருளம்பலம் அவர்களின் சிற்றில் முதலியனவும் உள்ளன. திருக்கோயிலுக்கு அண்மையில் தபாற்கந்தோர், மருந்துச்சாலை, கடைகள், உண்டிச்சாலி, சைவப் பாடசாலைகள் யாவும் உள்ளன. மடங்களை எல்லாம் சுற்றியவாறு உலாவருவதற்கான தேரோடும் பெரும்பிராகாரம் அமையவிருக்கிறது. இன்று அங்கே ஐந்து பெரிய தேர்கள் உருவாகியுள்ளன. இவற்றுள் சிவன் தேர் பெரியதாகும். சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். கௌரியம்மன் தெற்கு நோக்கியுள்ளார். சுவாமி வாசலில் இராச கோபுரத்தின் இருமருங்கிலும் விநாயகரும் சுப்பிரமணியரும் உள்ளனர். வெளியில் காவல் காத்தவாறு சிவனை நோக்கியிருப்பவர் பழைய நந்தியெம்பெருமானாவர்.

உத்தரவு பெற்று உள்ளே சென்று உட்பிராகாரத்தை வலஞ் செய்யும்போது, இறைவனை நோக்கியவாறு எழுந்தருளியுள்ள

Koviloor Digital Library

சூரியன் கோயில், களஞ்சிய அறை யாகசாலை உள்ளன. அடுத்து திருஞானசம்பந்தமூர்த்தி, கேது, சந்தானாசாரியர்கள், திருமறைகள், சதுர்வேதங்கள், உற்சவமூர்த்திகளாய நால்வர், சேக்கிழார் சுவாமிகள், அறுபத்துமூவர், சுந்தரர் எழுந்துள்ள கோயில்களைக் கும்பிடலாம். அடுத்து விநாயகப்பெருமான், சோமாஸ்கந்தர், விஷ்ணு, மகாலிங்கம், பஞ்சலிங்கங்கள், லட்சுமி முருகன் கோயில்கள் உள்ளன. இந்த வரிசையில் நடுநாயகமாக மிகப் பெரியவராக எழுந்தருளியுள்ள மகாலிங்கப் பெருமானே பழைய திருக்கேதீஸ்வரப் பெருமான். அவரை நிலத்தி லிருந்து எடுத்தபோது தற்செயலாக உண்டான ஒரு சிறுபழுது அவரைக் கர்ப்ப கிருகத்தில் எழுந்தருளச் செய்வதற்கு தடையாகிவிடவே, பக்தர்கள் அவரை மேற்குப் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்தனர். இன்றும் சிவராத்திரி வேளையில் பல்லாயிரவர் ஆடிப்பாடிப் பாலாவியில் நீர்முகந்து வந்து தம் கையாலேயே சாமந்தொறும் அபிஷேகம் செய்யும்போது வாயினால் ''சிவாய நம ஓம், சிவாய நம ஓம்'' என ஒரே குரலில் உச்சாடனம் செய்தல் உணர்ச்சி மயமானதாகும்.

இனி உட்பிரகாரத்தில் வடபாலமைந்த கோயில்களில் சுப்பிர மணியர், தேவசபை, சரபமூர்த்தி, நடராஜப் பெருமான் எழுந்துள் ளார்கள். அடுத்து மேற்கு நோக்கியவாறு யாகசாலை, காலபைரவர் கோயில், சனீஸ்வரன், சந்திரன் ஆகியோர் கோயில்கள் உள்ளன. கோபுரத்தின் கீழ் இருபாலும் அதிகார நந்திகள் எழுந்தருளியுள்ளார்கள். கொடிமரம் கம்பீரமானது நிருத்தமண்டபம் என அமைந்த இடத்தில் நவக்கிரகங்கள் உள்ளன.

கௌரியம்பாள் தெற்கு நோக்கி அழகாக எழுந்தருளியுள்ளார். கௌரியம்பாளின் திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு மலேசிய வாசிகளான சைவத்தமிழபிமானிகள் துணிந்துள்ளார்கள். இன்றை திருக்கேதீஸ்வரப் பொலிவுக்குத் தமிழ்நாட்டு ஆலயங்கள், ஆதீனங்கள், உபசரிப்பு வரப்பிரசாதமாய் வந்து வாய்த்தவையாகும். இன்னும் யாழ்ப்பாணத்துப் பெரியவரான விசுவப்பா அவர்கள் வேண்டிய போதெல்லாம் இலட்சக்கணக்காக அள்ளிக் கொடுத்துள்ளார். திருக் கோயிலில் சரியைத் தொண்டு செய்பவர்களுள் பொன்னாவெளி உடையார் அருளம்பலம். மன்னார் உதவி அரசாங்க அதிபர் ஆறுமுகம், ஆசிரியர் பண்டிதர் கனகசபை முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். திருக்கேதீஸ்வரநாதன் மீதும் பக்தர்கள் பல பிரபந்தங்கள் பாடியுள் ளார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை திருக்கேதீஸ்வரத் தேவாரத் திருப்பதிகங்களுக்கு உரை எழுதியுள்ளார்.

Koviloor Digital Library

பண்டு நால்வருக்கு அறம் உரைத்தருளிப் பல்லுல கினில் உயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிங்கை தொழக்காதலித் துறை கோயில்
வண்டு பண்செயுமாமலர்ப் பொழின் மஞ்சை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறும் துதிசெய அருள் செய் கேதீச் சரமதுதானே.

(சம்பந்தர்)

அங்கத்துறு நோய்கள் அடியார் மேல் ஒழித்தருளி
'வங்கம் மலிகின்ற கடன் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே'' *(சுந்தரர்)*

''-வேட்டுலகின்
மூதிச் சரமென்று முன்னோர் வணங்கு திருக்
கேதீச் சரத்திற் கிளர்கின்றோய்''. *(அருட்பா)*

275. திருஇடைவாய்

திருவிடை வாயில் / இடவை

சோழநாட்டுத் தென்கரைத் தலம்

தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரியிலிருந்து கூத்தா நல்லூர் செல்லும் பாதையில் வெண்ணாற்றுப் பாலத்திற்கு அருகில் திருவிடை வாயில் என்னும் வழிகாட்டி உள்ளது. அவ்வழியில் 2 கி.மீ. சென்றால் இத்தலத்தையடையலாம்.

இஃது புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட திருமுறைத்தலம். மேடு ஒன்றினை வெட்டியெடுக்கும்போது உள்ளே கோயில் குடியிருந்த தாகவும், அதைத் தோண்டிப் பார்க்கையில் கோயிலுக்குள் அத் தலத்தைப் பற்றிய ஞானசம்பந்தர் தேவாரம் கல்வெட்டில் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது.

கி.பி. 1917ல் கண்டெடுக்கப்பட்ட இத்தலத்தை ''ஐயடிகள் காடவர்கோன் தம்முடைய க்ஷேத்திரக்கோவையில் தென் இடைவாய்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் - இடைவாய் நாதர், விடைவாயப்பர், புண்ணிய கோட்டீஸ்வரர்

இறைவி - உமையம்மை, அபிராமி.

Koviloor Digital Library

தீர்த்தம் - புண்ணியகோடி தீர்த்தம்.

சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறிய கோயில் கோபுர வாயிலைக் கடந்து சென்றால் நந்தி, பலிபீடம் உள்ளன.

பிராகரத்தில் விநாயகர், முருகன், கஜலட்சுமி, நவக்கிரகம், பைரவர், சந்திரன், சூரியன் சந்நதிகள் உள்ளன. தலப்பதிகக் கல்வெட்டு உள்ளது.

கோஷ்டமூர்த்தங்களாக நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, சந்நிதிகள் முறையாகவுள்ளன. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. மகாமண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

''மறியார் கரத்தெந்தையம் மாதுமையோடும்
பிறியாத பெம்மான் உறையும் இடம் என்பர்
பொறிவாய் வரிவண்டு தன் பூம்பெடை புல்கி
வெறியார் மலரில் துயிலும்விடைவாயே'' *(சம்பந்தர்)*

இப்பதிகம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியிலிருந்து 1968ல் ஸ்ரீ வைகுண்டம், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம் மூலமாக வெளியிடப்பட்டுள்ள மூவர் தேவாரம் தலமுறை, (அடங்கன் முறை) நூலில் 1536 ஆம் பக்கத்தில் புதிய பதிகம் என்று தலைப்பிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

அஞ்சல் முகவரி:-

அ/மி. விடைவாயப்பர்/புண்ணியகோடீஸ்வரர் திருக்கோயில்.
திருவிடைவாயில் - கூத்தா நல்லூர் Post
தஞ்சை மாவட்டம். *614 101.*

276. திருக்கிளியன்னவூர்

இத்தலம் 276 ஆவது திருமுறைத்தலமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரி (பாண்டிச்சேரி)யிலுள்ள இந்தாலஜி இன்ஸ்டியூட்டினர் (The Institute of Indology) 1984ல் வெளியிட்டுள்ள தேவாரம் (பண்முறை) - ஞானசம்பந்தர் தேவாரம் வால்யூம் 1ல் பக்கம்

Koviloor Digital Library

405ல் (பதிகத்தொடர் எண். 385 உடையதாக) - 'திருவிடைவாய்' பதிகத்தை அடுத்து,

''திருக்கிளியன்னவூர்'' என்னும் தலத்தின் பதிகத்தை வெளியிட்டுள்ளனர். அதில் ''சித்தாந்தம்'' இதழ் மலர் 5, இதழ் 11. (1932) தலைப்பு ஏட்டிலிருந்து எழுதப்பட்டது என்று குறித்துள்ளனர். இப்பதிகப்பண் 'கௌசிகம்'. இந்நூலின் பதிப்பாசிரியர்கள் T.V. கோபால ஐயர் அவர்களும், திரு. Francois Gros அவர்களும் ஆவர். திரு. T.V. கோபாலய்யர் அவர்கள் இந்நூலில் முன்னுரையில் (பக்கம் XXXVIII-XXXIX) ''கிளியன்னவூர் பதிகம் பி. ஜானகிராம் முதலியார் அவர்களிடம் பெற்று, ''சித்தாந்தம் மலர் 5 இதழ் 11 (1932)ல் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறித்துள்ளார்.

(மேற்படி நூலில் இத்தலம் எங்குள்ளது என்று குறிப்பிடப்பட வில்லை. ஆனால் திண்டிவனத்திற்குப் பக்கத்தில் **'கிளியனூர்'** என்றும் பெயரில் இன்றொரு ஊர் உள்ளது.

இப்பதிகம் வருமாறு:-

திருக்கிளியன்னவூர் - கௌசிகம்

1 தார் சிறக்கும் சடைக்கு அணி வள்ளலின்
சீர் சிறக்கும் துணைப்பதம் உன்னுவொர்
பேர் சிறக்கும் பெருமொழி உய்வகை
ஏர் சிறக்கும் கிளியன்ன வூரனே.

2 வன்மை செய்யும் வறுமை வந்தாலுமே
தன்மை இல்லவர் சார்பு இருந்தாலுமே
புனமைக் கன்னியர் பூசல் உற்றாலுமே
நன்மை உற்ற கிளியன்ன வூரனே.

3 பன்னி நின்ற பனுவல் அகத்தியன்
உன்னி நின்று உறுத்தும் சுகத்தவன்
மன்னி நாகம் முகத்தவர் ஓதலும்
முன்னில் நின்ற கிளியன்ன வூரனே.

4 அன்பர் வேண்டுமவை அளி சோதியான்
வன்பர் நெஞ்சில் மருவல் இல்லாமுதல்
துன்பம் தீர்த்துச் சுகம் கொடு கண்ணுதல்
இன்பம் தேக்கும் கிளியன்ன வூரனே.

Koviloor Digital Library

5 செய்யும் வண்ணம் சிரித்துப் புரம்மிசை
பெய்யும் வண்ணப் பெருந்தகை யானதோர்
உய்யும் வண்ணம் இங்கு உன் அருள்நோக்கிட
மெய்யும் வண்ணக் கிளியன்ன வூரனே.

6 எண்பெறா வினைக்கு ஏதுசெய் நின் அருள்
நண்பு உருப்பவம் இயற்றிடில் அந்நெறி
மண்பொரு முழுச் செல்வமும் மல்குமால்
புண் பொருத கிளியன்ன வூரனே.

7 மூவர் ஆயினும் - முக்கண்ண - நின்அருள்
மேவுறாது விலக்கிடற் பாலரோ
தாஉறாது உனது ஐந்தெழுத்து உன்னிட
தேவர் ஆக்கும் கிளியன்ன வூரனே.

8 திரம் மிகுத்த சடைமுடியான் வரை
உரம் மிகுத்த இராவணன் கீண்டலும்
நிரம் மிகுத்து நெரித்து அவன் ஓதலால்
வரம் மிகுத்த கிளியன்ன வூரனே.

9 நீதி உற்றிடும் நான்முகன் நாரணன்
பேதம் உற்றுப் பிரிந்து அழலாய் நிமிர்
நாதன் உற்றன நல்மலர் பாய் இருக்
கீதம் ஏற்ற கிளியன்ன வூரனே.

10 மங்கையர்க்கு அரசோடு குலச்சிறை
''பொங்கு அழல் சுரம் போக்கு'' என, பூழியன்
சங்கை மாற்றி சமணரைத் தாழ்த்தவும்
இங்கு உரைத்த கிளியன்ன வூரனே.

11 நிறைய வாழ் கிளியன்னவூர் ஈசனை
உறையும் ஞானசம்பந்தன் சொல்சீரினை
அறைய நின்றன பத்தும் வல்லார்க்குமே
குறை இலாது கொடுமை தவிர்வரே.

(நூலில் இப்பாடல்கள் படிப்பதற்கு ஏற்ப இவ்வாறு பிரித்துப் போடப்பட்டுள்ளன.)

Koviloor Digital Library

திருவாசகத்தலங்கள்

திருவாசகத்துள் இடம் பெற்றுள்ள தலங்கள்

1. திருப்பெருந்துறை
*2. தில்லை
3. உத்தரகோசமங்கை
*4. திருவண்ணாமலை
*5. திருக்கழுகுன்றம்
*6. திருத்தோணிபுரம்
*7. திருவாரூர் என்பன., இவற்றுள்,

* இவை திருமுறைத்தலங்களாகவும்

– இவை திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்களாகவும் இடம் பெற்றுள்ளன.

இவையன்றித் திருவாசகத்தில் குறிக்கப்பெறும் தலங்களாக அறியப்படுபவை வருமாறு:- 1. மகேந்திரமலை 2. பஞ்சப்பள்ளி 3. நந்தம்பாடி 4. குடநாடு 5. வேலம்புத்தூர் 6. சாந்தம்புத்தூர் 7. மதுரை 8. திருப்பூவணம் 9. திருவாதவூர் 10. பூவலம் 11. திருவெண்காடு 12. பட்டமங்கலம் 13. ஓரியுர் 14. பாண்டூர் 15. தேவூர் 16. திருவிடை மருதூர் 17. கச்சி ஏகம்பம் 18. ஸ்ரீ வாஞ்சியம் 19. கடம்பூர் 20. ஈங்கோய் மலை 21. திருவையாறு 22. திருப்பூந்துருத்தி 22. திருப்பனையூர் 24. திருப்புறம்பயம் 25. சந்திரதீபம் 26. குற்றாலம் 27. பாலை 28. கல்லாடம் 29. மொக்கணிச்சுரம் 30. கூடல் (மதுரை) 31. திருப் பராய்த்துறை 32. திருச்சிராப்பள்ளி 33. கோகழி 34. திருப்பழனம் 35. இத்தி 36. மலைநாடு 37. அவிநாசி. இவற்றுள் சில திருமுறைத் தலங்கள். ஏனையவற்றுள் பல பெயர்கள் எவ்வெத்தலங்களைக் குறிக்கின்றன என்பதைச் சரியாக அறியமுடியவில்லை. **திருவாதவூர்** மாணிக்கவாசகருடைய அவதாரத்தலம்.

Koviloor Digital Library

தலங்களும் அருளிச் செய்யப் பெற்ற பதிகங்களும், பகுதிகளும்

I . திருப்பெருந்துறை (20)

1. சிவபுராணம் 2. திருச்சதகம் 3. திருப்பள்ளியெழுச்சி 4. செத்திலாப் பத்தது 5. அடைக்கலப் பத்து 6. ஆசைப் பத்து 7.அதிசயப்பத்து 8. புணர்ச்சிப் பத்து 9. வாழாப் பத்து 10. அருட்பத்து 11. பிரார்த்தனைப் பத்து 12. குழைத்த பத்து 13. உயிருண்ணிப் பத்து 14. பாண்டிப் பதிகம் 15. திருஏசறவு 16. அற்புதப் பத்து 17. சென்னிப் பத்து 18. திருவார்த்தை 19. திருவெண்பா 20. திருப்பண்டாய நான்மறை.

II. தில்லை (25)

1. கீர்த்தித் திருஅகவல் 2. திருஅண்டப்பகுதி 3. போற்றித் திருஅகவல் 4. திருப்பொற்சுண்ணம் 5. திருக்கோத்தும்பி 6. திருத்தெள்ளேணம் 7. திருச்சாழல் 8. திருப்பூவல்லி 9. திருவுந்தியார் 10. திருத்தோணாக்கம் 11. திருப்பொன்னுசால் 12. அன்னைப்பத்து 13. குயிற் பத்து 14. திருத்தசாங்கம் 15. கோயில்மூத்த திருப்பதிகம் 16. கோயில் திருப்பதிகம் 17. கண்ட பத்து 18. அச்சப் பத்து 19. குலாப் பத்து 20. எண்ணப் பதிகம் 21. யாத்திரைப் பத்து 22. திருப்படையாட்சி 24. ஆனந்தமாலை 25. அச்சோப் பதிகம்.

III. உத்தரகோசமங்கை

1. நீத்தல் விண்ணப்பம்.

IV. திருவண்ணாமலை

1. திருவெம்பாவை

2. திருஅம்மானை

V. திருக்கழுக்குன்றம்

1. கழுக்குன்றப் பதிகம்

VI. திருத்தோணிபுரம்

1. பிடித்த பத்து

VII. திருவாரூர்

1. திருப்புலம்பல்

Koviloor Digital Library

1. திருப்பெருந்துறை

ஆவுடையார் கோயில்



Koviloor Digital Library

திருவாசகத் தலம். புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்குப் பக்கத்தில் உள்ளது. அறந்தாங்கி - மீமிசல் பாதையில், அறந்தாங்கியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து புதுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், மதுரையிலிருந்து திருப்பத்தூர் காரைக்குடி அறந்தாங்கி வழியாகவும் இத்தலத்திற்கு வரலாம். மக்கள் வழக்கில் இன்று இத்தலம் ஆவுடையார் கோயில் என்று வழங்குகிறது. ஊர் - பெருந்துறை. கோயில் - ஆவுடையார் கோயில். கோயிற் பெயரான ஆவுடையார் கோயில் என்பதே ஊருக்குப் பெயராக வழங்குகிறது. சிறிய ஊர். அருகில் செல்லும்போதே கோபுரம் காட்சியளிக்கின்றது.

அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்த வாதவூரர் கீழ்கடற்கரைக்குக் குதிரை வாங்கச் சென்றபோது அவரைக் குருந்த மரத்தின் கீழிருந்து குருவடிவில் இறைவன் ஆட்கொண்டு, அவரை மாணிக்கவாசகராக ஆக்கிய மாட்சிமை பெற்ற தலம். மாணிக்கவாசகர் அருள் பெற்ற புண்ணி பூமி. அருபரத்து ஒருவன் குருபரனாக வந்து காட்சி தந்த பதி. இத்திருக்கோயில், இறைவனின் கட்டளைப்படி மாணிக்கவாசகரால் கட்டப்பட்டது. கொடுங்கைகளின் அழகுக்குப் பெயர் பெற்ற கோயில். பண்டைநாளில் ஸ்தபதிகள் கோயில் கட்டுவதற்கு உடன்படிக்கை எழுதுங்கால் ஆவுடையார் கோயில் கொடுங்கைகளைப் போலத் தங்களால் அமைக்க முடியாது என்பதைக் குறிக்கும் வகையில் ''ஆவுடையார் கோயில் கொடுங்கைகள் நீங்கலாக'' என்று எழுதும் வழக்கம் இருந்ததாம். பெரிய கனமுடைய கருங்கல்லை, மெல்லியதாக இழைத்து, பல மடிப்புக்களாக அமைத்துள்ள இக்கலைத் திறனைப் பார்க்குங்கால் நம் அறிவுக்கும் எட்டாத அபூர்வ ஆற்றலை அறிந்தின்புறலாம்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட கோயில். ஆதினக் கட்டளைத் தம்பிரான் ஒருவர் இங்கிருந்து கோயிலைக் கவனித்து வருகிறார்.

இறைவன் - ஆம்நாதசுவாமி, குருசுவாமி, பரமசுவாமி, ஆத்மநாதர்.
இறைவி - யோகாம்பாள்.
தலமரம் - குருந்த மரம்
தீர்த்தம் - அக்கினித் தீர்த்தம் (திருத்தமரம் பொய்கை)

உலகவுயிர்கள் வீடுபேறு பெறுவதற்குச் சாதனமாகப் பிறவிக் கடலிலிருந்து கரையேறுவதற்குத் துணையாக - பெரும் துறையாக

Koviloor Digital Library

விளங்கும் தளம் ஆதலின் பெருந்துறை எனப் பெயர் பெற்றது. வெள்ளாறு (சுவேதநதி) பாய்கின்ற வயற்பரப்புக்கள் நிறைந்த பகுதி. ''தெள்ளுநீர் வெள்ளாறுபாய்; திருமிழலை நாட்டுப் பெருந்துறை'' என்பது சிவலோக நாயகி பொன்னூசலில் வருந்தொடர்.

திருவாசகத்திலுள்ள 51 பகுதிகளுள் 20 பகுதிகள் (சிவபுராணம், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத்திலாப்பத்து, அடைக்கலப் பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாய நான்மறை) இத்தலத்தில் பாடப் பெற்றவை.

இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்:- அனாதிமூர்த்தத்தலம், ஆதிகயிலாயம், உபதேசத்தலம், குருந்தவனம், சதுர்வேதபுரம், சதுர் வேதமங்கலம், ஞானபுரம், சிவபுரம், திருமூர்த்திபுரம், தட்சிண கயிலாயம், யோகவனம் முதலியன.

ஆத்மநாதருக்கு *18* பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவை. *1)* ஆத்மநாதர் *2)* பரமசுவாமி *3)* திருமூர்த்திதேசிகர் *4)* சதுர்வேதபுரீசர் *5)* சிவயோகவனத்தீசர் *6)* குந்தகவனேசர் *7)* சிவக்ஷேத்ரநாதர் *8)* சன்னவனேசர் *9)* சன்னவநாதர் *10)* மாயபுரநாயகர் *11)* விப்பிர தேசிகர் *12)* சப்தநாதர் *13)* பிரகத்தீசர் *14)* திருதசதேசிகர் *15)* அசுவநாதர் *16)* சிவபுரநாயகர் *17)* மகாதேவர் *18)* திரிலோககுரு என்பன. மற்றும் ஷடாராதனர் என்ற பெயருமுண்டு.

சிவலாயங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியிருக்கும். சில மேற்கு நோக்கியிருக்கும். ஆனால் குருமூர்த்தமாக அமைந்த இத்திருக் கோயில் தெற்கு நோக்கியுள்ளது. தவிர, சிவாலயங்களில் இறைவன்; சிவலிங்கபாண வடிவில் அருவுருவாகக் காட்சிதர, இக்கோயிலில் மட்டும் குருந்தம் மேவிய குருபரனான ஆத்மநாதர் அருவமாக இருந்து சித்தத்தைச் சிவமாக்கும் சித்தினைச் செய்தருளுகின்றார். ஆறாதாரங் களை நினைவூட்டும் வகையில் கனகசபை முதலான ஆறு சபைகளும் இக்கோயிலில் உள்ளன. திருப்பரங்குன்றத் திருப்புகழில் ''அருக்கு மங்கையர்'' என்று தொடங்கும் பாடலில் ''வழியடியர் திருக்குருந்தடி அருள் பெற அருளிய குருநாதர்'' என்று ஆத்மநாதசுவாமி போற்றப் படுகிறார்.

ஆத்மலிங்க வடிவில் இறைன் இப்பெருந்துறையில் எழுந்தருளி யுள்ளசிறப்பை - அருவ நிலையை - ஆத்மசொரூபமாக உள்ள நிலையை

Koviloor Digital Library

''பார்த்து நாம் குருவாய் வந்தனுக்கிரம்
பதனமாய் வைத்து மனத்துள்ளே - நிதம்
பத்திசெய் வேறொன்றுமில்லை யில்லை - இது
பரம ரகசியம் என்று கொள்ளே'' - என்று மாணிக்கவாசகர் விலாசம் என்னும் பழைய நூல் புகழ்கிறது.

இத்தலம் வனம், தலம், புரம், தீர்த்தம், மூர்த்தி, தொண்டர் எனும் 6 சிறப்புக்கள் அமைந்தது. (1) வனம் - குருந்தவனம் (2) தலம் - தீர்த்தத்தலம் (3) புரம் - சிவபுரம் (4) தீர்த்தம் - திருத்தமாம் பொய்கை (5) மூர்த்தி - ஆத்மநாதர் (6) தொண்டர் - மாணிக்கவாசகர்.

கோயிலின் முன்புறம் திருவாவடுதுறை ஆதீனப் பெயர்ப் பலகை யுள்ளது. எதிரில் சற்று உள்ளடங்கி, குளமொன்று உள்ளது - பயன் படுத்தும் நிலையில் இல்லை. சாலையிலிருந்து கோயிலுள் நுழையும் முன்பு மண்டபத்தின் மேற்புறம் குருந்தமர உபதேசக்காட்சி அமைக்கப் பட்டுள்ளது. உட்புறம் சுற்றிலும் கடைகள், மண்டபத்தின் விதானம் மரத்தாலாகியது.

பார்வையைச் சற்று உயர்த்தினால் மேற்புறக் கொடுங்கையின் மேலே ஒரு குரங்கும் (கீழ்நோக்கியவாறு), ஒரு உடும்பும் (மேல் நோக்கியவாறு) செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அலைபாயும் குரங்கு மனத்தை அடக்கி, ஆத்மநாதரின் திருவடியில் உடும்புப் பிடிபோல நிறுத்தி - அவருடைய திருவடிகளைச் சிக்கென பிடித்து, உய்வுபெற வேண்டுமென்னும் எண்ணத்துடன் உள்ளே செல்க என்று நமக்கு உணர்த்துவதுபோல இஃது உள்ளது.

அடுத்துள்ளது மண்டபம் பெரியது - ரகுநாத பூபால மண்டபம். அற்புதமான வேலைப்பாடுடைய பெரிய மூர்த்தங்கள், அகோர வீரபத்திரரும், ரண வீரபத்திரரும் உட்புறமாகத் திரும்பியவாறு தரிசனம் தருகின்றனர். மத்தியில் மேற்புறத்தில் விராட் சொரூபம் வண்ணத்தில். பாலவனம் ஜமீன்தாரர்களின் முன்னோர்களான வேதவனப் பண்டாரம், ஆறுமுகப் பண்டாரம் ஆகியோர்களால் இம்மண்டபம் 330 ஆண்டு கட்கு முன் கட்டப்பட்டதாம்.

இடப்பால் சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதி. வலமாகச் சுற்றி வரும்போது துவாரபாலகர்களையும் விநாயகரையும் தரிசிக்கிறோம். சுவரில் வண்ணஓவியங்கள் மிகப்பழமையானவை. அழிந்த நிலையில் உள்ளன. அவற்றுள் ஒன்று.

'அண்ட ரண்ட பட்சி'யின் வண்ண ஓவியம். இப்பறவை இரண்டு யானைகளை ஒருசேரத் தூக்குமளவுக்கு வலிமையுடைய பறவை

Koviloor Digital Library

யாகத் திகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. பாம்பன் சுவாமிகள் பாடியுள்ள வீரபத்திரச் சக்கரத்தின் வண்ண ஓவியம் உள்ளது. அட்டாங்க யோக வளர்ச்சிச் சிற்பங்கள் மேற்புறத்தில் உள்ளன. தூணில் கண்ணப்பர், கண்களை அப்பும் கோலம் முதலியவைகளையும் காணலாம். மண்டபத்தின் ஓரங்களில் அமைந்துள்ள கொடுங்கைகளின் அழகைக் கண்டு ஆனந்தம் பெறலாம்.

அடுத்துள்ளது ராஜகோபுரம் - முன்பு ஐந்து நிலைகளாக இருந்ததை மாற்றி ஏழுநிலைகளாக்கித் திருப்பணிசெய்யப்பட்டுள்ளது. இதற்கான மகாகும்பாபிஷேகம் 27-6-1990 அன்று நடைபெற்றது நெடிதுயர்ந்த ராஜகோபுரம், தொலைவில் வரும்போதே வா என்று அழைக்கும் வான்கருணைச் சான்றான ஆத்மநாத ஸ்வரூபத்தின் ஸ்தூல அடையாளம்.

ராஜகோபுரத்தின் வழியே உட்செல்லும்போது வாயிலின் இடப் பக்கத்தில் - சுவரில் - வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலுக்கு வைத்துள்ள தர்மத்தைப் பற்றிய சாசனக் கல்வெட்டு, பதிக்கப்பட்டு உள்ளது. அதில் உள்ள விவரம் வருமாறு:-

ஆவுடையார்கோயிலில் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாருடைய தர்மம் சகலருக்கும் பிரசித்தியாகத் தெரியும் பொருட்டு நிரந்தரமான ஞாபகத்தின் பொருட்டுச் செய்ய விளம்பரமாவது:-

இறந்துபோன புண்ணிய புருஷராகிய ஷை பச்சையப்ப முதலியார் அவர்களாலே வைக்கப்பட்டிருக்கும் லட்சம் வராகனுக்கு வரப்பட்ட வட்டிப் பணத்தினின்னும்ஆவுடையார்கோயிலில் சாயரக்ஷை கட்டளைத் தர்மமானது. கனம் பொருந்திய சுப்ரீம் கோர்ட் கவர்ன்மெண்டு அதிகாரிகளால் தர்ம விசாரணைக் கர்த்தர்களாக நியமிக்கப்பட்டுச் சென்னப் பட்டினத்திலிருக்கும் இந்து சபையாரவர்களுடைய உத்திரவின்படி சாலிவாகன சகாப்தம் 1764-ஆம் வருஷத்து சரியான சுபகிருது இூ முதல் வருஷம் கறாளஉய 120 வராகன் செலவுள்ளதாக நடந்து வருகின்றது. ஷை மூலதனம் சுப்ரீம் கோர்ட்டு அதிகாரிகளுடைய உத்திரவின்படி சென்னப் பட்டணத்திலிருக்கம் ஜெனரல் திரேசரி (General Treasury) என்னும் கவர்ன்மெண்டாருடைய பொக்கிஷத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது ஷை தர்மம் கிரமமாக நடவாவிட்டால் தர்மத்தில் சிரத்தையுள்ளவர் ஷை சபையாரவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது.''

உள்கோபுரத்தையும் தாண்டுகிறோம். அடுத்துள்ளது பஞ்சாட்சர மண்டபம். உட்புகுமுன் நம் நினைவுக்கு ஒரு குறிப்பு:-

Koviloor Digital Library

இக்கோயிலில் கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்திராத்வா முதலிய ஆறு ஆத்வாக்களைக் குறிக்கும் வகையில் ஆறுவாயில்கள் - ஆறுசபைகள் உள்ளன. அவை 1) கனக சபை 2) நடனசபை 3) தேவசபை 4) சத்சபை 5) சித்சபை 6) ஆநந்த சபை என்றழைக்கப்படுகின்றன.

(கனகசபை - 81 தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. **நர்த்தன சபை** (நடன/நிருத்தசபை) - பதஞ்சலி வியாக்ரபாதர்கள் பெருமானிடம் கருணையை வேண்டிப் பெற்ற இடம் 224 புவன தீபங்களை யுடையது. சூரனிடம் பயந்த தேவர்கள் தவஞ்செய்த இடமாகச் சொல்லப்படுவது **தேவசபை** - சுந்தரபாண்டிய மண்டபம் என்பர். இங்க ஏகாதச மந்திரங்கள் 11 தீபங்களாக உள்ளன. **சத்சபையில்** 36 எண்ணுடைய தத்துவத் தீபங்கள் பிரகாசிக்கின்றன. **சித்சசபையில்** அகரமுதலான 51 எண்ணுடைய தீபம் திகழ்கிறது. **ஆநந்தசபையில்** (கருவறையில்) பஞ்சகலைகள் என்னும் சுடர், பிரகாசிக்கிறது. இவ்வாறு இத்திருக்கோயிலில் தத்துவம் அனைத்தும் தீபவடிவங்களாகவே வைத்துக் காட்டப்பட்டுள்ளன. இக்கருத்தை மனத்துக் கொண்டு உட்செல்வோம்.)

1. இப்போது நாமிருப்பது **பஞ்சாட்சர மண்டபம்** - இதை **கனகசபை** என்பர். முந்நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டதாம். கொடுங்கைகளை அழகாகப் பெற்றுள்ள இம்மண்டபத்தின் மேற்புறச் சுவரில் எண்ணற்ற புவனங்களைக் குறிக்கும் அட்சரங்கள் செதுக்கப் பட்டுள்ளன. ஆத்மநாதர், தம்மை வழிபட்டு வந்த அந்தணர்களுக்காக, பூமியில் (கீழ்) நீர் வெட்டிக் காட்டிய திருவிளையாடலைக் குறிக்கும் சிற்பம் உள்ளது. பாண்டியன் விசாரிக்க, அமைச்சன் நிற்க, பக்கத்தில் கீழ்நிரை வெட்டிக் காட்டியவராக - குதிரைச் சாமியாராகக் காட்சி தரும் கோலத்தை இம்மண்டபத்தில் காணலாம். (இவ்வரலாறு இக்குறிப்பின் கடைசியில் தரப்பட்டுள்ளது.)

இவ்வரலாற்றுச் செய்தியைக் கவிக்குஞ்சர பாரதியார்;

''வனமான கைலைக்கு நிகரான சதுர்வேத
மங்களம் இருந்த லிங்கம்
கங்கை பங்காளராய் வேதியர்க் காகவே
காணி பறிகொண்ட லிங்கம்''

என்று பாடியுள்ளார்.

இதையே பின்வரும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணப்பாடலும் தெரிவிக்கின்றது:-

Koviloor Digital Library

''பொருந்துதில்லை வனம் கடந்துபோந்து வேந்தற்சேர்ந்தருளின்
வருந்த விடலந்தனிலிருந்த மறையோனாகி மறையோர்கட்
கிரங்கியருங் கீழ் நீர் காட்டி யிடங்கள் மீட்ட பெருமானே
குருந்த வரம்பிற் கரந்த மறைக் கொழுந்தே செழும் பொற்றாள் போற்றி.''

இங்குள்ள தூண் ஒன்றில் இருதலைகளும் ஓருடலும் கொண்டு பின்னிய நிலையிலுள்ள பாம்பும்; ஒன்றில் சாமுத்ரிகாலட்சணத்தைக் காட்டும் பெண் முதலான சிற்பங்களும் உள்ளன.

இடப்பால் மாணிக்கவாசகர் மூலத்தானம். கிழக்கு நோக்கியது. இங்குள்ள தூண் ஒன்றில் நவக்கிரகங்கள் கல்லில் அடித்து வைக்கப் பட்டுள்ளன. தனியாக இக்கோயிலில் நவக்கிரக சந்நிதியில்லை. சந்நிதி மேற்புறத்தில் 27 நட்சத்திர வடிவங்களும் கல்லிற் செதுக்கப்பட் டுள்ளன. எதிரில் உள்ள தூண்களில் ஆதீனக் குருமூர்த்திகள், கட்டளைத் தம்பிரான்கள் காட்சி தருகின்றனர். சந்நிதியின் வெளிச் சுவரில் வண்ண ஓவியத்தில் ஸ்பரிச/உபதேச/திருவடி தீட்சை ஓவி யங்கள் உள்ளன. வலமாக வரும்போது திருவிளையாடற்புராண வரலாறுகளுள் பிறவும் வண்ணத்தில் இருப்பதைக் காணலாம்.

2. அடுத்தது **நிருத்த மண்டபம் - நடனசபை, நர்த்தன சபை.** இடப்பால் குறவன், குறத்தி சிலைகள். அற்புதமான கலையழகு, தலைக்கொண்டை முதல் ஒவ்வொரு உறுப்பையும், கை விரல் ரேகைகள் கூடத் தெளிவாகத் தெரியும் வண்ணம் செதுக்கியுள்ள கைவண்ணம் - வேடனின் நளினத்தோற்றம் - இவ்வாறே வலப்பால் காட்சிதரும் வேடன் வேடுவச்சி சிற்பங்கள் - அற்புதமான கலையழகு கருவூலங்கள். கண்களுக்குக் கொள்ளையழகு. சோமாசிமாற நாயனார் செய்த யாகத்திற்கு இறைவன் சென்ற வடிவம் இஃதுதானே! நினைத்தாலே புல்லரிக்கும், மெய்சிலிர்க்கும். தலையழகுக் கோலங்கள் சங்கநிதி, பத்மநிதி சிற்பங்கள் - சற்று உள்ளே சென்றால் இடப்பால் வியாக்ரபாதரும் வலப்பால் பதஞ்சலியும் உள்ளனர். மற்றோர் இடத்தில் யாக்ஞவல்கியர் ஜனகர் உருவங்கள், நிருத்த மண்டபம் என்பதற்கேற்ப கல்விளக்குத் தூண் ஒன்றில் நிருத்த (நடன) சிற்பங்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக உள்ளன.

3. வாயிலைக் கடந்து உட்புகுந்தால் அடுத்து வருவது **தேவசபை - சுந்தர பாண்டிய மண்டபம்** (சுந்தர பாண்டிய மன்னனால் புதுப்பிக்கப்பட்டதாதலின் இப்பெயர் பெற்றது) இடப்பால் பிராகாரத்தில் மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தி சந்நிதி. இப்பெருமானைத் தரிசித்து விட்டுத்தான் உள்ளே மூலவரைத் தரிசிக்கச் செல்ல வேண்டும்

Koviloor Digital Library

என்பது இக்கோயில் மரபு. விநாயகர், வீரபத்திரர், பிட்சாடனர், ஊர்த்துவர் மூர்த்தங்களைத் தரிசித்தவாறே அம்பிகை சந்நிதியை அடைகிறோம். சுவாமியைப் போலவே அம்பாளும் தெற்கு நோக்கிய சந்நிதி, ஆத்மநாத சுவாமியைப் போலவே அம்பாளும் அருவம்தான். ஸ்ரீயோகாம்பாள் சந்நிதியில் திருமேனி இல்லை. சததளபத்ம பீடத்தில் - 100 இதழ்கள் கொண்ட தாமரையாகிய பீடத்தில் - யோகாம்பாளின் திருவடிகள் மட்டுமே தங்கத்தாலான யந்திர வடிவமாக உள்ளன. முன்புறமுள்ள கல் ஜன்னல் வழியாகத்தான் தரிசிக்க வேண்டும். அதற்கேற்ப ஒளி பொருத்தப்பட்டுள்ளது. பூஜை செய்வோர் மட்டும் உள்ளே செல்வதற்குப் பக்கவாயில் உள்ளது. யோக சொருபியைத் தரிசித்து விட்டு வலமாக வரும்போது சுவரில் உள்ள சிவபுராணத்தையும் திருவாசகப் பாடற்பகுதிகளையும் படித்தவாறே வலம் வரலாம்.

அடுத்த தரிசனம் தல விசேடக் காட்சியான குருந்தமர உபதேசக் காட்சி. கல்லில் வடித்துள்ள குருந்தமரம் - கீழே இறைவன் குரு வடிவில் அமர்ந்திருக்க எதிரில் மாணிக்கவாசகர் பவ்வியமாக இருந்து உபதேசம் பெறும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது. ஆனித் திருமஞ்சன நாளிலும் மார்கழித் திருவாதிரையிலும் மாணிக்கவாசகருக்கு உபதேசித்த காட்சி உற்சவம் நடைபெறுகிறது. அப்போது பூஜை செய்யும் நம்பியார் சிவ வேடமணிந்து, மாணிக்கவாசகரை எழுந்தருளச் செய்து உபதேச ஐதிகத்தை நடத்துவிக்கின்றார். "எந்தமராம் இவன் என்று என்னையும் ஆட்கொண்டருளும்" என்ற திருவாசகத்தை நினைவிருத்தித் தொழுது நகர்ந்தால், திருவாசகக் கோயிலைக் காணலாம். இங்குத் திருவாசக ஓலைச்சுவடியே இருப்பது விசேடம். நடராசர் சந்நிதி மூலமூர்த்தமாக (கற்சிலையில்) அம்பலவாணர் - ஆனந்தக் காட்சி. பாலசுப்பிர மணியரை வணங்கி, வலம் முடித்து, வாயிலைக் கடந்து உள்ளே செல்கிறோம். மேற்பகுதியில் "நிலம் நீர் நெருப்பு" என்று தொடங்கும் திருவாசகத் தோணோக்கப் பாடல் எழுதப்பட்டு, அதற்குரிய உருவங்களும் உள்ளன.

4. அடுத்த சபை, **சத்சபை,** இங்குள்ள விசாலமான கல்மேடையில்தான் சுவாமிக்குக் கைபடாத அன்னம் நிவேதிக்கப்படுகிறது. இதனால் இதற்கு **அமுத மண்டபம்** என்றும் பெயர்.

5. **சித்சபை** அடுத்துள்ளது. பூஜை செய்வோர் நிற்குமிடம். ஐந்து (பஞ்ச) கலைகள் தீபங்களாகக் காட்சி நல்குமிடம்.

6. ஆனந்த மயமான ஆத்மநாதரை நேரே காண்கிறோம். பரம சுவாமியான ஆத்மநாதர் எழுந்தருளியுள்ள கருவறையே - குருவருள் கொலு வீற்றிருக்குமிடமே **ஆநந்த சபை.**

Koviloor Digital Library

ஆவுடையார் - நம்மை ஆளுடையார். சதுரபீடம். மேலே சிவலிங்க பாணமில்லை. ஆத்மநாதசுவாமி அருவமாகக் காட்சியளிக்கிறார். அதற்குரிய இடத்தில் தங்கத்தாலான குவளை (ஆவுடையாரின் மேலே) சார்த்தி வைக்கப்பட்டுள்ளது. பின்னால் 27 நட்சத்திரங்களைக் கொண்டதான திருவாசி உள்ளது. அதன் மேலே மூன்று விளக்குகளை வைத்துள்ளனர். அவற்றுள் சிவப்பு அக்கினியையும், வெண்மை சூரியனையும், பச்சை சந்திரனையும் குறிக்கின்றதென்பர். சுவாமிக்கு முன்னால் இரு தூங்கா விளக்குகள் சுடர் விடுகின்றன.

மண்ணிலே பிறந்து இறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்ற நம்மை, அண்ணல் ஆட்கொண்டு அடியரிற்கூட்டிய 'அதிசயத்தை' அகம் நெகிழ நினைத்து, கண்ணீர் பெருக்கி, கையாரத் தொழுது, வாய்குளிரப் பாடி, ''சடையவனே! தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே'' என்று பிரார்த்திக்கின்றோம்.

சேர்ந்தறியாக் கையானிடம் கைகளைச் சேர்த்துக் குவித்து, நெஞ்சிற்குடி கொண்ட நீலமேனியைத் தியானிக்கின்றோம்.

''சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி''

பிரிய மனமின்றித் தரிசித்தவாறே வெளியே வந்து பக்கத்தில் சென்றால் தியாகராஜ மண்டபத்தை அடையலாம். வழியில் வெயிலுகந்த விநாயகர் வீற்றிருக்கின்றார். பக்கத்தில் அக்கினிதீர்த்தம் ''இதற்குத் திருத்தமாம் பொய்கை'' என்று பெயர். தியாகராஜ மண்டபத்தில் மகாலிங்கமூர்த்தி தரிசனம் தருகிறார். எதிரில் முத்து விநாயகர் மண்டபத்தின் மேற்கூரையில் தொங்கும் கற்சங்கிலிகள் கண்களைக் கவர்கின்றன. கொடுங்கைகளின் அற்புதத்தை இம்மண்டபத்தில் காணலாம். எவ்வளவு கனமான கருங்கல்லை எந்த அளவுக்கு மெல்லியதாக இழைத்து, எத்தனை எத்தனை மடிப்புக்களாகக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதைக் கண்டு வியப்படைவதற்காக இடப்பக்கத்தின் கோடியில் இரண்டு மூன்றிடங்களில் துளையிட்டுக் காட்டியுள்ளார்கள்.

விழா நாள்களில் மாணிக்கவாசகர் இம்மண்டபத்திற்கு எழுந்தருளி, இருந்து, பின் புறப்பாடாகிறார். மண்டபத்தைக் கண்டு வியந்த நமக்கு அடுத்த தரிசனம் தலமரங்களான இருகுருந்த மரங்கள்தாம். இம்மரத்தினடியில் தானே பெருமான் வந்தமர்ந்தார் என்று நினைக்கையில் விழிநீர் பெருக்கி, இம்மரத்திற்குக் கிடைத்த பேறு கூட நமக்குக் கிடைக்கவில்லையே என்றெண்ணித் தொழுகிறோம். வலமாக வெளியேறுகிறோம். கோயிலின் பக்கத்திலுள்ள தெருக்கோடியில் ஆதீனத்தின் கோயில் நிர்வாக அலுவலகம் உள்ளது.

Koviloor Digital Library

இத்திருக்கோயில் பல்வகையிலும் சிறப்புக்களைப் பெற்றுத் திகழ்கிறது. இங்குத் தனியே தட்சிணாமூர்த்தி சந்நிதியில்லை. இத் தலத்தில் 24 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவை அக்கினி தீர்த்தம், ஆத்ம கூபம், வேததீர்த்தம், நாராயண தீர்த்தம், தேவ தீர்த்தம், வாயு தீர்த்தம், மானவதீர்த்தம், காலாக்னிருத்ர தீர்த்தம், ரிஷி தீர்த்தம், ஆசுர தீர்த்தம், காந்தர்வ தீர்த்தம், இந்திர தீர்த்தம், பராசர தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர வாவி, வைதிக தீர்த்தம், லட்சுமி தீர்த்தம், சரஸ்வதி கூபம், பக்த தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், கௌதம தீர்த்தம், தொண்டர் குழி, கீழ் நீர், சுவேதநதி என்னும் வெள்ளாறு என்பன. இதனால் சுவாமிக்குத் தீர்த்த நாதர் என்ற பெயருமுண்டு.

மூலவருக்கு மகுடாகமம் உத்தரபாகத்தின்படி பூஜைகள் நடைபெறுகின்றன. ஆனி மகத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் 10 நாள்கள் பெருவிழா நடைபெறுகிறது.

இத்தலத்தில் ‘‘நம்பியார்கள்’’ எனப்படுபவர்களே முக்கிய பூஜகர்களாவார்கள். இவர்கள் ஆத்ம நாதசுவாமியை உள்ளிட்ட 301 பேர்களாவர்.

இத்திருக்கோயிலில் ஆறு வகைப்பட்ட பிரிவினர்களின் மூல மாகப் பூஜைகள் நடைபெறுகின்றன. அவ்விவரம் வருமாறு:-

(1) மூலவருக்கும், குருந்தமரத்தடியிலுள்ள மூல சுவாமிக்கும் - நம்பியார்களும்

(2) பரிவார தெய்வங்களுக்குச் சிவாசாரியார்களும்

(3) குதிரைச்சாமிக்குச் சைவப் பிள்ளைமார்களும்

(4) விரபத்திரருக்கு வேளாளர்களும், 5 கொத்தனார்களும்

(6) மகாலிங்கமூர்த்திக்கு அஷ்ட சாஸ்திரக்காரர்கள் எனப்படு வோரும் பூஜைகளைச் செய்து வரும் ஏற்பாடு இங்குள்ளது.

நாள்தோறும் ஆறுகால பூஜைகள். ஆத்மநாதருக்கு ஆறுகாலங் களிலும் புழுங்கலரிசி நிவேதனம், ஒரு தவலையில் வடித்து, கை படாமல் அப்பாத்திரத்தோடு கொண்டுவந்து அமுத மண்டபத்தில் உள்ள கருங்கல் மேடையில் (சுவாமிக்கு எதிரில்) அப்படியே கொட்டி, ஆவியோடு சுவாமிக்கு நிவேதிப்பதை நாமும் பார்த்துத் தரிசிக்கலாம். அர்த்த சாமத்தில் தினமும் புளியோதரை, எள் சாதம், பால் சாதம், உளுந்து சாதம், பாகற்காய், முளைக்கீரை நிவேதனம். திருவிழாக் காலங்களில் வழக்கமான ஷ நிவேதனங்களுடன் தேன்குழல், வடை, புட்டு, சீயம், அதிரசம், தோசை முதலியவை சிறப்பு நிவேதனமாகும்.

Koviloor Digital Library

இந்த நிவேதன அமைப்பு ஆனி மகத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் நடைபெறும் உற்சவகாலங்களில் மாணிக்கவாசகருக்கும் உண்டு.

ஆத்மநாதசுவாமிக்கு வருடமுழுவதும் உள்ள நைவேத்யம் மாணிக்கவாசருக்கும் இந்த இருவிழாக் காலங்களில் (10 + 10 = 20 நாள்களில்) படைக்கப்படுகிறது.

அக்கினி நட்சத்திரகாலங்களில் சுவாமிக்கு இளநீரும் பானகமும், பாசிப் பருப்பும் தனித்த நிவேதனமாகும். (நிவேதனம் பற்றிய வரலாறு இக்குறிப்பின் இறுதியில் தரப்பட்டுள்ளது.)

கோயில் கல்வெட்டுக்களில் இத்தலம், மிழலைக்கூற்றத்து நடுவிற் கூற்றம் பிரமதேசம் தனியூர்திருப்பெருந்துறையான பவுத்திர மாணிக்கச் சதுர்வேத மங்கலம்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. சுந்தரபாண்டிய மண்டபம், அம்பாள் மண்டபச்சுவர்கள், பஞ்சாட்சர மண்டபம் முதலிய இடங்களில் கல்வெட்டுக்கள் நிரம்ப உள்ளன. இவற்றிலிருந்து அக்காலத்தில் கோயிலுக்கும் சுவாமிக்கும் விடப்பட்ட நிவந்தங்கள் குத்தகைதாரர்களின் பத்திரங்கள், கும்பாபிஷேகம் நடைபெற்ற விவரங்கள், நிர்வாகச் செய்திகள் முதலியவை தெரிய வருகின்றன.

இத்திருக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் ஆதிகயிலாய நாதர் கோயில் உள்ளது. தனிக் கோயில். மாணிக்கவாசகருக்கு முதல் உபதேசக்காட்சி அங்குத்தான். இக்கோயில் மாணிக்கவாசகருக்கு முன்பிருந்தே உள்ளது. இப்பகுதிகள் அனைத்தும் ஒரு காலத்தில் காடாக இருந்ததாம். தற்போது ஆதிகயிலாயநாதர் கோயில் உள்ள இடத்தை, வடக்கூர் (வடக்களூர்) என்றும், ஆவுடையார் கோயில் உள்ள இடத்தைத் தெற்கூர் என்றும் சொல்கின்றனர்.

ஆதிகயிலாயநாதர் கோயில் கிழக்கு நோக்கியது. சிவகாமி அம்பாள் சந்நிதி தெற்கு. விநாயகர் கிழக்கிலும் பைரவர் தெற்கிலும் நந்தி மேற்கிலும் எழுந்தருளியுள்ளனர். பராசரர், புலஸ்தியர், அகத்தியர் முதலிய மகரிஷிகள் இங்கிருந்ததாகச் சொல்கின்றனர்.

ஆதிகயிலாயநாதர் திருக்கோயிலில் திருப்பணிகள் பலவும் செய்தும், புதிய ராசகோபுரம் அமைத்தும், மகாகும்பாபிஷேகம் 25-6-1990 காலையிலும், இத்திருக்கோயில் ராஜகோபுரத்தை, ஐந்து நிலைகளை மாற்றி ஏழுநிலைகளாக்கித் திருப்பணிகள் செய்து புதுப் பித்தும், உள்கோபுரத்தையும் திருப்பணி செய்தும், மஹாகும்பாபி ஷேகம் பிரமோதூத ஆண்டு ஆனித்திங்கள். 13-ஆம் நாள் - 27-6-1990 புதன்கிழமையன்று காலை 6-7.30 மணிக்குள்ளும் சிறப்பாக நடைபெற்றது. திருப்பணிக் குழுத்தலைவர் கோவை சிரவணபுரம்

Koviloor Digital Library

கௌமார மடாலயம் சிரவை யாதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ சுந்தர சுவாமிகள் ஆவார். செயலர் கயிலைமணி. ஈரோடு திரு. மு. அழகப்பன், சேர்மன் அழகப்பா சிமெண்ட் லிமிடெட் அவர்களாவார்.

திருப்பெருந்துறை நாதனாய ஆத்மநாதசுவாமி நிகழ்த்திய அற்புதங்களுள் மாணிக்கவாசகரை ஆட்கொண்டதன்றி, அந்தணர் குழந்தைகட்கு வேதம் ஓதுவித்தது, 'கீழ்நீர் வெட்டிக் காட்டியது' முதலியவைகளும் அடங்கும். இவ்வரலாறுகளைப் பெருந்துறைப் புராணம், கடவுள் மாமுனிவர் புராணம், வீரவனப்புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் முதலியவைகளில் காண்கிறோம்.

அவ்வரலாறுகள் வருமாறு:-

(1) அந்தணர் குழந்தைகளுக்கு வேதம் ஓதுவித்தது:

ஒரு முறை இறைவனே அந்தணராய் கிழவேடங்கொண்டு பெருந்துறையில் வாழ்ந்து வரும் முந்நூறு அந்தணர் வீட்டுக் குழந்தை கட்கும் வேதசாத்திரங்களைக் கற்றுத்தர முன்வந்தார். அந்தணர்களும் அது கேட்டு மகிழ்ந்து விநாயகரைப் பிரதிஷ்டை செய்து பாடசாலை யொன்றை ஏற்படுத்தித் தந்தனர். அந்தணர்களின் வீடுகளில் நாடொறும் புழுங்கலரிசி பாகற்காய் முளைக்கீரை சமைத்து அப்பெரியவருக்கு உணவாகத் தந்து வந்தனர். அவரும் அவ்வுணவை உண்டு பிள்ளை களுக்கு வேதங்களைக் கற்பித்து வந்தார். ஞானயோக சாஸ்திரங்கள், வியாகரணம், தர்க்கம் முதலியவை அனைத்தையும் முறையாகக் கற்பித்தார். குழந்தைகளோடு குழந்தையாய்க் கலந்து ஓடியாடியும், கண்ணைப் பொத்தி விளையாடியும் மகிழ்வித்தார்.

இவருடைய வரவால் குழந்தைகள் பெரிதும் மகிழ்ந்து வேதங் களைப் பயின்று வந்தனர். ஒருநாள் குழந்தைகளோடு விளையாடிய கிழவர் திடீரென மறைந்தார். குழந்தைகள் அவரைக் காணாது வருந்தினர் - பெற்றோர்களிடம் முறையிட்டனர். அவர்களும் மனம் வருந்தி எல்லாவிடங்களிலும் தேடினர். பயனில்லை.

அன்றிரவு குழந்தைககள் அனைவருடைய கனவிலும் ஒரே சமயத்தில் இறைவன் தோன்றி, "அந்தணக் கிழவராக வந்து உங்களுக்கு வேதசாத்திரங்களைக் கற்பித்தது நானே. உங்கள் பெற்றோரிடம் சொல்லி இதுவரையில் நான் சுடச்சுட விரும்பியுண்டு வந்த புழுங்கல் அரிசி, முளைக்கீரை, பாகற்காய் அகிய இவற்றையே எனக்குச் சமைத்துச் சூட்டோடு நிவேதித்து வரச்செய்யுங்கள்" என்றருளி

Koviloor Digital Library

மறைந்தார், குழந்தைகள் விழித்து, மகிழ்ந்து, தத்தம் பெற்றோர்களிடம் செய்தியைச் சொல்ல; வந்தவர் இறைவனே என்று மகிழ்ந்து வணங்கினர். அன்று முதல் சுவாமிக்கு மேற் சொல்லியவாறே நிவேதனம் செய்யப்பட்டு வருகின்றது. இறைவன் குழந்தைகட்கு வேதசாத்திரங்களை ஓதுவித்த இடமாகிய குருந்தவனத்தில் ஸ்ரீ வித்யா கணபதி எழுந்தருளியுள்ளார். இம்மரபினரே நம்பியார் என்போர். இவர்களே ஆத்மநாதசுவாமி பூஜை செய்து வருகின்றனர்.

(2) கீழ் நீர் வெட்டிக் காட்டியது.

பாண்டிய மன்னனின் ஆட்சிகாலத்தில் துண்டகன் என்னும் அமைச்சன் இருந்தான். அவன் பேராசை கொண்டவன். சிவபுரம் என்னும் இக்கிராமத்தின் வளத்தைக் கேள்வியுற்று அக்கிராமத்தைத் தான் அடைய எண்ணினான். அக்கிராமம் தனக்குச் சொந்தமானது என்றும், அந்தணர்கள் தன்னிடமிருந்து பறித்துக் கொண்டதாகவும் மன்னனிடம் சொல்லிவிட்டுச் சிவபுரம் வந்து அதிகார பலத்தால் அந்தணர்களை விரட்டியடித்தான்; எல்லைக்கற்களை யெல்லாம் எடுத்தெறிந்தான். மறையவர்கள் செய்வதறியாமல், அவனை எதிர்க்க மாட்டாமல் சொத்துக்களை இழந்து அலைந்தனர். ஆத்மநாதரே கதி என்று அழுது வேண்டினர்.

அவர்க்கருள விரும்பிய ஆத்மநாதர் வயது முதிர்ந்தவராக வேடங்கொண்டு அந்தணர்களிடம் சென்று, ''என் பெயர் பரமசுவாமி, தில்லையிலிருந்து வருகின்றேன். உங்கள் கிராமத்தைப் பற்றிய விவரமனைத்தும் எனக்குத் தெரியும். உங்கள் நிலையை அறிந்துதான் நான் வந்துள்ளேன். என்னிடமுள்ள பட்டயத்தைக் காட்டி உங்களுடைய பூமியை மீட்டுத் தருகின்றேன். அப்படி மீட்டுத் தந்தால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து 300ல் 1 பங்கை எனக்குத் தரவேண்டும்'' என்றார். அதுகேட்ட அந்தணர்கள், துண்டகனின் கொடுமையைக் கூறி அவரைத் தடுத்தனர். வந்த பெரியவர் அவர்களைத் தைரியப்படுத்தி அழைத்துக் கொண்டு மதுரை வந்தார். வீதியில் உரக்கக் கூவினார். மன்னனுக்குச் செய்தி தெரிந்தது. அவரை அழைத்து அமர்த்தி விவரம் கேட்டான். சிவபுர மகிமையையும், அரசனுடைய குலப்பெருமையையும் எடுத்துரைத்துத் தன் வசமிருந்த பட்டயத்தைக் காட்டினார். சினந்த மன்னன் அமைச்சனை அழைத்து விசாரிக்க, அவனும் தன்னிடமிருந்த பட்டயத்தைக் காட்டினான். இருபட்டயங்களையும் பார்த்த மன்னன் செய்வதறியாது திகைத்து, இருவரையும் அந்தப் பூமிக்குரிய அடையாளங்களைச் சொல்லுமாறு கேட்டான்.

Koviloor Digital Library

அமைச்சனோ தன் பூமியில் எவ்வளவு வெட்டினாலும் தண்ணீர் வாராது என்று சொன்னான். பெரியவரோ தன் பூமியில் வெட்டினால் நீர் வரும் என்றார். பாண்டியன் இருவரையும் அழைத்துக்கொண்டு சிவபுரம் வந்தான். கோயிலின் ஈசான திசையில் உயர்ந்த மேட்டில் நீரை வரவழைக்குமாறு கூறினான். பெரியவர் அதற்குடன்பட்டு, அனைத்துத் தீர்த்தங்களையும் அவ்விடத்தில் வருமாறு சங்கற்பித்து, பூமியை வெட்டிக் கீழ் நீரை மேலே வரச் செய்து வெளிப்படுத்தினார், அத்துடன் பூமியின் நான்கு எல்லைகளையும் அடையாளம் காட்டினார். பாண்டியன் துண்டகனைத் தண்டித்ததுடன் அமைச்சர் பதவியி லிருந்தும் நீக்கிவிட்டு மதுரை திரும்பினான். அந்தணர்கள் தங்கட்குப் பூமியை மீண்டுத் தந்த பெரியவர் ஆத்மநாத சுவாமியே என்று துதித்து, அவரைப் பிரம்ம ரதத்தில் ஏற்றி, உபசரித்து, ஊர்வலமாக அழைத்து வந்து, வாக்களித்தபடியே அவருக்கும் ஒரு பங்கை அளித்து, தங்க ளோடு அவரையும் சேர்த்துக் கொண்டனர். அவரும் (இறைவனும்) அவர்களோடு சேர்ந்து முந்நூற் றொருவராக ஆனார்.

தில்லை தீக்ஷிதர்கள் நடராசப் பெருமானை உள்ளிட்ட மூவாயிவரர் என்பது போல, இத்தலத்தில் ''நம்பியார்கள்'' ஆத்மநாதரை உள்ளிட்ட 301 பேர் என்று சொல்லப்படுகிறது.

ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும் என்று சொல்லச் செய்த பெருமான் அவ்வாறே நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டு சென்றார். அவ்வாறு செய்த இடம் நரிக்குடி என்று இன்று வழங்குகிறது.

சிவபுராணம்

''ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி''

திருச்சதகம்

''ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகஎன் றென்னைநின்பால் வணங்கிடவேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே''

Koviloor Digital Library

திருப்பள்ளியெழுச்சி

''முந்திய முதல்நடு இறுதியுமானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற்றறிவார்
பந்தணை விரலியும் நீயும் நின்அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரை திருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி
அந்தணனாவதும் காட்டி வந்தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே

செத்திலாப்பத்து

''புலையனேனையும் பொருளென நினைந்துன்
அருள்புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க்கெல்லாம்
நிலையனே அலை நீர் விடமுண்ட
நித்தனே அடையார் புரமெரித்த
சிலையனே யெனைச் செத்திடப் பணியாய்
திருப் பெருந்துறைமேவிய சிவனே''

அடைக்கலப்பத்து

''வழங்கு கின்றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினையேன் என் விதியின்மையால்
தழங்கருந்தேனன்ன தண்ணீர்
பருகத் தந்துய்யக் கொள்ளாய்
அழுங்கு கின்றேன் உடையாய் அடி
யேன் உன் அடைக்கலமே.''

ஆசைப்பத்து

''கையால் தொழுதுன் கழற் சேவடிகள்
கழுமத் தழுவிக்கொண்டு
எய்யா தென்றன் தலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்று
ஐயா என்றன் வாயா லரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற்றரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.''

Koviloor Digital Library

அதிசயப்பத்து

''எண்ணிலேன் திருநாமம் அஞ்செழுத்தும் என்
ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்திறந்து மண்ணாவதற்
கொருப் படுகின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.''

புணர்ச்சிப்பத்து

''ஆற்றகில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றிலழுந்தாச் சிந்தை செய்து
சிவன்எம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்கு
உள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்பதென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.''

வாழாப்பத்து

''பாவநாசா உன்பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத்தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
மூவுலகுருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழலாய் நிமிர்ந்தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

அருட்பத்து

எங்கள் நாயகனே என்னுயிர்த்தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்கநற்காமன்
தனதுடல தழலெழவிழித்த
செங்கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

Koviloor Digital Library

பிரார்த்தனைப்பத்து

''மானோர் பங்கா வந்திப்பார்
மதுரக்கனியே மனம்நெகா
நானோர் தோளாச் சுரையொத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலத்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே.''

குழைத்தபத்து

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றேநீ கொண்டால்
என்தான் கெட்டது இரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே.

உயிருண்ணிப்பத்து

நானார் அடியனை வானொரு
நாய்க்குத்த விசிட்டிங்கு
ஊனாருடல் புகுந்தானுயிர்
கலந்தான் உளம்பிரியான்
தேனார்சடை முடியான் மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம் ஈந்தனன் எனக்கே.

பாண்டிப்பதிகம்

அழிவின்றி நின்றதோர் ஆனந்த
வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்
கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத்தாண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுலகுந்தரு வான்கொடை
யேசென்று முந்துமினே

Koviloor Digital Library

திருஏசறவு

நானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே

அற்புதப்பத்து

மாடும் சுற்றமும் மற்றுளபோகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடுதந் தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல் காட்டி
ஆடுவித்தென தகம் புகுந்தாண்டதோர்
அற்புதம் அறியேனே

சென்னிப்பத்து

அட்டமூர்த்தி அழகன் இன்னமு
தாய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவலோக நாயகன்
தென்பெருந்துறைச் சேவகன்
மட்டுவார் குழல்மங்கை யாளையோர்
பாகம் வைத்த அழகன்தன்
வட்டமாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே.

திருவார்த்தை

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கருணைக்கடலாய் அடியார்
பந்தனை விண்டற நல்கும்எங்கள்
பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள்
வந்து திரைக்கடலைக் கடந்தன்று
ஓங்குமதில் இலங்கை அதனில்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறிவார் எம்பிரானாவாரே.

Koviloor Digital Library

திருவெண்பா

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை - யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

பண்டாய நான்மறை

காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு.

''உருவெளி தான்வாதவூர் உத்தமர்க்கு அல்லால் இனமுங்
குருவழி நின்றார்க்கும் உண்டோ கூறாய்பராபரமே.''

(தாயுமானவர்)

திருப்புகழ்

வரித்தகுங் குமமணி முலைக்குரும் பையர்மன
மகிழ்ச்சி கொண் டிடஅதி விதமான
வளைக்கரங் களினொடு வளைத்திதம்
மயக்கவந் ததிலறி வழியாத
கருத்தழிந் திடஇரு கயற்கணும் புரள்தர
களிப்புடன் களிதரும் மடமாதர்
கருப்பெருங் கடலது கடக்கஉன் திருவடி
களைத்தரும் திருவுளம் இனியாமோ
பொருப்பகம் பொடிபட அரக்கர்தம் பதியொடு
புகைபரந் தெரிஎழ விடும் வேலா
புகழ்ப்பெருங் கடவுளர் களித்திடும் படிபுவி
பொறுத்தமந் தரகிரி கடலூடே
திரித்தகொண் டலுஒரு மறுப்பெறும் சதுமுக
திருட்டிஎண் கணன் முதல் அடிபேணத்
திருக் குருந் தடியமர் குருத்வசங் கரரொடு
திருப்பெருந் துறையுறை பெருமாளே

''மங்கள மதாகவே வந்து துறைசைதனில்
வந்தடிமை கொண்டலிங்கம்
வளமான கலைக்கு நிகரான சதுர்வேத
மங்களம் இருந்த லிங்கம்

Koviloor Digital Library

கங்கை பங்காளராய் வேதியர்க்காகவே
காணிபறி கொண்ட லிங்கம்
திங்களும் மும்மாரி பெய்திடவே குருந்தடியில்
சிறப்புடன் வளர்ந்த லிங்கம்.''

''சிவசங்கர குருதேசிக பூசித்த
சிந்தை வடிகொண்ட சிவனே
அங்க வேதனையினால் உங்களிடம் அபயமென்று
அலறினேன் ஆதிசிவயோகமாது
அடியனை ரட்சிக்க வரவேணும் இதுசமயம்
ஆளுடை மகாலிங்கமே.
மூவரும் முப்பத்து முக்கோடி தேவரும்
முனிவரும் தஞ்சமெனவே
முப்புரமெரித்த வழி அப்பனே கதியென்று
மூலமே உமை நம்பினேன்

ஏவலொடு வஞ்சனை மொரப்போடு
எதிரி பகையாளி எல்லாம்
என்முகம் கண்ட போதிலே திகைத்தோட
ரவி கண்ட பனிபோலவே
தாவிவரும் சூரனைவெல் கொண்டெரித் தகுரு
ஷண்முகனை ஈன்ற பரனே

தயவு வைத்துன்பாத தெரிசனம் கொடுத்தென்று
சஞ்சலம் தீர்த்து வைப்பாய்
அடைக்கலமே நம்பினேன் ஆதிசிவ யோகமா
தரைப் பங்கில் கொண்டபரனே
அடியனை ரட்சிக்க வரவேணு மிதுசமயம்
ஆளுடை மகாலிங்கமே

(கவிக்குஞ்சரபாரதியார்)

அஞ்சல் முகவரி:-

அ/மி. ஆத்மநாதசுவாமி திருக்கோயில்
ஆவுடையார் கோயில் & Post - 614 618.
ஆவுடையார் கோயில் வட்டம் - புதுக்கோட்டை மாவட்டம்

Koviloor Digital Library

2. தில்லை

சிதம்பரம்

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.)

பாடல்கள்:

சுந்தரத் திருநீறணிந்தும் மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரம் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான்நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆள் உமையாள் கொழு நற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

(திருப்பொற்சுண்ணம்)

நாயேனைத்தன் அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளம் பிழை பொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(திருக்கோத்தும்பீ)

கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ.

(திருத்தெள்ளேணம்)

தான்அந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்தழுத்து வித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர்வான்பொருள்காண் சாழலோ

(திருச்சாழல்)

வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய்வாழ்த்த வைத்து
இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

(திருப்பூவல்லி)

Koviloor Digital Library

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக்கிறைத்தேன் பரம் பரனைப் பணியாதே
ஊழிமுதல் சிந்தாத நன்மணி வந்தென் பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ

(திருத்தோணோக்கம்)

கொந்தணவும் பொழிற் சோலைக்
கூங்குயிலே இதுகேள் நீ
அந்தணனாகி வந்திங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தமராம் இவன்என்று இங்கு
என்னையும் ஆட் கொண்டருளும்
செந்தழல் போல் திருமேனித்
தேவர்பிரான் வரக்கூவாய்.

(குயிற்பத்து)

அருளாது ஒழிந்தால் அடியேனை அஞ்சேல்
என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோடுனைப் பிரிந்து
வருந்துவேனை வாஎன்று உன்
தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தே
போனால் சிரியாரோ.

(கோயில் மூத்த திருப்பதிகம்)

உருத்தெரியாக்காலத்தே உள்புகுந்து என்உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

(கண்டபத்து)

என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அறியாதே கேட்டேன்
உன்னால் ஒன்றம் குறைவில்லை
உடையாய் அடிமைக்கு ஆர் என்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியரொடுங் கூடாது
என்நாயகமே பிற்பட்டிங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே

(ஆனந்தமாலை)

Koviloor Digital Library

3.திரு உத்தரகோசமங்கை

பாண்டிய நாட்டில் உள்ள தலம். திருவாசகத்தில் பலவிடங்களிலும் (38 இடங்களில்) இத்தலம் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. இரயில் நிலையம்.

மதுரை - இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில்; பரமக்குடி, சத்திரக்குடி முதலியவற்றைத் தாண்டி, (இராமநாதபுரத்திற்கு 10 கி.மீ. முன்பாகவே) வலப்புறமாகப் பிரிந்து செல்லும் தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் சென்று, உத்தரகோசமங்கை ரயில்வே லெவல் கிராஸிங்கைத் தாண்டி, 7 கி.மீ. சென்றால் இத்தலத்தையடையலாம். சாலை பிரியுமிடத்தில் கோயில் பெயர்ப் பலகையுள்ளது. ஊருக்கு அருகாமையில் செல்லும்போதே கோபுரம் உயர்ந்து தெரிகிறது. கோயில் வரை வாகனங்கள் செல்லும்.

இராமநாதபுரம் சமஸ்தானத் தேவஸ்தானத்திற்குரிய திருக்கோயில். சேதுபதி மகாராஜா குடும்பத்தினரே பரம்பரை அறங்காவலராவர், தற்போதுள்ள சேதுபதி மகாராணி திருமதி. இந்திராதேவி நாச்சியார் அவர்கள் பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறார்கள். சமஸ்தான திவான் நிர்வாகச் செயலராக இருந்து, கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார். பழமையான திருக்கோயில் - தோற்றத்திலும் அவ்வாறே காட்சியளிக்கிறது.

இறைவன் - மங்களேசுவரர், மங்களநாதர், காட்சி கொடுத்த நாயகர், பிரளயாகேசுவரர்

இறைவி - மங்களேசுவரி, மங்களாம்பிகை, சுந்தரநாயகி

நடராசர் - இரத்தின சபாபதி, ஆதிசிதம்பரேசர்.

தலமரம் - இலந்தை.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம். கோயிலுள் உள்ளது. இது தவிர, கோயிலுக்கு வெளியில் பிரம்ம தீர்த்தமும்; சற்றுத் தள்ளி 'மொய்யார் தடம் பொய்கை'த் தீர்த்தமும், வியாச தீர்த்தம் சீதள தீர்த்தம் முதலியனவும் உள்ளன. கோயிலுள் மங்கள தீர்த்தமும் உள்ளது.

உத்தரம் - உபதேசம்; கோசம் - ரகசியம்; மங்கை - பார்வதி. பார்வதி தேவிக்கு இறைவன் வேதாகமங்களின் ரகசியங்களை உபதேசித்தமையால் இத்தலம் உத்தரகோசமங்கை என்னும் பெயர் பெற்றது. மாணிக்கவாசகருக்கு உருவக் காட்சிதந்த சிறப்புடைய இத்தலத்தில் வேதவியாசர், காகபுஜண்டரிஷி, மிருகண்டு முனிவர்,

Koviloor Digital Library

வாணாசுரன், மயன், மாணிக்கவாசகர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்றபதி. தட்சிண கயிலாயம், பத்ரிகாரண்யம் (இலந்தைவனம்), வியாக்ரபுரம், ஆதி சிதம்பரம், பிரமபுரம், சதுர்வேதபுரி, மங்களபுரி முதலியன இத்தலத்திற் குரிய வேறு பெயர்கள்.

இலந்தை மரத்தடியில் எழுந்தருளிய மங்கைப்பெருமான் என்று இப்பெருமான் போற்றப்படுகிறார்.

சொக்கலிங்கப் பெருமான் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாபவிமோசனம் செய்து அம்பாளை மணந்து கொண்டு இத்தலத்தி லேயே அம்பாளுக்கு வேதப் பொருளை உபதேசம் செய்து, இங்கிருந்த அடியார் சிவயோகிகள் முதலிய பல்லாயிரவர்க்கும் ஞானோபதேசம் செய்து முத்தி நல்கி, பின்னர் அம்பிகையுடன் மதுரை சேர்ந்ததாக மதுரைப்புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இக்கருத்தை, திருவிளையாடற்புராண, வலைவீசின படலத்துள் உள்ள பின்வரும் பாடல்கள் நமக்குணர்த்துகின்றன:-

(1) ... ... தருமமால் விடைமேல் தோன்றி
வீண்ணிடை நின்றான் சென்றான் வேத்திரப் படையானோடும்
உண்ணிறை அன்பரோடும் உத்தரகோச மங்கை.

(2) அங்கிருந்து அநாதிமூர்த்தி ஆதி நான்மறைகள் ஏத்துங்
கொங்கிருங்கமலச் செல்விக் குரைகழல் வணங்கிக் கேட்பப்
பங்கு இருந்தவட்கு வேதப் பயனெலாந்திரட்டி முந்நீர்ப்
பொங்கிருஞ்சுதை போல் அட்டிப் புகட்டினான் செவிகளார.

(3) அவ்வேலை அன்புடையார் அறுபதினாயிரவர்க்கும் அளித்துப் பாச
வெவ்வேலை கடப்பித்து வீடாத பரானந்த வீடு நல்கி
மைவேலை அனைய விழி அங்கயற்கண் நங்கையொடு மதுரை சார்ந்தான்
இவ்வேலை நிலம்புரக்க முடிகவித்துப் பாண்டியன் என்றிருந்த மூர்த்தி.''

இத்தலத்தின் பழமையை உணர்த்துவதாக ''மண் தோன்றிய போதே மங்கை தோன்றியது'' என்னும் பழமொழி இப்பகுதியில் வழங்குகிறது. இத்தலத்தின் வரலாற்றுப் புராணத்தில் இராவணனின் மனைவி மண்டோதரியின் பெயர் குறிக்கப் படுவதாலும்; சுவாமி மூலத்தான மதிலில் உள்ள கல்வெட்டுக்களில் மண்டோதரியின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதாலும், இக்கோயிலின் பழைமை புலனாகிறது.

Koviloor Digital Library

மேலும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் ''இலவந்திகைப் பள்ளி'' என்பது உத்தரகோச மங்கையைக் குறிக்கும் என்பாரும் உளர். மேற்குறித்த கல்வெட்டில் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் பெயரும் செதுக்கப்பட்டுள்ளது.

மணிவாசகர்தம்திருவாசகத்துள் இத்தலத்தையும் பெருமானையும்:- ''அணி பொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே,'' ''வெறிவாய் அறுகால் உழுகின்ற பூம் பொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே,'' ''பக்தரெலாம் பார் மேல் சிவபுரம் போல் கொண்டாடும் உத்தரகோச மங்கையூர்,'' எனப்பலவாறு புகழ்ந்துபாடுகிறார்.

நீத்தல் விண்ணப்பம் என்னும் திருவாசகப் பகுதி இத்தலத்தில் அருளப்பெற்றது. கீர்த்தித் திருவகவல், திருப்பொன்னூசல், திருத் தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி முதலிய பகுதிகளிலும் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது.

கீர்த்தித் திருவகவலில் ''உத்தரகோச மங்கையுள் இருந்து, வித்தக வேடம் காட்டிய இயல்பும்'' என்று வருந்தொடர், இத்தலபுராணத்தில் 8ஆம் சருக்கத்தில் சொல்லப்படும் - ஆயிரம் முனிவர்கட்கும் இறைவன் தன் வடிவம் காட்டிக் காட்சி தந்த வரலாற்றைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதுபற்றியே இத்தலத்துப் பெருமானுக்கு ''காட்சி கொடுத்த நாயகன்'' என்ற பெயரும் வழங்குகிறது. (இவ்வரலாறு இத்தலக் குறிப்பில் சஹஸ்ரலிங்கக் கோயிலைப் பற்றி வருமிடத்தில் எழுதப் பட்டுள்ளது) இது தவிர, 'மகேந்திரம்' என்பது உத்தரகோசமங்கையைக் குறிக்கும் என்று கொண்டு, இறைவன் அம்பிகைக்கு உபதேசித் ததையே ''மகேந்திரம் அதனில், சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்'' என்ற தொடர் குறிப்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். இதற்கு ஆதாரமாக உ.வே.சா. நூல்நிலைய வெளியீடாகிய திருவாசக உரையை இவர்கள் மேற்கோள் காட்டுகின்றனர்.

இங்குள்ள நடராசமூர்த்தி ஆதிசிதம்பரேசர் என்றழைக்கப் படுகிறார். இங்குள்ள சபை இரத்தினச்சபை எனப்படுகிறது.

'மங்களேசுவரி பிள்ளைத்தமிழ்' என்னும் நூல் திரு. வ.த. சுப்பிரமணியப்பிள்ளையவர்களால் 1901லும் மறுபதிப்பாக 1956லும் வெளியிடப்பட்டுள்ளது. **'உத்தரகோசமங்கைத் தலபுராணம்'** அச்சிடப்பட்டுக் கோயிலில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

இராமேஸ்வரம், உத்தரகோசமங்கை ஆகிய இருகோயில்களும் முதலில் இலங்கையில் இருந்த கண்டி மகாராஜாவால் கட்டப்பட்டு,

Koviloor Digital Library

பின்பு பலராலும் திருப்பணிகள் செய்யப்பட்டு - ஆதிசைவர்கள் வசமிருந்து பின்னரே இராமநாதபுரம் ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்ட தாம். அதுமுதல் இன்றுவரை இராமநாதபுர சமஸ்தான ஆளுகைக்கு உட்பட்டதாகவே இருந்து வருகிறது.

பழமையான திருக்கோயில். முகப்பில் இரு கோபுரங்கள் உள்ளன. வலப்பால் கோபுரம் உரிய அமைப்பில் உள்ளது. இடப்பால் உள்ளது மொட்டையாகக் காட்சி தருகின்றது. வலப்பால் கோபுரமும் மிகப்பழமை - செங்கல் கட்டமைப்பு - கலசங்கள் இல்லை - ஏழு நிலைகள்.

இரு வெளிக் கோபுரங்கட்கும் உள்கோபுரங்கள் உள்ளன. வலப்பால் உள்கோபுரம் ஐந்து நிலைகள். இடப்பால் உள்கோபுரம் மூன்று நிலைகள். வலப்பால் உள்ள கோபுரத்தின் முன்னால் நர்த்தன விநாயகர் சுப்பிரமணியர் தரிசனம், உட்புறம் வலப்பால் குளம். உள்கோபுரம் கண்டு தொழுது உட்செல்கிறோம். இடப்பால் பிரகாரத்தில் வாகனங்கள். வாயிலைத்தாண்டி இடப்பால் திரும்பினால் தட்சிணாமூர்த்தி தனியே கால் மேல் கால் மடித்துப்போட்டு, அபயவரத முத்திரைகளுடன் ஒரு கையையுயர்த்தி ஒரு கையைத் தாழ்த்தி அமர்ந்து காட்சி தருகின்றார் - சீடர்கள் நால்வருமில்லை. சிவலிங்க பாணமும் நாகப் பிரதிஷ்டையும் பக்கத்தில் உள்ளன.

விநாயகரைத் தொழுது பலிபீடம் கொடிமரம் நந்தி இவற்றை வணங்கியவாறே உள்வாயிலைத் தாண்டி பெரிய மண்டபத்தை அடைகிறோம். முதல் தூணில் குவித்த கைகளுடன் சேதுபதி காட்சி தருகிறார். மற்றத் தூண்களில் பாஸ்கர சேதுபதி, ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி, ராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி முதலியோர் கற்சிலைகளாகக் காட்சியளிக்கின்றனர்.

இங்கிருந்து பார்த்தால் நேரே மூலவர் தரிசனம்.

பிரகாரச் சுவரில் திருவாசகப் பகுதிகளான பொன்னூசல், நீத்தல் விண்ணப்பம் முதலியவை கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டு உள்ளன. தொடர்வது அறுபத்துமூவர் மூலத்திருமேனிகளின் தரிசனம் - சப்த மாதாக்கள் - முடிவில் விநாயகரும் ரிஷபாரூடரும் காட்சி தருகின்றனர். வலம் முடித்து துவாரபாலகர்களைத் தொழுது, உட்சென்றால் மூலவரின் அருமையான தரிசனம். எதிரில் நந்தி தேவர் - நீர் கட்டும் அமைப்பில். அனுக்ஞை விநாயகரைக் கும்பிட்டு உட்புறமாகப் பார்த்தால் மங்களேசுவரர் மங்கலமாகக் காட்சியளிக்கிறார். சதுர ஆவுடையார்.

Koviloor Digital Library

மாணிக்கவாசகரை மனத்தில் நிறுத்தி அந்நினைவோடு வணங்கு கிறோம். மதுவளர் பொழில் திருவுத்தரகோசமங்கையுள்ளாய் - எது எமைப்பணிகொளும் ஆறு? என்று வாயாரப்பாடி, நெஞ்சார நினைத்து, கண்ணீர் மல்கக் கசிந்து கை கூப்புகிறோம்.

மனநிறைவான உணர்வு, (சிவபெருமானுக்குத் தாழம்பு ஆகாதது, ஆனால் இங்கு அதற்கும் சாப நிவர்த்தி ஏற்பட்டதால் மங்களேசுவர ருக்குத் தாழம்பு சார்த்தப்படுகிறது என்பது நினைவில் கொள்ளத் தக்கது.) வெளியே வருகிறோம். அடுத்த தரிசனம் மங்களாம்பிகை. நான்கு கரங்களுடன் - அபயம் ஒருகரம், ஒரு கரம் தொடையில் நிறுத்தி, இருகரங்களில் தாமரையும், ருத்ராட்சமும் ஏந்தித் தரிசனம் தருகின்றாள். இத்தலத்தில் சுவாமியை அம்பாள் பூசிப்பதாக ஐதீகம். நடராசாவுக்குரிய ஆறு அபிஷேகக் காலங்களிலும் இச்சந்நிதியில் இறைவன் தாண்டவ மாடிக் காட்சி தரும் ஐதிகம் நடைபெறுகிறது.

பிராகார அழகு இராமேஸ்வரத்தை நினைவூட்டுகிறது. தூண்களில் பிட்சாடனர், ஊர்த்துவர் சிற்பங்கள் உள்ளன. உலா வருவதற்குரிய நடராசத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. வெளிச்சுற்றில் வல்லபை விநாயகரைத் தரிசிக்கலாம்.

ஆதிசிதம்பரம் எனப்படும் அற்புதத் தனிக்கோயிலை அடுத்துக் காணலாம். நடராசப் பெருமானுக்குத் தனிக்கோயில், கோயிலுக்கு உள்ளேயே குளத்தின் எதிரில் உள்ளது. பலிபீடம், கொடி மரம், நந்தி தொழுது முன்மண்டபம் சென்றால், சேதுபதிகள் வண்ணங்களில் சுதையில் தூண்களில் காட்சியளிக்கின்றனர். சுற்றிலும் அகழி அமைப்பு. எனவே சந்நிதிக்கு உட்செல்ல மரப்படிகள் அமைக்கப் பட்டுள்ளன. தெற்கு நோக்கிய சந்நிதி. அக்கினி மத்தியில் நடராசப் பெருமான் ஆடுவதாகச் சொல்லப்படுகிறது. அம்பிகைகாண இங்கு அறையில் ஆடிய நடனத்தைத்தான் அம்பலவாணர், தில்லையில் அம்பலத்தில் ஆடினார் என்கிறார் ஆலய சிவாசாரியார்.

இங்குள்ள கூத்தப்பிரான் - நடராசர் அதி அற்புதமானவர். ஐந்தரை அடி உயரம் - முழுவதும் மரகதத்திருமேனி. விலை மதிப்பிட முடியாத இப்பெருமான் ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பிலேயே அடியவர்க்குக் காட்சியளிக்கிறார்.

இப்பெருமான் வெளியே உலாவருவதில்லை. பெருமான் திரு மேனியை உள்வைத்தே சந்நிதி கட்டப்பட்டுள்ளதால் திருமேனியை வெளிக் கொணரவும் இயலாது. (உலாவருவதற்கான மூர்த்தம் தனியே உள்ளது.)

Koviloor Digital Library

மார்கழித் திருவாதிரையில் இப்பெருமானுக்கு மிகப்பெரிய அபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது. இதைச் செய்பவர்கள் திருப்புத்தூர் வள்ளல் ஆறுமுகம் பிள்ளையவர்களின் குடும்பத்தினர். அன்று ஒரு நாள் மட்டுமே சந்தனக்காப்பு முழுவதும் களையப்பட்டு, இரவு அபிஷேகங்கள் கண்கொள்ளாக் காட்சியாக - அற்புதமாக நடைபெறுகின்றன. வாழ்நாளில் ஒரு முறையேனும் இந்நாளில் கட்டாயமாகச் சென்று தரிசிக்க வேண்டும்.

அபிஷேக ஆராதனைகள் முடிந்த பிறகு மீண்டும் சந்தனக்காப்பு சார்த்தப்படும். அக்காப்பிலேயே அடுத்த மார்கழித் திருவாதிரை வரை பெருமான் காட்சித்தருவார். மார்கழித் திருவாதிரை நாளில் வாய்ப்பும் திருவருள் கூட்டுவிப்பும் உடையோர் அவசியம், சென்று ஆடல் வல்லானைத் தரிசித்து ஆனந்தம் பெறவேண்டும். நாடொறும் உச்சிக் காலத்தில் நடைபெறும் ஸ்படிகலிங்க, மரகதலிங்க, அன்னாபிஷேகம் காணக் கொடுத்து வைக்க வேண்டும்.

உலகெலாம் மலர் சிலம்படியை, ஒப்பற்ற மரகதச் செல்வரை உள்ளத்திருத்தித் தொழுது பிரிய மனமின்றிப் பிரிந்து முன் மண்டபம் அடைகின்றோம். அங்குள்ள சிறிய மேடையில்தான் உச்சிக்காலத்தில் ஸ்படிக, மரகதலிங்கங்களை வைத்து அபிஷேகம் செய்கின்றனர். அதைத் தரிசிக்கும் போதே வலப்பக்கச் சாளரத்தின் வழியே கைகூப்பிய நிலையில் உள்ள மாணிக்கவாசகரையும், இடப்பால் திரும்பி உமா மகேசுவரரையும் ஒருசேரத் தரிசிக்கலாம். இந்த அமைப்பு எண்ணி இன்புறத்தக்கது. உமாமகேசுவரர் சந்நிதிக்குப் படிகளேறிச் சென்று தரிசித்துவிட்டு மறுபுறமுள்ள படிகள் வழியே இறங்கிப் பிராகார வலமாக வந்தால் திருப்பதிகங்கள் எழுதப்பட்டுள்ளவையும், குருந்தமர உபதேசக் காட்சி சந்நிதியும் கண்டு இன்புறலாம். கல்லில் குருந்தமரம் செதுக்கப்பட்டு கீழே அமர்ந்து இறைவன் (குருமூர்த்தமாக) உபதேசிக்க எதிரில் மாணிக்கவாசகர் உபதேசம் பெறும் காட்சி அற்புதமாகவுள்ளது.

மாணிக்கவாசகர் சந்நிதி கண்டு தொழுகிறோம். கோஷ்டமூர்த்தம் 'ஏகபாத திரிமூர்த்தி' அருமையானது.

நடராசர் கோயிலுக்குப் பக்கத்தில் தனியே சஹஸ்ரலிங்க சந்நிதி உள்ள தனிக்கோயில் உள்ளது. மூலத்திருமேனியில் நெடுக்குக்கீற்றுகள் உள்ளன. சஹஸ்ர எண்ணிக்கையில் - உட்புறத்தில் தலமரத்தின் வேருள்ளது. வியாசரும் காகபுஜண்டரும் இங்குத் தவம் செய்வதாக ஐதிகம். இதன் பக்கத்தில்தான் தலமரமான இலந்தைமரம் உள்ளது.

Koviloor Digital Library

இந்த சஹஸ்ரலிங்கக் கோயில் எழுந்ததற்கான வரலாறு, நடராசர் கோயிலில் முன் மண்டபத்தின் மேற்புறத்தில் வண்ண ஓவியமாக எழுதப்பட்டுள்ளது.

இது தொடர்பான வரலாறு வருமாறு:-

ஆர்கலிசூழ் தென்இலங்கை அழகமர் மண்டோதரிக்கு, அவளுடைய தவத்தை ஏற்றுக் காட்சி தந்தருளப் பெருமான் உள்ளங் கொண்டார். தன்பாலிருந்து ஐம்புலனும் அடக்கி அருந்தவம் புரிந்து வந்த ஆயிரம் முனிவர்களைப் பார்த்து "மண்டோதரிக்கு (வண்டோதரி) அருள் செய்ய யாம் இலங்கை மூதூர் செல்கின்றோம். நீவிர் அனைவரும் இத்தலத்தை விட்டு அகலாது இருப்பீராக! எம்மால் ஒப்படைக் கப்படும் இவ்வேதாகமச் சுவடிகளை கைவிடாது காத்து வருவீராக! இலங்கையரசன் இராவணனால் எப்போது எம்திருமேனி தீண்டப் படுகிறதோ, அப்போது அதற்கு அடையாளமாக, இத்திருக்குளத்தின் நடுவே அக்கினிப்பிழம்பு தோன்றும்" என்று வானொலியாக அருள் செய்தார்.

மாதர்குலத்திலகமாக விளங்கிய மாதரசி மண்டோதரி (வண்டோதரி) தன் உள்ளத்தில் எவ்வடிவில் இறைவனை நினைத்துத் தவமிருந்தாளோ அவ்வடிவத்தையே ஏற்று, அழகிய திருவுருக் கொண்டு இறைவன் சென்று அவளுக்குக் காட்சி தந்தார். தரிசனம் பெற்ற மாதரசி, தன்னை மறந்து, பரவசமாகி, கண்களாரக் கண்டு கைகளாரத் தொழுது பிரமித்துப் போய் அசையாது நின்றாள். அப்போது வெளியே சென்றிருந்த இராவணன் உள்ளே வந்தான். இறைவனும் அழகான குழந்தையாக மாறிக் காட்சித்தர; அவன் அக்குழந்தையைக் கண்டு அதன் அழகில் மயங்கி 'யார் பெற்றதோ இது' என்று வினவினான். வண்டோதரி, 'யாரோ ஒரு தவமகள் வந்து இக்குழந்தையைத் தந்து சென்றாள்" என்றாள். குழந்தையின் உடம்பில் மாறிமாறித் தோன்றிய வண்ணத் தைக் கண்டு உள்ளம் வியப்புற்ற இராவணன் அக்குழந்தையைக் கையாலெடுத்துத் தழுவி மகிழ்ந்தான். அவ்வளவில் - இறைவன் திருமேனியை இராவணன் தீண்டியதால் - குளத்தில் அக்கினிப் பிழம்பு தோன்றியது. அதுகண்ட முனிவர்கள் செய்வதறியாது திகைத்து, அதில் வீழ்ந்து மறைந்தனர். அவர்களுள் ஒருவர் மட்டும் தம் அறிவால் உணர்ந்து, இறைபணியில் நிற்றலே கடமையென்று முடிவு செய்து, அத்தீர்த்தத்தின் கரையிலேயே அமர்ந்திருந்தார்.

மூதாட்டி ஒருத்தி வந்து மண்டோதரியிடமிருந்து (வண்டோதரி யிடமிருந்து) குழந்தையைப் பெற்றுச் சென்றாள். இறைவன் திரும்ப

Koviloor Digital Library

வந்து குளக்கரையில் இருந்தவர் மூலமாகச் செய்தியறிந்தார். மூழ்கிய 999 பேர்களுக்கும், மூழ்காதிருந்தவருக்குமாக ஆயிரவர்க்கும் இறைவன் உமையோடு விடைமீதமர்ந்து காட்சி தந்து தம் சந்நிதியில் தம்முடன் அவர்களை இருத்திக் கொண்டார். இதனால் பெருமானுக்குக் ''காட்சி கொடுத்த நாயகன்'' என்ற பெயரும் வழங்கலாயிற்று. ஆயிரவர்களும் ஒவ்வொரு இலிங்கவடிவில் இறைவனோடு ஒன்றினர் - அதுவே சஹஸ்ரலிங்கமாகத் தரிசனம் தருகின்றது. இக்கோயிலை வலம் வந்து வழிபடுவோர் எல்லாச் சித்திகளையும் அடைவர் என்பது தலவரலாறு.

சித்திரை பௌர்ணமி, மார்கழித் திருவாதிரை நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மணிவாசகர் திருவடி தோய்ந்த இடத்தைத் தொட்டுக் கும்பிட்டு மனநிறைவோடு திரும்புகிறோம்.

திருவாசகம்

கீர்த்தித் திருவகவல்

(1) ''உத்தரகோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்'' *(48 - 50)*

(2) ''பாண்டிய நாடே பழம் பதியாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தரகோச மங்கை யூராகவும்'' *(118 - 120)*

(3) நீத்தல் விண்ணப்பம்:

''கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்குஅரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே''

(4) திருப்பொன்னூசல்

''மாதாடு பாகத்தன் உத்தரகோச மங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதோடு குண்டலங்கள் பாடிக்கசிந்து அன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ''

Koviloor Digital Library

(5) திருத்தசாங்கம்

"தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதடும் பாகத்தன் வாழ்பதியென் - கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம் போற்கொண்டாடும்
உத்தர கோச மங்கையூர்."

திருவுத்தரகோசமங்கைத் தலபுராணப் பாடல்கள்

(6) ஆதிசிதம்பர சபா நடேசர்

பூமேவுமடற்கமலப் பொகுட்டுறையும் மந்தணனும் பொலிவினோங்கித்
தேமேவுபசுந்துவளத் திருமாலுங்காண்பரிய செல்வரேனும்
பாமேவுபதஞ்சலியும் புலிப்பதனுங்கண்டுதினம் பணிந்துபோற்ற
மாமேவுமணிமன்று ணடம்புரிபொற்பதமிறைஞ்சி வழுத்தல் செய்வாம்

(7) சிவகாமசுந்தரி

உலகமுழுதும் பயந்துங் கன்னிமைநீங்கா திறைபாலு வந்துவைகி
யலகிலுயிர்க்கருள்சுரந்து பேரறமெண்ணான் கியற்றி யனைத்துங்காக்குந்
திலகநுதற் செங்கனிவாய் சிவகாமசுந்தரியாந் தேனைச்செம் பொன்
மலையரையன் குலவிளக்கை யிருள் தீரவெமதகத்துள் வைத்துவாழ்வாம்.

(8) மங்களநாதர்

ஒருபொருளாய் பலவுருவா யொளியாகி யானந்தவுண்மை யாகிக்
கருதரிதாய்த்தெரிவரிதாய்க் காரணகாரியங்கடந்த கருணை யாகிப்
பொருளின் மறைக்கொழுந்தாகி யுபநிடதப்பொருளாகிப் புவனிபோற்ற
வருதிருவுத்தரகோசமங்கையர னடிக்கமலம் வணங்கல் செய்வாம்.

(9) மங்களநாயகி

காரேறு கருங்குழலுந் திருநுதலுஞ்சுடரிலைவேற் கண்ணுங் கஞ்சத்
தாரேறுதிருமா புங் கரும்புருவந்தடந்தோளுங் கருணைகாட்டி
நீரேறுசடாமவுலிப் பெருமான்றனொருபாக நீங்காதோங்கு
வாரேறுபூண்முலையாண் மலர்ப்பதமுமெந்நாளும் வழுத்தல் செய்வாம்.

Koviloor Digital Library

(10) திருப்புகழ்

வெற்பன வேயெழுந்து செப்பன வேதிரண்டு
மெத்தென மோடிகொண்ட தனமாதர்
மெய்ப்படு கோலமுங்கண் மைப்படு சாலமுஞ்செய்
வித்தையு மேநினைந்து மயலாகி
அற்பக லாவலைந்து கற்பதெலாமுலைந்து
ளற்பமு மானமின்றி அழிவேனோ!
அக்கினி ரூபமைந்த கிர்த்திகை மாதர்தந்த
அற்புத பாலையுண்ட குமரேசா!
பொற்பதி காவலிந்தி ரற்குற வேலெறிந்து
பொய்ப்படு சூர்பிளந்த அதிதீரா!
புட்பதி யேறுகொண்டல் அச்சுத னார்மகிழ்ந்த
புத்தமிர் தானசெஞ்சொல் மருகோனே!
உற்பல மோகொடுங்க ணைக்கினை யோவெனுங்கண்
உத்தம தேவதந்தி புணர்மார்பா!
உத்தம மாவளங்கொள் உத்தரகோசமங்கை
உற்றினி தாவிருந்த பெருமாளே!

அஞ்சல் முகவரி:-

அ/மி. மங்களேசுவரர் திருக்கோயில்
உத்தரகோசமங்கை & Post
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம் - 623533.

4. திருவண்ணாமலை

தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.

பாடல்கள்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

Koviloor Digital Library

வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுக நின்ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகதின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால்நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம்மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

(திருவாசகம்)

5. திருக்கழுக்குன்றம்

தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.

பாடல்

‘பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன்நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாததோர் இன்பமே வரும்துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல் விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே.’

(திருவாசகம்)

Koviloor Digital Library

6. தோணிபுரம்

சீர்காழி

தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.

பாடல்

''பாசவேரறுக்கும் பழம்பொருள்தன்னைப்
பற்றுமா றடியேனற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர்மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.''

(பிடித்த பத்து - திருவாசகம்)

7. திருவாரூர்

தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.

பாடல்

1. சடையானே தழலாடீ தயங்கு மூவிலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழல் சூழ்பெருந்துறையாய் அடியேன் நான்
உடையானே உனையல்லாது உறுதுணைமற்று அறியேனே.

2. உற்றாரையான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உரையும்கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

(திருவாசகம் - திருப்புலம்பல்)

Koviloor Digital Library

திருவிசைப்பா - திருப்பல்லாண்டுத் தலங்கள்

திருவாசகத்திற்கு அடுத்து விளங்கும் திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய இரண்டும் முறையாக அமைந்த இசைப்பதிகங்களை யுடையனவே. இவைகளை அருளிச் செய்தோர் (1) திருமாளிகைத் தேவர் (2) சேந்தனார் (3) கருவூர்த்தேவர் (4) பூந்துருத்தி நம்பி, காடநம்பி (5) கண்டராதித்தர் (6) வேணாட்டடிகள் (7) திருவாலியமுதனார் (8) புருடோத்த நம்பி (9) சேதிராயர் ஆகிய அருளாளர்கள்.

இத்திருப்பதிகங்கள் இந்தளம், காந்தாரம், சாளரபாணி, நட்டராகம், பஞ்சமம், புறநீர்மை என்னும் பண்கள் அமைப்பில் அமைந்துள்ளன. இவற்றுள் ''சாளரபாணி'' என்னும் பண், ஒன்பதாம் திருமுறையுள் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

திருவிசைப்பா திருப்பல்லாண்டுப் பதிகங்கள்: சிவபெருமானின் திருமேனிச்சிறப்பு, அடியார்க்கருளிய அப்பெருமானின் நலங்கள் முதலியவற்றையும் எடுத்துரைப்பதோடு, ஆங்காங்குச் சைவசமயத் தத்துவக்கருத்துக்களையும் புகழ்ந்தோதுகிறது. முருகக்கடவுளைப் பற்றிய ஒரு திருப்பதிகம் இதில் இடம் பெறுகின்றது. (திருவிடைக்கழி)

பதிகங்களைப் பாடிய அருளாளர்களின் பெயர்களை நினைவூட்டும் பழம்பாடல்:-

''செம்பொன்மணி அம்பலத்து நிருத்தனார்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்
பம்பு புகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த்தேவர்
நம்பிகா டவர்கோன்நற் கண்டராதித்தர்
நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுதர்
அம்புவியோர் புகழ்புரு டோத்தமர்சேதி ராயர்
ஆகவர் ஒன்பதின்மர் தாமுறை கண்டடைவே''

இப்பதிகங்களுக்குரிய தலங்கள் வருமாறு:

(1) கோயில் (சிதம்பரம்)

(2) கங்கை கொண்ட சோழேச்சரம்

(3) களந்தை ஆதித்தேச்சரம்

Koviloor Digital Library

(4) கீழ்க்கோட்டூர் மணியம்பலம்

(5) திருமுகத்தலை

(6) திரைலோக்கியசுந்தரம்

(7) திருப்பூவணம்

(8) சாட்டியக்குடி

(9) தஞ்சை இராசராசேச்சரம்

(10) திருவிடைமருதூர்

(11) திருவாரூர்

(12) திருவீழிமிழலை

(13) திருவாவடுதுறை

(14) திருவிடைக்கழி

(கோயில் எனப்படும் சிதம்பரத்திற்குத் திருவிசைப்பாப் பதிகங்கள் 15ம் திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் உள்ளன. ஏனைய தலங்கள் அனைத்தும் ஒவ்வொரு (திருவிசைப்பா) பதிகத்தைப் பெற்றுள்ளன. மொத்தப் பதிகங்கள்:- திருவிசைப்பா : 28, திருப்பல்லாண்டு : 1 ஆகமொத்தம் ஒன்பதாம் திருமுறையுள் 29 பதிகங்கள் உள்ளன. ஒன்பதாம் திருமுறைப் பாடல்கள் 365 எனத் தொகை கூறப்பட்டிருப்பினும் கிடைத்திருப்பவை 301. ஆக 64 பாடல்கள் ஏடுகளிற் சிதைந்திருத்தல் வேண்டும்.)

இத்தலங்களுள் திருவிடைக்கழி, முருகப் பெருமான் தலமாகும். இத்தலத்துப் பதிகமும் முருகனைப் பற்றியதே. ஏனைய தலங்களுள், சிதம்பரம், திருப்பூவணம், திருவிடைமருதூர், திருவாரூர், திருவீழி மிழலை, திருவாவடுதுறை ஆகிய ஆறு தலங்கள் (தேவாரத்) திருமுறைத் தலங்களாகவும் விளங்குகின்றன. இவை நீங்கலாகவுள்ள தலங்கள் (1) கங்கைகொண்ட சோழேச்சரம் (2) களந்தை ஆதித்தேச்சரம் (3) கீழ்க்கோட்டூர் மணியம்பலம் (4) திருமுகத்தலை (5) திரைலோக்கிய சுந்தரம் (6) சாட்டியக்குடி (7) தஞ்சை இராசராசேச்சரம் (8) திருவிடைக்கழி முதலியவை (ஒன்பதாம் திருமுறையாகிய) திருவிசைப்பாத் தலங்களாகவே விளங்குகின்றன.

பஞ்சபுராணம் பாடும் முறை அமைப்பில் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தனித்தனியே இடம் பெறுகின்றன.

Koviloor Digital Library

பாடிய அருளாளர்களும் பாடப்பட்ட தலங்களும் பதிக எண்ணிக்கையும்

1.	திருமாளிகைத்தேவர்	- கோயில்	- 4
2.	சேந்தனார்	- திருவீழிமலை	
		- திருவாவடுதுறை	
		- திருவிடைக்கழி	- 3
3.	கருவூர்த்தேவர்	- கோயில்	
		- களந்தை ஆதித்தேச்சரம்	
		- கீழ்க்கோட்டூர் மணியம்பலம்	
		- திருமுகத்தலை	
		- திரைலோக்கியசுந்தரம்	
		- கங்கைகொண்டசோழேச்சரம்	
		- திருப்பூவணம்	
		- சாட்டியக்குடி	
		- தஞ்சை இராசராசேச்சரம்	
		- திருவிடைமருதூர்	- 10
4.	பூந்துருத்தி நம்பி காட நம்பி	- திருவாரூர்	
		- கோயில்	- 2
5.	கண்டராதித்தர்	- கோயில்	- 1
6.	வேணாட்டடிகள்	- கோயில்	- 1
7.	திருவாலியமுதனார்	- கோயில்	- 4
8.	புருடோத்த நம்பி	- கோயில்	- 2
9.	சேதிராயர்	- கோயில்	- 1
	(சேந்தனார் பாடியது திருப்பல்லாண்டு	- கோயில்	- 1

Koviloor Digital Library

ஒன்பதாம் திருமுறையை அருளியுள்ள அருளாளர்களுள் கருவூர்த்தேவரே அதிகமான பதிகங்களை - பத்துப் பதிகங்களைப் பாடியுள்ளார்.

திருவிசைப்பாவில் மட்டும் இடம் பெற்றுள்ள ''சாளரபாணி'' என்ற பண் வகையில் பதிகம் ஒன்றை அமைத்துப் பாடியுள்ளவர் பூந்துருத்தி நம்பி காட நம்பி என்பவரே.

1. கோயில்

சிதம்பரம்

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது)

பாடல்கள்

''நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணிபுவன போகமே! யோக
வெள்ளமே மேருவில் வீரா!
ஆறணி சடைஎம் அற்புதக்கூத்தா!
அம்பொன் செய் அம்பலத்தரசே!
ஏறணி கொடிஎம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.''

(திருமாளிகைத்தேவர்)

''இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சல் என்றருள் செய்வான்கோயில்
கைவரும் பழனங் குழைந்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.''

(கருவூர்த்தேவர்)

Koviloor Digital Library

''களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவாயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.''

(பூந்துருத்திநம்பி காடநம்பி)

''பாரோர் முழுதும் வந்திறைஞ்சப்
பதஞ்சலிக்கு ஆட்டுகந்தான்
வாரார் முலையாள் மங்கைபங்கன்
மாமறையோர் வணங்கச்
சீரான்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத்தாடுகின்ற
கரரார்மிடற்று எங்கண்டனாரைக்
காண்பதும் என்று கொலோ.''

(கண்டராதித்தர்)

''வாளாமால் அயன் வீழ்ந்து
காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத்
துணையாரத் தொழுதாலும்
ஆளோ நீயுடையதுவும்
அடியேன்உன் தாள்சேரும்
நாளேதோ திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே.

(வேணாட்டடிகள்)

நேச முடையவர்கள்
நெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர்
கண்ணுதலைக் காமருசீர்த்
தேசமிகு புகழோர்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலத்து
ஈசனை எவ்வுயிர்க்கும்
எம்இறைவன் என்றேத்துவனே.''

(திருவாலியமுதனார்)

வாரணி நறுமலர் வண்டு கிண்டு
பஞ்சமம் செண்பகமாலை மாலை
வாரணி மனமுலை மெலியும் வண்ணம்
வந்து வந்திவை நம்மை மயக்குமாலோ
சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கு
தில்லையம்பலத் தெங்கள் செல்வன் வாரான்
ஆரெனை அருள்புரிந்து அஞ்சல் என்பார்
ஆவியின் பரமென்றன் ஆதரவே''

(புருடோத்தம நம்பி)

Koviloor Digital Library

அறவனே அன்று பன்றிப் பின்ஏகிய
மறவனே எனைவாதை செய்யேல் எனும்
சிறைவண் டார்பொழில் தில்லையுளீர் எனும்
பிறைகுலாம் நுதற்பெய் வளையே. *(சேதிராயர்)*

திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

(சேந்தனார்)

2. கங்கைகொண்ட சோழேச்சரம்

கங்கைகொண்ட சோழபுரம்

திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.

கோயில்: கங்கை கொண்ட சோழேச்சரம். ஊர்: கங்கை கொண்ட சோழபுரம். திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் ஜயங்கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

சென்னையிலிருந்து வருவோர் சேத்தியாதோப்பு வழியாக மீன்சுருட்டி வந்து, அங்கிருந்து திருச்சி சாலையில் 2 கி.மீ. சென்றால் கங்கை கொண்ட சோழபுரத்தை அடையலாம். சாலையோரத்திலேயே கோயில் உள்ளது. 160 அடி உயரமுள்ள ஓங்கிய எண்தள விமானம் (கோபுரம்) பல கிலோமீட்டர் தொலைவிலிருந்து பார்த்தாலும் காட்சியளிக்கிறது.

தற்பொழுது சிற்றூராக உள்ளது இத்தலம். இங்குப் பயணிகள் தங்குதற்கான வசதிகள் ஏதுமில்லை. பிற்காலச் சோழர்களுக்குத் தலை நகராக விளங்கிய இத்தலைநகரின் பகுதிகளே, இன்றுள்ள (1) உட் கோட்டை (2) மாளிகைமேடு (3) ஆயிரக்கலம் (4) வாணதரையன் குப்பம் (5) கொல்லாபுரம் (6) வீரசோழ நல்லூர் (7) மெய்க்காவல்புத்தூர்

Koviloor Digital Library

(8) சுண்ணாம்புக்குழி (9) குருகைபாலப்பன் கோயில் முதலிய சிற்றூர்கள் ஆகும். சோழமன்னர்கள் வாழ்ந்த இடமே 'மாளிகைமேடு' ஆகும்.

இவ்வூர் பண்டை நாளில் புலவர்களால் கங்காபுரி, கங்கைமாநகர் கங்காபுரம் என்றெல்லாம் புகழப்பட்டது.

முதலாம் இராசேந்திரன் முதல் மூன்றாம் இராசேந்திர சோழன் காலம் வரை இவ்வூர் சோழர் தலைநகராகத் திகழ்ந்தது. தன் தந்தையைப்போல அதற்கீடாக மிகச்சிறப்புடன் ஆண்டவன் முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012 - 1044) கங்கைகொண்டான், பண்டித சோழன் முதலிய பட்டப்பெயர்களையுடையவன். இவனுடைய மகள் அம்மங்காதேவி. லட்சத்தீவையும் வென்ற சிறப்புடையவன். சோழர் தலைநகரான தஞ்சை, பாண்டிய நாட்டு எல்லைக்கு அருகில் இருந்தமை யால் அடிக்கடி போர் ஏற்படும் வாய்ப்பு இருந்தது. தவிர, காலந்தவறாது பெய்த மழையால் கொள்ளிடத்தில் வெள்ளப் பெருக்கேற்பட்டு, அதனால் தில்லைக்குச் சென்று நடராசப்பெருமானைக் காணவிரும்பிய போதெல்லாம் தடையும் உண்டாவதைக் கண்ட முதலாம் இராசேந்திர சோழன், சோழநாட்டின் மையப்பகுதியில் புதிய தலைநகரம் ஒன்றை அமைப்பதற்கு எண்ணினான்; முயன்றான். இடத்தைத் தேர்வு செய்து புதிய நகரத்தை நிர்மாணித்து அதை கங்கை நீரால் புனிதப்படுத்த எண்ணித் தன்படையை கங்கை நீர் கொண்டு வர வடநாட்டிற்கு அனுப்பிவைத்தான். அப்படையும் சென்று, வடநாட்டு மன்னர்களை வென்று கங்கை நீர் கொண்டு திரும்பியது. இதனால் முதலாம் இராசேந்திர சோழனுக்குக் கங்கை கொண்டான் - கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் உண்டாயிற்று. அந்நீரால் புனிதப்படுத்தி அவ்வூரில் தன்தந்தை, தஞ்சையிற் கட்டியது போலவே ஒரு பெரிய கோயிலைக் கட்டினான். அதுவே கங்கை கொண்ட சோழேச்சரம் ஆகும். அவ்விடமே கங்கை கொண்ட சோழபுரம்.

இவ்வூரை நிறுவ சுண்ணாம்பினைத் தயாரித்த இடம் சுண் ணாம்புக்குழி என்றும், கோட்டை இருந்த பகுதி (உள்கோட்டை) உக்கோட்டை என்றும், ஆயுதச்சாலைகள் இருந்த இடம் ஆயிரக்கலம் என்றும் இன்றும் வழங்குகின்றன. இவ்வூருக்காகக் கட்டுவித்த ஏரி சோழகங்கம் எனப்பட்டது.

இக்கங்கை கொண்ட சோழபுரம் அக்காலத்து பற்பலச்சிறப்புக் களுடன் விளங்கியது. சயங்கொண்டார் ஒட்டக்கூத்தர் முதலிய பெரு மக்கள் இங்கு வாழ்ந்திருந்தார்கள். கலிங்கத்துப்பரணி இங்கிருந்து பாடப்பட்டது. விக்ரமசோழன் உலா, இரண்டாம் குலோத்துங்கன்

Koviloor Digital Library

உலா முதலியனவும் பாடப்பட்டன. சேக்கிழார் பெரிய புராணம் பாடுவதற்குத் தூண்டுகோலாக இருந்தபதி. கோயிலமைப்பு தஞ்சைப் பெருவுடையார் கோயிலமைப்பை ஒத்துள்ளது. சிற்பக்கலையழகு சிந்தனைக்கும் எட்டாதது. மூலத்தானத்தைச் சுற்றிப் பல கோயில்கள் இருந்தன. அவை காலப்போக்கில் அழிந்தன.

முதலாம் இராசராசன் காலத்திலிருந்து சோழர்களுக்குக் கட்டுப் பட்டிருந்த பாண்டியர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எதிர்த்தெழலாயினர். அப்போது சோழமன்னர் பலமுறை பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து மதுரையை அழித்தனர். இதனால் மனங்குமுறிய பாண்டியர், சோழர்களைப் பழிவாங்கக் காத்திருந்தனர். மூன்றாம் குலோத்துங்கன் இறந்த பின்பு, பாண்டியர் சோழ நாட்டின் மீது படையெடுத்து தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளலாயினர். முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் சோழநாட்டை வென்று தன் பேரரசுடன் இணைத்துக் கொண்டான். அக்காலத்தேதான் கங்கை கொண்ட சோழபுரம் பெருத்த அழிவிற்கு ஆளாயிருத்தல் வேண்டும். மாளிகைகள் தரைமட்டமாக்கப்பட்டன. சோழர்குலம் கி.பி. 1279ல் முடிவுறவே அரண்மனைகள் உட்பட நகரில் இடிந்த கட்டிடங்களின் செங்கற்களை ஊர்மக்கள் எடுத்துப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதற்கு மேலும் சென்ற நூற்றாண்டில் மற்றொரு நிகழ்ச்சி ஏற்பட்டது.

அதாவது, லோயர் அணைக்கட்டில் கொள்ளிடத்திற்குப் பாலம் கட்டியபொழுது அரசாங்க அதிகாரிகள் கருங்கல்லால் பாலம் கட்டினால் வலுவாக அமையுமெனக் கருதி, அருகே கருங்கல் கிடைக்காத நிலையில், கங்கைகொண்ட சோழபுரக்கோவிலில் இடிந்து கிடந்த கற்களை எடுத்துச் சென்றதுடன் குறையாக நின்ற மதிலையும் இடித்துக் கற்களை எடுத்தனர். ஊர் மக்கள் அதனை எதிர்த்ததும், வேறு செங்கல் மதிலைக் கட்டித் தருவதாக அதிகாரிகள் வாக்களித்தனர். ஆனால் பிறகு எதுவும் நிகழவில்லை. கோவிலில் இருந்து அகற்றப்பட்ட கருங்கற்களில் பல கல்வெட்டுக்கள் இருந்தன. அவையாவும் இவ்வாறு அழிந்துவிட்டன. கோவிலில் எஞ்சி உள்ள கல்வெட்டுக்கள் சிலவே. அவற்றிலும் சில மிகவும் சிதைந்துள்ளன. கங்கை கொண்ட சோழனின் கல்வெட்டு ஒன்றுகூட அங்குத் தற்பொழுது காண்பதற்கில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் சிறப்பானது வீரராசேந்திர சோழனது கல்வெட்டாகும். இதிலிருந்து, இக்கோயிலுக்கு விடப்பட்டிருந்த ஊர்களிலிருந்து ஆண்டுதோறும் ஒரு

Koviloor Digital Library

லட்சத்து பத்தாயிரம் கலம் நெல் இக்கோயிலுக்கு அளக்கப்பட்டது என்ற செய்தி தெரிகிறது.

இங்குள்ள சிங்கமுகக்கேணியின் மீதுள்ள கல்வெட்டு அதை உடையார்பாளையம் ஜமீன்தார் கட்டியதாகக் கூறுகிறது. ஆனால் அக்கேணி முதலாம் இராசேந்திரன் காலத்திலேயே கட்டப்பட்டு சென்ற நூற்றாண்டில் ஜமீன்தாரால் திருப்பணி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

சோழப் பேரரசை வென்ற சடையவர்மன் முதலாம் சுந்தர பாண்டியனும், சோழர் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தை அழித்தான் எனினும் கோயிலுக்கு எவ்வித ஊறும் விளைவிக்கவில்லையென்றும்; மாறாகத் தன் பெயரால் பெருமானுக்குப் பூசை நடத்த நிவந்தம் வைத்தான் என்பதும் தெரிகின்றது.

இக்கோயிலில் உள்ள சிற்பங்களுள் சரஸ்வதி, லட்சுமி, சண்டேச அனுக்ரஹமூர்த்தி, அர்த்தநாரி, தட்சிணாமூர்த்தி, நடராசர், கங்காதரர், காளாந்தகர், துர்க்கை, பைரவர், பிட்சாடனர், அதிகாரநந்தி முதலியவை குறிப்பிடத்தக்கனவாம்.

முதலாம் இராசேந்திரன் இங்குள்ள பெருமானுக்குத் தஞ்சைப் பெருவுடையாரின் பெயரையே வைத்து வழங்கினான்.

இறைவன் - கங்கை கொண்ட சோழேச்சரர், பிரகதீஸ்வரர், பெருவுடையார்.

இறைவி - பெரியநாயகி, பிருகந்நாயகி.

இத்தலத்துப் பெருமான் மீது கருவூர்த்தேவர் (திருவிசைப்பா) பதிகம் பாடியுள்ளார்.

மூலவர் சிவலிங்கமூர்த்தி பேருருவம் 13 அடி உயரம். ஆவுடையார் சுற்றளவு 60 அடி - ஒரே கல்லால் ஆனாவை. விமானம் 160 அடி உயரம் - 100 அடி சதுரமானது.

கோயிலின் சிறப்புக்களை நூலிற் படித்து விட்டு நேரில் காணச் செல்வோர்க்கு மிஞ்சுவது, இடிபாடுகளைக் காண்பதால் வரும் வேதனையே! கோயிலுக்கு முன்னால் மொட்டைக்கோபுரம் - வாயில் தாண்டியதும் அழகான நடைபாதை - சுற்றிலும் புல் தரைகள். வலப்பால் மகிஷாசுரமர்த்தனி கோயில் உள்ளது. அம்பாள் இருபது கரங்களுடன் காட்சி தருகின்றாள். அபயவரதம் நீங்கலாக 18 கரங்களில் 18 ஆயுதங்கள் உள்ளன. பங்குனி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை நாளில் இத்தேவிக்கு, காவடி எடுத்து விழாக் கொண்டாடப்படுகிறது.

Koviloor Digital Library

சற்றுத் தள்ளிச் சென்றால் சுதையாலான பெரிய யாளி காட்சி தருகிறது. அதனுள் இறங்கிச் சென்று ''சிம்மக்கிணற்றை''க் காணலாம். படிகள் உள்ளன. இக்கிணற்றில் கங்கை நீர் கலந்துள்ளதாகக் கூறப் படுகிறது. மதிற்சுவர்கள் இடிந்து போயுள்ளன.

பெரிய வாயிலுக்கு (கிழக்கு வாயில்) நேராகப் பெரிய நந்தி யுள்ளது. படிகள் வழியே மேலேறி உட்சென்றால் பிரம்மாண்டமான மூலமூர்த்தியைத் தரிசிக்கலாம். சுவாமி கிழக்கு நோக்கியுள்ளார்.

இருபுறமும் வாயிலில் கருங்கல்லாலான துவாரபாலகர்கள் காட்சி யளிக்கின்றனர்.

உள்ளே நுழைந்து செல்லும்போது வலப்பால் நவக்கிரக பீடமுள்ளது. இங்குள்ள நவக்கிரக அமைப்பு விந்தையானது. ஒன்பது கிரகங்களும் ஒரே கல்லில் வானசாஸ்திர முறைப்படி செதுக்கப் பட்டுள்ளன.

பீடம் தாமரை வடிவம். நடுவில் சூரியன். சுற்றிலும் ஏழு கிரகங்கள் இதழ்கள் போன்ற அமைப்பில் உள்ளன. கீழே ஏழு குதிரைகள் பூட்டிய தேரை அருணன் சாரதியாக இருந்து செலுத்துவது; ஒருபால் 12 பேர் நாதஸ்வர வாத்யங்களை வாசிப்பது, கடையாணி பூட்டிய தேரில் உலகைவலம் வரும் கோலம் - மிகவும் அற்புதமாகச் செதுக்கப் பட்டுள்ளன.

உள் மண்டபத்தில் செல்லும் போது கருங்கல் தூண்களின் ஒழுங்கும், அழகும் கண்டு மகிழலாம். ஒருபுறம் பழைய திருமேனிகள் பார்வையிற்படுகின்றன. நடராசர் சிவகாமி தரிசனம். உள் வாயிலைத் தாண்டினால் மூலவர் தரிசனம். மின் விளக்கு இல்லையெனினும், வெளியிலுள்ள பெரிய நந்தியின் மீது படும் ஒளி பிரதிபலித்து, சுவாமி மீது படுவதால் நன்கு தரிசிக்க முடிகிறது.

மூலவர் முன்பு நிற்குங்கால் - வெளியில் கொதிக்கும் வெயிலாக இருந்த போதிலும் - உள்புறம் சில்லென்று குளிர்ச்சியாக இருக்கிறது. இயற்கை ஏ.சி. வசதி போலும்! இதற்குச் சொல்லப்படும் காரணம்:-

மூலவரின் அடியில் சந்திரகாந்தக்கல் பதிக்கப்பட்டுள்ளது. இதனால் வெப்பக்காலத்தில் வெளியில் கொதிக்கும் வெயிலாக இருக்கும்போது உள்ளே சில்லென்றிருக்கின்றது. இவ்வாறே மார்கழி போன்ற குளிர்காலத்தில் உள்ளே கதகதப்பாக இருக்கின்றது என்று கோயிற் சிவாசாரியார் கூறுகின்றார்.

மூலவரை வணங்கிய பின்பு வெளியே வந்து படிகளில் இறங்கி வலமாக வந்தால் பிட்சாடனர், அர்த்த நாரீசுவர், தட்சிணாமூர்த்தி,

Koviloor Digital Library

நடராசர், சுகாசனர், சண்டேச அநுக்ரஹர், கஜசம்ஹாரர், ஞானசரஸ்வதி முதலிய அருமையான சிற்பமூர்த்தங்களைக் கண்களுக்கு விருந்தாகக் கண்டு மகிழலாம். சண்டேசுவரர் கோயில் தனியே உள்ளது. பக்கத்தில் புன்னை மரம் நிழல்தந்து வருபவர்களைக் காக்கிறது.

கண்டு மகிழத்தக்க கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பங்களை விட்டுப் பிரியவே மனம் வரவில்லை. அரிய சிற்பக் களஞ்சியம் அழகிழந்து நின்று அருமையை பறைசாற்றுகின்றது.

இக்கோயிலில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் மூலம்; ஊர்ப் பெயர் வடகரை விருதராச பயங்கர வளநாட்டு மேற்காநாட்டு மண்ணை கொண்ட சோழவள நாட்டு கங்கை கொண்ட சோழபுரம் என்றும்; இறைவன் பெயர் திருப்புலீஸ்வரமுடையார் என்றும் குறிக்கப் பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் சிவபெருமானுக்கு அளிக்கப் பட்ட நிலத்துக்குத் திருநாமத்துக்காணி என்றும், திருமாலுக்கு அளிக்கப் பட்டது திருவிடையாட்டம் என்றும் பெயர் வழங்கப் பெற்றன என்ற செய்தியும்; மன்னனார் என்பது - திருமாலுக்குப் பெயர். அவர் எழுந் தருளிய காரணத்தால் அப்பதி மன்னனாகுடி என்று பெயர் பெற்றது. அதுவே பிற்காலத்து மன்னார்குடி என்றாயிற்று. அதன் பழம்பெயர் வீரநாராயண நல்லூர் என்பதே என்பன போன்ற பல செய்திகள் இக்கல்வெட்டுக்களிலிருந்து தெரியவருகின்றன.

இத்திருக்கோயிற் பெருமானுக்கு இராசேந்திரன் கங்கை நீராட் டியதை நினைவு கூறும் வகையில் 108 குடங்கள் கங்கை நீரால் அபிஷேகம் 1985, 1986 ஆம் ஆண்டுகளில் செய்வித்து, அது முதல் ஆண்டுதோறும் சுவாமிக்கு ஐப்பசி பௌர்ணமியில் அன்னாபிஷேகம் செய்வதற்கும், ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் (ஸ்ரீ பரமாசார்யாள்) அவர்கள் ஏற்பாடு செய்து அதற்கெனக் கமிட்டி ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளார்கள். அவர்கள் அன்னாபிஷேகத்தை (பல மூட்டைகள் அரிசி சேகரம் செய்து) சிறப்பாக ஆண்டுதோறும் நடத்தி வருகின்றனர்.

"அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்துள் வைத்து உள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவாயவர் பணைமுலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே".

Koviloor Digital Library

''மங்கை யோடிருந்து யோகு செய்வானை
வளர் இளந்திங்களை முடிமேல்
கங்கையோடு அணியும் கடவுளைக் கங்கை
கொண்ட சோளேச்சரத்தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்த சொல் மாலையால் ஆழிச்
செங்கையோடு உலகில் அரசு வீற்றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே.''

(கருவூர்த்தேவர்)

அஞ்சல் முகவரி:

அ/மி. கங்கை கொண்ட சோமேஸ்வரர் திருக்கோயில்
கங்கைகொண்ட சோழபுரம் & Post - 612 901.
உடையார்பாளையம் வட்டம் - திருச்சி மாவட்டம்.

3. களந்தை ஆதித்தேச்சரம்

களப்பால் - கோயில் களப்பால்

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிசைப்பாத் தலம். மக்கள் வழக்கில் களப்பால் என்றும் கோயில் களப்பால் என்றும் வழங்குகிறது. ஊர்: களப்பால் - கோயில்: ஆதித்தேச்சரம்.

களப்பாளர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்த ஊராதலின் இப்பெயர் பெற்றது. இது மருவி களந்தை என்றாயிற்று. இக்கோயில் விசயாலய சோழனின் மகன் ஆதித்தசோழன் (கி.பி 850-890) கட்டு வித்தது. எனவே ஆதித்தேச்சரம் என்று பெயர் பெற்றது. முள்ளி யாற்றின் கரையில் அமைந்த தலம். இங்கு அழகிய நாதசுவாமி கோயில், கயிலாயநாதர் கோயில், ஆனைகாத்த பெருமாள் கோயில் என மூன்று கோயில்கள் உள்ளன. இவற்றுள் அழகியநாதசுவாமி திருக்கோயிலே திருவிசைப்பா பாடல் பெற்றதாகும்.

(அழகியநாதசுவாமி கோயிலில் உள்ள பாண்டிய மன்னன் குலசேகரனின் கல்வெட்டு இத்தலத்து இறைவனை 'களப்பால் உடையார்' ஆதித்தேச்சரமுடையார் என்று குறிப்பிடுகிறது. களப்பால் என்பது களந்தை என்று மருவிவரும். ஆதலின் இதுவே திருவிசைப்பா

Koviloor Digital Library

பாடல் பெற்றதாகும். இக்கோயிற் பதிகத்தில் அழகர் என்ற சொல்லால் இறைவனைக் குறிப்பது இதற்குரிய சான்றாகிறது.)

கூற்றுவ நாயனார் அவதரித்த பதி. "கூற்றுவன் - களப்பாளன், களப்பால் என்னும் சிவதல (திருவிசைப்பா) நகரத்தை உண்டு பண்ணித் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிற்றரசர். சிறந்த சிவபக்தியும் வீரமும் உடையவர். மூவேந்தர்களை வென்று சபாநாயகப் பெருமான் திருவடியை முடியாகச் சூடிக்கொண்டவர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் பெயர் களந்தையாண்டான், களந்தையாளி, களந்தையுடையான், களப்பாளி என்று வழங்குகிறது.

"ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன், அடியேன்"

- திருத்தொண்டத் தொகை. இவருடைய மரபுளோர்க்கு களப்பாளன், களக்குடையான், களாக்கான் முதலிய பெயர்கள் வழங்குகின்றன. நாடுகளைப் பல கூற்றங்களாகப் பிரித்த காரணத்தால் கூற்றுவன் என்ற சிறப்புப் பெயர் வந்தது."

- ஆதாரம்: சூரியகுலக் கள்ளர் சரித்திரம் திருக்களர் சுவாமிநாத உபாத்தியாயர் எழுதியது - 1926ல் வெளியீடு.

(1) திருத்துறைப் பூண்டி-மன்னார்குடிச்சாலையில் 3 கி.மீ. சென்று மடப்புரம் தாண்டினால் இடப்பால் களப்பால் என்று கைகாட்டி உள்ளது. அச்சாலையில் சென்று இத்தலத்தையடையலாம், ஒரு வழிச்சாலை. (அல்லது)

(2) இதே திருத்துறைப் பூண்டி - மன்னார்குடிச்சாலையில் மேலும் சென்று 'திருப்பத்தூர் பாலம்' என்னுமிடத்தையடைந்து இடப்பால் திரும்பிச் செல்லும் சாலையில் சென்று மீனம நல்லூர், காடுவாக்குடி, திருக்களர் முதலிய ஊர்களைத் தாண்டி கோயில் களப்பாலை அடையலாம். (திருக்களர் - திருமுறைத்தலம்) இச்சாலையும் ஒருவழிச்சாலை தான். தார்ச்சாலையாக இருந்தாலும் இடையிடையே மண்சாலையும் கலக்கிறது. விழிப்புடன், விசாரித்துச் செல்ல வேண்டும்.

இறைவன் - ஆதித்தேச்சரர், அழகிய நாதசுவாமி

இறைவி - பிரபா நாயகி, பண்ணேர் மொழியாள்

சிறிய கோயில். பிராகாரத்தில் நவக்கிரக சந்நிதி உள்ளது. கருவறைக்கு முன்புள்ள மண்டபத்தில் நின்றால் நேரே மூலவர் தரிசனம். வலப்பால் அம்பாள் தரிசனம். கோயிலுள் கூற்றுவ நாயனாரின் மூலவுருவம் உள்ளது.

Koviloor Digital Library

அம்பாள் நின்ற திருக்கோலம். வெள்ளிக்கவச அலங்காரம் மனத்திற்கு மட்டிலா மகிழ்வைத் தருகிறது.

மூலவர் ஆதித்தேச்சரை வெள்ளி நாகாபரண கவசத்தில் தரிசிக்கும் போது மெய்ம்மறந்து போகிறோம். பின்னால் அழகான பிரபை.

இங்குள்ள நடராசர் மூர்த்தம் திருவாரூரில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ளதாம். சிவசாரியார் வீடு கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

இத்தலத்திற்குப் பக்கத்தில் திருக்களர், கோட்டூர் (திருமுறைத் தலங்கள்), கீழ்க்கோட்டூர் மணியம்பலம் (திருவிசைப்பாதலம்) முதலிய தலங்கள் உள்ளன.

''நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத் திலங்கினவே
போலுமே முறுவல் நிறைய ஆனந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே என்று
குழைவரே கண்டவர் உண்ட(து)
ஆலமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித் தேச்சரமே.''

''குமுதமே திருவாய் குவளையே களமும்
குழையதே இருசெவி ஒருபால்
விமலமே கலையும் உடையரே சடைமேல்
மிளிருமே பொறிவரி நாகம்
கமலமே வதனம் கமலமே நயனம்
கனகமே திருவடி நிலைநீர்
அமலமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச்சரமே.''

அஞ்சல் முகவரி:-

அ/மி. அழகிய நாதசுவாமி திருக்கோயில்
கோயில் களப்பால்
நடுவக் களப்பால் அஞ்சல் - 614710.
(வழி) திருத்துறைப்பூண்டி - மன்னார்குடி வட்டம்
திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

4. கீழ்க்கோட்டூர் மணியம்பலம்

கோட்டூர்

Koviloor Digital Library

கோட்டூர் சோழநாட்டு (காவிரி)த் தென்கரைத் தலம்.

திருமுறைத்தலம். கோட்டூர், (1) மேலக்கோட்டூர் (2) கீழ்க் கோட்டூர் என இரு பிரிவாகவுள்ளது. மேலக்கோட்டூரிலுள்ள திருக்கோயில் திருமுறைப் பாடல் பெற்றது. கீழ்க்கோட்டூரில் உள்ள திருக்கோயில்தான் திருவிசைப்பாத் தலம். இதுவே மணியம்பலம் எனப்படும். ஐராவதம் வழிபட்ட பெருமையுடையது மேலக்கோட்டூர்ச் சிவாலயம். அந்த ஐராவதத்தின் மணி விழுந்ததால் கீழ்க் கோட்டூர்ச் சிவாலயம் மணியம்பலம் என்று பெயர் பெற்றது.

திருத்துறைப் பூண்டி - மன்னார்குடிப் பாதையில் "திருப்பத்தூர் பாலம்" என்னுமிடத்தைத் தாண்டி மேலும் 1 கி.மீ. சென்றால் கோட்டூர்த்தலத்தை அடையலாம்.

முதலில் வருவது திருமுறைப்பாடல் பெற்ற ஆலயம்தான். (மேலக்கோட்டூர்) கோயிலின் முன்பு வளைவு உள்ளது. அதைத்தாண்டி சற்று உள்ளே சென்றால் கீழ்க்கோட்டூர் மணியம்பலம் கோயிலை அடையலாம். வழி விசாரித்துச் செல்ல வேண்டும். கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பதிகம் பெற்றது.

இறைவன் - மணியம்பலநாதர், அமுதலிங்கேஸ்வரர்

இறைவி - மணியம்பலநாயகி, அமுதாம்பிகை, மதுரவசனாம்பிகை.

தலமரம் - வன்னி

தீர்த்தம் - இந்திரதீர்த்தம்

பிரமன், ஐராவதம் வழிபட்ட தலம்.

ராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. முன்புள்ள பலி பீடமும் நந்தியும் தரிசனம் தர, உட்சென்று வௌவால் நெத்தி மண்டபத்தில் நின்று பார்த்தால் நேரே மூலவர் காட்சியளிக்கிறார். வலப்பால் மதுரவசனாம்பிகையின் அழகிய கோலம்.

மூலவர் சிறிய அழகான மூர்த்தி. உள்ளங்குளிரத் தரிசித்து மணியம்பலத்தாடும் மைந்தனோடு மனங்கலந்து மெய்ம்மறக்கின்றோம். மெள்ளவே அவன் பேர் விளம்பி மேனிசிலிர்க்க வழிபடுகிறோம்.

சிறிய கோயில். பிராகாரத்தில் விநாயகர் சுப்பிரமணியர் சந்நிதிகள் உள்ளன. தலமரம் வன்னி உள்ளது.

Koviloor Digital Library

நித்திய வழிபாடுகள் முறையாக நடைபெறுகின்றன.

நவராத்திரி, சிவராத்திரி, பங்குனி உத்திரம் போன்ற விசேஷகால வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

''தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம்பு அம்பலச்
சடைவிரித்து அலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத்து அரும்பித்
திருமுகம் மலர்ந்து சொட்டு அட்டக்
கிளரொளி மணிவண்டு அறைபொழிற் பழனம்
கெழு வுகம்பலை செய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம்பலத்துள் நின்றாடும்
மைந்தன் என் மனங்கலந்தானே.''

''துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
சுழியமும் சூலமும் நீல
கண்டமும் குழையும் பவளவாய் இதழும்
கண்ணுதல் திலகமும் காட்டிக்
கெண்டையும் கயலும் உகளுநீர்ப் பழனங்
கெழுவு கம்பலை செய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம்பலத்துள் நின்றாடும்
மைந்தன் என் மனங்கலந்தானே.''

அஞ்சல் முகவரி:-

அ/மி. மணியம்பலநாதர் திருக்கோயில்
கீழ்க்கோட்டூர் - கோட்டூர் அஞ்சல் - 614 708,
(வழி) திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி வட்டம்
திருவாரூர் மாவட்டம்.

5. திருமுகத்தலை

பன்னத்தெரு.

தஞ்சை மாவட்டத்திலுள்ள தலம்.

மக்கள் வழக்கில் பன்னத்தெரு என்று வழங்குகிறது. திருத்துறைப்பூண்டி - நாகப்பட்டினம்/வேளாங்கண்ணி சாலையில் 4 கி.மீ. சென்று 'கொக்காலடி' என்னும் ஊரையடைந்து; அங்கிருந்து

Koviloor Digital Library

மானாச்சேரி (மாராச்சேரி) பாதையில் 3 கி.மீ. சென்றால் திருமுகத்தலை - பன்னத்தெரு கோயிலை அடையலாம்.

மணல்பாதை Single Road தான். பெரிய பேருந்துகள் சற்று கவனமாகச் செல்ல வேண்டும்.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட திருக்கோயில். முகலிங்கம், பண்டைநாளில் முகத்தலைலிங்கம் என்றும் வழங்கப்பட்டு வந்தது. அம்முகத்தலைலிங்கம் அமைந்துள்ள தலம். இதுவே பிற்காலத்தில் முகத்தலை என்றாயிற்று என்பர். இதற்கேற்ப கோயிலின் உட்பிராகாரத்தில் முகலிங்கம் ஒன்றுள்ளது. கோயில் சாலையோரத்திலேயே ஊர்த்தொடக்கத்திலேயே உள்ளது. கோயிலுக்கு வெளியில் உள்ள பகுதி 'முகத்தலைக் கோட்டகம்' எனப்படுகிறது.

கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பதிகம் பெற்றது.

இறைவன் - பன்னகாபரணேஸ்வரர்

இறைவி - சாந்தநாயகி

தலமரம் - புன்னை, கோயிலுக்கு எதிரில் திருக்குளம் உள்ளது.

பன்னகாபரணேஸ்வரர் வீற்றிருக்கும் தலமாதலின் பன்னத்தெரு என்று ஊருக்குப் பெயராயிற்று என்பர். சிறிய கோயில், சுற்றிலும் பசுமையான சூழல், முகப்பில் சிமெண்டு கூரை போடப்பட்டுள்ளது. முன்னர் நந்தி, பலிபீடம் உள்ளன. நேரே பார்த்தால் மூலவர் தரிசனம் கிடைக்கிறது. முன்மண்டபத்தில் வலப்பால் புன்னை (தல) மரம் உள்ளது. மரத்தின்கீழ் விநாயகர் எழுந்தருளியுள்ளார். வாயிலைத் தாண்டி பிராகாரத்தில் சென்றால் (இடப்பக்கமாக) பூச்செடிகள், வாகன அறை. அடுத்து விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள், திருமுகத்தலை நாதர் என்னும் சிவலிங்கமூர்த்தம் (முகத்தலை லிங்கம்) காட்சி யளிக்கிறது. பக்கத்தில் மகாலட்சுமி, அடுத்து பைரவரும், சனி பகவானும், சம்பந்தர், சுந்தரர், அப்பர் சந்நிதிகள் உள்ளன.

வலம்முடித்து, வௌவால் நெத்தி மண்டபம் புகுந்து உட் சென்றால் வலப்பால் அம்பாளின் - சாந்தநாயகியின் அற்புத தரிசனம் கிடைக்கிறது. நின்ற திருக்கோலம் - மனத்திற்குச் சாந்தி தரும் காட்சி.

நேரே மூலவர் - பன்னகாபரணேஸ்வரர், பெயருக்கேற்ப வெள்ளி நாகாபரணம் சார்த்தப்பட்டுப் பிரகாசிக்க ஒளிர்விட்டுக் காட்சியளிக்கிறார்.

Koviloor Digital Library

முழுக்கவசத்தில் தரிசிக்கும் அழகே தனியழகு - திருநீற்றுப்பட்டை ஜ்வலிக்கிறது.

ஆதீனத்தின் மேலாளர் ஒருவர் அங்கிருந்து கொண்டு கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றார். நல்ல பராமரிப்பு.

நித்திய வழிபாடுகள் குறைவின்றி நடைபெறுகின்றன.

மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ள இத்தலத்தில், கோயிலுக்கு விளக்கெரிக்க நிவந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட செய்திகள் தெரியவருகின்றன.

இத்தலம் மிகவும் உள்ளடங்கியிருப்பதால் யாத்திரை செல்வோர் முன்கூட்டியே தகவல் கொடுத்துவிட்டுச் செல்வது நல்லது.

''புவன நாயகனே அகவுயிர்க்கு அமுதே
பூரணா ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகாபரணா
அவனி ஞாயிறு போன்று அருள் புரிந்தடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே.''

''என்னையுன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருக நீ எளியவந்து
உன்னையென் பால்வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒழிவற நிறைந்த ஒண்சுடரே
முன்னையென் பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந்து எனக்கே
கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும்
கனியுமாய் இனிய ஆயினையே''.

அஞ்சல் முகவரி:-

அ/மி. பன்னகாபரணேஸ்வரர் திருக்கோயில்
பன்னத் தெரு
மாராச்சேரி அஞ்சல் - (வழி) பாமணி 614711.
திருத்துறைப்பூண்டி வட்டம் - திருவாரூர் மாவட்டம்

Koviloor Digital Library

6. திரைலோக்கிய சுந்தரம்

திருலோக்கி



தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிசைப்பாத்தலம்.

மக்கள் வழக்கில் 'திருலோக்கி' என்று வழங்குகிறது.

(1) திருப்பனந்தாளிலிருந்து ஆடுதுறை சாலையில் 3 கி.மீ. சென்று இவ்வூரையடையலாம்.

(2) திருப்பனந்தாளிலிருந்து, கும்பகோணம் - பூம்புகார்ச் சாலையில் கோட்டூர் என்று வழங்கும் 'துகிலி' ஊரையடைந்து, அதைத் தாண்டி, ''திருலோக்கி 5 கி.மீ.'' என்று வழிகாட்டிப் பலகையுள்ள இடத்தில் (இடப்புறமாகத்) திரும்பிச் சென்றால் கீழசூரியமூலை, வழியாக இவ்வூரையடையலாம். ஒருவழிப்பாதை, பேருந்து செல்லும். பாதையில் செல்லும்போது அங்கங்கே நின்று விசாரித்துச் செல்ல வேண்டும்.

தனிப்பேருந்தில் யாத்திரையாகச் செல்வோர், மேற்குறித்த இரு பாதைகளில் ஏதேனும் தடங்கல்கள் உள்ளனவா, பாதை சீர்கெட்டுப் பழுதுப்பார்க்கும் பணி நடைபெறுகிறதா என்று திருப்பனந்தாளி லேயே விசாரித்துக் கொண்டு வசதிப்படி உரிய பாதையிற் செல்வது நல்லது. (மழைக்காலத்தில் செல்வதற்குப் பொதுவாகச் சோழநாட்டு உட்பாதைகள் ஏற்றவையல்ல. இப்பாதைகளும் அத்தரத்தனவே)

Koviloor Digital Library

இத்திருக்கோயில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் அருளாட்சிக்கு உட்பட்டது.

இவ்வூரில் (1)சுந்தரேஸ்வரர் கோயில் (2) கயிலாயநாதர் கோயில் என்று இரு கோயில்கள் உள்ளன. இவற்றுள் சுந்தரேஸ்வரர் கோயிலே திருவிசைப்பா பாடல் பெற்றதாகக் கொள்ளப்படுகிறது.

கோட்டூர் என்னும் திருமுறைப்பாடல் பெற்ற தலம் இதுவன்று, அதுவேறு. கோட்டூர் என்னும் இச்சிறிய கிராமமும் திரைலோக்கிய சுந்தரமும் முதல் இராசராசன் காலத்தில் ஒன்றாக இருந்தது போலும். கருவூர்த்தேவர் இக்கோட்டூரைக் (இன்று 'துகிலி' என்று வழங்குகிறது) 'கோடை' என்று கொண்டு திருலோக்கியைச் சிறப்பித்து ''கோடை திரை லோக்கிய சுந்தரனே'' என்று பாடுகின்றார். இத்தொடர் இப்பதிகம் முழுவதும் வருகிறது. தற்போது திருலோக்கி, தனி ஊராக உள்ளது.

திரைலோக்கிய மாதேவி என்பவள் முதலாம் இராசராசனின் மனைவியர்களுள் ஒருத்தியாவள். சுவாமி பெயர் சுந்தரேசுவரர். இவையிரண்டும் சேர்ந்து இத்தலத்திற்குத் திரைலோக்கிய சுந்தரம் என்று பெயர் வழங்கியது போலும்.

முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டொன்றில் இவ்வூர் திரைலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

சிறிய கோயில். கோயிலுக்கு முன்பு (ஸ்ரீ காசி மடத்தின்) இக் கோயிலின் நிர்வாக அலுவலகம் உள்ளது. முகப்பு வாயிலைத் தாண்டி உட்சென்றால் முன் மண்டபத்திலிருந்து நேரே மூலவரைக் காணலாம். இடப்பால் பிராகாரத்தில் சென்றால் (முன் மண்டபத்தில்) திருவிசைப்பா பதிகமும் காசிக் கலம்பகப் பாடலும் பொறித்த கல்வெட்டு கண்ணிற் படுகிறது. பிராகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானை, சுப்பிர மணியர், நடராசசபை, பைரவர், பிட்சாடனர், சனிபகவான், சூரியன், சந்திரன் ஆகிய சந்நிதிகளும் திருமேனிகளும் கண்டு தொழலாம்.

வலம் முடித்து உட்புகுந்து மூலவரைத் தரிசிக்கலாம்.

இறைவன் - சுந்தரேஸ்வரர், சுந்தரம்

இறைவி - அகிலாண்டேஸ்வரி

தலமரம் - சரக்கொன்றை

தீர்த்தம் - லட்சுமி தீர்த்தம்

பிருகுமுனிவர், தேவகுரு முதலியோர் வழிபட்ட தலம்.

Koviloor Digital Library

மூலவருக்கு முன்னால் வாயிலில் துவாரபாலகர்கள் உள்ளனர். சற்று உயர்வான ஆவுடையாரில் சற்றே குட்டையான பாணவடிவில் சுந்தரேஸ்வரர் தரிசனம் தருகின்றார். அம்பாள் அழகிய கோலம்.

மூலவருக்கு முன் உள்ள மண்டபத்தில் வலப்பால் ஆலிங்கன மூர்த்தி சிலாரூபத்தில் அருமையாகக் காட்சியளிக்கிறார். தோள்மேல் கைபோட்டு அம்பாளை அணைத்திருக்கும் லாவகமே தனியழகு - கண்டு மகிழவேண்டும். அதற்கு நேர் எதிரில் இடப்பால்,

ரிஷபத்தின் மீது (ரிஷபாரூடராக) சுவாமியும் அம்பாளும் வீற்றிருக்கும் அற்புதமான சிலாரூபம் - ஒரே கல்லில் செதுக்கப்பட்டு அதிசய அமைப்பு உடையதாகக் காட்சியளிக்கிறது. பின்புறத்தில் லிங்க வடிவமும் செதுக்கப்பட்டு உள்ளது. வியப்பூட்டும் இப் புதுமையான சிலாரூபம் வேறெங்கும் காண முடியாதது.

கல்வெட்டில் இத்தலம் விருதராச பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு தைலோக்கி ஆகிய சதுர்வேதி மங்கலம் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

குருக்கள் வீடு கோயிலுக்கு முன் பக்கத்திலேயே உள்ளது.

கருவூர்த் தேவர் பாடியுள்ள இத்தலத்து திருவிசைப்பா பதிகத்தில் முதலிரு பாடல்கள் தலைவிகூற்றாகவும் ஏனையவை தோழி தலைவனிடம் கூறும் கூற்றாகவும் அமைந்துள்ளன.

''நையாத மனத்தினனை நைவிப்பாள் இத்தெருவே
ஐயா! நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.''

''ஆரணத்தேன் பருகி அருந் தமிழ்மாலை கமழவருங்
காரணத்தின் நிலை பெற்ற கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தால் ஈரைந்தும் போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.''

அஞ்சல் முகவரி:

அ/மி. சுந்தரேசுவரர் திருக்கோயில்
திருலோக்கி - அஞ்சல்
(வழி) துகிலி - S.O. 609804.
திருவிடை மருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

7. திருப்பூவணம்

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது)

பாடல்

''பாம்பணைத்துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங்காலம் நின்காண்பான்
ஏம்பலித்திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும் நான்மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதருதேறல் பாய்ந்து ஒழுகும்
பூம்பணைச்சோலை ஆவணவீதிப்
பூவணங்கோயில் கொண்டாயே.''

(கருவூர்த்தேவர்)

8. திருச்சாட்டியக்குடி

சாட்டியக்குடி - சாத்தியக்குடி

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.

மக்கள் வழக்கில் சாட்டியக்குடி, சாத்தியக்குடி என்று வழங்குகிறது.

(1) கீழ்வேளூரிலிருந்து (கீவளூரிலிருந்து) கச்சினம் வழியாகத் திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் வழியில் இத்தலமுள்ளது.

(2) திருவாரூரிலிருந்து தேவூர் வழியாக நாகப்பட்டினம் செல்லும் பாதையில் தேவூரை அடுத்துச் சாலையோரத்தில் சாட்டியக்குடி உள்ளது. மெயின்ரோடிலிருந்து சற்றுத் தள்ளி, உள்ளே கோயிலிருக்கிறது. கோயில்வரை பேருந்து செல்லும்.

ஊர்: சாட்டியக்குடி. கோயில்: ஏழிருக்கை. ஆறு ஆதாரங்களுக்கும் மேலாகிய ஏழாவது இடத்தை - துவாதசாந்த இருக்கையை, ஏழிருக்கை என்பர். இந்நினைவைத் தரும் வகையில் கோயிலின் பெயர் அமைந்துள்ளது. இது பற்றியே இத்தலத்திருவிசைப்பா பதிகத்தில் கருவூர்த்தேவர் ஒவ்வொரு பாட்டிலும் ''ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே'' என்று பாடியுள்ளார்.

Koviloor Digital Library

சாட்டியம் (ஜாட்டியம்); வெப்ப மிகுதியால் வரும் சுரநோய். வெப்ப நோய்க்குரிய தேவதையாகிய ஜ்வரதேவதை இறைவனை வழிபட்ட தலமாதலின் ஜாட்டியக்குடி (சாட்டியக்குடி) என்று பெயர் வந்தது. (குடி - ஊர்) வெப்ப நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இன்றும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டுக் குணமடைவது வழக்கில் இருந்து வருகிறது. சாட்டிய (சாண்டில்ய) முனிவர் வழிபட்ட தலமென்றும் சொல்லப்படுகிறது. கோயில் பிராகாரத்தில் இம்முனிவரின் சிலாரூப மேனியும் உள்ளது.

கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்றது.

இறைவன் -வேதநாதர், வேதபுரீஸ்வரர், ரிக்வேதநாதர்

இறைவி -வேதநாயகி

தீர்த்தம் -வேததீர்த்தம்

தலமரம் -வன்னி

மேற்கு நோக்கிய சந்நிதி

முன் வாயிலைக் கடந்து உட்சென்றால் இடப்பால் வசந்த மண்டபம் உள்ளது. நேரே சென்று 3 நிலைகளையுடைய உள் கோபுரத்தைத் தாண்டினால் நீர்கட்டும் அமைப்பிலுள்ள நந்தியையும் பலி பீடத்தையும் கண்டு தொழலாம்.

அடுத்துள்ள வாயிலைக் கடந்து இடப்பால் பிராகாரத்தில் திரும்பினால் விசுவநாத லிங்கம், சுப்பிரமணியர், மகாலட்சுமி, நடராச சபை, நவக்கிரகங்கள், சனிபகவான், பைரவர், சாண்டில்ய முனிவர், கருவூர்த் தேவர், சம்பந்தர், அப்பர், குபேரன், விநாயகர், சூரியன் முதலிய சந்நிதிகளைத் தொழலாம். தலமரம்-வன்னி, பிராகாரத்தைத் தொடர்ந்து வந்தால் விநாயகர் சந்நிதியும், சோமாஸ்கந்தர் சந்நிதியும் காட்சி தரும்.

வலம் முடித்து வாயிலைத் தாண்டி உள்ளே சென்றால் நேரே மூலவர் தரிசனம் கிடைக்கிறது.

மூலமூர்த்தி - சிவலிங்கத் திருமேனி. சற்று உயர்ந்த பாணம். சதுர ஆவுடையார் அமைப்பு. உள்மண்டபத்தில் இடப்பால் உற்சவ மூர்த்தங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இம்மூர்த்தங்களுள் சோமாஸ்கந்தர், நடராசர், விநாயகர், வள்ளி தெய்வயானை, முருகன், பிரதோஷ நாயகர், திரிபுரசம்ஹாரர், சூரியன், உஷா, பிரத்யுஷா, சண்டேஸ்வரர் முதலியவை இடம் பெறுகின்றன.

Koviloor Digital Library

பிராகாரத்தில் அம்பாள் கோயில் தனிக்கோயிலாக உள்ளது. வேதநாயகி; நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் நெடிய உருவில் அருமையான காட்சி தருகின்றாள். சண்டிகேஸ்வரி மூர்த்தம் வெளியில் இடப்பால் (மண்டபத்தில்) உள்ளது.

இக்கோயில் கி.பி 4-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்பர். கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை மூர்த்தங்கள் உள்ளன.

நித்திய வழிபாடுகள் நன்கு நடைபெறுகின்றன. கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. சிறிய கோயிலாயினும் தூய்மையாக உள்ளது.

அண்மையிலுள்ள கீழ்வேளூர், கச்சனம், திருத்துறைப்பூண்டி முதலியவை திருமுறைத்தலங்களாகும்.

மாசிமக உற்சவம் இத்தலத்தில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. நவராத்திரி விழாவும் சிறப்புடையது. நாள்தோறும் நான்குகால வழிபாடுகள்.

''செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திரைமுகம் மால்முதற் கூட்டத்(து)
அன்பரா னவர்கள் பருகும் ஆ ரமுதே
அத்தனே பித்தனே னுடைய
சம்புவே அணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்(கு)
இன்பனே எங்கும் ஒழிவற நிறைந் (து) ஏழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே.''

''செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற் றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி ஏழ் இருக்கை
இறைவனே போற்றியே போற்றி.''

அஞ்சல் முகவரி:-

அ/மி. வேதபுரீசுவரர் திருக்கோயில்
சாட்டியக்குடி - கிள்ளுகுடி அஞ்சல்-611109
(வழி) தேவூர் - திருவாரூர் வட்டம்.

Koviloor Digital Library

9. தஞ்சைஇராசராசேச்சரம்

தஞ்சாவூர்பிரகதீஸ்வரர் கோயில்

தஞ்சாவூர் - மாவட்டத் தலைநகரம்.

சென்னையிலிருந்தும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சென்னை-இராமேஸ்வரம் இருப்புப் பாதை - மெயின் லைனில் (Main line) உள்ள சந்திப்பு நிலையம். சோழர்க்குத் தலைநகராக விளங்கிய பதி.

தஞ்சகன் ஆண்ட ஊராதலின் தஞ்சகனூர் என்பது தஞ்சாவூர் என்றாயிற்று என்பது தலவரலாறு.

தஞ்சையில் உள்ள பிரகதீஸ்வரர் - பெருவுடையார் கோயிலே இராசராசேச்சரம் என்பதாகும்.

முதலாம் இராசராசசோழனால் கட்டப்பட்டதாதலின் இராசரா சேச்சரம் எனப்பட்டது. தலைசிறந்த சிற்பக்கலையழகு வாய்ந்த அற்புதமான திருக்கோயில். தொல்பொருள் துறையின் பராமரிப்பில் இருந்து வருகின்றது. வழிபாடுகள் முறையாக நடைபெறுகின்றன. தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருக் கோயில். கோயில் வழிபாடு நிர்வாகம் அரண்மனை தேவஸ்தானத்தின் மூலம் நடைபெறுகிறது. கோயில் கலைப்பராமரிப்பு தொல் பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. நாள்தோறும் எண்ணற்றோர் வந்து கண்டு மகிழ்கின்றனர். இத்திருக்கோயிலால் தஞ்சை, சுற்றுலாத் துறையில் தனியிடம் வகிக்கிறது.

இக்கோயிலைக் கட்டியவன் முதலாம் இராசராசசோழன். இவன் சுந்தரசோழன் என வழங்கும் இரண்டாம் பராந்தக சோழனின் இளைய மகன். ஐப்பசிச் சதய நாளில் பிறந்தவன். இயற்பெயர் அருண்மொழித் தேவன். பட்டப்பெயர் இராசகேசரி. தில்லைவாழ் அந்தணர்களால் இராசராசன் என்று பெயர் சூட்டப்பட்டவன். சிவபாதசேகரன், திருநீற்றுச்சோழன் முதலிய வேறு பெயர்களையுடையவன். இம் மன்னன் கி.பி. 1010 ஆம் ஆண்டில் இக்கோயிலைக் கட்டி முடித்திருக்க வேண்டும் என்பர் ஆய்வாளர். இவனுடைய காலம் சோழர் வரலாற்றில் வெற்றிக் காலம். மாலத்தீவுகளையும் வென்ற இவனுடைய வெற்றியி லிருந்து இவனுடைய கப்பற்படை வலிமையும் புகழப்படுகிறது.

Koviloor Digital Library

இறைவன் - பிரஹதீஸ்வரர், பெருவுடையார், இராசராசேச்சரமுடையார், தக்ஷிணமேருவிடங்கர்.
இறைவி - பிருகந்நாயகி, பெரியநாயகி.
தீர்த்தம் - சிவகங்கை. இத்திருக்கோயில் வழிபாடு மகுடாகமப்படி நடைபெறுகிறது.

சிவகங்கைத் தீர்த்தத்தில் உள்ள ''தளிக்குளம்'' வைப்புத் தலமாகும். அப்பர் பெருமான் திருவீழிமிழலைத் தாண்டகத்துள் ''தஞ்சைத் தளிக் குளத்தார்'' என்று பாடுகிறார். சிவகங்கையில் நீர் குறைந்திருக்கும் காலத்தில் சிவலிங்கம், நந்தியைக் காணலாம்.

கருவூர்த்தேவர் இப்பெருமான் மீது (திருவிசைப்பா) பதிகம் பாடியுள்ளார். முதலாம் இராசராசன் கோயிலைக் கட்டி, சிவலிங்க பிரதிஷ்டை செய்த காலத்து, ஆவுடையாருடன் மூர்த்தியைச் சேர்த்து அஷ்டபந்தன மருந்து சார்த்தியபோது அம்மருந்து கெட்டியாகாமல் இளகிய நிலையிலேயே இருக்கக்கண்ட மன்னவன் வருத்தமுற்றான். அஃதறிந்த போகமுனிவர் மன்னனுக்குச் செய்தியனுப்ப, அதன்படி கருவூர்த்தேவரைத் தஞ்சைக்கு அழைத்து வந்தான்.

கருவூர்த்தேவர் தஞ்சை வந்து கோயிலுக்குள் சென்று தம்வாயிலுள்ள தாம்பூலத்தை மருந்தாக உமிழ்ந்து கெட்டியாக்கினார் என்பது வரலாறு. கருவூர்த்தேவரின் உருவச்சிலை கோயிலில் உள்ளது.

கோயிலின் முதற்கோபுர வாயிலுக்குக் கேரளாந்தகன் வாயில் என்றும்,

இரண்டாம் கோபுர வாயிலுக்கு இராசராசன் வாயில் என்றும், தெற்குக் கோபுர வாயிலுக்கு விக்கிர சோழன் வாயில் என்றும் பெயர்.

பரந்த நிலப்பரப்பில் விசாலமாக, ஓங்கி உயர்ந்துள்ள விமானம் தொலைவிலிருந்து பார்ப்போருக்கும் கலைக்காட்சியை வழங்கிக் கொண்டிருக்கிறது. சுவாமி விமானம் 216 அடி உயரமுள்ளது - தக்ஷிணமேரு எனப்படும்.

மூலமூர்த்தியாகிய (சிவலிங்க) பிரகதீஸ்வரமூர்த்தி மிகப்பெரியது.

நர்மதை தீரத்திலிருந்து கொண்டு வரப்பட்டதென்பர். முன்னால் அமைந்துள்ள மிகப்பெரிய நந்தி ஒரே கல்லில் அமைந்தது. 12 அடி உயரம் - 19 அடி நீளம் சுமார் 8 1/2 அடி அகலமுடையது. விமானத்தின் மேலிருக்கும் பிரமரந்திரத்தைச் சாரம் கட்டி ஏற்றியிருக்கும் அருமையை நினைத்தால் புல்லரிக்கிறது. சாரம் கட்டிய இடமே சாரப்பள்ளம் எனப்படுகிறது.

Koviloor Digital Library

சோழ மன்னர்க்குத் திருவாரூர்த் தியாகராசாவிடத்தில் அளவிறந்த பற்றுண்டு, எனவே அவர்கள் இங்குள்ள சோமாஸ்கந்த மூர்த்தியை தியாகராசாவாகவே எண்ணி, அதற்குரிய சிறப்புக்களைக் குறைவின்றிச் செய்து போற்றி வழிபட்டனர். இம்மூர்த்தி ''தஞ்சை விடங்கர்'' தக்ஷிணமேரு விடங்கர்'' என்று போற்றப்படுகிறார்.

இக்கோயிலில் உள்ள திருமேனிகளை இராசராசனும் அவன் மனைவியர்களும், அவன் குலத்தவர்களும், அதிகாரிகளும் தந்தனர் என்பது கல்வெட்டால் தெரிகிறது.

கோயிலின் முதல் தளத்தின் உட்சுவர்களில் 108 வகை நடன அமைப்புகளின் சிற்பங்கள் உள்ளன. இங்குள்ள சிவதாண்டவம், திரிபுராந்தகர், சுப்பிரமணியர், விநாயகர், காளி முதலிய வண்ண ஓவியங்கள் கலைக்கு விருந்தாகும் கவினுடையன.

அம்பாள் கோயிலை எழுப்பியவன் 'கோனேரின்மைகொண்டான்'. எழுந்தருளுவித்த மூர்த்தத்திற்கு உலகமுழுதுடைய நாச்சியார் என்று பெயர் சூட்டப்பட்டது. விநாயகர் திருமேனிகளை இராசராசன் பிரதிஷ்டை செய்வித்தான். பிராகாரத்திலுள்ள சுப்பிரமணியர் கோயில், பிள்ளையார் கோயில் பிற்காலத்தில், சரபோஜி மன்னரால் பழுது பார்க்கப்பட்டு முன் மண்டபங்கள் கட்டப்பட்டன. நடராஜ மண்டபம் மிகவும் பிற்காலத்தியது.

சதய விழா, கார்த்திகை விழா, பெரிய திருவிழா முதலியவை பண்டை நாளில் நடைபெற்றன. பெரிய திருவிழா எனப்படும் பிரம்மோற்சவம் 'ஆட்டைத் திருவிழா' எனப்பட்டது. வைகாசியில் நடைபெற்ற இவ்விழாவில் இராசராச நாடகம் நடிக்கப்பட்டது. இதை நடித்த சாந்திக்கூத்தன் திருமுதுகுன்றனான விஜயராசேந்திர ஆசாரியனுக்கு இதற்காக 120 கலம் நெல் தரப்பட்டது. சுவாமிக்கு சண்பக மொட்டு ஏல அரிசி இலாமிச்சை முதலியவை ஊறவைத்த நன்னீரால் அபிஷேகம் செய்யப்பட்டது. பருப்பு நெய் தயிர் அமுதுகள் நிவேதனமாகப் படைக்கப்பட்டன. சுவாமிக்கு முன்பு திருப்பதிகம் விண்ணப்பிக்க நாற்பத்தெட்டு பிடாரர்களும், உடுக்கை வாசிக்க ஒருவரும், கொட்டு மத்தளம் முழக்க ஒருவரும் ஆக 50 பேர்களை இராசராசன் நியமித்தான். இவர்களுடைய பெயர்கள் அனைத்தும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. அப்பெயர்கள் அனைத்தும் அகோரசிவன், ஞானசிவன், தத்புருஷசிவன், பரமசிவன், ருத்ரசிவன், யோகசிவன், சதாசிவன் என்று முடிவதால் இக்கோயிலில் தீட்சை பெற்றோரே திருப்பதிகம் விண்ணப்ப நியமிக்கப்பட்டனர் என்ற செய்தி தெரிகிறது.

Koviloor Digital Library

கோயிற் பணிகளுக்காகப் பல ஊர்களிலிருந்து கொண்டுவந்து 2 நீளத் தெருக்களில் 400 நடனப் பெண்களைக் குடியமர்த்தினான் இராசராசன். இப்பெண்டிர் தளிச்சேரி பெண்டிர் என்றழைக்கப்படலாயினர். இவர்கள் வசித்த தெரு தளிச்சேரி என்று வழங்கியது. இவர்களுக்குப் பட்டங்களும் அளித்துச் சிறப்பு செய்யப்பட்டன. இவர்களுக்கு வீடு கட்டித் தந்து, ஆடல்வல்லான் மரக்காலால் நெல் அளித்து இறைபணிகளுக்கு அமர்த்தியதாகத் தெரிகிறது. இவ்வாறே கானபாடிகள், நட்டுவர், சங்குகாளம் ஊதுவோர், மாலைகள் கட்டித் தருவோர், விளக்கேற்றுவோர், பரிசாரகர்கள், மெய்க்காவலர்கள் முதலியோர்களையும் நியமித்தான். நிலநிவந்தங்கள் பல தந்தான். அம்மன்னன் கோயிலுக்குத் தந்துள்ள ஆபரணங்களின் பெயர்களைப் படித்தாலே பிரமித்துப் போகிறோம் - வியப்பும் பேராச்சரியமும் அடைகிறோம். ஆனால் அவை ஒன்று கூட இன்றில்லாதது - அதை விடமிகப் பெரிய ஆச்சரியமாகும். நினைத்தால் அடையும் மன வேதனைக்கு அளவுமில்லை - மருந்துமில்லை.

தன்னாற் கட்டப்பட்ட கோயிலுக்குத் தேவையென்பது ஏதுமில்லாதபடி - சிறிதும் குறைவில்லாதபடி அனைத்தையும் செய்து வைத்தான் என்பதை எண்ணுகிறபோது அம்மன்னனின் சமயப்பற்று, பரந்த இறைமனம், தெய்வ வழிபாட்டில் இருந்த மட்டற்ற ஈடுபாடு தெரியவருகின்றது. இக்கருத்துக்கு அரண்தரும் செய்தியாகப் பின்வரும் தொடர்கள் விளங்குகின்றன.

"The Raja Rajeswara Temple at Tanjore which has evidently served as a model for a large number of other temples in South India is a stupendous monument of the religious instruct of this sovereign."

H. Krishna Sasthiri.

கல்வெட்டுக்களில் இறைவனின் பெயர் ஆடல்வல்லான், தக்ஷிணமேருவிடங்கர் எனவும், பின்னர் இராசராசேச்சர முடையார், இராசராசேச்சரமுடைய பரமசுவாமி எனவும்; ஊர்ப்பெயர் பாண்டிகுலாசனி வள நாட்டி தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. மன்னன் மட்டுமன்றி அவன் குடும்பத்தாரும், அலுவலர்களும் பற்பல நிவந்தங்களைக் கோயிலுக்கு ஏற்படுத்தினர், அவையனைத்தும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. மற்றும், நாடொறும் கோயிலில் ஏதேனும் நிகழ்ச்சிகள் நடந்த வாறிருந்ததும், மக்கள் கண்டு மகிழ்ந்ததும்; திருப்பதிகம் விண்ணப்பித்தோர் கணக்காயர் மெய்க்காவலர் முதலியோர் பெயர்களும்கூடக் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

(பாண்டி குலாசனி என்பது இராசராசனின் விருதுப்பெயர். இதற்குப் பாண்டியர் குலத்துக்கு இடியைப் போன்றவன் என்று பொருள்)

பிரகதீஸ்வரமகாத்மியம், சமீவன க்ஷேத்ரமான்மியம் முதலிய தலபுராண நூல்கள் (சமஸ்கிருதத்தில்) உள்ளன. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் 'பெருவுடையார் உலா' பாடியுள்ளார்.

இவ்வளவுச் சிறப்புக்களோடு திகழ்ந்த தஞ்சைப் பெரிய கோயில் காலச்சூழலால் மாறி, செல்வம் அனைத்தையும் இழந்து, இன்று கலையழகு ஒன்றை மட்டுமே கொண்டு காட்சிப் பொருளாக இருந்து வருகின்றது.

இதன் சிறப்பைக்கருதி அரசுச்சார்பில் ஆண்டு தோறும் இராச ராசனின் சதயத் திருவிழா நடத்தப்படுகிறது. அம்மன்னனின் உருவச் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. இராசராசனுடைய ஆயிரமாண்டு விழா அப்போதைய பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களுடைய வருகையுடன் அரசினரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இக்கோயிலின் பெருமையை உணர்ந்து ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் இவ் விழாவின்போது இராசராசசோழனது உருவச்சிலைக்கு 300 கிராமில் தங்கக்கிரீடம் செய்து 16-9-1984 அன்று அப்போதைய பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் மூலம் அணிவித்துச் சிறப்பு செய்தார்கள். மேலும் பெரும் பொருள்களைப் பொன்னிலும் வெள்ளியிலும் செய்தளித்துக் கோயிலில் பூஜைகள் சிறப்பாக நடைபெற நிபந்தங்கள் வைத்த அம்மன்னனின் மனநிலை, காலப்போக்கால் மாறுபட்டுப்போக இன்று கோயிலில் பூஜைகள், நடைபெறுவதற்குத் தேவைப்படும் வெள்ளி (பூஜை)ப்பாத்திரங்களை வழங்கியும், பூஜைகள் தடையின்றி நடைபெற நிரந்தர நிதிவைப்புக்கும் - டிரஸ்டுக்கும் ஏற்பாடு செய்தும்; அதற்கு முதல் தொகையாகத்தாமே முன் வந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்கியும் உள்ளார்கள்.

தவிர இராசராச சோழன் தன் காலத்தில் பொறித்து வைத்துள்ள 80க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் அனைத்தையும் அச்சிட்டு 'சிவ பாதசேகரன் கல்வெட்டுக்கள்' என்னும் நூலையும் வெளியிட்டுள் ளார்கள்.

ஓலைச்சுவடிகளையும் அரும்பெரும் நூல்களையும் காத்து வரும் சரஸ்வதி மகால் நூல் நிலையம் தஞ்சையில் உள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நகரில்தான் நிறுவப்பட்டுத் தமிழின் வளர்ச்சிக்கும்

Koviloor Digital Library

மேன்மைக்கும் செயற்பட்டு வருகின்றது. இத்தலத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அவர்களின் அருளாட்சிக்குட்பட்ட ஸ்ரீ பங்காரு காமாக்ஷியம்மன் கோயில் உள்ளது.

அற்புதமான அம்பாள் தரிசனம் - அவசியம் தரிசிக்க வேண்டும்.

திருவிசைப்பா

''பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம் பலர் ஏம்பலித்து இருக்க
என் நெடுங்கோயில் நெஞ்சுவீற்றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல் செய் நாடகசாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசராசேச்சரத்தி வர்க்கே''

''சரள மந்தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசராசேச்சரத்தி வரை
அருமருந் தருத்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்த சொல்மாலை ஈரைந்தின்
பொருள் மருந்துடையோர் சிவ பதம் என்னும்
பொன் நெடுங்குன்றுடை யோரே''

(கருவூர்த்தேவர்)

10. திருவிடைமருதூர்

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.)

பாடல்

''இந்திர லோக முழுவதும் பணிகேட்டு
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாகம் மேகலை அரையா
அகந்தொறும் பலிதிரி அடிகள்

Koviloor Digital Library

தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதி கின்னரங் கலந்தொலிப்ப
மந்திரகீதந் தீங்குழல் எங்கும்
மருவிடம் திருவிடைமருதே.''
கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக் கிடந்தாங்கு
நலம் கலந்து அடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே! வம்பனே னுடைய
புலங்கலந்தவனே! என்று நின்றுருகிப்
புலம்புவார் அவம்புகார், அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி அனையாள்
மருவிடம் திருவிடை மருதே''.

(கருவூர்த்தேவர்)

11. திருவாரூர்

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது)

பாடல்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகு தோறு(ம்) அமுதம் ஒத்தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்;
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழுமுதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலாவினரே.''

(பூந்துருத்தி காடநம்பி)

12. திருவீழிமிழலை

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது.)

Koviloor Digital Library

பாடல்

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வனற்கு அருளிப்
பொன்னெடுஞ்சிவிகை யாவூர்ந்த
மேக நாயகனை மிகு திரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

பாடு அலங்காரப் பரிசில் காசு அருளிப்
பழுத்த செந்தமிழ் மலர்சூடி
நீடு அலங்காரத்து எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்து நின்றானை
வேடலங்காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழிமிழலை யூராளும்
கேடிலங் கீர்த்திக் கனக கற்பகத்தைக்
கெழுமுதற்கு எவ்விடத்தேனே.''

(சேந்தனார்)

13. திருவாவடுதுறை

(தலவிளக்கம் திருமுறைத்தலங்களின் வரிசையில் உரிய பக்கத்தில் உள்ளது)

பாடல்

''பொய்யாத வேதியர் சாந்தை மெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகு காவிரிக்கரை மேய
ஐயா! திருவாவடுதுறை
அமுதே! என்றுன்னை அழைத்தக்கால்
மையார்தடங்கண் மடந்தைக்கு ஒன்று
அருளாது ஒழிவது மாதிமையே.''

(சேந்தனார்)

தலம் - 58

Koviloor Digital Library

14. திருவிடைக்கழி

Koviloor Digital Library

திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.

தற்போது முருகன் தலமாகப் பிரசித்தி பெற்றுள்ளது. மயிலாடு துறையிலிருந்து தில்லையாடி சென்று (தில்லையாடி வள்ளியம்மை வளைவுக்குள் நுழைந்து சென்று) அங்கிருந்து 3 கி.மீ. சென்றால் திருவிடைக்கழி தலத்தையடையலாம். கோயில் வரை பேருந்து செல்லும். நல்ல சாலை, சுப்பிரமணியக் கடவுள் மூலத்தான மூர்த்தியாக விளங்குகிறார். இத்தலத்திற்கு மகிழவனம் என்ற பெயருண்டு.

தெய்வயானை இறைவனிடம் திருப்பரங்குன்றம் செல்ல விடை கேட்டதாலும், முருகனுக்கு இரணியாசுரனைக் கொன்ற பழிகழிந்த தாலும் இத்தலம் விடைக்கழி என்னும் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

முசுகுந்தன், வசிட்டர், சேந்தனார், அருணகிரிநாதர் ஆகியோர் வழிபட்ட பதி, சேந்தனார் முத்தி பெற்ற தலம். திருமுறைகளில் இடம் பெற்றுள்ள முருகன் தலம். சேந்தனார் பாடியுள்ள திருவிசைப்பா பதிகம் பெற்ற தலம்.

இறைவன் - காமேசுவரர்

இறைவி - காமேசுவரி

தலமரம் - குரா, மகிழம் (குராமரம் முருகப்பெருமானுக்கும் மகிழமரம் இறைவனுக்கும் தலமரங்களாம்)

தீர்த்தம் - சரவண தீர்த்தம், கங்கைக் கிணறு.

அம்பாள் தரங்கம்பாடிக்குச் சென்றதால் இக்கோயிலில் அம்பாள் சந்நிதி இல்லை. மூலத்தானத்தில் முதற்கண் பிரதான மூர்த்தியாக சுப்பிரமணியப் பெருமானும் பின்னால் உள்ளடங்கிச் சிவலிங்க மூர்த்தமும் காட்சி தருகின்றனர். இருமூர்த்தங்களுக்கும் தனித்தனி விமானங்கள். முருகனுடைய விமானம் சற்று உயரமாகவும், இறைவ னுடைய விமானம் சற்று தாழவும் உள்ளது.

தெய்வயானைக்குத் தனிச்சந்நிதி. அழகான ராஜகோபுரம் ஏழு நிலைகளுடன் வண்ணப் பொலிவுடன் கண்ணுக்கு விருந்தாகக் காட்சி தருகிறது.

கை கூப்பித்தொழுது இடைச் சிந்தனையேதுமின்றி 'விடை'ச் சிந்தனையாக உள்ளே சென்றால் கொடிமரமும், பலிபீடமும், அடுத்து விநாயகரையும் தரிசிக்கலாம். முன்மண்டபத்தில் திருப்புகழ்ப் பாடல்கள், வேல் விருத்தம் முதலியவை பதித்த கல்வெட்டுக்கள் உள்ளன. வலப்பால் தெய்வயானை சந்நிதி - தவக்கோல தரிசனம்.

Koviloor Digital Library

பிராகாரத்தில் விநாயகர் சந்நிதி. தலமரம் ''குராமரம்'' தழைத்துக் காட்சி தருகிறது. பங்குனியில் பூக்கும் என்று கூறுகின்றனர். மலைகளில் மட்டுமே தோன்றக்கூடிய இக்குராமரம் இத்தலத்தில் நிலத்திலும் தோன்றி வளர்ந்துள்ளது. இதன் கீழமர்ந்து பலரும் தியானம் செய்கின்றனர்.

சுப்பிரமணியக் கடவுள் இக்குராமரத்தின் கீழ் யோக நிட்டையில் இருக்கின்றாராதலின் இங்கமர்ந்து தியானம் செய்தல் சிறப்புடையதாகின்றது - மனமும் ஒன்றி, சாந்தத்தையும், சத்துவகுணங்களையும் அருளுகின்றது.

எதிரில் தனிச்சந்நிதியாக திருக்காமேசுவரர் சிவலிங்க வடிவில் தரிசனம் தருகிறார்.

வலம் முடித்து உள்வாயிலைத் தாண்டி இடப்பால் சென்றால் சந்திரன்; அருணகிரிநாதர், சேந்தனார் மூர்த்தங்கள் உள்ளன. உட்சுற்றில் நவசத்திகள் தரிசனம். விநாயகரும் சுப்பிரமணியரும் அடுத்தடுத்துக் காட்சிதர, வழிபட்டவாறே நடந்தால் நாகநாதலிங்கம், கஜலட்சுமி, வில்லேந்திய முருகர் உற்சவமூர்த்தம் கண்டு தொழலாம்.

சண்டேசுவர மூர்த்தங்களும் இரண்டு உள்ளன. சிவச்சண்டேசுவரர், குகச்சண்டேசுவரர் என்று (இறைவனுக்கும் முருகனுக்கும் உரியவர்களாக) பெயர்கள் சொல்லப்படுகின்றன. துர்க்கை, பைரவர், சூரியன் ஆகியோரைத் தொழுதவாறே முன் மண்டபத்திற்கு வந்து இரு கணபதிகளையும் கைகூப்பி வணங்கி படியேறிச் சென்றால் நேரே மூலவர் - சுப்பிரமணியக் கடவுள் காட்சி தருகிறார்.

நின்ற திருக்கோலம் அழகான வடிவம். பின்னால் இலிங்கமூர்த்தி தரிசனம். எழில்ததும்ப மனங்கவரும் இளங்காளை - குராமரத்துக் குழகன் - விடைக்கழி வித்தகனைத் தரிசித்த பின்பு, விட்டுப் பிரியவே மனம் வரவில்லை. கம்பீரமாக நின்று காட்சிதரும் அருமையை அநுபவித்தாலன்றி அளந்தறியவொண்ணாது.

முருகனுக்கு முதன்மையருளித் தான் பின்னிருந்து காட்சி தரும் காமேசுவரரைக் 'கைகாள் கூப்பித்தொழீர்' எனக் கட்டளையிட்டு உச்சி மேற்குவித்து; உள்ளம் நிற்க; உடலாற் பிரிகிறோம். கல்வெட்டில் முருகனுடைய பெயர் ''திருக்குராத்துடையார்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களிலிருந்து அங்கு பல மடங்கள் இருந்ததாகவும்,

Koviloor Digital Library

வேதமோதுவார்க்கும் வழிபாட்டுக்கும் இறையிலியாக நிலங்களை யளித்ததும் ஆகிய செய்திகள் தெரியவருகின்றன.

இரண்டாம் பிராகாரத்தில் வடக்கு மதிற்சுவரில் இரு உருவங்கள் செதுக்கப்பட்டு அவைகளின் மேல் பொற்கோயில் நம்பி, தில்லை மூவாயிரநம்பி என்னும் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் கீழ் ஒரு மேடையில் ரிஷபம், இடையன், குடம், பாம்பு முதலிய உருவங்களும், சற்றுத் தள்ளி மன்னன் ஒருவன் உள்ளிட்ட பல உருவங்களும் உள்ளன. இவற்றின் விவரம் சரியாகத் தெரியவில்லை. ஒருவேளை தலபுராணத்துடன் தொடர்புடையனவாக இருக்கலாம்.

சேந்தனார் பாடியுள்ள திருவிசைப்பா பதிகம் முருகனைப் பற்றியது. அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளது. இப்பதிகம்; தலைவனிடம் அன்பு கொண்ட தலைவியின் துன்பத்தையும் - ஆற்றாமையையும் கண்டு, நற்றாய் இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. கோயிலில் தேசாந்திரி கட்டளை உள்ளது. நான்குகால பூஜைகள் நடைபெறுகின்றன. கோயில் தூய்மையாக நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் உள்ள திருமுறைத்தலம் திருக்கடவூர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிய திருமிகு. மங்கலமுடையார் அவர்கள் இம் முருகப் பெருமானால் ஈர்த்து ஆட்கொள்ளப்பட்டு இத்திருக்கோயிற் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு இவருடைய பெருமுயற்சியாலேயே அழகான இராஜகோபுரம் கட்டப்பட்டு (1-9-1977ல்) குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

''மாலுலா மனம்தந்து என் கையிற் சங்கம்
வவ்வினான், மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுக்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக்கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே''.

Koviloor Digital Library

''கொழுந்திரள் வாயார் தாய்மொழியாகத்
தூய்மொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட்சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்த சொல் இவை சுவாமியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக்கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும் மாலுலா மனமே''.

அஞ்சல் முகவரி:-

அ/மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
திருவிடைக்கழி & அஞ்சல் - 609 310
தரங்கம்பாடி வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

பிற்சேர்க்கை

1. பாடல் பெற்ற கோயில் கண்டுபிடிப்பு

இதுவரை ஞானசம்பந்தப் பெருமானால் தேவாரத்தில் பாடப் பெற்ற திருநெற்குன்றம் என்ற தலம் எங்கு உள்ளது என்று தெரியா மலேயே இருந்தது. திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் புள்ளம் பாடிக்கு அருகில் தற்போது திண்ண குளம் என்று அழைக்கப்படும் ஊரே திருநெற்குன்றம் என்பது இவ்வூர்க் கோயிலில் உள்ள கல் வெட்டுகளின் மூலம் இப்போது தெரியவந்துள்ளது.

புள்ளம்பாடி - திருமழபாடி சாலையில் புள்ளம்பாடியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் திண்ணகுளம் அமைந்துள்ளது. இவ்வூருக்கு விரகாலூர் வழியே செல்லவேண்டும்.

இவ்வூரில் நெற்குன்றநாதீசுவரர் என்று சிவாலயம் இருக்கிறது. அம்மன் பெயர் ஸ்ரீ குந்தளாம்பிகை. இக்கோயிலின் சுவர்களில் இருபதுக்கும் அதிகமான கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை முதலாம் ராஜேந்திரன் (1012-1044) முதல், மூன்றாம் ராஜராஜன் (1216-1257) வரையிலான பல சோழ மன்னர்களும் கிருஷ்ண தேவராயரும் ஆண்ட காலத்தைச் சேர்ந்தவை. கல்வெட்டுகள் ஊரின் பெயரைத் திருநெற்குன்றம் என்றும், இறைவன் பெயரைத் திருநெற் குன்றம் உடைய நாயனார் என்றும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

சம்பந்தப்பெருமான் க்ஷேத்திரக் கோவையில் 9-வது பாடலில் ''நெற்குன்றமோதூர் நிறைநீர் மருக நெடுவறையில் குறும்பவர் நீடு திருநற்குன்றம் வலம்புரந் நாகேச்சுரம் என்று தலங்களின் பட்டியலில் இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளார். இக்கோயில் பல்லவர் காலத்திலேயே இருந்தது என்பதற்கு இந்த ஞானசம்பந்தர் பதிகமும் இவ்வூர் வரதராஜப் பெருமாள் கோயிலில் காணப்படும் பல்லவர் காலச் சிங்க முகத் தூணும் சான்றுகளாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் திருப்பணி செய்யப்பட்ட இச் சிவாலயத்தில் இதுவரை படியெடுக்கப்படாத இந்த அரிய கல்வெட்டுக் களைப் படியெடுக்கவும் தேவாரப் பாடல் பெற்ற இக்கோயிலைப் புதுப்பிக்கவும் அரசு முன்வர வேண்டும்.

செய்தி ஆதாரம்:-
டாக்டர். இல. தியாகராஜன், அரியலூர்
(தினமணி நாளிதழ் 10-7-1990)

Koviloor Digital Library

2. வழுவூர்

சோழநாட்டுத்தலம். மயிலாடுதுறை-திருவாரூர்ப் பேருந்துச் சாலையில், மங்கநல்லூருக்கு முன்னால் 'வழுவூர் பெயர்ப் பலகை' உள்ள இடத்தில் திரும்பி, 2 கி.மீ. சென்றால் இவ்வூரை அயைடலாம். கோயில் வரை பேருந்தில் செல்லலாம். அட்ட வீரட்டத் தலங்களுள் இதுவும் ஒன்று. வழுவூர் வீரட்டம் என்றழைக்கப்படும். இது பாடல் பெற்ற தலமன்று.

தாருகாவனத்து முனிவர்கள் இறைவனுக்கு எதிராகச் செய்த ஆபிசார வேள்வியில் தோன்றிய யானையை, இறைவன்பால் ஏவிட, இறைவன் அந்த யானையை அழித்துத் தோலைப் போர்த்து அருளிய வரலாறு இத்தலத்திற்குரிய வீரச் செயலாகும். இத்தலத்துக்குரிய மூர்த்தி 'கஜசம்ஹாரமூர்த்தி'யாவார்.

ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது - கிழக்கு நோக்கியது. அழகான ராஜகோபுரம். கோயிலின் முன்பு பஞ்சமுக தீர்த்தம் எனப் படும் குளம் உள்ளது. விசாலமான உள் இடம். உள்ளே நுழைந்தால் நந்தியும், முன்னால் விநாயகரும் உள்ளனர். அடுத்துள்ள உள் வாயிலைத் தாண்டின் வீரட்டேஸ்வர சுவாமி தரிசனம்.

துவார கணபதி, துவார சுப்பிரமணியரை வணங்கி, வாயில் நுழைந் ததும் கவசமிட்ட கொடிமரம் உள்ளது. கொடி மரத்து விநாயகர் உள்ளார். கொடி மரத்தின் வலப்பால் சஹஸ்ரலிங்கமும், வலக்கோடியில் நூற்றுக்கால் மண்டபமும் உள்ளன.

உள் வாயிலில் உள்ள துவார கணபதியையும், சுப்பிரமணி யரையும் வணங்கி, இருபுறமும் சுதையாலான துவாரபாலகர்களையும் தொழுது, சென்றால் முன் மண்டபத்தை அடையலாம். உள் பிராகாரத்தில் வலம் வரும்போது, வரிசையாக சண்டேசுவரர், விநாயகர், நால்வர், இரு கணபதிகள், தொடர்ந்து அறுபத்து மூவரின் மூல உருவங்கள், தல விநாயகர் ஆகியோர் உள்ளனர். அடுத்து, 'உமைமுருகுடையான் சந்நிதி' உள்ளது. தொடர்ந்து ஜேஷ்டாதேவி, நாகர்கள், பிடாரி, சப்தமாதர் வழிபட்ட லிங்கங்கள், பைரவர்கள் சந்நிதிகள் உள்ளன.

அடுத்து வள்ளி தெய்வயானை சுப்பிரமணியரும், பக்கத்தில் பாலசுப்பிரமணியரும், கஜலட்சுமியும் உள்ளனர். இவற்றையடுத்து பிராகாரச் சுற்றில் விக்கிரமசோழன் அருள் பெற்ற வரலாறு, அழகான

Koviloor Digital Library

வண்ண ஓவியங்களாக எழுதப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களும் தற்போது அழிந்த நிலையில் உள்ளன.

தொடர்ந்து பிராகாரத்தில் சனிபகவான், பைரவர், சூரியன், சந்திரன், நவக்கிரகங்கள் உள்ளன.

முன்மண்டபத்தில் வலப்பால் பிட்சாடனர் உருவம் உள்ளது. பெரிய அருமையான திருமேனி. பக்கத்தில் மோகினி உருவம் உள்ளது. வாயில் நுழைந்ததும் வலப்பால் 'கஜசம்ஹாரமூர்த்தி' தரிசனம் தருகின்றார். இம்மூர்த்தி மிகவும் அற்புதமானதும், அருமையானதும், வேறு எங்கும் காண முடியாத அழகும் வாய்ந்ததாகும்.

யானையின் தோலுரித்து, யானையை அழித்து, சிரசின் மீது சுற்றிய வண்ணம், இறைவன் வீர நடனமாடுகின்றார். யானையின் வால்புறம் சிரசின் மீது தெரிகிறது. திருமேனி ஓங்கார வடிவில் அமைந்துள்ளது. கைவீசி திருவடிகள் முருக்கியவாறு, மடித்து, திருவடியின் உட்புறம் (புறங்கால் பகுதி) தெரியுமாறு நடனமாடும் அற்புதமே அற்புதம். புறங்கால் தரிசனத்தை இங்கு, இம்மூர்த்தியில் கண்டு தொழுது களிக்க முடிகிறது. இம்மூர்த்தியின் அழகை எவ்வளவு வருணித்தாலும் நிறைவுறாது - நேரில் கண்டு தொழுவதாலேயே நிறைவு பெறும். இத்திருமேனிக்குப் பக்கத்தில் அம்பாளின் திருமேனி அதியற்புதத்தோடு திகழ்கின்றது. ஒரு பாதத்தைச் சற்று திருப்பி, நடந்து செல்ல முயலும் கோலத்தில் உள்ளது. அம்பாளின் இடுப்பில் முருகப் பெருமான் காட்சி தருகின்றார். அவருடைய ஒரு விரல் பக்கத்தில் உள்ள மூர்த்தியைச் சுட்டிக் காட்டும் அமைப்பில் உள்ளது. இதுவும் உற்று நோக்குவார்க்கு உள்ளூற மகிழ்ச்சியளிப்பதாகும்.

இவை பற்றிச் சொல்லப்படும் வரலாறு வருமாறு:-

"ஆபிசார வேள்வியில் வந்தெழுந்த யானை, இறைவனை நோக்கி உக்கிரத்தோடு ஓடி வந்தபோது, அதையழிக்க வேண்டி, இறைவன், 'அணிமா' சித்து மூலம் அவ்யானையின் உடலுள் புகுந்தார். அப்போது உலகமெல்லாம் இருண்டது. அம்பிகை அஞ்சினார். செய்வதறியாது திகைத்தார்.

இறைவன் தன்னுள் புகுந்ததால், தாளாத யானை, தீர்த்தத்தில் - பஞ்சமுக தீர்த்தத்தில் போய் விழுந்தது - வடகிழக்கு மூலையில் விழுந்தது. இறைவன் அதையழித்துத் தீர்த்தத்தின் தென்மேற்கு மூலையில் எழுந்து வந்தார். தன் கணவன் இல்லாமையால், வழியின்றித் திகைத்த அம்பிகை, தன் தந்தை வீட்டிற்குச் செல்வதற்கு முயன்றார். அப்போது இறைவன் எழுந்து வெளிப்படவே, குமரனாகிய முருகப் பெருமான், தன் தாய்க்கு, 'இதோ தந்தையார்' என்று சுட்டிக் காட்டினாராம்.

Koviloor Digital Library

(வீட்டிற்குச் செல்ல புறப்படும் நிலையில் திருவடியைத் திருப்பி நிற்கும் அம்பிகையின் நிலையும், தந்தையைச் சுட்டிக் காட்டும் அமைப்பில் இடுப்பில் உள்ள முருகனின் அமைப்பும் கண்டு வியத்தற் குரியது) இச்சந்நிதியைத் தரிசித்தவர்க்கு வெளியே வர மனம் வாராது. எவ்வளவு அற்புத நிலை. வெளியே வந்தால் நேரே மூலவர் தரிசனம். கிழக்கு நோக்கியது, சுயம்புத் திருமேனி. நாககவசத்தில் தரிசிக்க மிகவும் அருமை.

இறைவன் - வீரட்டேஸ்வரர், கஜசம்ஹாரமூர்த்தி, கஜாரி, கிருத்திவாசன், ஞானசபேசன்.

இறைவி - பாலகுஜாம்பிகை, இளமுலை நாயகி.

தலமரம் - தேவதாரு.

தீர்த்தம் - பஞ்சமுக தீர்த்தம்.

சுவாமி சந்நிதிக்கு இடப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. தனிக்கோயில், அம்பாள் நின்ற கோலம், அபய வரத்துடன் கூடிய அட்சமாலை, பத்மம் ஏந்திய நான்கு திருக்கரங்கள்.

ஆலயத்தில் நாடொறும் ஆறுகாலபூஜைகள் நடைபெறுகின்றன. நீதியான வழக்குகள் தீர, திருமணம் நடைபெற, புத்திரப்பேறு தர இத்தலம் சிறந்த பிரார்த்தனை இடமாகக் கருதப்படுகிறது. சுவாமி மண்டபத்தில் அட்ட வீரட்ட ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மாசி மகத்தில் பெருவிழா, திருவாதிரை, பத்து நாள்களுக்கு மாணிக்கவாசகர் திருவிழா, நவராத்திரி முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன.

நாட்டிய கலைஞர் வழுவூர் திரு. இராமையாப் பிள்ளை இத் தலத்தைச் சேர்ந்தவரே.

"கொல்லுங் களியானை உரிபோர்த்து உமையஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லு நெறியானைச் சேர்ந்தார் இடர்தீரச்
சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே" *(திருநல்லூர்: சம்பந்தர்)*

"விரித்த பல்கதிர் கொள்சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்து உமையஞ்சக் கண்டு வொண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே" *(திருச்சேறை: அப்பர்)*

"மறிசேர் கையினனே மதமா உரிபோர்த்தவனே
குறியே என்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந் திருக்காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே" *(திருக்காளத்தி: சுந்தரர்)*

Koviloor Digital Library

3. தேவாரத் தல வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
கச்சிமேற் றளியுறை கடலே போற்றி
ஓண காந்தன் தளியாய் போற்றி
கச்சிஅ நேகதங் காவதா போற்றி
கச்சிநெறிக் காரைக் காடா போற்றி

குரங்கணில் முட்டங் குலவினாய் போற்றி
மாகறல் வாழும் மருந்தே போற்றி
ஓத்தூர் மேவிய ஒளியே போற்றி
வன்பார்த்தான் பனங்காட் டூரா போற்றி
திருவல்லம் மேவிய தீவணா போற்றி

மாற்பே றாள்உமை மணாளா போற்றி
திருவூ றல்வளர் தேவே போற்றி
இலம்பையங் கோட்டூர் ஈசா போற்றி
விற்கோ லத்துறை வீரா போற்றி
ஆலங் காட்டெம் அடிகள் போற்றி

பாசூர் அமர்ந்த பசுபதீ போற்றி
வெண்பாக் கத்துறை விமலா போற்றி
கள்ளில் மேய கனியே போற்றி
காளத்தி நாதநின் கழலிணை போற்றி
ஒற்றி யூருடை ஒருவ போற்றி

வலிதா யம்உறை வள்ளல் போற்றி
வடதிரு முல்லை வாயிலாய் போற்றி
வேற்காட்டு வேத வித்தகா போற்றி
மயிலைக் கபாலீச் சரத்தாய் போற்றி
வான்மியூ ரமர்ந்த வாழ்வே போற்றி

கச்சூ ராலக் கோயிலாய் போற்றி
இடைச்சுரம் இருந்த எழில்வண போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
அச்சிறு பாக்கம் அமர்ந்தாய் போற்றி
வக்கரை அமர்ந்த வரதா போற்றி

அரசிலி நாதா ஐயா போற்றி
இரும்பைமா காளத் திறைவா போற்றி
நெல்வா யில்அரத் துறையாய் போற்றி
பெண்ணா கடத்துப் பெரும போற்றி
கூடலை யாற்றூர்க் கோவே போற்றி

Koviloor Digital Library

எருக்கத்தம் புலியூர் எந்தாய் போற்றி
திருத்தினை நகரச் சிவனே போற்றி
சோபுர மேவிய சொக்கா போற்றி
அதிகைவீ ரட்டத் தழகா போற்றி
நாவலூர் மேவிய நம்பா போற்றி

முதுகுன் றமர்ந்த முனிவா போற்றி
நெல்வெணெய் மேவிய நிருத்தா போற்றி
கோவல்வீ ரட்டக் கோமான் போற்றி
அறையணி நல்லூர் அரசே போற்றி
இடையா றிடையமர் ஈசா போற்றி

வெண்ணெய்நல் லூருறை மேலோய் போற்றி
துறையூர் அமர்ந்த தூயோய் போற்றி
வடுகூர் அடிகள் மாணடி போற்றி
திருமாணி குழிவளர் தேவே போற்றி
பாதிரிப் புலியூர்ப் பரம போற்றி

முண்டீச் சரத்து முதல்வா போற்றி
புறவார் பனங்காட் டூரா போற்றி
திருஆ மாத்தூர்த் தேவே போற்றி
அண்ணா மலைஎம் அண்ணா போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடீ போற்றி

வேட்கள நன்நகர் மேயாய் போற்றி
நெல்வா யில்வளர் நிதியே போற்றி
கழிப்பா லைஉறை கரும்பே போற்றி
நல்லூர்ப் பெருமண நம்பா போற்றி
மயேந்திரப் பள்ளி மன்னா போற்றி
தென்திரு முல்லை வாயிலாய் போற்றி
கலிக்கா மூர்வளர் கண்ணே போற்றி
சாய்க்கா டினிதுறை சதுரா போற்றி
பல்லவ னீச்சரப் பரனே போற்றி
வெண்கா டுகந்த விகிர்தா போற்றி

கீழ்த்திருக் காட்டுப் பள்ளியாய் போற்றி
குருகா வூருறை குணமே போற்றி
காழியுள் மேய கடலே போற்றி
கோலக் காவிற் கோவே போற்றி
வேளூர் மேவிய வித்தகா போற்றி

Koviloor Digital Library

கண்ணார் கோயில்வாழ் கனியே போற்றி
கடைமுடிப் பரமநின் கழல்கள் போற்றி
நின்றியூர் வளரும் நிதியே போற்றி
திருப்புன் கூரமர் திருவே போற்றி
நீடூர் நிருத்தநின் நீளடி போற்றி

அன்னி யூர்வளர் அரனே போற்றி
வேள்விக் குடிவளர் வேதா போற்றி
எதிர்கொள் பாடிஎம் இறைவா போற்றி
மணஞ்சேரி வார்சடை மணாளா போற்றி
குறுக்கைவீ ரட்டக் குழகா போற்றி

கருப்பறி யல்நகர் காப்பாய் போற்றி
குரக்குக் காவிற் குருவே போற்றி
வாழொளி புத்தூர் வாழ்வே போற்றி
மண்ணிப் படிக்கரை மணியே போற்றி
ஓமாம் புலியூர் ஒருவனே போற்றி

கானாட்டு முள்ளூர்க் கடவுளே போற்றி
நாரையூர் நன்நகர் நலமே போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
பந்தணை நல்லூர்ப் பசுபதீ போற்றி
கஞ்சனூர் ஆண்டகற் பகமே போற்றி

கோடிக் காவுடைக் கோவே போற்றி
திருமங் கலக்குடித் தேனே போற்றி
பனந்தாள் தாடகேச் சரனே போற்றி
ஆப்பா டிப்பதி அமலா போற்றி
சேய்ஞலூர் உறையுஞ் செல்வா போற்றி

திருந்துதே வன்குடித் தேவா போற்றி
வியலூர் இருந்தருள் விமலா போற்றி
கொட்டையூ ரிற்கோ டீச்சரா போற்றி
இன்னம்பர் ஈசநின் இணையடி போற்றி
புறம்பயப் பதிவாழ் புண்ணியா போற்றி

விசய மங்கை வேதியா போற்றி
திருவை காஉறை சிவனே போற்றி
வடகுரங் காடு துறையாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
சீரார் திருவை யாறா போற்றி

Koviloor Digital Library

நெய்த்தா னத்துநெய் ஆடியே போற்றி
பெரும்புலி யூர்ப்பெரு மானே போற்றி
மழபாடி வயிரத் தூணே போற்றி
பழுவூர் மேவிய பண்பா போற்றி
கானூர் மேயசெங் கரும்பே போற்றி

அன்பிலா லந்துறை அரசே போற்றி
வடகரை மாந்துறை வள்ளால் போற்றி
திருப்பாற் றுறையுறை தேவே போற்றி
ஆனைக் காவுறை ஆதீ போற்றி
பைஞ்ஞீலி அண்ணல்நின் பாதம் போற்றி

பாச்சிலாச் சிராமப் பரனே போற்றி
ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி
வாட்போக்கி மலையுறை வாழ்வே போற்றி
கடம்பந் துறைவளர் கடலே போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி

கற்குடி மாமலைக் கண்ணுதல் போற்றி
மூக்கீச் சரத்து முதல்வா போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
எறும்பியூர் இருந்த எம்மான் போற்றி
நெடுங்களம் இனிதமர் நிமலா போற்றி

மேலைக் காட்டுப் பள்ளியாய் போற்றி
ஆலம் பொழிலுறை அரனே போற்றி
திருப்பூந் துருத்தித் தேசிக போற்றி
கண்டிவீ ரட்டக் கரும்பே போற்றி
சோற்றுத் துறைவளர் தொல்லோய் போற்றி

வேதி குடியுறை விஜய போற்றி
தென்குடித் திட்டைத் தேவே போற்றி
திருப்புள்ள மங்கைத் திருவே போற்றி
சக்கரப் பள்ளிஎம் சங்கரா போற்றி
கருகா வூருறை கடம்பா போற்றி

திருப்பா லைத்துறைச் செல்வா போற்றி
நல்லூர்ப் பெருமநின் நற்பதம் போற்றி
ஆவூர்ப் பசுபதீச் சரனே போற்றி
சத்தி முற்றச் சதுரா போற்றி
பட்டீச் சரமுறை பரமா போற்றி

Koviloor Digital Library

பழையா றைவட தளியாய் போற்றி
வலஞ்சுழி மேவிய வரதா போற்றி
குடமூக் கமர்கும் பேசா போற்றி
கீழ்க்கோட் டத்தெங் கூத்தா போற்றி
குடந்தைக் காரோ ணத்தாய் போற்றி

நாகேச் சரம்வாழ் நாதா போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி
தென்குரங் காடு துறையாய் போற்றி
நீலக் குடியுறை நிருத்தா போற்றி
வைகல் மாடக் கோயிலாய் போற்றி

நல்லம் நடம்பயில் நாதா போற்றி
கோழம் பத்துறை கோவே போற்றி
ஆவடு தண்துறை அமரா போற்றி
துருத்தி ஈசநின் துணையடி போற்றி
அழுந்தூர் ஆளும் அரசே போற்றி

மயிலா டுந்துறை மணியே போற்றி
திருவிள நகர்உறை திருவே போற்றி
பறியல்வீ ரட்டப் பரமா போற்றி
செம்பொன் பள்ளிச் செல்வா போற்றி
நனிபள்ளி வளரும் நம்பா போற்றி

வலம்புரம் மன்னிய வாழ்வே போற்றி
தலைச்சங் காடமர் தத்துவ போற்றி
ஆக்கூர் அமர்ந்த அம்மான் போற்றி
கடவூர்க் காலவீ ரட்டா போற்றி
கடவூர் மயானக் கடவுளே போற்றி

வேட்டக் குடியின் மேயோய் போற்றி
திருத்தெளிச் சேரிச் சிவனே போற்றி
தரும புரம்வளர் தாயே போற்றி
நள்ளா றுடைய நாதா போற்றி
கோட்டா றமருங் குழகா போற்றி

அம்பர் பெருந்திருக் கோயிலாய் போற்றி
அம்பர்மா காளத் தரனே போற்றி
மீயச் சூருறை விண்ணவ போற்றி
மீயச் சூரிளங் கோயிலாய் போற்றி
திலதைப் பதிவாழ் திலகமே போற்றி

Koviloor Digital Library

பாம்புர நன்நகர்ப் பரமனே போற்றி
சிறுகுடிப் பிறைமுடிச் செல்வா போற்றி
விண்ணிழி வீழி மிழலையாய் போற்றி
வன்னியூர் மேவிய மைந்தா போற்றி
கருவிலி அமருங் கண்ணே போற்றி

பேணு பெருந்துறைப் பெம்மான் போற்றி
நறையூர் சித்தீச் சரனே போற்றி
அரிசிற் கரைப்புத் தூரா போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கலைய நல்லூர்க் கடவுளே போற்றி

கருக்குடி அண்ணல்நின் கழல்கள் போற்றி
திருவாஞ் சியம்வளர் தேவே போற்றி
நன்நிலத் துப்பெருங் கோயிலாய் போற்றி
கொண்டீச் சரத்துக் கோவே போற்றி
திருப்பனை யூர்வளர் தேவே போற்றி

விற்குடி வீரட்டம் மேயாய் போற்றி
புகலூர் மேவிய புண்ணியா போற்றி
புகலூர் வர்த்தமா னீச்சரா போற்றி
இராமன தீச்சரத் திறைவா போற்றி
பயற்றூ ருறையும் பண்பா போற்றி

செங்காட் டங்குடிச் சேவகா போற்றி
மருகற் பெருமநின் மலரடி போற்றி
சாத்த மங்கைச் சம்புவே போற்றி
நாகைக்கா ரோணம் நயந்தாய் போற்றி
சிக்கல் நகர்வளர் செல்வா போற்றி

கீழ்வே ளூராள் கேடிலீ போற்றி
தேவூர் ஆதிநல் தேனே போற்றி
பள்ளிமுக் கூடற் பரனே போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
ஆரூர் அரநெறி அப்பா போற்றி

பரவையுண் மண்தளிப் பரனே போற்றி
விளமர் உகந்த வித்தகா போற்றி
கரவீ ரச்சங் கரனே போற்றி
பெருவே ளூருறை பெரும போற்றி
தலையா லங்கா டமர்ந்தாய் போற்றி

Koviloor Digital Library

குடவாயில் மன்னிய குருவே போற்றி
சேறைச் செந்நெறிச் செல்வா போற்றி
நாலூர் மயான நாடகா போற்றி
கடுவாய்க் கரைப்புத் தூரா போற்றி
திருஇரும் பூளைத் தேவே போற்றி

அரதைப் பெரும்பதி அமர்ந்தாய் போற்றி
அவளிவள் நல்லூர் அரசே போற்றி
பரிதி நியமப் பரனே போற்றி
வெண்ணிவாழ் விமலநின் மெல்லடி போற்றி
பூவனூர்ப் புனிதநின் பொன்னடி போற்றி

பாதா ளீச்சரப் பரமா போற்றி
திருக்களர் மேவிய தேவே போற்றி
ஓங்குசிற் றேமத்து ஒருவா போற்றி
உசாத்தா னத்தமர் உறவே போற்றி
இடும்பா வனத்துறும் இறைவா போற்றி

கடிக்குளத் துறைகடல் அமுதே போற்றி
தண்டலை நீணெறித் தாயே போற்றி
கோட்டூர் மேவிய கொழுந்தே போற்றி
வெண்டுறை மேவிய வேதா போற்றி
கொள்ளம் பூதூர்க் கோவே போற்றி

பேரெயில் பெருமநின் பெய்கழல் போற்றி
கொள்ளிக் காடமர் கொற்றவ போற்றி
திருத்தெங் கூர்வளர் தேனே போற்றி
நெல்லிக் காஉறை நித்திய போற்றி
நாட்டியத் தான்குடி நம்பீ போற்றி

திருக்கா றாயில் தியாகா போற்றி
கன்றாப் பூர்நடு தறியே போற்றி
வலிவலம் வந்தருள் வரதா போற்றி
கைச்சின மேவிய கண்ணுதல் போற்றி
கோளிலி உறையுங் கோவே போற்றி

வாய்மூ ரடிகள்இன் மலர்ப்பதம் போற்றி
மறைக்கா டுறையும் மணாளா போற்றி
அகத்தியான் பள்ளி ஐயா போற்றி
கோடிக் கோயிற் குழகா போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

Koviloor Digital Library

ஆப்ப னூர்வளர் ஐயா போற்றி
திருப்பரங் குன்றிற் செல்வா போற்றி
ஏடகத் தெந்தைநின் இணையடி போற்றி
கொடுங்குன் றமருங் கோவே போற்றி
திருப்புத் தூர்த்திருத் தளியாய் போற்றி

திருப்புன வாயிலெம் செல்வா போற்றி
மால்செய்ரா மேச வாழ்வே போற்றி
ஆடா னையுறை ஆதீ போற்றி
கானப் பேருறை காளாய் போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி

சுழியல் வளருந் துணைவா போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
நெல்வே லிய்யுறை செல்வா போற்றி
அவிநா சிவ்வளர் அரனே போற்றி
முருகன் பூண்டி முதல்வா போற்றி

திருநணா வளரும் திருவே போற்றி
கொடிமா டச்செங் குன்றாய் போற்றி
வெஞ்சமாக் கூடல் விகிர்தா போற்றி
பாண்டிக் கொடுமுடிப் பழையோய் போற்றி
கருவூர் ஆனிலைக் கண்மணீ போற்றி

அஞ்சைக் களத்துறை அப்பா போற்றி
கோலக் கோகர்ணக் கொழுந்தே போற்றி
திருப்பருப் பதத்துத் தேவே போற்றி
இந்திர நீல மலையாய் போற்றி
அநேகதங் காவதம் அமர்ந்தாய் போற்றி

கேதா ரக்கிரிக் கிழவோய் போற்றி
நொடித்தான் மலையுறை நிமலா போற்றி
கோணமா மலைகுடி கொண்டாய் போற்றி
அண்ணல்கே தீச்சரத்து அடிகள் போற்றி
திருவிடை வாய்வளர் தேவா போற்றி

கிளியன்னவூர் வாழ் தேவே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

4. பாடியவர்கள் - தலங்கள்

மூவர் பாடல் பெற்ற தலங்கள் (44)

1 திருக்கச்சியேகம்பம்
2 திருவாலங்காடு
3 திருக்காளத்தி
4 திருவொற்றியூர்
5 திருக்கழுக்குன்றம்
6 நெல்வாயில் அரத்துறை
7 திருவதிகை
8 திருமுதுகுன்றம்
9 திருஆமாத்தூர்
10 கோயில்
11 திருக்கழிப்பாலை
12 திருவெண்காடு
13 சீகாழி
14 திருநின்றியூர்
15 திருப்புன்கூர்
16 திருப்புறம்பயம்
17 திருவையாறு
18 திருமழபாடி
19 திருஆனைக்கா
20 திருப்பைஞ்ஞீலி
21 கற்குடி
22 திருச்சோற்றுத்துறை
23 திருநாகேச்சரம்
24 திருவிடைமருதூர்
25 திருவாவடுதுறை
26 திருத்துருத்தி
27 திருநனிபள்ளி
28 திருவலம்புரம்
29 திருக்கடவூர்
30 திருக்கடவூர்மயானம்
31 திருநள்ளாறு
32 திருவீழிமிழலை
33 அரிசிற்கரைப்புத்தூர்
34 ஸ்ரீ வாஞ்சியம்
35 திருப்புகலூர்
36 நாகைக்காரோணம்
37 திருவாரூர்
38 வலிவலம்
39 திருக்கோளிலி
40 திருமறைக்காடு
41 திருப்பூவணம்
42 பாண்டிக்கொடுமுடி
43 திருப்பருப்பதம்
44 நொடித்தான்மலை (கயிலாயம்)

ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலங்கள் (52)

1 திருமாற்பேறு
2 திருப்பாசூர்
3 திருவான்மியூர்
4 பெண்ணாகடம்
5 திருக்கோவலூர்
6 திருப்பாதிரிப்புலியூர்

Koviloor Digital Library

7 திருவண்ணாமலை
8 திருவேட்களம்
9 திருச்சாய்க்காடு
10 புள்ளிருக்குவேளூர்
11 திருஅன்னியூர்
12 கீழைத்திருமணஞ்சேரி
13 ஓமாம்புலியூர்
14 திருநாரையூர்
15 கடம்பூர்
16 பந்தணைநல்லூர்
17 திருக்கோடிகா
18 திருமங்கலக்குடி
19 இன்னம்பர்
20 விசயமங்கை
21 திருப்பழனம்
22 நெய்த்தானம்
23 திருக்கானூர்
24 அன்பிலாலந்துறை
25 திருப்பாராய்த்துறை
26 திரிசிராப்பள்ளி
27 மேலைத்திருக்காட்டுப்பள்ளி
28 திருக்கண்டியூர்
29 திருவேதிகுடி
30 திருக்கருகாவூர்
31 திருநல்லூர்
32 திருவலஞ்சுழி
33 குடமூக்கு
34 தென்குரங்காடுதுறை
35 திருநல்லம்
36 திருக்கோழம்பம்
37 மயிலாடுதுறை
38 திருச்செம்பொன்பள்ளி
39 ஆக்கூர்
40 திருச்சிவபுரம்
41 செங்காட்டங்குடி
42 திருமருகல்
43 கீழ்வேளூர்
44 பெருவேளூர்
45 திருச்சேறை
46 அவளிவணல்லூர்
47 வெண்ணி
48 திருவாய்மூர்
49 திருஆலவாய்
50 திருப்புத்தூர்
51 இராமேஸ்வரம்
52 திருக்கோகர்ணம்

ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற தலங்கள் (13)

1 திருக்குருகாவூர்
2 திருக்கோலக்கா
3 வேள்விக்குடி
4 திருக்கருப்பறியலூர்
5 வாழ்கொளிப் புத்தூர்
6 திருப்பாச்சிலாச் சிராமம்
7 திருநறையூர்ச்சித்தீச்சரம்
8 பனையூர்
9 திருப்பரங்குன்றம்
10 திருப்புனவாயில்
11 கானப்பேர்
12 திருக்கேதாரம்
13 திருக்கேதீச்சரம்

Koviloor Digital Library

அப்பர், சுந்தரர் பாடல் பெற்ற தலங்கள் (2)

1 திருக்கச்சிமேற்றளி (காஞ்சிபுரம்)
2 திருநீடூர்

ஞானசம்பந்தர் பாடல் மட்டும் பெற்ற தலங்கள் (111)

1 கச்சிநெறிக்காரைக்காடு (காஞ்சிபுரம்)
2 குரங்கணில்முட்டம்
3 மாகறல்
4 திருவோத்தூர்
5 திருவல்லம்
6 திருவூறல்
7 இலம்பையங்கோட்டூர்
8 திருவிற்கோலம்
9 திருக்கள்ளில்
10 திருவலிதாயம்
11 திருவேற்காடு
12 மயிலாப்பூர்
13 திருஇடைச்சரம்
14 அச்சிறுபாக்கம்
15 திருவக்கரை
16 அரசிலி
17 இரும்பைமாகாளம்
18 எருக்கத்தம்புலியூர்
19 திருச்சோபுரம்
20 நெல்வெண்ணெய்
21 அறையணிநல்லூர்
22 வடுகூர்
23 திருமாணிகுழி
24 புறவார்பனங்காட்டூர்
25 நெல்வாயில்
26 நல்லூர்ப்பெருமணம்
27 மயேந்திரப்பள்ளி
28 தென்திருமுல்லை வாயில்
29 கலிக்காமூர்
30 பல்லவனீச்சரம்
31 கீழைத்திருக்காட்டுப்பள்ளி
32 கண்ணார்கோயில்
33 கடைமுடி
34 திருப்பனந்தாள்
35 சேய்ஞலூர்
36 திருந்துதேவன்குடி
37 திருவியலூர்
38 திருவைகாவூர்
39 வடகுரங்காடுதுறை
40 பெரும்புலியூர்
41 திருப்பழுவூர்
42 திருமாந்துறை
43 திருப்பாற்றுறை
44 ஈங்கோய்மலை
45 முக்கீச்சுரம்
46 நெடுங்களம்
47 தென்குடித்திட்டை
48 திருப்புள்ளமங்கை
49 சக்கரப்பள்ளி
50 ஆவூர்பசுபதீச்சரம்
51 பட்டீச்சுரம்

Koviloor Digital Library

52 குடந்தைக்காரோணம்
53 திருவழுந்தூர்
54 திருவிளநகர்
55 திருப்பறியலூர்
56 வைகல் மாடக்கோயில்
57 திருத்தலைச்சங்காடு
58 வேட்டக்குடி
59 திருத்தெளிச்சேரி
60 தருமபுரம்
61 கோட்டாறு
62 அம்பர்பெருந்திருக்கோயில்
63 அம்பர் மாகாளம்
64 திருமீயச்சூர்
65 திலதைப்பதி
66 திருப்பாம்புரம்
67 சிறுகுடி
68 பேணுபெருந்துறை
69 கருக்குடி
70 திருவிற்குடி
71 திருப்புகலூர்வர்த்த மானீச்சரம்
72 இராமனதீச்சரம்
73 திருச்சாத்தமங்கை
74 அரதைப்பெரும்பாழி
75 சிக்கல்
76 தேவூர்
77 திருவிளமர்
78 கரவீரம்
79 குடவாயில்
80 நாலூர்மயானம்
81 இரும்பூளை
82 பரிதிநியமம்
83 பாதாளேச்சரம்
84 திருக்களர்
85 திருச்சிற்றேமம்
86 திருவுசாத்தானம்
87 இடும்பாவனம்
88 கடிக்குளம்
89 தண்டலைநீணெறி
90 கோட்டூர்
91 திருவெண்டுறை
92 கொள்ளம்பூதூர்
93 கொள்ளிக்காடு
94 திருத்தெங்கூர்
95 நெல்லிக்கா
96 திருக்காறாயில்
97 கைச்சின்னம்
98 அகத்தியான்பள்ளி
99 ஆப்பனூர்
100 திருஏடகம்
101 கொடுங்குன்றம்
102 திருஆடானை
103 திருக்குற்றாலம்
104 திருநெல்வேலி
105 திருநணா
106 கொடிமாடச்செங்குன்றூர்
107 கருவூர்
108 இந்திரநீலப்பருப்பதம்
109 அநேகதங்காபதம்
110 திருக்கோணமலை
111 திருவிடைவாய் (புதிய தலம் திருக்கிளியன்னவூர்ப்பதிகம் ஒன்று புதியதாகக் கிடைத்துள் ளது. அதையும் சேர்த்தால் 112 ஆகும்.)

Koviloor Digital Library

அப்பர் பாடல் மட்டும் பெற்ற தலங்கள் (28)

1 முண்டீச்சுரம்
2 திருக்குறுக்கை
3 குரக்குக்கா
4 கஞ்சனூர்
5 திருஆப்பாடி
6 கொட்டையூர்
7 வாட்போக்கி
8 கடம்பந்துறை
9 திருஎறும்பியூர்
10 ஆலம்பொழில்
11 திருப்பூந்துருத்தி
12 திருப்பாலைத்துறை
13 திருச்சத்திமுற்றம்
14 பழையாறைவடதளி
15 குடந்தைக்கீழ்க்கோட்டம்
16 திருநீலக்குடி
17 மீயச்சூர் இளங்கோயில்
18 வன்னியூர்
19 கருவிலி
20 கொண்டீச்சரம்
21 திருப்பயற்றூர்
22 பள்ளியின்முக்கூடல்
23 திருவாரூர் அரநெறி
24 திருத்தலையாலங்காடு
25 கடுவாய்க்கரைப்புத்தூர்
26 திருப்பூவனூர்
27 பேரெயில்
28 கன்றாப்பூர்

சுந்தரர் பாடல் மட்டும் பெற்ற தலங்கள் (25)

1 ஓணகாந்தன் தளி (காஞ்சிபுரம்)
2 கச்சிஅநேகதங்காவதம்
3 வன்பார்த்தான் பனங்காட்டூர்
4 திருவெண்பாக்கம்
5 வடதிருமுல்லைவாயில்
6 திருக்கச்சூர்
7 கூடலையாற்றூர்
8 திருத்தினை நகர்
9 திருநாவலூர்
10 திருஇடையாறு
11 திருவெண்ணெய்நல்லூர்
12 திருத்துறையூர்
13 எதிர்கொள்பாடி
14 பழமண்ணிப்படிக்கரை
15 கானாட்டு முள்ளூர்
16 கலயநல்லூர்
17 நன்னிலம்
18 ஆரூர்ப்பரவையுண்மண்டளி
19 நாட்டியத்தான்குடி
20 திருக்கோடி
21 திருச்சுழியல்
22 அவிநாசி
23 திருமுருகன்பூண்டி
24 வெஞ்சமாக்கூடல்
25 திருவஞ்சைக்களம்

Koviloor Digital Library

5. பயணம் செய்வோர்/பேருந்து ஓட்டுநர்கள்

சிந்தனைக்கு

1. மழைக்காலத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டாம். சோழ நாட்டில் - குறிப்பாக உட்புறப் பாதைகள் மழைக் காலத்திற்கு ஏற்றவை யல்ல.

2. இயன்றவரையில் தனித்துப் போகாமல் திருக்கூட்டமாகவே, தனிப்பேருந்து ஏற்பாடு செய்து கொண்டே செல்வது நல்லது; உட் புறமாகவுள்ள பல தலங்களுக்கு, நெடுஞ்சாலையிலிருந்து நடந்தும், நகரப்பேருந்துகள் மூலமாகவும் செல்ல வேண்டியிருக்கும். நடந்து செல்வதனாலும், நகரப்பேருந்துகள் சென்று திரும்புகிற வரையில் காத்திருக்க வேண்டியிருக்குமாதலாலும் காலம் வீணே விரயமாகும். சில சமயங்களில் ஒரு நாளில் ஓரிரு தலங்களை மட்டுமே பார்க்கும்படியான நிலைமையும் ஏற்படும். எனவே திருக்கூட்டமாக, தனிப் பேருந்தில் செல்வதே நல்லது.

3. நெடுஞ்சாலைகளில் பயணம் செய்வோர்க்குத் துணையாக ஆங்காங்குச் சாலைகளில் சிமெண்டு பெயர்ப் பலகைகள் வைக்கப் பட்டுள்ளன. இவற்றுள் சிலவிடங்களில் இப்பலகைகள் மீதே சுவரொட்டிகளை ஒட்டியிருப்பர். எனவே ஆங்காங்கு நின்று வழி கேட்டறிந்து செல்லவேண்டும்.

4. தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஊருக்கே பல வழிகள் இருக்கும். இந்நூலுள் குறிக்கப்பட்டுள்ள வழிகளேயன்றி வேறு பாதைகளும் இருப்பின், விவரமறிந்த ஓட்டுநர்கள் அவ்வழிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. மண்சாலைகளிலும், ஒற்றைச் சாலைகளிலும் (Single Roads) செல்லும்போது ஓட்டுநர்கள் விழிப்புடன் ஓட்ட வேண்டும். பேருந்து செல்லாது என்று நினைக்குமிடங்களில் அதை நிறுத்தி விட்டு அன்பர் களை நடந்து செல்லுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். அன்பர்களும் இதற்கு இசைய வேண்டும். பேருந்து போகாது என்று நினைக்கும் சாலைகளில் ஓட்டுநர்கள் தேவையற்ற முறையில் துணிச்சலைக் காட்டுவது நல்லதன்று.

6. திருமுறைத் தல யாத்திரைக்கு வரும் பேருந்து ஓட்டுநர்கள் இப்பயணத்தை மற்ற சொகுசுப் பயணம் போல நினைக்காமல், இதன் உள்ளுணர்வைப் புரிந்துகொண்டு அன்பர்களிடம் முகஞ்சுளிக் காமல் ஓட்டவேண்டும். வளைவுகள் உள்ள உட்புறப் பாதைகள்

Koviloor Digital Library

இப்பயணங்களில் அதிகம் வரும். ஆகவே ஓட்டுநர்கள் பயணம் செய்யும் அன்பர்களிடம் பரிவுடன் நடந்து கொள்ளவேண்டும். பயணத்திற்குப் பேருந்துகளை ஏற்பாடு செய்வோரும், நிறுவனங் களும் இத்தகைய மனவுணர்வுடைய ஓட்டுநர்களையே தங்கள் பயணத்திற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

7. உணவு, தரிசனம் முதலியவைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு செல்வோர் அவற்றிற்குரிய காலத்தை இயன்ற வரையில் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையெனில் காலத்தே உணவு கிடைக்காமற்போவதுடன், ஏற்பாட்டைச் செய்து வைப்போரும் இடர்ப்படுவர்.

8. அன்பர்கள் மற்ற யாத்திரைகளைப்போல் இந்த யாத்திரையை எண்ணாமல், தரிசிக்கப்போகும் தலங்களுக்கு முன்கூட்டியே கடிதம் எழுதிவிட்டுச் செல்லுதல் வேண்டும். இல்லையெனில் நாம் செல் வதற்கு முன்பாகவே கோயில் சிவாசாரியார் வந்து சென்று விட்டிருந் தால் நம் பயணம் பயனளிக்காது போகும். (ஒரு குருக்கள், பல கோயில் களுக்குப் பூசைமுறை உடையவராயிருப்பர் என்பது நினைக்கத் தக்கது.)

9. வசதியுள்ள அன்பர்கள் திருக்கூட்டமாகத் தனிப்பேருந்தில் செல்வாராயின், தரிசிக்கப்போகும் தலங்களுக்கு முன்கூட்டியே குறிப் பிட்ட தொகையை அனுப்பிவைத்து, மூர்த்திகளுக்கு எண்ணெய்க் காப்பிட்டு, அபிஷேக அலங்காரம் செய்து வைக்குமாறு செய்யலாம். பல உட்புறக் கோயில்களில் மூர்த்தங்கள் எண்ணெய்க் காப்பு கண்டு பல காலம் ஆயினவே! காணும்போது நெஞ்சு கலங்குகிறது.

10. பயணத்தின்போது அருச்சனைக்குரிய பொருள்களை எடுத்துச் செல்வதுடன் தீபாராதனையின்போது தட்டில் குருக்களுக்குத் தாராளமாகக் காணிக்கை இடுங்கள். பல உட்புறத் தலங்களை இன்றும் குருக்கள்தாம் காப்பாற்றி வருகின்றனர். இதை நேரில் கண்டறியலாம். ஆகவே இவர்களுக்கு ஆதரவு தருவது நம் கடமையாகிறது. நகரக் கோயில்கள் மக்கள் ஆதரவால் தாமாக வளரும். அதில் ஐயமில்லை. ஆனால் கிராமப்புறங்களிலுள்ள பாடல் பெற்ற பல கோயில்கள் காக்கப்படவில்லையானால் அடுத்த தலைமுறைக்குச் சுவடு தெரி யாமல் அழிந்துபோகும். பல இந்நிலையில் உள்ளன. இன்றும்; பக்தியினாலும் குடும்ப முறையினாலும் இக்கோயில்கள் பலவற்றைக் கோயில்சிவாசாரியார்களேகாத்து வருகின்றனர். எனவே பிறிதொன்றையும் எண்ணாமல் கோயில்களைக் காத்துவரும் செய்கையொன்றையே எண்ணி அவர்களுக்கு உதவுவது நம் கடமையாகிறது.

Koviloor Digital Library

11. தலங்களைத் தரிசிக்குங் காலத்திலும் நேரே கோவிலுக்குள் சென்றுவிடாமல், ராஜகோபுர வாயிலில் எல்லோரும் நின்று சிவநாம மகுடஞ்சொல்லி, உட்சென்று, விநாயகரைத் தொழுது முறையாக வலம் வந்து, சந்நிதிகளைத் தொழுது, தலப்பதிகங்களை ஓதி வழிபட வேண்டும். அன்பர்கள் தேவாரம் அடங்கன்முறை நூலை உடன் கொண்டு செல்வதும், ஓதுவார்மூர்த்தியை அழைத்துச் செல்வதும் அவசியம்.

6. மாகேசுவர பூஜை-வேண்டுதல். ஆசீர்வாதம்

அநாதி முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான்
உயிர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருமேனி தாங்கி
எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள் அனைத்திலும்,
நித்திய நைமித்திக வழிபாடுகளெல்லாம் வேத சிவாகமப்படி
சிறப்பாக நடந்துவரும் பொருட்டு அநுக்ரஹம் செய்க - ஹரஹர ஹரஹர

விபூதி, உருத்திராக்கதாரணம், பஞ்சாட்சர ஜபம், வேத சிவாகமப் படனம்,
தேவாரத் திருமுறைப் பாராயணம், ஆன்மார்த்த சிவபூஜை ஆகிய
சிவபுண்ணியச் செயல்கள் நாடெங்கும் பரவி ஓங்கும் பொருட்டு
அநுக்ரஹம் செய்க. - *ஹரஹர ஹரஹர*

மாதம் மும்மழை தவறாமல் பெய்து, தான்யம் முதலிய எல்லா வளங்களும்
செழித்தோங்கும் பொருட்டு அநுக்ரஹம் செய்க - ஹரஹர ஹரஹர

அரசநீதி தவறாமல் செங்கோல் நடத்தி வரும்
பொருட்டு அநுக்ரஹம் செய்க. - *ஹரஹர ஹரஹர*

இந்தத் தானத்திலே எப்போதும் அடியார்களுக்கு மாகேஸ்வர பூஜை
நடந்துவரும் பொருட்டு வளங்களையளித்து அநுக்ரஹம் செய்க.
- *ஹரஹர ஹரஹர*

சிவபூசைச் செல்வர் .... அவர்களுக்கும், அவருடைய
குடும்பத்தார், உறவினர் ஆகியோர்களுக்கும் நோயற்ற வாழ்வும்,
நிறைவான செல்வமும், தேக ஆரோக்கியமும்,நீளாயுளும்,குருலிங்கசங்கம
பக்தியும், சிவஞானமும், மேன்மேலும் பெருகஅநுக்ரஹம் செய்க.
- ஹரஹர ஹரஹர

அடியேங்களுக்கு நல்லபுத்தி உண்டாகும்பொருட்டு அநுக்ரஹம் செய்க
- ஹரஹர ஹரஹர

அடியார்கள் அனைவரும் திருவமுது செய்தருளுக.

Koviloor Digital Library

7. தலம் சுற்றிலும் உள்ள பிறதலங்கள் - பட்டியல்.

சோழநாட்டுத் தலங்கள் (191)

1. கும்பகோணம்

குடமூக்கு, குடந்தைக்கீழ்க் கோட்டம்,
குடந்தைக்காரோணம், அரிசிற்கரைப்புத்தூர்,
திருஆப்பாடி, ஆவூர், இன்னம்பர், கொட்டையூர்,
கலயநல்லூர், கருக்குடி, திருக்குடவாயில்,
திருச்சத்திமுற்றம், சிவபுரம், திருச்சேய்ஞலூர்,
திருச்சேறை, திருந்துதேவன்குடி, திருநல்லம்,
திருநறையூர்ச்சித்தீச்சரம், திருநாகேச்சரம்,
நாலூர்மயானம், பட்டீச்சரம், பழையாறைவடதளி,
திருப்பனந்தாள், திருப்புறம்பயம், பேணுபெருந்துறை,
திருவலஞ்சுழி, திருவியலூர், விசயமங்கை,
திருவைகாவூர், திருப்பாலைத்துறை, திருநல்லூர்,
கடுவாய்க்கரைப்புத்தூர், இரும்பூளை.

2. மயிலாடுதுறை

மயிலாடுதுறை, திருச்செம்பொன்பள்ளி, திருநீடூர்,
திருநனிபள்ளி, திருப்பறியலூர், திருவிளநகர்,
திருஅன்னியூர், திருக்கடைமுடி, திருநின்றியூர்
வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி,
திருக்குறுக்கை, திருஆக்கூர், திருக்கடவூர்,
திருக்கடவூர் மயானம், திருத்துருத்தி (குத்தாலம்),
திருவழுந்தூர், திருவிற்குடி, திருப்பயற்றூர்,
இடும்பாவனம், கடிக்குளம், கொள்ளம்பூதூர்,
திருவிடைவாய்.

3. வைத்தீசுவரன் கோயில்

திருக்கண்ணார்கோயில், கருப்பறியலூர், குரக்குக்கா,
புள்ளிருக்குவேளூர், திருப்புன்கூர்,
மண்ணிப்படிக்கரை, வாளொளிபுத்தூர்.

Koviloor Digital Library

4. சீர்காழி

சீர்காழி, கலிக்காமூர், பல்லவனீச்சரம்,
திருக்குருகாவூர், திருக்கோலக்கா, திருச்சாய்க்காடு,
கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருத்தலைச்சங்காடு,
தென் திருமுல்லைவாயில், திருவலம்புரம்,
திருவெண்காடு.

5. தஞ்சாவூர்

திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி,
திருச்சோற்றுத்துறை, திருநெய்த்தானம்,
திருப்பழனம், பெரும்புலியூர், திருவேதிகுடி,
பரிதிநியமம், திருமழபாடி, வடகுரங்காடுதுறை,
திருக்கானூர், மேலைத் திருக்காட்டுப்பள்ளி,
திருஆலம்பொழில், தென்குடித்திட்டை,
திருப்புள்ளமங்கை, சக்கரப்பள்ளி, திருக்கருகாவூர்,
அரதைப் பெரும்பாழி, அவளிவணல்லூர், வெண்ணி.

6. திருவாரூர்

திருவாரூர், திருவாரூர் அரநெறி,
திருவாரூர்ப் பரவையுண்மண்டளி, கன்றாப்பூர்,
கரவீரம், திருக்காறாயில், தலையாலங்காடு,
பள்ளியின் முக்கூடல், திருப்பனையூர், பெருவேளூர்,
சிற்றேமம், திருவுசாத்தானம்,
நாட்டியத்தான்குடி, வலிவலம்.

7. திருவிடைமருதூர்

திருவிடைமருதூர், தென்குரங்காடுதுறை, கஞ்சனூர்,
திருகோடிகா, திருநீலக்குடி, பந்தணைநல்லூர்,
திருமங்கலக்குடி, திருவாவடுதுறை, திருக்கோழம்பம்,
வைகல்மாடக்கோயில், கருவிலி.

Koviloor Digital Library

8. நன்னிலம்

நன்னிலம், இராமனதீச்சரம், திருக்கொண்டீச்சரம்,
திருச்சாத்தமங்கை, திருச்செங்காட்டங்குடி,
திருமருகல், திருவாஞ்சியம், திருப்புகலூர்,
திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்.

9. பேரளம்

அம்பர், அம்பர்மாகாளம், சிறுகுடி, திலதைப்பதி,
திருப்பாம்புரம், திருமீயச்சூர், மீயச்சூர்,
இளங்கோயில், திருவன்னியூர், திருவீழிமிழலை.

10. நாகப்பட்டினம்

நாகைக்காரோணம், சிக்கல்.

11. மன்னார்குடி

பூவனூர், பாதாளீச்சுரம், திருக்களர்,
திருவெண்டுறை.

12. திருத்துறைப்பூண்டி

தண்டலைநீணெறி, கோட்டூர், கைச்சினம்,
திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு,
அகத்தியான்பள்ளி, திருக்கோடி.

13. மாயூரம் - காரைக்குடி

(இருப்புப்பாதை வழியில்)
திருநெல்லிக்கா, திருக்கொள்ளிக்காடு, திருத்தெங்கூர்.

14. திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருஆனைக்கா, மூக்கீச்சுரம், திருப்பாச்சிலாச்சிரமம், அன்பிலாலந்துறை, திருப்பாற்றுறை, திருமாந்துறை, திருப்பைஞ்ஞீலி, திருவெறும்பியூர், திருப்பராயத்துறை, திருநெடுங்களம்.

Koviloor Digital Library

15. முசிறி

திருஈங்கோய்மலை, வாட்போக்கி, கடம்பந்துறை.

16. அரியலூர்

திருப்பழுவூர்.

17. காரைக்கால்

திருவேட்டக்குடி, திருத்தெளிச்சேரி, தருமபுரம்,
திருநள்ளாறு, கோட்டாறு.

தொண்டைநாட்டுத் தலங்கள் (32)

1. சென்னை

மயிலாப்பூர், திருவொற்றியூர், திருவான்மியூர்,
திருவலிதாயம் (பாடி), வடதிருமுல்லைவாயில்,
திருவேற்காடு, திருக்கள்ளில்
திருக்காளத்தி (காளஹஸ்தி)

திருவெண்பாக்கம் (பூண்டி நீர்த் தேக்கக்கரையில் உள்ள புதிய கோயில்).

2. காஞ்சிபுரம்

கச்சிஏகம்பம், கச்சிமேற்றளி, ஓணகாந்தன்தளி,
கச்சி அனேகதங்காவதம், கச்சிநெறிக்காரைக்காடு,
(இவையனைத்தும் காஞ்சியிலுள்ள கோயில்கள்)
குரங்கணில் முட்டம், மாகறல்,
திருவோத்தூர் (திருவத்திபுரம் - செய்யாறு)
வன்பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு),
திருமாற்பேறு (திருமால்பூர்),
திருவல்லம் (திருவலம் - ராணிப்பேட்டை அருகில்).

3. செங்கற்பட்டு

திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம் (அச்சரப்பாக்கம்),
திருக்கச்சூர், திருவிடைச்சுரம். (திருவடிசூலம்)

Koviloor Digital Library

4. கூவம்

திருவிற்கோலம் (கூவம்), இலம்பையங்கோட்டூர்,
திருவூறல் (தக்கோலம்), திருவாலங்காடு, திருப்பாசூர்.

5. திண்டிவனம்

அரசிலி (ஒழிந்தியாப்பட்டு),
இரும்பைமாகாளம், திருவக்கரை.

நடுநாட்டுத் தலங்கள் (22)

1. விழுப்புரம்

திருநெல்வாயில், அரத்துறை (திருவரத்துறை),
பெண்ணாகடம், திருவதிகை,
திருநாவலூர், திருநெல்வெண்ணெய் (நெய்வெணை),
வடுகூர் (ஆண்டார்கோயில்), துறையூர் (திருத்தளூர்),
புறவார்பனங்காட்டூர் (பனையபுரம்), திருவாமாத்தூர்,

2. விருத்தாசலம்

திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), கூடலையாற்றூர்,
எருக்கத்தம்புலியூர் (ராஜேந்திரப்பட்டணம்).

3. சிதம்பரம்

ஓமாம்புலியூர், கடம்பூர், கழிப்பாலை, வேட்களம், கானாட்டு முள்ளூர், நாரையூர், நெல்வாயில், நல்லூர்ப் பெருமணம், மயேந்திரப்பள்ளி.

5. கடலூர்

திருப்பாதிரிப்புலியூர், திருமாணிக்குழி, திருச்சோபுரம், திருத்தினைநகர்.

6. திருவண்ணாமலை

திருக்கோயிலூர், அறையணிநல்லூர், திருவெண்ணெய்நல்லூர், இடையாறு, முண்டீச்சரம்.

Koviloor Digital Library

பாண்டிய நாட்டுத் தலங்கள் (14)

1. மதுரை

ஆலவாய் (மதுரை), திருவாப்பனூர், திருவேடகம், திருச்சுழியல், திருப்பரங்குன்றம், திருப்புத்தூர், கொடுங்குன்றம் (பிரான்மலை), திருப்பூவணம்.

2. இராமேஸ்வரம்

இராமேஸ்வரம், திருவாடானை, திருப்புனவாயில்.

3. சிவகங்கை

கானப்பேர், (காளையார்கோயில்)

4. தென்காசி

குற்றாலம்.

5. திருநெல்வேலி

திருநெல்வேலி.

கொங்குநாட்டுத் தலங்கள் (7)

1. திருப்பூர்

அவிநாசி, திருமுருகன்பூண்டி.

2. ஈரோடு

திருநணா (பவானி)
கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு), வெஞ்சமாக்கூடல், திருப்பாண்டிக்கொடிமுடி (கொடிமுடி), கருவூர்.

☆ ☆ ☆

ACC NO
36933
Koviloor Digital Library
78-4

திருமுறைத் தலங்கள்

நூலுடன் இணைப்பு

அகர வரிசையில் தல விவரங்களும் அடையும் வழியும் - வரைபடங்கள் (MAPS)

தல வரிசை எண்.	தலத்தின் பெயர் (முன்பாக திரு சேர்க்கவும்)	இன்று வழங்கும் பெயர்	நாட்டின் பெயர்	தலம் உள்ள வரைபடத்தின் எண்.
243	அகத்தியான் பள்ளி	அகஸ்தியம்பள்ளி	சோ. நா. தென்.	11
29	அச்சிறுபாக்கம்	அச்சரப்பாக்கம்	தொ. நா.	2
266	அஞ்சைக்களம்	ஸ்ரீவாஞ்சி குளம்	மலை நாடு	12
54	அண்ணாமலை	திருவண்ணாமலை	நடுநாடு	4
39	அதிகை வீரட்டம்	திருவதிகை	நடுநாடு	5
171	அம்பர்ப் பெருந்திருக்கோயில்	அம்பர், அம்பல்	சோ. நா. தென்.	8
172	அம்பர் மாகாளம்	கோயில் திருமாளம்	சோ. நா. தென்.	8
31	அரசிலி	ஒழிந்தியாம்பட்டு	தொ. நா.	4
216	அரதைப் பெரும்பாழி	ஹரித்வாரமங்கலம்	சோ. நா. தென்.	8
183	அரிசிற் கரைப்புத்தூர்	அழகாபுத்தூர்	,,	8
217	அவளிவணல்லூர்		,,	8
259	அவிநாசி	திருப்புக்கொளியூர்	கொங்கு நாடு	13
155	(திரு) அழுந்தூர்	தேரழுந்தூர்	சோ. நா. தென்.	6
44	அறையணி நல்லூர்	அரகண்டநல்லூர்	நடுநாடு	4
270	அநேகதங்காபதம்	கௌரிகுண்டம்	வடநாடு	14
111	அன்பிலாலந்துறை	கீழ் அன்பில்	சோ. நா. வட.	7
179	அன்னியூர்	வன்னியூர்	சோ. நா. தென்.	8
163	ஆக்கூர்		சோ. நா. தென்.	6
253	ஆடானை	திருவாடானை	பாண். நா.	12
246	ஆப்பனூர்	ஆப்புடையார் கோயில்	பாண். நா.	12
94	ஆப்பாடி	திருவாய்ப்பாடி	சோ. நா. வட.	6
53	ஆமத்தூர்		நடு நாடு	4
204	ஆரூர்		சோ. நா. தென்.	8
205	ஆரூர் அரநெறி		,,	8
206	ஆரூர்ப் பரவையுண் மண்டளி	தூவா நாயனன் கோயில்	,,	8
15	ஆலங்காடு		தொ. நா.	3
127	ஆலம் பொழில்	திருவாம்பொழில்	சோ. நா. தென்.	9
245	ஆலவாய்	மதுரை	பாண். நா.	12
153	ஆவடு துறை		சோ. நா. தென்.	6
138	ஆவூர்ப் பசுபதீஸ்வரம்	ஆவூர்	,,	9
114	ஆனைக்கா	திருவானைக்காவல்	சோ. நா. வட.	7
225	இரும்பாவனம்		சோ. நா. தென்.	11
27	இடைச்சுரம்	திருவடிசூலம்	தொ. நா.	3
147	இடைமருதூர்	திருவிடைமருதூர்	சோ. நா. தென்.	8
45	இடையாறு	டி. எடையார்	நடுநாடு	4
269	இந்திரநீல பருப்பதம்		வடநாடு	—
194	இராமனதீச்சரம்	திருக்கண்ணபுரம்	சோ. நா. தென்.	8
252	இராமேஸ்வரம்		பாண். நா.	12
215	இரும்பூளை	ஆலங்குடி	சோ. நா. தென்.	8
32	இரும்பை மாகாளம்	இரும்பை	தொ. நா.	3
13	இலம்பையங் கோட்டூர்	எறுமியன் கோட்டூர்	,,	3
99	இன்னம்பர்	இன்னம்பூர்	சோ.நா.வட.	8
117	ஈங்கோய் மலை	திருலிங்கநாதமலை	,,	10
224	உசாத்தானம்	கோயிலூர்	சோ. நா. தென்.	11
12	ஊறல் தக்கோலம்	தக்கோலம்	தொ. நா.	3
78	எதிர்கொள்பாடி	மேலைத் திருமணஞ்சேரி	சோ. நா. வட.	6
36	எருக்கத்தம்புலியூர்	ராஜேந்திரபட்டினம்	நடு நாடு	5
124	எறும்பியூர்	திருவெறும்பூர்	சோ. நா. தென்.	7
248	ஏடகம்		பா. நா.	12
105	ஐயாறு	திருவையாறு	சோ. நா. வட.	9
20	ஒற்றியூர்	திருவொற்றியூர்	தொ. நா.	3
3	ஓணகாந்தன்தளி		,,	2
8	ஓத்தூர்	செய்யாறு	,,	3

தொ.நா = தொண்டை நாடு, சோ.நா.வ = சோழ நாட்டு வட கரை, சோ.நா.தென் = சோழ நாட்டுத் தென் கரை, பா.நா = பாண்டிய நாடு

Koviloor Digital Library

தல வரிசை எண்.	தலத்தின் பெயர் (முன்பாக திரு சேர்க்கவும்)	இன்று வழங்கும் பெயர்	நாட்டின் பெயர்	தலம் உள்ள வரைபடத்தின் எண்.
85	ஓமாம்புலியூர்		சொ. நா. வட.	5
4	கச்சி அநேகதங்காவதம்	காஞ்சி	தொ. நா.	2
1	கச்சி ஏகம்பம்		தொ. நா.	2
2	கச்சி நெறிக்காரைக்காடு	திருக்காளிமேடு	தொ. நா.	2
2	கச்சி மேற்றளி	பிள்ளையார்பாளையம்	தொ. நா.	2
26	கச்சூர்		தொ. நா.	3, 2
90	கஞ்சனூர்		சோ. நா. வட.	6
119	கடம்பொன்துறை	குளித்தலை	சோ. நா. தென்	10
88	கடம்பூர்	மேலைக்கடம்பூர்	சோ. நா. வட.	7
164	கடவூர்	திருக்கடையூர்	சோ. நா. தென்.	6
165	கடவூர் மயானம்	திருமயானம்	சோ. நா. தென்.	6
226	கடிக்குளம்	கற்பகனார் கோயில்	சோ. நா. தென்.	11
214	கடுவாய்க்கரைபுத்தூர்	ஆண்டார் கோயில்	சோ. நா. தென்.	8
72	கடமுடி	கீழையூர், கீழூர்	சோ. நா. தென்.	6
129	கண்டியூர்		சோ. நா. தென்.	9
71	கண்ணார்கோயில்	குறுமானக்குடி	சோ. நா. வட.	6
272	நொடித்தான்மலை	திருக்கயிலாயம்	வடநாடு	—
208	கரவீரம்	கரையபுரம்	சோ. நா. தென்.	8
135	கருகாவூர்	திருக்களாவூர்	சோ. நா. தென்.	9
186	கருக்குடி	மருதாந்தநல்லூர்	சோ. நா. தென்.	8
81	கருப்பறியலூர்	தலைஞாயிறு	சோ. நா. வட.	6
180	கருவிலிக்கொட்டிடை	கருவேலி	சோ. நா. தென்.	8
265	கருவூர்	கரூர்	கொங்கு நாடு	13
185	கலையநல்லூர்	சாக்கோட்டை	சோ. நா. தென்.	8
62	கலிக்காமூர்	அன்னப்பன்பேட்டை	சோ. நா. வட.	6
58	கழிப்பாலை		சோ. நா. வட.	5
28	கழுக்குன்றம்		தொ. நா.	3
222	களர்		சோ. நா. தென்.	8
18	கள்ளில்	திருக்கள்ளம்	தொ. நா.	3
121	கற்குடி	திருக்கண்டலம்		
		உய்யகொண்டாள்மலை	சோ. நா. தென்.	10, 7
237	கன்றாப்பூர்	கோயில் கண்ணாப்பூர்	சோ. நா. தென்.	8
66	கீழைத் திருக்காட்டுப்பள்ளி	ஆரண்யேசுரர் கோயில்	சோ. நா. வட.	6
126	திருக்காட்டுப்பள்ளி	திருக்காட்டுப்பள்ளி	சோ. நா. தென்.	9
64	காவிரிப் பூம்பட்டினத்து			
	பல்லவனீச்சரம்	பூம்புகார்	சோ. நா. வட.	6
68	சீகாழி	சீர்காழி	சோ. நா. வட.	6
19	காளத்தி	ஸ்ரீகாளஹஸ்தி	தொ. நா.	3
236	காறாயில்	காரவாசல்	சோ. நா. தென்.	8
254	கானப்பேர்	காளையார் கோயில்	பாண். நா.	12
86	கானாட்டுமுள்ளூர்	கானாட்டம்புலியூர்	சோ. நா. வட.	5
110	கானூர்	திருக்கானூர்	சோ. நா. வட.	9
201	கீழவேளூர்	கீவளூர்	சோ. நா. தென்.	8
145	குடந்தைக்காரோணம்	சோமேசர் திருக்கோயில்	சோ. நா. தென்.	8
144	குடந்தைக் கீழ்க்கோட்டம்	நாகேஸ்வரசாமி கோயில்	சோ. நா. தென்.	8
143	குடமூக்கு	கும்பகோணம்	சோ. நா. தென்.	8
211	குடவாயில்	குடவாசல்	சோ. நா. தென்.	8
82	குரக்குக்கா	திருக்குரக்காவல்	சோ. நா. வட.	8
6	குரங்கணில்முட்டம்		தொ. நா.	3
103	வடகுரங்காடுதுறை	ஆடுதுறை கோயில்	சோ. நா. வட.	9

தொ.நா = தொண்டை நாடு, சோ.நா.வ = சோழ நாட்டு வட கரை, சோ.நா.தென் = சோழ நாட்டுத் தென் கரை, பா.நா = பாண்டிய நாடு

Koviloor Digital Library

78-4

தல வரிசை எண்.	தலத்தின் பெயர் (முன்பாக திரு சேர்க்கவும்)	இன்று வழங்கும் பெயர்	நாட்டின் பெயர்	தலம் உள்ள வரைபடத்தின் எண்.
148	தென்குரங்காடுதுறை	ஆடுதுறை	சோ. நா. தென்.	8
67	குருகாவூர்	திருக்கடாவூர்	சோ. நா. வட.	6
9	குறுக்கை	கொருக்கை	சோ. நா. வட.	6
257	குற்றாலம்		பாண். நா.	12
35	கூடலையாற்றூர்		நடு நாடு	5
271	கேதாரம்		வடநாடு	11
274	கேதீச்சரம்		ஈழநாடு	—
239	கைச்சினம்	கச்சனம்	சோ. நா. தென்.	8
262	கொடிமாடச் செங்குன்றூர்	திருச்செங்கோடு	கொங்கு நாடு	13
249	கொடுங்குன்றம்	பிரான்மலை	பா. நா.	12
98	கொட்டையூர்		சோ. நா. வட.	8
189	கொண்டீச்சரம்	திருக்கண்டீச்சரம்	சோ. நா. தென.	8
230	கொல்லம்புதூர்	திருக்களம்புதூர்	சோ. நா. தென்.	8
232	கொள்ளிக்காடு	கள்ளிக்காடு	சோ. நா. தென்.	8
267	கோகர்ணம்	கோகர்ணா	துளுவ நாடு	14
244	கோடி	கோடிக்கரை	சோ. நா. தென்.	11
91	கோடிகா	திருக்கோடிக்காவல்	சோ. நா. வட.	6
170	கோட்டாறு	கொட்டாரம்	சோ. நா. தென்.	8
228	கோட்டூர்		சோ. நா. தென்.	8
273	கோணமலை	திரிகோணமலை	ஈழ நாடு	—
55	கோயில்	சிதம்பரம்	சோ. நா. வட.	5
69	கோலக்கா			6
43	கோவலூர்	திருக்கோயிலூர்	நடுநாடு	4
152	கோழம்பம்	திருக்குழம்பியம்	சோ. நா. தென்.	6
240	கோளிலி	திருக்குவளை	சோ. நா. தென்.	8
134	சக்கரப்பள்ளி	ஐயம்பேட்டை	சோ. நா. தென்.	9
139	சத்திமுற்றம்	சத்திமுத்தம்	சோ. நா. தென்.	8
198	சாத்தமங்கை	சீயாத்தமங்கை	சோ. நா. தென்.	8
63	சாய்க்காடு	சாயாவனம்	சோ. நா. வட.	6
200	சிக்கல்		சோ. நா. தென்.	8
123	சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி	சோ. நா. தென்.	11
184	சிவபுரம்		சோ. நா. தென்.	8
177	சிறுகுடி		,,	8
223	சிற்றேமம்	சித்தாய்மூர்	,,	8
256	சுழியல்	திருச்சுழி	பா. நா.	12
196	செங்காட்டங்குடி		சோ. நா. தென்.	8
159	செம்பொன்பள்ளி	செம்பனார்கோயில்	,,	6
95	சேய்ஞ்ஞலூர்	சேங்கலூர்	சோ. நா. வட.	6
212	சேறை	திருச்சேரை உடையார்	சோ. நா. தென்.	8
38	சோபுரம்	தியாகவல்லி	நடுநாடு	5
130	சோற்றுத்துறை		சோ. நா. தென்.	9
227	தண்டலை நீளநெறி	தண்டளச்சேரி	சோ. நா. தென்.	8
168	தருமபுரம்		,,	8
162	தலைச்செங்காடு		,,	6
210	தலையாலங்காடு		,,	8
96	திருந்து தேவன்குடி	நண்டாங்கோயில்	சோ. நா. வட.	6
175	திலதைப்பதி	செதலபதி	சோ. நா. தென்.	8
37	தினைநகர்	தீர்த்தனகிரி	நடுநாடு	5
154	துருத்தி	குத்தாலம்	சோ.நா.தென்.	6
47	துறையூர்	திருத்தளூர்	நடுநாடு	4

தொ.நா = தொண்டை நாடு, சோ.நா.வ = சோழ நாட்டு வட கரை, சோ.நா.தென் = சோழ நாட்டுத் தென் கரை, பா.நா = பாண்டிய நாடு

Koviloor Digital Library

தல வரிசை எண்.	தலத்தின் பெயர் (முன்பாக திரு சேர்க்கவும்)	இன்று வழங்கும் பெயர்	நாட்டின் பெயர்	தலம் உள்ள வரைபடத்தின் எண்.
233	தெங்கூர்	திருத்தங்கூர்	சோ. நா. தென்.	8
167	தெளிச்சேரி	காரை கோயில் பத்து	சோ. நா. தென்.	8
132	தென்குடித் திட்டை		,,	9
202	தேவூர்		,,	8
261	நணா	பவானி	கொங்கு நாடு	13
153	நல்லம்	கோனேரி ராஜபுரம்	சோ. நா. தென்.	8
137	நல்லூர்		சோ. நா. தென்.	9
59	நல்லூர்ப் பெருமணம்	ஆச்சாள்புரம்	சோ. நா. வட.	6
169	நள்ளாறு		சோ. நா. தென்.	8
182	நறையூர் சித்தீச்சரம்	திருநாரையூர்	,,	8
160	நனிப்பள்ளி	புஞ்சை	,,	6
188	நன்னிலம்		,,	8
146	நாகேச்சுரம்	திருநாகேச்சுரம்	,,	8
199	நாகைக்காரோணம்	நாகப்பட்டினம்	,,	8
235	நாட்டியத்தாங்குடி		,,	8
87	நாரையூர்		சோ. நா. வட.	5
213	நாலூர் மயானம்		சோ. நா. தென்.	8
40	நாவலூர்		நடுநாடு	5
73	நின்றியூர்		சோ. நா. வட.	6
75	நீடூர்		,,	6
149	நீலக்குடி	தெள்ளைக்குடி	சோ. நா. தென்.	8
125	நெடுங்கலம்		,,	7
106	நெய்த்தானம்	தில்லை ஸ்தானம்	சோ. நா. வட.	9
234	நெல்லிக்கா	திருநெல்லிக்காவல்	சோ. நா. தென்.	8
57	நெல்வாயில்	சிவபுரி	சோ. நா. வட.	5
33	நெல்வாயில் அறத்துறை	திருவட்டுறை	நடுநாடு	5
42	நெல்வெண்ணை	நெய்வினை	,,	5
258	நெல்வேலி	திருநெல்வேலி	பா. நா.	12
140	பட்டீச்சரம்		சோ. நா. தென்.	8
89	பந்தணைநல்லூர்	பந்தநல்லூர்	சோ. நா. வட.	6
195	பயற்றூர்	திருப்பயத்தங்குடி	சோ. நா. தென்.	8
247	பரங்குன்றம்	திருப்பரங்குன்றம்	பா. நா.	12
120	பராய்த்துறை	திருப்பராய்த்துறை	சோ. நா. தென்.	10
218	பரிதி நியமம்	பருத்தியப்பர் கோயில்	சோ. நா. தென்.	9
268	பருப்பதம்	ஸ்ரீசைலம்	வடநாடு	14
104	பழனம்		சோ. நா. வட.	9
109	பழுவூர்	கீழப்பழுவூர்	,,	7
141	பழையாறை வடதளி		சோ. நா. தென்.	8
158	பறியலூர்	பரசலூர்	,,	6
9	பனங்காட்டூர்	திருப்பனங்காடு	தொ. நா.	3
93	பனந்தாள்	திருப்பனந்தாள்	சோ. நா. வட.	6
190	பனையூர்		சோ. நா. தென்.	8
16	பாசூர்	திருப்பாச்சூர்	தொ. நா.	3
116	பாச்சிலாச்சிரமம்	திருலாசி	சோ. நா. வட.	10
264	பாண்டிக் கொடுமுடி	கொடுமுடி	கொங்கு நாடு	13
221	பாதாளேச்சரம்	பாம்பணி	சோ. நா. தென்.	8
50	பாதிரிப்புலியூர்	கடலூர்	நடுநாடு	4
176	பாம்புரம்	திருப்பாம்புரம்	சோ. நா. தென்.	8
136	பாலைத்துறை		,,	9
113	பாற்றுறை	திருப்பாலத்துறை	சோ. நா. வட.	7

தொ.நா = தொண்டை நாடு, சோ.நா.வ = சோழ நாட்டு வட கரை, சோ.நா.தென் = சோழ நாட்டுத் தென் கரை, பா.நா = பாண்டிய நாடு

Koviloor Digital Library

தல வரிசை எண்.	தலத்தின் பெயர் (முன்பாக திரு சேர்க்கவும்)	இன்று வழங்கும் பெயர்	நாட்டின் பெயர்	தலம் உள்ள வரைபடத்தின் எண்.
192	புகளூர்		சோ. நா. தென்.	8
193	புகளூர் வர்த்தமானீச்சரம்		,,	8
250	புத்தூர்		பாண். நா.	12
133	புள்ளமங்கை	பசுபதி கோயில்	சோ. நா. தென்.	9
70	புள்ளிருக்குவேளூர்	வைத்தீஸ்வரன் கோயில்	சோ. நா. வட.	6
100	புறம்பயம்	திருப்புறம்பியம் கோயில்	,,	8
52	புறவார் பனங்காட்டூர்	பனையபுரம்	நடுநாடு	4
251	புனவாயில்	திருப்புனவாசல்	பா. நா.	12
74	புங்கூர்	திருப்புங்கூர்	சோ. நா. வட.	6
128	பூந்துருத்தி		சோ. நா. தென்.	9
255	பூவனம்	திருப்பூவனம்	பா. நா.	12
214	பூவனூர்		சோ. நா. தென்.	8
34	பெண்ணாகடம்	பெண்ணாடம்	நடுநாடு	5
107	பெரும்புலியூர்		சோ. நா. வட.	9
209	பெருவேலூர்	மணக்கால் ஐயன்பேட்டை	சோ. நா. தென்.	8
181	பேணு பெருந்துறை	திருப்பண்துறை	,,	8
231	பேரெயில்	ஓகைப் பேரையூர்	,,	8
115	பைஞ்ஞீலி		சோ. நா. வட.	7, 10
92	மங்கலக்குடி		,,	6
79	திருமணஞ்சேரி	கீழைத் திருமணஞ்சேரி	,,	6
84	பழமண்ணி படிக்கரை	இலுப்பைப்பட்டு	,,	6
156	மயிலாடுதுறை	மாயூரம்	சோ. நா. தென்.	6
24	மயிலாப்பூர்	சென்னை	தொ. நா.	3
60	மகேந்திரப்பள்ளி	கோயிலடிபாளையம்	சோ. நா. வட.	6
197	மருகல்		சோ. நா. தென்.	8
108	மழபாடி		சோ. நா. வட.	9, 7
242	மறைக்காடு	வேதாரண்யம்	சோ. நா. தென்.	11
7	மாகறல்		தொ. நா.	2
49	திருமாணிக்குழி		நடுநாடு	4
112	திருமாந்துறை		சோ. நா. வட.	7
11	திருமாற்பேறு	திருமால்பூர்	தொ. நா.	3
173	திருமீயச்சூர்		சோ. நா. தென்.	8
174	திருமீயச்சூர் இளங்கோயில்		,,	8
51	திருமுண்டீச்சரம்	கிராமம்	நடுநாடு	4
41	திருமுதுகுன்றம்	விருத்தாசலம்	நடுநாடு	5
260	திருமுருகன்பூண்டி		கொ. நா.	13
72	வடதிருமுல்லைவாயில்	திருமுல்லைவாயில்	தொ. நா.	3
61	தென்திருமுல்லைவாயில்	திருமுல்லைவாசல்	சோ. நா. வட.	6
122	முக்கீச்சுரம்	உறையூர்	சோ. நா. தென்.	7, 10
30	திருவக்கரை		தொ. நா.	3, 4
48	வடுகூர்	ஆண்டார் கோயில்	நடுநாடு	4
142	திருவலஞ்சுழி		சோ. நா. தென்.	9
161	திருவலம்புரம்	மேலப்பெரும்பள்ளம்	,,	6
21	திருவலிதாயம்	சென்னை, பாடி	தொ. நா.	3
238	வலிவலம்		சோ. நா. தென்.	8
10	திருவல்லம்	திருவலம்	தொ. நா.	3
179	வன்னியூர்	அல்லியூர்	சோ. நா. தென்.	8
187	திருவாஞ்சியம்		,,	8
118	வாட்போக்கி	ஐயர் மலை	,,	10
241	திருவாய்மூர்		,,	8

தொ.நா = தொண்டை நாடு, சோ.நா.வ = சோழ நாட்டு வட கரை, சோ.நா.தென் = சோழ நாட்டுத் தென் கரை, பா.நா = பாண்டிய நாடு

Koviloor Digital Library

தல வரிசை எண்.	தலத்தின் பெயர் (முன்பாக திரு சேர்க்கவும்)	இன்று வழங்கும் பெயர்	நாட்டின் பெயர்	தலம் உள்ள வரைபடத்தின் எண்.
83	திருவாழ்கொளிப்புத்தூர்	திருவாளப்புத்தூர்	சோ. நா. வட.	6
25	திருவான்மியூர்	சென்னை	தொ. நா.	3
101	திருவிசயமங்கை	திருவிஜயமங்கை	சோ. நா. வட.	9
97	திருவியலூர்	திருவிசநல்லூர்	,,	6
157	விளநகர்		சோ. நா. தென்.	6
207	திருவிளமர்	விளமல்	சோ. நா. தென்.	8
194	விற்குடி		,,	8
14	திருவிற்கோளம்	கூவம்	தொ. நா.	3
178	திருவீழிமிழலை		சோ. நா. தென்.	8
263	வெஞ்சமாக்கூடல்	வெஞ்சமாக்கூடலூர்	கொ. நா.	10
65	திருவெண்காடு		சோ. நா. வட.	6
229	வெண்டுறை	வண்டுதுறை	சோ. நா. தென்.	8
219	வெண்ணி	கோயில் வெண்ணி	,,	8
46	திருவெண்ணெய்நல்லூர்		நடுநாடு	4
17	திருவெண்பாக்கம்	பூண்டி	தொ. நா.	3
56	திருவேட்களம்		சோ. நா. வட.	5
166	வேட்டக்குடி		சோ. நா. தென்.	8
131	திருவேதிகுடி		,,	9
77	வேள்விக்குடி		சோ. நா. வட.	6
23	திருவேற்காடு		தொ. நா.	3
150	வைகல்மாடக்கோயில்		சோ. நா. தென்.	8
102	வைகாவூர்		சோ. நா. வட.	9
275	விடைவாய்	திருவிடைவாயில்	சோ. நா. தென்.	8
276	திருக்கிளியன்னவூர்	கிளியனூர்		

தொ.நா = தொண்டை நாடு, சோ.நா.வ = சோழ நாட்டு வட கரை, சோ.நா.தென் = சோழ நாட்டுத் தென் கரை, பா.நா = பாண்டிய நாடு

உதவியும் நன்றியும் : கடம்பத்தூர் சைவ சித்தாந்தக் கழக வெள்ளி விழா மலர் 1999.

Koviloor Digital Library



Koviloor Digital Library



வங்காள விரிகுடா

2

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library



3

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library



Koviloor Digital Library



Koviloor Digital Library

தேவாரத் திருத்தலங்கள்

6

தென் ஆற்காடு



Koviloor Digital Library



7

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library

8

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library

9

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library

தேவாரத் திருத்தலங்கள்

10

Koviloor Digital Library



11

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library



12

தேவாரத் திருத்தலங்கள்

Koviloor Digital Library

தேவாரத் திருத்தலங்கள்

13



Koviloor Digital Library

தேவாரத் திருத்தலங்கள் 14